மெஹர் பிரபு

(MEHER PRABHU)

இக்கால அவதார புருஷரின் வருகை
(ADVENT OF THE AVATAR)

மெஹர் பாபாவின் வாழ்க்கை வரலாறு
(MEHER BABA'S LIFE HISTORY)

குறுகிய தமிழாக்கம்
(TAMIL TRANSLATION - ABRIDGED)

தொகுப்பு பத்து

(VOLUME TEN)

1949 - 1952

இறைவனின் அன்பளிப்பு

இடம், காலம், பொருள் இவற்றை இறைவனன்றி வேறு யாரறிவர்? எது, எங்கு, எப்படி, எப்போது நடக்கவேண்டுமோ அதை நடத்துபவனும் அவனே! தனிப்பட்ட மனிதனால் முடிவது கையளவாக இருந்தாலும் கடவுளின் கருணையால் நிகழ்வது கடலளவு. இருந்தும் அனைத்தையும் தனிமனிதன் செய்வதுபோலத் தோற்றமளிக்கச் செய்வது மாயையின் கைவண்ணம்; இதுவே, இந்த இறைநாடகத்திற்கு இறைவன் எழுதிய திரை, கதை, வசனம்.

மெஹர் பாபாவின் வரலாற்றுத் தொகுப்புக்கு உயிரூட்டம் அளித்தவர் மெஹர் பாபா மட்டுமே என்றாலும், உருவாக்கம் தந்த நூலாசிரியர் அவருடைய நெருங்கிய மண்டலியில் ஒருவரான,

ஸ்ரீ பாவ் கல்சூரி.

இந்தி மொழியில் கவிதை வடிவில் உருவகம் கொடுக்கப்பட்ட வரலாறு, உரைநடை பாணியில், ஆங்கிலத்தில் ஆக்கம் தந்தவர், மெஹர் பாபாவின் அரவணைப்பில் இருந்த,

ஸ்ரீ ஃபெராம் ஒர்க்கிங்பாக்ஸ்வாலா.

மொத்தத்தில் ஏறக்குறைய 6000 பக்கங்கள், 20 தொகுப்புகள். இவை அனைத்தையும் ஒருங்கிணைத்து ஆங்கிலத்தில் வெளியிட்டவர்,

ஸ்ரீ லாறன்ஸ் ரைட்டர்.

இந்த வரலாற்றுத் தொகுப்பு, நாளடைவில், பல மொழிகளில் முழுமையாக அல்லது குறுகிய வடிவில் வெளிவந்துள்ளன. தமிழ் மக்களுக்கும் இது ஒரு பொக்கிஷமாக அமைய வேண்டும் என்ற ஆர்வத்தில் சமர்ப்பணம் செய்பவர்:

தமிழாக்கம் & புத்தக வடிவமைப்பு:
கு. ராதாகிருஷ்ணன்
வேலம்மாள் ராதாகிருஷ்ணன்
முகேஷ் சிவகுமார்
நித்யகலா நிர்மல்
பூனா, மே 2022
✉ vela.radhakrishnan@gmail.com
✆ +919225631113

REV:01/07.03.2025

மெஹர் பாபாவின் ‘புது வாழ்வு’

(MEHER BABA’S ‘NEW LIFE’)

1949 அக்டோபர் **16** முதல் **1952** பிப்ரவரி **12** வரை மேற்கொண்ட மெஹர் பாபாவின் ‘புது வாழ்வு’ (NEW LIFE), அவரது வாழ்க்கையின் மிகவும் புதிரான, புரிந்து கொள்ள கடினமான காலகட்டமாக இருக்கலாம். இந்த இரண்டரை வருட காலப்பகுதியில், பாபா அவரது தெய்வீகத்தை வெளியளவில் ஒதுக்கி வைத்து, கடவுளைத் தேடி அலையும் அல்லது அதீத அன்புள்ளம் படைத்த பக்தராகத் தனது பாத்திரத்தைச் செவ்வனே செய்து முடித்தார். சுயமாகத் திணிக்கப்பட்ட ‘உதவியற்ற தன்மை’ (HELPLESSNESS) மற்றும் ‘நம்பிக்கையின்மை’யின் (HOPELESSNESS) குறுகிய கால தனிமை வாசத்தில், அவருடைய சீடர்கள் சிலருடன் இணைந்து, இந்தியா முழுவதும் நீண்ட, கடினமான, சில நேரங்களில் கடுமையான குளிர் பிரதேசங்களில் கால் நடையாகப் பயணம் மேற்கொண்டார்.

பாரம்பரிய ஆன்மீகப் பாதையிலிருந்து மிகவும் வித்தியாசமான, கடவுளுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு புதிய, தனித்துவமான வாழ்வின் முன்னுதாரணத்தை நமக்கு அளித்து, நம் அனைவரின் சார்பாக அவர் இந்த வாழ்க்கையை வாழ்ந்தாரா? எல்லையற்ற தெய்வீகத்தின் வாசலில் இறுதியில் வந்து சேரும், வெளியளவில் மட்டுமீறி வளர்ந்த மற்றும் ஊடுருவ முடியாத உலகின் சிக்கலின் மூலம் அவர் நமக்காக ஒரு புது வாழ்வின் இலக்கணமாகத் திகழ்ந்தாரா? புது வாழ்வு, அதன் மர்மத்தன்மையால், இதுபோன்ற கேள்விகளைக் கேட்கத் தூண்டுகிறது.

இந்தக் கேள்விகளுக்கு பதிலளிக்கும் விதத்தில், புது வாழ்வைக் குறித்த மெஹர் பாபாவின் சில கருத்துகள் பின்வருமாறு:

“பரிபூரண குருநாதரின் இறை வாழ்வை மனப்பூர்வமாக ஒத்திவைத்து, ஒரு சாதாரண மனிதனாக, இம்மியும் பிசகாமல் இறைவனைத் தேடும் ஒரு மாற்று வாழ்க்கையை வாழ்வதே புது வாழ்வு... நான் இறைவனைத் தேடும் அடியான், அன்பன் மற்றும் நண்பன்”

> **“எனது ‘பழைய வாழ்க்கை’ என்னை முழுநிறை கடவுளாக, தெய்வீக பரிபூரணத்தின் பீடத்தில் வைக்கிறது. எனது ‘புது வாழ்வு’, கடவுளுக்கும் அவருடைய மக்களுக்கும், பணிவான ஒரு சேவகனின் நிலைப்பாட்டை எடுக்கச் செய்கிறது. எனது புது வாழ்வில், பரிபூரண தெய்வீகம் என்பது பரிபூரண பணிவால் மாற்றப்பட்டுள்ளது. பரிபூரண ‘தெய்வீகம்’ மற்றும் பரிபூரண ‘பணிவு’ என்ற இரண்டு அம்சங்களும், கடவுளின் விருப்பத்தால் கடவுளின் நித்திய ஜீவனுடன் எப்பொழுதும் இணைக்கப்பட்டுள்ளன.”**

இறைவனை முழுமையாக நம்பி வாழ்தல்:

புது வாழ்வில் அவருடன் இணைந்த 20 தோழர்களிடம் (16 ஆண்கள், 4 பெண்மணிகள்) மெஹர் பாபா, '**புது வாழ்வு என்பது முற்றிலும் கடவுளை நம்பி வாழ்வது**' என்று கூறினார்.

"**இது முற்றிலும் உதவியற்ற** (HELPLESSNESS) **மற்றும் நம்பிக்கையற்ற** (HOPELESSNESS) **வாழ்க்கையாக இருக்கும். நம்பிக்கையின்மை என்றால் எல்லா நம்பிக்கைகளையும் துறப்பது. இலக்கின்மை என்றால் அனைத்து நோக்கங்களையும் துறத்தல். உதவியின்மை என்றால் எல்லா உதவிகளையும் துறப்பது.**"

புது வாழ்வில், மெஹர் பாபாவும் அவரது சக தோழர்களும் அனைத்து சொத்து மற்றும் நிதிப் பொறுப்புகளைத் துறந்து, இந்தியா முழுவதும் கையில் பணம் எதுவும் இல்லாமல் பயணம் செய்தனர், உணவுக்காக யாசித்து, புது வாழ்வின் நிபந்தனைகளுக்கு இணங்கி வாழ்ந்தனர்.
மெஹர் பாபாவின் 'புது வாழ்வு' நிபந்தனைகள் அவர்களின் வாழ்க்கையின் சூழ்நிலைகளை முழுமையாக ஏற்றுக்கொள்வதோடு, எந்தவொரு சிரமத்தையும் எதிர்கொள்வதில் நிலையான மகிழ்ச்சியையும் முகமலர்ச்சியையும் உள்ளடக்கியது.

ஆன்மீக அல்லது பொருள் சார்ந்த வெகுமதியை எதிர்பாராமல் இருத்தல்:

சக தோழர்களில் ஒருவரும் நெருங்கிய சீடருமான எரச் ஜெஸவாலா விளக்கினார்:

"'புது வாழ்வு' என்று அழைக்கப்படும் இந்தக் காலகட்டத்தில், அவரைப் பின்பற்றுபவர்களுக்கு அவர் விதிகளையும், ஒழுங்குமுறைகளையும் அமைத்தார், இவற்றில் மிக முக்கியமான விஷயம் என்னவெனில், நாம் எந்த விதமான ஆன்மீக அல்லது பொருள் சம்பந்தமான வெகுமதியையும் எதிர்பார்க்கக்கூடாது.

"புது வாழ்வில் நாம் அவரது சக தோழர்களாகப் பின்தொடரும் அதே வேளையில், அவர் நமக்குத் துணையாக இருப்பார். வாழ்க்கை முற்றிலும் உதவியற்றதாகவும் நம்பிக்கையற்றதாகவும் இருக்கையில் நாம் உணவுக்காக யாசிக்க வேண்டியிருக்கும்.

மேலும், நாம் கால் நடையாகப் பயணம் மேற்கொள்ளும் வேளையில், நிச்சயமாக அவர் அழைத்ததைப் போல, நாம் '**இப்போது - இந்தத் தருணத்தில்**' வாழ வேண்டும். கடந்த காலத்தையோ, நிகழ்காலத்தையோ அல்லது எதிர்காலத்தையோ சற்றும் சிந்திக்காமல், அவருடைய சக தோழர்களாக வாழ்வதில் மட்டுமே கவனம் செலுத்த வேண்டும்.

“அதே நேரத்தில், நான் உங்கள் துணைவனாக இருந்தாலும், நல்லது அல்லாதது எதுவாக இருந்தாலும், நான் வழங்கும் அனைத்து உத்தரவுகளுக்கும் நீங்கள் கீழ்ப்படிய வேண்டும்” என்று மெஹர் பாபா கூறினார்.

கஷ்டங்களுக்கு மத்தியிலும் எந்தக் கஷ்டத்தையும் பொருட்படுத்தாமல் இருத்தல்:

புது வாழ்வைப் பற்றி விளக்குகையில், மெஹர் பாபாவின் **மண்டலியில்** ஒருவரான அலோபா இவ்வாறு எடுத்துரைத்தார்:

“புது வாழ்வில் நீங்கள் நடைப்பிணமாக இருக்க விரும்பினால், வாழ்க்கை எளிதாகவும், எதையேனும் பற்றிக்கொண்டிருந்தால், அது மிகப்பெரிய துன்பமாகவும் இருக்கும்.”

எரச் மேலும் தொடர்ந்து கூறினார்,
“பாபா எங்களுடன் இருக்கையில் நாங்கள் ஒருபோதும் எதையும் இழந்துவிட்டதாக உணர்ந்ததில்லை. இது உண்மையில் மிகவும் ஆரோக்கியமான மற்றும் மகிழ்ச்சியான வாழ்க்கை, சிரமங்களுக்கு மத்தியில் இருந்தபோதிலும் எந்தக் கஷ்டமும் இல்லாமல் வாழ முடிந்தது.”

புது வாழ்வு என்றென்றும் நித்தியமாக வாழப்படும் வாழ்க்கை:

இரண்டு வருடங்களுக்கும் மேலாக வாழ்ந்த மெஹர் பாபாவின் புது வாழ்வு, 1952 தொடக்கத்தில் உச்சக்கட்டத்தை எட்டியது. அதைக் குறித்து மெஹர் பாபா கூறியதாவது:

“இந்தப் புது வாழ்வு முடிவில்லாதது, எனது பௌதீக உடலைத் துறந்த பின்னரும், பொய்மை, பொய், வெறுப்பு, கோபம், பேராசை, காமம் போன்றவற்றை முழுமையாகத் துறந்து வாழ்பவர்களால் அது உயிர் வாழும்; மேலும் இவை அனைத்திலும் வெற்றி காண விரும்புபவர்கள் - காமச் செயல்களில் ஈடுபடாமல், எவருக்கும் தீங்கிழைக்காமல், பிற்போக்குத்தனம் இல்லாமல், பொருள் உடைமைகளையோ அதிகாரத்தையோ தேடாமல், மரியாதையை ஏற்காமல், விரும்பாமல், அவமானத்தைக் கண்டுகொள்ளாமல், எவருக்கும், எதற்கும் அஞ்சாமல் இருப்பவர்கள்; மேலும், கடவுளை முழுவதுமாக நம்பியிருப்பவர்கள், கடவுளை முழுமையாக நேசிப்பவர்கள், கடவுளின் வெளிப்பாட்டின் யதார்த்தத்தில் நம்பிக்கை கொண்டவர்கள், ஆனால் ஆன்மீக அல்லது பொருள் சார்ந்த வெகுமதியை எதிர்பார்க்காதவர்கள், சத்தியத்தின் கையை நழுவ விடாதவர்கள், பேரிடர்களால் கலங்காமல், தைரியமாக, முழு மனதுடன் அனைத்து சிரமங்களையும் நூறு சதவீதம்

மகிழ்ச்சியுடன் எதிர்கொள்பவர்கள், சாதி, மதம், மத சடங்குகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காதவர்கள் - இவர்கள் அனைவரும் வெற்றிவாகை சூடுவது நிச்சயம்.

“இந்தப் புது வாழ்வை வாழ எவரும் இல்லாவிடிலும் அது என்றென்றும் நிலைத்து வாழும்.”

நிகழ்வுகளின் காலவரிசை

1949

- ஜனவரி 01, 'புது வாழ்வு' தொடர்பான முதல் சுற்றறிக்கை வெளியீடு
- ஆகஸ்ட் 15 - 20, மெஹராபாத்தில் 'புது வாழ்வு' குறித்த ஐந்து நாட்கள் கூட்டம்

--அக்டோபர் 15, அனைத்தையும் சீர்படுத்தவும், வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து முடிக்கவும் ஒரு காலக்கெடுவாக நிர்ணயிக்கப்பட்ட நாள்

1949

- ஆகஸ்ட் 30, ஹமிர்பூரிலிருந்து வருகை தந்த நான்கு முக்கியஸ்தர்களுடன் மெஹர் பாபா சந்திப்பு

'

1949

- ஆகஸ்ட் 31, 32 நெருங்கிய சீடர்களுடன் 'புது வாழ்வின்' நிபந்தனைகளை முன்வைக்கும், இறுதிக்கட்ட கூட்டம்

1949

- செப்டம்பர் 11, 'புது வாழ்வு தோழர்கள்' உடன் எடுத்துச்செல்ல வேண்டிய தனிப்பட்ட உடைமைகளின் பட்டியலைக் குறித்த மெஹர் பாபாவின் விளக்கம்

1949

- அக்டோபர் 10, கிழக்கு மற்றும் மேற்கத்திய நாட்டு அன்பர்களுக்கு பாபாவின் 'புது வாழ்வு' குறித்த சுற்றறிக்கை வெளியீடு

1949

- அக்டோபர் 16, முழுமையான துறவு மற்றும் ஆதரவற்ற 'புது வாழ்வு' - 16 ஆண், 4 பெண் தோழர்களுடன் பெல்காவ்ம் நகரை நோக்கிப் பயணம் ஆரம்பம்

1949

- அக்டோபர் 29, பெல்காவ்ம் பயிற்சி மையம் - ஹரித்வார் சொத்து என்று அழைக்கப்பட்ட 'மாஞ்ஜ்ரி மா:ப்பி' மனையைப் பற்றிய பாபாவின் விளக்கம்

1949

- அக்டோபர் 31, மெஹர் பாபாவின் 'புது வாழ்வு' கவிதை - டாக்டர் கனியால் இயற்றப்பட்டது.

1949

- நவம்பர் 12, பெல்காவ்மிலிருந்து புறப்பட்டு முகல் ஸராய் வழியாக ரயிலில் பெனாரஸ் பயணம். உணவுக்காக யாசிப்பது குறித்து பாபாவின் விளக்கம்

1949

- நவம்பர் 13 - 15, மும்பையிலிருந்து பெனாரஸுக்கு ரயிலில் பயணம் - 'நாட்டி இம்லி' என்ற விசாலமான பங்களாவில் குழு குடிபெயர்தல்

1949

- நவம்பர் 13 , 24, பெனாரஸில் உணவுக்காக யாசிப்பதற்கான நிபந்தனைகளை வெளியிட்டு பாபா முதன்முதலாக யாசிக்கச் சென்றார்

1949

- டிசம்பர் 3 - 5, சாரநாத்தில் புத்தர் கோவில் விஜயம்
- டிசம்பர் 12, ஹரித்வாரை நோக்கி நாடோடி (ஜிப்சி) வாழ்க்கை ஆரம்பம்

1949

- டிசம்பர் 29, மொராதாபாத் வருகை - தொடர்ந்து...1950, ஜனவரி 4 - 12 ரத்தன்கர், நஜிபாபாத், அக்பராபாத் கிராமங்களில் முகாம் - டெஹ்ராடூன் வருகை

1950

- ஜனவரி 16, தலைமையகம் மாஞ்ஜ்ரி மா:பிக்கு மாற்றப்பட்டது
- பிப்ரவரி 5, ஹரித்வார் 'கும்பமேளா'வில் கலந்து கொள்ள மோத்திச்சூர் வருகை

1950

- மார்ச் 9, ரிஷிகேஷ் வருகை, இமயமலை அடிவாரத்தில் அமைந்த ஆசிரமங்களில் சாதுக்கள், மஹாத்மாக்களுக்கு மரியாதை வழங்கும் நிகழ்ச்சி.

1950

- மார்ச் 14 - ஏப்ரல் 4, ஸாத் ஸரோவர்' ஏரி, கன்கல் மலைப்பகுதி, மாயாபூர், ஹரித்வார் தொடர்புகளுடன் மொத்த எண்ணிக்கை 10,000ஐ எட்டியது

1950

- ஏப்ரல் 5, கும்பமேளா பணி நிறைவடைந்ததும் மாஞ்ஜ்ரி மா:பிக்கு வருகை
- மே 10, பாபா, தோழர்களுடன் டெஹ்ராடூன் வருகை

1950

- ஜூன் 14, மாஞ்ஜ்ரி மா:பியில் குறிப்பிடத்தக்க பணியை நிறைவு செய்த பாபா டெஹ்ராடூனிலிருந்து கல்யாண் வழியாக சத்தாரா வருகை.

1950

- ஆகஸ்ட் 21 - 27, உடல் களைப்பால் பூனாவில் ஓய்வு, தரிசனங்கள் இல்லை.
- ஆகஸ்ட் 28 - செப்டம்பர் 11, மும்பையில் பல மஸ்துகளுடன் சந்திப்பு

1950

- செப்டம்பர் 12, பாபா, திரைப்பட தயாரிப்பாளர் கேப்ரியல் பாஸ்கலுடன் சந்திப்பு.
- செப்டம்பர் 14-30, சத்தாரா வருகை, மஹாபலேஷ்வர் கூட்டம் - தீர்மானங்கள்

1950

- அக்டோபர் 1, **பாபா,** ஆண், பெண் தோழர்களுடன் மஹாபலேஷ்வர், ஆகா கான் பங்களா வருகை.

1950

- அக்டோபர் 16 - 20, மஹாபலேஷ்வரில் இந்தியாவிலிருந்து அழைக்கப்பட்ட 200 அன்பர்களுடன் சிறப்புக் கூட்டம்.

1950

- அக்டோபர் 21, ஒரு மாதம் - பீகார், வங்காளம், ஒரிஸா, நேபாளம், மதராஸ், ஹைதராபாத், மும்பை - மஸ்துகள், நடுத்தர ஏழைகளுடன் சந்திப்பு

1950

- டிசம்பர் 6, இறுதியாக மும்பையில் மஸ்த் பணியை நிறைவு செய்து மஹாபலேஷ்வர் வருகை

1951

- ஜனவரி 15 - 20, தெற்கு நோக்கி 1400 மைல் மஸ்த் பயணம் - ஷோலாபூர், ஹைதராபாத், ஸெக்கந்திராபாத், குல்பர்கா, பூனா, மஹாபலேஷ்வர்

1951

- ஜனவரி 29 - பிப்ரவரி 5, மும்பை மஸ்த் பயணம் - மஹாபலேஷ்வர் வருகை
- பிப்ரவரி 13, மஹாபலேஷ்வரில் 100 நாள் ஏகாந்தவாசம் ஆரம்பம்

1951

- மார்ச் 27, பூனா வருகை - ஏழு குறிப்பிட்ட இடங்களில் ஏகாந்தவாசம், பூனா 'குருப்பிரசாத் பங்களா' கையகப்படுத்தப்பட்டது

1951

- ஏப்ரல் 7, மஹாபலேஷ்வரில் ஏகாந்தவாசம் தொடர்ந்தது.
- மே 5, மெஹர் பாபா ஆண் பெண் மண்டலியுடன் மும்பை விஜயம்

1951

- மே 9, மஹாபலேஷ்வர் புல் குடிசையில் ஏகாந்தவாசம் தொடர்ந்தது
- மே 22, பூனாவில் 7 மஸ்துகளை சந்தித்து மஹாபலேஷ்வர் வருகை

1951

- மே 25, ஹைதராபாத் பயணம் - 'ஜூப்ளி ஹில்ஸில் அமைந்த கோஹினூர் பங்களா'வில் குடியேறல். ஏகாந்தவாசம், மஸ்த் தொடர்பு தொடர்ந்தது

1951

- ஜூன் மனோநாஷ் பிரகடனம் - நான்கு கட்ட மனோநாஷ் பணி
- ஆகஸ்ட் 20, டாக்டர் கனி மாரடைப்பால் பூனாவில் காலமானார்

1951

- அக்டோபர் 15 - 24, மனோநாஷ் முதல்கட்ட பணி - ஏகாந்தவாசம் ஹைதராபாத் கோஜாகுடா மலையில் ஆரம்பம்

1951

- அக்டோபர் 24, பாபா, கோஜாகுடா மலையிலிருந்து புறப்பட்டு, அஹமதுநகரை நோக்கி மேற்கொள்ளும் அடுத்த கட்டத்தின் கடைசி நடைப்பயணம் ஆரம்பம்.

1951

- அக்டோபர் 24 - நவம்பர் 23, கோஜாகுடா மலை, லிங்கம்பள்ளி, ஜோகிப்பேட்டை, சங்கரெட்டி, சதாசிவப்பேட்டை, ஹொம்னாபாத், சிட்குப்பா, குல்பர்கா, வாரங்கல்....

.....யாத்கிரி, தும்கூர், துல்ஜாப்பூர், உஸ்மானாபாத், ஒளரங்காபாத், குல்தாபாத், எல்லோரா, நாந்தேட், டோக்கா, இமாம்பூர், மெஹராஸாத் வருகை.

1952

- 1951 நவம்பர் 23 - 1952, பிப்ரவரி 12 மெஹராஸாத் தெம்பி மலையில் மனோநாஷ், கடைசி கட்ட ஏகாந்தவாசம் நிறைவு.

1952

- தொடரும்...

பொருளடக்கம்

மெஹராபாத் - புது வாழ்வின் காலகட்டம் 4
பெல்காவ்ம் - சத்தியநாசம் ஆரம்பம்..... 73
பெனாரஸ் & சாரநாத்.....138
ஹரித்வார் புனித யாத்திரை.....168
ஹரித்வார் கும்பமேளா.....202
மாஞ்ஜ்ரி மாஃபி & டெஹ்ராடூன்.....212
டெல்லி & சத்தாரா 280
மஹாபலேஷ்வர் சிறப்புக் கூட்டம்.....300
மஹாபலேஷ்வர் ஏகாந்தவாசம் 333
ஹைதராபாத் ஏகாந்தவாசம் 366
மெஹராஸாத் - மனோநாஷ்.....409

புது வாழ்வு

(NEW LIFE**)**

இது அனைத்தும் ஒரு மர்மம், மர்மம் மீண்டும் ஒரு மர்மம்,

மேலும் பாபாவுடன் இருப்பவர்களுக்கும்,

அவரிடமிருந்து தொலைவில் வாழ்பவர்களுக்கும்

இது மிகவும் கடினம்.

-வில்லியம் டான்கின்-



‘புது வாழ்வு’ பெண்மணிகள் மெஹரு, மெஹரா, மணி, கோஹெர்
(‘NEW LIFE’ WOMEN COMPANIONS MEHERU, MEHERA, MANI, GOHER)

மெஹராபாத் - புது வாழ்வின் காலகட்டம்

(Meherabad - 'New Life' Period)

மெஹர் பாபா, 1949ஆம் ஆண்டு ஆரம்பிப்பதற்கு முன்னரே, அவரது 'புது வாழ்வை'க் (NEW LIFE) குறித்த மறைமுகமான குறிப்புகளை வழங்கத் தொடங்கினார். ஜனவரி 1 அன்று அவர் சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டார்: **"1949ஆம் ஆண்டு, செயற்கையான தொடக்கத்திற்கு, செயற்கையான முடிவைக் குறிக்கும் அதேவேளையில், 'உண்மை'யான 'முடிவு'க்கான 'உண்மை'யான 'தொடக்கத்தை'யும் குறிக்கும்!"**

அவர் தனது அன்பர்களுக்கு '**1949ஆம் ஆண்டு சோதனைகளும் இடர்பாடுகளும் நிறைந்ததாகவும், தனக்கு ஒரு பெரிய தனிப்பட்ட பேரிடரை விளைவிக்கும் ஆண்டாகவும் இருக்கும்**' என்று எச்சரித்திருந்தார்.

1949 ஜனவரி தொடக்கத்திலிருந்து, மெஹர் பாபாவின் சூசகமான குறிப்புகள் குறிப்பிடத்தக்கதாக இருந்தாலும், அவர் கூறியதை யார் ஒருவராலும் புரிந்துகொள்ள முடியவில்லை. அவர் எடுத்துரைத்த சில கருத்துக்கள் பின்வருமாறு:

எது எஞ்சியிருந்தாலும், எது கைவிட்டுப் போனாலும், எதைப் பற்றியும் நான் கவலைப்பட வேண்டும் எனத் தோன்றவில்லை... நாளை என்பதை 1949ஆம் ஆண்டாகக் கருத்தில் கொள்ளப் போகிறேன்... ஏற்கனவே இருந்து வரும் எல்லா ஏற்பாடுகளையும் டிசம்பர் மாத இறுதிக்குள், ஒருவேளை அதற்கு முன்னதாக, ஜூன் அல்லது மார்ச் மாத இறுதிக்குள், ஒரேயடியாக முடித்துவிடுவேன்... அனைத்து செலவுகளிலும் 50 சதவீதத்தை உடனடியாக, இப்போதே குறைக்க வேண்டும்... ஜூலை முதல், நீங்களே அனைத்து விஷயங்களைப் பார்க்கவும் கேட்கவும் செய்வீர்கள்...

தொண்ணூறு சதவிகித மண்டலி என்னை விட்டு வெளியேற வேண்டும், பத்து சதவிகிதம் மட்டுமே என்னுடன் இருப்பார்கள். 1949இல், நான் உட்பட எனக்கு யார் ஒருவரிடமும் நம்பிக்கை இராது. அனைவரும் என்னால் மன்னிக்கப்படுகிறார்கள், கடவுளும் என்னை மன்னிப்பார், ஆனால், இனிமேல், மன்னிப்பு சாத்தியமில்லை... நீங்கள் பல வருடங்களாக என்னுடன் இருந்து வருகிறீர்கள், எனவே, உங்களைப் பற்றிக்கொண்டிருக்கும் பலவீனங்களுக்கு நான் பொறுப்பாக இருந்து, அவற்றை எனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள நான் விரும்பவில்லை. எனவே, இந்த பலவீனங்களுக்கு அடிபணியாமல், 1949ஆம் ஆண்டின் காலப்போக்கில் அனைத்தும் அடித்துச் செல்லப்படுவதைத் தவிர்க்கவும் நான் உங்களை எச்சரிக்கிறேன்.

1949 பிப்ரவரி மாதத்தில் மவுண்ட் அபு (MOUNT ABU) செல்வதற்கு முன்னர், **'எதிர் பாலினத்தவருடன் உடல் ரீதியான தொடர்பைத்**

தவிர்க்குமாறு' பாபா அனைவருக்கும் அறிவுறுத்தினார்; **'அவர்களோடு கைகளைக் குலுக்க வேண்டாம்'** என்றும் அவர் கட்டளையிட்டார். மரணத்தை சந்திக்க நேர்ந்தால், மண்டலியின் உடல்களை அவரவர் விருப்பப்படி அப்புறப்படுத்தும் விஷயத்தையும், பாபா முடிவு செய்திருந்தார்.

மவுண்ட் அபுவிலிருந்து, பாபா மெஹராபாத் மண்டலிக்கு இதே போன்ற விபரங்கள் அடங்கிய கடிதங்களையும், தொலைத்தந்திகளையும் அனுப்பியிருந்தார். ராம்ஜூவிற்கு அனுப்பப்பட்ட ஒரு தொலைத்தந்தியில்:

மெஹர் பாபா, நோயால் அவதியுற்ற போது மேற்கொண்ட, கடந்த இரண்டு கடுமையான கோடையின் இடைக்கால மஸ்த் பயணங்கள், அவரது உடல் ஆரோக்கியத்தை மேலும் கடுமையாக பாதித்தன. ஆனால் இது 1949ஆம் ஆண்டில் நிகழவிருக்கும் தனிப்பட்ட பேரிடரின் சாயல் போன்ற ஒரு சிறிய அம்சம் கூட இல்லை. அஹமதுநகர், மெஹராபாத் மற்றும் மேல்மலையில் வாழும் மண்டலிக்கு இதைத் தெரிவிக்கவும்.

பாபாவின் கூற்றுகள் அவருடைய பணியில் சில பெரிய மாற்றங்கள் ஏற்படுவதன் முன்னறிவிப்பாக இருந்தன. பாபா கூறியதன் அர்த்தம் என்ன என்பதை மண்டலியும் அவரது அன்பர்களும் விரைவில் கண்டுகொள்ளும் ஆர்வத்தில் இருந்தனர்.

1949 ஆகஸ்ட் தொடக்கத்தில், மெஹர் பாபா **'மண்டலியின் எதிர்காலத்தைப் பற்றி விவாதித்து, முடிவெடுக்கும் நோக்கத்தில் மெஹராஸாத்திலிருந்து மெஹராபாத்திற்கு வரவிருப்பதாக'** மண்டலிக்குத் தெரிவித்தார். ஆகஸ்ட் 15 முதல் 20 வரை, ஐந்து நாட்கள் கூட்டம் திட்டமிடப்பட்டன. கூட்டத்திற்கு அழைக்கப்பட்ட வெளியூர் அன்பர்கள் மெஹராபாத்தில் தங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் முன்கூட்டியே செய்யப்பட்டிருந்தன. அனைவரும் 1949 ஆகஸ்ட் 14 ஞாயிற்றுக்கிழமை அன்று மெஹராபாத் வந்து சேர்ந்தனர். கூட்டத்திற்கு அழைக்கப்பட்டவர்களில் மினூ கராஸ், பப்பா ஜெஸவாலா, காடேக்கர், டாக்டர் கனி, வாஸ் தேவ் கெய்ன், ஹர்ஜீவன் லால், தெளலத் ஸிங், இன்னும் சிலர். கூட்டம் நடைபெறும் நாட்களில் வேறு எவரும் மெஹராபாத்திற்கு வருகை தரவேண்டாம் என அறிவுறுத்தப்பட்டது.

கூட்டத்தில் அனைத்து மண்டலியும் பங்கெடுக்க வேண்டும். பாபா அனைவரையும் திரும்பத் திரும்ப எச்சரித்தார்: **"நீங்கள், உங்கள் பணியில் எவ்வளவுதான் மும்முரமாக இருந்தாலும், எப்பொழுதும் கூட்டத்தில் கலந்துகொள்ளத் தவறாதீர்கள்... அதற்குப் பிறகு நான் உங்களை சந்திக்கும் வாய்ப்பு இராது... இனி இது போன்ற வாய்ப்புகள் வராது... இனிமேல் எனக்கு எவரும் எதுவும் செய்யவேண்டிய தேவையில்லை.. நான் இந்நாட்களில் கூறுவதை எல்லாம் குறிப்பாக, அதி தீவிரத்துடன் எடுத்துக் கொள்ளுங்கள்...**

"எதையும் இலகுவாக எடுத்துக்கொள்ளும் அல்லது சுய விருப்பங்கள் மற்றும் கற்பனைகளால் தம்மைத் தவறாக வழிநடத்த அனுமதிக்கும் அனைவருக்கும் கடவுள் உதவட்டும்."

கூட்டத்தின் முதல் நாள், ஆகஸ்ட் 15 திங்கள் காலை, பாபா மெஹராபாத் வந்தார். அவர் குஸ்தாஜி, கைக்கோபாத் இருவரையும் தழுவி, காலை 7:15 மணிக்கு மண்டபத்திற்குள் நுழைந்தார். முழு நிகழ்ச்சிகளையும் பாபா, பெரும்பாலும் குஜராத்தி மொழியில் எழுத்துப்பலகை வழியாக எடுத்துரைத்ததை ஆதி சீனியர் வாசித்தார். ராம்ஜு பாபாவின் வார்த்தைகளை ஆங்கிலத்திலும், விஷ்ணு மராட்டியிலும் மொழிபெயர்த்தனர். ∴பெராம் சுருக்கெழுத்தில் விரிவான குறிப்புகளை எழுதிக்கொண்டார்; பாபா, ∴பெராமிடம் **"ஓர் அட்டை போல் என்னுடன் ஒட்டிக்கொள்ளுங்கள், இந்தக் கூட்டத்தில் நான் ஒவ்வொருவரிடம் கூறுவதையும் தவறவிடாமல் குறிப்பெடுக்க முயற்சி செய்யுங்கள்"** என்று அறிவுறுத்தினார்.

மெஹர் பாபா கூட்டத்தைத் தொடங்கி வைத்து இவ்வாறு எடுத்துரைத்தார்:

நான் உங்களுக்குச் சொல்லப் போவதைக் கேளுங்கள், அதில் முழு கவனம் செலுத்துங்கள். இந்த ஐந்து நாட்களில் இங்கு விவாதித்து, எடுக்கப்படும் முடிவுகள் அனைத்தும், அனைவருக்கும் தெரியப்படுத்தப்படும். இன்று, நாம் இறுதி ஏற்பாடுகள் மற்றும் மாற்றங்கள் குறித்து, செய்ய வேண்டிய அடிப்படை முறைகளைப் பற்றிய ஒரு பொதுவான விவாதத்தை நடத்துவோம். இது இறுதியாக எடுக்கப்பட வேண்டிய முடிவுகளை எளிதாக்கும்.

என்னைக் குறித்து நான் ஏற்கனவே தீர்மானித்த மூன்று முக்கியமான குறிப்புகள் உள்ளன. உங்களிடமிருந்து நான் விரும்புவது என்னவெனில், ஏதோ ஒரு வகையில், எனது சொந்த முடிவுகளுக்கு இணங்கி, அனைவரும் தங்களால் இயன்றவரை எனக்கு உதவ வேண்டும்.

<u>மூன்று குறிப்புகளில் முதலாவதாக:</u> எனக்கு ஏற்படும் சில தனிப்பட்ட பேரிடரின் காரணமாக, இந்த வார்த்தையின் உண்மையான மற்றும் நேரடி அர்த்தத்தில், நான் முற்றிலும் உதவியற்றவனாக இருப்பேன். அக்டோபர் 1ஆம் நாளுக்குப் பின்னர், எனக்கு அது நிகழும் முன்பு, நமது கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தப்பட்ட வழிமுறைகளின் கீழ், மண்டலிக்கு சாத்தியமான அனைத்து ஏற்பாடுகளையும் செய்ய விரும்புகிறேன்; ஏனெனில், ஒவ்வொருவருடைய பொருள் சார்ந்த விவகாரங்களையும் நான் நிறுத்த வேண்டும் - நிறுத்தப் போகிறேன்.

<u>இரண்டாவதாக:</u> இந்த சில நாட்களில், நான் விதிக்கும் நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கும் கடைப்பிடிப்பதற்கும், ஒவ்வொரு

வகையிலும் தங்கள் சொந்தப் பொறுப்பில் முழுமையாகத் தயாராக இருக்கும் அத்தகைய நபர்களை மட்டுமே என்னுடன் மற்றும் எனதருகில் இருக்க அனுமதிப்பேன். பிற அனைவருக்கும் நான், அணுக முடியாத அளவில் இருப்பேன்.

மூன்றாவதாக: மெஹராபாத் மற்றும் பிம்பல்காவ்ம் ஆசிரமங்கள் கலைக்கப்படும், இதை நான் எனது வரைபடத்திலிருந்து அகற்றப் போகிறேன்! நான் நீண்ட காலமாகக் காத்திருந்த நேரம் இறுதியில் வந்துவிட்டதற்காக நான் கடவுளுக்கு நன்றி கூறுகிறேன். நான் எப்படி, எந்த அளவிற்கு உதவியற்றவனாக மாறுகிறேன் என்பதை உலகம் முழுவதும் அறியும்; மேலும், மண்டலி என்னுடன் எவ்வளவு தூரம் செல்லப் போகிறார்கள் என்பதை நான் அறிந்து கொள்வேன். நாம் விவாதித்து முடிவெடுக்க வேண்டிய எல்லாவற்றின் சாராம்சம் இதுதான்.

பொதுவாக ஒவ்வொருவரும் தங்களுக்கு மிகவும் பரிச்சயமான மொழியில் பாபாவுடன் உரையாட அனுமதிக்கப்பட்டனர். ஆனால் இம்முறை, அனைத்தையும் தெளிவாக அனைவருக்கும் புரிய வைக்கவும், எதையும் ரகசியமாக வைக்காமல் இருக்கவும், அனைவரும் புரிந்து கொள்ளும் மொழியில் ஒவ்வொருவரும் உரையாடும் முறையை பாபா கையாண்டார். இவ்வாறு, அலி அக்பர் (அலோபா) பாபாவிடம் பாரசீக மொழியில் தனது தனிப்பட்ட விஷயங்களைப் பற்றிக் கேட்கத் தொடங்கியபோது, பாபா அவரைத் தடுத்து, **"உங்களால் இயன்றவரை அனைத்தையும் ஹிந்தி மொழியில் கூறுங்கள், ஏனெனில் ஒவ்வொருவரும், உண்மையில் இங்கே இருந்தாலும் இல்லாமலிருந்தாலும், இந்த நாட்களில் என்ன நடக்கிறது என்பதை அறிந்துகொள்ள வேண்டும்."**

வேறொரு சந்தர்ப்பத்தில், பப்பா ஜெஸவாலா தனது குடும்ப விவகாரங்களைப் பற்றி எழுத்துப்பூர்வமாக எதையோ ரகசியமாகத் தெரிவிக்க முயன்றார். **"எதிலும் இரகசியம் காக்க வேண்டாம்"** என்று கூறி, பாபா கடிதத்தை அனைவருக்கும் முன்பாகப் படிக்க வைத்தார்.

வெளி விவகாரங்கள் குறித்து எவரேனும் பாபாவிடம் ஆலோசனை கேட்பது தொடர்பாக பாபா இவ்வாறு பதிலளித்தார்:

உங்களைச் சார்ந்தவர்களுக்கு நீங்கள் வழங்க வேண்டிய அனைத்தையும் வழங்கிய பின்னர், எஞ்சியதை விட்டுவிடவோ அல்லது விற்கவோ செய்யுங்கள். இந்த முறையில் நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டிய அனைத்தையும் செய்யுங்கள்; மேலும் கூட்டத்தில் இறுதியாக என்ன முடிவு எடுக்கப்படுகிறது என்பதை நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்; அதற்குப் பிறகு, வருங்காலத்தில் என்னுடன் இருக்க முடியுமா இல்லையா என்பதை நீங்களே முடிவு செய்யுங்கள். ஆன்மீகப் பிணைப்புகள் மற்றும் நன்மைகள்

பற்றி எந்தக் கேள்வியும் இல்லை. நான் ஆன்மீக ரீதியில் பரிபூரணமாக இருந்தால் எவரும் ஆன்மீக ரீதியில் என்னை விட்டுச்செல்ல மாட்டீர்கள்.

பெரும்பாலும் கூட்டத்தின் முழு நேரமும், பாபா, தன்னுடன் செல்லாமல் இருப்பவர்களைப் பற்றி அக்கறை கொண்டிருந்தார்; மேலும் குறிப்பாக, அவரைப் பொருள் ரீதியாகச் சார்ந்திருப்பவர்கள் மீது அக்கறை காட்டினார். கீழ் மெஹராபாத்தில் வாழ்ந்த ஆண்களுடனும், மேல்மலையில் இருந்த பெண்மணிகளுடனும் தினசரி விவாதங்கள் முன்னும் பின்னுமாக நடந்தன; பாபாவுடன் செல்ல இருந்தவர்கள் மற்றும் தத்தமது இடங்களில் தங்க இருப்பவர்கள் ஒவ்வொருவருக்குமான அனுதின செலவுகள் மற்றும் பின்விளைவுகளை எடைபோட்டு, பாபாவைச் சார்ந்திருப்பவர்களுக்கு ஏதாவது ஒரு வகையான பராமரிப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

கூட்டத்தின் முதல் நாளிலிருந்தே, மெஹர் பாபா தனது நகரும் சொத்துக்கள், மனைகள் போன்றவற்றை விற்பது அல்லது விட்டுவிடுவது, வாக்குறுதியளிக்கப்பட்ட தொகைகளை வழங்குவது மற்றும் எதிர்காலத்தில் தன்னுடன் இருக்க முடியாதவர்களின் பராமரிப்பை கவனிப்பது தொடர்பாக, தீவிரமான மற்றும் தீர்க்கமான அணுகுமுறையைக் கையாண்டார்.

"இப்போது இதையெல்லாம் எப்படி நிவர்த்தி செய்வது?" என்று பாபா கேட்டார். **"ஒரு குறிப்பிட்ட பணிக்காக ஒதுக்கிய குறிப்பிட்ட தொகையைத் தவிர என்னிடம் பணமில்லை. இங்கும்** (அஹமதுநகர், அரன்காவ்ம் மற்றும் பிம்பல்காவ்ம்) **பிற இடங்களிலும் அமைந்த ஆசிரம கட்டிடங்கள், வயல்வெளிகள், வீடுகள் உட்பட எனக்குச் சொந்தமான அனைத்தும், தளபாடங்கள், சாதனங்கள், கார்கள், மின் இயந்திரங்கள், கால்நடைகள் மற்றும் பிற சொத்துக்கள் - உண்மையில், எனக்குச் சொந்தமான ஒவ்வொன்றும் - கைவிடப்படவேண்டும். மெஹராபாத் மேல்மலையில் எனது இறுதி உடலை வைப்பதற்கான, ஏற்கனவே என்னால் கட்டப்பட்ட சமாதி நிலத்தைத் தவிர, வேறு எதுவும் எனது சொத்தாகவோ, எனது பெயரிலோ இருக்கக்கூடாது - மேலும் நான் எனது பௌதீக உடலைத் துறக்கும்போது, அது இங்கே புதைக்கப்பட வேண்டும் என்பதை நீங்கள் அனைவரும் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும்."** பாபா, அப்போது எழுத்துப்பலகையில் எடுத்துரைத்த பிரார்த்தனையை டாக்டர் கனி மொழிந்தார்:

"கடவுளே, பாபா அவரது உடலை விரைவில் விட்டுவிடக்கூடாது!"

அனைவரும், "ஆமென்" என்று கூறி, நிறைவு செய்ததும், பாபா, தொடர்ந்து விரிவாக விளக்கினார்:

எனது சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் வருவாய் அனைத்தும், வாக்குறுதியளிக்கப்பட்ட தொகையைச் செலுத்துவதற்கும், என்னைச் சார்ந்து இருக்கும்படியாக நானே

தேர்ந்தெடுத்தவர்களின் உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் பயன்படுத்தப்பட வேண்டும். எனக்கும் என்னுடன் செல்பவர்களுக்கும் எதுவும் தேவையில்லை. எனவே, என்னுடன் வர இயலாதவர்களுக்கும், அக்டோபர் 15க்கு பின்னர் என்னுடன் இருப்பவர்களுக்கும் சிறப்பாக நாம் என்ன செய்ய முடியும் என்பதைப் பார்க்க வேண்டும். என்னைச் சார்ந்திருக்கும் எவரும், திடீரெனப் பொருளாதார நிலைகுலைவை சந்திப்பத்தை நான் விரும்பவில்லை. ஆன்மீக நன்மைகள் பற்றிய கேள்விக்கு இங்கே இடமில்லை; அது நான் பரிபூரணமான குருநாதரா இல்லையா என்பதைப் பொறுத்தது.

அது போலவே, சம்பந்தப்பட்ட அனைவருக்கும் உடனடி மற்றும் குறைந்தபட்ச தேவைகளை வழங்குவதற்காக, பத்து ரூபாய்க்கு பதிலாக, கையில் ஒரு ரூபாயை மட்டும் வைத்து செலவழிக்க வேண்டும்.

இது குறித்த உங்கள் கருத்துகள், பதில்கள் மற்றும் பரிந்துரைகளை வழங்குவதில் முற்றிலும் நேர்மையாக இருங்கள். தனிப்பட்ட உணர்வுகளை ஒதுக்கி வைக்கவும். தெளிவின்றி இருக்க வேண்டாம். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள், எப்படி உணர்கிறீர்கள் என்பதை என்னிடம் ஒளிவு மறைவின்றி கூறுங்கள்.

'பாபா, உங்கள் விருப்பம்' என்று நீங்கள் கூறக்கூடாது.

நம்மில் பலரைப் பற்றிய ஒரு முடிவை எடுக்க நாம் ஒரு சிலர் மட்டுமே இங்கு இருக்கிறோம். பெண் மண்டலியும் கலைக்கப்பட உள்ளார்கள். இங்கு நாம் என்ன முடிவெடுத்தாலும் அது பெண்மணிகளையும் உள்ளடக்கி, என்னுடன் இணைந்திருக்கும் அனைவரையும் ஏதோ ஒரு வகையில் பாதிக்கும். இந்தப் பத்து நாட்களுக்குள் எல்லாவற்றையும் முடிவு செய்யப் போகிறேன்.

இது வரையிலான எனது விசித்திரமான பழக்கவழக்கங்கள் மற்றும் மரபுமுறைகளின் அடிப்படையில் தவறாக வழிநடத்தப்பட வேண்டாம். உதாரணமாக, நான் கண்டிப்பாக அக்டோபர் மாதம் மெஹராஸாத்தை கைவிட முடிவு செய்துள்ள அதேவேளையில், பாதிரியிடம் மின் கருவிகளை விரைவில் பொருத்துமாறு அறிவுறுத்தினேன். நான் புதிதாக எதையும் தொடங்கும் அந்தத் தருணம் வரை பழைய விஷயங்களைப் பராமரிக்கும் எனது பழைய பழக்கமே இதற்குக் காரணம்.

அது பைத்தியக்காரத்தனமாக இருக்கலாம், முறையானதாகவும் இருக்கலாம், ஆனால் அதுவே எனது பழக்கமாக இருந்து வருகிறது. இப்போது நானும் எனது பழக்கவழக்கங்களுக்கும், மரபு வழிகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப் போகிறேன். எனவே நான் 'இதுதான் முடிவு' என்று சொன்னால், இப்போது அது முடிவைத் தவிர வேறொன்றுமில்லை.



கீழ் மெஹராபாத் - மண்டலியுடன் கூட்டம், 1949
(LOWER MEHERABAD MEETING WITH MANDALI, 1949)

எனவே, அது வேறுவிதமாக இருக்கும் என்ற எண்ணத்தில் இருக்காதீர்கள். நான் எல்லாவற்றிலிருந்தும் எல்லோரிடமிருந்தும் முற்றிலும் விடுபட விரும்புகிறேன். இப்போது எதிலும் சமரசம் என்பதற்கு இடமேயில்லை.

நான் திடமாகவும், கல்நெஞ்சம் படைத்தவனாகவும், (காசு, பணம் எதுவும் இல்லாமல்) **நிர்வாணமாகவும் ஆகிறேன். இந்தப் பழமொழியை நினைவில் கொள்ளுங்கள்: "கடவுளும் நிர்வாணத்திற்கு அஞ்சுகிறார்!"**

'1949 அக்டோபர் **15',** மெஹர் பாபா அனைத்தையும் அப்புறப்படுத்தவும், வேண்டிய ஏற்பாடுகளை முடிக்கவும் ஒரு காலக்கெடுவாக நிர்ணயிக்கப்பட்டது. **1940**ஆம் ஆண்டு ஆரம்பத்திலிருந்து மண்டலிக்கு ஆதரவாக, முறைப்படி செய்யப்பட்ட பாபாவின் கடைசி உயில் மற்றும் ஆண் மண்டலி, பாபாவிற்கு ஆதரவாக வழங்கிய உயில்களும் ரத்து செய்தல் போன்றவை இதில் அடங்கும். பாபா, அவற்றை ஒவ்வொன்றாக கிழித்து எறிந்தார் (மேற்கத்தியர்களின் உயிலைத் தவிர), அந்தந்த நபர்களுக்கு முன்னிலையில், ஒவ்வொருவருக்கும், இந்த நாளை நினைவுகூரும் வகையில், கிழிந்த துண்டுகள் கொடுக்கப்பட்டன. 'மெஹர் பப்ளிகேஷன்ஸ் & பார்ட்னர்ஷிப்' (MEHER PUBLICATION & PARTNERSHIP) நிர்வாகமும் கலைக்கப்பட்டது, மேலும் பதிப்புரிமை, சம்பந்தப்பட்ட உரிமையாளர்களுக்கு மாற்றப்பட்டது.

கூட்டத்தின் முதல் நாளில், மெஹர் பாபாவை சந்திக்க வந்த பல அன்பர்களுக்கு ஒரு குறுகிய நேர்காணலை வழங்கி, அவர்களைத் திருப்பி அனுப்பினார். அன்று வந்தவர்களில் 'மௌனி புவா' (MAUNI BUA) என்று அழைக்கப்பட்ட ஒரு சாது, மௌன சபதம் எடுத்து, புனித யாத்திரைகளில் அலைந்து, நேரத்தைக் கழித்தார். **1948,** ஜூன் மாதத்தில், பால் நாத்துவால் மெஹராபாத்திற்கு அழைத்து வரப்பட்ட அவர், பாபாவை சந்திக்க நேர்ந்தது. இந்த சந்தர்ப்பத்திலும், பாபா மீண்டும் மௌனியிடம், **"எனது கட்டளையைப் பின்பற்றுவீர்களா?"** எனக் கேட்டார்.

"நான் **100** சதவிகிதம் உங்களுக்குக் கீழ்ப்படியத் தயாராக உள்ளேன்," என்று மௌனி தனது கற்பலகையில் எழுதி பதிலளித்தார்.

பாபா தனது திருப்தியை வெளிப்படுத்தி, **"அப்படியானால் இதைச் செய்யுங்கள்: தினமும் இரண்டு பாட்டில் மது அருந்தி, மாமிசம் உண்டு, திரைப்படங்களுக்குச் செல்லவும். அதைச் செய்வீர்களா?"** என்று கேட்டார்.

மௌனி பாபா இறைவனிடம் வந்திருந்தாலும், அவர் இன்னும் தனது சுய எண்ணங்களுக்கும் கற்பனைகளுக்கும் முக்கியத்துவம் அளித்தார்; ஆன்மீகம் பற்றிய அவரது சொந்த கருத்துக்கள் கடவுளை விட மிகப் பெரியவை! பாபாவின் கட்டளைகள் அவரை உள் குழப்பத்தில் ஆழ்த்தியது; அவர் பதிலளிக்கவில்லை.

மௌனியின் எதிர்வினையை கவனித்த பாபா, சிரித்துக்கொண்டே, **"சரி,**

நீங்கள் உங்கள் பயணத்தைத் தொடர்ந்து, உணவுக்காக யாசியுங்கள்" என்று அறிவுறுத்தினார். மேலும் மௌனி புவாவின் துறவு மனப்பாங்கிற்கு இணங்கினாற்போல பாபா அறிவுரைகளை வழங்கினார்.

பாபாவின் வார்த்தைகள் மௌனியின் பீதியைத் தணித்தது. சாது, தான் வாழும் வாழ்க்கையின் மூலம், ஆன்மீகப் பொக்கிஷத்தை அடையப்பெறுவார் என்று நம்பினார். பாபாவின் வார்த்தைகள் அவரது கருத்தை மீண்டும் ஊர்ஜிதம் செய்தது. எனவே மௌனி தனது நிலையான யோசனைகளுடன் வெளியேறினார்; ஆனால் பாபா இறுதியில் அந்த யோசனைகளைத் தகர்த்தெறிந்தார். மெஹர் பாபாவின் வார்த்தைகளின் அர்த்தத்தை மௌனி புவாவால் புரிந்து கொள்ள முடியவில்லை; ஏனெனில் அவர் புனிதமாகக் கருதிய திடமான மனப்போக்கின் செயல்திறனில் மூழ்கினார். பாபா அவரை அவ்வளவு எளிதில் விட்டுவிடுவதாக இல்லை. அவர் மௌனியின் ஆழமான மதப் போக்குகளின் ஆணிவேரைத் தளர்த்திக்கொண்டே இருந்தார்; பல வருடங்களுக்குப் பிறகு மௌனி இறுதியில் அவற்றை முறியடிக்க முடிந்தது.

காலம் இதை இப்படிப் பார்த்தது: "ஒருவரின் பற்றுதல்கள், கருத்துகள் மற்றும் விருப்பங்களை மாமிசம் உண்டு, மது அருந்தி, திரைப்படங்கள் பார்ப்பதன் மூலம் முறியடிக்க முடியாது; குருநாதரின் அறிவுரைகளை உண்மையாகப் பின்பற்றுவதன் மூலம் மட்டுமே முடியும். பாபாவின் முதல் கட்டளைகளை சாது மனமுவந்து ஏற்றுக்கொண்டிருந்தால், பாபா, மகிழ்ச்சியடைந்து அவற்றை மாற்றியிருக்கக் கூடும். இது சாதுவிற்கு ஒரு சோதனையாக அமைந்தது; எதுவாயினும், மனதில் உறுதியாகப் பதிவான கருத்துக்களை ஒரேயடியாக முறியடிக்க முடியாது."

1949 ஆகஸ்ட் **13** அன்று, 'கயா பிரசாத் கரே' **(**GAYA PRASAD KHARE**),** உத்தரபிரதேசத்தின் ரத் (RATH) நகரில் அமைந்த தனது வீட்டில் ஆழ்ந்த சிந்தனையில் அமர்ந்திருந்தார். 'மெஹர் பாபாவின் தரிசனம் எனக்கு கிடைக்காதது எவ்வளவு துரதிர்ஷ்டவசமானது' என்று அவர் புலம்பிக் கொண்டிருந்தார். "பாபாதாஸிடமிருந்து பாபாவைப் பற்றி நான் அறிந்துகொண்ட அடுத்த கணமே தரிசனம் நிறுத்தப்பட்டது. பாபாதாஸ் ஏன், எதற்காக முதலில் அவரைப் பற்றி என்னிடம் சொல்லவேண்டும்? அவர் என்னிடம் மெஹர் பாபாவைப் பற்றி சொல்லாமல் இருந்திருந்தால், நான் இவ்வளவு அமைதியற்றவனாக உணரமாட்டேன்."

அதற்கு பதிலாக, பாண்டிச்சேரிக்குச் சென்று அரபிந்தோவின் தரிசனத்தைப் பெறலாமா என்று யோசித்தார்; இருப்பினும், அரபிந்தோவும் தரிசனம் வழங்குவதை நிறுத்திவிட்டார் என்பதை அவர் அறிந்து கொண்டார். அவர் இப்போது என்ன செய்ய வேண்டும்?

இதுபோன்ற பல எண்ணங்கள் மனதில் அலைபாயும்போது, வீட்டு

வாசலில் பாபாதாஸ் தோன்றினார். "என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள்!" கரே வசைபாடினார். "மெஹர் பாபாவைப் பற்றிச் சொல்லி, என்னை இந்தச் சிக்கலான நிலையில் மாட்டச் செய்ததே நீங்கள்தான்! அவருடைய தரிசனத்திற்கு ஏற்பாடு செய்ய முடியாதபோது, அவரைப் பற்றிப் பேசி என்ன பயன்?"

"உங்களுக்கு அவருடைய தரிசனம் வேண்டுமா?" பாபாதாஸ் புன்னகைத்து "நான் ஏற்பாடு செய்கிறேன்; என்னுடன் வாருங்கள்" என்றார்.

"தரிசனம் நிறுத்தப்பட்டபோது எனக்கு மட்டும் அது எப்படி சாத்தியம்?" கரே சவால் விடுத்தார்.

"அதைப் பற்றி கவலைப்படாதீர்கள், என்னுடன் வாருங்கள்."

ஆகஸ்ட் 16 அன்று, பாபாதாஸ், கயா பிரசாத் கரேயுடன் மெஹராபாத் வந்தார். பாபா, கரேயைத் தனது அறைக்குள் வந்து, ஒரு கணம் அவரைப் பார்க்க அனுமதித்து, பின்னர் அவரது இல்லத்திற்குத் திரும்பும்படி அறிவுறுத்தினார். கரே அவர் கட்டளையிட்டபடி செய்தாலும், அந்த ஒரு கண நேர தரிசனம் அவரது இதயத்தை நிரந்தரமாகக் கவர்ந்து, ஆழ்ந்த ஏக்கத்தை ஏற்படுத்தியது. "அரை நிமிடத்திற்குப் பிறகு, பாபா என்னை வெளியேறுமாறு சைகையால் தெரிவித்தார்" என்று கரே நினைவு கூர்ந்தார். "பாபாவைப் பார்த்த பின்னர் எனது நிலையை என்னால் விளக்க முடியவில்லை. நான் சாலையோரத்தில் சாய்ந்துகொண்டு அழத் தொடங்கினேன்."

இதேபோல, மேலும் இரண்டு முக்கிய நபர்களான, அலிகாரைச் சேர்ந்த 'தோடி ஸிங் வர்மா' (TODI SINGH VERMA OF ALIGHAR) மற்றும் டெல்லியைச் சேர்ந்த 'கிஷன் ஸிங்' (KISHAN SINGH) ஆகியோரும் ஒரு குறுகிய நேர தரிசனத்திற்காக அனுமதிக்கப்பட்டு, திருப்பி அனுப்பப்பட்டனர். இந்த இரண்டு நபர்களும், 'தௌலத் ஸிங்'குடன் இணைந்து, தொடர்ந்து நிகழ்ந்த 'புது வாழ்வின்' காலகட்டத்தின் போது, மெஹர் பாபாவின் பணியில் முக்கிய தொடர்புகளாக நிரூபிக்கப்பட்டனர்.

ஆகஸ்ட் 16ஆம் நாள் இரவு நரிமனும், மெஹர்ஜியும் வந்தனர். வெற்றிகரமான தொழிலதிபர்களான ஸரோஷ், நரிமன், மெஹர்ஜி ஆகியோர் கடந்த காலத்தில் பாபாவின் சேவையில் தங்களை அர்ப்பணித்தவர்கள். ஆசிரமங்களைத் தகர்த்து, அனைத்தையும் அப்புறப்படுத்த வேண்டும் என்ற பாபாவின் முடிவு குறித்து அவர்கள் ஆழ்ந்த கவலை கொண்டிருந்தனர். கூட்டத்தின் மூன்றாவது நாளான புதன்கிழமை, 1949 ஆகஸ்ட் 17 அன்று, பாபாவுடன் இப்போது தங்கியிருக்கும் ஆண்கள், பெண்கள் அனைவரையும் காலவரையின்றி பராமரிக்கும் முழுப் பொறுப்பையும் ஏற்க ஸரோஷ் முதலில் முன்வந்தார்.

பாபா சிரித்துக்கொண்டே ஸரோஷின் செய்கையைப் பாராட்டி, அவருக்கு விளக்கினார்: **"நீங்கள் இதில் அடங்கியுள்ள முக்கிய அம்சத்தை முழுமையாகத் தவறவிட்டீர்கள்! என்னுடன் வராதவர்களுக்காக எனது**

அனைத்து சொத்துக்களையும் விற்பனை செய்வதன் மூலம் வரும் வருமானம் அவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை நீங்கள் பார்க்கவில்லையா? அக்டோபர் 15ஆம் நாளுக்குப் பின்னர் என்னுடன் இருப்பவர்களைப் பராமரிப்பது குறித்த கேள்விக்கு எந்த ஒதுக்கீடும் செய்யப்படவுமில்லை, அதற்கு எந்தத் தேவையும் இல்லை.

"நானும் என்னுடன் வருபவர்களும் துன்பங்களை சந்திக்கப் போகிறோம். பாதுகாப்பு எதுவும் இல்லாமல் 'புது வாழ்வை'த் தொடங்கப் போகிறோம், நாங்கள் யாசித்து வாழ வேண்டியிருக்கும்!"

நரிமன், மெஹர்ஜி இருவரும் மெஹராபாத் மற்றும் மெஹராஸாத், ஒவ்வோர் ஆசிரமத்தின் நிலங்கள், கட்டிடங்கள் போன்ற பலவற்றையும், இந்த இரண்டு புனிதமான இடங்களின் தனித்துவத்தை, மகிமையை அவர்களின் ஆழ்ந்த உணர்வுகளின் காரணமாக, கையகப்படுத்த விருப்பம் தெரிவித்தனர். நல்ல விலையை வழங்க எவரேனும் முன்வருவதானால், சொத்துக்களை மறுவிற்பனை செய்யத் தயங்க வேண்டாம் என்று பாபா இணக்கம் தெரிவித்து அவர்களிடம் விளக்கியபோது, நரிமன் இவ்வாறு பதிலளித்தார், "அவற்றை விற்பது குறித்த கேள்வியாக இருந்திருந்தால், நாங்கள் எங்களை இதில் ஈடுபடுத்தியிருக்க மாட்டோம்."

"இப்போது இந்த சொத்துக்கள் உங்களுடையது, என்னுடையது அல்ல, நீங்கள் அதை வைத்திருப்பதில் அல்லது விற்பதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை" என்று பாபா கூறினார்.

மெஹராபாத் நிலம் முதலில் ஆதி சீனியர் மற்றும் அவரது தந்தைக்குச் சொந்தமானது, அவர் அதை பாபாவின் காலடியில் அர்ப்பணித்தார். மெஹர்ஜி, கீழ் மெஹராபாத்தின் உரிமையாளரான அதேவேளையில், ஸரோஷ் மெஹராபாத் மேல்மலைக்கும், நரிமன் மெஹராஸாத்திற்கும் உரிமையாளர்களாக மாறினர். ஆனால் இம்மூவரும் பாபாவின் எதிர்கால பணிக்காக இந்தச் சொத்துக்களை பராமரித்து வந்தனர், அவற்றைத் தங்களுடையதாக ஒருபோதும் கருதவில்லை.

அன்றைய கூட்டத்தில், மெஹர் பாபா, ஆண்கள் குழுவிற்கு பின்வரும் மூன்று மாற்று வழிகளை வழங்கினார்:

<u>முதலாவதாக</u>: நான் விதித்த நிபந்தனைகளை நிறைவேற்றும் திறன் படைத்தவர்கள், அவற்றை ஏற்றுக்கொள்பவர்கள் என்னுடன் செல்வார்கள்.

<u>இரண்டாவது</u>: என்னுடன் செல்ல முடியாதவர்கள், தங்கள் வாழ்வாதாரத்திற்காக உழைத்து சம்பாதிக்க வேண்டும்; அவர்கள் சம்பாதிப்பதில் எதையேனும் மிச்சப்படுத்தினால், அந்த சேமிப்பை, சார்ந்திருக்கும் குடும்பங்களுக்கு வழங்க வேண்டும்; மேலும், நான் அவர்களுக்கு ஏற்கனவே வழங்கிய கட்டளைகளை அல்லது எதிர்காலத்தில்

வழங்கும் உத்தரவுகளை தொடர்ந்து செயல்படுத்த வேண்டும்.

மூன்றாவது: என்னுடன் செல்ல அல்லது பிறருக்கு ஆதரவளிக்க மற்றும் எனது கட்டளைகளை நிறைவேற்ற முடியாதவர்கள் தத்தமது வழியில் செல்ல வேண்டும்.

மேலும் விவாதத்தைத் தொடர்வதற்கு முன்பு பாபா, டாக்டர் கனியிடம் பின்வரும் பிரார்த்தனையை மொழியுமாறு கேட்டுக் கொண்டார்: **"கடவுள் மண்டலிக்கு நல்ல புத்தியையும், பாபாவிற்கு முழுமையான உயர் தரமானதைக் கண்டறியும் திறனையும் வழங்கட்டும்!"**

மாற்று வழிகளைத் தெளிவுபடுத்தும் விதத்தில் பாபா சில உதாரணங்களை வழங்கினார்:

ராம்ஜூ என்னுடன் வராமல் அஹமதுநகரில் தங்கி, அவரிடம் ஒப்படைக்கப்பட்ட கடமைகளைத் தொடர்ந்து செய்து, எனது கட்டளைகளைப் பின்பற்றி வந்தால், என்னுடனான அவரது ஆன்மீகத் தொடர்பு, இன்று போலவே என்றும் இருக்கும். அதே போல, பாதிரி என்னுடன் வரவில்லை என்று வைத்துக்கொள்வோம். அப்படியானால், நான் அவரிடம் ஒரு வேலையைத் தேடச் சொல்லி, அவருடைய வருமானத்திலிருந்து தன்னைப் பராமரிக்கவும், எஞ்சியுள்ளதை, சார்ந்திருக்கும் குடும்பங்களுக்கு வழங்கவும் அறிவுறுத்துவேன். பாதிரி, என் உத்தரவை நிறைவேற்றினால், என்னுடனான அவரது ஆன்மீகத் தொடர்பும் இன்று போல் இருக்கும். அதேபோல, பைதூல் என்னுடன் வர நேர்ந்தால், நல்லது; இல்லையேல், அவர் மும்பையில் கய்குஷ்ருவின் (ராவ்ஸாஹேப் அஃப்ஸேரி - RAOSAHEB AFSERI) உணவகத்தில் பணியாற்ற வேண்டும்.

முந்தைய நாள் மதியம், மெஹராபாத் மேல்மலையில் வாழும் பெண் மண்டலிக்கு, பாபா மாற்று வழிகளை விளக்கி, நான்கு வழிகளைக் வழங்கினார்:

<u>முதலாவதாக:</u> உங்களில் எவரேனும் உங்களது குடும்பத்தில் உள்ள சிலருக்கு நிதியுதவி வழங்க முடிந்தால், நீங்கள் மெஹராபாத் மேல்மலை குடியிருப்பில் தங்கலாம், ஆனால் மலையின் கீழ் வாழும் ஆண் மண்டலி உறுப்பினர்கள் எவரும் எந்த வகையிலும் உதவ மாட்டார்கள்.

<u>இரண்டாவது:</u> உங்களின் அன்றாட வாழ்க்கைக்காக உழைத்து, இதுவரை என்னை நம்பி இருந்த குடும்பங்களின் பராமரிப்புக்காக எதையேனும் ஒதுக்கி வைக்கலாம்.

<u>மூன்றாவது:</u> நீங்கள் விரும்பியதைச் செய்யலாம் ஆனால் எனக்கும் இதற்கும் எந்த சம்பந்தமும் இராது.

<u>நான்காவது:</u> உங்களுக்காக நான் எடுக்கும் எந்த முடிவையும் முழு நம்பிக்கையுடன் ஏற்றுக்கொண்டு, எல்லாவற்றையும் என்னிடம் விட்டுவிட்டு, நான் சொல்வதை மட்டுமே செவ்வனே செய்யலாம்.

இரண்டு மாற்று வழிகளுக்கு இடையே உள்ள வித்தியாசத்தை விளக்கி,

பாபா, பெண் மண்டலிக்காகத் தானே முடிவெடுப்பது குறித்து வழங்கிய சலுகை, எந்த சூழ்நிலையிலும் ஆண் மண்டலிக்குப் பொருந்தாது; ஒவ்வொருவரும் தத்தமது இறுதி முடிவை தானே எடுக்கவேண்டும் என்று கூறினார். **"ஆனால், ஆண், பெண் இருவர் விஷயத்திலும், ஒவ்வொரு நபரும் எடுக்கும் முடிவு, நேரடியாக அல்லது எனது மூலமாக வந்தாலும், அவரவர் இறுதி முடிவின் முழுப் பொறுப்பையும், எனது முன்னிலையில், கடவுளுக்கு முன்பாக உறுதிப்படுத்த வேண்டும்"** என்று பாபா மேலும் கூறினார்.

மேல்மலையில் பெண்மணிகளை சந்தித்ததை ஆண் மண்டலிக்கு விவரிக்கும் போது, மெஹர் பாபா, பைதூல், கைக்கோபாத் இருவரின் மனைவிகள் மற்றும் குழந்தைகளைப் பற்றிக் குறிப்பிட்டார்:

கைக்கோபாத்தின் குடும்ப உறுப்பினர்களிடம் முதலில் அவரைக் கலந்தாலோசிக்குமாறு நான் பரிந்துரைத்தபோது, அவர்கள் ஒவ்வொருவரும் எனக்குச் சொந்தமானவர்கள் என்றும் நான் சொல்வதையே செய்வதாகவும் கூறினர். அதேபோல, பைதூலின் குடும்பத்தாரிடம் அவர்களைப் பற்றி 'அவர்களிடமே கேட்கலாமா அல்லது பைதூலிடம் கேட்கவேண்டுமா' என வினவியபோது, 'பைதூலுக்கு அவருடைய குடும்பத்தாரின் எதிர்காலத்தைப் பற்றி எந்தக் கவலையும் இல்லை' என்றும், 'அவர்களுக்கான எனது முடிவை முழுமையாக ஏற்றுக்கொள்வதாகவும்' சொல்லும் அளவிற்குச் சென்றனர்.

மேல்குறிப்பிட்ட நான்கு மாற்று வழிகளையும் கவனமாக அலசி ஆராய்ந்த பின்னர், அங்கிருந்த ஒவ்வொரு பெண்மணியும் 'நான் சொன்னதையே செய்வோம்' என்ற நான்காவது வழிமுறையைக் கடைப்பிடிப்பதாக உறுதியளித்தனர். அவர்களின் நேர்மை மற்றும் வாக்குறுதியின் அடையாளமாக, எனது கையில் முத்தமிடச் சொன்னேன். அதைத் தொடர்ந்து, அந்த முத்தம் யூதாஸின் முத்தமாக இல்லாமல், கீழ்ப்படிதலின் முத்திரையாகப் பாதுகாக்கும்படி கவனமாக இருக்கச் சொன்னேன்.

1949 ஆகஸ்ட் **18** வியாழன், கீழ் மெஹராபாத்தில் ஆண்களுடன் முதல் முழு நாள் கூட்டம் நடைபெற்றது. இதற்கு முன்பு மூன்று நாட்கள், பாபா கீழ் மெஹராபாத்தில் காலை **7:30** முதல் **11:00** மணி வரை ஆண்களுடனும், மேல்மலையில் **11:00** முதல் இரவு **7:00** மணி வரை பெண்களுடனும் இருந்தார். (மெஹரா, மணி, கோஹெர், மெஹரு ஆகியோர் **15, 16, 17**ஆம் தேதிகளில் மெஹராஸாத்திலிருந்து மெஹராபாத்திற்கு பாபாவுடன் சென்றனர்.) இருப்பினும், **18**ஆம் தேதி முதல், பாபா முழு நேரத்தையும் கீழ் மெஹராபாத்தில் ஆண்களுடன் செலவிடுவதாகத் திட்டமிடப்பட்டிருந்தது.

மெஹர் பாபா பலமுறை கடவுளிடம் பிரார்த்தனை செய்வதும்,

மண்டலியின் பொறுப்புகளுக்கு அவர் உத்தரவாதமாக இருக்க வேண்டும் என்ற அவரது உறுதிமொழிகளும் 18ஆம் தேதி உச்சக்கட்டத்தை எட்டின.

காலை 6:50 மணிக்கு மெஹராஸாத்திலிருந்து வந்ததும், கைக்கோபாத், டாக்டர் டான், காக் ஸாஹேப், காளே மாமா ஆகியோர் முறையே அவெஸ்தா, பைபிள், குரான் மற்றும் கீதையின் பிரதிகளுடன் தயாராக இருக்கும்படி அறிவுறுத்தப்பட்டனர். நேர்காணல் அறையில் நரிமன், மெஹர்ஜி இருவருடனான உரையாடலுக்குப் பிறகு, பாபா மண்டபத்திற்குள் நுழைந்து நான்கு மண்டலியை 'பாதிரிகள்' என்று அழைத்து - ஒரு கிறிஸ்தவ பாதிரியார், ஒரு ஸொராஸ்ட்ரியன் தஸ்தூர், ஓர் இஸ்லாமிய முல்லா மற்றும் ஓர் இந்து பண்டித் ஆகியோரைப் பிரதிநிதித்துவப்படுத்தி - அவர்களைத் தனது வலதுபுறத்தில் நிற்க வைத்தார். கைக்கோபாத் முதலில் கஸ்தி (புனித நூல்) விழாவைத் தொடங்கி, ஐந்து நிமிடங்களுக்கு வழக்கமான பிரார்த்தனையை உரத்த குரலில் மொழியுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார். அதைத் தொடர்ந்து டாக்டர் டான், மத்தேயு நற்செய்தியிலிருந்து இயேசு சிலுவையில் அறையப்பட்ட வியாக்கியானத்தை வாசித்தார். காக் ஸாஹேப் நமாஸ் (பிரார்த்தனை) வழங்கினார், மேலும் காளே மாமா பகவத் கீதையின் பத்தாவது அத்தியாயத்திலிருந்து ஏழு ஸ்லோகங்களை வாசித்து நிறைவு செய்தார்.

பகவத் கீதையின் பத்தாவது அத்தியாயம் 'இறை வெளிப்பாட்டின் யோகப் பயிற்சி' என்று அழைக்கப்படுகிறது, இது கிருஷ்ணர். அர்ஜுனனிடம் தனது தெய்வீக நிலையை விவரிக்கும் படலம். அந்த அத்தியாயத்திலிருந்து ஒரு பகுதி பின்வருமாறு:

கிருஷ்ணர்: **"அர்ஜுனா, நான் கூறுவதைக் கேளுங்கள்! எனது தெய்வீக சுய வெளிப்பாடுகளை நான் உங்களுக்கு விளக்குகிறேன்; அவைகளில் முதன்மையானவற்றை மட்டுமே வழங்குகிறேன், ஏனெனில் என் அளவிற்கு முடிவே இல்லை. அர்ஜுனா, நானே பரமாத்மா, அனைத்து உயிர்களின் இதயத்திலும் நிலைத்திருக்கிறேன்; நானே பரமாத்மா, உயிரினங்களின் தொடக்கமும், நடுவும், முடிவும் நானே! அனைத்து உயிரினங்களுக்கும் கருவாக, விதையாக இருப்பதும் நானே, அர்ஜுனா, நான் அசைந்தாலும் இல்லாவிடிலும் என்னில் இல்லாமல் இருப்பது எதுவுமில்லை. எனது தெய்வீக வெளிப்பாட்டிற்கு முடிவே இல்லை...**

"எனது வெளிப்பாடுகளின் அளவிற்கு இது ஓர் எடுத்துக்காட்டு என்று நான் அறிவித்தேன். எந்த ஒரு ஜீவராசியும், புகழும், பலமும் நிறைந்ததாக இருந்தாலும், உண்மையில், ஒவ்வொரு விஷயத்திலும், அது எனது மகிமையின் ஒரு குறுகிய பகுதியிலிருந்து தோன்றுகிறது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். ஆனால் உங்களைப் பொறுத்தவரை, இந்த விரிவான அறிவு என்பது என்ன அர்ஜுனா? நான் இந்த முழுப் பிரபஞ்சத்தையும் ஒரு குறுகிய

பகுதியிலிருந்து தொடர்ந்து ஆதரிக்கிறேன்.”

ஒவ்வொரு முறை வாசித்த பிறகும், மெஹர் பாபா புத்தகத்தை எடுத்து மடியில் வைத்து, அதில் விரல்களை ஊன்றினார். கடைசி பிரார்த்தனைக்குப் பிறகு, பாபா தனது மடியிலிருந்து புனித புத்தகங்களை எடுத்து, பக்கத்தில் ஒரு மேஜையில் விரித்து, நான்கு புத்தகங்களின் மீது இரண்டு கைகளையும் வைத்து, பின்வரும் பிரார்த்தனையை மொழியுமாறு அவர் டாக்டர் கனிக்கு அறிவுறுத்தினார்: **“பாபா எடுக்கும் இந்த நடவடிக்கையில் கடவுள் நிச்சயமாக உதவட்டும்; எல்லாவற்றையும் துறந்து, மாற்றமில்லாத, எதுவாயினும் பின்வாங்க முடியாத உறுதிப்பாட்டுடன், அக்டோபர் 16 முதல் அவர் புது வாழ்வில் நுழைகிறார்.”**

கடந்த 28 ஆண்டுகளில் மெஹர் பாபா, உதவி கோரி, கடவுளுக்குச் செய்த முதல் பிரார்த்தனை இதுவாகும்; இதைப் பார்த்து மண்டலி அனைவரும் மிகவும் திகைத்துப் போயினர்; எவரும் ‘ஆமென்’ என்று கூட உச்சரிக்கவில்லை.

நீண்ட காலமாக மெஹர் பாபா, தனது அன்பர்கள், மண்டலி அனைவரும் அவரது பாதங்களைத் தொடுவதையும், கைகளைக் கூப்பி வணங்குவதையும் தடை செய்திருந்தார். ஒவ்வொருவரும் அதைப் புரிந்துகொண்டு, பாபாவின் விருப்பத்திற்குக் கீழ்ப்படிந்தனர். ஆகஸ்ட் 18 அன்று, பாபாவின் நாற்காலியின் அருகில் அமர்ந்திருந்த அலோபா, அமைதியாகவும் அதிவிரைவாகவும் பாபாவின் பாதங்களைத் தொட்டதை, வேறு எவரும் கவனிக்காத பட்சத்தில், திடீரென, பாபா மிகவும் தீவிரமடைந்தார். மண்டலி அமைதியாக அமர்ந்திருந்தனர். எந்தவிதமான அதிருப்தியையும் வெளிப்படுத்தாமல், அலோபாவிடம் அசையாமல் தன் முன் நிற்கும்படி பாபா, சைகையால் தெரிவித்தார். பாபா, தனது நாற்காலியிலிருந்து எழுந்து, அவரை அணுகி, அவர் பாதங்களைத் தொடுவதற்காகக் குனிந்த அந்த நேரத்தில், அலோபா, சத்தமாக அலறிக் கொண்டு, பாபா அவரது பாதங்களைத் தொடுவதைத் தடுக்க, மேலும் கீழுமாகக் குதித்தார். மண்டபத்தின் கல் தரையில் விழுந்துவிடாமல் அவரைக் காப்பாற்ற, மண்டலியில் சிலர் வேகமாக நகர்ந்து செல்வதற்கு முன்னர், அவர் தரையில் விழுந்ததால், பாபாவின் கையில் காயம் ஏற்பட்டது. பாபா தனது கை மீது கவனம் செலுத்தாமல், கீழ்ப்படிந்து அசையாமல் நிற்குமாறு அலோபாவிடம் சைகையால் தெரிவித்தார். இறுதியாக, அலோபா கண்கலங்கி அழுத வேளையில், பாபா அவரது பாதங்களைத் தொட்டார்.

அப்போது பாபாவின் வலது கை விரல்களில் அலோபாவின் முழு உடல் பளுவும் விழுந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டது. சம்பவ இடத்திலேயே முதலுதவியுடன் டாக்டர்கள் நீலுவும், டானும் சிகிச்சை அளித்தாலும், பாபா பல நாட்கள் கவண் கயிற்றில் கையைத் தாங்க வேண்டியிருந்தது. அவரது விரல்கள் வீங்கி, பல இரவுகளில் துடிதுடிக்கும் வலியை அனுபவித்தார். எழுத்துப்பலகை

மூலம் 'உரையாடுவதும்' கடினமாகிவிட்டது, ஏனெனில் அவரது விரல்களை நகர்த்த மிகவும் சிரமமாக இருந்தது, மேலும் வலியோடு மட்டுமே ஆவணங்களில் கையெழுத்திட முடிந்தது.

ஆனால் அதே நாளின் பிற்பகுதியில், பாபா, அலோபாவை மன்னித்து, அந்த சம்பவத்தை மறந்துவிடுமாறும், அவரது எதிர்வினைக்கு அவர் மீது குற்றம் சுமத்த வேண்டாம் என்றும் வலியுறுத்தினார். அலோபாவிடம் பாபா இவ்வாறு எடுத்துரைத்தார்: **"எனது கட்டளைகளை நிறைவேற்றுவது அனைத்திலும் முக்கியமான விஷயம். அதனுடன் ஒப்பிடும்போது நான் உங்கள் காலில் விழுவதில் எந்த முக்கியத்துவமும் இல்லை.**

"எனது நிபந்தனைகளை முழுவதுமாக நிறைவேற்றத் தயாராக இல்லை என்றால், நீங்கள் என்னுடன் எப்படிச் செல்ல முடியும்? ஒருவேளை தினமும் காலையில் முதல் வேலையாக, 'மண்டலியிடம் எனது முகத்தில் எச்சிலைத் துப்புவது அல்லது தினமும் காலையில் நான் உங்கள் பாதங்களைத் தொடுவது!' இது போன்ற கட்டளைகளை ஏற்றுக்கொள்வீர்களா?" என்று பாபா, அலோபாவிடம் கேட்டதற்கு அவர், "இது ஒருவரைத் துண்டு துண்டாக்கிவிடும் கேள்வி" என்று பதிலளித்தார்.

"இல்லை, அப்படி இல்லை; இது, நிபந்தனைகளை நிறைவேற்றுவது மட்டுமே" என்று கூறி, பாபா, அலோபாவை அழைத்து, காதைத் திருகச் சொன்னார். அலோபா அதை விருப்பத்துடன் செய்தார்.

அதன் பின்னர், அண்ணா 104 கையை உயர்த்திய போது, பாபா, என்னவென்று வினவ, அவர், "நானும் உங்கள் காதைத் திருகத் தயார்" என்றார்.

சிரித்துக்கொண்டே பாபா பதிலளித்தார், **"எனக்கு இது அலோபாவிடமிருந்து மட்டுமே வேண்டும், வேறு எவரிடமிருந்தும் இல்லை. ஆனால் உங்களில் எவரேனும் என்னைப் பழிவாங்கும் எண்ணத்தில் உங்கள் மனதில் உள்ள உணர்வுகளை வெளிப்படுத்த நினைத்தால், இன்றைய நாளில் எனது காதைத் திருகுவதை நான் பொருட்படுத்த மாட்டேன்; என் அதிருப்திக்கு அஞ்சாமல் நீங்கள் அதைச் செய்யலாம்."**

பலத்த சிரிப்பின் குரலுக்கு மத்தியில், பாபா கூறினார், **"எனது காதுகளைத் திருகுவது எளிது, ஆனால் எனது கட்டளைகளைப் பின்பற்றுவது கடினம்."**

அப்போது பாபா குறிப்பிட்டார், **"என்னுடன் வர விரும்புபவர்கள், ஏற்கனவே தங்கள் உயிரைத் துறந்துவிட்டதாகக் கருத வேண்டும். உயிரற்ற உடலுக்கு எந்தப் பொருளோடும் எவ்விதமான சம்பந்தமும், அக்கறையும் இல்லையோ, மேலும், கேள்விகள் கேட்காமலும், எதையும் விரும்பாமலும் இருக்குமோ, அதுபோல், என்னுடன் வருபவர்களும் நடை பிணமாக இருக்கவேண்டும்.**

“என்னுடன் வந்து, எந்தக் குறிப்பிட்ட காரணமும் இல்லாமல், யார் ஒருவர் உயிரைத் துறக்க விரும்புகிறார்கள் என்பதை நான் பார்க்கப் போகிறேன்!”

பாபா மண்டலியின் முழு மனதுடன் கூடிய, நேர்மையையும், உண்மையுமான ஒத்துழைப்பையும் நாடினார், மேலும் அவர்கள் ஆன்மீகம் சார்ந்த விருப்பு மற்றும் நம்பிக்கைகள் பற்றிய அனைத்து எண்ணங்களையும் கைவிட வேண்டும் என்று எச்சரித்தார். எந்த வெகுமதியையும் எதிர்பாராமல் தன்னுடன் செல்வதை மட்டுமே மனதில் கொள்ளும்படி அவர்களைக் கேட்டுக் கொண்டார்.

தொடர்ந்து, பாபா விரிவாகக் கட்டளையிட்டார்:

இது மஸ்த் பயணங்களில் எதிர்கொள்ளும் இடர்பாடுகள் மற்றும் சிரமங்களைப் பற்றிய கேள்வி மட்டுமல்ல. இப்போது மிகவும் கடினமான விஷயம் என்னவெனில், உணர்ச்சிகளையும் உணர்வுகளையும் கட்டுப்படுத்துவதும், நான் உங்களிடம் எதையும் செய்யவும், அல்லது செய்ய வேண்டாம் என்று கூறினாலும் அதற்கு, கண நேரமும் தாமதமின்றி, கீழ்ப்படிதலுக்கான முழுமையான தயார்நிலையில் இருப்பதுமாகும். உங்களில் எவரும் கோபம், அதிருப்தி, விருப்பு, வெறுப்பு போன்ற நல்ல அல்லது தீய உந்துதல்களின் அந்தந்த எதிர்வினைகளிலிருந்து விடுபட வேண்டும் என்று நான் எதிர்பார்க்கவில்லை; ஆனால் உங்களிடமிருந்து நான் எதிர்பார்ப்பது, உங்கள் உணர்வுகள் மற்றும் எதிர்வினைகளை சிறிதளவும் வெளிப்படையாகக் காட்டவோ அல்லது நேரடியாக அல்லது மறைமுகமாக வெளிப்படுத்தவோ கூடாது என்பதுதான்.

நான் எல்லா வழியிலும் சுதந்திரமாக இருப்பேன், நீங்கள் எல்லா வகையிலும் கட்டுப்படுவீர்கள். நான் உங்களில் ஒருவனாக, சகோதரனைப் போல் உங்களிடையே வாழ்வேன். நான் உங்கள் காலில் விழலாம் அல்லது என் மீது எச்சிலைத் துப்பக் கூறலாம். இதுபோன்ற நிபந்தனைகளின் காரணமாக, இறுதிவரை என்னுடன் இருப்பவர்கள் வெகு சிலரே என்ற நிலை உருவாகும் என்று சொல்லி வருகிறேன். ஆனால் எல்லா நேரங்களிலும், எல்லா சூழ்நிலைகளிலும் நீங்கள் தொடர்ந்து என்னை உங்கள் குருநாதராகப் பார்த்து, முற்றிலுமாக எனக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

எந்த ஒரு சந்தர்ப்ப சூழ்நிலையிலும், நேரடியாக அல்லது மறைமுகமாக, வார்த்தை அல்லது செயல் மூலமாக, எனக்கு அல்லது உங்களில் ஒருவருக்கு, மதிப்பு அல்லது மரியாதையை வழங்கும் அல்லது தூண்டும் திறன் கொண்ட எந்த சந்தர்ப்பத்தையும் உருவாக்குவதைத் தவிர்க்க, என்னுடன் செல்பவர்கள், எப்போதும், முறை தவறாத, முழு கவனத்துடன் இருக்க வேண்டும். தற்செயலாக, தெரிந்தோ தெரியாமலோ

எவரேனும் மதிப்பு அல்லது மரியாதை செலுத்த நேர்ந்தால், நான் மண்டலியின் பாதங்களைத் தொட்டு வணங்குவதைத் தவிர, அந்த மதிப்பும் மரியாதைக்கும் உரிய வணக்கச் செயலை அந்த இடத்திலேயே உடனடியாகத் திரும்பச் செலுத்தவேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக, நான் இதுவரை செய்து வருவதைப் போல, யாருடைய உடல்நிலையிலும் கவனம் செலுத்தவோ, மனநிலை மற்றும் விருப்பு வெறுப்புகள் குறித்து கவலைப்படவோ மாட்டேன். இந்த எல்லா சூழ்நிலைகளிலும், இறுதிவரை என்னுடன் இருப்பதில் உண்மையில் வெற்றி பெறுபவர்கள், என்னால் வணங்கப்படுவதற்குத் தகுதியானவர்கள் ஆவர். எனவே, முடிந்தவரை, பல மண்டலி என்னுடன் செல்வதில் நான் மகிழ்ச்சியடைவேன் ஆனால் - எதிர்வரும் சிரமங்களையும், சாத்தியமான எல்லா சந்தர்ப்பங்களையும் சூழ்நிலைகளையும் சந்திப்பதற்காக நான் முன்வைக்க இருக்கும் நிபந்தனைகளைக் கருத்தில் கொண்டு - என்னுடன் 500 பேர் வந்தாலும் ஐந்து பேர் கூட இறுதிவரை என்னுடன் இருப்பார்களா என்ற சந்தேகம் எழுகிறது.

ஐந்து நாட்கள் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டவர்கள் மெஹராபாத்திலிருந்து தமது இல்லங்களுக்குப் புறப்பட்டுச் சென்ற பிறகு, டாக்டர் டான், டாக்டர் கனி இருவரும் பாபா எடுத்துரைத்த குறிப்புகளின் அடிப்படையில், புது வாழ்வின் நிபந்தனைகளுக்குத் தோராயமாக வடிவம் கொடுத்தனர். ஆனால், 1949 ஆகஸ்ட் 21 சனிக்கிழமையன்று, காலை 10:30 மணிக்கு, பாபா முன்னிலையில் வாசிப்பதற்கு முன்பு, பாபா, டாக்டர் கனியிடம் இந்தப் பிரார்த்தனையை மொழியுமாறு கேட்டுக் கொண்டார்: **"பாபாவின் நிபந்தனைகளில் அடங்கிய அனைத்து அம்சங்களையும் இறுதிவரை கடைப்பிடிக்க கடவுள் தனது முழுமையான பலத்தை வழங்குவாராக...."**

பிரார்த்தனைக்குப் பிறகு, நிபந்தனைகளின் வெவ்வேறு விளக்கங்களைக் குறித்த ஆவணத்தை மறுபரிசீலனை செய்யுமாறு பாபா, இருவருக்கும் அறிவுறுத்தினார். அதே நேரத்தில், அவர் புது வாழ்வின் முக்கியத்துவம் மற்றும் இறுதித்தன்மை, மேலும் ஆகஸ்ட் 31ஆம் நாள் ஏற்றுக்கொள்ளப்படும் நிபந்தனைகளின் தவிர்க்க முடியாத மற்றும் மாற்ற முடியாத தன்மை ஆகியவற்றின் சிந்தனையில் ஆழ்ந்தார். தொடர்ந்து பாபா இவ்வாறு எடுத்துரைத்தார்: **"நான் எடுத்த முடிவுகளில் எந்த மாற்றமும் இல்லை. நான் மெஹராபாத்திற்கோ அல்லது மெஹராஸாத்திற்கோ திரும்பப் போவதில்லை. அந்த உண்மை, அடுத்த நாள் நான்கு மண்டலி உறுப்பினர்கள் வழியாக மேற்கொள்ளப்பட்ட உறுதிமொழி மூலம் ஊர்ஜிதப்படுத்தப்பட்டது. நான் பல்வேறு மத நூல்களில் பதித்த கைவிரல்களில் காயம் ஏற்பட்டதில் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன்.**

என்னுடன் செல்பவர்கள் பெரும் துன்பங்களை சந்திக்க நேரிடும் என்ற உண்மை மண்டலியின் கண்களை, இப்போது, திறந்திருக்க வேண்டும்.

ஆரம்பத்தில் இருந்ததைப் போலவே, கூட்டத்தின் முடிவில் பாபாவுடன் நிகழ்த்திய உரையாடலுக்கு இடையே, "எல்லாம் எளிதாகிவிடும்" என்று டாக்டர் நீலு கூறினார்.

பொதுவாக, பாபா எதுவும் கூறாமல் இருப்பதை வழக்கமாகக் கொண்டாலும், அன்று அவர் பதிலளித்தார், "**ஒன்றும் சிரமம் இல்லை. நாளை மதியம் 2:00 மணிக்குள் ராம்ஜூ, அவரிடம் ஒப்படைக்கப்பட்ட வேலையை முடிக்கவில்லை என்றால் சிரமம் நிச்சயம்!**"

மெஹர் பாபா, 'புது வாழ்வு' நிறைவடைவது வரை, அவரைப் பற்றிக்கொண்டு இருப்பவர்களின் இறுதி எண்ணிக்கையைப் பற்றிய சந்தேகத்தைத் தொடர்ந்து எழுப்பி வந்தார்: "**உங்களில், நன்றாக விஷயங்களைத் தெரிந்து, புரிந்து கொள்ளக்கூடியவர்கள் கூட, புது வாழ்வு மற்றும் அதன் தன்மைகளின் முழு தாக்கங்களையும், இயல்புகளையும் குறித்துக் குறைவாக மதிப்பிட்டு, ஏமாற்றமூட்டும் கேள்விகளைக் கேட்பது மிகவும் ஆச்சரியமாக உள்ளது. உதாரணமாக, சமீபத்தில் ஒருநாள், சகன், என்னுடன் வர வேண்டுமா அல்லது மாற்று வழியை பின்பற்ற வேண்டுமா என்ற கேள்வியை எழுப்பினார். கனிக்கும் எனது உதவி தேவை என்பதைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை.**

"**நான் எதற்கும் அல்லது எவருக்கும் பொறுப்பாக இருக்கமாட்டேன் என்பதுதான் உண்மை. குஸ்தாஜிக்குக் கூட நான் எந்தப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள மாட்டேன், இருப்பினும் நான் அவரை என்னுடன் வைத்திருக்க முயற்சிப்பேன், ஏனெனில் உபாஸனி மஹாராஜ் அவரை என்னிடம் அனுப்பி வைத்தார். ஆனால் அதுவும் குஸ்தாஜி நான் சொல்வதற்கு செவி சாய்ப்பாரா என்பதைப் பொறுத்தே இருக்கும்; இல்லையேல் அவருக்கும் பிரியாவிடைதான்!**"

மண்டலியுடனான விவாதத்தின் போது, பாபா, காயம்பட்ட கைவிரல்களைக் காட்டி, "**இதையும், என்னுடைய முழு மௌனத்தையும், மேலும் நான் செய்தாக வேண்டிய அனைத்தையும் உங்களின் கற்பனைக்கே விட்டுவிடலாம். அதன் பின்னர், எனது மறு கை செயலிழந்துவிட்டால், நான் உடல் ரீதியாக கிட்டத்தட்ட ஆதரவற்றவனாக ஆகிவிடுவேன் என்றுதான் அர்த்தம்; அப்படியானால், என்னுடன் இருப்பவர்கள் தண்ணீர் மட்டுமே அருந்தி உயிர்வாழ வேண்டியிருக்கும், ஏனெனில் என்னுடைய குறிப்பிட்ட ஒரு நிபந்தனையின்படி, எங்கிருந்தேனும் உணவு கிடைக்கும் வேளையில் அல்லது யாசிப்பதன் மூலம் எவரேனும் உணவைக் கொண்டுவரும்**

நேரத்தில், அதை நானே பகிர்ந்தளிக்கும் வரை ஒருவரும் அதில் பங்கெடுக்க முடியாது."

முதலில் அஹமதுநகர் மற்றும் வெளி இடங்களில் வாழும் அனைத்து மண்டலி உறுப்பினர்களுக்கும், பாபா மற்றும் அவரது பணியுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புடைய பிற அனைவருக்கும், நிபந்தனைகள் வழங்கப்பட வேண்டும். பின்னர், 25 வயதுக்குட்பட்டவர்கள் அல்லது 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் எவரும், புதிய திட்டத்தில் இடம் பெற மாட்டார்கள் என்று பாபா தெளிவுபடுத்தினார். ஐந்து நாட்கள் சந்திப்புகள் நடந்தபோது, புது வாழ்வுக்குள் நுழைவதற்கான வருங்கால தோழர்களின் களம் படிப்படியாக ஒரு சிறிய எண்ணிக்கையாகச் சுருங்கியது.

அவருடன் நெருங்கிய தொடர்புடைய அனைவருக்கும் - கிட்டத்தட்ட 1,200 பக்திமிக்க அன்பர்களுக்கு - நிபந்தனைகளை அனுப்புவதற்கு பதிலாக, பாபா தேர்ந்தெடுத்த 32 ஆண்களை மட்டும் செப்டம்பர் 4ஆம் நாள் மெஹராபாத்திற்கு அழைக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்; அந்த நேரத்தில், தனிப்பட்ட முறையில் நிபந்தனைகள் வழங்கப்படும்.

1949 ஆகஸ்ட் 22 அன்று, ஒவ்வொருவருக்கும் இந்த அவசர சந்திப்பைப் பற்றி கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது: "**நீங்கள் தனியாக வர வேண்டும், நீங்கள் இப்போது வரவில்லை என்றால் ஒருபோதும் வரமாட்டீர்கள்!**" (இறுதியில் கூட்டம் ஆகஸ்ட் 31க்கு மாற்றப்பட்டது.)

மெஹராபாத்தில் கூட்டம் நடந்து கொண்டிருந்த வேளையில், ராமச்சந்திர காடேக்கர் அழைத்து வந்த ஜெகந்நாத் கேஷவ் ரங்கோலே (JAGANNATH KESHAV RANGOLE), லக்ஷ்மண் மற்றும் கிஸன் தாடே (LAXMAN & KISAN THADE), மதுசூதன் புண்ட் (MADHUSUDAN PUND), கிருஷ்ணா பண்டெலு (KRISHNA BUNDELLU) மற்றும் ஒருவர், பூனாவிலிருந்து அஹமதுநகருக்கு வந்தனர். ஆதி சீனியர் பாபாவிடம் இதைத் தெரிவித்த போது, பாபா தரிசனம் வழங்க அனுமதிக்கவில்லை. காடேக்கர் மூலமாக, பாபாவைப் பற்றி அறிந்த இவர்களில் 26 வயதான ரங்கோலே மற்றும் 16 வயது மதுசூதன் ஆகியோர் முதல் முறையாக பாபாவை சந்திக்க வந்தனர். ரங்கோலே சமீபத்தில் அறுவை சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு, மருத்துவர் அவரை நடக்கத் தடை விதித்தும், அவர் ஓய்வெடுக்காமல், தனது ஆழ்ந்த ஏக்கத்தால், குருநாதரின் பாதங்களை முத்தமிடுவதற்காக அஹமதுநகருக்கு வந்தார். ஆனால், பாபா அவர்களை பார்க்க அனுமதிக்கவில்லை. அவரது விருப்பத்திற்கு எதிராகச் செல்ல அவர்களுக்கு மனம் இல்லாவிடிலும், ஒரு கணம் மட்டுமே அவரை சந்திக்க ஏங்கினர்.

கூட்டம் நியமிக்கப்பட்ட நாட்களில், அதிகாலையில் பாபாவை மெஹராபாத்திற்கு எரச் அல்லது ஆதி சீனியர் காரில் அழைத்து வந்து மாலையில் மெஹராஸாத்திற்குத் திரும்பிச் செல்வது வழக்கம். இத்தனை தூரம்

வந்த பிறகு, காரில் சென்ற பாபாவை தரிசனம் செய்ய, சாலையோரம் காத்திருப்பதில் எந்தத் தவறுமில்லை என்று பூனா குழுவினர் நினைத்தனர்.

1949 ஆகஸ்ட் **21** அன்று மாலை **7:15** மணியளவில், பாபா மெஹராஸாத் திரும்பிச் சென்று கொண்டிருந்தபோது, சாலையோரம் நிற்பதைக் கண்டு, அவர்களைப் பற்றி ஆதியிடம் கேட்க, அவர்கள் யார் என்று ஆதி தெரிவித்ததும், பாபா காரை நிறுத்தக் கூறி, அதிர்ஷ்டசாலிகளான அவர்களை அழைத்தார். அனைவரும் ஓடி வந்தனர்; அவரது மகிழ்ச்சியில், ரங்கோலே மருத்துவரின் கட்டளைகளை முற்றிலும் மறந்து, எழுந்து நின்று, பிறரைப் பின்தொடர்ந்து பாபாவை நோக்கி விரைந்தார்.

மதுசூதன், முந்தைய நாள் இரவு ஒரு தெளிவான கனவைக் காண நேர்ந்தது. அதில் தோன்றிய ஒரு பெண்மணியைப் பார்த்து, "கடவுள் எங்கே இருக்கிறார் தெரியுமா?" என வினவினார்.

"நீங்கள் கடவுளைக் காண வேண்டுமா?" அந்தப் பெண்மணி கேட்டார்.

"ஆம், நான் அவரைக் காண வேண்டும்."

"கடவுளை மனித உருவில் காண வேண்டுமா?"

"இது சாத்தியமா?"

"ஆமாம், ஆனால் ஒரு நிபந்தனை. ஒருமுறை அவரை தரிசனம் செய்தால், உங்களால் திரும்பிச் செல்ல முடியாது. ஆகையால், நீங்கள் சென்று உங்கள் தாய், தந்தையிடம் அனுமதி வாங்கி வாருங்கள்."

கனவு தொடர்ந்தது, அவர் ஒரு மிகப்பெரிய ஒளியால் சூழப்பட்ட ஒரு வடிவத்தைக் கண்டார். மெஹர் பாபாவின் கார் அங்கு வந்ததும், மதுசூதன் தனது கனவில் கண்ட அழகான ஒளி, அதே ரூபத்தைச் சூழ்ந்திருப்பதைக் கண்டதும் அவர் மயக்கமானார். மதுசூதனின் தலையில் கையை வைத்து, '**நான் உங்களை அறிவேன்; நான் உங்களை நேசிக்கிறேன்**' என்று சைகையால் தெரிவித்த பாபாவிடம் அவருடைய நண்பர்கள் அவரை அழைத்து வந்தனர்.

அவர்கள் அனைவரையும் சந்தித்ததில் மகிழ்ச்சியை வெளிப்படுத்திய பாபா, இரண்டே நிமிடங்களில் மெஹராஸாத்திற்குப் புறப்பட்டுச் சென்றார். இந்தக் குறுகிய சந்திப்புக்குப் பின்னர் அனைவரும் பூனாவிற்குத் திரும்பிச் சென்றனர்.

மதுசூதன், அந்தக் குறுகிய நேரத்தில், மெஹர் பாபாவிடமிருந்து ஒரு குறிப்பிடத்தக்க பரிசை அடையப் பெற்றார் - 'இசை பரிசு'. பாபாவை சந்திப்பதற்கு முன்பு, சந்தேகம் அவரை ஆட்கொண்டிருந்த போதிலும், பாபாவின் புகழ்பாடும் பக்திப் பரவசமிக்க பாடல்களின் இசையமைப்பாளராகவும் பாடகராகவும் மாறினார். 'இத்தகைய பரிசுகளை இறைவன் எவ்வாறு வழங்குகிறான் என்பதை எவரால் புரிந்து கொள்ள முடியும்?' என்று காலம் சிந்தனையில் ஆழ்ந்தது.

“கேட்காமலேயே கிடைத்த பாபாவின் பிரசாதம்; பிரியமான பாபாவைப் போற்றி, புகழும் பாடல்களின் எதிரொலி இப்போது உலகம் முழுவதும் கேட்கப்படுகிறது.”

மெஹராபாத் மேல்மலையில் வாழும் பெண் மண்டலியுடன் ‘புது வாழ்வு’ மற்றும் மாற்று வழிகள் குறித்த நிபந்தனைகளை, பாபா விவாதித்தார். அவர்கள் இறுதி முடிவை அவரிடமே விட்டுவிட்டாலும், பாபா, அவர்களின் வாக்குகளைப் பெற விரும்பினார். மெஹர் பாபா, ரானோ, கிட்டி இருவரிடம், **“நீங்கள் விரும்பினால், உங்கள் தாயகத்திற்குத் திரும்பலாம்; இல்லையேல், இந்தியாவில் இருக்கலாம். என் அன்பு எப்போதும் உங்களுடன் இருக்கும், ஆனால் நான் உங்கள் முகங்களை இனி ஒருபோதும் பார்க்க மாட்டேன்”** என்று கூறினார். இருவரும் இந்தியாவில் இருக்க விருப்பம் தெரிவித்தபோது, பாபா மும்பையில் மெஹர்ஜியின் இல்லத்தில் தங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார்.

மெஹர் பாபா, ஸுனாமாசி, அவரது மகள் கோர்ஷெத் ஆகியோரின் இறுதி தீர்மானத்தைக் கேட்டார்; ஆனால், ஒரு நாள் முன்பு பாபா, அவர்களிடம், **“நான் சொல்வதைச் செய்வீர்கள் என்று எனக்கு உறுதியளிக்கவும்”** என வலியுறுத்தினார்.

கோர்ஷெத் அவருக்கு வாக்குறுதி அளிக்காததால், பாபாவின் இப்போதைய கேள்விக்கு, “நீங்கள் என்னைப் பிரிக்க இருப்பதால், எனது வாக்குறுதியால் என்ன பயன்?” என வினவினார்.

“என் அறிவுறுத்தல்களுக்குக் கட்டுப்பட்டவர்கள் என்னை விட்டுப் பிரிந்து இருக்க முடியாது. உங்களை என் அருகில் இருக்கச் செய்யும் பொருட்டு, நான் உங்கள் வாக்குறுதியை நாடுகிறேன்” என்று பாபா பதிலளித்ததும், கோர்ஷெத் உறுதியளித்தார்; மேலும், பாபா அவர்கள் இருவரும் மெஹர்ஜியின் இல்லத்தில் தங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்.

பெண்மணிகளுடன் கலந்துரையாடிய முதல் நாள், பாபா அவர்களிடம், **“உங்களில் எவரும் என்னிடம் எதையும் பரிந்துரைக்க வேண்டாம், எவரும் என்னிடம் எதுவும் கேட்கவும் வேண்டாம். எனது முடிவு இறுதியானது. உங்களில் எவரும் இங்குத் தங்க அனுமதிக்கப்பட மாட்டார்கள்”** என்று அறிவித்தார்.

இது மன்ஸாரியை சிந்திக்கத் தூண்டியது, அவரது புருவம் சுருங்கி சுழல்வதை பாபா, என்னவென்று கேட்டார். அதற்கு மன்ஸாரி, “நீங்கள் அனுமதித்தால், நான் சொல்கிறேன்” என்று பதிலளித்தார். பாபா அவரை அனுமதித்ததும், “நான் தனியாக இருக்க வேண்டியிருந்தாலும், நான் மெஹராபாத்தில் தங்க விரும்புகிறேன்.” மன்ஸாரியின் முடிவால் பாபா மிகவும் மகிழ்ச்சியடைந்து அவரைத் தழுவினார்.

பின்னர் அவர் மன்ஸாரி, கைக்கோபாத்தின் மனைவி ஜெர்பாய் மற்றும் அவர்களின் மூன்று மகள்களான மெஹரு, குலு, ஜலு ஆகியோரை மட்டும் மேல்மலையில் தங்க அனுமதிக்க முடிவு செய்தார். கைக்கோபாத்தின் மகன் ரத்தன் அஹமதுநகரில், ஸரோஷ் திரையரங்கில் திரைப்பட ஒளிபரப்பாளராகப் பயிற்சிப் பெற்று அங்கேயே வாழ்ந்து வந்தார்.

இதனால், இந்த ஐந்து பெண்மணிகளும் மெஹராபாத் மேல்மலையில் தங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அரன்காவ்ம் கிராமத்திற்கு அருகிலமைந்த குடும்ப குவார்ட்டர்ஸ் வளாகத்தில் வாழ்ந்து வந்த ஜங்க்ளே மாஸ்டர், அவர்களுக்கு வேண்டியவற்றை பஜாரிலிருந்து வாங்கி வருவதோடு அவர்களை கவனிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

நாஜா, கேட்டி இருவரையும் மும்பையில் நரிமன்-அர்னவாஸ் குடியிருப்பில் தங்குமாறு பாபா அறிவுறுத்தினார். பைதூலின் மனைவி ஸொல்டூன் மற்றும் மகள் டவ்லா, வாலுவுடன் பூனாவில் பிந்த்ரா ஹவுலில் தங்கும்படி அறிவுறுத்தப்பட்டனர். பைதூலின் இன்னுமொரு மகள் ஸர்வார் மும்பையில் வாழ்ந்து வந்தார். குல்மாய் தனது மகள்கள் டாலி மற்றும் பிரோஜாவுடன் குஷ்ரு குவார்ட்டர்ஸிலும், மெஹரு தமானியா அவரது கணவருடன் அங்கேயே தொடர்ந்து வாழவும் அறிவுறுத்தப்பட்டனர்.

'புது வாழ்வு' பயணத்தில், மெஹரா, மணி, மெஹரு, கோஹெர் நால்வரும் அவருடன் இருப்பார்கள் என்று பாபா அறிவித்து, பெண்மணிகளுக்கான சில நிபந்தனைகள் மற்றும் வழிமுறைகளைக் கோடிட்டுக் காட்டினார்:

1.<u>மேல்மலையில் வாழும் ஐந்து பெண்மணிகளுக்கு:</u>

ஜெர்பாய் மற்றும் அவரது மகள்கள், பாபாவிடமிருந்து எந்தப் பண உதவியும் எதிர்பாராமல், கைக்கோபாத்தின் ஓய்வூதியத்தில் (மாதம் ரூ.**133**) வாழ வேண்டும். பாபா ஏற்கனவே அவர்களுக்கு (மன்ஸாரி உட்பட) தானியம், சர்க்கரை, மண்ணெண்ணெய் ஆகியவற்றை பத்து ஆண்டுகளுக்கு வழங்கவும், மலையில் நீர் விநியோகத்தை நிரந்தரமாக பராமரிக்கவும் ஏற்பாடு செய்துள்ளார்.

ஸரோஷ் நிரந்தரமாக ஜமதாரை இரவு கண்காணிப்பாளராகவும், ஜங்க்ளே மாஸ்டரை பகல்நேரப் பணிகளிலும் பின்வருமாறு நியமிக்க உள்ளார்:

i. மேல்மலையில் தங்க அனுமதிக்கப்பட்டுள்ள அனைவரின் தேவைகளுக்கும் அனைத்து சூழ்நிலைகளிலும் நீர் விநியோகத்தைப் பராமரிப்பது.
ii. மன்ஸாரி மற்றும் குழுவிற்கு வேண்டிய பொருட்களை பஜாரிலிருந்து வாங்கி வருவது; மேலும் அஹமதுநகரிலிருந்து வாங்கி வரவேண்டிய பொருட்களின் தேவைகளை அவ்வப்போது பூர்த்தி செய்வது.

III. தோட்டம் மற்றும் வளாகம் முழுவதையும், அவரால் இயன்ற வரை, சிறந்த முறையில் கவனித்துக் கொள்வது.

மேல்மலையிலோ அல்லது கீழ் மெஹராபாத்திலோ மருத்துவர் அல்லது மருத்துவ உதவிக்கான எந்த ஏற்பாடும் இருக்காது. அவர்கள் தங்களுடைய தனிப்பட்ட பொருட்கள், ஆடைகள் போன்ற அனைத்தையும் அவர்களுடன் வைத்துக் கொள்வதோடு, மேல்மலையிலிருந்து தினசரி உபயோகத்திற்குத் தேவையான தளபாடங்களைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

2.<u>மும்பைக்குச் செல்லும் நபர்களுக்கு:</u>

சுருக்கெழுத்து தட்டச்சு செய்வது, அங்காடி உதவியாளர் போன்ற பணிகளில் கேட்டி தன்னை ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும்; நரிமன் அந்த வேலையை அவருக்குத் தேடித் தருவதில் உதவுவார். பாபா தங்கியிருந்த (மெஹர்ஜியின் மனைவி) ஹோமாயின் அறை ஒன்றில் ஸுனாமாசி, கோர்ஷெத் இருவரும் தங்கி, தேவையான உணவைத் தயார் செய்து, ஹோமாயுடன் உண்ணலாம். அவர்கள் தாமாகவே சமையல் செய்ய விரும்பினால், ஹோமாய் அவர்களுக்குத் தேவையான பொருட்களை வழங்குவார். கோர்ஷெத் தையல் வேலையில் தன்னை ஈடுபடுத்தி, முடிந்தால் அதன் மூலம் பணம் சம்பாதிக்கலாம். ஸுனாமாசி வீட்டு வேலைகளில் ஹோமாய்க்கு உதவலாம்.

ரானோ, கிட்டி இருவரும் ஹோமாயின் இல்லத்தில், தமக்கெனத் தனி அறைகளில் முதல் இரண்டு மாதங்கள் தங்குவார்கள். பாபா அந்த நேரத்தில் அவர்கள், தனது 'புது வாழ்வு' பயணத்தில் இணைய வேண்டுமா அல்லது மும்பையில் தங்க வேண்டுமா என்பதைத் தீர்மானிப்பார். மும்பையில் தங்கும் பட்சத்தில், அவர்கள் மெஹர்ஜியின் உதவியுடன், இசை கற்பித்தல், சித்திரம் வரைதல் போன்ற பணிகளில் ஈடுபட முடியும். அவர்கள் தாமாகவே உணவு தயார் செய்ய விரும்பினால் ஹோமாய் அவர்களுக்குத் தேவையான பொருட்களை வழங்குவார் அல்லது ஹோமாயுடன் உணவு உண்ணலாம்.

மும்பையில் அர்னவாஸ், ஹோமாய் ஆகியோருடன் தங்கியிருப்பவர்களின் அன்றாட வாழ்க்கை வழிமுறைகள்: காலை, மதிய, இரவு உணவு அவர்களுக்கு இலவசமாக வழங்கப்படும். அர்னவாஸ்-நரிமன் மற்றும் ஹோமாய்-மெஹர்ஜி ஆகியோருக்கு எந்த விதமான தடையும் விதிக்கப்படமாட்டாது; அவர்கள் அனைவரும் தங்கள் விருப்பப்படி எப்போது வேண்டுமானாலும் உணவருந்தலாம். அப்படியானால், ஆசிரமவாசிகள் தாங்களாகவே உணவு தயார் செய்யலாம். ஆசிரமவாசிகள், அர்னவாஸ் அல்லது ஹோமாய் அல்லது இருவருடனும் உலாவச் செல்லலாம், ஆனால் ஆசிரமத்தினர் வெளியில் எங்கும் உண்ணவோ, தாமாக அல்லது யாருடனும் திரைப்படங்களுக்குச் செல்லவோ அனுமதி இல்லை.

தையல் தொழில் மூலமாக வரும் வருமானம், மாத ஊதியம் மற்றும் ஸுனாமாசி, கோர்ஷெத் ஆகியோரின் தனிப்பட்ட மாத வருமானம் சுமார் ரூ.90 அனைத்தும் சம்பந்தப்பட்ட தரப்பினர் தங்கியிருக்கும் இடத்திற்கு ஏற்ப ஹோமாய் அல்லது அர்னவாஸுக்கு வழங்கப்பட வேண்டும்; மேலும் அர்னவாஸ், ஹோமாய் இருவரும் எந்தவொரு காரணத்திற்காகவும், எவருக்காகவும் எதையும் சேமிக்காமல், அந்தந்த வீட்டுச் செலவுகளுக்காக அனைத்தையும் செலவிட வேண்டும். ஒவ்வொருவரும் நேரம் இருந்தால், தேவைப்பட்டால் வீட்டில் உதவியாக இருக்கவேண்டும்.

இவ்வண்ணம் ஆசிரமத்தில், பெண்கள் பிரிவில் அனைவருக்கும் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. பாபா அனைவரையும் தனது அறிவுறுத்தல்களால் பிணைத்தார், எனவே அவருடன் செல்லாதவர்களும் 'புது வாழ்வின்' ஆழமான அனுபவத்தை அடையப் பெற்றனர்.

அனைத்து ஏற்பாடுகளும் நிறைவடைந்ததும், பாபா, 1949 ஆகஸ்ட் 25 வியாழன் அன்று மெஹராஸாத் பெண்மணிகளுடன் மெஹராபாத் திரும்பினார். அன்று பிற்பகல் 3:00 மணியளவில், ஆதி சீனியர், ராம்ஜு, பெண்டு, விஷ்ணு, சிது, கைக்கோபாத் ஆகியோருடன் மேல்மலையில் நடந்த கூட்டத்தில் பாபா இவ்வாறு தெரிவித்தார்:

பெண் மண்டலிக்கு நான் வழங்கிய நான்கு மாற்று வழிகளை நீங்கள் அறிவீர்கள். அதற்கிணங்க, ஆண்கள் தமது முடிவை தாங்களே எடுப்பது போலல்லாமல், பெண்களைக் குறித்த முடிவு என்னிடமே விடப்பட்டுள்ளது; இன்று நான் அந்த முடிவை எடுத்துவிட்டேன். மெஹராபாத் மேல்மலையிலோ அல்லது கீழ் மெஹராபாத்திலோ மண்டலி எவரும் தங்கக்கூடாது என்று நாம் முதலில் முடிவு செய்ததால், பெண்களுக்கான முடிவுகளைத் தெரிவிக்க இன்று நான் உங்களை அழைத்தேன். கீழ் மெஹராபாத்தில் ஆண் மண்டலியில் சிலர் ஒரு வருடமும், சிலர் நிரந்தரமாகவும் தங்கலாம் என்ற விதிவிலக்கு அளித்ததைப் போல, பெண்களுக்கான எனது தீர்மானத்தின்படி அவர்களில் சிலர் நிரந்தரமாக மேல்மலையில் தங்க உள்ளனர்.

எனது முடிவுகளைத் தெரிவிப்பதற்கு முன்னர், அவர்களின் ஆலோசனைகளை நான் அறிய விரும்பினேன். மேலும் மன்ஸாரி மற்றும் கைக்கோபாத்தின் குடும்பத்தினரை மேல்மலையில் தங்க அனுமதிக்குமாறு வேண்டுகோள் விடுத்தனர். இந்த யோசனையை நான் ஆமோதித்து ஏற்றுக்கொண்டேன், ஆனால் ஒரு காரணத்தைக் கருத்தில் கொண்டு எனது முடிவை வழங்கத் தயங்கினேன், அதுவும் இப்போது சரியாகிவிட்டது.

இந்த ஐந்து நபர்களும் பின்வரும் இரண்டு விஷயங்களை நன்கு

புரிந்துகொண்ட பின்னர் எல்லா நேரங்களிலும் மெஹராபாத் மேல்மலையில் தங்கலாம்:

<u>ஒன்று:</u> மீண்டும் என்னைப் பார்க்கவோ, சந்திக்கவோ முடியும் என்று எதிர்பார்க்கக் கூடாது; அல்லது மேல்மலையில் தங்குவதற்கு நான் திரும்பி வருவேன் என்ற குறைந்தபட்ச எண்ணத்தையும் மனதில் கொள்ளவேண்டாம்.

<u>இரண்டு:</u> அவர்கள் மேல்மலையில் தங்குவது தொடர்பான ஏற்பாட்டின் கீழ் வகுக்கப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளுக்கும் இணக்கம் தெரிவிக்க வேண்டும்.

மன்ஸாரி மற்றும் கைக்கோபாத்தின் மனைவி, மகள்கள் முன்னிலையில் நிபந்தனைகள் மீண்டும் மீண்டும் எடுத்துரைக்கப்பட்ட வேளையில், அனைவரும் அவற்றைக் கடைப்பிடிப்பதாக உறுதியளித்தனர். பாபா, மறுபடியும் வலியுறுத்தினார், **"நான் ஒவ்வொரு பெண் மண்டலி சார்பிலும் முடிவு செய்துள்ளேன்; மேலும் மெஹராவுடன் அனைவரும் கடவுளுக்கு முன்பாக அந்த முடிவை ஏற்றுக்கொண்டனர். அனைவரும் எனது முன்னிலையிலும், கடவுளின் முன்னிலையிலும் முழுப் பொறுப்பையும் ஏற்க ஒப்புக்கொண்டனர்."**

ஏற்கனவே எடுத்துரைத்தபடி, மெஹர் பாபாவுடன் செல்லாத பெண்மணிகள், சில குறிப்பிட்ட அறிவுரைகளின் அடிப்படையில் வாழ வேண்டும். பாபா, பெண்மணிகளில் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக ஒரு சிறப்பு ஆணையை வழங்குவதாகக் கூறினார். பாபாவிடமிருந்து உடல்ரீதியாகப் பிரிந்திருந்தாலும், பாபா அவர்களுக்காகத் தேர்ந்தெடுத்த வாழ்க்கையை வாழ்வதன் மூலம் - அதாவது, கைவசம் பணம் எதுவும் வைத்துக்கொள்ளாமல், வழங்கப்படும் எந்த ஒரு (புதுப்) பொருளையும் ஏற்றுக்கொண்டு, திரைப்படங்கள் பார்க்கச் செல்லாமல், ஆசிரம உரிமையாளர் வழங்கும் உணவு, உறைவிடம், குளியலறைப் பொருட்களோடு மனநிறைவுடன் வாழ்பவர்கள் - பாபாவின் புது வாழ்வைப் பகிர்ந்துகொள்வார்கள் என்று ஒவ்வொருவருக்கும் புரியும் வகையில் எடுத்துரைக்கப்பட்டது.

பாபாவுடன் செல்ல விரும்பாதவர்கள் **"100 சதவிகிதம் முழு மனதோடும், உண்மையுடனும் பாபாவை எப்போதேனும் பார்க்கும் அல்லது அவரை மீண்டும் சந்திக்கும் நம்பிக்கையைக் கைவிட வேண்டும்"** என்றும் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. நம்பிக்கையை முழுவதுமாக விட்டுவிட்டு, அவருடைய கட்டளைகளை நிறைவேற்றுவதன் மூலம், அவர்கள் அவருடைய புது வாழ்வைப் பகிர்ந்து கொள்வார்கள்.

"எல்லா பிரச்சினைகளும் நம்பிக்கையிலிருந்து உருவாகிறது" என்று பாபா குறிப்பிட்டார். **"நம்பிக்கை இல்லாத இடத்தில் ஏமாற்றம் இராது."**

"அக்டோபர் 15க்குப் பின்னர் உங்களில் எவரேனும் உடல்நலம் இல்லாமல் அல்லது பெரும் இடர்பாடுகளை எதிர்கொள்ள நேர்ந்தால், அதற்கு இனி நான் பொறுப்பல்ல. நீங்கள் ஒவ்வொருவரும் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். நீங்கள் இதை முழு மனதுடனும், விருப்பத்துடனும் ஏற்றுக்கொள்வதானால், கடவுளுக்கு முன்பாக சத்தியம் செய்யுங்கள்."

பாபாவின் விருப்பப்படி, ஒருவர் பின் ஒருவராக அனைத்து பெண்மணிகளும், முகம் மற்றும் கைகளை கழுவிய பின்னர், உருவமில்லா கடவுள் (பரமாத்மா) மற்றும் மெஹர் பாபாவின் முன்னிலையில், தங்களுக்கான முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்வதாக வாக்குறுதி அளித்தனர்.

இந்த சம்பிரதாய உறுதிமொழியின் முடிவில், பாபா, **"இதெல்லாம் ஒரு மிகத் தீவிரமான விஷயம், சாதாரணமாக எடுத்துக்கொள்ளவோ அல்லது நடத்தப்படவோ வேண்டிய ஒன்றல்ல. ஆனால், இதைத் தீவிரமாக எடுத்துக் கொள்ளும் அதே வேளையில், உங்களால் இன்னும் சிரித்து முகமலர்ச்சியுடன் இருக்க முடிந்தால், உண்மையிலேயே மிகவும் நல்லது"** என்று குறிப்பிட்டார்.

பெண் மண்டலியின் அனைத்து உடைமைகளும், விலையுயர்ந்த புடவைகள், தங்க ஆபரணங்கள், பெரு மதிப்புமிக்க நகைகள் அனைத்தும் பாபாவிடம் அர்ப்பணிக்கப்பட்டது. மெஹராபாத் மற்றும் மெஹராஸாத்தில் எதுவும் மிஞ்சவில்லை; அனைத்தும் கைமாற்றம் செய்யப்பட்டது.

மெஹராபாத்தின் மேலாளராக இருந்த பெண்டு, இந்த நாட்களில் மிகவும் மும்முரமாக இருந்தார். கீழ் மெஹராபாத்தில் எல்லாவற்றையும் விற்று கைமாற்றம் செய்து விலையாக்கும் சுமையும் அழுத்தமும் அவர் தோள்களில் விழுந்தன. அவர் வசம் இருந்த இக்குறுகிய காலத்தில், நிலங்களை விற்கவும், பசுக்கள், எருமைகள், காளைகள், பாத்திரங்கள், தளபாடங்கள் மற்றும் பலவற்றை அப்புறப்படுத்தவும் வேண்டியிருந்தது. சுமார் 100 ஏக்கர் நிலத்தை ஒரு ஏக்கருக்கு ரூ 20 முதல் 40 வரையான மிகக் குறைந்த விலைக்கு விற்பது மிகவும் கடினமாக இருந்தது; ஆனால் பாபாவின் பார்வையால், அவர் விரும்பிய நேரத்தில் பெண்டு இந்த அனைத்து நடவடிக்கைகளையும் நிறைவு செய்ய முடிந்தது.

மெஹர் பாபாவின் திட்டத்திற்கிணங்க, வசூலிக்கப்படும் பணம், அவரைச் சார்ந்திருப்பவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் பராமரிப்புக்குத் தேவையானது. எனவே, மெஹராபாத்தில் பொருட்களை விற்பது அல்லது விட்டுவிடுவது பற்றிக் கேள்விப்பட்டதும், மும்பை அன்பர்கள் தங்களுடைய பல மதிப்புமிக்க பொருட்களை விற்று, பாபாவின் காலடியில் தங்கள் பங்களிப்பாக வைக்க விரும்பிய ரூ.10,000 தொகையை சேகரித்தனர். அவர்களில்

பல பெண் உறுப்பினர்களும் தங்களிடம் உள்ள பொருட்களை விற்று பங்களிக்க முன்வந்தனர். மெஹர் பாபா இந்தப் பரிசை மிகுந்த அன்புடன் ஏற்றுக்கொண்டாலும், அந்தத் தொகையை அந்தந்த அன்பர்களுக்குத் தனது பிரசாதமாகத் திருப்பிக் கொடுத்தார்.

மும்பை அன்பர்களைப் பாராட்டிய பாபா, **"தீனா தலாட்டி அவரிடமிருந்த அனைத்தையும் என்னிடம் கொடுத்தது மட்டுமல்லாமல், இத்தனை வருடங்களாகத் தன்னால் சேமிக்க முடிந்த தொகையைப் பயன்படுத்துமாறு என்னிடம் இறைஞ்சினார். கர்மான் மாசி என்ன செய்துள்ளார் என்பது எனக்கு மட்டுமே தெரியும். அவர் அனுதின வாழ்க்கையைக் கூட சமாளிக்க முடியாமல், பெரும் சிரமங்களுக்கு ஆளானார். உண்மையாகவே, அவர் அரை வயிற்று உணவை உண்டு, மேலும், ஆச்சரியப்படும் விதத்தில், எனக்கு ரூ.400 அனுப்ப முடிந்தது!"**

1949 ஆகஸ்ட் **29** திங்கட்கிழமை அன்று, கேஷவ் நிகம் (KESHAV NIGAM), ஸ்ரீபத் ஸஹாய் (SRIPAT SAHAI), பாபு ராம்பிரசாத் & பிருந்தாவன் நிகம் (BABU RAMPRASAD & VRINDAVAN NIGAM) ஆகியோர் ஹமீர்பூரிலிருந்து மெஹராபாத் வந்தனர். அந்த நேரத்தில், ஹமீர்பூரில் குருநாதரின் தரிசனத்திற்காக மிகவும் உற்சாகமான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன; பாபாதாஸிடம், தான் அங்குச் செல்ல இருப்பதாக பாபா உறுதியளித்தார். இந்த அன்பர்கள் இப்போது பாபாவை ஹமீர்பூருக்கு வருமாறு முறைப்படி அழைப்பு விடுக்க மெஹராபாத் வந்துள்ளனர். குருநாதரின் தெய்வீக லீலை எவ்வளவு மர்மமானது! மெஹராபாத்தில், 'புது வாழ்வு' தொடங்குவதற்கான அவசர ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்த அந்த வேளை, ஹமீர்பூரில் ஒரு சூறாவளி அவரது தரிசனத்திற்காக மையம் கொண்டிருந்தது!

பாபா, ஆகஸ்ட் **30** அன்று காலை ஏழு மணிக்கு மெஹராபாத் வந்து, ஹமீர்பூரிலிருந்து வருகை தந்த நான்கு முக்கியஸ்தர்களை பாபாதாஸுடன் தனது அறைக்கு அழைத்தார். பாபாதாஸ், ஸ்ரீபத் இருவரும் ஏழு ஆண்டுகளுக்கு முன்பு, பாபாவைப் பற்றி கேஷவ் நிகமிடம் கூறியிருந்தாலும், இது, உண்மையில் கேஷவின் முதல் சந்திப்பு. பின்னர் அவர் இது குறித்து நினைவு கூர்ந்தார்:

1949 ஆகஸ்ட் **30**, எனது தற்போதைய வாழ்க்கையின் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்ட தருணம் மட்டுமல்ல, எனது முந்தைய வாழ்க்கையின் அனைத்து ஆசீர்வாதமான தருணங்களின் உச்சக்கட்டமாகவும், எனது பரிணாமப் பயணத்தின் நீண்ட நெடிய விருட்சமாகவும் அமைந்தது - காரணம், அன்று நான் கடவுளைக் கண்டேன்... அவரே, பூமியில், அவதார புருஷர் மெஹர் பாபாவின் வடிவில் வந்துள்ளதைக் கண்டேன்... பாபாவின் அன்பின் சுடர் என்னுள் அதி

தீவிரமாக எரிந்தது; அதற்கு முன்னால், அனைத்து உலகமும் அதன் சாதாரண செயல்பாடுகளும் முற்றிலும் அற்பமாகவும், உண்மையற்றதாகவும் தோன்றின.

ஹமீர்பூர் குழுவினருக்கு பாபா விளக்கினார்: **"மக்கள் என்னை பிரபஞ்சத்தின் இறைவன் என்று அழைக்கிறார்கள், ஆனால் நான் பிரபஞ்சத்தின் சேவகன், நான் மனிதகுலத்தின் அசுத்தங்களை அகற்ற வந்த சலவைக்காரன்!**

"நான் எனது புது வாழ்வில் நுழையவிருக்கும் இந்தத் தருணத்தில், நீங்கள் அனைவரும் இங்கு என்னுடன் இருக்கும் மிகப் பெரிய அதிர்ஷ்டசாலிகள். இப்போது, 1949 அக்டோபர் 15 முதல் ஒரு வருடத்திற்கு நீங்கள் அனைவரும் பின்பற்ற வேண்டிய மூன்று கட்டளைகளை நான் உங்களுக்கு வழங்குகிறேன். அவற்றைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள். உங்கள் இல்லங்களுக்குத் திரும்பிச் சென்று, நீங்கள் எடுக்கும் முடிவை எனக்குத் தெரியப்படுத்துங்கள்; இந்த உத்தரவுகளில் ஏதேனும் ஒன்றையோ அல்லது அனைத்தையும் நீங்கள் ஏற்கவில்லை என்றால், நான் அதிருப்தி அடைய மாட்டேன், ஆனால் இந்த உத்தரவுகளில் ஒன்று அல்லது இரண்டு அல்லது அனைத்திற்கும் கீழ்ப்படிவதாக நீங்கள் எனக்கு உறுதியளித்த பின்பு, நீங்கள் அவற்றை மீறக் கூடாது; இக்காரணத்திற்காக, உங்கள் வாக்குறுதியை எனக்கு வழங்குவதற்கு முன்பு கவனமாக சிந்தித்து முடிவெடுக்க வேண்டும்."

"இதோ எனது உத்தரவுகள்:

1. **பணத்தைத் தொடக்கூடாது.**
2. **பெண்களைத் தொடக்கூடாது.**
3. **ஒவ்வொரு வாரமும் ஒரு குறிப்பிட்ட நாளில் 24 மணிநேரம், தண்ணீர் மற்றும் தேநீர் மட்டும் அருந்தி உபவாசம் மேற்கொள்ள வேண்டும்."**

தரிசன நிகழ்ச்சியைக் குறித்து பாபா இவ்வாறு கூறினார்: **"ஒரு நிபந்தனையுடன் தரிசனம் வழங்க நான் ஒப்புக்கொள்கிறேன்: எனது தரிசனத்திற்கு வருபவர்கள் எவரும் என் முன் கைகளைக் கூப்பவோ, எனது கால்களைத் தொடவோ கூடாது என்ற பொறுப்பை நீங்கள் ஏற்றுக்கொள்வதானால் நான் தரிசனம் வழங்கத் தயாராக இருக்கிறேன்."**

இது அவர்களுக்கு சாத்தியமற்றதாகத் தோன்றியது; ஆனால், அவ்வாறு நடக்காமல் இருக்க தங்களால் இயன்றதைச் செய்வதாக, பாபாவிற்கு உறுதியளித்தனர். பாபா உடனே, **"உங்கள் திடமான வாக்குறுதி எனக்கு வேண்டும்"** என்பதில் உறுதியாக இருந்தார். அவர்களால் அதைக் கொடுக்க முடியாத பட்சத்தில், பாபா இவ்வாறு அறிவுறுத்தினார், **"தற்போதைக்கு ஹமீர்பூருக்குத் திரும்பிச் சென்று, என்னை வரவழைப்பதற்காக மக்களை**

ஆயத்தப்படுத்தி, எனது தரிசனத்திற்கான நிபந்தனைகளை அவர்களுக்குத் தெரியப்படுத்துங்கள். அவர்கள் முழுமையாகத் தயாரானதும், எனக்குத் தெரிவிக்கவும், நான் வருகிறேன்...”

பாபா தனது நிபந்தனைகள் குறித்து இந்தி மொழியில் துண்டு பிரசுரங்களை அச்சடிக்குமாறு கேட்டுக் கொண்டார்; பின்னர் அவர்கள் புறப்பட்டுச் சென்றனர். இது ஹமீர்பூர் மாவட்டத்தில் ‘நெருப்பு’ மூட்டுவதற்கான ஆரம்ப கட்டமாக இருந்தது, மேலும் இந்தத் தீப்பொறி, கொழுந்து விட்டெரியும் நெருப்பாக மாறி, எப்படி முழு மக்களையும் சூழ்ந்து கொண்டது என்பதற்கு யுகமே சாட்சியாக இருந்தது.

மெஹர் பாபாவின் தரிசனத்திற்காக ஆயிரக்கணக்கானோர் காத்திருந்த தென் மாநிலமான ஆந்திராவிலும் இதே போன்ற சூழல் நிலவியது. **1947**ஆம் ஆண்டில் மெஹர் பாபாவை சந்தித்த டாக்டர் தனபதி ராவ் (DR. DHANAPATHY RAO) மக்களின் இதயங்களில் ‘நெருப்பைக் கிளறிவிடும்’ நடவடிக்கைகளில் பெரும் பங்கு வகித்தார்! இவ்வண்ணம் ஹமீர்பூர் (HAMIRPUR) மற்றும் ஆந்திராவில் (ANDHRA) தூவிய அன்பின் விதை, பூவாக, கனியாக மாறி, அன்பர்களின் ஆரவார குழுமத்தை உருவாக்கும்.

1949 ஆகஸ்ட் **31** சனிக்கிழமையன்று மெஹராபாத்தில் ‘புது வாழ்வின்’ நிபந்தனைகளை முன்வைக்கும், இறுதிக்கட்ட கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. முப்பத்திரண்டு நெருங்கிய சீடர்கள் அழைக்கப்பட்டனர், அவர்களில் பதினாறு பேர் அயலூர்களிலிருந்து வந்தனர். அவர்கள் மெஹர்ஜி, நரிமன், ஜால் கேரவாலா, பப்பா ஜெஸவாலா, மினூ கராஸ், பால் நாத்து, சதாஷிவ் பாட்டீல், தெளலத் ஸிங், கேக்கி தேசாய், கிஷன் ஸிங், விட்டல் போக்ரே, டாக்டர் தேஷ்முக், பாபாவின் சகோதரர்கள் ஜால்பாய், பெஹராம் மற்றும் ஆதி ஜூனியர். அனைவரும் காலை **8:00** மணிக்கு மண்டபத்தில் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டனர்; கூட்டத்திற்காக மண்டபம் சீர்செய்யப்பட்டு சிறப்பாக வைக்கப்பட்டது; ஆனால் நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்கு முன்னர் எவரும் உள்ளே செல்ல அனுமதியில்லை. கூட்டத்திற்கு முன்னர் ஒவ்வொருவரும் நீராடி, சுத்தமான ஆடைகளை அணிய வேண்டும் என்பது பாபாவின் கட்டளை. அயலூர்களிலிருந்து வருபவர்கள் நீராட சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அதிகாலையில் ராவ்ஸாஹேப் அ.ப்ஸேரி மட்டும் இன்னும் வரவில்லை. அவர் பயணம் செய்த ரயில் மெஹராபாத்தைக் கடக்கும் வேளையில், அவரை அடையாளம் கண்டு, அழைத்து வர கார் ஒன்று ரயில் நிலையத்திற்கு அனுப்பப்பட்டது. ராவ்ஸாஹேப் வந்தபோது, எந்தவிதமான வாழ்த்து, வணக்கம் போன்ற சம்பிரதாய நெறிமுறை எதுவுமில்லாமல் அருகிலிருந்த குளியலறைக்கு அழைத்துச் செல்லப்பட்டதில் அவர் சற்று அதிர்ச்சியடைந்தார் - ஆனால் அவர் சரியான நேரத்தில் மண்டபத்திற்கு வந்துவிட்டார்.

எட்டு மணிக்குப் பின்னர் எவரையும் மண்டபத்திற்குள் நுழைய அனுமதிக்கக் கூடாது என்பது பாபாவின் கட்டளை, எனவே அந்த நாளில் மண்டலி சிறப்பு கவனத்துடன் இருக்க வேண்டும். (உதாரணமாக, பெஹராம் பூனாவிலிருந்து வர தாமதமானதால், மண்டபத்திற்கு வெளியே வராந்தாவில் அமர வேண்டியிருந்தது.) மேலும், கூட்டத்தில் இருந்தவர்கள் 'ஜெய்' என்று குரல் எழுப்ப வேண்டாம் என்றும் கண்டிப்பாகக் கட்டளையிடப்பட்டிருந்தனர்; பாபாவைக் கூப்பிய கரங்களால் வணங்கவும், அவரைப் புகழ்வதற்கும் அனுமதி இல்லை; மேலும் அவரது பாதங்களை பயபக்தியுடன் நோக்கிக் கொண்டிருக்கவும் கூடாது.

சரியாக எட்டு மணிக்கு, பாபா, மண்டபத்திற்குள் நுழைந்தார்; தொடர்ந்து மண்டலியும் வந்தனர். அவர் தனது நாற்காலியின் பின் புறம் ஒரு நிமிடம் நின்று, பாதிரியை மண்டபத்தின் ஒரு பக்கத்திலிருந்து மறு பக்கம், ஏழு முறை தனக்கு முன்னால் நடந்து செல்லுமாறு கூறி, பாபா கேலி செய்தார், "**ஒரு பூனை எனது பாதையைக் கடந்துவிட்டது என்று வைத்துக்கொள்வோம், அப்போது, பாதிரியின் வேக நடை அதன் தீய விளைவுகளைத் தடுக்கும்.**" அதற்குப் பிறகு, பாபா தனது நாற்காலியில் அமர்ந்ததும், பாதிரி அனைத்து கதவுகளையும் ஜன்னல்களையும் மூடும் வேளையில், கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவரையும் அன்புடன் நோட்டமிட்டு, எவரிடமிருந்தும் எந்தவிதமான இடையூறும், ஊடுருவலும் ஏற்படாது என்பதை கவனித்த பாபா, இந்த சந்திப்பின் நோக்கத்தைக் குறித்து, 102 நபர்கள் அடங்கிய பட்டியலிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு விளக்கினார்.

மண்டலியில் நால்வர் பாதிரிகள் - கைக்கோபாத், டாக்டர் டான், காக் ஸாஹேப், காளேமாமா ஆகியோர், முறையே, அவெஸ்தா, பைபிள், குரான், கீதை போன்ற வேத நூல்களிலிருந்து சில பகுதிகளை வாசிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். பாபா கூறினார், "**முதலில், நான் எனக்காகவும், மண்டலிக்காகவும் மற்றும் அனைவருக்காகவும், ஸொராஸ்ட்ரியன், கிறிஸ்தவ, முஸ்லீம் மற்றும் இந்து - கடவுளை வணங்கும் வழியை அணுகுவதன் மூலம் கடவுளின் மன்னிப்பைக் கோர விரும்புகிறேன்.**"

பாராயணங்களின் முடிவில், காக் ஸாஹேப் மொழிந்த குரானின் மெல்லிசையுடனான வாசிப்பைக் குறித்து, பாபா இவ்வாறு குறிப்பிட்டார், "**இத்தனை அற்புதமான பிரார்த்தனையால் கடவுளை அசைக்க முடியாவிட்டால், கடவுள் காது கேளாதவராக அல்லது காலக்கெடு முடிந்தவராக இருக்க வேண்டும்!**"

பாபா எழுந்து நின்றதும் அவர் சார்பாக, பின்வரும் மன்னிப்பு பிரார்த்தனை உரத்த குரலில் மொழியப்பட்டது: "**ஒவ்வொரு சீடர், பக்தர் மற்றும் அவரைப் பின்பற்றும் அனைவரின் அனைத்து பலவீனங்களையும்,**

இதுவரை அவரவர் தரப்பிலிருந்து நிகழ்ந்த கீழ்ப்படியாமையையும் நான் மன்னிக்கிறேன். மேலும் எனது சார்பாக, எவருக்கேனும் வேதனை, அநீதி, தவறு இவற்றில் எதையேனும் நான் இழைத்திருந்தால், நானே என்னை மன்னிக்கிறேன்." பாபா மேலும் கூறினார், **"இதுவே கடைசி முறைசார்ந்த சடங்கு, இனிமேல் எந்த சடங்கு சம்பிரதாயங்களும், அதேபோல, பிரார்த்தனைகளும் இராது."**

கூட்டம் முறைப்படி தொடங்கியது. கடந்த பல நாள் நிகழ்வுகள் அனைத்தையும் சுருக்கமாக விவரிக்குமாறு பாபா, ராம்ஜூவிடம் கூறினார். ராம்ஜூ, புது வாழ்வைத் தொடங்குவதற்கான திட்டங்களையும் ஏற்பாடுகளையும் கோடிட்டுக் காட்டினார். அப்போது பாபா இவ்வாறு எடுத்துரைத்தார்:

இந்த நிபந்தனைகள் அடங்கிய சுற்றறிக்கையைப் பெற்றுக்கொண்ட நீங்கள் அனைவரும், இப்போது 'புது வாழ்வைப் பற்றி' நான் 100 சதவீதம் தீவிரமாக இருக்கிறேன் என்பதை, இறுதி முறையாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். என்னிடமிருந்து எதையும் அடையப் பெறாத போதும், முழு நம்பிக்கையுடனும், நேர்மையுடனும், கடந்த காலமெல்லாம் நீங்கள் உண்மையாகவும் அன்பாகவும் என்னுடன் இணைபிரியாமல் இருந்து வந்தாலும், எனக்காக உங்கள் உயிரைக் கொடுக்க நீங்கள் அனைவரும் தயாராக இருந்தபோதிலும், நமது பழக்கவழக்கங்களால், கடந்த பல வருடங்களாக ஒருவரையொருவர் சரியாகவும், தவறாகவும் புரிந்துகொண்டது, இந்தப் 'புது வாழ்வு' நிபந்தனைகளை மிகவும் தீவிரமாக எடுத்துக் கொள்ள அனுமதிக்காமல் உங்களைத் தவறாக வழிநடத்தக்கூடும்.

எனவே, இறுதி முடிவெடுப்பதற்கு முன்பு நீங்கள் அனைவரும் இந்த சுற்றறிக்கையை வார்த்தைக்கு வார்த்தை மிகவும் கவனமாகப் படித்து, புரிந்துகொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நீங்கள் 'புது வாழ்வில்' என்னுடன் வந்து, அனைத்து உத்தரவுகளையும் நிபந்தனைகளையும் 100 சதவீதம் முழுமையாகக் கடைப்பிடித்தால் மிகவும் சிறந்தது. ஆனால், உங்கள் நம்பிக்கையும், அன்பும், சேவையும், நான் என்னுடைய குருநாதரிடம் கொண்டிருந்ததை விட அதிகமாக இருந்தபோதிலும், இந்த நிபந்தனைகள் உங்களைச் செயலிழக்கச் செய்யக்கூடும். ஆகவே, நீங்கள் 'சத்யநாசம்' (முழுமையான அழிவு) மற்றும் உள்ளடக்கமான, முழுமையான கீழ்ப்படிதலுடன் வாழத் தயாராக இல்லாவிட்டால், என்னுடன் வராமலிருக்கும் வேளையில், உங்களுக்கு வழங்கப்படும் அறிவுரைகளுக்குக் கீழ்ப்படிவது நல்லது.

ஆனால் இவை அனைத்தும் உண்மையான வாக்குறுதிகள் மூலமாக நிகழும் வழிமுறையாகும். இந்த முடிவை முற்றிலும் நீங்கள் மட்டுமே

எடுக்க வேண்டும். கடவுள் உங்களுக்குத் தேவையான மனபலத்தைத் தரட்டும்.

இதற்கு, நீங்கள் மட்டுமே கடவுள் முன்னிலையில் பொறுப்பாக இருக்கிறீர்கள்.

டாக்டர் டான் இந்த நிபந்தனைகளை ஆங்கிலத்தில் மொழிந்த வேளையில், பாபா இடையிடையே தெளிவுற விளக்கினார். பாபாவுடன் செல்லவிருந்த அனைவருக்கும் கட்டாயமான நிபந்தனைகளின் ஒரு பகுதி பின்வருமாறு:

1. **முதலாவதாக, பாபாவுடன் வரும் அனைவரும், சிறிதளவேனும் ஆன்மீக அல்லது பொருள் சார்ந்த பலனைக் கூட அடையப்பெற மாட்டார்கள், அல்லது உண்மையில் எந்த பலனையும் பெறமாட்டார்கள் என்பதை ஒரு முழுமையான மற்றும் நிபந்தனையற்ற நிச்சயத்திலும் நிச்சயமாக எடுத்துக்கொள்ள வேண்டும். மாறாக, அவர்கள் எல்லாவிதமான ஏமாற்றங்களையும், துன்பங்களையும் எதிர்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும்.**
2. **நீங்கள் எந்த வகையிலும் உடல் ஊனமுற்றவராக இருந்தாலோ, அல்லது உடல் நலம் குன்றியிருந்தாலோ, நீங்கள் உயிரைத் துறக்க உறுதிபூண்டால் ஒழிய, பாபாவுடன் செல்லக் கூடாது. மருத்துவம், பாதுகாப்பு, பராமரிப்பு, மனம்-உடல் அளவிலான சிறப்பு கவனிப்பு எதையும் எதிர்பார்க்கக்கூடாது. மாறாக, நீங்கள் அவரை கவனித்துக் கொள்ள வேண்டும் என்று பாபா எதிர்பார்க்கக்கூடும்.**
3. **1949 அக்டோபர் 16 அன்று பாபாவுடன் இணைய நீங்கள் தயாராக இருக்க வேண்டும்.**
4. **பாபா, இடம் விட்டு இடம் நடந்தே செல்வதாக இருக்கலாம் அல்லது காலவரையின்றி ஏதாவது இடத்தில் தங்கலாம். அவர் எங்குச் சென்றாலும், எங்குத் தங்கினாலும் நீங்கள் அவருடனே இருக்க வேண்டும்.**
5. **கீழ் குறிப்பிட்டவற்றைத் தவிர, அவை எப்போது கிடைத்தாலும், வேறு எந்தப் பொருள் சார்ந்த வசதிகளும் இருக்காது: உணவு, உடை, குறைந்தபட்சம் படுக்கை வசதி; குறைந்தபட்ச கழிப்பறை தேவைகள்; ஒரு தட்டு, ஒரு குவளை மற்றும் ஒரு கரண்டி.**
6. **இந்தப் புது வாழ்வில், பாபா உங்களை நகைச்சுவையுடன் மகிழச்செய்வார் அல்லது உங்கள் பலவீனங்களைக் கண்டு கொள்வார் என்று நீங்கள் எதிர்பார்க்கக் கூடாது. மாறாக, நீங்கள் அவரை, நகைச்சுவையுடன் பேசி மகிழச் செய்ய வேண்டும் என்று பாபா எதிர்பார்ப்பார்.**

7. **பாபாவின் பார்வை உங்கள் மீது இருக்கும் என்றோ, அவர் அற்புதங்களை நிகழ்த்துவார் என்றோ, அல்லது நோய், ஆபத்து, சிறைவாசம், மரணம் அல்லது எந்த விதமான இடர்பாடுகள் மற்றும் பேரழிவுகளிலிருந்தும் உங்களைப் பாதுகாக்க அல்லது காப்பாற்ற அவருடைய ஆன்மீகத் திறவுகோலைப் பயன்படுத்துவார் என்று நீங்கள் எதிர்பார்க்கக் கூடாது. உண்மையில், பாபா தனக்கே உதவி செய்ய முடியாத அளவிற்கு முற்றிலும் பாதுகாப்பற்றவராக இருக்கவும் வாய்ப்புள்ளது.**

8. **நீங்கள் பாபாவை அவதார புருஷர், கடவுள், சைத்தான், அல்லது நீங்கள் விரும்பும் எதுவாகவும் அல்லது எவராகவும் வைத்துக்கொள்ளலாம்; ஆனால் நீங்கள் அவருடன் செல்லும் வேளையில், அவர் உங்களிடையே சகோதரனாக அல்லது தோழனாக வாழ்ந்தாலும், உண்மையில், அவர் உங்களுக்குக் குருநாதராக இருப்பார் என்பதால், அவருக்கு முற்றிலும் கீழ்ப்படிய வேண்டியது முக்கியம் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.**

பாபாவுடன் வரும் அனைவருக்கும் அமலில் இருக்கும் நிலையான ஆணைகள்:

நீங்கள் பாபாவுடன் செல்வதானால், எல்லா நேரங்களிலும் சில பொதுவான நிலையான கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டியது அவசியம். இவை கீழ்வருமாறு:

1. **நீங்கள் பெண்களைத் தொடக் கூடாது.**
2. **நீங்கள் பணத்தைத் தொடக் கூடாது, எவரிடமிருந்தும் பணத்தைப் பெறவோ அல்லது எவருக்கும் கொடுக்கவோ கூடாது - பாபாவிடம் கூட.**
3. **நீங்கள் அரசியல் பற்றி விவாதிக்க வேண்டாம்.**
4. **நீங்கள் எவரிடமும் கோபத்தை, வார்த்தையிலோ அல்லது செயலிலோ வெளிப்படுத்த வேண்டாம்; எந்தத் தூண்டுதலாக இருந்தாலும், நீங்கள் எவரையும் நேரடியாகவோ அல்லது அவர்களின் முதுகுக்குப் பின்னோ, நியாயமற்ற முறையில் விமர்சிக்க வேண்டாம். சில நேரங்களில் உங்கள் மனதில் கோபம் எழுந்தாலும், அதை வார்த்தையிலோ செயலிலோ வெளிப்படுத்தக் கூடாது.**
5. **பாபாவின் அனுமதியின்றி, நீங்கள் நீராடவும், தண்ணீர் அருந்தவும், இயற்கையின் அழைப்பிற்கு பதிலளிப்பதைத் தவிர, வேறு எந்த நோக்கத்திற்காகவும் எங்கும் செல்லக்கூடாது.**
6. **பாபாவின் அனுமதியின்றி எந்த இடத்திலும் எதையும் உண்ணவோ, அல்லது தண்ணீரைத் தவிர வேறு எதையும் அருந்தவோ கூடாது.**

இருப்பினும், உங்களுக்கு உணவு அல்லது உடை வழங்கப்பட்டால் ஏற்றுக்கொள்ளலாம், ஆனால் நீங்கள் அவற்றை பாபாவிடம் கொடுக்க வேண்டும்.

7. நீங்கள் பொய் சொல்ல மாட்டீர்கள். அனைத்தும் வெளிப்படையாகவும், தெளிவாகவும், ஒளிவு மறைவின்றி இருக்க வேண்டும். உதாரணமாக, நீங்கள் யார், அல்லது பாபா யார் என்று உங்களிடம் கேட்கப்பட்டால், உண்மையைத் தவிர்க்க முடியாது.
8. பாபாவோ அல்லது நீங்களோ யாரிடமிருந்தும் மரியாதையை ஏற்க மாட்டீர்கள், பாபாவுக்கோ உங்களுக்கோ மரியாதை வழங்கத் தூண்டும் சூழ்நிலையை வேண்டுமென்றே உருவாக்க மாட்டீர்கள். இருப்பினும், உங்களால் தூண்டப்படாமல், பாபாவிற்கோ அல்லது உங்களுக்கோ மரியாதை வழங்கப்பட்டால், அதை வழங்கிய நபருக்கு, செயலுக்குச் செயல், திருப்பிச் செலுத்த வேண்டும். பாபா, அவரது தலையை உங்கள் கால்களில் வைத்தாலோ அல்லது உங்கள் கால்களைக் கழுவுவதாலோ, இது, பாபாவின் கட்டளையின் நிமித்தம் செய்யப்படுவதாகப் பார்க்கவேண்டுமே தவிர, அதைத் திருப்பிக் கொடுக்கவோ அல்லது உங்களுக்கு அளிக்கும் மரியாதையாகவோ கருதக் கூடாது.

மேலும் அதிக அளவிலான கட்டளைகள்:

மேலே எடுத்துரைத்த எட்டு உத்தரவுகளும், பாபாவுடன் வரும் அனைவருக்கும் பொருந்தும் நிலையான உத்தரவுகள். அறியாமல் அல்லது அர்த்தப்படுத்தாமல் செய்தாலோ, இந்த எட்டு நிலை கட்டளைகளில் எதையேனும் ஒன்றை அல்லது அவருடைய பிற கட்டளைகளை நீங்கள் மீறினால், பாபா உங்களை மன்னிப்பார்; மேலும் அவர் காமம், கோபம், பேராசை போன்ற எண்ணங்களைப் பிழைகளாகக் கருதமாட்டார்.

இந்த எட்டு நிலையான கட்டளைகளுக்கு மேல், பாபா உங்களுக்கு எந்த நேரத்திலும் எந்த உத்தரவையும் வழங்கலாம், அதை நீங்கள் கடைப்பிடிக்க வேண்டும். இருப்பினும், அத்தகைய உத்தரவுகள் 'ஆன்மீக' வகையைச் சார்ந்ததாக இருக்காது (உதாரணமாக, தியானம் அல்லது ஜபம்), மேலும் அவரிடமிருந்து ஆன்மீக அறிவுரைகள் என்று அழைக்கப்படும் எதையும் நீங்கள் எதிர்பார்க்கக்கூடாது. பாபா உங்களுக்கு வழங்கும் எந்தக் கட்டளைக்கும் நீங்கள் கீழ்ப்படிய வேண்டும், நல்லது அல்லது கெட்டது எதுவாக இருந்தாலும் அவர் உங்களுக்குக் கட்டளையிடுவார் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

உதாரணமாக, அவரது உடலில் எச்சில் துப்புவது, அவரை உதைப்பது, அவதூறாக நடத்துவது போன்ற எதையும் செய்யும்படி அவர் உங்களுக்கு

உத்தரவிடலாம், மேலும் நீங்கள் தயக்கமின்றி அத்தகைய உத்தரவுகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

பாபா அவரது தலையை உங்கள் காலடியில் வைக்கலாம் அல்லது உங்கள் கால்களைக் கழுவலாம், மேலும் அவர் இதுபோன்ற செயல்களில் ஈடுபட்டால் நீங்கள் எதிர்க்கவோ, தயங்கவோ, உணர்ச்சிகளை வெளிப்படுத்தவோ கூடாது. இத்தகைய எதிர்பாராத நிகழ்வுகளில் ஏதேனும் ஒரு சிறிய அளவிலான ஆட்சேபனை, தயக்கம் அல்லது உணர்ச்சியை வெளிப்படுத்தும் சம்பவம் நிகழ்ந்தால், அவர் உங்களை அவரிடமிருந்து வெளியே அனுப்பலாம்.

<u>முடிவுரை:</u>

இந்தத் தகவல்களின் பட்டியலில் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு நிபந்தனையும், நடைமுறை விதிகளும் பாபாவுடன் வர முடிவு செய்யும் அனைவரையும் முழுக் கட்டுப்பாட்டில் உள்ளடக்குவதாக இருந்தாலும், பாபா எந்த உத்தரவுக்கும், நிபந்தனைக்கும் கட்டுப்பட வேண்டிய கட்டாயம் இல்லை என்பது மட்டுமல்லாமல், எல்லா நேரத்திலும் எந்த ஒரு கட்டளையையும் வழங்க அவருக்கு முழு உரிமை உண்டு என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்; மேலும், எந்த உத்தரவும் மாறலாம், நிபந்தனைகளில் ஏதேனும் அல்லது அனைத்தும் ரத்து செய்யப்படலாம்.

எவ்வாறாயினும், பாபா, சுதந்திரமாக இல்லை என்பது மட்டுமல்லாமல், வேண்டுமென்றே தன்னைத்தானே பிணைத்துக் கொள்ளும் ஒரே விஷயம், மேற்கூறிய நிபந்தனைகளின் பட்டியலில் முதலாவதாக இடம்பெறுவது - பாபாவுடன் புது வாழ்வில் இணையும் ஒவ்வொருவரும் அதை, சற்றும் தளராத உறுதியுடன் எடுத்துக் கொள்ள வேண்டும்; எந்த விதமான நன்மையையும் பெற முடியாது, மேலும் அவர்கள் எல்லாவிதமான ஏமாற்றம் மற்றும் இடர்பாடுகளை எதிர்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும். இந்த நிலைப்பாடு எக்காலத்திற்கும் நிலைத்து நிற்கும், பாபாவால் ஒருபோதும் மாற்றப்படவோ, அழிக்கவோ முடியாது.

அதுமட்டுமல்லாமல், பாபா, தம்முடன் வருபவர்களில் எவருக்கும் கடவுளின் முன்னால் நிகழும் எந்தவொரு விளைவுகளுக்கும் தனிப்பட்ட பொறுப்பிலிருந்து விடுவிக்கும் எந்த உத்தரவையும் வழங்க மாட்டார் என்பது முற்றிலும் தெளிவாக இருக்க வேண்டும். எனவே, நீங்கள் பாபாவுடன் செல்ல முடிவெடுத்தால், ஒவ்வொரு விளைவுகளுக்கும் கடவுளின் முன்னால் உள்ள பொறுப்பு முழுவதுமாக உங்களை, அதாவது உங்களை மட்டுமே சார்ந்துள்ளது என்பதையும், இந்தப் பொறுப்பை மாற்றவோ அல்லது ரத்து செய்யவோ பாபா ஒருபோதும் கட்டளையிட மாட்டார் என்பதையும் நீங்கள் உறுதி செய்ய வேண்டும்.

பாபாவின் இந்த முழுமையான சுதந்திரத்தை, நீங்கள் எந்த நேரத்திலும் சில நிபந்தனைகள் அல்லது உத்தரவுகளை மாற்றவோ அல்லது ரத்து செய்யவோ அவரிடம் கேட்கலாம் என்பதற்கான மறைமுக அறிகுறியாக நீங்கள் புரிந்து கொள்ள வாய்ப்பு உள்ளது. எனவே, பாபாவுடன் நீங்கள் செல்வதாக முடிவெடுத்த பின்பு, பாபாவின் சுதந்திரத்தை நியாயமற்ற முறையில் பயன்படுத்திக் கொண்டு, ஏதேனும் நிபந்தனைகளை அல்லது உத்தரவுகளை மாற்ற அல்லது ரத்து செய்ய சொல்வதானால், அது, அவருடன் வருவதற்கான உங்கள் முடிவை, உங்கள் மனதை மாற்றிக்கொள்வதற்குச் சமம் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளுங்கள்.

இந்தத் தகவல்களின் பட்டியலை நீங்கள் மிகவும் கவனமாகப் படித்து, ஒவ்வொன்றையும் உங்கள் சொந்த சூழ்நிலைகளுக்குப் பயன்படுத்தி, நேர்மையான, தெளிவான, சந்தேகத்திற்கு இடமில்லாத முடிவை எடுக்க வேண்டும்; இது உண்மையான 'ஆம்' அல்லது 'இல்லை' என்பதைத் தவிர வேறு எதுவும் இல்லை.

அதற்குப் பிறகு பாபா இவ்வாறு எடுத்துரைத்தார்: "கடவுளின் முன்னால் உறுதிமொழி எடுத்துக்கொண்ட பிறகு, நிபந்தனைகளின் நகல் அனைவருக்கும் வழங்கப்படும்; அவற்றை கவனமாகப் படித்து, முழுமையாக சிந்தித்து, நீங்கள் 'ஆம்' அல்லது 'இல்லை' என்ற பதிலை எழுதி, சுற்றறிக்கையின் கடைசி பக்கத்தில் கையெழுத்திட்டு, நான்கு மணி நேரத்திற்குள் நகலைத் திருப்பி அனுப்பவும். ஆங்கிலம் தெரியாதவர்களுக்கு மராட்டி மொழியில் நகல் வழங்கப்பட்டுள்ளது.

பாபா எடுத்துரைத்த, 'தனக்கும் தனது வட்டத்து உறுப்பினர்களுக்கும், பழைய மற்றும் புதிய வாழ்க்கை முறையின் முடிவு மற்றும் ஆரம்பம் தொடர்பான அவரது கடைசி பிரமாணம்' தொடர்ந்து வாசிக்கப்பட்டது. முன்கூட்டியே எழுத்துப்பலகை வழியாக எடுத்துரைக்கப்பட்ட இந்தப் பிரமாணம் இப்போது பாபா, சைகையால் தெரிவித்த அடுத்த கணமே டாக்டர் டானால் வாசிக்கப்பட்டது. பாபா, முதன்முறையாக நாற்காலியிலிருந்து எழுந்து, சுவரை நோக்கி, மண்டலிக்கு முதுகு பக்கத்தைக் காட்டி நின்ற வேளையில், டாக்டர் டான் வாசித்த பிரமாணம் கீழ்வருமாறு:

முழுமுதற் கடவுளை, பரமாத்மா என அறிந்து உணர்ந்தவர்கள், மற்றும் இறை நம்பிக்கை உள்ளவர்கள், அவர் எங்கும் வியாபித்திருப்பவர், எல்லாம் அறிந்தவர், எல்லாம் வல்லவர், அன்பானவர், கருணையுள்ளவர் என்று நம்புபவர்கள் - இந்த அளவிறுதியற்ற வாழ்வுக்கு முன்னால், பாபா, அவர் மற்றும் மண்டலியின் சார்பாக, பாவங்கள் எனப்படும் அனைத்து மன, உடல் மற்றும் தார்மீக பலவீனங்களுக்கும், அனைத்து பொய்கள், தவறான தூய்மையற்ற, சுயநல செயல்களுக்கும் மன்னிப்புக் கோருகிறார்.

எப்பொழுதும் இருந்த, எப்பொழுதும் இருக்கிற, எப்பொழுதும் இருக்கப்போகிற, எல்லையில்லா கடவுள் முன்னிலையில், பாபா, இன்று 'புது வாழ்வை' உறுதியாக முடிவு செய்து, அவரும், அவருடன் செல்லும் 'தோழர்'களும் 1949 அக்டோபர் 16 முதல், புது வாழ்வில் அடியெடுத்து வைத்து, இறுதிவரை வழிநடத்தப்படுகிறார்கள். இந்தப் 'புது வாழ்வு', நிபந்தனைகள் அடங்கிய சுற்றறிக்கை, பாபாவால் கட்டளையிடப்பட்ட அனைத்தையும் அடிப்படையாகக் கொண்டது; மேலும், பாபா 'புது வாழ்வில்' தனது தோழர்களைப் போலவே, தானும் உறுதியாகவும் நிலையாகவும் நிற்கும்படி கடவுளைக் கேட்டுக்கொள்கிறார்.

அப்போது பாபா, **"எனது முடிவும், இன்று நீங்கள் எடுக்கும் முடிவும், மாற்ற முடியாததாகவும், எல்லா காலங்களுக்கும் கட்டுப்படக்கூடியதாகவும் இருக்கும். அதை 100 சதவிகித தீவிரத்துடன் முடிவெடுக்காவிடில், விளைவுகளை சந்திக்க நேரிடும்"** என்று எச்சரித்தார்.

நிபந்தனைகள் வழங்கப்படாத நபர்கள், அதற்குப் பிறகு தீர்மானிக்கப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக, தனிப்பட்ட சத்தியப்பிரமாணம் செய்து கொள்ளப்பட்டனர்; இதில் சிது, ஜங்க்ளே மாஸ்டர், ஜமதார் ஆகியோர் அடங்குவர். மஸ்துகளில் அலி ஷா, முஹமது இருவரும் சிதுவின் பாதுகாப்பிலும், ஏற்கனவே குறிப்பிட்டபடி, மேல்மலையில் தங்கியிருக்கும் பெண்மணிகளின் அனைத்து தேவைகளை ஜங்க்ளே மாஸ்டரின் கண்காணிப்பிலும், ஜமதார் மேல்மலையில் இரவு கண்காணிப்பாளராகவும் இருந்தனர்.

பாபா, மதிய உணவுக்காகக் கூட்டத்தைக் கலைக்க அனுமதித்தாலும், நிபந்தனைகளின் சுற்றறிக்கையை அடையப் பெற்றவர்களிடமிருந்து பதில்கள் அவர் கைகளுக்கு வரும்வரை உண்ணப்போவதில்லை என்று கூறினார்.

இரண்டு மணி நேரத்திற்குள் அனைத்து பதில்களும் பாபாவின் கைகளில் வந்து சேர்ந்தன. அவற்றில் சில ஆச்சரியங்கள் காத்திருந்தன. மெஹர் பாபா, அனைத்து ஏற்பாடுகளையும் கவனிக்கும் பொறுப்பாளராக நியமிக்க விரும்பிய ஜால் கேரவாலா, நிபந்தனைகளின் நகலில் 'ஆம்' என்று குறிப்பிட்டிருந்தார். பாபா, உணவு உண்ணச் செல்லும் முன்னர் இந்தத் தவறை சரி செய்ய முற்பட்ட வேளையில், ஜால், பாபாவின் விருப்பத்தை ஏற்றுக்கொண்டு, ஒரு சிறப்பு பிரார்த்தனைக்குப் பின்னர், அவர் தற்போதைய பணியைத் தொடர விடுவிக்கப்பட்டார்.

'இல்லை' என்ற பாதிரியின் முடிவும் பாபாவை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது; மண்டலியும் ஆச்சரியமடைந்தனர். பாதிரி தனது சகிப்புத்தன்மையின் வரம்பை எட்டிவிட்டதாக சிலர் கருதினர், மேலும், 'புது வாழ்வில்' இணைவது அவர் மீது பெரும் சுமையாக இருக்கும் என்பதை பாதிரி உணர்ந்தார். மெஹர்வான் ஜெஸவாலா விளக்கியது போல, "பாதிரி தனது

பழைய நாட்களில் பாபாவுடன் இதுபோன்ற பல 'புதிய வாழ்க்கைகளைக்' கடந்து சென்றார், மேலும் வரவிருக்கும் சிரமங்களை அவர் அறிந்திருந்தார்; எனவே பாபாவை மகிழ்விக்க முடியாது என்று அவர் உணர்ந்திருக்கலாம். அவருக்கு சுமையாக இருப்பதை விட 'இல்லை' என்று சொல்வதே சிறந்தது. எப்படியிருந்தாலும், பாதிரி 'இல்லை' என்று சொன்னது பாபா உட்பட அனைவருக்கும் பெரும் ஆச்சரியத்தை விளைவித்தது. பாபா அனைத்தும் அறிந்தவர் ஆகையால், நிகழவிருப்பது அவருக்குத் தெரிந்திருந்தும், நமது நிலையில் இருந்து, அவர் ஆச்சரியம், சற்று ஏமாற்றம் இரண்டையும் வெளிப்படுத்தினார்."

பாபா இவ்வாறு குறிப்பிட்டார்: **"நான், பாதிரி என்னுடன் வருவதை விரும்பினேன், அவரது எதிர்மறையான பதில் என்னை வேதனைக்குள்ளாக்கியது. ஆனால் அதே நேரத்தில் மெஹராபாத்தின் நான்கு தூண்களில் பாதிரியும் ஒன்று என்பதால் நான் மகிழ்ச்சியடைகிறேன்; இதர மூன்று தூண்களும் (பெண்டு , விஷ்ணு, ஆதி சீனியர்) என்னுடன் வருகின்றனர்; ஒரு வேளை அவர்களும் கீழே 'விழுந்துவிட்டால்'** (மறைந்துபோனால்), **குறைந்தபட்சம் ஒருவராவது நின்று கொண்டிருப்பார்!"**

பல ஆண்டுகளுக்குப் பிறகு, பாபா, பாதிரி எதைச் செய்ய வேண்டுமென விரும்பினாரோ அதையே அவர் செய்ததாகத் தெரிவித்தார். மெஹராபாத் நிலத்தை கவனித்துக் கொள்வதற்காக, அங்கேயே இருக்குமாறு பாபா அவருக்கு அறிவுறுத்தியிருந்தார். "இது குருநாதரால் நடத்தப்பட்ட ஒரு திட்டமிட்ட நாடகம்" என்று பாதிரி வெளிப்படுத்தினார். "(பாபா) என்னை, நிகழ்ச்சிக்கு முன்னரே அழைத்து, நான் என்ன சொல்ல வேண்டும், என்ன செய்ய வேண்டும் என்பதைத் தனிப்பட்ட முறையில் என்னிடம் கூறினார். தக்க நேரத்தில், அவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நானும் நடித்தேன், எனது பாகத்தைச் செய்து முடித்தேன், அவ்வளவுதான்."

'இல்லை' என்று எழுதிய காடேக்கர், டாக்டர் தேஷ்முக் மேலும் அதே வகையைச் சேர்ந்த பிற அன்பர்களைக் குறிப்பிட்டு பாபா, **"கடவுள், காடேக்கரை எப்பொழுதும் என் இதயத்தில் வைத்திருக்கட்டும்"** என்று குறிப்பிட்டார். டாக்டர் தேஷ்முக்கைப் பற்றிக் கூறுகையில் அவர், **"தேஷ்முக் எப்பொழுதும் என் இணைபிரியா அன்பராக இருப்பார்"** என்றார்.

பால் நாத்து, குருதுவாடியைச் சேர்ந்த பள்ளி ஆசிரியர், 'ஆம்' என்று பதிலளித்தவர்களில் அவரும் ஒருவர். மெஹர் பாபாவுடன் செல்வதற்காக, பால் நாத்து, தனது வேலையை விட்டுவிட முடிவு செய்திருந்தார்; ஆனால் அவர் காசநோயால் பாதிக்கப்பட்டிருந்ததால், உடல்நலக் கண்ணோட்டத்தில், கடுமையான இடர்பாடுகள் நிறைந்த வாழ்க்கைக்கு உடல் இணங்கிவர வாய்ப்பில்லை என்பதால் அவர் தனது முடிவிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

பண்டோபா தேஷ்முக்கும் (மெஹராபாத்தில் ஆரம்பகால ஆசிரியர்களில் ஒருவர்) 'ஆம்' என்று பதிலளித்திருந்தார், ஆனால் அவர் ஒரு பெரிய குடும்பத்திற்குப் பொறுப்பாளராக இருந்ததால், வெளியிலிருந்து அதைப் பராமரிக்க எந்த ஏற்பாடும் செய்ய முடியாத நிலையில் பண்டோபாவின் பெயரும் நீக்கப்பட்டது.

சகன் 'ஆம்' என்று பதிலளித்ததை அறிந்த அவரது மனைவி கண்கலங்கி அழத் தொடங்கினார்; பாபாவிடம் இதைத் தெரிவித்தபோது அவரும் விடுவிக்கப்பட்டார். ஆனால், பாபாவுடன் செல்லமுடியாத பட்சத்தில், சகனிடம், யாசித்துக் கிடைக்கும் உணவை மட்டும் உண்ணும்படி முதலில் கட்டளையிட்டார்; பின்னர் அவரை மீண்டும் மெஹராபாத்திற்குச் செல்லுமாறு அறிவுறுத்தி, அவருக்கு ஒரு சிறிய உதவித்தொகையை வழங்கி, மேலும், வெளியே ஏதேனும் பணிபுரிந்து அதைத் துணை வருமானமாக வைத்துக்கொள்ளலாம் எனக் கூறினார்.

கூட்டத்தின் முதல் நாளான ஆகஸ்ட் 15 அன்று கிஷன் ஸிங் மெஹராபாத் வந்திருந்தார். அடுத்த நாள் பாபா அவரை சந்தித்து, கிஷன் ஆச்சரியப்படும் விதத்தில், ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு, பாபா அவரை மீண்டும் டில்லிக்குத் திரும்ப அனுப்பினார். தொடர்ந்து, 31ஆம் நாள் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கிஷனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அவரும் 'ஆம்' என்று பதிலளித்தாலும், அவர் வீடு திரும்பிய வேளையில், அவரால் 'புது வாழ்வில்' பயணம் செய்ய முடியாத அளவிற்கு, பல சிரமங்களை எதிர்கொண்டார். அவர் ஒரு சாட்சியாக நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டிய நிர்பந்தத்தை பாபாவிடம் தெரிவித்த போது, பாபா அவருக்கு இந்தத் தொலைத்தந்தியை அனுப்பினார்: "**உங்கள் கடிதத்தைக் கருத்தில் கொண்டு, நான் உங்களை மன்னித்து, உங்கள் 'ஆம்' எனும் வாக்குறுதியிலிருந்து உங்களை விடுவித்து, கண்டிப்பாக நீங்கள் வீட்டிலேயே இருப்பதை நான் விரும்புகிறேன். என்னுடனான உங்கள் ஆன்மீகத் தொடர்பு முன்பு போலவே இருக்கும் என்று உறுதியாக நம்பலாம்.**"

அனைத்து பதில்களையும் ஆய்வு செய்த பின்னர், உறுப்பினர்கள் மூன்று குழுக்களாக பிரிக்கப்பட்டனர்:

'ஆம்' என்று பதிலளித்தவர்கள் - பாபாவின் 'புது வாழ்வில்' அவருடன் செல்ல இருந்தவர்கள்.

'இல்லை' என்று பதிலளித்தவர்கள் - பாபாவுடன் செல்லாமல் அவரவர் பழைய வாழ்க்கையைத் தொடர்ந்து வாழ வேண்டும் என்பது பாபாவின் பொதுவான அறிவுறுத்தலாகும்.

'ஏற்பாட்டு'க் குழுவினர், பாபாவை நிதி ரீதியாகச் சார்ந்திருப்பவர்களுக்கான முதன்மையான நடைமுறை ஏற்பாடுகளை கவனிக்க

அவரால் நியமிக்கப்பட்ட ஐந்து நபர்கள். இருப்பினும், பிற்பாடு, பாபா இதர வேலைகளுக்கான அறிவுரைகளை வழங்கியபோது, அதையும் அவர்கள் உண்மையாகச் செய்தனர். ஸரோஷ், நரிமன், மெஹர்ஜி, ராம்ஜூ, ஜால் கேரவாலா ஆகியோர் அடங்கிய குழுவில், ஸவக் தமானியா உதவியாளராகப் பணியாற்றினார்.

'ஆம்' என்று பதிலளித்தவர்கள், அக்டோபர் 1 முதல் 5 வரை மெஹராபாத்தில் இருக்க வேண்டும் என்றும், தமது முந்தைய வாழ்க்கை, குடும்பம் மற்றும் விவகாரங்களிலிருந்து முழுமையாக விடுபடத் தயாராக இருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஒரு சிலர் பாபாவிடமிருந்து குறிப்பிட்ட அறிவுரைகளை அடையப் பெற்றனர். அவர்களில் ஒருவர் பாபாவின் முன்னாள் இரவு கண்காணிப்பாளர் கிருஷ்ணா நாயர். கிருஷ்ணா, நவம்பர் 1947 முதல் தென்னிந்தியாவில் வாழ்ந்து வந்த அவர், மீண்டும் பாபாவுடன் இணைய விரும்பி மெஹராபாத் வந்தார்.

கிருஷ்ணா, 'பாபாவுடன் 'புது வாழ்வில்' செல்லும் நபர்களில் ஒருவராக ஏன் தன்னைச் சேர்க்கவில்லை' என்று கேட்டபோது, பாபா அவருக்கு விளக்கினார், "**நீங்கள் புது வாழ்வைப் பற்றி கவலைப்பட வேண்டாம்**."

அதற்கு பதிலாக, பாபா அவருக்கு ஒரு விசேஷ உத்தரவை வழங்கினார். நாடு முழுவதும் உள்ள இந்து, முஸ்லீம், ஸொராஸ்ட்ரியன், கிறிஸ்தவம் ஆகிய அனைத்து மதங்களின் புகழ் வாய்ந்த கோயில்கள், புனித ஸ்தலங்களுக்கு, இந்தியா முழுவதும் யாத்திரை மேற்கொள்ளுமாறு கிருஷ்ணாவிற்கு அறிவுறுத்தப்பட்டது. அந்தப் புனித ஸ்தலங்களில் தலை வணங்கி, 'மெஹர் பாபா' என்ற வார்த்தையை உச்சரிக்குமாறு அறிவுறுத்தினார். பாபா, விஷ்ணுவை அழைத்து, கிருஷ்ணாவின் செலவுக்காக ரூ.2,000 வழங்கக் கூறினார். கிருஷ்ணா, பெனாரஸ் நகரில் தனது யாத்திரையைத் தொடங்கி, அதை முடிக்க கிட்டத்தட்ட ஏழரை மாதங்கள் ஆனது.

இதற்கிடையில், மெஹராபாத்திலிருந்து புறப்படுவதற்கு முன்பு கிருஷ்ணாவிற்கு, தனது மனைவி ஒரு மகனை ஈன்றெடுத்ததாகத் தெரிவிக்கும் கடிதம் ஒன்று வந்தது. அவர் அந்தக் கடிதத்தைப் படித்துக் கொண்டிருந்த வேளையில், மெஹர் பாபா அங்கு வந்து, என்ன செய்தி என்று கேட்க, கிருஷ்ணா, பாபாவிடம் நடந்ததைக் கூறினார்; கடிதத்தைப் பற்றி எவரிடமும் சொல்ல வேண்டாம் என்று பாபா கட்டளையிட்டார். (முன்பு, 1946ஆம் ஆண்டில், பாபா, கிருஷ்ணாவிற்குத் தனது திருமணத்தைப் பற்றி எந்த ஒரு மண்டலியிடமும் சொல்லக் கூடாது என்று கட்டளையிட்டிருந்தார்.) அதைத் தொடர்ந்து, அனைவரும் அன்று மண்டபத்தில் கூடியதும், பாபா, கிருஷ்ணாவை அழைத்து அனைவர் முன்னிலையிலும் அவரிடம், "**உங்கள் மனைவியும்**

மகனும் எப்படி இருக்கிறார்கள்?" என வினவினார். பாபா, கிருஷ்ணாவிடம், 'அப்போது' அவரது திருமணத்தையும், 'இப்போது' மகன் பிறந்ததையும் ரகசியமாக வைக்குமாறு அறிவுறுத்தியதால், அவருடைய திருமணம் மற்றும் மகன் பிறந்த செய்தியைக் கேட்டு மண்டலி ஆச்சரியமடைந்தனர்.

டாக்டர் கனி உடனே, "பாபா, நீங்கள் இங்கே என்ன அற்புதத்தை நிகழ்த்துகிறீர்கள்? மனைவி இல்லாமல் கிருஷ்ணாவிற்கு ஒரு மகன் பிறக்கிறான்?" என்று கேட்டார்.

தொடர்ந்து விஷ்ணுவிடம் 1942ஆம் வருடத்தில் "நான் திருமணம் செய்து கொள்ள மாட்டேன்" என்று உறுதியளித்து, கிருஷ்ணா தனது உதிரத்தால் எழுதிய குறிப்பை பாபா எடுத்து வரச் சொன்னார். அந்தக் குறிப்பைக் கண்டுபிடிக்க விஷ்ணுவிற்கு முக்கால் மணி நேரம் பிடித்தது. பாபா அதைக் கையில் தூக்கிப் பிடித்துக் கூறினார், "**இந்த அயோக்கியன் திருமணம் செய்து கொள்ள மாட்டேன் என்று எனக்கு சவால் விட்டான்! இப்போது திருமணமாகி ஒரு மகனும் இருக்கிறான்!**"

டாக்டர் நீலு குறுக்கிட்டு, "பாபா, கிருஷ்ணா எங்களுக்கு, சிறப்பு விருந்து எதுவும் வழங்காமல், எங்கள் முதுகுக்குப் பின்னால் திருமணம் செய்து கொண்டார். எங்களுக்கு விருந்து வேண்டும்!" என்றார்.

அதற்கு பாபா, "**என்னைப் பார்க்காதீர்கள்! திருமணம் செய்து கொண்டவன் நான் அல்ல. உங்களுக்கு விருந்து கொடுக்க வேண்டியது கிருஷ்ணா**" என்று வேடிக்கையாக பதிலளித்தார். இருப்பினும், கிருஷ்ணாவிடம் பணம் இல்லாததால், பாபா அனைவருக்கும் சுவையான 'பாசுந்தி' வாங்கி வரச்சொல்லி வழங்கினார்.

1949 ஆகஸ்ட் மாத இறுதி வரை, அவர்கள் எங்குச் செல்ல இருக்கிறார்கள் என்று தனக்குத் தெரியாது என பாபா குறிப்பிட்டிருந்தார். ஆனால் 1949 செப்டம்பர் 1 வியாழன் அன்று, பாபா தனது திட்டங்களைப் பற்றிய விவரங்களை வெளிப்படுத்தத் தொடங்கினார்.

மெஹர் பாபா, வட இந்தியாவில் ரிஷிகேஷ் (RISHIKESH) அருகே உடைமையைக் கையகப்படுத்தத் தொடங்கிய விஷயத்தை முதலாவதாகக் குறிப்பிட்டு, ஏழு வருடங்களாக பாபாவின் தொடர்பில் இருந்த, டெல்லியைச் சேர்ந்த கேக்கி தேசாய் என்பவருக்கு இந்தப் பொறுப்பை வழங்கியிருந்தார். இந்த விவகாரம் குறித்து ஆலோசிக்க கடந்த 9ஆம் தேதி கேக்கி மெஹராஸாத்திற்கு அழைக்கப்பட்டார். பாபாவுடன் 'புது வாழ்வில்' செல்ல முடியாத, அதிக வயதும் பலவீனமுமான கைக்கோபாத், அக்டோபர் முதல் நிலம் வாங்கப்படும் வரை கேக்கியுடன் தங்கி, பின்னர் அந்த நிலத்தில் குடியிருந்து, பாபாவின் வருகைக்காகக் காத்திருக்குமாறு அறிவுறுத்தப்பட்டார்.

வட இந்தியாவில் அமைந்த இந்த இடமே தனது எதிர்கால 'ஆதரவற்ற வாழ்வின்' (LIFE OF HELPLESSNESS) மையமாக இருக்கும் என்று பாபா கூறினார். ரிஷிகேஷுக்கு அருகில் அமைந்த நிலத்தை, 'புது வாழ்வு'க்கு 'ஆம்' என்று கூறியவர்களில் எவரேனும் ஒருவர் அல்லது இருவரின் பெயரில் வாங்கும்போது, சட்டப்பூர்வமான பத்திரத்தின் கீழ், இறுதியில், பாபா அல்லது மண்டலிக்குச் சொந்தம் ஆகாத முறையில் நிலத்தைக் கையகப்படுத்தும் திட்டம் ஒன்றை வகுக்கும்படி ராம்ஜூ, டாக்கேஃபால்கர் இருவருக்கும் அறிவுறுத்தப்பட்டது.

'புது வாழ்வின்' புதிய மையத்தை, நடைப்பயணமாக 1950 நவம்பர் மாதத்திற்குப் பிறகு சென்றடையக் கூடாது. இருப்பினும், வடக்கு நோக்கிப் புறப்படுவதற்கு முன்பு, பாபா கூறினார், **"நான் முதலில் அக்டோபர் 16 அன்று அனைத்து 'ஆம்' மண்டலியுடன் ஔரங்காபாத்தை நோக்கி அணிவகுத்து, தளரா நடையை மேற்கொள்வேன். குல்தாபாத்** (KHULDABAD), **பைட்டன்** (PAITHAN) **ஆகிய இடங்களில் இரண்டரை மாதங்கள் தங்கத் தீர்மானித்துள்ளேன். சாய்பாபா தனது ஆன்மீக வாழ்க்கையை தொடங்கிய இடம் குல்தாபாத்."**

ஆனால் அதற்குப் பிறகு பாபா, குல்தாபாத் செல்வது குறித்த எண்ணத்தை மாற்றி, பதிலாக அஹமதுநகரிலிருந்து 'கோட்நதி' (GHODNADI) வரை நடந்து சென்று, அங்கிருந்து பேருந்தில் பெல்காவ்ம் (BELGAUM) செல்லவும், விஷ்ணுவின் உறவினர்களின் நிலத்தில் தங்கவும் முடிவு செய்தார்.

பெல்காவ்மில் அமைந்த உடைமைப் பற்றி பாபா கூறுகையில், **"இந்த நிலத்தில் ஏற்கனவே ஒரு சிறிய வீடு உள்ளது, அதில் பெண் மண்டலி தங்க முடியும், மீதமுள்ள இடம் ஆண் மண்டலி வானைக் கூரையாக வைத்து வாழப்போதுமானது. சுவையான குடிநீரைக் கொண்ட நல்ல கிணறு. என்னுடன் வருபவர்களுக்கு எதிர்கால நிகழ்வான 'சேவை', 'உணவுக்காக யாசித்தல்', 'ஆதரவற்ற நிலை' போன்ற சூழ்நிலைகளில், தம்மைத் தாமே பழக்கப்படுத்திக் கொள்ளும் வாய்ப்பையும் பெல்காவ்ம் எனக்கு வழங்கும்."**

எருதுகளால் இயங்கச் செய்யும் நான்கு சக்கர 'கூண்டு வாகனம்' (CARAVAN) ஒன்றை உருவாக்கி, அதை டிசம்பர் 15ஆம் தேதிக்குள் பெல்காவ்மிற்கு எடுத்து வருமாறு பாபா, பாதிரிக்கு அறிவுறுத்தினார். நான்கு பெண் மண்டலி வடக்கு நோக்கி கால் நடையாகப் பயணம் செய்யும் வேளையில், அது குறைந்தபட்ச பாதுகாப்பை வழங்கும்.

கடைசியாக நடந்த கூட்டத்திற்குப் பிறகு, பாபா, ஆண் மண்டலியிடம் எச்சரிக்கையாக இருந்து, எல்லா நிபந்தனைகளையும் பின்பற்றுமாறு தொடர்ந்து வலியுறுத்திக் கூறினார்.

மேலும் விளக்கமளித்து அவர் கூறியதாவது:

அக்டோபர் 15ஆம் தேதிக்குப் பிறகு, நிபந்தனைகளை நடைமுறைப்படுத்துவது தொடங்கும். என்னால் இயன்றவரை உங்களுக்கு உதவ முயற்சிக்கிறேன், இதன்மூலம் நீங்கள் அனைவரும் இறுதிவரை என்னைப் பற்றிக்கொண்டிருக்க முடியும். எந்த விதமான சோதனைகள் பற்றிய கேள்விக்கும் முற்றிலும் இடம் இல்லை. இத்தனை வருடங்கள் என்னுடன் இருந்த உங்களைச் சோதிக்க இன்னும் என்ன இருக்கிறது? 'புது வாழ்வு' மிகவும் கஷ்டமாகவும், கடினமானதாகவும், வருந்தி செய்யவேண்டியதாகவும், சில விஷயங்களில் பேரிடரை விளைவிப்பதாகவும் இருக்கும் என்பது உண்மை.

எவரும் என்னை விட்டுப் பிரிந்து செல்ல வேண்டிய சூழ்நிலையை நான் வேண்டுமென்றே உருவாக்குவேன் என்று நினைப்பது முட்டாள்தனம். நான் ஏன் அதை செய்ய வேண்டும்? உதாரணமாக, நான் மேற்கத்திய நாடுகளுக்குச் சென்று, அங்கு எனக்காக ஒரு குறிப்பிட்ட பணியைச் செய்யுமாறு டானிடம் எளிதாகக் கேட்டிருக்கலாம், அதைச் செய்வதில் அவர் அதிருப்தி அடைய எந்தக் காரணமும் இல்லை.

ஒருமுறை நாம் 'புது வாழ்வை'த் தொடங்கினால், ஒவ்வொருவரும் அவரவர் பலவீனங்களைக் கண்காணித்து, கட்டுப்படுத்த வேண்டும் என்று எதிர்பார்க்கும் விதத்தில், நிபந்தனைகளுக்கு ஏற்ப, கட்டுப்படுத்தாவிட்டால் விளைவுகளை சந்திக்க வேண்டியிருக்கும். நான் யாருக்காகவும் எந்த வகையிலும் பொறுப்பேற்க மாட்டேன் என்று ஏற்கனவே தெளிவாகக் கூறியிருந்தாலும், 'ஆம்' என்று இணக்கம் தெரிவித்தவர்கள் ('ஆமாம்' குழு), இறுதிவரை என்னுடன் இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்; அவர்களுக்கு உறுதியான உதவியாக இருக்கும் நோக்கத்தில் பெல்காவ்மில் முதல் இரண்டரை மாதங்கள் தங்கியிருப்பது, தோழர்களின் முழுமையான துறவு வாழ்க்கையின் இறுதி நோக்கத்திற்கான ஆரம்ப பயிற்சி மையமாகத் திகழும்.

காக்கா பாரியா தனது கைவசம் சிறிது பணத்தை எடுத்துச் செல்வதைப் பற்றி விவாதித்தபோது, பாபா தெளிவுபட விளக்கினார்:

நமது 'புது வாழ்வு' குழுவில் இருக்கும் வாய்பேசா விலங்குகளுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்; எனவே 1950 ஜனவரி 1ஆம் நாளுக்குப் பின்னர், விலங்குகளுக்குத் தீவனம் மற்றும் கூண்டுவண்டிக்கு முற்றிலும் தவிர்க்க முடியாத பழுது பார்க்கும் செலவுகளைத் தவிர, எந்த சூழ்நிலையிலும், காக்கா எவருக்காகவும் ஒரு நயாபைசா கூட செலவழிக்க வேண்டும் என்று யாரும் எதிர்பார்க்கக்கூடாது.

இந்தத் தீவிரமான சூழ்நிலையிலும், பாபா, தனது வழக்கமான இனிமையுடன் கூடிய மனநிலையில் இருந்தார்; நகைச்சுவைகள் மற்றும்

கதைகளைக் கேட்டு மகிழ்ந்தார்; மேலும் இடைவெளி நேரங்களில் உள்ளரங்கு விளையாட்டுகள் மற்றும் 'ஏழு ஓடுகள்' (SEVEN TILES) விளையாட்டுகளில் பங்கெடுத்தார். ஒரு கட்டத்தில், சில நகைச்சுவை துணுக்குகளைக் கேட்டு சிரித்த பாபா, **"கடவுளுக்கு நன்றி, நம்மால் இன்னும் சிரிக்க முடிகிறது!"** என்றார்.

செப்டம்பர் மாதம் முழுவதும், விவாதங்கள் தொடர்ந்தன மற்றும் திட்டங்கள் முடிவு செய்யப்பட்டன. எல்லா ஏற்பாடுகளையும் நிறைவு செய்வதற்கும், 'ஆமாம்' குழுவின் எதிர்கால வாழ்க்கைக்குத் தேவையான வழிமுறைகளை அறிவுறுத்தவும் பாபா அடிக்கடி மெஹராபாத் சென்றார்.

செப்டம்பர் 6ஆம் நாள் காலை, குஷ்ரு குவார்ட்டர்ஸ் சென்று ஆதியின் சகோதரி பிரோஜா, அவரது குடும்பத்தினர் மற்றும் அங்கிருந்தவர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

1949 செப்டம்பர் **11** ஞாயிற்றுக்கிழமை அன்று, மெஹர் பாபா, ஒவ்வொரு 'புது வாழ்வு தோழரும்' தன்னுடன் எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படும் தனிப்பட்ட உடைமைகளின் பட்டியலை எடுத்துரைத்தார். அக்டோபர் 1ஆம் தேதி அனைத்து தோழர்களும் மெஹராபாத் வந்தபோது அவர்களுடன் எடுத்துச் செல்ல வேண்டியவை இவையே, மேலும் இந்த அனைத்து பொருட்களும், 'புது வாழ்வு முழுவதும்' நீடிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது:

இரண்டு தடித்த, முழு நீள பருத்தி அங்கிகள்; ஒன்று வெள்ளை மற்றொன்று நீல நிறம்
ஒரு பழுப்பு நிற கம்பளி அங்கி
ஒரு கரடுமுரடான போர்வை
ஒரு கம்பளி உடை
ஒரு பருத்தி அல்லது பட்டு உடை
இரண்டு சட்டைகள் - ஒன்று கம்பளி, மற்றொன்று பருத்தி அல்லது பட்டு
இரண்டு பைஜாமாக்கள்
இரண்டு காட்டன் பனியன்கள்
மூன்று ஜோடி காலுறைகள் - ஒரு கம்பளி, இரண்டு பருத்தி
நான்கு லங்கோட்டிகள் (இடுப்பில் அணிய) அல்லது உள்ளாடை
நான்கு கைக்குட்டைகள்
ஒரு குளியல் துண்டு
ஒரு முகம் துடைக்கும் துண்டு
ஒரு தகர பெட்டி (அதிகபட்ச அளவு **2 x 1 1/2** அடி **x 9** அங்குலம்)
தோள்களில் தொங்கவிடும் துணிப்பை ஒன்று
ஒரு குவளை
ஒரு தட்டு
ஒரு கரண்டி, ஒரு தேக்கரண்டி

ஒரு பல் துலக்கும் தூரிகை, ஒரு பற்பசை குழாய்

ஒரு சிறிய கை கண்ணாடி, ஒரு சவரம் செய்யும் கருவி (பிளேடுகளுடன்)

இரண்டு சலவை சோப்புகள்

ஒரு ஜோடி காலணிகள் அல்லது செருப்புகள்

கைக்கடிகாரம், கண்ணாடி, பொய்ப் பற்கள் போன்றவற்றைப் பயன்படுத்தும் நபர்கள், இன்னும் அவற்றைப் பயன்படுத்துவதானால் மட்டுமே எடுத்துச் செல்லலாம்.

ஒரு நல்ல நீடித்து நிற்கும் ஊன்றுகோல்

ஒரு புதிய தொப்பி அல்லது தலைப்பாகை, எது விருப்பமோ அது

கழுத்தைச் சுற்றி துண்டு பயன்படுத்துபவர்கள் இரண்டு எடுத்துக் கொள்ளலாம்

ஒரு சீப்பு மற்றும் (பயன்படுத்துவதானால்) தலைமுடிக்கான எண்ணெய்.

'ஆமாம் குழு'விலுள்ள ஒவ்வொருவரும் பணம் எதுவும் இல்லாமல் மெஹராபாத்திற்கு வருமாறு அழைக்கப்பட்டனர்; எவ்வாறாயினும், அவர்களில் எவரேனும் ஏதேனும் உத்தியோகபூர்வ அரசாங்க சான்றிதழ், அடையாள அட்டை அல்லது ஓட்டுநர் உரிமத்தை வைத்திருந்தால், இந்த ஆவணங்களை அவர் தன்னுடன் கொண்டு வர வேண்டும். ஒவ்வொரு தோழரும் மேற்குறிப்பிட்ட தேவைப்பொருட்களை தங்களுடன் வைத்திருக்குமாறு அறிவுறுத்தப்பட்டாலும், பின்னர், ஆடைகளில் சிலவும் அனுமதிக்கப்படவில்லை.

செப்டம்பர் 15 அன்று கோமா கணேஷ், பகீரத், ரூஸி பாப் ஆகியோர் மெஹராஸாத்தில் பாபாவை சந்தித்து அறிவுரைகளைப் பெற்றனர். அன்று மதியம் 3:00 மணிக்கு மெஹராபாத்திற்குச் சென்ற பாபா, மண்டலியுடன் சிறிது நேரம் கிரிக்கெட் விளையாடினார். 16, 17, 18 ஆகிய தேதிகளிலும் வந்து, மூன்று நாட்களும் மேல்மலையில் பெண் மண்டலியை சந்தித்தார்.

உற்சாகம் மற்றும் புறப்படுவதற்கான அவசர ஆயத்தங்களுக்கு மத்தியில், மெஹர் பாபா, தனிப்பட்ட நிதி சிக்கல்களை எதிர்கொண்ட டாக்டர் கனியிடம், அவரது மன சஞ்சலங்களை வெளிப்படுத்தி, குருநாதரைக் குறைகூறி முறையிடும் (ஜெரிமைட் - JEREMIAD) பாணியில் கஸல் (கவிதை) ஒன்றை எழுதி, இசை வடிவம் கொடுக்கச் சொன்னார். டாக்டர் கனி ஒரு நீண்ட நெடிய துக்ககரமான கதையைக் கஸலாக எழுதி, 1949 செப்டம்பர் 22 வியாழன் அன்று மெஹராபாத்தில் பாபாவின் முன்னிலையில் அதை மொழிந்தார். அதற்கு பதிலளிக்கும் விதத்தில் காக் ஸாஹேப் ஒரு கஸலை எழுதுமாறு பாபா கேட்டுக் கொண்டார்; மறுநாள் காக் ஸாஹேப், டாக்டர் கனிக்கு 'சிநேகிதனின் (பிரியமான இறை தோழன்) மறுமொழி'யை வழங்கியது பாபாவை மிகவும் மகிழ்வித்தது.

இரண்டு கஸல்களும் இங்கு முழுமையாக மறுபதிவு செய்யப்பட்டுள்ளன.

சிநேகிதனுக்கு ஒரு சோகக் க(வி)தை

(டாக்டர் அப்துல் கனி (முன்ஸிஃப் எழுதியது)

இன்றிரவு, (மதுபான) சத்திரத்தின் அங்கத்தினர்
ஒரு சந்திப்பை நிகழ்த்துகின்றனர்.
(இன்றிரவு, இந்தச் சத்திரத்தின் உரிமையாளர், தனது
வருகையால் நிகழ்வை அருள்நயப்படுத்துகிறார்.
இன்றிரவு, அனுமதிக்கப்பட்டால், என் இதயத்தின்
சுமையைக் குறைக்க விரும்புகிறேன்.
இனிமேல், அன்பரும், அன்பிற்குரியவரும், இந்த தெய்வீக
இரவும் இருப்பதை, கனவாகவே காண்கிறேன்!

ஓ சிநேகிதனே! ஆழமாக வேரூன்றிய அகந்தையை
சிதைக்கும் வாக்குறுதியைத் தந்த மதுபானம் எங்கே?
இன்றிரவு எனது ஒத்துழையாமையை மன்னிக்கவும்,
வாக்குறுதியை மீறும் எனது நண்பனே!

நான் எத்தனை காலம் இந்தக் கபட வேடம் போடட்டும்,
இத்தனை முட்டாள்தனமாக விளையாடட்டும்?
நான் எத்தனை காலம் மன்றாட வேண்டும்?
எத்தனை காலம் மக்களின் கேலிகளை சகிக்கட்டும்?
ஓ சிநேகிதனே! நான் எவ்வகையிலும்
பாதிக்கப்படாத ஒரு கல் அல்லவே!
ஒளி மற்றும் அறிவுக்கான எனது ஏக்கம்
என்னைத் தைரியப்படுத்தவே,
இன்றைய திடீர் எழுச்சிக்குக் காரணம்
என் இதயம் ஒளிர்ந்து எரிவதே!

நான் ஒரு சுதந்திர சிந்தனையாளர் என்ற வகையில்
உலகில் பேர்போனவன்!
உங்கள் பார்வைக்காக என் இதயக் கழிவுகளை
அதிர வைக்கும் கட்டாயத்தில் இருப்பவன்!
என் இதயத்தின் கருவி முற்றிலும் ராகம், தாளமின்றி
ஒவ்வாத இசையை மீட்டும்!
அழுகைக் குரல் போன்ற ராகம் காதுகளுக்கு
இனிமையாக இல்லாவிடில் மன்னிக்கவும்!

ஓ சிநேகிதனே! நம்பிக்கைக்குரியவர்களின் முனகலை
ஒருமுறை கேளுங்கள்!

இது புலம்பலாக இருந்தாலும் அன்பும்
கலந்திருப்பதைப் பாருங்கள்!
உங்கள் சத்திரம் என்றென்றும் இருந்தது எங்களுக்குத் தெரியும்!
அதிலிருக்கும் ஒவ்வோர் அணுவும் தெய்வீக இசையால் அசையும்!
உங்கள் விருப்பத்திற்கு இணங்க, சத்திரத்தின்
மதுபான சுவையைப் பிறருக்கு எடுத்துச் செல்வதில்
தைரியமாகவும் துணிச்சலாகவும் இருந்தேன்!
நான் சிநேகிதனின் வருகையின் மகிழ்ச்சிகரமான செய்தியை
ஒலிபரப்பி, இதன் மூலம், சத்திரத்தின் ரகசியத்தை
அனைவருக்கும் தெரியப்படுத்தினேன்!

தீபம் ஏற்றிய அடுத்த கணமே விட்டில் பூச்சிகள்
அதனைச் சுற்றி வளைத்தன!
இறை ஒளியோ அவர்களின் பகுத்தறிவின்
பார்வையைக் குருடாக்கின!
இந்த சாகசக்காரர்கள் பைத்தியமும் இல்லை,
அல்லது அவர்களின் சுய உணர்விலும் இல்லை;
அவர்களைப் பற்றிய அதிர்ச்சியூட்டும்
கதை உலகில் உள்ளது!

உண்மையில், இந்த அன்பால் பாதிக்கப்பட்ட ஆத்மாக்கள்
உயிருடனும் இல்லை அல்லது இறக்கவும் இல்லை.
இந்த விஷயத்தில் மௌனம் காப்பது மிகவும் நல்லது!

ஓ சிநேகிதனே! உங்களின் மிகையான வாக்குறுதிகளை
நீங்கள் நினைவில் கொள்கிறீர்களா?
கேட்காமலே அடையப் பெற்ற உங்கள் கருணையும் உதவியும்
எங்கள் பகுத்தறிவை சிதைத்து எதிர்ப்பை முறியடித்ததா?
எங்கள் வாழ்வின் வாசலில் நாங்கள் மாட்டிக்கொண்டோம்,
உங்கள் வருகையால் ஒரு புதிய உலகை நாங்கள் கண்டோம்!
அதன் சபலம் மிகவும் அசாதாரணமானது என நாங்கள்
கடவுள் மீது சத்தியம் செய்தோம்!

ஓ சிநேகிதனே! எங்களின் ஆரம்பகால உற்சாகமும்,
உள்ளார்வமும் உங்களுக்கு நினைவிருக்கும்!
நாங்கள் உலகத்தையும் அதன் கோரிக்கைகளையும்
அலட்சியப்படுத்தினோம்!

மகத்துவத்தின் உச்சங்களுக்கு அப்பால் நாங்கள்
வெறுமையின் நீர்வீழ்ச்சிகளைக் கண்டோம்!
இறையுணர்வின் பாக்கியம் நமக்கு உறுதிமொழியாக
வழங்கப்பட்டதை அதன் காரணமாகப் பார்த்தோம்!
மேலும், இதன் விளைவாக, எங்கள் மனம் சொர்க்கத்தில்
சுதந்திரமாக மிதந்து கொண்டிருந்ததையும் அறிவோம்!
இவ்வாறு மிதந்துகொண்டே இருந்ததால் திடமான பூமியை
எங்களால் உணர முடியவில்லை ஒருபோதும்!

ஓ சிநேகிதனே! சத்திரத்தின் (மன்ஸில்-எ-மீமில்)
தொடக்க நிகழ்வு உங்களுக்கு நினைவிருக்கிறதா?
சத்திரத்தின் மர்மங்கள் எப்போது வெளியே கசிய ஆரம்பித்தது?
சம்பந்தப்பட்ட அனைவரையும் போதையின்
மயக்கத்தை உணர வைத்தது!
மேலும் வட்டம் மற்றும் அதன் உறுப்பினர்கள் பற்றிய
உண்மை வெளிப்பட்டது!
இதன் விளைவாக, அந்தக் காலத்து ரொட்டியும்
வெண்ணெயும் உள்வாசிகளை வெளியே
'பிரியாணி'யை (வசதியான வாழ்க்கை) மறக்கச் செய்தது!
ஜாம்ஷெட் அரண்மனையின் சுகபோகங்கள் அவர்களுக்காக
வைக்கப்பட்ட கொசுத் திரைகளில் மறைந்திருந்தது!

ஓ சிநேகிதனே! உங்கள் வாக்குறுதிகள் ஜூன் மற்றும்
செப்டம்பர் மாதங்களுக்கு தள்ளிவைக்கப்பட்டது
உங்களுக்கு நினைவிருக்கும்?
இதுபோன்ற சம்பவங்களை பொழுதுபோக்கிற்காக
அடிக்கடி நினைவு கூர்ந்தோம்!
நீங்கள் சூழ்ச்சிகளையும் சாக்குப்போக்குகளையும்
உருவாக்க ஆரம்பித்ததை அறிந்தோம்!
இந்த சாகச விளையாட்டில் உங்களை வெல்ல எவரும் இல்லை!
அன்பின் சந்தையில் கடவுளின் பெயருக்கு வரவேற்பு
இல்லாதபோது, ஒரேயடியாக எங்கள் கண்முன்னே
ஏதோ ஒரு வடிவில் மாயாவைக் காண்பித்து
எங்களை அரவணைக்கவும் தவறவில்லை!

நீங்கள் பயணம் மற்றும் பொழுதுபோக்கிற்கான
சந்தர்ப்பங்களை உருவாக்கினீர்கள்,

தற்செயலாக அவற்றின் மூலம் தன்னலமற்ற
சேவைக்கான வாய்ப்புகளையும் வழங்கினீர்கள்!
ஒவ்வொருவருக்கும், திறமைக்கேற்ப தொழிலை
வழங்கினாலும், நீங்கள் சிலரைக் கண்டு மயங்கியும்,
சிலரைக் குறித்து கவனமாகவும்,
சிலரிடம் அலட்சியமாகவும் இருந்தீர்கள்!
சுருக்கமாக, 'பிளேட்டோ' பொறாமைப்படும் அளவிற்கு
ஒவ்வொருவரின் தனிப்பட்ட நாடித்துடிப்பை அளவிட்டீர்கள்!
உங்கள் சுவாசத்தின் இனிமையான வாசனைத்
திரவியத்தால் (வார்த்தைகளால்) இயேசுவின்
சுவாசத்தின் தாக்கத்தையும் விஞ்சிவிட்டீர்கள்!

வருடங்கள் உருண்டோடின, பகல்களும் இரவைத் தொடர்ந்தன,
உலகம் மற்றும் மதம் சார்ந்த வாழ்க்கையின்
அனைத்து பிடிப்பையும் படிப்படியாக இழந்தோம்!
உங்களின் அணுகுமுறையில் நுட்பமான, ஆனால் திட்டவட்டமான
மாற்றம் எங்களிடம் தென்பட்டபோது, நாங்கள் பாதியில்
விட்டுவந்த உலக வாழ்க்கையின் கவர்ச்சிகளுக்கு
மீண்டும் ஒருமுறை ஈர்க்கப்பட்டதாக உணர்ந்தோம்!
ஆனால் காலம் கடந்து, செய்யும் விருப்பமும் இல்லாமல்
போனதால், கடந்த ஆண்டுகளை
நினைவுகூர கூட நேரமில்லாமல் போனோம்!

சத்திரத்தின் ஒவ்வொரு நபரும் உங்கள் பார்வையில் ஒரு
சிறப்பு இடத்தைத் தக்கவைத்துக்கொண்டதாகக் கூறினர்!
உங்கள் கண்களில் தென்படும் குறும்புத்தனமான
மின்னலை அனைவரும் இப்போது உணர்கின்றனர்!
உங்கள் இதயத்திற்கு நெருக்கமானவர்களும்,
அல்லாதவர்களும் ஏமாற்றத்தை உணரத் தொடங்கினர்!
உலகம் முழுவதையும் முட்டாளாக்கும் அளவிற்கு
உங்கள் கண்கள் போய்விட்டன என்று நினைக்கின்றனர்!
அனைத்தையும் அலசி ஆராயும் உங்கள் கண்களின்
வரம்பை எவரால் கற்பனை செய்ய முடிகிறது?
இது எங்கும் நகராமல் அங்கேயே
இருந்தாலும் அனைத்தையும் தவிர்க்கிறது!
உங்கள் பணியின் மர்மம் மற்றும் சூழ்ச்சியில்
வளர்ந்து வரும் நோக்கத்தை உணர்ந்து,

உங்கள் சேவைக்காக உயிர்த்துடிப்பைக் கோரப்பட்டது
எங்களை எப்படியோ உணரச் செய்கிறது;
புத்தி குழப்பமடைந்து, உணர்வு சுழல்கிறது!
உங்கள் அப்பாவித்தனமான கண்களின் அகல் பரப்பின் காட்சி
'ஜோபின்' (பைபிள் கதாபாத்திரம்) பொறுமையைக் கூட
முயற்சி செய்யத் தூண்டுகிறது!
மேலும் நான் 'எளிதில் வளைந்து கொடுக்காதவன்'
என்ற எனது கூற்றை வெட்கப்படச் செய்கிறது!

பெரும்பாலும், நீங்கள் கட்டமைப்பை உருவாக்கி, பின்னர்
அழிக்கும் விளையாட்டை விளையாடியிருக்கிறீர்கள்.
நாங்கள் நலமாக வாழத்தொடங்கியதாக உணர்ந்த அடுத்த
கணமே, அங்கு அமைதியின்மையை உருவாக்கினீர்கள்!
எவ்வாறாயினும், அழிவின் காற்று இப்போதுபோல்
ஒருபோதும் வலுவாக இருந்ததில்லை; தற்போதைய
விளையாட்டு உண்மையான அழிவைக் குறிக்கிறது.
இந்த எண்ணத்தால் மட்டுமே எனது கவலையான மனம்
கலங்குகிறது. இந்த முடிவு, முடிவின் ஆரம்பம்
என்று எடுத்துரைப்பதுபோலத் தோன்றுகிறது!

பல ஆண்டுகளாக காதற் பள்ளிக்கூடம் ஒரு
வழக்கமான பாடத்திற்கு உட்பட்டிருந்தது.
திடீரென, பாடத்திட்டத்தை இத்தனை கடுமையாக
மாற்றுவதற்கான உங்களின் நிலைப்பாடு என்ன அது?
காலத்தால் துரு பிடித்த மனநிலையும், இயல்பும் வெறும்
வார்த்தைகளால் ஒருபோதும் அகற்ற முடியாது!
மேல்நிலை ஆத்மாக்களுக்கு கூட இது ஒரு சவாலாக
இருக்கும்போது, எங்கள் வாழ்க்கை முழுவதும்
சோதனைகளால் நிறைந்து வழிந்தது!
விதிவிலக்குகள் மற்றும் நிரந்தர விடுமுறைக்கு
நீங்கள் ஆணையிட்டிருந்தால் அது மிகவும்
விரும்பத்தக்கதாக இருந்திருக்குமா?

பல ஆண்டுகளாக, நாங்கள் (கடவுளின்) சத்திரத்தின்
பாதுகாப்பிற்காக பிரார்த்தனை செய்து கொண்டிருந்தோம்.
சிநேகிதனின் (குருநாதரின்) நீண்ட ஆயுளுக்காக
நாங்கள் சத்திரத்தில் பிரார்த்தனை செய்தோம்.

சமீபத்திய ஆணை, எவ்வாறாயினும், சத்திரம், சிநேகிதன்
இரண்டையும் மறந்துவிட வேண்டும்
எனக் கட்டளையிடுகிறது!
இப்போது மதுபான கோப்பையின் (தனிப்பட்ட ஆத்மாவின்)
பாதுகாப்பிற்காகப் பிரார்த்திப்பதைத் தவிர
வேறு மார்க்கம்தான் உள்ளதோ?
கப்பல் (கடவுள்), மாலுமி (குருநாதர்) இருவரும்
அந்நியர்களாகிவிட்டனர்; யாத்ரீகர்களே, உங்கள்
சுய நினைவுக்கு வாருங்கள், உங்களைப் பராமரிக்க
இப்போது யார்தான் உள்ளனரோ?

இந்தக் குழப்பமூட்டும் நிலையை முடித்துக்கொள்ளுங்கள்,
ஓ முன்ஸிஃப்! உங்கள் சோகக்கதையே
எங்கள் ஒவ்வொருவரின் கதையும்!
இருப்பினும், ஒளிவு மறைவின்றி பேசுவதற்கு நாங்கள்
உங்களை வெளிப்படையாகப் பாராட்டுகிறோம்; உங்கள்
சரியான முடிவை நாங்கள் வாழ்த்துகிறோம்!
பிரியமானவர், சுயமகிமையின் மேகங்களில் சவாரி
செய்வதில் உறுதியாக இருந்தால், சரணடைதல்
மற்றும் அர்ப்பணம் எனும் உறுதியான குதிரையில்
ஏறி, பிரியமான காதலனும் பதிலளிக்கட்டும்!

<u>ஜெரிமைடுக்கு எழுதிய பதில் கவிதை</u>
<u>(அஹமது அப்பாஸ் - காக் ஸாஹேபின் கைவண்ணத்தில்)</u>

மதுபான சத்திரத்தின் தோழர்களே, இன்றைய
அழுகைக் குரல் யாருடையது தெரியுமா?
எங்களது நீண்டகால பயனாளிகளில் ஒருவரின் குரல் தான்
இது என்று உங்களுக்குத் தெரியாதா?
ஒரே ஒரு நிபந்தனையின் பேரில் சத்திரம், நித்தியமாக
திறந்திருக்கும் என்பதை அவருக்குத்
தெரியப்படுத்துங்கள் இன்று!
சத்திரத்தின் பரம ரகசியம், சத்திரத்தை விட்டு
வெளியே போகக்கூடாது என்று!
சிநேகிதனின் கொடுங்கோன்மையைப் பற்றி புகார் கூற
அவருக்கு எவ்வளவு தைரியம் தெரியுமா?

நித்திய மதுபானம் அவருக்கு எந்தப் பயனையும் தரவில்லை
என்று அவர் மனம் திறந்து கூற முடியுமா?
அவருடைய 'ஜெரிமைட்' எவ்வளவு அர்த்தமற்றது, உணர்வற்றது!
என்ன ஒரு கேலியும் பாசாங்குத்தனமும்
இந்த அழுகை புலம்பலில் உள்ளது!
இப்போது முன்ஸிஃப் சொல்லட்டும், இது தாளத்திற்கு
புறம்பானது இல்லையா? மேலும், இன்று அதற்கு
ஏதேனும் சந்தர்ப்ப சூழ்நிலைதான் இருந்ததா?
அன்பர்கள் நீங்கள் அனைவரும் கேளுங்கள் செவிமடுத்து!
சிநேகிதனின் அளவிறுதியற்ற அன்பும் அருளும் உலகளாவியது!
இன்று எந்த ஒரு கையும் வெற்றுக் கோப்பையை வைத்திருக்காது!

சிநேகிதனின் அருள் உமது மனச்சோர்வை உணரச் செய்த
உங்கள் வாழ்க்கையின் குறிப்பிட்ட நாளை
நீங்கள் நினைவில் கொள்ளுங்கள்.
உலக மற்றும் இறை அறிவு இல்லாத நீங்கள்
உலகில் மதிப்பற்றவர்களில் ஒருவராக இருந்தீர்கள்.
சிநேகிதனின் அருளால் நீங்கள் மனிதன் என்று அழைக்கப்படும்
தகுதியை அடையப் பெற்றீர்கள்!
அறியாமையின் உருவாக இருந்த அணு, இறை அறிவின்
ஞானத்தைப் பெற்றதை நீங்கள் அறிவீர்கள்.

உங்கள் ஒழுக்கத்தின் தராதரத்தை
நீங்கள் நினைவில் கொள்ளுங்கள்!
தன்னலமற்ற சேவைக்கு உங்களில் ஏதேனும்
தயார்நிலை இருந்ததா என்று நினைத்துப் பாருங்கள்!
பிறரின் வலிகளைப் பகிர்ந்து கொள்ள
நீங்கள் தயாராக உள்ளீர்களா?
தியாகங்கள் மற்றும் சுய மறுப்புகளை மேற்கொள்ள
விருப்பம் உள்ளவர்களாக இருந்தீர்களா?
சிநேகிதனின் தொடர்பால் நீங்கள் மகத்தான
மனித நிலைக்கு உயர்த்தப்படுகிறீர்கள்.
மேலும் சிநேகிதனின் அருளால் செய்யாத
பாவங்களிலிருந்து நீங்கள் விடுபடுகிறீர்கள்!

நீங்களும் ஒரு வெளிவேஷக்காரர், தன்னுணர்வற்றவர்.
துணிச்சல்காரராகத் தோன்ற வேண்டாம்!
நான் உங்களை அக்குவேறு ஆணிவேறாக அறிவேன்.
நீங்கள் உங்கள் சுயநல தேவைகளுக்காக
மட்டுமே உயிருடன் இருக்கிறீர்கள்;
இன்னும், நீங்கள் விழிப்புடன் இருப்பதாகக் கூறுகிறீர்கள்!
உங்களின் வெளிப்படையான தைரியம்,
தோற்கடிப்பதைத் தவிர வேறொன்றுமில்லை!
இந்த மகிழ்ச்சியற்ற 'ஜெரிமைட்',
இது உங்களுக்கு சாதகமாக இல்லை!
சுதந்திர சிந்தனை எனும் பெயரை
அவமானப்படுத்துவது முறையல்ல!
ஒரு சுதந்திர சிந்தனையாளர் பெயர் மற்றும்
புகழுக்காக ஏங்குவதில்லை;
சத்திரத்தை இந்த முறையில்
விளம்பரப்படுத்துவது ஒருபோதும் சரியல்ல.
சிநேகிதனின் இக்கால வருகையைப்
பறைசாற்றும் முறையும் இதுவல்ல.
உமது தந்திர முறைகளைக் கண்டு விசுவாசமானவர்கள்
வெட்கப்படுகிறார்கள். நீங்கள் முன்வைக்கும்
அன்பின் பல்வகை கலவையை என்னென்று சொல்ல!

கேட்காமலே வழங்கும் தயவும் உதவியும், அத்துடன்
தனது வாக்குறுதிகளையும் ஒருபோதும் மறக்கவில்லை!
'பிரியாணி'யின் (வசதியான வாழ்க்கையின்) சிந்தனை
உங்கள் வாழ்க்கையிலிருந்து பிரிக்க முடிவதில்லை!
உங்கள் மிருகத்தனத்தை நினைவில் கொள்ளுங்கள்;
சிநேகிதனின் செயல்கள் உங்களை
உற்சாகப்படுத்தும் நோக்கில் இருந்தன!
சிநேகிதனின் நிறைவேற்றப்படாத வாக்குறுதிகள்
உங்கள் நன்மைக்காக ஒரு மறைமுக
நோக்கத்தைக் கொண்டிருந்தன!

சிநேகிதன், பயணங்கள், சுற்றுலா, விளையாட்டுகள்
போன்ற பல்வேறு பொழுதுபோக்குகளை
உருவாக்கியுள்ளார் உங்களுக்கென!

இவை அனைத்தும் குழந்தைகளை மகிழ்விக்கும்
இனிப்புகள் போல் இருந்தன.
சரணடைதல், அர்ப்பணம் செய்தல் போன்ற ஆன்மீகப் பாதையைக்
கடக்கும் விஷயத்தில், இந்த உபாயங்கள் உங்கள்
திறன்களைக் கண்டறிய உதவும் நோக்கத்தில் உள்ளன!

சிநேகிதனின் இந்தச் சிறைப்பிடிப்பு மறைமுகமாக
ஒரு வரப்பிரசாதம் அல்லவா?
இந்த விளையாட்டின் பின்னணியில் இருக்கும் சூத்திரதாரியை
உங்களால் பார்க்க முடியவில்லையா?
நான் உங்களைக் குறுகிய பார்வை கொண்டவன் என
அழைத்தால் அது அளவீட்டில் சரியாக இருக்கும்.
உங்கள் விஷயத்தில் இவ்வாறு நான் செய்தது
அனைத்தும் சரியானதாகவே தெரியும்.
உங்கள் கனவுகளில் சுதந்திரமாகத் தோன்றும்
அனைத்தும் மரணம் போன்றது!
உங்களை அவதூறு மற்றும் அவமானத்தின்
ஆழத்திற்கு அழைத்துச் சென்றது!
வெளியளவில் தோன்றும் எனது கல்நெஞ்சம்
மறைமுகமாகக் கருணை காட்டுவதாக இருந்தது!
சுத்த அறியாமைத்தனம் ஒன்றுதான் உங்களை அலறி அழ வைக்கிறது!

சத்திரத்தில் நிகழ்ந்த வருந்தத்தக்க கதையை விவரிக்கையில்,
உங்கள் பெயருக்கும் அதிர்ஷ்டத்திற்கும்
களங்கம் விளைவித்துவிட்டீர்கள்!
உங்களுள் உற்று நோக்கி, உண்மையை
எதிர்கொள்ள முயற்சி செய்யுங்கள்.
உங்கள் கடந்த மற்றும் நிகழ்காலத்திற்கும் இடையே உள்ள
உலகளவிலான வித்தியாசத்தை நீங்கள் உணரவில்லையா?
நீங்கள் சிறிதளவேனும் சரியான எண்ணம் கொண்டவராக இருந்தால்,
நீங்கள் அதை தயக்கமின்றி ஒப்புக்கொள்வீர்கள் இல்லையா?
இன்று, உங்களைப் போன்ற சாதாரணமான அணுவை
ஆதவனுக்கு இணையாக்கி விட்டான் அப்படித்தானே!

நான் அளித்த ஞானப் பாடங்கள் உங்களில்
விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

இறை தூதரின் உண்மையான நிலையை மதிப்பிடவும்
இது உங்களுக்கு உதவியது.
உங்கள் திறமையான ஒரு காஃபிர் (கடவுளை நம்பாதவர்)
உண்மையான முஸ்லீமாக மாற்றப்பட்டார்!
சுருக்கமாகச் சொன்னால், உங்களைப் போன்ற
ஒரு மிருகம் மனிதனாக்கப்பட்டது!
எனது போதனைகளால் உலகம் உங்களை அங்கீகரிக்கிறது!
எனது காரணமாக நீங்கள் கேட்கப்படுகிறீர்கள், மதிக்கப்படுகிறீர்கள்!

உலகில், அழகான ஒருவருக்கு அதைவிட சிறந்தது
என்று ஒன்று உள்ளது;
அறிவிலும் கற்றறிதலிலும் உங்களுக்கும்
உயர்ந்தவர்கள் நூற்றுக்கணக்கானவர்கள் உண்டு!
இதை மட்டும் விளக்குங்கள், பிறரின் பார்வையில்
தேர்ந்தெடுக்கும் அளவிற்கு உங்களில் என்ன
குறிப்பிட்ட தகுதி இருக்கிறது?
அது அந்த நித்திய பாக்கியத்தின் உள்ளளவிலான தொடர்பு
ஒன்றுதான் எனது ஞானத்தைப் பெறுவதற்கான
உரிமையை உங்களுக்கு அளித்தது!

முக்கிய விஷயம் என்னவெனில், உங்கள் மனமும் இதயமும்
உலகக் குப்பைகளால் நிரம்பியதால், இந்தத் தனித்துவமான
ஆசீர்வாதத்தை நீங்கள் எங்கே சேமித்திருக்க முடியும்?
இதயத்தை சுத்திகரிக்கும் செயல், குழந்தையின்
விளையாட்டுத்தனமான விஷயமல்ல;
சரணடைந்து, அர்ப்பணம் செய்வதற்கான சோதனை,
நெடியது, மிகவும் கடினம்.
உங்கள் அவசர புத்தி உங்கள் பார்வையை மங்கலாக்கிவிட்டது.
இந்தப் பாதையில் கஞ்சத்தனம் இல்லை ஆனால் தாமதம் உள்ளது!

இதயத்தை இழக்காதீர்கள், கூறுவதைக் கேளுங்கள்!
வெற்றியானது, ஒன்றை செய்து சாகும் விருப்பம் என்பதைப் பாருங்கள்!
லாபம், நஷ்டம் பற்றிய அனைத்து கருத்துகளையும் கைவிடுங்கள்!
நீங்கள் வாழ விரும்பினால் வாழ்க்கையை இழக்கத் தயாராக இருப்பீர்!
சத்திரத்தின் இரக்கமுள்ள குருநாதர், சந்தேகத்திற்கு இடமின்றி,
உங்களை, அழியா வாழ்வின் மதுவை ஒரு நாள் அருந்தச் செய்வார்!

1949 செப்டம்பர் 23 அன்று காலையில், தௌலத் ஸிங், அவரது மகன், ராம்ஜூ ஆகியோர் பாபாவுடன் மெஹராஸாத்தில் ஒரு நேர்காணலை நிகழ்த்தினர். ஆதி சீனியர் ஒரு காரிலும், எரச் ஜீப்பையும் ஓட்டிக்கொண்டு அதே இரவில் மெஹராஸாத்திற்குத் திரும்பி வருவதாகக் திட்டம், ஆனால் 'ஷெண்டி நல்லா' (SHENDI NALLAH) வெள்ளத்தில் மூழ்கியதால், அவர்கள் அஹமதுநகருக்குத் திரும்ப வேண்டியிருந்தது.

அதிகாலை 4:00 மணிக்கு 'ஷெண்டி நல்லா'வில் பாபாவை சந்தித்து மெஹராபாத்திற்கு அழைத்துச் செல்லுமாறு எரச்சிடம் அறிவுறுத்தப்பட்டது. எரச் தாமதமாக வந்ததால் பாபா வருத்தமடைந்து, பொறுமை இழந்து, அங்கிருந்த ஐந்து நபர்களில் ஒவ்வொருவரிடமும் (ஆதி சீனியர், எரச் மற்றும் மூன்று பணியாளர்கள் / ஓட்டுனர்கள்) தனது காதைத் திருகச் சொன்னார்.

1949 செப்டம்பர் 26, திங்கட்கிழமை மதியம் 2:30 மணிக்கு, பாபா, ஸரோஷின் பெயரில் பொது அதிகாரம் வழங்கும் ஆவணத்தை நிறைவேற்றினார். இது மெஹராபாத் மாஜிஸ்டிரேட் முன்னிலையில் நடந்தது. அதே நாளில், பாபா நிலத்தின் பல விற்பனை பத்திரங்களையும் நிறைவேற்றினார்; அதில் மெஹராபாத் மேல்மலை ஸரோஷுக்கும், கீழ் மெஹராபாத் மெஹர்ஜிக்கும், பிம்பல்காவ்ம் சொத்துடைமை நரிமனுக்கும் வழங்கப்பட்டது.

பாபாவும் அவரது குழுவும் ஒரு 'புது வாழ்வு' சுற்றுப்பயணத்தை மேற்கொள்வதாகவும், அவர்கள் தனிப்பட்ட முறையில் அவருக்குத் தெரிந்தவர்கள் என்றும் தெரிவிக்கும் 'அடையாளக் கடிதத்தில்' கையெழுத்திட்டு மாவட்ட மாஜிஸ்டிரேட்டும் உதவினார். தபால் அலுவலக அதிகாரியால் தனி 'அடையாள அட்டைகள்' வழங்கப்பட்டன.

இரண்டு நாட்களுக்குப் பிறகு, செப்டம்பர் 28ஆம் தேதி, எரச், பைதூல் ஆகியோருடன் பாபா, ஆதியின் காரில் பூனாவில் பிந்த்ரா ஹவுஸுக்குச் சென்றார். அவர் பப்பா, கெய்மாய் இருவரிடமும், **"ஸொல்டூன், டவ்லா இருவரையும் உங்கள் சொந்த குடும்ப உறுப்பினர்களாகப் பார்த்துக் கொள்ளுங்கள். வாலுவும் இங்கேயே இருக்கட்டும். இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்வதன் மூலம் நீங்கள் எனக்கு சேவை செய்வீர்கள்"** என்று கூறினார்.

ஜால்பாய், பெஹராம் மற்றும் அவரது குடும்பத்தினர் மெஹர் பாபாவை சந்திக்க வந்தபோது, அவர் நம்பிக்கையூட்டும் வார்த்தைகளைக் கூறினார். மேலும், டாக்டர் கனியின் குடும்பத்தினரையும் சந்தித்து, 'புது வாழ்வில்' கனி அவருடன் செல்லவிருப்பதால், அவரது மனைவி கதுன்பியை (KHATUNBI) ஆறுதல்படுத்தி, தைரியமாக இருக்கக் கோரினார்.

அடையாள அட்டை (IDENTITY CARD)

மெஹர் பாபா அவர்களின் வாழ்க்கையிலிருந்து விரைவில் பிரிந்து செல்வது, அவரது அன்பர்களின் இதயத்தை வேதனைக்குள்ளாக்கியது. "ஒரு சகோதரனின் பிரிவை தாங்கிக் கொள்ளலாம், ஆனால் அன்பிற்குரியவரின் பிரிவின் வலியை எவரால் தாங்க முடியும்? ஆனால் அன்பிற்குரியவர் எப்பொழுதும் அனைவருக்கும் நன்மை செய்வதையே கருத்தில் கொள்கிறார். உண்மையான அன்பர்களுக்கு மட்டுமே அவருக்காக கண்ணீர் சிந்தும் அதிர்ஷ்டம் உரித்தானது. பெஹ்ராமும் பிறரும் கண்ணீர் சிந்தினால், அவர்களின் கண்ணீருக்கு எண்ணற்ற மனப்பதிவுகளைத் துடைக்கும் சக்தி உள்ளது!" என காலம் குறிப்பிட்டது.

அதே நாளில் பூனாவிலிருந்து புறப்பட்டு மெஹர் பாபா மும்பைக்கு வந்து, நரிமன்-அர்னவாஸின் குடியிருப்பான ஆஷியானாவில் தங்கியிருந்த வேளையில், அவர் மெஹ்ராஸாத்தின் திறவுகோலை அவர்களிடம் கொடுத்தார். மெஹ்ராஸாத் முழு உடைமையும் இப்போது சட்டப்பூர்வமாக அவர்கள் வசம் வந்தது; ஆனால் நரிமன் அல்லது அர்னவாஸ் அதை ஒருபோதும் அவர்களுடைய சொத்தாகக் கருதாமல், அதை பாபாவின் இல்லமாகவே நினைத்து, கவனிக்கும் முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டனர்.

பைதூல் உறவினர்களுடன் தங்கியிருந்த வேளையில் எரச் பணியின் நிமித்தம் வேறு இடத்திற்கு அனுப்பப்பட்டார். ஜால் கேரவாலா, ஆதி, டாக்டர் கனி மூவரும் மெஹர்ஜியின் குடியிருப்பில் தங்கினர்.

மறுநாள் காலை உணவுக்காக, பாபா அங்கு வந்து மெஹர்ஜி, மனைவி ஹோமாய் மற்றும் அவர்களது மகள் பெர்வின் ஆகியோரை சந்தித்தார். மெஹர்ஜியின் மற்றுமொரு மகள், மெஹர்னாஸ் ஒரு கைக்குழந்தை; பாபா, அவளைத் தனது கைகளில் ஏந்தி சிறிது நேரம் அவளுடன் விளையாடினார்.

அவர் ஆஷியானாவிற்குத் திரும்பிய வேளையில், அவரது பல மும்பை அன்பர்கள் அங்கே கூடியிருந்தனர். தீனா தலாட்டி, அவரது மகன் மற்றும் இரண்டு மகள்களுடன் வந்தபோது, பாபா, தீனாவின் துறவு மனப்பான்மையைப் பெரிதும் பாராட்டி, அன்பைப் பற்றிப் பேசிய அவர், "**ஒருவர் அன்பிற்குரியவரை நேசிக்க வேண்டும், அதன் நெருப்பில் எரிந்தாலும், ஒருபோதும் குறை கூறி முறையிடாமல் இருக்க வேண்டும்**" என்று குறிப்பிட்டார்.

"அப்படிப்பட்ட அன்பைப் பெற நான் என்ன செய்ய வேண்டும்?" தீனா வினவினார்.

அந்த நேரத்தில், அர்னவாஸ், பாபாவிற்கு சோடா நீரை எடுத்து வர, பாபா இவ்வாறு பதிலளித்தார், "**அப்படி நேசிக்க, இந்த சோடாவை அருந்தவும்**!" என்று கூறியதும் தீனா சிரித்துக்கொண்டே ஒரு வாய் சோடாவைப் பிரசாதமாக பருகினார்.

மெஹருவின் சகோதரி நாகு, சிறுவயதிலிருந்தே பாபாவை சந்திக்க அடிக்கடி வருவது வழக்கம். நாகு மும்பையில் மருத்துவம் பயின்று கொண்டிருந்த வேளையில், பாபா அவரை அழைத்து தனது 'புது வாழ்வை'ப் பற்றி அவருக்கு விளக்கினார்; மேலும் அவர் தனது படிப்பைத் தொடர்ந்து மருத்துவராகவும் அவருக்கு அறிவுறுத்தினார்.

விஷ்ணுவின் உறவினர் சுஷீலாவும் அவ்வப்போது வருவதுண்டு; அவரும் மும்பையில் ஒரு பள்ளியில் பயின்று வந்தார். பாபா, அவரிடம், "**நீங்கள் திருமணம் செய்து கொள்ள விரும்பினால், செய்யலாம்**" என்று அறிவுறுத்தியும் சுஷீலா ஒருபோதும் திருமணம் செய்து கொள்ளவில்லை.

டாக்டர் அலு கம்பட்டாவும் ஆஷியானாவில் பாபாவை சந்திக்க நேர்ந்தது. பாபாவை சந்தித்த அனைவரும் அவரை வணங்கவோ, கைகளைக் கூப்பி மரியாதை செலுத்தவோ, வாழ்த்தவோ கூடாது என்ற கண்டிப்பான கட்டளைகளுக்கு உட்பட்டிருந்தனர். அலு தனது மரியாதையைச் செலுத்த மனதுள் ரகசியமாக ஏங்கினார்; பாபா, அவரிடம் ஒரு வேடிக்கையான கதையை எடுத்துரைக்கும்படி கேட்டபோது, அவருக்குத் தானாகவே ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டது. குஜராத்தியில் வலதுபுறம், இடதுபுறம் என்று எப்படிக் கூறுவது என்பதைக் கற்றுக்கொள்ள, ஆங்கிலேயர்கள் தங்கள் காலில் துடைப்பத்தைக் கட்டிக்கொண்டனர் என்ற பழைய வரலாற்றுக் கதையை அவர் விவரித்தார்; கதையில் அவர் ஒரு சிப்பாயைப் போல வணக்கம் செலுத்தும் காட்சியின் மூலம், இறைவனுக்கு வணக்கம் செலுத்தும் ஆவல் நிறைவேறியது.

முழு தாதாசாஞ்சி குடும்பத்தையும் சந்தித்த பிறகு, பாபா செப்டம்பர் 29 அன்று ஆதி மற்றும் டாக்டர் கனியுடன் மெஹராஸாத் திரும்பும் வழியில், டாக்டர் கனி தனது வீட்டிலிருந்து பெட்டி படுக்கைகளையும் எடுத்துச் சென்றார்.

'போர் மத்தளங்கள்' இப்போது 'புது வாழ்வை'த் தொடங்கும் வேகத்தின் தாளத்தில் முழங்கின. மெஹராபாத் மற்றும் மெஹராஸாத்தில், 'புது வாழ்வு'க்கான அனைத்து ஏற்பாடுகளும் தீவிரமடைந்தன. 1949 அக்டோபர் 5ஆம் நாள் புதன்கிழமைக்குள், 'ஆமாம் குழு' தோழர்கள் அனைவரும், அறிவுறுத்தியபடி, மெஹராபாத்திற்கு வந்தனர். அன்றைய தினம், மெஹராஸாத்தில், ஆதி சீனியர், ஸரோஷ், மெஹர்ஜி, நரிமன், ஆதி ஜூனியர் ஆகியோருடன், உடைமைகளின் பரிமாற்றம் குறித்த தனது அறிவுறுத்தல்களை முழுமையாக முடிக்காததால் பாபா அவர்களைக் கண்டித்தார்.

ஆதி சீனியர், விஷ்ணு, ராம்ஜூ மற்றும் பிற மண்டலியின் பல்வேறு நிதிக் கணக்குகள் அனைத்தையும் முடிவு செய்ததைத் தொடர்ந்து, மாதாந்திரப் பராமரிப்புப் பணிகளில் அவரது பொறுப்புகளிலிருந்து விலக்கப்படுவதைக் குறிப்பிட்டு, பாபா இவ்வாறு கூறினார், "**இன்று எனது வாழ்க்கையின் மிக முக்கியமான நாள். இதைத் தீவிரமாக எடுத்துக் கொள்ளுங்கள்.**"

மினூ கராஸ், ஜால்பாயுடன் அன்றைய தினம் மெஹராபாத்திற்கு வந்தார். மினூ 'ஆமாம் குழு' தோழர்களில் ஒருவராக இருந்தபோதிலும், பாபாவுடன் செல்ல விரும்பினாலும், பாபா அவரை, தற்போதைக்குக் காத்திருக்குமாறு அறிவுறுத்தி, **"நான் மினூ கராஸை விடுவித்தாலும், அவரை எனது குழுவில் சேர்க்கிறேன்"** என்று கூறினார். மினூ, அவர் நிறைவேற்றும் வகையில் சில அறிவுரைகள் வழங்கப்பட்டு, அக்டோபர் 13ஆம் தேதி மெஹராபாத் திரும்புமாறு அறிவுறுத்தப்பட்டார்; மறுநாள் காலையில் அவர் கராச்சிக்குப் புறப்பட்டுச் சென்றார்.

அக்டோபர் 6ஆம் நாள் மெஹராஸாத்தில், பாபா மற்றும் மெஹராபாத் மண்டலிக்கு, மணி ஒரு குறு நாடகம் அரங்கேற்றியதை அனைவரும் பாராட்டினர். மெஹர் பாபா, அதுவரை செய்து வந்த சில செயல்களை நிறைவுக்குக் கொண்டுவருவதாக எடுத்துரைத்து, அவரது விருப்பத்திற்கு இணங்க, 7ஆம் நாள், பாபா மெஹராஸாத்தில் ஒரு சில ஏழை, கீழ்-நடுத்தர வர்க்க குடும்பத்தினரின் கால்களைக் கழுவி, துணிமணிகளை வழங்கியதோடு, ஏழைகளுடனான அவரது செயல்பாடு 'நிறைவுக்கு வந்தது'.

'புது வாழ்வை'த் தொடங்குவதற்கு முந்தைய வாரத்தில், பாபா தொடர்ந்து மெஹராபாத்திற்கு விஜயம் செய்தார். உடல் நலக்குறைவு காரணமாக பாபாவுடனிருந்த பால் நாத்து, அக்டோபர் 9ஆம் நாள் அவரது இல்லத்திற்கு திருப்பி அனுப்பப்பட்டார். அன்றைய தினம் டெல்லியிலிருந்து கேக்கி தேசாய் வரவழைக்கப்பட்டதைத் தொடர்ந்து ஹரித்வாரில் நிலம் வாங்குவது குறித்த முடிவு எடுக்கப்பட்டது.

1949 அக்டோபர் 10 திங்கட்கிழமை அன்று, கிழக்கு மற்றும் மேற்கத்திய நாடுகளில் வாழும் பாபாவின் அன்பர்களுக்கு 'புது வாழ்வு' குறித்த கீழ்வரும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டது:

மெஹர் பாபா, அவரது பலதரப்பட்ட செயல்களின் பழைய வாழ்க்கையை முடித்துக்கொள்கிறார்; மேலும் சில தோழர்களுடன், 1949 அக்டோபர் 16 முதல் 'முழுமையான துறவு மற்றும் ஆதரவற்ற' தனது 'புது வாழ்வை'த் தொடங்குகிறார். பாபா மற்றும் அவரது தோழர்களின் 'புது வாழ்வு', அவர்கள் இருக்கும் இடம் அனைவருக்கும் தெரிந்திருந்தாலும், எக்காரணத்தைக் கொண்டும் பாபாவையோ அல்லது அவரது தோழர்களையோ பார்க்க யாரும் முயலக்கூடாது, ஏனெனில், பாபா அவர்களில் எவரையும் பார்க்க மாட்டார், அவருடைய தோழர்களையும் அவ்வாறு பார்க்க அனுமதிக்கமாட்டார். எக்காரணத்திற்காகவும் பாபாவுடனோ அல்லது அவரது தோழர்களுடனோ தொடர்பு கொள்ள எவரும் முயற்சிக்கக் கூடாது.

அக்டோபர் 12ஆம் நாள், பாபா இவ்வாறு தெரிவித்தார்: **“இந்த ஒரு மாதத்தின் தொடர்ச்சியான பணி, இரவும் பகலும், தனிப்பட்ட முறையில் பழைய வாழ்க்கையை நிறைவு செய்து, ‘முடிவற்ற புது வாழ்வு’க்கான ஏற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டு, பல தூக்கமில்லாத இரவுகளைக் கழித்தது, என்னை மிகவும் சோர்வடையச் செய்தது; மனரீதியாகவும், உடல் ரீதியாகவும், என்னை ஒரு பதட்டமான நிலைக்கு எடுத்துச் சென்றது.**

“எனவே, அக்டோபர் 16ஆம் தேதி காலையில், நான் ‘பழையன கழிந்து புது வாழ்வில் புகும்’ இந்நேரத்தில், எதிர்வினை நிச்சயமாக மிகவும் கடுமையானதாக இருக்கும்; தொடக்கத்தில், ‘புது வாழ்வில்’ எனது மனதையும் சக்தியையும் செலுத்த முடியாமல் கூட போகலாம்.”

எனவே, அனைத்து நிபந்தனைகளையும் கடைப்பிடிக்குமாறு பாபா தனது தோழர்களுக்கு முன்கூட்டியே வலியுறுத்தினார்; மேலும் முதல் வாரத்தில் ஒரு குறிப்பிட்ட அளவு தளர்வு இருக்கும் என்று கூறினார்.

தொடர்ந்து, பாபா விளக்கினார்: **“சுருக்கமாக, அனைத்து நிபந்தனைகளும் 100 சதவிகிதம் பின்பற்றப்பட வேண்டும் என்று நான் விரும்பினாலும், உடல் மற்றும் மன உளைச்சலில் இருந்து விடுபட, எனது தோழர்களிடம் நான் நிதானமான மனநிலையில் எளிதாக இருப்பேன்.**

“நாம் அக்டோபர் 16ஆம் நாள் அதிகாலையில் மெஹராபாத்திலிருந்து புறப்படுகிறோம், எனது தோழர்கள் எனக்கும் நான்கு பெண்மணிகளுக்கும் முன்னால் ஒரு ∴பர்லாங் (ONE FURLONG, 220 கெஜம்) இடைவெளி விட்டு நடக்க வேண்டும். ஆண் தோழர்கள் சிரித்து, பேசி, நிபந்தனைகளுக்கு எவ்வித இடையூறும் விளைவிக்காமல் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்.

“பெல்காவ்மில் குடியேறி, பயிற்சியைத் தொடங்கும் முன்னர், ஆலோசனைகள் வழங்குவது, கேள்விகள் கேட்பது மற்றும் ‘புது வாழ்வு’ தொடர்பான பிற விஷயங்களைத் தெளிவுபடுத்துவது போன்றவற்றில் எனது தோழர்கள் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதற்கான அனைத்து விபரங்களையும் நான் எடுத்துரைப்பேன்.”

அக்டோபர் 16ஆம் தேதி தேநீர் மற்றும் உணவு ஏற்பாடு செய்ய எரச், பெண்டு, காக்கா ஆகியோர் ‘கோட்நதி’க்கு அனுப்பப்பட்டனர்; அன்றிரவு ‘ஸுப்பா’ (SUPA) கிராமத்தில் அரசு பங்களா ஒன்றை முன்பதிவு செய்துவிட்டுத் திரும்பி வந்தனர்.

இதற்கிடையில், விடாமுயற்சியுடன் பணியாற்றிய பாதிரி, இப்போது மின்சார இயந்திரத்தை நிறுவி, மெஹராஸாத்தில் மின் கருவிகளைப் பொருத்தி முடித்தார். மின் நிலைய அதிகாரி 1949 அக்டோபர் 12 அன்று வந்து, உபகரணங்களை சோதித்து, அது திருப்திகரமாக இருப்பதாக அறிவித்து,

அவற்றைப் பயன்படுத்த அனுமதித்தார். அக்டோபர் 12ஆம் நாள் இரவு முதல்முறையாக மெஹராஸாத் மின் விளக்குகளுடன் பிரகாசித்தது. ஆனால் முதலில் சில கருவிகளைப் பொருத்த வேண்டும் என்று வலியுறுத்திய பாபா, மின் இயந்திரத்தின் எரிச்சலூட்டும் உரத்த சத்தம் குறித்து இரவு முழுவதும் புகார் செய்ததால், அடுத்த நாள் முதல் மின்சாரம் நிறுத்தப்பட்டது.

"ஓர் இரவு மட்டும் மெஹராஸாத் வெளிச்சத்தில் ஜொலித்துக் கொண்டிருந்தது, அடுத்த நாள் அது விரக்தியின் இருளில் வீழ்ந்தது! அன்பிற்குரியவர் தனது பாதங்களால் பல வருடங்களாக மிதித்த மண்ணை விட்டு வெளியேறுகிறார்!" என்று காலம் பறைசாற்றியது.

அக்டோபர் 13ஆம் தேதி மெஹராபாத்தில், பாபா தன்னுடன் செல்லவிருக்கும் ஒவ்வொரு தோழரின் கடமையைக் கோடிட்டுக் காட்டி, முன்கூட்டியே பெட்டி படுக்கைகளுடன் பயணம் செய்யும் மூன்று 'ஆமாம் குழு' உறுப்பினர்களுக்கு, கட்டளைகளை எழுத்துப்பலகை வழியாக எடுத்துரைத்தார்.

இரண்டரை மாத பயிற்சி காலம் மற்றும், 'புது வாழ்வின்' இதர அம்சங்களைப் பற்றியும், குறிப்பாக மெஹர் பாபாவின் 'முடிவு' குறித்தும் அவர் மீண்டும் விளக்கினார்.

'புது வாழ்வின்' நிபந்தனைகளுக்குக் கட்டுப்படுவதற்கு உங்களைத் தயார்படுத்திக் கொள்ள, நான் உங்கள் அனைவருக்கும் உதவுவேன்; ஆனால், ஏற்கனவே திட்டமிடப்பட்ட 'முடிவை' நிறைவேற்றுவதற்கு, நான் உங்களுக்கு உதவுவேன். இந்த உதவி அனைத்தும் 1950 ஜனவரி 1 அன்று முடிவுக்கு வரும்.

உங்கள் 'புது வாழ்வில்' இந்தத் தேதிக்குப் பின்னர், உங்களைத் தடுமாற்றமுறச் செய்யும் பல சந்தர்ப்பங்கள் உருவாகும், அதனால் - என்ன நினைப்பது, சொல்வது அல்லது செய்வது என்று தெரியாமல் திக்குமுக்காடச் செய்யும். இத்தகைய சந்தர்ப்பங்களை 'ஆதரவற்ற நிலை' (HELPLESSNESS) **என நீங்கள் தவறாகப் புரிந்து கொள்ளக் கூடாது; உங்கள் 'புது வாழ்வு' முழுவதும் - அதன் ஆரம்பம் முதல் இறுதி வரை - உண்மையில் ஆதரவற்ற வாழ்க்கையே தவிர வேறொன்றுமில்லை.**

வழக்கமான ஆதரவற்ற நிலைக்கும், புது வாழ்வில் ஒருவரைத் தடுமாற்றமுறச் செய்யும் சூழ்நிலைக்கும் இடையே உலகளவிலான வேறுபாடு உள்ளது. ஒருவர் எளிதாக வாழ்ந்து, வழக்கமான, முற்றிலும் ஆதரவற்ற ஒரு நல்ல வாழ்க்கை வாழ முடியும்; ஆனால், ஆதரவற்ற நிலையில், பொறுப்புகளைச் சரிவரச் செய்வதில் ஒருவர் மனமுடைந்து தவிக்கும்போது, ஒரு கணம் கூட நிம்மதியாக வாழ்வது என்பது கற்பனைக்கு எட்டாத ஒன்று.

ஓர் எளிய உதாரணத்தை எடுத்துக்கொள்ளுங்கள்: நான் உயிரைத் துறந்ததும், எனது உடலை மெஹராபாத்தில் அமைந்த எதிர்கால சமாதிக்குக் கொண்டு வருவது, 'புது வாழ்வில்' எனது தோழர்களின் பொறுப்பாகும் என்று நான் கூறினேன். இது மிகவும் எளிமையானதாகவும், முற்றிலும் சிக்கலற்றதாகவும் தோன்றுகிறது. இப்போது, நான் என் உடலைத் துறக்கும்போது, நாம் திபெத்தில் இருக்கிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள்; இந்தப் பொறுப்பை நிறைவேற்ற, நீங்கள் வாழும் ஆதரவற்ற வாழ்வில், உங்களிடம் காசு, பணம் எதுவும் இல்லாத நிலையில், உடலை மெஹராபாத்திற்கு கொண்டு வருவது சாத்தியமில்லை அப்படித்தானே? என் உடலைக் கொண்டு வர நீங்கள் சிறப்பு விமானத்தை வாடகைக்கு எடுக்க முடியாது; நீங்கள் என் உடலை பல நாட்கள் சிதைவின்றி பாதுகாக்க முடியாது; திபெத்தில் தந்தி அலுவலகம் எதுவும் இல்லாத பட்சத்தில், ஸரோஷைத் தொடர்புகொண்டு வழக்கமான வாகனங்களின் உதவியை நாட முடியாது, ஏனெனில் 'புது வாழ்வு' நிபந்தனைகள் அதற்கு இடம் தராது.

இதுவே உங்களைத் திக்குமுக்காடச் செய்யும் சூழ்நிலை (அதாவது, என்ன நினைப்பது, சொல்வது அல்லது செய்வது என்று தெரியாமல் திண்டாடுவீர்கள்).

உங்கள் முழுமையான ஆதரவற்ற நிலையிலும், பொறுப்புகளை நிறைவேற்றும் முழுச் சுமையிலும், நீங்கள் 'புது வாழ்வை'யும், நான் கூறிய 'அந்த முடிவை'யும் எதிர்கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்கள் பல உருவாகும்.

அவ்வேளையில், 'நிகழவிருக்கும் அனைத்தையும் நிறைவேற்றவும், இதுபோன்ற தேவையற்ற சந்தர்ப்பங்களைத் தவிர்க்கவும்' பாபா சில விஷயங்களை எடுத்துரைத்து, அவற்றைத் தனது தோழர்கள் "எல்லா காலங்களிலும் எல்லா சூழ்நிலைகளிலும் நினைவில் கொள்ள வேண்டும்" என்று கூறினார். இது முக்கியமாக அவரது மரணம், கடுமையான நோய் அல்லது தீவிரமான விபத்து ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும் என்பதைக் குறிக்கிறது.

'புது வாழ்வின்' அவசரநிலையை சந்திக்க மெஹர்ஜியிடம் ரூ 10,000 தனியாக வழங்கப்பட்டுள்ளது. மெஹர்ஜி, நரிமன், ஸரோஷ், ஜால் கேரவாலா ஆகியோருக்கு, பாபாவின் மறைவு போன்ற ஏதேனும் அசம்பாவிதம் ஏற்பட்டால், அனைத்து ஏற்பாடுகளையும் கவனித்துக்கொள்ளும் பொறுப்பு வழங்கப்பட்டது. "கடவுளின் விருப்பம் நிறைவேறும்" என்று கூறி முடித்தார் பாபா.

'ஆமாம் குழு'வில் பாபாவுடன் செல்லாத மூன்று நபர்களைப் பற்றி அவர் கூறினார், "மினூவிற்கு (கராஸ்) நான் அளித்த பணியை அவர்

திருப்திகரமாகச் செய்துள்ளார். எனவே, தனது இல்லத்தில் இருப்பதன் மூலம், அவர் இன்னும் 'ஆமாம் குழு'வில் ஒருவராகவே கருதப்படுகிறார். அவர் தனது இல்லத்தில் (கராச்சியில் இருந்தபோதிலும்) **அவரது தொழில் மற்றும் இதர கடமைகளை முன்பு போலவே மேற்கொள்வதால், சில நிபந்தனைகளுக்கு மறைமுகமாக கீழ்ப்படியுமாறு அவரிடம் கேட்டுக் கொண்டேன்.**

"பண்டோபாவின் பலவீனமான உடலால் புது வாழ்வின் நிபந்தனைகளைப் பின்பற்றுவது சாத்தியமில்லை. அதனால், நானே அவரை 'இல்லை குழு' உறுப்பினர்களுடன் வைத்துள்ளேன். பால் நாத்துவிற்கும் உடல்நிலை சரியில்லை, எனவே பழைய வாழ்க்கையைத் தொடரும் நோக்கத்தில் அவரைத் திருப்பி அனுப்பினேன். அவரது கடந்த கால வரலாற்றைக் கருத்தில் கொண்டு, அவர் 'ஆமாம் குழு'வில் ஒருவராக உள்ளார்."

சதாஷிவ் பாட்டீல் ஒரு நீதிமன்ற வழக்குக்காக ஆஜராக வேண்டியிருந்ததால், பாபா அவரைப் பூனாவிற்குச் செல்ல அனுமதித்து, அது முடிந்ததும் அக்டோபர் **21**ஆம் நாள் பெல்காவ்மில் அவருடன் வந்து இணையுமாறு அறிவுறுத்தினார். லோனவாலாவில் டாக்டர் கனியின் சொத்து விவகாரங்கள் தீர்க்கப்படாத நிலையில் இருந்தாலும், டாக்டர் கனி அவருடன் செல்வதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் பாபா செய்தார்.

அன்று காலை, மெஹராபாத்தில் இருந்தவர்களுடன் புகைப்படம் எடுக்க பாபா ஒப்புக்கொண்டார், அதை, 'பூபால் நுர்ஸூ' (POOPAL NURSOO) என்ற உள்ளூர் புகைப்படக்காரர் படம் பிடித்தார். அன்று பிற்பகல் **3:00** மணிக்கு, பாபா, ஒன்றரை மணி நேரம் கிரிக்கெட் போட்டியில் பங்கெடுத்தார்.

ராம்ஜூ, டாக்டர் கனி, காக் ஸாஹேப் ஆகியோர் பாபாவுடன் புறப்படுவதற்கு முன்பு மண்டலிக்கு ஒரு சிறப்பு உணவு வழங்க வேண்டும் என்று பரிந்துரைத்தனர், அதற்கும் பாபா இணக்கம் தெரிவித்தார்.

அவர்கள் அசைவ உணவை விரும்பிக் கேட்டதால், முதல்முறையாக, மெஹராபாத்தில் மாமிசம் பரிமாறுவதற்கு பாபா ஒப்புதல் அளித்தார். உணவு தயாரானதும், பாபா எங்கே அமர்ந்து உண்ண வேண்டும் என்று கேட்டபோது, பெரிய மண்டபம் பரிந்துரைக்கப்பட்டது. டாக்கே.ஃபால்கர், ஆச்சாரமான பிராமண குடும்பத்தைச் சார்ந்த அவர் என்ன நினைக்கிறார் என்று பாபா கேட்டதற்கு, "இந்த மண்டபம் அவதார புருஷரின் புனித இருப்பிடமாகும்; இதுவரை, உங்கள் இருக்கைக்கு அருகில் அசைவ உணவு பரிமாறப்பட்டதில்லை. எனவே, எனது கருத்துப்படி, அங்கு எடுத்துச் செல்லப்படுவதில் எனக்கு உடன்பாடு இல்லை" என்று அவர் கூறினார்.

ஒருவரின் கருத்து வேறுபாட்டினால் குழுவை பிரிப்பது நல்லதல்ல என்று பிற அனைவரும் எதிர்ப்புத் தெரிவித்தனர். அப்போது பாபா இவ்வாறு பதிலளித்தார், **"என்னைப் பொறுத்தவரை ஒரு நபரின் கருத்து கூட முக்கியமானது. நீங்கள் அனைவரும் ஒருபுறம் இருக்கிறீர்கள், டாக்கே மறுபுறம் இருக்கிறார்; அதனால், நான் அவருக்குப் பக்கபலமாக இருந்து, மண்டபத்தின் உள்ளே சாப்பிட வேண்டாம் என்று கூறுகிறேன்."**

இதன் விளைவாக, மாலை 6:30 மணியளவில், அனைவரும் காக்குபாயின் குடிலில் உணவை உண்ண வேண்டியிருந்தது, அதே நேரத்தில் டாக்கே ஃபால்கர், காளேமாமா (அவரும் ஒரு பிராமணர்) இருவரும் இரவு உணவாக இனிப்பு பண்டத்தை அவர்கள் மண்டபத்தில் அமர்ந்து உண்டனர்.

பாபா உணவு பரிமாறும் போது, மது, விஸ்கி, பிராந்தி ஆகியவற்றை ஸரோஷ் எடுத்து வர அனுமதித்ததைப் பார்த்து, டாக்கே ஃபால்கர் 'பாபா மற்றும் அவரது தோழர்களுக்குப் பிரியாவிடை' என்ற நகைச்சுவை உரையை வழங்கியதை, பாபா மிகவும் ரசித்தார். ஆதி சீனியர், ராம்ஜூ இருவரும் மதுபானத்தை கோப்பை கோப்பையாக அருந்திய வேளையில், இதர மண்டலியும் சுதந்திரமாகப் பங்கெடுத்தனர். ஆனால் பாபா, ஃபெராமை அணுகியபோது, **"இதற்கு மேல் கேட்காதீர்கள்"** என்று சுட்டிக்காட்டி, அவரது கோப்பையில் இரண்டு துளிகளை மட்டும் ஊற்றினார். அவரைக் கேலி செய்யும் விதத்தில், ஸெயிலர், ஃபெராமின் கையை நீட்டி, மேலும் கேட்கும்படி அவரை வற்புறுத்தினார். ஃபெராம் கோப்பையை நீட்டியும், பாபா அவரைக் கண்டுகொள்ளாமல் இருந்தார். கேலியும் கிண்டலும் செய்து, சிரித்து மகிழ்ந்த போதிலும், உணவை உண்ணுவதற்கு முன்னர், அதைப் பற்றிய வாக்குவாதம் ஏற்பட்டதால் அவர்கள் உண்மையில் மாமிச உணவை உண்ண அமர்ந்த நேரத்தில், மண்டலியின் பொது மனநிலை சரியாக இல்லை. இந்த '**இறுதி விருந்து**' கூட ஓர் இனிமையான சூழலில் நடத்த முடியாமலாயிற்று; அதுவும் பாபாவின் விருப்பம். அவர் தனது நெருங்கிய சீடர்களை உண்ணவும் அருந்தவும் அனுமதித்தார், ஆனால் அதே நேரத்தில் பதட்டமான சூழ்நிலைகளை உருவாக்கியதால் ஒருவரும் அதில் உண்மையான மகிழ்ச்சியைக் காண முடியவில்லை.

மேலும், மெஹராபாத்தில் பெண்டு வெகுவாக முயன்று நிலங்களையும் விலங்குகளையும் விற்பனை செய்ய முடிந்தது, ஆனால் பணியின் சிரமத்தால், அவர் ஜூரம் மற்றும் தொண்டை புண் ஆகியவற்றால் மிகவும் சிரமப்பட்டார்.

1949 அக்டோபர் 14ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை, அலி ஷா, முஹமது இருவருக்கும் சவரம் செய்து, நீராட்டி, ஆடை அணிவித்து, பாபா, தனது மஸ்த் பணியை நிறைவு செய்யும் நிகழ்வின் அடையாளமாக, மெஹராபாத் மண்டலி மெஹராஸாத்திற்கு அழைக்கப்பட்டனர்.

மெஹராபாத்தில், இப்போது சிதுவால் பராமரிக்கப்பட்டு வந்த இரண்டு மஸ்துகளையும் ஸெயிலர், குஸ்தாஜி இருவரும் மெஹராஸாத்திற்கு அழைத்து வருவது வழக்கம். இன்றைய தினம், முதலில் அலி ஷாவையும் தொடர்ந்து முஹமது மஸ்தையும் மொட்டையடித்து, நீராட்டி, ஐந்து ஏழைகளையும் நீராட்டிய பின்பு பாபாவும் நீராடினார்.

இந்த அடையாள நிகழ்வுக்குப் பிறகு, முஹமது மஸ்த் மற்றும் பெரும்பாலான மண்டலி மெஹராபாத் திரும்பிச் சென்றனர். நரிமன், மெஹர்ஜி, ஜால்பாய், மினூ ஆகியோர் அறிவுறுத்தியபடி அன்று மதியம் விடைபெற்றனர். சொத்து பத்திரங்களில் இருந்த சில பெண்மணிகளின் கையெழுத்துக்களை சாட்சியாளராகப் பார்வையிட ஆதி சீனியர், ராம்ஜூ இருவரும் ஒரு மாஜிஸ்திரேட்டை அழைத்து வந்தனர். இந்த அதிகாரப்பூர்வமான பணி முடிந்ததும், அலி ஷாவும், குஸ்தாஜியும் இதர மண்டலியுடன் மெஹராபாத் திரும்பிச் சென்றனர்.

பாபாவுடன் மெஹராபாத்திலிருந்து புறப்பட்டுச் செல்ல இருந்தவர்கள் உற்சாகமாகத் தத்தமது பெட்டி படுக்கைகள், பொட்டலங்களைத் தயார் செய்து கொண்டிருந்த அதே வேளையில், மெஹராபாத்தில் தங்க இருந்தவர்கள் அமைதியாக அழுது கண்கலங்கினர். பாபாவிற்கு மிகவும் நெருக்கமானவர்கள், பொதுவாக, வேதனை மற்றும் மனச்சோர்வின் மேகத்தால் சூழப்பட்டிருந்தனர்; தங்கள் பிரியமான பாபா அவர்களுடன் இல்லாத எதிர்காலம் குறித்து ஐயப்பாட்டுடன் காணப்பட்டனர்.



மேல் வரிசை: முரளி காளே (MURLI KALE), பைதூல் (BAIDUL), எரச் (ERUCH), சகன் (CHHAGAN), மினூ கராஸ் (MINOO KHARAS), ஆதி சீனியர் (ADI SENIOR), பெண்டு (PENDU), ஸெயிலர் (SAILOR), டாக்டர் டான்கின் (DR. DONKIN), பாதிரி (PADRI), காளேமாமா (KALEMAMA), தத்து மெஹந்தர்கே (DATTU MEHENDARGE)

இடை வரிசை: டாக்டர் நீலு (DR. NILU), ஜால் (JAL), காக்கா (KAKA), ஆதி ஜூனியர் (ADI JUNIOR), குஸ்தாஜி (GUSTADJI), பாபா (BABA), டாக்டர் கனி (DR. GHANI), நரிமன் (NARIMAN), ஸரோஷ் (SAROSH), மெஹர்ஜி (MEHERJEE), காக் ஸாஹேப் (KHAK SAHEB)

முன் வரிசை: ராம்ஜூ (RAMJOO), ஸவக் கொத்வால் (SAVAK KOTWAL), பாபாதாஸ் (BABADAS), டாக்கே (DHAKE), அலோபா (ALOBA), பால் தம்பட் (BAL TAMBAT), விஷ்ணு (VISHNU)

புது வாழ்வு **(NEW LIFE) - 1949**



அஹமதுநகர் (AHMEDNAGAR), பெல்காவ்ம் (BELGAUM), பெனாரஸ் (BENARES), சாரநாத் (SARNATH), ஹரித்வார் (HARIDWAR)

பெல்காவ்ம் - சத்தியநாசம் ஆரம்பம்

(Belgaum - Satyanashi Begins)

1949ஆம் ஆண்டு அக்டோபர் 15 சனிக்கிழமை காலை, பாபா, மெஹராபாத்திற்கு இறுதி விஜயம் செய்து, அவருடன் செல்ல இருப்பவர்கள் ஒவ்வொருவரும் எடுத்துச் செல்லத் தேவையான பயண உபகரண பெட்டியை ஆய்வு செய்தார்.

'புது வாழ்வில்' பாபாவுடன் பின்வரும் நான்கு பெண்மணிகளும், பலதரப்பட்ட வயதைச் சார்ந்த பதினாறு ஆண் தோழர்களும் செல்வது குறித்து முடிவெடுக்கப்பட்டது. அப்போது பாபாவிற்கு வயது 55.

பெண்மணிகள்:

மெஹரா, 42	மணி, 31
மெஹரு, 22	கோஹெர், 33

ஆண் தோழர்கள்:

ஆதி சீனியர், 45	அலி அக்பர் (அலோபா), 33
அண்ணா 104, 60	பாபாதாஸ், 39 வயதைக் கடந்தவர்
பைதூல், 59	தௌலத் ஸிங், 59
டாக்டர் டான்கின், 37	எரச், 33
டாக்டர் கனி, 56	குஸ்தாஜி, 59
காக்கா பாரியா, 58	முரளி காளே, 30
டாக்டர் நீலு, 45	பெண்டு, 45
சதாஷிவ் பாட்டீல், 60	விஷ்ணு, 45

ஆண் தோழர்களில் இருவர், அலோபா மற்றும் முரளி, முன்னாள் மெஹர் ஆசிரம மாணவர்கள். ஆசிரமம் மூடப்பட்ட பிறகு, முரளி மண்டலி உறுப்பினர்களில் ஒருவரானார். அவ்வப்போது மும்பையிலிருந்து வந்து செல்வதை வழக்கமாகக் கொண்ட அலோபா, சமீபத்தில் நிரந்தரமாக மெஹராபாத்தில் தங்க வந்தார்.

மற்றுமொரு மெஹர் ஆசிரம சிறுவன், தத்து மெஹந்தர்கே, அஹமதுநகர் குஷ்ரு குவார்ட்டர்ஸில் ஆதி சீனியர் அலுவலகத்தில் பணிபுரிந்து வந்தார். 'புது வாழ்வில்' ஆதி பங்கெடுத்ததால், தத்து அலுவலக பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். ஆதியின் அலுவலகத்தில் வாமன் யஷ்வந்த் படாலே (WAMAN YASHWANT PADALE) எனும் மற்றும் ஓர் இளைஞன் பணிபுரிந்து கொண்டிருந்தான். பத்தொன்பது வயதான வாமன், ஆதியின் பணிகளைச் செய்து, மெஹராஸாத்திற்குச் செய்திகளை வழங்குவதும், ஆதி இல்லாத நேரத்தில், வாமன், தத்து இருவரும் அஹமதுநகரில் மெஹர் பாபாவின் முக்கிய இணைப்புகளாகவும் இருந்தனர்.

மாதோ கவானே (MADHO GHAVANE) என்பவரை மெஹராஸாத்தின் பராமரிப்பாளராக நரிமன் நியமித்திருந்தார். கஸ்பா பேட் நாட்களில் சிறுவனாக இருந்த மாதோ, பாபாவின் மதுபான கடையில் பணியாற்றியதைத் தொடர்ந்து, மன்ஸில்-எ-மீமிலும் உடனிருந்தார்.

கீழ் மெஹராபாத்தில் சிது, அவரது மனைவி ராதா, காளே மாமா, விஷ்ணுவின் தாயார் காக்குபாய், பாலா தம்பத், ஸவக் கொத்வால், ஜங்க்ளே மற்றும் அவரது குடும்பத்தினர், மஸ்துகள் அலி ஷா, முஹமது ஆகியோருடன் தங்கியிருந்தனர். ஜமதார், அவரது மனைவி பகுபாய் (BHAGUBAI) இருவரும் அரன்காவ்ம் கிராமத்திற்கு அருகிலமைந்த குடும்ப குடியிருப்பில் வாழ்ந்து வந்தனர். மாருதி பாட்டீலின் மகள் தாரா (TARA) மேல்மலையில் வாழ்ந்த பெண் மண்டலிக்காகப் பணிபுரிந்து வந்த வேளையில், அவர் தனது தந்தையுடன் கிராமத்தில் வாழ்ந்து வந்தார். மேல்மலையில் ஏற்கனவே குறிப்பிட்டபடி, கைக்கோபாத்தின் குடும்பமும் மன்ஸாரியும் இருந்தனர்.

பாதிரி மெஹராபாத்தில் தங்கி இருப்பதை பாபா அனுமதிக்கவில்லை, வாழத் தேவையான பணமும் வழங்கவில்லை. எனவே பாதிரி, ஸரோஷிடமிருந்து கடனாக வாங்கிய தொகையில், மெஹராபாத்திற்கு அருகில் ஒரு சிறிய நிலத்தை தன்வசப்படுத்தி, 1947இல் அங்குக் கட்டப்பட்ட மாவு ஆலையில் பணிபுரிந்து, அதிலிருந்து வரும் வருமானத்தை 'புது வாழ்வில்' தனக்காகப் பயன்படுத்தினார்.

1949 அக்டோபர் 15ஆம் நாள் இரவுக்குள், அவருடன் 'புது வாழ்வில்' செல்லாத அனைவரும் மெஹராபாத்தை விட்டு வெளியேறுமாறு உத்தரவிட்டு, பாபா, அன்று மதியம் மெஹராஸாத் திரும்பிச் சென்றார். புறப்படுவதற்கு முன்னர், அவர்களிடம் பாபா கூறியதாவது: **"எதற்கும் கவலைப்பட வேண்டாம். நீங்கள் அனைவரும் என்னை உண்மையாக நேசிக்கும் வரை, தற்போதைய மனித தலைமுறையில் நீங்கள் அனைவரும் மிகவும் அதிர்ஷ்டசாலிகள். எப்பொழுதும் என்னை நேசித்து, என்னில் உறுதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருங்கள்."**

1949 அக்டோபர் 15 அன்று, நரிமன் மற்றும் மெஹர்ஜியின் கார்களில், ரானோ, கிட்டி, கோர்ஷெத், ஸூனாமாசி ஆகியோரை மினு கராஸுடன் பாபா பூனாவிற்கு அனுப்பி வைத்தார்; அங்கிருந்து அவர்கள் மும்பைக்குப் புறப்பட்டுச் சென்றனர். இந்த நேரத்தில் கேட்டி, நாஜா இருவரும் மெஹராபாத்திலிருந்து வெளியேறினர். பாபா அவர்களுடன் மலையிலிருந்து இறங்கி வருகையில், "**எல்லாம் முடிந்தது**," என முகம் மலர்ந்த புன்னகையுடன் குறிப்பிட்டார், "**நான் இன்று மிகவும் மகிழ்ச்சியாக உணர்கிறேன்; நான் மிகவும் சுதந்திரமாக உணர்கிறேன். ஒரு 'புது வாழ்வு' ஆரம்பமாகிறது.**"

கராச்சிக்குத் திரும்புவதற்கு முன்பு, பைதூலின் குடும்பம் பிந்த்ரா ஹவுஸில் பாதுகாப்பாகக் குடியமர்த்தப்படுவதை மினூ ஊர்ஜிதம் செய்தார்.

பாபா, மெஹராபாத்தில் அனைவரிடமிருந்தும் விடைபெறும் வேளையில், வானம் மேக மூட்டத்துடன் மழை பொழியத் தொடங்கியது. காலம் இதை இவ்வாறு குறிப்பிட்டது: "அவர்களின் வேதனையின் அழுகைக் குரலுக்கு வானுலகமே செவிசாய்ப்பதுபோலத் தோன்றியது; அவர்கள் அடைந்த வேதனைக்கு அனுதாபத்தை வெளிப்படுத்தும் விதத்தில், அழுது புலம்பி, கண்ணீர் சிந்தியது. வானுலகம் அந்தக் காட்சியைக் காண முடியாமல் பரிதவித்தது. பாபாவின் அன்பர்கள் அந்தப் பிரிவை உடல் ரீதியாக எதிர்கொண்டனர்; தமது அன்பிற்குரியவரைப் பிரிவதால், அவர்களின் இதயங்கள் துக்கத்தில் ஆழ்ந்தன. பாபாவின் கூற்றுப்படி, இந்த உடல் ரீதியான பிரிவு நிரந்தர பிரிவாக இருந்ததால், ஒவ்வொருவரும் தனது இதயம் உடைந்து போவது போல் உணர்ந்தனர்."

அன்று மாலை ஏழு மணிக்கு அனைத்து 'ஆமாம் குழு' தோழர்களும் ஓய்வு பெற வேண்டும் என்று பாபா அறிவுறுத்தியிருந்தார்; ஆனால், அவ்வாறு செய்வதற்கு முன்னர், அனைவரும் சரக்கு வாகனத்தில் ஏற்றுவதற்கு தங்கள் பெட்டி படுக்கைகளை, குறிப்பிட்ட இடத்தில் தயாராக வைக்க வேண்டும். அதிகாலை **2:00** மணிக்கு எழுந்து, நீராடி, 'புது வாழ்வின்' மேலங்கியை அணியாமல், சாதாரண உடையை உடுத்திக்கொள்ளுமாறு அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது (அது குழுவின் மீது மக்களின் தேவையற்ற கவனத்தை ஈர்க்கும்). பெல்காவ்ம் வந்த பின்னர் அவர்களின் சாதாரண உடைகளைக் களைந்து அங்கிகளை அணியுமாறு அறிவுறுத்தப்பட்டது.

காலம் தொடர்ந்து விவரித்தது: "இரவு முழுவதும், வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. 'புது வாழ்வின்' மேளம் முழங்க, வானம் மிகையாகக் கண்ணீர் சிந்தியது. மெஹராபாத் மற்றும் பாபாவின் பிரியமான அன்பர்களின் கண்ணீர், தேவதைகளின் இதயங்களையும் நெகிழச் செய்தது! மெஹராபாத்தின் ஆழமான அன்பை அனுபவித்த இந்தத் தேவதைகளும், அவதார புருஷரின் அருகாமையில் தங்கள் வாழ்க்கையைக் கழிக்க ஆர்வமாக இருந்தனர், ஏனெனில் இத்தகைய தெய்வீக அன்பை, பௌதீக உடலில் பௌதீக தளத்தில் மட்டுமே அனுபவிக்க முடியும்."

முதலில், தோழர்கள் மெஹராபாத்திலிருந்து அஹமதுநகர் ரயில் சந்திப்பை நோக்கி, தங்கள் தோள் பைகளைச் சுமந்த வண்ணம் நடந்து செல்ல வேண்டுமென அறிவுறுத்தப்பட்டனர். ஆனால், மழை காரணமாக ஸரோஷ் ஏற்பாடு செய்த பேருந்தில் அவர்கள் அங்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர். தோழர்கள் அனைவரும் அதிகாலையில் எழுந்து, நீராடி, மூன்று மணிக்கு தேநீர் அருந்திவிட்டு, **1949** அக்டோபர் **16** ஞாயிற்றுக்கிழமை அன்று அதிகாலை **4:15** மணிக்கு ரயில் நிலைய சந்திப்பைச் சென்றடைந்தனர்.

இதற்கிடையில், மெஹராஸாத்தில், பாபா, பெண்மணிகளை இரண்டு மணிக்கு எழுப்பி, கடைசி நிமிடத்தில் மூட்டை முடிச்சுகளை சரி பார்த்து, தேநீர் அருந்திய பின்னர், அவர்கள் அதிகாலை 4:15 மணிக்கு, காக்காவுடன் எரச் ஓட்டிச் சென்ற ப்யூக் (BUICK) காரில் பயணத்தைத் தொடங்கினர். ஸரோஷுடன் இன்னும் சிலர் பாபாவிடமிருந்து பிரியாவிடை பெறுவதற்கு அனுமதி கோரியிருந்தனர், ஆனால் ஸரோஷ், ஆதி ஜுனியர், ஸவக் தமானியா, பாதிரி ஆகியோரை மட்டும் பாபா அனுமதித்தார். (பாதிரி, ப்யூக் - BUICK காரைத் திரும்ப ஓட்டிச் செல்ல வேண்டும்.) ஸரோஷ், ஆதி சீனியரை அழைத்துச் சென்று, பாபாவும் பெண்மணிகளும் வரும் வரைக் காத்திருந்தனர். வானம் தனது துக்கத்தை வெளிப்படுத்திக்கொண்டே இருக்க, சாலை முழுவதும் மழையால் சேறாக இருந்தது; மழை மேலும் அதிகமாகப் பெய்யத் தொடங்கியது.

காலம் இதயபூர்வமான பிரார்த்தனை ஒன்றை வழங்கியது: “பிரியமானவரே! நீங்கள் பிரிந்து செல்ல விரும்பினால், நீங்கள் - ஓரளவு ஆறுதல் அளிக்கும் விதத்தில் புறப்படலாம்! எனது கண்ணீரில் நீங்களாகவே நனையாதீர்கள்! உங்கள் அன்பர்களின் அவலத்தைப் பார்த்த பின்னர், எனது கண்ணீரை என்னால் தடுக்க முடியவில்லை. நான் உதவியற்றவனாக இருந்தாலும், பிரியமான இறைவனே, மழையில் நனைய வேண்டாம், எனது பிரார்த்தனைக்கு செவி மடுக்க வேண்டுகிறேன்; நான் உங்களைக் கெஞ்சிக் கேட்கிறேன்.”

ரயில் சந்திப்பின் அருகே காரிலிருந்து பாபாவும் பெண்மணிகளும் இறங்கினர். தொடர்ந்து பலத்த மழை பொழியவே, ஸரோஷ் காரை பாபாவுடன் வைத்திருக்குமாறு இறைஞ்சினார்: “மழை கடுமையாக உள்ளது, மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது; நீங்கள் அனுமதித்தால், நான் உங்களை மெதுவாகக் காரில் பின்தொடர்வேன், மழை அதிகமாக இருந்தால், நீங்கள் அதைப் பயன்படுத்தலாம்” என்று ஸரோஷ் கூறினார்.

அதேபோல், ஆதி ஜுனியரும், பாபா, தனது காரைப் பயன்படுத்துமாறு கேட்டுக்கொண்டார்; பாதிரியுடன் ஸரோஷின் காரில் திரும்பிச் சென்று, அதைக் கொண்டுவர பாபா அவர்களை அனுமதித்தார். ஸரோஷ், ஆதி ஜுனியர், ஸவக் தமானியா ஆகியோரிடம் பாபா மேலும் சில வார்த்தைகள் பேசி, பின்னர் அவர்களைத் திருப்பி அனுப்பினார். வெளியேறும் வேளையில் அவர்களால் கண்ணீரை அடக்க முடியவில்லை.

பெண்மணிகளுக்குப் பின்னால் ஒரு ∴பர்லாங் இடைவெளியைக் கடைப்பிடிக்குமாறு பார்த்துக்கொள்ள, பாபா இதர தோழர்களுக்கு அறிவுறுத்தினார். பயணத்தைத் தொடங்குவதற்கு முன்னர் ஒரு நிமிடம் அமைதியாக இருந்து, பின்பு, பணிவு மற்றும் மரியாதையின் நிமித்தம் முதலில் பூமியையும் பின்னர் அவர்களின் நெற்றியையும் தொடுமாறு அவர்

கேட்டுக் கொண்டார். பாபாவே முதலில் அவ்வாறு செய்தார். தொடர்ந்து, பாபா தனது கைகளை உயர்த்தி, இந்தப் பிரார்த்தனையை உச்சரிக்குமாறு தோழர்களிடம் கேட்டுக் கொண்டார்: **"கடவுளே! இந்தப் புது வாழ்வை வெற்றியடையச் செய்து, அதை அனைவரின் நித்திய பேரின்பமாக மாற்றுங்கள்!"**

அதுவரை அனைவரும் தலைக்கு மேல் தமது தோள்பைகளை சுமந்த வண்ணம் நின்று கொண்டிருந்தனர். பிரார்த்தனை நிறைவடைந்த அடுத்த கணமே ஊர்வலம் ஆரம்பமானது. காக்கா, பெண்டு, டாக்டர் நீலு மூவரும் சரக்கு வண்டியில் அவர்களுக்கு முன்னால் சென்றனர். நடந்து செல்லும் வேளையில், பாபா தோழர்களிடம், **"ஒரு நிமிட மௌன நேரத்தில் நான் என்ன வாக்குறுதி எடுத்துக்கொண்டேன் என்று உங்களில் எவரேனும் சொல்ல முடியுமா?"** என்று கேட்டார்.

அனைவரும் யூகித்தனர், ஆனால் எவரும் சரியாக பதிலளிக்கவில்லை. பாபா, **"இது ஒரு ரகசியம், அதை வெளியே கூற இயலாது"** என்று குறிப்பிட்டார்.

அதிக மழை பொழிந்தது, ஆனால் இந்தத் துளிகள் தோழர்களுக்கு இதமாக இருந்தது. ஒரு மைல் தூரம் நடந்த பிறகு, பாபா ஏழு மைல் தொலைவில் உள்ள 'சாஸ்' (CHAS) கிராமத்திற்குக் காரில் செல்ல முடிவு செய்தபோது, பாபாவையும் பெண்மணிகளையும் பாதிரி அதில் ஓட்டிச்சென்றார். ஆண் தோழர்கள் ஆதி ஜூனியருக்காக காத்திருந்து, அவர் தனது காரில் அவர்களை அழைத்துச் செல்ல இரண்டு பயணங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது. ஆனால் அவர்கள் சாஸ் வந்தபோது, தங்குமிடம் சேறும் சகதியும் சூழ்ந்திருந்ததைக் கண்டு, அங்கே நிறுத்தாமல் நேராக மேலும் எட்டு மைல் தொலைவில் அமைந்த 'ஸுப்பா' (SUPA) கிராமத்தை அன்று காலை ஆறு மணிக்கு வந்தடைந்து அரசு பங்களாவில் தங்கினர். அங்கிருந்து பாதிரி, ஆதி ஜூனியர் இருவரையும் பாபா இரண்டு கார்களுடன் திருப்பி அனுப்பினார். தோழர்கள் கேரேஜிலும், பெண்மணிகள் பங்களாவிலும் தங்கினர்.

காக்கா தேநீர் தயார் செய்தார். ஒரு கட்டத்தில், பாபா இவ்வாறு குறிப்பிட்டார், **"புது வாழ்வின் ஆரம்பம் சிறப்பாக உள்ளது, நான் மிக்க மகிழ்ச்சியாக இருக்கிறேன்!"**

தேநீருக்குப் பிறகு, பாபா தனது தோழர்களுடன் கேரேஜில் அமர்ந்து புது வாழ்வின் நான்கு நிலைகளை விளக்கினார்:

- **முதல் பத்து நாட்கள் ஓய்வின் இடைவெளியாக இருக்கும்;**
- **இரண்டாவது, பெல்காவ்ம் நகரம் புது வாழ்வின் பயிற்சி மையமாகத் திகழும்; மூன்றாவது, உண்மையில் புது வாழ்வில் நுழைவதற்கு முன்பு பத்து நாட்கள் ஒரு வகையான வெற்றிடமாகத் தோன்றும்;**

- **நான்காவது கட்டத்தில், 1950 ஜனவரி 1 முதல், 'புது வாழ்வு' தொடங்கும்; இது, 'தெய்வங்கள் பொறாமைப்படும் அளவிற்கு 100 சதவிகித நம்பிக்கையின்மை** (HOPELESSNESS) **மற்றும் உதவியற்ற தன்மையால்** (HELPLESSNESS) **வகைப்படுத்தப்படும்'** என்று பாபா அறிவித்தார்.

பாபா மீண்டும் முழுமையான கீழ்ப்படிதலுக்கு முக்கியத்துவம் கொடுத்து, **"நான் உங்களிடம் ஒரே முறை காரில் பயணம் செய்யச் சொன்னேன்; நீங்கள் ஏன் எனக்குக் கீழ்ப்படியவில்லை?"** என்று கேட்டார். ஆதி ஜூனியர் அனைவரையும் ஒரே பயணத்தில் ஏற்றிச் செல்வது விவேகமற்றது என்று கருதியதால் மறைமுகமாக அவர் தவறிழைத்திருப்பதாகவும் அவரிடம் கூறப்பட்டது.

பாபா அவர்களை மன்னித்து, **"இனிமேல், எல்லாம் தெளிவாகவும், வெளிப்படையாகவும், உண்மையாகவும் இருக்க வேண்டும். எதையும் இரகசியமாக மறைக்கக் கூடாது. அனைவரும் சமம், அனைவரையும் சமமாக பாவித்து நடந்துகொள்ள முயற்சிக்க வேண்டும். சூழ்நிலைகளும், விளைவுகளும் எதுவாக இருந்தாலும் 100 சதவீதம் நேர்மையாக இருந்து, உண்மையை மட்டுமே பேச வேண்டும்.**

"எல்லா சூழ்நிலைகளிலும் நினைவில் கொள்ள வேண்டிய மிக முக்கியமான விஷயம் என்னவெனில், ஒவ்வொருவரும் குதூகலத்துடன் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். விரக்தி, எரிச்சல், வெறுப்பு ஆகியவற்றின் உச்சாடனம் உங்களைத் தாக்கும், ஆனால் அதை எள்ளளவேனும் உங்கள் முகத்தில் காட்டாமல் இருக்க முயற்சி செய்ய வேண்டும். கோபம் வரலாம், ஆனால் நீங்கள் அதை வெளிப்படுத்தக்கூடாது."

பாபா தனது தோழர்களுக்குத் தத்தமது கடமைகளை வழங்கினார்: காக்கா, பைதூல் இருவரும் உணவு தயார் செய்ய சமையல் பணியில் ஈடுபடவேண்டும்; அலோபாவும் முரளியும் பாத்திர பண்டங்களை சுத்தம் செய்ய வேண்டும். டான், நீலு, ஆதி சீனியர் மற்றும் பலர் ஏறக்குறைய ஒரு ஃபர்லாங் தூரத்திலிருந்து தண்ணீர் கொண்டு வர வேண்டும். பிற அனைவரும் காய்கறிகளை சுத்தம் செய்து வெட்டும்படி அறிவுறுத்தப்பட்டனர். பாபாதாஸுக்கு முக்கியமான ஆவணங்கள் மற்றும் பாபாவிற்கான கடிதங்கள் அடங்கிய இரண்டு சிறிய பெட்டிகளை எப்பொழுதும் அவருடன் பாதுகாப்பாக வைத்திருப்பதைத் தவிர, வேறு எந்த வேலையும் வழங்கப்படவில்லை. நீராடுவதற்காக ஒவ்வொருவரும் அவரவருக்குத் தேவையான தண்ணீரை எடுத்து வர வேண்டும். அனுதினமும் நீராடுவது கட்டாயமாக்கப்பட்டது, பொதுவாக மிகவும் சோம்பல்தனத்துடன் காணப்படும் டாக்டர் கனி கிணற்றிலிருந்து தண்ணீரை எடுத்து வந்தபோது பாபாவும் தோழர்களும் மிகவும் மகிழ்ச்சியடைந்தனர்.

டாக்டர் கனி சில வேடிக்கையான சில்மிஷங்களில் ஈடுபட்டார், அனைவரையும் மகிழ்விப்பதற்காக முகம் சுளிப்பதும் தண்ணீர் எடுத்து வரும்போது முணுமுணுப்பதையும் வழக்கமாகக் கொண்டார்: “கடவுளே, இந்த கிணறு எவ்வளவு ஆழமானது!... கடவுளே, எனக்கு உதவுங்கள்! பாபாவின் கட்டளைப்படி, குளிராக இருந்தாலும் நான் இன்று குளிக்க வேண்டும்! அல்லா, தயவுசெய்து எனக்கு உதவுங்கள்!” ஒரு முறை, கனி மூச்சுத் திணறி, படபடத்தபோது, பாபா அவரிடம் ஓடி வந்து, வாளியை எடுக்க உதவினார்.

அன்று காலை ஸுப்பா கிராமத்தில் சரக்கு வண்டியிலிருந்து இறங்கும் போது, டாக்டர் நீலு தடுக்கி கீழே விழுந்தார், ஆனால் காயம் எதுவும் ஏற்படவில்லை. இதற்கு நன்றி செலுத்தும் விதத்தில், பத்து ரூபாய் மதிப்புள்ள ஜிலேபிகளை விநியோகிக்க பாபா அனுமதித்தார். எந்த வகையான இனிப்பு வகைகளையும் மனமார விரும்பி உண்ணும் டாக்டர் நீலுவும், முரளியும் அவற்றை வாங்கிவர நகருக்குச் சென்றனர். ஆனால் அவர்கள் ஏமாற்றத்தில் வெறுங்கையுடன் திரும்பி வந்தனர், ஏனெனில் இவ்வளவு குறுகிய காலத்தில், போதுமான அளவு அப்போது தயார் செய்த இனிப்புகள் கிடைக்கவில்லை. இருப்பினும், இந்த விருந்து ரத்து செய்யப்படாமல் குழு, ஸிரூர் (SIRUR) கிராமத்தைச் சென்றடையும் வரை ஒத்திவைக்கப்பட்டது.

மழை காரணமாக அவர்கள் முதலில் திட்டமிட்டபடி சாஸ் கிராமத்தில் நிற்காததால், அசல் அட்டவணையைக் கடைப்பிடிக்கும் நோக்கத்தில் பாபா, அதிக நாட்களை ஸுப்பாவில் கழிக்க முடிவு செய்தார்.

பாபா மிகவும் மகிழ்ச்சியான மனநிலையில் காணப்பட்டார், மேலும் அவர் தோழர்களை அணுகும் போதெல்லாம் சாக்லேட் அல்லது உலர்ந்த பழங்களை விநியோகித்து, அவர்களுடன் ஒன்றாக இருந்தார்; மேலும் **27** ஆண்டுகளுக்கு முன்னர் **1922**இல் மன்ஸில்-எ-மீம் நாட்களை அனுபவித்தவர்கள், அவர்கள் மத்தியில் மனித உருவில் வாழும் இறைவனின் அதே சூழ்நிலையை அனுபவித்தனர்.

‘எதற்கும் அஞ்ச வேண்டாம்’ என்று பாபா மண்டலியை ஊக்குவித்தார். ஆனால், ஆதி சீனியர் போன்ற சிலர், புது வாழ்வுக்கு முன்பு சில மாதங்கள் மிகப்பெரிய மன அழுத்தத்திற்கு உள்ளாயினர். பல தனிப்பட்ட அமைப்புகள் கலைக்கப்பட்டது மட்டுமின்றி, வேறுவேறு வணிக மற்றும் நில பரிவர்த்தனைகள் தொடர்பான பல்வேறு பொறுப்புகளை, சட்டப்பூர்வமாக மாற்றுவது மண்டலியின் மீது பெரும் பாரத்தை ஏற்படுத்தியது. புறப்படும் முந்தைய நாள் இரவு, அதிகாலை **4:00** மணி வரை வழக்கறிஞர் ஒப்பந்தங்களில் கையெழுத்திடவேண்டி இருந்ததால், ஆதி சீனியர் தூங்கவில்லை. **1949** அக்டோபர் **16** அன்று அவர் தனது நாட்குறிப்பில் கவலை தோய்ந்த தொனியில் பதிவு செய்திருந்ததற்கு இணங்க... “பாபா நம்மை புகைபிடிக்கவும், ஓய்வெடுக்கவும்,

எதற்கும் 'பயப்படாமல்' இருக்கவும், கடந்த காலத்தை கடந்த காலத்திற்கு முழுமையாக விட்டுவிடவும் அனுமதிக்கிறார். ஆனால், தாயார் குல்மாயைப் பற்றிய சிந்தனையால் நான் மனச்சோர்வடைந்ததோடு, மெஹர் பப்ளிகேஷன்ஸ் அலுவலகம், எனது பணியாட்கள், புது வாழ்வைத் தொடங்குவதற்கு முந்தைய இரண்டு மாதங்களும், மூச்சுவிட முடியாத வேகத்தில், அனைத்து ஏற்பாடுகளிலும் ஈடுபட்டது பெரும் பதட்டத்தை ஏற்படுத்தியது."

அன்று இரவு ஸுப்பாவில், பாபா, சாப்பாட்டு மேசையில் சாய்ந்து ஓய்வெடுத்தார். அண்ணா 104 கண்காணித்தபடியே எரச் அவர் அருகில் தூங்கினார். மறுநாள் காலையில், பாபா மிகவும் குதூகலமான மனநிலையில் தோழர்களிடம் சென்று, அவர்கள் எப்படி இரவைக் கழித்தனர் என்று கேட்க, அனைவரும் நன்றாகத் தூங்கியதாக பதிலளித்தனர். சிரித்துக்கொண்டே பாபா கூறினார், "**நானும் முன்பு தூங்கியதை விட நன்றாக தூங்கினேன்**!" **பல ஆண்டுகளுக்குப் பிறகு, முதல் முறையாக, பாபா தனது பழைய அனைத்து 'பொறுப்புகளின்' சுமையின்றி, நன்றாகத் தூங்க முடிந்தது**" என்று கூறினார்.

ஆனால் இரவில் தூங்க இடம் தேடிய ஒருவர் பாபாவின் கதவை இழுத்துத் தட்டியபோது எழுந்த சத்தம், பாபாவைத் தூக்கத்திலிருந்து திடுக்கிடச் செய்தது; மேசை உயரத்தில் ஓய்வெடுத்துப் பழக்கமில்லாததால், கீழே தடுக்கிய அவர், அதிர்ஷ்டவசமாக, உள்ளங்கைகளால் தாங்கிக்கொண்டதால் காயம் எதுவுமில்லை. இரவு முழுவதும் பாபா, அயர்ந்து தூங்கினார்.

அரிதாகக் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தும் நோக்கத்தில் டாக்டர் கனி, "நீலுவின் பாதுகாப்புக்கு நன்றி செலுத்தும் விதத்தில், பத்து ரூபாய் மதிப்புள்ள இனிப்புகள் அனுமதிக்கப்பட்டன; இப்போது, பாபாவும் காப்பாற்றப்பட்டதால், கொண்டாட்டம் இன்னும் சிறப்பாக இருக்க வேண்டும்!" என்று கூறியதைக் கேட்டு, பாபா, அவர்கள் ஸிரூர் கிராமத்தைச் சென்றடைந்ததும் இனிப்புகள் வழங்க ரூ 21 அனுமதித்தார். இது டாக்டர் நீலுவை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. அவர் அனுதினமும் இனிப்புகளை உண்ண அனுமதித்திருந்தால், அதையே செய்திருப்பார்!

பாபா முன்பு கூறியது போல, 'பயிற்சி' தொடங்க இருந்தது. "**பயிற்சி காலத்தை வெற்றியடையச் செய்ய, சிறிதளவு தடுமாற்றமும், தயக்கமும் இல்லாத முழுமையான கீழ்ப்படிதல் மிகவும் அவசியமானது**" என்று பாபா கூறினார்.

தெளலத் ஸிங் (சீக்கியர்) பற்றிய உதாரணம் ஒன்றை மேற்கோள் காட்டி, பாபா மேலும் கூறினார், "**ஒரு முறை, மெஹராபாத்தில் நான் அவருக்கு ஒரு சிகரெட்டைப் புகைக்கக் கொடுத்தேன். தயக்கமின்றி, அவர் உடனடியாக அதை வாயில் வைத்து நெருப்பைப் பற்ற வைக்கத் தயாரானார். ஆனால்**

நான் அவரது கீழ்ப்படிதலில் மகிழ்ச்சியடைந்து அதைப் பிடுங்கி வீசி எறிந்தேன்.

"தெளலத் ஸிங் அவரது மதக் கோட்பாடுகளின் அடிப்படையில் சிறிதளவேனும் தயக்கத்தைக் காட்டியிருந்தால், அவர் தோல்வி அடைந்திருப்பார்; 'புது வாழ்வின்' இந்த ஆரம்ப கட்டத்தில் நான் அவரை மன்னித்திருப்பேன்; ஆனால் ஜனவரி 1 முதல், அத்தகைய குறைபாடுகள் மன்னிக்கப்படாது. கீழ்ப்படியத் தவறியவர் உடனடியாக என்னை விட்டுச் செல்வார்; அவ்வாறு வெளியேறும்படி உத்தரவிடப்பட்டால், என்னுடனான அவரது ஆன்மீகத் தொடர்பும் துண்டித்துவிடும்.

"அதனால்தான் நீங்கள் அனைத்து உத்தரவுகளையும் நிபந்தனைகளையும் மிகவும் தீவிரமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் கூறுகிறேன். டிசம்பர் இறுதி வரையிலான பயிற்சி காலத்தில் 'புது வாழ்வு'டன் நீங்கள் இணங்கி, இணைந்து செல்ல நான் உங்களுக்குப் பெருமளவில் உதவுவேன்."

பிற்பகலில் பாபா மீண்டும் கீழ்ப்படிதல் என்ற தலைப்பை மையமாக வைத்து விளக்கமளித்தார்:

இப்போதிலிருந்து நாம் அனைவரும் சம நிலையில் இருக்கிறோம். நம் அனைவருக்கும், இனிமேல், ஆன்மீகம் என்பது இல்லை, குருநாதர் இல்லை, சீடர் இல்லை, அற்புதங்கள் இல்லை, திறவுகோலைச் சுழற்றுவது போன்ற எதுவும் இல்லை, நம்பிக்கைகள் இல்லை, ஆதாயம், அனுகூலம் அல்லது வறுமை, துன்பம் பற்றிய எண்ணங்கள் இல்லை. டிசம்பர் இறுதி வரை உங்களுக்கு உதவி, ஆலோசனை வழங்கும் சக தோழராக என்னைப் பாருங்கள்.

வார்த்தைகள் மற்றும் செயல்களால், பாபாவை கடவுள், குருநாதர், சத்குரு அல்லது அவதார புருஷர் என்ற முத்திரை பதித்து அடையாளப்படுத்துவதை நீங்கள் உண்மையாகவும் தீவிரமாகவும் தவிர்க்க வேண்டும். நான் 'முழுமையான கீழ்ப்படிதலைக் கோரும்' ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் குருநாதராக இருப்பேன்; இதர எல்லா விஷயங்களிலும் என்னை சக தோழராக நடத்த வேண்டும்; என்னுடனான உங்கள் நடத்தையில், அணுகுமுறையில் நீங்கள் மிகவும் சுதந்திரமாக இருக்க வேண்டும். ஆனால் என்னுடன் நடந்துகொள்ளும் முறை, முரட்டுத்தனம் அல்லது துடுக்குத்தனத்தை வெளிப்படுத்தும் விதத்தில் இருக்கக்கூடாது. இதைத் தவிர்த்து, வேடிக்கையாகவும், மகிழ்ச்சியாகவும் இருங்கள், நகைச்சுவையாகச் சிரித்து பேசுங்கள்; வேறு எதுவும் என்னை மகிழச் செய்யாது.

என்னுடன் உங்களைப் பாதுகாப்பாக அழைத்துச் செல்லும் மிக முக்கியமான விஷயம், 'ஓயாது மனம் மாறும் இயல்போடு, கவலை நிறைந்த முகத் தோற்றத்துடன்' இருக்கக்கூடாது என்பதாகும். மகிழ்ச்சியாகவும் முகமலர்ச்சியுடனும் இருக்க முயற்சி செய்யுங்கள். சில நேரங்களில் உங்கள் மனநிலை, மட்டுமீறி கோபமாக இருந்தால், அதை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வெளிப்படுத்த முயற்சிக்காதீர்கள். இவை அனைத்தும் மனதின் நாடகம், அக்கறையும் விழிப்புணர்வுடனான முயற்சிகள் அதைத் தானே ஏற்றுக்கொள்ளும்.

அவர்கள் மூன்றாவதாகத் தங்கவிருந்த இடம் ஸுப்பாவிலிருந்து ஏழு மைல் தொலைவில் அமைந்த நாராயண்காவ்ம் (NARAYANGAON) என ஏற்கனவே முடிவு செய்யப்பட்டது. ஒரு நீரோடை அருகில் மரங்களால் சூழப்பட்ட திறந்தவெளியில் தங்குமிடம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஆனால் இடையிடையே மழை பெய்து, வயற்காடு சேறு நிரம்பி ஓய்வெடுக்க உகந்ததாக இல்லாததால், பாபா அங்கே நிற்காமல் பதினாறு மைல் தொலைவில் அமைந்த 'ஸிரூர்' கிராமத்திற்கு நேரடியாகச் செல்லத் தீர்மானித்தார்.

இரவு ஓய்வுக்கு முன்னர், அனைவரும் அதிகாலை **2:00** மணிக்கு எழுந்து, தேநீர் அருந்தி, காலை உணவுக்குப் (ஒரு சப்பாத்தி) பிறகு, நான்கு மணிக்குப் பயணத்தைத் தொடங்குமாறு பாபா அறிவுறுத்தினார். மொத்த குழுவும் சென்ற பிறகு சரக்கு லாரி புறப்பட இருந்தது.

அதன்படி, **1949** அக்டோபர் **18** செவ்வாய்க் கிழமை அதிகாலையில், பாபாவும் அவரது தோழர்களும் ஸுப்பா கிராமத்தை விட்டு வெளியேறினர். இந்த நேரத்தில் பாபா, ஆண் தோழர்களை முன்னால் நடக்கக் கோரி, அவர் பெண்மணிகளுடன் சுமார் **220** கெஜம் பின்னால் நடந்தார். இரவு முழுவதும் மழை பெய்து கொண்டிருந்தது; வானம் மேகமூட்டமாகக் காணப்பட்டது; சாலை, சேறும், சகதியுமாக இருந்ததால் சறுக்கும் அபாயம்; ஆனால் பாபா, **"மழை பெய்தாலும், பெய்யாவிடிலும், இந்த முறை ஆபத்துகளைப் பொருட்படுத்தாமல் நடைப்பயணத்தைத் தொடர வேண்டும்"** என்று குறிப்பிட்டார்.

அவர்கள் சராசரியாக ஒரு மணி நேரத்திற்கு இரண்டரை மைல்கள் நடந்தனர். எந்த உடற்பயிற்சியிலும் ஈடுபாடில்லாத டாக்டர் கனி, உடல் ரீதியாக நிறைவான நலமுடன் இல்லாததால், பாபா, ஒரு கட்டத்தில், நீங்கள் எப்படி உணர்கிறீர்கள் என்று கேட்டதற்கு, 'எனக்கு பசிக்கிறது' என்று அவர் பதிலளித்தார். பாபா, பெண்மணிகளின் கூண்டுவண்டிக்குச் சென்று, அவர்களிடமிருந்து சில இனிப்புப் பண்டங்களைக் கொண்டு வந்து, ஆண் தோழர்களுக்குப் பகிர்ந்தளித்தார்.

அருகில் எரச் நடந்து செல்ல, பாபா பெரும்பாலும் பெண்மணிகளுடன் நடந்தார்; ஆனால் அவர் அடிக்கடி ஆண் தோழர்களையும் அணுகி, சில நிமிடங்கள் அவர்களுடன் வேடிக்கையாக உரையாடிய பின்பு, பெண்மணிகளிடம் திரும்பிச் செல்வதை வழக்கமாகக் கொண்டார். இதனால், அவர் இதர நபர்களைக் காட்டிலும் இரண்டு மடங்கு தூரத்தைக் கடக்கவேண்டி இருந்தது.

'நாராயண்காவ்ம்' அருகே, பாபா, அருகாமையில் உள்ள ஒரு கிராமத்தைச் சுட்டிக்காட்டி, **"இங்கே சற்று சூடான தேநீர் அருந்தினால் நன்றாக இருக்கும்"** என்று கூறி, சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்தார்.

எரச், பாபாவிடம் நாராயண்காவ்மில் இரவைக் கழிக்க வேண்டும் என்ற அவர்களின் முதலாவது திட்டத்தின்படி, அங்குத் தங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டிய நபரிடம், பால் வாங்க நான்கு ரூபாய் கொடுக்கப்பட்டதாகவும், அவர் அவர்களுக்கு தேநீர் வழங்க முடியும் என்றும் கூறினார். டான், எரச் இருவரிடம் நாராயண்காவ்ம் சென்று, தேநீருக்கு ஏற்பாடு செய்யுமாறு பாபா அறிவுறுத்தினார். புது வாழ்வு நிபந்தனைகள்படி, எவரும் கைகளில் காசு, பணம் எதுவும் எடுத்துச் செல்லக்கூடாது என்பதால், தேநீருக்குப் பணம் செலுத்துவதற்கான கேள்வி தீர்க்கப்பட்டது. காக்கா மட்டுமே தனது பணப்பையில் சிறிதளவு வைத்திருந்தார், ஆனால் அவர் சரக்கு வண்டியில் முன்னால் சென்றுவிட்டார்.

அவர்கள் நாராயண்காவ்ம் வந்தடைந்ததும், அரை மணி நேரம் அங்கே நின்று, அனைவரும் சூடான தேநீர் அருந்தி, சிறிது நேரத்தில், மீண்டும் அணிவகுத்துச் சென்றனர். இப்போது மழை ஓய்ந்து, அக்டோபர் மாத வெயில் கொளுத்திக் கொண்டிருந்தது.

வெப்பமான வானிலை குழுவின் வேகத்தை மணிக்கு இரண்டு மைல்களாகக் குறைத்தது. பாபா, டாக்டர் கனி ஆகியோரின் கால்களில் கொப்புளங்கள் தோன்றவே, டாக்டர் டான் மென் துணி வலையை வைத்து நாடாவால் கட்டினார்.

"டானும், நீலுவும் என்னை எங்கேயோ முழுவதுமாக திசைத் திருப்பி விட்டனர்; பாபாவின் உடல்நிலை நான்கைந்து மைல்கள் கூட நடக்க முடியாத அளவிற்கு இருப்பதாகக் கூறினர்" என்று டாக்டர் கனி வேண்டுமென்றே வேடிக்கையாக எடுத்துரைத்தார்.

'இந்த நடைப்பயண விவகாரத்தை நாம் நிறுத்த வேண்டும்!' என்ற டாக்டர் கனியின் தந்திரமான பேச்சை, பாபாவால் புரிந்து கொள்ள முடிந்தது, ஆனால் பாபா அதைக் கேட்டுப் புன்னகைத்தார். ஆண், பெண்மணிகளுக்கு இடையில் பல முறை முன்னும் பின்னும் நடந்து சென்றாலும், பாபா, சோர்வின் அறிகுறியை வெளிப்படுத்தவில்லை.

ஸிரூர் ஓரிரு ∴பர்லாங் தொலைவில் இருந்த அவ்வேளையில், டாக்டர் கனி மேலும் ஓர் அடி கூட எடுத்து வைப்பது கடினம், தளர்ந்து கீழே விழுந்து விடுவார் என்ற நிலையில், பாபா அவரை அன்புடன் அணுகி, கனியின் ஊன்றுகோலின் ஒரு பக்கத்தைப் பற்றிக் கொண்டு, பாபா அவரை அழைத்துச் சென்றபோது, எஞ்சியுள்ள தூரத்தைப் பற்றி சற்றும் சிந்திக்காமல், கண்களை மூடிக்கொண்டு பின்தொடருமாறு கனியிடம் சைகையால் தெரிவித்தார். பாபா அவரைத் தொடர்ந்து வழிநடத்திச் சென்று, ஏறக்குறைய எட்டிவிட்டதாக அவரை உற்சாகப்படுத்தினார். ஆனால், ஸிரூர் அருகே வந்ததும் டாக்டர் கனி கீழே விழுந்து விடுவார் எனத் தோன்றியது. அருந்த தண்ணீர் கேட்டபோது, பாபா அவரை ஒரு மரத்தடியில் பதினைந்து நிமிடங்கள் ஓய்வெடுக்கக் கூறி, பின்னர் அவருக்கு ஒரு வாய் தண்ணீரைக் கொடுத்து, சிறிது நீரை அவரது தலையில் தெளித்தார். அதைத் தொடர்ந்து டாக்டர் கனி புத்துணர்ச்சி பெற்று மீண்டும் நடைப்பயணத்தைத் தொடர்ந்தார். ஸிரூர் இப்போது ஏறக்குறைய ஒரு ∴பர்லாங் தொலைவில் இருந்தது.

நகரத்தைச் சென்றடைவதற்கு முன்பு, பாபா எல்லையைத் தாண்டிய முதல் நபராக இருக்க விரும்புவதாகவும், பிற அனைவரும் அவரைப் பின்தொடர வேண்டும் என்றும் அறிவித்தார். அவ்வேளையில் அண்ணா 104 குழுவில் இல்லை, அவர் முன்னால் சென்றிருக்க வேண்டும் என்பது தெரியவந்தது. பாபாவின் அறிவுறுத்தலின் பேரில் டாக்டர் டானும், எரச்சும் அவரைத் தேடிச் சென்றனர். இருப்பினும், அவர் ஏற்கனவே நகரின் நுழைவாயிலில் அமைந்த பாலத்தைக் கடந்துவிட்டதால், அவர்களால் அவரைக் கண்டுகொள்ள முடியவில்லை.

அரசு பங்களாவில் குழு தங்குவதற்கு, முன்னேற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன; ஆனால், அன்றைய தினம் அது இராணுவ அதிகாரிகளால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்ததால், பேருந்து நிலையத்திற்கு எதிரே அமைந்த 'ஸ்ரீ மஹதூர் டூரிங் சினிமா' (SRI MAHADUR TOURING CINEMA) என்ற ஆளில்லா திரையரங்கில் இரவு தங்குவதற்கு மாற்று ஏற்பாடு செய்யப்பட்டது. நண்பகலில் அவர்கள் அங்கு வந்தடைந்தபோது பெண்டு, காக்கா, டாக்டர் நீலு மூவரும், சரக்கு வண்டியுடன் வந்து சேர்ந்தனர். அதற்குப் பிறகு மதிய உணவு தயார் செய்யப்பட்டது.

இங்கே பாபா, அண்ணா 104ஐக் கண்டுபிடித்து அவரைத் திட்டினார், **"ஏன் எனக்குக் கீழ்ப்படியவில்லை? பெண்மணிகளுக்கு முன்னால் ஒரு ∴பர்லாங் இடைவெளி இருக்குமாறு அனைவருக்கும் அறிவுறுத்தல்கள் இருந்தபோதும், நீங்கள் ஏன் இவ்வளவு தூரம் சென்றீர்கள்?"** பாபா அவரை மன்னித்து, மீண்டும் அதைச் செய்ய வேண்டாம் என்று எச்சரித்தார்.

அனைவரும் உண்டு ஓய்வெடுத்த பின்பு, டாக்டர் நீலு காயத்திலிருந்து தப்பியதைக் கொண்டாட ஜிலேபிகள் கொண்டு வரப்பட்டு, பிற்பகல் தேநீருடன் அனைவருக்கும் வழங்கப்பட்டது.

அஹமதுநகரைச் சேர்ந்த குல்கர்ணி என்பவர், சினிமா கொட்டகையின் உரிமையாளர்களான சில மார்வாரிகளுடன் சேர்ந்து பாபாவின் குழுவுக்கு உணவு ஏற்பாடு செய்து, இதர சேவைகளையும் செய்து வந்தார்.

அவர்கள் நாராயண்காவ்மில் நிற்காமல் ஒரு நாள் முன்னதாகவே ஸிரூர் வந்துவிட்டதால், 19ஆம் தேதியும் அங்கேயே கழிக்க முடிவு செய்யப்பட்டது. அன்றைய தினம் தீபாவளிப் பண்டிகை என்பதால், பட்டாசுகள் வெடிக்கப்பட்டு, மின்விளக்குகளால் நகரமே கோலாகலமாக ஜொலித்தது. ஆனால், சோர்வாக இருந்த தோழர்கள் அனைவரும் சீக்கிரம் ஓய்வெடுக்கச் சென்று, மறுநாள் காலையில் புத்துணர்ச்சியுடன் எழுந்தனர்.

அக்டோபர் 19 காலை சிற்றுண்டிக்குப் பிறகு, பாபா மீண்டும் 'புது வாழ்வின்' நிபந்தனைகளையும், கொள்கைகளையும் வலியுறுத்தினார்: **"உங்களுக்கு உதவுவதற்காக நான் இதைச் சொல்கிறேன், ஆனால் ஜனவரி 1ஆம் தேதிக்குப் பின்னர் எந்த உதவியும் அல்லது கண்காணிப்பும் இருக்காது. அவ்வேளையில், வாழ்க்கை உலகின் தயவில் வாழப்படும்! அது முற்றிலும் உதவியற்ற மற்றும் நம்பிக்கையற்ற வாழ்க்கையாக இருக்கும்."**

சிறிய மற்றும் பெரிய தவறுகளுக்கு இடையே உள்ள வேறுபாட்டைச் சுட்டிக்காட்டி, பாபா இவ்வாறு விளக்கினார்: **"சிறிய தவறுகள் என்பது தனிப்பட்ட கடமைகளையும், உத்தரவுகளையும் மீறுவது. பெரிய தவறுகள் என்பது, புது வாழ்வின் விதிகளையும், நிபந்தனைகளையும் மீறுவது, பணத்தைத் தொடுவது, தெரியாமல் கூட பெண்களைத் தீண்டுவது, மீண்டும் பழைய வாழ்க்கைக்குத் திரும்ப வேண்டும் என்ற நம்பிக்கையில் வாழ்வது இதுபோன்ற மற்றும் பல. தெரிந்தோ தெரியாமலோ செய்யும் சிறிய தவறுகள் டிசம்பர் இறுதி வரை மன்னிக்கப்படும், தெரியாமல் செய்யும் பெரிய தவறுகளும் அதுவரை மன்னிக்கப்படும். ஆனால், தெரிந்து செய்யும் பெரிய தவறுகள் ஒருபோதும் மன்னிக்கப்படமாட்டாது."**

பாபா மேசையில் இருந்து தவறி விழுந்தபோது, காயங்கள் ஏற்படாமல் தப்பியதைக் கொண்டாட, அவர் அளித்த வாக்குறுதிப்படி, தோழர்களுக்குப் பிற்பகல் தேநீருடன் லட்டு வழங்கப்பட்டது. தொடர்ந்து பாபா அனைவரையும் நீராடச் சொன்னார். திரையரங்கில் குளியலறை இல்லாததால், திறந்த வெளியில் அமைந்த சிறுநீர் கழிப்பிடங்கள் முழுவதும் சுத்தம் செய்யப்பட்டு, ஆண் தோழர்கள் நீராடினர்.

அன்று மாலை ஏழு மணியளவில் காக்கா, பெண்டு இருவரும் பெல்காவ்ம் (BELGAUM) நகருக்கு, சாமான்களுடன் சரக்கு லாரியில் புறப்பட்டனர்.

ஸுப்பாவிலிருந்து அவர்களின் நடைப்பயணத்தைப் பற்றி பாபா, ஆண் தோழர்களைக் கேலி செய்தார்: "**பெண்மணிகள் பதினாறு மைல்களை எளிதாகக் கடந்துவிட்டனர். உண்மையில் நீங்கள் மிகவும் மெதுவாக நடந்ததால் அவர்கள் தங்கள் வேகத்தை அதிகரிக்க முடியாமல் முடங்கிப்போனதாகப் புகார் கூறுகிறார்கள்.**"

1949 அக்டோபர் **20,** வியாழக்கிழமை அதிகாலை **1:30** மணியளவில், பாபாவும் குழுவினரும் ஸிரூர் கிராமத்திலிருந்து வாடகைக்கு அமர்த்தப்பட்ட பொதுப் பேருந்தில் பெல்காவ்ம் புறப்பட்டனர். அன்று காலை எட்டு மணிக்கு, பூனா வழியாக 'ஸத்தாரா' (SATARA) வந்தடைந்து, அரை மணி நேரம் அங்கு நின்று முகம், கை கால்களைக் கழுவி சுத்தம் செய்து, காலை சிற்றுண்டியை உண்டனர்.

டாக்டர் நீலு ஆழ்ந்த அக்கறையுடன் ஆதி சீனியரிடம், "நாம் எப்போது மெஹராபாத்திற்குத் திரும்பிச் செல்வோம்?" என வினவினார்.

பாபா அந்தக் கருத்தைக் கேட்டு நீலுவைக் கடிந்துகொண்டார், "**இத்தகைய எண்ணங்கள் புது வாழ்வின் உள்ளுணர்வுக்கும் உற்சாகத்திற்கும் எதிரானது. இதை நினைவில் கொள்ளுங்கள், டிசம்பர் இறுதி வரை மட்டுமே இதுபோன்ற தவறுகளை நான் மன்னிப்பேன். 1950 ஜனவரி 1ஆம் நாளிலிருந்து தவறு செய்பவர் எவராக இருந்தாலும் அவர் தனது பெட்டி படுக்கைகளை மூட்டை கட்ட வேண்டியதுதான்!**"

அன்று மதியம் **3:30** மணிக்கு கோலாப்பூர், நிப்பானி வழியாக பெல்காவ்ம் வந்தடைந்தனர். 'தலாக்வாடி' (THALAKWADI) என்ற புறநகர் பகுதியில் அவர்கள் தங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய மெஹராபாத்திலிருந்து விஷ்ணு ஏற்கனவே அனுப்பப்பட்டிருந்தார். அந்த இடத்தைக் கண்டுபிடிக்க ஒரு மணி நேரம் ஆனது. காக்கா, பெண்டு இருவரும் சரக்கு லாரியுடன் அங்கு வந்திருந்தாலும் விஷ்ணுவைக் கண்டுகொள்ள முடியவில்லை. "விஷ்ணுவுக்காக இரண்டு மணி நேரம் காத்திருந்தோம், ஆனால் அவர் இன்னும் வரவில்லை" என்று பெண்டு கூறினார்.

நிலைமையை இன்னும் மோசமாக்கும் விதத்தில், ஓட்டுக் கூரை மற்றும் தட்டைச் சுவர்களுடன் கட்டப்பட வேண்டிய ஆண் தோழர்களுக்கான **20x30** அடி குடிலும் தயாராகவில்லை. மழையால் தாமதமாகப் பணிபுரிந்த தொழிலாளர்கள், அதை முடிக்கும் பணியில் தீவிரமாக இருந்தனர். பண்ணைக்குச் செல்லும் சாலையும் சேறும் சகதியுமாக இருந்தது.

பாபாவின் வருகையை அறிந்த விஷ்ணு, தலாக்வாடிக்கு விரைந்தார். மாலை ஆறு மணிக்கு ஆஜராக வேண்டும் என்று கூறப்பட்டதாகவும், ஆனால் வழக்கம் போல, பாபா சீக்கிரம் வந்ததாகவும் அவர் விளக்கினார். கட்டி முடிக்கப்படாத குடிலையும், அதன் கல் தரை ஈரமாகவும், எங்கும் அழுக்கும்

சேறும் சகதியுமாக இருப்பதைப் பார்த்ததும் அவர் முகம் வெளிறியது. கடுமையான மழை பெய்ததால் லாரியிலிருந்த பொருட்களை இறக்குவதில் பெரும் சிரமம் ஏற்பட்டது. அத்தியாவசியப் பொருட்கள் மட்டும் வெளியே எடுக்கப்பட்டு, மீதமுள்ள அனைத்தும் அப்படியே உள்ளே வைக்கப்பட்டன.

பாபா, **"இந்த அசௌகரியங்கள் அனைத்தும் 'சத்யநாசத்தை' நோக்கி அடியெடுத்து வைக்கும் முதற் படிக்கற்களாகும், அதை நாம் கடந்து செல்ல வேண்டும்"** என்று விளக்கி தனது தோழர்களை உற்சாகப்படுத்த முயன்றார்.

பெண்மணிகள் 220 கெஜம் தொலைவில் அமைந்த ஒரு திடமான கட்டிடத்தில் தங்க வைக்கப்பட்டனர். அது அவர்களின் தனிப் பாதுகாப்புக்காக மூங்கில் பாய்களால் மூடப்பட்டிருந்தது; அதற்கு வெளியே ஆழமான கிணறு ஒன்றும் இருந்தது. ஆண் தோழர்கள் தண்ணீரை இறைக்க வேண்டும் (அதனால் அவர்கள் கைகளில் கொப்புளங்கள் ஏற்பட்டன) மற்றும் தண்ணீரை அங்கிருந்து குடிசைக்குக் கொண்டு செல்ல வேண்டும். 'தலாக்வாடி உடைமை' என்பது பாபாவிற்குக் கொடுக்கப்பட்ட 24 ஏக்கர் நிலம். ஆனால், புது வாழ்வின் நிபந்தனைகளுக்கு இணங்க, மெஹராபாத் மற்றும் மெஹராஸாத் சொத்து விஷயத்தில் செய்ததைப் போலவே, இந்த நிலத்தை மீண்டும் உரிமையாளரின் பெயருக்கு மாற்றுமாறு பாபா, விஷ்ணுவிற்கு அறிவுறுத்தியிருந்தார்.

இரவு முழுவதும் மழை தொடர்ந்தது, பெண்மணிகள் தங்கியிருந்த இடம் கணுக்கால் அளவு தண்ணீரில் மூழ்கி இருந்தது. அடுத்த நாள், அக்டோபர் 21, சரக்கு வண்டியிலிருந்து பொருட்களை இறக்கும் பணி நடந்தது. இதற்காக, தொழிலாளர்கள் எவரும் பணியமர்த்தப்படாததால், தோழர்கள் ஒவ்வொருவரும் கைகொடுத்து உதவினர்.

சதாஷிவ் பாட்டீல் அன்று காலை எட்டு மணிக்கு பூனாவிலிருந்து வந்து தோழர்களுடன் இணைந்தார். சரியான சமையலறை இல்லாததால், சமையலைத் தொடங்கும் வரை அனைவருக்கும் உணவகத்திலிருந்து உணவு ஏற்பாடு செய்யப்பட்டது.

அன்று பிற்பகலில் பாபா மீண்டும் அறிவித்தார், **"பயிற்சி காலம் வெற்றிகரமாக அமைந்தால், நம்பிக்கையற்ற நமது வாழ்க்கை, அனைத்து தெய்வங்களும் பொறாமைப்படும் அளவிற்கு இருக்கும்!"**

இதை பாபா, மீண்டும் தெளிவுற விளக்கினார், **"இதுவரை வாழ்க்கை, சொல்லப்போனால், வலியும், துன்பமும் நிறைந்ததாக இருந்தாலும், எவரும் மகிழ்ச்சியுடன் அனுபவித்ததாகக் கூற முடியாது. 1950இல், வாழ்க்கை இன்னும் கடுமையான வேதனையை ஏற்படுத்துவதாக இருக்கும், ஆனால் இந்த வலியை நீங்கள் துய்த்து மகிழ்வீர்கள். இந்த வலியின் இன்பம் மட்டுமே கடவுளுக்கு ஒரு சவாலாக அமையும்."**

பின்னர் அவர் இவ்வாறு கூறி முடித்தார், **"இதற்கு மேல் என்னால் எதுவும் கூற இயலாது, உண்மையாகச் சொன்னால், எதுவும் தெளிவாகவும் உறுதியாகவும் இல்லை. நிகழவிருக்கும் சம்பவங்களைப் பற்றிய தெளிவற்ற உருவம் ஒன்றுதான் இப்போது என்னிடம் உள்ளது. நீங்கள் என்ன செய்யலாம் என்று சிந்தனை செய்யுங்கள்."**

ஆதி சீனியர் பாபாவிடம் 'வலியை அனுபவிப்பது என்றால் என்ன?' என்பதை விளக்கக் கோரினார். பதிலுக்கு, பாபா இந்த உவமையை எழுத்துப்பலகையில் எடுத்துரைத்தார், **"இது அரிப்பினால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு, அரிப்பு ஏற்படும்போது பிராண்டுவதால் வரும் வலியைப் போன்றது, ஆனால் இந்த வலி ஒரு இதமான உணர்வைத் தருகிறது. துன்பத்திலும் இன்பம் என்பதற்கு இது ஓர் உதாரணம்."**

பாபா, அனைவரும் நீராடி, ஆடைகளை மாற்றி, அஹமதுநகரிலிருந்து புறப்படும்போது அவர்கள் அணிந்திருந்த ஆடைகளை அவரிடம் ஒப்படைக்குமாறு கூறினார். எவ்வாறாயினும், பாத்திர பண்டங்களை சுத்தம் செய்தல், தண்ணீர் பானைகளை நிரப்புதல் போன்ற கடமைகளை ஏற்றுக்கொண்டவர்கள், தேவைப்பட்டால் இந்த அதிகப்படியான ஆடைகளை அக்டோபர் 25ஆம் தேதி வரை பயன்படுத்த அனுமதிக்கப்படுகிறார்கள்.

1949 அக்டோபர் 22 சனிக்கிழமையன்று, பாபா சக தோழர்களுக்குப் பொதுக் கடமைகளை வழங்கினார் - சமையல் பாத்திரங்களை சுத்தம் செய்தல், தண்ணீர் எடுத்து வருதல், பொருட்களை சுத்தமாக வைத்திருத்தல், துணி துவைத்தல் போன்ற பல. கடினமான பணிகளில் பாபாவே பங்கெடுத்தார்.

பெண்மணிகளும் பணியாட்கள் இல்லாமல் சமாளிக்க வேண்டியிருந்தது. அவர்களைப் பற்றி பாபா கூறுகையில், **"இந்த நான்கு பெண்மணிகளும், இதுவரை செய்யாத குற்றேவல் பணிகளைச் செய்வதில் மனதார ஒத்துழைத்து, உண்மையாகப் 'புது வாழ்வு' வாழ்கிறார்கள்.**

"மெஹராவும் ஒரு சாதாரண பணிப்பெண்ணைப் போலப் பணிபுரிகிறார் - தரையைத் துடைப்பது, கழுவி சுத்தம் செய்வது, தூசி அகற்றுவது - நான் இதுவரை அவரைச் செய்ய அனுமதிக்காத பணிகளைச் செய்ய வைக்கிறேன்."

ஒவ்வொருவருக்கும் ஒதுக்கப்பட்ட கடமைகள் ஒரு தற்காலிக இயல்புடையவை, பாபா விளக்கியது போல், **"இறுதி கடமைகள் மூன்று நாட்களுக்குப் பின்னர், அக்டோபர் 25ஆம் தேதி - பயிற்சி காலம் தொடங்கும் நாளில் ஒதுக்கப்படும்."**

அன்று பிற்பகல் பாபா, பெல்காவ்மில் பயிற்சி காலத்தை நிறைவு செய்வதன் நன்மை தீமைகள் பற்றி விவாதித்தார். நீண்ட, நெடிய விவாதத்திற்குப்

பிறகு, 'ஏற்பாட்டுக் குழு'விற்கும் சம்பந்தப்பட்டவர்களுக்கும் பின்வரும் சுற்றறிக்கையை வழங்கினார்:

'புது வாழ்வு' தொடர்பான மெஹராபாத்தில் நடந்த கூட்டங்களை விவரித்து, ராம்ஜு எழுதிய புதிய கையேட்டை அடையப் பெற்றவர்கள் அனைவருக்கும் தெரியப்படுத்துவதாவது:

பயிற்சியின் முதல் காலகட்டமாக பெல்காவ்ம் நகரில் 1949 நவம்பர் 20 வரை உடல் உழைப்புடன் செலவிடப்படும்.

இரண்டாவது காலகட்ட பயிற்சி, பெனாரஸில் நவம்பர் 25 முதல் டிசம்பர் 10 வரை தொடரும்; இது உணவுக்காக யாசிப்பது, லங்கோட்டி வாழ்க்கை (இடையில் லங்கோட்டி அணிவது) **ஆகியவற்றை உள்ளடக்கியது.**

பயிற்சியின் மூன்றாவது மற்றும் கடைசி கட்டம் டிசம்பர் 10 முதல் 31 வரை ஹரித்வார் செல்லும் வழியில் நாடோடி (ஜிப்சி) **வாழ்க்கையை உள்ளடக்கியது.**

1950 ஜனவரி 1 முதல், ஹரித்வாருக்குச் செல்லும் வழியில் அல்லது கடவுள் நம்மை எங்கு அழைத்துச் சென்றாலும், முடிவில்லாத நம்பிக்கையற்ற புது வாழ்வு உண்மையான ஆர்வத்துடன் இருக்கும்.

மெஹராபாத் மண்டலி, மெஹர்ஜி, நரிமன் ஆகியோருடன் தங்கியிருந்தவர்கள், அஹமதுநகரில் தங்கியிருக்கும் மண்டலி மற்றும் பிறருக்கு, கீழ்வரும் செய்தி அனுப்பப்பட்டது. ஸரோஷ், நரிமன், மெஹர்ஜி, ஜால் கேரவாலா ஆகியோருக்கு மேலும் நான்கு குறிப்புகள் அனுப்பப்பட்டன:

நாங்கள், 21 நபர்கள் அடங்கிய குழு, நவம்பர் 20 அன்று பெல்காவ்மிலிருந்து பெனாரஸுக்குப் புறப்படுகிறோம். இதற்கான பணம் காக்காவிடம் ஏற்கனவே ஒப்படைக்கப்பட்ட பயிற்சி கால பராமரிப்புத் தொகையிலிருந்து செலவிடப்படும்.

நாங்கள் டிசம்பர் 10ஆம் நாள், பெனாரஸிலிருந்து நடைப்பயணமாகப் புறப்பட்டுச் சென்று, மார்ச் 10ஆம் தேதிக்குள் ஹரித்வாரைச் சென்றடைவோம் என்று நம்புகிறோம்.

கூண்டுவண்டி, மாட்டு வண்டி மற்றும் காளை மாடு ஆகியவை டிசம்பர் 7ஆம் தேதிக்குள் பெனாரஸ் கன்டோன்மென்டைச் சென்றடைய வேண்டும்.

விஷ்ணு, நீலு இருவரும் டிசம்பர் 1 முதல் 7 வரை கூண்டுவண்டி, காளைகள் மற்றும் பலவற்றைப் பற்றி பெனாரஸ் கன்டோன்மென்ட் ரயில் நிலையத்தில் விசாரிப்பார்கள்.

காலம் இதை இப்படிக் குறிப்பிட்டது: "இவ்வாறு 'அன்பான ஆத்மாக்கள்' பாபாவிடமிருந்து தாரையாக வந்த சில செய்திகளை அடையப்பெற்றன; அந்த ஆத்மாக்களின் ஏக்கத்தை அவரால் நிராகரிக்க முடியவில்லை. இருப்பினும்,

அவர்களின் கண்ணீரை அவர் நெருப்பாக மாற்றினார்; அதனால் அவர்கள் புது வாழ்வில் பாபாவுடன் பயணம் செல்லவில்லை என்றாலும், அவர்களின் கண்ணீர் அவரைப் பின்தொடர்ந்து சென்றது!"

அனைவரும் பெல்காவ்மில் தங்கியிருக்கும் தொடக்க விழாவைக் கொண்டாடும் வகையில், பாபா ரூ 21 மதிப்புள்ள இனிப்புப் பண்டங்களை வழங்கினார். புகைபிடிப்பவர்களுக்கும் அவர் சிகரெட்டுகளை அனுமதித்தார் - ஆனால் இவை அனைத்தும் டிசம்பர் இறுதி வரை மட்டுமே நீடிக்கப் போதுமானது.

1949 அக்டோபர் 23 ஞாயிற்றுக்கிழமை அன்று, பாபா ஒரு கூடை நிரம்ப வெங்காயம் மற்றும் தக்காளியைத் தலையில் சுமந்துகொண்டு, பெண்மணிகளின் குடியிருப்பிலிருந்து ஆண்கள் தங்கியிருந்த குடிசைக்குச் சென்றார். அவர் தரையையும், மண்பாண்டங்களையும் துடைத்து சுத்தம் செய்யும் குற்றேவல் பணிகளைக் கண்டு தோழர்கள் உணர்ச்சிவசப்பட்டனர். இது அவர்களுக்கு ஒரு பாடமாக இருந்தது.

ஒரு கட்டத்தில், பாபா, அவர்கள் முந்தைய இரவு நன்றாக தூங்கினார்களா என்று தோழர்களிடம் கேட்டார். கொசுக்களின் தொல்லை தாங்கமுடியாமல், இரவு வெகுநேரம் வரை ஆண்கள் எவரும் தூங்கவே இல்லை.

இதைப் பற்றி பாபா கூறியபோது, "**அதே காரணத்தால் பெண்மணிகளும் தூங்க முடியவில்லை. மணியின் முகம், உடல் முழுவதும் அம்மை போன்ற செந்நிறத் தடிப்புகள் உள்ளன. ஆனால், அறைகள் ஈரமாகவும், கொசுக்கள் நிறைந்து இருந்தபோதிலும், உற்சாகமாக, பெண்மணிகள் சிரித்து, கேலி செய்து, மண் அடுப்புகளைக் கட்டமைப்பதில் மும்முரமாக இருப்பதைப் பார்த்து நான் மகிழ்ச்சியடைந்தேன். நவம்பர் 1ஆம் நாள் முதல் சமையலைத் தொடங்க உள்ளனர்; அதற்கு முன், அக்டோபர் 25 முதல் 31 வரை, காக்காவும் பைதூலும் சமையலை கவனித்துக் கொள்வார்கள். முரளி அவர்களுக்கு உதவும் அதேவேளையில் டான், கையில் இருப்பதை வைத்து ஒரு சமையலறையை சீரமைக்க வேண்டும்.**"

பாபா பிற அனைவருக்கும் பின்வரும் கடமைகளை வழங்கினார்:

எரச்: பாபாவுடனான வெவ்வேறு வகைப்பட்ட சிறுசிறு வேலைகள் மற்றும் நகரத்தில் எந்த வேலையும் செய்ய வேண்டும்.

நீலு, ஆதி, பெண்டு, அலோபா, சதாஷிவ்: கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து வழங்க வேண்டும்.

தௌலத் ஸிங், பாபாதாஸ்: சமையல் மற்றும் பிற பாத்திர பண்டங்களை சுத்தம் செய்தல்.

விஷ்ணு: பஜாருக்குச் சென்று வேண்டிய பொருட்களை வாங்கி வருவது, 25ஆம் தேதிக்குப் பிறகு கூலியாட்களின் உதவியின்றி அனைத்து பொருட்களையும் எடுத்து வர வேண்டும்.

குஸ்தாஜி: குடிலைத் துடைத்து சுத்தம் செய்து, பாபாதாஸ், தெளலத் ஸிங் இருவரும் பெரிய பெட்டிகளைத் தூக்கும் போதெல்லாம் உதவ வேண்டும்.

அண்ணா 104: இரவு 8:00 மணி முதல் காலை 4:00 மணி வரை கண்காணிப்பாளராகப் பணிபுரிய வேண்டும்.

கனி: புது வாழ்வின் தினசரி நாட்குறிப்பை எழுதி, மேலும் அவர் விரும்பும் வேறு எந்த வேலையையும் செய்யலாம்.

ஒரு சந்தர்ப்பத்தில், குஸ்தாஜி ஏதோவொன்றைக் குறித்து வருத்தமடைந்த வேளையில், ஆண் தோழர்களுக்கான அறையைத் துடைக்க மறுத்துவிட்டார். பாபா அவரது செயலைக் கடுமையாக விமர்சித்து, அவரையும் பிற அனைவரையும் எச்சரித்தார்; கீழ்ப்படியாமை எந்த வகையிலும் பொறுத்துக் கொள்ளப்படமாட்டாது. அவர் அழுத்தம் திருத்தத்துடன் எடுத்துரைத்தார்: **"கட்டளைகளை நிறைவேற்றுவதில் சிறிதளவேனும் தயக்கம் காட்டுவது, உறுதிமொழிகள் மற்றும் புது வாழ்வை நிர்வகிக்கும் நிபந்தனைகளை மீறுவதற்கு சமமாகும்.**

"எந்த ஓர் உத்தரவும் அசாத்தியமானதாகவும், அர்த்தமற்றதாகவும் உங்களுக்குத் தோன்றினாலும் 'இல்லை', 'வேண்டாம்' என்ற பதிலை எவரும் கூறக்கூடாது. இந்த விஷயத்தைப் பொறுத்தவரை முழுமையான, உறுதியான கீழ்ப்படிதல் எதிர்பார்க்கப்படுகிறது; பிற அனைத்து விஷயங்களிலும், அனைவரும் சகோதரர்களைப் போல சமமானவர்கள் மட்டுமின்றி முற்றிலும் சுதந்திரமானவர்கள்."

பிற்பகலில், பெனாரஸ் நகரில், எதிர்காலத்தில் தங்குவது குறித்து பாபா, தோழர்களுடன் கலந்துரையாடினார். பாபாதாஸ், சதாஷிவ் இருவரும் நகரத்தை நன்கு அறிந்திருந்ததால், அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய முன்கூட்டியே செல்லுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். அனைத்தும் முடிந்ததும் பாபாவிடம் தெரிவித்து அவருடைய வருகைக்காகக் காத்திருக்க வேண்டும்.

தோழர்கள் சில இசைக்கருவிகளை அவர்களுடன் எடுத்துச் செல்லவும் அனுமதிக்கப்பட்டனர்; தொடர்ந்து அக்டோபர் 24ஆம் நாள் காலையில், பாபா, டோலக் (டிரம்) இசைக்க, ஆதி கஸல்களைப் பாடி ஹார்மோனியம் வாசித்தார். அந்தக் காட்சி அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை மன்ஸில்-எ-மீம் நாட்களை நினைவூட்டியது, அப்போது பாபா, அடிக்கடி டோலக்கை இசைத்து, ஹஃபீஸ், ரூமி, துக்காராம் போன்ற பிற கவிஞர்களின் கஸல்களைப் பாடினார்.

பாபா, தோழர்களுடன் பெனாரஸுக்குச் செல்வதற்கு இன்னும் ஒரு மாத காலம் இருந்தபோதிலும், அவரது வழக்கமான செயல்களுக்கிணங்க, எரச்சை நகருக்கு அனுப்பி, பெல்காவ்மிலிருந்து மும்பைக்குச் செல்லும் பேருந்து, ரயில் கட்டணங்களில் எது மலிவானது என்பதைக் கண்டறியுமாறு கூறினார்.

அதே நாளில் அவர் 'புது வாழ்வு' பற்றிய கவிதை ஒன்றை எழுதுமாறு டாக்டர் கனியைக் கேட்டுக்கொண்டார். பாபா, பாடலின் பல்லவியை எழுத்துப்பலகை வழியாக எடுத்துரைத்து, கீழ்ப்படிதல், கோபம், பேராசை, காமம் போன்றவற்றைக் கட்டுப்படுத்தல், உண்மை பேசுதல், எல்லா சூழ்நிலைகளிலும் மகிழ்ச்சியாக இருத்தல் போன்ற பல புது வாழ்வின் முக்கிய கொள்கைகளைக் கவிதையில் இணைக்குமாறு அவருக்கு அறிவுறுத்தினார். உண்மையில், பாபா, டோலக் வாசித்ததைக் கேட்டதன் மூலம் புது வாழ்வைப் பற்றிய பாடல் ஒன்றை எழுதும் உத்வேகத்தை டாக்டர் கனி அடையப் பெற்றார். பாபா அவருக்கு விளக்கினார், "**ஒவ்வொரு காலையிலும் அன்றாட வேலைகளைத் தொடங்கும் முன்னர் அந்தப் பாடல் வரிகள் ஒரு பிரார்த்தனையாகப் பாடப்படும்.**"

மாலையில் அண்ணா, தனது இரவு கண்காணிப்பின் போது பயன்படுத்த மழைக்காப்பு உடை ஒன்று வேண்டுமெனக் கேட்டார். பாபா, அவர் கேட்டதைக் கொடுத்து, இவ்வாறு அறிவுரை வழங்கினார்: "**நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, ஒருபோதும், நீங்கள் என்னிடம் எதையும் கேட்கக்கூடாது; நான் இப்போது உங்கள் தவறுகளை மன்னிக்கிறேன், ஆனால் டிசம்பர் மாதத்திற்குப் பிறகு நான் அத்தகைய தொண்டு செய்ய மாட்டேன்**" என்று அவர் கூறினார்.

அக்டோபர் 25 பயிற்சி காலத்தின் முதல் நாள். பாபா, காலையில் அனைத்து தோழர்களையும் அழைத்துக் கூறினார்:

உங்களுக்கு ஏதேனும் சிரமம் இருந்தால் இன்றே சொல்லுங்கள். உங்களது இடர்பாடுகளுக்குக் குரல் கொடுக்க இந்த வாய்ப்பை நானே வழங்குகிறேன். ஒருபோதும், இனி ஒருபோதும், விளக்கமளித்து, திருப்திப்படுத்த முயற்சிக்க மாட்டேன். நான் உதவி செய்வதாக உறுதியளித்ததன் காரணமாக, இப்போது அவ்வாறு செய்கிறேன், ஆனால் இது ஜனவரி 1ஆம் நாளிலிருந்து தானாகவே நின்றுவிடும். அதன் பின்னர் - ஒன்று, தொடர்ந்து என்னுடன் பயணிக்கவும், அல்லது என்னை விட்டுவிட்டு உங்கள் சொந்த பொறுப்பில் சுய விருப்பத்துடன் இருக்கவும் - இந்த இரண்டு மாற்று வழிகள் மட்டுமே உங்களிடம் இருக்கும்.

இந்த விவாதத்தின் போது, பாபாவின் உண்மையான நோக்கங்கள் மற்றும் மறைமுகமான காரணங்கள் குறித்து, தனக்கு சந்தேகம் இருப்பதாக

ஆதி சீனியர் ஆவேசத்துடன் எடுத்துரைத்தார். இந்தச் சர்ச்சை ஒரு சூடான சூழ்நிலையை ஏற்படுத்திய போது பாபா மீண்டும் கூறினார்:

நீங்கள் என்னுடன் வர விரும்புகிறீர்களா இல்லையா என்பதை மறுபரிசீலனை செய்ய உங்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்குகிறேன். இந்த வாழ்க்கையில் இதுபோன்ற எரிச்சலான மனநிலைகளுக்கு நீங்கள் ஆட்பட முடியாது, இது பிற்காலத்தில் இன்று இருப்பதை விட பல்லாயிரம் மடங்கு கடினமாகவும், சோதனை விளைவிப்பதாகவும் இருக்கலாம். இப்போது கூட, ஒன்றை அல்லது வேறு மாற்று வழியைத் தீர்மானிக்க நான் உங்களுக்கு வாய்ப்பளிக்கிறேன். இன்று மாலைக்குள் உங்கள் முடிவை எனக்குத் தெரிவிக்க வேண்டும். நாளை முதல், மீண்டும் அத்தகைய வாய்ப்பு வழங்கப்படமாட்டாது. இதை நான் உங்களிடம் கூறுவது ஆதியின் நடத்தையால் அல்ல. நான் உண்மையைச் சொல்கிறேன் என்று கடவுளுக்குத் தெரியும். இன்று, என்னுடன் தொடர அல்லது என்னை விட்டுச் செல்ல உங்களுக்கு ஒரு கடைசி வாய்ப்பு வழங்குகிறேன்.

கடவுளுக்குத் தெரியும், நேற்று நான் மெஹராவிடமும் கடைசி முறையாகக் கூறினேன், குறைந்தபட்சம் அனைவரிலும் அவர் ஒருவராவது, மிகவும் தீவிரமான மற்றும் கடினமான சூழ்நிலைகளில் மகிழ்ச்சியாகவும், முகமலர்ச்சியுடனும் இருக்க வேண்டும் என்று.

உங்கள் அனைவருக்கும் சிரமமான ஒன்றே ஒன்று மனம் - அதன் உணர்வு நிலை மற்றும் எரிச்சலடையச் செய்யும் தன்மை; இது மட்டுமே எனது இதயத்திற்கு நெருக்கமான நண்பர்கள் மற்றும் சக தோழர்களைக் கூட நிராகரிக்க வைக்கும். நான் அவர்களைக் கண்டிக்காமல் இருந்தாலும் நிச்சயமாக நிராகரிக்க வேண்டும். மனதைக் கட்டுப்படுத்துவது எவ்வளவு கடினம் என்பது எனக்குத் தெரியும். எனவே, நிபந்தனைகளின்படி, உங்கள் உறுதிமொழி, எனது ஆணை இவைகளையே என் மனதில் முதன்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். நீங்கள் இறுதி முடிவெடுப்பதற்கு முன்னதாக உங்கள் சிரமங்களைப் பற்றி முதலில் கேட்டறிந்து உங்களுக்கு உதவுகிறேன்; அவற்றைத் தெரிந்து கொண்டு, நான் உங்களைத் திருப்திப்படுத்த முயற்சிப்பேன், அதன் பிறகு நீங்கள் உங்கள் மனம்போலத் தீர்மானிக்கலாம். அதைத் தொடர்ந்து 'திருப்தி படுத்தும் கேள்விக்கு இடமே இல்லை'; என்னை நம்புங்கள், ஏனெனில் நான் உண்மையைப் பேசுகிறேன்.

மேலும் ஒரு விஷயத்தை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். தனித்தனியாகப் பேசுவதில் நான் தனிமனிதர்களுக்கு இடமளிக்காமல் இருந்து விட்டேன் என்று எவரும் உணரக்கூடாது என்பதற்காக, அனைவரின் முன்னிலையிலும் தனி நபர்களிடம் கேட்பேன். தனிப்பட்ட சிரமங்களை நான் திருப்திப்படுத்த முயற்சிப்பேன். ஆனால் எவருக்கும் எந்த சலுகையும்

கொடுக்க மாட்டேன். எனவே, இன்று நான் ஒவ்வொருவரிடமும் அவரவர் தனிப்பட்ட சிரமங்களைப் பற்றிக் கேட்பேன்; ஆனால் நிபந்தனைகளை நினைவில் கொண்டு, முரண்படக்கூடிய சிறப்பு சலுகைகள் குறித்த கேள்வி எதுவும் இருக்க முடியாது.

திடீரென, தெளலத் ஸிங்கின் பக்கம் திரும்பிய பாபா, அவர் கன்னத்தில் அறையுமாறு கட்டளையிட்டார். தெளலத் ஸிங் சிறிதும் மனம் தளராமல் அதைச் செய்ததும், பாபா மிக்க மகிழ்ச்சியடைந்தார். பாபா அனைவரையும் தனது முன்னால் நிற்கச் செய்து, கைகளால் அவர்களின் கால்களைத் தொட்டார்.

அனைவரின் முன்னிலையிலும் **'ஒவ்வொருவருடைய கஷ்டங்களையும் அறிந்து கொள்வேன்'** என்று பாபா கூறியபோது, பெரும்பாலான தோழர்கள் தங்கள் மனதையும் இதயத்தையும் சுதந்திரமாக அவருக்கு முன் திறந்து வைக்கும் எண்ணத்தில், தனிப்பட்ட நேர்காணல்களை விரும்பியதால், பாபா அதற்கு இணக்கம் தெரிவித்து அனைவரையும் வெளியே அனுப்பி, ஒவ்வொரு தோழரையும் அழைத்தார். ஆதி சீனியரைத் தவிர, பிற அனைவரும் பாபாவுடன் செல்வதற்கான தங்கள் முடிவை மீண்டும் உறுதிப்படுத்தியதால், அவர்களின் தனிப்பட்ட கவலைகளைப் பொருட்படுத்தாமல் நேர்காணல்களை சுருக்கமாக நிறைவு செய்தார்.

ஆதியின் நேர்காணலுக்குப் பிறகு, பாபா அனைவரையும் அழைத்து, **"ஆதிக்கு ஒரு தவறான புரிதல் இருந்தது, அதை நான் நீக்கிவிட்டேன். இப்போது இறுதி வரை அவரது எரிச்சலான மனநிலையையும், மனதையும் அவருடைய கட்டுப்பாட்டில் வைத்திருக்க கடவுள் அவருக்கு உதவட்டும். ஆதி இப்போது திருப்திகரமாக உணர்கிறார், மேலும் அவரது மனநிலையை மகிழ்ச்சியாக வைத்திருக்க அவர் 100 சதவீதம் முயற்சிப்பார்; நான் அவருக்கு எந்தவிதமான வாக்குறுதியும் அளிக்கவில்லை."**

கிணற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வருவதற்காக நியமித்த நான்கு நபர்கள் போதுமானதாக இல்லை என்ற டாக்டர் நீலுவின் புகாருக்குச் செவி சாய்த்து - அவர் நீர் விநியோக மேலாளராக இருப்பதால் - வேலை தொடர்பான தனிப்பட்ட சிரமங்களைச் சமாளிக்கும் வகையில் பாபா சில மாற்றங்களைச் செய்தார்.

அதைத் தொடர்ந்து, விரைவில், தெளலத் ஸிங் பாபாவிடம் 'இரண்டு மாத விடுப்பு எடுக்க முடியுமா?' என்ற கோரிக்கையை முன்வைத்தார்.

அவர், பெங்களூரில் சில குடும்ப விவகாரங்களைத் தீர்த்துவைக்க விரும்பினார். பாபா அவரைப் பரிதாபமாகப் பார்த்து, **"உங்களுக்கு இன்னும் 'புது வாழ்வு' நிபந்தனைகள் குறித்த முறையான புரிதல் இல்லையா? நான் உங்களை மன்னித்து, மறுபரிசீலனை செய்ய மாலை வரை அவகாசம் தருகிறேன்"** என்று பதிலளித்தார்.

அன்று மாலை, இன்னும் கவலையும் குழப்பமுமாக இருந்தாலும், தெளலத் ஸிங், பாபாவிடம், "நான் உங்களுடன் மட்டுமே இருக்க விரும்புகிறேன்" என்றார்.

பாபா, **"உங்கள் கவலைகளை மறந்து விடுங்கள், மகிழ்ச்சியான மனநிலையில் இருங்கள், முழு மனதுடன் உங்கள் கடமையைச் செய்யுங்கள்"** என்று அறிவுறுத்தினார்.

தனிப்பட்ட புகார்களைக் கருத்தில் கொண்டு, பாபா ஒவ்வோர் ஆண், பெண்மணிகளுக்கும் கூடுதலாகப் போர்வை ஒன்றை வழங்கினார். டான் கொசு வலை ஒன்றைப் பெற்றுக் கொண்டார், மேலும் ஏழு தோழர்களுக்கு, கொசுக்களிடமிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள வெண் போர்வைகள் வழங்கப்பட்டன. சில தோழர்களிடம் போதிய ஆடைகள் இல்லை என்று தெரிவிக்கப்பட்டதை அடுத்து, பாபா, அஹமதுநகரிலிருந்து பெல்காவ்மிற்கு மேற்கொண்ட பயணத்தின் போது அணிந்திருந்த ஆடைகளை அவரிடம் ஒப்படைப்பதற்கு பதிலாக அந்தத் தோழர்களே அணிந்து கொள்ளலாம் என்று கட்டளையிட்டார்.

அதைத் தொடர்ந்து பாபா கூறினார், **"தேர்ந்தெடுக்கப்பட்ட சிலருக்கு மட்டுமே படுக்கை விரிப்புகள் வழங்கப்பட்டதில் நான் மிகவும் திருப்தி அடையவில்லை. அது உண்மையிலே பாரபட்சமாக இல்லை என்றாலும் அவ்வாறு தோன்றியது; ஏனெனில், புது வாழ்வில், ஒவ்வொரு நபரும் சமமாக நடத்தப்பட வேண்டும். சிறியவர் அல்லது பெரியவர் என்ற நிலைப்பாட்டிற்கு இடந்தரவே கூடாது."**

பாபா, விஷ்ணுவிடம் அனைவருக்கும் போர்வைகளை வாங்கச் சொல்லி, டானைப் பற்றி இவ்வாறு குறிப்பிட்டார்: **"டான் விஷயத்தில், அவருக்குக் கொசுவலை வழங்கியதை அதிகப்படியான சலுகையாகவோ அல்லது பாரபட்சமாகவோ பார்க்கக்கூடாது. பிற ஆண் தோழர்களுடன் ஒப்பிடுகையில், அவர் மிகுந்த சிரமங்களை எதிர்கொண்டாலும் முணுமுணுப்பதில்லை, மாறாக, அவர் மிகவும் நல்ல மகிழ்ச்சியான, முகமலர்ச்சியான மனநிலையுடன் இருப்பதை நான் காண்கிறேன். அவரது உணவின் ரசனைகள் உட்காருவது, தூங்குவது, கழிப்பறை மற்றும் நீராடுவது போன்ற பழக்கவழக்கங்கள் முற்றிலும் வேறுபட்டவை. கடினமான வாழ்க்கையை மேலும் கடினமாக்காமல், அவருக்கென சிலவற்றைக் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது, அது உண்மையில் ஒரு சலுகையோ அல்லது பாரபட்சமோ அல்ல."**

பாபா பின்வரும் அட்டவணையை நிர்ணயித்து, தோழர்களுக்கு இறுதிக் கடமைகளை வழங்கினார்:

காலை 5:30 மணி - படுக்கையிலிருந்து எழல்.

6:00 மணி - தேநீர்

காலை 11:30 - மதிய உணவு

மதியம் 2:15 - தேநீர்

மாலை 6 மணி - இரவு உணவு

இரவு 8 மணி - தூக்கம்

விஷ்ணு, முரளி: பஜாருக்குச் சென்று வேண்டியவற்றை வாங்கி வருதல்.

காக்கா, பைதூல்: சமையல்; நேரம் கிடைக்கும் போது முரளி உதவுவார்.

எரச், தெளலத் ஸிங்: பாத்திர பண்டங்கள் சுத்தம் செய்தல்.

நீலு, ஆதி, பெண்டு, அலோபா, டான்: ஆண், பெண்மணிகளுக்கு தண்ணீர் விநியோகம்.

டான்: தபால் மற்றும் தொலைத்தந்திக்காக காலையில் ரயில் நிலையத்திற்குச் செல்வது, வளாகத்தில் புல் வெட்டுவது.

அன்று இரவில், தெளலத் ஸிங் மனக்கொந்தளிப்பில் காணப்பட்டார்; உண்மையில் அவர் தவறு செய்தாரா என்று சக தோழர்களிடம் கேட்டு, கவலைப்பட்டார். அவருக்குப் பாத்திர பண்டங்களை எப்படி சுத்தம் செய்வது என்று தெரியவில்லை, ஆனால் அவர் இன்னும் அயராமல் முயற்சி செய்து கொண்டிருந்தார், அவ்வாறு செய்யும்போது அவரது ஆடைகளில் ஆங்காங்கே அழுக்குப் பற்றிக்கொண்டது. பாபா மீது அவர் கொண்டிருந்த அன்பு பிறருக்கு எடுத்துக்காட்டாக அமையக்கூடியது. இந்தியா - பாகிஸ்தான் பிரிவினையின் போது தனது மருத்துவப் பயிற்சி மற்றும் தனக்குச் சொந்தமான அனைத்தையும் இழந்த அவர், முழுக் குடும்பத்தையும் இக்கட்டான சூழ்நிலையில் விட்டுவிட்டு பாபாவுடன் புது வாழ்வில் இணைந்தார்.

பாபா, அவரை இரவில் நோட்டமிட்டு பரிசோதிக்க எரச்சை அனுப்பி வைத்தார். தெளலத் ஸிங் அழுதுகொண்டிருப்பதைக் கண்டு எரச் என்ன விஷயம் என்று கேட்டார். "நான் பாபாவை அதிருப்தியடைய செய்துவிட்டேனோ என்று நினைக்கிறேன்" என்று அவர் பதிலளித்தார்.

மீண்டும், பாபா விரும்பியபடி, "உங்கள் குடும்பம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் ஏதேனும் உள்ளனவா என்று பாபா அறிய விரும்புகிறார்" என எரச் கேட்டார்.

புது வாழ்வு நிபந்தனைகளின்படி எதையும் ரகசியமாக வைக்கக்கூடாது, பொய் பேசக்கூடாது. எனவே, தெளலத் ஸிங் ஒப்புக்கொண்டார், "பாபாவிற்கு எனது குடும்பத்தின் துயரம் தெரியும், அதனால் நான் அதைப் பற்றி கவலைப்படவில்லை. ஆனால் நான் புது வாழ்வில் வந்திணைவதற்கு முன்னர், எனது மகளின் திருமணத்திற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்துவிட்டு

வந்தேன், நான் இல்லாத நேரத்தில் என்ன நடக்கும் என்று யோசித்துக் கொண்டிருந்தேன். இப்போது நான் அதைப் பற்றி நினைக்கக் கூட இல்லை. நான் பாபாவை எந்த விதத்திலும் அதிருப்திக்குள்ளாக்க விரும்பவில்லை. புது வாழ்வு நிபந்தனைகளை முழுமையாகப் பின்பற்றுவேன்."

எரச் இதை பாபாவிடம் தெரிவித்தபோது, அவர் எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை.

சதாஷிவ், பாபாதாஸ் இருவரும் 26ஆம் நாள் பெனாரஸுக்குச் செல்லவிருந்தனர், அவர்கள் பெனாரஸில் தங்கியிருப்பது குறித்த இறுதி அறிவுரைகளை வழங்குவதற்காக, பாபா அன்று காலை ஆண் தோழர்களின் குடிலுக்கு வந்தார். **"நவம்பர் 25 முதல் அடுத்த 20 நாட்களுக்கு நாம் தங்குவதற்குப் பொருத்தமான இடத்தைக் கண்டுகொள்வதோடு, இரண்டு பெண் கழுதைகள் மற்றும் இரண்டு மாடுகளைக் கண்டுபிடித்து வாங்கவும்"** என்று பாபா அவர்களிடம் கூறினார்.

சதாஷிவ், பாபாதாஸ் ஆகியோரின் தனிப்பட்ட குணங்களை அறிந்த பாபா, **"ஒருவருக்கொருவர் நட்பாக இருங்கள், ஒழுங்காக நடந்து கொள்ளுங்கள். பிற தோழர்களைப் போல, செய்தித்தாள்களைப் படிக்கவோ அல்லது அரசியலைப் பற்றி விவாதிக்கவோ வேண்டாம். நல்ல, சுத்தமான உணவை உண்ணுங்கள், உங்கள் ஆரோக்கியத்தைப் பேணி, உதவியாக இருங்கள். மேலும் ஒருவருக்கொருவர் ஒத்துழைத்து, நோய்வாய்ப்பட்டால், ஒருவரையொருவர் கவனித்துக் கொள்ளுங்கள்"** என்று அறிவுரை வழங்கினார்.

தொடர்ந்து, பாபா விளக்கினார், **"நாம் பெனாரஸில் 20 நாட்கள் தங்குவதற்கு, காக்காவிடம் ரூ 500 மட்டுமே உள்ளது. பாபாதாஸின் நண்பர் அல்லது பரிச்சயமான ஒருவரைக் கண்டுபிடிக்க முயற்சிக்கவும்; அவர் விரும்பினால், முழு ரூ 500ஐயும் நேரடியாக வழங்க முடியும். எனக்கும் தோழர்களுக்கும், இந்த நிபந்தனைகளின் கீழ், அவரால் முடிந்த தரமான உணவு வகைகளில் 20 நாட்களுக்கு ஒவ்வொரு நாளும் பல முறை, உணவளிக்க வேண்டும்.**

"அவர் இந்த சேவையை எந்தவித கடமை உணர்வுமின்றிச் செய்ய வேண்டும். (எனது) தரிசனம் அல்லது சேவை குறித்த எந்தக் கேள்வியும் அவரது மனதில் எழக்கூடாது. அத்தகைய சேவையை முற்றிலும் வணிக ரீதியாகச் செய்வதாகக் கருத வேண்டும்."

இந்த அறிவுறுத்தல்களுடன், இருவரும் பெனாரஸ் புறப்பட்டனர். ஒரு நண்பர் அல்லது பரிச்சயமான ஒருவரை தொடர்பு கொள்ளுமாறு பாபா கூறியது குறிப்பிடத்தக்கது என்பது பின்பு புலனானது.

அன்று மாலையில் மீண்டும் தெளலத் ஸிங் பற்றிய கேள்வி எழுந்தது. பாபா மறுபடியும் கூறினார், **“என்னுடைய உதவி தொடர்பான வாக்குறுதி டிசம்பர் இறுதி வரை நீடிக்கும். இருப்பினும், இது குறித்த கேள்வி பரஸ்பரமானது. நான் உங்களுக்குத் தீவிரமாக உதவி செய்கிறேன், நீங்களும் எனக்கு உதவ வேண்டும். நான் எந்த நேரத்திலேனும் கோபமாக இருந்தால், நீங்கள் சாதுரியமாக எனக்கு கோபம் வருவதை நினைவூட்டுங்கள். இந்தப் பரஸ்பர உதவி டிசம்பர் மாதம் வரை தேவைப்படும்.**

“1950 ஜனவரி 1ஆம் நாளுக்குப் பிறகு ‘புது வாழ்வு’, காற்றில் ஊசலாடும்!

“இந்தப் புது வாழ்வில், நாம் மனதின் தூண்டுதலுக்குச் செவிடாக இருந்து, இதயத்தின் குரலுக்குச் செவிமடுப்போம். உடல் தன்னைத்தானே கவனித்துக் கொள்ளும். அதுதான் நிஜ வாழ்க்கை - இப்போது இருப்பதைவிட எண்ணற்ற விதத்தில் வித்தியாசமான வாழ்க்கை.”

தெளலத் ஸிங்கை நோக்கி பாபா முடிவாகக் கூறினார்: **“உங்கள் குடும்ப சூழ்நிலைகள் மற்றும் இரண்டு மாதங்களுக்குள் வீடு திரும்புவதற்கான உங்கள் கோரிக்கையைக் கருத்தில் கொண்டு, நீங்கள் ஒரு முடிவை எடுக்க உதவுவதற்காக, இதுவரை நான் உங்களுக்கு அறிவுரை வழங்கினேன். உங்கள் வாழ்க்கையைப் பற்றி, எனது சபதம், உங்கள் உறுதிமொழி மற்றும் புது வாழ்வின் நிபந்தனைகளுக்கு இணங்க இன்றிரவு நான் தீர்மானிப்பேன். நாளை காலை எனது முடிவு உங்களுக்கு என் கட்டளையாக இருக்கும், அதை நீங்கள் 100 சதவிகிதம் கடைப்பிடிக்க வேண்டும். இப்போது கவலைப்படாமல் நிம்மதியாக தூங்குங்கள்.”**

மறுநாள் காலை, ஆண் தோழர்களின் குடிலுக்கு வந்த பாபா, முதல் வேலையாக பெங்களூர் செல்லும் ரயில்களின் கால அட்டவணையைக் கேட்டார். காலை 9:00 மணிக்கு ஒரு ரயில் புறப்படுவதாக விஷ்ணு கூறினார். தெளலத் ஸிங்கை அழைத்து, அனைத்து தோழர்கள் முன்னிலையில், பாபா இவ்வாறு கூறினார்:

எனது நண்பரே, கவனமாகக் கேளுங்கள்! நீங்கள் பழைய வாழ்க்கைக்குத் திரும்ப வேண்டும் என்று நான் இப்போது முடிவு செய்துள்ளேன். உங்கள் மீது எந்தத் தவறும் இல்லாமல், நீங்கள் எனக்கும் எந்தத் தவறும் இழைக்காத நிலையில், உங்களை நான் அனுப்புகிறேன். நான் யாரை, எந்தத் தவறும் இல்லாமல் பழைய வாழ்க்கைக்குத் திருப்பி அனுப்புகிறேனோ, அவர்கள் ‘ஆமாம்’ அல்லது ‘இல்லை’ குழுக்கள் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை.

நான் இப்போது உங்களுக்கு வழங்கும் 100 சதவிகித கட்டளைகளுக்கு நீங்கள் கீழ்ப்படிந்து, பின்பற்றினால், எனது புது வாழ்வை

100 சதவிகிதம் பகிர்ந்து கொள்வீர்கள். இரண்டு தனிப்பட்ட கருத்துக்கள் எப்போதும் உங்களைக் கட்டுப்படுத்தும்: முதலாவதாக, நீங்கள் எதிர்கொள்ளும் ஒவ்வொன்றுக்கும் பொறுப்பு, கடவுளின் முன்னால், உங்களுடையது மட்டுமாகவே இருக்கும். இரண்டாவதாக, பொருள் சார்ந்த அல்லது ஆன்மீக பலனை என்னிடம் எதிர்பார்க்கக் கூடாது. ஆனால், நான் எனது சொந்த விருப்பத்தின் பேரில், இப்போது உங்களைத் திரும்ப அனுப்புவதால், நீங்கள் என்னை என்னவாகக் கருதுகிறீர்களோ, அதுவாகவே நான் இருந்தால், என்னுடனான உங்கள் ஆன்மீகத் தொடர்பு பழையபடியே இருக்கும்.

உங்களுக்கான சிறப்பு கட்டளைகள்:

1. நீங்கள் உயிரைத் துறக்கும் வரை, உங்கள் மனைவியுடன் கூட காமச் செயலில் ஈடுபடாதீர்கள்.
2. பின்விளைவுகள் எதுவாக இருந்தாலும் பொய் பேசாதீர்கள்.
3. ஒவ்வொரு வருடமும் ஒரு மாதம் நான் உங்களுக்கு வழங்கும் மேலங்கியை அணிந்துகொண்டு, அந்த மாதம் முழுவதும் உணவுக்காக யாசித்து, கிடைத்ததை உண்டு வாழ வேண்டும். யாசிக்கும் நேரத்தையும் இடத்தையும் நீங்களே தீர்மானிக்கலாம்.

இந்த மூன்று கட்டளைகளையும் நீங்கள் 100 சதவிகிதம் கடைப்பிடித்தால், நீங்கள் எனது புது வாழ்வை 100 சதவிகிதம் பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று, நான் என்னுடன் அழைத்து வராதவர்களுக்கும், பாதிரி போன்ற 'இல்லை' குழுவைச் சார்ந்தவர்களுக்கும், நான் வழங்கியதை உங்கள் அனைவருக்கும் தெரிவிக்க விரும்புகிறேன். மெஹர்ஜியிடம், இவர்களில் ஒவ்வொருவருக்காகவும் - அதே போல் நான் இப்பூதவுடலை துறக்கும் வேளையில் என்னுடன் இருப்பவர்களுக்கும், எந்தத் தவறும் இழைக்காமல் நான் யாரைத் திருப்பி அனுப்புகிறேனோ அவர்களுக்கும் ரூ 1,000 பாதுகாப்புத் தொகையாக வழங்கியுள்ளேன். எனவே, இன்று நான் உங்களுக்கு (தெளலத் ஸிங்) எனது கையெழுத்துடன் ஒரு குறிப்பைத் தருகிறேன். முதலில் பெங்களூருக்குச் செல்லுங்கள், மெஹர்ஜியிடமிருந்து ரூ 1,000 பெறுவதற்கான கடிதத்தைக் காட்டி, அங்கிருந்து கூடிய விரைவில் மும்பைக்குச் செல்லுங்கள். இந்தத் தொகையை உங்கள் குடும்பச் செலவுகளுக்குப் பயன்படுத்தலாம். அதன் பின்னர் உங்களுக்கு என்னோடு பொருள் சார்ந்த சம்பந்தம் எதுவும் இராது.

அங்கீகாரக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டதும், தெளலத் ஸிங் கனத்த இதயத்துடன் புறப்பட்டார், ஆனால் அவர் உண்மையில் பாபாவிடம் இருந்து விலகி, புது வாழ்வை வாழத் தொடங்கினார். தெளலத் ஸிங்கைத் தனது

குடும்பத்தினருடன் வாழச் செய்து, பாபா அவரைத் தனது வாக்குறுதிக்கு இணங்க உண்மையாக வழிநடத்தினார்.

அன்று பிற்பகலில் பாபா குடிலில் இருந்த ஆண் தோழர்களை சந்தித்து, **"எப்படி, எப்போது ஆலோசனைகளை வழங்குவது என்பது தொடர்பாக அனைவருக்கும் நான் விளக்க விரும்புகிறேன். டிசம்பர் இறுதி வரை, அனைவருக்கும் உதவியாக இருக்கும் பொதுவான விஷயங்களைப் பற்றிய ஆலோசனைகளை வழங்கலாம். தனிப்பட்ட விஷயங்களைப் பற்றி நானே உங்களைக் கேட்கும் வரை, எந்த ஆலோசனையும் வழங்க வேண்டியதில்லை. ஒருவருடைய தனிப்பட்ட சிரமங்களைப் பற்றி நானே விசாரிக்கும் வேளையில் மட்டுமே, அவருடைய சிரமத்தை நேர்மையாகவும், ஒளிவு மறைவின்றி உண்மையாகவும், வெறுப்புணர்வு இல்லாமல் அல்லது மிகைப்படுத்தாமல் என்னிடம் சொல்ல வேண்டும்.**

இந்தக் காலக்கட்டத்தில், பாபா ஒவ்வொருவரின் ஆரோக்கியத்தையும் தினமும் விசாரித்தார். விஷ்ணு முழங்காலில் வாத நோயால் அவதிப்பட்டதால், 28ஆம் நாள், பாபா, டாக்டர் டானிடம் மருந்துக்காக ஐந்து ரூபாயும், கம்பளி துணியால் கட்டுப்போட மூன்று ரூபாயும் செலவழிக்க அனுமதித்தார்.

அன்றைய நாளின் பிற்பகுதியில், பாபா ஆண் தோழர்களை அழைத்துக் கூறினார்:

இன்று நான், 1950 ஜனவரி 1க்குப் பிறகான புது வாழ்வைப் பற்றி இதுவரை விவாதிக்கப்படாத ஒன்றை விளக்க விரும்புகிறேன். ஜனவரி 1க்குப் பிறகு, சில நேரங்களில் நான் செய்யக்கூடிய சில விஷயங்களை உங்களிடமும் செய்யச் சொல்லலாம்.

சில நேரங்களில், நான் செய்யாத காரியங்களையும் செய்ய வைப்பேன். இரண்டிலும், நாம் அனைவரும் புது வாழ்வைப் பகிர்ந்து கொள்வோம்.

நான் எதையும் செய்யலாம், மேலும் எதையும் செய்யும்படி உங்களிடம் கேட்கலாம்; இதில் நீங்கள் எனது கட்டளைகளுக்கு உடனடியாகக் கீழ்ப்படிய வேண்டும். நான் கற்பனை செய்த புது வாழ்வின் காட்சி உண்மையாக இருந்தால், அசாதாரணமான மற்றும் இயல்பு நிலைக்கு மாறான காரியங்கள் என்னால் செய்யப்படும் அதே வேளையில் உங்களாலும் செயல்படுத்தப்படும். வழக்கமான, சாதாரணமான மற்றும் இயல்பான விஷயங்களையும் நீங்களும் நானும் செய்வோம். அசாதாரணமான மற்றும் இயல்பு நிலைக்கு மாறான காரியங்கள் என்றால் என்ன என்பதன் அர்த்தத்தை இப்போது என்னால் சொல்ல முடியாது, ஏனெனில் எனக்கே அது தெரியாது. எனக்கு இது மட்டும் தெரியும், அசாதாரணமான மற்றும் இயல்பு நிலைக்கு மாறான காரியங்கள்

பெரும்பாலான நேரங்களில் நடக்கும். இத்தகைய நிகழ்வுகள் புது வாழ்வையும் அதன் இடர்பாடுகளையும் மகிழ்ச்சிகரமாக மாற்றும். புது வாழ்வு, அதன் கடுமையான இடர்பாடுகளுடன், உள்ளேயும் வெளியேயும் 'ஈரமாக' (மகிழ்ச்சிகரமாக) இருக்கும் என்று நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன்!

சாதாரணமான, இயல்பான, வழக்கமான விஷயங்கள் மற்றும் நிகழ்வுகள் என்பதைக் குறித்து நான் என்ன சொல்கிறேன் என்பதற்கு, இப்போது சில எடுத்துக்காட்டுகளைத் தருகிறேன். இருப்பினும், ஜனவரி 1 முதல், நிபந்தனைகளும் உத்தரவுகளும் உங்களுக்கும் எனக்குமான புது வாழ்வின் 100 சதவீத அடித்தளமாக இருக்கும் என்பதை நீங்கள் அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்; இருந்தும் நான் இந்த நிபந்தனைகளிலிருந்து முற்றிலும் விடுபட்டுள்ளேன்.

சாதாரணமான, இயல்பான, வழக்கமான நிகழ்வுகளின் எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு:

பழைய வாழ்வின் செயல்பாடுகளான மஸ்துகளையும், சாதுக்களையும் தொடர்புகொள்வது போன்ற அனைத்தும் முடிவுக்கு வந்துவிட்டன என்பதை நீங்கள் அறிவீர்கள். இருந்தாலும், புது வாழ்வில் நாம் எங்குச் சென்றாலும், நான் மஸ்துகளைப் பார்க்கிறேன், உங்களையும் மஸ்துகளைப் பார்க்க வைக்கிறேன். நான் சாதுக்களைப் பார்க்கும் அதே வேளையில் உங்களையும் சாதுக்களைப் பார்க்கச் செய்யலாம். நான் புனிதர்களை தரிசித்து, உங்களையும் அவர்களை தரிசனம் செய்ய வைக்கலாம். உங்களில் எவரையேனும் ஒரு யோகியின் குடிலுக்குச் சென்று, அவர் அனுமதித்தால், அவருடன் இரவைக் கழிக்குமாறு நான் கேட்கலாம். நான் உங்களை ஒரு மஜ்ஜூப்பை நீராட்ட அல்லது யோகியின் குகையில் அமரச் சொல்லலாம். இந்த நிகழ்வுகள் மற்றும் இது போன்ற பல நிகழ்வுகள் புது வாழ்வின் சாதாரணமான, இயல்பான, வழக்கமான நிகழ்வுகளை உருவாக்கும். அசாதாரணமான மற்றும் இயல்பு நிலைக்கு மாறான விஷயங்களைப் பொறுத்தவரை, அவை உங்களை, துன்பத்தை முகமலர்ச்சியுடன் அனுபவிக்க வைக்கும் என்பதைத் தவிர என்னால் வேறு எதுவும் சொல்ல முடியாது.

இது உங்களுக்கு ஓர் உட்கருத்தை வழங்குவதோடு, 100 சதவீதம் எனக்குக் கீழ்ப்படிவதன் மூலம் எனக்கு உதவ, உங்களை தயார்படுத்தவும் வழிவகுக்கும். நீங்கள் அனைவரும் நான் சொல்வதை, எந்தத் தயக்கமும் இல்லாமல் செவ்வனே செய்தால், நான் இப்போது உங்கள் அனைவருக்கும் உதவ முயல்வது போல, நீங்களும் எனக்கு உதவுவீர்கள்.

இதுவே எனது கடைசி விளக்கம்; நவம்பர் 20 அன்று நாம் இந்த இடத்தை விட்டு வெளியேறும் வரை இது போன்ற விளக்கங்கள் வேறு எதுவும் இல்லை.

அதைத் தொடர்ந்து பாபா, குஸ்தாஜியுடன் இணைந்து ஆண் தோழர்களின் குடிலைத் துடைத்து சுத்தம் செய்தார். குஸ்தாஜி அதை ஒரு நாளைக்கு சில முறை துடைத்து சுத்தமாக வைத்திருக்க வேண்டும். பெல்காவ்மை சென்றடைந்த நாள் முதல், பாபா, குடிலைத் துடைப்பது, பானைகளை சுத்தம் செய்வது, சமையலறையில் உதவி செய்வது, தலைமேல் பொருட்களை சுமந்து செல்லும் தொழிலாளியைப் போலப் பணிபுரிவது, அனைவருக்கும் அவர்களின் வேலைகளில் கைகொடுத்து உதவுவது போன்ற பணிகளில் ஈடுபட்டார். அதுமட்டுமின்றி, தினமும் பாபா டோலக்கை இசைக்க, ஆதி சீனியர் பாடி, ஹார்மோனியத்தில் பக்கத் துணையாக இருந்து, டாக்டர் நீலு உலோகத் தட்டுகளைக் கைவிரல்களால் இசைத்து நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

மதியம் தேநீருக்குப் பிறகு, பயிற்சி காலம், பரஸ்பர உதவியைச் சார்ந்தது என்பதை பாபா மீண்டும் எடுத்துரைத்தார்: **"நான் உங்களுக்கு உதவ முயற்சிப்பதால், நீங்களும் எனக்கு உதவ வேண்டும். அதனால்தான், நான் கோபப்படுவதைப் பார்த்ததும், நீங்கள் எனக்கு நினைவூட்ட வேண்டும் என்று சொன்னேன். நான் கட்டளையிடும் போது, எனது பௌதீக உடலுக்குக் கூட, எதையும் விருப்பத்துடன், எந்தத் தயக்கமுமின்றி செய்வதே மிகப்பெரிய உதவியாக இருக்கும்.**

"உதாரணமாக, நான் எவருடைய காலிலும் எனது தலையை வைக்க வேண்டும் என்றால், அவர் அதை மனப்பூர்வமாக அனுமதிக்க வேண்டும்; நான் எவரையேனும் என்னை உதைக்க உத்தரவிட்டால், சிறிதும் உணர்ச்சிவசப்படாமல் அதைச் செய்ய வேண்டும். இதைத்தான் நீங்கள் எனக்கு செய்யும் உதவி என்று நான் கூறுகிறேன்."

முன்னதாக, 1949 செப்டம்பர் மாதத் தொடக்கத்தில், பாபா தனது தலைமையகத்திற்கு டெஹ்ராடூன், ரூர்க்கி (ROORKEE), ஹரித்வார் அல்லது ரிஷிகேஷ் அருகில், ஒரு சிறிய வீடும், கிணறும் இருக்கும் விதத்தில் பொருத்தமான இடம் ஒன்றைக் கண்டுபிடிக்குமாறு கேக்கி தேசாய்க்கு அறிவுறுத்தினார். பிரதான நகரத்திலிருந்து ஐந்து முதல் ஆறு மைல்கள் தொலைவில் இருக்க வேண்டும். அவருக்கு ஏற்கனவே பலரைத் தெரியும் ஆதலால், டெஹ்ராடூனுக்கு அருகிலமைந்த ஓர் இடத்தைத் தேர்ந்தெடுக்கலாமா என்று கேக்கி கேட்டதற்கு, பாபா ஒப்புதலளித்தார். இந்த வேலையைப் பற்றி எவரிடமும், அவரது மனைவி தூனிடம் கூட சொல்ல வேண்டாம் என்று

கேக்கி தேசாய் எச்சரிக்கப்பட்ட அதே வேளையில், கேக்கி நலவாலாவின் உதவியை அவர் பெற அனுமதிக்கப்பட்டார்; ஆனால் பாபா, எதிர்வரும் மாதங்களில் இந்தியாவின் வடக்குப் பகுதியில் குடியேற விரும்புகிறார் என்பதை நலவாலாவின் குடும்பத்தினர் கூட அறியவில்லை.

கேக்கி தேசாய் டெஹ்ராடூனுக்குத் திரும்பி வந்து, பாலக்ராம் (BALAKRAM) என்ற அவரது நண்பரைத் தொடர்புகொண்டு, பாபாவின் பெயரைக் குறிப்பிடாமல், ஒரு சொத்தைக் கண்டுபிடிப்பதில் உதவி கோரினார். ஒன்றாக, அவர்களும் நலவாலாவும் வெவ்வேறு இடங்களைப் பார்க்க ஒரு டோங்காவில் புறப்பட்டுச் சென்றனர். குறைந்த எண்ணிக்கையில் மக்கள் வாழ்ந்த கிராமப்புறப் பகுதி வழியாக பயணம் செய்து, பாலக்ராமுக்குத் அறிமுகமான நண்பர் ஒருவர் உதவ முடியும் என்ற நம்பிக்கையில், அவர்கள் 'மாஞ்ஜ்ரி மாஃபி' (MANJRI MAFI) கிராமத்திற்கு வந்தனர்.

பாலக்ராமின் நண்பர் அவரது வீட்டிற்கு எதிரே நாற்காலியில் அமர்ந்து, புகைப்பிடித்த வண்ணம், ஒரு நாவலைப் புரட்டிக் கொண்டிருந்தார். அவர்கள் அவரை அணுகி, "எந்த சூழ்நிலையிலும், இங்கே ஐந்து ஏக்கர் நிலத்தை வாங்க நீங்கள் எங்களுக்கு உதவ முடியுமா?" என வினவினர்.

"ஆமாம், முடியும் என நினைக்கிறேன்," என்று அந்த நண்பர் சாதாரணமாக பதிலளித்தார்.

"அதில் ஒரு சிறிய வீடு இருக்க வேண்டும்."

"சரி"

"மேலும் ஒரு கிணறு..."

"சரி, வேறு என்ன?"

"எங்களுக்கு உடனடியாக வேண்டும்!"

அந்த மனிதர் மிகவும் இணக்கமாக இருந்ததால், பாபா தங்களை அவரிடம் அனுப்பினார் என்று கேக்கி தேசாய் உறுதியாக நம்பினார். சில வார்த்தைகளின் பரிமாறலுக்குப் பின்னர், அவர்கள் அந்த நிலத்தைப் பார்வையிட விரும்பினர். அந்த மனிதர் அவர்களுக்கு நான்கு சொத்துக்களைக் காண்பித்தார். ஏற்கனவே இரண்டு சிறிய அறைகள் மற்றும் ஒரு வராந்தாவுடன் சிறிய குடிசை ஒன்று இருந்ததால், முதல் பார்வையில் கேக்கிக்கு நான்காவது சொத்து மிகவும் பிடித்திருந்தது. நிலம் முதலில் பாலக்ராமின் நண்பருக்குச் சொந்தமானதாக இருந்தாலும், அவர், அதே நிலத்தை இப்போது விற்க விரும்பும் லக்னோவில் வாழும் ஒரு வழக்கறிஞருக்கு, ஏற்கனவே விற்பனை செய்திருந்தார்.

கேக்கி நிலத்தின் சில புகைப்படங்களை எடுத்து பாபாவிற்கு ஒரு விரிவான கடிதத்துடன் அனுப்பி வைத்தார். பாபா, மிக்க மகிழ்ச்சியடைந்து, செப்டம்பர் இறுதியில் கேக்கியை மெஹராபாத்திற்கு அழைத்தார். கேக்கி வந்ததும், பாபாவிடம் அனைத்து விவரங்களையும் எடுத்துரைத்தபோது,

கேக்கியின் நான்காவது தேர்வு, தனக்கும் பிடித்திருப்பதாக பாபா கூறினார். அதை வாங்குமாறு கேக்கிக்கு அறிவுறுத்தப்பட்டதும், அவர் டெஹ்ராடூன் திரும்பி வந்து, குடிசைக்கு 9,000 ரூபாயும், ரூ 8,500 நிலத்திற்கும், ஏற்கனவே பயிரிடப்பட்டிருந்த கரும்பு மற்றும் கோதுமைக்கு கூடுதலாக ரூபாய் ஐநூறும் அளித்து விற்பனைப் பத்திரம் அதிகாரப்பூர்வமாக நிறைவேற்றப்பட்டது.

நிலத்தின் ஆவணங்கள் முடிந்த அவ்வேளையில், கேக்கி தேசாய் மீண்டும் அக்டோபர் 9 அன்று, மெஹராஸாத்திற்கு அழைக்கப்பட்டார். பாபா அவருக்கு நிலம், கிணறு வெட்டுதல், பழுதுபார்த்தல் மற்றும் பிற பணிகளுக்காக ரூ 28,000 வழங்கினார். மறுநாள் கேக்கி புறப்பட்டுச் சென்று, அவரும் உள்ளூர்வாசியும் உரிமையாளரை அணுகியபோது, பேரம் எதுவும் பேசாமல், கேக்கி தனது பெட்டகத்தைத் திறந்து, மேஜையில் ரூபாய் நோட்டுகளை அடுக்கி வைத்தார். ("இந்த நபர்கள் பிரிவினைக்குப் பிறகு பாகிஸ்தானிலிருந்து இந்தியாவிற்கு ஓடிய அகதிகள் என்று நான் நினைத்தேன்," என உள்ளூர்வாசி பின்னர் நினைவு கூர்ந்தார்.) விற்பனையாளர் ஆச்சரியத்துடன் ரசீது எழுதி அவர்களிடம் கொடுக்க, மறுநாள் விற்பனை பத்திரமும் பதிவு செய்யப்பட்டது.

ஒரு பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டது, ஆனால் வேறொரு பிரச்சினை கேக்கி முன் வந்தது. பாபா, மெஹராபாத்தில் அவருக்குக் கட்டளையிட்டதற்கு இணங்க, அவர் நிலத்தை வாங்குவதோடு, பாபா வருவதற்கு முன்னர், ஐந்து மாதங்கள் கைக்கோபாத் அங்குத் தங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். கைக்கோபாத்தின் உணவுக்கு ஏற்பாடு செய்யக் கூறி, பாபா கேக்கியிடம் மேலும் ரூ 500 கொடுத்தார்.

எனவே கேக்கி உள்ளூர் நபர் ஒருவரிடம், "எங்கள் நண்பர் ஒருவர் ஐந்து மாதங்கள் இங்கே தங்கப் போகிறார். நாங்கள் உங்களுக்கு ரூ 500 தருகிறோம், அவருக்குத் தேவையான உணவுக்கு ஏற்பாடு செய்ய முடியுமா?" என்று கேட்டார்.

அதற்கு அந்த நபர், "அவருடைய உணவுக்கு நான் ஏற்பாடு செய்ய முடியும், ஆனால் எனக்குப் பணம் கொடுக்க வேண்டிய அவசியமில்லை" என்று பதிலளித்தார்.

"இது பாபாவின் கட்டளை! பணம் செலுத்தாமல் உணவை ஏற்க முடியாது" என்று கேக்கி வலியுறுத்தினார்.

"எந்த பாபா?" என்று அவர் கேட்டார்.

"மெஹர் பாபா, எங்கள் குருநாதர்."

அவர் பெயரை நான் கேட்டதில்லை, "சரி, உங்கள் பாபாவின் விருப்பமாக இருந்தால், நான் பணத்தை ஏற்றுக்கொள்கிறேன்" என்று நகைச்சுவையாக பதிலளித்தார்.

கேக்கி அந்தத் தொகையை அவரிடம் ஒப்படைத்தபோது, இந்த விஷயத்திற்கும் தீர்வு காணப்பட்டது. ஆனால் அந்த நிலத்தில் கிணறு இல்லை.

அந்த மனிதர் ஒரு கிணறு வெட்டுவதற்கும் முன்வந்தார்; அவருடைய ஒத்துழைப்பாலும் உதவியாலும் கேக்கியும், நலவாலாவும் அளவிலா மகிழ்ச்சியுடன் ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர். பாபாவின் அற்புதமான ரகசிய நாடகத்தில் மனம் நிரம்பி வழிந்தது. பாபா தங்குவதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்ய அந்த மனிதர் காத்திருந்தது போலத் தோன்றியது.

அப்போதும் சிரித்துக்கொண்டே அந்த மனிதர், "யார் இந்த மெஹர் பாபா?" என்று கேட்டார்.

கேக்கி தேசாய் பதிலளித்தார், "அவர் ஒரு மகத்தான ஆளுமை மிக்கவர்; ஆனால் அவர் எவரையும் சந்திப்பதும் இல்லை, தரிசனம் வழங்குவதும் இல்லை. அவருடைய விருப்பத்திற்கிணங்க, அவரை சந்திக்க நாங்கள் உங்களை அனுமதிக்க முடியாது. மெஹர் பாபா, தனது தோழர்களுடன் வருவார், ஆனால் அவர் எவரையும் பார்க்க மாட்டார்."

அந்த நபர் குழப்பமடைந்து, மெஹர் பாபாவைப் பற்றி மேலும் விசாரிக்கும் முன்னர் அவர்கள் டெஹ்ராடூனுக்குப் புறப்பட்டுச் சென்று, மாஞ்ஜ்ரி மா◌ஃபி கிராமத்தில் நிலம் வாங்கியதைத் தெரிவித்து, பாபாவிற்குத் தொலைத்தந்தி அனுப்பிய பின்பு, கேக்கி டெல்லி திரும்பினார். கேக்கி நலவாலா அவ்வப்போது அந்த இடத்திற்குச் சென்று பழுதுபார்ப்புப் பணிகள் திட்டமிட்டபடி நடைபெறுவதை ஊர்ஜிதப்படுத்தி வந்தார்.

"யார் இந்த அநாமதேய உள்ளூர் உபகாரி?" காலம் தெரிந்துகொள்ள விரும்பியது. ஒரு காலத்தில் தீவிர கம்யூனிஸ்டாக இருந்த அவர், ஆங்கிலேயருக்கு எதிரான சுதந்திர போராட்டத்தில் கிட்டத்தட்ட பத்து ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்தவர். அவர் ஒரு புரட்சிகர சுதந்திர போராட்ட வீரர்; அரசாங்கத்தைக் கவிழ்க்க முயன்றதன் விளைவாக, இந்திய சுதந்திர இயக்கத்தில் பங்கெடுத்து, பல துன்பங்களை எதிர்கொண்டவர். சிறையில் அடைக்கப்பட்ட வேளையில் ஒரு கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கியதற்காக, அவர் கோடையின் நடுப்பகுதியில் கூடான தகரத் தகடுகள் மீது அமர வைக்கப்பட்டவர், தொடர்ந்து தனிமைச் சிறையில் தள்ளப்பட்டார்.

1945 டிசம்பர் மாதத்தில் ஒரு நாள் இரவு, தனது துயரமான நிலையை நினைத்து மனம் வருந்தி, இந்தப் பிரார்த்தனையைக் கூறிக் கதறினார்: "மிஸ்டர் கடவுளே (MR. GOD)! நீங்கள் உண்மையிலேயே இருந்தால், நாளை காலை சிறையிலிருந்து என்னை விடுவிக்கவும்! நான் அப்படி விடுவிக்கப்பட்டால், உங்களை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வேன்!"

இந்த மனிதர் ஒரு உறுதியான நாத்திகனாக இருந்தபோதிலும், அவரது தன்னிச்சையான திடீர் வெளிப்பாடு, அவரது ஆழ் இதயத்திலிருந்து வந்தது. 'மிஸ்டர் கடவுள்' அவருடைய பிரார்த்தனைக்கு செவிமடுத்தார்.

ஆச்சரியமாகவும் எதிர்பாராத விதமாகவும், அடுத்த நாள் அதிகாலையில் அவர் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார். அந்த நபர் வேறு எவருமல்ல, 'குமார்' (KUMAR) என்று அழைக்கப்படும் 'ஷத்ருகன் குமார் கில்டியல்' (SHATRUGHNA KUMAR GHILDIAL). மிஸ்டர் கடவுள் அவருடைய பிரார்த்தனைக்கு மட்டும் செவிசாய்க்கவில்லை - அவரை நேரில் பார்க்கவும் வரவிருந்தார்!

இதற்கிடையில், பெல்காவ்ம் நகரில், 1949 அக்டோபர் 29 சனிக்கிழமை காலை, 'மாஞ்ஜ்ரி மா:பி' நிலத்தைப் பற்றி விவாதித்தபோது, பாபா தோழர்களுக்கு இவ்வாறு விளக்கினார்:

ஹரித்வார் சொத்து, எரச், காக்கா பாரியா மற்றும் டெல்லியைச் சார்ந்த கேக்கி தேசாய் ஆகியோரின் பெயர்களில் வாங்கப்பட்டுள்ளது என்பது உங்களுக்குத் தெரியும். இது பெல்காவ்ம் சொத்தைப் போன்றது, ஆனால் அங்கு எலிகள் இருக்க வாய்ப்பில்லை! இந்த இடம் டெஹ்ராடூனிலிருந்து கிட்டத்தட்ட 4 மைல், மேலும் ஹரித்வாரிலிருந்து 28 மைல் தொலைவிலும் உள்ளது. இது டெஹ்ராடூன் - ஹரித்வார் சாலையில், இமயமலைப் பகுதியில் அமைந்த ரிஷிகேஷ், பாகீரதி (BHAGIRATHI), **தப்போவன்** (TAPOVAN) **மற்றும் பிற புனித ஸ்தலங்களிலிருந்து ஏறக்குறைய சம தூரத்தில் உள்ளது.**

புவியியல் ரீதியாக இந்தச் சொத்து ஹரித்வாரை விட டெஹ்ராடூனுக்கு மிக அருகாமையில் இருந்தாலும், ஒரு குறிப்பிட்ட காரணத்திற்காக நான் அதை 'ஹரித்வார் சொத்து' என்று அழைக்கிறேன். நம் அனைவருக்கும் புது வாழ்வு, ஹரித்வார், ரிஷிகேஷ் போன்ற இடங்களுடன் தொடர்புடையதாக இருக்கும் தருணத்தில், ஒப்பீட்டளவில் டெஹ்ராடூனுக்கு ஒரு சதவீத முக்கியத்துவம் மட்டுமே இருக்கும்.

இந்த ஹரித்வார் சொத்து 'மாஞ்ஜ்ரி மா:பி' (பூனைகள் மன்னிக்கப்படுகின்றன என்று அர்த்தம்) **எனும் கிராமத்தில் அமைந்துள்ளது. எனவே** (பாபா கேலி செய்தார்) **ஒருவேளை இது, அங்கு எலிகள் ஏதும் இல்லை என்பதை அடையாளப்படுத்துகிறது!**

தொடர்ந்து பாபா கூறியதாவது:

இந்த ஹரித்வார் நிலம் இரண்டு அறைகள், ஒரு வராந்தா, சமையலறை, குளியலறை ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு சிறிய அமைப்பு. எல்லாம் நன்றாக இருக்கிறது. எதுவாயினும் வாங்கப்பட்ட அந்த நிலத்திற்கு உயில் தயார் செய்து, அது இப்போது ராம்ஜூவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உயிலின் உள்ளடக்கங்களை நீங்கள் அனைவரும் அறிந்திருக்க வேண்டும், ஏனெனில் இந்தப் புது வாழ்வில் எல்லாமே வெளிப்படையாகவும் ஒளிவு மறைவின்றியும் இருக்க வேண்டும், எதைப் பற்றிய இரகசியமும் அதில் இல்லை.

நான் சொன்னது போல் எரச், காக்கா, கேக்கி தேசாய் பெயர்களில் சொத்து வாங்கப்படுகிறது. அவர்களில் ஒருவர் உயிரைத் துறந்துவிட்டால், மீதமுள்ள இருவரும் அதைப் பயன்படுத்துவார்கள் அல்லது நிர்வகிப்பார்கள். அவர்களில் இருவர் உயிரைத் துறக்க நேர்ந்தால், எஞ்சியிருப்பவர் அதை நிர்வகிப்பார். மூவரும் மறைந்தால், சொத்து தானாகவே நான்கு 'ஏற்பாடு குழு' உறுப்பினர்கள் வசம் செல்லும். இது அனைத்தும், புரிந்து கொள்ளும் விதத்தில் மிகவும் தெளிவாக உள்ளது. மேற்கூறிய மூன்று நபர்களின் பெயரில் சொத்து உள்ளது; இது தனியார் உரிமையின் மூலம் அவர்களுக்கு சொந்தமானது அல்ல. அவர்களில் ஒருவர், இருவர் அல்லது அனைவரும் உயிரைத் துறந்தால், சொத்து அவர்களின் சட்டப்பூர்வ வாரிசுகளுக்கு ஒருபோதும் செல்ல முடியாது - அது அவர்களின் வாழ்நாளிலும் அவர்கள் மறைந்த பின்னர் அனைவருக்கும் பயன்படும்.

எனது மரணத்திற்குப் பிறகு, தோழர்கள், அவர்கள் விரும்பும் எதையும் செய்யலாம். அவர்கள் ஹரித்வார் மனையில் தங்கலாம் அல்லது தங்கள் சொந்த வாழ்க்கையை வாழ விரும்பலாம். ஒன்று மட்டும் தெளிவாக உள்ளது, நீலு போன்ற எனது தோழர்களில் ஒருவரேனும் அங்கேயே தங்க விரும்பினால், அவர் எந்தத் தடையும், இடையூறும் இல்லாமல் அதைச் செய்யலாம்.

டாக்டர் கனி கேட்டார், "அனைத்து தோழர்களும், 'ஏற்பாட்டுக் குழு' உறுப்பினர்களும் உயிரைத் துறந்த பின்பு, சொத்து என்னவாகும்?"

சிரித்துக்கொண்டே பாபா நகைச்சுவையாக பதிலளித்தார், "இது 'அகதா கிறிஸ்டி'யின் (AGATHA CHRISTIE) மர்ம கதைப் புத்தகம் மற்றும் 'தென், தெயர் வயர் நன்' (THEN, THERE WERE NONE) போன்றது! அனைவரும் மரணத்தை சந்திக்கும் வேளையில் இந்த விஷயங்களைப் பற்றி கவலைப்படுவானேன்? எதுவும் நடக்கட்டும்; யார் கவலைப்படப் போகிறார்கள்?"

விவாதத்தை மீண்டும் தொடர்ந்து. பாபா கூறினார்:

இப்போது இந்தியாவில் எதுவுமே எனக்குச் சொந்தமுமில்லை அல்லது எனது பெயரிலுமில்லை. பெல்காவ்மில் உள்ள 22 ஏக்கர் நிலம் முதலில் எனது பெயரில் இருந்தது. இது விஷ்ணுவின் உறவினரான (இந்துவின் கணவர்) விஸ்வநாத் ஹல்தங்கருக்கு, அவர் ஒரு சிறிய தொகையை வழங்குவதன் மூலம் மாற்றப்பட இருந்தது. ஆனால் விஷ்ணு ஓர் உன்னதமான ஆலோசனையை முன்மொழிந்தார்; தொகையைப் பெறுவதைத் தவிர, நிலத்தின் ஒரு பகுதியை - தற்போதைய கட்டமைப்புகள் அடங்கிய சுமார் நான்கு ஏக்கர் நிலத்தை - மெஹராவின் பெயரில் பதிவு செய்ய அனுமதிக்கப்பட வேண்டும். எனவே, இந்த ஏற்பாடு அங்கீகரிக்கப்பட்டது. மெஹரா, புது வாழ்வில் பங்கெடுப்பதாலும், இனி

ஒருபோதும் திரும்பி வரப்போவதில்லை என்பதாலும், இந்த நிலத்தை ஹல்தங்கர், சுஷீலா (இந்துவின் சகோதரி) மற்றும் 'ஏற்பாட்டுக் குழு' உறுப்பினர்கள் அனைவரும் பார்த்துக் கொள்ள வேண்டும். ஹரித்வார் நிலத்தின் சொத்து மேலாண்மை மற்றும் பயன்பாட்டின் நிபந்தனைகள் பெல்காவ்ம் மனைக்கும் பொருந்தும்.

இப்போது அனைத்து கேள்விகள், வாதங்கள், மறைமுகக் குறிப்புகள் மற்றும் சந்தேகங்களுக்கு முற்றுப்புள்ளி வைப்போம். நீங்கள் இப்போது கடந்து செல்லும் பயிற்சி காலத்திலும், நான் சொல்வதை, சந்தேகத்திற்கு இடமின்றி, பயிற்சியின் நடைமுறை உத்தரவுகளாக ஏற்றுக்கொள்ள வேண்டும். நான் இன்னும் பழைய வாழ்க்கை முறையிலேயே இருப்பதாகக் கற்பனை செய்பவர்களால் இறுதிவரை என்னுடன் இருக்க முடியாது. நான் உங்களுக்கு உண்மையைக் கூறுகிறேன். இனிமேல், இரகசியம், தனியுரிமை, தயவு, முட்டாள்தனம் அல்லது வாக்குறுதிகள் எதுவும் இருக்கக்கூடாது. அனைத்தும் அப்பழுக்கற்றதாகவும், நேர்மையாகவும் இருக்கும். நான் எனது வாக்குறுதிக்கு எதிராக ஒரு சதவீதம் கூட செல்ல விரும்பவில்லை, உங்களில் எவரையும் எனது வாக்குறுதியை சமரசம் செய்ய அனுமதிக்க மாட்டேன்.

இந்த நிலம் இப்போது மெஹராவிற்குச் சொந்தமானது என்றாலும், அது அவருடைய உடைமையாக இருப்பதை நான் விரும்பவில்லை. இதன் பொருள் என்னவெனில், மெஹராவின் காலத்திற்கு பின்னர், இந்த நிலத்தை அவரது உறவினர்கள் உரிமை கொண்டாடக் கூடாது. பாபா மற்றும் பெண்மணிகள் மீண்டும் இங்கு வரமாட்டார்கள் என்பது நிச்சயம் என எடுத்துக் கொள்ளுங்கள். எவ்வாறாயினும், மெஹராவின் காலத்திற்குப் பிறகு, நிலப் பிரச்சினை ஒரு உயிலை நிறைவேற்றுவதன் மூலம் தீர்மானிக்கப்படுவதோடு அதன் நகல் தயாரிக்கப்பட்டு சாட்சிகளால் சான்றளிக்கப்பட வேண்டும்.

மெஹராவின் காலத்திற்குப் பிறகு, ஸரோஷ், ராம்ஜூ, மெஹர்ஜி, நரிமன் ஆகிய நான்கு 'ஏற்பாட்டுக் குழு'வின் உறுப்பினர்கள் பெயருக்குச் சொத்து சென்றடையும் என்று உயிலில் ஒரு நிபந்தனை விதி இருக்கும். புது வாழ்வின் தொடக்கத்தில் நாம் இங்கு தங்கியிருந்ததற்கான நினைவகம் அல்லது நினைவுச்சின்னமாக நிலம் பாதுகாக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 'ஏற்பாட்டுக் குழு'வின் உறுப்பினர்கள் நிலத்தை அவர்கள் விரும்பியபடி பயன்படுத்திக்கொள்ளலாம் மற்றும் ஹல்தங்கர் குடும்பத்தினர் விருப்பப்படி அதைப் பயன்படுத்த அனுமதிக்கலாம். ஆனால், இந்த நிலத்தை விற்கக் கூடாது.

மேலும் உரையாடலின் போது, சில பொருத்தமற்ற கேள்விகளால் பாபா வருத்தமடைந்தார். அவரது எரிச்சலின் எதிர்வினையின் காரணமாக, டாக்டர் நீலு, டாக்டர் கனி இருவரையும் தனது காதுகளைத் திருகும்படி கட்டளையிட்டதும், அதை அவர்கள் தயங்காமல் செய்தனர்.

அன்று மதியம் பாபா கூறினார்:

இன்றைய காலை விவாதத்தில் கவனிக்கப்படாமல் போன ஒரு குறிப்பிட்ட விஷயத்திற்கு, இப்போது உங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். ஜனவரி 1 முதல், நம்மிடம் பணம் இல்லை என்பது உங்களுக்குத் தெரியும். நாம் பிறரிடம் யாசிக்கலாம் அல்லது உழைப்பால் உணவைப் பெறலாம். அனைவரும் நினைவில் கொள்ள வேண்டிய ஒரு விஷயம் என்னவெனில், நாம் ஓரிடத்திலிருந்து இன்னுமோர் இடத்திற்கு நகரும்போது, எந்த உணவையும் அடுத்த நாளுக்காகப் பாதுகாக்கக்கூடாது. இந்தப் புது வாழ்வில் ஒவ்வொரு நாளும் நமக்கு ஒரு புது நாளாக இருக்கும். ஆனால், குறிப்பிட்ட இடத்தில் ஒரு நாளுக்கு மேல் தங்க நேர்ந்தால், எஞ்சிய உணவை அடுத்த நாளுக்காகப் பாதுகாக்க வேண்டும். புது வாழ்வின் இந்தக் குறிப்பிட்ட அம்சத்தை அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும்.

1949ஆம் ஆண்டு அக்டோபர் 30 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை, தோழர்களை அழைத்து பாபா, முந்தைய நாள் இரவு, நான்கு பெண்மணிகளும் நன்றாகத் தூங்கியதாக அவர்களுக்குத் தெரிவித்து மீண்டும் அவர் தனது உதவியைக் குறித்த தலைப்புக்குத் திரும்பினார்:

உதவிக்கான காலம் டிசம்பர் 31 அன்று முடிவடையும், எனவே நேற்று இரவு, கால நேரத்தையையும், அதைச் சீர்படுத்தும் முறையையும் கணக்கிட்டுக் கொண்டிருந்தேன். டிசம்பர் 10ஆம் தேதி, பெனாரஸிலிருந்து புறப்பட்டு, அன்று முதல் 31ஆம் தேதி வரை, கால் நடையாகச் சென்று, எது கிடைத்தாலும் அதைத் தானமாக ஏற்றுக்கொள்வோம். இந்தப் பயிற்சி காலத்திலும் எனது உதவி தொடரும். ஜனவரி 1 முதல், நாம் தொடர்ந்து கால் நடையாகச் சென்று, வேண்டியவற்றை யாசித்துப் பெற்றுக்கொண்டாலும், என்னுடைய உதவி நிறுத்தப்படும். எனது உதவி முடிவடைந்தது என்று நான் சொன்னால், அது மஹாபிரளயத்தில் படைப்பு முடிவுக்கு வந்தது போல் இருக்கும்!

பெனாரஸிலிருந்து புறப்படுவதற்கு முன்பு, நான் அனைத்து விவகாரங்களையும் சரிசெய்ய வேண்டும். பெனாரஸிலிருந்து நாம், 1950 மார்ச் இறுதிக்குள் ஹரித்வாரை நோக்கி நடந்து செல்வோம். எனவே, பயிற்சி காலத்தின் உதவி, டிசம்பர் இறுதி வரை ஹரித்வாருக்குச் செல்லும் வழியில் தொடரும்; நாம் டிசம்பர் 10ஆம் நாள் பெனாரஸிலிருந்து புறப்படுகிறோம்.

இந்தக் கணக்கீடு, அனைத்தையும் சரிசெய்ய வேண்டியதன் அவசியத்தை நான் உணர்ந்ததால் சாதாரண, வழக்கமான தானம் வாங்கி நடத்தும் வாழ்க்கையுடன், அசாதாரணமான, இயல்பு நிலைக்கு மாறான நிகழ்வுகளையும் நீங்கள் முடிந்தவரை எளிதாக எடுத்துக்கொள்ள முடியும். எனது மனக்கண்களில் இருக்கும் திட்டம் சரியாக உருவெடுத்தால், 1950 ஏப்ரல் முதல் உங்கள் அனைவருக்கும் அசாதாரணமான மற்றும் இயல்பு நிலைக்கு மாறான நிகழ்வுகள் அன்றாட நிகழ்வுகளாக இருக்கும்.

நாம் இரண்டு அல்லது மூன்று மாதங்கள் ஹரித்வாரில் தங்கப்போவதாக நான் சொன்னாலும், நாம், எல்லா நேரமும் அங்கேயே இருக்கப்போகிறோம் என்று அர்த்தமல்ல. ஒருவேளை, அந்த இடத்தில் பெண்மணிகள் தங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்து, நாம் தொடர்ந்து சென்று வரலாம். அதுதான் தற்சமயம் எனது மனக்கண் முன் இருக்கும் மங்கலான சித்திரம். நாம் ஹரித்வாரிலிருந்து வெளியேறிய பின்னர், உண்மையான அர்த்தத்தில் நாம் வாழும் வாழ்க்கையே வாழ்க்கையாக இருக்கும் என்று என்னால் சொல்ல முடியும்.

நேற்றிரவு நான் போட்ட கணக்கீட்டின்படி, டிசம்பர் 10ஆம் நாள் பெனாரஸிலிருந்து புறப்படும் முன்னர், 25 நாட்கள் பெனாரஸில் தங்கியிருக்க வேண்டும் என்பதை, இவையெல்லாம் எனக்கு உணர்த்தியது. ஜனவரி 1ஆம் தேதிக்குப் பிறகு, நாம் எங்குத் தங்கினாலும் அது பயிற்சிக்காக இருக்காது. அனைத்திலும், கணக்கீடு மற்றும் சரிசெய்தல் தேவை என்பதால், நாம் அந்த இடத்தை விட்டு வெளியேறும் முன்னரே, பெனாரஸில் முழுமையாக யோசனை செய்து திட்டமிட வேண்டும். இது தொடர்பாக, வரைபடங்களை வாங்கி, விபரங்களை அறிந்து கொள்ளவும், பெண்மணிகளுக்குத் தேவையான சில பொருட்களைக் கொண்டு வரவும் டான், டெஹ்ராடூன் அல்லது டெல்லிக்குச் செல்ல வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளலாம்.

எனவே, பெனாரஸில் 25 நாட்கள் தங்குவது குறித்து 'ஏற்பாட்டுக் குழு' உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது, மேலும் சதாஷிவ் பாட்டீலுக்கு இது குறித்த தொலைத்தந்தி பெனாரஸ் கன்டோன்மென்ட் தபால் நிலைய அதிகாரியின் கண்காணிப்பின் கீழ் அனுப்பப்பட்டது.

நவம்பர் 12ஆம் நாள் பெல்காவ்மிலிருந்து புறப்பட்டு, 15 அன்று அதிகாலை 'முகல் ஸராய்' (MUGHAL SARAI) வந்து 'பெனாரஸ் பங்களா'வில் நவம்பர் 15 முதல் 25 நாட்கள் தங்க உள்ளோம். ரூ 600 வழங்கி 25 நாட்களுக்குத் தேவையான உணவு ஏற்பாடு செய்யுங்கள். உடனடியாக பதில் அனுப்பவும்.

- வில்லியம் டான்கின்

மதியம் தேநீருக்குப் பிறகு, பாபா, டாக்டர் டானிடம் வரைபடத்தைப் பார்த்து, அவர்கள் பெனாரஸிலிருந்து ஹரித்வாருக்குச் செல்லும் குறுகிய, வசதியான பாதையைத் தெரிவிக்கும்படி கூறினார்.

தொடர்ந்து பாபா, ஆண் தோழர்களுக்கு விளக்கினார்: **"நான்கு பெண்மணிகளுக்கும், நிபந்தனைகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. நானே அவர்களுக்காக எல்லாவற்றையும் தீர்மானிக்கிறேன். ஆனால் அவர்கள் இறுதிவரை நம்முடன் இருக்க வேண்டும் என்பதால், நான் அவர்களுக்கு நிலைமைகளை விளக்கிக்கொண்டே இருக்கிறேன்.**

"ஜனவரி 1 முதல் உங்களில் ஒருவர் கூட என்னுடன் இருக்க மாட்டீர்கள் என்ற எனது வாக்கு மிகவும் உறுதியானது. அதைத்தான் இப்போது நான் எனது கண்கள் முன்னால் காண்கிறேன்.

"நான் உங்களுக்கு அனைத்தையும் சீரமைத்து, உதவுவதற்கு அதுவே காரணம். அது உங்களை என்னுடன் தொடர்ந்து இருக்கச் செய்ய உதவியாக இருக்கும். பெண்மணிகளுக்கு எந்தவிதமான நிபந்தனையும் இல்லாமலிருந்தாலும், என்னிடமிருந்து உத்தரவுகள் இருக்கும்."

இந்தக் கட்டத்தில் டாக்டர் நீலுவை அருகில் அழைத்து அவரை உதைக்குமாறு பாபா உத்தரவு வழங்கியதும், நீலு அதற்கு இணங்கினார். சில கணங்களுக்குப் பிறகு, பாபா மீண்டும் தொடர்ந்தார், **"இந்தப் புது வாழ்வில், சில அம்சங்களில் மனித இயல்புக்கு அப்பாற்பட்ட ஒன்றை உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறேன். நானும் உங்களைப் போல் இக்கட்டான சூழ்நிலையில் இருக்கிறேன். எல்லா சூழ்நிலைகளிலும் மகிழ்ச்சியாக, முகமலர்ச்சியாக இருப்பதே மனித இயல்புக்கு அப்பாற்பட்டது! எனவே நாம் ஒருவருக்கொருவர் உதவுவதில் நம்மால் இயன்றதைச் செய்வோம். நான் உங்களுக்கு உதவுகிறேன், நீங்கள் எனக்கு உதவுங்கள்; நமது வாக்குறுதியை நிலைநாட்ட நாம் ஒருவருக்கொருவர் உதவுவோம்!"**

ஆனால் பாபா, (ஒருவருக்கொருவர் உற்சாகமாகவும், மகிழ்ச்சிகரமாகவும் இருக்கும் விதத்தில்) ஒரு குறிப்பிட்ட வகையான உதவியைக் குறிக்கிறார். உதாரணமாக, பெரிய கம்பளத்தை சுத்தம் செய்ய குஸ்தாஜிக்கு அலோபா உதவுவதைக் கண்டுபிடித்து, அதிருப்தி அடைந்த பாபா அவரிடம், **"நான் உங்களுக்கு என்ன கடமையை வழங்கினேன்?"** என வினவினார்.

"தண்ணீர் பானைகளை நிரப்பவும், பாத்திர பண்டங்களைக் கழுவவும்," அலோபா பதிலளித்தார்.

"அப்படியானால் ஏன் கம்பளத்தில் இருக்கும் தூசியை அகற்றுகிறீர்கள்?"

"குஸ்தாஜிக்கு வயதாகிவிட்டதால் உதவ முன்வந்தேன்; நான் அவருக்கு மட்டுமே உதவி செய்து கொண்டிருந்தேன்" என்று அலோபா பதிலளித்தார்.

“நீங்கள் அவருக்கு உதவவில்லை, மாறாக அவரைப் படுகுழியில் தள்ளிவிட்டீர்கள்! குஸ்தாஜிக்கு வயதாகிவிட்டது என்று எனக்குத் தெரியாதா? நான் அவருக்கு இந்த வேலையைக் கொடுத்தேன், அவர் அதைச் செய்ய வேண்டும். நீங்கள் அவருக்கு உதவுவதன் மூலம் தீங்கிழைக்கிறீர்கள். அவரால் தவறாக வழிநடத்தப்பட்டு அவர் மீது பரிதாபப்படாதீர்கள். அத்தகைய தவறு செய்தால், ஜனவரி 1ஆம் நாளுக்குப் பிறகு, நீங்கள் வெளியேற வேண்டியது வரும்.”

முழுமையான கீழ்ப்படிதலைப் பொறுத்தவரையில் தோழர்களுக்கு இது மற்றுமொரு பாடமாக இருந்தது.

அக்டோபர் 31 காலை தோழர்களுடன் அமர்ந்து, பெனாரஸ் மற்றும் பிற இடங்களில் உணவுக்காக யாசிப்பது குறித்து பாபா அவர்களுக்கு விளக்கினார்:

உணவுக்காக மட்டுமே யாசிக்க வேண்டுமே தவிர, வேறு எதற்காகவும் கூடாது. உணவு எனக் கூறுகையில் அது அனைத்தையும் உள்ளடக்கும் - சமைத்த அல்லது சமைக்காத, திரவ அல்லது திட ஆகாரம் எதுவாகவும் இருக்கலாம். யாசிக்கும் வேளையில் நாம் விசேஷமாக எதையும் கேட்கக்கூடாது. கனி, ‘மாமிசம் கொடுங்கள்’ என்று கேட்கக்கூடாது, நீலு பால் அல்லது பர்ஃபி வேண்டுமெனக் கேட்கக்கூடாது. நீங்கள், ‘தயவுசெய்து அன்புடன் தானம் செய்யுங்கள்’ என்று மட்டும் கேட்கவேண்டும். ‘எப்படி, எதற்காக யாசிக்க வேண்டும்’ என்பதை நாம் பெனாரஸ் சென்ற பின்னர் உங்களுக்கு முழுமையாக அறிவுறுத்துகிறேன்.

மக்கள் ஆடைகளை வழங்கினால், அதை ஏற்றுக்கொள்ளுங்கள், ஆனால் அது உங்களுக்குத் தேவை எனக் கேட்காதீர்கள். எந்த சூழ்நிலையிலும் பணத்தை ஏற்றுக்கொள்ளக் கூடாது. நிபந்தனைகளுக்கு இணங்க, உணவு, உடை இரண்டையும் ஏற்றக்கொள்ளலாம் என்று கூறப்பட்டாலும், உணவை மட்டும் கேட்க வேண்டுமே தவிர, உடை வேண்டாம். உணவு அல்லது உடை, கொடுக்கப்படும் போது, முதலில் அவற்றைக் கொணர்ந்து என் முன்னால் வைக்க வேண்டும்.

சிகரெட், காலணிகள், தொப்பி, பேனா, பென்சில், நோட்டுப் புத்தகம், பித்தளை அல்லது செப்புப் பாத்திரங்கள் போன்ற எதையும் ஏற்றுக்கொள்ளாதீர்கள்.

கரடுமுரடான போர்வைகள், காலுறைகள், விரிப்புகள் மற்றும் சால்வைகள் போன்ற தயார்செய்த ஆனால் தைக்கப்படாத ஆடைகளை ஏற்றுக்கொள்ளலாம். இந்த வகையில், படுக்கை விரிப்புகள் மற்றும் போர்வைகளை ஏற்றுக்கொள்ளக்கூடாது. இதை நாம் இன்று தீர்மானிக்கிறோம்; விரிவான வழிமுறைகள் பெனாரஸில் வழங்கப்படும்.

பாபா அன்று பிற்பகல் ஏரச், விஷ்ணு, பெண்டு மற்றும் பிறரிடம் ஹரித்வாருக்கு நடைப்பயணம் மேற்கொள்ளத் தேவையான பொருட்களின் பட்டியலைத் தயார் செய்யுமாறு கூறினார். அது குளிர்காலம் ஆகையால், ஒதுக்கப்பட்ட 24 ரூபாயில், ஒவ்வொருவருக்கும் ஒரு ஜோடி ஷூக்கள், பாத அணிகள் மற்றும் பாபாவிற்குத் தேவையான பொருட்களும் அடங்கும். வடஇந்தியாவில் வழக்கமாக அணியும் பருத்தி ஜாக்கெட்டுகளை வாங்குவதற்கு பத்து ரூபாய் ஒதுக்க வேண்டும் என ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது.

அக்டோபர் பிற்பகுதியில், டாக்டர் கனி ஹிந்தி மொழியில் 'புது வாழ்வு' (NEW LIFE) குறித்த பாடலை இயற்றியதைத் தொடர்ந்து, பாபா சில திருத்தங்களைச் செய்து, பின்னர் அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்குமாறு அறிவுறுத்தினார். இந்த மொழிபெயர்ப்பு முடிந்ததும், பாபா ஐந்து 'ஏற்பாட்டுக் குழு' உறுப்பினர்களுக்கு பின்வரும் கடிதத்தை எழுதினார்:

1949 அக்டோபர் 31,

பெல்காவ்ம்.

பொருள்: மெஹர் பாபா மற்றும் அவரது தோழர்களின் 'புது வாழ்வு கவிதை' (SONG OF NEW LIFE)**.**

ஒரு முழுப்பக்க காகிதத்தில் துண்டு பிரசுரங்களின் 1,000 பிரதிகளை அச்சிடுங்கள் - ஒரு பக்கம் இந்தி மொழியிலும், மறுபுறம் ஆங்கிலத்திலும் அச்சிடவும். இணைக்கப்பட்டுள்ள உருது கையெழுத்துப் பிரதியிலிருந்து வார்த்தைக்கு வார்த்தை இந்தி மொழியில் அச்சிடப்படவேண்டும். ஆங்கில மொழிபெயர்ப்பும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இந்தியா, இலங்கை, பாகிஸ்தான் தேசங்களில் (ஆனால் மேற்கத்திய நாடுகளுக்கு வேண்டாம்) ஆர்வமுள்ளவர்களுக்கு 800 பிரதிகளை விநியோகித்து, 200 பிரதிகளை வில்லியம் டான்கின், கவனிப்பு: தபால் நிலைய அதிகாரி, பெனாரஸ் கண்டோன்மென்ட் என்ற முகவரிக்கு அனுப்பவும், நவம்பர் 14 - டிசம்பர் 10ஆம் தேதிக்குள் அங்கு சென்றடையுமாறு ஏற்பாடுகள் செய்யவும்.

பாபா, எழுத்துப்பலகை மூலமாக எடுத்துரைத்தது.

சாட்சிகள்: ஆதி கே. ஈரானி, வில்லியம் டான்கின்

அடிக்கடி பாடப்பட்ட 'புது வாழ்வு பாடல்' பின்வருமாறு (முதல் இரண்டு வரிகள் பாபாவால் வழங்கப்பட்டது):

மெஹர் பாபாவின் 'மௌன மொழி'களைக் கேளுங்கள்;
அனைத்து இறைப் பிரியர்களின் வாழ்க்கைக் கதை,
இந்த வார்த்தைகளின் நடைமுறையை
அடித்தளமாகக் கொண்டதைப் பாருங்கள்.

இந்தப் புது வாழ்வை வாழ்வதில் நீங்கள்
தீவிரமாக இருப்பதாயின், தற்போதைய தற்காலிக
வாழ்க்கையை முழு மனதுடன் கைவிடுங்கள்.

கடவுளை மட்டுமே நம்பி, (வாழும் அல்லது சாகும்)
முழு விருப்பத்துடன் அளித்த உறுதிமொழியால்
பலப்படுத்தப்பட்ட இந்த வாழ்வை வாழப்போகிறோம்;
நம்பிக்கையின்மை எனும் கீதத்தை மகிழ்வுடன் இசைக்கிறோம்;
அனைத்து பேரிடர்களையும் சிரமங்களையும்
நாம் அரவணைக்கிறோம்.

நாம் இழந்துவிட்ட நம்பிக்கைகளுக்காக அழுவதில்லை,
அல்லது (நொறுங்கிப்போன) வாக்குறுதிகளைக்
குறித்து புகார் கூறுவதுமில்லை;
நாம் கௌரவத்தை விரும்புவதில்லை,
அவமானத்தைத் தவிர்ப்பதில்லை;
எவரையும் புறங்கூறுவதும், எவருக்கும் பயப்படுவதும் இல்லை;
தற்போதைய எங்கள் புது வாழ்வின் வண்ணம் இதுவே.

இப்போது மனதில் குழப்பம் இல்லை, எந்தப் பிணைப்பும் இல்லை;
பெருமை, கோபம், காமம், பேராசை இவை நாம் அறிவதும் இல்லை.
எங்களுக்கு எந்த மதமும் இல்லை, உடல் மற்றும்
-மன மோகங்களுக்கான அக்கறையும் இல்லை.
ஷேக், பிராமணர் அனைவரும் (அனைத்து சாதி சமயங்களையும்
குறிக்கும்) இப்போது ஒரே படகில் பயணிக்கின்றனர்.

நமக்கெல்லாம் இப்போது சிறிது, பெரிது என்ற வேறுபாடில்லை;
குரு, சீடன் அல்லது கடவுள் என்ற கேள்விகள்
இனி எழப்போவதும் இல்லை.
சகோதரத்துவம், சக தோழமை உணர்வு என்பதே
இனி நிலவும் இணைப்பு,
மேலும் இது துன்பத்தின் தற்போதைய
இன்பத்திற்கு வழங்கும் பங்களிப்பு.

இந்த உலகம் அல்லது அடுத்த உலகம், நரகம் அல்லது
சொர்க்கம், நாம் இனி பொருட்படுத்த மாட்டோம்;
சக்திகள், சித்திகள், மாய மந்திரம் மற்றும் அற்புதங்கள்
நாம் இனி நினைத்தும் பார்க்க மாட்டோம்.

நமக்கான இந்தத் தவறான எண்ணங்கள் அனைத்தும்
மனதிலிருந்து மறைந்துவிட்டன.
இன்றைய நிகழ்காலத்தில் வாழ்வதுதான் நமக்கு
மதிப்பும் மகத்துவமும் என்பன!

அன்பர்களே, பாபா கூறுவதை கவனமாகக் கேட்பீர்கள்:
"இப்போது நாம் அனைவரும் ஒரே நிலையில் இருப்பவர்கள்.
இருந்தும், எனது அனைத்து உத்தரவுகளும்,
நல்லது, தீயது, அசாதாரணமானது எதுவாயினும்,
இறுதி விளைவுகளை இறைவனிடம் விட்டுவிட்டு
நீங்கள் அனைவரும் உடனடியாகச் செயல்பட வேண்டும்."

வானுலகங்கள் வீழ்ந்தாலும்,
சத்தியத்தின் கையை விடாமல் பற்றிக்கொள்ளுங்கள்.
விரக்தியும் ஏமாற்றமும் (உங்கள் வாழ்வின்)
தோட்டத்தை அழித்தாலும்,
மனநிறைவு மற்றும் தன்னிறைவு ஆகியவற்றின்
விதைகளால் அதை மீண்டும் அழகுறச் செய்யுங்கள்.

உங்கள் இதயம் துண்டு துண்டாக வெட்டப்பட்டாலும்,
உங்கள் உதடுகளில் புன்னகை மலரட்டும்!
இங்கே நான் கூறும் ஒவ்வொரு விஷயத்தையும்
நீங்கள் கவனமாகக் கேட்க வேண்டும்:
உங்கள் பணமில்லா பைகளில் மறைந்திருப்பது
அளவிலா பொக்கிஷம்;
யாசித்து வாழும் உங்கள் வாழ்க்கை
மாமன்னர்களுக்குப் பொறாமையின் உச்சம்!

பெல்காவ்மில் இருந்த வேளையில், பாபாவின் வழக்கமான அறிவுரை என்னவெனில், தோழர்கள் அனைவரும் இரவு எட்டு மணிக்கு ஓய்வு எடுக்கச் செல்லவேண்டும். அவ்வேளையில், எரச்சுடன் ஒன்பது மணிக்கு பாபா தமது குடிலுக்குள் நுழைந்தது அவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. அதைத் தொடர்ந்து பாபா இவ்வாறு கூறினார், **"கனி இயற்றிய பாடல் சிறப்பாக உள்ளது. இது புது வாழ்வின் நிபந்தனைகள் மற்றும் தேவைகளை உள்ளடக்கியது மட்டுமின்றி, கவிதை நயம் மிக்கது.**

"எவ்வாறாயினும் இந்தக் கவிதை, நாத்திகம், கம்யூனிஸம் இரண்டையும் ஊக்குவிப்பதாக வெளியுலகத்தால் தவறாகப் புரிந்து கொள்ளவும், அர்த்தப் படுத்தவும் வாய்ப்புள்ளது என நான் உணர்கிறேன்."

நீண்ட விவாதத்திற்குப் பின்னர், இதுபோன்ற தவறான புரிதலைத் தவிர்க்கும் விதத்தில், மேலும் எதையேனும் இணைக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. பாபா, டாக்டர் கனிக்கு கடைசி நாலடி கவிதைக்கான யோசனையை வழங்கி, **"கனி அதை சீராக்கத் தவறினால், நாளை காலை 'அமர்ந்து எழும்' உடற்பயிற்சியை 100 முறை செய்ய வேண்டும்"** என்று கேலி செய்தார். டாக்டர் கனி, கவிதையின் இறுதி வரிகளை பின்வருமாறு இணைத்தார்:

கடவுள் உண்மையில் இருக்கிறார்,
தீர்க்கதரிசிகள் இருப்பதும் உண்மைதான்;
ஒவ்வொரு கால சுழற்சிக்கும் ஓர் அவதார புருஷர் உண்டு,
ஒவ்வொரு கணத்திற்கும் ஒரு வாலி உண்டு.
எவ்வாறாயினும், எங்களுக்கு அது நம்பிக்கையின்மை
மற்றும் உதவியற்ற தன்மை மட்டுமே.
எங்கள் புது வாழ்வு என்ன என்பதை நான்
உங்களுக்கு வேறு எப்படிச் சொல்ல வேண்டும்!

மறுநாள் பெண்மணிகள் சமையல் செய்யத் தொடங்கியதால், விஷ்ணு பஜாரிலிருந்து வாங்கிய தக்காளியை அவர்களுக்கு அனுப்பியிருந்தார். இருப்பினும், சமைக்க வேண்டிய அளவு பற்றி அவர்களுக்குத் தெரியாது. நாஜா மட்டுமே பெரிய அளவில் சமைப்பதில் திறமை மிக்கவர், ஆனால் அவர் அப்போது மும்பையில் இருந்தார். மெஹ்ரா இதற்கு முன்பு பாபாவிற்கு மட்டுமே சமையல் செய்து பழக்கம்.

இந்த நிலையில், அவர்கள் 1949 நவம்பர் 1 அன்று சமைக்கத் தொடங்கினர், ஆனால் முதல் நாளே போதுமான அளவு தக்காளி சட்னியைத் தயாரிக்கத் தவறிவிட்டனர். பாபா தக்காளி போதுமான அளவு இல்லை என நினைத்து விஷ்ணுவை குற்றம் சாட்டினார். ஆனால் அன்று காலை ஆண் தோழர்களின் குடிசைக்குள் நுழைந்து, அவர் இவ்வாறு விளக்கினார்: **"தக்காளி சட்னிக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டிற்கு, போதிய அளவு தக்காளி இல்லாததே காரணம் என நான் கருதினேன். ஆனால் தக்காளி வேண்டிய அளவு இருப்பதைப் பின்னதாகக் கண்டறிந்தேன். மொத்த அளவில் உணவு தயாரிக்கும் பழக்கமில்லாத பெண்மணிகளால் முதல் நாள் சமையலில், சரியான அளவை கணக்கிட முடியவில்லை; தக்காளி பற்றாக்குறை என்று எனது தரப்பில் கூறப்படும் இந்தப் பொய் தெரியாமல் நிகழ்ந்ததால் மன்னிக்கப்படலாம்.**

"நகைச்சுவை மற்றும் வேடிக்கையான பேச்சுகளைப் பொறுத்தவரை, நீங்கள் அவற்றைப் பெரிதுபடுத்தினால் அல்லது பொழுதுபோக்கிற்காகச் சில திருப்பங்கள் அல்லது தவறான கருத்துக்களைக் கூறினால், அவை

பொய்யாக கருதப்பட முடியாது. நீலுவிடம் உணவுக்காக யாசிக்க வேண்டும் என்றும், கனியிடம் அதற்காக தபால் அலுவலகம் அருகே கடிதம் எழுத வேண்டும் என்றும் நான் சொன்னபோது, அவர்களைப் பொறுத்தவரையில் அது நகைச்சுவையாக இருந்தது, பொய்யல்ல. ஆனால் வேண்டுமென்றே கூறுவதையும், தெரிந்தே வெளிப்படுத்தும் பொய்யான உட்குறிப்புகளையும் வேறுவேறு விதமான கருப்பு, பழுப்பு, சிவப்பு அல்லது வெள்ளை பொய்கள் என்று கூறப்படும்."

1949 நவம்பர் 2 முதல் ஒரு பங்களா ஏற்பாடு செய்யப்போவதாக, சதாஷிவிடமிருந்து வந்த பதில் தொலைத்தந்தியுடன் டாக்டர் டான், பாபா முன்னிலையில் தோன்றினார்.

அன்று முதல், ஆதி, புது வாழ்வின் கவிதையை மொழிந்தார்.

பாபா, சமையலறையில் பெண்மணிகளுக்கு உதவி, உருளைக்கிழங்கு பஜ்ஜிகளை எவ்வாறு தயாரிப்பது என்று அவர்களுக்குக் காட்டினார். கோஹெருக்கு சமையல் செய்வது ஒரு புதிய அனுபவமாக இருந்தது; அவர் வாணலியில் பஜ்ஜிகளைப் பொரிக்கும்போது தொப்பி அணிந்திருந்ததால், பாபாவும் இதர பெண்மணிகளும் மிகவும் ரசித்து மகிழ்ந்தனர், ஆனால் இறுதியில் டாக்டர் சிறந்த பஜ்ஜிகளைத் தயார் செய்ய கற்றுக்கொண்டார்!

அன்று மாலையில் பாபா கூறினார், **"சமையலறை மிகவும் சிறியதாகவும், புகை வெளியேற வழி இல்லாததாலும், பெண்மணிகள் சமையல் செய்யும் வேளையில் அவர்கள் மிக்க சிரமங்களை சந்திக்க வேண்டியிருந்தது. ஒருவேளை ஓரிரு நாட்களில் காக்கா, பைதூல் இருவரும் இந்தப் பணியை மீண்டும் செய்ய வேண்டும்."**

1949 நவம்பர் 2ஆம் நாள் காலை, பாபா, தோழர்களிடம் இவ்வாறு கூறினார், **"இந்தப் புது வாழ்வில் நீங்கள், பொதுமக்கள், மஸ்துகள், துறவிகள், யோகிகள் அல்லது உங்களால், நான் எல்லாவிதத்திலும் அவமானப்படுத்தப்படுவதைக் காணத் தயாராக இருக்க வேண்டும். எனவே நான் உங்களுக்கு உத்தரவிடும் வரை, இது விஷயத்தில் தலையிடாமல் இருந்து எனக்கு உதவுங்கள்."**

அப்போது அவர், **"10, 11 தேதிகளில் மழை பெய்யாவிடில், பிரதான சாலையிலிருந்து வெளியே ஆறு மைல் தூரம் நடந்து செல்ல விரும்புகிறேன் - பயண திசையை டான் தேர்வு செய்ய வேண்டும். தோழர்களில் பாதிபேர் 10ஆம் தேதியும், மறு பாதிபேர் 11ஆம் தேதியும் என்னுடன் செல்ல வேண்டும்."**

பாபா, டோலக்கில் தாளமிட்டு, ஆதியின் உதவியுடன் தோழர்களுக்கு புது வாழ்வின் பாடலைப் பாடக் கற்றுத் தந்தார். அவர் எப்பொழுதும் இத்தகைய

செயல்களில் பங்கெடுத்ததால், ஆரம்பத்திலிருந்தே பாபா மௌனம் கடைப்பிடித்து வருவதைத் தோழர்கள் உணர்ந்ததில்லை.

பிற்பகலில், மீண்டும் உணவுக்காக யாசிப்பதைக் குறிப்பிட்டு, பாபா மேலும் விளக்கமளித்தார்:

மாடு, காளை, எருமை போன்ற உயிரினங்களை, புது வாழ்வில் தானமாக வழங்குவதானால் அதை ஏற்றுக்கொள்ளக் கூடாது. இந்துக்கள் பெரும்பாலும் பசுக்கள் போன்ற விலங்குகளை, சாது, யோகிகளுக்கு வழங்குவதால் இது சாத்தியம்; நம்மையும் அதே வகையாகக் கருதி, ஒருவேளை அப்படி நடத்தலாம். காளைகளுக்குத் தீவனம், கயிறு, இரும்புக் காலணிகள் போன்றவை கேட்காமல் வழங்கப்பட்டால் ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் நமக்கும், விலங்குகளுக்கும் தேவையான உணவை மட்டுமே கேட்க வேண்டும்.

வேறு எதையும் கேட்க வேண்டாம், தயார் செய்த ஆடைகள், போர்வைகள், சால்வைகள் போன்றவற்றைத் தானாக முன்வந்து வழங்கினால் ஏற்றுக்கொள்ளுங்கள். இன்று நாம் என்ன முடிவு எடுக்கிறோமோ அது நல்லது. தானாக முன்வந்து வழங்கப்படும் விலங்குகள் மறுக்கப்பட வேண்டும்; ஆனால் அவ்வாறு மறுக்கும் வேளையில், ஒரு வெண் குதிரையை வழங்குவதானால், நீங்கள் அதை ஏற்றுக் கொள்வீர்கள் என்று சொல்லலாம்!

அன்று மாலை டாக்டர் கனிக்குப் பரிச்சயமான, பெல்காவ்மில் வாழும் தியோஸொஃபிஸ்டு குழுவைச் சேர்ந்தவர்கள் தரிசனத்திற்கு வந்தனர். இந்த நேரத்தில் மெஹர் பாபா எவரையும் பார்க்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டதை அடுத்து அவர்கள் திரும்பிச் சென்றனர். கனி அவர்களை சந்திக்காதது சரியானது என்றும், எதிர்காலத்தில் எவரேனும் நமது தோழர்களில் ஒருவரை அறிந்திருந்தால், அந்த நபர், புது வாழ்வு நிபந்தனைகள்படி, உறவினர்கள், நண்பர்கள் அல்லது அறிமுகமானவர்கள் எவரையும் பார்க்கக்கூடாது என்று பாபா சுட்டிக்காட்டினார்.

காக்கா கம்பளி ஸ்வெட்டர் அணிந்து, மறுநாள் காலையில் மசாலா அரைத்துக்கொண்டிருந்த வேளையில், வெயில் அதிகமாக இருந்ததால், பாபா அதைக் கழற்றக் கூறியதற்கு, காக்கா, "வேலை முடிந்ததும் கழற்றுகிறேன்" என்றார்.

பாபா, உடனே அனைத்து தோழர்களையும் அழைத்து, அவர்கள் முன்னிலையில் காக்காவைக் கடிந்துகொண்டு தொடர்ந்து விளக்கினார், **"எனது விருப்பத்தை உடனடியாக நிறைவேற்றுங்கள் என்று நான் பல முறை உங்களுக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறேன், அதை உங்கள் தலையில்**

நுழைக்க முயற்சிக்கிறேன், ஏனெனில், ஜனவரி 1ஆம் தேதிக்குப் பிறகு, புது வாழ்வில் இது உங்களுக்கு உதவியாக இருக்கும்.

"அடுத்த மாதம் இறுதி வரை, நான் உறுதியளித்த உதவி, உங்களுக்கு மன்னிப்பை வழங்கும் என்பதில் சந்தேகமில்லை, ஆனால், ஜனவரி 1க்குப் பிறகு இதுவே உங்களுக்குப் பேரிடராக இருக்கும். எனவே, சிறிய, பெரிய அனைத்து விஷயங்களையும் மிகவும் தீவிரமாக எடுத்துக் கொள்ளுங்கள்; அலட்சியமாக இருந்து அகப்பட்டுக்கொள்ளாதீர்கள்."

இந்த நேரத்தில், பாபா கோபமடைந்ததை அனைவரும் கவனித்தனர். காக்காவை அழைத்து வலுவாக அவரது காதுகளைத் திருகுமாறு கேட்டுக்கொண்டார். காக்கா அவ்வாறே செய்ததும், பாபா கூறினார், **"எனது காதுகளைத் திருகவோ அல்லது என்னை உதைக்கவோ கூறும் போது, உங்கள் தவறுகளே இதற்குக் காரணமென நீங்கள் நினைக்கக்கூடாது என்பதை அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும். ஆனால், அது அப்படியல்ல, உங்களிடம் கிள்ளுமாறு அல்லது என்னை உதைக்குமாறு கேட்டுக்கொள்ள எனது சொந்த காரணங்கள் உள்ளன, ஏனெனில் நான் கோபமுறும் பழக்கத்திலிருந்து விடுபட விரும்புகிறேன். எனவே, எனது கோபத்தை அடக்க நீங்கள் எனக்கு உதவுவீர்கள். நான் அறியாமல் தற்செயலாக ஏதேனும் வாக்குறுதி அளித்தாலோ அல்லது உணர்ச்சிவசப்படவோ கோபமாகவோ இருந்தால் எனக்கு நினைவூட்டுங்கள்.**

"பிரியமான இறைவனின் விளையாட்டை எவரேனும் புரிந்து கொள்ள முடியுமா?" என காலம் வியந்தது. "மூவுலகையும் கையில் அடக்கியவன், அவன் விரும்பினால், கல்லின் சுவாசத்தைக் கேட்டு அதைப் பாட வைப்பான்! அளவிறுதியற்ற சக்தியின் ஆதாரமானவன், ஆனால் தனது தோழர்களைக் கோபத்திலிருந்து விடுவிக்க, அவன் அத்தகைய மனித பலவீனங்களின் ஊடகமாகத் திகழ்ந்து, அவரது காதுகளைத் திருகவும், அவர்களால் உதைக்கப்படுவதையும் அனுமதித்தார்!"

பாபாவின் வழிமுறைகளைக் கண்டு காலம் அதிர்ச்சியடைந்தது. "ஓ அன்பே! நீ நிகரற்றவன்! முற்றிலும் ஒப்பற்றவன்! உனது புகழைப் பாடுவதற்கும், உனது பண்புகளை எண்ணிப் பார்ப்பதற்கும் வார்த்தைகளுக்குச் சக்தியே இல்லை! எல்லா சொற்களின் ஒலியும் மறைந்து விட்டால், ஒரு வேளை, உனது மௌனத்தின் ஓசையற்ற ஒலி உனது பெருமையைப் பாடக்கூடும்!"

1949 நவம்பர் 4 வெள்ளிக்கிழமை காலை, பாபா எழுத்துப்பலகையில் பின்வருமாறு எடுத்துரைத்தார்:

நானும், தோழர்களும் ஏற்றுக்கொண்ட புது வாழ்வின் நிபந்தனைகள் மற்றும் வாக்குறுதிகளின்படி, தோழர்கள் மாற்ற முடியாத விதத்தில்

இரண்டு கருத்துகளால் பிணைக்கப்படுகிறார்கள்: முதலாவதாக, கடவுளுக்கு முன்னால் அவர்களின் முழுமையான பொறுப்பு; இரண்டாவதாக, பொருள் சார்ந்த அல்லது ஆன்மீக உதவி, வெகுமதி அல்லது விளைவு ஆகியவற்றில் எந்த நம்பிக்கையும் இல்லாமல் இருப்பது.

டிசம்பர் இறுதி வரை, நான் உணவுக்காக யாசிப்பது, லங்கோட்டி வாழ்க்கை வாழ்வது மற்றும் பலவற்றிற்கான பொருள் சார்ந்த வசதிகள் மற்றும் பயிற்சிகளில் தோழர்களுக்கு உதவுவேன். சக தோழர்கள் ஒருவருக்கொருவர் உதவவும், ஒருவரையொருவர் நினைவூட்டவும், நிபந்தனைகளை கண்டிப்பாக பின்பற்றுவதற்கு ஒருவரையொருவர் ஊக்குவிக்கவும் விரும்புகிறேன். ஏனெனில் ஜனவரி 1ஆம் தேதிக்குப் பின்னர், அனைத்து உதவிகளும், அனைத்துப் பயிற்சிகளும் முடிவுக்கு வந்துவிடும். அக்டோபர் 16 முதல் இன்று வரை, பழைய வாழ்க்கைப் பழக்கவழக்கங்களால் தெரிந்து அல்லது தெரியாமல் செய்த தவறுகளைத் திருத்துவதற்கென நான் வழங்கிய உதவி, இனி பயன்படுத்தப்பட மாட்டாது.

தோழர்கள், உதவி, பயன் மற்றும் விருப்பத்தில் வேறுபட்டாலும், நிபந்தனைகளுக்குக் கீழ்ப்படிவதில் அவர்கள் சிறிதும் வேறுபடுவதில்லை என்பதை உண்மையாகவும், நேர்மையாகவும், இறுதி முறையாக இப்போது புரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில், புது வாழ்வில், நிபந்தனைகளும் என்னுடைய மற்றும் தோழர்களின் உறுதிமொழிகளும் மட்டுமே எனக்கு உண்மையில் முக்கியத்துவம் வாய்ந்தவை.

நவம்பர் 5ஆம் தேதி, சதாஷிவ், பாபாதாஸுடன் இணைந்து பெனாரஸில் பங்களாக்களைக் கையகப்படுத்திவிட்டதாகத் தொலைத்தந்தி அனுப்பினார். இந்த நற்செய்தியின் காரணமாக, சக தோழர்களுக்கு சிறப்பு மதிய உணவும், மாலையில் இனிப்புத் தயிரும் பரிசாக வழங்கப்பட்டது, அதை டாக்டர் நீலு உண்டு மகிழ்ந்தார். டாக்டர் கனி உடனே, "இது அரைகுறை காதல்!" என்று வேடிக்கையாக எடுத்துரைத்தார்.

அன்று மதியம் பாபா கூறினார், **"டிசம்பர் 31 வரை உங்களால் இயன்ற வரை உண்ணுங்கள், எதை அடைய முடிந்தாலும் அதைச் சாப்பிடுங்கள். ஜனவரி 1க்குப் பிறகு, வாழ்க்கை எப்படி இருக்கும் என்று எவரால் என்ன சொல்ல முடியும்? நீங்கள், நாள் முழுவதும் ஒரு வேளை உணவு, இரண்டு வேளை உணவு, ஏராளமாகவும் பெறலாம் - அல்லது பல நாட்கள் எந்த உணவும் கிடைக்காமலும் போகலாம்!**

"ஆனால் வலியுறுத்தப்பட வேண்டிய விஷயம் என்னவெனில், சிறப்பு மதிய உணவுடன் மாலையில் இனிப்புத் தயிரும் கிடைக்கப்பெற்ற வாய்ப்பிற்குப் பின்னர், அனைவரும் மகிழ்ச்சியாகவும் திருப்தியாகவும் இருப்பதுபோல, நீங்கள், ஜனவரி 1க்குப் பிறகு, புது வாழ்வில் உணவு

கிடைக்காத பட்சத்திலும், மகிழ்ச்சியாகவும் முகமலர்ச்சியாகவும் இருக்க வேண்டும். இதில் நீங்கள் வெற்றி பெற்றால், நிபந்தனைகளின் உணர்வை, உள் அர்த்தத்தை 100 சதவிகிதம் பேணி பாதுகாப்பீர்கள்."

உரையாடும் மனநிலையில் இருந்த பாபாவிடம், எரச், ஆதி, நீலு, கனி ஆகியோர் புது வாழ்வைப் பற்றி மேலும் விளக்குமாறு அவரைத் தூண்டினர், இதன் விளைவாக பின்வரும் கேள்விகள் மற்றும் பதில்களின் உரையாடல் தொடர்ந்தது:

சக தோழர்களில் ஒருவர் கேட்டார், "நிபந்தனைகளை முழு மனதுடன் கடைப்பிடித்து நிறைவேற்ற வேண்டும் என்ற ஆர்வம் நம் அனைவருக்கும் உள்ளது, இதை எவரும் மறுக்க முடியாது, ஆனால் உங்கள் பார்வையில் 100 சதவிகிதம் பூர்த்தி செய்வது என்றால் என்ன என்பதை நாங்கள் அறிய விரும்புகிறோம்."

"நிபந்தனைகளில் குறிப்பாக கவனிக்க வேண்டிய நான்கு முக்கிய குறியீடுகள் உள்ளன" என்று பாபா பதிலளித்தார். **"பணத்தைத் தொடக்கூடாது; பெண்களைத் தொடக்கூடாது; நல்லது, தீயது, அசாதாரணமானது போன்ற எல்லா உத்தரவுகளையும் உடனடியாக, எந்தத் தயக்கமும் இல்லாமல் நிறைவேற்ற வேண்டும்; மிகவும் கடினமான சூழ்நிலைகளிலும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்.**

"பணம், பெண் தொடர்பான முதல் இரண்டு நிபந்தனைகளைப் பொறுத்தவரை, உங்களைத் தொடர்ந்து தொந்தரவு செய்ய வாய்ப்பில்லை, ஏனெனில் நான் உங்களுடன் பெரும்பாலும் இருப்பேன்.

எனது கட்டளைகளை நிறைவேற்றுவது மற்றும் மகிழ்ச்சியான மனநிலையைப் பாதுகாப்பது தொடர்பான அடுத்த இரண்டு நிபந்தனைகள் மிகவும் முக்கியமானவை மட்டுமின்றி, புது வாழ்வின் அடிப்படையாக அமைகின்றன. நீங்கள் இந்த நிபந்தனைகளை 100 சதவீதம் பின்பற்றினால், எந்த சக்தியும் - கடவுள் கூட - என்னை விட்டு உங்களை விலக்க முடியாது.

மற்றொரு தோழர் பாபாவிடம், "நாங்கள் நிபந்தனைகளை 100 சதவிகிதம் கடைப்பிடிக்கத் தயாராக இருக்கிறோம். ஆனால் கொடுக்கப்பட்ட உத்தரவை நிறைவேற்ற முடியாத நிலை உருவானால் எங்கள் கதி என்னவாகும்?"

அதற்கு பதிலளித்த பாபா, **"நான் வழங்கிய கட்டளையை, நடைமுறை ரீதியாக நிறைவேற்ற இயலாது என்றாலும், அதைச் சமாளிக்க நீங்கள் உடனடியாக உங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். பலன் தோல்வியை சந்தித்தால், நீங்கள் கவலைப்படத் தேவையில்லை. உதாரணமாக, நான் உங்களிடம் ஒட்டகத்தின் கால்களைக் கட்டி, கட்டிடத்தின் கூரைக்கு எடுத்துச் செல்லும்படி கட்டளையிடுவதாக**

வைத்துக் கொள்ளுங்கள், அப்போது அது சாத்தியம் அல்லது சாத்தியமற்றது என்பதைப் பற்றி சிந்திக்காமல், உடனடியாக அதைச் செய்ய முயற்சிக்க வேண்டும்.

"(ஒட்டகத்தை சுமந்து செல்வது குறித்த) இந்த எடுத்துக்காட்டு, உத்தரவின் தன்மை மற்றும் அதை உடனடியாக நிறைவேற்றுவதற்கான தயார்நிலையின் தரத்தை விளக்குவதற்காக மட்டுமே. விளக்கத்தை வார்த்தைகளின் அடிப்படை அர்த்தத்தில் எடுத்துக் கொள்ளாதீர்கள்.

"சிறுபிள்ளைத்தனத்துடன் இருக்காதீர்கள்" என்று பாபா தொடர்ந்தார். **"உத்தரவிடுவதைப் பற்றி என்னால் உறுதியாகக் கூற இயலாது, ஆனால் அவை, சாத்தியமற்றதாக இராது. உங்களில் எவரேனும் செயலிழந்து முடங்கிப்போனால், நான் அவரை நடனமாடச் சொல்வேன் என்று நீங்கள் எப்படிக் கற்பனை செய்யலாம்? அத்தகைய ஊனமுற்ற நபரை, நான் மூச்சைப் பிடிக்கச் சொல்லலாம், அது அவரால் செய்ய முடியும். உடல் முடங்கிவிட்ட போதிலும், கட்டளைகள் - அது எந்த வாக்குறுதியும் அல்ல - யாராலும் நிறைவேற்ற முடியாத அளவிற்கு இருக்க முடியாது என்பதை நினைவில் கொள்ளுங்கள், நீங்கள் உண்மையாகவும் உடனடியாகவும் முயற்சித்தால் சாத்தியமற்றது எதுவுமில்லை."**

அவர்களில் ஒருவர் குறுக்கிட்டு, "நீங்கள் கூறுவதிலிருந்து, நான் இப்படிப் புரிந்துகொள்ள முடிகிறது: அனைத்து உத்தரவுகளும் - நல்லது, தீயது, அசாதாரணமானது - எந்தத் தயக்கமும் இல்லாமல் உடனடியாக விருப்பத்துடன் நிறைவேற்றப்பட வேண்டும்."

"ஆமாம், அதைத்தான் நான் சொல்கிறேன், அதற்கும் மேலான ஒன்று. உத்தரவுகள் உடனடியாக மட்டுமல்ல, விருப்பத்துடனும் மகிழ்ச்சியுடனும் நிறைவேற்றப்பட வேண்டும்."

"நாங்கள் உத்தரவுகளை 100 சதவீதம் நிறைவேற்றினால், எவரையும் திருப்பி அனுப்புவது குறித்த கேள்விக்கு இடமே இல்லை."

"என் அன்பான நண்பரே, நான் விரும்புவது போல் உத்தரவுகளை நிறைவேற்றுவதில் 100 சதவீதம் வெற்றியடைந்தால், நீங்கள் எனக்கு எஜமானர், நான் உங்களுக்கு அடிமை. நான் உங்களில் எவரையும் திருப்பி அனுப்ப விரும்புகிறேன் என்ற எண்ணத்தை, அந்த வகையில் எனக்கு முழு சுதந்திரம் இருந்தாலும், உங்கள் மனதிலிருந்து அகற்றிவிடுங்கள்."

மற்றுமொரு தோழர் கேள்வி எழுப்பினார், "வழியில் நோய், விபத்து என எவருக்கேனும் என்ன நேர்ந்தாலும், திரும்பிப் பார்க்காமல், தொடர்ந்து சென்று கொண்டே இருப்பீர்கள். எவருக்காகவும் காத்திருக்க மாட்டீர்கள் என்று மெஹராபாத்தில் சொன்னீர்கள்!"

“உங்களில் ஒருவரைப் போலவே நான் பலவீனமாகவும், உடல் நலம் குன்றியவனாகவும் இருக்கிறேன் என்பதை நினைவில் கொள்ளுங்கள். யாருக்குத் தெரியும், நான் நோய்வாய்ப்படலாம், நீங்கள் என்னைப் பார்த்துக் கொள்ள வேண்டியது வரலாம்.

“எவரேனும் நோய்வாய்ப்பட்டாலோ அல்லது விபத்துக்கு உள்ளானாலோ, அந்த நபர் குணமடையவும், அவரை மீட்டெடுக்கவும் நிச்சயமாக நாங்கள் உதவுவோம்; விதி மற்றும் இயற்கைக் கூறுகளின் கருணைக்கு நாம் அவரை விட்டுவிட மாட்டோம். இருப்பினும், நோய் நீண்டதாகவும் குணப்படுத்த சாத்தியமற்றதாகவும் நிரூபிக்கப்பட்டால் - டைஃபாய்டு அல்லது பக்கவாதம் போன்ற நோய் - உடனடி சிகிச்சை அளித்து, தகுந்த ஏற்பாடுகளைச் செய்த பின்பு, நோய்வாய்ப்பட்ட அவரை விட்டுச் செல்கிறோம்.”

“இந்தப் புது வாழ்வின் அர்த்தம் என்ன, உண்மையில் அது எப்படிப்பட்ட திருப்பங்களை சந்திக்கும் என்பதைப் பற்றிய சில தெளிவான யோசனைகளை நீங்கள் எங்களுக்கு வழங்க முடியுமா?”

“எனது மனத்திரையின் முன்னால், இந்தப் புது வாழ்வின் மிகவும் மங்கலான சித்திரம் உள்ளது. விவரம் எனக்கே தெரியாது. உங்கள் மனதில் ஓர் அழகான பெண்ணின் உருவம் உள்ளது, நீங்கள் சந்திக்கப் போகிறீர்கள், அதற்காக நீங்கள் ஆவலுடன் காத்திருக்கிறீர்கள். உண்மையில் நடந்தால், அது உங்களின் முதல் அனுபவமாக இருக்கும். பிறகு, விஷயங்கள் எவ்வாறு தங்களைத் தாங்களே வடிவமைக்கும் மேலும் விவரங்கள் எவ்வாறு செயல்படும் என்பதை முன்கூட்டியே கண்டறிவதும் தீர்மானிப்பதும் கிட்டத்தட்ட சாத்தியமற்றது. இதுதான் நான், உங்களுக்காகவும், எனக்காகவும் கற்பனை செய்யும் புது வாழ்வு.”

“இதுபோன்ற ஒரு ‘புது வாழ்வு’ கடந்த காலத்தில் வேறு எவராலும் மேற்கொள்ளப்பட்டுள்ளதா அல்லது இது உங்கள் புது யோசனையா?”

“எனக்குத் தெரியாது, எனவே இதற்கு மேல் எதுவும் சொல்ல முடியாது: இதுதான் எனது விளக்கம், அது எதுவாக இருந்தாலும், நீங்கள் அனைவரும் என்னுடன் வந்து, இறுதி வரை என்னுடன் இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்; நீங்கள் எவரும் வரவில்லை என்றால், நான் தனியாகச் செல்கிறேன் - பின்வாங்கும் பேச்சுக்கு இடமே இல்லை.”

“‘இறுதி வரை’ என்று கூறியதன் அர்த்தம் என்ன? இந்தப் புது வாழ்வுக்கு ஒரு முடிவு இருக்கிறது என்பதைத்தானே இது குறிக்கிறது” என அந்தத் தோழர் வினவினார்.

“‘இறுதி’ என்ற வார்த்தையின் மூலம் நான் இலக்கற்ற தன்மையைக் குறிக்கிறேன்” என்று பாபா பதிலளித்தார். **“எனது மனத்திரையில் பதிந்துள்ள**

இந்தப் புது வாழ்வு, அது உண்மையான புது வாழ்வாக மாறினால், அந்த நிலைக்கு எந்த முடிவும் இல்லை.”

இந்தக் கட்டத்தில், புது வாழ்வை விவரித்து, பாபா இயற்றிய கவிதையின் சில வரிகளைப் படிக்குமாறு டாக்டர் கனியிடம் கேட்டுக்கொண்டார்:

இது புது வாழ்வின் இறுதி முடிவாக இருக்கும்!
எவருக்கும் வேறு எவருடனும் எந்த சம்பந்தமும் இராது!
உணவு, தூக்கம், சுகபோகம் எதுவும் இருக்காது!
அது நம்முடைய உறுதிமொழி, நமக்காகவோ அல்லது
கடவுளுக்காகவோ இருக்கும்!
கல்லீரலில் கல் இருந்தாலும்,
உதடுகளுக்கு இடையே மது இருக்கும்.
அப்துல் கனி (ராமின் நண்பர்) ஸக்காராமாக மாறிவிடுவார்!

பாபா தொடர்ந்து கருத்துரை வழங்கினார்: **“இந்தக் கவிதை, சுருக்கமாக, புது வாழ்வையும் அதன் முடிவையும் வெளிப்படுத்துகிறது. நான்காவது வரி, உறுதிமொழி 100 சதவிகிதம் கடைப்பிடிக்கப்பட்டால், அது நம்மை ஒன்றாகச் சேர்த்து வைக்கிறது - அனைத்தும் அப்படியே இருக்கும்; இல்லையெனில், நாம் சுக்குநூறாகி விடுகிறோம், கடவுள் மட்டுமே இருக்கிறார். ஐந்தாவது வரி துன்பத்தை மகிழ்ச்சிகரமாக அனுபவிப்பது என்பதைக் குறிக்கிறது. ஆறாவது வரியை நீங்கள் விரும்பியபடி விளக்கலாம்.”**

இன்னுமொரு தோழர் கேள்வி எழுப்பினார்: “அனைவரும் பின்வாங்கினால், நீங்கள் தனியாகப் பயணத்தை மேற்கொள்வீர்கள் என்று கூறுகிறீர்கள். நீங்கள் சாதிக்க எதுவுமே இல்லாதபோது, நீங்கள் தனியாக எங்கு, எதற்காகப் போகிறீர்கள் என்பதை அறிய விரும்புகிறோம்? உங்கள் தோழர்களுடன் நீங்கள் செல்வதில் மட்டுமே இந்தப் புது வாழ்வுக்கு அர்த்தம் உள்ளது.”

“**இதற்கு மேல் என்னால் எதுவும் சொல்ல முடியாது**” என்று பாபா பதிலளித்தார். “**எனக்குத் தெரிந்தது இவ்வளவுதான்: நான் உங்களுடனோ அல்லது தனியாகவோ - தொடர்ந்து செல்ல வேண்டும். இந்தப் புது வாழ்வைப் பற்றி என்னிடமிருந்து எதையாவது தோண்டி, துருவி எடுக்க முயற்சிப்பதன் மூலம், நீங்கள் இதற்கு மேலாக எதையும் பெற முடியாது. மாறாக, அச்சத்தில் மிகுந்த ஏமாற்றமும், வருத்தமும் அடையாவிட்டாலும் மேலும் மேலும் குழப்பத்திற்குள்ளாவீர்கள்.**”

பாபா விளக்கினார், “**நாம் ஒரே படகில் பயணம் செய்கிறோம். நாம் ஒன்றாக மூழ்குகிறோம் அல்லது ஒன்றாக நீந்துகிறோம்.** (விளக்கங்களைக் கேட்டு) **கவலைப்படுவானேன்? பானுமாசி** (கெய்மாயின் சகோதரி) **ஒருமுறை**

பப்பாவின் உதவியுடன் நாக்பூரில் நீச்சல் கற்றுக் கொள்ள முயன்றபோது, மூச்சுத்திணறி தடுமாற்றத்தில் தத்தளித்தார். பப்பா அவரைக் காப்பாற்றச் சென்ற வேளையில், அவர் பப்பாவின் கழுத்தைச் சுற்றி இறுக்கிப் பற்றிக்கொண்டார். இருவரும் மீட்கப்படும் வரை, அவர் பப்பாவையே கீழே இழுத்து நீரில் மூழ்கடித்தார். ஆகவே, அன்புள்ள நண்பர்களே, பதற்றம் வேண்டாம், இல்லையென்றால், நீங்கள் என்னை மேலும் மேலும் ஆழமாக கீழே இழுத்துவிடுவீர்கள்!

"நான் சொல்வதைச் செய்யுங்கள், கேள்வி கேட்காதீர்கள். 100 சதவிகித உத்தரவுகளைப் பின்பற்றுவது, என்ன சிரமமான சூழ்நிலைகள் இருந்தாலும், சந்தேகத்திற்கு இடமின்றி உங்களைக் காப்பாற்றும். நான் இந்தப் புது வாழ்வுக்காக, பல வருடங்களாகக் காத்திருக்கிறேன்; அந்த வாழ்வை நாம் வாழ்ந்தால், அது அர்த்தமுள்ளதாக இருக்கும். முடிவே இல்லாத வாழ்க்கை! உலகம் பேசும் இந்த வாழ்க்கை, வாழ்க்கை அல்ல; அது மரணம்."

"ஏன் இந்தப் புது வாழ்வை கையில் எடுத்தீர்கள்? அதற்கு ஏதாவது தேவையா?"

"இதற்கு எந்த விளக்கமும் இல்லை" பாபா இவ்வாறு பதிலளித்தார்.

"நீங்கள் கடைசியாக எடுத்த உறுதிமொழி என்ன? அது எதைப் பற்றியது?"

"இது பல விஷயங்களைப் பற்றியது; ஆனால், இப்போது என்னால் சொல்ல முடியாது" என்று பாபா முடித்தார்.

புது வாழ்வை விவரிக்கும் வகையில், பாபா **'சத்யநாசம்'** (SATYANASHI) என்ற வார்த்தையை அடிக்கடி பயன்படுத்தினார்; அன்று மாலையில் உரையாடல் அதை நோக்கித் திரும்பியது.

சக தோழர்கள் இந்த வார்த்தையை விரும்பவில்லை; மேலும் துறவு, அழிவு, தவம், வறுமை, பிராயச்சித்தம் போன்ற மாற்றுச் சொற்களைப் பரிந்துரைத்தனர். ஆனால், பாபா அவற்றை ஏற்றுக்கொள்ளாமல், **"இந்தச் சொற்கள் ஆன்மீகப் பொருளை உள்ளடக்கியது, மேலும் நமது புது வாழ்வுக்கு ஆன்மீகத்துடன் எந்தத் தொடர்பும் இல்லை!"** என விளக்கினார்.

"துறவு, சத்யநாசம் இரண்டிற்கும் உலகளவு வேறுபாடு உள்ளது. துறவை எவரும் நடைமுறையில் கடைப்பிடிக்கலாம், வளர்க்கலாம்; மேலும் பல்வேறு வகையான துறவறத்தைப் பொறுத்தவரை அதற்கென தர நிலையும், வரையறையும் உள்ளது. ஆனால் 'சத்யநாசம்' நடைமுறைப்படுத்த முடியாதது. இது ஒருவருடைய முயற்சியால் தேடி கண்டுகொள்ள இயலாதது. அது தானே வருவது, எதிர்க்க முடியாதது."

ஏற்கனவே குறிப்பிட்டதற்கு இணங்க, சதாஷிவ், பாபாதாஸ் இருவரும் பெனாரஸிலிருந்து, பொருத்தமான பங்களாக்கள் வாடகைக்கு எடுக்கப்பட்டுள்ளதாகத் தொலைத்தந்தி அனுப்பியிருந்தனர். ஆனால், இது நிறைவேற்றப்பட்ட விதம், பாபாவை சூழ்ந்துள்ள எண்ணிலடங்கா 'விசித்திரமான தற்செயல் நிகழ்வு'களில் ஒன்று என்று கூறலாம். பெல்காவ்மிலிருந்து புறப்படுவதற்கு முன்பு, பாபாதாஸிடம், அவர்களுக்கு வேண்டிய உணவு, தங்கும் இடம் இரண்டையும் '**பெனாரஸில் அவருக்குத் தெரிந்த ஒருவர் மூலம்**' ஏற்பாடு செய்யுமாறு பாபா அறிவுறுத்தினார். ஆனால் வியப்பூட்டும் உண்மை என்னவெனில், பாபாதாஸுக்கு, பெனாரஸில் பரிச்சயமான நண்பர் எவரும் இல்லை, மேலும் பாபாவின் அறிவுறுத்தல்களைக் கேட்டு அவர் ஆச்சரியத்தில் ஆழ்ந்தார்.

பெனாரஸில் இருந்தபோது, ஒரு நாள் பாபாதாஸ் கண் வலியுடன் தூக்கத்திலிருந்து எழுந்தவர், டாக்டர் பிரிஜ்பூஷன் கரே (DR. BRIJBHUSHAN KHARE) என்ற கண் மருத்துவரும் அறுவை சிகிச்சை நிபுணருமான ஒருவரிடம் சென்றார். பரிசோதனை செய்து, சிகிச்சை அளித்த பிறகு, டாக்டருடன் பேசிக் கொண்டிருந்த வேளையில், பாபாதாஸ் அவர் பெனாரஸைச் சேர்ந்தவரா என்று கேட்டார்.

"இல்லை, எனது பூர்வீகம் 'ரத்' (RATH)" என்று டாக்டர் பதிலளித்தார்.

"ரத் நகரைச் சார்ந்த 'கயா பிரசாத் கரே' (GAYA PRASAD KHARE) என்பவரை உங்களுக்குத் தெரியுமா?" என பாபாதாஸ் வினவினார்.

"அவர் எனது தந்தை!" என்றார் ஆச்சரியமடைந்த மருத்துவர்.

பாபாதாஸ் திகைத்துப் போனார். கடந்த ஆகஸ்ட் மாதத்தில், பாபாதாஸ், கயா பிரசாத்தை பாபாவின் தரிசனத்திற்காக மெஹராபாத்திற்கு அழைத்துச் சென்றார். கயா பிரசாத் வீடு திரும்பியதும், பாபாவின் தெய்வீக ஆளுமையைப் பற்றி அவர் தனது குடும்பத்தினருக்குத் தெரிவித்தார்; மேலும் பாபாவின் தரிசனத்தால் அவர் எவ்வளவு பாதிக்கப்பட்டார் என்று தனது மகனிடம் கூறியிருந்தார். இவ்வாறு, பாபாவின் பணிக்கான 'இணைப்புகள்' ஏற்கனவே நிறுவப்பட்டிருந்தன.

பாபாதாஸ், மகனிடம் பாபாவைப் பற்றியும், பெனாரஸில் அவர் என்ன செய்கிறார் என்பதைப் பற்றியும் கூறினார். அதன்பிறகு, டாக்டர் கரே அவரை ஒரு நண்பர், ஆன்மீகத்தில் ஆர்வமிக்க, டாக்டர் ஸித்தேஷ்வர் நாத் (DR. SIDDHESHWAR NATH), கண் அறுவை சிகிச்சை நிபுணரிடம் அழைத்துச் சென்றார். கரே, நாத் இருவரும், பாபாவின் அறிவுறுத்தலின்படி, பங்களாக்களை ஏற்பாடு செய்தது மட்டுமல்லாமல், பாபா மற்றும் தோழர்களுக்கு, உணவு வழங்குவதாகவும், சதாஷிவ், பாபாதாஸ் இருவருக்கும் உறுதியளித்தனர். டாக்டர் நாத்திற்கு பாபாவைப் பற்றி எதுவும் தெரியாது, மேலும், அவரது தரிசனம் சாத்தியமில்லை என்று கூறிய பின்னரும், அவர் பாபா மற்றும் சக தோழர்களுக்குத்

தங்குமிடங்களை உறுதிப்படுத்த தன்னால் முடிந்த அனைத்தையும் செய்து, இறுதியில் வெற்றியும் கண்டார்.

பெல்காவ்ம் நாளிதழ்கள் 'மஹா சாது ஸ்ரீ மெஹர் பாபா' தற்போது 'உலக சுற்றுப்பயணம்' மேற்கொள்ளும் தருணத்தில், பெல்காவ்ம் நகரில் இப்போது இருப்பதாகச் செய்திகளை வெளியிட்டன. இதன் விளைவாக, 1949 நவம்பர் 6 ஞாயிற்றுக்கிழமை அன்று, திரள்திரளாக மக்கள் பாபாவின் தரிசனத்திற்கு வந்தனர். பாபாவின் தோழர்களுக்கு விஷயங்களை விளக்குவது மிகவும் கடினமாக இருந்தது, ஏனெனில், புது வாழ்வின் நிபந்தனைகளின்படி, அவர்கள் பாபாவை 'குருநாதர்' என்றும் தங்களை 'சீடர்கள்' எனவும் குறிப்பிடக்கூடாது. ஆன்மீக விளக்கங்கள் எதுவும் கொடுக்கப்படவில்லை, புது வாழ்வின் நோக்கம் மற்றும் பொருள் குறித்து எதுவும் கூறப்படவுமில்லை.

தரிசனம் மறுக்கப்பட்டபோது, புது வாழ்வின் நிபந்தனைகளை மீறாமல் தோழர்களால் பதிலளிக்க முடியாத பல கேள்விகளை பொதுமக்கள் எழுப்பினர். இது ஓர் இக்கட்டான சூழ்நிலையை உருவாக்கியது. பார்வையாளர்களில் பலர் தரிசனத்திற்காக வலியுறுத்தினர். சிலர் தூரத்திலிருந்து தரிசனம் செய்து திருப்தி அடைவதாகக் கூறினர்; சிலர் தரிசனம் கிடைக்காத நிலையில், தாங்கள் கொண்டு வந்த பூ, தேங்காய், பழம் போன்றவற்றை பாபாவின் பாதத்தில் வைக்குமாறு கேட்டுக் கொண்டனர்.

இறுதியில், டாக்டர் கனி, ஆதி இருவரையும் பாபா, அவர்களுடன் பேச அனுப்பினார்; ஆனால் அவர்கள் அதிருப்தி அடைந்து, பாபாவை தூரத்திலிருந்து பார்க்கவும், வளாகத்தை சுற்றி வரவும் அனுமதிக்க வேண்டும் என்று கூறியதை பாபாவிற்குத் தெரிவித்ததும், அவர் ஒரு நிமிடம் தூரத்திலிருந்து தரிசனம் வழங்க அனுமதிப்பதாக விஷ்ணுவிடம் தெரிவித்தார்; ஆனாலும், மக்கள் அவரிடம் கேள்விகள் கேட்கவோ, கைகளைக் கூப்பி வணங்கவோ கூடாது; மாறாக, பாபா, அவர்களின் பாதங்களைத் தொட அனுமதிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டனர்! இரண்டு பேர் மட்டுமே இந்த நிபந்தனைகளுக்கு ஒப்புக்கொண்டபோது பாபா அவர்களை வணங்கினார்.

தேநீருக்குப் பிறகு, தோழர்கள் தங்கள் சிரமங்களை விவரித்து, இதுபோன்ற ஆர்வலர்களின் கேள்விகளை எவ்வாறு திருப்திப்படுத்துவது என்றும், அதே நேரத்தில், புது வாழ்வின் நிபந்தனைகளின் வரம்புக்குள் இருந்து என்ன சொல்ல வேண்டும், எதைச் சொல்லாமல் விட வேண்டும் என்பதற்கான விளக்கங்களைக் கோரினர். இத்தகைய சூழ்நிலைகளைக் கையாளும் விதத்தில் அவர்களுக்கு உதவ, பாபா பின்வரும் உரையை வழங்கினார்.

நம்பிக்கையின்மை என்பது எல்லா நம்பிக்கைகளையும் துறப்பது.
இலட்சியமின்மை என்றால் அனைத்து நோக்கங்களையும் துறத்தல்.
உதவியின்மை என்பது அனைத்து உதவிகளையும் துறப்பது.

குருநாதர் இல்லை, சீடர் இல்லை என்றால் ஆன்மீகத்தை துறத்தல் என்று அர்த்தம். எனது மனத்திரையில் பதிந்துள்ள புது வாழ்வு என்பது இறுதியில் முழுமையான துறவு என்பதாகும்.

எனவே, 'இந்தப் புது வாழ்வு என்றால் என்ன?' என்று எவரேனும் உங்களிடம் கேட்டால், 'முழுமையான மற்றும் பரிபூரணமான துறவு' என்று கூறுங்கள். அவர்கள் 'எதைத் துறப்பது?' என்று கேட்டால் 'எல்லாவற்றையும் - இலக்குகள், நம்பிக்கைகள், உதவி மற்றும் வாழ்க்கையையே துறப்பது' என்று கூறுங்கள்.

இப்போதிலிருந்து இனி இறுதி வரை, மக்கள் எல்லாவிதமான கேள்விகளையும் கேட்கும் சந்தர்ப்பங்கள் அடிக்கடி உருவாகும்.

எனவே உங்களில், டான் மட்டுமே மேற்கத்தியர்களை சந்திக்க முன்வர வேண்டும்; மேலும் கனி, ஆதி, நீலு, எரச், பெண்டு அல்லது விஷ்ணு இந்திய மக்களுக்கு அனைத்து விஷயங்களையும் விளக்க வேண்டும். உங்களில் எஞ்சியுள்ளவர்களிடம், புது வாழ்வைப் பற்றி ஏதேனும் கேட்கப்பட்டால், கேள்வி கேட்பவருக்கு அந்தந்த குறிப்பிட்ட தோழர்கள் மட்டுமே பதிலளிக்க வேண்டும்.

'மெஹர் பாபா ஏன் இன்னும் மௌனம் கடைப்பிடிக்கிறார்?' என்று யாரிடமாவது கேட்கப்பட்டால், 'அது அவருடைய சொந்த, தனிப்பட்ட விருப்பம்' என்று சொல்ல வேண்டும்.

'நீங்கள் ஏன் சில குறிப்பிட்ட காரியங்களைச் செய்கிறீர்கள்?' என்று கேட்டால், 'நாங்கள் அனைவரும் ஒரே சம நிலையில் மெஹர் பாபாவின் தோழராக இருந்தாலும், அவருடனான எங்களது உடன்பாட்டின் காரணமாக, அவருக்கு மறைமுகமாகக் கீழ்ப்படிய வேண்டும். அவர் எங்கள் நண்பரும், சக தோழரும் மட்டுமல்லாமல் மூத்த சகோதரரும் போன்றவர்' என்று கூறவேண்டும்.

புது வாழ்வைப் பற்றிக் கேட்டால், தரிசனம், ஆசீர்வாதங்கள், அருள் எதுவுமே இல்லாத நிலையில், யாசித்து, உழைத்து, லங்கோட்டி வாழ்க்கை வாழ்வது போன்ற பொதுவான, ஆனால் முக்கியமான விஷயங்களைப் பற்றிப் பேசுங்கள்.

'பாபா என்ன செய்கிறார்?' என்ற கேள்வி எழுந்தால், 'அவர் எங்களில் ஒவ்வொருவரையும் போலவே வேலை செய்கிறார், உணவுக்காக யாசிக்கிறார்' என்று சொல்லலாம். பிற அனைத்து விவரங்களுக்கும், அஹமதுநகர் அலுவலகத்திலிருந்து பெறக்கூடிய புது வாழ்வு குறித்த கையேட்டைப் பார்க்க வேண்டும். உங்களை நாடி வருபவர்களிடம் மிகவும் இரக்கத்துடனும் பணிவுடனும் நடந்து கொள்ள வேண்டும். எந்தவொரு சூழ்நிலையிலும், அவர்கள் வழக்கமாக அல்லது எப்போதேனும்

வருபவராகவும் அல்லது எரிச்சலூட்டும் மனநிலையில் இருக்கும் நபராக இருந்தாலும், நீங்கள் உங்கள் பொறுமையை இழக்கவோ அல்லது அவர்களின் கேள்விகளால் எரிச்சலடையவோ கூடாது.

இந்த சந்தர்ப்பத்தில், பாபா தன்னிச்சையாக டாக்டர் கனிக்கு (உருது மொழியில்) பின்வரும் வரிகளை எடுத்துரைத்தார்:

பிறர் நம்மைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்று
நாம் சிறிதும் கவலைப்படுவதில்லை;
நமது ஒரே முன்னீடுபாடும், அக்கறையும்
துன்பத்தைத் தவிர வேறொன்றுமில்லை.
முஸல்மான்களுக்கு அல்லா, இந்துக்களுக்கு ராம்;
இரவு என்பது பகலும், காலையும் மாலையும் எல்லாம் சமம்.
அப்துல் கனியின் பாக்கெட்டில் இருப்பது ஏழ்மை எனும் ஒரே பணம்!

அன்று மாலையில், ஜனவரி 1க்குப் பிறகு தொடங்கும் புது வாழ்வில், '**பிறரிடம் யாசித்து ஒன்றை அடையப்பெறும்**' கட்டத்தைப் பற்றி விவாதிக்கும் போது, பாபா மேலும் இது குறித்து முடிவு செய்தார்: "**நீங்கள் கேட்காமலேயே, நெய், மண்ணெண்ணெய், தேநீர், சர்க்கரை, விறகு, புகைக்குழாய்கள், புகையிலை, தீப்பெட்டிகள் போன்றவை வழங்கப்பட்டால் அவற்றை ஏற்றுக்கொள்ளலாம்.**"

அடுத்த நாள், 1949 நவம்பர் 7 திங்கட்கிழமை அன்று, புது வாழ்வு பற்றிய சிறு கையேடு வெளியிடுவதை மையமாகக் கொண்ட மற்றும் பார்வையாளர்களுக்கு நீண்ட விளக்கங்கள் வழங்குவதைத் தவிர்ப்பது குறித்த முக்கிய விவாதம் நடைபெற்றது. சில தோழர்கள் இதற்கு ஆதரவாக இருந்தனர், சிலர் இல்லை. இந்த யோசனையைப் பற்றி விவாதிக்கும் போது, பாபா பின்வரும் விஷயங்களை ஒரு கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான ஒப்புமையுடன் தெளிவுபடுத்தினார்:

1949 அக்டோபர் 16ஆம் நாள் தொடங்கியதாகக் கூறப்படும் இந்தப் புது வாழ்வு - மூன்று நிலைகளைக் கொண்டுள்ளதாகக் கூறலாம்.

முதலாவதாக, அக்டோபர் 16 முதல் டிசம்பர் 31 வரை.

இரண்டாம் நிலை 1950 ஜனவரி 1ஆம் நாள் தொடங்கி நான்கு, ஆறு அல்லது பதினைந்து மாதங்கள் வரை தொடரலாம்.

கட்டிடத்தின் அஸ்திவாரத்தின் கடைசி கல் போடப்பட்ட நேரத்திலிருந்து மூன்றாவது கட்டம் தொடங்குகிறது.

புது வாழ்வைப் பற்றி விளக்குவதற்கு ஒரு கட்டிடத்தின் உதாரணத்தை எடுத்துக் கொள்ளுங்கள். உதவி, பயிற்சி இவற்றின் முதல் கட்டம், கட்டிடத்திற்கு எந்த வகையான பொருட்கள் - செங்கல், சிமெண்டு, சுண்ணாம்பு கலவை, கல், மண் மற்றும் பலவற்றைப் பயன்படுத்த

வேண்டும் என்பதைத் தீர்மானிப்பது போன்றது. இந்த நிலை பெரும்பாலும் உழைப்புக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது கட்டத்தில் இரண்டு பகுதிகள் உள்ளன - ஒன்று பயிற்சி மற்றொன்று நடைமுறைச் செயல். இங்கு அத்தியாவசிய பொருட்களை யாசிப்பதற்கும், லங்கோட்டி வாழ்க்கைக்கும் உழைப்புக்கும் தேவையான பயிற்சி அளிக்கப்படும்; மேலங்கி அணிந்து யாசிப்பதற்காக வெளியே செல்வது, லங்கோட்டி வாழ்க்கை வாழ்வது, உண்மையில் உழைத்து பணிபுரிவது போன்றவற்றில் யதார்த்தமான பயிற்சி வழங்கப்படும்.

இந்த லங்கோட்டி, உழைப்பு, யாசிப்பது போன்றவை கட்டிடத்திற்கான செங்கல், சிமெண்ட் கலவை, மரம், முதலியவற்றைச் சேகரித்து அஸ்திவாரம் அமைப்பதற்குச் சமம். அஸ்திவாரத்தின் கடைசி கல் போடுவது, முழுமையான, பரிபூரண துறவோடு ஒத்திருக்கும்.

மூன்றாவது கட்டம், கட்டிடத்தின் மேல்நிலை - கட்டமைப்பை (நிஜ வாழ்க்கை) நிர்மாணிப்பதைக் குறிக்கும். இந்த வாழ்க்கைக்குத் தொடக்கம் உண்டு ஆனால் முடிவு கிடையாது.

பயிற்சி, நடைமுறை பயிற்சி காலம் இரண்டும் சாதாரண, இயல்பான சூழ்நிலைகள் மற்றும் அமைப்புகளால் வகைப்படுத்தப்படும் என்று ஏற்கனவே விளக்கப்பட்டுள்ளது. எனவே, நமது நோக்கங்களுக்காக வாழும் லங்கோட்டி வாழ்க்கை, உழைப்பு, யாசித்தல் இவை அனைத்தும் கட்டிடத்தின் அஸ்திவாரத்தின் கடைசி கல்லை நிலைநாட்டுவதோடு முடிவடைகிறது - இதைத்தான் முழுமையான, பரிபூரண துறவு என்பது - உலகம் எதைப் பற்றி என்ன நினைத்தாலும் அது சாதாரணமாகவும் இயல்பானதாகவும் கருதப்படும்.

கட்டிடத்திற்குள் உண்மையில் வாழும் மூன்றாவது நிலை - அதாவது முழுமையான துறவை மேற்கொண்ட பின்னர் - அசாதாரணமான மற்றும் இயல்பு நிலைக்கு மாறான சூழ்நிலைகளையும் அமைப்புகளையும் கொண்டிருக்கும். அதே வேளையில் சாதாரண மற்றும் இயல்பான சூழ்நிலைகளும் நிலவும். ஆனால் அசாதாரணமான, இயல்பு நிலைக்கு மாறான சூழ்நிலைகள்தான் துன்பங்களை அனுபவிக்க வழிவகுக்கும்.

என்னால் மேலும் எதையும் கூற இயலாது. இந்த நிலையின் வாழ்க்கை முடிவில்லாத முடிவைக் கொண்டுவரும்!

மதியம் தேநீருக்குப் பின்னர், ஒருவரின் தனிப்பட்ட தேவைகள் மற்றும் அத்தியாவசிய தேவைகளைப் பற்றிய விவாதம் எழுந்தது. ஹரித்வார், ரிஷிகேஷ் போன்ற இடங்களில் கடுமையான இமயமலை குளிரிலிருந்து தம்மைப் பாதுகாக்க, தோழர்களுக்குப் போதுமான கம்பளி ஆடைகள் வழங்கப்படவில்லை

என்று தெரியவந்தபோது, பாபா ஒவ்வொருவருக்கும், ஏற்கனவே பட்டியலிட்ட பொருட்களையும் தவிர, மேலும் இரண்டு போர்வைகளை வாங்க அனுமதித்தார்.

தேவையான கொள்முதலை மேற்கொள்ளுமாறு எரச்சிற்கு அறிவுறுத்தப்பட்டது.

அவ்வேளையில் பாபா, **"இப்போது நம்மிடம் இருப்பவை, இந்தப் புது வாழ்வின் இறுதி காலம் வரை நீடிக்க வேண்டும்; ஜனவரி 1ஆம் நாளுக்குப் பின்னர் இதில் எதையும் இணைக்க முடியாது. அதற்குத் தேவையான பணம் நம்மிடம் இருக்காது. இதுவே நம்மிடையே வழங்க முடிகிற அதிகபட்ச வரம்பு. எல்லா நேரங்களிலும், எல்லா சூழ்நிலைகளிலும், இந்தக் கூடுதலான தேவைகள் மற்றும் அத்தியாவசிய தேவைகளை வழங்குவதில், எனது மனசாட்சி தெளிவாக இருப்பதை இப்போது உணர்கிறேன். நம் வசம் உள்ள வரும்படியின் வரம்பிற்குள் என்னால் முடிந்ததைச் செய்துள்ளேன்."**

மறுநாள் காலை, 1949 நவம்பர் 8 செவ்வாய்க் கிழமை ஆண் தோழர்கள் தங்கும் குடிலுக்கு பாபா வந்தபோது, குஸ்தாஜியின் படுக்கையைச் சுற்றி சுண்ணாம்பால் வரையப்பட்ட எல்லைக் கோடுகளைப் பார்த்து, பாபா அவரிடம், **"ஏன் நீங்கள் உங்கள் பழைய பழக்கங்களைக் கைவிடக்கூடாது?"** என வினவினார்.

"அதில் எந்தத் தீங்கும் இருப்பதாக நான் நினைக்கவில்லை," குஸ்தாஜி பதிலளித்தார்.

"ஆனால் நான் அதில் தீங்கிருப்பதைக் காண்கிறேன், நீங்கள் ஏன் அதை செய்தீர்கள்?"

"நீங்கள் அதில் தீங்கைக் கண்டால், நான் அதை மீண்டும் செய்ய மாட்டேன்," குஸ்தாஜி பதிலளித்தார்.

"ஆனால், முதலில் அதை ஏன் செய்தீர்கள்?" குஸ்தாஜி பதிலளிக்கவில்லை; அப்போது பாபா, காக்காவை அழைத்தார். அவர் வருவதற்கு சிறிது காலந்தாழ்த்தியதால் அவரைக் குறை கூறும் விதத்தில், பாபா கேட்டார், **"ஏன் தாமதமாக வந்தீர்கள்?"**

காக்கா உடனே, "நான் வெங்காயத்தை வதக்கிக் கொண்டிருந்தேன், நான் அதை அப்படியே அடுப்பில் விட்டுவிட்டு வந்திருந்தால் அது வீணாகியிருக்கும்" என்றார்.

தோழர்களை எச்சரித்து, பாபா விளக்கமளித்தார்:

உங்களுடைய பழைய பழக்கத்தைக் கைவிடும் விஷயத்தில் நான் அனைத்து உதவிகளையும் செய்திருந்தாலும், நீங்கள் அனைவரும் அதில் அலட்சியமாக உள்ளீர்கள் என்பதை நான் மிகவும் உன்னிப்பாக கவனித்து வருகிறேன். நீங்கள் உத்தரவுகளைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை போலத் தோன்றுகிறது. நேற்று காலை நான் கனியிடம் தொப்பியை

அணியச் சொன்னேன், அவர் சூரியன் அந்த அளவிற்குச் சூடாக இல்லை என்று பதிலளித்தார். நான் ஆதியிடம் (புது வாழ்வு பாடலின்) ஒரே குரலில் ஒன்றிணைந்து பாடச் சொன்னேன், அவர் அதை அப்படியே மறந்துவிட்டார். இந்த இரண்டு நிகழ்வுகளிலும் இது ஒரு நேரடி உத்தரவு அல்ல, ஆனால் மறைமுகமான உத்தரவுகளில் கூட மறைமுகமாக இணங்கிப் போவது உங்கள் பழைய பழக்கங்களை விட்டுவிட உதவும். இந்தப் பயிற்சியானது, ஜனவரி 1ஆம் நாளுக்குப் பிறகு, புது வாழ்வை ஓரளவு நம்பிக்கையுடன் எதிர்கொள்ள உங்களுக்கு உதவும்.

இருப்பினும், குஸ்தாஜி, காக்கா இருவரும் தங்கள் பழைய பழக்கங்களைக் கைவிட முடியாமல் நேரடியான கட்டளைகளை மீறினார்கள், ஒருவேளை, அறியாமலே நிகழ்ந்ததாகக் கூட இருக்கலாம். பழைய பழக்கவழக்கங்கள் அனைத்தையும் களைந்துவிடுமாறு முழு அக்கறையுடனும், கூப்பிய கரங்களுடனும் அவர்களிடம் கேட்டுக் கொள்கிறேன். இந்தத் தவறுகள் டிசம்பர் இறுதி வரை மன்னிக்கப்படும். ஆனால், ஜனவரி 1ஆம் தேதிக்குப் பின்னர், இந்தப் பழக்கங்களைத் தொடர்ந்தால், என்னுடன் இருக்க முடியாது.

ஜனவரி 1ஆம் தேதிக்குப் பிறகு, முந்தைய சேவைகள் மற்றும் என்னுடனான நீண்ட நெடிய தொடர்பை சற்றும் பொருட்படுத்தாமல், புது வாழ்வு நிபந்தனைகள் மற்றும் உத்தரவுகளுக்குக் கீழ்ப்படிவதில், அனைவரும் சமமாகக் கருதப்படுவார்கள்.

ஒருவேளை, மலை ஏறும் போது, கனி களைப்பினால் வீழ்ந்து, டான் வலுவாக இருந்து விரைவாகச் செல்லும் நேரத்தில், நான் கனியிடம் பாடச் சொல்லலாம், டானிடம் மேலும் செல்வதை நிறுத்தச் சொல்லலாம். அந்த சூழ்நிலையில், கனி பாடுவதற்கு முயற்சி செய்து, டான் உடனடியாக நிற்கவில்லை என்றால், கனி வெற்றி பெறுகிறார் என்றும் டான் தோல்வியடைகிறார் என்றும் அர்த்தம்.

எனவே, நீங்கள் அனைவரும் உங்களால் இயன்றவரை, பழைய பழக்கங்களைக் களைய முயற்சிக்க வேண்டும்; மறைமுகமான மற்றும் நேரடி உத்தரவுகள், முக்கியமற்றதாகவோ அல்லது அர்த்தமற்றதாகவோ தோன்றினாலும், உடனடியாகச் செயல்படுத்த வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். இந்தப் பழக்கத்தை இப்போதே வளர்த்துக்கொள்வது 1950 ஜனவரி 1ஆம் நாளுக்குப் பின்னர் உங்களுக்கு நல்ல பலனை அளிக்கும்.

உள்ளூர் பத்திரிகை ஆசிரியர் அன்று மீண்டும் பாபாவின் தரிசனத்திற்காக வந்தவர், ஆதியின் விளக்கத்திற்கும் வற்புறுத்தலுக்கும் பின்னரும், அவர் மெஹர் பாபாவை நேரில் சந்திப்பதில் பிடிவாதமாக இருந்தார்.

அப்போது பாபா குடிசையை சுத்தம் செய்து கொண்டிருந்தார். துடைப்பத்தை தரையில் வைத்துவிட்டு, பாபா முன் வந்து அந்த மனிதரின் கால்களைத் தொட்டார்.

நவம்பர் 9 அன்று காலையில், பாபா தோழர்களிடம் வந்த வேளையில், டாக்டர் கனி கழிப்பறையில் இருந்தார். பாபா அவரை அழைக்க, அவர் அப்படியே, கால் சட்டையைக் கீழே தொங்கவிட்ட வண்ணம் வந்தார்! பாபாவும் பிற தோழர்களும் அவரது உடனடி கீழ்ப்படிதலைக் கண்டு கோஷமிட்டு, கைதட்டி அவரைப் பாராட்டினர். பாபாவும் மிக்க மகிழ்ச்சியடைந்து, கனியைத் திருப்பி அனுப்பிவைத்தார்.

பாபா தொடர்ந்து, **"நேற்றிரவு எனக்கு எந்த இடையூறும் ஏற்படவில்லை. ஆந்தைகள், வெளவால்கள் இவற்றை விரட்டுவதில் அண்ணா வெற்றி கண்டதால் நான் நன்றாக ஓய்வெடுத்தேன்!"** என்றார்.

பாபா, விஷ்ணுவை ஏதோ ஒரு வேலையின் நிமித்தம் பூனாவிற்கு அனுப்பியிருந்தார். முந்தைய நாள் இரவு அவர் திரும்பி வந்ததும், பூனாவைப் பற்றிய செய்திக்காக தோழர்கள் அவரை வற்புறுத்தினர். விஷ்ணு இவ்வாறு பதிலளித்தார், "செய்தித்தாள்களைப் படிக்கக் கூடாது, அரசியல் பேசக் கூடாது, நண்பர்களையோ பரிச்சயமானவர்களையோ பார்க்கக் கூடாது என்பது பாபாவின் கட்டளை. அப்படியானால், எனக்கு எப்படி எந்தச் செய்தியும் கிடைக்க முடியும்? ஆனால், கோட்ஸே (GODSE), ஆப்டே - APTE (மஹாத்மா காந்தியின் கொலையாளிகள்) இருவரும் இம்மாதம் 15ஆம் தேதி தூக்கிலிடப்படுவார்கள் என்று தெருக்களில் செய்தித்தாள் விற்பனை செய்யும் சிறுவர்கள் கூக்குரலிடுவதை நான் கேட்க முடிந்தது."

இந்தச் செய்தியை அறிந்த தோழர்கள் பாபாவிடம், "நாம், நவம்பர் 15ஆம் நாள் பெனாரஸ் நகரைச் சென்றடைய வேண்டும், மேலும் பொதுக் கூட்டங்களைத் தடைசெய்து, வெளியாட்கள் நகரத்திற்குள் நுழைவதைத் தடுக்கும் இந்திய தண்டனை சட்டத்தின் 144ஆவது பிரிவை அரசாங்கம் அமல்படுத்தக்கூடும். இதன் காரணமாக, உங்கள் உத்தரவை மறுபரிசீலனை செய்து, இந்த இக்கட்டான காலங்களில் தோழர்கள் செய்தித்தாள்களைப் படிக்க அனுமதிப்பீர்களா?"

நீண்ட விவாதத்திற்குப் பிறகு, பாபா இந்த முடிவை எடுத்தார்:

தோழர்கள் அனைவரும் இதுவரை செய்து வந்ததைப் போல, செய்தித்தாள்களைப் படிக்கவோ, அரசியலைப் பற்றி பேசவோ கூடாது.

புது வாழ்வின் நோக்கங்களுக்காக இதர விஷயங்களில் இருப்பது போலவே நானும் உங்களுடன் ஒரே நிலையில் இருக்கிறேன். ஆகவே, செய்தித்தாளை முதலில் படிக்கவும், பின்னர் பொருத்தமான, தேவையான

செய்திகளை மட்டும் தோழர்களுக்குத் தெரிவிக்கும்படியும் உங்களில் ஒருவர் முன்மொழிந்த யோசனையை நான் விரும்பவில்லை.

இதற்கு என்னிடம் ஓர் உபாயம் உள்ளது. டான் அதை 100 சதவிகிதம் தீவிரமாக எடுத்துக் கொண்டால், அவர் ஒரு சிறந்த சேவையைச் செய்வார். 75 ரூபாயை அவர் தன்னிடம் வைத்துக்கொள்ள வேண்டும், தினசரி செய்தித்தாளை நாம் எங்கிருந்தாலும் வாங்குவதற்கு இது போதுமானதாக இருக்கும். முடிந்தால் அவர் அதை இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

டான் மட்டும் செய்தித்தாளைப் படித்து, நமது புது வாழ்வுக்கு ஏற்ப, நமது நோக்கத்திற்காகத் தேவைப்படும் செய்திகளை வெட்டியெடுக்க வேண்டும். அத்தகைய துண்டு செய்திகளுக்கு நான் ஒப்புதல் அளித்த பிறகு, தோழர்களுக்குப் படிக்கக் கொடுக்கப்படும். டான் இந்தப் பணியை 100 சதவிகிதம் செய்ய முயற்சிக்க வேண்டும் என்று நான் கூறுவதன் அர்த்தம் என்னவெனில், அவர் படிக்கும் அரசியல் மற்றும் உலகச் செய்திகளைப் பற்றி பிற தோழர்களிடம் (டான்) மூச்சுவிடக் கூடாது என்பதுதான்.

புதிய சட்டங்கள், கலவரங்கள், ஊரடங்குச் சட்டம், பிரிவு 144, வேலைநிறுத்தங்கள், தொற்றுநோய்கள் மற்றும் பலவற்றைப் பிரகடனப்படுத்துவது தொடர்பான செய்திகளை மட்டுமே நீங்கள் சேகரிக்க வேண்டும். அதற்குப் பிறகு, படித்ததை மறந்துவிட்டு செய்தித்தாளை அழித்துவிடுங்கள். இது டானின் வாழ்நாள் கடமை.

மறுநாள் டாக்டர் நீலு, பாபாவின் கட்டளையை நிறைவேற்றுவதில் சுயநினைவின்றி தவறிழைத்ததால், பாபா அதை விமர்சித்து, **"உங்கள் மீது தவறு இல்லாதபோதும், நான் உங்களைக் கடிந்துகொண்டாலும், கவலைப்படுவதற்கு அதில் என்ன இருக்கிறது? தவறு இருந்தால் திருத்திக்கொள்ளுங்கள். சரியோ தவறோ, ஒருபோதும் என்னுடன் வாதிடாதீர்கள் அல்லது உங்களைத் தற்காத்துக் கொள்ள முயற்சிக்காதீர்கள்"** என்றார்.

அன்று மதியம் விஸ்வநாத் ஹல்தங்கர் எதிர்பாராத விதமாக கோலாப்பூரிலிருந்து வந்தார். அவர் பெல்காவ்மில் உள்ள தனது நிலத்தைப் பற்றி விவாதிக்க விஷ்ணுவை எதிர்நோக்கி தனது சகோதரியின் இல்லத்தில் காத்திருந்தார், ஆனால் அவர் முன்னறிவிப்பு எதுவுமின்றி தோழர்களின் குடிலில் திடீரெனத் தோன்றி, கூப்பிய கரங்களுடன் பாபாவிற்கு மரியாதை செலுத்தினார். பாபாவும் அவரது தோழர்களும் பழைய வாழ்க்கை சீடர்களைப் பார்க்கக்கூடாது என்ற நிபந்தனையின் பேரில் பாபா கோபமடைந்து, ஹல்தங்கரின் கால்களைத் தொட்டு, திருப்பி அனுப்பினார்.

கோஹெரின் இளைய சகோதரர் ஜால் ரூசியும் அந்த நேரத்தில் பணி நிமித்தம் பெல்காவ்ம் வந்திருந்தும், கட்டுப்பாடுகள் காரணமாக, அவர் பாபாவையோ அல்லது அவரது சகோதரியையோ பார்க்க வரவில்லை. டான் அவரைப் பலமுறை சாலையில் கடந்து சென்றும், இருவரும் ஒருவரையொருவர் தங்கள் முகங்களைத் திருப்பிக் கொண்டனர், ஏனெனில் தோழர்களுக்கு அக்காலகட்டத்தில் பழைய நண்பர்கள் அல்லது அறிமுகமானவர்களை பார்க்கவோ அல்லது அவர்களுடன் பேசவோ அனுமதி இல்லை.

புது வாழ்வில் யாசித்தல் -

பாபா, ஆதி சீனியர், பாபாதாஸ் இருவருடன், **25** நவம்பர் **1949**

(BEGGING DURING THE NEW LIFE, WITH ADI SENIOR, BABADAS, 25 NOVEMBER 1949)



டெஹ்ரா டூன் (DEHRA DUN), **1950**

புது வாழ்வு கூண்டு வாகனம்; கடிவாளத்தை கையில் வைத்திருப்பவர் குமார்
(NEW LIFE CARAVAN, KUMAR HOLDING THE REINS)

பெனாரஸ் & சாரநாத்

(Benares & Sarnath)

1949 நவம்பர் **11** வெள்ளிக்கிழமை, பெட்டி படுக்கைகளைத் தயார் செய்து, **12**ஆம் நாள் மாலை, பாபா, ஆண், பெண்மணிகளுடன் பெல்காவ்மிலிருந்து ரயிலில் பூனாவிற்குப் புறப்பட்டார். பெண்மணிகள் முதல் வகுப்பை ஆக்கிரமிக்க, பாபாவும் ஆண் தோழர்களும் மூன்றாம் வகுப்பில் பயணம் செய்தனர். பெண்டு, பைதூல் இருவரும் அனைத்து பொருட்களுடன் அவர்களுக்கு முன்னால் புறப்பட்டுச் சென்றனர்.

நவம்பர் **13** அன்று, காலை சுமார் **6:15** மணிக்கு அவர்கள் பூனாவை வந்தடைந்தனர். அங்கிருந்து பெனாரஸுக்கு ரயிலில் முன்பதிவு செய்ய பெண்டு, பைதூல் இருவரையும் பாபா மும்பைக்கு அனுப்பி வைத்தார். பாபா, தோழர்களுடன் பூனா ரயில் நிலைய நடைமேடையில் இருந்த வேளையில், காடேக்கர் மற்றும் பேராசிரியர் ஹபிபுல்லா இ. ஹக்கீம் (HABIBULLAH E. HAKIM) ஆகியோர் அங்குத் தென்பட்டனர். இருப்பினும், உடன் இருந்தவர்கள் அவர்களைக் கண்டுகொள்ளாததால், அவர்கள் அங்கிருந்து வெளியேறினர்.

டாக்டர் நீலு கழிவறைக்குச் செல்ல வேண்டியிருந்ததால், அருகில் நின்றுகொண்டிருந்த உள்ளூர் ரயில் ஒன்றைப் பயன்படுத்திக் கொண்டார். ஆனால் அந்த ரயில், நிலையத்தை விட்டு நகரத் தொடங்கியதும், அவர் பீதியடைந்து, கால்சட்டையின் பொத்தான்களைக் கூட போடாமல், கீழே குதித்து இறங்கினார். டாக்டர் நீலு அந்தக் காட்சியை விவரித்தபோது சக தோழர்கள் கலகலவென சிரித்து மகிழ, பாபாவும் அந்த சம்பவத்தின் நகைச்சுவையை ரசித்தார்.

நீலு, கனி இருவருடன் பாபா பூனாவை ஒரு மணிநேரம் சுற்றி வந்தார். மதியம் **12:50** மணிக்கு பூனாவிலிருந்து புறப்பட்டு, அன்று மாலை **6:30** மணிக்கு மும்பை வந்து சேர்ந்தனர். பெண்மணிகள் முதல் வகுப்பிலும், பாபா, பணியாட்களின் பெட்டியை ஏழு தோழர்களுடன் ஆக்கிரமிக்க பிற தோழர்கள் வேறொரு பெட்டியில் பயணம் செய்தனர்.

நவம்பர் **15** அதிகாலை **2:30** மணிக்கு 'கல்கத்தா மெயில்' மூலமாக 'முகல் ஸராய்' (MUGHAL SARAI) ரயில் நிலையத்தை வந்தடைந்த குழுவை சதாஷிவ் பாட்டீல் சந்தித்தார். முகல் ஸராய் நிலையத்தில் அவர்கள் பெனாரஸுக்கு ரயில்களை மாற்ற வேண்டியிருந்ததால், அனைத்து பொருட்களையும் எடுத்துச் செல்ல, தோழர்கள் முன்னும் பின்னுமாக ஓட வேண்டியிருந்தது; பொருட்களின் ஒரு பகுதியுடன் தனியாக நின்றுகொண்டிருந்த பாபா எரிச்சலடைந்து, மேலும் அவரை கவனிக்காமல் தனியாக விட்டுவிட்டதற்காகத் தோழர்களைக் கடிந்து கொண்டார். அப்போது பாபா

தன்னைத் தானே விமர்சித்தார், **"எனக்கு கோபம் வந்தது நல்லதல்ல, எனவே, நீங்கள் ஒவ்வொருவரும் எனது காதைக் கிள்ளுவதோடு, ஒரு முறை என்னை அறையவும் வேண்டும்"** என்றதும், சக தோழர்கள் பாபாவின் கட்டளையை நிறைவேற்றி, பின்னர் அமைதியடைந்து அனைவரும் தேநீர் அருந்தினர்.

வானிலை மிகவும் குளிராக இருந்தது; அனைவரும் நடுக்கத்தில் அதிகாலை **3:30** மணிக்கு முகல் ஸராயிலிருந்து புறப்பட்டு, ஒரு மணி நேரத்தில் பெனாரஸ் வந்தடைந்தனர். ரயில் நடைமேடையில் காத்திருந்த பாபாதாஸ், பாபா இறங்கியதும், டாக்டர் நாத் தனது மனைவியுடன் காலை நான்கு மணியிலிருந்து ரயில் நிலையத்தில் காத்திருப்பதாகத் தெரிவித்தார்.

இதைக் கேட்டதும், பாபாதாஸ் மீது சீற்றமடைந்து, பாபா, அவரை விமர்சித்தார், **"நம்மை எதிர்நோக்கி, ரயில் நிலையத்திற்கு எவரும் வரக்கூடாது; மேலும், புது வாழ்வில் தரிசனம், ஆசீர்வாதம், நேரடியாக அல்லது மறைமுகமாகப் பார்ப்பது போன்றவை எல்லாம் நிறுத்தப்பட்டுவிட்டதாக ஏன் அவர்களுக்குத் தெளிவுற தெரிவிக்கவில்லை?"**

"நான் அவர்களுக்கு எல்லாவற்றையும் விளக்கினேன்," என்று பாபாதாஸ் பதிலளித்து "அவர்கள் எப்படி இங்கு வந்தார்கள் என்று எனக்குத் தெரியவில்லை" என்றார்.

பாபா அப்போது குறிப்பிட்டார்: **"பெனாரஸில் நான் முதன்முதலில் நுழைந்த நேரத்தில் ஏற்பட்ட இந்த எரிச்சல் எதிர்காலத்திற்கு நல்லதல்ல."**

அவர் எரச், பாபாதாஸ் இருவரையும் டாக்டர் நாத்திடம் அனுப்பி, பாபாவைப் பார்க்க முயலாமல் உடனடியாக வெளியேறும்படி கூறுமாறு கேட்டுக் கொண்டார். அவரும் அவரது மனைவியும் ரயில்வே மேம்பாலத்தில் கடும் குளிரில் நின்று கொண்டிருந்தனர், பாபாவும் தோழர்களும் இன்னும் நடைமேடையில் இருந்தனர். நான்கு பெண்மணிகளையும் இருப்பிடத்திற்கு ஓட்டிச் செல்ல தனது ஓட்டுநருடன் வந்ததாக டாக்டர் நாத் விளக்கினார். அதற்கு பதிலாக நாத் ஒரு ரூபாயைப் பெற்றுக்கொள்வதாக இருந்தால் பாபா அதற்கு ஒப்புக்கொள்வதாக அறிவுறுத்தினார் - ஆனால் அவர்களுக்கு இன்னும் தரிசனம் அனுமதிக்கப்படவில்லை.

பாபாவின் அறிவுறுத்தலைப் பெற்றுக்கொண்ட திரு மற்றும் திருமதி நாத், ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர். அவர்கள் பாபாவிற்கு மிகச் சிறந்த ஏற்பாடுகளைச் செய்திருந்தாலும், இது அவர்களின் பிரசாதமாக அமைந்தது! அவர்கள் உண்மையில் மிகவும் அதிர்ஷ்டசாலிகள், மேலும் அவர்களின் நம்பிக்கையில் உறுதியானவர்களாக இருந்ததால் இந்த அன்பின் அதிர்ச்சியைத் தாங்க முடிந்தது. டாக்டர் நாத் அல்லது டாக்டர் கரே இருவரில் இதுவரை எவரும் பாபாவை சந்தித்ததில்லை; இருவரும் அவரது வழிமுறைகளுக்குப்

புதியவர்கள். ஆனால் அவர்கள் புது வாழ்வின் இந்தக் காலகட்டத்தில் பெனாரஸில் பாபாவிற்குப் பெரும் உதவியாக இருந்தனர். உண்மையில் அவர்கள் "பாபாவுடன் கடந்தகாலத் தொடர்பில் இருந்த பழம் பெரும் ஆத்மாக்கள்."

ரயில் நிலையத்தில் டாக்டர் நாத் இருந்ததால், பாபா மற்றும் குழுவினருக்கு அரை மணி நேரம் தாமதமானது. அதன்பிறகு, பாபாவும் பெண்மணிகளும் டாக்டர் நாத்தின் காரில் 'பாரத் மிலாப்' (BHARAT MILAP) பிரிவுக்கு அருகிலமைந்த 'நிச்சி பாக்' (NICHI BAGH) பங்களாவிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்; ஆண் தோழர்கள் பெட்டி படுக்கைகளுடன் நடந்து சென்றனர். டாக்டர் நாத், 'நாடி இம்லி' (NATI IMLI) என்றழைக்கப்பட்ட ஒரு விசாலமான, கம்பீரமான பங்களாவை வாடகைக்கு எடுத்திருந்தார், அதில் ஆண், பெண்மணிகளுக்கென தனித்தனியாக இரண்டு கட்டமைப்புகள் இருந்தன. அது ஒரு பெரிய மலர், பழ மர தோட்டம் மற்றும் கல் சுவர்களால் அனைத்து பக்கங்களிலும் மூடப்பட்டிருந்தது.

டாக்டர் கோஹெர் நீண்ட பயணத்தால் சோர்வாக இருந்தார். அவர்கள் வீட்டிற்குள் நுழைந்ததும் அவர் ஒரு சோஃபாவில் சாய்ந்தது, பாபாவிற்குப் பிடிக்காமல், **"புது வாழ்வில் நாற்காலிகள், சோஃபாக்கள், படுக்கைகள் போன்றவற்றைப் பயன்படுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது. அனைத்து சுகபோகங்களும் இங்கே இருந்தாலும், அவற்றில் எதையும் பயன்படுத்த வேண்டாம்"** என்று நினைவுபடுத்தினார்.

டாக்டர் நாத்தின் இல்லத்திலிருந்து பெறப்பட்ட, மிகையான, மனம் கவரும், சுவை மிகுந்த போஜனம், அவர்களின் அன்றைய மதிய உணவாக அமைந்தது.

முதலாவதாக, இரு மருத்துவர்களும் முதல் 25 நாட்கள் வழங்கவேண்டிய உணவுக்கான ரூ 600ஐ மறுத்துவிட்டனர்; ஆனால் அது பாபாவின் குறிப்பிட்ட விருப்பமாக இருந்ததால், இறுதியாக அவர்கள் அந்தப் பணத்தை ஏற்றுக்கொண்டனர். டாக்டர் கரேயின் தந்தை கயா பிரசாத் தனது மனைவியுடன் ரத் நகரத்திலிருந்து வந்திருந்தார், ஆனால் தரிசனம் அனைவருக்கும் தடை செய்யப்பட்டிருந்த போதிலும், பாபா, ஆதி சீனியர், சதாஷிவ், பாபாதாஸ், எரச் மூலமாக வழங்கிய தனிப்பட்ட செய்திகளை, கரே குடும்பத்தினர் தங்கள் அதிர்ஷ்டமாக எடுத்துக் கொண்டனர்.

விசாலமான 'நாடி இம்லி' மனை, சில காலமாக சுத்தம் செய்யப்படவில்லை. எனவே, முதல் நாளிலிருந்தே, பாபாவும் தோழர்களும் இந்தப் பணியைத் தொடங்கினர். அவர்களின் பெட்டகங்கள் பெல்காவ்மிலிருந்து ஒரு சரக்கு ரயில் மூலம் அனுப்பப்பட்டன, ஆனால் அவை பெனாரஸ் வந்தடைந்தபோது ஒரு பெட்டி குறைவாக இருந்தது. முழு சாமான்களையும் சரி பார்க்கும் வரை அவற்றை விஷ்ணுவிடம் ஒப்படைக்க அதிகாரிகள்

மறுத்துவிட்டனர். சக தோழர்களிடம் வேறு ஆடைகள் இல்லாததால், நீராடிய பின்னர் அதே ஆடைகளை அணியுமாறு பாபா அறிவுறுத்தினார்.

அதே நாளில், நவம்பர் 16, பாபா மீண்டும் எரச், ஆதி, பாபாதாஸ் ஆகியோரை மருத்துவர்களிடம் அனுப்பி, பாபாவால் மேலும் வழங்கப்படும் 700 ரூபாயைப் பயன்படுத்தி, இரண்டு பசுக்களும், இரண்டு பெண் கழுதைகளும் வாங்குமாறு அறிவுறுத்தினார். இரு மருத்துவர்களும் தங்கள் சேவையை வழங்க ஆர்வமாக இருந்ததால், பாபா அவர்களுக்கு இந்த வாய்ப்பை அனுமதித்தார். பழைய மற்றும் புதிய வாழ்க்கைக்கு இடையே ஒரு 'இணைப்புச் சங்கிலி'யாக பணியாற்றுவது மாபெரும் அதிர்ஷ்டம் என்ற செய்தியை ஆதி, எரச் இருவரின் மூலமாக டாக்டர் நாத்திற்கு, பாபா அனுப்பி வைத்தார்.

கயா பிரசாத், நாடி இம்லி பங்களாவில் உணவு தயார் செய்வதை மேற்பார்வையிடத் தொடங்கினார். பாபா, விஷ்ணுவை அவரிடம் பலமுறை அனுப்பி, இவ்வாறு அவரைக் கடிந்துகொள்ளும்படி அறிவுறுத்தினார்: "நீங்கள் இங்கே சமையல் செய்கிறீர்களா அல்லது வீடு முழுவதும் புகையைப் பரப்புகிறீர்களா? உங்களுக்கு ஏதேனும் புத்தி இருக்கிறதா?"

கயா பிரசாத் பணிவுடன் பதிலளித்தார், "குருஜி, என்னை மன்னியுங்கள்; இனிமேல் புகை வராது."

விஷ்ணு, கயா பிரசாத்தை ஒரு சமையல்காரர் என்று நினைத்தார்; ஆனால், உண்மையில் அவர் ஒரு போக்குவரத்து நிறுவனத்தின் உரிமையாளர், செல்வந்தர், பாபாவிற்கு சேவை செய்யும் நோக்கத்தில் ஒரு வாடகை சமையல்காரரை நியமித்து, மேற்பார்வை செய்துவந்தார். அன்று மாலை, கயா பிரசாத் தனது மகனின் வீட்டிற்குத் திரும்பிச் சென்ற வேளையில், அவருடைய மருமகள், "பாபா எங்களை இங்கே சமைக்க அனுமதித்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும். நாமும் அவருக்கு சேவை செய்வதில் பங்கெடுத்திருக்கலாம்" என்று கூறினார். டாக்டர் நாத்தின் மனைவியும் இதே எண்ணத்தைக் கொண்டிருந்தார், ஆனால் கட்டுப்பாடுகள் காரணமாக, அவர்களின் விருப்பத்தை எடுத்துக்கூற முடியாமலாயிற்று.

அடுத்த நாள், கயா பிரசாத் நாடி இம்லிக்கு சமையல் செய்ய சென்றபோது, பாபாவின் அறிவுறுத்தலின்படி, விஷ்ணு, "ஏய், சமையல்காரரே, நேற்றைய உணவு மிகவும் மோசமாக இருந்தது! உங்களுக்குச் சமையல் தெரியுமா, அல்லது தெரியாதா?" என விமர்சித்து வினவினார்.

கயா பிரசாத் பணிவுடன் பதிலளித்தார், "குருஜி, நான் இன்று நன்றாக சமைப்பேன், இது எனது சத்தியம். நேற்றைய தவறுக்கு என்னை மன்னியுங்கள். அது முதல் நாள்."

அன்று மாலையில் பாபா, கயா பிரசாத்திற்கு விஷ்ணு மூலம், 'அடுத்த நாள் உணவு டாக்டர் நாத்தின் இல்லத்தில் தயார் செய்து அனுப்பப்படவேண்டும்'

என்று கூறி அனுப்பினார். இரு டாக்டர்களின் மனைவிகளும் இந்த வாய்ப்பை எதிர்நோக்கி இருந்ததால் கயா பிரசாத் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.

கயா பிரசாத்தின் சேவை உண்மையானது. கண்டனங்கள், கேலி கிண்டல்கள் இருந்தபோதிலும், அவர், மெஹர் பாபாவின் சேவையில் தாழ்மையுடனும், முழுமனதுடனும் அன்பாகப் பணியாற்றினார். பாபா, அவருக்கு தரிசனம் வழங்கவில்லை - அவரை சக தோழர்களுடன் அமர அனுமதிக்கவில்லை - மேலும், தக்க காரணமோ, தவறோ இல்லாத பட்சத்திலும் அவர் குறை கூறி குற்றம் சாட்டப்பட்டார்! டாக்டர் குடும்பத்தினர் பங்களாவை நெருங்கக் கூட முடியவில்லை. ஆனால் பாபாவின் செயல்பாடு முற்றிலும் இரு குடும்பங்கள் மீதும் கொண்ட அன்பினால் விளைந்தது என்பதில் சந்தேகம் இல்லை. அவர் தனது கண்டிப்பான அணுகுமுறையால் அவர்கள் மீது தனது அன்பைப் பொழிந்தார், மேலும் அவர்கள் அத்தகைய அனுபவத்தைப் பெற்ற உண்மையான அதிர்ஷ்டசாலிகள்.

1949 நவம்பர் **17** வியாழன் அன்று காலை, தோழர்கள் வந்ததும் பாபா அவர்களின் கால்களை சுத்தம் செய்து வருமாறு கூறினார். அவர்கள் திரும்பி வந்ததும், எந்த விளக்கமும் அளிக்காமல், பாபா தனது கைகளால் அவர்களின் கால்களைத் தொட்டார். புது வாழ்வில், மண்டலி என்ற சொல்லைக் குறிப்பிடுவது தடைசெய்யப்பட்டது. பாபா உட்பட உறுப்பினர்கள் அனைவரும் 'தோழர்கள்' என்று அழைக்கப்பட்டனர். இதன் பொருள் என்னவெனில், அந்த நேரத்தில் பாபாவின் பணி, முழுப் பௌதீக உணர்வு நிலையில் பௌதீக தளத்தில் நிகழ்ந்தது; மேலும், தனது பணிக்காக, பௌதீக உலகை மையமாக வைத்து, பாபா ஒரு பக்தர் எனும் பாத்திரத்தில் பணிபுரிந்தார். அவ்வாறு செயல்படும் போது, தோழர்களிடம், ஒரு பக்தனின் அனைத்து பலவீனங்களையும் வெளிப்படுத்தினார். அதே நேரத்தில், அவர் தனது சுய நடத்தை மூலமாக, பலவீனங்கள் இல்லாத பாதையைச் சுட்டிக்காட்டினார்.

"மனித உடலில் பரிபூரண தன்மை என்பது பரிபூரணத்தின் ஒவ்வோர் அம்சத்திலும் முழுமையானது" என்று காலம் விளக்குகிறது. "பரிபூரணத்துவம் ஒரு பரிபூரண இறை மனிதனை, ஒரு துப்புரவாளரின் பணியைச் செய்யும்படி நிர்ப்பந்தப் படுத்தினால், அந்தப் பணியில் ஈடுபடும் வேளையில் பரிபூரணத்துவம் பரிபூரணமாக வெளிப்படும். அதே போல், ஒரு அரசனின் பாகத்தைச் செய்யும்போது, பரிபூரணத்துவம் முழுமையாக வெளிப்படும். இந்த வழியில், ஒரு ஆதரவற்றவராக, விசுவாசமுள்ள மனிதராக, கயவனாக, போக்கிரியாக இது போன்ற பலராக அனைத்து அம்சங்களில், பரிபூரண இறைவன் பரிபூரணத்தை வெளிப்படுத்துகிறார். ஒரு பாவியின் பாத்திரத்தில் நடிப்பதில் எவ்வளவு பரிபூரணம் அடங்கி உள்ளதோ அதே அளவில் ஒரு பரதேசியாக நடிப்பதிலும் உள்ளது.

“இந்தப் புது வாழ்வின் காலகட்டத்தில், குருநாதராக இருந்த பாபா ஒரு முழுநிறை பக்தராக மாறும் அவ்வேளையில், அவரது தெய்வீக உணர்வு, அந்தப் பாகத்தை முழுமையாக வெளிப்படுத்தியது. ஒவ்வோர் அடியிலும் தோழர்களின் குறைபாடுகளை முறியடித்து, மெஹர் பாபா அவர்களை ‘அபூரண’ பரிபூரணம் எனும் ஊடகம் வழியாக, பரிபூரண நிலைக்கு அழைத்துச் சென்றார்!”

அவர்களின் பாதங்களைத் தொட்டு பாபா கூறினார், **“கழுதைகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகைதான் நம்மை இவ்வளவு தூரம் கொண்டு வந்தது, ஆனால் இந்த பங்களாவை இலவசமாகப் பயன்படுத்த வழிசெய்த டாக்டர் நாத்தின் செயல், கழுதைகளுக்கான தொகையை ஓரளவு ஈடுகட்ட உதவியாக இருந்தது.**

“இந்த சேமிப்பு ரூ 200 மற்றும் கையிருப்புத் தொகையான ரூ 500 - மொத்தம் ரூ 700 - இந்தப் பணத்தில் முடிந்தால் இரண்டு மாடுகளையும் இரண்டு கழுதைகளையும் வாங்குவதற்காக டாக்டர் நாத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது; இவற்றில் இரண்டு கழுதைகள் மிகவும் அவசியம். ஏதேனும் கூடுதல் தொகை தேவைப்பட்டால், டாக்டர் நாத் தனது சொந்த பணத்திலிருந்து தானமாக வழங்க வேண்டும்.”

இரண்டு மருத்துவர்களின் குடும்பத்தினரிடமிருந்தும் பெறப்பட்ட மதிய உணவு இன்சுவைமிக்கதாக இருந்தது, மேலும் பாபா குறிப்பிட்டார், **“அவர்கள் தங்கள் அன்பிலும் பக்தியிலும் எல்லையை மீறுகின்றனர்.”**

அன்று மதியம் பாபா, பெல்காவ்மில் ஆடைகள் வாங்குவதற்காக ஒதுக்கிவைக்கப்பட்ட பணத்தை ஒவ்வொரு தோழருக்கும் வழங்கி, விளக்கினார், **“உங்கள் ஒவ்வொருவருக்கும் காலணிகள் மற்றும் பிற சிறிய சிறிய தேவைப் பொருட்கள் வாங்க பதினான்கு ரூபாயும், கையுறைகளுக்கு ஐந்து ரூபாயும் வழங்கப்படும். காக்காவிடம் உள்ளப் பணத்திலிருந்து பருத்தி ஜாக்கெட்டுகள் மற்றும் தோள் துண்டுகள் வாங்கப்படும்...**

“தோழர்கள் இந்தத் தொகையைச் செலவு செய்ய மட்டுமே பணத்தைத் தொட முடியும், அதிலிருந்து எதுவும் சேமிக்கப்படக்கூடாது; ஏதேனும் எஞ்சியிருந்தால், அதைப் பிச்சைக்காரர்களுக்குக் கொடுக்க வேண்டும்; இந்தத் தொகையிலிருந்து, நீங்கள் வேறு எதற்காகவும் ஒரு நயா பைசா கூட, தேநீர், வெற்றிலை போன்றவற்றை வாங்கச் செலவிட வேண்டாம்... கையுறைகள் வாங்க வேண்டியது கட்டாயமாகும்; இந்தப் பொருள்களை வாங்குவதிலிருந்து சேமிக்கப்படும் எந்தச் சிறிய தொகையையும் வேறு எந்தப் பொருளையும் வாங்க பயன்படுத்தலாம்.”

பாபா இவ்வாறு கூறி முடித்தார், **“இன்றிலிருந்து அதிக கவனமாக இருங்கள். இனி நான் தவறுகளைத் திருத்த உதவமாட்டேன். நீங்கள் எச்சரிக்கையாகவும், விழிப்புடனும் இல்லாவிடில் உங்களுக்கு அழிவு**

காலம்தான். நான் எனது மனநிலையைத் தக்க வைத்துக் கொள்ள முயற்சிக்கிறேன். நான் தோல்வியுற்றால், என்னிடம் ஒரு தலைசிறந்த பரிகாரம் உள்ளது." இவ்வாறு ஒவ்வொருவருக்கும் ஆடைகள் வாங்குவதற்கான ஏற்பாடுகள் கடைசியாக நடந்து கொண்டிருந்ததைத் தொடர்ந்து, தோழர்களுக்கு, குளிரிலிருந்து பாதுகாக்கப்படுவோம் என்ற நம்பிக்கை பிறந்தது.

எரச், விஷ்ணு இருவரும் ரயில் நிலையத்திலிருந்து காணாமல் போன பெட்டி உட்பட அனைத்து பொருட்களையும் எடுத்து வந்தனர். தோழர்கள் ஐந்து நாட்களுக்கு முன்பு பெல்காவ்மிலிருந்து புறப்பட்டபோது அவர்கள் அணிந்திருந்த அதே ஆடைகளை அணிந்திருந்தனர். பெட்டியைத் திரும்பப் பெற்றதும், அவர்கள் உடைகளை மாற்றி, தங்கள் தனிப்பட்ட விஷயங்களை கவனித்தனர். பெரிய வீடாக இருந்தபோதிலும், பாபா ஆண்களை வராந்தாவில் முகாமிடும்படி கட்டளையிட்டார், இதனால் அவர்கள் 'அரண்மனையில் பிச்சைக்காரர்கள்' போல வாழ்ந்து வந்தனர்.

பெனாரஸில் அடுத்த இரண்டு வாரங்களுக்கான கால அட்டவணையை பாபா விளக்கினார்:

தனிப்பட்ட பஜார் வேலைகளுக்காக, நீங்கள் நவம்பர் 21 முதல் 23ஆம் தேதி வரை, இரண்டு நாட்களும் உட்பட, பயன்படுத்திக் கொள்ளலாம். 18, 19, 20 ஆகிய மூன்று தேதிகளில் மலைத்தொடர்கள் மற்றும் நகரைச் சுற்றிப் பார்க்க வேண்டும். மூன்று நாட்களும் வழிகாட்டியாக சதாஷிவ் நான்கு பேர் அடங்கிய தோழர்கள் குழுவுடன் செல்ல வேண்டும்.

நானும் பெண்மணிகளும் 26, 27, 28, 29 தேதிகளில் பைதூல், காக்கா, சதாஷிவ் ஆகியோருடன் அந்த இடங்களைப் பார்வையிடச் செல்வோம்.

நவம்பர் 20ஆம் நாள், டாக்டர் டான், சாரநாத் சென்று அங்குள்ள பங்களாவைப் பார்த்து, லங்கோட்டி-வாழ்க்கைப் பயிற்சிக்காக, அங்குப் பத்து நாட்கள் தங்குவதற்கான நடைமுறை சாத்தியக்கூறுகள் குறித்து, தனது கருத்தைத் தெரிவிக்க உள்ளார்.

24 மற்றும் 25ஆம் தேதிகளில் தினமும் காலை பத்து மணிக்கு, டாக்டர் நாத் மற்றும் டாக்டர் கரேயின் இல்லங்களுக்கு நான் சில தோழர்களுடன் சென்று, யாசித்து தானம் வாங்குவதன் மூலம், பெனாரஸில் தானம் வாங்கும் பயிற்சி அறிமுகப்படுத்தப்படும். கரேயின் குடும்பத்தினர் நவம்பர் 25ஆம் தேதி நாத்தின் இல்லத்தில் தயாராக இருக்க வேண்டும், ஏனெனில் அவர் தங்கியிருக்கும் பல்கலைக்கழகம் வரை என்னால் செல்ல முடியாது.

நவம்பர் 26, 27, 28, 29 மற்றும் 30 ஆகிய தேதிகளில் தோழர்கள் ஜோடியாகச் சென்று யாசிக்க வேண்டும். எப்படி யாசிப்பது, என்ன பேசுவது என்பது குறித்து வரும் 20ஆம் நாள் விளக்கமளிக்கப்படும்.

பஜாரிலிருந்து தனிப்பட்ட பொருட்கள் வாங்குவதற்காக, நாளை (18ம் தேதி) மதியம் முதல், மாலை 5:00 மணி வரை வெளியே செல்லலாம்.

நவம்பர் 18 முதல் 30 வரையிலான செயல்பாடுகளின் பட்டியலை, தேதிகள் மற்றும் சரியான நேரங்களுடன் தயாரிக்குமாறு பாபா, டாக்டர் கனி, ஆதி ஆகியோருக்கு அறிவுறுத்தினார். அனுமதிக்கப்பட்டபடி, நான்கு பேர் கொண்ட குழுக்களாக, தோழர்கள் கங்கை நதிக்கரையில் அமைந்த மலைத்தொடர்களுக்குச் சென்றனர். பெண்டு, மணி இருவரும் காய்ச்சலால் பாதிக்கப்பட்டதால், டாக்டர்கள் சிகிச்சை அளித்தனர்.

தினமும் மாலையில் பாபா, கனியுடன் உலாவச் செல்வது வழக்கம். நகைச்சுவையாக, பாபா, கனியிடம் ஒவ்வொரு நாளும் காலையில் 'பட்டான்-ஃபேஷன்' (PATHAN FASHION) என்று வாழ்த்து கூறி அழைக்குமாறு கட்டளையிட்டார், ஆனால் சொற்களில் சிறிது மாற்றம் செய்து, **"ஸ்தடேமாஷே, கவ்ர்தேமாஷே, ஜோடே, டக்டே, குஷ்ஹலே, கலேமாஷே, ஸலாமே"** (STHADAYMASHAY, KHAWRDEMASHAY, JODAY, TAGDAY, KHUSHHALAY, SALAMAY) என்று கூறுமாறு கேட்டுக்கொண்டார்.

பாபா, டாக்டர் நீலுவை, அவரது கருப்பு நிறத்தால் 'நீக்ரோ' (NEGRO) அல்லது 'பிளாக் டெவில்' (BLACK DEVIL) என்று கேலி செய்வதுண்டு; அதைக் கேட்டு டாக்டர் நீலு சஞ்சலமடைந்தால் பாபா மேலும் மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதும், பிற நேரங்களில், அவரை அன்புடன் **'காலா தேவா'** (கருப்பு தெய்வம்) என்று அழைப்பதையும் வழக்கமாகக் கொண்டார்.

ஒவ்வோர் இரவும் ஓய்வு பெறுவதற்கு முன்னர், உருது மொழியில் இந்த வரிகளைப் பாடுமாறு பாபா, டாக்டர் கனியிடம் கூறினார்:

பழைய வாழ்க்கை வெவ்வேறு வழிகளில் கடந்துவிட்டது;
இன்றும் அதுபோலவே எப்படியோ கழிந்துவிட்டது;
நாளை என்ன நடக்குமென்று - யார் கவலைப்படுவது!

ஒரு கட்டத்தில், பாபா இந்தப் பிரார்த்தனையை தோழர்களுக்கு வழங்கி அவர்களிடம் எடுத்துரைக்குமாறு கட்டளையிட்டார்:

நான் உடல் அல்ல, நான் மனம் அல்ல;
நான் இதுவல்ல, நான் அதுவல்ல.
நான் அந்த சத்தியத்தின், வாழும் பொய்யன்றி வேறில்லை;
மேலும், பொய் இறந்தாலன்றி, உண்மையை அறிய முடிவதில்லை.

1949 நவம்பர் 18 வெள்ளிக்கிழமை, பங்களாவின் உரிமையாளர் தோட்டக்காரருடன் தோட்டத்தில் நடந்து செல்வதை கவனித்த பாபா, அதிருப்தியை வெளிப்படுத்தினார். அவர் அங்குத் தங்கியிருக்கும் காலத்தில் எவரும் அப்பகுதிக்குள் நுழையக் கூடாது என்பது அவரது உத்தரவு.

ஆதி, எரச் ஆகியோர் மூலமாக, அவர் உடனடியாக வெளியேறுமாறு அறிவுறுத்தப்பட்டார்.

செய்தியை வழங்கியதும், உரிமையாளர் இவ்வாறு பதிலளித்தார், "இது எனது தவறு, இதற்காக என்னை மன்னிக்க வேண்டும், நான் இந்தக் கட்டளைகளை அறிவேன், ஆனால் தோட்டத்தில் பிரவேசிப்பது கீழ்ப்படியாமை என்று நான் நினைக்கவில்லை. உண்மையாக, உங்கள் வசதிகளைக் கருத்தில் கொண்டு, நான் தோட்டத்தைப் பார்வையிட மட்டுமே வந்தேன்" என்றார்.

அவருக்கு எதுவும் தேவையில்லை என்ற பட்சத்தில், அந்த நபர் மீண்டும் நுழைய மாட்டேன் என்று உறுதியளித்து, அமைதியாக வெளியேறினார். இருப்பினும், அவரது அறிவுறுத்தல்கள் சரியாக நிறைவேற்றப்படவில்லை என்று பாபா, டாக்டர் நாத்திடம் தெரிவித்தார், மேலும் அவர் பாபா தங்கியிருக்கும் வேளையில் பங்களாவின் தோட்டத்தில் இனி ஒருபோதும் நுழைய மாட்டார் என்ற உறுதிமொழியைக் கோரி உரிமையாளரை சந்திக்குமாறு கட்டளையிட்டார்.

அடுத்த நாள், பெனாரஸிலிருந்து மேற்கொள்ளவிருந்த கால் நடை பயணம் பற்றி ஒரு விவாதம் நடந்தது. பெண்டு, எரச் இருவரும் இவ்வாறு குறிப்பிட்டனர்: "கூண்டுவண்டியை, பெண்மணிகளுக்காகவும், பாபாவின் பொருட்களை வைக்கவும் பயன்படுத்த வேண்டும். அனைத்து தோழர்களின் சாமான்களையும் ஒரு மாட்டு வண்டியில் குவிக்க முடியாது - அதற்கு நான்கு வண்டிகள் தேவைப்படும்."

அதற்கு பதிலளித்த பாபா, "**டிசம்பர் இறுதிக்குள், ஏறக்குறைய 50 சதவீத சாமான்கள் தீர்ந்துவிடும். உலர்ந்த உணவுப் பொருட்களின் கையிருப்பு, உணவுக்காக யாசிக்கும் பயிற்சி காலத்திற்கானது; அது டிசம்பர் 31ஆம் தேதியுடன் முடிவடையும். ஜனவரி 1 முதல் யாசித்து அடையப்பெறுவதைக் கொண்டு வாழப்போகிறோம். நம்மிடம் பணமும் இருக்காது; புது வாழ்வின் நிபந்தனைகளின்படி, அவசரகாலத்தில் நம்மைப் பாதுகாக்க எதுவும் இருக்காது!**"

அவர்களின் அனைத்து சரக்கு சுமைகளையும் சமாளிக்க, ஆதி ஒட்டக வண்டியைப் பரிந்துரைத்ததும், பாபா பதிலளித்தார், "**நானும் வண்டி இல்லாமல் ஒட்டகங்களைப் பயன்படுத்த நினைத்தேன்**." அனைவரும் ஆதி கூறியதை ஆதரித்தனர், ஆதியின் சமயோஜித புத்தியை பாபா பாராட்டினார்.

பெர்சியாவில் என்னிடம் ஒட்டகங்கள் இருந்தன; என்னால் ஒட்டக வண்டி ஓட்ட முடியும்" என்று பைதூல் இடையே மொழிந்தார்.

டாக்டர் டான் உடனே, "நான் ஸஹாரா (SAHARA) பாலைவனத்தில் ஒட்டகங்களில் சவாரி செய்துள்ளேன், எனக்கும் அவற்றில் சிறிதளவு அனுபவம் உள்ளது" என்றார்.

இந்த விவாதம், ஆதி, எரச் இருவர் மூலமாக, பாபா, கீழ்வரும் செய்தியை டாக்டர் நாத்திற்கு அனுப்பிவைக்க வழிவகுத்தது:

(விலங்குகளின் தீவனத்திற்காக, காக்காவிடம் கையிருப்புத் தொகையான ரூ 3,000லிருந்து) டாக்டர் நாத் மேலும் ரூ 1,000 பெறுவார்; அந்தப் பணத்தில் நல்ல ஒட்டகமும், வண்டியும் வாங்க வேண்டும். இந்தத் தொகையையும் சேர்த்து, டாக்டர் நாத்தின் கைவசம் இப்போது ரூ 1,700 உள்ளது. இதைப் பயன்படுத்தி அவர் ஒரு ஒட்டகம், வண்டி, இரண்டு கழுதைகள் மற்றும் போதுமான பணம் இருந்தால் இரண்டு மாடுகளையும் வாங்க வேண்டும். மேலும் தேவைப்பட்டால், டாக்டர் நாத் தனது சொந்த பணத்திலிருந்து தானமாகச் செலுத்த வேண்டும்.

டாக்டர் நாத் எல்லாவற்றையும் ஏற்பாடு செய்வதாக உறுதியளித்தார் (ஒரு வாரத்தில் ஒட்டகம் மற்றும் வண்டியை வாங்கினார்), ஆனால் மாடுகள் வாங்குவதை ஏன் கைவிட வேண்டும் என்று தனக்குப் புரியவில்லை என்று கூறினார். ஏதேனும் குறைபாடுகள் இருந்தால், அவர் தானமாக வழங்குவதன் மூலம் மீதிப்பணத்தை செலுத்த முடியும் என்றார்.

பெனாரஸில் வாழும் மஸ்துகள் மற்றும் துறவிகளைப் பற்றிய தகவல்களை சேகரிக்குமாறு பாபா, பைதூல், பாபாதாஸ் இருவருக்கும் அறிவுறுத்தியபோது, ஆதி சீனியர் குறுக்கிட்டு, "உங்கள் மஸ்த் பணி முடிந்துவிட்டது என்று நீங்கள் மெஹராபாத்தில் சொன்னீர்கள். இது என்ன புதிய மஸ்த் பணி?" என பாபாவிடம் வினவினார்.

பாபா இவ்வாறு தெரிவித்தார், "**உங்களுக்குக் குன்றிய நினைவுகளே உள்ளன. பெல்காவ்மில் இது தொடர்பாக நான் ஏற்கனவே கூறியது உங்களுக்கு நினைவில் இல்லை, நீங்கள் அதைப் புரிந்து கொள்ளவுமில்லை.**" டாக்டர் கனி தனது நாட்குறிப்பிலிருந்து இது சம்பந்தமான குறிப்புகளைக் கண்டுபிடித்து அனைவர் முன்னிலையிலும் வாசிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டார்: "**நான் மஸ்துகளைப் பார்க்கப் போகலாம்… உங்களையும் மஸ்துகள், துறவிகள், சாது, சன்னியாசிகளைப் பார்க்கச் சொல்லலாம்.**"

பாபா தொடர்ந்து விளக்கினார்:

பழைய வாழ்க்கையின் மஸ்துகளுடனான மிகப்பெரிய செயல்பாடு எனக்கு பிரத்தியேகமாக முக்கியத்துவம் வாய்ந்தது, ஆனால் இனிமேல் இந்தப் பணி உங்கள் அனைவருக்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும். நான் கனியிடம் ஒரு மஸ்தின் மூட்டுகளை மஸாஜ் செய்யும்படி கேட்கலாம் அல்லது அவருக்கு உணவளிக்க விஷ்ணுவிடம் கூறலாம். இனிமேல் மஸ்துகள், துறவிகள் மற்றும் சாதுக்களின் பணி, கடந்த காலத்தில் இருந்ததை விட முற்றிலும் மாறுபட்டதாக இருக்கும். நான்

உங்களை அவர்களுக்கு சேவை செய்ய அனுமதிக்கலாம், அல்லது உங்கள் முன்னிலையில் நானே அவர்களுக்கு சேவை செய்யலாம், இது முன் எப்போதும் இல்லாதது. உங்கள் அல்லது பிறர் முன்னிலையில் நான் என்னை அவமானத்திற்குள்ளாக்கக் கூடும், அது உங்கள் அனைவரையும் அதிர்ச்சியடையச் செய்யும். எனவே, எனது முற்றிலும் மாறுபட்ட பணிகளுக்காக மஸ்துகள், சாதுக்கள் மற்றும் துறவிகள் எனக்குத் தேவை.

இந்தப் புது வாழ்வில், நான் உங்கள் அனைவருக்கும் சமமான நிலையில் இருக்கிறேன். நீங்கள் சாதாரணமானவர் என்றால், நான் உங்களுடன் சாதாரணமானவன். நீங்கள் எந்த வகையிலும் சிறப்பானவராகவோ அல்லது அசாதாரணமானவராகவோ இருந்தால், நானும் சிறப்பானவனாகவும் அசாதாரணமானவனாகவும் இருக்கிறேன். நீங்கள் ஒன்று என்றால், நானும் ஒன்று. எனவே, இப்போது, மஸ்துகள், சாதுக்கள், யோகிகள் மற்றும் துறவிகள் தொடர்பாக, நான் உங்களைப் போலவே அதே நிலையில் இருக்கிறேன்.

பைதூல் இதைப் புரிந்து கொள்ளவில்லை என்றால், அவர் என்னைக் குழப்பத்தில் ஆழ்த்துவார். கடவுளின் நிமித்தம், நீங்கள் சொன்னதைச் செய்யுங்கள், உங்கள் பழைய பழக்கங்களைக் கைவிடுங்கள்!

(பாபா, மஸ்துகளைப் பற்றிய தகவல்களைச் சேகரிக்க பாபாதாஸுக்கு அறிவுறுத்தினார், மேலும், பைதூல் பழைய மற்றும் புதிய மஸ்துகளைக் குறித்து அவரை ஆயத்தப்படுத்தத் தொடங்கினார். இது பைதூலின் 'பழைய பழக்கம்' என்று பாபா குறிப்பிட்டார்.)

1949 நவம்பர் 20 ஞாயிற்றுக்கிழமை அன்று, மகிழ்ச்சியான மனநிலையில் இருந்த பாபா, உருது மொழியில் டாக்டர் கனிக்கு இந்த ஈரடிக்கவிதையை எடுத்துரைத்தார்:

நமது ஆதரவற்ற நிலை இன்று தைரியத்தைத் தந்தது நமக்கு,
இத்தனை வருடங்களாகத் தாகமாக நாம் இருந்தோம் எதற்கு!

"நாம் அனைவரும் பெருமையுடனும், நம்மைப் பற்றி ஏற்கத்தக்க முகாந்திரத்துடன் பேசக்கூடிய நாள் விரைவில் வர வேண்டும்" என்று பாபா குறிப்பிட்டார்.

பாபா அவர்கள் உணவுக்காக யாசிப்பதைக் குறிக்கும் வகையில் நிபந்தனைகளை விளக்கினார்:

பெனாரஸிலிருந்து தொடங்கி, யாசிப்பது என்பது இயற்கையாகவே நிகழும். பெனாரஸில் பயிற்சி நோக்கங்களுக்காக, நம்மிடம் ஒரு குறிப்பிட்ட முறை இருக்க வேண்டும். இது போன்ற வழிமுறை வீதிகளில் எல்லா வகையிலும் பொருந்தும் என்று அர்த்தமல்ல.

எனவே, பெனாரஸில் உணவுக்காக யாசிப்பதற்கு, பின்வரும் முன்நிபந்தனைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்:

1) **காலணிகளைத் தவிர்க்கவும்**
2) **மேல் அங்கி** (கணுக்கால் வரை நீளமானது)
3) **பரந்த பித்தளை பாத்திரம்** (ஏற்கனவே வழங்கப்பட்ட பித்தளை வட்டில்)
4) **தோள் பை** (பல்வேறு வகையான ரொட்டிகள், தானியங்கள் அல்லது உலர்ந்த மற்றும் சமைக்கப்படாத எதையும் வைப்பதற்கு அறைகளுடன் கூடியது)

பஜாரில் தனிப்பட்ட பொருட்களை வாங்கும் வேளையில் பெண்களைத் தொடவோ, அவர்களிடம் பேசவோ கூடாது என்று ஏற்கனவே கூறியுள்ளேன். உணவுக்காக யாசிக்கும் வேளையிலும் பெண்களைத் தொடாதீர்கள்; ஆனால் நீங்கள் ஆண், பெண் இருவரிடமும் தானம் கேட்கலாம், அதை ஏற்றுக்கொள்ளலாம்.

உணவுக்காக யாசிக்கும் வேளையில், பெண்களிடம், 'தாயே, அன்புடன் தானம் செய்யுங்கள்' என்று கேட்க வேண்டும். மேலும் ஆண்களிடம், 'சகோதரரே, தானம் செய்யுங்கள்' என்று கேளுங்கள்.

நீங்கள் தானத்தைப் பெற்றுக்கொண்டதும் - தரம், அளவு, சமைத்தது, சமைக்காதது - எதுவாக இருந்தாலும் உடனடியாக அங்கிருந்து வெளியேறி, அதை என் முன் வைக்கவும். ஒரு குறிப்பிட்ட வீட்டு வாசலில் தானம் வழங்கப்படாவிடில், உடனடியாக அடுத்த வாசலுக்கும் தொடர்ந்து அடுத்த வாசலுக்கும் செல்லுங்கள்.

நீலு (இந்து) **முஹமதியர் வாழும் பகுதிகளிலும், கனி** (முஸ்லீம்) **இந்துக்கள் வாழும் பகுதிகளிலும் உணவுக்காக யாசிக்க வேண்டும். பித்தளை பாத்திரத்தில் சமைத்த உணவும், சமைக்கப்படாத மற்றும் பச்சை காய்கறி போன்ற உணவைத் தோள் பையிலும் வைத்துக்கொள்ளுங்கள். பெனாரஸில், திட உணவு, சமைக்கப்படாத மற்றும் திரவ உணவு தவிர வேறு எதையும் ஏற்றுக்கொள்ள வேண்டாம்.**

இனிப்புப் பண்டங்கள் விற்பனையாகும் கடைகளுக்கு வேண்டுமென்றே செல்ல வேண்டாம். கடைகளிலோ, உணவு தயார் செய்யும் இடங்களிலோ தானம் கேட்க வேண்டாம். மாறாக, தனியார் குடியிருப்புகள் மற்றும் இல்லங்களுக்குச் செல்லுங்கள். மேலும், தொண்டு நிறுவனங்கள் போன்ற வழக்கமாக தானம் வழங்கப்படும் இடங்களுக்குச் செல்லாதீர்கள் - தனிப்பட்ட இடங்களுக்கு மட்டுமே செல்லுங்கள். பரிச்சயமானவர்களின் இல்லங்களுக்குச் செல்ல வேண்டாம்.

இருவர் ஜோடியாக இணைந்து சென்று, இருவரும் தானத்தைப் பெற்றுக்கொண்ட அடுத்த கணமே திரும்பிவிட வேண்டும். பாராட்டு அல்லது மரியாதை செலுத்தப்பட்டால், பணிவுடன் அதைத் திருப்பித் தாருங்கள், செயலுக்கேற்ற செயல். ஒருவருக்கு சினம் அல்லது மனக்கலக்கம் விளைவிக்கும் எதையும் கூறவும், செய்யவும் வேண்டாம், நீங்களும் அதற்கு ஆளாக வேண்டாம். நீலுவை ஒரு முஸல்மான் அவமானப்படுத்தினால், கோபத்தை வெளிப்படுத்தாமல் வேறு வீட்டிற்குச் சென்றுவிடுங்கள். மிகவும் மோசமான ஆத்திரமூட்டும் சூழ்நிலையிலும் கோபத்தை வெளிப்படுத்தாதீர்கள்.

மாலை ஏழு மணிக்குள் எந்த தானமும் பெறவில்லை என்றால், நீங்கள் திரும்பி வரலாம்.

நிர்ணயிக்கப்பட்ட நாட்களில் தினமும் காலை பத்து மணிக்குச் சென்றுவிடுங்கள். எவரேனும் தானியங்கள் அல்லது உணவுப் பொருட்களுடன் உங்கள் பாத்திரத்தில் நாணயத்தையும் சேர்த்து வழங்குவதை நீங்கள் கவனிக்க நேர்ந்தால், நாணயத்தைத் திரும்பப் பெறுமாறு தானம் வழங்குபவரிடம் கேட்டுக்கொள்ளுங்கள்; அவர் அதைத் திரும்பப் பெற மறுத்தால், பாத்திரம் அல்லது பையிலிருந்து கொடுக்கப்பட்ட அனைத்தையும் அங்கேயே திரும்பக் கொடுத்துவிடுங்கள். உணவுப் பொருட்களுடன் நாணயம் இருப்பது பற்றி உங்களுக்குத் தெரியாவிடில், அது உங்கள் தவறு அல்ல.

வெளியே யாசிக்கும்போது புகைபிடிக்காதீர்கள். மேலங்கியின் கீழ் ஓர் உள்ளாடை அணிந்து கொள்ளுங்கள். பித்தளை பாத்திரத்தை தூய்மையாக வைக்கவும், நானும் அதிலிருந்து சமைத்த உணவை உண்ணுவேன். தானத்தை ஒரு வீடு அல்லது குடியிருப்பின் வாசலில் பெற வேண்டும்; பெற்றுக் கொண்டதும், கூப்பிய கைகளுடன் நன்றியும் வணக்கமும் செலுத்திவிட்டுப் புறப்படுங்கள். இவை அனைத்தும் பெனாரஸில் உணவுக்காக யாசிக்கும் முக்கியமான பயிற்சி முறைகள்.

மேலும், உணவுக்காக யாசிக்கும் வாழ்க்கையை ஒரு திருநங்கையிடம் தொடங்காதீர்கள் - அது மங்களகரமானதாக இருக்காது; ஜனவரி 1ஆம் நாளுக்குப் பின்னர், அது ஒரு பொருட்டல்ல.

அன்று மதியம் விஷ்ணு, சதாஷிவ் இருவரிடமும் பாபா, இந்து பஞ்சாங்கத்தைப் பார்த்து, 1950ஆம் ஆண்டு ஹரித்வாரில் நடைபெறவிருந்த கும்பமேளாவின் ஒரு மாத விழா காலத்தின் முக்கியமான தேதிகளைத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொண்டார். குறிப்பிடத்தக்க தேதிகள் ஏப்ரல் 2, 13 மற்றும் 17 ஆகும். பாபா பல நாட்கள் தங்க விரும்பியதால், பொருத்தமான

பங்களாக்களைப் பார்வையிட டாக்டர் டான் அதே நாளில் சாரநாத்திற்கு அனுப்பப்பட்டார்.

ஏற்கனவே பாபா தீர்மானித்து, அனுமதித்ததற்கு இணங்க, அடுத்த மூன்று நாட்களில், தோழர்கள் தங்கள் தனிப்பட்ட தேவைப்பொருட்களான சோப்பு, பற்பசை, ரேஸர்கள் போன்றவற்றை வாங்க பஜாருக்குச் சென்றனர். காக்கா, குஸ்தாஜி, பெண்டு ஆகியோர் பாபாவுடன் இருந்ததால் அவர்களுக்குத் தேவையானவற்றை ஆதியும் விஷ்ணுவும் வாங்கி வந்தனர். எரச், பெண்மணிகளுக்குத் தேவையான பொருட்களை வாங்கினார்.

1949 நவம்பர் **22** மாலை, டாக்டர் கனி, சக தோழர்களிடம் கிண்டலான பாணியில் கேலி செய்தார்: "புது வாழ்வின் அர்த்தம் இதுதான்: வழக்கமாகச் செய்யும் அனைத்தையும் வழக்கத்திற்கு மாறான, எதிர்பாராத நேரங்களில் செய்வது; சிரமங்கள் எதுவும் இல்லாத இடத்தில் சிரமத்தை உருவாக்குவது; சுமூகமான சூழ்நிலையிலும் முட்டாள்தனமாக ஏதேனும் ஒன்றைச் செய்வது - இதுபோன்ற அனைத்து விஷயங்களாலும் உருவாக்கப்பட்டு, அழைக்கப்படுவதுதான் நமது புது வாழ்வு!"

பாபா, தற்செயலாக அந்தக் கருத்துக்களைக் கேட்டு, கனியிடம் விளக்கம் கேட்டார். கனி விரிவாக விளக்கினார்: "தேனீர் அருந்தும் நேரத்தைப் பாருங்கள், ஒன்றுக்கும் ஒவ்வாத காலை **5:00** மணி! அதிகாலையில் கடவுளுக்கென ஆரத்தி, பூஜை, கஸ்தி-ஸத்ரா, பிரார்த்தனை போன்ற எந்த மத வழிபாட்டு சம்பிரதாயங்களும் இல்லை; இருந்தும், கடவுளுக்கும் வெறுப்பூட்டும் இந்த மோசமான, கடும் குளிரில், நாம் காலை **4:30** மணிக்கு, ஒரு கோப்பை தேநீர் மற்றும் ஒரு சப்பாத்திக்காக (அதுவும் இருந்தால்!) இந்தக் குளிரை மனமார அனுபவிக்கும் இன்பத்திற்காக, படுக்கையிலிருந்து பரிதாபமாக, முணுமுணுத்து, நடுங்கி, சிணுங்கி, இருமிக்கொண்டே வெளியே வர வேண்டியுள்ளது; உண்மையில் சொல்லப்போனால், அதை 'சோகத் தேநீர்' என்று அழைக்க வேண்டும்!"

டாக்டர் கனியின் கருத்துக்கள் ஆண் தோழர்களிடமிருந்து மனம் நிறைந்த சிரிப்பை வரவழைத்தன; பாபாவும் அதைக்கேட்டு மகிழ்ந்தது போலத் தோன்றியது. ஆனால் இரவு வணக்கத்துடன் விடைபெறும் போது, அவர் எதிர்பாராத விதமாக, பைதூல் பக்கம் திரும்பி, "**நாளை காலை, 4:45 மணிக்கு, பதினைந்து நிமிடங்களுக்கு முன்னதாகவே தேநீர் வழங்கப்பட வேண்டும்**" என்று உத்தரவிட்டார்.

மறுநாள் காலை வேளையில், பாபா மீண்டும் தேனீர் அருந்துவதற்கு ஒவ்வாத நேரத்தைப் பற்றி கனி கூறியதைக் குறிப்பிட்டு, அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தினார். "**நான் இரவு முழுவதும் தூங்கவில்லை. கனியின் கருத்துக்கு, நீங்கள் சிரிப்பு ஆரவாரத்துடன் அளித்த மகிழ்ச்சிகரமான ஆதரவு**

அனைத்தையும் நகைச்சுவையாக எடுத்துக் கொள்ள வேண்டுமா அல்லது நீங்கள் அதில் தீவிரமாக இருந்தீர்களா? என்று கேட்கத் தூண்டுகிறது.

"இவை அனைத்தும் நகைச்சுவையாக இருந்தால், நான் அந்த நகைச்சுவையைப் பாராட்டாமல் இருந்தது தவறு; அவற்றைத் தீவிரமாக எடுத்து, காலை தேநீர் தேவையற்றது, அர்த்தமற்றது என்று நீங்கள் நினைத்தால், அது விமர்சனம் மட்டுமல்ல, புது வாழ்வின் நிபந்தனைகளை அப்பட்டமாக மீறியதாகக் கருதப்படும்!"

இந்த விளக்கத்தைக் கேட்டு தோழர்கள் அதிர்ச்சியடைந்தனர்; இது பாபாவிற்குத் தூக்கமில்லாத இரவைக் கொடுத்தது. அவருடைய உத்தரவுகளில் சில எப்போதும் எளிதில் புரிந்துகொள்ள முடியாத வகையில் இருந்தாலும், அவை அர்த்தமற்றவை அல்லது தேவையற்றவை எனக் கருதவில்லை என்று அவர்கள் அவருக்கு உறுதியளித்தனர். பாபா முந்தைய இரவின் புனைகதையை, நிராகரித்து நகைச்சுவையாக பாவித்த மறு கணமே பதற்றம் மறைந்தது.

ஆனால், பாபா, தோழர்களின் எண்ணங்களில் சந்தேகம் கொண்டதால், பிராயச்சித்தமாக, சிலரை அழைத்து, தனது காதுகளைத் திருகும்படி கட்டளையிட்டார், அதன் பிறகு பாபா கூறினார், **"ஒரு தூக்கமில்லாத இரவுக்கு, தெளிவான உங்கள் மனம் மற்றும் உணர்வுகளால் நான் அடைந்த திருப்தி மிகையானது."**

முழு நிகழ்வுக்கும் காரணமாக இருந்த டாக்டர் கனி, பாபாவை உதைக்க உத்தரவிடப்பட்டார். முதலில், கனி அனுபவித்த கஷ்டங்கள், அவமானங்கள் போன்ற அனைத்து உள்ளார்ந்த உணர்வுகளும் அவருக்குள் நிரம்பி வழிந்ததால், அவர் பாபாவிற்கு மிகவும் கடினமான உதையை வழங்கக்கூடும் எனத் தோன்றியது. ஆனால் அவர் பாபாவின் அருகில் வந்ததும், அவரை லேசாகத் தட்டினார். பாபா அதன் காரணத்தைக் கேட்டார்: **"உங்கள் இதயத்தின் ஆதங்கத்தை வெளியே கொணர்ந்து ஈடுகட்ட இது ஒரு சரியான வாய்ப்பு!"**

உடனே கனி பதிலளித்தார், "நானும் அப்படித்தான் நினைத்தேன், ஆனால் நீங்கள் எனது பால்ய நண்பர் என்பதை நான் நினைவில் கொணடிருந்ததால், நான் உங்களை மன்னித்துவிட்டேன்."

1949 நவம்பர் 24 வியாழன் அன்று, பாபா முதன்முதலாக டாக்டர் நாத்தின் இல்லத்திற்கு உணவுக்காக யாசிக்கச் செல்லவிருந்தார். அன்று காலை ஏழு மணியளவில் அவர் தோழர்களிடம் வந்து, அவர்களின் கால்களைக் கழுவி சுத்தம் செய்துவரக் கட்டளையிட்டார். அவர்கள் திரும்பி வந்ததும், பாபா, தனது கைகளால் அவர்களின் கால்களைத் தொட்டு, பின்னர் அவரது நெற்றியைத் தொட்டார். இரண்டு நாட்களுக்கு முன்னர், அவர் எடுத்துரைத்த இந்தப் பிரார்த்தனையை மொழியுமாறு டாக்டர் கனியிடம் கூறினார்:

இன்று, நவம்பர் 24, புது வாழ்வில் எனக்கு மிகவும் முக்கியமான நாள். என்னையும் எனது சக தோழர்களையும் தனித்தனியாகவோ அல்லது ஒன்றாகவோ, அவர்கள் ஏதேனும் குற்றம், குறைபாடுகள், தெரிந்தோ, தெரியாமலோ, தனியாக அல்லது ஒன்றிணைந்து அல்லது ஒருவருக்கொருவர் அல்லது தனிப்பட்ட அல்லது ஆட்சார்பற்ற முறையிலோ, மேலும் புதுவாழ்வு தொடர்பான அல்லது வேறு ஏதேனும் நிபந்தனைகளை மீறி, அல்லது காமம், கோபம், பேராசை போன்ற செயல்பாடுகளுக்கு ஆளாகி, அறிந்தோ அறியாமலோ நிகழ்ந்த பழைய வாழ்க்கை சிந்தனைகள் அல்லது ஆசைகள் போன்ற குற்றம் குறைபாடுகளுக்கு ஆளாகியிருந்தால் மன்னிக்குமாறு இரக்கமுள்ள இறைவனிடம் கேட்டுக்கொள்கிறேன்.

வாக்குறுதிகளையும் நிபந்தனைகளையும் 100 சதவிகிதம் கடைப்பிடிக்க எனக்கும் என் தோழர்களுக்கும் முழு பலத்தை அளிக்க நான் கடவுளிடம் கேட்டுக்கொள்கிறேன், ஏனெனில் 1950 ஜனவரி 1 முதல் எனக்கும் எனது தோழர்களுக்குமிடையே எந்த சமரசத்திற்கும் இடமில்லை என்பதை அனைத்தும் அறிந்த இறைவன் அறிவார்.

எனது தோழர்களே, நான் உங்களை மன்னிக்கிறேன், என்னை மன்னிக்கும்படி உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன், மேலும் நம் அனைவரையும் மன்னிக்குமாறு கடவுளிடம் கேட்டுக்கொள்கிறேன், வெறும் சம்பிரதாய முறையிலான வார்த்தைகளால் அல்ல, முழு மனதுடன் மன்னிக்க வேண்டுகிறேன்.

பிரார்த்தனையை மொழிந்த வேளையில், பாபா அமைதியின் மொத்த ரூபமாகத் தென்பட்டார். அவரது முகம், அன்பு, கருணை மற்றும் மன்னிக்கும் தன்மையால் ஒளிர்ந்தது. 'அந்த நேரத்தில் அவர் நீதிஸ்தலத்தின் அதிபதி போலத் தோன்றினார்' எனக் காலம் பறைசாற்றியது. "உலகம் முழுவதையும் தனது அரவணைப்பால் சூழ்ந்த வண்ணம், நித்திய ஜீவனில், நீதிபதியான அவர், குற்றவாளி, குற்றம் அனைத்தையும் ஒன்றாக பாவித்து, அவர் தன்னை மன்னித்துக் கொண்டிருந்தார்.

ஆங்கிலம் தெரியாதவர்களுக்காக இந்தப் பிரார்த்தனையை ஹிந்தியில் மொழிபெயர்க்குமாறு கனியிடம் கூறிய பாபா, பலமுறை மீண்டும் மீண்டும் வாசிக்கக் கோரினார். முழு நேரமும், பாபா ஆழ்ந்த கவனத்துடன் பிரார்த்தனைக்குச் செவிமடுத்தார். தொடர்ந்து சைகையால் மன்னிப்பு வழங்கி, விழா நிறைவுக்கு வந்ததும், பாபா, உணவுக்காக யாசிக்கத் தயாரானார்.

மெஹர் பாபா, யாசிப்பவர் வேடத்தில், டாக்டர் டான், எரச், பாபாதாஸ் ஆகியோருடன் காலை 9:45 மணிக்கு, அரை மைல் தொலைவிலமைந்த டாக்டர் நாத்தின் இல்லத்திற்கு நடந்தார். அவர் ஒரு வெள்ளை மேலங்கி அணிந்திருந்தார்; அவரது இடது தோளில் தொங்கவிடப்பட்ட காவி நிற பை,

அவரது வலது கையில் பரந்த பித்தளை பாத்திரம், அவரது தலையில் ஒரு பச்சை நிறத் தலைப்பாகை, மற்றும் அவரது கால்கள் வெறுமையாக இருந்தன. 'பிரபஞ்சத்தின் இறைவன் ஒரு யாசிப்பவராக மாறினார்,' காலம் விவரித்தது, "அவரை இதுவரை பார்த்திராத, ஆனால் அவரது விருப்பங்களை நிறைவேற்றும் பாக்கியத்தில் நன்றியுடனும் மகிழ்ச்சியுடனும் இருந்த ஒரு குடும்பத்தின் இல்லத்திற்குச் செல்கிறார்."

பாபா, டாக்டர் நாத்தின் வீட்டு வாசற்படியை சென்றடைந்தபோது, முழுக் குடும்பமும் அவருக்காகக் காத்திருந்தது; அனைவரின் கவனமும் அவரது அழகில் ஆழ்ந்திருந்தது. எந்த விதத்திலும் அவருக்கு வணக்கம் செலுத்த வேண்டாம் - மரியாதை, மலர் மாலை அணிவித்தல் அல்லது கைகளைக் கூப்புதல் - மற்றும் அவரது பாதங்களைத் தொடுவதும் தவிர்க்கப்பட வேண்டும்; எந்தக் கேள்வியும் கேட்கக்கூடாது என்று அவர்கள் முன்பே எச்சரிக்கப்பட்டனர்.

அது ஒரு புனிதமான தருணம். வாசற்படிக்கு வெளியே பாபா நின்றார், எரச் "அன்புடன் தானம் செய்யுங்கள் (பிரேம்ஸே பிக்ஷா தீஜியே)" என்ற வரியை மீண்டும் கூறினார். மௌனமாக, டாக்டர் நாத் அவருக்கும் தோழர்களுக்கும் சமைத்த மற்றும் சமைக்காத உணவை தானமாக வழங்கினார். பாபா, வராந்தாவில் சில அடிகள் ஏறி, பின்னர் இறங்கி நடந்தார். நாத் குடும்பம் அவரது அன்பில் மூழ்கியது; ஒரு வார்த்தைக் கூட பேசவில்லை. அவர்களின் உதடுகள் அமைதியாக இருந்தன, ஆனால் இதயங்கள் கொந்தளிப்பில் ஆழ்ந்தன - இதயக் குரல்களை பாபா மட்டுமே கேட்க முடிந்தது.

எரச், டான், பாபாதாஸ் ஆகியோருடன், யாசித்து வாங்கிய உணவுடன் பாபா, நிச்சி பாக் பங்களாவிற்குத் திரும்பிச் சென்று, அவரும் தோழர்களும் மகிழ்ச்சியுடன் அதை உண்டனர்.

அடுத்த நாள், நவம்பர் 25 அன்று, டாக்டர் கரேயின் இல்லம் பத்து மைல் தொலைவில் இருந்ததால், பாபா மீண்டும் டாக்டர் நாத்தின் இல்லத்திற்கு குஸ்தாஜி, ஆதி, பாபாதாஸ் ஆகியோருடன், இந்த முறை கரேயிடமிருந்து தானத்தைப் பெறுவதற்காகப் புறப்பட்டுச் சென்றார். மீண்டும், பக்தியின் ஆதாரமான மௌனத்துடன், பாபா தானத்தைப் பெற்றுக்கொண்டார். பாபாவின் அனுமதியுடன், உள்ளூர் புகைப்படக் கலைஞர் ஒருவரால் அந்த நிகழ்வின் புகைப்படத்தை எடுக்க டாக்டர் நாத் ஏற்பாடு செய்திருந்தார். கயா பிரசாத்தைத் தவிர, அவரது மனைவி ஜானகியோ, அவரது மகனோ, அல்லது குடும்பத்தினரோ பாபாவை இதுவரை பார்த்ததில்லை. "மெஹர் பிரபு, அவர்கள் இல்லத்தின் வாசலில், உணவுக்காக யாசிக்கும் வாழ்க்கையின் முதல் தானத்தை அவர்களின் கைகளிலிருந்து பெற்றுக்கொண்டார்; இரண்டு குடும்பங்களும் எவ்வளவு ஆசீர்வதிக்கப்பட்டன, அவர்களின் ஆழ்ந்த அன்பு மற்றும் பக்திக்காக, இறைவன்

அவர்களுக்கு வழங்கிய வெகுமதி, ஒரு நாள் இறைவனின் நித்திய கீதத்தைக் கேட்கும் வாய்ப்பை நல்கும்."

அடுத்த நாள், 26ஆம் தேதி முதல், தோழர்கள் பண்டைய நகரத்தின் வீதிகளில் உணவுக்காக யாசிக்கத் தொடங்கினர். அவர்களின் தோற்றமும் பாபாவைப் போலவே இருந்தது - வெறுங்கால்களுடன், வெள்ளை மேலங்கி அணிந்து, பரந்த பித்தளை பாத்திரம் ஏந்தி, ஆரஞ்சு நிற துணியாலான தோள்பையை சுமந்துகொண்டு, பச்சை நிறத் தலைப்பாகை அணிந்திருந்தனர். அவர்கள் இரண்டு குழுக்களாக, வீடு வீடாக நடந்து சென்று யாசித்தனர். பெனாரஸில் சாதுக்கள், சந்நியாசிகள் அல்லது பிச்சைக்காரர்களுக்குக் குறைவில்லை என்றாலும், இந்தியாவில் மிகவும் பிரபலமான இந்து புனித யாத்திரை ஸ்தலமாக இருந்ததால், தோழர்களின் விசித்திரமான தோற்றம் மக்களை அவர்களின் மதம், பிரிவு, சாதி அல்லது குருநாதர் குறித்து விசாரிக்கத் தூண்டியது.

சிலர் அன்பின் பொருட்டு அல்லது தங்கள் கடவுளின் பெயரால் தானம் வழங்கினர்; சிலர் தானம் செய்யவில்லை. ஒரு முஸ்லீம் வட்டாரத்தில், காக்காவும், டாக்டர் நீலுவும் கேலிக்குள்ளாயினர்: "நீங்கள் இருவரும் பஞ்ஜாபி மல்யுத்த வீரர்கள் போல் இருக்கிறீர்கள்! நீங்கள் ஏன் உணவுக்காக யாசிக்கிறீர்கள்; உங்களுக்கு ஏன் வேலை கிடைக்கவில்லை?" ஆனால் தோழர்கள் இத்தகைய அவமானகரமான அனுபவங்களை சந்திக்க நேர்ந்தாலும், வீடு வீடாகச் சென்று யாசிப்பது வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது.

டாக்டர் நாத், சாரநாத்தில் பாபா மற்றும் தோழர்களுக்குத் தங்கும் வசதிகளை ஏற்பாடு செய்தார், மேலும் டாக்டர் டான் அந்த வளாகத்தை மேற்பார்வையிடப் புறப்பட்டார். ஆண், பெண்மணிகளுக்குத் தேவையான வசதிகளை உறுதி செய்ய ஆதி, டாக்டர் நாத்துடன் சாரநாத்திற்குச் சென்றார்.

பாபா, சக தோழர்களுடன் பெனாரஸ் மற்றும் சாரநாத்திற்கு வடக்குப் பாகத்திலிருந்து ஹரித்வார் வரை மேற்கொள்ளவிருந்த பாத யாத்திரை பற்றியும், அவர்களுடன் எடுத்துச் செல்ல வேண்டிய பொருட்கள் குறித்தும் விவாதித்துக் கொண்டிருந்த வேளையில், உணவுக்குப் பணம் இல்லை என்று குறிப்பிடப்பட்டது.

டிசம்பர் 31ஆம் தேதி வரை பயிற்சி காலத்தில் பாபா உதவ இருந்தார், ஆனால் எளிய உணவுக்குக் கூட பணம் இல்லாத சூழ்நிலை. இந்தக் காலக்கட்டத்தில் கூடுதலாகத் தேவைப்படும் ரூ.600 முதல் 700 வரையான பணம் ஒதுக்கிவைக்கப்படாமல் இருந்தது.

பாபா, இந்தத் தொகையை எப்படிப் பெறுவது என்ற பிரச்சினையைத் தோழர்களுடன் விரிவாக விவாதித்து, அது குறித்த ஆலோசனைகளை

வரவழைத்தார். இருப்பினும், புது வாழ்வின் நிபந்தனைகளுக்குள் எந்தத் தீர்வும் காணப்படவில்லை. பின்னர், இந்த யோசனையை முன்வைத்து, பாபா அறிவித்தார், **"நம்முடைய உடைகள், பெட்டிகள் மற்றும் பிற பொருட்களை நாம் விற்று, விலையாக்குவது நல்லது."**

இவ்வாறு செய்வதால் ரூ 400க்கு மேல் வராது என மதிப்பிடப்பட்டது. ஆனால் குளிர்காலத்தில் ஆடைகளை விட உணவையே முக்கியமானதாகக் கருதி, பாபா கூறினார், **"புது வாழ்வில் நமது வருகையின் நினைவாக, பெட்டிகள் மற்றும் ஆடைகளை டாக்டர் நாத், டாக்டர் கரே இருவரும் அவர்கள் விரும்பும் எந்த விதத்திலும் பயன்படுத்திக் கொள்ளலாம்; அதே வேளையில் அவர்கள் உணவுப் பொருட்களை வாங்குவதற்கு ரூ 1,000 வழங்கலாம், அதன் மூலம் டிசம்பர் 31ஆம் நாள் வரை உணவுப் பிரச்சினை ஒரு தீர்வுக்கு வரும்."**

டாக்டர்கள் இருவருடன், கயா பிரசாத்தும் இணைந்து இந்தத் திட்டத்திற்கு இணக்கம் தெரிவித்து, உடனடியாக அந்தத் தொகையை வழங்க முன்வந்ததும், டிரங்குகள், துணிமணிகள் அனைத்தும் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. ஆடைகளில் பாபாவின் கோட் மற்றும் அவரது சத்ரா ஒன்றும் இருந்தது. டாக்டர்கள், அந்தப் பொருட்களை, தானமாகத் திருப்பித் தர விரும்புவதாகக் கூறி அனுப்பினர், ஆனால் பாபா அவற்றைத் திரும்பப் பெற மறுத்துவிட்டார். அவர்கள் உண்மையில் இதை மனதில் கொண்டு எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டனர்; ஆனால் பாபா அதற்கு இணங்கவில்லை, ஏனெனில், அவர் தனது தோழர்கள் கடினமான சூழ்நிலைகளைக் கடந்து செல்ல வேண்டும் என்று விரும்பினார், மேலும் நிதிப் பற்றாக்குறையை வேண்டுமென்றே உருவாக்கினார்.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டதும், பாபா சக தோழர்களிடம் வேடிக்கையாகக் கூறினார், **"அக்டோபர் 16ஆம் தேதி மெஹராபாத்திலிருந்து புறப்படும்போது, ஒப்பிட்டுக் கூறும் வேளையில், 'குறைந்த எடை'யுடன்** (LIGHTWEIGHT) **இருந்தோம். பெனாரஸில், டிரங்குகள் மற்றும் பழைய வாழ்வின் ஆடைகளை அப்புறப்படுத்திய வேளையில், நாம் 'இறகு எடை'** (FEATHERWEIGHT) **ஆகிவிட்டோம். எவருக்குத் தெரியும் - நான் நிச்சயமாகக் கூறமுடியாது - ஜனவரி 1ஆம் தேதிக்குப் பிறகு, நாம் 'காற்றின் எடை'யாக** (AIR-WEIGHT) **மாறலாம்!"**

டிசம்பர் 1ஆம் தேதி பெனாரஸிலிருந்து சாரநாத்திற்குச் செல்ல பாபா முடிவு செய்தார். அவர்களிடமிருந்த ஒட்டகம், ஒட்டக வாகனம், பசுக்கள், கழுதைகள் அனைத்தையும் அங்கு அனுப்பிவைக்குமாறு டாக்டர் நாத் மற்றும் டாக்டர் கரே ஆகியோருக்கு அவர் தகவல் தெரிவித்தார். அவர்கள் பாபாவிற்கு இயன்ற அனைத்தையும் செய்து கொண்டிருந்த நேரத்தில், பாபா உண்மையில்

அவர்களைப் பார்க்க அனுமதிக்காமல், தோழர்கள் மூலம் மட்டுமே தொடர்பு கொண்டார். இருப்பினும் இரண்டு மருத்துவர்களும், இந்த அளவிற்கேனும் கிடைக்கப்பெற்ற வாய்ப்பை எண்ணி திருப்தியும், மகிழ்ச்சியும் அடைந்தனர்.

கூண்டுவண்டியில் ஒரு வெள்ளை குதிரையைப் பயன்படுத்த பாபா விரும்பியதை, கயா பிரசாத் கரே ஒரு வாய்ப்பாகக் கருதி, அத்தகைய குதிரையை வாங்கும் முழு முயற்சியில் ஈடுபட்டார்.

பாபா அதை ஏற்றுக்கொண்டு, வெண் குதிரை கிடைத்ததும் அதை சாரநாத்தில் அவர்களிடம் ஒப்படைக்குமாறு கயா பிரசாத் அறிவுறுத்தப்பட்டார். இவ்வாறு, பாபா பெனாரஸில் தங்கியிருந்த இரண்டு வார காலத்தில் இரு குடும்பத்தினரும் அவருக்கு அருமதிப்பான சேவைகளைச் செய்தனர்.

1949 டிசம்பர் **1** வியாழன் அன்று, பாபா தேநீர் அருந்திய பிறகு தோழர்களுடன் இணைந்து, பழைய மற்றும் புது வாழ்வை விவரிக்கும் இரண்டு உருது ஈரடி கவிதைகளைக் கொண்ட ஒரு துண்டு காகிதத்தை டாக்டர் கனியிடம் கொடுத்தார்:

பிரிவு எனும் கற்பனைக் கனவை
இப்போது கைவிடுங்கள்;
நீங்கள் கடவுளாக இருந்தீர்கள், கடவுளாக இருக்கிறீர்கள்,
ஆனால் இப்போது கடவுளாகிவிடுங்கள்.
உங்களை வருத்தி, உருகுலைத்து, களைப்புறச் செய்து,
நிர்க்கதியான நிலையில்,
அணுக முடியாதவராக ஆக்குங்கள்;
பேரிடர், துன்பம், துயரம் மற்றும்
இடர்பாடுகளின் குரலாக மாறுங்கள்.

பாபா பின்னர் ஆண், பெண்மணிகளுடன் சாரநாத்திற்கு கால் நடையாகப் புறப்பட்டார் - மேலும் கலியுகம் அதன் பொக்கிஷம் எனும் களஞ்சியத்தில் புது பொருட்களைச் சேர்க்க முடிந்தது! தோழர்கள் தங்கள் அன்பிற்குரியவரிடமிருந்து அன்பின் மதுவை சுவைக்கத் தயாராக இல்லை, எனவே அவரே, பக்தன் எனும் பங்கை வகித்தார், அவர்களின் நலனுக்காக பொருள் சார்ந்த அனைத்தையும் கைவிட்டார். தேவ தேவதைகள் இந்த தெய்வீக நாடகத்தில் பங்கெடுத்தாலும், பௌதீக உடல்கள் இல்லாத பட்சத்தில், அவர்களால் உடலளவில் தொடர்பு கொள்ள முடியாததால், தோழர்கள் அவர்களின் பொறாமைக்கு ஆளாயினர்!

பாபா, காலை **7** மணிக்கு, பெண்மணிகளுடன் முதலாவதாகப் புறப்பட்டபோது, அவர்களை வழிநடத்த ஆதி சீனியர் உடன் இருந்தார். ஆண் தோழர்கள் எல்லா பொருட்களையும் ஒரு சரக்கு வாகனத்தில் ஏற்றிவிட்டு, தங்கள் சின்னஞ்சிறு பொருட்களைத் தோளில் சுமந்த வண்ணம் நடந்து

சென்றனர். அதி விரைவில் ஆண் தோழர்கள் சிறிய குழுக்களை உருவாக்கி முன்னால் நடந்து செல்ல, பாபா, பெண்மணிகளுடன் ஒரு ஃபர்லாங் இடைவெளியில் பின்தொடர்ந்து சென்றார். பாபா, அவ்வப்போது ஆண் தோழர்களுடன் இருக்கும் நோக்கத்தில் முன்னால் சென்று, பின்பு பெண்மணிகளிடம் திரும்பினார். ஒவ்வொருவரின் இதயமும் புது வாழ்வின் பாடலின் வரிகளை ஒன்றிணைந்து எதிரொலிக்கச் செய்தது:

மெஹர் பாபாவின் மௌன மொழியின்
வார்த்தைகளைக் கேளுங்கள்.
அனைத்து இறைப் பிரியர்களின் வாழ்க்கைக் கதையின்
உள்ளடக்கத்தைப் பாருங்கள்....

இறைவனின் இந்த 'மௌன மொழி'யின் தாளத்திற்கு, தோழர்கள் வெற்றிநடையிட்டுச் சென்றனர். அந்த முக்கியமான சந்தர்ப்பத்தை வாழ்த்தி வரவேற்பது போல, சாலையில் ஒரு மஸ்த் தென்பட்டார். பாபா அவரை பரிவாரத்துடன் இணைத்து, வடக்கே சாரநாத்தை நோக்கிச் செல்லும் ஆண் தோழர்களுடன் அடுத்த நான்கு மைல் நடத்திச் சென்றார்.

சாரநாத் புறநகர் பகுதியில், டாக்டர் நாத், பாபா மற்றும் பெண்மணிகளுக்கென, 'பஹாரியா' (PAHARIYA) கிராமத்தில் ஒரு நண்பரின் பங்களாவையும், ஆண் தோழர்களுக்காக எட்டாவது மைல் தொலைவில் அமைந்த மற்றொன்றையும் வாடகைக்கு ஏற்பாடு செய்திருந்தார். நாத், கரே குடும்பத்தினர் பெனாரஸிலிருந்து காரில் உணவு அனுப்ப வேண்டியிருந்ததால் தொலைதூரத்திலிருந்து அனைத்து ஏற்பாடுகளையும் தொடர்ந்து மேற்பார்வையிட்டனர்.

டிசம்பர் 2ஆம் நாள் மதிய வேளையில், ஆதி சீனியர் ஹார்மோனியம் இசைத்து, பாட, பாபா டோலக் வாசித்தார். '**ஹரி, பரமாத்மா, அல்லா, அஹுரமஸ்தா, காட், எஸ்தான், ஹு**' என்ற பழைய வாழ்க்கையின் ஏழு பெயர்கள் அடங்கிய கடவுளின் பிரார்த்தனையைத் திருத்துமாறு பாபா, டாக்டர் கனிக்கு அறிவுறுத்தினார்: '**குதா, பரமாத்மா, அல்லா, அஹுரமஸ்தா, காட், அலக்** (எல்லையில்லா அறிவு, ஆற்றல், ஆனந்தம் போன்ற குணங்களற்ற கடவுள்), **ஈஷ்வர்**.' ஆதி சுமார் பதினைந்து நிமிடங்கள் இதைப் பாட, பாபா தொடர்ந்து டோலக் வாசித்தார்; டாக்டர் நீலுவும் உலோக தட்டுகளில் தாளமிட்டுப் பங்கெடுத்தார்.

டாக்டர் கனி, தான் இயற்றிய கவிதை ஒன்றுடன் அவர் இணைத்த சில ஈரடிக்கவிதைகளை வாசித்தபோது, பாபா கவிதையைப் பாராட்டினார்; ஆனால் பாபாவை 'குர்ஷ்-இ-ஜமான்' (KHURSH-E-ZAMAN, அவதார புருஷர்) என்று குறிப்பிட, அதைத் திருத்தம் செய்து, வருத்தம் தெரிவிக்கும் விதத்தில், தானே தனது (கனியின்) காதுகளைக் கிள்ளச் செய்தார். டாக்டர் கனி தனது நாட்குறிப்பில்

இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்: “இந்தப் புது வாழ்வில், பாபா அவர், குருநாதர், சத்குரு அல்லது அவதார புருஷர் என்று குறிப்பிடப்படுவதைத் தவிர்க்கிறார்; அவர் முன்னிலையில் ஆன்மீக விஷயங்களைப் பற்றி விவாதிப்பதைத் தடைசெய்ததோடு, பழைய வாழ்க்கையை எவ்வகையிலேனும் நினைவுபடுத்தும் எதையும் சொல்லவோ செய்யவோ கூடாது என்று பாபா மீண்டும் ஒருமுறை அறிவுறுத்தினார்.”

புது வாழ்வின் தொடக்கத்திலிருந்து, பாதிரி மெஹராபாத் அருகே வாழ்ந்து, அங்கு வசிக்கும் நபர்களைக் கண்காணித்து, கட்டிடங்கள் மற்றும் நிலங்களை கவனித்து வந்தார். கூண்டுவண்டி, இரண்டு காளைகள் மற்றும் ஒரு மாட்டு வண்டியை வழங்குவதற்காக அஹமதுநகரிலிருந்து சாரநாத்திற்கு பாதிரி அழைக்கப்பட்டார், ஆனால் அவர் டிசம்பர் 3ஆம் நாள் வரை வரவில்லை. புது வாழ்வு தோழர்களில் எவரையும், குறிப்பாக, பாபாவைப் பார்க்க வேண்டாம் என்று அவருக்கு அறிவுறுத்தப்பட்டது. முகல் ஸராய் ரயில் நிலையத்திற்கு வந்த பாதிரி, கூண்டுவண்டி, காளைகள் மற்றும் மாட்டு வண்டியை நேரடியாக அங்குச் சென்ற எரச், பெண்டு இருவரிடம் ஒப்படைக்காமல் அங்கேயே விட்டுச்செல்ல வேண்டியதாயிற்று. (பின்னர், கூண்டுவண்டியில் சில இணைப்புகள் மற்றும் மாற்றங்களைச் செய்யும் பொறுப்பு பாதிரியிடம் ஒப்படைக்கப்பட்டது).

புது வாழ்வுக் கவிதை அச்சிடப்பட்ட பிரதிகள் அன்று சாரநாத்திற்கு வந்து சேர்ந்தன. பாபா ஒவ்வொரு தோழர்களுக்கும் ஒரு பிரதியை வழங்கி, நாத்திடம் 20 பிரதிகளை ஒப்படைக்குமாறு அறிவுறுத்தினார்.

கரே இரண்டு குதிரைகளையும் ஒரு சேணத்தையும் சாரநாத்திற்கு அனுப்ப ஒப்புக்கொண்டார். **“டான், சதாஷிவ் இருவரும் குதிரைகளுக்கு சோதனை ஓட்டம் அளித்த பின்பு, கனி குதிரை மீது சேணத்தில் அமர்ந்து, ஓட்டி, வெற்றி கண்டால், குதிரை எனக்குப் பாதுகாப்பானது என்பது ஊர்ஜிதம் ஆகும்”** என்று பாபா கூறினார். மெஹரா, குதிரைகளைப் பற்றி அறிந்திருந்ததால் அவருடைய ஆலோசனைப்படி ஒரு குதிரை தேர்ந்தெடுக்கப்பட்டது.

உலகெங்கிலும் வாழும் பௌத்தர்களுக்கு சாரநாத் மிகவும் புனிதமான இடமாகும், ஏனெனில், இது புத்தர் தனது முதல் அற விளக்கப் பேருரையை வழங்கி, தனது முதல் ஐந்து சீடர்களுக்குத் தீட்சை (இறை அறிமுகம்) அளித்த இடமாகும். இதற்குப் பிறகு, சாரநாத் அவரது செயல்பாட்டின் மையமாகத் திகழ்ந்து, புத்தர் அங்கேயே தங்கி இருந்ததாகக் கூறப்படுகிறது.

சாரநாத்தில் பல புத்த கோவில்களும் மாபெரும் ஸ்தூபிகளும் உள்ளன. ஸ்தூபிகளுக்கு அருகிலுள்ள பிரதான கோவிலில், ஒரு ஜப்பானிய கலைஞர்

புத்தரின் வாழ்க்கையின் காட்சிகளை சித்தரிக்கும் ஓவியங்களை வரைந்திருந்தார். தியானத்திற்காக முதலில் பயன்படுத்தப்பட்ட தனித்தனி நிலத்தடி கல் குகைகளும், அவற்றிற்கு கீழே செல்லும் படிகளும் உள்ளன. அந்த நேரத்தில், இந்த நிலத்தடி குகைகள் பெரும்பாலும் இடிந்த நிலையில் காணப்பட்டன.

பாபா 3ஆம் தேதி காலை ஆதி, நீலுவுடன் பெண்மணிகளையும் இந்த இடத்தைப் பார்வையிட அழைத்து சென்றார். அவர்கள் அங்குச் சென்றடைந்ததும், இக்கால சுழற்சியில் நாம் அறிந்த அவதார புருஷர்களின் பெயரை ஒரு துண்டு காகிதத்தில் எழுதி, அவரிடம் கொடுக்குமாறு மணியிடம் கூறினார்.

ஸொராஸ்டர், ராம், கிருஷ்ணா, புத்தர், ஏசு, முஹமது ஆகிய பெயர்கள் எழுதப்பட்ட காகிதத்தை மணி பாபாவிடம் கொடுக்க, அவர் நிலத்தடிக்குச் செல்லும் படிகளில் இறங்கி நடக்கும்போது அதைத் தனது சட்டைப் பையில் வைத்தார்.

1949 டிசம்பர் 5ஆம் நாள் திங்கட்கிழமை கடுமையான குளிர் நிறைந்த காலையில், காக்கா, விஷ்ணு இருவரையும் தவிர (அவர்கள் இரண்டு நாட்களுக்குப் பிறகு சென்றனர்) அனைத்து ஆண் தோழர்களுடன் பாபா, சாரநாத்தின் கீழ் நிலத்தடிப் பாதைகளில் அமைந்த அறைகளுக்குத் சென்றார். ஒவ்வொரு தோழரும் தனது ஆடையுடன் இடுப்பில் ஒரு லங்கோட்டி அணியுமாறு அறிவுறுத்தப்பட்டனர். உள்ளே நுழைந்ததும், லங்கோட்டியைத் தவிர இதர ஆடைகளை அகற்றுமாறு பாபா சக தோழர்களுக்கு அறிவுறுத்தினார். ஏறக்குறைய முழு நிர்வாண நிலையில், தோழர்கள் கடும் குளிரில் நடுங்கினர். ஒவ்வொரு தோழருக்கும் வழங்கப்பட்ட பிரார்த்தனையின் நகல்களைக் கைகளில் ஏந்திய வண்ணம், படிகளில் அமர்ந்து, பாபா ஒவ்வொருவரும் பதினைந்து நிமிடங்களுக்குப் பிரார்த்தனையை மனதில் மௌனமாக மொழியுமாறு அறிவுறுத்தினார்.

கௌதம புத்தர் தனது சீடர்களுக்கு தீட்சை (இறை பாதையில் முதன் முதலாக வழிநடத்துதல்) வழங்கிய பழங்கால சூழல், முழுமையான நிசப்தத்துடன் காணப்பட்டது. மாறாக, புத்தர் தனது மற்றும் அனைத்து சீடர்களின் வாழ்க்கையை அர்ப்பணித்த அந்த இடத்தில், புது வாழ்வில் குரு-சீடர் இடையேயான தொடர்பை முறியடிக்க, பாபா தனது தோழர்களுடன் பிரார்த்தனை செய்தார்!

கற்படிகளில் அனைவரும் பாபாவை நோக்கி அமர, அவர் புன்னகையுடன் சைகை மூலமாக, தோழர்கள் அனைவரும் மனதில் பின்வரும் பிரார்த்தனையை மொழியுமாறு அறிவுறுத்தினார்:

கடவுளே, நிபந்தனைகளை 100 சதவீதம் பின்பற்ற
எனக்கு மனபலம் கொடுங்கள்.

கடவுளே, எந்த சூழ்நிலையிலும் பொய் பேசாமல்,
உண்மையைப் பேச எனக்கு உதவுங்கள்.
கடவுளே, கோபத்தைக் கட்டுப்படுத்தவும், காமம், பேராசை
போன்றவற்றால் விளையும் ஆசைகளிலிருந்து
விலகி இருக்கவும் எனக்கு உதவுங்கள்.
கடவுளே, எனது தோழர்களிடமும், என்னுடன் தொடர்பில்
இருப்பவர்களிடமும் நீதி, நியாயம், நேர்மை மற்றும்
கனிவுடன் இருக்க எனக்கு உதவுங்கள்.

பதினைந்து நிமிடங்களுக்குப் பிறகு, பாபா, சக தோழர்களிடம் பிரார்த்தனை காகிதத்தை நெற்றியில் தொட்டு வணங்கி, ஆடைகளை அணிந்து, வரிசையாக நிற்கும்படி சைகையால் தெரிவித்தார். பாபா, பாதையின் ஒரு பக்கத்தில் நின்று கொண்டிருக்க, தோழர்கள் தயாரானதும், ஒவ்வொருவராகத் தன்னை அணுகி, பிரார்த்தனை காகிதத்தை அவரிடம் ஒப்படைக்குமாறு அறிவுறுத்தினார். தோழர்கள் ஒவ்வொருவரும் அதைச் செய்ததும் பாபா அன்புடன் கைகளைக் குலுக்கி அனுப்பிவைத்தார்.

பாபாவின் முகம், அவருடைய பணியின் நிறைவில் அவர் முழு திருப்தி அடைந்ததைக் குறிக்கும் விதத்தில் பிரகாசமாக ஒளிர்ந்தது; புன்னகைத்தபடி, பாபாவும் தோழர்களும் படிகளில் ஏறி வாசலைச் சென்றடைந்ததும், பாபா, டாக்டர் கனியிடம் உரத்த குரலில், ஏழு முறை, '**முடிவடைந்தது**' எனக் கூறுமாறு அறிவுறுத்தி, கனி அதை மொழிந்த போது, பாபாவே ஒவ்வொரு முறையும் தனது வலது கரத்தை உயர்த்தி அதில் இணைந்தார்.

பிரார்த்தனையின் போது அணிந்திருந்த லங்கோட்டியைப் பாதுகாப்பாக வைக்குமாறும், அவர் கூறினாலொழிய, அதை மீண்டும் பயன்படுத்த வேண்டாம் என்றும், அதில் ஒரு சிறப்பு அடையாளத்துடன் தனித்தனியாக வைக்குமாறும் பாபா தோழர்களுக்கு அறிவுறுத்தினார்.

பிரதான கோவிலை வலம் வந்த பின்பு, பங்களாவிற்குத் திரும்பும் வழியில், டாக்டர் கனி, டானிடம், சில பணிகள் நிறைவேற்றப்பட்டதில் பாபாவின் வெளிப்படையான மகிழ்ச்சிக்குச் சான்றாக, 'முடிவடைந்தது' என்று ஏழு முறை மொழிந்ததைச் சுட்டிக்காட்டி, "பாபாவின் கடைசி இன்றியமையா பணி நிறைவடைந்திருக்க வேண்டும்" என்று கூறினார்.

இருவரும் என்ன பரிமாறிக்கொண்டனர் என்று பாபா வினவியபோது, கனி சொன்னதைக் கேட்டதும், "**இது ஆரம்பம் மட்டுமே. முடிவு, தானே பார்த்துக் கொள்ளும்**" என்று குறிப்பிட்டார்.

பெண்மணிகள் தங்கியிருந்த பங்களாவின் தோட்டத்தில், தோட்டக்காரருக்கு ஒரு சிறிய குடில் இருந்தது. பாபா, இந்தத் தோட்டக்காரர் மீது தனி அன்பு கொண்டிருந்தார், அவ்வப்போது கோஹெரை அனுப்பி, அவருக்கு

ஏதேனும் தேவையா என விசாரிக்கக் கூறினார். அந்தத் தோட்டக்காரர் ஒருமுறை கோஹெரிடம், "இல்லை, எஜமானர் எனக்கு எல்லாவற்றையும் கொடுத்துள்ளார்; எனக்கு எதுவும் தேவையில்லை" என்று கூறினார். பங்களாவின் உரிமையாளர் அல்லது முதலாளி அவரது தேவைகளைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என கோஹெர் நினைத்து, அவ்வாறே பாபாவிற்குத் தெரிவித்தார். ஆனால் அதைக் கேட்டு பாபா, சிரித்துக்கொண்டே, '**அந்த முதியவர் கிருஷ்ணரையே குறிக்கிறார்**' என்பதை கோஹெர், மெஹரா இருவருக்கும் விளக்கினார்.

ஒருமுறை, தோட்டக்காரர் கோஹெரிடம் ஒரு தீப்பெட்டி வேண்டுமெனக் கேட்க, அதை பாபா அனுப்பி வைத்தார். தினமும், பாபா இந்தத் தோட்டக்கார மனிதரைப் பற்றி தோழர்களிடம் குறிப்பிட்டார், மேலும் அவரை '**ஸந்த் மாலி**' (SANT MALI, புனிதமான தோட்டக்காரர்) என்று குறிப்பிட்டார்.

அன்று நிலத்தடி அறைகளிலிருந்து திரும்பிய பாபா, தோழர்களுடன் தோட்டக்காரரைப் பார்க்கச் சென்ற போது, 'ஸந்த் மாலி' அவர்களைப் பார்த்து புன்னகைத்து, மகிழ்ச்சியுடன் கைகளைக் கூப்பி வணக்கம் செலுத்தினார். பாபா அந்த மனிதரைப் பாராட்டினார், "**பாருங்கள், இந்தக் கடும் குளிரிலும், அவர் திறந்த வெளியில், உடைந்த கட்டிலில் தூங்குகிறார்; அவர் ஒரே ஒரு சமையல் பாத்திரத்தை வைத்து, தனக்காக சமைக்கிறார்; ஆண்டு முழுவதும், அவர் புழுங்கல் அரிசியை மட்டுமே வேகவைத்து உப்பிட்டு உண்ணுகிறார்; அதிகாலை நான்கு மணிக்கு எழுந்து 'சீதா-ராம், சீதா-ராம்' என்று திரும்பத் திரும்ப கடவுள் நாமத்தை உச்சரிக்கத் தொடங்குகிறார்; அனுதினமும் அதிகாலை நான்கு மணிக்கு நீராட கிணற்றுக்குச் செல்கிறார்; நாள் முழுவதும் தோட்டத்தில் பணிபுரிகிறார்; அவருக்கு எதுவும் தேவையில்லை, எப்போதும் மகிழ்ச்சியாக இருக்கிறார்; தினமும் ஐந்து முள்ளங்கிகளை எனக்குக் கொடுப்பதில் அவர் மகிழ்ச்சியடைகிறார், அவர் ஒரு துறவி என்பதால் எதையும் விரும்பவில்லை. அவருடைய ஒரே ஆசை இறைவன்; அதற்காகவே அவருடைய இறைவன் (பாபா) இன்று அவரை சந்திக்க வந்திருக்கிறான்.**"

டிசம்பர் 6ஆம் நாள் மதியம், டாக்டர் நீலு, பாபாவிடம், "புது வாழ்வு' என்பதன் அர்த்தம் என்ன?" என்று கேட்டார்.

பாபா இவ்வாறு பதிலளித்தார், "**புது வாழ்வு என்பது யோகாவின் ஒரு வடிவம் அல்ல; அது துறவும் அல்ல. அது ஒருபோதும் திட்டவட்டமான, தெளிவான ஒன்றாகவும் இருக்க முடியாது. ஸுஃபி பாரம்பரியத்தில் அதற்கான சரியான சொல் 'ருயிடி'** (RUIDI), **அதாவது வடிவம் மற்றும் மதச் சார்பிலிருந்து விடுதலை பெற்றது, வித்தியாசமானது. எப்போது உண்பதற்கு உணவு கிடைக்குமோ, அப்போது மனமார உண்ணுவோம், இல்லையேல், பசியோடு இருக்கிறோம், எது வந்தாலும் மகிழ்வோம் அல்லது**

மகிழ்ச்சியோடு துன்பப்படுவோம். ஆனால் நமது நோக்கம் நோக்கமின்மை, நமது உதவி உதவியின்மை, நமது நம்பிக்கை நம்பிக்கையின்மை. பழைய வாழ்வின் முழுமையான அழிவுதான் எனது புது வாழ்வு, அது 'ஈரமாக' (மகிழ்ச்சியாக) **இருக்க வேண்டும்."**

பாதிரி இன்னமும் அங்கேயே இருந்து, ஒட்டக வாகனம் மற்றும் கூண்டுவண்டியின் பணிகளை மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்தார். 1949 டிசம்பர் 7ஆம் நாள், பாபா இவ்வாறு வினவினார்: **"புது வாழ்வின் நிகழ்வுகள் குறித்து பாதிரிக்கு எதுவும் கூறக்கூடாது என்பது சரியா?"**

'புது வாழ்வு என்பது அனைவருக்கும் ஒரு திறந்த புத்தகமாக இருக்கும்' என்று மெஹராபாத்தில் சம்பந்தப்பட்ட அன்பர்களுக்கு பாபா கூறியதை தோழர்கள் நினைவுபடுத்தினர். அதை நிர்வகிக்கும் தனியுரிமை அல்லது ரகசியம் எதுவும் இருக்காது, மேலும் பல்வேறு நிலைகள், நிகழ்வுகள் குறித்து 'ஏற்பாட்டுக் குழு'விற்குத் தெரிவிக்கப்படும்.

பாபா பின்னர் எரச்சிடம், பாதிரிக்கு இதுவரை புது வாழ்வில் நிகழ்ந்த அனைத்து விவரங்களைக் கூறுமாறும், பாதிரி திரும்பிச் செல்லும் வேளையில் மும்பையில் நின்று, அதை மெஹர்ஜி, நரிமன் இருவருக்கும் தெரிவிக்குமாறும் அறிவுறுத்தப்பட வேண்டும். மெஹர்ஜியும், நரிமனும் தங்களோடு தங்கியிருக்கும் பெண் மண்டலிக்குத் தகவல் தெரிவிக்க வேண்டும். பாதிரி பூனாவிற்குச் சென்று பப்பா ஜெஸவாலா, பாபா இல்லத்தில் அனைவருக்கும், காடேக்கர், கனி குடும்பத்தினருக்கும் இதைத் தெரிவிக்க வேண்டும். இருப்பினும், பழைய வாழ்க்கை, அங்கு வாழும் அன்பர்கள் பற்றிய எந்த விவகாரங்களையும் பாதிரி, எரச்சிடம் பகிர்ந்து கொள்ளக்கூடாது.

கயா பிரசாத் கரே மற்றும் அவரது மகன் டாக்டர் கரே அன்று மாலை 5 மணிக்கு வந்தனர்; மேலும், டாக்டர் கரேயின் தாயார் சார்பாக, பாபாவிற்கு வெண் குதிரை ஒன்றைத் தானமாக வழங்கினார். பாபா அதை ஏற்றுக்கொண்டு, குதிரையின் கடிவாளத்தை எடுத்த பின்னர் அதைத் தோழர்களுக்கு அனுப்பி வைத்தார்.

1949 டிசம்பர் 8 அன்று உணவுக்காக யாசிப்பது மற்றும் ஏற்பாடுகள் குறித்து சக தோழர்களுடன் கலந்துரையாடல் நடைபெற்றது. டாக்டர் கனி குறிப்பிட்டார்: "பாபா, குழுவில் நிலவும் சூழ்நிலையைப் பற்றி என்னால் உணராமல் இருக்க முடியாது: 'நான் இப்போது உங்கள் நிலையில் இருக்கிறேன்' என்று நீங்கள் எந்நேரமும் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள், ஆனால் அந்த சம நிலையை அல்லது சமத்துவத்தை என்னால் உணர முடியவில்லை. தோழர்களுடனான சந்திப்பில் நீங்கள் பங்கெடுப்பது, எலிகளின் மாநாட்டில் பூனை

தலைமை தாங்குவது போலத் தோன்றுகிறது! நீங்கள் கூறுவதை அனைவரும் தலையசைத்து ஏற்றுக்கொள்வது போலத் தெரிகிறது, ஏனெனில் எந்த ஒரு சிறு தவறு அல்லது துரதிர்ஷ்டவசமான நிலைப்பாடும் தோழர்களை நிலைகுலையச் செய்யும்."

டாக்டர் கனி விரும்பும் விதத்தில் உணவுக்காக யாசிக்கும் நிகழ்ச்சியை முன்னின்று நடத்துவதற்கான முழுப் பொறுப்பையும் அவருக்கு வழங்க பாபா முன்வந்தார்; ஆனால், தோழர்கள் அனைவரும் பாபா கூறியது போல நிகழ்ச்சியைத் தொடர வாக்களித்தனர். **"நான் உங்களுக்கு ஒரு வாய்ப்பை வழங்கினேன், நீங்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அது எனக்கு சிறிதும் அதிருப்தியைத் தரவில்லை. நான் சொல்ல வேண்டியதைச் சொன்னேன்; வாய்ப்பை வழங்கியபோது நான் தீவிரமாக இருந்தேன். கனி அதை ஏற்றுக்கொண்டு, உங்கள் அனைவரின் உதவியுடன் முன்னின்று வழிநடத்த இணங்கியிருந்தால் நான் உண்மையிலேயே மகிழ்ச்சியாக இருந்திருப்பேன். இனிமேல், உங்களிடையே எந்த விதமான முணுமுணுப்பு அல்லது உறுமலுக்கும் இடமிருக்காது; இப்போது நீங்கள் வாய்ப்பை இழந்துவிட்டதால், நான் ஒருவேளை எனது 'உறைவாளை உருவலாம்' (அதாவது மேலும் கண்டிப்புடன் இருக்கலாம்). இது எனது சத்தியம் என்று எடுத்துக்கொள்ளாதீர்கள்"** என்று அறிவித்து, பாபா கூட்டத்தை நிறைவு செய்தார்.

பாபா சாரநாத்தில் பன்னிரண்டு நாட்கள் தங்கியிருந்த போது, அவர் சாரநாத்திலிருந்து ஹரித்வார் வரையிலான கால்நடை பயணத்தை, தோழர்களுடன் விவாதித்தார்; மேலும், அனைத்து பொருட்களையும் வடக்கே 'மாஞ்ஜ்ரி மாஃபி'க்கு சரக்கு ரயிலில் அனுப்புவது என்று முடிவு செய்யப்பட்டது. பாபா, அப்போது கூறினார், **"நாத், கரே இருவரிடமிருந்தும் ஆடைகள் மற்றும் டிரங்குகளுக்கு ஈடாக நாம் பெற்றுக்கொண்ட ரூ 1,000 ஏற்கனவே செலவாகிவிட்டது. இப்போது சரக்குக் கட்டணத்திற்கு கூடுதலாக ரூ 300 முதல் 400 வரை தேவைப்படும். அந்தத் தொகையை நாம் எங்கிருந்து பெறப் போகிறோம்?"**

சிறிது நேரத்திற்குப் பிறகு, பாபா தனது முடிவைத் தெரிவித்தார்: **"உங்கள் கைக்கடிகாரங்களை விற்கத் தயாராக இருங்கள், அப்போது நாம் இந்தச் செலவை சந்திக்க முடியும்."**

ஆகவே, ஒவ்வொரு தோழரும், இறுதியான 'காற்று-எடை'யை நோக்கி இன்னும் ஒரு படி மேலே செல்வதாக நினைத்து, பாபாவின் விருப்பத்திற்கு அடிபணிந்து, தமது கைக்கடிகாரங்களைக் கழற்றி பாபாவின் முன் வைத்தனர்.

இருப்பினும், டாக்டர் டான், பெண்டு, ஆதி ஆகியோரிடம் தத்தமது கைக்கடிகாரங்களை வைத்துக்கொள்ளுமாறு பாபா அறிவுறுத்தினார், ஏனெனில்

அவர்கள் அடிக்கடி வெளி வேலைகளுக்கு அனுப்பப்பட்டனர், மேலும், சரியான நேரத்தைக் கடைப்பிடிக்க கைக்கடிகாரம் மிகவும் தேவையானது. பெண்மணிகளிடமிருந்த ஒன்று உட்பட 12 கடிகாரங்கள் சேகரிக்கப்பட்டன.

500 ரூபாயுடன் பெனாரஸுக்கு வருமாறு டெல்லியில் வாழ்ந்த கேக்கி தேசாய்க்குத் தொலைத்தந்தி அனுப்புமாறு பாபா, எரச்சிடம் அறிவுறுத்தினார். டிசம்பர் 8ஆம் தேதி கேக்கி வந்தபோது, அந்தத் தொகைக்கு ஈடாக பன்னிரெண்டு கைக்கடிகாரங்களும் வழங்கப்பட்டன. அவருடன் அனைத்து பொருட்களும் கடந்த 10ஆம் தேதி டெஹ்ராடூனுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. கேக்கி தனது பணத்தைத் திரும்பப்பெற கடிகாரங்களை விற்குமாறு அறிவுறுத்தப்பட்டார்.

டாக்டர் நாத், டாக்டர் கரே இருவரும் ஒட்டகம் ஒன்றிற்கு 'போலாபாபா' (BHOLABABA, அப்பாவி) என்று பெயர் சூட்டி, ஒட்டக வண்டி, இரண்டு பசுக்களுடன் அவற்றின் கன்றுகள், இரண்டு கழுதைகள், ஒரு வெண் குதிரை அனைத்தையும் சாரநாத்திற்கு அனுப்பி வைத்தனர். இவற்றை கவனிப்பதற்கான தனிப்பட்ட கடமைகள் டிசம்பர் 10 அன்று, காலை விவாதத்தில் வழங்கப்பட்டன. பயணத்தின் போது, தோழர்கள் கடுமையான குளிரில் திறந்த வெளியில் தூங்கவேண்டியிருப்பதை டாக்டர் டான் சுட்டிக்காட்டினார், எனவே பாபா விஷ்ணுவிடம் (முடிந்தால்) பழைய காக்கி கம்பளி கால்சட்டைகள் மற்றும் காலுறைகளை வாங்கும்படி கட்டளையிட்டார். கால்சட்டை வாங்குவதில் விஷ்ணு வெற்றி பெற்றாலும் காலுறைகள் வாங்க முடியவில்லை; அன்றிரவு ஓய்வெடுக்கும் முன்னர் ஒவ்வொரு தோழருக்கும் ஒரு ஜோடி கால்சட்டைகளை விநியோகித்தார்.

1949 டிசம்பர் 11 அன்று மதிய வேளையில், அவர்கள் புறப்படுவதற்கு முந்தைய நாள், கரே, நாத் இருவரும் வழங்கிய சேவைகளை எத்தகைய சிறந்த முறையில் அங்கீகரிப்பது என்று பாபா தோழர்களுடன் விவாதித்தார். **"அவர்களின் சேவைகள், சந்தேகத்திற்கு இடமின்றி தானம் செய்வதாக இருந்தாலும், பலவிதமான தடைகள், துன்பங்கள், பிழை திருத்தங்கள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கு மத்தியிலும், மேலும் எனக்கும், ஒன்றைச் செய்யும் எனது வழிமுறைகளுக்குப் புதியவர்களாக இருந்தபோதிலும், அவர்களின் நேர்மையும், முழு மனதுடன் ஒன்றை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவமும் என் மீது ஒரு சுமையை ஏற்படுத்தியுள்ளதாக உணர்கிறேன்"** என்று பாபா விளக்கினார்.

பாராட்டுக்குரிய வகையில், அன்று மாலை 5 மணிக்கு கயா பிரசாத், டாக்டர் கரே, டாக்டர் நாத் மற்றும் அவரது சகோதரர் ஆகியோருக்கு பாபா, பெண்மணிகளின் பங்களாவில் தரிசனம் வழங்கினார்; ஆனால், மரியாதை செலுத்தும் விதத்தில் வணங்கவோ, கேள்விகள் எதுவும் கேட்கவோ வேண்டாம்

என்றும் கூறப்பட்டது. பாபா, எழுத்துப்பலகை வழியாக எடுத்துரைத்த செய்தியை எரச், அவர்களுக்கு வழங்கினார்:

இந்தப் புது வாழ்வின் தொடக்கத்தில், நாத் மற்றும் கரே குடும்பங்களுடன் எனக்கும் எனது தோழர்களுக்கும் தொடர்பு இருக்கும் விதத்தில் கடவுள் கட்டளையிட்டார். டாக்டர் நாத், அவருடைய சகோதரர் (நிர்வாக தலைவர்), **டாக்டர் கரே அவரது தந்தை கரே ஆகியோர் எனக்குத் தானமாக வழங்கிய அனைத்தும், முழு மனதுடன், அன்புடன் செய்யப்பட்டது; நான் இன்னும் அதிக அன்புடன் இந்த தானத்தை ஏற்றுக்கொண்டேன்.**

எதிர்வரும், 12ஆம் தேதி முதல், இந்த சொந்த பந்தம் முடிவுக்கு வரவேண்டும். இந்தப் புது வாழ்வின் உள்ளுணர்வை நான் உண்மையான ஆர்வத்துடன் வைத்திருக்க வேண்டும். நான் விதித்துள்ள நிபந்தனைகளுக்கு எதிராக, நான் நிச்சயமாக உதவியை நாடக்கூடாது. ஜனவரி 1ஆம் தேதி வரை, போதிய வசதி இருப்பதால், சிரமம் எதுவும் இருக்காது. 1950 ஜனவரி 1ஆம் நாளுக்குப் பிறகு, காசு, பணம் எதையும் கேட்காமலும், வாங்காமலும், யாசித்தும், உழைத்தும் வாழப்போகிறோம். முழுமையான துறவு மற்றும் அறுதியான உதவியற்ற இந்த புது வாழ்வில், சிரமங்கள் படிப்படியாக அதிகரிக்கும். நான் நினைத்தது நிறைவேறினால், ஹரித்வாரில் சுமார் இரண்டு மாதங்கள் தங்கிய பிறகு, புது வாழ்வின் உண்மையான இடர்பாடுகள் உருவெடுக்கும் அவ்வேளையில், நாம் புது வாழ்வில் 100 சதவீதம் மூழ்கிவிடுவோம். இந்தப் புது வாழ்வு முடிவில்லாதது மற்றும் அது வாழவைக்க விரும்பும் அனைவராலும் வாழப்படும்.

எனது மற்றும் தோழர்களின் உடைகள் காலம் கடந்து வாழப்போகும் நினைவுச் சின்னங்கள், உங்கள் இரு குடும்பங்களால் பயன்படுத்தப்பட வேண்டும் அல்லது பாதுகாக்கப்பட வேண்டும், ஆனால் வெளியே எவருக்கும் கொடுக்கப்படக்கூடாது. எரச், ஆதி இவர்களுடன் நான் அனுப்பும் செய்திகள் அனைத்தும் என்னுடைய கட்டளைகளாக, முறையாக உங்களுக்குத் தெரிவிக்கப்பட்டன. பாபாதாஸ் தனது ஆர்வத்தாலும் அணுகுமுறையாலும் தவறான புரிதலை ஏற்படுத்தியிருந்தாலும், தனது சொந்த வழியில் எனக்கு உதவ தன்னால் இயன்றதைச் செய்ய முயற்சிக்கிறார்.

அந்தச் செய்தியின் நகல் ஆங்கிலத்தில் நாத்திற்கும், இந்தி மொழியில் கரே என்பவரிடமும் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, பெனாரஸ் நகரில் பாபாவின் முன்னிலையில் இருக்கும் முதல் வாய்ப்பைப் பெற்றதில் அவர்கள் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தனர்.

சாரநாத்திலிருந்து புறப்படும் அன்று காலை, பாபா ஒரு போர்வையை 'ஸந்த் மாலி'க்கும், சில ஆடைகளை மற்றுமொரு தோட்டக்காரருக்கும் வழங்கினார். ஸந்த் மாலியின் கைகள் 'பகவானின் பரிசு' என்று

அழைக்கப்பட்டதை அடையப்பெறும் ஆர்வத்தில் பரந்து விரிந்தன; ஆனால் பாபா, அதைக் கைகளில் வழங்கிய வேளையில் ஸந்த் மாலி இறைபோதையின் தாக்கத்தில் மிகவும் மயங்கிப்போனார்.

பாபா குடிசையிலிருந்து வெளியே வந்து, ஸந்த் மாலியின் தோளில் கையைத் தாங்கிய வண்ணம், நாத், கரே இரண்டு குடும்பத்தினரையும் தூரத்திலிருந்து பார்த்தார். அவர்களின் அளவு கடந்த, நேர்மையான, முழு மனதுடன் வழங்கிய தன்னலமற்ற சேவையின் வெளிச்சத்தில், பாபா அவர்களை சாரநாத்தில் தனது கடைசி நாளில் இரண்டாவது தரிசனத்திற்காக வரவழைத்தார்.

ஹரித்வார் புனித யாத்திரை

(Pilgrimage to Haridwar)

1949 டிசம்பர் **12** திங்கட்கிழமை காலை **7:30** மணிக்கு, நான்கு பெண்மணிகளுடன் பாபா சாரநாத்திலிருந்து பாதயாத்திரையாகப் புறப்பட்ட வேளையில் எரச், டாக்டர் டான் இருவரும் உடனிருந்தனர். ஆண் தோழர்களுடன் மொத்த குழுவும் ஒன்றரை மணி நேரம் கழித்து பின்தொடர்ந்தது. வெண் குதிரை - தூய்மை மற்றும் அவதார புருஷரின் வருகையின் புனிதத்தன்மை - பாபாதாஸின் பொறுப்பில் இருந்தது. அதன் பின்னால் பைதூல் ஓட்டி வந்த ஒட்டக வண்டி, சதாஷிவ் ஓட்டிய காளை வண்டி, பெண்டுவின் பொறுப்பிலிருந்த கறுப்பு ஆங்கிலேய காளை ராஜா இழுத்துச் சென்ற புது வாழ்வு கூண்டுவண்டி, மேலும் டாக்டர் நீலு நடத்திச்சென்ற இரண்டு பசுக்கள் அதன் கன்றுகளுடன் பின் தொடர்ந்தன. கடைசியாக, டாக்டர் கனி மற்றும் குஸ்தாஜியின் பொறுப்பில் கழுதைகள். நடந்து செல்லும் வேளையில், இதர தோழர்கள் ஏதோ ஒரு காரணத்திற்காக விலங்குகள் கட்டுப்பாட்டை இழந்துவிடாதபடி ஒட்டக வண்டி, கூண்டுவண்டி மற்றும் காளை வண்டியின் இருபுறமும் சென்றனர் .

பாபா, பெண்மணிகளுடன் மேற்கொண்ட ஊர்வலம் 'ஷிவ்பூர்' (SHIVPUR) நகரை காலை **11:30** மணிக்கு வந்தடைந்தது. உடன் வந்த இரண்டு தோழர்களும் பாபாவும் பச்சை நிற தலைப்பாகையுடன் வெண் மேலங்கியும், பெண்மணிகள் நீல நிற பருத்தி புடவைகளையும் அணிந்திருந்தனர். முழு பரிவாரங்களுடன் மீண்டும் ஊர்வலம் தொடங்கியபோது, அது ஓர் அற்புதமான காட்சியாக இருந்தது.

நாடோடி (ஜிப்சி) வாழ்க்கை ஆரம்பமானது. காலம் அந்தக் காட்சியைக் கண்டு பெருமிதம் அடைந்தது. வரவிருக்கும் தலைமுறைகளுக்கு விவரிக்கும் நோக்கத்தில் அது ஒவ்வொரு நிகழ்வையும் மனத்திரையில் பதியவைத்தது. படைப்பின் அதிபதியின் இந்த ஊர்வலத்தில் பங்கேற்பதை எதிர்நோக்கி ஏங்கிய தேவதைகள் கண்ணீர் சிந்தின; மனிதர்களைப் போல் உடல் வடிவம் பெற்று அவருடன் ஊர்வலத்தில் பங்கெடுக்கத் துடித்தன!

"காமம், கோபம், பேராசை அனைத்தையும் அடக்குவது போல், ஆண்கள், பெண்கள் மற்றும் விலங்குகள் அணிவகுத்துச் சென்றனர். ஒட்டகத்தின் மணி ஓசையைக் கேட்டு, மனிதனின் இந்த ஆழமான பலவீனங்கள் நடுங்கத் தொடங்கின" என்று காலம் பறைசாற்றியது.

பாபாவின் தங்கை மணி பின்பு நினைவு கூர்ந்தது போல்: "எங்கள் 'புது வாழ்வு' ஒட்டகத்தின் கழுத்தில், ஒரு பாரசீக வெள்ளி மணி இருந்தது... ஒட்டகத்தின் மணியும் அதன் ஓசை குறித்து ஹஃபீஸின் கவிதைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஊர்வலத்தின் முன்னணியில் வலம் வரும் ஒட்டகம்

அணியும் மணி முன்னேற்றத்தின் அடையாளமாகும்... ஒரு பூஞ்சோலையில் நின்று, மீண்டும் பாலைவனத்தில் செல்ல விரும்பாத நாடோடிகளின் கூண்டுவண்டி, 'தொடர்ந்து செல்லுங்கள். இது உங்கள் இலக்கு அல்ல. மேலும் முன்னோக்கிச் செல்லுங்கள்!' என நினைவைத் தூண்டும் விதத்தில் எடுத்துரைத்தது.

இந்த விசித்திரமான பயணிகளின் ஊர்வலத்தை வழிப்போக்கர்கள் தீவிர ஆர்வத்துடன் பார்த்தனர். அவர்கள் தோழர்களிடம் அவர்களின் சாதி, மதம் மற்றும் அவர்கள் எங்குச் செல்கிறார்கள் என வினவினர். கூண்டுவண்டியுடன் ஊர்வலம் ஹரித்வாரை நோக்கிச் செல்கிறது என்று கூறியபோது, அவர்கள் மரியாதையுடன் வணங்கினர். பல ஆண்டுகளுக்குப் பிறகு, முதல் முறையாக, ஹரித்வாரில் கும்பமேளா நடத்தப்படவிருந்தது; மேலும், இந்த ஊர்வலத்தின் இறுதி இலக்கானது, தோழர்களை ஒருவித துறவிகள் மற்றும் பெண்மணிகளை கன்னியாஸ்திரிகள் என்றும் மக்களைச் சிந்திக்கத் தூண்டியது. "அவர்களின் இயலாமையை யார் அறிவர்? அவர்களை யாரால் புரிந்து கொள்ள முடியும்? அவர்களின் இயலாமையே அவர்களுக்கு வலிமை மற்றும் உறுதியின் அமிர்தத்தைப் தனியாகப் பிரித்து வழங்குகிறது என்பதை யார் புரிந்துகொள்வர்? அத்தகைய உதவியற்ற தன்மை, கடவுளை நம்புவதால் வருகிறது; அத்தகைய வலிமை, கடவுளை முழுமையாகச் சார்ந்திருப்பதால் மட்டுமே வருகிறது. அந்த உதவியற்ற தன்மை அதன் உச்சத்தை எட்டும் போது, அது முழுப் பிரபஞ்சத்தையும் தன்னுள் உள்ளடக்கிய ஒரு மனம் நிறைந்த புன்னகையாக மலரும்!"

வெண்குதிரை, பசுக்கள், கன்றுகள் மற்றும் கழுதைகளைக் கட்டுப்படுத்துவது, தொடர்ச்சியான தலைவலியாக இருந்தது. டாக்டர் டான் குதிரையை அதன் கடிவாளத்தால் வழிநடத்தினார்; டாக்டர் கனி, குஸ்தாஜி இருவரும் இரண்டு கழுதைகளின் பொறுப்பைக் கொண்டிருந்தனர், அவை ஒவ்வொரு சில நிமிடங்களுக்கும் முன்னோக்கிச் செல்ல மறுத்தன. டாக்டர் கனி பிடிவாதமான கழுதைகளை முன்னிழுக்க முயன்று சோர்வடைந்தார். இதேபோல, டாக்டர் நீலுவும், அலோபாவும் பசுக்களைக் கையாள்வதில் பெரும் சிரமத்தை சந்தித்தனர், இறுதியில் டாக்டர் நீலு தனது தோள்களில் ஒரு கன்றுக்குட்டியைச் சுமக்க வேண்டியிருந்தது.

ஒருமுறை டாக்டர் கனி கழுதைகளைப் பற்றி முணுமுணுத்துக் கொண்டிருந்த போது, அவரின் இக்கட்டான நிலையைக் கண்டு மகிழ்ந்த ஆதி, "ஆம், அன்புள்ள மருத்துவரே, நீங்கள் எல்லாவிதமான சொற்பொழிவுகளைப் படிக்கவும், தத்துவங்களைப் பற்றி விவாதிக்கவும் விரும்புகிறீர்கள். ஆன்மீகத்தைப் பற்றிப் பேசுவது மகிழ்ச்சி அளிக்கும் அதேவேளையில், அதை

வாழ்வது பெரும் சிரமம்!" என்று கூறிய கருத்தைக் கேட்டு, பாபா அதைப் பாராட்டினார்.

முதல் நாள், காலை **11:30** மணிக்கு, ஊர்வலம், ஷிவ்பூருக்கு அப்பால் இரண்டு மைல் தொலைவில் 'வியாஸ் பாக்' (VYAS BHAG) பகுதியில் அமைந்த ஒரு பள்ளிக்கூடம் மற்றும் தர்மசாலை வளாகத்தை வந்தடைந்தது. பாபா, பெண்மணிகளுடன் ஒரு கட்டிடத்திலும், ஆண் தோழர்கள் ஓலை கூரையும், மண் தரையுடன் கூடிய மற்றொரு செவ்வக வடிவ கட்டிடத்திலும் இருந்தனர். வளாகத்தில் ஒரு கிணறும், விலங்குகளுக்கு உணவளிக்கத் தீவனத் தொட்டியும் இருந்தன. நாத் மற்றும் கரே குடும்பத்தினர் வழங்கிய மதிய உணவை பாபா, அவரது கைகளால் பகிர்ந்தளித்த பிறகு, தோழர்களிடம் பயணத்தைப் பற்றிய அறிக்கையைக் கேட்டார்.

அதைத் தொடர்ந்து பாபா, பாபாதாஸ், எரச் இருவரையும் யாசிப்பதற்காக அனுப்பி வைத்தார். எரச் முதலில் ஒரு வயதான ஏழை பெண்மணியின் குடிசையை அணுகினார், ஆனால் அவரிடம் வழங்க எதுவும் இல்லை - சிறிதளவேனும் அரிசி, மாவு கூட இல்லை என்றாலும், அவர் எரச்சிடம் சற்று காத்திருக்குமாறு வேண்டி, பக்கத்து வீட்டிலிருந்து சிறிதளவு மாவைக் கடனாக வாங்கி, அதை அன்புடன் தானமாக வழங்கினார். இந்த ஏழைப் பெண்மணி எவ்வளவு அதிர்ஷ்டசாலி! இறை-மனிதர் தனது தோழர்களை அந்த ஏழை பெண்மணியின் வீட்டு வாசலில் யாசிக்க அனுப்பியிருந்தார், அவரிடம் எதுவும் இல்லாதபோதும் அந்தப் பெண்மணி எரச்சுக்கு ஏதாவது வழங்கத் தவறவில்லை.

குளிர்கால இரவின் கடுமையான குளிரில், தோழர்கள் திறந்த வெளியில் இருந்தனர். அவர்களிடம் இருந்த அதிகப்படியான ஆடைகள் விற்கப்பட்டதால், புதிதாக வாங்கிய கம்பளி கால்சட்டை இருந்தபோதிலும், அவர்கள் பரிதாபமான நிலையில் இருந்தனர். நான்கு பெண்மணிகளும் கூண்டுவண்டியில் தூங்கினர். காக்கா, முரளி இருவரும் உணவைத் தயார் செய்ய, பெண்டு, டான், நீலு, அலோபா, சதாஷிவ், பைதூல் ஆகியோர் விலங்குகளுக்கு உணவு மற்றும் தண்ணீர் வழங்குவதை கவனித்துக் கொண்டனர்.

கடும் குளிரால், உடன் இருந்தவர்கள் எவரும் தூங்க முடியவில்லை. பெருமளவில் சிரமப்பட்ட டாக்டர் கனி ஒரு திட்டத்தை வகுத்தார்: "இப்போது நாம் வேலைநிறுத்தம் செய்ய வேண்டிய வேளை வந்துவிட்டது! நாளை முதல் நம்மில் எவரும் எந்த வேலையும் செய்யக்கூடாது. நாம் போராட்டத்தில் அமர வேண்டும். நாம் உயிரைத் துறக்க வேண்டியிருக்கும் போது, ஏன் இங்கே இறக்கக்கூடாது என கேள்வி எழுப்பினார். இன்னும் மேலே செல்வதில் என்ன பயன்? இந்தக் குளிரில் எவராலும் வாழ முடியாது." தோழர்கள் டாக்டர் கனிக்கு ஆதரவாக இருப்பதுபோலத் தோன்றியதைக் கண்டு, அவர் பெருமிதம் அடைந்தார். ஆனால் மறுநாள் அதிகாலையில், பாபா தோழர்களை

அணுகியபோது, அவர்கள் கனியை விட்டு வெளியேறி தங்கள் கடமைகளைத் தொடர்ந்தனர். டாக்டர் கனி தனிமையில் முட்டாளைப் போல நின்றுகொண்டிருந்தார்.

டாக்டர் கனியின் வயது மற்றும் உடல் நிலையைக் கருத்தில் கொண்டு, கூண்டுவண்டியின் முன்புறத்தில் காக்கா, பெண்டு ஆகியோரின் அருகில் அமர, பாபா அவரை அனுமதித்தார்.

1949 டிசம்பர் 13 செவ்வாய்க் கிழமை காலை எட்டு மணிக்கு, ஷிவ்பூரிலிருந்து இந்தக் குழு புறப்பட்டது. இப்போது, கழுதைகள் பெண்மணிகளின் கண்காணிப்பில் வைக்கப்பட்டன. பெண்மணிகள் நடந்து செல்லும் வேளையில், சமையல் நெருப்புக்குத் தேவையான சிறிய கிளைகள் மற்றும் குச்சிகளைச் சேகரித்து கழுதைகளின் முதுகில் ஏற்றினர். ஒரு நாள், மெஹரா, மணி, மெஹரு, கோஹெர் ஆகியோர் குச்சிகள் மற்றும் மரக்கிளைகளை சேகரிப்பதில் மும்முரமாக இருந்தபோது, ஒரு காளை வண்டி அவர்கள் அருகில் வந்தது. பிரமித்துப் போன வண்டிக்காரர் திகைப்பில் அவர்களிடம் 'எங்கே போகிறீர்கள்' என்று கேட்டதற்கு, அவர்கள் 'ஹரித்வாருக்குச் செல்கிறோம்' என்று பதிலளித்தனர். மரியாதையுடன், ஓட்டுநர் அவர்களை தனது வண்டியில் அமருமாறு அழைத்தார், ஆனால் மெஹரு, "நாங்கள் ஹரித்வாருக்குப் புனித யாத்திரை செல்கிறோம், எனவே நாங்கள் நடந்தே செல்ல வேண்டும். மன்னிக்கவும், எங்களால் வண்டியில் ஏற முடியாது" என்று பதிலளித்தார்.

வண்டிக்காரர் பணிவுடன், "ஆனால் தயவுசெய்து சிறிது நேரம் அமருங்கள் சகோதரி, உங்கள் பயணத்தின் புனிதமான நோக்கம் எனது வண்டியில் நீங்கள் அமர்வதால் பாதிக்கப்படாது" என்றார்.

அதற்கு மணி, "கால்நடையாகத்தான் புனித யாத்திரை மேற்கொள்ள வேண்டும், வசதியாகச் செல்வது எந்த விதமான யாத்திரையாக இருக்கும்?" என வினவினார்.

எனவே வண்டிக்காரர் அங்கிருந்து ஓட்டிச் சென்றார், ஆனால் சிறிது தூரம் பயணித்த பின்னர், அவர் அங்கேயே நின்றார். இதற்கிடையில், பாபா ஆண் தோழர்களிடமிருந்து திரும்பி வந்து, பெண்மணிகளைக் கூண்டுவண்டியில் அமரச் செய்தார். அவர்கள் இருக்கைகளில் அமர்ந்ததும், மணி, மெஹரு இருவரும் திரைகளை விலக்கி வெளியே எட்டிப் பார்த்தனர். சிறிது நேரத்தில், கூண்டுவண்டி, களைப்பாறிக் கொண்டிருந்த வண்டிக்காரரைக் கடந்து சென்றது. உள்ளே சௌகரியமாக அமர்ந்திருந்த பெண்மணிகளைப் பார்த்ததும், வண்டிக்காரர் மணி, மெஹரு இருவர் மீதும் சீற்றத்தில் அவமதிக்கும் பார்வையை வீசியை வேளையில், இருவரும் வெட்கப்பட்டு முகத்தை மறைக்க முயன்றனர். பாபா அவர்களை ஏன் கூண்டுவண்டியில் அமரச் செய்தார்

என்று அப்போதுதான் புரிந்தது! பாபா திரும்பி வந்து, பெண்மணிகளிடம் மீண்டும் நடைப்பயணத்தைத் தொடரச் சொன்னார். வழக்கம் போல, பாபாவிடம் எதையும் மறைக்க முடியாது என்பது இருவருக்கும் இன்னுமொரு பாடமாக இருந்தது.

குழு, ஏழு மைல்கள் தொடர்ந்து 'பாபத்பூர்' (BABATPUR) கிராமத்தை வந்தடைந்தது. அவர்கள் கிராமத்திற்கு அப்பால் ஒன்றரை மைல் தூரத்தில் அமைந்த மஹாதேவ் கோவில் மற்றும் தர்மசாலா மரத்தோப்பின் கீழ் முகாமிட்டனர். பாபா வேர்க்கடலை மிட்டாயை விநியோகித்து, டாக்டர் கனி, பாபாதாஸ் இருவரையும் யாசிப்பதற்காக அனுப்பிவைத்தார். காக்கா மாலை 5 மணிக்கு தேநீரும், தொடர்ந்து ஆறு மணிக்கு சாதமும், பருப்பும் தயார் செய்ய இருந்தார். காக்காவிற்கு உதவியாக இருந்த முரளி மிகவும் சோர்வாக இருந்ததால், சாய்ந்து கொண்டே வெங்காயத்தை உரித்து, வெட்டிக் கொண்டிருந்ததைக் கண்ட காக்கா எரிச்சலடைந்தார் (அநேகமாக, அவர் அமர்ந்திருந்த போது முரளி ஒரு சிறந்த பணியைச் செய்ய முடியும் என்று அவர் நினைத்திருக்கலாம்), ஆனால் புது வாழ்வின் நிபந்தனைகளின் கீழ் அவரால் எதுவும் விமர்சிக்க முடியவில்லை.

1949 டிசம்பர் இறுதி வரை, அவர்களிடம் உணவுக்குப் போதுமான பொருட்கள் இருந்தபோதிலும், ஒவ்வோர் இடத்தில் நிற்கும் நேரத்தில், பாபா தனது தோழர்களை உணவுக்காக யாசிக்க அனுப்பி வைத்தார். பாபா, இவ்வாறு வெளிப்படுத்தினார்: "**ஜான்பூரில்** (JAUNPUR) **தங்குவதற்கு ஒரு நல்ல இடம் கிடைத்தால், நாம், நான்கு அல்லது ஐந்து நாட்கள் அங்கேயே இருப்போம்; புது வாழ்வின் நிபந்தனைகள் மற்றும் உறுதிமொழிகளுக்குள் நல்ல உணவை வழங்குவதற்கான திட்டத்தைப் பற்றி நான் யோசிப்பேன்.**"

டிசம்பர் 14 அன்று, அனைவரும் அதிகாலை 3:30 மணிக்கு, நடு இரவின் இருளில், கடும் குளிருக்கு மத்தியில் அனைவரும் எழுந்தனர். பெண்டு, டான், சதாஷிவ், பைதூல் ஆகியோர் விலங்குகளுக்கு உணவளித்து, தேநீர் மற்றும் காலை சிற்றுண்டியை முடித்துவிட்டு, 7:30 மணிக்கு பாபத்பூரிலிருந்து புறப்பட்டனர். இந்த முறை பாபாவும் பெண்மணிகளும் ஊர்வலத்தின் பின்னால் சென்றனர்.

வெண்குதிரை, பசுக்கள், கழுதைகள் அனைத்தும், தொடர்ந்து பல பிரச்சினைகளுக்குக் காரணமாக இருந்ததால், ஆதி, பாபாதாஸ் இருவரையும், பாபா பேருந்தில் ஜான்பூருக்கு அனுப்பி, அங்கிருந்து ஹரித்வாருக்கு சரக்கு ரயிலில் விலங்குகளை அனுப்ப ஏற்பாடு செய்தார். மேலும், அவர்கள் ஜான்பூரில் தங்குவதற்குப் பொருத்தமான இடத்தையும் கண்டுபிடிக்க வேண்டியிருந்தது.

அவர்கள் எங்குச் சென்றாலும், பாதையைக் கடந்து செல்லும் மக்களுக்கு, கூண்டுவண்டியுடன் ஊர்வலம் ஒரு வினோதமான காட்சியாக இருந்தது. ஒரு கிராமத்திற்கு அருகில், கிணற்றில் தண்ணீர் எடுத்துக் கொண்டிருந்த

பெண்மணிகளின் கூட்டம் ஒன்று, கூண்டுவண்டியைக் கண்டதும், பெண்மணிகளை அணுகி, அவர்கள் எங்குச் செல்கிறார்கள் என்று உற்சாகத்துடன் வினவினர். ஹரித்வாருக்குச் செல்ல இருப்பதை அறிந்த கிராமத்து பெண்மணிகள், "நீங்கள் இத்தனை தூரம் நடந்து செல்கிறீர்களா?" என்று கேட்டதற்கு, மணி, அவர்கள் அதை விரும்பி செய்வதாக பதிலளித்தார். இதைக் கேட்ட கிராமத்து மக்கள் தங்களுக்குத் தேவையான ஒரு மூட்டை துணிகளை அடுக்கிக்கொண்டு பெண்மணிகளுக்குப் பின்னே விரைந்தனர். இந்த சம்பவத்திற்குப் பிறகு, பாபா நான்கு பெண்மணிகளையும் கூண்டுவண்டிக்குள் கண்ணுக்குத் தெரியாதபடி அமருமாறு கட்டளையிட்டார்.

அன்று காலையில் ஆரம்பித்த பதினொரு மைல் நடைப்பயணம் அவர்களை மதியம் இரண்டு மணியளவில் 'ரெஹாட்டி' (REHATI) கிராமத்திற்கு கொண்டு வந்தது; அங்கு அவர்கள் ஒரு மாமரத் தோட்டத்தில் களைப்பாறினர். காக்கா உணவு தயார் செய்த நேரத்தில் டாக்டர் கனியும் குஸ்தாஜியும் உணவுக்காக யாசிக்கச் சென்றனர். உள்ளூர் கிராமவாசிகள் திரள்திரளாகக் கூடி, ஹரித்வாருக்கு நடந்தே செல்லும் பெண்மணிகளை தரிசனம் செய்ய வந்ததாகத் தெரிவித்தனர். சாரநாத்தில், பாபா குறிப்பிட்டார், "**பயணத்தின் போது, நாம் கௌரவிக்கப்படுவோம், அவமதிக்கப்படுவோம், ஆனால் இரண்டிலும் நாம் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும்**." ரெஹாட்டி கிராமத்தில் நான்கு பெண்மணிகளும் மிகுந்த மரியாதைக்குரியர்வகளாக நடத்தப்பட்டதால், பாபா கூறியது உண்மையாகி வருவதாகத் தோன்றியது.

வழியில் ஓர் இடத்தில் நின்றபோது, மணி, பாபாவின் கைசைகைகளை விளக்கிக்கொண்டிருந்த வேளையில், அவர் கிராமத்துப் பெண்மணிகளில் ஒருவரிடம் அவர் எப்படி உணர்கிறார் என வினவினார். அந்தப் பெண்மணி அவரது கை சைகைகளைப் பார்த்து, பாபா முன்னிலையில் நடனமாட வேண்டும் என்று உணர்ந்ததாகவும், ஆனால் உடலில் பல வலிகளும், வேதனைகளும் இருந்ததால் அவருக்கு அது சாத்தியமில்லை என்றும் கூறினார்.

பாபா, பைதூலிடமிருந்து சில ஹோமியோபதி மருந்துகளை எடுத்து வந்து அவருக்கு வழங்கினார். சின்னஞ்சிறு கோலிகளைப் பார்த்து, "எனக்கு இருக்கும் இத்தனை பெரிய வலியைப் போக்க, இந்தச் சிறிய கோலிகள் எப்படி உதவு முடியும்?" என்று கூறி சிரித்தார். பாபா அவரிடம் சிலவற்றைக் கொடுத்து, அவற்றை விழுங்கக் கூறினார். அவர் அவ்வாறே செய்த அடுத்த சில நிமிடங்களில் பாபாவிற்கு முன்னால் சில நளினமான அசைவுகளை அவரால் செய்யமுடிந்தது.

மீண்டும் தோழர்கள் அதிகாலை **3:00** மணிக்கு வெகு சீக்கிரம் எழுந்தனர். **1949** டிசம்பர் **15**, ஆனால் புறப்படுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் நிறைவுறுவதற்குள் ஏழு மணியாகிவிட்டது. ரெஹாட்டியை விட்டு வெளியேறி,

அவர்கள் ஒரு கிராமத்திற்கு அருகே, மரங்களுக்குக் கீழே நின்று ஓய்வெடுத்து, நான்கு மைல்களைக் கடந்து சென்றனர். இங்கு, கிராமத்துக் குழந்தைகள் பாபாவைச் சுற்றி ஒன்று திரண்டு, சில உடற்பயிற்சிகளின் கண்கொள்ளா காட்சிகளை வழங்கினர். குழு சென்றடையும் நேரத்தை மதிப்பிட்டு, ஏற்கனவே முன்னால் சென்ற ஆதி, பாபாதாஸ் ஆகியோருக்குத் தெரிவிக்க, டாக்டர் கனி அனுப்பப்பட்டார். சிறிது நேர ஓய்வுக்குப் பிறகு, மதியம் ஒரு மணியளவில், அவர்கள் மீண்டும் ஒரு நதிக்கரை அருகில் களைப்பாறினர். காக்கா அனைவருக்கும் தேநீர் தயார் செய்தார். அவ்வேளையில் எப்படியோ கலவரமடைந்த வெண் குதிரையைக் கட்டுக்குள் கொண்டுவர டாக்டர் டான் மிகவும் சிரமப்பட்டார்.

பல மைல்கள் நடந்து, மாலை நான்கு மணிக்கு ஜான்பூரை வந்தடைந்த குழு, நேராக ஊருக்குள் சென்றது, ஆனால் முன்கூட்டியே அனுப்பப்பட்ட மூன்று தோழர்களில் எவரையும் கண்டுகொள்ள முடியவில்லை. இதர இடங்களைப் போலவே, ஜான்பூர் மக்களுக்கு, கூண்டுவண்டி ஒரு விசித்திரமான காட்சியாக இருந்தது; மேலும் ஆதி, டாக்டர் கனி, பாபாதாஸ் மூவரும் ஒரு டோங்காவில் வந்தபோது திரள் திரளாக கூட்டம் வரத் தொடங்கியது. தோழர்கள் தேர்ந்தெடுத்த முதல் இடத்தை பாபா நிராகரித்ததும், டாக்டர் கனி அவரையும் முழுக் குழுவையும் இரண்டு மைல் தொலைவில் அமைந்த இன்னுமோர் இடத்திற்கு அழைத்துச் சென்றார். அனைவரும் அங்குச் சென்றடைவதற்குள் பொழுது சாய்ந்து இருளாகிவிட்டது; பாபா அந்த இடத்திற்கு ஒப்புதல் அளித்து, அடுத்த ஐந்து நாட்களுக்கு அவர்கள் அங்கேயே தங்கியிருந்தனர்.

பாபத்பூரிலிருந்து புறப்படுவதற்கு முன்னர், ஆதி, பாபாதாஸ் இருவரும் தங்குவதற்கு இடம் தேடும் வேளையில், உணவுக்காக யாசிக்குமாறு பாபா அறிவுறுத்தினார். அவர்கள் ஜான்பூர் முழுவதும் அலைந்து திரிந்தும் புது வாழ்வு நிபந்தனைகளுக்கு ஏற்ற பொருத்தமான தங்குமிடத்தைக் கண்டுகொள்ள முடியவில்லை. களைத்துப்போய் அடுத்த கட்டத்தை முடிவு செய்ய, ஓரிடத்தில் அமர்ந்தனர். பாபாதாஸின் வாதக்கோளாறு அவரை கிட்டத்தட்ட செயலிழக்கச் செய்தது; ஆதி சிறிது தரமான உணவை விரும்பி புகார் செய்தார்.

இருவரும் கலந்து ஆலோசித்த பின்னர், ஆதி, டோங்கா ஒன்றை வாடகைக்கு எடுத்து, இருவரும் ஓர் உணவகத்திற்குச் சென்றனர். தங்கும் இடத்திற்காக ஏற்பாடு செய்ய வழங்கிய பணத்தில், ஐம்பது பைசா கட்டணத்திற்கு பதிலாக பத்து ரூபாயை டோங்கா ஓட்டுநரிடம் செலுத்தி, ஆதி, “தம்பி, எங்களுக்குத் தானமாக உணவு வழங்குங்கள்!” என்று கெஞ்சினார்.

டோங்கா ஓட்டுநர் தலையை ஒரு பக்கமாக சாய்த்து, குழப்பமான முகபாவத்துடன், “ஐயா, நீங்கள் என்ன சொன்னீர்கள்?” எனக் கேட்டார்.

“மேலும், என்னிடம் எதுவும் கேட்காதீர்கள்” என்றார் ஆதி. “எங்களுக்கு உணவு தானமாக கொடுக்காவிட்டால் நாங்கள் பட்டினி கிடப்போம்! எங்களுடன் உணவகத்திற்கு வந்து, உணவை வாங்கி, உங்களிடமிருந்து எங்களுக்குத் தானமாக அதை வழங்குவதாகச் சொல்லுங்கள். பிறகு, நாங்கள் அதை உண்ணுவோம்.” அந்த மனிதரிடம் இப்படி ஒரு வினோதமான கோரிக்கையை இதுவரை எவரும் முன்வைத்ததில்லை. அவர் (அகோர பசியில் இருந்த) ஆதியை, திகைப்புடன் பார்த்தார். பின்னர், அவர் கேட்டுக் கொண்டபடியே, டோங்கா கட்டணத்திற்காக ஆதி வழங்கிய பணத்திலிருந்து உணவுக்குச் செலுத்தினார்.

உணவு உண்ணும் போது, டோங்கா ஓட்டுநருடன் பேசிக் கொண்டிருந்த அந்த நேரத்தில், ’கை பாக்’ (KAI BHAG) என்ற பயன்பாட்டில் இல்லாத மனை குறித்து அவர்களுக்குத் தகவல் கிடைத்தது. உரிமையாளரின் முகவரியைப் பெற்றுக்கொண்டு ஆதி அவரைப் பார்க்கச் சென்றார். அவர்களை அங்கேயே தங்க வைக்க உரிமையாளர் ஒப்புக்கொண்டதும், ஒரு பணியாளுடன் ஆதி அந்த இடத்தைப் பார்வையிடச் சென்றார். சுவருக்கு வெளியிலிருந்து பார்த்த ஆதி, பாபா விதித்த நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக அது அமையும் என்று எண்ணி அதற்கு ஒப்புதல் அளித்தார். கதவு பூட்டப்பட்டிருந்தது, ஆதி பணியாளிடம் பூட்டைத் திறக்கக் கூறியபோது, சாவிகள் தவறி விட்டதாகக் கூறிய அவர், அதை உடைக்குமாறு ஆதியிடம் கூறினார். ஆதி முதலில் தயங்கினாலும், பூட்டு ஏற்கனவே உடைக்கப்பட்டு இருந்ததை அவர் கண்டார். பின்னர் உள்ளே சென்று தோட்டத்தை பார்வையிட்டார். சில உடைந்த கட்டிடங்களும் மேடையும் இருந்தன. தோட்டம் மிகவும் விசாலமானது, ஆதிக்கு அது ரொம்பவும் பிடித்திருந்தது. இருப்பினும், அவர் வளாகத்தை ஆய்வு செய்து கொண்டிருந்த வேளையில், வேறொரு நபர் இரண்டு காவல்துறை அதிகாரிகளுடன் அங்கு வந்தார்.

ஆதி வெளியே வந்ததும் காவல்துறை அதிகாரிகளில் ஒருவர், “ஏன் பூட்டை உடைத்தீர்கள்?” என்று கேட்க, அதிர்ந்து போன ஆதி, விசாரித்ததில் அந்த சொத்து ஏகப்பட்ட சட்ட தகராறில் இருப்பது தெரிய வந்தது.

அவரை அங்கே தங்க அனுமதித்தவரும், ஆதி வீட்டு உரிமையாளர் என்று நினைத்தவரும், காவல்துறை அதிகாரிகளுடன் வந்த இன்னொருவரும், அந்த மனையின் உரிமை கோரி நீதிமன்றத்தில் ஒருவரையொருவர் வழக்குத் தொடர்ந்திருந்தனர்.

காவல்துறையினருடன் வந்திருந்தவரிடம் அவர்களை சில நாட்கள் அங்கே தங்க அனுமதிக்குமாறு கேட்டுக் கொண்ட ஆதி, குழுவின் செயல்களைச் சுருக்கமாக விளக்கினார். ஆதியின் வேண்டுகோளுக்குப் பின்னர், அந்த மனிதர் தயக்கத்துடன் ஒப்புக்கொண்டார்.

முழுக் குழுவும் 'கை பாக்'கில் தங்கியது, ஆனால் பாபா, பெண்மணிகளை, கட்டிடங்களைப் பயன்படுத்த அனுமதிக்கவில்லை. ஆண் தோழர்கள் திறந்த மைதானத்தில் வெளியே தங்கினர், பெண்மணிகள் கூண்டுவண்டியில் தூங்கி, பகலில் அருகிலிருந்த ஒரு மேடையை ஆக்கிரமித்தனர். அந்த இடம் அசுத்தமாக இருந்ததால், பெண்மணிகள் அதை நன்றாக சுத்தம் செய்தனர்.

ஜான்பூரை வந்துசேர, பாபாவும் தோழர்களும் நான்கு நாட்களில் 38 மைல்கள் கடுமையான குளிரில் நடக்க வேண்டியிருந்தது. தங்குமிடம் இல்லாமல், அவர்கள் அந்த வானிலையில் திறந்த வெளியில் தூங்கினர், மேலும் உணவும் போதுமானதாக இல்லை. ஒவ்வோர் இடத்திலும் விலங்குகளைப் பராமரிக்க வேண்டும் - தண்ணீர், தீவனம் கொண்டு வர, உணவளிக்க மற்றும் வசதியான இடங்களில் அவற்றைப் பாதுகாப்பாகக் கட்டிப்போட போன்ற அனைத்தையும் - மேலும் வண்டிகளில் சிறு சிறு பழுதுபார்ப்பு, உணவுக்காக யாசித்தல், சமையல், பாத்திர பண்டங்களை சுத்தம் செய்தல், தண்ணீர் எடுத்தல், உடைகளைத் துவைத்தல் - இது போன்ற மற்றும் பிற சிறிய விஷயங்களைக் கண்காணித்தது அனைத்தும் தோழர்களின் சோர்வை அதிகரித்தது. அத்துடன், கடும் குளிரான காலநிலை அவர்களைப் போதுமான ஓய்வெடுக்க அனுமதிக்காமல் தடுத்தது.

ஆகவே, டிசம்பர் 16 அன்று பாபாவின் இந்த வார்த்தைகளை தோழர்கள் வாழ்த்தினார்கள்: **"ஒட்டகம், ஒட்டக வண்டி, இரண்டு பசுக்கள் மற்றும் கன்றுகள் போன்றவை சிறந்த விலைக்கு விற்கப்பட வேண்டும். டான், எரச், பெண்டு மூவரும் ரயில் நிலையத்திற்குச் சென்று, இரண்டு கழுதைகள், வெண் குதிரை, காளை மாடுகள் மற்றும் வண்டிகளை, சரக்கு ரயிலில் ஹரித்வாருக்கு அனுப்புவது பற்றி விசாரித்து வரவேண்டும்."**

பாபா மாடுகளைப் பாதி விலைக்கு வாங்கியதாலும், இளம் கன்றுகளின் காரணமாகத் தோழர்களின் வேகம் குறைந்ததாலும் அவற்றை விற்க முடிவு செய்தார். ஒட்டகமும் கனத்த அடியுடன் மெல்ல மெல்ல நடந்தது, ஒட்டக வண்டியும் அடிக்கடி பழுதடைந்தது. கழுதைகள் தங்கள் முதுகில் சுமையை அதிகப்படுத்தும் அடுத்த கணமே வேக நடையுடன் முன்னேறிச் சென்றதை பெண்மணிகள் கண்டு கொண்டதால், அவற்றை உடன் வைத்திருக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. வெண் குதிரை தானமாக அடையப்பெற்றதால் விற்க முடியவில்லை.

ஜான்பூரில் அவர்கள் தங்கியிருந்த நாட்களில், டாக்டர் கனி ஒவ்வொரு நாளும் வெவ்வேறு தோழருடன் உணவுக்காக யாசிக்கும்படிக் கட்டளையிடப்பட்டார். ஆதி மதிய உணவாக காய்கறி, சப்பாத்தி அல்லது பூரி, பச்சை தக்காளி மற்றும் முள்ளங்கி (இந்த பகுதியில் பிரபலமானது) கொண்டு வர

வேண்டும். காக்கா, இரவு உணவுக்காக அரிசி மற்றும் பருப்பு தயார் செய்யவேண்டும்.

1949 டிசம்பர் 18 ஞாயிற்றுக்கிழமை காலை, பாபா தோழர்களிடம் கூறினார்:

இதுவரை எதிர்கொண்ட உண்மை சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, நான் ஒரு திட்டத்தை முடிவு செய்யப் போகிறேன், அதை ஒருமுறை ஏற்றுக்கொண்டால் முடிவில்லாத முடிவு வரை மாற்றப்படவோ அல்லது சமரசம் செய்யவோ கூடாது.

நான் இன்று காலை எரச் மற்றும் கனியுடன் நிபந்தனைகள் அடங்கிய சுற்றறிக்கையைப் படித்தேன். இந்தத் திட்டத்தை இறுதியானது என்று நான் முடிவெடுப்பதற்கு முன்னர், உங்களிடமிருந்து ஒரு விஷயத்தை நான் நிச்சயமாகத் தெரிந்து கொள்ள வேண்டும். இந்தத் திட்டம் யாருக்கும் தெரியாது; எரச்சிற்கு மட்டுமே அது பற்றிய ஒரு சிறிய குறிப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

நான் சொல்வதை கவனமாகக் கேளுங்கள். உங்கள் மீது எந்தத் தவறும் இல்லாமல் நான் உங்களைத் திருப்பி அனுப்பினால், உங்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக ரூ 1,000 மெஹர்ஜியிடம் கொடுத்து வைக்கப்பட்டுள்ளது உங்கள் அனைவருக்கும் தெரியும். மேலும், அவரிடம் கூடுதலாக ரூ 10,000 உள்ளது; உங்களில் எவரேனும் தவறிழைக்காமல் அனுப்பப்பட்டால், அதிலிருந்து தலா ரூ 100 பயணச் செலவாகத் தரப்படும். ஆனால் உங்களில் எவரேனும் வேண்டுமென்றே குறிப்பிட்ட குற்றத்திற்காக வெளியேற வேண்டியது இருந்தால், அவர் ரூ 1,000 மற்றும் ரூ 100 பயணச் செலவையும் பெறமாட்டார்.

'இல்லை குழு' உறுப்பினர்களுக்கும், 'ஆம்' அல்லது 'இல்லை' என்று பதிலளிக்கக் கேட்கப்படாதவர்களுக்கும் (அவர்களுக்கு நான் வழங்குவதாக) கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளிலிருந்து ஓரளவு என்னை விடுவிக்கும் நோக்கத்தில் குறிப்பிட்ட தொகைகள் வழங்கப்பட்டுள்ளன. இயற்கையாகவே, உங்களில் எவரையேனும் நான் திருப்பி அனுப்பினால், நான் உங்களுக்காக ஏதாவது செய்ய வேண்டும். உங்கள் ஒவ்வொருவருக்கும் (அவசர பராமரிப்புக்காக) ரூ 1,000 ஒதுக்கி என்னால் முடிந்த அனைத்தையும் செய்துள்ளேன். தற்போதைய சூழ்நிலையில் என்னால் செய்ய முடிந்த மிகச் சிறந்த விஷயம் இதுதான்.

நான் சொன்னது போல், உங்களில் எவரேனும் உங்கள் மீது எந்த தவறும் இல்லாத வேளையில் திருப்பி அனுப்பப்பட்டால், அவருக்கு ரூ 1,000 வழங்கப்படும். இப்போது, திட்டத்தை நிறைவுசெய்யவும், நிபந்தனைகளையும் எனது உறுதிமொழியையும் 100 சதவிகிதம் அப்படியே பாதுகாக்கவும், மேலும்

உதவியற்ற புது வாழ்வை, தைரியமாகவும் வலுவாகவும் எதிர்கொள்ளும் விதத்தில் நம் மனநிலையை சிறப்பாக இருக்கச் செய்யவும், நமக்கு சிறந்த உணவு வேண்டும். ஒரு புலியின் தாடைகளைக் கடந்து செல்லவேண்டும் என்றால், நாம் தைரியத்துடனும் உற்சாகத்துடனும் அதைச் செய்ய வேண்டும், ஆடுகளைப் போல, பயத்தில் கத்திக் கதறி அல்ல.

உங்களின் பங்கான 1,000 ரூபாயை உங்களில் யார் எனக்குத் தரத் தயாராக இருக்கிறார்கள் என்பதை இப்போது நான் அறிய விரும்புகிறேன். நீங்கள் இன்னும் 'தவறிழைக்காதவர்களாக' இருப்பதால், நிபந்தனைகளையும் எனது உறுதிமொழியையும் பாதிக்காமல், திட்டத்தை நிறைவேற்ற உங்களிடமிருந்து பணத்தை நான் ஏற்க முடியும். தோழர்களுக்குச் சொந்தமான இந்தப் பணம் மட்டுமே புது வாழ்வின் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்தப்படும். நான் உங்களில் எவரையேனும் திருப்பி அனுப்பினால், நீங்கள் ஏற்கனவே உங்களுக்காக ரூ 1,000 பெற்றுவிட்டீர்கள் என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும், அதே வேளையில் அந்தத் தொகை 'இல்லை குழு' உறுப்பினர்களுக்கும், பிற நபர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படுபம். தவறிழைக்காத தோழர் ஒருவரை அனுப்பினாலும் பயணத்திற்கான ரூ 100 மிஞ்சும். இதற்கெல்லாம் அர்த்தம் என்னவெனில், உங்களில் எவரும், உங்கள் தோழர்களின் புது வாழ்வுக்காக, உங்கள் ரூ 1,000 தொகையை விட்டுக்கொடுத்த பின்னர், உங்களிடம் ஒரு நயாபைசா கூட இல்லாமல், உலக வாழ்க்கையை எதிர்கொள்ளும் வாய்ப்பில் ஏமாந்துவிட்டதாகக் கருதக்கூடாது.

பின்வரும் மூன்று வகைகளில் ஒன்றைத் தீர்மானிக்கவும், உங்களை சீரமைக்கவும் நான் இப்போது உங்களிடம் கேட்டுக்கொள்கிறேன்:

- முதலாவது: புது வாழ்வுக்கு ரூ 1,000 பங்களிக்க விரும்புபவர்.
- இரண்டாவது: தன்னால் பங்களிக்க முடியாது என்று நினைப்பவர்.
- மூன்றாவது: இந்தத் தொகையைப் பாதுகாக்க விரும்பும் ஒருவர், இன்று 'தவறிழைக்காத' தோழராகத் திரும்பிச் செல்லலாம்.

இரண்டாவது வகையைச் சார்ந்தவர்கள், தோழர்களிடையே குறைந்தபட்ச அந்தஸ்தைப் பெற்றவர் என்று குறைவாக நினைக்க முடியாது, உணரவும் கூடாது. அவரை நடத்தும் முறையில் எந்த பாகுபாடும் இருக்கக்கூடாது. ஒருவர் அந்தத் தொகையைக் கொடுத்தாலும் கூட, உடல்நலம், விபத்துகள் அல்லது இடையூறுகள் போன்ற காரணங்களுக்காக, அவர் மீது எந்தத் தவறும் இல்லாமல் நான் அவரை அனுப்பிவிடுவேன். இந்தப் புது வாழ்வு உங்கள் அனைவருக்கும் ஒரு சித்திரவதையாக இருக்கக்கூடாது என்பதற்காக, இந்தத் திட்டங்களை வகுத்துள்ளேன். துன்பம்

நிச்சயமாக இருக்கும் என்றாலும், அது இன்பகரமான துன்பமாக இருக்க வேண்டும்.

இந்தத் திட்டம் நிறைவேறினால், உண்மையிலே எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும். இந்தப் புது வாழ்வின் முன்நிபந்தனையான மனநிலையைத் தக்கவைத்து, முகமலர்ச்சியுடன் இருக்க நீங்கள் அயராமல் உழைத்து வருவதை நான் காண்கிறேன். இதையெல்லாம் நான் பாராட்டுகிறேன். எவ்வாறாயினும், ஜனவரி 1ஆம் தேதிக்குப் பிறகு, புது வாழ்வின் மங்கலான சித்திரத்தில் நான் பார்ப்பதை ஒப்பிடுகையில் இந்தக் கஷ்டங்கள் ஒன்றும் இல்லை.

நான் 100 சதவிகிதம் சுதந்திரமாக இருந்தாலும், நான் இன்னும் சுதந்திரமாக உணரவில்லை. உணவில்லாத நிலை நம்மையெல்லாம் கோழைகளாக்கும் என்றும் நான் உணர்கிறேன். டிசம்பர் 31ஆம் நாள் தானாகவே முடிவடையும் உதவிக் காலம், நிபந்தனைகள் மற்றும் எனது உறுதிமொழியை பாதிக்காமல் இதுவரை மாற்றங்களை அனுமதித்துள்ளது. ஜனவரி 1ஆம் தேதிக்குப் பிறகு, நான் முற்றிலும் சுதந்திரமாக இருப்பேன்.

மூன்று மாற்று வழிகளில் ஒன்றைத் தேர்ந்தெடுக்குமாறு பாபா, தோழர்களிடம் கேட்டுக் கொண்டார், மேலும் அனைவரும் தங்கள் தனிப்பட்ட தொகையை அவருக்கு வழங்க முழு மனதுடன் ஒப்புக்கொண்டனர். அவர்கள் எடுத்த முடிவில் பாபா மிகவும் மகிழ்ச்சியடைந்தார். கைகளையும் முகத்தையும் கழுவிவிட்டு ஒவ்வொருவராக அவர் முன்னால் நிற்குமாறு ஆண் தோழர்களுக்கு அறிவுறுத்தினார். பாபா, தனது கைகளைக் கழுவி, மேலும் ஒவ்வொரு தோழரின் கைகளிலும் சிறிது தண்ணீரை ஊற்றி, பின்னர் அவர்களை ஒரு வரிசையில் நிற்க வைத்து, கீழ்வரும் பிரார்த்தனையை உரத்த குரலில் மீண்டும் மீண்டும் மொழியுமாறு கனிக்கு அறிவுறுத்தினார்:

கடவுளின் முன்னிலையில், கடவுளை நமது சாட்சியாகக் கொண்டு, இந்தப் புது வாழ்வு தோழர்களின் பயன்பாட்டிற்காக, நாங்கள் விரும்பி, முழு மனதுடன் ரூ 1,000 வழங்கியுள்ளோம். கடவுள் நமது புது வாழ்வை வெற்றியடையச் செய்யட்டும்.

ஒவ்வொருவரும் தலா ரூ 1,000 தியாகம் செய்ததால், தோழர்களிடம் இப்போது அவர்களின் பெயரில் பணம் எதுவும் இல்லை. பாபா, தோழர்களுடன் ஜான்பூர் சென்றடைந்ததும், அவர் கூறியது போல, புது வாழ்வு நிபந்தனைகளுக்குள் இணங்க, சிறப்பான உணவை உண்ணுவது குறித்து அவர் விவாதிக்கத் தொடங்கினார்.

இப்போது நமது கைவசம் வேண்டியன இருப்பதால், வழியில் உணவு வாங்கவும், உணவுக்காக யாசிக்கவும் செய்யலாம். யாசித்து நாம் அடையப் பெறும் சமைக்காத, இயற்கை நிலையிலுள்ள அனைத்து பொருட்களையும்

ஜனவரி 1ஆம் தேதிக்குப் பிறகு பயன்படுத்துவோம். ஜனவரி 1ஆம் தேதிக்குப் பிறகு, புது வாழ்வில் எழும் பிரச்சினைகளான புது வாழ்வு கவிதையை மொழிதல், யாசித்தல், லங்கோட்டி அணிதல் போன்றவற்றை சிந்தித்துப் பார்ப்பதற்கும் என்னைப் பொறுத்தவரையில் முழு சுதந்திரத்துடன் இருக்க விரும்புகிறேன். இந்தக் காரணத்திற்காக, நீங்கள் உணவுப் பிரச்சினையையும், பயணத்தின் முறையையும் - நடந்து அல்லது ரயிலில் - நீங்கள் விரும்பும் விதத்தில் கவனித்துக் கொண்டால் நான் மகிழ்ச்சியடைவேன்.

உங்கள் நிர்வாகத்தில் நான் தலையிட மாட்டேன் என்று உறுதியளிக்கிறேன். நான் பொதுவான வழிமுறைகளை மட்டுமே வழங்குகிறேன். விவரங்களை நீங்கள் பார்த்துக்கொள்ள வேண்டும். நீங்கள் சிறந்ததாகக் கருதும் விதத்தில் உணவு ஏற்பாடுகளைச் செய்வதற்கு நான் உங்களுக்கு முழு சுதந்திரம் தருகிறேன் (நீங்கள் விரும்பும் உணவை உண்ணுங்கள்). நீங்கள் வழங்கிய ரூ 15,000 (மொத்த தொகை) சுமார் ஆறு மாதங்களுக்கு நீடிக்கும் என்பது என் யூகம். நமது புது வாழ்வில் இந்தப் பகுதியை கவனித்துக்கொள்வதில் நான் கவலைப்படக்கூடாது என்று நினைக்கிறேன், இருந்தாலும், உதவிக்கான வாக்குறுதியளிக்கப்பட்ட காலம் டிசம்பர் 31 வரை உள்ளது.

ஒட்டக வண்டி, ஒட்டகம் மற்றும் பசுக்களை விற்கவும், ஆனால் கழுதைகள் மற்றும் குதிரைகளை நம் கைவசம் வைத்துக்கொள்ளவும் வேண்டும். பொருட்களை எடுத்துச் செல்ல வேறு சில வழிகளைக் கண்டுகொள்ள வேண்டும்.

ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு ரசனைகளும் விருப்பங்களும் இருப்பதால், ஒவ்வொருவரையும் திருப்திப்படுத்துவது சாத்தியமற்றது என்பதை அவர்கள் அறிந்திருந்தாலும், உணவுப் பிரச்சினையைச் சமாளிக்க எவரும் தயாராக இல்லை. பாபாவின் கட்டளை மேலோங்கி நிற்கும்போது மட்டுமே இது சாத்தியமானது; ருசி, ரசனையில் எந்த வேறுபாடுமின்றி அனைவரும், அவரவருக்கு முன் வைக்கப்பட்டதை உண்டனர். சமையல் பொறுப்பை எவரும் ஏற்றுக்கொள்ளாததற்கு இன்னுமொரு காரணமும் இருந்தது. பாபா, இது விஷயத்தில் தலையிடப் போவதில்லை என்று கூறியிருந்தாலும், அவர் இடையிடையே குறுக்கிட மாட்டார் என்பது நம்பகமுடையதாக இல்லை. அவர் அதை நேரடியாகச் செய்யாமல் இருக்கலாம், ஆனால் தோழர்களிடையே முரண்பாட்டை ஏற்படுத்துவதன் மூலம், அவர் தனது பண்டைய பழக்கத்தைக் கையிலெடுத்து மறைமுகமாக அவ்வாறு செய்ய வேண்டியிருந்தது.

தனது தோழர்களின் சிந்தனைப் போக்கை கவனித்த பாபா, கபடமற்ற முறையில் அவர்களை சமாதானப்படுத்தினார்: **"நான் இந்த யோசனையைக் கடைப்பிடிப்பதில் தீவிரமாக இருக்கிறேன் என்று சொன்னால் என்னை**

நம்புங்கள். இந்த உணவுப் பிரச்சினையை நீங்கள் சமாளித்தால், எனது தலையிலிருந்து ஒரு பெரிய சுமை நீங்கிவிடும். இந்தப் பிரச்சினையை உங்களுக்குள்ளே தீர்த்துக் கொண்டால் மிகவும் நிம்மதியாக இருக்கும். உங்களுக்கு விருப்பமான உணவை நீங்கள் ஏற்பாடு செய்யலாம், அதனால் உண்ணும் நேரம் போன்றவற்றைப் பற்றி நான் எதுவும் சொல்ல மாட்டேன்.

"நமது பயண நேரம் அல்லது முறை பற்றியும் நான் எதுவும் சொல்ல மாட்டேன்.

"கால்நடையாகவோ அல்லது ரயிலில் செல்வதை நீங்கள் முடிவு செய்யலாம். எல்லாவற்றையும் உங்களிடம் விட்டு விடுகிறேன். எனவே, உங்களுக்கு ஏன் இந்தத் தயக்கம்?"

ஆதி, பெண்டு, எரச், டான், சதாஷிவ் ஆகியோரை பாபா கலந்தாலோசித்தார், ஆனால் ஒவ்வொரு தோழரும் மறுத்துவிட்டனர், ஏனெனில் இந்த அப்பாவித் தோற்றம் கொண்ட சுதந்திரம் உண்மையில் கழுத்தை இறுக்கும் கயிறாக மாறும் என்று அவர்கள் திடமாக நம்பினர். உணவுக்காக யாசிக்கும் தற்போதைய ஏற்பாட்டை பாபா தொடர வேண்டும் என்று அவர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

பாபா கனியிடம், **"இப்போது நீங்கள் ஏன் முன்வரக்கூடாது? நீங்களும் ஆதியும் உணவில் நீண்டகாலமாக அதிருப்தியுடன் இருக்கிறீர்கள். இது உங்களுக்கான ஒரு வாய்ப்பு. நீங்கள் ஏன் அதைப் பயன்படுத்தக்கூடாது?"**

"ஒவ்வொரு தோழரின் ஒத்துழைப்பும் எனக்கு இருந்தால், நான் அதை ஏற்கத் தயாராக இருக்கிறேன்," டாக்டர் கனி பதிலளித்தார்.

எரச் உடனே, "இது பாபாவைத் திருப்திப்படுத்துவதானால், நான் 100 சதவீதம் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறேன், ஆனால் நான் மேற்பார்வையாளராகவோ அல்லது மேலாளராகவோ இருக்க விரும்பவில்லை."

ஒருவர் கூட மேலாளராக இருக்கத் தயாராக இல்லை, ஆனால் சிலர் டாக்டர் கனியை மேலாளராக நியமித்தால், அவருக்கு முழு ஒத்துழைப்பையும் வழங்குவோம் என்று உறுதியளித்தனர். எனவே பாபா வாக்கெடுப்புக்கு ஆயத்தமானார்; பாபா உட்பட மொத்தம் பதினாறு பேர் இருந்தனர், ஆனால் கனி ஒன்பது வாக்குகளை மட்டுமே பெற முடிந்தது. (பாபாவும் அவருக்கு வாக்களித்தார்.)

பாபா கூறினார், **"நான் அனைவரின் ஒருமனதான முடிவை விரும்பியதால், இந்த முடிவு எனக்கு மகிழ்ச்சியாக இல்லை."**

பெண்டு, எரச், ஆதி, விஷ்ணு, கனி ஆகியோர் மேற்பார்வையாளர்களாக ஒரு குழுவை அமைக்க வேண்டும் என்று டான் முன்மொழிந்தார். அந்த யோசனையை எவரும் ஏற்றுக்கொள்ளாததால், அதை ஒருபுறம் வைத்துவிட்டு, பாபா கூறினார், **"புது வாழ்வின் இதர விவரங்களை கவனிக்க நான்**

சுதந்திரமாக இருக்க விரும்புகிறேன் என்பதை நீங்கள் புரிந்து கொள்ளத் தவறிவிட்டீர்கள். நீங்கள் உணவுக்காக, உங்கள் விருப்பத்திற்கு இணங்க, ஏதாவது ஏற்பாடு செய்தால், நான் மகிழ்ச்சி அடைவேன் என்று சொன்னபோது நீங்கள் என்னை நம்பவில்லை. என் மனசாட்சி தெளிவாக உள்ளது; இப்போது உங்கள் எரிச்சல், ஏமாற்றம், அதிருப்தி, முணுமுணுப்பு, உறுமல் இதுபோன்ற பிற புகார்களுக்கு புது வாழ்வில் இடமில்லை.”

இந்தக் கேள்வியை பாபா எவ்வளவு சாமர்த்தியமாகச் சமாளித்தார்! உண்மையில், அவர் உணவின் மீதான எந்தப் பற்றுதலையும் விரும்பவில்லை. இப்போது புகார் செய்வதைப் பற்றி சிந்திக்கக் கூட அவர்களுக்கு இடம் தரவில்லை. எவ்வளவு இயல்பாக இதையெல்லாம் அற்புதமாக முடிவுக்குக் கொண்டு வந்துள்ளார்!

அன்று மதியம் ஜான்பூரில் நடந்த கலந்துரையாடலின் போது, பாபா, யாசிப்பதற்கான 20 நிபந்தனைகளை முடிவு செய்தார்.

1) **தனிப்பட்ட மற்றும் 20 உறுப்பினர்களைக் கொண்ட முழுக் குழுவுக்கும் வேண்டிய உணவுக்காக மட்டுமே யாசிக்க வேண்டும், வேறு எதற்காகவும் அல்ல.**
2) **உணவுக்காக யாசிக்கும் போது வழங்கப்படும் - திட, திரவ, சமைத்த, சமைக்காத, சைவம் மற்றும் அசைவ உணவு - எதையும் ஏற்றுக்கொள்ளுங்கள்.**
3) **குறிப்பாக எதையும் அல்லது எந்த ஒரு சிறப்பு வகை உணவையும் கேட்காதீர்கள்.**
4) **யாசிக்கும் போது, ஆன்மீக அல்லது தார்மீக பேச்சுகளால் நீங்கள் வலியுறுத்தலாம், வேண்டலாம் மற்றும் தேவைப்பட்டால் மனம் கவரும் விதத்தில் பேசலாம்.**
5) **எவ்வாறாயினும், நாங்கள் ஆன்மீக ரீதியில் பரிபூரணமானவர்கள் அல்ல, ஆன்மீக அனுபவங்கள் எதுவும் இல்லை என்பதை நீங்கள் உறுதியாக அறிவிக்க வேண்டும், ஆனால் ஆன்மீக அல்லது தார்மீக விஷயங்களைப் பற்றி கேட்டு புரிந்துகொள்வது மட்டுமே சரியானது என்று நாங்கள் நினைக்கிறோம்.**
6) **என்னை குருநாதராகவோ, சத்குருவாகவோ அல்லது அவதார புருஷராகவோ குறிப்பிடாதீர்கள் அல்லது உங்களை எனது சீடர்கள் என்று கூறாமல், என்னையும் உங்களையும் தோழர்கள் என்று மட்டுமே குறிப்பிடுங்கள்.**
7) **ஒரு போதும் பொய் சொல்லாதீர்கள் அல்லது நிபந்தனைகளுக்கு எதிராக எதையும் செய்யாதீர்கள்.**

8) நீங்கள் பெண்மணிகள் மற்றும் சிறுமிகளுடன் பேசலாம், தேவைப்பட்டால், யாசிப்பதற்கும், பஜாரிலிருந்து பொருட்கள் வாங்குவதற்கு மட்டுமே.

9) நமது பசியைப் போக்க நாம் (விலங்குகளை) திருடவோ கொல்லவோ முடியாது.

10) முன் ஏற்பாடு இல்லாமல், வழியில் நாம் சந்திக்கும் நண்பர்கள், பரிச்சயமானவர்கள் மற்றும் உறவினர்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம், மேலும் இதுபோன்ற சந்தர்ப்பங்களில், எனது அறிவுறுத்தல்களின்படி பரிந்துரைகள் மூலமாகவும் தொடர்பு கொள்ளலாம்.

11) கேட்காமல் வழங்கினால், தயார் செய்த அல்லது தைக்கப்படாத (துணி) ஆடைகள் மற்றும் அனைத்து வகையான ஆடைகள், பருத்தி மற்றும் கம்பளி ஏற்றுக் கொள்ளலாம்.

12) பணம், காலணிகள், தொப்பிகள், குல்லாக்கள், பேனாக்கள், பித்தளை மற்றும் செப்புப் பாத்திரங்கள், கழிப்பறை பொருட்கள், கைக்கடிகாரங்கள், நகைகள், இடுப்புப் பட்டைகள், கண் கண்ணாடிகள், செயற்கைப் பற்கள் மற்றும் மருந்துகளை வழங்கினால், அவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டாம்.

13) உணவு, உடை, மற்றும் மேலே குறிப்பிட்டுள்ள ஏற்றுக்கொள்ளக்கூடிய பொருட்களைப் பெற்றுக்கொண்டதும், முதலில் என்னிடம் கொண்டு வர வேண்டும்.

14) நீங்கள், வழங்குபவர், வாங்குபவர் இருவரும் நிச்சயமாக அதை தானம் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

15) காளைகளுக்குத் தீவனம், கயிறுகள், இரும்பு காலணிகள் மேலும் விலங்குகள், வண்டிகள் தொடர்பான எதையும் தானமாகக் கேட்டு, ஏற்றுக்கொள்ளலாம்.

16) வழங்கப்பட்டால் எந்த விலங்குகளையும் ஏற்றுக்கொள்ளாதீர்கள்.

17) எந்த வடிவத்திலும் எரிபொருளைக் கேட்கலாம், தானமாக ஏற்றுக்கொள்ளலாம்.

18) முந்தைய கட்டுப்பாடுகளைப் போலன்றி, இப்போது கடைகள், தனியார் இல்லங்கள், ஆசிரமங்கள் மற்றும் உணவு வழங்கும் தொண்டு நிறுவனங்களிலும் யாசிக்கலாம்.

19) கேட்காமலேயே வழங்கப்படும் புகையிலை எந்த வடிவத்திலும் ஏற்றுக்கொள்ளப்படலாம்.

20) தங்குமிடம் மற்றும் போக்குவரத்துக்கான வசதிகளை நீங்கள் யாசிக்கலாம்.

இந்த சந்திப்பிற்குப் பிறகு, ஹர்ஜீவன் லால் மற்றும் கேக்கி தேசாய் ஆகியோரின் உதவியுடன் 'மொராதாபாத்'தில் குழு தங்குவதற்குப் பொருத்தமான இடத்தை ஏற்பாடு செய்வதற்காக ஆதி சீனியர் ரயிலில் டெல்லிக்கு அனுப்பப்பட்டார்.

அன்றே பசுக்கள் மற்றும் கன்றுகள் ரூ 260க்கும், ஒட்டகம், ஒட்டக வண்டி இரண்டும் ரூ 750க்கும் விற்பனையானது.

அன்று மாலை வேளையில், பாபா, தோழர்களிடம் **'அவர்கள் மகிழ்ச்சியாக உள்ளனரா'** என்று கேட்டார். பெரும்பான்மையான தோழர்கள் ஆமாம் என்று பதிலளித்தனர். 'வெளியளவில் முகமலர்ச்சியுடன் இருந்தாலும் உள்ளளவில் மகிழ்ச்சியாக இல்லை' என்று பெண்டு பதிலளித்தார். டான் 'அகத்திலும் புறத்திலும் மகிழ்ச்சியாக இருப்பதாகவும் ஆனால் நடுவில் இல்லை!' என்றார். டாக்டர் கனி, "(ஜான்பூரில் அவர்கள் தங்கியிருந்த காலத்தில்) பாபா என்னை மாமிசம் உண்ண அனுமதித்ததால் நேற்று முதல் நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன்!" என்று தெரிவித்தார்.

"கவலைப்பட வேண்டாம்," என்று கூறி, மேலும் அவர்களிடம் முன்பு கூறியதையே பாபா மீண்டும் கூறினார்: **"நாம் அனைவரும் ஒன்றாக மூழ்குகிறோம் அல்லது ஒன்றாக நீந்துகிறோம்."**

உள்ளூர் மக்கள் சிலர் பாபாவை தரிசனம் செய்ய வந்தனர். எவ்வளவோ எடுத்துக்கூறியும் அவர்கள் வெளியேற மறுத்தபோது, பாபா முன் வந்து, **"உங்கள் தரிசனம் கிடைத்ததில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்"** என்று சைகையால் தெரிவித்தபோது, வெட்கப்பட்டு அவர்கள் அவசரமாக வெளியேறினர்.

1949 டிசம்பர் **19** திங்கட்கிழமை அன்று டாக்டர் கனி தனது நாட்குறிப்பில் குறிப்பிட்டிருந்தார்: "ஜான்பூரில் தங்கியிருந்த போது, அதிகாலை இருளில், ஓர் எண்ணெய் விளக்கின் வெளிச்சத்தில், பாபா, இரண்டு மடிப்பு கூடாரத்தில் அரைச் சுற்று வட்டத்தில் தோழர்களுடன் அமர்ந்திருந்தது ஒரு கண்கொள்ளா காட்சியாக இருந்தது."

அன்று காலை தோழர்களுடன் அமர்ந்திருந்தபோது, பழைய மற்றும் புது வாழ்வை ஒப்பிட்டு பாபா இந்த விளக்கத்தை அளித்தார்:

நாம் பழைய வாழ்க்கையை விட்டுவிட்டோம், இப்போது அதை நோக்கித் திரும்பப் போவதில்லை. பழைய வாழ்க்கை நடைமுறையில் மறைந்துவிட்டது. ஒருவர் உயிரைத் துறந்தால், அவருடைய ஆவி இன்னும் மூன்று நான்கு நாட்களுக்கு உடலுடன் ஒட்டிக்கொண்டிருக்கும் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆவியானது ஒரு புதிய (வேறுபட்ட) கோளத்திற்குள் நுழைவதற்கு முன், பழைய மற்றும் புதிய (மரணத்திற்குப் பிந்தைய) வாழ்க்கைகளுக்கு இடையே ஒரு வகையான வெற்றிடம் என்று கூறப்படும் சூழலில் சிறிது நேரம் அங்கே நிலவுகிறது. அதேபோல, நமது

பழைய வாழ்க்கை அக்டோபர் 16 முதல் இறந்துவிட்டது. அன்று முதல் டிசம்பர் 21ஆம் தேதி வரை, நமது புது வாழ்வு, பழைய வாழ்க்கையுடன் ஒரு வகையான தொடர்பைக் கொண்டுள்ளது.

இப்போது ஒவ்வொன்றும் எவ்வாறு தானாகச் சரிசெய்யப்படுகின்றன என்பதைப் பார்க்கவும். பெல்காவ்மில் சில காலத்திற்கு முன்பு, நான் உங்களிடம் கூறினேன், புது வாழ்வில் முழுமையாக மூழ்குவதற்கு முன்னர் - 1950 ஜனவரி 1 முதல் - பழைய மற்றும் புதிய வாழ்க்கைக்கு இடையே, பத்து நாட்களுக்கு ஒரு 'வெற்றிட' காலம் இருக்கும். இன்று காலையில்தான் எனக்கு அது நினைவுக்கு வந்தது, நீங்களும் இதைப் பற்றி எனக்கு நினைவூட்ட மறந்துவிட்டீர்கள். எனவே, வெற்றிட காலமான பத்து நாட்கள் - டிசம்பர் 22 முதல் 31 வரை - பயிற்சி காலத்தின் நான்கு பின்வரும் கட்டுப்பாடுகளுடனான தொல்லை மிகுந்த அனுபவங்கள், முழுமையாக நிறுத்தப்படும் என்று நான் முடிவு செய்துள்ளேன்:

1) **உணவுக்காக யாசிக்க வேண்டாம்.**
2) **மேலங்கி அணிய வேண்டாம்.**
3) **எந்த விதமான உடல் உழைப்பும் இல்லை; தேவைப்பட்டால், கூலித் தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள்.**
4) **முழுமையான ஓய்வு, சிறந்த உணவு, நம்மிடம் இருக்கும் கைப்பணத்தில் வாங்கலாம்.**

ஆதி வெளியில் இருந்ததால், இந்த வெற்றிட காலத்தைப் பற்றி, தொலைத்தந்தி மூலம் அவருக்குத் தெரிவிக்க பாபா விரும்பினார். "**இந்த விஷயம் தெரியாமல், டெல்லியில் நம்மைப் பற்றி ஆதி சொல்லிக் கொண்டிருக்கலாம், நாம் அங்குச் சென்றதும் மக்கள் நம்மை வித்தியாசமான சூழ்நிலையில் கண்டுகொள்வார்கள்**" என்று பாபா குறிப்பிட்டார்.

மும்பையில் மெஹர்ஜியிடமிருந்து ரூ 15,000ஐ பெற்றுக்கொண்டு, மொராதாபாத்திற்கு வரும்படி பாதிரிக்கு அறிவுறுத்தப்பட்டது. டாக்டர் டான், பெண்டு, சதாஷிவ் ஆகியோரிடம் கூண்டுவண்டி, விலங்குகள் மற்றும் காளை வண்டிகளை சரக்கு ரயில் மூலமாக மொராதாபாத்திற்கு அனுப்பிவைக்க ஏற்பாடு செய்யுமாறும் கூறப்பட்டது.

இப்போது மிகவும் பயனுள்ளதாக மாறிவிட்ட இரண்டு கழுதைகளுக்கும் பெண்மணிகள் **'ஸக்கூ'** (SAKOO) மற்றும் **'தக்கூ'** (THAKOO) என்று பெயரிட்டு அழைத்தனர். முதலில் அவை தொந்தரவாகவும், ஆனால் இப்போது சுமைகளைச் சுமந்து செல்வதால் இணக்கமாகவும் இருந்தன.

ஜான்பூரில் குழு தங்கியிருந்த கடைசி நாளான டிசம்பர் 20 அன்று, பாபா, பெண்டு, பைதூல், எரச் ஆகியோருடன் நகரத்திலிருந்து நான்கு மைல் தூரம் பயணித்து ஒரு மேல்நிலை மஸ்தைத் தொடர்பு கொண்டார்.

1949 டிசம்பர் 21 புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் பாபா, தோழர்கள் குழுவுடன் ரயிலில் மொரதாபாத் புறப்பட்டார். நான்கு பெண்மணிகள் முதல் வகுப்பிலும் பாபா, ஆண் தோழர்களுடன் பணியாட்கள் பெட்டியிலும் பயணம் செய்தனர். சரக்கு ரயிலில் கூண்டுவண்டி, மாட்டு வண்டி, காளைகள், குதிரை மற்றும் இரண்டு கழுதைகளுடன் செல்ல டாக்டர் டான், பெண்டு, சதாஷிவ் ஆகியோர் ஜான்பூரில் காத்திருந்தனர்.

பாபாவும் தோழர்களும் அதிகாலை 3:00 மணிக்கு மொராதாபாத்திற்கு வந்து, விடியும் வரை ரயில் நிலைய காத்திருப்பு அறையில் ஓய்வெடுத்தனர். ஆதி குழுவை சந்தித்து அவர்கள் தங்கும் இடத்தைப் பற்றி பாபாவிடம் தெரிவித்தார். அன்று காலை அவர்கள், நான்கு சுவர்களில் ஒவ்வொன்றிலும் மூன்று கதவுகள் கொண்ட ஒரு பெரிய அறையை உள்ளடக்கிய தர்மசாலாவிற்கு நடந்து சென்றனர். அந்த இடம் குளிர்ச்சியாகவும், உள்ளே ஈரத்தன்மை மிக்கதாகவும் காணப்பட்டது. ஆதி, பொதுத் தோட்டமான 'ராம் லீலா' மைதானத்தில் (RAM LEELA MAIDAN) தங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார், ஆனால் அப்பகுதியை சுத்தம் செய்ய நேரம் பிடித்ததால், அவர்கள் தர்மசாலாவில் பகல் பொழுதைக் கழித்துவிட்டு அன்று மாலை மைதானத்திற்குச் சென்றனர்.

இந்த மைதானம் கடைசி நேரத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. ஆதி, ஹர்ஜீவன் லால், கேக்கி தேசாய் மூவரும் பாபாவின் நிபந்தனைகளின்படி, பொருத்தமான இடத்தைக் கண்டுகொள்ள முடியும் என்ற நம்பிக்கையை இழந்த நிலையில், பாபாவின் ஆலோசனையைக் கேட்டு ஒரு தொலைத்தந்தி அனுப்ப இருந்தனர். அவ்வேளையில் ஹர்ஜீவன் சவரம் செய்வதற்காக முடிதிருத்தும் கடை ஒன்றில் நுழைந்தார். அவர் முடிதிருத்துபவரிடம், "சாதுக்கள், மஹான்கள் மற்றும் மஹாத்மாக்கள் இங்கு வருவதில்லையா?" என கேள்வி எழுப்பினார்.

"வழக்கமாக இங்கே வருகின்றனர்," அந்த நபர் பதிலளித்தார்.

"அப்படியானால், அவர்கள் எங்கே தங்குகிறார்கள்?"

"நம்மிடம் ஒரு பெரிய திறந்த மைதானம் அவர்களுக்காகவே உள்ளது."

ஹர்ஜீவன் விரைவாக மேலும் விவரங்களைச் சேகரித்தார்; சவரம் செய்து முடிந்ததும், முடிதிருத்தும் நபரின் கையில் சில ரூபாய் நோட்டுகளை திணித்தார்.

"ஐயா, இவ்வளவு பணம்?" முடிதிருத்தும் நபர் கேட்டார்.

"என்னைப் பொறுத்தவரை இது மிகவும் சிறிய தொகை," ஹர்ஜீவன் கூறினார். "நீங்கள் எனது தாடியை மட்டுமல்ல, ஆனால் ஒரு பெரிய தலைவலியையும் அகற்றிவிட்டீர்கள்!" என்றார்.

தேசாய், ஹர்ஜீவன், ஆதி ஆகியோர் உரிய அதிகாரிகளை அணுகி, அந்த இடத்தை கையகப்படுத்தினர். ஆனால் பொழுது சாய்ந்து விட்டதால், சுத்தம் செய்வதை மறுநாளுக்கு ஒத்திவைக்க வேண்டியதாயிற்று.

மெஹர்ஜியிடமிருந்து 15000 ரூபாயைப் பெற்றுக்கொண்டு டிசம்பர் 26ஆம் தேதி காலை பாதிரி வந்தார்.

பாதிரி, ஹர்ஜீவன் லால் இருவரும் பாபாவைப் பார்க்க அனுமதிக்கப்படவில்லை; பாபாவின் விருப்பப்படி எரச் மற்றும் ஆதி மட்டுமே அவர்களுடன் தொடர்பு கொண்டனர். பாபாவின் கட்டளைகளை, பாதிரி நிறைவேற்றியதில் மகிழ்ச்சியடைவதாக செய்தி ஒன்றை அனுப்பி வைத்து, மேலும் பாபா, நகைச்சுவையாகக் கூறினார்: **"உங்கள் பழைய வாழ்க்கையில் ஒரு காலும், புது வாழ்வில் ஒரு காலும் உள்ளது, ஆனால் உங்கள் கால்கள் எப்போதேனும் பிளவுபட்டு பிரிந்துவிடும் என்று நீங்கள் பயப்பட வேண்டியதில்லை."**

மாஞ்ஜ்ரி மா:ப்பி தங்குமிடம் தொடர்பாக (22ஆம் தேதி) கேக்கி தேசாயை சந்திக்க, பாபா சில நிமிடங்கள் அனுமதித்தார். பாபா, அவர் தங்குவதற்கென டாக்டர் டான் வழங்கிய ஒரு கூடாரத்தைக் கேக்கிக்குக் காட்டினார். பெண்மணிகளின் அறைக்குச் செல்லும் படிகளுக்கு அருகில் அது அமைக்கப்பட்டிருந்தது. பாபா தனது தோழர்களுக்கு இதேபோன்ற 12 கூடாரங்கள் தேவை என்று கேக்கியிடம் தெரிவித்து, அதை டெல்லியிலிருந்து வாங்க உத்தரவிட்டார். கேக்கியால் அத்தகைய தயார் செய்த கூடாரங்களை உடனடியாகப் பெற முடியவில்லை, எனவே பாபா வழங்கும் விவரக்குறிப்புகளுக்கு இணங்க, ஒரு மாதிரியை உருவாக்க அறிவுறுத்தினார்.

இந்த நேரத்தில்தான் ஹர்ஜீவன் லால், குளிர்ந்த காலநிலையில் தோழர்களின் அவலநிலையைப் பற்றி அறிந்தார், மேலும் அவர் தோழர்களுக்கு வெதுவெதுப்பான கம்பளி ஆடைகளை அனுப்புவதற்கான திட்டவட்டமான நோக்கத்துடன் வெளியேறினார். ஆண், பெண்மணிகளிடம் ஒரு கம்பளி போர்வையும் இல்லை, ஆண் தோழர்கள் தங்கள் மேல் அங்கிகளில், பொதுவாக வெட்டவெளியில் இரவுகளைக் கழித்தனர்.

ரூ 15,000 மொத்த தொகையில் இரண்டு டோங்காவும் ஒரு குதிரையும் மொராதாபாத்தில் 1,500 ரூபாய்க்கு வாங்கப்பட்டது. இந்த வெற்றிட காலத்தில் அந்தத் தொகையிலிருந்து உணவும் வழங்கப்பட்டது. எஞ்சியுள்ள பணம் 'மாஞ்ஜ்ரி மா:ப்பி'யில் தோழர்களுக்கு ஒரு குடில் அமைக்கவும், குடில் தயாராகும் வரை தோழர்கள் வாழும் வீட்டிற்கு வாடகை செலுத்தவும் ஒதுக்கப்பட்டது. மேலும் அந்தத் தொகையிலிருந்து, யாத்ரீகர் வரி, படகு வாடகை, பாலத்தைக் கடக்கும்போது செலுத்த வேண்டிய கட்டணம் மற்றும் பிற வரிகளுக்குப் பணம் ஒதுக்கப்பட்டது. எஞ்சியிருப்பவை விலங்குகளுக்குத் தீவனம் வாங்குவதற்குப் பயன்படுத்தப்பட்டன.

இந்த நேரத்தில், பாபா எச்சரித்தார், **"ஜனவரி 1ஆம் தேதிக்குப் பின்னர், உணவு அல்லது உடைக்கு ஒரு நயாபைசா கூட செலவிடப்படாது."**

டெல்லிக்குத் திரும்பி வந்த ஹர்ஜீவன் லால், ஆண், பெண்மணிகளின் அவல நிலை குறித்து கிஷன் ஸிங் மற்றும் வாஸ் தேவ் கெய்னிடம் தெரிவித்தார். அவர்களிடமிருந்து பலவிதமான உணவுப் பொருட்கள் மற்றும் ஆடைகளை அனுப்புவது குறித்து கடிதம் வந்தது, அவை அனைத்தும் தானமாக வழங்கப்படும் என்று அவர்கள் கடிதத்தில் தெரிவித்திருந்தனர்.

பாபா, ஹர்ஜீவன் லாலுக்கு பின்வரும் குறிப்பிட்ட வழிமுறைகளை பதிலாக அனுப்பி வைத்தார்:

1) **ஜனவரி 1 முதல் மொராதாபாத்தில் தயார் செய்த உணவை தானமாக வழங்க ஏற்பாடு செய்ய வேண்டாம்.**

2) **முழு விருப்பத்துடன், நீங்களாகவே முன்வந்து, எந்த பலனையோ அல்லது வெகுமதியையோ, ஆன்மீகம் அல்லது வேறுவிதமான, என்னுடைய பார்வை, ஆசீர்வாதங்கள் போன்றவற்றையோ எதிர்பாராமல், ஜனவரி 1ஆம் தேதிக்கு முன்பு நீங்கள் தானமாக, உங்களால் இயன்ற அளவு, எதுவாக இருந்தாலும் அனுப்பலாம் - தானியங்கள், பழங்கள், உலர்ந்த பழங்கள், உணவுகள் மற்றும் நெய் போன்றவை.**

3) **மேலே குறிப்பிட்டுள்ளவற்றை நீங்கள் தானமாக வழங்கினால், அவை 1950 ஜனவரி 1ஆம் நாளிலிருந்து பயன்படுத்தப்படும், ஏனெனில் 100 சதவீத புது வாழ்வு, நடைமுறையில் உழைப்பது, யாசிப்பது போன்றவை 1950ஆம் ஆண்டிலிருந்து தொடங்கும்.**

4) **நாங்கள் 1ஆம் தேதிக்குப் பின்னர், எந்த நாளிலும் மொராதாபாத்திலிருந்து, ஒரு நாள் கழித்து அல்லது பதினைந்து நாட்களுக்குப் பிறகு புறப்படலாம். எனவே, நீங்கள் உணவுப் பொருட்களாக எதை அனுப்பினாலும், கிஷன் ஸிங், கெய்ன் இருவரும் வெதுவெதுப்பான ஆடைகளை தானமாக அனுப்ப விரும்புவதையும் 1950 ஜனவரி 1ஆம் நாளுக்கு முன்னர் அனுப்ப வேண்டும்.**

5) **வெதுவெதுப்பான ஆடைகளில் போர்வைகள், ஸ்வெட்டர்கள், மேலாடைகள், கால் மற்றும் கையுறைகள் இருக்க வேண்டும், அனைத்தும் தானமாக வழங்கப்பட வேண்டும்.**

6) **உங்களில் எவரும் இங்கு (மொராதாபாத்திற்கு) வரக்கூடாது, நீங்கள் தோழர்களை சந்திக்கவோ, தொடர்பு கொள்ளவோ கூடாது. உங்கள் தட்டெழுத்தாளர் அனங்கோபால்** (ANANGOPAL) **மூலம் அனைத்தையும் அனுப்புங்கள்.**

இந்தக் கடிதத்தைப் பெற்றுக்கொண்ட ஹர்ஜீவன் லால், உடனடியாக அவரது பன்னிரெண்டு வயது மகன் இந்தர்ஸேனுடன் (INDERSAIN) பின்வரும் பொருட்களை தட்டெழுத்தாளருக்கு அனுப்பிவைத்தார்.

40 போர்வைகள் 37 கம்பளி சட்டைகள்

58 ஜோடி கம்பளி காலுறைகள் 30 ஜோடி பருத்தி காலுறைகள்

20 கழுத்து துண்டுகள் 6 பின்னப்பட்ட தொப்பிகள்

1 கம்பளி மேலாடை. 2 டின் நிரம்ப உலர்ந்த பழங்கள்

2 டின் நெய். 2 டின்கள் இனிப்புகள்

1 டின் ஹல்வா (இனிப்பு). 1 டின் கேரட் ஹல்வா

1 பெட்டி தேநீர் 1 குளிர் பதன பெட்டி

1 கூடை பழம் 1 டின் பருப்பு மற்றும் மசாலா

1 பெட்டி ஊறுகாய். 1 பெட்டி சிகரெட்

மேலே உள்ள சில பொருட்கள் அடங்கிய 2 டிரங்கு பெட்டிகள்.

மேலே குறிப்பிட்டுள்ள அனைத்தும் ஹர்ஜீவன் லாலுக்குத் தோராயமாக ரூ 2,200 செலவாகும். அத்துடன், அவர் ஜனவரி 1ஆம் நாளுக்கு முன்னர் 20 கிலோ சர்க்கரையை தானமாக வழங்க வேண்டும். ஹர்ஜீவன் லால் ஏற்கனவே, பாபாவின் அறிவுறுத்தல்களைப் பெறுவதற்கு முன்பே எல்லாவற்றையும் வாங்கிவிட்டதால், வாஸ் தேவ் கெய்ன், கிஷன் ஸிங் ஆகியோரைக் கலந்தாலோசித்து, பொருட்களை அனுப்ப அவருக்கு நேரம் போதாமல் இருந்தது. ஹர்ஜீவன் லால், எரச், ஆதி இருவரையும் மொராதாபாத்தில் மட்டுமே சந்தித்திருந்தாலும், அவர் தோழர்களின் அவல நிலையைப் பார்த்து மிகவும் நெகிழ்ந்து போனதால், பொருட்களை விரைவில் அனுப்ப விரும்பினார்.

ஹர்ஜீவனின் மகன் இந்தர்ஸேன் தட்டெழுத்தாளருடன் வந்து பாபாதாஸை (ஹர்ஜீவன் லால் குடும்பத்துடன் தொடர்பு கொள்ளத் தடை விதிக்கப்பட்டவர்) சந்தித்ததை பாபா அறிந்தவுடன், அனைத்து பொருட்களுடன், உடனடியாக, இந்தர்ஸேனைத் திரும்பிச் செல்லுமாறு தகவல் அனுப்பினார். இதைக் கேட்ட இந்தர்ஸேன் மயங்கி விழுந்தார். பாபாவிற்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதும், அவர் சாதாரணமாகப் புன்னகைத்து, சிறுவனைத் தனதருகில் அமரச் செய்து, பிறகு தானத்தை ஏற்க ஒப்புக்கொண்டார். ஹர்ஜீவன் லாலுக்கு பின்வரும் செய்தி அனுப்பப்பட்டது:

உங்கள் பட்டியலின்படி நீங்கள் தானமாக அனுப்பியதை, பாபா மிகுந்த மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார். ஜனவரி 1ஆம் தேதிக்கு முன்பு, தானமாக வழங்க நீங்கள் தயாராக வைத்திருக்கும் 32 ஜோடி பருத்தி பைஜாமாக்களை, கேக்கி தேசாய் மூலமாக டெஹ்ராடூனுக்கு அனுப்பி என்னிடம் (பாபா) ஒப்படைக்கலாம்.

இனிமேல், உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் என்னுடனும், எனது தோழர்களுடனும் எந்தத் தொடர்பும் இருக்கக் கூடாது.

ஆச்சரியமூட்டும் விதத்தில், இது பாபாவின் தூய அன்பின் முறையாகும். ஹர்ஜீவன் லாலுடனான தனது வெளியளவிலான தொடர்பை, அவர் எந்த அளவிற்குக் குறைத்துக் கொண்டாரோ, அவ்வளவு நெருக்கமாகவும் இறுக்கமாகவும் அவர் குடும்பத்தை தனது வலைக்குள் ஈர்த்துக்கொண்டார்!

இந்திய பிரிவினைக்குப் பிறகு மொராதாபாத், இந்துக்களுக்கும் முஹமதியர்களுக்கும் இடையிலான மோதல்களின் மையமாக மாறியது. பிரச்சினைகளைத் தடுக்க, அவர்கள் தங்கியிருந்த இடம், ராம் லீலா மைதானம், முஸ்லீம்களின் எல்லைக்கு அப்பாற்பட்டதாக அறிவிக்கப்பட்டது. அந்த நேரத்தில் அலி அக்பர் என்று அழைக்கப்பட்ட அலோபா, இதர தோழர்களுடன் இணைந்து கிணற்றிலிருந்து தண்ணீர் எடுக்க வேண்டியிருந்தது; ஒரு நாள் யாரோ ஒருவர் அவரது பெயரைக் கேட்டு, அவர் ஒரு முஸ்லீம் என்று குற்றம் சாட்டினார். எனவே பாபா, அவரது பெயரை 'அலோபா' என்றும், கனியின் பெயரை 'கனோபா' என்றும் மாற்றிக்கொண்டார். அவர்கள் மொராதாபாத்தை விட்டு வெளியேறும் வரை 'கனோபா' நீடித்திருந்தாலும், 'அலோபா' என்ற புதிய பெயர் அலி அக்பருடன் ஒட்டிக்கொண்டது.

1949 டிசம்பர் 26 திங்கட்கிழமை மெஹராவின் பிறந்த நாளாகக் கொண்டாடப்பட்டது. அது இன்னும் 'வெற்றிட காலம்' என்பதால், சுவையான உணவு வழங்க முடிந்தது. உண்மையில், பாபா கட்டுப்பாடுகளை தளர்த்தியதால், ஒவ்வொருவரின் ரசனைக்கேற்ப, சைவம் மற்றும் அசைவ மாமிச உணவுகள் உணவகங்களிலிருந்து வரவழைக்கப்பட்டன. ராம் லீலா மைதானத்தில், ராமரே தனது லீலையை (தெய்வீக விளையாட்டை) நிகழ்த்திக் கொண்டிருந்தார், அலைந்து திரியும் யாத்ரீகர் ஒருவரின் பாத்திரத்தில் செயல்பட்ட அவர், அங்கு முழுக் குழுவுடன் தங்கியிருந்தது எவருக்கும் தெரியாது.

டிசம்பர் 27ஆம் நாள், பைதூல் டோங்காவில் ஒரு மஸ்தை அழைத்து வந்த போது, முதலில் அந்த மஸ்த் குஸ்தாஜி, பாபா இருவரையும் தழுவிக் கொண்டார். பாபா அவருக்கு கடலைமிட்டாயும் தேநீரும் கொடுத்து, மூன்று முறை தலை தாழ்த்தி வணங்கினார். அடுத்த நாள் பாபா, பைதூலுடன் ஒரு டோங்காவில் சென்று நான்கு மஸ்துகளைத் தொடர்பு கொண்டார். பாபா தனது கைகளால் மஸ்துகளுக்குக் கடலை உருண்டையை ஊட்டிவிட்டு, **"மஸ்தின் மீதான எனது இரண்டு செயல்களிலும் உலகளவு வித்தியாசம் உள்ளது: உதாரணமாக, ஒன்று, நான் ஒரு மஸ்திற்கு உணவு, பீடி அல்லது சிகரெட் வழங்குவது; மற்றொன்று, ஒரு மஸ்திற்கு எனது கைகளால் உணவளிப்பது அல்லது பீடி, சிகரெட்டைப் பற்ற வைப்பது"** என்று குறிப்பிட்டார்.

பெண்டு, டான், சதாஷிவ் ஆகியோர் கூண்டுவண்டி, மாட்டு வண்டி மற்றும் விலங்குகளுடன் டிசம்பர் 29 அன்று மொராதாபாத்திற்கு வந்தனர். அன்றைய தினம், குஸ்தாஜி, அவரது ஆற்றலுக்கு அப்பாற்பட்ட எந்த ஒரு பாபாவின் கட்டளையையும் நிறைவேற்ற விரும்பவில்லை. பாபா கூறினார், **"குஸ்தாஜியின் வயது, என்னுடனான அவரது நீண்ட கால தொடர்பு, அவருடைய 20 வருட மௌனம் மற்றும் உபாஸனி மஹாராஜுக்கு நான் வழங்கிய வாக்குறுதியின் அடிப்படையில் நான் அவரை மன்னிக்கிறேன். ஆனால் நீங்கள் குஸ்தாஜியைப் போலச் செய்யத் துணிய வேண்டாம். ஜனவரி 1ஆம் தேதிக்குப் பின்னர் அனைத்தையும் உங்கள் சுய பொறுப்பில் நீங்கள் செய்கிறீர்கள்!"**

அடுத்த நாள், பாபா ஜனவரி 1 முதல் 12 வரையிலான நாட்களில் ஒவ்வொரு தோழரின் தனிப்பட்ட கடமைகளை விளக்கினார்:

பைதூல் இரண்டு குதிரைகளை கவனித்து, உணவளித்து, டோங்காவைப் பராமரித்து அதை ஓட்டவும், காக்கா, முரளி இருவரும் சமையலுக்குத் தேவையான பொருட்களை, டோங்காவில் எடுத்துச் செல்லவும், இடைப்பட்ட நேரங்களில் மஸ்துகளைப் பற்றி விசாரிக்கவும் வேண்டும்.

ஆதி சீனியர்: கனி, பாபாதாஸ் மற்றும் குதிரைகளின் தீவனத்தை சுமந்து செல்லும் ஒரு டோங்காவை ஓட்ட வேண்டும். இரண்டு டோங்காக்களும் மேலே குறிப்பிடப்பட்ட தோழர்களுடன், முன்கூட்டியே சென்று தற்காலிக முகாமாக, மைதானம் அல்லது தங்குமிடத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும். காக்காவும் முரளியும் முந்தைய நாள் தானமாக வாங்கி வந்ததை சமைத்து, தயாராக வைக்க வேண்டும்.

கனி, பாபாதாஸ்: அடுத்த நாள் உணவிற்காக டோங்கா நிறுத்தப்படும் கிராமத்திலோ அல்லது நகரத்திலோ யாசிப்பது.

பெண்டு: கூண்டுவண்டி ஓட்டுநர்.

விஷ்ணு: மாட்டு வண்டி ஓட்டுநர்.

சதாஷிவ்: வழியில் பெண்டு, விஷ்ணு இருவருக்கும் உதவ வேண்டும். பெண்டு, சதாஷிவ் இருவரும் காளைகளுக்கும் கழுதைகளுக்கும் உணவளிக்க வேண்டும்.

டான்கின்: பைதூல், பெண்டு, சதாஷிவ் மூவருக்கும் விலங்குகளைப் பராமரிப்பதில் உதவ வேண்டும்.

அலோபா: தண்ணீர் வழங்குவதோடு பாத்திரங்களை சுத்தம் செய்ய வேண்டும்.

நீலு: வண்டிகள் மற்றும் கூண்டுவண்டியில் பொருட்களை ஏற்றி இறக்குவதோடு, நீர் விநியோகத்தில் அலோபாவிற்கு உதவ வேண்டும்.

எரச்: கூண்டுவண்டியை நிர்வகித்து, பாபா மற்றும் பெண்மணிகளின் பணிகளையும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

அண்ணா 104: இரவு கண்காணிப்புப் பணி.

குஸ்தாஜி: பன்முக ஆற்றல்மிக்க முக்கியஸ்தர்.

டிசம்பர் 31 சனிக்கிழமை காலை, தோழர்கள் தமது கைகளையும் முகத்தையும் கழுவிவிட்டு, பின்வரும் பிரார்த்தனையில் பங்கெடுப்பதற்காக பாபாவின் முன் நிற்குமாறு சக தோழர்களிடம் கூறினார். பாபா ஒரு குவளை வெந்நீரை எடுத்துவரக் கூறி, பின்னர் ஒவ்வொரு தோழரின் கைகளிலும் சிறிது ஊற்றினார். டாக்டர் கனி பிரார்த்தனையை முதலில் ஆங்கிலத்திலும் பின்னர் இந்தி மொழியிலும் மொழிந்தார்:

வாக்குறுதி அளிக்கப்பட்ட இரண்டரை மாத காலத்தின் இறுதி நாள் இன்று. நானும் எனது சக தோழர்களும், தெரிந்தோ தெரியாமலோ, பெரிய அல்லது சிறிய தவறுகளை, புது வாழ்வு நிபந்தனைகளின் உள்ளார்ந்த உணர்வுபூர்வமாக மற்றும் அது தொடர்பான வாக்குறுதிகளுக்கு எதிராக, கடந்த இரண்டரை மாதங்களில் ஏதேனும் தவறிழைத்திருந்தால், எனக்காகவும் எனது தோழர்களுக்காகவும் மன்னிப்புக் கோருகிறேன்.

எனது சக தோழர்கள் என்னிடம் தவறாக நடந்திருந்தால், அவர்களை நான் முழு மனதுடன் மன்னிக்கிறேன், மேலும் நான் அவர்களை ஏதேனும் தவறான முறையில் நடத்தியிருந்தால் என்னை முழு மனதுடன் மன்னிக்குமாறு எனது தோழர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

1950 ஜனவரி 1ஆம் நாள் தொடங்கும் புது வாழ்வு, நிபந்தனைகள் மற்றும் உறுதிமொழிகளின்படி 100 சதவிகிதம் வாழ்வதற்கான பலத்தை எல்லாம் வல்ல இறைவனிடம் வேண்டுகிறேன்.

அப்போது பாபா கூறினார்:

புது வாழ்வின் நிபந்தனைகள் மற்றும் எங்கள் உறுதிமொழிகள் ஆகியவற்றை முழுமையாகக் கருத்தில் கொண்டு, முற்றிலுமாகப் பரிசீலித்த பின்னர், எந்த உறுதியும் அளிக்காமல், சிறிய அல்லது பெரிய, தெரியாமல் இழைத்த தவறுகளை மன்னிக்க முயற்சிப்பேன் என்று முடிவு செய்துள்ளேன். ஆனால் மனப்பூர்வமாக செய்யும் சிறிய அல்லது பெரிய தவறுகளை நான் ஒருபோதும் மன்னிக்க மாட்டேன்.

நிபந்தனைகளின் உள்ளார்ந்த உணர்வுக்கு முற்றிலும் எதிராகச் செல்லும் எந்தத் தவறையும் நான் மன்னிக்க மாட்டேன்; எந்த சூழ்நிலையிலும் எந்தவிதமான சமரசமும் செய்து கொள்ள முடியாது.

எனது கட்டளைகளுக்கு முற்றிலும் கீழ்ப்படிவது ஒன்றைத் தவிர, இதர எல்லா வகையிலும் நான் சகோதரனாகவும், சக தோழனாகவும்

இருப்பேன். நிபந்தனைகளை 100 சதவீதம் கடைப்பிடிக்கும் நாம், ஒன்றாக மூழ்குகிறோம் அல்லது நீந்துகிறோம்!

1950 ஜனவரி 1 ஞாயிற்றுக்கிழமை அன்று, பாபா, தனது தோழர்கள் அனைவருக்கும் 'புது வாழ்வு வாழ்த்துக்கள்!' தெரிவித்த முந்தைய இரவில் மழை பெய்து கொண்டிருந்தது; பாபா கூறினார், **"வெளியே ஈரத்துடன் தொடங்கும் புது வாழ்வு, உள்ளேயும் 'ஈரமாக' இருக்கும் நல்ல சகுனமாகத் திகழ்கிறது!"**

நான்கு முக்கிய மதங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரார்த்தனைகளை மொழிந்த அவ்வேளையில் அனைவரும் பாபாவின் முன்னிலையில் நின்றனர். சதாஷிவ், விஷ்ணு, நீலு மூவரும் 'பாகவத புராணத்தின் தசாவதாரம்' (பத்து அவதாரங்கள்) பகுதியைப் படித்தனர்; கனி, அலோபா, பைதூல் ஆகியோர் குரானிலிருந்தும், ஆதி, காக்கா, எரச் மூவரும் 'ஸெண்ட் அவெஸ்தா'விலிருந்தும் மொழிந்தனர்; டாக்டர் டான், பாபா எழுத்துப்பலகை வழியாக எடுத்துரைத்த ஒரு சிறிய பிரார்த்தனையை வாசித்தார். அதற்குப் பிறகு, பாபா ஒவ்வொருவருக்கும் கிறிஸ்துமஸ் கேக் வழங்கினார்.

புறப்படுவதற்கு முன்பாக, டாக்டர் கனி, பாபாதாஸ் இருவரும் உணவுக்காக யாசிக்க வெளியே அனுப்பப்பட்டனர்.

அன்று மதியம் இரண்டு மணியளவில் மொரதாபாத்திலிருந்து அனைவரும் ஊர்வலமாக நடந்து சென்றனர். அணிவகுப்பு இப்போது ஒரு கூண்டுவண்டி, இரண்டு டோங்காக்கள் மற்றும் ஒரு மாட்டு வண்டியைக் கொண்டிருந்தது. பெண்டு, கூண்டுவண்டியையும், டான், பைதூல் இருவரும் டோங்காக்களையும், சதாஷிவ் காளை வண்டியையும் ஓட்டிச் சென்றனர். பாபாவும் தோழர்களும் தளர்நடையுடன் முன்சென்றனர்; சாமான்கள் அனைத்தும் கூண்டுவண்டி, டோங்காக்கள் மற்றும் காளை வண்டியில் குவிக்கப்பட்டிருந்தன. ஏறக்குறைய ஆறு மைல்கள் நடந்து, ஊர்வலம், அன்றிரவு பக்வாரா (PAKWARA) கிராமத்தில் அமைந்த 'கமல் குஞ்ச்' (KAMAL KUNJ) பங்களாவின் தோட்டத்தைச் சென்றடைந்தது. அவர்கள் ஓய்வெடுக்கும் வேளையில், மாயை அதன் கைவண்ணத்தைக் காட்டத் தொடங்கியது; (ஹர்ஜீவன் லால் செய்த தானத்தின் காரணமாக) அவர்களின் வாழ்வில் ஏற்பட்ட மாற்றம், மாயாவின் சீற்றமாக மழை வடிவில் வந்தது - இடைவிடாமல் தொடர்ந்து பலத்த மழை பொழிந்தது.

தோழர்கள் அனைவரும் இருளில் தோட்ட வெளியில் படுத்திருந்தனர். மழை பொழியத் தொடங்கியதும், அவர்கள் அவசரமாக தங்கள் பெட்டி படுக்கைகளைச் சுருட்டி, தோளில் சுமந்துகொண்டு பங்களாவின் வராந்தாவிற்கு ஓடினர். விலங்குகள் கட்டப்பட்டிருந்த கயிற்றில் கால்கள் சிக்கியதில் அலோபா கீழே விழுந்தார். "என்னை ஏன் பார்க்கிறீர்கள்? படுக்கையை எடுங்கள். என்னை

இப்படி முறைக்கத்தான் 'ஆமாம்' என்று எழுதினீர்களா? இது தான் புது வாழ்வு!" என்று சதாஷிவ் அவரைக் கடிந்து கொண்டார்.

எவ்வளவோ முயற்சித்தும் அவர்களின் படுக்கைகள் நனைந்தன. உதவியற்ற 'புது வாழ்வின்' முதல் நாளில், (மழையின் கடவுள்) இந்திரனின் தானம் அவர்களை முற்றிலும் உதவியற்றதாக்கியது! பாபா ஒரு சிறிய கூடாரத்திற்குள் இருந்தார், ஆனால் அதில் ஓட்டையும், விரிசலும் இருந்ததால் நீர் கசிந்து அவரது படுக்கையும் நனைந்தது.

அது தூக்கமில்லாத, துயரமான இரவு, ஆனால் பாபா மகிழ்ச்சியாக இருந்தார். "**எனது மனதில் உருவான புது வாழ்வின் இந்தச் சித்திரம் உண்மையாகிவிடும் என்று நான் உணர்வது, கடவுளுக்கு நன்றாகத் தெரியும்**." என்று அவர் கூறினார்.

முழுக் குழுவும் ஜனவரி 2ஆம் நாள் அதிகாலையில் தோட்டத்தை விட்டு வெளியேறியது. இரண்டு டோங்காக்களும் அடுத்த தற்காலிமாகத் தங்கும் இடத்தைத் தேர்ந்தெடுப்பதற்காக முன்கூட்டியே சென்றன; அங்கு, காக்கா உணவைத் தயாராக வைத்திருக்கவும், டாக்டர் கனியும், பாபாதாஸும் உணவுக்காக வெளியே சென்று யாசிக்கவும் அறிவுறுத்தப்பட்டனர். ஐந்து மைல்கள் நடந்த பின்பு, பாபா, எரச்சை யாசிக்க அனுப்பினார். அவர் கொண்டு வந்த ரொட்டிகளில் ஒரு துண்டை பாபா அனைவருக்கும் வழங்கினார். பெண்மணிகள் கழுதைகளுக்குப் புல்லைத் தீவனமாக ஊட்டி, மேலும் ஐந்து மைல் தூரம் சென்ற பிறகு, மதியம் 2:00 மணியளவில் ஹரியானாவில் ஒரு கிராமத்தை வந்தடைந்து அனைவரும் மாந்தோப்பு ஒன்றில் தங்கினர்.

இந்தக் காலகட்டத்தில், வழக்கமாக, காக்கா, முரளியின் உதவியுடன் ஒவ்வோர் இடத்திலும் உணவு தயார் செய்தார். அண்ணா 104 இரவு கண்காணிப்பாளராகவும், எரச் பொதுவாக பாபாவின் தனிப்பட்ட தேவைகளை கவனித்து, அவ்வப்போது உணவுக்காக யாசிக்கும் பழக்கத்தையும் கொண்டிருந்தனர். இதர ஆண் தோழர்கள் தண்ணீர் எடுத்து வந்து பானைகளில் நிரப்புவது, பாத்திரங்களை சுத்தம் செய்வது, கால்நடைகளுக்குத் தீவனம் மற்றும் தண்ணீர் கொடுப்பது, வாகனங்களை இயங்க வைப்பது போன்ற பணிகளில் மும்முரமாக இருந்தனர்.

அவர்கள் மறுநாள் காலை ஹரியானாவிலிருந்து புறப்பட்டு, ஐந்து மைல்கள் நடந்த பிறகு, பாபாவின் அறிவுறுத்தலின்படி பெண்மணிகள் இரண்டு மைல் தூரத்தில் ஓய்வெடுக்க, கூண்டுவண்டியில் அமர்ந்தனர். பின்னர் அவர்கள் மேலும் ஒன்றரை மைல் நடந்து, அம்ரோஹா (AMROHA) என்ற இடத்தைச் சென்றடைந்து அன்றைய தினத்தை ஒரு மாந்தோப்பில் கழித்தனர், அங்கு பாபா தனது தோழர்களை உணவுக்காக யாசிக்க டோங்காக்களில் அனுப்பி வைத்தார்.

அவர்கள் திரும்பி வருவதை எதிர்நோக்கிக் காத்திருந்த அவ்வேளையில், ஒரு மாமரத்தின் கீழ் அமர்ந்து, பாபா டானுக்கு இந்த விசித்திரக் கவிதையை எழுத்துப்பலகை வழியாக எடுத்துரைத்தார்:

காக்காவின் தலைவலி எப்போதும்
நெருப்புக்கு அருகில் இருக்கும் குஸ்தாஜி.
காக்கா குழந்தைகளுக்கு தினமும் உணவளித்தும்,
நாம் அறிவோம் அவருக்கு இல்லை மனைவி.
எங்கள் டாக்டர் முன்ஸி:ை (கனி) போர்வை மற்றும்
கோணிப்பையின் கீழ் காண்கிறோம்.
விஷ்ணுவும் நீலுவும் பொருட்களை ஏற்றி இறக்க, முரளி
வெங்காயத்தை கத்தியால் உரிப்பதையும் பார்க்கிறோம்.
பெண்டுவும் சதாஷிவ் பாட்டீலும் காளைகளையும்
வண்டிகளையும் ஓட்டுகின்றனர்.
பைதூலும் ஆதியும் டோங்கா ஓட்டுநர்கள்; அண்ணாவோ
எப்பொழுதும் சச்சரவுகளை உருவாக்குபவர்.
டான் பொதுவாக மிருகங்களுக்கு உதவுகிறார்;
பாபாதாஸோ எப்பொழுதும் முனகுகிறார்.
அலோபா பானைகளையும் தண்ணீரையும் கவனிக்க,
எரச்சோ கூண்டுவண்டிக்கு உயிராக இருக்கிறார்!

தோழர்கள் தாராளமான உணவுகளுடன் திரும்பி வந்தனர். அவர்கள் டோங்காக்களில் பயணம் செய்திருந்தாலும், யாசித்து, இவ்வளவு பெரிய அளவில் தானங்களைப் பெறுவது சற்று ஆச்சரியமாக இருந்தது. ஆனால் எரச் திடகாத்திரமாக இருந்ததால், கரும்புச் சாறு இருந்த பானையை டோங்காவில் வைத்தால் கொட்டிவிடும் என்று தலையில் சுமந்துகொண்டு நடக்க வேண்டியதாயிற்று. பிற அனைவரும் முகாமுக்குத் திரும்பிச் சென்றனர். அம்ரோஹாவில் மக்கள் தாராள மனப்பான்மை மிக்கவர்கள் ஆதலால் தோழர்களுக்கு ஏராளமான உணவு கிடைத்தது; நன்றாக உண்டு ஓய்வெடுத்தனர். பெனாரஸிலிருந்து ஜான்பூர் வரை வாழ்ந்த 'ஜிப்சி வாழ்க்கை', மொராதாபாத்திலிருந்தும் தொடர்ந்தது.

1950 ஜனவரி **4** புதன்கிழமை அன்று காலை, எட்டு மணிக்கு அம்ரோஹாவிலிருந்து புறப்பட்டு, பதினைந்து மைல்கள் நடந்து **4:30** மணிக்கு 'ரத்தன்கர்' (RATANGARH) கிராமத்தை வந்தடைந்தனர். பெண்மணிகள் ஒன்பதரை மைல் தூரம் நடந்து, மீதி தூரத்தைக் கூண்டுவண்டியில் கடந்து சென்றனர். வழியில், எரச் வழக்கமாக யாசிக்க வெளியே சென்றார். பாபா பெரும்பாலும் பெண்மணிகளுக்கு முன்னாலும், எரச், மெஹரா மற்றும் கோஹெருடன் ஒரு :ர்லாங் பின்னாலும், தொடர்ந்து மணி, மெஹரு இருவரும், இரண்டு

கழுதைகளை வழிநடத்திச் சென்றனர், இறுதியாக வெள்ளை மேலங்கிகள் மற்றும் பச்சைநிற தலைப்பாகை அணிந்து தோழர்கள் சிறிது தூரம் பின்னால் சென்றனர்.

பைதூல் வெண் குதிரையை டோங்காவுடன் இணைத்து ஓட்டினார். ஆனால் வழியில் விலங்கு தொடர்ந்து தொந்தரவு செய்தது. ஊர்வலம் வருவதற்குள் சாப்பாடு தயார் செய்ய வேண்டும் என்பதால், காக்கா டோங்காவில் முன்கூட்டியே சென்றுவிடுவது வழக்கம். "சில நேரங்களில் காக்கா தனது இருக்கையில் அமர்வதற்கு முன்பே குதிரை ஓடத் தொடங்கியது," மெஹரா நினைவு கூர்ந்தார், "அவர் அதை துரத்திப் பிடிக்க வெகுதூரம் ஓட வேண்டியிருந்தது."

ரத்தன்கர் கிராமத்திலும் முகாம் மாம்பழத்தோட்டத்தில் அமைந்திருந்தது. பெண்மணிகள் இரவில் கூண்டுவண்டியிலும், பாபா, அவரது சிறிய கூடாரத்திலும், ஆண் தோழர்கள் திறந்த வெளியில் மரத்தின் கீழும் தூங்கினர்.

பாபா வருவதற்கு முன்பு, டாக்டர் கனி, பாபாதாஸ் இருவரும், ராம் சாஸ்திரியின் (RAM SHASTRI) இல்லத்தில் யாசிக்கச் சென்றனர்; அவர் தாராள மனப்பான்மையும், ஆன்மீக ஆளுமையும் மிக்கவர் என்று கூறப்பட்டது. சாஸ்திரி அவர்களை அன்புடன் வரவேற்று, ஏராளமான பொருட்களை வழங்கினார், அதனால் வேறு எங்கும் யாசிக்கவேண்டிய தேவையில்லை. சாஸ்திரியைப் பற்றிக் கேள்விப்பட்ட பாபா மகிழ்ச்சியடைந்தார்; மறுநாள் காலையில் பாபாவும் அந்த வீட்டில் யாசிக்கப் போவதாகக் குறிப்பிட்டார்.

1950 ஜனவரி **5** வியாழன் அன்று, காலை **9** மணிக்கு, பாபா, டாக்டர் கனியுடன் சாஸ்திரியின் இல்லத்திற்குப் புறப்பட்டுச் சென்றார். அறிமுகப்படுத்தியதும், பாபா, சாஸ்திரியின் பாதங்களைத் தொட்டு வணங்கினார். பாபா, ஒருவருக்கு மட்டும் தானம் கேட்டபோது, பாபாவை அமரும்படி சாஸ்திரி கேட்டுக் கொண்டார். சில நிமிடங்களுக்குப் பின்னர், அவர் தனது மகளுடன் திரும்பி வந்தவர், கோதுமை மாவு, அரிசி, பருப்பு, வெல்லம் ஆகியவற்றைத் தானமாக வழங்கினார். பாபா மீண்டும் அவருடைய மற்றும் மகளின் பாதங்களையும் தொட்டு வணங்கினார். சாஸ்திரி, பாபாவிற்கு ஆன்மீகம் பற்றி அவர் எழுதிய இரண்டு புத்தகங்களைப் பரிசாக வழங்கினார். பாபாவும், கனியும் திரும்பி வந்ததும், சாஸ்திரியிடம் புது வாழ்வு பாடலின் நகலை கொடுக்க பாபா, டாக்டர் கனியை திருப்பி அனுப்பினார்.

பின்னர், அதைத் தொடர்ந்து தோழர்கள் உணவுக்காக யாசிக்க அனுப்பப்பட்டனர். பாபாவின் பெயரை வெளியே எவருக்கும் கூறக்கூடாது, யாசிப்பதும், மகிழ்ச்சியாகவும் அன்பாகவும் செய்யப்பட வேண்டும். தானம் வழங்குபவர்கள், தோழர்களுக்கு, கடமை உணர்வுடன் தானம் வழங்கினோம்

என்ற எண்ணத்தில் இருக்கக்கூடாது, மேலும் தானத்தைப் பெறுபவர், தானம் தன்னிச்சையாக வழங்கப்படும் தன்மையை கவனமாகக் கண்டுகொண்ட பின்னரே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மாலையில், சாஸ்திரி, பாபாவை முகாமிற்குச் சென்று சந்தித்தார், மேலும் அவருடைய இரண்டு பிரசுரங்களை பாபாவிற்கு வழங்கினார். பாபா அவரை அனைவருக்கும் அறிமுகப்படுத்தி, **"அவர் மனிதரில் மாணிக்கம்"** என்று குறிப்பிட்டார்.

ஜனவரி 6ஆம் தேதி காலை 9:30 மணிக்கு, ரத்தன்கர் கிராமத்திலிருந்து பாபா புறப்பட்டார். ஐந்து மைல்களுக்குப் பிறகு, வெண் குதிரை இழுத்துச்சென்ற டோங்காவின் சக்கரங்களில் ஒன்று உடைந்தது. "குதிரை, வாகனத்தை நன்றாக இழுக்கவில்லை," என்று மெஹரா கூறினார். "வெண் குதிரை மொராதாபாத்தில் டோங்காவை இழுக்கப் பயிற்சி பெற்றிருந்தும், குதிரை தொடர்ந்து எதிர்ப்பைத் தெரிவித்து வந்தது." சிறிது முயற்சித்து ஒரு மைல் தூரம் கடந்து, மீண்டும் ஒரு மாமரத்தோட்டத்தில் தங்கினர். அங்கு டோங்காவை சரி செய்ய நள்ளிரவு வரை பிடித்தது.

சில தோழர்கள் தானமாக வாங்கி வந்த உணவை, சிறிது நேரத்தில் காட்டு குரங்குகள் உள்ளே புகுந்து உணவுப் பைகளைத் திருடிச் சென்றன. அன்றிரவை அனைவரும் உணவில்லாமல் கழிக்க வேண்டியதாயிற்று.

ஊர்வலம் அடுத்த நாள் காலை 8:25 மணிக்கு ஆரம்பமானது. சாலையில் தனது வண்டியை ஓட்டிச் சென்ற ஒருவர், ஊர்வலத்தைக் கண்டு வெகுவாகக் கவரப்பட்டு, கேட்காமலேயே புதிய கரும்புகளை அள்ளி வழங்கினர். வழிப்போக்கர்கள் அணிவகுப்பைப் பார்த்து ஆச்சரியமடைந்தனர், மேலும் அது ஹரித்வாரை நோக்கிச் செல்வதைக் கேள்விப்பட்டதும் அவர்கள் பயபக்தியுடன் வணங்கினர்.

அன்று, ஒன்பது மைல்களை நடைப்பயணமாகக் கடந்து சென்று 'நேத்தோர்' (NETHAUR) கிராமத்திலிருந்து ஒன்றரை மைல் தொலைவில் அமைந்த மாந்தோப்பு ஒன்றில் அன்றிரவு ஓய்வெடுத்தனர்.

நஜிபாபாத்தில் (NAJIBABAD) சில நாட்கள் தங்கி, அங்கிருந்து டெஹ்ராடூனுக்கு ரயிலில் செல்ல வேண்டும் என்று பாபா விருப்பம் தெரிவித்தார். மறுநாள் காலை, நஜிபாபாத்தில் இளைப்பாற ஒரு பொருத்தமான இடத்தைக் கண்டறியவும், அங்கே தங்கியிருக்கும் வேளையில், தானம் வழங்கத் தயாராக இருக்கும் நபர்களைத் தொடர்பு கொள்ளவும், அங்கிருந்து டெஹ்ராடூன் செல்லத் தேவையான ரயில் கட்டணத்தை எவரேனும் தானமாக வழங்க ஏற்பாடு செய்யவும் ஆதி, டாக்டர் கனி, பாபாதாஸ் மூவரும் முன்கூட்டியே பேருந்தில் அனுப்பப்பட்டனர்.

எட்டு மணிக்குப் பயணத்தைத் தொடர்ந்த பாபாவும் தோழர்களும் அன்று பதின்மூன்று மைல்கள் நடந்து, பிற்பகல் சுமார் 3:00 மணியளவில் 'அக்பராபாத்' (AKBARABAD) அருகே மற்றுமொரு மாம்பழத்தோட்டத்தில் முகாமிட்டனர். ஏராளமானோர் அங்குக் கூடி, தோழர்களை மரியாதையுடன் பார்த்தனர். "அந்த ஊர்வலம் தனித்துவம் வாய்ந்தது" என்று காலம் கூறியது, "அதுவே மக்களிடையே ஆர்வத்தையும், வியப்பையும் தூண்டியது. பலர் இந்தியாவில் புனித யாத்திரைகளில் நடைப்பயணமாகச் செல்வது வழக்கம், ஆனால் இது போன்ற ஒரு காட்சியை அவர்கள் இதுவரைக் கண்டதில்லை. இது, கடவுள் முன்னின்று நடத்தும் ஊர்வலம்; மேலும், விவரிக்க முடியாத ஏதோ ஒன்று அவர்களை நெருங்கி நின்று பார்க்கத் தூண்டியது. அவர்களால் அதைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஏனெனில் அது அவதார புருஷரின் ஊர்வலம், இப்போது நாடோடியாக இருந்து உணவுக்காக யாசிக்கும் நாடகத்தை நடத்துகிறார்!"

நஜிபாபாத் செல்லும் வழியில், பாபா ஒரு டம்ளர் தண்ணீர் கேட்டார். அதற்கு முன்னதாக, பாபா, அருந்த நீர் கேட்காததால், அன்று பாபாவின் குவளையை நிரப்ப, பெண்மணிகள் தவறிவிட்டனர். பாபா, வெகு தொலைவில் இருந்த ஒரு கிணற்றிலிருந்து தண்ணீர் எடுக்கும் ஒருவரிடம் எரச்சை அனுப்பினார். தண்ணீரைக் கொண்டு வந்த எரச்சின் பாதங்களைத் தொட்டு, நீரை அருந்திய பாபா, அதைக் கொடுத்தவரின் பாதங்களைத் தொடுமாறு அறிவுறுத்தி எரச்சைத் திருப்பி அனுப்பி வைத்தார். உண்மையில், பாபா அந்த நபருக்காகவே தான் தாகமாக இருப்பதாகக் கூறினார். அவர் எரச் மூலம் செய்ததை உள்ளளவில் 'வழங்க' வேண்டியிருந்தது. திரைக்கு பின்னால் நடந்த இந்தப் பணியை வேறு எவராலும் புரிந்து கொள்ள முடியாது. அளவிறுதியற்ற அறிவு மற்றும் ஆற்றல் எனும் பொக்கிஷத்தை அடையப்பெற்ற ஒருவர் மட்டுமே தனது பணியை அறிவார்.

வட இந்தியாவின் உத்தரபிரதேச மாநிலம், இறைவனின் புனித பிரசன்னத்திற்கான தாகத்தைக் கொண்ட இடம்; அது அவரை மிகுந்த அன்புடன் ஏற்றுக்கொண்டது. அவரது அடையாளம் தெரியாவிடிலும், மக்கள் தாராள மனப்பான்மையுடன், தானம் வழங்கும் அதீத ஆர்வம் படைத்தவர்களாக இருந்தனர், மேலும் தோழர்களிடம் 'இல்லை' எனக் கூறி வெறுங்கையுடன் திருப்பி அனுப்பிய இல்லமோ இடமோ இல்லை.

1950 ஜனவரி 9, திங்கட்கிழமை அன்று, 'அக்பராபாத்' அருகிலிருந்த மாமரத்தோட்டத்தை விட்டு, குழு எட்டு மைல் பயணம் செய்து, நஜிபாபாத்தை வந்தடைந்தது. பெனாரஸிலிருந்து மொராதாபாத் வரை முப்பத்தெட்டு மைல்கள் நடந்து, மேலும் அங்கிருந்து நஜிபாபாத் வரை மொத்தம் 76 மைல்கள் ஊர்வலமாகச் சென்றது. ஆதி, அவர்கள் தங்குவதற்காக மேடை

அமைக்கப்பட்டிருந்த தோட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார். அந்த இடம் சீரற்றதாக இருந்தாலும், பெண்மணிகள் அதை துடைத்து சுத்தம் செய்தனர், அனைவருக்கும் அந்த இடம் பிடித்திருந்தது. நகரத்தைச் சேர்ந்த சில உள்ளூர் பெண்மணிகள், பெண்மணிகளை அணுகி, இதுபோன்ற பணிகளில் தங்கள் கைகளைக் கறைபடுத்த வேண்டாம் என்று வேண்டுகோள் விடுத்து, ஒரு பெண் துப்புரவுப் பணியாளர் அதை அவர்களுக்காகச் செய்வதாக உறுதியளித்தனர்.

ஆனால், அந்த இடத்தை தாமாகவே சுத்தம் செய்வோம் என பெண்மணிகள் பதிலளித்தனர். இது போன்ற குற்றேவல் பணிகள் பொதுவாக தாழ்த்தப்பட்ட வகுப்பினரால் மட்டுமே செய்யப்படுவதால், உள்ளூர் பெண்மணிகள் ஆச்சரியப்பட்டனர். ஆனால் புது வாழ்வில், பணியாட்களை வேலைக்கு அமர்த்தாமல், அனைத்தையும் தோழர்களே செய்ய வேண்டும்.

துப்புரவு பணி முடிந்ததும் வழக்கம் போல, காக்கா தயார் செய்த மதிய உணவை அனைவரும் உண்டனர். ஹரித்வாருக்குச் செல்லும் சாதுக்கள் மற்றும் துறவிகளுக்கு உணவு வழங்குவதாக அறியப்பட்ட, துணி வியாபாரி மக்கன்லால் ஸராஃப் (MAKHANLAL SARRAF) மற்றும் அவரது மனைவியிடமிருந்து ஆதி சீனியர் முழுக் குழுவுக்கும் போதுமான பொருட்களைப் பெற்றுக்கொண்டார். டோங்கா ஓட்டுநர் ஒருவர் ஆதியிடம் அவர்களின் முகவரியைக் கொடுத்ததும், ஆதி அவர்களைத் தொடர்பு கொண்டு, தம்பதியரிடம் குழுவின் ஹரித்வார் திட்டங்களைப் பற்றி கூறியபோது, தம்பதியினர் அவர்களுக்கு சேவை புரிவது பெரிய அதிர்ஷ்டம் என்று கூறி, “நாங்கள் சில நாட்களுக்கு அல்ல, வாரங்களுக்கு, தானமாக உணவு வழங்கலாம்!” என்றனர்.

இதனால், **20** பேருக்கான உணவு பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டது. இப்போது ஆதி நஜிபாபாத்திலிருந்து டெஹ்ராடூனுக்குத் தேவையான ரயில் கட்டணத்தை ஏற்பாடு செய்ய வேண்டியிருந்தது. மக்கன்லால், பாபு ரமேஷ் சந்திரா (BABU RAMESH CHANDRA) என்றழைக்கப்பட்ட சணல் வியாபாரியைப் பற்றி அவரிடம் கூறினார். வணிகர் ஹரித்வார் யாத்திரையைப் பற்றி கேள்விப்பட்டதும், மேலும் எதையும் கேட்காமல், பயணத்திற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்யுமாறு தனது உதவியாளரிடம் கூறினார்.

தன்னால் பணத்தை ஏற்க முடியாது என்றும், குழுவிற்கு ரயில் டிக்கெட்டுகளை வழங்கினால் அவரது நோக்கம் நிறைவேறும் எனவும் ஆதி தெளிவுபடக் கூறினார். எனவே அந்த வியாபாரி அதை கவனித்துக் கொள்ளுமாறு தனது எழுத்தருக்கு உத்தரவிட்டார். எந்த ஒரு கேள்வியும் எழுப்பாமல், அனைத்தும் இத்தனை எளிதாக நடந்து முடிந்தது பெரும் யூகத்திற்குரிய விஷயம்.

மூன்றாவது பிரச்சினை, தங்கும் இடம். பாபாவின் விருப்பத்திற்கிணங்க பொருத்தமான இடம் கிடைக்கவில்லை. பாபா, அந்த இடம் நகரின்

எல்லையிலும், விலங்குகள் தங்குவதற்கு ஒரு கிணறு மற்றும் அதைச் சுற்றி ஒரு சமவெளியும் இருக்க வேண்டும் என்று விரும்பினார். நீண்ட நெடிய தேடுதலுக்குப் பின்னர், அவர்கள் தங்கியிருந்த தோட்டத்தின் உரிமையாளரை ஆதி தொடர்பு கொண்டபோது, அவர் அந்த நிலத்தைப் பயன்படுத்த அனுமதித்தார்.

இவ்வண்ணம் மூன்று ஏற்பாடுகளும் அதிக சிரமமின்றி முடிந்தன. பாபாவின் அடையாளம் எவருக்கும் தெரியாது, அந்தக் குழு ஹரித்வாருக்கு யாத்திரை சென்றதை வெறுமனே ஏற்றுக்கொண்டனர்.

ஜனவரி 10ஆம் நாள், பைதூல், பாபா தனது மஸ்த் பயணத்தின் போது தொடர்பு கொண்ட ஒரு நிர்வாண மஸ்தை அழைத்து வந்தார். மஸ்த், நீண்ட நேரம் உடனிருக்கவுமில்லை அல்லது எதுவும் உண்ணவுமில்லை. பாபா, தொடர்பில் திருப்தியடையாததால், அவரை மீண்டும் தொடர்பு கொள்ள, பைதூலுடன் டோங்காவில் மதியம் சென்றார். பாபா, மஸ்தை வணங்கி, அவருடைய பாதங்களை மூன்று முறை தொட்டு, மிகுந்த மகிழ்ச்சியுடன் காணப்பட்டார். பைதூல் அடுத்த நாள் மற்றுமொரு மஸ்தை அழைத்து வந்தார்; பாபா, அவரை எட்டு முறை வணங்கி அவருக்குத் தனது கைகளால் உணவூட்டினார்.

குழு தங்கியிருந்த கடைசி நாளான ஜனவரி 11ஆம் தேதி, திரு மற்றும் திருமதி மக்கன்லால் தயார் செய்த உணவுகளை எடுத்து வந்தனர். பாபா அவர்களை சந்திக்க ஒப்புக்கொண்டார்; மக்கன்லால், பாபாவின் முன்னிலையில் கதறி அழுதார். பாபாவின் பெயர் கூட அவருக்குத் தெரியாது, ஆனால் அவர் உள்ளூர உணர்ந்த அன்பு, கண்ணீரை வரவழைத்தது. பாபா, கை சைகைகளால் 'பேசியதை' எரச் விளக்கிக் கூறினார். அப்போதும் பாபா மௌனம் காப்பதை அந்த நபரால் உணரமுடியவில்லை. பெண்மணிகளின் அருகிலிருந்த அவரது மனைவிக்கும் இதேதான் நடந்தது; பாபா அமைதியாக இருந்ததை அந்தப் பெண்மணியும் அறியவில்லை. திரு மற்றும் திருமதி மக்கன்லால் இருவரும் பாபா மற்றும் தோழர்களுக்கு சாதாரண அன்பின் எல்லையைக் கடந்து சேவை செய்தனர். ஒருவர் யார் என்று தெரியாமல் அவருக்கு சேவை செய்வது ஒரு அசாதாரணமான விஷயம், ஆனால் மெஹர் பாபா மீண்டும் மீண்டும் மக்களை அவ்வாறு செய்யத் தூண்டினார்.

மக்கன்லால், பாபாவையும் தோழர்களையும் தனது வீட்டிற்கு உணவருந்த அழைத்தார், ஆனால் பாபா அவரிடம், "**நீங்கள் இதுவரை செய்த தானத்தை அன்புடன் நான் ஏற்றுக்கொண்டதே போதுமானது.**" என்று கூறினார்.

இரவும் பகலும் மிகுந்த வேலையின் காரணமாக, காக்கா மிகவும் சோர்வாகக் காணப்பட்டார். நஜிபாபாத்தில் அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டு உடல்

நலம் குன்றியது. ஸக்கூ, தக்கூ என்ற இரண்டு கழுதைகளும் இந்த நேரத்தில் விற்கப்பட்டன, மேலும் இம்முறை ரயிலில் செல்ல முடிவு செய்யப்பட்டது. காக்கா மீது அவர் கொண்டிருந்த இரக்கத்தின் காரணமாக, பாபா ரயிலில் பயணம் செய்வதில் உறுதியாக இருந்தார் என்பது இப்போது தோழர்களுக்குப் புரிந்தது.

பாபா, பெண்டு, டான், சதாஷிவ், பைதூல், அலோபா ஆகியோருக்குக் கூண்டுவண்டி, இரண்டு டோங்காக்கள் மற்றும் காளை வண்டியை நஜிபாபாத்திலிருந்து 'மாஞ்ஜ்ரி மா:ஃபி'க்கு கொண்டு வரும் கடமையை வழங்கினார்; மேலும் பாபா அவர்களை, பிரதான சாலை வழியாகச் செல்லும்படி அறிவுறுத்தினார். ஆனால், அந்த ஐந்து தோழர்களும் பாபாவின் சரியான அறிவுரைகளைக் கடைப்பிடிக்கத் தவறிவிட்டதால் சோகமான விளைவை சந்திக்க நேர்ந்தது; இதை நாம் பிற்பகுதியில் காணலாம்.

ஹரித்வார் கும்பமேளா

(Haridwar Kumbha Mela)

1950 ஜனவரி **12** வியாழன் அதிகாலை **4:30** மணியளவில், பாபா, பெண் மற்றும் இதர தோழர்களுடன் டெஹ்ராடூன் செல்ல ரயில் நிலையத்திற்குச் சென்றார். இரண்டாம் வகுப்பு பயணச்சீட்டுகளுடன் சணல் வியாபாரியின் உதவியாளர் உடனிருந்தார். ஆனால் இரண்டாம் வகுப்புப் பெட்டிகளில் வழக்கமான கூட்டத்தைக் கருத்தில் கொண்டு, முதல் வகுப்பில் பெண்மணிகள் பயணிக்க ஏற்பாடு செய்யுமாறு பாபா, ஆதியிடம் கேட்டதற்கிணங்க, நான்கு முதல் வகுப்பு பயணச்சீட்டுகளை வாங்க உதவியாளர் உடனடியாக இணக்கம் தெரிவித்தார்.

பாபா குழுவுடன் காலை **6:00** மணி ரயிலில் புறப்பட்டு, அன்று காலை **10:30** மணியளவில் டெஹ்ராடூன் ரயில் நிலையத்தை வந்தடைந்தார். பாபாவும் தோழர்களும் இருந்த அதே பெட்டியில் 'ஸிங்ஜி' (SINGHJI) என்று அழைக்கப்பட்ட நாகரீகமான, வாயாடி சீக்கிய முன்னாள் ராணுவ அதிகாரி பயணம் செய்தார். அவர் ஜெர்மனியில் ஐந்து ஆண்டுகளாகப் போர்க் கைதியாக சிறைவைக்கப்பட்டிருந்தார். பயண வேளையில், அவர் இடைவிடாத உரையாடலை மேற்கொண்டு, தற்போதைய உலக விவகாரங்கள் குறித்து தனது கருத்துக்களைத் தெரிவித்தார். அவர் பாபா மற்றும் அவரது மௌனத்தைப் பற்றி தோழர்களிடம் கேட்டார், மேலும் பாபாவின் பல மஸ்த் பயணங்களில் ஒரு முறை ரயிலில் அவரைப் பார்த்ததாகக் கூறினார். அந்த ராணுவ அதிகாரி லக்ஸர் (LAKSAR) ரயில் நிலையத்தில் இறங்கும் முன்னர், அனைவருக்கும் தேநீர் வழங்க விருப்பம் தெரிவித்ததை பாபா அனுமதித்தார். தேநீருக்குப் பிறகு, ரயிலிலிருந்து வெளியேறும் முன்பு, ஸிங்ஜி திடீரென பாபாவின் காலடியில் தலை வைத்தார். பாபா உடனடியாக எழுந்து நின்று அந்த நபரின் பாதங்களைத் தொட்டு சைகையால் மரியாதையைத் தெரிவித்தார்.

டெஹ்ராடூன் ரயில் நிலையத்தில் அவர்களை சந்திப்பதற்காக, கேக்கி தேசாய் காத்திருந்தார். நலவாலா குடும்பத்தினர், எல்சா மிஸ்திரி, புர்ஜர் மற்றும் ஷெரூ சாச்சா (SHEROO CHACHA - ஃப்ரீனி நலவாலாவின் சகோதரி) ஆகியோரும் அங்கு இருந்தனர், ஆனால் எவரும் அவரைப் பார்க்க முயற்சிக்கக்கூடாது என்பது பாபாவின் கண்டிப்பான கட்டளை என்பதால், அனைவரும் ரயில் நிலையத்திற்கு வெளியே காத்திருந்தனர். பாபாவிற்குத் தகவல் வழங்கப்பட்டதும், அவர்களை காத்திருப்பு அறைக்கு அழைத்தார்.

பாபாவின் வருகையைப் பற்றி கேக்கி தேசாய் முன்னதாகவே கேக்கி நலவாலாவிற்குத் தெரிவித்ததற்கு இணங்க, அவர் நவம்பர் **1**ஆம் நாள் முதல் 'மாஞ்ஜ்ரி மா.ஃபி'யில் வசிக்கும் கைகோபாத்திற்குத் தெரிவித்தார். இந்த வழியில்,

பாபாவை சந்திக்கும் ஆர்வத்தில் இருந்த ஷத்ருகன் குமார், (SHATRUGHAN KUMAR, வயது 38), அவர் வருவதை அறிந்தார்.

குமாரின் குழந்தைகள் கைக்கோபாத்திற்குத் தேநீரையும் உணவையும் எடுத்துச் சென்றனர், ஏனெனில் பாபாவின் கட்டளைப்படி கைக்கோபாத் வளாகத்தை விட்டு வெளியே வர அனுமதிக்கப்படவில்லை. ஒரு நாள் அவர் குமாரிடம், "நீங்கள் மிகவும் அதிர்ஷ்டசாலி, நீங்கள் கடவுளுக்கு சேவை செய்கிறீர்கள்" என்று கூறி, பாபாவின் சித்திரத்தை அவரிடம் காட்டி, "இவரே கடவுள்" என்றார். அன்று முதல், தொடர்ந்து குமார், குறுகிய தாடியுடன், தலையில் கைக்குட்டையைக் கட்டிய ஒரு இளைஞனாக, பாபாவைக் கனவில் காண நேர்ந்தது; ஆனால், அந்த நேரத்தில் அவர் யார் என்று அவருக்குத் தெரியாது. பல ஆண்டுகளுக்குப் பிறகு, பாபாவின் தத்ரூபமான புகைப்படத்தைப் பார்த்தபோது, அவருடைய கனவில் தோன்றியது யார் என்பதை அவர் உணர்ந்தார்.

பாபா அன்று ரயில் நிலையத்திற்கு வருவதாகவும், அவருக்கு இவ்வளவு சிறப்பான பணிகளைச் செய்ததால், பாபா, ஒருவேளை, அவரைப் பார்க்க விரும்புவார் என்றும் கைக்கோபாத், ஷத்ருகன் குமாரிடம் தெரிவித்ததும் அவர் ரயில் நிலையம் சென்றார். ரயில் நிலையத்தில், பாபா முதல் வகுப்பு காத்திருப்பு அறைக்குள் இருந்தார். குமார் கதவைத் திறந்த போது, பாபாவைச் சுற்றி பலர் இருந்தபோதிலும், அவர், ஒரு நீளமான இருக்கையில் சாய்ந்திருந்த பாபாவை மட்டுமே கண்டார். நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் அவரது பிரார்த்தனைக்குச் செவிமடுத்து, அவரை சிறையிலிருந்து விடுவித்த 'மிஸ்டர் கடவுள்' என்று அவரது இதயம் அறிந்துகொண்டது. கம்யூனிஸவாதியாகவும், நாத்திகராகவும் இருந்த அவர் இதயத்தில், நம்பிக்கை பிறந்த அந்த முதல் பார்வையில் மெஹர் பாபாவை மனித வடிவில் வந்த கடவுளாக ஏற்றுக் கொண்டார். அவர் பாபாவின் பாதங்களில் எப்போதும் தலை வணங்க வேண்டும் என்ற ஏக்கத்தில் இருந்தார், ஏனெனில் குமார் கடைசியாக தனது 'மிஸ்டர் கடவுளைக்' கண்டுகொண்டார்.

பாபா, மதிய உணவைப் பற்றி கேக்கி நலவாலாவிடம் கேட்ட வேளையில், இது தொடர்பாக அவருக்குத் தெரிவிக்கப்படாததால், தானமாக உணவு ஏற்பாடு செய்யப்படவில்லை என்று கூறியதும், குமார் இடையே குறுக்கிட்டு, "உங்களுக்கு விருப்பமானால், நான் ஏற்பாடு செய்யலாம் பாபா" என்றார்.

"உணவை தானமாக வழங்க வேண்டும். ஒரு மணி நேரத்திற்குள் நீங்கள் அதைக் கொண்டு வர முடியுமா?" என்று பாபா கேட்டார்.

"ஒரு மணி நேரத்தில் காய்கறி புலாவ் தயார் செய்து கொண்டு வரலாம்" என்று குமார் கூறியதும், பாபா அதற்கு ஒப்புக்கொண்டார்; குமார் உடனடியாக

தனது இரு சக்கர வாகனத்தில் குதித்து ஏறி, நான்கு மைல் தூரத்தில் இருந்த மாஞ்ஜ்ரி மாஃபிக்கு முழு வேகத்தில் விரைந்து சென்று, அரை மணி நேரத்தில் பத்து பேருக்கு புலாவ் தயார் செய்யுமாறு மனைவி சுபத்ராவிடம் (SUBHATRA) கூறினார். சுபத்ரா ஓர் அன்பான, அப்பாவி பெண்மணி, நேரம் போதாமல் இருந்தாலும் அவர் உடனடியாக உணவைத் தயார் செய்யத் தொடங்கினார். அவசரத்தில் இருந்த குமார், மனைவியைப் பதற்றப்படுத்தி, 'சீக்கிரமாக' என்று சொல்லிக் கொண்டே கையில் கடிகாரத்துடன் சமையலறையில் நின்றார்.

"பொறுமையுடன் இருங்கள், இல்லையேல் அரிசி குழைந்துவிடும்" என்றார் சுபத்ரா.

"வேகமாக, காத்திருக்க நேரமில்லை!" என்று அவர் துரிதப்படுத்தினார்.

சுபத்ரா வேகமாக சமைத்துக் கொண்டிருந்தாலும் குமார் கவலைப்பட்டார். சாதம் தீய்ந்து போகாமல் இருக்க சமமான சூட்டில் கொதிக்க வைத்தார், ஆனால் குமார், சரியான நேரத்தில் உணவை எடுத்துச் செல்வதைப் பற்றி மட்டுமே நினைத்துக் கொண்டிருந்தார்.

இறுதியாகப் புலாவ் தயாரானதும், அதை எடுத்துக்கொண்டு, குமார் ஒரு மணி நேரத்திற்குள் ரயில் நிலையத்தைச் சென்றடைந்தபோது பாபா மிக்க மகிழ்ச்சியடைந்தார்; ஆனால் குமார், பாபாவுடன் மேலும் அதிகமான மக்கள் இருப்பதைக் கண்டார். புர்ஜர் சாச்சா மற்றும் பலருடன் மொத்தம் 20 பேர் இருந்தனர். குழம்பிப்போன குமார், இந்த உணவு எப்படி இத்தனை பேருக்குப் போதுமானதாக இருக்கும் என்ற யோசனையில் இருந்தாலும், அவர் அமைதியாக இருந்தார். மேசையில் வைக்கப்பட்ட உணவை பாபா, தட்டுகளில் அவரது கைகளால் அனைவருக்கும் வழங்கிய வேளையில், ஒவ்வொரு தட்டிலும் பாபா எவ்வளவு அதிகமாகப் பரிமாறுகிறாரோ, அவ்வளவு அதி வேகத்தில் குமாரின் இதயம் படபடத்தது. **"எவ்வளவு வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளுங்கள்; நிறைவுடன் உண்ணுங்கள்; பின்னர் எதையும் பெற முடியாமல் போகலாம்"** என்று பாபா கூறினார். அனைவரும் திருப்தியுடன் உண்ட பின்பும், பாத்திரத்தில் உணவு மீதம் இருந்தது! குமார் இந்த அதிசயத்தைக் கண்டு வியந்து போனார்.

மாஞ்ஜ்ரி மாஃபியில் பாபா மற்றும் அவரது தோழர்களுக்கான கிணறு இன்னும் தயாராகாத நிலையில், அவர்கள் தற்காலிகமாக, டெஹ்ராடூன், நியூ கண்டோன்மென்ட் சாலையில் 'எண் 4'இல் அமைந்த திருமதி பிராட்டின் (MRS. PRATT) பங்களாவில் தங்கினர். பாபாவும் பெண்மணிகளும் பிரதான வீட்டை ஆக்கிரமிக்க, ஆண் தோழர்கள் பணியாட்களுக்கான வளாகத்தில் அமைந்த மூன்று சிறிய அறைகளில் தங்கினர்.

அலிகார் (ALIGARH) நகரில் பிரபல கிரீம் தயாரிப்பாளரான தோடி ஸிங் (TODI SINGH), பாபாவைப் பற்றி, கிஷன் ஸிங் மூலமாக அறிந்து கொண்டார். **1949** ஆகஸ்ட் மாதத்தில் நிகழ்ந்த புது வாழ்வு சந்திப்புகளின் போது, ஸரோஷ் மோட்டார் ஒர்க்ஸில் பாபாவை, சிறிது நேரம் சந்திக்க நேர்ந்தது. அதைத் தொடர்ந்து அவருடைய கனவில் தோன்றிய பாபா, **"நீங்கள் எனக்கு சேவை செய்வீர்களா? எனக்கும் எனது தோழர்களுக்கும் உணவளிப்பீர்களா?"** என்று அவரிடம் கேட்டார்.

இத்தகைய தெளிவான கனவு, தோடி ஸிங்கை அமைதியற்ற நிலைக்குத் தள்ளியது. பாபா இருக்குமிடம் தெரியாததால் அவருக்கு எப்படி சேவை செய்வது என்று யோசித்தார். அஹமதுநகரில் பாபாவைப் பார்த்த அந்த கணம் அவரை முழுவதுமாக மாற்றிவிட்டது - அவரது ஆழ்ந்த அன்பின் ஈர்ப்பில் அவர் கிட்டத்தட்ட ஒரு மஸ்த் போல மாறி, பாபாவின் அன்பில் லயிக்கப்பட்டவராகத் தோன்றினார்.

அவருடைய கனவு அவரைப் பெரிதும் துன்புறுத்தியது, எப்படியேனும் பாபாவின் முகவரியைக் கண்டுகொள்ள வேண்டும் என்று அவர் ஏங்கினார். இந்தக் காலகட்டத்தில், கிஷன் ஸிங், டெல்லியிலிருந்து பாபாவிற்கு இரண்டு பெரிய வெண்ணெய் டின்களை பரிசாக அனுப்ப வேண்டியதைத் தெரிவித்து, டெஹ்ராடூனில் கேக்கி நலவாலாவின் முகவரியை அவருக்கு வழங்கி, தோடி ஸிங்கிற்குக் கடிதம் எழுதினார், மேலும் இந்த அதிர்ஷ்டவசமான நிகழ்வுகளின் திருப்பம், தோடி ஸிங்கை மகிழச் செய்தது.

தோடி ஸிங் மற்றும் அவரது மகன் கஜ்ராஜ் (GAJRAJ), வெண்ணெய் டின்களுடன் **1950** ஜனவரி **11** அன்று டெஹ்ராடூனுக்கு வந்ததும், அவர் நலவாலாவின் இல்லத்திற்குச் சென்றார்; அங்கு, கேக்கி தேசாய் அவரிடம், "பாபா நாளை வருகிறார், ஆனால் அவர் எவரையும் பார்ப்பதில்லை. புது வாழ்வில் அவர் எவரிடமிருந்தும் எதையும் ஏற்பதுமில்லை, அவரைத் தொந்தரவு செய்யாதபடி தயவுசெய்து வெளியேறவும்" என்று கூறினார்.

தோடி ஸிங், கேக்கி தேசாயிடம் தான் கண்ட கனவை எடுத்துரைத்து, "பாபா என்னை இங்கு அவருக்கு சேவை செய்ய அழைத்திருக்கிறார்" என்று உறுதியாகக் கூறினார். ஆனால் கேக்கி, அதே தோரணையில் வலியுறுத்தி கூறி, அவரை வெளியேறுமாறு கோரினார். கடைசியாக தோடி ஸிங், "இந்த வெண்ணெய் டின்களை பாபாவிடம் அனுப்பி வையுங்கள்" என்றார்.

அதற்கு கேக்கி, "யாருடைய சார்பாகவும், பாபாவின் நிபந்தனைகளில் நான் தலையிட முடியாது. பாபா என்னைப் பார்ப்பாரா இல்லையா என்பது கூட எனக்குத் தெரியாது" என்று பதிலளித்தார்.

"சரி, நான் அருகில் உள்ள தர்மசாலையில் தங்கியிருக்கிறேன், பாபா உங்களை சந்தித்தால், வெண்ணெய் டின்களைப் பற்றி அவரிடம் கூறுவதோடு,

அவருக்கு உணவு வழங்க நான் ஆர்வமாக உள்ளேன் என்றும் அவரிடம் சொல்லுங்கள்" என்று கூறி, தோடி ஸிங் அங்கிருந்து வெளியேறிய அடுத்த கணமே கேக்கி தேசாய் அதையெல்லாம் மறந்துவிட்டார்.

ஆனால் ஜனவரி 12ஆம் நாள், கேக்கியிடம், "**மாஞ்ஜ்ரி மா஼பியில் நாங்கள் தங்கியிருக்கும் போது உணவுக்கு என்ன செய்ய வேண்டும்? நாங்கள் தானமாக வழங்கப்படும் உணவை மட்டுமே ஏற்றுக்கொள்கிறோம்**" என பாபா வினவினார். இந்த நேரத்தில், கேக்கி, தோடி ஸிங் கூறியதை நினைவு கூர்ந்தார், ஆனால் அவரால் எந்தப் பழைய வாழ்க்கை சம்பவங்களையும் உரையாடலில் அறிமுகப்படுத்த முடியாததால், அவர் அமைதியாக இருந்தார். பாபா, "**என்ன யோசிக்கிறீர்கள்? ஏன் அதைச் சொல்லக்கூடாது?**" என்று கேட்டார்.

"உங்கள் நிபந்தனைகள் காரணமாக நான் அதை உங்களிடம் சொல்லத் தயங்குகிறேன்," என்று கேக்கி பதிலளித்தார். பாபா அனுமதி வழங்க, கேக்கி, தோடி ஸிங்கைப் பற்றி விளக்கிய வேளையில், பாபா அவரை அழைத்துவரக் கூறியதும் தோடி ஸிங் உடனே வந்தார்.

பாபாவின் முன்னிலையில், தோடி ஸிங் மிகவும் வியப்படைந்தார், அவர் முற்றிலும் ஊமையாகிவிட்டார். அவரிடம் எந்தக் கேள்வி கேட்டாலும், 'பாபா அறிவார்' (BABA JANI – BABA KNOWS) என்ற பதிலையே அளித்தார்.

அவரிடம், "இந்த இரண்டு பெரிய வெண்ணெய் டின்களை ரயிலில் எப்படி கொண்டு வந்தீர்கள்?"

"பாபா அறிவார்"

"உங்களுக்கு என்ன வேண்டும்?"

ஆனால் எதற்கும் தோடி சொல்லக்கூடிய இரு வார்த்தைகள்: 'பாபா அறிவார்.'

பாபா அதைக் கேட்டு மிகவும் மகிழ்ந்தார், மேலும் அவர் இரண்டு வெண்ணெய் டின்களை ஏற்றுக்கொண்டது மட்டுமல்லாமல், தோடி ஸிங், அவருக்கும், அவரது தோழர்களுக்கும் தேவையான உணவு அனைத்தையும் தானமாக வழங்க அனுமதித்தார். ஜனவரி 16ஆம் தேதி முதல் தொடங்குமாறு அவரிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது, மீண்டும் அவரிடம், "**16ஆம் தேதி முதல் பத்து நாட்களுக்கு உணவு தானமாக வழங்க நீங்கள் தயாரா?**" என்று கேட்டதற்கு, "பாபா அறிவார்" என்ற பதிலை மட்டுமே அவரால் அளிக்க முடிந்தது.

பாபா சிரித்தார், அன்று முதல் தோடி ஸிங் 'பாபா அறிவார்' என்ற செல்லப்பெயரால் அழைக்கப்பட்டார்.

தோடி ஸிங் திரும்பி வரும் வரை, குமார் வழங்கும் உணவுக்கான செலவை அவர் ஏற்க முன்வந்தார், பாபாவும் அதை அனுமதித்தார். தோடி ஸிங்

அலிகாருக்குத் திரும்பிச் சென்று, 15ஆம் நாள், தேவையான பொருட்களுடன், அவரும் அவரது குடும்பத்தினரும் டெஹ்ராடூன் திரும்பி வந்து, அங்கிருந்து அவர்கள் மாஞ்ஜ்ரி மா஼பிக்குச் சென்றனர்.

திருமதி பிராட்டின் பங்களாவின் ஒரு பகுதியில் திரு மற்றும் திருமதி ஏஞ்சலோ (MR & MRS ANGELO) என்ற வயதான ஆங்கிலேய தம்பதிகள் பரிதாபமான நிலையில் வாழ்ந்து வந்தனர். இங்கிலாந்துக்குத் திரும்பிச்செல்லப் போதிய பணமில்லாமல் தவித்தனர். பாபா அவர்களுக்கு கணிசமான அளவு (டாக்டர் டான் மூலம்) உதவி செய்தார், மேலும் இந்த நன்மதிப்பு மிக்க தம்பதியை மீட்பதற்காகவே பாபா, குறிப்பாக திருமதி பிராட்டின் இல்லத்தில் தங்கியிருந்தது போலத் தோன்றியது.

ஏஞ்சலோ தம்பதியினர் பாபாவிற்கு நன்றி தெரிவிக்கும் ஆர்வத்துடன் வேண்டுகோளை வைக்க கேக்கி தேசாயை அணுகினர். பாபா அதற்கு இணக்கம் தெரிவித்தது மிகவும் அசாதாரணமானது. மாஞ்ஜ்ரி மா஼பியில் அவர்களின் சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்ட நாளில், பாபா ஒரு புதிய வெண் மேலங்கியை அணிந்திருந்தார். அவர் கேக்கியிடம், **"நான் எப்படித் தோற்றமளிக்கிறேன்?"** எனக் கேட்டதற்கு, கேக்கி, "அப்படியே கிறிஸ்துவைப் போல்" என்று பதிலளித்ததும், பாபா சிரித்தார். பாபாவின் அன்பு, ஏஞ்சலோ தம்பதிகளின் இதயங்களை ஆழமாகத் தொட்டது மட்டுமின்றி மிகுந்த மன நிறைவையும் தந்தது.

திருமதி பிராட்டின் இல்லத்தில் வெந்நீர் கிடைத்ததால், பாபா தோழர்களை ஒவ்வொருவராக அரை மணி நேரம் நீராடுமாறு கூறினார். குளியலறை வசதி இல்லாததால் எளிய கூடாரம் ஒன்று அவர்களின் குடியிருப்பில் அமைக்கப்பட்டது. இரண்டு வாரங்களுக்கு முன்பு மொராதாபாத்தை விட்டு வெளியேறியதிலிருந்து, பெரும்பாலான தோழர்கள் சரியாக நீராடவில்லை; மூன்று மாதங்களாக தலைமுடியையும் திருத்தம் செய்யவில்லை, சவரம் செய்வதைப் பற்றிக் கவலைப்படவுமில்லை. டாக்டர் கனி தனது நாட்குறிப்பில் இவ்வாறு பதிவு செய்துள்ளார்:

கடந்த மூன்று மாத கால நாடோடி வாழ்க்கையின் இன்னல்களுக்குப் பிறகு, அனைத்து விதமான அசுத்தம், தூசி நிறைந்த இடங்களில், திறந்த வெளியில் தூங்குவது, 24 மணி நேரத்தில் ஒரே ஒரு சாதாரண உணவுடன் - கடுமையான குளிர்கால மாதங்களில் அனைத்து கொடுமைகளையும் எதிர்கொண்ட அவர்களுக்கு இது ஒரு நிம்மதியான வாழ்க்கை. திருமதி பிராட்டின் பங்களாவில் அனைத்து சுவையான உணவுகளுடன், வாழ்க்கை, உண்மையில் ஒரு சொர்க்கமாக இருந்தது!

ஷத்ருகன் குமாரின் தாயார் ஜெயந்தி (JAYANTI 'மாதாஜி' - MATAJI என்று அழைக்கப்பட்டவர்), அவரது மனைவி மற்றும் கிராமத்தைச் சேர்ந்த இரண்டு அல்லது மூன்று பெண்மணிகளின் உதவியுடன் மாஞ்ஜ்ரி மா:ப்பியில் அமைந்த குமாரின் இல்லத்தில், பாபா மற்றும் தோழர்களுக்கான உணவு தயார் செய்யப்பட்டது. குமார் 11:00 மணிக்கு மதிய உணவை அவரது இரு சக்கர வாகனத்திலும், கேக்கி தேசாய் மாலை ஆறு மணிக்கு இரவு உணவை டோங்காவிலும் எடுத்து வருவது வழக்கம்.

முதல் நாள், குமாரின் வாகனம் வழியில் பழுதானது; அதை இயங்கச் செய்வதற்கான அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்தன. சரியாக 11:00 மணிக்கு அது திடீரென இயங்கத் தொடங்கியது, ஆனால் அவர் ஐந்து நிமிடங்கள் தாமதமாக வந்தார். பாபா, "**ஏன் தாமதமாக வந்தீர்கள்?**" என்று கேட்க, குமார் அவரிடம் காரணத்தை எடுத்துரைத்ததும், பாபா, "**இம்முறை பரவாயில்லை, ஆனால் நாளை சரியான நேரத்தில் வாருங்கள்**" என்று கூறினார்.

ஆனால் மறுநாளும் அதே இடத்தில், இரு சக்கர வாகனம் மீண்டும் பழுதாகி, குமார் ஐந்து நிமிடம் தாமதமாக வந்தார். டெஹ்ராடூனில் அமைந்த பாபாவின் பங்களாவிற்கு மாஞ்ஜ்ரி மா:ப்பியிலிருந்து குமார் உணவு எடுத்து வந்த ஒவ்வொரு நாளும் இந்த விசித்திரமான நிகழ்வு தொடர்ந்தது. அது பாபாவின் உள் செயல்பாடுகளால் நிகழ்ந்தது என்று அவருக்குத் தெரியும். வாகனத்தின் இயந்திரமும் சரியாகத்தான் இருந்தது; ஆனால் எப்படியோ அதே இடத்தில் திடீரென நின்றுவிடுவதும், குமார் எப்பொழுதும் ஐந்து நிமிடங்கள் தாமதமாக வருவதும் தவறாமல் நடந்தது. உண்மையில் இது பாபாவின் செயல்தான், புலி போன்ற தன்மை படைத்த குமாரை ஆட்டுக்குட்டியாக மாற்றியது! வேறு எந்த ஒரு மனிதருக்கும் தலை வணங்காத இவர், இப்போது தனது பிரியமான பாபாவின் பாதங்களுக்குக் கீழே இருந்த விரிப்புகளை சுத்தம் செய்யவும் ஆர்வமாக இருந்தார்.

பாபா டெஹ்ராடூன் வருவதற்கு முன்பு, குமார், மாஞ்ஜ்ரி மா:ப்பியில் ஒரு கிணறு வெட்டிக்கொண்டிருந்தார். வேலையை விரைவுபடுத்தும் நோக்கத்தில் மேலும் சில பணியாளர்கள் நியமிக்கப்பட்டனர். வேலையின் முன்னேற்றத்தை ஆய்வு செய்ய கேக்கி தேசாய் மாஞ்ஜ்ரி மா:ப்பிக்கு அவ்வப்போது செல்வதுண்டு. அவர் இந்த நேரத்தில் நலவாலாவின் இல்லத்தில் ஓய்வெடுத்தாலும் பாபாவின் பங்களாவில் தனது உணவை உண்டு பெரும்பாலான நாட்களை அங்கேயே கழித்தார்.

ஒரு நாள் பாபா குறிப்பாக, கேக்கி தேசாயிடம், குமாரின் இல்லத்தில் காத்திருக்காமல் இரவு உணவுக்காகத் தயார் செய்யப்பட்டிருந்ததை மட்டும் எடுத்துக்கொண்டு விரைவில் திரும்பி வருமாறு அறிவுறுத்தினார். பாபாவின் கட்டளையைப் பற்றி அவர் குமாரிடம் கூறியபோது, அவரும், குடும்பத்தினரும்

அன்று உணவுக்காக பூரி செய்யத் திட்டமிட்டுள்ளதாகவும், சிறிது நேரம் பிடிக்கும் என்று விளக்கினார். தேசாய் ('முட்டாள்தனமாக' அதற்கு செவிமடுத்து) காத்திருக்க ஒப்புக்கொண்டதன் மூலம் பாபாவின் கட்டளையை மீறினார். ஒவ்வொரு நாளும் மாஞ்ஜ்ரி மா:பியிலிருந்து திரும்பும் வேளையில், கேக்கி, பாபாவிற்கு உள்ளூர் பேக்கரியிலிருந்து ரொட்டி வாங்கி வருவது வழக்கம். இந்த நாளில், சூழ்நிலையை மேலும் மோசமாக்கும் விதத்தில், டோங்கா ஓட்டுநரும் காணாமல் போனதால், அதிக தாமதம் ஏற்பட்டது.

இதற்கிடையில், திருமதி பிராட்டின் பங்களாவில், பாபா, தோழர்களிடம் கேக்கி தேசாய் இன்னும் ஏன் திரும்பி வரவில்லை என்று திரும்பத் திரும்பக் கேட்டுக்கொண்டிருந்தார். அவர் வந்ததும், பாபா தாமதத்திற்கான காரணத்தை வினவினார்; கேக்கி முழுக் கதையையும் விளக்கினார். அன்றைய தினம் அவர் எடுத்து வந்த உணவு பெண்மணிகளுக்கு அனுப்பப்பட்டது; அவர்கள் முதலில் தங்கள் பங்கை எடுத்துக் கொண்டு மீதியை, பின்னர் ஆண் தோழர்களுக்கு அனுப்பி வைத்தனர். தோழர்கள் உண்ண ஆரம்பித்ததும், பாபா மீண்டும் தோன்றி, கேக்கியைக் கடிந்துகொண்டார். பாபாவிற்கு தினமும் இரண்டு முறை, அவர் விரும்பிய மென்மையான சாதமும் பருப்பும் மட்டுமே அனுப்பப்பட்டது. ஆனால் இந்த நாளில் சுபத்ரா அவசரத்தில் பாபாவின் உணவை கூடையில் வைக்க மறந்துவிட்டார்.

குமாரின் இல்லத்தில் காத்திருந்து தனது உத்தரவை மீறியதற்காக கேக்கியை பாபா முதலில் திட்டினார், பின்னர் இரண்டாவதாக உணவு எடுத்துவர மறந்துவிட்டார். "**இப்போது நீங்கள் அனைவரும் நன்றாக இரவு உணவை உண்ணும்போது, நான் மட்டும் பசியுடன் இருக்க வேண்டும்**," என்று கோபமுற்றதால், கேக்கி மிகவும் வருத்தமடைந்தார்; அவராலும் உணவு உண்ண முடியவில்லை. பாபா அங்கிருந்து சென்றதும், கேக்கியின் அருகில் அமர்ந்திருந்த டாக்டர் நீலு, கவலைப்படாமல் இரவு உணவை முடித்துக் கொள்ளுங்கள் என்று முழங்கையால் லேசாக அவரைத் தட்டிக் கூறினார்.

சிறிது நேரத்தில் பாபா திரும்பி வந்து, அடுத்த நாள் வழக்கம் போலத் தன்னை முதலில் பார்க்க வராமல், நேராக குமாரின் இல்லத்திற்குச் செல்லுமாறு கேக்கிக்கு அறிவுறுத்தினார். "**பூரி தயார் செய்தது பெண்களுக்குத் தேவையற்ற கஷ்டம், மேலும் அவர்கள் அவசரத்தில் என் உணவுப் பொட்டலத்தை அனுப்ப மறந்துவிட்டார்கள் என்றும் அவர்களிடம் சொல்லுங்கள். ஆனால் பரவாயில்லை; நான் அவர்களை மன்னிக்கிறேன்.**" என்று பாபா கூறினார்.

கேக்கி தேசாய், நலவாலாவின் இல்லத்திற்குத் திரும்பி வந்த பின்னர், இரவு பத்து மணியளவில், பாபா விஷ்ணுவிடம், கேக்கி முதலில் பாபாவை சந்தித்த பிறகு குமாரின் இல்லத்திற்குச் செல்ல வேண்டும் என்று கூறி அனுப்பினார். "**பாபாவும் உங்களை நன்றாக ஓய்வெடுக்கக் கூறினார்,**

ஏனெனில் நீங்கள் மிகவும் வருத்தமாக உள்ளீர்கள் என்பது அவருக்குத் தெரியும்" என்ற செய்தியை விஷ்ணு வழங்கினார்.

மறுநாள் காலை கேக்கி வந்ததும், பாபா அவரிடம், "**நீங்கள் டோங்காவில் செல்லாமல், இன்று குமாரின் வீட்டிற்கு சைக்கிளில் சென்று செய்தியைச் சொல்லுங்கள்**" என்று அறிவுறுத்தினார்.

கேக்கி உடனே, "ஏழு வருடங்களில் நான் சைக்கிளில் செல்வது இதுவே முதல் முறை" என்றார்.

"**இன்று முதல் இன்னும் ஏழு ஆண்டுகளுக்கு சைக்கிள் பயன்படுத்த வேண்டாம்**" என்று பாபா கட்டளையிட்டார். பாபா கூறியபடி கேக்கி, குமாரின் இல்லத்திற்கு சைக்கிளில் சென்றார்.

நேற்று மாலை மாஞ்ஜ்ரி மா:்பியிலும் குழப்பம் ஏற்பட்டது. சுபத்ராவிடம் கேக்கிக்கு உணவு கொடுக்கக் கூறிவிட்டு, குமார் கிணற்று வேலையை கவனிக்கச் சென்றிருந்தார். மாலை ஏழு மணியளவில் வீடு திரும்பிய அவர், மனைவி மனக்கலக்கத்துடன் இருப்பதைக் கண்டார். என்ன பிரச்சினை என்று அவரிடம் கேட்டபோது, அச்சத்தில், பாபாவின் உணவை அனுப்பியதில் தவறு நடந்திருப்பதாகக் கண்ணீருடன் வெளிப்படுத்தினார்.

இதனால் மனமுடைந்த குமார் தனது மனைவியை அறைந்தார். பாபாவின் இரவு உணவிற்கான நேரம் கடந்துவிட்டது, இப்போது உணவை அனுப்புவதானால், பாபா அதை உண்ணமாட்டார் என்பது அவருக்குத் தெரியும். குமார் இரவு முழுவதும் பதட்டமாக இருந்ததோடு, பாபா வருத்தப்படுவார் என்ற கவலையுடன் படுக்கையில் சாய்ந்தவர் அப்படியே தூங்கிவிட்டார்; கனவில் 'மிஸ்டர் கடவுள்' (MR. GOD) தோன்றி, '**கவலைப்படாதீர்கள்; நான் உங்களை மன்னித்துவிட்டேன்**' என்றார்.

குமார் திடுக்கிட்டு எழுந்தார். அவர் கண்ட கனவில் சிறிதும் நம்பிக்கை இல்லாமல், இரவு முழுவதும் அங்கும் இங்கும் புரண்டு, தூக்கம் வராமல் சிரமப்பட்டார். ஆனால் பொழுது விடியும் முன்பு, கேக்கி தேசாய், குமார் வீட்டிற்கு சைக்கிளில் சென்று, பாபாவின் செய்தியை வழங்கினார்: "பாபா என்னை உங்களிடம் அனுப்பியுள்ளார், நீங்கள் கவலைப்பட வேண்டாம் என்றும் அவர் உங்களை மன்னித்துவிட்டதாகவும் கூறுகிறார்."

இந்தச் செய்தியை வழங்கிய பிறகு, கேக்கி டெஹ்ராடூனுக்குப் புறப்பட்டார். திடுக்கிட்டுக் கண் விழித்த குமார், கடவுளின் கருணையை எண்ணி வியப்பில் ஆழ்ந்தார். குமாரை சமாதானப்படுத்தவே பாபா, கேக்கியை ஐந்து மைல் தூரம் அனுப்பியுள்ளார்.

பதினோரு மணியளவில் குமார் உணவை டெஹ்ராடூனுக்குக் கொண்டு வந்தபோது, பாபா, "**கவலைப்படாதீர்கள்; நான் உங்களை மன்னித்துவிட்டேன்**" என்று திரும்பத் திரும்ப எடுத்துரைத்தார். ஆனால் அதைத் தொடர்ந்து பாபா,

"சொல்லுங்கள், உங்கள் மனைவி எனக்கு உணவை அனுப்பாததால் நீங்கள் வருத்தப்பட்டீர்களா?" என வினவினார்.

"ஆம், பாபா," குமார் ஒப்புக்கொண்டார்.

"நீங்கள் கோபமாக இருந்தீர்களா?"

"ஆம்."

"கடுங்கோபமா?"

"ஒருவேளை!"

"நீங்கள் அவரை அறைந்தீர்களா?"

"ஒன்று அல்லது இரண்டு அறைகள்...." என்றதும்,

பாபா உணவைத் தள்ளிவைத்து, **"அப்படியானால் என்னால் இந்த உணவை ஏற்றுக்கொள்ள முடியாது"** என்று சைகையால் தெரிவித்தார். குமார் பாபாவிடம் அதை ஏற்றுக்கொள்ளும்படி கெஞ்சினார்: "பாபா, இனி ஒருபோதும் சுபத்ராவை அறையமாட்டேன்!" என்று கூறி, மனமுவந்து உறுதியளித்தார். அன்று முதல், குமார் தனது 'மிஸ்டர் கடவுளை', "பாபா" என்று அழைக்கத் தொடங்கினார் - தொடர்ந்து நடந்த கடிதப் பரிமாற்றத்தில் அவர் எப்பொழுதும் பாபாவை "பிரியமான கடவுள்" (BELOVED GOD) என்றே அழைத்தார்.

மாஞ்ஜ்ரி மாஃபி & டெஹ்ரா டூன்

(Manjri Mafi & Dehra Dun)

1949 நவம்பர் மாதம் முதல் பாபாவிற்காக வாங்கப்பட்ட மாஞ்ஜ்ரி மாஃபி மனையில் கைக்கோபாத் தங்கியிருந்தார். ஆனால், கிணறு, தோழர்களுக்கான குடில்கள் மற்றும் பெண்மணிகளுக்கான தற்போதைய கட்டமைப்பின் விரிவாக்கம் இன்னும் முடிக்கப்படவில்லை. 1950 ஜனவரி 15 அன்று, ஆதி, எரச், கேக்கி நலவாலா, கேக்கி தேசாய் ஆகியோருடன் பாபா, நிலத்தை பார்வையிடச் சென்றார். வழியில் குமாரின் இல்லத்தில் அவரின் தாயார், மனைவி மற்றும் சகோதரியைப் பார்த்துவிட்டு கைக்கோபாத்தை சந்தித்தார். மாஞ்ஜ்ரி மாஃபி கிராமத்தில் வாழ்ந்த மஹந்த் (MAHANT, மதப் பிரிவின் தலைவர்) ஜம்னாதாஸின் (JAMNADAS) இல்லத்திற்கும் அவர் சென்றார். அங்கு, மாஞ்ஜ்ரி மாஃபி குடியிருப்புத் தயாராகும் வரை, பாபா தோழர்களுடன் தங்கவிருந்தார். திருமதி பிராட்டின் பங்களாவிற்குத் திரும்பும் வழியில், கேக்கி நலவாலா மற்றும் புர்ஜர் சாச்சாவின் இல்லங்களுக்கும் பாபா விஜயம் செய்தார்.

அதே நாளில், பாபா, மூன்று புதிய திட்டங்களைத் தோழர்களுக்கு வெளிப்படுத்தினார்:

இந்த மூன்று மாதங்களில், எனது புது வாழ்வின் வழிமுறைகளைப் பார்த்திருக்கிறீர்கள், மேலும் புது வாழ்வை வாழ, நீங்கள் எவ்வளவு பொருத்தமானவர்கள் என்பதையும் அனைவரும் கண்டுகொண்டீர்கள். எனவே, நானும், நீங்களும், இந்த மூன்று மாதங்களை மனத்திரையில் வைத்து, நான் உங்கள் முன் வைக்கப் போகும் மூன்று திட்டங்களைப் பற்றி இப்போது முடிவு செய்ய வேண்டும். நீங்கள் அனைவரும் நேர்மையாகவும் முழு மனதுடன் இந்த மூன்று திட்டங்களையும் முழுமையாகப் பரிசீலிக்க வேண்டும். அவை எனது சொந்த விருப்பத்தில் உருவானவை, எனது சொந்த உடன்பாட்டின் பேரில் உள்ளவை, அவற்றில் ஒன்றை எனது விருப்பம் மற்றும் கட்டளையாக நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்தத் திட்டங்களில் ஒன்றைக் கூட்டாகவோ அல்லது தனித்தனியாகவோ ஏற்றுக்கொள்வதன் மூலம், புது வாழ்வில் நீங்கள் இன்னும் 100 சதவீதம் எனது தோழர்களாக இருப்பீர்கள்.

இந்த மூன்று திட்டங்களும் எனது சுய வழியில் புது வாழ்வை வாழத் தேவையான சுதந்திரத்தை எனக்கு வழங்குகின்றன, மேலும் உங்களை 100 சதவீதம் புது வாழ்வை வாழ வழிவகுக்குகின்றன. மூன்று திட்டங்களில் ஒன்றை ஏற்றுக்கொள்வதன் மூலம், நீங்கள் என்னை மகிழ்ச்சியாகவும் சுதந்திரமாகவும் இருக்கச் செய்வதோடு, புது வாழ்வில் இன்னும் எனது தோழர்களாக இருப்பீர்கள்.

மூன்று திட்டங்களும் உடல் உழைப்பின் கட்டத்தை அடிப்படையாகக் கொண்டவை. உணவுக்காக யாசித்தல், நாடோடி மற்றும் லங்கோட்டி வாழ்க்கையின் இதர மூன்று கட்டங்களும், தனிப்பட்ட முறையில் நான் தனியாகவோ அல்லது என்னுடன் புது வாழ்வின் துணையாக இருக்கும் தோழர்களுடனோ மேற்கொள்ளப்படும்.

எனவே, தோழர்கள், இந்தத் திட்டங்களில் ஒன்றை ஏற்றுக்கொள்வதன் மூலம் - குறிப்பாக 'ஒன்று-ஏ' எனும் திட்டத்தில் - புது வாழ்வின் நான்கு கட்டங்களையும் கடந்துவிட்டதாகக் கூறப்படும்; மேலும் அவர்கள் எனக்கான 'உடல் உழைப்பு' கட்டத்தில் ஈடுபடும் அதே வேளையில், நானும் 'உடல் உழைப்பு' கட்டத்தை கடந்துவிட்டேன் என்று கூறப்படுகிறது.

முதல் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டால், உங்கள் செயல்பாடுகளில் நான் குறுக்கிடாமல் அல்லது எனது கட்டங்களில் உங்களைத் தலையிட விடாமல் நீங்கள் அனைவரும் என் அருகில் இருக்கலாம் அல்லது என்னிடமிருந்து விலகி இருக்கலாம். நான் 100 சதவீத விருப்பத்துடன், எந்த விதத்திலும் கட்டுப்படாமல், உங்களுக்கு வழிகாட்டி உதவுவேன்.

இந்த மூன்று திட்டங்களிலும், 'கடவுளின் முன்னால் பொறுப்பேற்றுக்கொள்வது' மற்றும் 'ஆன்மீக நன்மை அடையப் பெறாமல் இருப்பது' என்ற இரண்டும் எப்போதும் சிறப்புடன் நிலைத்து நிற்கும்.

பாபா, மூன்று திட்டங்களின் விவரங்களை கோடிட்டுக் காட்டினார். **"ஒன்றாவது திட்டத்தில், ஆண் தோழர்கள் ஒன்றாக வாழ வேண்டும், தங்கள் வாழ்வாதாரத்திற்காக உழைத்து சம்பாதிக்க வேண்டும்."**

"இரண்டாவது திட்டத்தின் படி, அவர்கள் பணியில் அல்லது வணிகத்தில் ஈடுபடும் தருணத்தில் சுதந்திரமாகத் தத்தமது வீடுகளில் புது வாழ்வை நடத்தலாம்."

"மூன்றாவது திட்டத்தில், பாபா வகுத்த அனைத்து அசல் நிபந்தனைகளையும் தோழர்கள் பின்பற்றலாம். திட்டங்களின் நகல்கள் ஒரு வாரத்திற்குள் அனைவருக்கும் வழங்கப்படும்" என்றும், **"அப்போது மேலும் தேவையான விவாதங்கள் நடத்தப்படும்"** என்றும் பாபா கூறி முடித்தார்.

ஆண், பெண்மணிகளுடன் டெஹ்ராடூனை விட்டு வெளியேறிய பாபா, ஜனவரி 16ஆம் தேதி தலைமையகத்தை மஹந்த் ஜம்னாதாஸின் இல்லத்திற்கு மாற்றினார். இந்த நேரத்தில் கேக்கி தேசாய் டெல்லி திரும்புமாறு அறிவுறுத்தப்பட்டார்.

காக்கா படுத்த படுக்கையாக இருந்ததால், தோடி ஸிங்கின் குடும்பத்தினர் முந்தைய நாள் வந்து மிகச்சிறந்த உணவைத் தயார் செய்து அனுப்பியிருந்தனர். ஆனால் பாபா நான்கு நாட்கள் மட்டுமே உணவு தயார் செய்ய தோடி ஸிங்

குடும்பத்தினரை அனுமதித்தார். 21ஆம் நாள் அவர்கள் மீண்டும் அலிகாருக்குத் திரும்பிச் சென்றதைத் தொடர்ந்து, சுபத்ரா உணவு வழங்கினார்; அதன் பிறகு, நான்கு பெண்மணிகளும் சமையல் செய்வதற்கான ஏற்பாடு செய்யப்பட்டது.

பெண்டு, டாக்டர் டான், சதாஷிவ், பைதூல், அலோபா ஆகியோர் கூண்டுவண்டி, டோங்காக்கள் மற்றும் காளை வண்டியுடன் 1950 ஜனவரி 20 அன்று வந்தனர். பாபாவின் அருள் நிறைந்த பார்வை அவர்களை 'மரணத்தின் தாடை'களிலிருந்து காப்பாற்றியது. வழியில் யாரோ ஒருவர் நஜிபாபாத்திலிருந்து டெஹ்ராடூனுக்குச் செல்லும் ஒரு குறுக்கு வழியைப் பரிந்துரைத்தார், மேலும் பிரதான சாலையில் இருக்குமாறு அறிவுறுத்திய பாபாவின் ஆலோசனையைக் கருத்தில் கொள்ளாமல், அவர்கள் அந்தப் பாதையை தேர்ந்தெடுத்தனர். ஒரு தனிமையான காட்டில், ஓடை ஒன்றைக் கடக்கும் வேளையில், கூண்டுவண்டியின் சக்கரங்கள் சிக்கி, சேற்றிலிருந்து வெளியே எடுக்க முடியாமலாயிற்று.

என்ன செய்வது என்று தெரியாத நிலையில், முடிவை டாக்டர் டானிடம் விட்டுவிடுமாறு பெண்டு பரிந்துரைத்தார். டாக்டர் டான் மரக்கிளைகளை வெட்டி, பாதையில் நிரப்புமாறு அறிவுறுத்தியதை அனைவரும் ஒப்புக்கொண்டு அப்படியே செய்தனர். வேலை கடினமாக இருந்தது, அவர்கள் முடிப்பதற்குள் பொழுதும் சாய்ந்துவிட்டது. குடிப்பதற்குக் கூட நீர் கிடைக்கவில்லை - எதையேனும் சமைப்பது என்ற கேள்விக்கே இடமில்லை. ஒரு குழியில் தண்ணீர் இருப்பதை டான் கவனித்தார், ஆனால் அது அசுத்தமாக இருந்தது. இருந்தும், அலோபாவிடம் பதினைந்து நிமிடம் அதைக் கொதிக்க வைத்து தேநீர் தயார் செய்யக் கூறினார். அலோபா பணியை விரைந்து பதினைந்து நிமிடங்களில் முடித்தார்; அதீத தாகத்துடன் இருந்த அவர்கள் அதை எப்படியோ அருந்தினர். பல முயற்சிகளுக்குப் பின்னர், அவர்களால் கூண்டுவண்டியை மீட்க முடிந்தது. ஆனால் புலிகளும், கரடிகளும் வாழும் காட்டில் இப்போது இருள் நிரம்பிவிட்டது.

கும்மிருட்டான பாதை வழிச் சென்ற அவர்கள் அதிர்ஷ்டவசமாக ஒரு வனக் காவலரின் குடிசையை வந்தடைந்த போது, காவலாளர் தூங்கிக் கொண்டிருந்தார், கதவு உள்ளே தாழ்ப்பாள் இடப்பட்டிருந்தது.

காவலர் விழித்தெழுந்ததும், தோழர்கள் அங்கே இரவைக் கழிக்க விரும்புவதாகக் கூறியதற்கு அவர் ஒப்புக்கொண்டார், ஆனால், உடன் இருந்த விலங்குகள் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பது மிகவும் ஆபத்தானது என்று கூறினார். காவலர் விளக்கை ஏற்றி, விலங்குகளை வட்டமாகக் கட்டிய பிறகு, மூன்று வாகனங்களிலும் சாமான்கள் நிரம்பியிருந்ததால், கூண்டுவண்டி, டோங்கா மற்றும் காளை வண்டியின் கீழ் தோழர்கள் தூங்கினர். புலிகளின் உறுமல் சத்தம் அவ்வப்போது கேட்டது. உறையும் குளிரில் தரையில் சாய்ந்து, பாதுகாப்புக்காக, பாபாவை நினைவு கூர்ந்தனர்.

பொழுது விடிந்ததும் அந்த இடத்தை விட்டு வெளியேறினர். சில நேரங்களில் மழையில் நனைந்தனர். இவ்வாறு, மிகுந்த சிரமங்களைக் கடந்து, எட்டு நாள் பயணத்திற்குப் பிறகு தோழர்கள் மாஞ்ஜ்ரி மா:பிக்கு வந்தனர். பாபாவின் தனிமுதலான அறிவுரையைப் பின்பற்றாததால், அவர்கள் இந்த சிரமங்களை சந்திக்க வேண்டியிருந்தது; ஆனால் இது அனைவருக்கும் பாடமாக அமைந்தது. பெண்டு, பைதூல் போன்ற துணிச்சலான மனிதர்கள் பாராட்டும் அளவிற்கு மிகப்பெரிய தைரியத்தை டாக்டர் டான் வெளிப்படுத்தினார்.

இதர தோழர்களும் இதனால் வெகுவாக ஈர்க்கப்பட்டனர். டாக்டர் கனி தனது நாட்குறிப்பில், "வண்டிகள், காளைகள், டோங்காக்கள், கூண்டுவண்டி, டான் மற்றும் குழுவின் பயணத்தில் விளைந்த சோதனைகள், அனுபவங்கள், மணல், சேறு மற்றும் சீரற்ற இரண்டாம் தர, 24 மைல் தொலைதூரத்தை உள்ளடக்கிய குறுகிய சாலைகள் - ஹரித்வாரை நோக்கிச் செல்லும் உயரமான மலைகள், இதைக் கதையாக விவரிப்பதானால் கேட்பவர்களைத் திகைக்க வைக்கும். இத்தகைய சிரமங்களும் இடர்பாடுகளும் மிகவும் விசித்திரமானவை, நம்பமுடியாதவை, முற்றிலும் எதிர்பாராதவை...

"டான் மாதிரியான மனிதர் - ஸஹாரா பாலைவனத்தின் 1500 மைல்களைக் கடந்து, (அவருடைய 21 வயதில்) கஷ்டங்களை எதிர்கொண்ட அனுபவத்துடன் ஒப்பிடுகையில் - அவர்கள் கடந்து வந்த சிரமங்கள் நம்பமுடியாதவை என்று கூறுவது, சம்பந்தப்பட்ட அனைவரையும் கவர்ந்தது."

'பின்பற்றப்படுவதற்கு உகந்ததான புது வாழ்வில் டான் தனக்கான அன்பின் உதாரணத்தை அளித்ததாக' பாபா பின்னர் கூறினார்.

மாரடைப்பிலிருந்து மீண்டு வந்த காக்கா பாரியாவை ஓய்வெடுக்குமாறு டாக்டர் டான் மற்றும் டாக்டர் நீலு அறிவுறுத்தினர். ஆனால் புது வாழ்வின் அடுத்த கட்ட ஆயத்தப் பணிகளின் தீவிரச் செயலில், உடன் இருந்தவர்களால் அவரை சரியாகப் பேணி பாதுகாக்க முடியவில்லை. பாபா, நிச்சயமாக, காக்காவைப் பொறுத்தவரையில் மிகுந்த கவனத்துடன் இருந்தார், ஆனால் காக்கா மனச்சோர்வுடன் காணப்பட்டார். ஒரு நாள், சோகமான மனநிலையில் இருந்த காக்கா, திடீரென வெளியேறினார். அவரிடம் ஒரு நயாபைசா கூட இல்லை, ஆனால் அவர் ரிஷிகேஷை நோக்கி நடக்க ஆரம்பித்தார். வழியில், அவர் அந்நியர் ஒருவரிடம் வழி கேட்டபோது, அன்பான அந்த மனிதர் வழியைக் காட்ட, அவருடன் நடந்து சென்றார். இருவரும் ஒரு சிறிய உணவகத்தை கடந்து சென்ற வேளையில், அந்த நபர் காக்காவை தேநீர் அருந்தக் கோரினார். கையில் பணம் இல்லாமல் காக்கா அதைப் பணிவாக மறுத்தார். அவர் நீரோடை வழியாகச் சென்ற வேளையில் அந்த நீரைப் பருகினார்; ஆறு மைல் நடந்த பிறகு, சோர்வுடன் அமர்ந்தார்.

நம்பிக்கை இழந்த நிலையில், அவர் புது வாழ்வு நிபந்தனைகள் மற்றும் அவரது உறுதிமொழியைப் பற்றி சிந்தித்தார். மனம் தளர்ந்த சிந்தனைகள் கடைசியாக அவரைத் திரும்பி வருமாறு கட்டாயப்படுத்தியது, அன்று மாலை அவர் மாஞ்ஜ்ரி மாஃபிக்குத் திரும்பி வந்ததை பாபா கண்டதும், **"நீங்கள் எங்கே போவீர்கள்? உங்களால் 'போக' முடியாது, 'சாக' முடியாது! நீங்கள் இன்னும் நீண்ட காலம் வாழ வேண்டும்!"** பாபாவின் வார்த்தைகள் காக்காவை மீண்டும் உற்சாகப்படுத்தின, டாக்டர் நீலு அவரை நன்கு கவனித்து நடத்தத் தொடங்கினார்.

மூன்று திட்டங்களும் தட்டச்சு செய்யப்பட்டு **1950** ஜனவரி **21**அன்று ஒவ்வொருவருக்கும் பிரதிகள் வழங்கப்பட்டன. இரண்டு நாட்களுக்குப் பிறகு நடந்த கூட்டத்தில் திட்டங்கள் விவாதிக்கப்பட்டன; கூட்டம் அடுத்த நாளும் தொடர்ந்தது. நான்கு தோழர்கள், டாக்டர் கனி, ஆதி சீனியர், அண்ணா **104** மற்றும் பாபாதாஸ் இரண்டாவது திட்டத்தைப் பின்பற்றி, தத்தமது இல்லங்களில் இருந்து புது வாழ்வைத் தொடர முடிவு செய்தனர்.

அவர்கள் ஜனவரி **25**ஆம் நாள் அவரவர் இடங்களுக்கு - டாக்டர் கனி லோனவாலாவிற்கும், ஆதி சீனியர் மற்றும் அண்ணா **104** அஹமதுநகருக்கும், பாபாதாஸ் நாக்பூருக்கும் புறப்பட்டுச் சென்றனர். புறப்படுவதற்கு முன்பு, பாபா ஒவ்வொரு தோழரையும் அரவணைத்துக் கொண்டார். ஆதியின் கண்களில் நீர் பெருக்கெடுத்தது.

மூன்றாவது திட்டத்தைப் பின்பற்றி, அலோபா, பைதூல், எரச், முரளி, டாக்டர் நீலு, பெண்டு, சதாஷிவ், விஷ்ணு, பெண்மணிகளில் மெஹரா, மணி, மெஹரு, கோஹெர் நால்வரும் பாபாவுடன் மாஞ்ஜ்ரி மாஃபியில் தங்கி, தனிமுதல் நிபந்தனைகளின்படி புது வாழ்வு வாழ வேண்டும்.

இரண்டாவது திட்டத்தைப் பின்பற்றி, டாக்டர் டான் டெஹ்ராடூனில் தங்கி, ஒரு மருத்துவமனையைத் திறந்து, மருத்துவராகப் பணியாற்ற வேண்டும். காக்காவும் குஸ்தாஜியும் பாபாவுடன் இருக்க வேண்டியிருந்தாலும், அவர்கள் தங்கள் பழைய வாழ்க்கை சுதந்திரத்தை மீண்டும் பெற முடிவு செய்தனர். அவர்களின் பராமரிப்பை டாக்டர் டான் பார்த்துக்கொள்ள வேண்டும்.

அண்ணா **104** புறப்படும் வேளையில் குஸ்தாஜியின் மூட்டைகளில் ஒன்றை தவறுதலாக எடுத்துச் சென்றது, மௌனமாக இருந்த குஸ்தாஜியைக் கோபத்திற்குள்ளாக்கியது; ஆனால் அடுத்த நாள் அவர் தனது குழப்பமான நிலையை கை சைகைகளால் வெளிப்படுத்தியது பாபாவை மிகவும் மகிழ்வித்தது.

குஸ்தாஜி, குறிப்பிட்டதற்கு இணங்க இப்போது திட்டம் **'1-பி' (1-** B)யைப் பின்பற்றி வருகிறார், இதன் மூலம் அவர் தனது பழைய பழக்கவழக்கங்களையும், சுதந்திரத்தையும் திரும்பப் பெற்றார். பழைய வாழ்க்கையில் நடந்ததைப் போலவே, குஸ்தாஜி நாள் முழுவதும் காகிதத் துண்டுகள், வெற்று தீப்பெட்டிகள்,

வெற்று சிகரெட் பாக்கெட்டுகள், எரிந்த தீக்குச்சிகள், கந்தல்கள் மற்றும் பலவற்றை நெருப்பு வளர்ப்பதற்காகப் பயன்படுத்தி வந்தார். குஸ்தாஜி மௌனமாக இருந்து, படிக்கத் தடை விதிக்கப்பட்டதாலும், குறிப்பிட்ட கடமை ஏதுமின்றி இருந்ததாலும், நேரத்தைக் கடத்துவது என்பது சிரமமான காரியமாக இருந்தது. எனவே, அவர் அத்தகைய குப்பைகளை சேகரிப்பதில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, தண்ணீரை சூடாக்க குப்பைக் கூளங்களை எரிபொருளாகப் பயன்படுத்தினார்.

ஜனவரி 25 அன்று, பாபா, அவருடன் உடல் ரீதியாகத் தங்குவதற்கான மூன்றாவது திட்டத்தைத் தேர்ந்தெடுத்தவர்களிடம் இவ்வாறு கூறினார்: **"உங்கள் இதயத்தையும் ஆன்மாவையும் இந்தத் திட்டத்தில் முற்றிலுமாக ஈடுபடுத்தி, சந்தேகம், குற்ற உணர்வு அல்லது தயக்கம் எதுவுமின்றி அதைச் செயல்படுத்துங்கள். மார்ச் 1 முதல் நான் உங்களிடம் மிகவும் கண்டிப்பாக இருப்பேன். நிபந்தனைகளைக் குறித்து அலட்சியமாக இருப்பவர்கள் மற்றும் உத்தரவுகளை மீறுபவர்கள் தமது இல்லங்களுக்குத் திருப்பி அனுப்பப்படுவார்கள்."**

விஷ்ணு, பாபாவால் வீட்டு விவகாரங்களின் மேலாளராக நியமிக்கப்பட்டு, ஆண், பெண்மணிகளுக்குத் தேவையான பொருட்களை பஜாரிலிருந்து வாங்கிவரும் பொறுப்பாளராக இருந்தார். பிப்ரவரி இறுதி வரை தோழர்களின் உணவுக்கான செலவுகளைச் சமாளிக்க ஒரு தொகை நிர்ணயிக்கப்பட்டது. அந்தத் தொகை முழுவதுமாகச் செலவழிக்கப்பட்டதும், பாபா அனைத்து தோழர்களையும் உணவுக்காக யாசிக்க வெளியே அனுப்புவதாகக் கூறினார். பெண்டு, சதாஷிவ் ஆகியோருக்கு டான் சார்பாக டோங்கா, விலங்குகள் மற்றும் மாட்டு வண்டிகளை விற்கும் பணி வழங்கப்பட்டது. டான் விலங்குகளின் பொறுப்பாளராக இருந்தார், ஆனால் பாபா அவரை, நாஜாவை அழைத்து வர மும்பைக்கு அனுப்பினார். மணி, மெஹரு இருவரும் உடல்நலமின்றி இருந்ததால், பாபா மற்றும் பெண்மணிகளுக்கு வேண்டிய உணவைத் தயார் செய்வதில் உதவுவதற்காக நாஜா அழைக்கப்பட்டார்.

நாஜா அக்டோபர் மாதம் முதல் அர்னவாஸ், நரிமன் ஆகியோருடன் தங்கியிருந்தார். அலோபா, பைதூல், முரளி மூவரும் சமையல் துறையின் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டனர். எரச், பெண்மணிகளின் தேவைகளை கவனித்துக் கொண்டார். கனி இல்லாத நிலையில், நீலு தினசரி குறிப்பை எழுதுவதோடு, டான் திரும்பி வரும் வரை காக்காவின் உடல்நிலையையும் கண்காணிக்க வேண்டும். அலோபா, பைதூல், முரளி, நீலு, பெண்டு, சதாஷிவ், விஷ்ணு ஆகியோர் பெண்மணிகளின் குடியிருப்புக்கு அருகாமையில் ஒரு மணி நேரம் கண்காணிப்பாளர் பணியில் ஈடுபட வேண்டும்.

மூன்று 'கேக்கி'கள் (அதாவது கைக்கோபாத் தஸ்தூர், நலவாலா மற்றும் தேசாய்) இருந்ததால், குழப்பத்தைத் தவிர்க்க பாபா அவர்களுக்கு மூன்று வெவ்வேறு செல்லப்பெயர்களை வழங்கினார்: கைக்கோபாத் - கேக்கோ (KEKO), நலவாலா - கேக்கா (KEKA), தேசாய் - கேக்கி (KEKI).

அன்று மாலையில் 'கேக்கா' நலவாலா, எல்சா மிஸ்திரி, புர்ஜர் சாச்சா ஆகியோர் பாபாவை சந்திக்க வந்தனர். பாபா அவர்களிடம் கூறினார்: **"தோடி ஸிங், ஹர்ஜீவன் லால், கிஷன் ஸிங் ஆகியோரிடமிருந்து பெருமளவில் உணவைத் தானமாக ஏற்றுக்கொள்வதை நான் நிறுத்திவிட்டேன். இந்த முறையில் தானம், பழைய மற்றும் புது வாழ்வுக்கு இடையே ஒரு சமரசம் செய்து கொண்டது போலத் தெரிகிறது.**

"நீங்கள் எப்போது வேண்டுமானாலும் என்னைப் பார்க்க வரலாம், ஆனால் தரிசனத்திற்காக உங்களுடன் பார்வையாளர்களை அழைத்து வராதீர்கள்" என்று பாபா மேலும் கூறினார்.

இந்தக் காலகட்டத்தில், ஜகன்நாத் என். ஹெலன் (JAGANNATH N. HELAN) மற்றும் வீரேந்திர பாண்டே (VIRENDRA PANDE) ஆகியோரும் பாபாவின் தரிசனத்திற்காக அனுமதிக்கப்பட்டனர்; அதே போல, கிராமத்தின் மஹந்த் ஜம்னாதாஸ் என்பவரும் வருகை தந்தார். ஜம்னாதாஸ் ஒரு மரியாதைக்குரிய உள்ளூர் ஜமீன்தார், படித்த, அறிவார்ந்த தனிநபர்.

குமார் தினமும் பாபாவை சந்திக்க வருவது வழக்கம். குமார் குடும்பத்தினர் பாபாவின் அரவணைப்பில் நெருங்கி வந்து, அவருடைய லட்சியத்திற்காக தங்கள் வாழ்க்கையை அர்ப்பணிக்க ஆயத்தமாயினர். அனைத்தையும் விட்டுவிட்டு, குமார் புது வாழ்வில் இணைய ஆர்வமாக இருந்தார், ஆனால் பாபா அவருக்கு இன்னும் நிறைய பணிகள் இருப்பதால் காத்திருக்குமாறு கட்டளையிட்டார்.

ஜனவரி **22** அன்று டெல்லியைச் சேர்ந்த கிஷன் ஸிங் தனது தோழி பிரகாஷ்வதி ஷர்மாவின் (PRAKASHWATI SHARMA) தாயார் மற்றும் கிஷனின் மகன் மதன் (MADAN) ஆகியோர் மூலமாக, பல பொருட்களை அனுப்பி வைத்தார். ஒரு சில பொருட்களாகிய போர்வைகள் மற்றும் துண்டுகளை மட்டும் வைத்துக்கொண்டு இதர பொருட்களை (சவரம் செய்ய உதவும் கருவிகள், கைக்கடிகாரம் போன்றவை), கிஷன் இனி எதையும் அனுப்பக் கூடாது என்ற அறிவுறுத்தலுடன், திருப்பி அனுப்பி வைத்தார்.

டெல்லியைச் சேர்ந்த வாஸ் தேவ் கெய்னும் சில பொருட்களை பாபா மற்றும் தோழர்களின் பயன்பாட்டிற்காக கொண்டு வர விரும்பினார். ஜனவரி **25**ஆம் தேதிக்குப் பிறகு முற்றிலும் அவசியமானதைத் தவிர வேறு எதையும் ஏற்கக் கூடாது என்ற பாபாவின் முடிவிற்கேற்ப, அவர் கெய்னின் தானத்தை

விரும்பவில்லை, ஆனால் அந்த மனிதரின் பக்தி மற்றும் ஆழ்ந்த உணர்வுகளைக் கருத்தில் கொண்டு, பாபா இறுதியில் அவரது விருப்பத்தை ஏற்றுக்கொண்டார்.

1950 ஜனவரி **27**ஆம் தேதி, சில பொருட்களை எடுத்து வருவதற்காக டாக்டர் டான் மெஹராபாத்திற்குப் புறப்பட்டுச் சென்றார்; திரும்பி வரும் வேளையில் நாஜாவை உடன் அழைத்து வரவும், டெஹ்ராடூனில் அமைந்த தனது மருத்துவமனைக்குத் தேவையான மருந்துகள் மற்றும் உபகரணங்களை வாங்கவும் மும்பைக்குச் சென்றார்.

மறுநாள் மாலை, கைக்கோபாத்தை சந்திக்கவும், அங்கு நடந்துவரும் பணியின் முன்னேற்றத்தை ஆய்வு செய்யவும் பாபா மாஞ்ஜ்ரி மா.ஃபி மனைக்கு விஜயம் செய்தார்.

குமாரிடம் கட்டுமானப் பணிகளை விரைவுபடுத்தி மார்ச் **1**ஆம் தேதிக்குள் அனைத்தையும் கட்டி முடிக்குமாறு அறிவுறுத்தப்பட்டது.

பெண்டு, டோங்காக்கள், குதிரைகள் போன்றவற்றை விற்பதில் பெரும் சிரமத்தை சந்தித்தார். அவர் பைதூலுடன் தினமும் பஜாருக்குச் சென்றும், அவற்றிற்கு எவரும் அதிகம் பணம் கொடுக்கத் தயாராக இல்லை. இறுதியாக, பாபா ரூ **1,200** விலை நிர்ணயம் செய்தார். பிப்ரவரி **3** அன்று, அந்த விலையில் டோங்காக்கள் மற்றும் குதிரைகளை விற்பதில் அவர்கள் வெற்றி கண்டனர்.

'மழலைகள் உலகம்**'** (NANHI DUNIYA – LITTLE WORLD) என்று அழைக்கப்பட்ட டெஹ்ராடூனில் அமைந்த, காதுகேளாத மற்றும் வாய் பேசாத குழந்தைகளுக்கான பள்ளிக்கூடத்தின் நிறுவனரான, குமாரின் நண்பர் பேராசிரியர் **'**லேக் ராஜ் உல்.ஃபத்**'** (LEKH RAJ ULFAT) என்பவருக்கு வழங்கிய ஒன்றைத் தவிர இதர அனைத்து காளைகளும் இலவசமாக வழங்கப்பட்டன. லேக் ராஜுக்கு பாபா இவ்வாறு அறிவுரை வழங்கினார், **"அப்பாவி குழந்தைகளுக்காக நீங்கள் செய்யும் பணி, கடவுளின் பார்வையில் போற்றத்தக்கது. அனைத்தையும் தைரியமாகச் செய்யுங்கள், முடிவுகளைக் கடவுளிடம் விட்டு விடுங்கள்."**

இந்த நேரத்தில், கூண்டுவண்டி, மாட்டு வண்டி மற்றும் காளை (ராஜா) மட்டுமே புது வாழ்வு தோழர்களுடன் எஞ்சியிருந்தன.

1950 பிப்ரவரி **4**, சனிக்கிழமை காலை சிற்றுண்டிக்குப் பிறகு, **'**மூன்றாவது**'** திட்டத்துடன் தொடர்பான மனநிலைகள், சந்தேகங்கள் மற்றும் சமுசயங்களைப் பற்றி பாபா தனது தோழர்களுக்கு விளக்கினார்:

உடல் நோய், தூக்கமின்மை போன்றவை, மன விரக்தியையும், மனச்சோர்வையும் உருவாக்கும், சில சமயங்களில் மனநிலையை சீர்குலைத்து சிடுசிடுப்புடன் இருக்கச் செய்யும் என்பதை யாராலும் மறுக்க முடியாது, இது இயற்கையாக நிகழ்வது, இந்த நிலை ஒரு குறையாகக்

கருதப்படமாட்டாது; ஆனால், இது போன்ற சிரமங்களையும், சிக்கல்களையும் பொறுத்துக்கொள்வதால் கோபம், எரிச்சல் போன்றவை விளையுமாயின், அது ஒரு தவறாகக் கருதப்படும். அத்தகைய தவறு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. திட்டம் மூன்றின் கீழ் உள்ள தோழர்களை எங்கு வேண்டுமானாலும் அனுப்ப எனக்கு முழு சுதந்திரம் உள்ளது, அல்லது எதிர்காலத்தில் எந்த நேரத்திலும் இதர திட்டங்களின் கீழ் செல்லுமாறு உத்தரவிடலாம்; அல்லது கிழக்கு, மேற்கு என்று நான் எங்குச் சென்றாலும் சில தோழர்களை என்னுடன் அழைத்துச் செல்லலாம், பிற தோழர்களை வேறு எங்கேயேனும் இருக்கச் செய்யலாம். உங்கள் சுயநலம், தவறான எண்ணங்கள் அல்லது சரியான புரிதல் இல்லாத காரணங்களால், இந்த நகர்வுகள் மற்றும் எனது கட்டளைகள் பற்றிய சந்தேகங்களும், சமுசயங்களும் உங்கள் மனதில் எழுந்தால், நீங்கள் 'கீழ்படியாதவர்கள்' என்று கருதப்படுவீர்கள். திட்டம் மூன்றின் கீழ் புது வாழ்வு என்பது எனது அன்றாட உத்தரவுகள் மற்றும் முதல்நிலை நிபந்தனைகளுக்கு முழுமையாக, இம்மியும் தவறாமல் கீழ்ப்படிதல் ஆகும். இத்தகைய கீழ்ப்படிதலுடன் ஒப்பிடுகையில், உடல் ரீதியாக என்னுடன் இருப்பதற்கு எந்த முக்கியத்துவமும் மதிப்பும் இல்லை."

பாபா, அவர்களின் முடிவுகளை மறுபரிசீலனை செய்யுமாறு தோழர்களைக் கேட்டுக் கொண்டபோது, அவர்கள் மூன்றாவது திட்டத்தைக் கடைப்பிடிப்பதை முழு மனதுடன் உறுதிப்படுத்தினர்.

அந்த வருடம் ஹரித்வாரில் நடந்த மாபெரும் 'கும்பமேளா' விழாவில் கலந்து கொள்ள பாபா விரும்பினார். 1950 பிப்ரவரி தொடக்கத்தில், ஹரித்வாரிலிருந்து சில மைல்கள் தொலைவில், பொருத்தமான பங்களாவைக் கண்டுகொள்வதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஜம்னாதாஸிடம் ஆலோசனை நடத்தி, அங்கு அவர் மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் தங்கலாம் என்பதைத் தெரிவித்தார்.

ஹரித்வாரிலிருந்து நான்கு மைல் தொலைவில் அமைந்த மோத்திசூர் (MOTICHUR) என்ற இடத்தை மஹந்த் பரிந்துரைத்தார். அடுத்த நாள், டெஹ்ராடூன் மாவட்ட தகவல் அதிகாரி வீரேந்திர பாண்டே, பாபாவிற்கு ஒரு பங்களாவை ஏற்பாடு செய்ய முன்வந்தார். இரண்டு மாத வாடகையைச் செலுத்த விரும்புவதாக பாபா தெரிவித்தபோது, அது தேவையற்றது என்று வீரேந்திரா கூறினார். பாபா உடனே, **"புது வாழ்வில் நான் எந்த நிதிச் சுமையையும் ஏற்க விரும்பவில்லை"** என்று குறிப்பிட்டார்.

பிப்ரவரி 5ஆம் நாள், ஞாயிற்றுக்கிழமை, வீரேந்திரா தனது நண்பர் ஒருவரின் வீட்டைக் காண்பிப்பதற்காக 35 மைல் தொலைவில் அமைந்த மோத்திசூர் கிராமத்திற்கு எரச்சை காரில் அழைத்துச் சென்றார்; வீட்டு

உரிமையாளர் மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் அந்த பங்களாவை, பாபா பயன்படுத்த இணக்கம் தெரிவித்தார். அந்த உரிமையாளர் பணம் எதையும் விரும்பாததால், பழைய பங்களாவை பழுதுபார்ப்பதற்காக, பாபா ரூ 400 வழங்கினார். அதே நாளில், ரிஷிகேஷ் மற்றும் ஹரித்வாரைச் சுற்றியுள்ள மஸ்துகள், துறவிகள், சாதுக்கள் மற்றும் மஹாத்மாக்கள் வாழும் முகாம்களைப் பற்றி விசாரிக்க பாபா, பைதூலை அனுப்பி வைத்தார்.

டாக்டர் டான், நாஜாவுடன் கடந்த 10ஆம் நாள் மாஞ்ஜ்ரி மா:பிக்குத் திரும்பிவந்தார். நாஜா இதர நான்கு பெண்மணிகளுடன் இணைந்து, பழைய வாழ்க்கை மற்றும் மும்பை வாழ் மக்களைப் பற்றி ஒரு வார்த்தைக் கூட பேசக்கூடாது என்று கண்டிப்பாகக் கட்டளையிடப்பட்டார்.

1950 பிப்ரவரி 4ஆம் நாள், பாபா, புது வாழ்வில் நுழைவதற்கு முன்னர், எலிஸபெத் பேட்டர்ஸனுடன் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டதாக தோழர்களிடம் தெரிவித்தார். எலிஸபெத் தனது பணிக்காக ஒரு குறிப்பிட்ட தொகையை பாபாவிடம் வழங்கியதாகவும், மேலும் அவர் மேற்கத்திய நாடுகளுக்குச் செல்வதாக உறுதியளித்ததைத் தொடர்ந்து, எலிஸபெத் கீழ்வரும் இரண்டு நிபந்தனைகளுக்கு ஒப்புக்கொண்டதாகவும் தெரிவித்தார்: முதலில், புது வாழ்வின் போக்கில் தலையிடாமல் பார்த்துக் கொள்வது; இரண்டாவதாக, பாபாவிற்கும் அவருடன் செல்லும் தோழர்களுக்கும் பயண மற்றும் பராமரிப்புச் செலவுகளை ஏற்றுக் கொள்வது.

"**நான் கிழக்கு அல்லது மேற்கு எங்கிருந்தாலும், புது வாழ்வு முடிவில்லாமல் தொடர வேண்டும்**" என்று பாபா கூறினார்.

புது வாழ்வின் தொடக்கத்தில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட அறிவுறுத்தல்களின்படி, கடந்த மூன்று மாதங்களாக எலிஸபெத், நோரினா இருவரும் கடிதங்கள், தொலைத்தந்திகள் மூலம் தொடர்புகொள்ளவில்லை. ஆனால், டாக்டர் டான் திரும்பி வந்ததும், பாபா, எலிஸபெத்திற்கு அவர் மூலமாக ஒரு கடிதம் அனுப்பினார்; அதில் அவர் வாக்குறுதியளித்தபடி, பாபாவை அழைக்கும் போது அவர் அமெரிக்கா செல்லவிருப்பதாகப் பொருள்படும் விதத்தில் குறிப்பிட்டிருந்தார். 1950 ஜூலை மாதத்தில் அவர் வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முடியுமா என்றும் பாபா கேட்டிருந்தார். எலிஸபெத், பாபாவை அழைக்கத் தயாராக இருக்கும் குறிப்பிட்ட மாதம் மற்றும் வருடத்தை உடனடியாக அவருக்குத் தெரிவிக்க வேண்டும், அதற்கிணங்க, பாபா தனது எதிர்கால திட்டங்களின் அட்டவணையை முடிவு செய்யலாம். "**என்னை அழைப்பதற்கு முன்னர் எலிஸபெத் தெரிந்து கொள்ள வேண்டிய மிக முக்கியமான விஷயம் என்னவெனில், அமெரிக்காவில் இருந்தாலும் எனது புது வாழ்வை நான் தொடர்வேன்**.

இயற்கையாகவே இதன் அர்த்தம் இப்படியாக இருக்கும் - குருநாதர் இல்லை, சீடர் இல்லை, ஆசி இல்லை, அருள் இல்லை, வரவேற்பு மற்றும் எந்த நேர்காணலும் இல்லை. இந்த நிபந்தனைகளின் பேரில் அவர்கள் என்னை அழைக்கிறார்களா என்று பார்ப்போம்.”

இமயமலையின் அடிவாரத்தில் அமைந்திருப்பதால், டெஹ்ராடூனில் குளிர்காலம் உறைபனியாக இருந்தது; கண்காணிப்பாளராகப் பணிபுரியும் போது தங்களைப் பாதுகாத்துக் கொள்ளப் போதுமான வெதுவெதுப்பான ஆடைகள் தோழர்களிடம் இல்லை. அதிகாலை 3:00 முதல் 4:00 மணிக்குள் எழுந்து, காலைக் கடன்களை முடித்து, ஒவ்வொரு காலையிலும் சரியாக ஐந்து மணிக்குத் தேநீர் பரிமாறப்பட வேண்டும்.

தோழர்கள் ஒரு சரக்கு அறையில் ஒன்றிணைந்து, தேநீர் அருந்துவதற்கு முன், டாக்டர் நீலு கடந்தகால அவதார புருஷர்களைப் புகழ்ந்து சமஸ்கிருத மொழியில் ஓர் ஈரடிக் கவிதையை மொழிவது வழக்கம். இந்த நேரத்தில் பாபாவும் அவர்களுடன் நின்று கொண்டிருக்க, அவருடைய முகம் ‘அமைதியும், பொலிவும் நிறைந்திருக்கும்’ என்று தோழர்களில் ஒருவர் நினைவு கூர்ந்தார்.

1950 பிப்ரவரி 12 ஞாயிற்றுக்கிழமை காலை சிற்றுண்டிக்குப் பின்னர், ஒவ்வொருவரும் இரவில் எப்படித் தூங்கினர் என பாபா வினவினார். **“நேற்று இரவு நன்றாக தூங்கினீர்களா?”** என்று டாக்டர் நீலுவிடம் கேட்டபோது.

“இல்லை, நான் தூங்கவில்லை, குளிர், கடுமையான குளிர்!” என்றார் நீலு.

பாபா அந்த பதிலைக் கவிதை நயத்துடன் எடுத்துரைத்தார்:

நாம் இளைஞரும் இல்லை, முதியவரும் இல்லை,
நம்முடைய அனைத்தும் விற்று விலையாக்கப்படுகிறது,
நம்மிடம் வெள்ளியும் இல்லை, தங்கமும் இல்லை.
இதெல்லாம் புது வாழ்வு என்று சொல்லப்படுகிறது!

டான் குறுக்கிட்டு, “மார்ச் 1 முதல் அனைத்தும் வெளிப்படும்” என்றதும், அதற்கு பாபா பதிலளித்தார்:

உண்மையான துணிச்சலும் தைரியமும் உள்ளவர்கள்
நிபந்தனைகளை நூறு சதவிகிதம் பின்பற்றுபவர்கள்!

அன்று மாஞ்ஜ்ரி மா.ஃபியில் பாபாவின் 56ஆவது பிறந்தநாள் கொண்டாடப்பட்டது. நாஜா தயார் செய்த பஜ்ஜி மற்றும் ரவையை பாபா தோழர்களுக்கு வழங்கினார். ஒரு சில உள்ளூர் கிராமவாசிகள் மற்றும் சுமார் 20 பார்வையாளர்கள் - புர்ஜர், ஷெரூ சாச்சா, எல்சா மிஸ்திரி; கேக்கி நலவாலா, ஹெலன் மற்றும் குமாரின் குடும்பங்கள் - பாபாவிற்குப் பிறந்தநாள் வாழ்த்துக்களைத் தெரிவிக்க வந்தனர். பாபா, அனைவருக்கும் சிற்றுண்டியுடன்

தேநீர் விருந்தளித்தார்.

சதாஷிவ் பாட்டீல் தனது சொத்துக்களை விற்கும் முன்பு பூனாவில் இருக்கவேண்டியது அவசியம் என்று மெஹர்ஜி, நரிமன் இருவரும் கூறியதை டாக்டர் டான், பாபாவிற்குத் தெரிவித்தார். (விற்பனையின் மூலம் கிடைக்கும் வருமானம் புது வாழ்வு தோழர்களுக்காகப் பயன்படுத்தப்படும்.) எனவே, பாபா, சதாஷிவை பிப்ரவரி 13ஆம் தேதி மும்பை மற்றும் பூனாவிற்கு அனுப்பிவைத்து, இரண்டு மாதங்களுக்குள் மாஞ்ஜ்ரி மா:ஃபிக்குத் திரும்பிவருமாறு கட்டளையிட்டார். மருத்துவமனையைத் தொடங்க அதே நாளில் டாக்டர் டான் டெஹ்ராடூன் சென்றார். அவர் புறப்படும்போது பாபா அவருடைய கைகளைக் குலுக்கி, ஒருவேளை அவர் இந்த முயற்சியில் வெற்றிபெற வாழ்த்தி அனுப்பினார்.

இதற்கு முன்னதாக, சதாஷிவை ஹரித்வாருக்கு அனுப்பி, பாபா நீராடுவதற்கென புனித கங்கை நதியிலிருந்து தண்ணீரை எடுத்துவருமாறு அறிவுறுத்தினார். 1950 பிப்ரவரி 14 அன்று, பாபா, பைதூல் மற்றும் குமாரின் பத்தொன்பது வயது பணியாள் சத்யபால் கங்காராமை (SATYAPAL GANGARAM - பாபாவின் உதவியாளராகப் பணிபுரிந்தவர்) கங்கையிலிருந்து தண்ணீரைக் கொண்டு வர ரிஷிகேஷிற்கு அனுப்பினார்.

சதாஷிவ் பாட்டீல் கொணர்ந்த கங்கை நீரை பைதூல், பாபா மீண்டும் நீராடுவதற்காகக் கொடுக்க வேண்டும். மேலும், முடிந்தால் இரண்டு குட்டி ஆடுகளை வாங்கவும் பாபா அவர்களுக்கு அறிவுறுத்தினார். கடந்த 15ஆம் தேதி ரிஷிகேஷிலிருந்து இரண்டு பெரிய கொள்கலன்களில் கங்கை நீரை நிரப்பி எடுத்து வந்தனர். நண்பகல் 12:30 மணியளவில், பாபா ஒன்றிலிருந்த தண்ணீரில் நீராடினார். எஞ்சியிருந்த தண்ணீர் இரண்டு வாரங்களுக்குப் பிறகு, மார்ச் 1 அன்று நீராடுவதற்காக வைக்கப்பட்டது.

மாத இறுதிக்குள் மாஞ்ஜ்ரி மா:ஃபி மனையின் பணிகள் முடிவடைவதைக் குறித்து பாபா, ஆர்வமாக இருந்தார்; மூன்று முறை அந்த இடத்தைப் பார்வையிடச் சென்றார். அவ்வேளையில் கிராமவாசிகளில் சிலர் மருத்துவ உதவிக்காக பாபாவை அணுக, பாபா அவர்களுக்கு ஹோமியோபதி மருந்துகளுடன் சிகிச்சை அளிக்குமாறு முரளிக்கு அறிவுறுத்தினார்.

பிப்ரவரி 16, வியாழன் அன்று டாக்டர் நீலுவுடன் பாபா மாஞ்ஜ்ரி மா:ஃபிக்கு விஜயம் செய்தார். மஹந்தின் இல்லத்திற்குத் திரும்பி வந்துகொண்டிருந்த வேளையில், திருமதி கஸிதா (GHASITA) என்ற வயதான பெண்மணி அவர்களைத் தடுத்து நிறுத்தி, கண்களில் கண்ணீருடன், நோய்வாய்ப்பட்ட தனது மகனுக்கு உதவுமாறு பாபாவிடம் வேண்டினார். பாபா விவரங்களைக் கேட்டறிந்தார் - சிறுவன் 20 முறை வாந்தி எடுத்து, வயிற்றுப்போக்கால் அவதிப்பட்டான், முந்தைய நாள் இரவு 30 முறை

கழிவறைக்குச் சென்றதாக கூறியதும், டாக்டர் நீலுவிடம் சிகிச்சை அளிக்குமாறு பாபா உத்தரவிட்டார்.

1949 அக்டோபர் 16 அன்று, புது வாழ்வைத் தொடங்குவதற்கு முன்பு, பாபா தனது சகோதரர் ஜால்பாயிடம் சில மாதங்கள் அவருடன் தங்க அழைக்கப்படுவார் என்று உறுதியளித்திருந்தார். பழைய வாழ்க்கையிலிருந்து பாபா அத்தகைய வாக்குறுதியை வழங்கிய ஒரே நபர் ஜால் மட்டுமே. 1950 பிப்ரவரி 17 அன்று ஜால்பாய்க்குக் கடிதம் எழுதி, அவர் இப்போது டெஹ்ராடூனுக்கு வரலாம் என அறிவுறுத்தினார். ஆனால், ஜால்பாய் ஒரு வாரத்திற்கு பின்னர், உடல்நிலை சரியில்லாமல் இருப்பதாகவும், பயணம் செய்ய முடியாது என்றும் தொலைத்தந்தி அனுப்பினார்.

1950 பிப்ரவரி 18 அன்று, வீரேந்திர பாண்டே என்பவர் பாபாவை எரச், குமார், நலவாலா ஆகியோருடன் தனது காரில் 35 மைல் தொலைவில் அமைந்த மோத்திசூர் கிராமத்திற்கு அழைத்துச் சென்றார். பாபா அந்த பங்களாவைப் பழுதுபார்த்து, ஒரு குடிலும் கட்டுவதற்கான வேறு சில அறிவுரைகளை வழங்கினார். பின்னர், அங்கிருந்து அவர் ஹரித்வாருக்கு அழைத்துச் செல்லப்பட்டார்; அங்கு அவர் வீரேந்திராவின் நண்பரும் பங்களாவின் உரிமையாளருமான ஸன்ஸார்சந்த் கோஹல் (SANSARCHAND GOHAL) என்பவரை சந்தித்தார்.

மாலையில் டாக்டர் நீலு மாஞ்ஜ்ரி மா஺பிக்குத் திரும்பிக் கொண்டிருந்த வேளையில், பாபாவின் கருணைக்கு நன்றி தெரிவிக்கும் விதத்தில், அவர் சிகிச்சை அளித்த சிறுவன், தாயார் திருமதி கஸிதாவுடன் சாலையில் காத்திருந்தான். தாயார் கண்களில் கண்ணீர் ததும்ப, அவரது மகன் முழுமையாகக் குணமடைந்துவிட்டதாகக் கூறி, பாபாவிற்கு மனமார நன்றி கூறினார்.

1950 பிப்ரவரி 20 திங்கட்கிழமை காலை சிற்றுண்டிக்குப் பிறகு, பாபா, தோழர்களை அழைத்து, புது வாழ்வு நிபந்தனைகளின் தாக்கங்களையும் முக்கியத்துவத்தையும் மீண்டும் விரிவாக விளக்கினார். நாள் முழுவதும் பல்வேறு திட்டங்களின் நிபந்தனைகளை விவாதிப்பதிலும், திரும்பத் திரும்ப விளக்குவதிலும் கழிந்தது.

அனைத்து நிபந்தனைகளின் பட்டியல் தயாரிக்கப்பட்டது, பாபா, எழுத்துப்பலகையில் பின்வருமாறு எடுத்துரைத்தார்:

புது வாழ்வு என்னிடமிருந்து தோன்றினாலும், அது என்னைக் கட்டுப்படுத்துவதில்லை. உடலுழைப்பு, யாசித்தல், நாடோடி மற்றும் லங்கோட்டி வாழ்க்கை ஆகிய நான்கு கட்ட பணிகளுடன் கூடிய புது

வாழ்வின் ஒன்று, இரண்டு மற்றும் மூன்று திட்டங்கள் நான் உடல் ரீதியாக உயிர் வாழும் வரை செயல்படும்.

ஆனால், இந்தப் புது வாழ்வு முடிவில்லாதது; பொய்மை, பொய், வெறுப்பு, கோபம், பேராசை, காமம் இவற்றையெல்லாம் முற்றிலுமாகத் துறந்து வாழ்பவர்களால், எனது பௌதீக உடலைத் துறந்த பின்னரும், காமச் செயலில் ஈடுபடாமல், எவருக்கும் எந்தத் தீங்கும் விளைவிக்காமல், புறங்கூறாமல், பொருள் உடைமை அல்லது அதிகாரத்தை நாடாமல், மரியாதை, வணக்கம் எதையும் ஏற்காமல், மதிப்பு, மரியாதையை விரும்பாமல் அதே வேளையில் அவமானத்தைத் தவிர்க்காமல், எவருக்கும் எதற்கும் அஞ்சாமல், கடவுளை முழுவதுமாக நம்பி, நேசிக்கும் ஒரே காரணத்திற்காகக் கடவுளை நேசிப்பவர்களால், கடவுளின் அன்பர்கள் மற்றும் அவரது வெளிப்பாட்டின் யதார்த்தத்தில் நம்பிக்கை கொண்டவர்களால், ஆனால் ஆன்மீக அல்லது பொருள் சார்ந்த வெகுமதியை எதிர்பாராமல், உண்மையின் கரத்தை நழுவ விடாமல், பேரிடரால் துவண்டு போகாமல், தைரியத்துடன், முழு மனதுடன் அனைத்து இடர்பாடுகளையும் 100 சதவீதம் மகிழ்ச்சியுடனும், முகமலர்ச்சியுடனும் எதிர்கொண்டு, சாதி, மதம், சடங்கு சம்பிராதயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் வாழ்பவர்களால் இந்தப் புது வாழ்வை வாழ முடியும்.

இந்தப் புது வாழ்வை வாழ எவரும் இல்லாவிடிலும் என்றென்றும் அதுவாகவே வாழும்.

ஒன்று-ஏ (**1**-A), ஒன்று-பி (**1**-B), ஒன்று-சி (**1**-C) மற்றும் இரண்டாவது திட்டங்களை ஏற்றுக்கொண்ட ஆண் தோழர்களுக்கான நிலையான நிபந்தனைகள் கீழ்வருமாறு:

1) **முதலாவதாக, நீங்கள் சிறிதளவு ஆன்மீக அல்லது பொருள் சார்ந்த பலனைக் கூட அடையமாட்டீர்கள், அல்லது உண்மையில் எந்தப் பலனையும் அடையமாட்டீர்கள் என்பதை அறுதியும், வரையறுக்கப்படாத நிச்சயமாக நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும். மாறாக, எல்லாவிதமான ஏமாற்றங்களுக்கும் துன்பங்களுக்கும் நீங்கள் தயாராக இருக்க வேண்டும்.**
2) **பாபா, உங்கள் மீது தனது கருணைமிகு பார்வையைக் கொண்டிருப்பார், ஏதேனும் அற்புதங்களை நிகழ்த்துவார் அல்லது நோய், ஆபத்து, சிறைவாசம், மரணம் போன்ற அசம்பாவிதங்கள், சிரமங்கள் மற்றும் பேரழிவுகளிலிருந்து உங்களைக் காப்பாற்ற அல்லது பாதுகாக்க அவருடைய ஆன்மீகத் திறவுகோலைப் பயன்படுத்துவார் என்று நீங்கள் எதிர்பார்க்கக் கூடாது.**

3) உங்கள் தாயார், மனைவி, சகோதரி மற்றும் மகளை, தொழில் ரீதியாக நீங்கள் மருத்துவராகப் பயிற்சி செய்வது போன்ற தவிர்க்கமுடியாத வேளையைத் தவிர, பெண்மணிகளைத் தொடக் கூடாது.

4) நீங்கள் அரசியலுக்குள் நுழையக்கூடாது.

5) நீங்கள், எவ்வளவுதான் தூண்டப்பட்டாலும், எவரிடமும் கோபத்தை, வார்த்தை அல்லது செயல் மூலமாக வெளிப்படுத்த மாட்டீர்கள்; நீங்கள் எவரையும் நேரடியாக அல்லது அவரது முதுகுக்குப் பின்னால் நியாயமற்ற முறையில் விமர்சிக்க மாட்டீர்கள். சில சந்தர்ப்பங்களில் உங்கள் மனதில் கோபம் எழுந்தாலும், அதை வார்த்தையிலோ செயலிலோ வெளிப்படுத்தக் கூடாது.

6) எந்த சூழ்நிலையிலும் பொய் பேசக் கூடாது.

7) பாபாவும் நீங்களும் எவரிடமிருந்தும் மரியாதையுடன் கூடிய வணக்கத்தை ஏற்க வேண்டாம்; பாபாவிற்கும், உங்களுக்கும் மரியாதையுடன் கூடிய வணக்கத்தை வழங்கத் தூண்டும் சூழ்நிலையை வேண்டுமென்றே உருவாக்க வேண்டாம். இருப்பினும், நீங்கள் எதிர்பாராமல் அல்லது வரவழைக்காமல், பாபாவிற்கோ அல்லது உங்களுக்கோ அத்தகைய மரியாதை வழங்கப்பட்டால், அது வழங்கியவருக்கு, சிறிதளவும் பிசகாமல் செய்த செயலுக்குத் தகுந்த செயலாகத் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும்.

8) நிபந்தனைகளுக்கு நீங்கள் அனைவரும் கட்டுப்பட வேண்டியது அவசியம் என்றாலும், பாபா, அவராகவே எந்த உத்தரவு அல்லது நிபந்தனைக்கும் கட்டுப்பட வேண்டியதில்லை, எந்த நேரத்திலும் முழுமையான சுதந்திரத்துடன் இருக்கிறார் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

9) எவ்வாறாயினும், பாபா சுதந்திரமாக இல்லை என்பது மட்டுமல்லாமல், வேண்டுமென்றே தன்னைப் பிணைத்துக் கொள்ளும் ஒரே ஒரு விஷயம் என்னவெனில், நீங்கள் சிறிதளவு பலனைக் கூட அடையமாட்டீர்கள், அல்லது உண்மையில் எந்தப் பலனையும் அடையமாட்டீர்கள், மேலும், எல்லாவிதமான ஏமாற்றங்களுக்கும் துன்பங்களுக்கும் நீங்கள் தயாராக இருக்க வேண்டும் என்ற நிபந்தனையைப் பற்றியது. அது மட்டுமல்லாமல், அதைத் தொடர்ந்து வரக்கூடிய எந்த விளைவுகளுக்கும் கடவுள் முன் உங்களது தனிப்பட்ட பொறுப்பிலிருந்து உங்களில் எவரையும் விடுவிக்கும் எந்த உத்தரவையும் பாபா ஒருபோதும் வழங்கமாட்டார் என்பதும் முற்றிலும் தெளிவாக இருக்க வேண்டும். ஒவ்வொரு

விளைவுகளுக்கும் கடவுளின் முன் உள்ள பொறுப்பு எப்பொழுதும் முழுவதுமாக உங்களுக்கு மட்டுமே உள்ளது என்பதையும், இந்தப் பொறுப்பை மாற்றும் அல்லது ரத்து செய்யும் கட்டளையை பாபா ஒருபோதும் வழங்க மாட்டார் என்பதையும் நீங்கள் ஒரு முழுமையான உறுதியுடன் எடுத்துக்கொள்ள வேண்டும்.

10) **நீங்கள், ஆண் அல்லது பெண், இளைஞர் அல்லது முதியவர் எவருடனும் எந்தக் காமச் செயலிலும் ஈடுபடக் கூடாது.**

மூன்றாவது திட்டத்தை ஏற்றுக்கொண்ட புது வாழ்வுத் தோழர்கள் **பின்வரும் 34 நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட வேண்டும்:**

1) **முழுமையான துறவை உள்ளடக்கிய இந்தப் புது வாழ்வில், பிறர் உங்களை நடத்தும் நல்ல அல்லது தீய முறைகளின் தயவில் நீங்கள் முற்றிலும் இருப்பீர்கள். என்ன நடந்தாலும் கடவுளுக்கு முன்பாக நீங்கள், நீங்கள் மட்டுமே பொறுப்பாக இருப்பீர்கள்.**

2) **உங்களைச் சார்ந்தவர்கள், உங்கள் வணிகம் அல்லது பழைய வாழ்க்கையின் தனிப்பட்ட விவகாரங்கள் ஏதேனும் பாதிக்கப்பட்டால், கடவுளுக்கு முன்பாக நீங்கள், அதாவது நீங்கள் மட்டுமே பொறுப்பாக இருப்பீர்கள். இந்தப் பொறுப்பைக் கருத்தில் கொள்ளும்போது, அவர்களை நேரடியாகச் சென்று சந்திப்பது, அவர்களைக் கடிதங்கள், தொலைத்தந்திகள் மூலம் தொடர்புகொள்வது போன்றவற்றிற்கு வாய்ப்பில்லை என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.**

3) **உடல் அல்லது மனச்சோர்வு, கடுமையான வானிலை, உணவு பற்றாக்குறை, தகாத உணவு, தண்ணீர் பற்றாக்குறை, அசுத்தமான நீர், எந்த வகையான நோய்த்தொற்று போன்றவற்றின் காரணமாக, நீங்கள் நோய்வாய்ப்பட்டால் அல்லது உயிரைத் துறந்துவிட்டால், நீங்கள் அதாவது நீங்கள் மட்டுமே கடவுளுக்கு முன்னால் பொறுப்பாக இருப்பீர்கள்.**

4) **நீங்கள் எனக்குக் கீழ்ப்படியாமல் இருந்து, நான் உங்களை என்னிடமிருந்து திரும்ப அனுப்ப நேர்ந்தால், உங்கள் எதிர்காலம் உங்களுக்கு எதைக் கொண்டு வந்தாலும் கடவுளின் முன்னால் நீங்கள் என்னைப் பொறுப்பேற்கச் செய்ய மாட்டீர்கள்.**

மேலும், உங்கள் மீது எந்தத் தவறும் இல்லாமலிருந்தும், நான் உங்களை என்னிடமிருந்து திருப்பி அனுப்பினால், கடவுளின் முன் நீங்கள் என்னைப் பொறுப்பேற்கச் செய்ய மாட்டீர்கள். எவ்வாறாயினும், இந்த சூழ்நிலையைப் பொறுத்தவரையில், என்னுடனான உங்கள் ஆன்மீகத் தொடர்பு அப்படியே இருப்பதோடு,

நீங்கள் கீழ்ப்படிய வேண்டிய திட்டவட்டமான வழிமுறைகளை நான் உங்களுக்கு வழங்குவேன். நான் உங்களை, புது வாழ்வு திட்டம் 'ஒன்று-பி' அல்லது 'ஒன்று-சி' அல்லது திட்டம் இரண்டிற்கு, தேவையான எந்த மூலதனத்தையும் வழங்காமல் அனுப்பலாம், நீங்கள் அதை முழு மனதுடன், நேர்மையுடன் செயல்படுத்த வேண்டும்.

5) நான் உங்களைத் திரும்ப அனுப்பியதன் விளைவாக, நீங்கள் மது அல்லது போதைப்பொருளுக்கு அடிமையாவது அல்லது தற்கொலை போன்ற அபத்தமான செயலில் ஈடுபடுவதாகிய தவறான நடவடிக்கையை நீங்கள் எடுக்க நேர்ந்தால், நீங்கள் மட்டுமே கடவுளுக்கு முன்னால் பொறுப்பாக இருப்பீர்கள்.

6) நீங்கள் சிறிதளவு ஆன்மீக அல்லது பொருள் சார்ந்த பலனைக் கூட அடையமாட்டீர்கள், அல்லது உண்மையில் எந்தப் பலனையும் அடையமாட்டீர்கள் என்பதை அறுதியும், வரையறுக்கப்படாத நிச்சயமாக நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும். மாறாக, எல்லாவிதமான ஏமாற்றங்களுக்கும் துன்பங்களுக்கும் நீங்கள் தயாராக இருக்க வேண்டும்.

7) நான் இடம் விட்டு இடம் நடந்தே செல்லலாம் அல்லது எந்த இடத்திலும் காலவரையின்றி தங்கலாம்; நான் எங்குச் சென்றாலும், அல்லது எங்குத் தங்கினாலும், உத்தரவிடப்பட்டாலொழிய, நீங்கள் என்னுடனே இருக்க வேண்டும்.

8) இந்தப் புது வாழ்வில், நான் உங்களை மனநிறைவாக வைத்திருப்பேன் அல்லது உங்கள் பலவீனங்களைக் கண்டுகொள்ளாமல் இருப்பேன் என்று நீங்கள் எதிர்பார்க்கக் கூடாது. மாறாக, நீங்கள் என்னை மனநிறைவுடன் வைத்திருப்பீர்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

9) நான் உங்கள் மீது எனது கருணைமிகு பார்வையைக் கொண்டிருப்பேன், ஏதேனும் அற்புதங்களை நிகழ்த்துவேன் அல்லது நோய், ஆபத்து, சிறைவாசம், மரணம் போன்ற அசம்பாவிதங்கள், சிரமங்கள் மற்றும் பேரழிவுகளிலிருந்து உங்களைக் காப்பாற்ற அல்லது பாதுகாக்க எனது ஆன்மீகத் திறவுகோலைப் பயன்படுத்துவேன் என்று நீங்கள் எதிர்பார்க்கக் கூடாது. உண்மையில், நான் முற்றிலும் பாதுகாப்பற்றவனாக மாறக்கூடும், என்னால் எனக்குக் கூட உதவ முடியாத நிலை வரலாம்.

10) நீங்கள் என்னை அவதார புருஷர், கடவுள், பிசாசு, அல்லது நீங்கள் விரும்பும் எதுவாகவும் அல்லது எவராகவும் நம்பலாம்; ஆனால் நான்

உங்கள் மத்தியில் உங்கள் சகோதரனாக அல்லது நண்பனாக உங்களிடையே வாழ்ந்தாலும், உண்மையில் நான், உங்கள் குருநாதராக இருப்பேன் என்பதை நீங்கள் புரிந்து முற்றிலும் கீழ்ப்படிய வேண்டும்.

11) நான் உங்களுக்கு எந்த நேரத்திலும் எந்த உத்தரவையும் வழங்கலாம், அதற்கு நீங்கள் கீழ்ப்படிய வேண்டும். இருப்பினும், அத்தகைய உத்தரவுகள் 'ஆன்மீக' வகையைச் சார்ந்ததாக (உதாரணமாக, தியானம்) இருக்காது, மேலும் என்னிடமிருந்து ஆன்மீக அறிவுறுத்தல்கள் என்று அழைக்கப்படுவதை நீங்கள் எதிர்பார்க்கக்கூடாது. நான் உங்களுக்கு வழங்கும் எந்த உத்தரவுக்கும் நீங்கள் கீழ்ப்படிய வேண்டும் - நல்லது அல்லது தீயது - எதையும் செய்ய நான் உங்களுக்கு உத்தரவிடலாம் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

என் மீது உமிழ்நீரைத் துப்புவது, என்னை உதைப்பது, அவதூறாக நடத்துவது போன்ற எனது உடல் சம்பந்தமான எதையும் செய்யும்படி நான் உங்களுக்கு உத்தரவிடலாம் - மேலும் அத்தகைய கட்டளைகளுக்கு நீங்கள் தயக்கமின்றி கீழ்ப்படிய வேண்டும். நான் உங்கள் காலடியில் எனது தலையை வைத்து வணங்கலாம் அல்லது உங்கள் கால்களைக் கழுவலாம், இதுபோன்ற செயல்களைச் செய்தால் நீங்கள் எதிர்க்கவோ, தயங்கவோ, உணர்ச்சிகளை வெளிப்படுத்தவோ கூடாது. இந்தத் தற்செயல் நிகழ்வுகளில் ஏதேனும் ஒரு சிறிய ஆட்சேபனை, தயக்கம் அல்லது உணர்ச்சியை வெளிப்படுத்துவதானால், நான் உங்களை என்னிடமிருந்து அனுப்பலாம்.

12) **சாதாரணமாக இருந்தாலும் சரி, வழக்கத்திற்கு மாறானதாக இருந்தாலும் சரி, என்னுடைய உத்தரவுக்கு நீங்கள் உடனடியாக, மனமுவந்து கீழ்ப்படிய வேண்டும்.**

13) உங்களுக்கு வழங்கப்பட்ட நேரத்தை விட, ஒப்படைக்கப்பட்ட பணிக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, உண்மையாகவும், நேர்மையாகவும் எனது தீவிர உத்தரவு என நினைத்தால், என்னால் வழங்கப்பட்ட எந்த அறிவுரைகளும் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும்; மற்றும் ஒப்படைக்கப்பட்ட பணியில் தாமதம் ஏற்பட்டால் நீங்கள் எனது கவனத்திற்குக் கொண்டுவரலாம்.

14) **மூன்றாவது திட்டத்தைப் பொறுத்தவரை முற்றிலும் தேவைப்படும் போது நீங்கள் எனது கவனத்தையும் ஈர்க்கலாம்.**

15) ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட கட்டளைகளை நான் வழங்கினால், நீங்கள் முக்கியமானதாகக் கருதும் கட்டளையை முதலில் நிறைவேற்ற வேண்டும்.
16) நீங்கள் எந்த சூழ்நிலையிலும் என்னுடன் வாதிடக்கூடாது, ஆனால் நான் கேட்கும் வேளையில் நிலைமையை விளக்கலாம்.
17) நானாகக் கேட்கும் வரை நீங்கள் எதையும் பரிந்துரைக்க வேண்டாம்.
18) நீங்கள் எப்போதும் மகிழ்ச்சியாகவும், முகமலர்ச்சியாகவும் இருக்க முயற்சிக்க வேண்டும்.
19) நீங்கள் பெண்களைத் தொடக் கூடாது, ஆண், பெண், இளைஞர், வயதானவர் எவருடனும் காமச் செயலில் ஈடுபடக்கூடாது; ஆனால் தேவைப்படும் வேளையில் பெண்களுடன் பேசலாம்.
20) நீங்கள் பணத்தைத் தொட வேண்டாம், எவரிடமிருந்தும் பணத்தை ஏற்கவும் வேண்டாம், என்னையும் சேர்த்து. எவருக்கும் கொடுக்கவும் வேண்டாம். ஆனால், சில பணிகளுக்காக நான் உங்களிடம் பணத்தைக் கொடுக்கும்போது, பணத்தைத் தொடுவதற்கான அதே அனுமதி வழங்கப்பட்ட மூன்றாவது திட்டத்தை நடைமுறை படுத்தும் தோழர்களுடன் இணைந்து செயல்படலாம்.
21) நீங்கள் அரசியலைப் பற்றி விவாதிக்க மாட்டீர்கள்.
22) கோபத்தைத் தூண்டும் எதுவாக இருந்தாலும், வார்த்தை அல்லது செயலால் நீங்கள் எவரிடமும் கோபத்தை வெளிப்படுத்தக் கூடாது.
23) நீங்கள் எவரையும் நேரடியாகவோ அல்லது புறம் கூறி நியாயமற்ற முறையில் விமர்சிக்கக் கூடாது. சில நேரங்களில் உங்கள் மனதில் கோபம் எழுந்தாலும், அதை வார்த்தையிலோ செயலிலோ வெளிப்படுத்தக் கூடாது.
24) நீங்கள் பொய் பேசக் கூடாது. அனைத்தும் ஒளிவு மறைவின்றி, தெளிவாகவும், வெளிப்படையாகவும் இருக்க வேண்டும். உதாரணமாக, நீங்கள் யார் அல்லது பாபா யார் என்று உங்களிடம் கேட்கப்பட்டால், உண்மையைத் தவிர்க்க முடியாது.
25) நீங்கள் எவரிடமிருந்தும் மரியாதையை ஏற்க மாட்டீர்கள், அல்லது உங்களுக்கு மரியாதையை வழங்கும் சூழ்நிலையை உருவாக்க மாட்டீர்கள். இருப்பினும், உங்களுக்கு மரியாதை வழங்க ஒருவர் தூண்டப்பட்டால், அதை வழங்குபவருக்கு, அவர் செய்த செயலுக்கு இணையான விதத்தில் திருப்பிச் செலுத்த வேண்டும். நான் உங்கள் காலடியில் எனது தலையை வைத்தாலும் அல்லது உங்கள் கால்களைக் கழுவினாலும் - இதை ஒரு கட்டளையாக பாவிக்க வேண்டுமே தவிர, நீங்கள் மரியாதையாகக் கருத வேண்டாம்.

26) எனக்கு மரியாதை வழங்கும் சூழ்நிலையை நீங்கள் உருவாக்கக் கூடாது.

27) உங்களிடம் பரம்பரை உடைமை ஏதேனும் இருந்தால், மூன்றாவது திட்டத்தைக் கடைப்பிடிக்கும் தோழர்களுக்காக, எனக்கு வழங்கப்பட வேண்டும்.

28) திட்டங்கள் 'ஒன்று-பி', 'ஒன்று-சி', மற்றும் இரண்டு ஆகியவற்றைக் கடைப்பிடிக்கும் தோழர்களிடமிருந்து, திட்டம் மூன்றைக் கடைப்பிடிக்கும் தோழர்களுக்காக, பணத்தைத் தவிர வேறு எதையும் ஏற்க வேண்டாம் என்று நான் விரும்புகிறேன்.

29) புது வாழ்வு முடிவற்றது, அளவிறுதியற்றது, கிழக்கு மற்றும் மேற்கு அரைக்கோளங்களில் எங்கும் இந்தப் புது வாழ்வை வாழலாம். புது வாழ்வு நான்கு கட்டங்களை உள்ளடக்கியது - உடலுழைப்பு, யாசித்தல், நாடோடி மற்றும் லங்கோட்டி வாழ்க்கை. திட்டம் மூன்றைக் கடைப்பிடிக்கும் தோழர்கள் உடலுழைப்பு கட்டத்தை கடந்து செல்ல மாட்டார்கள் (இது திட்டம் ஒன்று-பி, ஒன்று-சி மற்றும் திட்டம் இரண்டில் உள்ள தோழர்களால் மேற்கொள்ளப்படும்). உடலுழைப்பு என்பது ஒருவரின் சுய வாழ்வாதாரத்திற்காக உழைத்து சம்பாதிப்பதாகும். மூன்றாவது திட்டத்தைக் கடைப்பிடிக்கும் தோழர்கள் யாசிப்பதன் மூலமாகவோ அல்லது திட்டங்கள் ஒன்று-பி, ஒன்று-சி, மற்றும் இரண்டைப் பின்பற்றும் தோழர்களால் அவர்களுக்கு வழங்கப்படும் உதவி மூலமாகவோ சுய பராமரிப்பைப் பார்த்துக்கொள்வர்.

30) காலம், நேரம் என்பது புது வாழ்வைப் பொறுத்தவரை ஒரு பொருட்டாகக் கருதப்படாததால், யாசிப்பது, நாடோடி மற்றும் லங்கோட்டி வாழ்க்கை வாழ்வது என்பது எனது அறிவுறுத்தல்களின்படி எந்த நேரத்திலும் தனித்தனியாகவோ அல்லது ஒன்றிணைந்தோ செய்யப்படலாம் அல்லது செய்யக்கூடாது.

31) நான் கட்டளையிடும் வேளையில் உங்கள் சொந்த உணவுக்காக மட்டுமே நீங்கள் யாசிப்பீர்கள். இந்த உணவு ஏற்கனவே தயார் செய்யப்பட்டதாக, அல்லது உண்ணுவதற்கு முன் சமைக்கத் தேவையில்லாததாக இருக்க வேண்டும்.

32) உங்களுக்கான உணவைத் தவிர வேறு எதையும் நீங்கள் யாசிக்கவோ, ஏற்றுக்கொள்ளவோ மாட்டீர்கள். மேலும், யாசிக்காமல் வழங்கப்படும் எதையும் நீங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடாது

33) புது வாழ்வு தோழர்களிடமிருந்து மட்டுமே நீங்கள் தேநீர் மற்றும் புகையிலையை, எந்த வடிவத்திலும் ஏற்றுக்கொள்ள முடியும்.

34) அறியாமலும், வேண்டுமென்றே அர்த்தப்படுத்தாமலும் இந்த உத்தரவுகளையோ அல்லது வேறு எந்த உத்தரவையோ நீங்கள் மீறினால், நான் உங்களை மன்னிப்பேன், மேலும் காமம், கோபம், பேராசை தொடர்பான எண்ணங்களைத் தவறுகளாகக் கருத மாட்டேன்.

இங்கே பட்டியலிடப்பட்டுள்ள ஒவ்வொரு கட்டளைக்கும் நீங்கள் முற்றிலும் கட்டுப்பட்டாலும், நான் எந்த உத்தரவு அல்லது நிபந்தனைக்கும் கட்டுப்பட வேண்டியதில்லை என்பது மட்டும் தெளிவாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டும்; ஆனால் உங்களுக்கு எந்த உத்தரவையும் வழங்க நான் எப்போதும் சுதந்திரமாக இருக்கிறேன், மேலும் அத்தகைய உத்தரவுகள் மற்றும் நிபந்தனைகளில் எதையேனும் அல்லது அனைத்தையும் மாற்றலாம் அல்லது ரத்து செய்யலாம்.

எவ்வாறாயினும், நான் சுதந்திரமாக இல்லை, ஆனால் நானாகவே என்னைப் பிணைத்துக் கொள்ளும் ஒரே விஷயம் என்னவெனில், நீங்கள் எந்த வகையிலும் சிறிதளவேனும் நன்மையை அடையமாட்டீர்கள் என்பதை நீங்கள் ஒரு முழுமையான உறுதியுடன் எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையைப் பற்றியது; மேலும் ஒவ்வொரு வகையான ஏமாற்றம் மற்றும் துன்பங்களுக்கும் நீங்கள் தயாராக இருக்க வேண்டும். இந்த நிலை அனைத்து காலத்திற்கும் நிலைத்திருக்கும், என்னால் ஒருபோதும் மாற்றப்படாது அல்லது ரத்து செய்யப்படாது.

மேலும், அதைத் தொடர்ந்து வரக்கூடிய எந்தவொரு விளைவுகளுக்கும் கடவுள் முன்னால் உங்கள் தனிப்பட்ட பொறுப்பிலிருந்து உங்களை விடுவிக்கும் எந்த உத்தரவையும் நான் ஒருபோதும் வழங்கமாட்டேன் என்பது முற்றிலும் தெளிவாக இருக்க வேண்டும். எனவே, ஒவ்வொரு விளைவுகளுக்கும் கடவுளின் முன் உள்ள பொறுப்பு எப்பொழுதும் முழுவதுமாக உங்களுக்கு மட்டுமே உள்ளது என்பதை நீங்கள் ஒரு முழுமையான உறுதியுடன் எடுத்துக்கொள்ள வேண்டும் - மேலும் இந்தப் பொறுப்பை மாற்றும் அல்லது ரத்து செய்யும் உத்தரவை நான் ஒருபோதும் வழங்க மாட்டேன்.

அடுத்த நாள், பிப்ரவரி 21 அன்று, புது வாழ்வைப் பற்றிய அனைத்து நிபந்தனைகளையும் அவரது விளக்கத்தையும் தட்டச்சு செய்யுமாறு பாபா, மணியிடம் அறிவுறுத்தினார். இந்தியா, பாகிஸ்தான் மற்றும் இலங்கை முழுவதும் சுற்றறிக்கையாக அச்சிட்டு விநியோகிக்கும் அறிவுறுத்தல்களுடன், அஹமதுநகரில் இருந்த ஆதி சீனியருக்கு அனுப்பப்பட இருந்தது.

1950 மார்ச் 10ஆம் நாள் சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.

டெல்லியைச் சேர்ந்த கேக்கி தேசாய், பிப்ரவரி 23 அன்று, தோழர்களுடன் ஒரு வாரத்தைக் கழிக்க, டெஹ்ராடூனுக்கு வந்தார். 25ஆம் நாள், பாபா தனது கைகளால் தோழர்களுக்கு உணவு வழங்கினார். அடுத்த நாள், பெண்மணிகள் மஹந்த் ஜம்னாதாஸின் பங்களாவிலிருந்து மாஞ்ஜ்ரி மா.ஃபி மனையில் அமைந்த குடிலுக்குக் குடிபெயர்ந்தனர். ஆண் தோழர்களுக்கான குடில்கள் தயாராகாத நிலையில், பாபா, தோழர்களுடன் மஹந்தின் பங்களாவில் இன்னும் சில நாட்கள் தங்க வேண்டியதாயிற்று.

கேக்கி நலவாலா, டெஹ்ராடூனில், 29, லிட்டன் சாலையில் (LYTTON ROAD) தனது இல்லத்திற்கு எதிரே ஒரு சிறிய வீட்டை, டாக்டர் டானின் மருத்துவமனையாக வாடகைக்கு எடுத்திருந்தார். 1950 பிப்ரவரி 28 மதியம் 2:30 மணிக்கு நடைபெற்ற திறப்பு விழாவில் பாபா, ஆண், பெண்மணிகளுடன் கலந்து கொண்டார்; மாஞ்ஜ்ரி மா.ஃபி மற்றும் டெஹ்ராடூனிலிருந்து நெருங்கிய அன்பர்களும் விழாவில் பங்கெடுத்தனர். பாபா அனைவருக்கும் கேக், ரவை போன்றவற்றைப் விநியோகித்தார்; ஃபிரீனி நலவாலா, அவரது சகோதரி ஷெரூ சாச்சா ஆகியோர் தேநீர் வழங்கினர். அந்த சந்தர்ப்பத்தில், புது வாழ்வு தோழர்களுக்கு நிதி உதவி செய்யும் நோக்கத்தில், டான் 'ஒன்று-பி' திட்டத்தின் கீழ் மருத்துவராகப் பயிற்சி செய்து வருவதாக பாபா விளக்கினார்.

மாஞ்ஜ்ரி மா.ஃபிக்குத் திரும்புவதற்கு முன்பு, பாபா, பெண்மணிகளுடன் சிறிது நேரம் நலவாலா மற்றும் புர்ஜர் இல்லங்களுக்கு விஜயம் செய்தார். நலவாலா குடும்பத்தில், பாபா அவர்களின் நான்கு வயது மகன் நவ்ஷேர்வான் (NAOSHERWAN) மற்றும் ஒன்பது வயது மகள் மஹ்ரோக் (MAHROAKH) ஆகியோருடன் விளையாடினார்.

கேக்கி எந்நேரமும் எதையாவது நினைத்து கவலைப்படுவதாக, பாபாவிடம் ஃபிரீனி புகார் செய்தார். பாபா, கேக்கிக்கு இவ்வாறு அறிவுரை வழங்கினார், **"உங்களைப் பற்றி நீங்கள் கவலைப்பட்டால், கடவுள் உங்களைப் பற்றி கவலைப்படுவதில்லை. மேலும் அவர் ஏன் கவலைப்பட வேண்டும்? நீங்கள் கவலையடைவதை நிறுத்தினால், கடவுள் உங்களுக்காகக் கவலைப்படத் தொடங்க வேண்டும்! அவரை முழு மனதுடன் நினைவில் கொள்ளுங்கள்; உங்கள் கஷ்டங்களை அவரிடம் விட்டுவிடுங்கள். பிறகு நீங்கள் மகிழ்ச்சியாகவும், சுதந்திரமாகவும் இருங்கள்."**

புது வாழ்வில், நான்கு பெண்மணிகள், மெஹரா, மணி, மெஹரு மற்றும் கோஹெர், தொடர்ந்து 'முகத்திரையின் கீழ்' (தனிமையில்) இருந்தனர், மேலும் எந்த ஆண் தோழர்களும் மெஹராவைப் பார்க்க முடியவில்லை. டாக்டர் கோஹெர் மட்டுமே பணி சம்பந்தமாகத் தோழர்களுடன் பேச அனுமதிக்கப்பட்டார். கும்பமேளாவிற்கான அரசாங்கத்தின் விதிமுறைகளுக்கு

இணங்க, கோஹெர், பாபாவிற்கும் ஆண் தோழர்களுக்கும் டை:பாய்டு மற்றும் காலராவிற்கு எதிராகத் தடுப்பூசி வழங்கினார்.

1950 மார்ச் 1 அன்று மதியம் ஒரு மணியளவில், ரிஷிகேஷிலிருந்து இரண்டாவது கொள்கலனில் கொண்டு வந்த கங்கை நீரில் பாபா நீராடினார்; ஆனால் அதற்கு முன்னர், அவர் மூன்றாவது திட்டத்தின் கீழ் உள்ள எட்டு தோழர்களில் ஒவ்வொருவரின் தலையிலிருந்தும் ஒரு சிறிய கொத்து முடியை வெட்டி எடுத்தார்.

அன்று மாலை நான்கு மணியளவில், கேக்கி, :ப்ரீனி நலவாலா இருவரும் குமாரின் இல்லத்தில் பாபா மற்றும் தோழர்களுக்கு 'தன்ஸக்' (DHANSAK, அரிசியும், பருப்பும் மாமிசத்துடன் சேர்த்து சமைத்த ஒரு சிறப்பு பார்சி உணவு) தானமாக வழங்கினர். பாபாவும் ஆண் தோழர்களும் தங்கள் வெள்ளை மேலங்கி, பச்சை தலைப்பாகை மற்றும் வெள்ளை பருத்தி காலணிகளை அணிந்திருந்தனர். புர்ஜர் சாச்சாவும் அந்த நிகழ்வில் கலந்து கொண்டு, ரகசியமாக இரண்டு புகைப்படங்களை எடுத்தார்.

அன்று மாலை, டாக்டர் நீலு, விஷ்ணு, எரச், முரளி, அலோபா ஆகியோரின் மீது பாபா மிகுந்த கோபம் கொண்டதால், தோழர்களிடம் அவரை அறையுமாறு அறிவுறுத்தியதை அவர்கள் அவ்வாறே செய்தனர்.

மார்ச் 2ஆம் நாள் காலை எட்டு மணியளவில், டாக்டர் நீலு, விஷ்ணு, காக்கா ஆகியோர் மாஞ்ஜ்ரி மா:பி மனையில் அமைக்கப்பட்ட தங்கள் குடிலுக்குள் குடியேறினர்; கைக்கோபாத்தும் அவர்களுடன் இணைந்தார். குடிலில் சிமென்ட் தரை இன்னும் ஈரமாக இருந்ததால், தோழர்கள் அதைப் பயன்படுத்தும் விதத்தில் பாபா, குமாரிடம் அதன் மீது வைக்கோலைப் பரப்புமாறு அறிவுறுத்தினார்.

மறுநாள் பாபா, மோத்திசூருக்குப் புறப்பட இருந்ததால், அவர் இல்லாத நேரத்தில் அந்த நான்கு பெண்மணிகளுக்கான ஏற்பாடுகளைச் செய்து, குடியிருப்பு சம்மந்தமான சிரமங்களைத் தீர்த்து வைத்தார். மார்ச் 1 முதல், பாபா விஷ்ணுவை வீட்டு மேலாளர் பொறுப்பில் இருந்து விடுவித்து, பெண்மணிகளுக்குத் தேவையானவற்றை பஜாரிலிருந்து வாங்கிவரும் பொறுப்பை வழங்கினார். டாக்டர் நீலு ஒரு நாட்குறிப்பைப் பராமரிப்பதைத் தவிர, பெண்மணிகளை கவனிக்க வேண்டும். பெண்மணிகள் விஷ்ணு, நீலு, காக்கா, கைக்கோபாத் ஆகியோருக்குத் தேவையான உணவைத் தயார் செய்யவேண்டும். மெஹர்ஜியிடம் இருந்த பணத்தில் பெண்மணிகளின் பங்கிலிருந்து அவர்களின் உணவுக்காகச் செலவு செய்ய வேண்டும்.

கேக்கி நலவாலாவிடமிருந்து தானத்தை
ஏற்றுக்கொள்ளும் காட்சி
(ACCEPTING BHIKSHA FROM KEKI NALAWALA)

டெஹ்ரா டூன் (DEHRA DUN)

விஷ்ணு அன்று மதியம் ஐந்து நிமிடம் தாமதமாக வந்ததால், பாபாவின் கோபத்திற்குக் காரணமாக இருந்தார். குமார், கோஹெர் ஆகியோரின் முன்னிலையில் அவரை அறையுமாறு பாபா, விஷ்ணுவிற்கு அறிவுறுத்தியதை அவர் அவ்வாறே செய்தார்.

மார்ச் 3ஆம் தேதி, பாபா, திட்டம் மூன்றின் கீழிருந்த தோழர்களை அழைத்து, அவர்களின் கால்களைக் கழுவி வணங்கினார். அப்போது அவர் கூறியதாவது:

"உங்கள் உணர்வுகளைப் புண்படுத்தியதற்காக, தயவு செய்து என்னை மன்னியுங்கள். நீங்கள் செய்த தவறுகளை நான் மன்னிக்கிறேன். 1949 அக்டோபர் 16 மற்றும் 1950 மார்ச் 1க்கு இடையில், நான் மனப்பூர்வமாகவும் வேண்டுமென்றே ஒரு பெரிய தவறிழைத்தேன், அதற்காக தோழர்கள் என்னை உதைக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்; அவ்வண்ணம் கடவுள் என்னை மன்னிப்பார்"

அதன்பிறகு, பாபா அவரது 'தவறை' வெளிப்படுத்தவில்லை என்றாலும், தோழர்கள் அவரை உதைக்கச் செய்தார்.

அவர்கள் மாஞ்ஜ்ரி மாஃபிக்கு வந்ததிலிருந்து, தோழர்கள் பாபாவை அறையவும், அவரது காதுகளைத் திருகவும், இப்போது ஏதோ ஒரு காரணத்திற்காக அவரை உதைக்கவும் செய்தனர். இவ்வாறு, ஒரு பக்தராகத் தனது பங்கை நிறைவேற்றி, பாபா தன்னுடன் இருப்பவர்களுக்கு பணிவு, தன்னடக்கம் போன்ற பாடங்களைக் கற்பித்துக் கொண்டிருந்தார்.

பாபா தொடர்ந்து கூறினார்: **"மூன்றாவது திட்டத்தின் நிபந்தனைகளை 100 சதவிகிதம் உண்மையாகவும் நேர்மையாகவும் பின்பற்ற முயற்சி செய்யுங்கள். நீங்கள், ஒரு நாளின் 24 மணிநேரமும் விழிப்புடன் இருக்க வேண்டும். நீங்கள் தெரிந்தே செய்யும் தவறுகளை நான் கண்டுகொண்டால், உங்களுக்கு அதை எடுத்துக் கூறவோ அல்லது உங்களைத் திருத்தவோ மாட்டேன். அடுத்த இரண்டு அல்லது மூன்று மாதங்கள், நாம் விடுமுறையில் இருப்பதால், உங்கள் கவனத்தை நான் ஈர்க்க மாட்டேன், இந்தக் காலகட்டத்திற்குப் பிறகு, நீங்கள் எடுத்த முயற்சிக்கிணங்க, நான் உங்களை ஒரு தவறிழைத்தவராக பாவித்து, திருப்பி அனுப்புவேன் அல்லது திட்டங்களில் ஏதாவது ஒன்றிற்கு உங்களை வழிநடத்துவேன். இந்த முடிவு நான் எனது உறுதிமொழி மற்றும் நிபந்தனைகளை விடுமுறை காலத்தில் சமரசம் செய்யவில்லை என்பதை உறுதிப்படுத்த உதவும், இது நிபந்தனைகளுடன் எந்தத் தொடர்பும் இல்லாதபோதும் 100 சதவீதம் பின்பற்றப்பட வேண்டும். மூன்றாவது திட்டத்தின் கீழ் உள்ளவர்களின் தனிப்பட்ட முயற்சிகள், விழிப்புணர்வு, நேர்மை ஆகியவற்றுடன் மட்டுமே இது தொடர்புடையதாக இருக்கும்."**

அலோபா, பைதூல், எரச், குஸ்தாஜி, முரளி, பெண்டு, கேக்கி தேசாய், கேக்கி நலவாலா, வேலைக்கார சிறுவன் சத்யபால் ஆகியோருடன் பாபா, 1950 மார்ச் 3 வெள்ளிக்கிழமை மதியம் 1:30 மணிக்கு மாஞ்ஜ்ரி மாஃபியிலிருந்து மோத்திசூருக்குப் புறப்பட்டார். பெண்டு, பைதூல், முரளி, அலோபா ஆகியோர் மாட்டு வண்டிகளில் பொருட்களை ஏற்றிச் சென்ற அதேவேளையில், பாபா, எரச், குஸ்தாஜி, தேசாய், நலவாலா ஆகியோர் இரண்டரை மைல் தூரம் நடந்து, ஹரேவாலா (HARRAWALA) ரயில் நிலையத்தைச் சென்றடைந்தனர். அங்கிருந்து, பெண்டு, முரளி இருவரும் மாட்டு வண்டிகளில் செல்ல இதர அனைவரும் ரயிலில் மோத்திசூர் சென்றனர்.

பாபாவும் தோழர்களும் 30 மைல்கள் பயணம் செய்து 'ராய்வாலா' (RAIWALA) கிராமத்தைச் சென்றடைந்து, அங்கிருந்து ஒரு சரக்கு வண்டியில் தங்கள் பொருட்களையும் ஏற்றிக்கொண்டு, அன்று பிற்பகல் 4:40 மணிக்கு மோத்திசூர் வந்து சேர்ந்தனர். மாலை வேளையில், பாபா, அவர்கள் மாஞ்ஜ்ரி மாஃபியிலிருந்து கொண்டு வந்த சப்பாத்தி, காய்கறிகளை தனது கைகளால் பரிமாறினார்.

புதிதாகக் கட்டப்பட்ட புல் குடில், பழுதுபார்த்து சீரமைக்கப்பட்ட குடிசை மற்றும் தோழர்களுக்காக எழுப்பிய கூடாரம் ஆகியவற்றைப் பார்த்து பாபா தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

அடுத்த நாள், பாபா, கேக்கி தேசாயை டெல்லிக்கும், நலவாலாவை டெஹ்ராடூனுக்கும் அனுப்பி வைத்தார். அவர்கள் மோத்திசூருக்கு வந்த பிறகு, பாபாவும் தோழர்களும் ஒரு நாளைக்கு ஒரு வேளை மட்டுமே உண்ணத் தொடங்கினர். பாபா, குஸ்தாஜி இருவரும் சாதமும் பருப்பும், இதர தோழர்கள் சப்பாத்தியும் பருப்பும் உண்டனர். மேலும், பாபா தனது குடிசையைத் துடைப்பது, பாத்திர பண்டங்கள், மற்றும் கழிவறை சுத்தம் செய்தல், துணிகளைத் துவைப்பது போன்ற பல குற்றேவல் பணிகளைச் செய்யத் தொடங்கினார்.

மார்ச் 4ஆம் நாள் நீராடிய பிறகு, பாபா தனது புல் குடிசையில் பதினைந்து நிமிடங்கள் ஏகாந்தவாசத்தில் அமர்ந்தார்; அதன் பின்னர் அவர் மீண்டும் 'தனது உறுதிமொழியையும் புது வாழ்வின் நிபந்தனைகளையும் உறுதிப்படுத்தியதாக' தோழர்களிடம் தெரிவித்தார்.

ஹரித்வாரில் கடந்த பல்லாண்டுகளாக நடந்து வரும் புனித மனிதர்களின் மிகப் பெரிய திருவிழாவான கும்பமேளாவிற்கு, இந்த ஆண்டும் வரவிருக்கும் அனைத்து துறவிகள், சாதுக்கள் மற்றும் மஹாத்மாக்களின் ஆசிரமங்கள் அல்லது முகாம்களின் பெயர்கள், இருப்பிடங்களைப் பற்றி விரிவாக விசாரிக்குமாறு பாபா தோழர்களுக்கு அறிவுறுத்தினார்.

1950 மார்ச் 7 செவ்வாய்கிழமை அன்று மாலை, தோழர்கள் நீரோடை அருகில் தங்கள் தண்ணீர் குவளைகளை நிரப்பிய வேளையில், பெண்டு அங்கு

வாழும் ஒரு சிறப்பான சாதுவைப் பற்றிய செய்தியைக் கொண்டு வந்தார். பாபா உடனே அந்த சாதுவிடம் சென்று அவருடைய பாதங்களில் தலை வணங்கி, குடிசைக்கு அழைத்து வந்து அவருக்கு உணவளித்தார். சாது அங்கிருந்து புறப்பட்டுச் செல்வதற்கு முன்பு பாபா அவருடன் சுமார் ஒரு மணி நேரம் எழுத்துப்பலகை மூலமாக உரையாடினார்.

மார்ச் 9ஆம் தேதி மதியம் ஒரு மணிக்கு எரச், பெண்டு, பைதூல், குஸ்தாஜி ஆகியோருடன், பாபா பேருந்தில் ரிஷிகேஷுக்குச் சென்று, இமயமலை அடிவாரத்தில் அமைந்த 'கைலாஷ்' (KAILASH) மற்றும் 'மங்கள்' (MANGAL) ஆசிரமங்களில் வாழ்ந்துவந்த பல துறவிகள், சாதுக்கள், மஹாத்மாக்களை தொடர்பு கொண்டு, மரியாதை செலுத்தினார். பாபா அவர்களின் கால்களில் தலை வைத்து வணங்கினார் அல்லது சில சமயங்களில் கைகளால் அவர்களின் கால்களைத் தொட்டார். புது வாழ்வு தொடங்குவதற்கு முன்னர், அவர் மண்டலியின் பார்வையிலிருந்து விலகி, தனிப்பட்ட முறையில் அத்தகைய மரியாதையை வழங்கி வந்தார், ஆனால் புது வாழ்வில் அவர் அதை தனது தோழர்களுக்கு முன்னிலையில் செய்தார். **"புது வாழ்வில் நான் சாதுக்கள், துறவிகள் மற்றும் மஸ்துகளுக்குத் தலைவணங்குகிறேன், ஆனால் நான் முன்பு செய்த மஸ்த் பணியிலிருந்து இது முற்றிலும் மாறுபட்டது"** என்று அவர் கூறினார்.

ஆசிரமங்கள், குடில்கள் மற்றும் குகைகளுக்குச் சென்ற முதல் நாளில், பாபா, 91 பல்வேறு துறவிகள், சாதுக்கள், மஹாத்மாக்களுடன் தொடர்புகளை மேற்கொண்டார். பெண்டு தொடர்புகளின் எண்ணிக்கையைப் பதிவு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டார். 'ஸ்வர்க்' ஆசிரமம் (SWARG ASHRAM) மற்றும் பாகீரதி நதி (BHAGIRATHI RIVER) பாலத்தைத் தாண்டி நீண்ட தூரம் மலைமேல் ஏறி, பாபா ஐந்து மணி நேரத்தில் தொடர்புகளை முடித்தார்.

ரிஷிகேஷுக்குத் திரும்பும் வழியில், 'லக்ஷ்மன் ஜூலா'வை (LAXMAN JHULA பாலம்) நோக்கி, நிர்வாண நிலையில் ஒரு யோகி பயணிப்பதை அவர்கள் கவனித்தனர். மிகுந்த வலியுடன், மெதுவாக, அவர் எடுத்து வைத்த ஒவ்வோர் அடிக்குப் பின்னரும், சாஷ்டாங்க நமஸ்காரம் செய்வது போலத் தரையில் குப்புற விழுந்து வணங்கினார்; அவரது உடல் அழுக்கு மற்றும் வியர்வையால் நிரம்பியிருந்தது. பாபா அந்த யோகியின் கால்களில் தலை வைத்து வணங்கினார்.

அதற்குப் பின்பு, பாபாவும் தோழர்களும் அன்று மாலை 6:30 மணிக்கு, பேருந்தில் மோத்திசூருக்குத் திரும்பிச் சென்று, அவர்களின் எளிய இரவு உணவான பருப்பு, சாதம் அல்லது சப்பாத்தியை உண்டனர். ஒரு கட்டத்தில், பாபா **'ஒவ்வொரு புனித மனிதரையும் ஒரே ஒருமுறை தொடர்பு கொள்வதாகவும், இந்த உடலளவிலான தொடர்பு மூலம் அவர்களுக்குப் பல நூற்றாண்டுகள்**

தவம் மற்றும் துறவறத்திற்குப் பிறகும் அவர்கள் அடையப்பெறாத அத்தகைய பரிசை வழங்குவதாகவும்' விளக்கினார்.

மீண்டும், 1950 மார்ச் 10 அன்று காலை 7:15 மணிக்கு, குஸ்தாஜி, பைதூல், பெண்டு, எரச் ஆகிய நான்கு தோழர்களுடன் பாபா, ரிஷிகேஷுக்குப் பேருந்தில் சென்றார், அங்கு அவர் கிட்டத்தட்ட ஐந்து மணிநேரம் மலைமேல் ஏறி 135 வெவ்வேறு புனித மனிதர்கள் - துறவிகள், சாதுக்கள், மஹாத்மாக்களைத் தொடர்பு கொண்டு வணங்கினார். பாபாவும் தோழர்களும் அன்று மதியம் இரண்டு மணிக்கு மோத்திசூருக்குப் பேருந்தில் திரும்பினர். ஒவ்வொரு பயணமும் மேலும் மேலும் கடினம் என்பதை நிரூபித்துக் கொண்டிருந்தது.

அடுத்த நாள், பெண்டுவுடன், பாபா மாஞ்ஜ்ரி மா:ிக்கு நண்பகல் 12:30 மணியளவில் திரும்பி வந்து தோழர்களை சந்தித்தார். டெஹ்ராடூனிலிருந்து அன்று வந்த டாக்டர் டானைப் பார்த்த மகிழ்ச்சியில் பாபா, "**பணம் சம்பாதிப்பதைப் பற்றி சிறிதும் கவலைப்படாதீர்கள். நோயாளிகள் வந்தால் நல்லது; இல்லையேல் அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். உங்கள் உணவைப் பொறுத்தவரை சிக்கனம் தேவையில்லை; நன்றாக உண்டு, ஆரோக்கியமாக இருங்கள்**" என்று கூறினார்.

டாக்டர் டானிடம் நோயாளிகளை அழைத்து வரும் பொறுப்பு கேக்கி நலவாலாவிற்கு வழங்கப்பட்டது. ஒருமுறை அவர் தனது மனைவி மற்றும் குழந்தைகளை உடல் பரிசோதனைக்காக அழைத்து வந்தார், ஆனால் டானிடம் கட்டணம் எதுவும் வசூலிக்க வேண்டாம் என்று பாபா கேட்டுக் கொண்டார். அடுத்த முறை, கேக்கி ஒரு வயதான ஏழைப் பெண்மணியை சிகிச்சைக்காக அழைத்து வந்தார். டான், அவருக்காக செய்த மொத்த செலவில் கேக்கி நான்கில் ஒரு பங்கை மட்டுமே வழங்கினார்.

புது வாழ்வு தோழர்களுக்கு உதவுவதற்காகவே டான் தனது மருத்துவ தொழிலைத் தொடங்கினார்; ஆனால், அவர் பணம் சம்பாதிப்பதற்கு பதிலாக, அதை இழந்து கொண்டிருந்தார். அவர் எந்தவொரு பாதிக்கப்பட்ட நபர்களை ஏற்றுக்கொண்டாலும், தங்களை முழுமையாக கவனித்து, குணப்படுத்த முடியாத பல நோயாளிகளை அவரது சொந்த செலவில் குணப்படுத்தினார்.

மார்ச் 10ஆம் நாள், டாக்டர் டான் அமெரிக்காவில் வாழும் எலிஸபெத் பேட்டர்ஸனுக்கு எழுதிய கடிதத்தில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்:

பாபாவின் புது வாழ்வைப் பொறுத்த வரையில், நம்மில் ஒருவராலும் (தோழர்களால்) அதன் தலை அல்லது வாலைப் புரிந்துகொள்ள முடியாது.

இப்போது பாபாவுடன் மூன்றாவது திட்டத்தில் இருப்பவர்கள் கூட, நீண்ட காலம் அங்கு இருப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது; மேலும் பாபா, தோழர்கள் தன்னுடன் இருப்பதை விரும்பவில்லை என்று வெளிப்படையாகச்

சொல்லிவிட்டார். இது ஒரு மர்மம், ஒரு மர்மம் மீண்டும் ஒரு மர்மம், மேலும் பாபாவுடன் இருப்பவர்களுக்கும் அவரை விட்டு விலகி இருப்பவர்களுக்கும் இது மிகவும் கடினம்.

நான் திட்டம் 'ஒன்று-பி'யைத் (தற்காலிகமாக பணிபுரிவது) தேர்வு செய்தேன், ஏனெனில் பாபா, நான் அதைச் செய்வதை விரும்புவதாக நான் உணர்ந்தேன்; ஆனால் இந்தத் தொழிலில், அச்சுறுத்தும் அளவிற்கு பணம் விரயமாக்கப்படுகிறதா என்பது உண்மையிலே எனக்குத் தெரியாது. மேலும், நீங்கள் அறிந்ததைப் போல், இந்தப் பணி எவ்வளவு காலம், ஒரு மாதம், ஒரு வருடம் அல்லது வாழ்நாள் முழுவதும் நீடிக்குமா என்றும் எனக்குத் தெரியாது.

ஆனால் பாபாவைப் பொறுத்தவரை, அவர் அன்று போல் இன்றும் அபிமானமானவராக, வணங்கி வழிபடத்தக்கவராக இருக்கிறார்.

சில மாதங்களுக்குப் பிறகு, செப்டம்பரில், டான் வேறொருவருக்கு எழுதினார்:

வாழ்க்கையின் ஏற்றத் தாழ்வுகளைப் பொறுத்த வரையில், பாபாவின் இந்தப் புது வாழ்வின் காலகட்டம் எதையாவது அர்த்தப்படுத்துகிறது என்றால், வெற்றிகள் மற்றும் இன்பங்களைப் போலவே பேரிடர்களையும் நாம் வரவேற்க வேண்டும் என்று தோன்றுகிறது, ஏனெனில் அவை வாழ்க்கை எனும் ஒரே கழியின் எதிர் முனைகள் மட்டுமே. இவை அனைத்தும் 'இறைவனே உமது விருப்பம் நிறைவேறும்' என்று கூறுவது போல் - ஆனால் ஆக்கப்பூர்வமான முறையில், ஐயுறவு கொள்ளாத வகையில் இருப்பதாகத் தோன்றுகிறது.

ஒரு நாள், பெண்மணிகளுடன் உரையாடுகையில், தவறுதலாக, ரானோவும் கிட்டியும் மும்பையில் பள்ளி ஆசிரியர்களாக பணியில் சேர்ந்ததை நாஜா வெளிப்படுத்தினார். பெண்மணிகளிடம் மும்பை பற்றி எதுவும் கூற வேண்டாம் என்பது பாபாவின் கட்டளை. பாபா மாஞ்ஜ்ரி மா:பிக்குத் திரும்பி வந்த வேளையில், நடந்ததை அறிந்ததும், அவர் கோபமடைந்தார். பாபா, அவரை உடனடியாக மும்பைக்குச் செல்லுமாறு கட்டளையிட்டார், ஆனால் பின்னர் அவர் நாஜாவை மன்னித்து, மீண்டும் அவ்வாறு செய்ய வேண்டாம் என எச்சரித்தார்.

புது வாழ்வில் இணைவதற்கான முடிவெடுப்பதற்கு முன்பு, டாக்டர் கனி தனது குடும்பத்திற்கு ரூ 35,000 (அவரது மனைவியின் நிலத்தை அடமானமாக வைத்து) வழங்க வேண்டியதாக இருந்தது. அவரை, புது வாழ்வில் இணைக்கும் நோக்கத்தில், பாபா அவருக்கு முழுத் தொகையையும் வழங்க வாக்குறுதி அளித்திருந்தார். எனவே, அவரது வாக்குறுதியைக் காப்பாற்றும் வகையில், பாபா, அவரது 350 சீடர்கள், கனி சார்பில் தலா ரூ 100 வழங்குமாறு கேட்டு,

ராம்ஜூ மூலமாகக் கோரிக்கைக் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டது. கோரிக்கையுடன் சேர்த்து அனுப்பிய பாபா வரைந்த கடிதத்தின் ஒரு பகுதி பின்வருமாறு:

புது வாழ்வு நிபந்தனைகளின்படி, நான் எவரிடமிருந்தும் பணத்தைப் பெறவோ அல்லது எவருக்கும் பணம் வழங்கவோ முடியாது; மேலும், மூன்றாவது திட்டத்தின்படி உணவைத் தவிர வேறு எதையும் தானமாகக் கேட்கக் கூடாது. ஆனால் புது வாழ்வில் தவிர்க்கப்பட வேண்டிய பழைய வாழ்க்கை சுமையாக இதைப் பிரத்தியேகமாக எடுத்துக் கொண்டு, நான் பின்வருமாறு செயல்பட முடிவு செய்துள்ளேன்:

எனது 350 பழைய நண்பர்களிடம், தேவை என்ற கண்டிப்பில் இருக்கும் நண்பராக, ஒவ்வொருவரும் இந்த நிதிக்கு ரூ 100 தானமாக வழங்குவதன் மூலம், ரூ 35,000 மொத்த தொகையை எனக்கு வழங்கி உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இது புது வாழ்வு தோழர்களில் ஒருவரைக் குறித்த ஒரு தனிப்பட்ட சூழ்நிலை, மேலும், இந்தப் புது வாழ்வில் எனக்கு இது, முதல் மற்றும் கடைசி நிகழ்வு என்பதையும் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன்; மேலும், இந்த 350 நண்பர்களும் கனிக்கு உதவவில்லை, ஆனால் எந்த ஆன்மீக வெகுமதியையும் எதிர்பார்க்காமல் எனக்கு உதவுகிறார்கள், ஏனெனில் இந்தப் புது வாழ்வில் நான் ஓர் ஆன்மீக குருநாதர் என்ற கேள்விக்கு இடமே இல்லை. மேலும், இது எனது புது வாழ்வு தோழராக இருக்கும் டாக்டர் கனியை எந்த வகையிலும் பாதிக்காது.

விஷ்ணு, டாக்டர் நீலு இருவரும் மாஞ்ஜ்ரி மா∴பி மனையில் புதிதாக கட்டப்பட்ட கிணற்று நீரை அருந்தாமல், மழை பெய்ததால் துர்நாற்றம் வீசுவதாக கூறி, வேறு கிணற்றிலிருந்து தண்ணீரைக் கொண்டு வந்தனர். பாபா அவர்களைக் கடிந்துகொண்டார், **"பெண்மணிகள் இந்த நீரை அருந்தும்போது, நீங்கள் ஏன் அருந்தக்கூடாது? இது எனது கட்டளையை மீறுவதாகும், அதற்குத் தண்டனையாக நீங்கள் இருவரும் உங்கள் மூக்குகளைத் தரையில் உரச வேண்டும்."** அவ்வேளையில், அங்குத் தற்செயலாக வந்த குமார் முன்னிலையில் அவமானப்படுத்தப்பட்ட விஷ்ணுவும், நீலுவும் பாபாவின் கட்டளைப்படி அவ்வாறே செய்தனர். பாபா, நீலுவிடம் காக்கா, விஷ்ணு இருவரின் தண்ணீர் பானைகளை நிரப்ப உத்தரவிட்டார். காக்கா இப்போது மாரடைப்பிலிருந்து மீண்டு, நீண்ட நடைப்பயிற்சி மேற்கொள்வதைக் கண்டு பாபா மகிழ்ச்சியடைந்தார்.

இரண்டு நாட்களுக்குப் பின்னர், 1950 மார்ச் 13 திங்கட்கிழமை, மாஞ்ஜ்ரி மா∴பியிலிருந்து பாபா, பெண்மணிகளை ஒரு வாடகை காரில் மோத்திசூருக்கு அழைத்து வந்தார். பெண்டு ஒரு நாள் முன்னதாகவே புறப்பட்டுச் சென்றார். பாபா, பெண்மணிகளுக்குத் தனது குடிசையைக் காண்பித்து, பின்பு ஹரித்வாரைச் சுற்றி அழைத்துச் சென்று, அதே நாளில் அவர்களை மாஞ்ஜ்ரி மா∴பிக்கு திருப்பி

அனுப்பினார். பாபாவின் உத்தரவின் பேரில், குமார், விஷ்ணுவை தனது மோட்டார் சைக்கிளில் அழைத்து வந்தார், பின்னர் அவர்களும் திருப்பி அனுப்பப்பட்டனர்.

பாபா அறிவுறுத்தியதற்கு இணங்க, எரச், பைதூல் இருவரும் சாதுக்கள் ஒன்றுகூடும் வெவ்வேறு ஆசிரமங்கள் மற்றும் முகாம்களில் அவர்களைத் தேடி, கண்டுபிடித்து, பாபா மோத்திசூருக்குத் திரும்பி வந்ததும் விபரங்களைப் பகிர்ந்து கொண்டனர். மார்ச் 15ஆம் நாள் காலை ஐந்து மணியளவில், இடி, மின்னலுடன் தொடர் மழை பெய்த போதிலும், பாபா, கன்கல் (KANKHAL) மற்றும் ஹரித்வாரில் தங்கியிருந்த துறவிகளைத் தொடர்பு கொள்ள ஆண் தோழர்களுடன் சென்றார். குடிசைகள், துறவிகளின் குடில்கள், ஆசிரமங்கள் மற்றும் இந்தப் பகுதியின் மறைவான ஒவ்வொரு மூலை முடுக்குகளையும் பார்வையிட்ட பாபா, இந்த ஆத்மாக்களுடன் எட்டு மணிநேரம் இடைவிடாமல் தொடர்பை மேற்கொண்டார். முற்றிலும் சோர்வுற்ற அவர்கள், பிற்பகலில் மோத்திசூருக்குத் திரும்பி வந்தனர். அன்று காலையில் அருந்திய தேநீரைத் தவிர உணவு, பானம் எதுவுமின்றி நான்கு தோழர்களும் பாபாவின் அருகிலேயே நடக்க வேண்டியிருந்தது, அவர் தொடர்ந்து மலைப் பகுதியில் நடந்து வந்தார்.

மார்ச் 16ஆம் நாள், காலை பத்து மணிக்கு, பாபா, மோத்திசூரிலிருந்து ஐந்து மைல் தொலைவில் அமைந்த 'ஸாத் ஸரோவர்' (SAAT SAROVAR – SEVEN LAKES) ஏரிகளுக்குச் சென்றார். எரச், பெண்டு, பைதூல், குஸ்தாஜி ஆகியோரும் அவருடன் இருந்தனர். இப்பகுதி, 'தண்டி' (DANDI) மற்றும் 'விரக்த' (VIRAKTA) பிரிவுகள் என்றழைக்கப்படும் சாது, சந்நியாசிகள், மஹாத்மாக்கள் போன்றவர்களின் இரண்டு குழுக்களைக் கொண்ட துறவிகளின் இருப்பிடங்களால் சூழப்பட்டது. நதிக் கரையில் பல குடிசைகள் அல்லது துறவி மடங்கள் இருந்தன, மேலும் அடர்ந்த காடுகளின் வழியாகப் பாய்ந்த நதி, இந்த ஆத்மாக்களுக்கு மறைவிடமாகவும், அடைக்கலமாகவும் இருந்தது. நதிக்கரையோரம் பாபா 160 புனித ஆத்மாக்களைத் தொடர்பு கொண்டு, அவர்களின் காலடியில் தலை வைத்து வணங்கினார். ஒரு சந்திப்பின்போது, மௌனமாக இருந்த சாது ஒருவர் பாபாவிற்கும் சக தோழர்களுக்கும் அருந்த சர்பத்தை வழங்கினார்.

பாபா வேறு ஓர் ஆசிரமத்திற்கு விஜயம் செய்தபோது, துறவி ஒருவர் தனது குடிசையில் தியானத்தில் ஆழ்ந்திருப்பதைக் கண்டு, அவர் வெளியே வருவதை எதிர்நோக்கி ஒரு மரத்தடியில் அமர்ந்தார். அவ்வேளையில் பாபா தோழர்களுக்கு இவ்வாறு விளக்கினார்: **"பழைய வாழ்க்கையில், நான் மஸ்துகள், துறவிகள், வாலிகள், சாதுக்கள் ஆகியோரை இரண்டு காரணங்களுக்காகத் தொடர்பு கொண்டேன். முதலாவது அவர்களின் தரிசனத்தைப் பெறுவது, இரண்டாவது அவர்களுடனான எனது சிறப்பு பணிகள் பற்றியது - மேலும் நான் அதைக் குறித்து வெளிப்படுத்த**

விரும்பவில்லை, ஏனெனில் இது ஒரு மர்மம், மகத்தான மேல்நிலை மஸ்துகள், புனிதர்கள் மற்றும் வாலிகளுடனான எனது தொடர்புகளைத் துல்லியமாக பதிவு செய்வதில் நான் மிகவும் குறிப்பாக இருந்தேன், நான் முழுமையாகத் திருப்தி அடையும் வரை அவர்களை மீண்டும் மீண்டும் தொடர்புகொண்டேன்.

"ஆனால் தற்போதைய புது வாழ்வில், பெரியவர்கள், சிறியவர்கள், துறவிகள், வாலிகள், சாதுக்கள் என்ற பாகுபாடு இருக்காது, அவர்களால் செய்ய வேண்டிய சிறப்பு வேலைகள் எதுவும் இல்லை. நான் அவர்களின் தரிசனத்திற்காக மட்டுமே அவர்களிடம் செல்கிறேன். எனது திருப்திக்காக மட்டுமே இந்தப் பதிவுகளை வைத்துள்ளேன். இருப்பினும், இந்தப் பணி வெறும் பொழுது போக்கு அல்ல என்பதை நான் வலியுறுத்த வேண்டும்; இது எனக்கு திட்டவட்டமான முக்கியத்துவத்தையும் அதன் பின்னணியில் ஒரு காரணத்தையும் கொண்டுள்ளது."

அன்று மாலை நான்கு மணிக்கு பாபா மோத்திசூர் திரும்பிச் சென்றார். ஸாத் ஸரோவரில் பணிபுரிந்த அவர், பசியுடன் இருந்தார்; ஆனால் சத்யபால் சரியான நேரத்தில் சாதம் தயார் செய்யாதது பாபாவை வருத்தமடையச் செய்தது; மேலும் அவர் பொறுமையை இழந்ததற்காக ஒவ்வொரு தோழரிடமும் அவருடைய காதைத் திருகச் சொன்னார். அலோபாவிற்கு உடல்நிலை சரியில்லாததால், சத்யபால், பாபாவிற்கும், தோழர்களுக்கும் உணவு தயார் செய்து வந்தார். காளை வண்டியை தங்கள் பொருட்களுடன் இழுத்துச் சென்ற ஆங்கிலேயக் காளை ராஜாவைக் கண்காணிக்கும்படி முரளியிடம் கூறப்பட்டது.

மீண்டும் அடுத்த நாள், 1950 மார்ச் 17 அன்று, பைதூல், எரச், குஸ்தாஜி, பெண்டு ஆகியோருடன், பாபா ஸாத் ஸரோவருக்குச் சென்று, பொழுது சாயும் முன்னதாக, 400 சாதுக்கள் மற்றும் புனிதர்களை வணங்கி தனது பணியை நிறைவுசெய்தார்.

எட்டு நாட்களுக்கு முன்னர் அவர் இந்தப் பணியைத் தொடங்கியதிலிருந்து, இதுவரை தொடர்பு கொண்டவர்களின் மொத்த எண்ணிக்கை 794ஆக உயர்ந்தது.

மோத்திசூருக்குத் திரும்பும் வழியில் நடந்து சென்றபோது, எரச்சும், பெண்டுவும் இரண்டு காகங்கள் இனச்சேர்க்கை செய்வதை கவனித்தனர். எரச், பாபாவிடம் அதைக் குறிப்பிட்டு, "காகங்கள் இனச்சேர்க்கையில் ஈடுபடுவதைப் பார்க்கும் எவரும் உயிரைத் துறந்து விடுவார்கள் என்று கூறப்படுகிறது" என்றார்.

"எவ்வளவு நேரத்திற்குப் பின்னர்?" என்று பாபா வினவினார்.

அதை இலகுவாக எடுத்துக்கொண்ட எரச், "ஒரே நாளுக்குள். இப்போது நாங்கள் இருவரும் நாளை உயிருடன் இருக்க மாட்டோம்" என்றார்.

"எனது கும்பமேளா வேலை நிறைய பாக்கி உள்ளது, நீங்கள் இருவரும் உயிரைத் துறந்தால் என்னவாகும்? உங்களைக் காப்பாற்ற எந்தப் பரிகாரமும் இல்லையா?"

"ஒரே ஒரு வழி இருக்கிறது," எரச் கேலி செய்தார். "எங்களின் மரணம் குறித்து எங்கள் உறவினர்கள் அல்லது பரிச்சயமானவர்கள் எவருக்கேனும் தெரிவித்தால், நாங்கள் காப்பாற்றப்படுவோம்" என்றார் எரச்.

பாபா, அதைத் தீவிரமாக எடுத்துக் கொண்டு, **"சரி, நீங்கள் இருவரும் உடனடியாக ஹரித்வாருக்குத் திரும்பிச் சென்று, உங்கள் மறைவு குறித்து கேக்கி தேசாய்க்குத் தொலைத்தந்தி அனுப்புங்கள்"** என்றார்.

அவர்களின் நகைச்சுவை நாடகம் பின்னடைவை சந்தித்தது. தனது மூத்த மகன் இறந்துவிட்டார் என்ற செய்தியைக் கேட்டு கெய்மாய் என்ன சொல்வார்? சகோதரன் பெண்டு மறைந்த செய்தியைக் கேட்டு நாஜா என்ன நினைப்பார்? ஆனால் அவர்கள் இருவரும் பாபாவின் அறிவுறுத்தலை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக ஹரித்வாருக்கு நடந்து சென்று இருவரும் உயிரைத் துறந்து விட்டதாக ஒரு தொலைத்தந்தியை அனுப்பினர்.

அடுத்த நாள், பாபா, அவர்கள் இருவரும் உயிருடன் இருப்பதாக இரண்டாவது தொலைத்தந்தியை அனுப்புமாறு அறிவுறுத்தியதும் அதுவும் அனுப்பப்பட்டது. ஆனால் முழு நிகழ்வும் இப்படி உருமாறியது; கேக்கி இரண்டாவது தொலைத்தந்தியை முதலில் பெற்றார், எனவே முதல் தந்தி அதற்குப் பிறகு வந்ததால் அவர் அதை ஒரு பொருட்டாகக் கருதவில்லை.

காகம் குறித்த மூடநம்பிக்கையும் அதன் பரிகாரமும் இந்தியாவில் பரவலாக இருந்தாலும், பெண்டு, எரச் இருவரும் அதை நம்பவில்லை; அவர்கள் பாபாவை மகிழ்விப்பதற்காக மட்டுமே இந்தத் தலைப்பை எடுத்து வாதிட்டனர். ஆனால் அது அவர்களை நோக்கித் திரும்பிவந்து, இருவரும் கேலிக்கு உள்ளாக்கப்பட்டனர்!

1950 மார்ச் **18** அன்று, சைத்தன்ய தேவ் (CHAITANYA DEV) ஆசிரமத்தில் இருந்த மஹாத்மாக்களை தொடர்பு கொள்ள பாபா, நான்கு தோழர்களுடன் கன்கல் கிராமத்திற்குப் புறப்பட்டார். 'மார்காட்' (MARGHAT) கிராமத்திற்கு அருகில், பாபா அவர்களை மஹாத்மாக்களில் ஒரு பிரிவினரின் முகாமுக்கு அழைத்துச் சென்றார். அன்றைய தினம், பாபா **418** தொடர்புகளை மேற்கொண்டார் - ஒவ்வொரு மேல்நிலை ஆத்மாக்களின் பாதங்களிலும் தலை வணங்கினார்.

அன்று மாலை தாமதமாக மோத்திசூருக்குத் திரும்பியபோது, அவர் தோழர்களிடம், **"கும்பமேளாவில் எனது பணி, ஒருவகையில், ஆன்மீகத்துடன் தொடர்புடையது, ஆனால் புது வாழ்வில் நமக்கு ஆன்மீகத்துடன் எந்த தொடர்பும் இல்லை. கடந்த காலத்தில், இன்று நாம் விஜயம் செய்த புனித ஸ்தலங்கள் ஆன்மீகத்தால் நிரம்பியிருந்தன, ஆனால் இந்நாட்களில் புனித**

யாத்திரையாகச் செல்லும் எவரும் ஆன்மீக சூழல் நிறைந்த இடம் என்று அழைக்கப்படுவதைக் காண முடியாது."

பாபா மீண்டும் **1950** மார்ச் **19** அன்று, கன்கல் மலை மீது ஏறினார், ஆனால் இந்த முறை பீம்கோடா (BHIMGODA) கிராமத்திலிருந்து ஒரு மைல் தொலைவில் அமைந்த கர்கரி நதிக்கரைக்கு (KHARKHARI RIVER) அருகில் சென்றார்.

அங்கு 'உதாசி' (UDASI), 'நிர்மலி' (NIRMALI) போன்ற பிரிவுகளைச் சார்ந்த சாதுக்கள், மஹாத்மாக்களுடன் பாபா **113** தொடர்புகளை மேற்கொண்டார். தொடர்ந்து கீழே குனிந்து எழுந்ததால் முதுகு வலிப்பதாக பாபா புகார் கூறிய போதிலும், ஒவ்வொரு துறவி, சாது மற்றும் மஹாத்மாவின் காலிலும் தலை வைத்து வணங்குவதை அவர் நிறுத்தவில்லை. பாபா, மதிய வேளையில் மோத்திசூருக்குத் திரும்பி வந்தார்; இதுவரை மொத்தத்தில் **1,325** தொடர்புகளை மேற்கொண்டார்.

கடந்த சில நாட்களாக பாபாவின் உடல்நிலை சீராக இல்லை; சோர்வாகவும் பலவீனமாகவும் இருந்தார். அவரது வேலைப்பளுவால் ஏற்பட்ட சிரமம் உடல்நிலையைப் பாதித்தது, மேலும் அவர் கண்களில் சிறு சிறு மணற் கற்கள் கலந்த உணர்வு இருப்பதாக புகார் கூறினார்.

மார்ச் **20**ஆம் நாள், பெண்டுவுடன் பாபா மாஞ்ஜ்ரி மா:பிக்குப் பேருந்தில் பயணம் செய்து அன்று மதியம் ஒரு மணிக்கு வந்து சேர்ந்தார். அங்கு அவர் விஷ்ணு, நீலு, கோஹெர், குமார் ஆகியோருக்கு அவரவர் தனிப்பட்ட கடமைகளை எடுத்துக்கூறினார்.

அவர் செய்து வரும் வேறுவேறு பணிகளை விவரித்து, பாபா இவ்வாறு விளக்கினார்: "**மோத்திசூரில், அனைத்து இயற்கை கூறுகளும், இதர சக்திகளும் எனக்கு எதிராக உள்ளன. மேகமூட்டமான வானத்துடன் பலத்த காற்று தொடர்ந்து வீசுகிறது, அடிக்கடி கடுமையான மழையும் பொழிகிறது. நாம் தங்கும் இடத்தில் தண்ணீருக்கான ஏற்பாடு மிகவும் சிரமமாக உள்ளது, மேலும், இயற்கையின் சீற்றத்திற்கு எதிராக, பாதுகாப்புக்கு நிழலும் இல்லை. தோழர்களுக்கான கூடாரம், எனக்கான குடில், மிகவும் குறைபாடுள்ள தங்குமிடமாக உள்ளது. மேலும் நமது அன்றாட உணவு - ஒரு நாளைக்கு ஒரு வேளை பருப்பு, சப்பாத்தி மற்றும் இரண்டு வேளை காலையும் மாலையும் தேநீர் மட்டுமே. இவை அனைத்தும் எனக்கு சிரமங்களைத் தருகின்றன. ஆனால் எனது பணியைக் கருத்தில் கொண்டு இதுபோன்ற இடர்பாடுகளைக் குறித்து நான் கவலைப்படுவதில்லை.**"

அஹமதுநகரிலிருந்து ஆதி சீனியர் அனுப்பிய மூன்று திட்டங்களின் அச்சிடப்பட்ட பிரதிகளை விஷ்ணு, பாபாவிடம் கொடுத்தார். பழைய வாழ்க்கையில், பாபாவின் அறிவுறுத்தல்கள் மற்றும் செய்திகள் அவரது

அன்பர்களுக்கு சுற்றறிக்கைகள் மூலம் தெரிவிக்கப்பட்டன. புது வாழ்வில், இந்த நடைமுறை 'புது வாழ்வு சுற்றறிக்கைகளை" அனுப்புவதன் மூலம் தொடர்ந்தது. இவ்வாறு, குறிப்பிட்ட இடைவெளியில், ஏதேனும் ஒரு சாக்குப்போக்கில், பாபா மறைமுகமாக, கிழக்கு மற்றும் மேற்கத்திய நாடுகள் முழுவதிலும் வாழ்ந்த தனது சீடர்களுடன் தொடர்பு வைத்திருந்தார்; இருப்பினும், புது வாழ்வின் தொடக்கத்தில், அவரிடமிருந்து அனைத்து தொடர்புகளும் நிறுத்தப்படும் என்று அவர் கூறினார். சமீபத்தில் அவர் புது வாழ்வின் தினசரி நிகழ்வுகள் அடங்கிய டாக்டர் கனி மற்றும் டாக்டர் நீலுவின் நாட்குறிப்புகளை வெளியிட்டு விநியோகிக்க அறிவுறுத்தினார்!

பாபா, நீலுவிடம் திட்டம் மற்றும் சுற்றறிக்கையின் நகல்களைக் கொடுத்து, அதை விரைவாகப் படித்து ஏதாவது விடுபட்டிருக்கிறதா என்று பார்க்கும்படி கேட்டுக் கொண்டார். நீலு, "கனியின் 'போஜா நிதி'யைப் (BOJA FUND - இடர்கால நிதி) பற்றி ஆதி எந்தக் குறிப்பையும் சேர்க்கவில்லை." என்று கூறியதும், இதை அடுத்த சுற்றறிக்கையில் இணைக்குமாறு ஆதிக்கு எழுதும்படி பாபா அவருக்கு அறிவுறுத்தினார்.

1950 மார்ச் **21** காலை **9:30** மணிக்கு டாக்டர் டான், எல்சா, கேக்கி நலவாலா, குமார் ஆகியோர் பாபாவைப் பார்க்க வந்தனர். பாபா, டானிடம், **"உங்கள் மருத்துவ பயிற்சியைப் பற்றி கவலைப்படாதீர்கள். நோயாளிகள் எவரும் இல்லை என்றால், மருத்துவமனையை மூடிவிட்டு இங்கேயே வாருங்கள்"** என்று அறிவுரை வழங்கினார். டான் தோழர்களுக்கு நிதி உதவி வழங்க விரும்பி, அதற்காக ஒரு மருத்துவமனையைத் திறக்கும் யோசனையை முதலில் கொண்டிருந்தார். ஆனால் அவர் ஒன்றன் பின் ஒன்றாக ஏமாற்றத்தை அனுபவித்தார். உள்ளூர்வாசிகள் அவருடைய தாராள மனப்பான்மையைப் பயன்படுத்திக் கொண்டதால் அவர் தொடர்ந்து பணத்தை இழக்கத் தொடங்கினார்.

மாஞ்ஜ்ரி மா∴பியில் பாபா தங்கியிருந்த காலத்தில், கேக்கி நலவாலா, புர்ஜர் சாச்சா, எல்சா மிஸ்திரி, ஹெலன், வீரேந்திர பாண்டே, பல்கலைக்கழகப் பேராசிரியர் உல்∴பத் லேக் ராஜ் மற்றும் குறிப்பாக குமாரின் குடும்பங்கள் பாபாவின் அன்பில் நெருங்கி இருந்தன. இந்த அன்பர்கள் பாபாவின் வருகையை அறியாமலேயே காத்திருந்தது போலவும், பாபா அவர்களுக்காக குறிப்பாக மாஞ்ஜ்ரி மா∴பியில் வந்து தங்கியதாகவும் தோன்றியது. குமாரின் மனைவி சுபத்ரா ஐந்து பெண்மணிகளுடன், அவர்களில் ஒருவராகக் கலந்து கொண்டார், மேலும் பாபா, அவர்களின் குழந்தைகள் மீது மிகுந்த பாசத்தைப் பொழிந்தார்.

பெண்மணிகளுக்கான ஏற்பாடுகளை சரிபார்த்த பின்பு, பாபா, **22**ஆம் நாள் பெண்டுவுடன் மாஞ்ஜ்ரி மா∴பியிலிருந்து மோத்திசூருக்குப் புறப்பட்டார். புறப்படுவதற்கு முன்பு, மாஞ்ஜ்ரி மா∴பியில் இருந்த ஆண், பெண்மணிகள்

அனைவருக்கும் காலரா தடுப்பூசி போடும்படி கட்டளையிட்டார், அதனால் அவர்கள் ஒரு நாள் கும்பமேளாவில் கலந்து கொள்ள முடியும்.

ஹரித்வார் ரயில் நிலையத்தில், பாபா மற்றும் பெண்டுவுடன் எரச், குஸ்தாஜி, பைதூல் ஆகியோரும் இணைந்தனர். ஆண் தோழர்களுடன் பாபா மீண்டும் கன்கலுக்குப் புறப்பட்டார். பாபாவின் மோத்திசூர் பயணம் முழுவதும், இமயமலையிலிருந்து பனிக் காற்று வீசியதால், மிகவும் குளிராக இருந்தது. பெரும்பாலான பகுதிகளில் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது, சில சமயங்களில் பலத்த மழையும் பெய்தது. அன்றைய தினம் மேகமூட்டத்துடன் கடும் புயலும் வீசியது. அன்று காலை 10:30 மணியளவில், பலத்த காற்று, இடி மற்றும் மின்னலுடன் மழை பொழியத் தொடங்கியது. புயலைப் பொருட்படுத்தாமல், பாபா ஆசிரமங்களையும் முகாம்களையும் தேடி அலைந்து, மேலும் 225 சாதுக்கள் மற்றும் மஹாத்மாக்களை தொடர்பு கொண்டார். களைத்துப்போய், பாபாவும் தோழர்களும் பிற்பகலில் மோத்திசூருக்குத் திரும்பினர்.

அவர்களது குடியிருப்பில் டெல்லியைச் சேர்ந்த பிரகாஷ்வதி ஷர்மா, தனது இரண்டு மாத குழந்தையுடன் காத்திருந்தார். கிஷன் ஸிங் அவரிடம் பாபாவைப் பற்றிய விபரங்களைக் கூறியிருந்தார். தரிசனத்திற்குத் தடை இருந்தபோதிலும், பாபா அவரை சந்தித்து, **"டெல்லியில் ஒருவரும் தரிசனம் நிறுத்தப்பட்டதாக உங்களுக்குச் சொல்லவில்லையா?"** என்று கேட்டார்.

"அவர்கள் சொன்னார்கள், ஆனால் ஒருவருடைய தந்தையின் வீட்டுக் கதவுகள் அவரது மகளுக்காக எப்போதும் திறந்தே இருக்கும்" என்று பிரகாஷ்வதி பதிலளித்தார்.

பாபா புன்னகைத்து, தனது நெற்றியை மூன்று முறை தொட்டு, **"நீங்கள் மிகவும் அதிர்ஷ்டசாலி. புது வாழ்வில், நான் பார்வையாளர்களைப் பார்ப்பதையும், நேர்காணல், தரிசனம், ஆசி வழங்குவதையும் நிறுத்திவிட்டேன். பிற அன்பர்களை இங்கு வர வேண்டாம் என்று சொல்லுங்கள்."** புறப்படுவதற்கு முன்பு, பிரகாஷ்வதி பாபாவின் ஆசீர்வாதத்தை வேண்டிக்கொண்டார். பாபா உடனே அவரிடம், **"புது வாழ்வில் நான் அன்பை மட்டுமே தருகிறேன் - ஆசீர்வாதங்களை அல்ல - பதிலுக்குப் பிறரிடமிருந்து அன்பை எதிர்பார்க்கிறேன்"** என்று கூறினார்.

குஸ்தாஜி, பைதூல், எரச் மற்றும் பெண்டுவுடன், பாபா மீண்டும் மறுநாள் காலை, 1950 மார்ச் 23 அன்று கன்கலுக்குச் சென்றார். 678 தொடர்புகளை மேற்கொண்ட பின்பு, பாபாவும் தோழர்களும் அன்று மதியம் மூன்று மணிக்கு மிகவும் சோர்வடைந்த நிலையில் மோத்திசூருக்குத் திரும்பிவந்தனர்.

எரச், பெண்டு இருவருக்கும் திடீரெனப் புகைபிடிக்கும் ஆர்வம் எழுந்தது, ஆனால் அவர்களிடம் சிகரெட் தீர்ந்து விட்டது. இதை அறிந்த சத்யபால் என்ற சமையல்கார வாலிப சிறுவன், அவ்வப்போது சிகரெட்டை அவர்களை நோக்கி மெல்ல வீசி எறிவதில் பெருமை அடைந்தான். 'பிச்சைக்காரர்கள்' இருவரும், அதை தானமாக ஏற்றுக்கொண்டு, ஓர் அலாதி இன்பத்தை அனுபவித்து, அந்த இளைஞனுக்கு நன்றியுள்ளவர்களாக உணர்ந்தனர்.

மார்ச் 24ஆம் நாள் காலை, குஸ்தாஜி, பைதூல், பெண்டு, எரச் ஆகியோருடன், பாபா மீண்டும் கன்கலை நோக்கி மலைமேல் ஏறி, அங்கு பல புதிய தொடர்புகளை மேற்கொண்டனர் - 568, சாது, சந்நியாசிகள், துறவிகள் மற்றும் மஹாத்மாக்கள். இந்தப் புனித ஆத்மாக்கள் மலைப்பகுதி முழுவதும் ஆங்காங்கே அமைந்த வேறுவேறு ஆசிரமங்களிலும் முகாம்களிலும் தங்கள் உறைவிடத்தை அமைத்துக் கொண்டனர்.

அடுத்த நாள், பாபா மீண்டும் கன்கல் மலையில் அமைந்த பல ஆசிரமங்களுக்கும், பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த சாதுக்களின் முகாம்களுக்கும் சென்று, மேலும் 165 தொடர்புகளை மேற்கொண்டார்.

1950 மார்ச் 26 ஞாயிற்றுக்கிழமை அன்று நான்கு தோழர்களுடன் மாயாபூர் (MAYAPUR) என்று அழைக்கப்படும் பகுதிக்கு பாபா, நடைப்பயணமாகச் சென்றார். அங்குப் பல்வேறு ஆசிரமங்கள் மற்றும் மக்கள் கூடும் இடங்களில், அவர் மற்றுமொரு பெரிய எண்ணிக்கையிலான 937 தொடர்புகளை மேற்கொண்டார். ஆசிரமங்கள் மற்றும் துறவிகள் வாழும் முகாம்களின் பொறுப்பாளர்கள், பாபா அவர்களின் வெவ்வேறு கோவில்களுக்குச் சென்று தேவ தேவதைகளை தரிசனம் செய்யுமாறு வலியுறுத்தி கேட்டுக்கொண்டனர். அவர்களின் ஆசைகளைப் பூர்த்திசெய்யும் விதத்தில், பாபா இந்த தெய்வங்களையும் வணங்கினார். கங்கை நதியின் எதிர்க்கரை சந்திப்பில், ஒரு மரத்தின் கிளையில் நின்று கொண்டிருந்த மஹாத்மாவை, பாபா, வெகு தொலைவிலிருந்து வணங்கினார்.

அன்று மாலை மோத்திசூருக்குத் திரும்பி வந்ததும், பாபா தனது தோழர்களிடம் இவ்வாறு எடுத்துரைத்தார்: "**எனது பணிக்கு**, '**கும்பம்**' (புனிதமான பழங்கால பாரம்பரியம்) **அல்லது அதன் மேளா** (திருவிழா) **ஆகியவற்றுடன் உண்மையான தொடர்பு எதுவும் இல்லை. நான் பல துறவிகள், சாதுக்கள், மஹாத்மாக்களை மட்டுமே தொடர்பு கொண்டு, அவர்களின் தரிசனத்தைப் பெற விரும்புகிறேன். கும்பமேளா எனக்கு வழங்கிய இந்த வாய்ப்பை நான் பயன்படுத்திக்கொள்கிறேன்.**"

1950 மார்ச் 27 கும்பமேளாவின் புனிதமான நாள், ஆயிரக்கணக்கான துறவிகள், சாதுக்கள், மஹாத்மாக்கள் கங்கைக்கு ஊர்வலமாகச் சென்று, புனித பாடல்களைப் பாடி, மந்திரங்களையும் பிரார்த்தனைகளையும் உச்சரிப்பதற்காக

நதிக்கரையில் அணிவகுத்துச் சென்று நீராடினர். இருப்பினும், பாபா, அன்று மோத்திசூரில் இருந்துகொண்டு, தனது துணிகளைத் துவைத்து, புல் குடிசையை சுத்தம் செய்தார். காலம் குறிப்பிட்டது போல், "அன்பிற்குரியவரின் ஆடைகள் சாதுக்களின் அழுக்கு மற்றும் சாம்பலால் கறைபட்டுள்ளன, அவர் தனது ஆடைகளைத் துவைப்பது போல வெளியளவில் தோன்றினாலும், அவர் உண்மையில் மனிதகுலத்தின் மாசுகளை அகற்றிக் கொண்டிருந்தார்."

1950 மார்ச் **28** செவ்வாய்கிழமை அதிகாலையில், பாபா தனது நான்கு தோழர்களுடன் ஹரித்வாருக்குப் புறப்பட்டார். அங்கு அவர் 'நாத்பந்தியா' (NATHPANTHIA), 'நிர்மலி' (NIRMALI) போன்ற பிரிவுகளைச் சேர்ந்த **612** சாதுக்கள் மற்றும் மஹாத்மாக்களைத் தொடர்பு கொண்டார். நிர்மலி முகாமின் மையத்திற்கு அருகில், மூத்த மஹாத்மா ஒருவர், 'துறவிகள், சாதுக்களின் தரிசனத்தால் அடையப்பெறும் நன்மைகள்' என்ற தலைப்பில் கூட்டத்தினருக்கு சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தார். அங்கே நின்று, முழு கவனத்தையும் செலுத்தியபடி பாபா ஒரு மணி நேரம் மஹாத்மாவின் ஆன்மீகப் பிரசங்கத்தைக் கேட்டார். அதைத் தொடர்ந்து பாபா, 'மாதாஜிகள்' (MATAJIS - தாய்மார்கள்) என்ற பிரிவைச் சேர்ந்த **70** பெண் சாதுக்களைத் தொடர்பு கொண்டு, ஒவ்வொரு பெண்மணியின் காலிலும் தலை வணங்கினார். இந்த பெண் சாதுக்களுடன், மொத்த தொடர்புகளின் எண்ணிக்கை **4,510** ஆக உயர்ந்தது.

அன்று மதியம் **1:30** மணிக்கு மோத்திசூர் திரும்பிய வேளையில் பாபா, விஷ்ணு, குமார் இருவரும் தனக்காகக் காத்திருந்ததைக் கண்டார். விஷ்ணு எலிஸபெத்திடமிருந்து வந்த தொலைத்தந்தியைக் கொண்டு வந்திருந்தார். இதர முக்கியமான விஷயங்களைப் பற்றி அவருக்கு அறிவுறுத்திய பிறகு, பாபா இருவரையும் மாஞ்ஜ்ரி மா:்பிக்குத் திருப்பி அனுப்பினார். பாபா வேலையின் பளுவால் களைப்பாக இருந்தபோதிலும், இருவரிடமும் கேலியாகப் பேசி மகிழ்ச்சியாக இருந்தார்.

1950 மார்ச் **29** அன்று இந்துக்களின் புனித நாளான 'ராம் நவமி' - ராமரின் பிறந்த நாள். ஸாத் ஸரோவரில் புனித மனிதர்களின் புதிய குழுக்கள் வந்ததை அறிந்த பாபா, அன்று **472** சாதுக்கள், மஹாத்மாக்களை தொடர்பு கொண்டார். பாபா, அவர்கள் எதிரில் வரும்போதும், அனைத்து விதமான போக்குவரத்து, மக்கள் கூட்டம் நிரம்பி வழியும் பிரதான சாலையில் நிற்கும்போதும், அவர்களின் கால்களில் தலையை வைத்து வணங்கினார். சில சாதுக்கள் மரங்களின் நிழலிலும், சிலர் கங்கைக் கரையிலும் அமர்ந்திருந்தனர். சில சாதுக்கள் கங்கை நதியில் நீராடிக் கொண்டிருந்த வேளையிலும் பாபா, அவர்களைத் தொடர்பு கொண்டார். ஈரத் துண்டுகளுடன், கூட்டம் சலசலப்பாக இருந்த போதிலும், பாபா, நதியை நோக்கிச் செல்லும் மலைப்பாதையின் கற்

படிகளில் இறங்கி, தண்ணீரில் நடந்து சென்று தனது தொடர்பை மேற்கொண்டார். இத்தகைய இடர்பாடுகளை அவர் இந்தப் பணிக்காக அனுபவித்தார்.

இடைவிடாது தொடர்ந்து அனுபவித்த இந்த சிரமங்கள் - தரிசனத்திற்காக ஒவ்வொரு முறையும் குனிந்து, எழுந்ததோடு, சாதுக்கள், மஹாத்மாக்களைத் தேடி மைல் தூரம் மலைகளில் ஏறி, ஒரு நாளைக்கு ஒரு வேளை சாதம், பருப்பு மட்டுமே உண்டு வாழ்ந்தது - இறுதியாக அவரது உடலைப் பெரிதும் பாதித்தது. பாபா மிகுந்த சோர்வுடன் காணப்பட்டார், ஆனால் அவர் இந்தப் பணியைச் செய்து முடிப்பதில் உறுதியாக இருந்தார், ஏனெனில் அவர் கூறியபடி, 'அது அளவிலா மகிழ்ச்சியை அளித்தது'.

1950 மார்ச் 30 அன்று, பனிமூட்டமான காலை, இமயமலையிலிருந்து குளிர்ந்த காற்று வீசியது, எங்கும் உறைபனியாக இருந்ததால் எல்லாம் ஈரத்தன்மை நிறைந்து காணப்பட்டது.

பாபா, கடுமையான முதுகுவலியால் அவதிப்பட்டார், அவருடைய பணியின் பளு அவரது உடலைப் பாதிக்கிறது என்பது தோழர்களுக்குத் தெளிவாகத் தெரிந்தது. ஆயினும் கூட, விடியற்காலையில், அவர் நான்கு தோழர்களுடன் ஹரித்வாரை நோக்கி நடக்கத் தொடங்கினார். பாபா சாலையின் இருபுறமும் முன்னும் பின்னுமாக நடக்க வேண்டியிருந்தது, வாகனங்களின் நெரிசலில், ஏராளமான யாத்ரீகர்களின் மத்தியில் பாபா, தொடர்ந்து பல தொடர்புகளை மேற்கொண்டார். துறவிகள், சாதுக்கள், மஹாத்மாக்களின் ஆசிரமங்கள், முகாம்கள் வழியாகத் தேடி அலைந்து, ஒவ்வொரு வழிப்பாதையிலும், ஒதுக்குப்புறமான இடைவெளிகளிலும் உற்று நோக்கி, மேலும் 921 நபர்களைக் கண்டுபிடித்து தொடர்பு கொண்டார், மொத்தத்தில் எண்ணிக்கை இப்போது 5,903ஆக உயர்ந்தது. இந்தக் கட்டத்தில், பாபா ஒருவரை ஒருமுறை மட்டுமே தொடர்பு கொண்டார். அந்த நாள் மெதுவாகக் கடந்து செல்ல, பாபா மிகவும் சோர்வடைந்து, தள்ளாடித் தள்ளாடி மெதுவாக நடந்து மோத்திசூருக்குத் திரும்பி வந்தார். அவரது கண் இமைகள் கனமாக இருப்பதாக அவர் கூறினார், மேலும் பாபாவை எப்படி ஓய்வெடுக்க வைப்பது என்று தெரியாமல் தோழர்கள் தவித்தனர்.

நிலைகுலையச் செய்யும் களைப்புடன் இருந்தபோதிலும், அடுத்த நாள், மார்ச் 31 அன்று பாபா, ஹரித்வாரில் 532 சாதுக்கள் மற்றும் துறவிகளைத் தொடர்பு கொண்டார். பாபாவின் சில வேலைகளுக்காக, கேக்கி தேசாய் டெல்லியிலிருந்து அழைக்கப்பட்டிருந்தார்; மாலை 3:00 மணிக்கு மோத்திசூர் புறப்படுவதற்கு முன்பு பாபா அவரை சந்தித்தார்.

நான்கு தோழர்கள் மற்றும் கேக்கி தேசாய் ஆகியோருடன் பாபா, மீண்டும் ஹரித்வாருக்கு அடுத்த நாள் அதிகாலை 3:00 மணிக்கு விஜயம் செய்தார். பைதூல், பாபாவை ஒரு முகாமிலிருந்து மற்றொன்றிற்குச் செல்ல

அவசரப்படுத்துவதாகக் குற்றம் சாட்டியதால், அன்று காலை பாபாவிற்கும் பைதூலுக்கும் இடையே பதற்றம் நிலவியது. பைதூல் அமைதியாக இருக்காமல் பாபாவுடன் வாதாடியது அவரை வருந்தச் செய்தது. 262 சாது, சந்நியாசிகளைத் தொடர்பு கொண்ட பின்னர் அனைவரும் மோத்திசூருக்குத் திரும்பி வந்தனர்; அப்போது பாபா இவ்வாறு தெரிவித்தார்: "**7,000 தொடர்புகளை மேற்கொண்டால் நான் பூரண திருப்தி அடைவேன், ஆனால் எண்ணிக்கை 7,000யும் தாண்டினால் நான் மகிழ்ச்சியாக இருப்பேன்**" இதுவரை மேற்கொண்ட மொத்த தொடர்புகள் **6,697.**

இது எப்படி சாத்தியமாகும் என்று காலம் சிந்தனைக்குள்ளானது. "பிரியமானவர், வெளித்தோற்றத்தில் மிகவும் பலவீனமாக இருந்தார்; ஒவ்வொரு முறையும் குனிந்து எழுந்து, நூற்றுக்கணக்கான ஆத்மாக்களை தரிசனம் செய்வதன் மூலம் அவரது இடைவிடா உடல் உழைப்பு, அவரை நிலைகுலைய செய்தது."

1950 ஏப்ரல் **2** ஞாயிற்றுக்கிழமை, சந்திர கிரகணத்தின் நாள் என்பதால், கும்பமேளாவின் மற்றொரு சிறப்பு நாளாக அனுஷ்டிக்கப்பட்டது. பல்வேறு ஆசிரமங்கள் மற்றும் உறைவிடங்களிலிருந்து சாது, சந்நியாசிகள், துறவிகள், மஹாத்மாக்கள் மந்திரங்களை உச்சரித்தும், கீர்த்தனைகள் பாடியும் கங்கை நதியில் நீராட ஊர்வலமாகச் சென்றனர். சில துறவிகள் யானைகளின் மீதேறி நதிக்கரைக்குச் சென்றனர். அன்று, பாபா, தனது குடிலில் ஹரித்வாரிலிருந்து பைதூல் எடுத்து வந்த கங்கை நீரில் நீராடினார்.

எதிர்பாராத விதமாக அஹமதாபாத்தைச் சேர்ந்த திரு. மேத்தா (MR. MEHTA) என்பவர் பாபாவின் தரிசனத்திற்காக மோத்திசூர் வந்தார்.

தரிசனத்திற்குத் தடை குறித்து அவருக்குத் தெரிவிக்கப்பட்டது, ஆனால், பாபாவை சந்திக்க வேண்டும் என்று அவர் வற்புறுத்தியதன் பேரில், பாபா தனது குடிசையிலிருந்து வெளியே வந்து, அந்த நபரின் கால்களில் தலையை வைத்து வணங்கினார். இதனால், அன்று பாபா தொடர்புகளுக்காக வெளியே செல்லவில்லை என்றாலும், அவர் திரு.மேத்தாவின் தரிசனத்தைப் பெற நேர்ந்தது.

ஏப்ரல் 3ஆம் தேதி அதிகாலை **3:00** மணியளவில், எரச், பெண்டு, பைதூல், குஸ்தாஜி ஆகியோருடன் பாபா, மோத்திசூரிலிருந்து ஹரித்வாருக்கு நடைப்பயணமாகச் சென்றார். அன்று பாபா, நீல்தாரா (NILDHARA) பகுதியில், துறவிகளையும் சாதுக்களையும் தொடர்ந்து பதினொரு மணி நேரம் தொடர்பு கொண்டதில் அன்றைய எண்ணிக்கை மட்டும் **2,965**ஐ எட்டியது.

இந்தத் தொடர்புகளை மேற்கொள்ள, பாபா தோழர்களுடன் சுமார் **20** மைல்கள் கங்கையின் இருபுறமும் நடந்து சென்றார்; முடிப்பதற்குள், அவர் மிகவும் சோர்வாக இருந்ததால், அவரால் நிற்கக் கூட முடியவில்லை.

தோழர்கள் பாபாவை அழைத்துச் செல்ல பேருந்து அல்லது வேறு வாகனத்தைத் தேட முயன்றனர், ஆனால் வாகனம் எதுவும் கிடைக்காததால், அவர்கள் மோத்திசூருக்கு சோர்வுடன் திரும்பிச் செல்ல வேண்டியதாயிற்று. வழியில் பாபா, **"உடல் முழுவதும் வலிக்கிறது"** என்று புலம்பினார்.

உடல் சோர்வாக இருந்தாலும், மறுநாள், 1950 ஏப்ரல் 4, செவ்வாய்கிழமை காலை, பாபா, நான்கு தோழர்களையும் பலவாலா (BALAWALA) பகுதிக்கு அழைத்துச் சென்றார்; அங்கு அவர் சமீபத்தில் இதர இடங்களிலிருந்து வந்த 338 புனித மனிதர்களைத் தொடர்பு கொண்டார். பலவாலாவில் மேற்கொண்ட தொடர்புகளுடன் மொத்த எண்ணிக்கை 10,000ஐ எட்டியது. பெண்டு இதை, பாபாவிடம் தெரிவித்தபோது, பாபா, திருப்தியும் மகிழ்ச்சியும் அடைந்ததாகக் கூறினார்.

10,000 'புனித மனிதர்களில்' ஒரு சிலரே உண்மையான துறவிகள் அல்லது மேல்நிலை ஆன்மாக்கள் என்று பாபாவுடன் இருந்த நான்கு தோழர்களால் உணரமுடிந்தது. "இந்தியா முழுவதிலுமிருந்து கும்பமேளாவில் கலந்து கொள்ள வந்த அந்த சாதுக்களும், யாத்ரீகர்களும், உண்மையில் கடவுளின் தரிசனம் செய்தார்கள், அவர்கள் மத்தியில் யார் இருக்கிறார் என்று சிலருக்குத் தெரியும். கடவுளே பக்தரின் உருவில், ஆயிரக்கணக்கான பக்தர்களின் பாதங்களில் தலை வணங்கினார். ஆனால், அவர்கள் இந்த 'உண்மையின் உருவான பக்தரை' அடையாளம் கண்டுகொள்ளவில்லை.

பாபா மோத்திசூருக்குத் திரும்பியதும், தோழர்களுடன் தமது எளிய சாதம் மற்றும் பருப்பை உண்டு, சிறிது நேரம் ஓய்வெடுத்த பின்பு, அவர் மீண்டும் புறப்படுவதற்காகப் பொட்டலங்களைக் கட்டத் தொடங்கினார். அன்று இரவு, **"கும்பமேளாவில் எனது பணி நிறைவடைந்தது. நான் நாளை மாஞ்ஜ்ரி மாஃபிக்குப் புறப்படுகிறேன். நீங்கள் அனைவரும் 7ஆம் நாள் அனைத்து பொருட்களுடன் வாருங்கள், பெண்டுவும் முரளியும் காளை வண்டியில் பின்தொடர்வார்கள்"** என்று அறிவித்தார். பாபா, இன்னும் உடல்நிலை சீரில்லாமல் இப்போது சளி மற்றும் இருமலால் அவதிப்பட்டார். அன்று இரவு அவரே தனது பொருட்களைக் கட்டிக்கொண்டு புறப்பட ஆயத்தமானார்.

பாபா ஏப்ரல் 5 அன்று பெண்டுவுடன் மோத்திசூரிலிருந்து மாஞ்ஜ்ரி மாஃபிக்குப் புறப்பட்டார்.

பாபாவை வரவேற்க விஷ்ணு ஹரேவாலா (HARRAWALA) ரயில் நிலையத்திற்கு வந்திருந்தார். பாபா, விஷ்ணு இருவரையும் ஒரு டோங்காவில் அனுப்பிவிட்டு, பெண்டு மோத்திசூருக்குத் திரும்பிச் சென்றார். பாபாவின் அறிவுறுத்தல்படி, எரச், பைதூல், குஸ்தாஜி, அலோபா, சத்யபால் ஆகியோர் இரண்டு நாட்களுக்குப் பிறகு மாஞ்ஜ்ரி மாஃபிக்குத் திரும்பி வந்தனர். இத்துடன் கும்பமேளா பணி முடிவுக்கு வந்தது.

பாபா, மாஞ்ஜ்ரி மா:்பிக்கு திரும்பியபோது, அவருக்குக் கடுமையான இருமல், 100° ஜ்ரம், கண்களில் கனம், வயிற்றில் வலி மற்றும் கடுமையான முதுகுவலி - டாக்டர் நீலு, பாபாவின் நிலையை பின்வருமாறு விவரித்தார்:

பாபா வந்து எங்கள் குடிசைக்குள் நுழைந்ததும், அவரது உடலில் நரம்பு சோர்வு மற்றும் பலவீனத்தை நான் உடனடியாக உணர்ந்தேன். அவர் அதிக உழைப்பால் அதீத சோர்வுடன் காணப்பட்டார்; நடக்கும்போது, கால்களை இழுப்பது போலத் தோன்றியது. அவர் எனது படுக்கையில் அமர்ந்து, பின்பு, காக்கா, விஷ்ணு, கைக்கோபாத் ஆகியோரின் உடல்நலம் பற்றி விசாரித்த அவ்வேளையில் அவருக்கு அடிக்கடி இருமல் வந்தது. உடல்நிலை சரியில்லாமல் இருந்தபோதிலும் முகம் பொலிவோடு, கண்கள் பளிச்சிடும் வகையில் தென்பட்டது. அவரது முகம் மிகவும் அழகாக, பிரமிக்கத்தக்க விதத்தில் இருந்தது, எங்கள் கண்கள் வேறு எதையும் பார்க்க மறுத்தன. எங்கள் இதயங்களில் வெளிப்பட்ட வெவ்வேறு உணர்ச்சிகளும், உணர்வுகளும் முழு சூழலையும் அதிர்வுறச் செய்தது.

பாபா, அவரது உடல் வலி, பலவீனம் பற்றி புகார் கூறினார். மூன்று மருத்துவர்கள் நீலு, டான், கோஹெர் ஆகியோர் வழங்கிய சிகிச்சை பாபாவின் பலவீனத்தை ஓரளவு தணித்தாலும் உடல்வலி நீடித்தது. ஞாயிற்றுக்கிழமை, 1950 ஏப்ரல் 9 அன்று, மெஹரா லேசான மஸாஜ் மற்றும் வெந்நீரில் நீராடவும் பரிந்துரைத்ததை செய்த பின்பு, பாபாவின் உடல் வலி குறைந்தது.

காலம் விளக்கியது போல: "மெஹர் பாபாவின் அசௌகரியம் அவரது கடினமான உடல் உழைப்பினால் விளைவது மட்டுமல்ல, எந்த ஒரு வகையிலான வேலையிலும் ஈடுபடும்போதும், பிறரின் மனப்படிவங்களின் சுமையைத் தன் மீது எடுத்துக் கொண்டதே முக்கியமான காரணமாக இருந்தது. அவரது அன்பர்களுக்கும் பொதுமக்களுக்கும் வழங்கும் தரிசனம் கூட அவரது உடல்நிலையை மோசமாக்கி, வேதனையையும் துன்பத்தையும் ஏற்படுத்தியது. அவதார புருஷரின் தரிசனம் வெறுமனே மக்களை சந்திப்பது அல்ல - அவர்களின் மனப்படிவங்களின் சுமைகளைத் தன் மீது எடுத்துக் கொள்வதாகும்.

"இந்தியாவில் ஆயிரக்கணக்கான மக்களுக்கு தரிசனம் வழங்கும் மஹான்கள், மஹாத்மாக்கள் என்று அழைக்கப்படுபவர்கள் பலர் உள்ளனர். ஆனால் அவர்களின் தரிசனத்தால் விளைவது என்ன? இது வார்த்தைகளின் தரிசனம் மட்டுமே. உண்மையான தரிசனத்தின் பொருள் என்னவெனில், தெய்வீக குருநாதரின் உதவியை நாடி வரும் ஒவ்வொருவரின் நல்ல, தீய மனப்படிவங்களின் சுமையைத் தன் மீது எடுத்துக்கொள்கிறார். ஆயினும், மாய உலகில் மானிடனின் வாழ்நாளில் குவிக்கப்பட்ட இந்த மனப்படிவங்களான கழிவுகளை சுத்தம் செய்வதன் மூலம் அவரே துன்பப்பட வேண்டும்."

1950ஆம் ஆண்டில் பிரியமான பாபாவின் கும்பமேளா பணிகளையும், அதனால் விளைந்த துன்பத்தையும் நேரில் பார்த்து, காலம் கண்ணீரில் மூழ்கியது. இருப்பினும், எதிர்கால சந்ததியினருக்காக, அவதார புருஷரின் கடுமையான அன்பின் உழைப்பைப் பதிவுசெய்வது பெருமைக்குரியது. "முழு உலகமும் அறியாத முறையில், மௌனமாகச் செய்யப்பட்ட மெஹர் பாபாவின் இந்தப் பணி, பிரபஞ்சத்திற்கானது; இது வெறும் வாய்மொழியால் பாடம் புகட்டுவது அல்ல. ஒவ்வோர் இதயத்தையும் மின்மயமாக்குவதன் மூலம், விரைவில் 'ஒளி' நிச்சயமாக இருளை விலக்கும்!"

இதற்கிடையில், பெண்டு, முரளி இருவரும், ராஜா என்ற ஆங்கிலேய காளை இழுத்து வந்த மாட்டு வண்டியை மோத்திசூருக்குக் கொண்டு வந்தனர். பாபா, காளையை ஒரு பராமரிப்பு அமைப்பிற்கு வழங்கி வளர்க்க விரும்பினார். அப்போது மோத்திசூரில் இருந்த குமார், அருகில் இதுபோன்ற 'விலங்குகள் ராஜ்யம்' (ANIMAL WORLD) என்ற பெயரில் நடத்தி வரும் மஹாத்மா காந்தியின் ஆங்கில சீடர் மீராபேனுக்கு (MIRABEHN) வழங்க வேண்டும் என்று பரிந்துரைத்தார். பாபா அதற்கு ஒப்புதல் அளித்து, மாஞ்ஜ்ரி மா:ிபிக்குத் திரும்பும் வழியில் மீராபேனின் விலங்குகள் ராஜ்யத்தில் நிறுத்துமாறு பெண்டுவிடம் கூறினார்.

அதன்படி பெண்டு மோத்திசூர் அருகே அமைந்த மீராபேனின் விலங்குகள் வளர்ப்பகத்தைப் பார்வையிட்டார். இனப்பெருக்க நோக்கங்களுக்காக ஆங்கிலேய காளைகளைப் பயன்படுத்துவதை நிறுத்திவிட்டாலும், ராஜாவை ஏற்றுக்கொள்ள அவர் தயாராக இருந்தார். ஏப்ரல் 10ஆம் நாள் ராஜாவை அழைத்துச் செல்ல மாஞ்ஜ்ரி மா:ிபிக்கு எவரையேனும் அனுப்புமாறு பெண்டு கேட்டுக் கொண்டதற்கு, அவர் இணக்கம் தெரிவித்தார்.

பெண்டு, முரளி இருவரும் 1950 ஏப்ரல் 9 அன்று மாஞ்ஜ்ரி மா:ிபிக்குத் திரும்பி வந்தனர், ஆனால் மறுநாள், மீராபேனின் விலங்குகள் காப்பகத்திலிருந்து எவரும் காளைக்காக வரவில்லை. சில நாட்களுக்குப் பிறகு, பாபா குமாரை மீராபேனிடம் அனுப்பியபோது, ராஜாவை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அவர் விளக்கினார். நான்கு பெண்மணிகள் பெயரில் இருந்த ராஜாவை வேறு ஏதேனும் அமைப்பிற்கு வழங்குமாறு குமாரிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது. குமார், ஏப்ரல் 14ஆம் தேதி, வேறு ஒரு நிறுவனத்திற்கு அதை வழங்கினார், அதற்குப் பிறகு மாட்டு வண்டியும் விற்கப்பட்டது.

பாபா, சக தோழர்களுடன் ஒரு சந்திப்பை நிகழ்த்த விரும்பி, ஏப்ரல் 11 அன்று சரியாக காலை 7:00 மணிக்கு அவர்களது குடியிருப்புக்கு வந்தார். டெஹ்ராடூனிலிருந்து டாக்டர் டான் அழைக்கப்பட்டார். பாபாவைச் சுற்றித் தோழர்கள் அமர்ந்திருந்த வேளையில் பதற்றமான சூழல் நிலவியது.

கூட்டத்தைத் தொடங்கும் போது பாபா மிகவும் தீவிரமான தோற்றத்துடன் காணப்பட்டார்: **"மூன்றாவது திட்டத்தின் கீழ் இருந்த ஒவ்வொருவரும் 100 சதவிகிதம் நிபந்தனைகளை நிறைவேற்ற முயற்சிப்பதாக நான் உணர்கிறேன். என்னுடைய பழைய வாழ்க்கைப் பழக்கங்களில் 60 சதவிகிதம் நல்லபடியாகப் போய்விட்டதில் நான் உறுதியாக இருக்கிறேன்; ஆனால் அவற்றில் 40 சதவிகிதம் இன்னும் தொடர்வதை நான் உணர்கிறேன். எனவே, இயல்பாகவே உங்களில் எவரையும் அல்லது அனைவரையும் என்னிடமிருந்து நீங்கள் கேட்காமலோ அல்லது தவறிழைக்காமலோ திருப்பி அனுப்ப - அல்லது நேரடியாக ஒன்று அல்லது இரண்டாம் திட்டத்தில் ஏதேனும் ஒன்றை நீங்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கூற முடியாது.**

"மூன்றாவது திட்டத்தின் நிபந்தனைகளை நிறைவேற்றுவதைப் பொறுத்தவரையில், அதை சரியாகப் புரிந்துகொள்ளும் விஷயத்தில் உங்களுக்கும் எனக்கும் இடையே நிலவும் விரிசல் காரணமாக, தற்போதைய சூழ்நிலையில் மூன்றாவது திட்டத்தை செயல்படுத்துவது சாத்தியமில்லை என்று தோன்றுகிறது. உதாரணமாக, ஏப்ரல் 1ஆம் நாள் பைதூலுக்கும் எனக்கும் இடையே மோத்திசூரில் நடந்த சம்பவம், நான் சுட்டிக்காட்ட முயற்சிப்பதை வெளிச்சமிட்டுக் காட்டும்."

நடந்த சம்பவத்தை விவரிக்குமாறு எரச்சிடம் பாபா கேட்டுக்கொண்டார்: ஏப்ரல் 1ஆம் நாள் காலை, பாபாவும் தோழர்களும் வழக்கத்திற்கு மாறாக, அதிகாலை 3:00 மணியளவில் தங்கள் குடிசையை விட்டு வெளியேறினர். கேக்கி தேசாயும் உடனிருந்தார். அன்றைய தினம் பாபாவின் பணி சில ஆசிரமங்கள் மற்றும் முகாம்களை மையமாகக் கொண்டது; பாபா, ஆசிரமங்களுக்கு இதற்கு முன்னதாக விஜயம் செய்த வேளையில், பெரும் அளவில் சாதுக்கள் இல்லாததால் வேண்டுமென்றே முதலில் தவிர்க்கப்பட்டது. சந்திர கிரகணத்துக்கான நேரத்தில், ஏப்ரல் 2ஆம் தேதிக்கு முன்னரே சாதுக்களின் கூட்டம் அங்கு நிரம்பிவழியும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இந்த இடங்களுக்கு பாபாவை வழிநடத்தும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பைதூல், அவரை முகாம் ஒன்றுக்கு அழைத்துச் சென்றார். அங்கு, அந்த நேரத்தில் பல சாதுக்கள் ஒன்று திரளாத காரணத்தால், சிறிது நேரம் கழித்து வர எண்ணிய பைதூல், பாபாவை வேறு பகுதிக்குச் செல்லும்படி வற்புறுத்த முயற்சித்தார். ஆனால் பாபா, அங்கேயே இருக்க விரும்பி, பைதூலிடம், பழைய வாழ்க்கையில் செய்ததைப் போல் அவசரமாக பணிபுரியும் முறையை அவர் பின்பற்றியதன் காரணத்தைக் கேட்டார். மேலும், அவர் இதைத் திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டிருந்தார்.

ஒரு கட்டத்தில், பாபா காலையிலிருந்தே கேலி செய்து, துன்புறுத்துவதாக பெண்டுவிடம் பைதூல் குறிப்பிட்டார். இதைக் கேட்ட பாபா,

'இது அவரைக் குறை கூறுவதுபோல் ஆகாதா?' என்று கேட்டதற்கு, பைதூல், 'அன்று காலையில் பாபா, எப்படித் தனது மனநிலையை இழந்தார் என்பதை பெண்டுவிற்குத் தெரிவிக்க விரும்பினேன்' என்று பதிலளித்தார். **'பைதூலின் கூற்று விமர்சிப்பதுபோல் இல்லையா?'** என்று பாபா, எரச்சிடம் கேட்டார். இது விஷயத்தில் எரச்சின் கருத்து என்னவெனில், 'அவரது சிந்தனையின் போக்கில், பைதூல், பெண்டுவிடம் ஓர் உண்மையைச் சொல்லிக் கொண்டிருந்தார்; அதை விமர்சனம் என்று அழைக்காமல், அன்று காலை பாபாவின் மனநிலையை வெளிப்படுத்தும் ஒரு தகவல்' என்றுதான் எடுத்துக்கொள்ள வேண்டும்.

எரச்சின் பதில் பாபாவை மேலும் கோபத்திற்குள்ளாக்கி, பொறுமையை இழக்கச் செய்தது. பெண்டுவிடம் பாபாவைப் பற்றி விமர்சித்ததில், பைதூல் தவறிழைத்தார், ஆனால் அது பாபாவை எரிச்சலடையச் செய்யவில்லை, அவர் முற்றிலும் வருத்தமடைந்ததோடு, அவரது மனநிலையும் பாதிக்கப்பட்டது, ஏனெனில் **'புது வாழ்வின் இந்தக் கட்டத்தில் கூட, மூன்றாவது திட்டத்தின் அனைத்து நிபந்தனைகளையும் தோழர்கள் இதுகாறும் முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லை'** என்று அவர் ஏமாற்றமடைந்தார்.

'தோழர்கள், பைதூலின் கருத்துக்களை வெறும் தகவலாக மட்டுமே எடுத்துக் கொண்டால், இதற்கு முன்பு, பாபாவை விமர்சித்ததாக, ஏன் கனி, ஆதி, நீலு, டான் ஆகியோரைக் குற்றம் சாட்டினார்கள்?' என்று பாபா மேலும் கேள்வி எழுப்பினார். இந்த சூழ்நிலையானது புரிந்துகொள்வதில் ஏற்பட்ட வேறுபாடாக எடுத்துக் கொள்ளப்பட்டது, மேலும் பாபா தனது பழைய வாழ்க்கைப் பழக்கங்களிலிருந்து முற்றிலும் விடுபட விரும்பியதால் அவரால் இதைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

இந்த நேரத்தில், பாபா அத்தகைய நடத்தை மற்றும் அணுகுமுறைகளைக் கடுமையாக வெறுத்தார், ஏனெனில், அவை, அவரால் கைவிடப்பட்ட பழைய வாழ்க்கையை அவருக்கு நினைவூட்டின. அவர் தவறிழைத்திருக்கலாம், அதே வேளையில் தோழர்கள் செய்தது சரியாக இருக்கலாம், ஆனால் '**கருத்து வேறுபாடு எப்போதும் ஒரு மோதல் மற்றும் அவருடைய அதிருப்திக்குக் காரணமாக இருக்கும்**' என்று அவர் கூறினார். மேலும் அவர் உணர்ச்சிவசப்படும் வேளையில், அதைக் குறித்து அமைதியாக இருப்பது அவரது உறுதிமொழியை சமரசம் செய்வது போலாகும், அல்லது அவர் கோபத்தின் உணர்வுகளை வெளிப்படுத்துவது புது வாழ்வு நிபந்தனைகளோடு இணங்கிச் செல்லாதது போலாகிவிடும்.

முடிவில், மூன்றாவது திட்டத்தைக் கலைப்பதைத் தவிர, வேறு வழியில்லை என்று பாபா முடிவெடுத்ததால், தினசரி உத்தரவுகளில் அவரது குறுக்கீடு இராது. மூன்றாவது திட்டத்தின் கீழ் இருப்பவர்கள் **100** சதவீதம் முயற்சி செய்யலாம்; இருந்தும், ஒருபுறம் பாபாவிற்கும், மறுபுறம்

தோழர்களுக்கும் இடையே தெளிவாகப் புரிந்துகொள்வதில் வேறுபாடு இருப்பதால், பாபா, அவரது தோழர்களுக்காக சமரசம் செய்து கொள்ளும் அல்லது எரிச்சலடையச் செய்யும் அல்லது வருந்தவைக்கும் அபாயம் எப்போதும் இருக்கும்.

மேலும், மூன்றாவது திட்டத்தின் கீழ், ஒரு மாதத்திற்கு முன்பு, மார்ச் 1 அன்று தோழர்களுக்கு வழங்கப்பட்ட விளக்கத்தின் அடிப்படையில், பைதூல் அவரை விமர்சித்தாலும், அவரிடம் கோபமடைந்தாலும் பாபா, பைதூலைக் கேள்வி கேட்டிருக்கவோ அல்லது திருத்தவோ கூடாது. இறுதியில், அவரது உறுதிமொழி 100 சதவீதம் பாதுகாக்கப்பட வேண்டுமாயின், மூன்றாவது திட்டத்தைத் தொடர முடியாது எனத் தோன்றியது. எனவே, பாபா திட்டத்தைக் கலைக்காமல் நிறுத்த முடிவு செய்தார். எதிர்காலத்தில் மூன்றாவது திட்டத்தின் கீழ் (பழைய மற்றும் புது வாழ்வுக்கு வெளியே) புது வாழ்வில் எவரையேனும் அழைத்துச் செல்ல விரும்பினால், அவர் அவ்வாறு செய்யலாம் என்று தெளிவுபடுத்தினார்.

எரச் இந்த நிகழ்வுகளை கூறி முடித்ததும், பாபா கூறினார்:

உங்கள் தரப்பில் ஏதேனும் தவறை நான் கண்டால் - உங்கள் பார்வையில் அது தவறில்லாமல் இருக்கலாம் - நான் அதைக் கண்டுகொள்ளாமல் அலட்சியமாக இருக்க வேண்டும், இது எனது உறுதிமொழிக்கு எதிரானது அல்லது நான் உங்களைத் திருப்பி அனுப்புவது என்பது இருமடங்கு தவறாகும், ஏனெனில் நான் இன்னும் எனது பழைய வாழ்க்கைப் பழக்கத்தை 100 சதவீதம் கைவிடவில்லை. ஆகையால், 1950 மார்ச் 1ஆம் தேதி வரை, தவறுகளைத் திருத்திக் கொள்வதில் ஒரு நடுநிலைப் போக்கைக் கடைப்பிடிக்க வேண்டியிருந்தது. இது என்னை எரிச்சலடையச் செய்தது, மேலும் எனது உறுதிமொழியை ஆபத்தில் தள்ளியது.

எனது தோழர்கள் அனைவரும் என்னை விட்டுச் சென்றாலும், எனது உறுதிமொழியை நான் உறுதியாகக் கடைப்பிடிப்பேன்.

எனவே, மே 1 முதல் உங்களில் எவரும் மூன்றாவது திட்டத்தின் கீழ் இருக்க வேண்டாம் என்று இன்று நான் உறுதியாக முடிவு செய்துள்ளேன். மூன்றாவது திட்டத்தின் கீழ், புது வாழ்வின் மூன்று கட்டங்களைச் செயல்படுத்த நான் தனியாக இருப்பேன்.

உங்கள் அனைவரையும் (மூன்றாவது மற்றும் ஒன்று-பி திட்டங்களின் கீழ் வரும் தோழர்களை) **ஒரு புதிய திட்டத்தில் இணையுமாறு நான் கட்டளையிடுகிறேன், இது உங்கள் வாழ்வாதாரத்தை ஈட்ட உதவும், மேலும் எனதருகில் ஒரே குழுவில் இருக்க உங்களை அனுமதிக்கும். இந்தப் புதிய திட்டத்தைத் தொடங்குவதற்கும், பராமரிப்புக்காக வணிகத்தைத் தொடங்குவதற்குமான மூலதனத்தை இந்தக் குழுவிற்குக் கடனாக**

வழங்குவேன். இந்தப் புதிய திட்டம், தற்காலிகமாகக் கட்டுப்படுத்தப்பட்ட குழு 'பி'யின் திட்டம் மற்றும் ரூ 16,000 கடனை எனக்குத் திருப்பிச் செலுத்தும் போது முதலாவதான திட்டம் 'ஒன்று-பி' அமலில் வரும்.

இந்தப் புதிய திட்டத்தை வெற்றியடையச் செய்ய, வழிகாட்டுதல் மற்றும் உள்ளாற்றல் வடிவில் எனது உதவி முடிந்தவரை வழங்கப்படும். அனைவருக்கும் வணிகம், வாழ இடம் மற்றும் இந்தப் புதிய திட்டத்தில் சில தோழர்களுக்கு வேலைகள் ஆகியவற்றை அடையப்பெறுவதில், தேவைப்பட்டால், நான் உதவுவேன்.

மழைக்காலத்தில் மாஞ்ஜ்ரி மா:ீபியில் தங்குவது நடைமுறைக்கு சாத்தியமற்றது என்றும், அதனால், டெல்லிக்கு மாறத் திட்டமிட்டிருப்பதாகவும் பாபா, பின்பு தோழர்களுக்கு விளக்கினார். இந்த நோக்கத்திற்காக, அவர் பின்வரும் அறிவுறுத்தல்களுடன் கேக்கி தேசாயை டெல்லிக்கு அனுப்பி வைத்தார்:

கிஷன் ஸிங், ஹர்ஜீவன் (லால்), (வாஸ் தேவ்) கெய்ன், தோடி ஸிங் ஆகியோரை அழைத்து, பாபாவிற்கு டெல்லியில் ஓர் இருப்பிடம் தேவை, அதைக் கண்டுகொள்ள அவர்கள் உங்களுக்கு உதவ வேண்டும் என்று அவர்களிடம் கூறுங்கள். ஆனால் அவ்வாறு செய்யும் வேளையில், பாபாவிற்குச் செய்யும் சேவையை ஒரு குருநாதருக்குச் செய்வதான எண்ணம் அவர்களுக்கு இருக்கக் கூடாது, மாறாக தம்மை நேசிக்கும் ஒருவருக்கு உதவுவதான எண்ணத்தில் மட்டுமே இருக்க வேண்டும்; அவர் காட்டும் அன்பிற்குப் பிரதிபலனாக, ஒருவிதமான உதவி வழங்கப்படுகிறது என்று கருதவேண்டும். மேலும், பங்களாக்களைக் கண்டுபிடிப்பதில் கேக்கிக்கு உதவும் வேளையில், அவர்கள் பாபாவைப் பார்க்கவோ, அவரைத் தொடர்பு கொள்ளவோ அல்லது அவருடன் கடிதப் பரிமாற்றம் செய்யவோ எந்த வாய்ப்பும் கிடைக்கும் என்று எதிர்பார்க்கக்கூடாது.

அவர்களில் எவரேனும் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்ட பங்களாவின் உரிமையாளராக இருந்தால், பாபா நியாயமான வாடகையை வழங்குவார், அதை உரிமையாளர் ஏற்றுக்கொள்ள வேண்டும், இதனால் இந்தப் புது வாழ்வில், பாபா மீது எந்தவிதமான நிதிச் சுமையும் ஏற்பட வாய்ப்பில்லை. டெல்லியில் பங்களாக்களைக் கண்டுகொள்ளும் இந்தப் பணி முடிந்தவுடன், பாபாவின் உத்தரவின்றி, பாபாவிற்கு உதவி செய்வதில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளக் கூடாது.

சுருக்கமாகச் சொன்னால், பாபாவைப் பார்க்கவோ, அவருடன் தொடர்பு கொள்ளவோ, அவர் டெல்லியில் வசிக்கும் போது கடிதப் பரிமாற்றத்தில் ஈடுபடவோ அனுமதியில்லை. இருப்பினும், அவருடன் தங்கியிருக்கும் தோழர்களைப் பார்க்க அல்லது தொடர்புகொள்ள முடியும்.

பாபா முன்மொழிந்ததைக் கேட்ட பின்பு, மூன்றாவது திட்டத்தின் அனைத்து தோழர்களும், டான், காக்கா, குஸ்தாஜி மூவருடன் இணைந்து, பாபாவிற்குக் கீழ்ப்படிந்து, புதிய திட்டத்தில் இணைய ஒப்புக்கொண்டனர். 'நீலு தன்னுடன் மருத்துவராக இணைந்து, பெண்டு, முரளி இருவரும் அவர்களுக்கு உதவியாளர்களாகப் பணிபுரிந்தால், டெல்லியில் ஒரு பெரிய மருத்துவ மனையை நிறுவுவதன் மூலம், தோழர்களைப் பராமரிக்க வாய்ப்பு கிடைக்கும்' என்று டாக்டர் டான் பரிந்துரைத்தார். பாபா இந்த யோசனையை விரும்புவதாகத் தோன்றியது; இது போன்ற ஒரு மருத்துவமனையை நிறுவுவதற்கு, தோழர்களிடம் போதுமான நிதி இருக்கும் வரை டானின் யோசனை சிறிது காலம் அப்படியே இருக்கட்டும்; இது, சம்பந்தப்பட்ட அனைவருக்கும் வாழ்வாதாரமாக இருக்கும் என்று கூறினார்.

தோழர்களுடனான கூட்டம் முடிவடையும் தருவாயில், பாபா, முரளி காளே பக்கம் திரும்பி, அனைவரின் முன்னிலையில், புது வாழ்வின் நிபந்தனைகளுக்கு இணங்க, நிலையான, மிகச் சிறப்பான, பிறருக்கு எடுத்துக்காட்டாக அமையக்கூடிய விதத்தில் இருந்த அவரது நடத்தையைப் பெரிதும் பாராட்டினார். **'இதுகாறும் எதிர்கொண்ட அனைத்து ஏற்ற தாழ்வுகளிலும் முரளி மட்டுமே மகிழ்ச்சியுடனும், முகமலர்ச்சியுடனும் இருந்ததாக'** பாபா கூறினார். பாபா முரளியின் தகுதியை அங்கீகரிக்கும் விதத்தில் கைகளைக் கூப்பினார். அன்று காலை பதினொரு மணிக்கு கூட்டம் நிறைவடைந்ததும், பாபா புறப்பட்டுச் சென்றார்.

புது வாழ்வு நிபந்தனைகளை முரளி உண்மையில் நிறைவேற்றிவிட்டார் என்று ஆண் தோழர்கள் ஒப்புக்கொண்டனர். ஒருமுறை, அனைவரும் பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்தபோது, பாபா தோழர்களைக் கீழே இறங்கி, அடுத்த பேருந்தில் வருமாறு அறிவுறுத்தினார். அவர்கள் அவ்வாறே செய்து, பேருந்து நிலையத்தில் நின்றுகொண்டிருந்த வேளையில், முரளி தனது மூத்த சகோதரியைப் பார்க்க நேர்ந்தும், புது வாழ்வு நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு, அவரிடம் பேசாமல் முகத்தைத் திருப்பிக் கொண்டு நடந்தார். அடுத்த நாள், அவருடைய சகோதரி காலமானதாக அவருக்கு ஒரு தொலைத்தந்தி வந்தது; அப்போதும் அவர் மகிழ்ச்சியான முகத் தோற்றத்தை வெளிப்படுத்தினார்.

புது வாழ்வு நிபந்தனைகளின்படி, பாபாவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதில் விழிப்புடனும் எச்சரிக்கையுடனும் இருந்து, அவற்றை முழுமையாக நிறைவேற்றுவதற்கு எரச் தன்னால் இயன்ற அனைத்தையும் செய்து கொண்டிருந்தார். ஆனால், அன்றாட வீட்டு விவகாரங்களை நிர்வகிப்பதில் தவிர்க்க முடியாத சில அசம்பாவிதங்கள் நிகழாத நாளேயில்லை;

மேலும் பாபாவின் கடுமையான விமர்சனங்களுக்கும், ஏதாவது ஒரு காரணத்திற்கான கண்டனங்களுக்கும் எரச் ஆளாக வேண்டிய சூழ்நிலை.

எரச் எப்பொழுதும் தனது தவறுகளை அமைதியாக ஏற்றுக்கொள்வது வழக்கம், அதனால் ஒரு நாள் பாபா அவரை மிரட்டினார், **"உங்கள் தவறு என்று கூறி, இயந்திரத்தனமாக மன்னிப்புக் கோருவதை நிறுத்தாவிடில், நான் உங்களோடு எல்லாவற்றையும் தூக்கி எறிந்துவிடுவேன்!"** எரச் தனது சொந்த தவறுகளை ஒப்புக்கொண்ட போதிலும், பாபா இதனால் சீற்றமடைந்தார், எரச் மீண்டும் குற்றம் சாட்டப்பட்டார். அவர் ஒன்றைச் செய்தாலும் குற்றம், இல்லை என்றாலும் குற்றம்! தப்பிக்க வழியே இல்லாத சூழ்நிலை. இந்த ஆன்மீகப் பாதையில், குருநாதரிடம் விசேஷ அன்பு செலுத்துபவர்களின் தலை மீது ஒரு வாள் தொங்கிக் கொண்டிருக்கும். ஆன்மீகப் பாதையை மிதிப்பது ஒரு குன்றின் குறுகிய விளிம்பில் நடப்பது போன்றது, இந்த உணர்வின் உண்மை நிலையை அனுபவத்தால் மட்டுமே அறிய முடியும்!

மாஞ்ஜ்ரி மா ஃபி மற்றும் மோத்திசூரில் குளிர் கடுமையாக இருந்தது. சரியான உடைகளும் உணவும் இல்லாததால், ஒரு நாளைக்கு ஒரு முறை பருப்பு மற்றும் சப்பாத்திகளை மட்டுமே உண்டு வந்ததால், ஆண், பெண்மணிகளின் உடல்நிலை படிப்படியாக மோசமடைந்தது. அனைத்து விதமான நோய்களும் அவர்களைத் தாக்கத் தொடங்கின. பெண்டு, நுரையீரல் பாதிப்பால் மூச்சுத்திணறல் மற்றும் மார்பு வலியால் அவதிப்பட்டார். எரச்சிற்கு இடுப்பு வலியுடன் நெடு நாளைய கால் சுளுக்குத் தொந்தரவு தந்தது; முரளியின் உடைந்த மணிக்கட்டு, கடின உழைப்பால் மேலும் வலுவிழந்தது; விஷ்ணு முழங்கால் முடக்குவாதத்தால் சிரமப்பட்டார். நீலு, தண்ணீர் சுமந்து செல்லும் காரணத்தால் அடி முதுகு நரம்பு வலி மற்றும் இடது முழங்கால் மூட்டு பிரச்சினையால் அவதியுற்றார்; அலோபாவிற்கு காய்ச்சலால் ஏற்படும் கடுமையான சோர்வு, கடின உழைப்பால் உடல் பலவீனமடைந்தது; காக்காவிற்கு இதய நோய்; பைதூலின் உடல் முழுவதும் வலியுடன் வேதனைகள்; குஸ்தாஜி, அவரது முதுமை காரணமாக பலவீனமாக உணர்ந்தார்; மணி, இருமல் மற்றும் காய்ச்சலால் மூச்சுக்குழாய் அழற்சியால் பாதிக்கப்பட்டார்; மேலும் இளைய பெண் தோழரான மெஹருவும் நோய்வாய்ப்பட்டிருந்தார். இவை அனைத்திற்கு மத்தியிலும் பாபா, தோழர்கள் மகிழ்ச்சியாகவும், முக மலர்ச்சியாகவும் இருக்க வேண்டும் என்றும் எதிர்பார்க்கிறார்!

ஒரு நாள் பாபா (குறிப்பாக புனித ஃபிரான்சிஸைக் குறித்து) எழுத்துப்பலகையில் எடுத்துரைத்தார்:

ஏன் புனிதர்கள், புனிதர்களாக இருந்தனர்? ஏனெனில், அவர்கள் மகிழ்ச்சியாக இருப்பது கடினம் எனும்போது மகிழ்ச்சியாகவும்,

பொறுமையாக இருப்பது கடினம் எனும்போது பொறுமையாகவும் இருந்தனர். மேலும், அவர்கள் அசையாமல் இருக்க விரும்பியபோது அவர்களைத் தள்ளிவிடவும், பேச விரும்பியபோது மௌனமாகவும், உடன்படாமல் இருக்க விரும்பியபோது இணக்கமாகவும் இருந்தனர். அவ்வளவுதான். இது மிகவும் எளிமையானது மற்றும் எப்போதும் இப்படியே இருக்கக்கூடியது!

1950 ஏப்ரல் 13, கும்பமேளாவின் மிக முக்கியமான நாளாகும், அவ்வேளையில் நூறாயிரக்கணக்கான வெவ்வேறு சாதுக்களும் மஹாத்மாக்களும் ஊர்வலமாக அணிவகுத்து வந்து, புனித நீரில் நீராட கங்கை நதிக்குச் சென்றனர். ஆண், பெண்மணிகள் இந்தத் திருவிழாவை இதற்கு முன் பார்த்ததில்லை. அன்று அனைவரும் ஹரித்வாரில் தங்குவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஏப்ரல் 12, புதன்கிழமையன்று, பாபா மாஞ்ஜ்ரி மா:ியிலிருந்து பெண்மணிகளான மெஹரா, மணி, மெஹரு, கோஹெர் மற்றும் நாஜா, குமாரின் மனைவி சுபத்ரா, :பிரீனி நலவாலா ஆகியோருடன் காரில் புறப்பட்டார். சுபத்ரா புதிதாக பிறந்த தனது மகள் அம்ரித்தையும் அழைத்து வந்திருந்தார், ஆனால் குழந்தையின் அழுகை பாபாவிற்குத் தொந்தரவாக இருக்கும் என்று கவலைப்பட்டார். ஆச்சரியம் என்னவெனில், குழந்தை ஒருமுறை கூட அழவில்லை. எரச், குமார் மற்றும் மஹந்தின் வேலைக்கார சிறுவன் திலீப் ஆகியோர் ரயிலில் ஹரித்வாருக்குச் சென்றனர்; அனைவரும் ஸன்ஸார்சந்த் கோஹலின் (SANSARCHAND GOHAL) பங்களாவில் தங்கினர்.

இதர தோழர்களும், கேக்கி நலவாலா, எல்சா மிஸ்திரி, புர்ஜர் சாச்சா ஆகியோர் அடுத்த நாள் வந்ததும், பாபா அவர்களிடம் கூறினார்: **"நேற்று இரவு முழுவதும் எனக்கும் பெண்மணிகளுக்கும் தூக்கம் இல்லை, ஏனெனில் இரவு முழுவதும் வெளியிலிருந்து இவ்வளவு பெரிய ஆரவாரத்துடன் கூடிய சத்தம் வந்து கொண்டிருந்தது."**

இம்முறை பாபா நீராடுவதற்காக, கங்கை நதியிலிருந்து தண்ணீரை எடுத்துவர எரச் தேர்வு செய்யப்பட்டார் (ஏப்ரல் 13ஆம் நாள்). நீராடிய பின்னர் எஞ்சிய நீரை மீண்டும் கங்கையில் ஊற்றுமாறு பாபா அறிவுறுத்தினார். அனைத்து தோழர்களையும் ஒரு வரிசையில் நிற்குமாறு அறிவுறுத்தி, பாபா டானிடம் பின்வரும் பிரார்த்தனையை மொழியுமாறு கூறினார்:

புது வாழ்வு தோழர்களாகிய நம் அனைவரையும், தெரிந்தோ தெரியாமலோ, கடவுளுக்கும் அல்லது ஒருவர் இன்னொருவருக்கும் செய்த தவறுகளை மன்னிப்பாராக.

தோழர்களே, எனக்குச் செய்த தவறுக்காக நான் உங்களை முழு மனதுடன் மன்னிக்கிறேன், மேலும் உங்கள் உணர்வுகளை எவ்விதத்திலும் புண்படுத்தியிருந்தால் என்னையும் மன்னிப்பீர்களாக.

என் சார்பாகவும் சக தோழர்களாகிய உங்கள் சார்பாகவும், புது வாழ்வின் நிபந்தனைகள் உணர்வுபூர்வமாகவோ அல்லது அறியாமலோ மீறப்பட்டிருந்தால், எங்களை மன்னிக்குமாறு கடவுளிடம் கேட்டுக்கொள்கிறேன். என்னைப் பொறுத்தவரை, எனது உறுதிமொழியை இறுதிவரைக் கடைப்பிடிப்பதற்கும், புது வாழ்வின் அனைத்து நிபந்தனைகளையும் அவருடைய உதவியுடன் 100 சதவீதம் நிறைவேற்றுவதற்கும் தேவையான சக்தியைத் தருமாறு கடவுளிடம் கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் டான் பிரார்த்தனையை நிறைவு செய்ததும், பாபா ஒவ்வொருவரின் பாதங்களையும் தொட்டார். காலம் பதிவு செய்தது போல, "பிரியமானவரின் முகம் பிரகாசமாக இருந்தது, அவரது கண்கள் ஒளிர்ந்தன. உலகிற்கு வழிகாட்டும் விதத்தில் அவர் புது வாழ்வை அர்ப்பணம் செய்துகொண்டிருந்தார். அவ்வாறு செய்வதன் மூலம், மனிதகுலம் நிகழ்கால வாழ்வைக் கடந்து சென்று, முடிவு எனும் மையத்தை அடைவது, ஒரு புதிய ஆரம்பத்தைக் குறிக்கும்; அந்தக் கட்டத்தில், ஆரம்பமும் முடிவும் ஒன்றிணைந்து தொடக்கமற்றதாகவும் முடிவற்றதாகவும் மாறும்!

"புது வாழ்வு என்பது மனிதகுலத்திற்கு அவதார புருஷர் வழங்கும் மிகப்பெரிய வரப்பிரசாதம், இந்த வாழ்க்கையை வாழ்வதன் மூலம் இறை நாட்டம் மிக்கவர் அடைய முடியாததை அடைகிறார். இந்தப் புது வாழ்வு எப்போதும் புதியதாகவே இருக்கும்; ஆன்மீகப் பாதையில் பயணிப்பவர்களுக்கு இது இறுதி இலக்கிற்கான வழியாக அமையும்."

இந்த நேரத்தில் பாபாவின் தரிசனம் தடை செய்யப்பட்டிருந்தது, ஆனால் ஹமீர்பூரின் கேஷவ் நிகம் அதற்காக ஏங்கினார். பாபா கும்பமேளாவில் கலந்து கொள்ள இருக்கிறார் என்பதை கேஷவ் அறிந்திருந்தார். அவர் பாபாவின் கட்டளைக்கு எதிராகச் செல்ல விரும்பவில்லை, ஆயினும் கூட, அவர் பாபாதாஸுடன் ஹரித்வாருக்குப் புறப்பட்டுச் சென்றார்; அவர் பிரியமான குருநாதரை ஒரு கணமேனும் பார்க்க வேண்டும் என்று நினைத்தார். டான் பிரார்த்தனையை மொழிந்து கொண்டிருந்தபோது, கேஷவ் அருகாமையில் கங்கை நதியில் நீராடிக் கொண்டிருந்தவர், திடீரென கோஹலின் பங்களாவைத் தற்செயலாகத் திரும்பிப் பார்த்தார்.

பிரார்த்தனையை நிறைவு செய்து, பாபா ஒவ்வொருவரின் கால்களைத் தொட்டு முடிந்ததும், திடீரென கங்கையை நோக்கியிருந்த பால்கனிக்குத் தோழர்களை அழைத்துச் சென்றார். அதே நேரத்தில், கேஷவ் மேலே பார்க்கவே, மேகங்களை விலக்கிக்கொண்டு பின்னாலிருந்து சூரியன் தோன்றுவதைப் போல் ஓர் அழகிய முகத்தைக் காணநேர்ந்தது!

கேஷவ், பாபாவைப் பார்த்தார். பாபா ஏன் திடீரென மொட்டை மாடிக்குச் சென்றார் என்று எவருக்கும் புரியவில்லை. ஒருவேளை கங்கையில் சங்கமிக்கும் மனிதக் கடலைச் சுட்டிக்காட்ட விரும்புவதாக அவர்கள் நினைத்தார்கள். அந்த நேரத்தில் கேஷவ் நிகம் கங்கை நீரில் நீராடியது மட்டுமின்றி பாபாவின் தரிசனத்தின் ஆனந்த வெள்ளத்தை அருந்திக் கொண்டிருந்தார் என்பது அவர்களுக்குத் தெரியாது.

சிறிது நேரத்தில், பாபா ஆண் தோழர்களை வெளியே சென்று ஊர்வலங்களைப் பார்த்துவிட்டு, மாஞ்ஜ்ரி மா:பிக்குத் திரும்பும்படி கூறினார். மனித வெள்ளத்தில் எவரும் தொலைந்து போகாதபடி ஒருவருக்கொருவர் அருகிலேயே இருக்குமாறு அறிவுறுத்தினார். பாபா மறுநாள் பெண்மணிகளுடன் மாஞ்ஜ்ரி மா:பிக்குத் திரும்பவிருந்தார்.

அன்றைய தினம் ஹரித்வாரில் ஏறக்குறைய 15 லட்சம் பக்தர்கள் கூடியிருந்தனர். யானைகளின் மீது சவாரி செய்யும் பிரதான சாதுக்கள் அல்லது மஹாத்மாக்களுடன் கூடிய திரளான மனிதகுலத்தைத் தவிர, வெப்பம் மற்றும் தூசி மேகங்களில் வேறு எதுவும் கண்ணுக்குத் தென்படவில்லை. வர்ணம் பூசப்பட்ட நிர்வாண சாதுக்களின் ஊர்வலம் தொடங்கியது, ஆனால் அவ்வளவு வெறித்தனமான நெரிசலில், தோழர்கள் விரைந்து ரயில் நிலையத்தை நோக்கி நடந்தனர் - அங்கு பாபா, பெண்மணிகளுடன் காத்திருப்பதைக் கண்டு அவர்கள் அதிர்ச்சியடைந்தனர். அவரும் பெண்மணிகளும் தங்கள் பங்களாவிலிருந்து ஊர்வலங்களைச் சரியாகப் பார்க்க முடியாததால் அனைவரும் திரும்பி வர முடிவு செய்ததாக பாபா விளக்கினார்.

ஸன்ஸார்சந்தும் அவரது சகோதரரும் ஊர்வலங்களைப் பார்வையிட அழைத்துச் செல்வதாக உறுதியளித்தனர், ஆனால் அவர்களின் வாக்குறுதியைக் காப்பாற்றத் தவறியது பாபாவைப் பெரிதும் அதிருப்திக்குள்ளாக்கியது. இருப்பினும், ரயில் நிலையத்திற்குப் புறப்படுவதற்கு முன்பு பாபா, ஸன்ஸார்சந்த் மற்றும் அவரது சகோதரரின் கால்களைத் தொட்டு, வருத்தப்பட்டதற்காக மன்னிப்புக் கோரினார். ரயிலில் கூட்டம் அதிகமாக இருந்தாலும் அவர்கள் டெஹ்ராடூனை வந்தடைந்து நள்ளிரவில் மாஞ்ஜ்ரி மா:பிக்கு வந்தனர்.

இதற்கிடையில், அடுத்த நாள் ஹரித்வாரில், பரமேஷ்வரி தயாள் நிகம் (PARAMESHWARI DAYAL NIGAM - PUKAR - புக்கார்), அவரது தாய் மாமா, பவானி பிரசாத் நிகம் (BHAVANI PRASAD NIGAM) மற்றும் ராய்ஸாஹேப் ராமஷங்கர் (RAISAHEB RAMASHANKAR) ஆகியோருக்கு ஒரு விசித்திரமான அனுபவம் ஏற்பட்டது. ஹமீர்பூரிலிருந்து கும்பமேளாவிற்கு வந்திருந்த அவர்கள், பாபா தங்கியிருக்கும் இடத்தை தெரிந்துகொண்டு, அந்த பங்களாவிற்குச் சென்றனர். தூரத்திலிருந்து பாபா வீட்டின் மேல் தளத்தில் நடந்து செல்வதைக் காணமுடிந்தது. ஆனால் அவர்கள் அதை நெருங்கியபோது அங்கு அவர் இல்லை! விசாரித்த வேளையில்,

அதற்கு முந்தைய நாள் பாபா அங்கிருந்து புறப்பட்டுச் சென்றதாகத் தகவல் கிடைத்தது. அவர்களால் இதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை, ஏனெனில் அவர்கள் பாபாவை, சிறிது நேரத்திற்கு முன்பு பார்த்ததாக நம்பினர். அவர்கள் வீட்டைச் சுற்றி அழைத்துச் செல்லப்பட்டனர், கடைசியில், திகைத்துப்போய், பாபா இல்லை என நம்பினர்.

31 வயதான பரமேஷ்வரி நிகம் ஒரு இந்திய கம்யூனிஸ்ட் தலைவர் ஆவார், அவர் பாபாவை விமர்சித்து வந்ததோடு, அவரை நம்பவில்லை. அவர் பாபாவை ஒரு மோசடிக்காரராக அம்பலப்படுத்த நினைத்தார், ஆனால் அவரது கண்களை சந்தித்த மர்மமான பார்வை அவரது வாழ்க்கையை மாற்றியது. ஒரு கம்யூனிஸ்ட் மற்றும் உறுதியான நாத்திகராக இருந்த ஷத்ருகன் குமார் ஏற்கனவே தனது வாழ்க்கையை பாபாவிற்கு அர்ப்பணித்திருந்தார். இப்போது இந்த இரண்டாவது கம்யூனிஸ்ட் பாபாவின் எதிர்கால பணிகளில் முக்கிய அங்கம் வகிக்க இருந்தார்.

அதே நாள் காலை, 1950 ஏப்ரல் 14 வெள்ளிக்கிழமை ஏழு மணிக்கு, தோழர்களின் குடிசைக்குள் நுழைந்த பாபா, **"எல்லாவிதமான சூழ்நிலைகளிலும், மகிழ்ச்சியாக இருக்க வேண்டும், மனநிலையை இழந்து கோபப்படக் கூடாது"** என்று எச்சரித்தார்.

எரச்சின் பக்கம் திரும்பி, **"உங்கள் தாயார் காலமாகிவிட்டதாகச் செய்தி வந்தால் நீங்கள் வருந்துவீர்களா?"** என வினவினார்.

"மூன்றாவது திட்டத்தின் நிபந்தனைகளின்படி, நான் யாருக்காகவும் எதையும் உணரக்கூடாது, உணரவும் மாட்டேன்" என்றார் எரச்.

பாபா, முரளியிடம், **"உங்கள் தந்தையார் இறந்துவிட்டால், நீங்கள் எப்படி உணர்வீர்கள்?"** என்று கேட்டார்

புன்முறுவல் செய்துகொண்டே முரளி பதிலளித்தார், "நான் எதையும் உணரமாட்டேன் - அவர் போகயிருந்தால் போகட்டும்!"

பாபா, விஷ்ணுவிடம் கேட்ட போது அவரும் அதே பதிலை வழங்கினார். இருப்பினும், பாபா, விஷ்ணுவிடம் வினவினார், **"நீங்கள் உண்மையைச் சொல்கிறீர்களா? நினைவில் கொள்ளுங்கள், பொய் சொல்வது அல்லது தெளிவற்ற பதில்களைக் கூறுவது புது வாழ்வில் தடை செய்யப்பட்டுள்ளது."**

விஷ்ணு பதிலளித்தார், "எனது தாயார் (காக்குபாய்) காலமான செய்தி கிடைக்கப்பெற்றாலும் நான் எதையும் உணர மாட்டேன்."

தொடர்ந்து பாபா மெதுவாக அவரிடம், **"நேற்று, 11ஆம் நாள் மாலை 6:15 மணிக்கு மெஹராபாத்தில் காக்குபாய் காலமானதைப் பற்றி ஆதி (சீனியர்) அனுப்பிய தொலைத்தந்தியை டான் என்னிடம் காட்டினார்."** இந்த வார்த்தைகள் விஷ்ணுவை எந்தவகையிலும் பாதிக்கவில்லை, மேலும் அவர் பாபாவின் கேள்விகளுக்கு சாதாரண குரலில் அமைதியாக பதிலளித்தார்.

அப்போது பாபா, **"நான் விட்டுச் சென்ற பழைய நபர்களைப் பற்றிய செய்திகளை எனக்கு வழங்கியிருக்கக் கூடாது"** என்று கூறினார்.

அதற்குப் பிறகு, விஷ்ணுவைத் தழுவி, பாபா தோழர்களை நோக்கி, **"விஷ்ணு தைரியமானவர், அவருடைய தாயார் வயதானவராக (62) இருந்தபோதிலும், விஷ்ணு அவருடன் இருக்காமல் 'ஆம்' என்று பதிலளித்து புது வாழ்வில் இணைந்தார்."** இந்த சம்பவத்திற்குப் பிறகு, விஷ்ணு பெண்மணிகளுக்குத் தேவையானவற்றை வாங்க சைக்கிளில் டெஹ்ராடூனுக்குப் புறப்பட்டுச் சென்றார், பாபா அவருடைய உறுதிப்பாட்டையும் மன தைரியத்தையும் பாராட்டினார்.

பூனா, கஸ்பா பேட்டில் நிறுவிய மதுபான சத்திரத்தின் ஆரம்ப நாட்களிலிருந்தே காக்குபாய், பாபாவின் தொடர்பில் இருந்தார். ஆரம்பத்திலிருந்தே, அவர் பாபாவை 'தேவா' (DEVA - கடவுள்) என்று அழைத்து வந்தார். அந்நாட்களில், பாபா எந்த நேரத்திலும் அவரது இல்லத்திற்குச் சென்று சாதமும் பருப்பும் கேட்பதும், அவர் எப்பொழுதும் அவசரமாக இருந்ததால், அதைத் தயார் செய்ய போதுமான நேரம் கொடுக்காததாலும் காக்குபாய் அவற்றை எப்பொழுதும் தயார் நிலையில் வைத்திருந்தார். கிட்டத்தட்ட ஒவ்வொரு நாளும் அவரது இல்லத்திற்கு வந்து பாபா, காக்குபாயின் இதயத்தைக் கவர்ந்தார். **1925**ஆம் வருடம் நிரந்தரமாக மெஹராபாத்திற்குக் குடிபெயர்ந்தார், அங்கேயே தன் உடலை இப்போது துறந்தார்.

"அன்புள்ள காக்குபாய், உங்களுக்கு எங்கள் வணக்கங்கள்!" காலம் பறைசாற்றியது.

காக்குபாயின் இறுதிச்சடங்கு அதே நாள் இரவு **11:00** மணிக்கு மெஹராபாத்தில் நடைபெற்றது.

அடுத்த நாள், பாபா, டானை எச்சரித்தார், **"இனிமேல், பழைய வாழ்க்கையில் எவரைப் பற்றிய செய்தியையும் எனக்கு வழங்காதீர்கள். எவரேனும் உயிரைத் துறந்தாலும், சரியான சந்தர்ப்பத்தில், நான் கேட்கும் வரை எனக்குத் தெரிவிக்காதீர்கள்"** என்று எச்சரித்தார்.

பாபா, தோழர்களிடம் இவ்வாறு எடுத்துரைத்தார்: **"ஆதி சீனியர் தனது தாயை** (குல்மாயை) **மிகவும் நேசிக்கிறார், விஷ்ணுவும் தனது தாயை மிகவும் நேசித்தார், ஆனால், என்னுடைய தொடர்பில் இருப்பதால், இருவரின் தாய்மார்கள் மீதான அவர்களின் அன்பில் உலகளவு வித்தியாசம் உள்ளது. விஷ்ணு தைரியமான இதயம் படைத்தவர், அவர் என்னுடன் இருப்பதைத் தேர்ந்தெடுத்த அதே நேரத்தில் ஆதி சீனியர் திட்டம் 'ஒன்று-சி'யைத் தேர்ந்தெடுத்தார்."**

ஏப்ரல் 15ஆம் நாள் காலை ஏழு மணியளவில், பாபா தனது தோழர்களின் குடிலுக்கு வந்து, அவர் அமெரிக்காவிற்குச் செல்வதற்கான சாத்தியக்கூறுகளைப் பற்றி விவாதிக்க ஒரு கூட்டத்தை நடத்தினார்:

"இந்த ஆண்டு என்னை மேற்கத்திய நாடுகளுக்கு வரவழைத்து, எந்த நாளிலும், எலிஸபெத்திடமிருந்து ஒரு தொலைத்தந்தி வரும் என்று நான் எதிர்பார்க்கிறேன். அதே நேரத்தில், 1950ஆம் ஆண்டுக்கு பதிலாக 1951ஆம் ஆண்டு ஜூலையில் நான் அங்குச் செல்வதை அவர் விரும்புவதற்கான வாய்ப்பும் உள்ளது. இந்த ஆண்டு நான் மேற்கத்திய நாடுகளுக்குச் செல்வதானால், உங்களில் சிலரை நான் அழைத்துச் செல்ல வேண்டும், என்னுடன் வருபவர்கள், மேற்கிலிருந்து திரும்பி வரும்போது, இந்தியாவில் தங்கியிருந்த தோழர்களுடன், புதிய திட்டத்தில் மீண்டும் இணைவார்கள்.

"உங்களில் சிலரை நான் மேற்கத்திய நாடுகளுக்கு அழைத்துச் செல்லும்போது, உங்கள் விஷயத்தில் தலையிடவோ அல்லது உங்களுக்கு எந்த உத்தரவும் பிறப்பிக்கவோ கூடாது என்று நான் தீர்மானித்திருப்பதால், உங்கள் சம்மதத்துடன், மேற்கத்திய நாடுகளில், எல்லா வகையிலும் நீங்கள் கீழ்ப்படிவீர்கள் என்ற உறுதிமொழியுடன் நான் உங்களை அழைத்துச் செல்வேன்.

"சுருக்கமாக, ஜூலையில் மேற்கத்திய நாடுகளுக்குச் செல்ல நான் முடிவு செய்தால், தோழர்கள் எனக்குக் கீழ்ப்படிவதாக உறுதியளிப்பதைப் பொறுத்து, மே மாதத்தில் சில தோழர்களை என்னுடன் வருமாறு கேட்டுக்கொள்வேன்; இந்தியாவில் இருக்கும் இதர தோழர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்குத் தேவையான குடியிருப்புகள் மற்றும் வேலைகளை அடையப்பெறுவதில் நான் உதவுவேன்" என்று கூறி முடித்தார்."

1950 ஏப்ரல் 16 அன்று, எரச், கேக்கி தேசாய் ஆகியோர் புதிய திட்டத்தின் அனைத்து நோக்கங்களுக்கும் உகந்த வகையில், நியாயமான வாடகையில் தோழர்கள் தங்குமிடங்களைக் கண்டறியவும், அது போல, பாபாவும், பெண்மணிகளும் வசிப்பதற்கு வசதியான இடங்களைத் தேடவும் டெல்லிக்கு அனுப்பப்பட்டனர்.

தொடர்ந்து வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டதுடன், குளிர்ந்த வானிலையும் நிலவியது. பாபா அதைக் குறித்து இவ்வாறு கூறினார், **"1949 அக்டோபர் 16 முதல், குளிர் காலநிலை, பனிக்காற்று மற்றும் மழை தொடர்ந்து, நெடுங்காலமாக, புது வாழ்வில் என்னையும் எனது தோழர்களையும் பிடிவாதமாகப் பின்தொடர்கிறது."** பாபாவின் உடல்நிலை வெகுவாகப் பாதிக்கப்பட்டது. அவர் முதுகு மற்றும் கழுத்து வலிகளுடன், மோசமான நாசிச்சளி, சவ்வுகளின் வீக்கம், இருமல் போன்றவற்றால் விளைந்த தலைவலியால் அவதிப்பட்டார். இந்தப் பதட்டமான சூழ்நிலையை மேலும்

மோசமாக்கும் விதத்தில், அடுத்த நாள், மெஹராவைத் தவிர இதர பெண்மணிகள் அனைவரும் ஜுரத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று பாபா தோழர்களிடம் தெரிவித்தார். அவர்கள் ஒரு சிறிய, மூன்று அறைகள் கொண்ட குடிலில் ஒன்றாக இருந்ததால், தொற்று பரவியது. பாபா, பெண்மணிகள் மகிழ்ச்சியாகவும், ஒருவருக்கொருவர் அன்பாகவும் இருக்க வேண்டும் என்று நினைவுபடுத்தினார்.

விரைவில், விஷ்ணு கடும் ஜுரத்தால் நோய்வாய்ப்பட்டார், மேலும், டாக்டர் நீலு, டெஹ்ராடூன் சென்று வழக்கமாக வேண்டிய பொருட்களை வாங்கும் விஷ்ணுவின் கடமைகளை ஏற்கும்படி அறிவுறுத்தப்பட்டார். கிணற்று நீர் முன்னெப்போதையும் விட மோசமாக துர்நாற்றம் வீசுவதால், தற்போது குடிநீரை தொலைதூரத்திலிருந்து கொண்டுவர வேண்டியிருந்தது. டாக்டர் நீலுவின் கருத்துப்படி, இந்தத் துர்நாற்றம் வீசும் தண்ணீர் அனைவரின் உடல்நிலை கெடுவதற்கான முக்கிய காரணமாக இருந்தது.

டாக்டர் நீலு தனது நாட்குறிப்பில் எழுதியது போல: "தேவையான உணவு, உடை, போதுமான அளவு நல்ல தண்ணீர், சுகாதாரம் இல்லாமை, பட்டினி, உடல், மன அழுத்தங்கள் மற்றும் கடுமையான உடல் உழைப்பு காரணமாக சோர்வு, தொடர்ச்சியான குளிர், காற்று, ஈரத்தன்மை, பருவமழையுடன் கூடிய காலநிலை இவை அனைத்தும், புது வாழ்வின் கடந்த ஆறு மாதங்களில் பாபா மற்றும் அவரது சக தோழர்களின் உடல்நிலையைப் பெருமளவில் பாதித்தது."

காலமும் இதை இவ்வாறு குறிப்பிட்டிருந்தது: "அவர்களின் உடல்நிலை கிட்டத்தட்ட படுமோசமான நிலையை எட்டியது, உண்மையில் புது வாழ்வு உதவியற்றதாகவும், நம்பிக்கையற்றதாகவும் இருந்ததை நிரூபிக்கிறது!"

முன்னதாக ஒருமுறை, சாரநாத்தில் இருந்த வேளையில், புது வாழ்வில் இணைய எவரையும் அழைப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து பாபா தோழர்களுடன் கலந்துரையாடினார். புது வாழ்வில் வெளியிலிருந்து எந்த ஒரு நபரையும் ஏற்றுக்கொள்வதற்கு அவர் சில நிபந்தனைகளை வகுத்திருந்தார்: "**வெளியிலிருந்து வரும் நபர் எவரும், தனது சுய விருப்பத்தின் பேரில் குழுவுடன் இணைய முன்வருகிறார், மேலும் நான், அவர் 100 சதவிகிதம் பொருத்தமாக இருப்பதாகக் கருதினால், தோழர்களின் பெரும்பான்மை வாக்குகள் மூலம் புது வாழ்வில் இணையலாம்.**" நிபந்தனைகளின் தீவிரத்தன்மை காரணமாக, ஆண்கள் மட்டுமே தகுதியுடையவர்கள், மேலும் அவர்கள் "**புது வாழ்வு புது தோழர்கள்**" என்று அழைக்கப்படுவார்கள். (அதைத் தொடர்ந்து, புதிய திருத்தப்பட்ட திட்டங்கள் உருவாக்கப்பட்டு பிற திட்டங்கள் நிராகரிக்கப்பட்டன.)

ஆனால் இந்த யோசனையை மனதில் கொண்ட பழைய வாழ்க்கை பக்தர்களில் ஒருவரான குஸ்தாஜியின் மருமகன், 35 வயதான ருஸ்தம் ஸொராப் ஹன்ஸோட்டியா (RUSTOM SOHRAB HANSOTIA), 1944ஆம் ஆண்டில் மெஹராஸாத்தில் பாபாவை முதன்முதலில் சந்தித்த அவர், இப்போது, பாபாவின் சுற்றறிக்கையை முழுமையாகப் படித்து, ஆராய்ந்த பிறகு, பாபாவுடன் புது வாழ்வில் இணைய முடிவு செய்தார். ரத்லம் (RATLAM) நகரில் ரயில்வே துறையில் பணிபுரிந்த அவர், அதை விட்டுவிட்டு, 1950 ஏப்ரல் 18 அன்று காலை மாஞ்ஜ்ரி மா.ஃபிக்கு வந்தார்.

பெண்டு அவரை வளாகத்தில் சந்தித்து, பாபா எவருக்கும் பேட்டி, தரிசனம் போன்றவை வழங்கவில்லை என்று விளக்கினார். ஹன்ஸோட்டியா, தனக்கு அதெல்லாம் தெரியும், ஏனெனில் அவர் எல்லா நிபந்தனைகளையும் வெவ்வேறு திட்டங்களையும் மனப்பாடம் செய்திருந்ததாகவும், அன்றே புது வாழ்வில் இணையும் தனது தீர்மானத்தில் உறுதியாகவும் இருந்தார்.

பெண்டு பாபாவிற்குத் தெரியப்படுத்தியதும், "**அவரிடம் கூறுங்கள், ஏப்ரல் மாத இறுதிக்குள் நான் தோழர்களின் கூட்டத்தை நடத்துவேன், அப்போது புது வாழ்வு நிலைமை மற்றும் இதர விபரங்கள் விவாதிக்கப்படும். ருஸ்தத்தின் கோரிக்கைப் பரிசீலிக்கப்படும். இதற்கிடையில், அவர் தனது இல்லத்திற்குத் திரும்பிச் சென்று, எனது முடிவுக்காகக் காத்திருக்க வேண்டும், அது எனது அறிவுறுத்தல்களுடன் அவருக்குத் தபாலில் அனுப்பப்படும்**" என்று தெரிவித்தார்.

பிடிவாதமாக இருந்த ஹன்ஸோட்டியா இதை அவ்வளவு எளிதில் ஏற்றுக்கொள்ளத் தயங்கி, பெண்டுவிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். பாபாவிற்குக் கீழ்ப்படியுமாறு பெண்டு அவரை மீண்டும் மீண்டும் வற்புறுத்தினார். அப்போது ஹன்ஸோட்டியா, பாபாவை ஒரு கணமேனும் பார்க்க வேண்டும் என்ற தனது விருப்பத்தை வெளிப்படுத்தினார் - "தூரத்திலிருந்து அவரது முகத்தைப் பார்த்தாலே போதும்." பெண்டு, பாபாவிற்குத் தகவல் கொடுத்ததும், அவர் வெளியே வந்து தூரத்திலிருந்து கையசைத்தார், பின்னர் ஹன்ஸோட்டியா ரத்லம் நகரில் அமைந்த தனது இல்லத்திற்குத் திரும்பிச் சென்றார்.

ஷத்ருகன் குமார் இப்போது ஆண் தோழர்களில் ஒருவராக ஏற்றுக்கொள்ளப்பட்டு, பாபாவை அடிக்கடி பார்ப்பதற்கு அனுமதிக்கப்பட்டார். ஏப்ரல் 20ஆம் நாள் அந்த ஊர் மஹந்த் ஜம்னாதாஸுடன் வருகை தந்தபோது பாபா அவர்களுக்கு விளக்கினார்: "**உங்கள் இருவருக்காகவும், நான் ஒரு வகையான அன்பின் பொறுப்பை உணர்கிறேன்; புது வாழ்வில், நான் உங்களையும், நலவாலா, சாச்சா, தேசாய், வீரேந்திரா, எல்சா ஆகியோரை தவிர வேறு எவரையும் சந்திக்கவில்லை; உங்களுக்கும் அவர்களுக்கும் மட்டுமே நான் எனது தனிப்பட்ட சகவாசத்தை வழங்குகிறேன்.**"

அப்போது பாபா, மஹந்திடம், **"நான் உங்களுக்கு வழங்கும் இரண்டு அறிவுரைகளை உண்மையாகவும் நேர்மையாகவும் நிறைவேற்றுவீர்களா?"** என்று கேட்டார். மஹந்த் பாபாவிடம் ஆமாம் என உறுதியளித்ததும், **"அப்படியானால், ஜூன் 17 அன்று, நீங்கள் மீண்டும் சிறைக்குச் செல்லும் கடைசி நிமிடம் வரை, சிறையிலிருந்து நிரந்தர விடுதலையைப் பற்றி சிறிதும் கவலைப்பட வேண்டாம். மேலும் ஒவ்வோர் இரவும் படுக்கைக்குச் செல்வதற்கு முன்னர், இந்த இதயப்பூர்வமான பிரார்த்தனையை மொழியுங்கள்: 'கடவுளே, நான் எனது விதியை உங்கள் கையில் விட்டுவிடுறேன்"** என்று அறிவுறுத்தினார்.

கிராமவாசிகளுடன் ஏற்பட்ட தகராறில் இரண்டு நபர்களைச் சுட்டுக் கொன்றதற்காக மஹந்த் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார், ஆனால் அவர் காசநோயால் பாதிக்கப்பட்டு உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால் அவருக்கு தற்காலிக விடுதலை வழங்கப்பட்டது. மஹந்த் இந்த இரண்டு கட்டளைகளைப் பின்பற்ற ஒப்புக்கொண்டார்; பாபா மேலும் கூறினார், **"நீங்கள் இந்த அறிவுரைகளை உண்மையாகக் கடைப்பிடித்தால், கடவுள் உங்களைக் கைவிட மாட்டார் என்று நான் உள்ளூர உணர்கிறேன்."** பாபாவின் வார்த்தைகள் அவருக்கு பெரும் தைரியத்தைத் தந்தது.

அதற்குப் பிறகு, பாபா அவரிடம், **"இனிமேல், புது வாழ்வில் என்னுடனான உங்கள் தொடர்பு தொடராது என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்"** என்று கூறினார்.

குமாரிடம், பாபா இவ்வாறு தெரிவித்தார்: **"எதிர்காலத்தில் நான் உங்களுடன் புது வாழ்வின் இறுதி வரை தொடர்பு வைத்திருக்கலாம் என்று உணர்கிறேன், ஆனால் என்னால் உறுதியாகக் கூற முடியாது."**

(1950 ஜூன் **14** அன்று, பாபா டெஹ்ராடூனை விட்டு வெளியேறிய நாள், மஹந்த் நிரந்தரமாகச் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டதாக அரசாங்கத்திடமிருந்து உத்தரவு வந்தது. பாபாவே அவருக்கு இந்த நற்செய்தியை அறிவித்தபோது, அதையெல்லாம் பாபாவின் கருணை என்று அவர் கூறினார்.)

மே **1** முதல் நடைமுறைக்கு வரும் புதிய மாற்றங்கள் குறித்து விவாதிக்க ஏப்ரல் **21** மற்றும் **22** தேதிகளில் கூட்டங்கள் நடத்தப்பட்டன. ஏப்ரல் **25**ஆம் தேதி முதல், நல்ல மனநிலையில் இருந்த பாபா, டாக்டர் நீலு, குமார் மற்றும் பிற ஆண் தோழர்களுடன் காலையில் பூப்பந்தாட்டம், கிட்டிப்புள் மற்றும் கிரிக்கெட் விளையாடத் தொடங்கினார். அன்றைய தினம் எரச் வந்து டெல்லியில் நடைபெற்று வரும் ஆயத்தப் பணிகள் குறித்து அறிக்கை அளித்தார்.

1950 ஏப்ரல் **26** அன்று புதன்கிழமை காலை **7:30** மணிக்கு, பாபாவுடனான சந்திப்பிற்காக தோழர்கள் கூடினர், அதில் டெல்லியில் ஒரு தொழில்

தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் விவாதிக்கப்பட்டன. இறுதியில், பாபா, புதிய திட்டத்தை உள்ளடக்கிய பின்வரும் முடிவுகளை எடுத்தார்:

1) **1950 மே 1 அன்று, மூன்றாவது திட்டத்தின் தோழமையைக் கலைப்பதற்கு முன்பு, நானும், மூன்றாவது திட்டத்தின் கீழ் உள்ள தோழர்களும் கடைசியாக டெஹ்ராடூன் நகரில் யாசிக்கச் செல்வோம்.**
2) **மே 1ஆம் நாள் மாலைக்குள், மூன்றாவது மற்றும் 'ஒன்று-பி' திட்டத்தின் கீழ் உள்ள தோழர்கள் புதிய திட்டத்தில் ஒரு குழுவாக இணைய உத்தரவிடுகிறேன். இதன் விளைவாக, மே 1 அன்று டான் தனது மருத்துவமனையை (டெஹ்ராடூனில்) மூடிவிடுவார்.**
3) **புதிய திட்டக் குழுவின் அனைத்து தோழர்களும், ஒன்று மற்றும் இரண்டாவது திட்டங்களின் அனைத்து நிலையான நிபந்தனைகளையும் எப்போதும் கடைப்பிடிப்பார்கள். நிலையான கட்டுப்பாடுகளைத் தவிர, அனுதின உத்தரவுகளோ, எனது தரப்பிலிருந்து எந்தத் தலையீடோ இருக்காது.**
4) **தற்காலிகமாக தடைசெய்யப்பட்ட 'பி-குழு'வின் தோழர்கள் மற்றும் அசல் திட்டமான 'ஒன்று-பி', 'ஒன்று-சி' மற்றும் திட்டம் இரண்டின் கீழ் உள்ள தோழர்கள் சார்பாக, யாசிப்பது, லங்கோட்டி வாழ்க்கை மற்றும் நாடோடி வாழ்க்கை (தனியாக) வாழ்வது போன்ற மூன்று கட்டங்களிலும் நான் ஈடுபடுவேன். எனது சார்பாக, அனைத்து புது வாழ்வு தோழர்களும் 'உடல் உழைப்பு' கட்டத்தில் ஈடுபடுவார்கள்.**
5) **புது வாழ்வில் பங்கெடுக்கும் கைக்கோபாத் தஸ்தூர், அப்படியே இருந்துகொண்டு, அவர் புதிய திட்டத்தின் குழுவுடன் இணைந்து உணவில் பங்கெடுப்பார். புதிய திட்டக் குழுவின் தோழர்களைப் போலவே அவருக்கும் கைச்செலவுகளுக்குக் காசு கிடைக்கும். எந்த வேலையும் செய்யச் சொல்லி தோழர்கள் கேட்க மாட்டார்கள். அவரது வழக்கமான வேலையைத் தானே செய்வார்.**
6) **சதாஷிவ் பாட்டீல் புதிய திட்டக் குழுவில் இருப்பார், ஆனால் புதிய திட்டக் குழுவில் இருக்கும் வேளையில், எந்தவித பராமரிப்பு அல்லது கைச்செலவுக்கான காசு, பணத்தையும் அடையப்பெறாமல், பூனாவில் உள்ள அவரது சொந்த வீட்டில் தங்குவதற்கு நான் அவரை அனுமதிக்கிறேன். இருப்பினும், அவர் எப்போது வேண்டுமானாலும் புதிய திட்டக் குழுவுடன் வந்து இணையலாம். புதிய திட்டக் குழுவின் தோழர்களிடமிருந்து விலகி இருக்கும் வரை, திட்டம் 'ஒன்று-பி'யின் அசல் நிலையான நிபந்தனைகளை சதாஷிவ் கண்டிப்பாகக் கடைப்பிடிப்பார்.**

7) பின்வரும் பதினொரு உறுப்பினர்கள் புதிய திட்டக் குழுவில் அங்கம் வகிப்பர்: அலோபா, பைதூல், டான்கின், எரச், குஸ்தாஜி, காக்கா, முரளி, நீலு, பெண்டு, சதாஷிவ் மற்றும் விஷ்ணு.

8) கேக்கி தேசாய் புதிய திட்டத்திற்கான வணிகத்தில் பங்கேற்பார், மேலும் அவரது சேவைகளுக்காக, 1950 ஜூன் 1 முதல் அவருக்கு மாதம் ரூ. 300 வழங்கப்படும். குழுவில் அவர் தங்குவது அவரது விருப்பத்திற்கு விடப்பட்டுள்ளது.

9) 1950 மே 1 அன்று, புதிய திட்டக் குழுவிற்கு ரூ 16,000 கடனாக வழங்குவேன், அதை விரைவில் திருப்பிச் செலுத்த வேண்டும்.

10) இந்த ரூ 16,000 மெஹர்ஜி, நரிமன் இருவரிடம் இருக்கும் புது வாழ்வு தொகையின் பாக்கித் தொகையிலிருந்தும், மாஞ்ஜ்ரி மா.ஃபி மனையின் விற்பனைத் தொகையிலிருந்தும் வழங்கப்படும்.

11) புதிய திட்டக் குழுவிற்கு வழங்கும் ரூ 16,000 கடன் தொகையிலிருந்து தங்களைப் பராமரித்து கொள்வதோடு, கீழே குறிப்பிடும் நான் வழங்கிய திட்டவட்டமான அறிவுறுத்தல்களின்படி அவர்களின் வணிகம் மற்றும் வாழ்வாதாரத்தை ஒழுங்குபடுத்த உதவும். ரூ 16,000 கடனை முழுமையாக திருப்பிச் செலுத்தியவுடன், இந்த அறிவுறுத்தல்கள் மற்றும் கட்டுப்பாடுகள் சட்டப்படிச் செல்லுபடியாகாது. அதன்பிறகு, தோழர்கள் எந்தத் தொழிலைச் செய்வதற்கும், தங்களைத் தாங்களே பராமரித்துக் கொள்வதற்கும், தங்கள் வீட்டு விவகாரங்களை மறுசீரமைப்பதற்கும், மற்றும் பலவற்றிற்கும் பெரும்பான்மை வாக்குகள் மூலம் முழு சுதந்திரம் வழங்கப்படும்.

12) காக்கா, வருமானம் உள்ளிட்ட அனைத்துப் பணத்தையும் தனது பொறுப்பில் வைத்து, கணக்குகளைப் பராமரிக்க வேண்டும்; மேலும் அவர் வீட்டு மேலாளராகவும் இருப்பார்.

13) அலோபா சமையலறையின் பொறுப்பேற்று காக்காவிற்கு உதவ வேண்டும்.

14) குஸ்தாஜிக்கு ஒருபோதும் எந்த வேலையும் இருக்காது.

15) பாபாவின் தனிப்பட்ட வேலைகளைச் செய்வதற்காக எரச், பைதூல் இருவரும் பெண்மணிகளால் ஈடுபடுத்தப்பட்டதாகக் கருதப்படும், மேலும் ஒவ்வொருவருக்கும் பெண்மணிகளால் மாதம் ரூ 50 வழங்கப்படும். இருவருக்கும் எந்த வேலையும் இல்லாதபோது பெண்டு, நீலு, டான், முரளி ஆகியோருக்கு, தொழில் நிர்வாகத்தில் உதவியாக இருப்பார்கள்.

16) விஷ்ணுவின் சேவைகளுக்கு மாதம் ரூ 50 பெண்மணிகளால் வழங்கப்படும்.

17) ரூ 16,000 கடன் தொகையில், வணிகத்திற்காக பிரத்தியேகமாக ரூ 5,000 மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது.

18) புதிய திட்டக் குழு, வணிகத்தின் நிகர லாபத்தில், 25 சதவீதம் பெண்மணிகளுக்கு வழங்க வேண்டும், எஞ்சியுள்ள 75 சதவீதம் ரூ 16,000 கடன் தொகைக்காகத் திருப்பிச் செலுத்துவதைத் தவிர வேறு எந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்தக்கூடாது. கடனைத் திருப்பிச் செலுத்தியவுடன், வணிகத்தின் நிகர லாபத்தில் 25 சதவிகிதம் பெண்மணிகளுக்கு வழங்கப்பட மாட்டாது.

முழு லாபமும் அசல் திட்டம் 'ஒன்று-பி' குழுவின் தோழர்களின் கையிருப்புத் தொகையாக இருக்கும்.

19) திட்டம் 'ஒன்று-சி' மற்றும் இரண்டின் கீழ் உள்ள தோழர்கள் எனக்கு அனுப்பிய தொகையில், நான் பெண்களுக்கு 25 சதவிகிதம் வழங்கி, எஞ்சிய 75 சதவிகிதம் புதிய திட்டக் குழு வணிகத்தின் நிகர லாப வைப்புத்தொகையுடன், கடன் முழுமையாகத் திருப்பிச் செலுத்துவரை, சேர்க்கப்படும். கடனைத் திருப்பிச் செலுத்தியவுடன், இவ்வாறு இருப்புத் தொகையாக வைக்கப்பட்ட 75 சதவிகிதம் என்னால் உங்களுக்குச் செலுத்தப்பட மாட்டாது, ஏனெனில் தானாகவே தற்காலிகமாக தடைசெய்யப்பட்ட 'பி-குழு'வின் திட்டம் அசல் திட்டம் 'ஒன்று-பி' குழுவாக மாறும்.

20) எரச், விஷ்ணு, பைதூல் ஆகியோரின் சம்பளம் மற்றும் டான் மருத்துவமனை தளவாடங்களை விற்பனை செய்வதால் அடையப்பெறும் வருமானம் அனைத்தும் கடனைத் திருப்பிச் செலுத்தும் வரை புதிய திட்டக் குழு வணிகத்தின் நிகர லாப வைப்புத்தொகையுடன் சேர்க்கப்படும்.

21) எனக்குப் பணம் தேவைப்படும் போதெல்லாம், பெண்மணிகளிடமிருந்தோ அல்லது புதிய திட்டக் குழுவிலிருந்தோ யார் அதை வழங்கும் சிறப்பு நிலையில் இருப்பார்களோ அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்கிறேன்.

22) இந்தப் புதிய திட்டக் குழு, தானாகவே அசல் திட்டமான 'ஒன்று-பி' குழுவாக மாறும் வரை, ரூ 16,000 கடனைத் திருப்பிச் செலுத்திய பின்னர், எனது அனுமதியின்றி திட்டம் 'ஒன்று-சி' அல்லது இரண்டாவது திட்டத்தின் பழைய வாழ்க்கை வாழ்பவர்கள் அல்லது புது வாழ்வு தோழர்களுடன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நீங்கள் தொடர்பு கொள்ளவோ, சந்திக்கவோ,

தொடர்பில் இருக்கவோ கூடாது. டெல்லி மற்றும் டெஹ்ராடூன் குடியிருப்பாளர்கள், மேலும் அலிகாரைச் சேர்ந்த திரு. தோடி ஸிங் ஆகியோர் இந்த உத்தரவுகளிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படுகிறார்கள்.

23) புதிய திட்டக் குழுவின் தோழர்கள் மே 10 அன்று மாஞ்ஜ்ரி மா:பியிலிருந்து நிரந்தரமாக டெல்லிக்கு புறப்பட்டு, அங்கு, தோடி ஸிங் மற்றும் டெல்லி குழுவின் உதவியுடன் நெய் தொழிற்சாலைக்கு ரூ.5,000 முதலீடு செய்து, தொழில் தொடங்க உள்ளனர். இதைத் தவிர, நீங்கள் அனைவரும் முதலீடு எதுவும் தேவையில்லாத எந்தப் பக்கத் தொழிலிலும் ஈடுபட்டு புது வாழ்வின் உள்ளுணர்வைப் பேணலாம்.

24) முதல் மூன்று மாதங்களுக்கு, மே 10 முதல், புதிய திட்டக் குழு, கேக்கி தேசாய் இல்லத்தில் தங்கும்.

25) முதல் மூன்று மாதங்களுக்கு, நானும் பெண்மணிகளும் மே 10 முதல் டெஹ்ராடூனில் டானின் மருத்துவமனை இயங்கி வந்த பங்களாவில் தங்குவோம்.

26) மே 10 அன்று டான் தனது உடைமைகள் அனைத்தையும் மருத்துவமனை உபகரணங்களுடன் டெல்லிக்கு எடுத்துச் செல்கிறார்.

27) விஷ்ணுவும் பைதூலும் என்னுடன் டெஹ்ராடூனில், முறையே பெண்மணிகள் மற்றும் எனது வேலைகளுக்காகவும் தங்குவார்கள். ஒரு மாதத்திற்கு பிறகு, பைதூல் டெல்லிக்குச் சென்றதும், அங்கிருந்து என்னுடைய வேலைக்காக எரச் இங்கு வருவார்.

28) 1950 ஆகஸ்ட் 1 முதல், நான் எனது ஆண், பெண்மணிகளுடன் 'டெல்லி ரோஹ்தக் சாலை' (DELHI ROHTAK ROAD) கட்டிடத்தில் தங்குவோம்; அது அந்த நேரத்தில் சீரமைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அனைவரின் தங்குமிடத்திற்கான வாடகை புதிய திட்டக் குழுவின் தோழர்களால் செலுத்தப்படும்; பெண்மணிகள் தங்கள் பங்காக மாதம் ரூ 100 செலுத்துவார்கள்.

29) நெய், வெண்ணெய் போன்ற எந்தவொரு வணிகப் பொருளும் - பெண் அல்லது ஆண் தோழர்களால் வீட்டு உபயோகத்திற்குப் பயன்படுத்தப்படும் வேளையில், வேறு எதையும் கருத்தில் கொள்ளாமல், அதற்கான பணத்தை முழுமையாக வழங்கவேண்டும்.

30) தோழர்களின் தனிப்பட்ட சிறு சிறு செலவுகளுக்காக, ஒவ்வொரு தோழருக்கும் மே மாதம் முதல் பத்து ரூபாய் வழங்க வேண்டும்.

31) 1950 மே 1 முதல் நாட்குறிப்பு எழுதுவது நிறுத்தப்பட உள்ளது.

32) மே 15ஆம் தேதிக்குள் புதிய திட்டக் குழு தோழர்களின் தேவையான அனைத்து தனிப்பட்ட உடைமைகளையும் டெல்லிக்குக் கொண்டு வருமாறு பாதிரி கேட்டுக்கொள்ளப்படுவார்.

33) உங்களின் பரம்பரை சொத்து அல்லது பணம் ஏதேனும் இருந்தால், நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ உங்கள் உறவினர்கள் அல்லது நண்பர்கள் மூலம் உங்களை வாரிசாக ஆக்கும் நோக்கத்துடன், அதை உங்கள் வழியாக எனக்கு மாற்றும் எண்ணம் இல்லாமல், என்னிடம் வழங்கப்பட வேண்டும்.

34) புதிய திட்டக் குழு ரூ 16,000 கடனைத் திருப்பிச் செலுத்துவதை எளிதாக்கும் வகையில், 1950 மே 1 முதல் ஆறு மாதங்களுக்கு, பின்வரும் ஆரம்ப மற்றும் தொடர் செலவினங்களை நிர்ணயம் செய்கிறேன். 1950 மே 1 அன்று கடன் தொகையாக, காக்கா பாரியாவிடம் ஒப்படைக்கப்பட்ட ரூ 16,000, பின்வரும் முறையில் பயன்படுத்தப்படும்: 2,585 - உணவுத் தொகை, 1950 மே 1 முதல் அக்டோபர் இறுதி வரை. 300 - விஷ்ணு, பைதூல் (அல்லது எரச்) ஆகியோரின் மே, ஜூன், ஜூலை மூன்று மாத உணவுக்கான தொகை ஏற்கனவே பெண்மணிகளிடம் வழங்கப்பட்டுள்ளது. 150 - பணியாளர்களின் ஆறு மாத சம்பளம்.

660 - ஆறு மாத கைச்செலவுக்கான பணம் தலா பத்து ரூபாய்.

300 - ஆறு மாதங்களுக்கு விளக்கு மற்றும் தண்ணீர் கட்டணங்களுடன் வீட்டு வாடகை.

510 - ஆறு மாதங்களுக்கு விளக்கு மற்றும் தண்ணீர் கட்டணங்களுடன் கடை வாடகை.

4,340 - ரோஹ்தக் கட்டிட வாடகை, ரசீதுகள் மற்றும் ஆக்கிரமிப்பு தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்கு முகவர்களுக்கான தரகுப்பணம்.

5,000 - வணிக முதலீடு.

1,000 - மாஞ்ஜ்ரி மா:பியிலிருந்து டெல்லிக்கு இடமாற்றத்திற்குத் தேவைப்படும் பணம்.

1,000 - தோழர்களின் உடைமைகளை மெஹராபாத்திலிருந்து டெல்லிக்கு கொண்டு செல்லத் தேவைப்படும் பணம்.

155 - அவசரநிலைக்கான ஒதுக்கீடு

மொத்தம்: ரூ 16,000

35) காக்கா பின்வரும் தொகைகளை ஆறு மாதங்களுக்கு ஒதுக்கி வைக்க வேண்டும், இது ரூ 16,000 கடன் தொகையை முன்கூட்டியே திருப்பிச் செலுத்த உதவும்:

மாதம் ரூ 150, பெண்மணிகள், எரச், விஷ்ணு, பைதூல் ஆகியோருக்குச் சம்பளமாக வழங்கும் தொகை.

1950 ஆகஸ்ட் முதல் பெண்மணிகள் செலுத்தும் வாடகையாக மாதம் ரூ.100.

புதிய திட்டக் குழு வருவாயிலிருந்து எழுபத்தைந்து சதவீதம் நிகர லாபம்.

திட்டம் 'ஒன்று-சி' மற்றும் இரண்டாவது திட்டத்தின் கீழ் தோழர்கள் அனுப்பிய தொகையில் எழுபத்தைந்து சதவீதம்;

ஒதுக்கப்பட்ட வாடகை, இடமாற்றம், கூலிச் செலவிலிருந்து மற்றும் டானின் மரத்தளபாடங்கள் விற்பனையிலிருந்து சேமிக்கப்பட்டவை.

36) தற்காலிகமாக தடைசெய்யப்பட்ட 'பி'-குழுத் திட்டம் செயல்படும் வரை, இந்தப் புது வாழ்வு திட்டத்தின் குழுத் தோழர்கள், அசல் திட்டமான 'ஒன்று-பி'யின் நிலையான நிபந்தனைகளுக்கு இணங்க, அவர்களின் சுய நம்பிக்கையைச் சார்ந்திருப்பார்கள்; ஆனால் நான் வகுத்துள்ள நிலையான கட்டுப்பாடுகளைக் கடைபிடிக்க வேண்டாம் என ஏதேனும் ஒரு புதிய திட்ட குழுவின் தோழர் வேண்டுமென்றே, மீண்டும் மீண்டும் வலியுறுத்தினால், மேலும் கட்டுப்பாடுகளை நிறைவேற்றுவதில் இந்த அத்துமீறல் எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டால், அந்தத் தோழரைக் குழுவிலிருந்து வெளியேற உத்தரவிடுகிறேன், மேலும் அவர் புது மற்றும் பழைய வாழ்க்கை இரண்டிலிருந்தும் தன்னைத் துண்டித்துக் கொண்டவராகக் கருதப்படுவார்.

37) திருவாளர்கள் ஹர்ஜீவன் லால், கெய்ன், கிஷன் ஸிங், தோடி ஸிங் ஆகியோர் ஒரே ஒரு நிபந்தனையின் பேரில் அவர்களுக்கு உதவ, புதிய திட்டக் குழுவுடன் தொடர்பு கொள்ள நான் அனுமதித்துள்ளேன்: அவர்கள் திட்டம் 'ஒன்று-சி' அல்லது புது வாழ்வின் இரண்டாவது திட்டத்தின் கீழ் உள்ள தோழர்களுடன் தொடர்பு கொள்ளவோ, கடிதப் பரிமாற்றம் செய்யவோ அல்லது சந்திக்கவோ முடியாது.

38) ஹர்ஜீவன் லால், வாஸ் தேவ் கெய்ன், கிஷன் ஸிங், தோடி ஸிங் ஆகியோர், திட்டம் 'ஒன்று-சி' அல்லது புது வாழ்வின் இரண்டாவது திட்டத்தின் தோழர்களை சந்திக்காமல், தொடர்பு கொள்ளாமல் அவர்களுடன் கடிதப் பரிமாற்றம் செய்யாமல் இருந்தால் மட்டுமே புதிய திட்டக் குழுவின் தோழர்கள் அந்த நால்வரின் உதவியை ஏற்றுக்கொள்ள முடியும்.

39) திட்டம் 'ஒன்று-சி' மற்றும் இரண்டாவது திட்டத்தின் தோழர்கள் என்னுடன் தொடர்பு கொள்ள முடியாவிட்டாலும், அவர்கள் சேமித்த

தொகைகள் மற்றும் புது வாழ்வு சுற்றறிக்கைகளை மட்டும் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்:

மெஹர் பாபா,

கவனிப்பு - நலவாலா,

36 லிட்டன் சாலை,

டெஹ்ராடூன், உ.பி. (வேறுவிதமாக நான் அறிவுறுத்தாவிடில் மட்டுமே.)

40) **தேவைப்பட்டால், டான்கின், புதிய திட்டக் குழுவின் தோழர்கள் சார்பாக, டெஹ்ராடூனில் தங்கி மருத்துவராகப் பணியாற்றலாம்.**

இந்த விஷயங்களைத் தீர்மானித்தப் பிறகு, பாபா, புதிய திட்டத்தை உருவாக்க உதவுவதற்காக, டெல்லியில், கேக்கி தேசாய்க்குப் பின்வரும் தொலைத்தந்தியை அனுப்பினார்:

ரோஹ்தக் சாலையில் அமைந்த கட்டிடம் மே 1ஆம் நாள் நிச்சயமாக முடிவு செய்யப்படும் என்று ஹர்ஜீவன் லாலுக்கு தெரிவிக்கவும். எனவே, இடைத்தரகர் சர்தார்ஜியுடன் வேண்டிய ஏற்பாடு செய்யுங்கள். ஹர்ஜீவன், கெயின், தோடி ஸிங், கிஷன் ஸிங் ஆகியோரை ஞாயிற்றுக்கிழமை, 30ஆம் தேதி காலை இங்கு வருமாறும், அன்று மாலையே டெல்லிக்குத் திரும்புமாறும் தெரிவிக்கவும். அவர்களுக்குத் தகவலை வழங்கிய பின்னர், ஏழு நாட்களுக்காக நீங்கள் உடனடியாக இங்கு வாருங்கள்.

- பாபா

இனிமேல் ஒரு நாளைக்கு இரண்டு முறை ஏப்ரல் இறுதி வரை கூட்டம் நடைபெறும் என்று கூறி பாபா நடவடிக்கைகளை நிறைவு செய்தார்.

அன்று காலை **10.30** மணிக்கு, கூட்டம் நிறைவடைந்த அவ்வேளையில், மாஞ்ஜ்ரி மா:ஃபி சொத்துக்களை விற்குமாறு குமாருக்கு உத்தரவிடப்பட்டது, மேலும் ரத்லம் நகரில் அமைந்த ருஸ்தம் ஹன்ஸோட்டியாவின் இல்லத்தில் புது வாழ்வைத் தொடங்க அவருக்குச் செய்தி அனுப்பப்பட்டது.

கிஷன் ஸிங், ஹர்ஜீவன் லால், தோடி ஸிங், வாஸ் தேவ் கெயின் ஆகியோர் **1950** ஏப்ரல் **30** ஞாயிற்றுக்கிழமை நண்பகல் மாஞ்ஜ்ரி மா:ஃபியில் நடைபெற்ற, பாபா மற்றும் ஆண் தோழர்களுக்கும் இடையிலான சந்திப்பில் கலந்துகொள்ள அழைக்கப்பட்டனர்.

எலிஸபெத்திடமிருந்து ஒரு தொலைத்தந்தி வந்தது, அதற்கு பாபா, **"1950 ஜூலை மாதத்தில் நான் மேற்கத்திய நாடுகளுக்குச் செல்வதாக இல்லை, ஆனால் 1951 ஜூலை இறுதிக்குள் நிச்சயமாகச் செல்வேன்"** என்று தெரிவித்திருந்தார்.

எரச் டெல்லியிலிருந்து வந்தவர்களிடம் புதிய திட்டத்தைப் பற்றி விளக்கினார், அவர்கள் அனைவரும் தங்கள் முழு ஒத்துழைப்பையும் தயக்கமின்றி வழங்குவதாக உறுதியளித்தனர். உணவு, உடை, பணம் போன்றவற்றைத் தவிர இதர எல்லா உதவிகளையும் செய்ய வேண்டும் என்று பாபா வலியுறுத்தினார். **"புதிய திட்டத்தின் தோழர்களுக்காக உங்கள் சொந்த பணத்திலிருந்து ஒரு நயாபைசா கூட செலவிட வேண்டாம்"** என்று பாபா வலியுறுத்தினார்.

மாஞ்ஜ்ரி மா:ிபி சொத்தை விற்றதால் கிடைக்கப்பெற்ற ரூ **7,000** தொகையில் ஒரு பகுதியை ஜூலை இறுதிக்குள் கொடுப்பதாக, குமார் உறுதியளித்தார். ஆனால், பாபாவிற்குப் பணம் உடனடியாகத் தேவைப்பட்டதால், ஜூலை இறுதிக்குள் குமார் திருப்பிச் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில், பாபாவிற்கு கடன் வழங்க ஹர்ஜீவன் லால் ஒப்புக்கொண்டார். இந்தத் தொகையிலிருந்து புதிய திட்டத்தின் கீழ் ரூ **5,000** தோடி ஸிங்கிற்கு வணிகத்திற்கான முன்பணமாகச் செலுத்தப்பட்டது. டெல்லி ரோஹ்தக் (ROHTAK) சாலையில் அமைந்த கட்டிடத்திற்காக, ஹர்ஜீவன் லாலுக்கு ரூ.**4,340** வாடகைப்பணமும் வழங்கப்பட்டது.

கிஷன் ஸிங், ஹர்ஜீவன் லால், தோடி ஸிங், வாஸ் தேவ் கெய்ன் ஆகியோரை பாபா சிறிது நேரம் சந்தித்துக் கூறினார்: **"எப்படியோ அல்லது ஏதோவொரு வழியில், புதிய திட்டத்தின் கீழ் உள்ள குழுவிற்கு உதவும் வகையில், புது வாழ்வில் நீங்கள் எனது தொடர்பில் வந்துள்ளீர்கள். நான் உங்களை அழைக்கும் வரை டெல்லியில் என்னைப் பார்க்க முயற்சிக்காதீர்கள். புதிய திட்டத்தின் கீழ் உள்ள தோழர்களை நீங்கள் விரும்பும் போதெல்லாம் சுதந்திரமாக சந்திக்கலாம். இன்று முதல் நீங்கள் நால்வரும் புது வாழ்வுக்குள் அழைத்துச் செல்லப்படுகிறீர்கள்."** பாபாவுடனான சந்திப்பில் நான்கு நபர்களும் மிக்க மகிழ்ச்சியடைந்தனர்; அன்று மதியம், அவர்கள் டெல்லிக்குத் திரும்பிச் சென்றனர்.

1950 மே **1**ஆம் நாள் அதிகாலை இருளில், நான்கு மணியளவில் வழக்கம் போல தோழர்கள் எழுந்தனர். ஐந்து மணிக்கு, அவர்கள் வெள்ளை மேலங்கிகள் மற்றும் பச்சை நிற தலைப்பாகை அணிந்து, அன்றைய சுப நிகழ்ச்சிகளுக்குத் தயாராக இருந்தனர். பாபா, அவர்கள் தங்கும் அறைக்கு **6:30** மணிக்கு, தனது வெள்ளை நிற மேலங்கியை அணிந்த வண்ணம் வந்தார். முழு மௌனத்தின் மத்தியில் நீலுவும் காக்காவும் பச்சை தலைப்பாகையை பாபாவின் தலையில் சுற்றிக் கொண்டிருந்தனர்.

பொழுது விடிந்ததும், பாபா தோழர்களுடன் யாசிக்கப் புறப்பட்டார். இரண்டு மைல்கள் அமைதியாக நடந்து, அவர்கள் ரிஸ்பானா நதியின் (RISPANA RIVER) வறண்ட மணல் படுக்கைக்கு வந்தபோது, அங்கு கேக்கி மற்றும் ஃபிரீனி

நலவாலா, புர்ஜர், ஷெரூ சாச்சா, குமார் மற்றும் அவரது தாயார் மாதாஜி அனைவரும் பாபாவின் வருகையை எதிர்நோக்கிக் காத்திருந்தனர். ஃபிரீனி, ஷெரூ, மாதாஜி ஆகியோர் பாபாவிற்கு தானமாக உணவை வழங்கினர். அதற்குப் பிறகு, பாபா உடனடியாக மாஞ்ஜ்ரி மாஃபிக்குத் திரும்பிச் சென்றார். வழியில் மக்கள் அவருக்கு வணக்கம் செலுத்திய போது, பாபா அவ்வாறே வாழ்த்தி வணங்கினார்.

பாபாவின் மனநிலை மிகவும் மோசமாக இருந்தது, அன்று காலை அவர் ஒரு வார்த்தைக் கூட பேசவில்லை. அவர்கள் திரும்பி வந்ததும், **"திட்டம் மூன்றின் கீழ் நாம் யாசிக்கும் கடைசி நிகழ்வு இது. இன்று மாலை ஐந்து மணிக்கு நீங்கள் புதிய திட்டக் குழுவில் இணையுமாறு உத்தரவிடப்படும். அதைத் தொடர்ந்து திட்டம் மூன்று கலைக்கப்படும்"** என்று அவர்களிடம் தெரிவித்தார். பாபா, தானமாக வாங்கிவந்த உணவைத் தோழர்களுக்குப் பகிர்ந்தளித்தார்.

அன்று மாலை 5:00 மணிக்கு, மூன்றாவது திட்டத்தின் கீழ் இருந்த ஏழு தோழர்கள் - அலோபா, பைதூல், எரச், முரளி, டாக்டர் நீலு, பெண்டு, விஷ்ணு ஆகியோர் திட்டம் 'ஒன்று-பி'யின் கீழ் உள்ள (டான், காக்கா மற்றும் குஸ்தாஜி) மூன்று தோழர்களுடன் இணைந்தனர். இது இப்போது புதிய திட்டக் குழுவாக உருவெடுத்தது; பூனாவில் இருந்த சதாஷிவ் பாட்டீலும் இந்தக் குழுவில் இணைக்கப்பட்டார். 1951 மே 1 முதல் திட்டம் 'ஒன்று-சி'யில் இணையுமாறு மும்பையில் வாழ்ந்த மானேக் மேத்தாவிற்குத் தொலைத்தந்தி அனுப்பப்பட்டது; ஆனால் அவர் வரவில்லை.

1950 மே 10 அன்று, நெய் வியாபாரத்தைத் தொடங்க தோழர்கள் மாஞ்ஜ்ரி மாஃபியிலிருந்து டெல்லிக்குப் புறப்பட்டனர்.

இவ்வாறு, மாஞ்ஜ்ரி மாஃபியில் தங்கியிருந்த போது, உலகின் ஆர்வலர்கள் பின்பற்றுவதற்காக ஒரு புதிய திட்டம் நடைமுறைக்கு வந்தது. பல ஆண்டுகளுக்குப் பிறகு, குமாரின் முயற்சியால், மாஞ்ஜ்ரி மாஃபி கிராமத்தின் பெயர் அதிகாரப்பூர்வமாக 'மெஹர் மாஃபி' (MEHER MAFI) என மாற்றப்பட்டது, இது புது வாழ்வின் போது பாபா தங்கியிருந்ததை நிரந்தரமாக நினைவுகூரும் வகையில் அமைந்தது. வருங்கால தலைமுறைகளுக்கு, மெஹர் மாஃபி, இறை நாட்டமிக்கவர்களின் காதுகளையும் புது வாழ்வுத் திட்டங்களின் பாடலால் நிரப்புவதோடு, அதைக் கேட்டு அவர்கள் ஆன்மீகப் பாதையில் நுழைய தூண்டப்படுவார்கள், அதற்கு வழிவகுக்கும் ஆன்மீக வாழ்க்கையை அடையப் பெறுவார்கள்.

புது வாழ்வின் தொடக்கத்திலிருந்து பாபா வாழ்ந்த இதர இடங்களைப் பற்றி காலம் நினைத்து பார்த்தது: "பெல்காவ்ம், எப்போதும் புது வாழ்வின் பாடலைப் பாடும்; பெனாரஸ், யாத்ரீகர்கள் கடவுளை மட்டுமே சார்ந்து

யாசிக்கும் வாழ்வை ஊக்குவிக்கும்; சாரநாத், லங்கோட்டி அணிந்து வாழும் 'நிர்வாண' வாழ்வை வெளிப்படுத்தும்; சாரநாத்திலிருந்து ஜான்பூருக்கு பயணம் செய்பவர்களுக்கு நாடோடிகளின் வண்ணமயமான வாழ்க்கையை நினைவுபடுத்தும்; ஹரித்வார் மற்றும் ரிஷிகேஷில் வாழும் புனித மனிதர்களுக்கு என்றென்றும் தலைவணங்கும் நேர்மையான பக்தரின் பங்கை எடுத்துக்காட்டும்.

"இந்த இடங்களை நினைவுகூர்ந்து, புது வாழ்வின் மூன்று கட்டங்கள் மனிதகுலத்தை தங்கள் உலக வாழ்க்கையை விட்டுவிட்டு, கடவுளுக்கு முன்பாக உதவியற்ற மற்றும் நம்பிக்கையற்ற புது வாழ்வைத் தொடர எப்போதும் ஊக்கமளிக்கும்."

டெல்லி & சத்தாரா

(Delhi & Satara)

1950 மே **10**ஆம் தேதி டெல்லிக்கு வந்து, ஆண் தோழர்கள் கேக்கி தேசாய் இல்லத்தில் தங்கினர். பைதூல், விஷ்ணு மற்றும் நான்கு பெண்மணிகளுடன் பாபா மாஞ்ஜ்ரி மா:ீபியிலிருந்து டெஹ்ராடூனுக்குச் சென்றார். பாபா பெண்மணிகளுடன் **29** லிட்டன் சாலையில் (LYTTON ROAD) அமைந்த டானின் கைவிடப்பட்ட மருத்துவமனையில் தங்கினார், மேலும் கேக்கி இரண்டு ஆண் தோழர்களுடன் **19** லிட்டன் சாலையில் அமைந்த புர்ஜர் சாச்சாவின் இல்லத்தில் தங்கினார்.

டெல்லியில் மே **12**ஆம் நாள் தோழர்கள் நெய் வியாபாரத்தை தொடங்கினர். பொருத்தமாக, அந்த நிறுவனத்திற்கு 'நவ்ஜீவன் (புது வாழ்வு) நெய் நிறுவனம்' (NAVJEEVAN - NEW LIFE – GHEE COMPANY) என்று பெயரிடப்பட்டது. காக்கா மூத்தவர் என்பதால், அவர், பெரிய மரக்கைப்பிடியைச் சுழற்றி 'திறப்பு விழாவை' நிகழ்த்தினார். தோடி ஸிங் தேவையான பாத்திர பண்டங்களை அலிகாரிலிருந்த தனது தொழிற்சாலையிலிருந்து கொண்டு வந்திருந்தார். உடன் வந்தவர்கள், தோழர்கள் வெண்ணெயிலிருந்து தயார் செய்த நெய்யை விநியோகத்திற்கு ஏற்பாடு செய்தனர். தோழர்களுக்கு அலோபா உணவைத் தயார் செய்ய, டாக்டர் நீலு மசாலாவை அரைத்து அவருக்கு உதவிய வேளையில், பெரும்பாலான இதர ஆண் தோழர்கள் பணியில் பங்கெடுத்தனர். கைக்கோபாத், குஸ்தாஜி இருவரும் வயதானவர்கள் ஆகையால் பாபா அவர்களுக்கு விலக்களித்தார். கைக்கோபாத் ஒரு தனி அறையில் அமர்ந்து, டெஹ்ராடூனில் செய்ததைப் போல, தினமும் **100,000** முறை பாபாவின் பெயரை உச்சரித்தார். குஸ்தாஜி வீசி எறியப்பட்ட பொருட்களில் தனக்குப் பயனுள்ளது என்று கருதிய அனைத்தையும் எரிபொருளுக்காக சேகரித்தார்.

டெல்லியில் அதீத கோடைக்கால வெப்பம் நிலவியது. வெண்ணையை சுடவைத்து நெய்யாக மாற்ற தோழர்கள் அடுப்பின் அருகில் அமர வேண்டிய நிலையில், வெளிப்புற வெப்பத்துடன் அறை கிட்டத்தட்ட சகிக்க முடியாததாக இருந்தது. கடுமையான குளிர் காலத்தில் தோழர்கள் மாஞ்ஜ்ரி மா:ீபியில் தங்கியிருந்தனர். இப்போது, அங்கே வானிலை மிகவும் சாதகமாக இருந்தபோது, அவர்கள் டெல்லியில் சூடான அடுப்புகளுக்கு அருகில் அமர்ந்து, மே மாத அசௌகரியமான சூழ்நிலையில் வேலை செய்து வியர்த்துக் கொண்டிருந்தார்கள்! புது வாழ்வு அப்படித்தான் இருந்தது.

நெய் இந்தியாவில் மிகச்சிறந்த சமையல் எண்ணெயாகக் கருதப்படுவதால் அதிக அளவில் தேவை உள்ளது, எனவே, முதலில் ஒரு தலைசிறந்த பொருளாகத் தயார் செய்வது ஒரு சாத்தியமான வணிக

முயற்சியாகத் தோன்றியது. வெண்ணெயிலிருந்து நெய்யைத் தயார் செய்வது, பெரிய பாத்திரங்களைக் கழுவி சுத்தம் செய்வது, அடையாள குறிப்புத் தாள்களைத் தயாரிப்பது, இறுதியில் விற்பனை செய்வது போன்ற எல்லா வேலைகளையும் அவர்களே செய்ய வேண்டியிருந்தது. அத்தகைய அனைத்து முயற்சிகளும் இருந்தபோதிலும், வெற்றிக்கு பதிலாக, வணிகம் முற்றிலும் தோல்வியை சந்தித்தது. பிரச்சினை என்னவெனில், அவர்கள் தயாரித்த நெய் மிகவும் நன்றாக இருந்தது!

இது, அதி தூய்மையான தரத்தில் இருந்ததால், பஜாரில் மிகவும் விலை உயர்ந்ததாக இருந்தது. அவர்களால் விரும்பிய விலையைப் பெறமுடியாதது மட்டுமின்றி, அதைத் தயாரிக்க செலவு செய்த பணத்தைக் கூட திரும்பப் பெற முடியவில்லை. வியாபாரிகள் தூய்மையைப் பற்றி கவலைப்படவில்லை. குறைந்த விலையில் கலப்பட ரகங்களை விற்பனை செய்து வந்தனர். தோழர்கள் நேர்மையற்றவர்களாக இருக்க முடியாத காரணத்தால், அவர்கள் பணத்தை இழந்தனர். அப்படியிருந்தும், மே 16ஆம் தேதி முதல் தகரக்கலம் தயாரிக்கப்பட்டு, கடுமையான உழைப்பிற்கான நியாய விலையைப் பெறத் தவறிய பின்னர், அவர்கள் தங்கள் போட்டியாளர்களைப் போன்ற கீழ்தர நிலைக்குச் செல்லாமல் தரத்தைப் பாதுகாத்தனர்.

டெல்லியில் தோழர்கள் பிரச்சினைகளை சந்தித்ததுபோல, டெஹ்ராடூனில் பாபாவும் பலவற்றை எதிர்கொண்டார். அவரது கண்களிலிருந்து பீளை வெளியேறி, வலியில் வீக்கமடைந்தது, அதே நேரத்தில், அவர் கண்களில் ஏதோ கரகரப்பான உணர்வைத் தொடர்ந்து தந்துகொண்டிருந்தது. கோஹெர் பென்சிலின் (PENICILLIN) அல்லது சில்வர் நைட்ரேட் (SILVER NITRATE) களிம்பைப் பயன்படுத்தினார், ஆனால் பாபாவிற்கு அது ஒவ்வாத நிலையில், கண்கள் மேலும் மோசமாகிவிட்டன. அவருக்கு சிகிச்சை அளிக்க கோஹெர் தன்னால் இயன்ற அனைத்தையும் செய்தார், பாபாவிற்கு சிறிது நிவாரணம் கிடைத்தது. டெஹ்ராடூனிலிருந்து பல்தேவ் ஸிங் ரத்கே (BALDEV SINGH RATHKE) என்ற கண் மருத்துவர் அழைக்கப்பட்டார். டாக்டர் ரத்கேயின் சிகிச்சையில் பாபா விரைவில் குணமடைந்தார். இருப்பினும், நிவாரணம் தற்காலிகமானதாகவே இருந்தது.

பாபா, டெஹ்ராடூனில் தங்கியிருந்த காலத்தில், நலவாலா குடும்பத்திற்கு அவரது சகவாசத்தை அனுபவிக்கும் அதிக வாய்ப்பு கிட்டியது. பக்கத்து வீட்டில் வாழ்ந்துவந்த அவர்கள், தினமும் பாபாவைத் தவறாமல் பார்க்கும் பாக்கியத்தைப் பெற்றனர். பாபா சில நேரங்களில் அவர்களின் வீட்டிற்குச் சென்று, தனிப்பட்ட மற்றும் வீட்டு விவகாரங்களைப் பற்றி அவர்களுக்கு அறிவுரை வழங்கி வந்தார்; இவ்வாறு, முழுக் குடும்பமும் அவருடைய அரவணைப்பில் அர்ப்பணிப்புடன் வாழ்ந்தது. பாபா ஒருமுறை கேக்கி நலவாலாவிடம் இரண்டு மண் அடுப்புகளைத் தயார் செய்யும்படி

கூறினார். கேக்கிக்கு இது ஏதோ புதிய அனுபவமாக இருந்தாலும், அவர் அவற்றை உருவாக்கிய முயற்சியில் பாபா மிக்க மகிழ்ச்சியடைந்தார்.

மற்றொரு சந்தர்ப்பத்தில், கேக்கி, ஃபிரீனி இருவரும் தங்கள் மகள் மஹ்ரோக்கை வீட்டில் தனியாக விட்டுவிட்டு பஜாருக்குச் சென்றனர். சிறிது நேரத்தில் சிறுமி அழுவதைக் கேட்டு, பாபா, மஹ்ரோக்கை தன்னிடம் அழைத்து வர கோஹெரை அனுப்பினார். கேக்கியும் ஃபிரீனியும் திரும்பி வந்ததும், பாபா அவர்களை அழைத்து, பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைப் பற்றி விளக்கினார். அவரது ஆன்மீக உச்சத்திலிருந்து, மெஹர் பாபா அவர்களுடன் ஒன்றாகி, அவர்களின் அன்றாட நடைமுறை விஷயங்களில் ஆர்வம் காட்டி, அனைவரையும் தன் வசம் ஈர்த்ததால் அவர்களின் இதயங்கள் அவருடைய அன்பை இன்னும் ஆழமாக ஏற்றுக்கொண்டது.

புர்ஜர் சாச்சா மற்றும் ஷத்ருகன் குமாரின் குடும்பங்களுக்கும் இதே நிலைதான். எல்சா மிஸ்திரியும் இவ்வண்ணம் டெஹ்ராடூனில் பாபாவின் அரவணைப்பில் வந்தார். எல்சாவின் நகைச்சுவைகள், சமயோசித புத்தி, வேடிக்கையான உரையாடல் ஆகியவற்றை பாபா மிகவும் ரசித்தார், மேலும் அவர் பாபாவின் அரசவையில், நகைச்சுவை வித்தகரான டாக்கேஃபாலகரைப் போல் இருந்து வந்தார்.

1950 மே **22** அன்று, முதல் டின் கலன் நெய் தயாரிக்கப்பட்ட ஒரு வாரத்திற்குப் பிறகு, விரும்பி வாங்குபவர்கள் எவருமில்லை என்பதைக் கண்டறிந்து, பாபா, கேக்கி தேசாயை டெஹ்ராடூனுக்கு அழைத்தார்.

மறுநாள் காலை, கேக்கி தேசாய், பைதூலுடன் உண்மை நிலவரத்தைக் கண்டறிய டெல்லி சென்றார். அன்று மதியம் டெல்லி வந்து, கேக்கி தேசாய் இல்லத்தில் பாபா, தோழர்களை சந்தித்த போது, அவர்கள் தங்கள் தொழிலில் ஏற்பட்ட சிக்கல்களை அவரிடம் தெரிவித்தனர். நெய் வர்த்தகத்திற்கான திட்டம் ஒரு நல்ல யோசனையல்ல என்பது தெளிவாகத் தெரிந்தது.

மாலையில் வாஸ் தேவ் கெய்னின் இல்லத்தில் பாபா ஒய்வெடுத்தார், ஆனால் திருமதி கெய்ன் உட்பட குடும்பத்தில் எவரும் அவரைப் பார்க்க அனுமதிக்கப்படவில்லை. மூச்சைத் திணறடிக்கும் அளவிற்கு வெப்பம் அதிகமாக இருந்தாலும், வழக்கம் போல பாபா தனது அறையில் ஜன்னல்கள், திரைச்சீலைகள் அனைத்தையும் மூடிவைத்ததோடு, மின்விசிறியையும் இயக்க விரும்பவில்லை.

அடுத்த நாள், பாபா, தேசாய் இல்லத்திற்குத் திரும்பி வந்து, கிஷன் ஸிங், ஹர்ஜீவன் லால், தோடி ஸிங் மற்றும் தோழர்களை சந்தித்தார். டெல்லியில் ரோஹ்தக் சாலையில் (ROHTAK ROAD) பாபாவும் பெண்மணிகளும் தங்குவதற்காக இருந்த கட்டிடம் தயாராகாததால், பாபா வேறு எங்கேனும் இடம் மாற்ற

விருப்பம் தெரிவித்தார். தற்காலிகமாகத் தடைசெய்யப்பட்ட 'பி-குழு'வின் தோழர்கள் எப்போதும் அவருடன் இருக்க வேண்டும் என்பதால், அவர்கள் இயற்கையாகவே நெய் வியாபாரத்தை மூட வேண்டியிருக்கும். பாபா அவர்களிடம், **"அசல் திட்டம் 'ஒன்று-பி' குழுவின் தோழர்களாக, நீங்கள் 'உடல் உழைப்பு' கட்டத்திற்கு உட்பட வேண்டும்"** என்று கூறினார். எனவே அவர் இந்தக் கட்டத்தை செயல்படுத்த இரண்டு முறைகளை முன்மொழிந்தார், அதில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கும்படி தோழர்களை வழிநடத்தினார்:

<u>முறை ஒன்று:</u>

புது வாழ்வு முழுவதும் பாபாவுடன் இருந்த மற்றும் இருக்கும் நான்கு பெண்மணிகள் (மெஹரா, மணி, மெஹரு, கோஹெர்) மூலம் பாபாவிற்கு வாழ்நாள் முழுவதும் தோழர்கள் சேவை செய்ய வேண்டும், மேலும் ஒரு சேவகர் தனது எஜமானர் அல்லது முதலாளிக்குக் கீழ்ப்படிவது போல, பாபாவிற்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். பாபா எந்த வகையான கட்டளைகளையும் வழங்க முடியும், வழங்குவார், மேலும் இந்த முன்மொழிவை ஏற்றுக்கொள்பவர்கள் அனைவரும் பாபாவின் வாழ்நாள் சேவர்களாக இருப்பார்கள், எனவே அவர்கள் எஜமானராக அல்லது முதலாளியாக அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

ஓர் எஜமானர் சில சமயங்களில் தனது சேவகர்களின் குறைகளை மன்னிக்கக்கூடும் என்பதால், பாபாவின் கூற்றுப்படி, தனது உறுதிமொழியை சமரசம் செய்யாமல், வாழ்நாள் முழுவதும் அவருக்கு சேவை செய்யும் இந்த முறையை ஏற்றுக்கொள்பவர்களின் குறைபாடுகளை (குற்றங்களை) பாபா மன்னிக்கக்கூடும்.

பாபா, எஜமானராக அல்லது முதலாளியாக, எல்லா வகையான கட்டளைகளையும் (அவரது வாழ்நாள் ஊழியர்களாக இருக்கும் தோழர்களுக்கு) வழங்க முடியும். அவர் தோழர்களை விவசாய தொழில் செய்ய, தம்மால் இயன்ற வேலை செய்ய, கூலி வேலை செய்ய - சுருக்கமாக, எதைச் செய்யவும் உத்தரவிடலாம். சேவக தோழர்கள் பாபாவிடமிருந்து எதையும் எதிர்பார்க்கக் கூடாது; எந்த வெகுமதியும் இருக்காது, வெகுமதியின் நம்பிக்கையும் கூடாது. என்ன நடந்தாலும், உடல் உழைப்பு கட்டத்தை மேற்கொள்ளும் இந்த முறையை ஏற்றுக்கொள்ளும் ஒவ்வொரு தோழரும், அவர்கள் என்ன செய்தாலும், விளைவுகளுக்கு, தனிப்பட்ட முறையில் பொறுப்பாளராக இருப்பார்கள்.

நான்கு பெண்மணிகளின் பணத்தின் மூலம் இதர தோழர்கள் பாபாவிடமிருந்து உணவைப் பெறலாம், மேலும் இந்த உணவு போதுமானதாக இருக்கலாம் அல்லது இல்லாமலும் இருக்கலாம், அது தொடர்ந்து அல்லது ஒழுங்கற்ற முறையிலும் வழங்கப்படலாம்.

உடல் உழைப்பு கட்டத்தை மேற்கொள்வதற்கான இந்த முறை, உணவு பற்றாக்குறை, குறைவான தூக்கம் மற்றும் அனைத்து வகையான பணிகள் போன்ற பல இடர்பாடுகளை உருவாக்கும். இருப்பினும், அதே நேரத்தில், குறைந்த அளவிலான அல்லது முற்றிலும் வேலை இல்லாத சூழ்நிலைகளும் தானாகவே எழலாம், அல்லது தாராளமான உணவு மற்றும் ஓய்வுடன் கூட இருக்கலாம். சுருக்கமாகச் சொன்னால், தோழர்கள், நான்கு பெண்மணிகள் மூலமாக, பாபாவிற்கு சேவை செய்வார்கள், மேலும் இந்த நான்கு பெண்மணிகளின் வசம் இருக்கும் நிதியைப் பயன்படுத்தி பாபா அவர்களுக்கு உணவளிக்க ஏற்பாடு செய்யலாம்.

பாபாவின் வாழ்நாள் முழுவதும் சேவகர்களாக உடல் உழைப்பு கட்டத்தை மேற்கொள்ள முடிவு செய்யும் தோழர்கள், எல்லாவிதமான சிரமங்களையும் தாங்கிக்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும். சேவகர்கள் தங்கள் எஜமானருக்குக் கீழ்ப்படிவது போல், அவர்கள் பாபாவிற்குக் கீழ்ப்படிவது மட்டுமல்லாமல், திட்டம் 'ஒன்று-பி'யின் நிலையான நிபந்தனைகளையும் கடைப்பிடிக்க வேண்டும்.

பாபா எந்த நேரத்திலும் எந்த சேவக தோழரின் பணி மற்றும் நடத்தையில் அதிருப்தி அடைந்தால், அவரைப் பணிநீக்கம் செய்யலாம். பணிநீக்கம் செய்யப்பட்ட எந்த சேவக தோழரும், இன்னும் புது வாழ்விலும் திட்டம் 'ஒன்று-பி'யிலும் இருப்பார், ஆனால் அவர் விடுதலையாகி விடுவார், விரும்பியதைச் செய்ய சுதந்திரமாக இருப்பார், மேலும் அவர் விரும்பிய இடத்திற்குச் செல்வார், இருப்பினும் அவர் எப்போதும் திட்டம் 'ஒன்று-பி'யின் நிலையான நிபந்தனைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். பின்னர் அவர் தனது சொந்த வாழ்வாதாரத்திற்காக சம்பாதிக்க வேண்டும், மேலும் பாபா அவருக்கு பணம் கொடுத்து, புதிதாக எதையும் தொடங்குவதற்கு உதவ மாட்டார்.

<u>முறை இரண்டு:</u>

உடல் உழைப்பு கட்டத்தை மேற்கொள்வதற்கான மாற்று முறையானது, அதன் நிலையான நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு, திட்டம் 'ஒன்று-பி'யில் தனித்தனியாகவும் சுதந்திரமாகவும் இருப்பதாகும். இந்தத் திட்டத்தைத் தேர்ந்தெடுக்கும் எந்தவொரு தோழருக்கும், பாபா ஒரு குறிப்பிட்ட தொகையை தொடக்கத்தில் வழங்குவார்; இதனால் அவர் தனது சுதந்திரமான உடல் உழைப்பு கட்டத்தை சிறந்த முறையில் செயல்படுத்த முடியும்.

பாபாவால் தற்காலிகமாக தடைசெய்யப்பட்ட பத்து தோழர்களும், குழுத் திட்டத்தின் முதல் முறையை ஒருமனதாக ஏற்றுக்கொண்டதோடு, பாபாவின் வாழ்நாள் முழுவதும் உடல் உழைப்பு கட்டத்தைக் கடைப்பிடிக்கவும்

ஒப்புக்கொண்டனர். புது வாழ்வில் இருந்த கைக்கோபாத், இதற்கு முன் எந்தத் திட்டத்திலும் சேர்க்கப்படாததைத் தொடர்ந்து, வாழ்நாள் முழுவதும் சேவகராக இருக்க ஒப்புக்கொண்டார்.

எனவே, இந்த ஒருமித்த முடிவின் விளைவாக, நெய் வியாபாரத்தில் பத்து நாட்களுக்குப் பிறகு, தோழர்கள் உடனடியாக தங்கள் தொழிற்சாலையை மூடிவிட்டனர். ரூ 16,000 கடனை பாபாவிடம் திருப்பித் தர வேண்டும். தங்களிடம் இருந்த ரூ 14,570 ரொக்கப் பணத்துடன் 1,430 ரூபாய் பற்றாக்குறையை நான்கு பெண்மணிகளும் ஈடுசெய்து, பாபாவிடம் ஒப்படைத்து அனைத்தும் சரிசெய்யப்பட்டது.

தோழர்களுடனான இந்த சந்திப்புக்குப் பிறகு, பாபா, மஸ்துகளைத் தேடிச் செல்ல விருப்பம் தெரிவித்தார். எரச், ஹர்ஜீவன், தோடி ஸிங், கெய்ன், கிஷன் ஸிங் ஆகியோருடன் அவர் ஓக்லா (OKHLA) நகருக்குப் புறப்பட்டார். கிஷன் கடுமையான ஜுரத்தால் அவதிப்பட்டாலும், சிரமத்தைப் பொருட்படுத்தாமல், பாபாவுடன் செல்ல முயற்சி செய்தார்.

ஓக்லாவை அடைந்ததும், பாபா ஒரு நதிக்கரை ஓரத்தில் அமர்ந்து, குழுவிடம் நகைச்சுவை மற்றும் வேடிக்கையான கதைகளைச் சொல்லும்படி கேட்டுக்கொண்டார். அங்கிருந்த சில மீனவர்களைப் பார்த்து, பாபா, "**இயேசுவின் ஆரம்பகால சீடர்கள் அனைவரும் மீனவர்கள்; பின்னர் அவர், அவர்களைத் தனது வலையில் சிக்க வைத்தார்**!" என்றார்.

கிஷன் ஸிங் உடனே வேடிக்கையாகக் கூறினார், "ஆனால் இங்கே, நமக்கு குருநாதராக இருக்கும் அவர் நம்மைத் தனது வலையில் சிக்க வைக்காமல், வெளியே தூக்கி எறிகிறார்!" (புது வாழ்வின் போது பாபாவைப் பின்பற்றுபவர்களுக்கு அவரது தொடர்பு மறுக்கப்படுகிறது என்று அர்த்தம்).

அதற்கு பாபா, "**ஆனால் நான் இயேசு அல்ல**" என்று எளிமையாக பதிலளித்தார்.

டெல்லிக்குத் திரும்பிவந்த பாபா, மே 24 இரவு, 45 பண்டாரா சாலையில் (PANDARA ROAD) அமைந்த கிஷன் ஸிங்கின் இல்லத்தில் தங்கினார். அடுத்த நாள் பாபா, கேக்கி தேசாய் வீட்டிற்குச் சென்று, அன்று இரவு கெய்னின் குடியிருப்பில் ஓய்வெடுத்தார். பாபா மீண்டும் கெய்னின் குடும்பத்தினர் எவரையும் சந்திக்கப் போவதில்லை என்று கூறினார் (கெய்னின் மனைவியின் குடும்பத்தினர் அனைவரும் அவரது வீட்டில் வாழ்ந்து வந்தனர்). ஆனால் கெய்னின் பாட்டி பிரபா பிடிவாதமாக இருந்தபோது, பாபா மனம் இரங்கி, அடுத்த நாள் காலையில் அவர்களை தரிசனம் செய்ய அனுமதித்தார்.

அன்று காலை, 1950 மே 26, வெள்ளிக்கிழமை, டெஹ்ராடூனுக்குப் புறப்படுவதற்கு முன்பு, கெய்ன் குடும்பத்தினர் பாபாவை இந்திய குடியரசுத் தலைவரின் இல்லத்திற்கு எதிரே அமைந்த 'தால்கட்டோரா கார்டன்ஸ்' (TALKATORA

GARDENS) என்ற பூங்காவிற்குச் செல்லுமாறு பரிந்துரைத்தனர். பாபா ஒப்புக்கொண்டு எரச், வாஸ் தேவ், பிரபா கெய்ன் ஆகியோருடன் புறப்பட்டுச் சென்றார். செல்லும் வழியில், 'அந்த ஆண்டின் அந்த நேரத்தில், கோடையின் உச்சத்தில், பூங்காவில் பார்ப்பதற்கென பெரிய அளவில் எதுவும் இருக்காது' என்று கெய்ன் திடீரென நினைவு கூர்ந்தார். ஆனால், அவர்கள் பூங்காவிற்குள் நுழைந்தபோது, அவர் இதுவரை பார்த்திராத, வெளிர் ஊதா நிறப் பூக்களுடன் பூத்திருக்கும் மரங்களைக் கண்டு அதிர்ச்சியடைந்தார். பாபா அந்த இடத்தைச் சுற்றி சிறிது நேரம் (சிறிய பள்ளத்தில் குதிக்கவும் செய்தார்) பசுமையை ரசித்தபடி மிக விரைவான வேகத்தில் நடந்தார்.

கேக்கி தேசாய், பைதூல், காக்கா ஆகியோருடன் ஹர்ஜீவன் லாலின் காரில் பாபா டெஹ்ராடூனுக்குப் புறப்பட்டார். வழியில் மீரட் நகரில் சில மணி நேரம் தங்கினர். பாபா நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் பணிபுரிந்த, அந்த நகரத்தின் பொறுப்பாளராக இருந்த, ஐந்தாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்ட 'மெஹர்பான் பாபா'வைத் (MEHERBAN BABA) தொடர்பு கொள்ள ஆர்வமாக இருந்தார். சில நேரங்களில் நிகழ்வது போல், இந்த சந்தர்ப்பத்திலும் மஸ்த், பாபாவின் பார்வையில் சிக்காமல், பாபாவுடன் கண்ணாமூச்சி விளையாடினார். மிகுந்த வருந்தத்தில், பாபா கடைசியில் அவரைத் துரத்துவதைக் கைவிட்டு, தொடர்பு கொள்ளாமலே திரும்பிச் சென்றார்.

அனைவரும் முஸாஃபர்நகர் அரசாங்க விடுதியில் (MUZAFFARNAGAR DAK BANGALOW) அன்று இரவைக் கழித்தனர், மேலும் வழியில், பல மஸ்துகளைத் தொடர்புகொண்டு அடுத்த நாள் மாலை டெஹ்ராடூனை வந்தடைந்தனர்.

அதே நாளில், மே **27** அன்று, எரச், தெற்கே மஹாராஷ்டிரா மாநிலத்தில் வாடகைக்கு பங்களாக்களைப் பார்க்க அனுப்பப்பட்டார். மஹாபலேஷ்வருக்குச் செல்வது பாபாவின் முதல் விருப்பமாக இருந்தது, அதைத் தொடர்ந்து சத்தாரா, ஔரங்காபாத் அல்லது ஹைதராபாத். ஜால் கேரவாலா (ஏற்பாடு குழுவில் ஒருவர்) நாக்பூரைத் தவிர புல்தானா (BULDHANA) அல்லது பொருத்தமானதாக அவர் கருதும் வேறு இடத்தில் பங்களாக்களைத் தேடுமாறும் அறிவுறுத்தப்பட்டார்.

நெய் நிறுவனம் இப்போது வணிகத்திற்காக அதன் கதவுகள் மூடப்பட்டாலும், நவ்ஜீவன் தோழர்-தொழிலாளர்களின் குழு, டெல்லியில், தங்குவதற்கு வேறு இடம் இல்லாததால் அதே கட்டிடத்தில் தொடர்ந்து வாழ்ந்து வந்தது. எரச் சில நாட்களுக்குப் பிறகு டெஹ்ராடூனுக்குத் திரும்பி வந்தார்; மேலும், பாபாவிற்கும் பெண்மணிகளுக்கும் சத்தாராவில் அமைந்த 'முத்தா பங்களா'வும் (MUTHA'S BANGALOW), ஆண் தோழர்களுக்காக 'கல்யாணி பாராக்ஸ்' (KALYANI BARRACKS) கட்டிடமும் வாடகைக்கு எடுக்கப்பட்டதாக, பாபாவிற்குத்

தெரிவித்தார். டெல்லியிலும் டெஹ்ராடூனிலும் உடனடியாக, சத்தாராவிற்குச் செல்லும் ஏற்பாடுகள் தொடங்கின.

டெல்லியிலிருந்து திரும்பிவந்த பின்பு, பாபா மீண்டும் உடல்நலமின்றி இருந்தார், கடுமையான சளியும் தொண்டை தொற்றும் அவரது தொடர்ச்சியான கண் வலியால் மேலும் சிக்கல்களை ஏற்படுத்தியது.

1950 ஜூன் 3 அன்று டான், நீலு இருவரும் பாபாவிற்குச் சிகிச்சை அளிக்க ஐந்து நாட்களுக்காக டெல்லியிலிருந்து டெஹ்ராடூனுக்கு அழைக்கப்பட்டனர்.

1950 ஜூன் 14 அன்று, மாஞ்ஜ்ரி மா:பியில் குறிப்பிடத்தக்க பணியை நிறைவு செய்த பாபா, நான்கு பெண்மணிகள் மற்றும் எரச், பைதூல், விஷ்ணு, குஸ்தாஜி ஆகியோருடன் டெஹ்ராடூனிலிருந்து கல்யாணுக்குப் புறப்பட்டார். ரயில் நிலையத்தில், எல்சா, நலவாலா, புர்ஜர் மற்றும் குமார் குடும்பத்தினர் அவர்களிடம் பிரியாவிடை பெறுவதற்காக வந்திருந்தனர். குமார் தனது வாழ்நாளில் எவருடைய பிரிவையும் நினைத்து அழுததில்லை, ஆனால் இப்போது அவர் கண்களில் நீர் ததும்ப அழுதார். பாபாவும், தோழர்களும் ரயிலில் ஏறி அங்கிருந்த அனைவரையும் கண்களில் நீர் வழிய விட்டுச்சென்றனர். அத்தகைய கண்ணீருடன் எவரும் எளிதில் அழுவதில்லை; அவை பல ஆண்டுகளாக மேற்கொண்ட தவங்கள் மற்றும் பிராயச்சித்தத்தின் விளைவாகும். மனதில் ஆழமாக வேரூன்றிய மனப்பதிவுகளைத் துடைத்தழிக்கும் ஒரு சுத்திகரிப்பு சக்தியாக அவை செயல்படுகின்றன.

16ஆம் நாள் கல்யாணுக்கு வந்த பாபா, பொது பேருந்தில் சத்தாராவிற்குப் புறப்பட்டுச் சென்றார்; இரண்டு நாட்களுக்குப் பிறகு டெல்லியிலிருந்து தோழர்கள் அனைவரும் வந்தனர். ஏற்கனவே கூறியது போல, பாபாவும் பெண்மணிகளும் முத்தாவின் பங்களாவையும், ஆண் தோழர்கள் கல்யாணி பாராக்ஸையும் ஆக்கிரமித்தனர். தோழர்கள் தங்கள் பெட்டி படுக்கைகளை அவிழ்ப்பதற்கு முன்னரே, ஒரு குழப்பம் ஏற்பட்டது. குடியிருப்பின் அக்கம் பக்கம் உள்ளவர்கள் அவர்களை அயலவர்கள், விசித்திரமான தோற்றம் கொண்ட குழுவினர் என்று நினைத்ததால், அவர்களைப் பற்றிய தங்கள் சந்தேக கருத்துகளைத் தெரிவித்தனர். இது போன்ற 'இராணுவ வகை வீரர்கள்' தங்கள் குடும்பங்கள் வாழும் இடத்திற்கு அருகில் வேண்டாம் என்று நில உரிமையாளரிடம் புகார் செய்தனர். உரிமையாளர் முறையாக ஆண் தோழர்களுக்குத் தெரிவிக்க, எரச் உரிமையாளரிடம் எல்லாவற்றையும் விளக்கிய வேளையில், அவர் அதை ஏற்றுக்கொண்டார். ஆனால், தங்களுக்குள் பேசிக்கொண்ட பிறகு, நீண்ட பயணத்தால் சோர்வாக இருந்தாலும், வேறு இடத்திற்குச் செல்வது நல்லது என்று தோழர்கள் கருதினர். பாபாவின் அனுமதியைப் பெற்று, நான்கு மணிநேரத்தில் வேறொரு குடியிருப்பைத் தேடிக் கண்டுபிடித்து, கன்டோன்மென்ட் வளாகத்தில், எரச், 76 'புர்கே பங்களா'வை (76,

BHURKE'S BANGALOW IN THE CONTONMENT) நள்ளிரவு 2:00 மணியளவில் வாடகைக்கு எடுக்க முடிந்தது. பின்னர் ஆண் தோழர்கள் அன்றிரவே அங்குச் சென்றனர்.

உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டிருந்த அலோபா, அவரை, திட்டம் 'ஒன்று-பி'யிலிருந்து தனிமனித சுதந்திர வாழ்க்கைக்கு மாற்றுவது குறித்து பாபாவிடம் வேண்டியபோது, பாபா அதற்கு இணக்கம் தெரிவித்தார்; ஒரு நாள் கழித்து, அலோபா சத்தாராவிலிருந்து மும்பைக்குப் புறப்பட்டுச் சென்றார்.

பாபா இல்லாத நேரத்தில், நரிமன் மெஹராஸாத்தில் மாதோ (MADHO) என்ற இளைஞனைக் காவலாளியாக நியமித்திருந்தார். மெஹரு தமானியா (எரச்சின் சகோதரி), குஷ்ரு குவார்ட்டர்ஸிலிருந்து ஒவ்வொரு வாரமும், மெஹராஸாத் மனை சுத்தமாக இருப்பதை மேற்பார்வையிடச் செல்வதை வழக்கமாகக் கொண்டார். 1950 ஜூன் 23 அன்று, பாபாவிடமிருந்து (எரச் எடுத்து வந்த) இந்தச் செய்தி ஆதி சீனியருக்கு வழங்கப்பட்டது, அதை அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட சில நபர்களுக்கு சுற்றறிக்கையாக வெளியிட இருந்தார்:

1949 அக்டோபர் 16 முதல், இந்த நேரம் வரை, புது வாழ்வு நிகழ்வுகளில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டன; ஆனால் புது வாழ்வு என்னாலும் எனது தோழர்களாலும் நான் விரும்பியபடி வழிநடத்தப்படவில்லை, இருப்பினும் நிபந்தனைகள் 100 சதவீதம் பின்பற்ற முயற்சிக்கப்பட்டன.

இப்போது, நான் விரும்பியபடி புது வாழ்வை முற்றிலும், சுதந்திரமாகவும், திருப்திகரமாகவும் தொடங்கும் நிலை வந்துவிட்டது; என்னுடன் வாழ்நாள் முழுவதும் சேவக தோழர்களாக வாழவிரும்புபவர்கள், எனது பார்வையில் இருக்கும் சித்திரத்திற்கு ஏற்ப, புது வாழ்வை அனுபவிக்கவும், துன்பப்படவும் செய்வார்கள். இது என்னுடைய உள்ளார்ந்த உணர்வு. நான் எதையும் உறுதியளிக்காமல், உறுதியளிக்க முடியாமல் இருந்தாலும், மேலே குறிப்பிட்டுள்ளபடி, எல்லாவற்றையும் பற்றி நான் (கவலையாக) உணர்கிறேன்.

வாழ்நாள் முழுவதும் சேவை புரியும் தோழர்களைப் பொறுத்தவரை, என்னுடன் இருக்க வேண்டுமாயின், அவர்கள் 100 சதவிகிதம், கண்மூடித்தனமாக, எந்த மறு பேச்சிற்கும் இடமில்லாமல் எனக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

1950 ஜூலை 16ஆம் தேதி வரை, நான் எல்லா நிபந்தனைகளிலிருந்தும் விடுபட்டிருப்பேன். சிறிது காலம் கழித்து நான் பழைய வாழ்க்கைக்குத் திரும்புவேன் என்று நினைப்பது ஒருவரின் வீண் எண்ணமாக இருக்கும். எதுவும் என்னை எனது பழைய வாழ்க்கைக்கு அழைத்துச் செல்ல முடியாது என்று நான் முடிவு செய்து உறுதியாக இருக்கிறேன். நான், இறுதி வரை, எனது புது வாழ்வை முன்னெடுத்துச் செல்வேன், நான் எனது பழைய வாழ்க்கைக்குத் திரும்புவேன் என்று ஏதேனும் கருத்துணர்வு உள்ளவர்கள்,

அதை முற்றிலும் நிராகரிக்க வேண்டும்.

மூன்று வாரங்களுக்குப் பிறகு, ஜூலை 14 அன்று, பாபா மேலும் ஓர் அறிக்கையை வெளியிட்டார், "... **ஜூலை 15க்கு பதிலாக, 1950 ஜூலை 25 வரை நான் சுதந்திரமாக இருப்பேன், அந்தத் தேதியில் நான் எனது புது வாழ்வின் மூன்று கட்டங்களைத் தொடங்குவதோடு மஸ்த், மனநிலை பாதிக்கப்பட்டவர் மற்றும் ஏழைகளுடன் எனது பணியைத் தொடருவேன்.**"

1949ஆம் ஆண்டு, பாபா சில அறிவுறுத்தல்களுடன் டாக்டர் தெளலத் ஸிங்கை பெல்காவ்மிலிருந்து பெங்களூருக்கு அனுப்பினார். அதன்படி, ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு, யாசித்து கிடைக்கும் உணவை மட்டுமே உண்டு அவர் வாழ வேண்டும். தெளலத் ஸிங் ஒரு கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்தவர், அவரைப் போன்ற ஒரு படித்த மருத்துவர், யாசித்து வாழ்கிறார் என்ற எண்ணத்தால் அவரது உறவினர்கள் கலக்கமடைந்தனர். சமூகம் அவரை கேலி செய்தது மற்றும் அவரது விசித்திரமான நடத்தையை ஏற்க மறுத்தது. ஆனால், தெளலத் ஸிங் தன்னிகரில்லா கீழ்ப்படிதலுடன், தனது வார்த்தையைக் காப்பாற்றுவதற்காக உயிரைக் கொடுக்கக்கூடிய மனிதராக இருந்தார். இறுதியாக, மிகவும் சகித்துக்கொள்ள முடியாத சூழ்நிலைகளால் அவர் தனது வீட்டை விட்டு வெளியேறி பல்வேறு இடங்களில் அலைந்து திரிந்து உணவுக்காக யாசித்தார். தனக்கே தெரியாமல், பிச்சைக்காரனாகத் திரிந்த தெளலத் ஸிங், கடைசியாக ஒரே உண்மையான வள்ளலின் வீட்டு வாசலை வந்தடைந்தார்.

பாபா தனது தலைமையகத்தை வட இந்தியாவிலிருந்து சத்தாராவிற்கு மாற்றியது அவருக்குத் தெரியாது, ஆனால் ஒரு நாள் அவர் அந்தப் பகுதியில் அலைந்து திரிந்து, பாபாவின் பங்களாவிற்கு அருகில் யாசிக்கச் சென்றார். எரச் வெளியே கண்காணித்துக் கொண்டிருந்த வேளையில், திடீரென, பாபா, அவரைச் சுட்டிக்காட்டி, கல்வெட்டில் அமர்ந்திருக்கும் நபர் யார் என்பதைக் கண்டறியுமாறு கேட்டுக்கொண்டார். எரச், பிச்சைக்கார தோற்றத்தில் இருந்த அந்த நபரை நெருங்கியதும் அவரால் தனது கண்களை நம்ப முடியவில்லை. தெளலத் ஸிங்கும் எரச்சைக் கண்டு வியந்தார்.

"பாபா இங்கே இருக்கிறாரா?" என்று உற்சாகமாகக் கேட்டார். "நான் யாசிக்க பாபாவின் வீட்டு வாசலுக்கு வரலாமா?" என்று விசாரித்தார்.

எரச் உடனடியாக, பாபாவிற்குத் தெரிவிக்கச் சென்றார். தெளலத் ஸிங்கை அழைத்து, பாபா அவருடைய சோகக் கதையைக் கேட்டு, அவருடைய பிச்சை பாத்திரத்தில் தனது கைகளால் உணவு வழங்கி, அவரது தைரியத்தைப் பாராட்டினார்: "**உங்கள் கீழ்ப்படிதலில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். நீங்கள் உண்மையிலேயே புது வாழ்வை வாழ்கிறீர்கள், பிறருக்கு ஓர் எடுத்துக்காட்டாக இருக்கிறீர்கள். என்னிடமிருந்து விலகி இருந்தாலும்,**

நீங்கள் எனக்கு நெருக்கமாக இருக்கிறீர்கள். நான் உங்களைப் பற்றி மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். ஒரு நாள் நான் உங்கள் இல்லத்திற்கு விஜயம் செய்வேன் என்று உறுதியளிக்கிறேன்."

இப்போது புது வாழ்வு மூன்று திட்டங்களாக உருவாகிவிட்டதால், பாபா தெளலத் ஸிங்கை தனது உணவுக்காக யாசிப்பதிலிருந்து விடுவித்து, ஒரு மருத்துவராக, சுதந்திரமாக வாழவும், பணிபுரியவும் திட்டம் 'ஒன்று-பி'யில் அவரை இணைத்தார். அதற்குப் பிறகு, கண்ணீருடன், தெளலத் ஸிங் பெங்களூரில் உள்ள தனது இல்லத்திற்குப் புறப்பட்டார்.

"இந்த யாத்ரீகரின் பிச்சை பாத்திரத்தில் ஒரு பொக்கிஷம் இருந்தது!" காலம் பாடலாக இதை மொழிந்தது. "யாசித்து அவர் அடையப்பெற்ற மதுவாகிய தானம் ஒரு நாள் அவரது யாசிக்கும் வாழ்வை நித்திய வாழ்வாக மாற்றும்."

தெளலத் ஸிங் இறுதி வரை பாபாவின் பாதங்களை உறுதியாகப் பற்றிக்கொண்டார். அவர் அவ்வப்போது மெஹராஸாத்தில் பாபாவை சந்தித்து வந்தார். பாபா கூறியது போல், அவரிடமிருந்து பிரிந்து வாழ்ந்தாலும் உண்மையான புது வாழ்வுத் தோழராக இருந்தார்.

பாபாவின் அறிவுறுத்தலுக்கு இணங்க பழைய வாழ்க்கையில் பெண்மணிகள் வெவ்வேறு இடங்களில் வாழ்ந்து வந்தனர். வாலு பூனாவில் பிந்த்ரா ஹவுஸில் வசித்து வந்தார், ஆனால் பாபாவின் உடலளவிலான பிரிவு அவரை மிகுந்த சிரமத்திற்குள்ளாக்கியது. பூனாவில் ஐந்து மாதங்கள் தங்கிய பின்னர், **1950** மார்ச் **18** அன்று, பப்பா ஜெஸவாலா அவரை அஹமதுநகருக்கு அழைத்து வந்தார்; அங்கு பாதிரி, ஆதி சீனியர் இருவரும் அவரை அக்பர் பிரஸ்ஸில் தங்கும்படி வற்புறுத்தியும் அவர் அரன்காவ்மில் அமைந்த தனது இல்லத்திற்குத் திரும்பிச் சென்றார்.

இதற்கிடையில், வேறு சில பழைய வாழ்க்கை சீடர்கள் - ரானோ, கிட்டி, கோர்ஷெத், ஸூனாமாசி ஆகியோர் மும்பையில் மெஹர்ஜியின் இல்லத்தில் தங்கியிருந்தனர். அவர்கள் பாபாவிற்குக் கீழ்ப்படிந்ததால், பல்வேறு கடினமான புது வாழ்வு அனுபவங்களைக் கடக்க வேண்டியிருந்தது. ரானோவும் கிட்டியும் மகளிர்களுக்கான 'ராணி மேரி உயர்நிலைப் பள்ளி'யில் ஆசிரியர்களாகப் பணிபுரிந்தனர். பாபா, இருவரையும் வரவழைப்பதாக உறுதியளித்ததற்கு இணங்க, அனுதினமும் பாபாவின் அழைப்பை எதிர்நோக்கிக் காத்திருந்தனர். இறுதியாக, **1950** ஜூலை **7**ஆம் நாள், பாபா அவர்களை சத்தாராவிற்கு அழைத்தார். அவர்கள் அன்று மாலை **9:30** மணிக்கு வந்து, ஒரு மாதம் தங்க அனுமதிக்கப்பட்டனர்.

சத்தாராவில், பெண்மணிகளுக்காக ஒரு பெண் குதிரை வாங்கப்பட்டது, அதற்கு பாபா 'பேகம்' (BEGUM - பெண்மணி) என்று பெயரிட்டார்; ஆனால் அது

பெண்மணிகளையே எப்போதும் பின்தொடர்ந்ததால், அதை "மேரிஸ் லிட்டில் லாம்ப்" (MARY'S LITTLE LAMB) என்று அழைக்கப்பட்டிருக்கலாம். அந்தக் குதிரை வீட்டில் எங்கும், அறைகளுக்குள்ளும் பிரவேசித்தது.

அந்தப் பெண் குதிரைக்குட்டி ஒரு குதிரையைப் போலல்லாமல் செல்லமான வளர்ப்பு நாயைப் போல நடந்து கொண்டது! பாபா அதைத் தட்டிக் கொடுத்து, கேரட்டை அன்புடன் ஊட்டினார். பேகம் அடிக்கடி பாபாவிடம் செல்வதுண்டு. செல்லமாக அதை நடத்தினாலன்றி அது அங்கிருந்து வெளியேறாது. பாபா அதன் குறும்புகளை ரசித்து வேண்டுமென்றே அதைத் தடவிக்கொடுப்பதைத் தாமதப்படுத்தினார். பேகம் அமைதியாக நின்று கொண்டிருக்கும் வேளையில் பாபாவின் கவனம் அதன் மீது செலுத்தப்பட்ட பின்னரே, குட்டிக்குதிரை மகிழ்ச்சியுடன் புறப்பட்டுச் செல்லும்.

பாபாவின் அறிவுறுத்தல்படி, 1950 ஜூலை 9 அன்று, ஆதி சீனியர், மஸ்த் அலி ஷாவை மெஹராபாத்திலிருந்து சத்தாராவிற்கு அழைத்து வந்தார். பாபா ஒவ்வொரு நாளும் மூன்று மணிநேரம் தனியாக மஸ்துடன் பணிபுரியத் தொடங்கினார். இதர மஸ்துகள் மற்றும் மனநிலை பாதிக்கப்பட்டவர்களை ஒன்று சேர்த்து, சத்தாராவிற்கு அழைத்து வந்தனர். அவர்களை கவனிக்கும் பொறுப்பு பைதூல், எரச், பெண்டு, குஸ்தாஜி, முரளி ஆகியோருக்கு வழங்கப்பட்டது. சத்தாராவில் தற்போது குடியேறிய பாபா, மீண்டும் ஒருமுறை தனது பணியில் தீவிரமாக இருந்து, நாள் முழுவதும் மஸ்த் மற்றும் மனநிலை பாதிக்கப்பட்டவர்களுடனான பணியில் மும்முரமாக இருந்தார். அதற்கிடையில் ஒருமுறை பூனாவிற்குச் சென்றார். ஜூலை 15ஆம் நாள் பகல் முழுவதும் தண்ணீர் மட்டுமே அருந்தி உபவாசம் மேற்கொண்டார்.

ஒரு சிறப்பான கவாலி பாடகரைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஆதி சீனியர் நல்ல குரல் வளமும், கவாலி ஞானமும் படைத்த அஹமது (AHMED) என்ற முஸ்லீம் இளைஞரை அழைத்து வந்தார். பாபா மற்றும் தோழர்கள் முன்னிலையில் தினமும் இசை நிகழ்ச்சியை நடத்த பணியமர்த்தப்பட்ட அந்த பாடகர் 'புது வாழ்வு' கவிதைக்கு மெட்டமைத்து பாடத்தொடங்கினார். ஜூலை 31 வரை சத்தாராவில் இது தொடர்ந்தது; பின்னர் அவர் திருப்பி அனுப்பப்பட்டார்.

பாபா சத்தாராவில் குடியேறிய ஒரு வாரத்திற்குப் பிறகு, கொரியாவில் போர் வெடித்தது. இந்த நேரத்தில் பாபாவின் தீவிர செயற்பாடு, போர் மற்றும் உலக விவகாரங்களுடன் சில தொடர்புகளைக் கொண்டிருந்தது என்பதில் சந்தேகமில்லை.

பாபாவின் தனிப்பட்ட துன்பமும் தொடர்ந்தது. அவரது கண்கள் இன்னும் அவரை தொந்தரவு செய்தது. கும்பமேளாவில் செய்த தீவிர பணியின் தாக்கம் நோய்த்தொற்றை அதிகப்படுத்தியது. டெஹ்ராடூனில் அளிக்கப்பட்ட சிகிச்சையில்

நீடித்த முன்னேற்றம் எதுவும் இல்லை. ஒரு நாள் எரச் அவரை, சத்தாராவில் ஒரு மருத்துவரிடம் அழைத்துச் சென்றார், அவர் பாபாவைப் பரிசோதித்து, அவரது கண்களில் உருவான சிறிய படிகங்களை கவனித்தார். இந்தப் படிகங்கள் அகற்றப்பட்ட பிறகு, பாபாவின் கண்கள் படிப்படியாக சீராயின. உயர் தகுதி வாய்ந்த கண் நிபுணர்களால் பாபாவிற்கு எதுவும் செய்ய முடியாத போது, சத்தாரா கிராமப்புறத்திலிருந்த இந்த எளிய மருத்துவர் அவரைக் குணப்படுத்தியது சற்று முரண்பாடாகத் தோன்றியது.

சதாஷிவ் பாட்டீல் பாபாவிற்கு தனது இரண்டு பூனா வீடுகளை விற்றதிலிருந்து ரூ 40,000 வழங்குவதாக வாக்குறுதி அளித்திருந்தார். இதன் அடிப்படையில் நரிமன், மெஹர்ஜி இருவரிடமிருந்து பாபா ரூ 40,000 கடன் வாங்கியிருந்தார். ஆனால் சதாஷிவ் அவரது வாக்குறுதியை நிறைவேற்ற முடியாததால், கடனை அடைக்க, பாபா ஜூலை 18 அன்று டாக்டர் டானை இங்கிலாந்து மற்றும் அமெரிக்காவிற்கு அனுப்பி, அதற்கு சமமான தொகையை வசூலிக்க முடிவு செய்தார். பாபா தனது பழைய வாழ்க்கையைத் தொடரும் மேற்கத்திய சீடர்களுக்கு நிலைமையை விளக்கி ஒரு சுற்றறிக்கையை வெளியிட்டு, அதில் இவ்வாறு கூறி முடித்தார்:

இந்தத் தொகையை ஒன்றுதிரட்டுவதோடு, எனது பழைய வாழ்க்கையின் கடைசியும் இறுதியுமான சுமை நீங்கிவிடும், மேலும் கிழக்கிலிருந்தோ மேற்கிலிருந்தோ இதுபோன்ற உதவிக்கான அழைப்புகள் இனி வராது.

1951 ஜூலை மாதத்தில் நான் மேற்கத்திய நாடுகளுக்கு வருவது உறுதியான நிலையில், எலிஸபெத், நோரினா இருவரும் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டனர்.

இவ்வாறு, டாக்டர் கனியின் கடன் சுமை தொடர்பாக ஓர் 'இடர்கால நிதி', கிழக்கில் வாழும் பாபாவின் அன்பர்களிடமிருந்தும், மேற்கில் உள்ளவர்களிடமிருந்து மற்றொரு தொகையும் வசூலிக்கப்பட்டது.

பாபா விரும்பியபடி, 1950 ஜூலை 25 செவ்வாய்க் கிழமை காலை, 'சேவக தோழர்கள்' (SERVANT-COMPANIONS) நீராடி ஐந்து மணிக்குத் தயாராயினர். அவர்கள் தினமும் அதிகாலை நான்கு மணிக்கு எழுந்திருக்க வேண்டும் என்றாலும், நீராடுவது கட்டாயமில்லை; ஆனால் 25ஆம் தேதி ஒரு சிறப்பு நாள். எரச், பெண்டு இருவரும் முந்தைய நாள் இரவு 'புர்கே பங்களா'வின் மண்டபத்தைக் கழுவி சுத்தம் செய்து, இப்போது அனைவரும் பாபாவின் வருகைக்காகக் காத்திருந்தனர்.

முத்தாவின் பங்களாவிலிருந்து காலை 6:45 மணிக்கு பாபா வந்ததும், நேராக உள்ளே நடந்து சென்று, வீட்டின் பிரதான மண்டபத்திலிருந்த நாற்காலியில் அமர்ந்தார். 'சேவக தோழர்கள்' பின்தொடர்ந்தனர், கதவுகளும்

ஜன்னல்களும் இறுக்கமாக மூடப்பட்டன. பூனாவிலிருந்து வரவழைக்கப்பட்ட ஜால்பாய் மட்டுமே அறைக்கு வெளியே இருந்து ஜன்னல் வழியாக நிகழ்ச்சிகளைப் பார்க்கவும் கேட்கவும் அனுமதிக்கப்பட்டார்.

பாபா தனது தீவிரமான பார்வையைச் சுழற்றி, சக தோழர்களை எச்சரித்தார்: **"இதுவரை, நான் எனது கோபத்தையும் எரிச்சலையும் முழுமையாகக் கட்டுப்படுத்தக் கற்றுக் கொள்ளவில்லை, எனவே என்னை எந்த வகையிலும் தூண்டிவிடாதீர்கள், இதனால் எனது மனநிலையை இழந்ததற்கான மறைமுக காரணமாகிவிடாதீர்கள். நான் எனது மனநிலையைத் தக்கவைக்க முயற்சிப்பேன். முடிந்தவரை, உங்கள் சிறிய தவறுகள் மற்றும் குறைபாடுகளைக் கண்டுகொள்ளாமல் மன்னிப்பேன்.**

"ஆனால், நான் உங்களை எச்சரிக்கிறேன், எனது கோபமும், எரிச்சலும் தொடர்ந்து என்னைத் தொந்தரவு செய்தால், அதற்கான காரணியை நான் நிச்சயமாக அகற்றிவிடுவேன், எனவே, அத்தகைய சூழ்நிலையைத் தவிர்க்க, நான் சொல்வதை மட்டும் செய்யுங்கள், எல்லாம் சுமூகமாக நடக்கும், அனைத்தும் நன்றாகவும் சிறப்பாகவும் இருக்கும்."

அதற்கு முந்தைய நாள், பாபா எழுத்துப்பலகையில் எடுத்துரைத்த பின்வரும் பிரார்த்தனையை டான் மொழிந்தார்:

எனது புது வாழ்வின் மிகையான நிகழ்வுகள் நிறைந்த இந்நாளில், 'இல்லை' என பதிலளித்தவர்கள், 'ஏற்பாடு' குழுவைச் சார்ந்தவர்கள் உட்பட எனது அனைத்து பழைய ஆண், பெண் மண்டலி, பக்தர்கள் மற்றும் எனது புது வாழ்வு தோழர்கள் அனைவருக்கும் வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்கள் குறைபாடுகள், தோல்விகள், பலவீனங்கள் அனைத்தையும் மன்னித்து, பழைய வாழ்க்கை சீடர்கள், பக்தர்கள் தங்கள் நம்பிக்கையிலும், அன்பிலும், கடவுள் மற்றும் அவரது தெய்வீக வெளிப்பாடுகளிலும் தங்கள் புரிதலில் உறுதியாக இருக்க உதவவும், ஏற்பாடு குழுவிற்குத் தைரியம் வழங்கவும், மிகவும் கருணையுள்ள கடவுளை நான் கேட்டுக்கொள்கிறேன். அவர்களின் பொறுப்புகளை 100 சதவிகிதம் நிறைவேற்றவும், புது வாழ்வு தோழர்களுக்கு உண்மை மற்றும் புது வாழ்வு நிபந்தனைகளை நேர்மையாகவும் உண்மையாகவும் கடைப்பிடிக்க, வேண்டிய வலிமையை வழங்கவும் வேண்டுகிறேன்.

பாபா, சக தோழர்களுக்கு வணக்கத்தைத் தெரிவித்து, அடுத்த பத்து நிமிடங்களுக்கு வெளியே செல்லுமாறும், கதவின் இடைவெளி அல்லது விரிசல் வழியாக மண்டபத்தை உற்றுநோக்க வேண்டாம் என்றும் கட்டளையிட்டார். பத்து நிமிடங்கள் தனியாக அமர்ந்து, பின்பு பாபா கைகளைத் தட்ட, ஆண்

தோழர்கள் மீண்டும் மண்டபத்திற்குள் நுழைந்தனர். புது வாழ்வின் தொடக்கத்தில் கடவுள் முன் எடுத்த தனது அசலான வாக்குறுதியை மீண்டும் உறுதிப்படுத்தியதாக பாபா அவர்களுக்குத் தெரிவித்தார்.

பாபா பின்னர் ஒவ்வொரு சேவக தோழரின் கால்களிலும் தனது தலையை வைத்து வணங்கி, அதன் பிறகு, பாபா சைகையால் தெரிவித்ததற்கு இணங்க, நீலுவும் விஷ்ணுவும் தசாவதாரத்தை (THE DASAVATAR, பத்து அவதாரங்கள்) மொழிந்தனர். கைக்கோபாத், எரச், பெண்டு காக்கா நால்வரும் இணைந்து ஒரு ஸொராஸ்ட்ரியன் பிரார்த்தனையையும், பைதூல் இஸ்லாமிய பிரார்த்தனையையும், டான் ஒரு கிறிஸ்தவ ஜெபத்தையும் மொழிந்தனர். பாபா அடுத்ததாக டான், நீலு இருவரிடமும் கீதையின் ஆங்கில மொழிபெயர்ப்பான 'ஸாங் ஸெலஸ்டியல்' (SONG CELESTIAL) என்ற பாடலை ஒரு மணி நேரம் உரக்க வாசிக்கக் கூறினார். அதைத் தொடர்ந்து, இளம் கவாலி பாடகர் புது வாழ்வு கவிதையை, பிரார்த்தனை வடிவில் வழங்கினார்.

பத்து மணியளவில், பாபா மஸ்துகளுக்கு உணவளித்ததைத் தொடர்ந்து, தனது கைகளால் தோழர்களுக்கு உணவு வழங்கினார். பிற்பகல் இரண்டு மணிக்கு, சத்தாராவைச் சுற்றியுள்ள பல்வேறு கிராமங்களிலிருந்து அழைத்துவந்த மஸ்துகள், மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் ஏழை மக்களுடன் அவர் தனது பணியைத் தொடங்கினார். அவர்களின் தலைமுடியைக் கத்தரித்து, தாராளமாக சோப்பைப் பயன்படுத்தி வெந்நீரில் நீராட்டினார். ஆண் தோழர்கள் பாபாவிற்கு உதவினாலும், உண்மையில் முடியை வெட்டி, உடலை தேய்த்து சுத்தப்படுத்துவதை, பாபா மட்டுமே செய்தார். பின்னர் அவர்களுக்குப் புதிய சட்டை மற்றும் கால்சட்டைகளை அணிவித்தார், மேலும் ஒவ்வொருவருக்கும் புதிய படுக்கை - ஒரு பாய், ஒரு மெத்தை மற்றும் இரண்டு போர்வைகள் போன்றவற்றை வழங்கினார். அவர்கள் அனைவரும் பங்களாவின் தனி அறையில், தோழர்களின் கண்காணிப்பில் தங்க வைக்கப்பட்டனர்.

பாபா அன்று முழுநாளும் உண்ணாமல் உபவாசம் இருந்தார். மறுநாள் காலை ஒன்பது மணியளவில், ஹுஸைன் (HUSSAIN) என்ற முஸ்லீம் சமையல்காரரிடம் (BUTLER) யாசிப்பதற்காக சத்தாரா அரசாங்க விடுதிக்கு நடந்து சென்றார். பாபா, யாசித்த உணவை உண்டு மிகுந்த திருப்தியையும், மகிழ்ச்சியையும் வெளிப்படுத்தினார். ஜூலை 27ஆம் நாள் அவர் இரண்டு வீடுகளில் உணவுக்காக யாசிக்கச் சென்றார்: ஒன்று இந்து, மற்றொன்று முஸ்லீம். ஜூலை 30 அன்று 48 மணி நேரம் தண்ணீர் மட்டும் அருந்தி உபவாசம் மேற்கொண்டார்.

'இடர்கால நிதி' சேகரிப்பதற்காக, டாக்டர் டான் 26ஆம் நாள் சத்தாராவிலிருந்து புறப்பட்டு, ஆகஸ்ட் 5 அன்று மும்பையிலிருந்து லண்டனுக்கு விமானத்தில் சென்றார்.

நாடோடி வாழ்க்கையைக் கைவிட்டு, 1950 ஜூலை 28ஆம் நாள், புது வாழ்வு கூண்டுவண்டி டெஹ்ராடூனிலிருந்து அஹமதுநகருக்கு வந்தது. (பாதிரி பூனாவிலிருந்து அதை இழுத்துச் சென்றார்.) புது வாழ்வு கூண்டுவண்டி நீலப்பேருந்தைப் போல, பாபாவின் பயணங்களின் குறிப்பிடத்தக்க வாகனமாக இருந்ததால் இரண்டும் ஒரே இடத்தில், மெஹராஸாத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டன..

தோழர்களின் பெரும்பாலான பொருட்கள் புது வாழ்வு கூண்டுவண்டியில் வந்திருந்தன, ஆதி அதை ஜூலை 29 அன்று சத்தாராவிற்கு அனுப்பிவைத்தார். சத்தாராவில் பாபாவுடன் ஒரு மாதம் தங்கியிருந்த ரானோ, கிட்டி இருவரும் ஆகஸ்ட் 8 அன்று மும்பைக்குத் திரும்பிச் சென்றனர்.

1950 ஆகஸ்ட் நடுப்பகுதியில், சத்தாராவில் கடுமையான பணி காரணமாக பாபாவின் உடல்நிலை பாதிக்கப்பட்டது. அவர் சிறிது ஓய்வெடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டதற்கு பாபா சம்மதித்தார். ஆனால், காலம் சுட்டிக்காட்டியபடி, அவதார புருஷர் எப்படி "ஓய்வெடுக்க முடியும்? ஒவ்வொரு மூச்சிலும் இந்த ஆன்மீகத் தளத்தில் அவரது பணி தொடர்ந்தது, அது இறுதி வரை - அவரது இறுதி மூச்சு வரை நீடித்தது!"

இருந்தபோதிலும், பப்பாவும், மெஹர்வான் ஜெஸவாலாவும் ஆதி சீனியர் உதவியுடன் பூனா பிரபாத் சாலையில் (PRABHAT ROAD), திரு. சுகந்திக்கு (MR. SUGANDHI) சொந்தமான ஒரு பங்களாவை ஏற்பாடு செய்தனர். 1950 ஆகஸ்ட் 21 திங்கட்கிழமை காலை, மெஹர்ஜியின் காரில் எரச், பாபாவை அங்கு அழைத்துச் சென்றார்; மெஹரா, மணி, மெஹரு, கோஹெர் ஆகியோர் உடன் சென்றனர். நான்கு ஆண் தோழர்களும் தனியாக வந்தனர். பிந்த்ரா ஹவுஸிலிருந்து உணவு வழங்கப்பட்டது; பாபா பூனாவில் வாழும் எவரையும் சந்திக்கவில்லை.

ஒரு வாரம் அமைதியாக கழிந்தது. மெஹர்ஜியும் நரிமனும் மும்பையின் மஹிம் பகுதியில், பாபாவிற்கு தங்குமிடங்களை ஏற்பாடு செய்தனர்; பாபாவும் ஆண், பெண்மணிகளும் ஆகஸ்ட் 28 அன்று அங்குப் புறப்பட்டுச் சென்றனர். ஹோமா தாதாசாஞ்சி தினமும் பாபாவிற்கு உணவு கொண்டு வந்தாலும், பாபா அவரைப் பார்க்கவில்லை.

ஒவ்வொரு நாளும், மஸ்துகளின் சர்தார் (தலைவர்) பைதூல், மும்பை வீதிகளில் மஸ்துகளைத் தேடி அலைந்தார்; சில நேரங்களில் பாபா, தொடர்புகளுக்காக அவருடன் செல்வதுண்டு; இதர நேரங்களில் பைதூல் சிலரை மாஹிமில் அமைந்த இல்லத்திற்கு அழைத்து வந்து அங்கு பாபா அவர்களுடன் பணிபுரிந்தார்.

ஒரு நாள், பைதூல், நரிமன், மெஹர்ஜி ஆகியோருடன் பாபா காரில் சென்று கொண்டிருந்தார்; ஹோமா காரை ஓட்டிச் சென்றாலும், பாபாவைப்

பார்க்க வேண்டாம் என்று கூறப்பட்டது. திடீரென ஹோமா பயங்கரமான தலைவலியால் அவதிப்படவே, அதை, பாபாவிற்குத் தெரிவித்ததும் ஓட்டுநர்களை மாற்ற முடிவு செய்யப்பட்டது. நரிமன் தனது மைத்துனரான ஜிம்மி மிஸ்திரியை பரிந்துரைக்க, பாபா அதற்கு ஒப்புக்கொண்டார்.

தாதரில் அமைந்த ஜிம்மியின் இல்லத்தில் காரை நிறுத்திவிட்டு ஹோமா அவரை அழைக்க உள்ளே சென்ற அந்த நேரத்தில், ஜிம்மி சவரம் செய்து கொண்டிருந்தார்; செய்தியைக் கேட்டதும், அவர் மிகவும் உற்சாகமடைந்து, வீட்டை விட்டு வெளியே ஓடி வந்து, காரில் ஏறிய போது, பாதி முகம் இன்னும் சவரம் செய்யாமல் இருந்தது. பாபா, நரிமன் மூலம் ஜிம்மியிடம் அவர் இருந்த நிலையிலேயே காரை ஓட்டச் சொன்னார்; பாபாவை மிகவும் மகிழ்வித்த சம்பவம் அது.

ஜிம்மியின் மனைவி ரோடா (அர்னவாஸின் தங்கை) ஏற்கனவே மஸ்தானி என்று அழைக்கப்பட்டார், இப்போது ஜிம்மியும் மஸ்த் போல மாறிவிட்டார்! பாபா, மெஹர்ஜி, நரிமன் இருவருடன் இப்படிக் கேலி செய்து மகிழ்ந்தார்; மேலும் பாபா தன்னிடம் பேச வேண்டும் என்று ஜிம்மி விரும்பினாலும் பாபா பேசாமலே இருந்தார்.

ஆயினும் கூட, அவர் அன்று பாபாவின் சாரதியாக இருக்க அனுமதிக்கப்பட்டார் - அதுவே ஓர் அரிய பாக்கியம்.

ஒரு வருடத்திற்கு முன்பு, தான் பணிபுரிந்த ஐந்தாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்ட மஸ்த் முங்ஸாஜி மஹாராஜை (MUNGSAJI MAHARAJ) மீண்டும் தொடர்பு கொள்ள பாபா சென்று கொண்டிருந்தார். ஓர் இந்து துறவியான அவர் அடுக்குமாடி கட்டிடம் ஒன்றில், இரண்டாவது மாடியில் வசித்து வந்தார். பாபா அந்த இடத்தைச் சென்றடைந்த வேளையில், ஸாம் கேரவாலா படிக்கட்டுகளில் இறங்கி வருவதைக் கண்டு, பாபா முகத்தைத் திருப்பிக் கொள்ள, அவரும் பார்க்காமல் தலையைத் தாழ்த்தினார். ஸாம் நடைபாதையை அடைந்ததும், பாபா படிக்கட்டுகளில் ஏறினார். ஸாம் அவர் மீது ஒரு திடீர் பார்வையை செலுத்தியபோது, பாபா தலையை அசைத்து அதை ஏற்க மறுத்தார். ஸாம் உடனடியாக அங்கிருந்து சென்றார். வெட்கத்தில் ஜிம்மி, ஸாம் வெளியேறுவதைக் கண்டு நிம்மதியடைந்தார், அவரது பாதி முகம் சவரம் செய்யாமல், சோப்பாக இருந்ததால் அவரை ஒரு கேலிப்பொருளாகக் காட்டிக்கொள்ள விரும்பவில்லை. இறுதியில், முங்ஸாஜி மஹாராஜுடனான தொடர்பு திருப்திகரமாக நிறைவடைந்தது.

நாஜா பெண்மணிகளுடன் மும்பைக்குச் சென்று, நௌரோஜி தாதாச்சாஞ்சியின் இல்லத்தில் தங்கி, பாபாவிற்கும் தோழர்களுக்கும் தயார் செய்த உணவை, ஹோமா, மாஹிமுக்கு எடுத்துச்செல்வது வழக்கம். நாஜா, ஜலதோஷத்தால் அவதிப்பட்ட வேளையில், யாரோ ஒருவர் அதிக அளவு

வைட்டமின் 'சி'யை எடுத்துக் கொள்ளுமாறு அறிவுறுத்த, தவறுதலாக, அடையாளக் குறிப்பு இல்லாத பாட்டிலிலிருந்த ஆஸ்பிரின் மாத்திரையை உட்கொண்டார். அது கடுமையான எதிர்வினையை உருவாக்க, நாஜாவின் கண் இமைகள் வெண்மையாகி மயக்கமடைந்தார். அர்னவாஸ், நர்கிஸ், ரோடா ஆகியோர் வைட்டமின் மாத்திரைகளை உட்கொண்டதாக நினைத்ததால், என்ன தவறு நடந்தது என்று எவருக்கும் தெரியவில்லை. பாபாவிற்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதும், அவர் கோஹெரை அனுப்பி, பரிசோதனை செய்து, மயக்கமருந்தை அதிகமாக உட்கொண்டதாக உடனடியாகக் கண்டறிந்தார். கோஹெர் அவருக்கு சிகிச்சை அளிக்க, பாபாவின் அருளால் நாஜா குணமடைந்தார்.

இந்தக் காலகட்டத்தில், 1934ஆம் ஆண்டில், பாபாவை முதன்முதலாக சுவிட்சர்லாந்தில் சந்தித்த திரைப்பட தயாரிப்பாளர் கேப்ரியல் பாஸ்கல் (GABRIEL PASCAL), மஹாத்மா காந்தியின் வாழ்க்கையைத் திரைப்படம் எடுக்கும் யோசனையைத் தொடரும் எண்ணத்தில் ஒரு வாரத்திற்காக இந்தியா வந்திருந்தார். மெஹர் பாபாவின் வாழ்க்கையைப் பற்றிய ஒரு திரைப்படத்தைத் தயாரிப்பதில் அவர் ஆர்வமாக இருந்தார், இப்போது பாபாவின் சொந்த திரைப்பட யோசனைகளுக்கான முந்தைய திட்டங்கள் கைவிடப்பட்டன. ஆதி சீனியர் அவருடன் தொடர்பு கொண்டாலும், பாஸ்கல் தனிப்பட்ட முறையில் பாபாவை சந்திக்க விரும்பினார். புது வாழ்வு வழிமுறைகள் பற்றி பாஸ்கலுக்குத் தெரிவிக்கப்பட்டது, மேலும் அவர் பாபாவின் முன்னிலையில் திரைப்படங்கள் குறித்து, பேசப்போவதில்லை என்று முறையாக உறுதியளித்தார்.

1950 செப்டம்பர் 12, காலை 7:30 மணிக்கு பாபா, ஆஷியானாவில் பாஸ்கலை சந்தித்தார். பாபா அவரிடம், "**நீங்கள் எனது ∴பீனிக்ஸ் பறவை** (அழியாத கற்பனை பறவை)! **எனது பல அவதார காலகட்டங்களில் நீங்கள் என்னுடன் இருந்திருக்கிறீர்கள். மேற்கில் எனது பணியை, செவ்வனே செய்து முடிக்க நான் உங்களுக்கு உதவுவேன். உங்கள் தொழில் முன்னெப்போதையும் விட செழித்தோங்கும்**" என்று அன்புடன் கூறினார்.

பாஸ்கல், பாபாவின் மௌனத்தைப் பற்றிக் கேட்டதும், அவர் எழுத்துப்பலகை வழியாக, "**நான் எனது மௌனத்தைக் கலைத்து வார்த்தையை உச்சரிக்கும் நேரம் நெருங்கிவிட்டது**" என்று கூறினார்.

இந்தக் காலகட்டத்தில் பாஸ்கல் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டிருந்தார். அவர் மீண்டும் பாபாவைப் பார்த்ததில் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்ந்தார். அதற்குப் பின்னர் ஒரு முறை தனது மனைவியிடம், "பாபாவுடன் இருந்ததால் எனது உயிர்சக்தியை அடையப்பெற்றேன்" என்று கூறினார்.



மஹாபலேஷ்வர், அக்டோபர் **1950**
(MAHABALESHWAR, OCTOBER 1950)

மஹாபலேஷ்வர், **16** அக்டோபர் **1950**
(MAHABALESHWAR, 16 OCTOBER 1950)

மஹாபலேஷ்வர் சிறப்புக் கூட்டம்

(Mahabaleshwar Special Meeting)

மும்பையில் இருந்தபோது, பாபா, மஹாபலேஷ்வரில் ஒரு கூட்டம் நடத்துவதற்கான திட்டங்களைப் பற்றி விவாதித்தார். சக தோழர்கள் ஆதி சீனியர், எரச், பைதூல், பெண்டு, 'ஏற்பாடு' குழுவினர்களில் மெஹர்ஜி, நரிமன் ஆகியோருடன் அனைத்து விவரங்களும் தீர்மானிக்கப்பட்டன. அதன்படி, 1950 செப்டம்பர் 11 அன்று, அச்சிடப்பட்ட சுற்றறிக்கை ஒன்று, பழைய மற்றும் புது வாழ்வு பக்தர்களுக்கு அனுப்பப்பட்டது; அதில் கூறப்பட்டுள்ளதாவது:

சமீபத்திய நிலநடுக்கங்கள், வெள்ளப் பெருக்கு, அஸ்ஸாமில் ஏற்பட்ட சோக நிகழ்வுகள், தொடர்ந்து வங்காளம், பீகார் மாகாணங்களில் நிலவிய பஞ்சம், பசி, பட்டினி, இந்திய தேசம் முழுவதுமான அகதிகள் பிரச்சினை, உலகெங்கிலும் நிலவும் பல்வேறு பரவலான பேரழிவுகள், தற்போது இயற்கையின் மீதான பொதுவான அவநம்பிக்கை, சொல்லொணா துயரங்கள், முழு ஏமாற்றம், உலகம் முழுவதும் எதிர்பாராத உதவியின்மை மற்றும் விரக்தியின் உணர்வு.

1949 அக்டோபர் 16ஆம் நாள் அஹமதுநகரிலிருந்து, தனது 'உதவியற்ற', 'நம்பிக்கையற்ற' புது வாழ்வை வாழப் புறப்பட்டபோது, அவருடைய கண் முன்னால் உருவாகிய புது வாழ்வு சித்திரத்தின் பணிக்கு, இவை அனைத்தும் ஓரளவு பங்களித்தன என்று பாபா தனது கருத்தை வெளிப்படுத்தினார்.

பாபா, 1949 அக்டோபர் 16ஆம் நாள் தனது புது வாழ்வை ஏற்றுக்கொண்டு, 1950 அக்டோபர் 16 வரை, அதை வாழ முயன்றாலும், அவர் விரும்பியபடி வாழ முடியவில்லை.

பன்னிரெண்டு மாதங்களின் புது வாழ்வு அனுபவத்தைக் கொண்டு, பாபா, எதிர்காலத் தனிமனிதத் தேவைகளை மாற்றிக் கொள்ள வேண்டாம், (அல்லது) தனிப்பட்ட பலவீனங்களையும், தனது கட்டளைகளையும், புது வாழ்வின் நிபந்தனைகளையும் கடைப்பிடிப்பதில் உள்ள மெத்தனத்தையும் பொறுத்துக் கொள்ள வேண்டாம் என்று உறுதியாக இப்போது முடிவு செய்துள்ளார். புது வாழ்வின் நிபந்தனைகளை சரியான மனப்பான்மையில் நிறைவேற்றாததில், பாபா தனது சொந்த பலவீனங்களையும் ஒப்புக்கொள்கிறார். சோதனை, கோபம் இதுபோன்ற பலவற்றிற்கு அடிபணிவதில் அவரது தனிப்பட்ட பலவீனம், தோழர்களுக்காக அவரது உள்ளுணர்வுகளுக்குச் சரணடைவதில் உள்ள பொதுவான பலவீனம், மெஹராபாத்தில் எடுக்கப்பட்ட அவரது அசல் உறுதிமொழியை சமரசம் செய்து, ஒன்று, இரண்டு, மூன்று திட்டங்களின் வளர்ச்சியை, அவரது அசல் திட்டத்திற்கு மிகவும் மாறாக, சமரசம் செய்தது. மேலும், டாக்டர்

கனி, சதாஷிவ் பாட்டீல் போன்ற பழைய வாழ்க்கை நிதிச் சுமைகள் இதற்கிடையில் வளர்ந்து, அதற்கேற்ப சரிசெய்யப்பட்டு தீர்வு காண வேண்டியிருந்தது. "கடவுள் விரும்பினால், 1950 அக்டோபர் 16 முதல் இதுபோன்ற எதுவும் மீண்டும் நடக்காது" என்று பாபா கூறுகிறார்.

இந்த அனுபவத்தின் காரணமாக, பாபாவுடன் புது வாழ்வைத் தொடர்வதா அல்லது பழைய வாழ்க்கையின் சீடர்களாக மாறுவதா என்ற தங்கள் முடிவை மறுபரிசீலனை செய்ய, வேறொரு வாய்ப்பை வழங்கும் நோக்கத்தில், 1950 அக்டோபர் 16 அன்று, பாபா தனது வாழ்நாள் சேவக தோழர்களை விடுவிக்கத் தீர்மானித்தார்.

எனவே, வாழ்நாள் சேவக தோழர்கள் தங்கள் தனிப்பட்ட பலவீனங்களைக் கணக்கிட்டு, எந்த ஒரு புதிய முடிவையும் எடுப்பதற்கு முன்பு, பாபாவுடன் பன்னிரண்டு மாத புது வாழ்வின் பல்வேறு அனுபவங்களையும் கருத்தில் கொள்ள வேண்டும். அவர்களின் தனிப்பட்ட பலவீனங்கள் மற்றும் பாபாவுடனான புது வாழ்வின் சில இனிமையான ஆனால் பல வலிமிகுந்த அனுபவங்களைப் பற்றி மிகவும் கவனமாகவும் முழுமையாகவும் பின்னோக்கிப் பார்த்த பின்னர், அவர்கள் புது வாழ்வில் பாபாவுடன் தொடர்ந்து இருக்க விரும்பினால், பாபா சில தோழர்களை ஏற்றுக் கொள்வார். அவர்கள் 1950 நவம்பர் 1 முதல் 1951 ஜனவரி இறுதி வரை, மூன்று மாதங்கள் அவருடன் வெளியே சென்று, மஸ்துகள் மற்றும் ஏழைகள் மத்தியில் அவர் செய்யும் சிறப்புப் பணியில் அவருக்கு உதவுவார்கள். இதர தோழர்களை அவர் மஹாபலேஷ்வரில் பெண்மணிகளின் பாதுகாப்புக்காக விட்டுச் செல்வார்.

கோலாப்பூர், மீரஜ், ஹுப்ளி, ஹைதராபாத், மும்பை, அஸ்ஸாம், வங்காளம், ஒரிஸா, பீஹார் போன்ற இடங்களுக்கு மஹாபலேஷ்வரிலிருந்து நவம்பர் முதல் வாரத்தில் பாபா தனது மஸ்த் மற்றும் ஏழைகளுக்கான பணிக்காகவும், தனது மூன்று கட்ட யாசித்தல், லங்கோட்டி மற்றும் நாடோடி வாழ்க்கைக்காகவும் செல்ல விரும்புகிறார். 1950 அக்டோபர் 16 முதல், இந்தப் பயணங்களில் தன்னுடன் வருபவர்கள் கால்நடையாகவும், இரயில், பேருந்துகளிலும் ஏராளமான பயணங்கள் மேற்கொள்ள வேண்டியது வரும் என்று பாபா கூறுகிறார்.

1950 அக்டோபர் 16 அன்று, 'ஒன்று', 'இரண்டு' திட்டங்கள் மற்றும் 'இல்லை குழு உறுப்பினர்கள்' என்ற வார்த்தைகளை நடைமுறை உபயோகத்திலிருந்து நீக்க, பாபா முடிவு செய்தார். எனவே, 1950 அக்டோபர் 16 முதல், திட்டம் 'ஒன்று-பி' அல்லது 'ஒன்று-சி'யில் இருப்பவர்களிடமிருந்து பாபா பணத்தை எதிர்பார்க்கமாட்டார், ஏனெனில் இந்தத் திட்டங்கள் 1950 அக்டோபர் 16 முதல் நடைமுறையில் இருக்காது.

பாபாவும் அவரது சக தோழர்களும் இத்தனை மாதங்களாக, புது வாழ்வை சரியான மனப்பான்மையுடன் நடத்தவில்லை என்று அவர் கூறுகிறார். எனவே, அக்டோபர் 16ஆம் நாள், அவர் நான்கு மணிநேர குறுகிய காலத்திற்கு, பழைய வாழ்க்கையில் அடியெடுத்து வைக்க முடிவு செய்துள்ளார், மேலும் அந்த நான்கு மணிநேர காலகட்டம் முடிவடைந்ததும், அவர் உடனடியாக மீண்டும் புது வாழ்வில் அடியெடுத்து வைப்பார். எனவே, 'ஒன்று-பி', 'ஒன்று-சி' திட்டங்கள் உட்பட புது வாழ்வின் அனைத்து தோழர்களும், வாழ்நாள் சேவக தோழர்களும், 1950 அக்டோபர் 16 அன்று மீண்டும் பாபாவின் பழைய வாழ்க்கை சீடர்களாக மாறுவார்கள்.

இந்தத் தேதியில் மட்டுமே, புது வாழ்வின் அனைத்து தோழர்களுக்கும் பாபாவின் புது வாழ்வில் வாழ்வதற்கு மற்றொரு வாய்ப்பு வழங்கப்படும்; இது 1950 அக்டோபர் 16 முதல் சரியான கருத்தார்ந்த செயல் முனைப்புடனும், உற்சாகத்துடனும் தொடங்கும். அவர்கள் முன்னர் 'ஆமாம்' என்று கையெழுத்திட்ட அதே நிபந்தனைகளின் சாராம்சத்தின் அடிப்படையில், 1950 அக்டோபர் 16ஆம் நாள் முதல், பாபாவுடன் புது வாழ்வை வாழ விரும்புபவர்களுக்கு அவை, கட்டுப்பட்டதாக இருக்கும். பின்னர் அக்டோபர் 16ஆம் தேதி முதல், பழைய வாழ்க்கை சீடர்கள், ஏற்பாடு குழு உறுப்பினர்கள் மற்றும் பாபாவின் சேவகர்கள் மட்டுமே இருப்பார்கள்.

1950 அக்டோபர் 16ஆம் நாள், பாபாவின் புது வாழ்வில் அவருடன் வாழ, தற்போதைய புது வாழ்வு தோழர்களுக்கு மட்டுமே வாய்ப்பு கிடைக்கும், வேறு எவருக்கும் இல்லை. தற்போதைய புது வாழ்வுத் தோழர்கள், அக்டோபர் 16ஆம் தேதிக்குப் பிறகு, பாபாவுடன் வாழ விரும்புபவர்கள், பாபாவிற்குத் தங்களால் இயன்ற அளவு நேர்மையுடன் சேவை செய்ய முயற்சிப்பார்கள், 100 சதவீதம் அவருக்குக் கீழ்ப்படிவார்கள், அவர் எதைச் சொன்னாலும், விரும்பினாலும், இணைக்கப்பட்ட பட்டியலின்படி, முதலில் 'ஆம்' என்று கையொப்பமிடப்பட்ட நிபந்தனைகளின் சாரத்தை உடைத்தெறிந்தாலும், அவருடைய உத்தரவுகளை, உடனிருக்கும் போதும், சேவைபுரியும் போதும், சாதாரண சூழ்நிலையில், 100 சதவிகிதம் பின்பற்ற முயற்சிப்பார்கள்.

பாபாவின் புது வாழ்வு நித்தியமானது. பாபாவின் புது வாழ்வில் அவருடைய சேவகர்களைத் தவிர, அந்த வாழ்க்கையை வாழ விரும்புபவர்கள் உள்ளார்ந்த உணர்வுப்பூர்வமாக அதைச் செய்ய சுதந்திரமாக உள்ளனர்.

அக்டோபர் 16ஆம் நாள் காலை 7 மணி முதல் 11:00 மணி வரை, ஒரு கூட்டத்தில் கலந்து கொள்ள, பாபா தனது பழைய வாழ்க்கை ஆண் மண்டலி (பெண் மண்டலி இல்லாமல்) மற்றும் ஐந்து 'ஏற்பாடு' குழு உறுப்பினர்களையும் மஹாபலேஷ்வருக்கு அழைத்தார். "வரமுடிந்தவர்கள் வரலாம்,

முடியாதவர்கள் கவலைப்பட வேண்டாம், ஆனால் அவர்களுக்கு பாபாவின் செய்தியும், 1950 அக்டோபர் 16 நிகழ்வுகளின் நகலும் அனுப்பிவைக்கப்படும்."

"முதலில் 'ஆமாம்' என்று கையொப்பமிடப்பட்ட நிபந்தனைகளின் சாராம்சம்" பற்றிய பட்டியல் சுற்றறிக்கையில் இணைக்கப்பட்டுள்ளது:

1950 அக்டோபர் 16 முதல் பாபாவிற்கு சேவை செய்ய முடிவு செய்த அனைவரும்...

1) **தங்களுக்கு நேரிடும் எதற்கும் நிச்சயமாக, பாபாவை பொறுப்பாகக் கருதக்கூடாது.**
2) **பாபா அற்புதங்களை நிகழ்த்துவார் என்றோ, அவருடைய ஆன்மீகத் திறவுகோலைப் பயன்படுத்துவார் என்றோ, அவர்கள் மீது அவருடைய கருணைமிகு பார்வை இருக்கும் என்றோ எதிர்பார்க்கக் கூடாது.**
3) **பாபாவிடமிருந்து எந்தவகையான ஆன்மீக அல்லது பொருள் சார்ந்த பலனையும் எதிர்பார்க்கக் கூடாது.**
4) **எவருடனும் காமச்செயல்களில் ஈடுபடக்கூடாது.**
5) **எவரிடமிருந்தும் எவருக்காகவும், பாபாவிற்காகக் கூட பணம் வாங்கக்கூடாது.**
6) **அரசியலில் எந்த அக்கறையும் இருக்கக்கூடாது.**
7) **கோபத்தை வார்த்தையால் அல்லது செயலால் வெளிப்படுத்தக்கூடாது.**
8) **நியாயமற்ற முறையில் விமர்சிக்கக் கூடாது.**
9) **எந்த சூழ்நிலையிலும் பொய் சொல்லக்கூடாது.**
10) **பாபாவிற்கோ அல்லது தமக்கோ மரியாதை செலுத்துவதை ஏற்கவோ அல்லது வேண்டுமென்றே சூழ்நிலைகளை உருவாக்கவோ கூடாது.**
11) **எல்லாவிதமான ஏமாற்றங்களுக்கும் துன்பங்களுக்கும் தயாராக இருக்க வேண்டும்.**

1950 அக்டோபர் 16 முதல் பாபாவிற்கு சேவர்களாக இருக்க முடிவு செய்பவர்கள், தத்தமது சுய விருப்பத்தின் பேரில் இந்த முடிவை எடுத்திருப்பதாகவும், அதன் விளைவு எதுவாக இருந்தாலும், அவர்கள் மட்டுமே அதற்குப் பொறுப்பு என்று பாபாவின் முன்னிலையில், கடவுளுக்கு முன்பாக ஆணித்தரமாக அறிவிக்க வேண்டும்.

1950 அக்டோபர் 16ஆம் தேதி முதல், அவர் விரும்பியபடி புது வாழ்வை வாழ கடவுள் அவருக்கு தைரியத்தையும் பலத்தையும் தருவார் என்று தான் உணர்ந்ததாக, பாபா கூறி முடித்தார்.

சுற்றறிக்கைகளை அடையப்பெற்ற, இந்தியா முழுவதும் உள்ள அவரது

அன்பர்களும் சீடர்களும், தங்கள் பிரியமான குருநாதரை மீண்டும் ஒருமுறை காணும் வாய்ப்பில் பரவசமடைந்தனர்!

பாபா மும்பையில் தங்கியிருந்த வேளையில், அவரது அறிவுறுத்தலின் பேரில், எரச், பெண்டு இருவரும் அலோபாவை சந்திக்கச் சென்றனர். திட்டம் 'ஒன்று-பி'யின் கீழ் சத்தாராவை விட்டு வெளியேறிய அலோபா, ஈரானி உணவகம் ஒன்றில் காசாளராகப் பணிபுரிந்து வந்தார். மஹாபலேஷ்வரில் நடக்கவிருக்கும் கூட்டத்தில், மூன்று திட்டங்களும் ரத்து செய்யப்படும்; ஆனால் அலோபா மும்பையில் தொடர்ந்து வாழ விரும்புவதைக் கண்டு, பாபா அவரை அங்கேயே இருக்க அனுமதித்தார். அக்டோபர் கூட்டத்தில் கலந்து கொள்வதிலிருந்து பாபா அவருக்கு விலக்களித்தார், மேலும் அலோபா 'வலையிலிருந்து தப்பித்து விட்டதால்' நிம்மதியடைந்தார். ஆனால் அவரது மனம் சுதந்திரத்தை நாடினாலும், அவரது இதயம் பறிக்கப்பட்ட நிலையில், அலோபா எப்படித் தப்பிக்க முடியும்? இறுதியில், இதயம் வென்றது, மேலும் பாபாவுடன் நிரந்தரமாக வந்திணைய அலோபா திரும்பி வந்த விதத்தைக் காணலாம்.

கூட்டத்திற்கான அனைத்து ஏற்பாடுகளும் முடிவடைந்த பிறகு, பாபா செப்டம்பர் 14 அன்று, ஆண், பெண்மணிகளுடன் சத்தாராவிற்குத் திரும்பிச் சென்று, அடுத்த இரண்டு வாரங்கள் அங்கேயே இருந்தார்.

செப்டம்பர் 25ஆம் நாள், ஆதி சீனியர் சத்தாராவிற்கு அழைக்கப்பட்டார்; அன்று மதியம் 1:00 மணிக்கு பாபாவுடன் நேர்காணல் ஒன்று நடைபெற்றது. பாபாவிற்கு உடல்நிலை சரியில்லாததால், சில ஹோமியோபதி மருந்துகளை கொடுக்க இருந்த ஆதி ஜூனியருடன் 29ஆம் தேதி திரும்பி வருமாறு அவருக்கு அறிவுறுத்தப்பட்டது.

1950 அக்டோபர் 1ஆம் நாள், ஆண், பெண்மணிகள் மற்றும் செல்லக் குதிரை பேகத்துடன் பாபா மஹாபலேஷ்வருக்குச் சென்று, ஆகா கான் பங்களாவில் தங்கினார்.

அக்டோபர் மாத கூட்டத்திற்காக அழைக்கப்பட்ட அனைத்து அன்பர்களும் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்தனர், பாபா அதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் கண்காணித்துக் கொண்டிருந்தார். கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக இந்தியா முழுவதிலுமிருந்தும் கிட்டத்தட்ட 200 அன்பர்களும் பக்தர்களும் 15ஆம் தேதி மாலை மஹாபலேஷ்வருக்கு வந்தனர்.

அக்டோபர் 16, திங்கட்கிழமை காலை 6:45 மணியளவில், ஆகா கான் தோட்டத்தில் அமைந்த ஃபுளோரன்ஸ் ஹாலின் (FLORENCE HALL) ஆண்கள் குடியிருப்புக்கு வெளியே அனைவரும் கூடியிருந்தனர். சிது, ஜங்ளே, ஸவக் கொத்வால், காளேமாமா, பாலா தம்பத், பாதிரி ஆகியோர் மெஹராபாத்திலிருந்து வந்திருந்தனர். கேஷவ் நிகம், கயா பிரசாத் கரே, பாபு ராம்பிரசாத், பவானி பிரசாத் நிகம், ராய்ஸாஹேப் ராமஷங்கர், லக்ஷ்மிசந்த் பாலிவால் மற்றும் பரமேஷ்வரி

நிகம் (புக்கார்) ஆகியோர் ஹமீர்பூரிலிருந்து வந்திருந்தனர். (புக்கார் கடைசியாக பாபாவை ஏற்றுக்கொண்டார்.) ரானோ, கிட்டி இருவரும் மும்பையிலிருந்து கூட்டத்திற்கு அழைக்கப்பட்டனர்.

காடேக்கரும், டாக்டர் கனியும் பூனாவிலிருந்து அழைத்து வந்த சில புது நபர்களில் பாடகர் மதுசூதன், கிருஷ்ணா பண்டெலு, வி.ஆர். படே, லக்ஷ்மண் தாடே, ரங்கோலே, பிரதாப் கங்கன்நாத் அஹிர் என்ற அனாதை (அன்று அவரது 15ஆவது பிறந்த நாள்) ஆகியோர் அடங்குவர். மூன்று ஆண்டுகளுக்கு முன்பு சூரத்தில் பாபாவின் தரிசனத்தைப் பெற்ற கோவாஸ் வெஸுனாவும் வந்திருந்தார்.

இதர அன்பர்களும் பக்தர்களும் அஹமதுநகர், பூனா, மும்பை, நாக்பூர், ஸாவ்னேர், டெல்லி, டெஹ்ராடூன், நாசிக், கராச்சி மற்றும் பிற இடங்களிலிருந்தும் வருகை தந்தனர்.

ஒவ்வொருவரையும் தன்னிடம் அழைத்து, பாபா அவரை அன்புடன் அரவணைத்து, அவரது இதயத்தில் ஆனந்த தென்றலைப் பரவச்செய்தார். ஆதி சீனியர் பாபாவின் அருகில் வந்த சிலரை அறிமுகப்படுத்தினார். பாபாவின் பாதங்களைத் தொட்டு வணங்கத் தடை இருந்ததால், மினூ கராஸின் சகோதரர் அடேல் அதை அறியாமல் பாபாவைத் தலை தாழ்த்தி வணங்கினார். பாபாவும் உடனே அவரை அவ்வாறே வணங்கினார், ஆனால் மினூ தனது சகோதரருக்கு புது வாழ்வின் நிபந்தனைகளைப் பற்றி தெரியப்படுத்தவில்லை என்று சீற்றமடைந்தார்.

அந்த வேளையில், பாபாவின் விருப்பப்படி, ஏழு மணியளவில் அனைவரும் அரங்கில் கூடியதும், கதவுகள் மூடப்பட்டன. குஸ்தாஜி அரங்கத்தை நோக்கி நடந்து வருவதைக் கண்ட விஷ்ணு வாசலை வேகமாக மூடவில்லை. இதற்கிடையில், அழைக்கப்படாத இருவர் உள்ளே நுழைந்து, பாபாவை அணுகி அவரது பாதங்களைத் தொட்டனர். பாபா உடனே அவர்கள் ஒவ்வொருவரையும் மூன்று முறை வணங்கினார். அவர்கள் வெளியே அழைத்துச் செல்லப்பட்ட பிறகு, பாபா மேலும் வருத்தமடைந்து, விஷ்ணுவைக் கடிந்து கொண்டார், **"கடவுள் வாசலை நெருங்கி வருவதைப் பார்த்திருந்தாலும், அவர் உள்ளே நுழையும் வரை காத்திராமல் கதவை மூடியிருக்க வேண்டும்."**

பாபா உடனே தன்னைக் குறிப்பிட்டு, **"நான் திடீரென கோபமடைந்தேன், இது நல்லதல்ல"** என்று ஒப்புக்கொண்டு, ஒருவரிடம் அவரை அறையும்படிக் கட்டளையிட்டார், அதை அந்த நபர் உடனடியாகச் செய்தார், ஆனால் மெதுவாகச் செய்ததால் பாபா மகிழ்ச்சியடையவில்லை; எனவே மினூ கராஸிடம் (முன்னாள் போலீஸ்காரர்) அறையுமாறு கூறியபோது, அவர் பாபாவை அறைந்ததில் கன்னம் சிவந்தது. பாபா, மினூவின் கீழ்ப்படிதலைப் பாராட்டி அவரைத் தழுவினார்.

பாபா தனது நாற்காலியில் அமர்ந்து இவ்வாறு எடுத்துரைத்தார்: **"சில மணிநேரங்களுக்காக, நானும் எனது தோழர்களும் பழைய வாழ்க்கைக்குள் நுழைந்தோம். திட்டங்கள் 'ஒன்று', 'ஒன்று-பி', 'ஒன்று-சி' மற்றும் 'இரண்டு' இப்போது முடிந்துவிட்டன. அதனால், நான் திட்டங்கள் 'ஒன்று-பி', 'ஒன்று-சி'யின் கீழ் இருப்பவர்களிடமிருந்து பணத்தை ஏற்றுக்கொள்ளமாட்டேன்."**

ஒரு வருடத்திற்கு முன்பு தொடங்கிய புது வாழ்வை தான் விரும்பியபடி வாழ முடியாமல் போனதற்கு, பாபா, கடவுளிடம் மன்னிப்புக் கோரினார். அவர் விரும்பியபடி புது வாழ்வு நிபந்தனைகளுக்கு இணங்கி நடக்க முடியாமல் போனதற்காக, அனைத்து புது வாழ்வு தோழர்களையும் அவர் மன்னித்தார், மேலும், தோழர்களையும் அவரை மன்னிக்கும்படிக் கேட்டபோது, அவர்கள் அதைச் செய்தனர்.

தொடர்ந்து டான் பாபாவின் உபதேசத்தை வாசித்தார்:

இந்த சில மணி நேரத்தில் பழைய வாழ்வில் இருப்பதால், உறுதிபடுத்தப்பட்ட தெய்வீக உண்மைகளாக நான் கருதுவதை உங்களுக்குக் கூறுகிறேன்:

அடிப்படையில், நாம் அனைவரும் ஒன்று. நாம் வேறுவிதமாக இருக்கிறோம் என்ற உணர்வு அறியாமையால் ஏற்படுகிறது. ஆன்மா தன்னைத்தானே உணர்வுப்பூர்வமாக அறிய விரும்புகிறது; ஆனால் இறுதி இலக்கை நோக்கிய அதன் பயணத்தில், அது படைப்பைத் தவிர்த்து தன்னிச்சைப்படி தானாக உணர முடியாது, அது தனிப்பட்ட அகங்காரமாக சேகரிக்கும் அனுபவத்திற்கு உட்பட்டாக வேண்டும், மேலும், இது அனைத்தும் கற்பனையில் நிகழ்வது. எனவே, ஆன்மா, அறிவிற்கு பதிலாக அறியாமையை ஆரம்பத்தில் எதிர்கொள்கிறது.

இரட்டை தன்மையுடைய வடிவங்களும், மாயையான படைப்புகளும் அறியாமையின் விளைவாகும். பிறப்பும் இறப்பும், இன்பமும் துன்பமும், புண்ணியமும் பாவமும், நல்லதும் தீயதும் - அனைத்தும் அதே அறியாமையின் வெளிப்பாடு. நீங்கள் ஒருபோதும் பிறக்கவுமில்லை, இறக்கவும் மாட்டீர்கள்; நீங்கள் ஒருபோதும் துன்பப்படவுமில்லை, துன்பப்படவும் மாட்டீர்கள்; கற்பனையில் மட்டுமே இந்தத் தனித்தன்மை இருப்பதால், நீங்கள் எப்போதும் இருந்தீர்கள், இருப்பீர்கள்.

அரசன் - ஆண்டி, ஏழை - பணக்காரன், உயரம் - குள்ளம், வலிமை - பலவீனம், அழகு - அசிங்கம், கொலை செய்தல் - கொல்லப்படுதல் போன்ற எண்ணற்ற வடிவங்களை ஆன்மா அனுபவிக்கிறது.

இந்த அனுபவங்கள் அனைத்தையும் ஆன்மா - அது உண்மையில் ஒன்றாக, பிரிவின்றி இருந்தாலும் - தன்னுள்ளே தனித்தன்மையை, கற்பனை செய்யும் வரை அனுபவிக்க வேண்டும். ஆன்மா இந்த மாயையான

அனுபவங்களின் மனப்பதிவுகள் இல்லாமல் இருக்கும் போது, அது ஒன்றாக, பிரிவின்றி, உண்மையான, எல்லையற்ற ஆன்மாவுடன் அதன் ஐக்கியத்தை முழுமையாக உணர்ந்து, அதன் அசலான தோற்றத்தில் இருந்ததைப் போலவே நிர்வாண நிலையில் இருக்கும்.

ஆன்மா பல்வேறு பாதைகள் மூலம் மனப்பதிவுகளின் பிணைப்பிலிருந்து விடுபடுகிறது. இந்தப் பாதைகளில் அன்பு மிகவும் முக்கியமானது, இது இறைநிலையை அடைய வழிவகுக்கிறது. இந்த அன்பின் மூலம், ஆன்மா கடவுளில் முழுமையாக லயிக்கிறது, இறுதியில் தன்னை முற்றிலும் மறந்துவிடுகிறது. அப்போதுதான், திடீரென, எல்லையில்லா அறிவு (ஞானம்) மின்னல் போல வேகமாக வந்து, எதிர்கொள்ளும் அனைத்தையும் எரித்து சாம்பலாக்குகிறது. இந்த அளவிறுதியற்ற அறிவு (ஞானம்), மாயைகள், சந்தேகங்கள் மற்றும் கவலைகளை வேரோடு அழிக்கிறது, மேலும் நிரந்தரமற்ற துன்பங்கள் உடனடியாக நிரந்தர அமைதி மற்றும் நித்திய பேரின்பத்தால் மாற்றப்படுகின்றன, இதுவே அனைத்து உயிர்களின் இறுதி இலக்காகும். ஆன்மா இப்போது, அதன் மாயைகளிலிருந்து விடுபட்டு, அதன் அசல் தன்மையை உணர்கிறது.

நாம் இதில் நம்பிக்கை கொள்ள வேண்டும் என்ற தேவை இல்லை, ஏனெனில் இந்த அறிவு நம்பிக்கைக்கும் ஆசைக்கும் அப்பாற்பட்டது. நாம் இதை காரண காரிய அடிப்படையில் விவாதிக்க வேண்டாம், ஏனெனில் இந்த அறிவைப் புரிந்துகொள்ளவோ அல்லது சிந்தித்து பார்க்கவோ முடியாது. நாம் சந்தேகப்படவும் வேண்டாம், ஏனெனில் இந்த அறிவு நிச்சயத்திலும் நிச்சயமான உறுதியாக இருப்பது. ஐம்புலன்களின் வாழ்க்கையை நாம் வாழ வேண்டாம், ஏனெனில் காமம் நிறைந்த, பேராசை மிக்க, பொய் மற்றும் தூய்மையற்ற மனம் இந்த அறிவை அடைய முடியாது. நாம், நமது ஆன்மாவின் ஆன்மாவாக கடவுளை நேசிப்போம், இந்த அன்பின் உச்சத்தில்தான் இந்த அறிவு உள்ளது.

பரிபூரண தெய்வீக நிலையை அடைந்தவர்கள், இந்த அறிவை அவர்கள் விரும்பும் எவருக்கும், எந்த நேரத்திலும் வழங்க முடியும். நாம் அனைவரும் விரைவில் இந்த அறிவை அடையப்பெறுவோம்!

பாபா, தனது கைகளால், அவரது உரையின் பிரதியை அங்கிருந்த ஒவ்வொருவருக்கும் விநியோகித்தார். அதன் உள்ளடக்கங்களை மிக கவனமாகப் படிக்குமாறும், எவரேனும் அதைப் புரிந்து கொள்ள முடியாவிடில், உடனடியாக நகலை அவரிடம் திருப்பித் தருமாறும் அவர் கேட்டுக் கொண்டார். அனைவரும் தங்கள் பிரதிகளை அவர்களுடனே வைத்துக் கொண்டனர்.

பாபா தனது பழைய சீடர்கள், பக்தர்கள் அனைவருக்கும் வணக்கம் தெரிவித்தார், மேலும் அவரது மஸ்த் மற்றும் வறியவர்களுடனான பணிக்காக, பண உதவிகளை ஏற்றுக்கொண்டார். பங்களிப்பு மொத்தத்தில் ரூ **23,566.75.**

பாபாவிற்கு நன்கொடைகள் வழங்கப்பட்டபோது, தீவிர கம்யூனிஸ்ட் தலைவர் பரமேஷ்வரி நிகம், தன்னிடம் இருந்த பணம், மேலும் ஒரு துண்டு காகிதத்தில், 'இந்த உடல், மனம், செல்வம் மற்றும் எனக்குச் சொந்தமான அனைத்தையும் ஏழைகளுடனான பணிக்காக நான் அவருடைய கைகளில், வழங்குகிறேன்' என எழுதி பாபாவிடம் கொடுத்தார்; பின்னர் அவர் தனது ஆடைகளைக் களைந்து, இடையில் லங்கோட்டியை மட்டும் அணிந்து, அவற்றையும் வழங்கி, அவர் தனது குருநாதருக்கு முன்னால் தரையில் சாஷ்டாங்கமாக விழுந்து, கண்ணீர் வடிய அழுதார்.

காலம் இதைக் குறிப்பிட்டு இவ்வாறு எடுத்துரைத்தது: "ஒரு காலத்தில் பாபாவைக் கடுமையாக எதிர்த்த இந்த மனிதர் இப்போது மாறிவிட்டார்! அவருடைய இதயத்தில் என்ன நடந்தது என்பதை யாரால் புரிந்து கொள்ள முடியும்?

உண்மையில், இது புரிந்து கொள்ள வேண்டிய விஷயம் அல்ல; உள்ளூர உணர வேண்டிய விஷயம். இது பிரியமான பாபாவின் அன்பின் அதிசயம் - ஆன்மாவை அமைதியாக எழுச்சியுறச் செய்து, பாறை போன்ற அகங்கார மனதை மென்மையுடன் துண்டுகளாக உடைக்கும் அன்பின் அதிசயம்!"

பரமேஷ்வரியின் தலை அன்பிற்குரியவரின் பாதங்களில் எப்போதும் தாழ்மையுடன் வணங்கி நின்றது. முதலில் பாபாவை அவதூறாகப் பேசுவதில் இருந்த அதே உறுதியுடன் இன்று பாபாவின் செய்தியைப் பரப்ப வேண்டும் என அவரது இதயம் கொழுந்துவிட்டு எரிந்தது!

பரமேஷ்வரியின் செயலைக் கண்டு பாபா மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்: **"எனக்கு நீங்கள் வழங்கிய அனைத்தையும் நான் ஏற்றுக்கொள்கிறேன்"** என்று எழுத்துப்பலகை மூலமாக பாபா எடுத்துரைத்தார். ஜால்பாய், பாபாவிடம் ஆடையைக் கொடுத்தபோது, பாபா அதைக் கட்டித் தழுவி முத்தமிட்டார், பின்னர் அவரது பங்களிப்பாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு சிறிய தொகையைத் தவிர, அவருடைய எல்லா பணத்தையும் சேர்த்து பரமேஷ்வரியிடம் திருப்பிக் கொடுத்தார். பரமேஷ்வரி, 'புக்கார்' (என்றால் அழைப்பு) என்ற தலைப்பில் வெளியான இந்தி வாராந்திர அரசியல் செய்தித்தாளின் ஆசிரியராக இருந்தார், மேலும் பாபா அவருக்கு இந்தப் புனைப்பெயரைக் கொடுத்த நாளிலிருந்து '**புக்கார்**' என்று அழைக்கப்பட்டார்.

இந்த அன்பளிப்பைப் பற்றி, பாபா கூட்டத்தில் இவ்வாறு தெரிவித்தார்: "**இந்தப் பரிசுகளை நான் அக்டோபர் 21ஆம் தேதியிலிருந்து தொடங்கும் மஸ்துகள் மற்றும் ஏழைகளுடனான எனது பணிக்காகப் பயன்படுத்துவேன்**."

தானம் செய்ய விரும்பும் ஒவ்வொரு மனிதனும் முன்வந்த பிறகு, பதினைந்து நிமிட இடைவேளை வழங்கப்பட்டது.

முந்தைய நாள் மாலை, பழைய வாழ்க்கை சீடர்களுக்கு பாபாவிடமிருந்து இந்தச் செய்தி வந்தது: **"உங்களில் எவருக்கேனும் எனது கட்டளைகளையும் அறிவுறுத்தல்களையும் நிறைவேற்றுவதில் ஏதேனும் சிரமங்கள் இருந்தால், அவற்றை ஒரு காகிதத்தில் எழுதி, நாளை அந்தப் பட்டியலை என்னிடம் எடுத்துவாருங்கள்."** சிலர் தங்களுடைய பிரச்சினைகளை எழுதி, அவர்கள் மீண்டும் ஒன்றுகூடிய பிறகு, பாபாவிடம் அனைத்து விபரங்களும் ஒப்படைக்கப்பட்டன, அவர் அவற்றை ஒவ்வொன்றாகக் கையாண்டார்.

கேஷவ் நிகமுக்கு ஒரு வருடத்திற்குப் பின்பற்ற மூன்று உத்தரவுகள் வழங்கப்பட்டிருந்தன:

1) **பணத்தைத் தொடக்கூடாது;**
2) **எந்தப் பெண்ணையும் தொடக்கூடாது;**
3) **வாரத்தில் ஒரு நாள் 24 மணிநேரம் உபவாசம்** கடைபிடிக்க **வேண்டும்.**

கேஷவ், பாபாவிடம், இரண்டாவது உத்தரவை ஆறு மாதங்களுக்கு முழுமையாக நிறைவேற்றியதாகவும், அதன் பின்னர் அதைச் செய்ய இயலவில்லை என்றும் ஒப்புக்கொண்டார். இருப்பினும், அவர் இதர இரண்டு உத்தரவுகளுக்கும் 100 சதவீதம் கீழ்ப்படிந்தார். கேஷவின் வார்த்தைகளில் பாபா தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் விதத்தில் அவருக்கு ஆரஞ்சு பழம் ஒன்றைப் பிரசாதமாக வழங்கினார், மேலும் வாரத்தில் ஒரு நாள் மூன்றாவது உத்தரவான உபவாசத்தை மட்டுமே கடைபிடிக்குமாறு கட்டளையிட்டார்.

இதைத் தொடர்ந்து ஒரு நகைச்சுவையான சம்பவம் நிகழ்ந்தது. தாராபாய் (TARABAI) என்ற இளம் பெண்ணை திருமணம் செய்து கொள்ள பங்க்ராஜ், பாபாவின் அனுமதியைப் பெற்றிருந்தார், ஆனால் பாபாவின் முன்னிலையில் இருவரும் கைகளைக் குலுக்கிய பின்னரே திருமணம் செய்துகொள்ள வேண்டும் என அப்போது அறிவுறுத்தப்பட்டது. பாபா புது வாழ்வு பயணத்தில் புறப்பட்டுச் சென்றதால், திருமணம் ஓராண்டுக்கும் மேலாக நடைபெற வாய்ப்பில்லாமலாயிற்று. மேலும் மஹாபலேஷ்வருக்கு ஆண் தோழர்கள் மட்டுமே அழைக்கப்பட்டிருந்ததால், பங்க்ராஜ், தான் திருமணம் செய்து கொள்ள விரும்பிய தனது வருங்கால மனைவியை அழைத்து வர முடியவில்லை.

பாபா இந்தப் பிரச்சினைக்கு ஒரு புதுமையான வழியைக் கையாண்டார். தாராபாயின் இடத்தில் குஸ்தாஜியை, பங்க்ராஜுக்கு அருகில் நிற்க வைத்து, பின்னணியில், காளோமாமா சில மந்திரங்களை உச்சரிக்குமாறு செய்தார்; 'மாற்றாள் மணமகளும்' மணமகனும் கைகளைக் குலுக்கி, மாலை அணிவித்து,

ஒருவரையொருவர் தழுவினர்; பாபாவை வணங்கிய பிறகு வினோதமான திருமணம் நடந்து முடிந்தது! **"நான் உங்களைத் தாராபாயுடன் மணம்முடித்து வைத்தேன்"** என்று பாபா, பங்கராஜிடம் கூறினார். **"இப்போது நீங்கள் அவரைத்** (தாராபாயை) **திருமணம் செய்து கொண்டீர்கள். மேலும் நான் இதில் ஒன்றும் செய்வதற்கில்லை. நீங்கள் வீட்டிற்குத் திரும்பிச் சென்றதும், உங்களுக்கு விருப்பமான முறையில் அவரைத் திருமணம் செய்துகொள்ளலாம்."**

நாக்பூரை சேர்ந்த நானா கேர் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் உபவாசம் இருக்கவும், ஏழை பரதேசி ஒருவருக்கு உணவளிக்கவும் அறிவுறுத்தப்பட்டிருந்தார். தற்போதைய வாய்ப்பைப் பயன்படுத்தி, நோய்வாய்ப்பட்டால் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டு எழுதியிருந்தார். **"அப்படியானால், உபவாசம் இருக்கவேண்டாம், ஏழை பரதேசிக்கு உணவும் வழங்கவேண்டாம்"** என்று பாபா அவருக்கு உபதேசம் வழங்கினார்.

பாபாவின் செய்திகளைப் பரப்பும் பணியைப் பற்றி அவருக்குத் தொடர்ந்து அறிக்கைகளை அனுப்புமாறு போ:ஃபலி பிளீடருக்கு, பாபா உத்தரவுகளை வழங்கியிருந்தார். போ:ஃபலி பல்வேறு இடங்களில் கிராம மக்களிடையே கணிசமான அளவு பணிகளைச் செய்திருந்தார், மேலும் பலரை மெஹர் பாபாவின் அரவணைப்பில் கொண்டு வந்தார். ஆனால் புது வாழ்வு பயணத்தில் பாபா சென்றுவிட்டதால், போ:ஃபலியால் அவருக்கு எந்த அறிக்கையும் அனுப்ப முடியாமலாயிற்று.

இன்றைய சூழ்நிலையில் என்ன செய்ய வேண்டும் என்று போ:ஃபலி வினவியதற்கு பாபா, **"நீங்கள் இப்போது அறிக்கைகளை அனுப்ப வேண்டிய தேவையில்லை, எனக்கு எல்லாம் தெரியும்!"** என்றார்.

பாபாவின் வார்த்தைகள் போ:ஃபலியை வெகுவாகக் கவர்ந்தது, அதன் பின்னர் அவர் பாபாவிற்கு ஒரு வார்த்தைக் கூட எழுதவில்லை. மேலும் அவர், பாபா சர்வ ஞானமும் படைத்தவர் என்ற நம்பிக்கையில் மிகவும் உறுதியாக இருந்ததால், கல்லூரிப் படிப்பை முடித்து, முதுகலைப் பட்டம் பெற்ற தனது அருமையான இளம் மகனின் சோக மரணத்தைப் பற்றி பாபாவிடம் கூட தெரிவிக்கவில்லை. போ:ஃபலி அனைவருக்கும் மிகவும் எளிமையான முறையில் அறிவித்தார்: "மெஹர் பாபாவிற்கு எல்லாம் தெரியும். அவருடைய விருப்பம் இல்லாமல் எதுவும் நடக்காது, அதனால் எழுத வேண்டிய தேவைதான் என்ன?"

இரண்டரை ஆண்டுகளுக்கு முன்பு, மதராஸில், நாக்பூரைச் சேர்ந்த பி.பி. காப்ஸேயிடம் (B.B. KAPSE), ஒரு நாள் அவரது வீட்டிற்கு விஜயம் செய்வதாக பாபா வாக்குறுதி அளித்திருந்தார். புது வாழ்வில் பாபா எவரையும் சந்திக்காததால், இந்த வாக்குறுதி எப்படி நிறைவேறும் என்று காப்ஸே ஆச்சரியப்பட்டார். அவர்,

மஹாபலேஷ்வரில் பாபாவிடம் இந்தக் கேள்வியை முன்வைத்த போது, பாபா இவ்வாறு பதிலளித்தார், **"நான் எனது வாக்குறுதியை நிச்சயமாக நிறைவேற்றுவேன். கவலைப்பட வேண்டாம். ஒருவேளை புது வாழ்வில் நான் உங்கள் இல்லத்திற்கு உணவுக்காக யாசிக்க வருவேன்."**

ஹபிபுல்லா பெய்க் 1949ஆம் ஆண்டின் பிற்பகுதியில் பாபாவை சந்திக்க மெஹராபாத் சென்றிருந்தார், ஆனால் அந்த நேரத்தில் பாபா அவரது புது வாழ்வு பயணத்தைத் தொடங்கியிருந்ததால், அவரைப் பார்க்க முடியாமல், ஹபிபுல்லா ஸ்ரீநகருக்குத் திரும்பிச் சென்றார். அவர் தனது தந்தையின் மரணத்திற்குப் பிறகு, தனது குடும்பத்தைப் பற்றி கவலைப்பட்டு, பாபாவின் ஆலோசனையை நாடினார். வெளியாட்கள் எவரும் உள்ளே நுழையாமல் இருப்பதைக் கண்காணித்த விஷ்ணு, மண்டபத்திற்கு வெளியே காவல்புரிந்தார். கூட்டத்திற்கு ஹபிபுல்லா அழைக்கப்படவில்லை என்றாலும், அவர் எப்படியோ கூட்டத்திற்குள் நுழைந்து அமைதியாக அமர்ந்திருந்தார். ஆனாலும் பாபாவின் கூரிய கண்களிலிருந்து எவரும் தப்புவதில்லை. ஹபிபுல்லாவை நோக்கி **'எதற்காக வந்தீர்கள்?'** என்று கேட்டார்.

"உங்கள் ஆசீர்வாதத்திற்காக நான் வந்துள்ளேன், எனக்கு வேலை எதுவும் இல்லை, உண்மையில் கையில் பணமில்லாமல் இருக்கிறேன்" என்று ஹபிபுல்லா பதிலளித்தார்.

புது வாழ்வில் 'ஆசீர்வாத சமாச்சாரம்' எதுவும் இல்லாததால், பாபா, டாக்டர் கனியிடம் அவருக்கு ஆசீர்வாதம் ஒன்றை வழங்குமாறு கேட்டுக்கொண்டதும், கனி அவ்வாறே செய்தார். வெளியே செல்ல ஆயத்தமான ஹபிபுல்லாவிடம் பாபா, **"நீங்கள் எனது அண்டை வீட்டுக்காரராக இருப்பீர்கள்"** என்று கூறினார். ஹபிபுல்லாவிற்கு அப்போது எதுவும் புரியவில்லை; ஆனால், விரைவில் பூனாவில் காஷ்மீர் ஸ்டோரில் (KASHMIR STORE) மாதம் ரூ 60 சம்பளத்தில் வேலை கிடைத்தது; பாபா கூறியதற்கிணங்க, அவருடைய குடும்ப இல்லத்திலிருந்து சில தெருக்களுக்கு அப்பால் அந்தக் கடை இருந்தது. டாக்டர் கனியின் ஆசியும் பயனுள்ளதாக அமைந்தது!

அப்போது, விஷ்ணுவை அழைத்துவரக் கூறி, ஹபிபுல்லாவை உள்ளே அனுமதித்ததற்காக பாபா அவரைக் கண்டித்தாலும், அவர் கூட்டத்திற்காக அழைக்கப்படவில்லை என்று விஷ்ணுவிற்குத் தெரியாது.

பூனாவைச் சேர்ந்த, பாபாவின் தீவிர பக்தரான டி.எஸ். ஸுலே (D.S. SULAY) என்ற முதியவர், பாபாவிடம் கேட்காமலேயே ரகசியமாக ஒரு வாழைப்பழத்தை எடுத்து சாப்பிட்டார். பாபா அதைப் பார்த்தும், எதுவும் கூறவில்லை. சிறிது நேரம் கழித்து, பாபா ஒரு வாழைப்பழத்தை உரித்து ஸுலேயிடம் கொடுத்தார். ஸுலே வெட்கத்தில் தலை குனிந்து, பாபா, அவரது ஒவ்வோர் எண்ணத்தையும்

அறிந்திருப்பதை உணர்ந்தார்.

இருக்கையின் பின் சுவரில் அட்டைப் பலகை ஒன்று தொங்கிக்கொண்டிருந்தது. அதன் நடுவில் பாபாவின் புகைப்படம் இருந்தது; வலது புறம் - **'பழைய வாழ்க்கை - பரிபூரண தெய்வீகம், தெய்வீக மனிதன்'** (OLD LIFE – PERFECT DIVINITY, DIVINE MAN) என்றும் இடது புறம் - **'புது வாழ்வு - பரிபூரண பணிவு, சாதாரண மனிதன்'** (NEW LIFE – PERFECT HUMILITY, ORDINARY MAN) என்றும் எழுதப்பட்டிருந்தது.

பாபா, குழுவின் கவனத்தைத் தனது எழுத்துப்பலகையை நோக்கி ஈர்த்து, பின்வரும் செய்தியை வழங்கினார் - டான் ஆங்கிலத்திலும் தேஷ்முக் இந்தியிலும் மொழிபெயர்த்தனர்:

இன்று நான் சில மணிநேரங்களுக்கு எனது பழைய வாழ்க்கைக்குத் திரும்பியுள்ளேன். எனது பழைய சீடர்களும், பக்தர்களுமான உங்கள் அனைவரையும் பார்ப்பதில், சந்திப்பதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன், மேலும், நீங்கள் என் மீது வைத்திருக்கும் அன்பை நான் ஆழமாக உணர்கிறேன். எனது பழைய சீடர்கள் மற்றும் பக்தர்கள் மீது எனக்குள்ள அன்பு எல்லையற்றது என்பதை நீங்கள் அனைவரும், இன்று இங்கு இல்லாதவர்களும் அறிய வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

1949 அக்டோபர் 16 அன்று, நான் எனது புது வாழ்வைத் தொடங்கினேன். இன்று, நான் எனது தோழர்களுடன் புறப்பட்டு சரியாக ஒரு வருடம் ஆன நிலையில், எனது புது வாழ்வின் கொள்கைகளை நான் விரும்பியபடி வாழ முடியவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். எனது தோழர்கள் புது வாழ்வின் நிபந்தனைகளுக்கு நான் எதிர்பார்த்த கண்டிப்பான கட்டுப்பாடுகளுடன் இணங்க முடியவில்லை என்றாலும், நியாயமான முறையில், ஒவ்வொருவரும் அவரவர் திறன்கள் மற்றும் புரிதலுக்கு ஏற்ப அவர்களால் முடிந்தவரை முயற்சித்துள்ளனர் என்று நான் கூற விரும்புகிறேன்.

எனவே, இந்த ஆண்டு தோல்வியானதாக இல்லாமல், கண்ணைத் திறக்கும் ஆண்டாக அமைந்தது என்று நான் உணர்கிறேன். கோபம் மற்றும் பிற சோதனைகளுக்கு அடிபணிவதில் எனது சொந்த தவறையும், ஒட்டுமொத்த புது வாழ்வு நிபந்தனைகளை உறுதியுடன் செயல்படுத்த இயலாததையும் ஒப்புக்கொள்கிறேன்; தோழர்களுக்கான எனது உணர்வுகளுக்கு நான் அடிபணிந்ததன் விளைவாக, மெஹராபாத்தில் நான் எடுத்த அசல் உறுதிமொழியை மாற்றியமைத்து, ஒன்று, இரண்டு மற்றும் மூன்று திட்டங்களை உருவாக்கியது அனைத்தும் அசல் நிபந்தனைகளுக்கு முரணானது.

எனது புது வாழ்வில், அவர்கள் என்னுடன் இணைவார்கள் என்ற அவர்களின் அசலான முடிவுகளை மறுபரிசீலனை செய்வதற்கான மற்றொரு வாய்ப்பை நான் இப்போது எனது தோழர்களுக்கு வழங்குகிறேன்; இது, புது வாழ்வில் என்னுடன் மீண்டும் இணைவதற்கென தோழர்கள் விரும்பி தேர்வு செய்யும் முடிவு, அல்லது விலகிச் சென்று எனது பழைய வாழ்க்கை சீடர்களாக அல்லது முற்றிலும் சுதந்திரமாக உலக வாழ்க்கையை நடத்துவதற்கான ஒரு வாய்ப்பாக அமையும். பன்னிரெண்டு மாத கால புது வாழ்வின் அனுபவத்துடன், எதிர்காலத்தில் எனது புது வாழ்வு நிபந்தனைகளை, தனிப்பட்ட தேவைகளுக்கு ஏற்றவாறு சமரசம் செய்து கொள்வதையும், அவர்களின் முயற்சியில் எந்த பலவீனம் அல்லது தளர்வையும் பொறுத்துக் கொள்ள மாட்டேன் என்று நான் அவர்களுக்கு எச்சரிக்கிறேன். எனது கட்டளைகள் மற்றும் புது வாழ்வு நிபந்தனைகளை நிறைவேற்றுவதில் நான் உறுதியாக இருக்கிறேன்.

இதையெல்லாம் மனதில் கொண்டு, அவர்களின் சொந்த பலவீனங்கள் மற்றும் கடந்த கால அனுபவங்களை நேர்மையாகக் கணக்கிட்டு - சில இனிமையானவை ஆனால் பல மாறானவை - இன்று அவர்கள் தீர்மானிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அவர்களின் ஒரு வருட அனுபவங்களின் அடிப்படையில், அவர்களின் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கான தனிப்பட்ட திறன்கள் பற்றிய ஒரு திடமான கணக்கீடு செய்வதற்கு முன்னர் அவர்கள் எந்த முடிவுக்கும் வரக்கூடாது என்பதை நான் மீண்டும் வலியுறுத்தி கூற விரும்புகிறேன்.

இதையெல்லாம் கடந்து, அவர்கள் என்னுடன் புது வாழ்வில் சேவகர்களாக சேர முடிவு செய்தால், அவர்கள் எனக்கு 100 சதவிகிதம் கீழ்ப்படிய முயற்சிக்க வேண்டும் என்பதை அறிந்திருப்பதோடு, அவர்கள் எனக்காக செய்ய வேண்டிய அனைத்தையும் முழு மனதுடன் செய்ய வேண்டும். எனது கட்டளைகளுக்கு, சேவகர்கள் கீழ்ப்படிவது தன்னிச்சையாகவும் அடிமைத்தனம் அல்லது நிர்ப்பந்தம் போன்ற உணர்வுகள் இல்லாததாகவும் இருக்க வேண்டும்.

அவர்கள் எனது விருப்பங்களை மனமார, அகமகிழ்வுடன் ஏற்று, இது அவர்களின் சுதந்திரத்தின் மீதான அத்துமீறல் என்ற எந்த வகையான உணர்வும் இல்லாமல் நிறைவேற்ற வேண்டும். இயற்கையாகவே, எனது விருப்பங்களை நிறைவேற்றுவது அவர்களின் சுதந்திரத்தைப் பறிப்பதாகக் கருதுபவர்கள், என்னுடன் புது வாழ்வில் இணையாமல், தொடர்ந்து பழைய வாழ்க்கை சீடர்களாக இருக்க அல்லது தனிப்பட்ட சுதந்திரமான வாழ்க்கையைத் தேர்ந்தெடுக்க வேண்டும். எதுவாயினும், இந்த இரண்டு தேர்வுகளில் ஒன்றை முடிவு செய்யுமாறு நான் அவர்களை வலியுறுத்துவது

மட்டுமல்லாமல், அவர்கள் ஒரு நல்ல தொடக்கத்தை உருவாக்குவதற்கு என்னால் முடிந்தவரை முயற்சிப்பேன்.

இன்று எனது புது வாழ்வில் என்னுடன் இணைந்திருப்பவர்கள் 100 சதவீத விருப்பத்துடன் எனக்கு சேவை புரிவார்கள் என எதிர்பார்க்கப்படுவது போல், எனது சேவகர்களுக்கு, பக்கச்சார்பற்ற அன்புடனும், நடுநிலை தவறாத அணுகுமுறையுடனும் நான் சேவை செய்ய முடியும் என்று நம்புகிறேன்.

இன்று முடிவுகளை மாற்றியமைப்பதன் மூலம், அனைத்து திட்டங்களும், அதாவது 'ஒன்று', 'இரண்டு', 'மூன்று' அத்துடன் 'இல்லை எனும் நபர்கள்' என்ற வார்த்தைகள் வழக்கத்தில் இல்லாமல் போய்விடும். இப்போது பழைய வாழ்க்கை சீடர்கள், 'ஏற்பாடு குழு' உறுப்பினர்கள் (அவர்களும் பழைய வாழ்க்கை சீடர்கள்) மற்றும் புது வாழ்வின் சேவகர்கள் மட்டுமே எஞ்சுவார்கள்.

எனது பழைய வாழ்க்கை சீடர்கள் என்னை அதே 'ஏக இறைவனாக' ஏற்றுக்கொள்வதாக இருந்தால், அவர்கள் தங்கள் நம்பிக்கையையும் அன்பையும் கட்டிக்காக்க முழு மனதுடன் முயற்சி செய்ய வேண்டும் என்று நான் விரும்பும் அதே வேளையில், பழைய வாழ்க்கை நிபந்தனைகளைக் கடைப்பிடிப்பது அவர்களை அடிமைத்தனத்திற்கு உள்ளாக்கி உரிமைகளைப் பறிப்பதாகக் கருதாமல், உண்மையான அன்புக்கு உகந்த வாழ்க்கையை வாழவேண்டும். நான் என்னவாக இருந்தாலும், அவர்கள் வெகுமதியை நாடாவிட்டாலும், மிகவும் இரக்கமுள்ள கடவுள் நிச்சயமாக அவர்களுக்கு ஆன்மீக ரீதியில் வெகுமதியை வழங்குவார். 'ஏற்பாடு' குழு உறுப்பினர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் தங்கள் பொறுப்புகளை இறுதிவரை நிறைவேற்றத் தேவையான மன தைரியத்தை வழங்குமாறு இறைவனை வேண்டுகிறேன்.

பழைய வாழ்க்கை சீடர்கள், 'ஏற்பாடு குழு' உறுப்பினர்கள் மற்றும் ஆசிரமங்களில் பழைய வாழ்க்கை வாழும் பெண்மணிகளைப் பொறுத்தவரை, அவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட அனைத்து அறிவுறுத்தல்களும், பொறுப்புகளும் எல்லா காலத்திற்கும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருக்கும். மேலும், அவர்கள் என்னை எந்த வகையிலும் தொடர்பு கொள்ளாதது மற்றும் என்னுடனும், என்னுடன் இருப்பவர்களுடனும் கடிதப் பரிமாற்றம் செய்யாதது குறித்த எனது அறிவுறுத்தல்கள், நான் மாறாக கட்டளையிடும் வரை, எல்லா நேரங்களிலும் அமலில் இருக்கும்.

எனது 'பழைய வாழ்க்கை' என்னை முழுநிறை கடவுளாக, தெய்வீக பரிபூரணத்தின் பலிபீடத்தில் வைக்கிறது. எனது 'புது வாழ்வு',

கடவுளுக்கும் அவருடைய மக்களுக்கும் பணிவான ஒரு சேவகனின் நிலைப்பாட்டை எடுக்கச் செய்கிறது.

எனது புது வாழ்வில், பரிபூரண தெய்வீகம் என்பது பரிபூரண பணிவின் மாற்றீடாக அமைகிறது. எனது புது வாழ்வில், நான் இறைவனைத் தேடுபவன், அன்பன் மற்றும் நண்பன். இந்த இரண்டு அம்சங்களும் - பரிபூரண தெய்வீகம் மற்றும் பரிபூரண பணிவு - கடவுளின் விருப்பத்தால் வந்தவை, மேலும் இரண்டும் கடவுளின் நித்திய ஜீவனுடன் எக்காலத்திற்கும் இணைக்கப்பட்டுள்ளன.

யார் வேண்டுமானாலும் என்னை அவர் விரும்பும் எவராகவும் என் மீது நம்பிக்கை கொள்ளலாம், ஆனால் எவரும் ஆசீர்வாதங்கள், அற்புதங்கள் அல்லது எந்த விதமான வெகுமதிகளையும் கேட்க மாட்டார்கள்.

எனது புது வாழ்வு நித்தியமானது. புது வாழ்வில் எனது சேவகர்களைத் தவிர, எவராக இருந்தாலும், அவர்கள் எங்கிருந்தாலும், அந்த வாழ்க்கையை வாழ விரும்புபவர்கள் அதன் உள்ளார்ந்த உணர்வுடனும், அர்த்தத்துடனும் சுதந்திரமாக வாழலாம்.

பாபா பின்னர் இவ்வாறு கூறி முடித்தார்: **"1950 அக்டோபர் 21ஆம் நாள் மஹாபலேஷ்வரிலிருந்து புறப்பட்டு, இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு நான் திட்டமிட்டுள்ள பயணத்தை மேற்கொள்வேன். நான் செல்லும் இடங்களில் - கோலாப்பூர், மீரஜ், ஹுப்ளி, ஹைதராபாத், மதராஸ், மும்பை, அஸ்ஸாம், வங்காளம், ஒரிஸா, மற்றும் பீகார் - மஸ்துகள் மற்றும் ஏழைகளுடன் பணிபுரிவேன்; மேலும் எனது புது வாழ்வு கட்டங்களான யாசித்தல், லங்கோட்டி மற்றும் நாடோடி வாழ்க்கை ஆகியவற்றைத் தொடர்வேன்."**

டாக்டர் டான் ஆங்கிலப் பதிப்பைப் படித்து முடித்ததும், பாபாவே அந்தச் செய்தியின் நகலை அனைவருக்கும் வழங்கி, பின்பு, லட்டுடன் தேநீர் விநியோகித்தார். சிற்றுண்டிக்குப் பின்னர், 'ஏற்பாடு குழு' உறுப்பினர்கள் செய்த பணியில் பாபா தனது திருப்தியை வெளிப்படுத்தினார்; சிரமங்கள் இருந்தபோதிலும், அவர்கள் தங்கள் பொறுப்புகளை சிறப்பாகச் செய்ததில் மகிழ்ச்சியடைந்தார்.

புது வாழ்வின் உறுதிமொழியை தனிப்பட்ட முறையில் மீண்டும் எடுக்க பாபா அரங்கை விட்டு வெளியேறினார். அவர் சில நிமிடங்களில் வெள்ளை நிற மேலங்கியை அணிந்து கொண்டு, உணவுக்காக யாசிப்பதற்கான காவி நிற தோள்பையுடன் திரும்பி வந்தார். **'தாம் இப்போது மீண்டும் புது வாழ்வுக்குள் அடியெடுத்து வைத்துள்ளதாக'** பாபா அறிவித்தார், மேலும் அவர் **"அனைத்து 'ஆமாம்' உறுப்பினர்கள் புது வாழ்வில் நுழைந்து அதன் கட்டளைகளை 100 சதவீதம் பின்பற்ற வேண்டும் அல்லது பழைய வாழ்க்கையைத் தொடர**

வேண்டும் அல்லது முற்றிலும் சுதந்திரமான வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும்" என்று அறிவுறுத்தினார். இதில் ஏதேனும் ஒன்றை அவர்கள் முடிவு செய்ய வேண்டும். அப்போது எடுக்கப்பட்ட தீர்மானங்கள் கீழ்வருமாறு:

ஆதி சீனியர் - பழைய வாழ்க்கை

அலோபா - பழைய வாழ்க்கை (மும்பையில் பாபாவின்ஆலோசனைப்படி)

பாபாதாஸ் - பழைய வாழ்க்கை (பாபாவின் ஆலோசனைப்படி)

பைதூல் - சேவகன்

பால் நாத்து - பழைய வாழ்க்கை

தெளலத் சிங் - பழைய வாழ்க்கை (பாபாவின் கட்டளைப்படி)

டான் - சேவகன்

எரச் - சேவகன்

கனி - பழைய வாழ்க்கை

குஸ்தாஜி - சேவகன்

கைக்கோபாத் - சேவகன்

காக்கா பாரியா - சேவகன்

கிஷன் ஸிங் - பழைய வாழ்க்கை

மினூ கராஸ் - பழைய வாழ்க்கை (பாபாவின் கட்டளைப்படி)

முரளி காளே - சேவகன்

நீலு - சேவகன்

பண்டோபா - பழைய வாழ்க்கை

பெண்டு - சேவகன்

விஷ்ணு - சேவகன்

அண்ணா **104** - பழைய வாழ்க்கை (ஆனால் அவர் ஒரு சாதாரண சேவகராக பாபாவுடன் தங்க அனுமதிக்கப்பட்டார்)

இந்த முடிவுகள் அறிவிக்கப்பட்ட பிறகு, பாபா அமைதியாக, கடவுளிடம் பிரார்த்தனையை மொழிந்தார்: "**புதிய வாழ்க்கையை முழுமையாக, முற்றிலுமாக வாழ எனக்கு வேண்டிய பலம் கொடுங்கள்**."

தொடர்ந்து நான்கு மதங்களின் - இந்து, ஸொராஸ்ட்ரியன், முஹமதிய மற்றும் கிறிஸ்தவ பிரார்த்தனைகள் - முறையே விஷ்ணு, நீலு, கைக்கோபாத், பைதூல், டான் ஆகியோரால் உரத்த குரலில் வாசிக்கப்பட்டது. சத்தாராவில், முத்தா பங்களாவில் அடிக்கடி இசை நிகழ்ச்சி நடத்தும் கவாலி பாடகர் பிரத்யேகமாக அழைக்கப்பட்ட போது, அவர் புது வாழ்வின் பாடலையும் வேறொரு பிரார்த்தனையையும் வழங்கினார்.

பாபா மஸ்த் அலி ஷாவை நீராட்டுவதற்காக அப்போது வெளியே சென்றார், கூட்டத்தில் இருந்தவர்களும் பாபாவைப் பின்தொடர்ந்து

நிகழ்வைப் பார்வையிட்டனர். இத்துடன் நிகழ்ச்சி நிறைவடைந்து, அனைவரும் வெளியேறும் வேளையில் பாபா ஒவ்வொருவரையும் மீண்டும் தழுவினார்.

நானா கேர் இவ்வாறு கூறினார்: "பாபாவிடமிருந்து விடைபெற்று வருகையில், அவரது முகத்தில் வழக்கத்திற்கு மாறான பளிச்சிடும் பிரகாசத்தைக் காண முடிந்தது. அவர் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார். நாங்கள் புறப்படும் வேளையில், இந்தப் பிரகாசத்தை தூரத்திலிருந்தும் பார்க்க முடிந்தது."

கிட்டி, ரானோ இருவரும் மும்பைக்குத் திரும்புவதற்கு முன்பு, மஹாபலேஷ்வரில் சில நாட்கள் தங்கியிருந்தனர். பாபா அவர்களிடம், "**இப்போது நீங்கள் திரும்பியாக வேண்டும்**" என்று தெரிவித்தார்.

ரானோ, "பாபா, எத்தனை முறை எங்களை இப்படித் திருப்பி அனுப்பப் போகிறீர்கள்? நாங்கள் ஏன் உங்களுடன் இருக்க முடியாது?" என வினவினார்.

"**நீங்கள் திரும்பிச் செல்ல வேண்டும்**" என்று பாபா வலியுறுத்தினார். "**எனக்காக நீங்கள் திரும்பிச் செல்ல வேண்டும்.**"

"ஓ, பாபா, ஏன்?" என்று கேட்டுவிட்டு ரானோ அழத் தொடங்கினார்.

"**அழாதீர்கள்**" என்று பாபா ஆறுதல் கூறி, "**ஆனால், நீங்கள் திரும்பியாக வேண்டும்**" என்று மறுபடியும் கூறினார்.

புது வாழ்வின் தொடக்கத்தில் பாபா, பெண்மணிகளிடம் கூறினார்: "**உங்கள் நிலைமைகளை ஓர் 'உயிர்க்காப்பு மிதவை' போலக் கருதி, அதில் ஒட்டிக்கொள்ளுங்கள், நான் உங்களை மூழ்க விடமாட்டேன்.**"

ரானோவும் கிட்டியும் மும்பையில் தங்கியிருந்த நாட்களில் இந்த வார்த்தைகளை நினைவு கூர்ந்தனர். பாபாவை விட்டு விலகி இருப்பது அவர்களுக்கு துயரார்ந்த நிலை என்றாலும், அவரைத் தமது 'உயிர்க்காப்பு மிதவை'யாக உணர்ந்ததால் தங்களை மூழ்க விடமாட்டார் என்பதை உறுதியாக நம்பினர்.

ஏற்கனவே குறிப்பிட்டபடி, ரானோ, கிட்டி இருவரையும் தவிர வேறு எந்தப் பெண்மணிகளும் மஹாபலேஷ்வருக்கு அழைக்கப்படவில்லை, எனவே மன்ஸாரி, கைக்கோபாத் குடும்பத்தினர் எவருக்கும் பாபாவைப் பார்க்கும் வாய்ப்பில்லை. அதேபோல், மும்பையிலிருந்த கோர்ஷெத், ஸுனாமாசி, கேட்டி ஆகியோரும் அவரை சந்திக்க முடியவில்லை. அஹமதுநகரில் வாழ்ந்த குல்மாயும், கடந்த ஒரு வருட காலத்தில் பாபாவை ஒரு முறை கூட பார்க்கவில்லை. ஒவ்வொரு கோபியும் தனது கிருஷ்ணாவை மீண்டும் பார்க்க வேண்டும் என்ற நம்பிக்கையில் நாட்கள் கடந்த வண்ணம் இருந்தன.

இருந்தாலும் பிரியமானவரிடமிருந்து அவர்களின் 'பிரிவு' வெளிப்படையாகத் தென்பட்டது. 1950 ஆகஸ்ட் மாதத்தில், பாபா, சத்தாராவில்

இருந்தபோது, இந்த சம்பவம் மெஹராபாத் மேல்மலையில் நிகழ்ந்தது. ஒர் இரவு, மன்ஸாரி படுக்கையில் பாபாவை நினைத்துக் கொண்டிருந்தபோது, திடீரென நாகப்பாம்பு ஒன்று உள்ளே புகுந்து அவர் மார்பில் ஊர்ந்து சென்றது. அதை உணர்ந்த மன்ஸாரி, தனது கையால் அதைத் தட்டி விலக்கினார். அது கீழே விழுவதைக் கண்டு, துள்ளிக் குதித்த வேளையில், தரையில் பாம்பு படமெடுத்து விரிந்து அச்சுறுத்துவதைக் கண்டார். மன்ஸாரி அறையில் தனியாக இருக்க, இரவு கண்காணிப்பாளர் ஜமதார் சற்று தொலைவில் இருந்தார். நாகப்பாம்பு நகர்ந்து கதவினருகில் சென்று வழியை மறைத்ததால், அவரால் வெளியே சென்று ஜமதாரை உதவிக்கு அழைக்க முடியவில்லை. எப்படியோ தைரியத்தை வரவழைத்து, மூங்கில் கழியால் பாம்பைக் கொன்றார். ஆனால் சம்பவம் அத்துடன் முடியவில்லை. நாகப்பாம்புகள் எப்போதும் ஜோடியாக வாழ்கின்றன. மறுநாள் இரவு, மன்ஸாரி, பாபாவின் புகைப்படத்தின் முன் நின்று பிரார்த்தனை செய்து கொண்டிருந்த வேளையில், வேறொரு நாகப்பாம்பு அங்கே தோன்றியது. இதையும் மன்ஸாரி தைரியமாகக் கொன்றார்.

ஆனால் ஆச்சரியமான விஷயம் என்னவெனில், இவையெல்லாம் நடப்பதற்கு முன்பு, பாபா ஓர் இரவு மன்ஸாரியின் கனவில் தோன்றி, **"உங்கள் அறைக்குள் நாகப்பாம்பு நுழைந்தால் என்ன செய்வீர்கள்?"** என்று கேட்டார்.

நான் அதைக் கொன்றுவிடுவேன் என்று மன்ஸாரி பதிலளித்திருந்தார்.

கனவில் பாபா அவரை ஊக்குவித்தார், **"ஆமாம், அஞ்சாமல் அதைக் கொன்றுவிடுங்கள், நான் உங்களுடன் இருக்கிறேன்."**

மன்ஸாரி இரண்டு பாம்புகளையும் கொன்ற பிறகு, பாபா மீண்டும் அவரது கனவில் தோன்றி, **"உங்கள் தைரியத்தில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இப்போது எந்தப் பாம்பும் உங்களைத் தொந்தரவு செய்யாது"** என்று கூறினார். உண்மையாகவே, அந்த சம்பவத்திற்குப் பிறகு மன்ஸாரியின் அறைக்குள் எந்தப் பாம்பும் நுழையவில்லை. பாபாவிடமிருந்து வெகு தொலைவில் இருந்தாலும், பல்வேறு அன்பர்களும் சீடர்களும் அவரது உள்ளார்ந்த வழிகாட்டுதலின் வெவ்வேறு அனுபவங்களை அடையப் பெற்றனர்.

மஹாபலேஷ்வரில் நடந்த கூட்டத்திற்குப் பிறகு, பாபா, மஸ்த் மற்றும் மனநிலை பாதிக்கப்பட்டவர்களுடனான பணிக்காக ஒரு மாத பயணத்தைத் தொடங்க இருந்தார். அவர் பெண்டு, குஸ்தாஜி, பைதூல், எரச் ஆகியோருடன் **1950** அக்டோபர் **21** சனிக்கிழமையன்று பாட்னாவிற்குப் (PATNA) புறப்பட்டார். இதற்கிடையில், மெஹரா, மணி, மெஹரு, கோஹெர், நாஜா (சிறிது காலம்) மஹாபலேஷ்வரில் தங்கியிருந்தனர்; இவர்களுடன் இருந்த டாக்டர் நீலு, விஷ்ணு, டாக்டர் டான், காக்கா, முரளி, அண்ணா **104** ஆகியோருக்கு பாபா தனிப்பட்ட கடமைகளை வழங்கினார்.

ஆதி சீனியர், பப்பா, பெஹ்ராம், ஜால்பாய் ஆகியோர் பாபாவையும் அவரது குழுவையும் பூனா, 'ஸ்வார்கேட்'டில் (SWARGATE) சந்தித்தனர்; அங்கிருந்து மெஹர்ஜி, நரிமன் இருவரும் திட்டமிட்டபடி, கார்களில் பாபாவை மும்பைக்கு அழைத்துச் செல்லக் காத்திருந்தனர்.

பாபாவின் சூறாவளி சுற்றுப்பயணத்தின் போது, அவர் ரயில் மற்றும் பேருந்தில் பயணம் செய்தார்; மேலும் பீகார், வங்காளம், ஒரிஸா, நேபாளம், மதராஸ், ஹைதராபாத், மும்பை மாகாணங்களில் மஸ்துகள், சாதுக்கள், துறவிகள், நடுத்தர ஏழை குடும்பங்கள் மற்றும் ஏழைகளுடன் தொடர்பு கொண்டார். பயணத்தின் கடினமான பகுதி, ஒரு காலத்தில் செழிப்புடன் வாழ்ந்து, இப்போது கடினமான காலங்களை சந்திக்கும் குடும்பங்களைக் கண்டுபிடிப்பது; பாதகமான சூழ்நிலைகளால் ஆதரவற்றவர்களாகிவிட்ட, ஆனால் வெட்கம் மற்றும் அடக்கத்தால் அதை வெளிப்படுத்தாத குடும்பங்களுக்கு, பாபா உதவ விரும்பினார். அவர்களுக்குப் பெரிய அளவில் உதவி தேவைப்பட்ட போதிலும் அதற்காக யாசிக்கும் மனநிலையில் இல்லாமல் தயக்கத்தில் வாழ்ந்து வந்தவர்கள்.

மஸ்துகள், ஏழைகள் மற்றும் அத்தகைய பாதிக்கப்பட்ட குடும்பங்களுடனான பணியின் காரணமாக, இது குறிப்பிடத்தக்க வகையில் கடினமான பயணமாக இருந்தது. ஆனால் பழைய வாழ்க்கையில் பின்பற்றப்பட்ட முறைகளுடன் ஒப்பிடும்போது, பணிபுரியும் விதத்தில் ஒரு பெரிய வேறுபாடு இருந்தது. இப்போது, உதவியைப் பெறும் நபர்களுக்கு அவர்களது அன்புப் பரிசை (அக்டோபர் 16 கூட்டத்தில் சேகரிக்கப்பட்ட பணம்) வழங்குவதற்கு முன்பு, பாபா அவர்களின் கால்களைக் கழுவி, தலை வணங்க, எரச் இந்த வரிகளை மொழிந்தார்:

"பிரியமான இதயங்களால் தகுதியுடையவர்களுக்கும், தேவைப்படுபவர்களுக்கும் வழங்கப்பட்ட இந்தப் பணம், உங்களுக்குக் கொடுக்கப்பட்டதாக எனது மூத்த சகோதரர் கூறுகிறார். இந்தப் பணத்தைப் பெறுபவர் அதைத் தொண்டு என்றோ எந்தவித கடமை உணர்வு உள்ளவர்களாகவோ உணராமல் அவர் அதை அன்பளிப்பாகக் கருத வேண்டும்."

மேலே குறிப்பிட்ட இந்த முறை, ஏழ்மை நிலையில் வாழ்ந்த குடும்பங்களுக்காக மட்டுமே மேற்கொள்ளப்பட்டது, அதேவேளையில் பாபா வறியவர்களுக்கு எந்த சடங்கு சம்பிரதாயங்களும் இல்லாமல் அன்பளிப்பை வழங்கினார். பழைய வாழ்க்கையில், பாபா மஸ்துகளுடன் தனியாகப் பணிபுரிந்தார்; புது வாழ்வில், அவர்களை எங்குக் கண்டுகொண்டாலும் - ஏதோ அறை ஒன்றில், சாலையில் அல்லது சந்தையில் அவரது தோழர்கள் முன்னிலையில் வெளிப்படையாகத் தொடர்புகொண்டார். மேலும், சில நேரத்தில்

மஸ்துகளுடன் அக்கம் பக்கம் உள்ள உள்ளூர் மக்கள் இருந்தால் கூட, அவர்களை அந்த இடத்தை விட்டு வெளியேறச் சொல்லவில்லை.

பாபா இவ்வாறு குறிப்பிட்டார்: **"மஸ்துடனான இது போன்ற எனது பணி முடிந்துவிட்டது, பழைய வாழ்க்கையில், எனக்கும், கடவுளுக்கும், மஸ்துகளுக்கும் மட்டுமே எனது பணி என்ன என்று தெரியும்; புது வாழ்வில், நான் இப்போது கடவுளைத் தேடி அலையும் பக்தனாக மாறிவிட்டேன், அவர்களின் கால்களில் எனது தலையை வைக்கிறேன். மேலும், எனது ஆன்மீக நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக, நான் அவர்களின் ஆசீர்வாதங்களை நாடுகிறேன்."**

அவரது தொடர்புகளின் போது, பாபா ஒவ்வொரு மஸ்திற்கும் குறைந்தபட்சம் ஒரு ரூபாய் கொடுப்பதை வழக்கமாகக் கொண்டார், அதே சமயம் பைதூல் அல்லது வேறொரு தோழர் இந்த வார்த்தைகளை மீண்டும் கூறினார்: "கடவுள் அவருடைய (பாபாவின்) ஆன்மீக நோக்கத்தை நிறைவேற்றட்டும். அதற்காகப் பிரார்த்தனை செய்யுங்கள்."

முழு மயக்க நிலையில் இருந்த மஸ்தின் முன்னிலையில், மேலே குறப்பிட்ட பிரார்த்தனை மீண்டும் மீண்டும் கூறப்படவில்லை. ஆனால், உணர்வு நிலையில் இருந்த மஸ்தைப் பொறுத்தவரை, அந்தப் பிரார்த்தனையை மொழிந்த பிறகு, பாபா, மஸ்த் பதிலளிக்கும் வரை அங்கேயே காத்திருந்தார். மஸ்த் பதிலளிக்கவில்லை என்றால் பாபா மணிக்கணக்கில் அங்கிருந்து நகர்வதில்லை. மஸ்தின் ஆசீர்வாதத்தைப் பெற்ற பின்னரே அவர் புறப்பட்டுச் சென்றார். இந்தக் காலகட்டத்தில், பாபா சாதாரண மக்களிடமும் ஆசீர்வாதங்களைப் பெற்றார், அதன் மூலம் ஒரு கடவுளைத் தேடும் பக்தராக அவர் தேர்ந்தெடுத்த பாத்திரத்தை முழுமையாக நிறைவேற்றினார்.

பீகார், வங்காளம், ஒரிஸா மாநிலங்களில் சில பகுதிகளில் வெள்ளப்பெருக்கு, சில பகுதிகளில் வறட்சி மற்றும் நிலநடுக்கம் காரணமாக உணவு பற்றாக்குறை நிலவியது. இந்தியா-பாகிஸ்தான் பிரிவினைக்குப் பின்னர், அகதிகள் பிரச்சினையும் சில பாகங்களில் துயரத்தை அதிகப்படுத்தியது. உதாரணமாக, பீகாரில், கோஸி நதியில் (KOSI RIVER) வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால், மக்கள் மிகவும் அவதிக்குள்ளாயினர். பல உயிர்கள் பலியாகின, உடைமைகள் அழிக்கப்பட்டன. தர்பங்கா (DARBHANGA) மாவட்ட வாரிய தலைவர் ஜானகி நந்தன் ஸிங் (JANAKI NANDAN SINGH) மற்றும் சக ஊழியர் பைஜ்நாத் மிஸ்ரா (BAIJNATH MISHRA) வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட மற்றும் வீடு இழந்தவர்களைத் தொடர்பு கொள்ளும் பணியில் பாபாவிற்குப் பெரிதும் உதவினர்.

அவர்களுக்கு வழிகாட்டியாகப் பணியாற்றிய எரச், பெண்டு, பைதூல், குஸ்தாஜி மற்றும் பைஜ்நாத் மிஸ்ரா ஆகியோருடன் பாபா டோங்காவில் 'தமுரியா' (TAMURIA) ரயில் நிலையத்திலிருந்து நான்கு மைல் தொலைவில்

அமைந்த 'மாதேபூர் தானா' (MADHEPUR THANA) கிராமத்திற்குச் சென்றார். அங்கு ஆதரவற்ற மூன்று குடும்பங்களுக்கு தலா ரூ 500 வீதம் அன்பு பரிசுகளை வழங்கினார். ஒவ்வொரு குடும்பத்தோடும், பாபா, அவர்களின் கால்களைக் கழுவிய பின்னர், எரச் பிரகடனத்தை மொழியும் வேளையில், பாபா அவர்களின் கால்களில் தலை வணங்கினார்.

மாதேபூரை விட்டு வெளியேறி, பாபா டோங்காவில் 'கச்சுவா' (KACHUWA) கிராமத்திற்குச் சென்றார், அங்கு அவர் இரண்டு ஏழைக் குடும்பங்களுக்கு தலா ரூ. 500 வழங்கினார். அங்கிருந்து அவர் 'பேஹத்' (BEHAT) கிராமத்திற்குச் செல்லும் வழியில் இரண்டு குடும்பங்களுக்கும் தலா ரூ 100 வழங்கப்பட்டது. 'மைவி' (MAIVI) கிராமத்திலும் அதேபோல் உதவி வழங்கப்பட்டது, மேலும், அங்கு பாபா, பல ஏழைகளுக்கு தலா ஐந்து ரூபாய் வழங்கினார். அன்றைய தினம், பாபாவின் வழிகாட்டியான பைஜ்நாத் மிஸ்ரா ஒரு தன்னலமற்ற தொழிலாளி மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அவருடைய கால்களையும் கழுவி வணங்கிவிட்டு, பாபா ரூ 148 அன்பளிப்பாக வழங்கினார்.

பீகாரிலிருந்து, பாபா ரயிலில் வடக்கே இமயமலைக்கு நேபாளத்தை நோக்கிப் பயணம் செய்து, அங்கு அவர் ஜனக்பூரில் (JANAKPUR) தனது பணியைத் தொடர்ந்தார். ஜெய்நகரிலிருந்து (JAYNAGAR) ஜனக்பூருக்குச் செல்லும் வழியில், பாபாவும், சேவக தோழர்களும் ஒரு சரக்கு வண்டியைப் போன்ற திறந்த பெட்டியில் பயணம் செய்தனர். விளக்குகள் இல்லாததால், இரவு முழுவதும் மண்ணெண்ணெய் விளக்குகளை எரிய வைக்க வேண்டியிருந்தது. ஒவ்வொரு நிலையத்திலும் ரயில் மணிக்கணக்கில் நின்றது. ஜனக்பூரில் வாழ்ந்த திபெத்திய, நேபாளத் துறவிகள் மற்றும் சாதுக்களைத் தொடர்பு கொள்ள, பாபா இரவின் நடுவில் வயற்காடுகளில் நடந்து சென்றார், அதே சமயம் தோழர்கள் விளக்குகளை ஏந்திச் சென்றனர். இந்த முழுப் பயணத்தின் போதும் ஒருவரும் தூங்கவில்லை; பாபாவின் பணி முடிந்த பின்னர், அவர்கள் எங்கேயும் தங்கியிருக்காததால், ரயிலில் சில மணிநேரங்கள் மட்டுமே இருக்க வேண்டியதாயிற்று. இந்த வெறித்தனமான வேகத்தில், சில நேரங்களில் அவர்கள் சிறிதளவு உணவை மட்டுமே உண்டனர், ஆனால் பெரும்பாலும் அவர்கள் உண்ணவில்லை.

பாபாவும் சக தோழர்களும் தெற்கு நோக்கி வங்காளத்திற்குப் பயணம் செய்தனர். கல்கத்தா செல்லும் வழியில் 'கோல்காங்' (COLGONG) என்ற சிறிய ரயில் நிலையத்தில் பாபா, அங்கு வாழ்ந்த ஒரு மஸ்தைத் தொடர்பு கொண்டார், அவர் பாபாவையும் அவரது தோழர்களையும் தனது 'விருந்தாளிகளாக' தங்கும்படி அழைத்தார். இருப்பினும், பாபா, அடுத்த ரயிலில் கல்கத்தாவிற்குச் செல்ல விரும்பினார், ஆனால் அதே நேரத்தில் மஸ்தை வருத்தமடையச் செய்ய விரும்பவில்லை. 'தயவு செய்து அவர்களை வெளியேற

அனுமதிக்குமாறு' மஸ்திற்கு பல செய்திகளை அனுப்பினார். ரயில் நிலையத்திற்கு மஸ்த் வந்தபோது, திரள்திரளாக கூட்டம் கூடியது. அவர்கள் தங்கள் உள்ளூர் துறவியை ஏதோ ஒரு வகையில் தொந்தரவு செய்கிறார்கள் என்று நினைத்து, கூட்டம் அமைதியை இழந்த நிலையில், எரச், பைதூல் இருவரும் அங்கும் இங்கும் தள்ளப்பட்டனர். பாபா சக தோழர்களுடன் ரயிலில் ஏறினார், அப்போது மஸ்த் அவரது சீடர்களால் அழைத்துச் செல்லப்பட்டார்.

ஏறக்குறைய பதினொரு நாட்களுக்கு முன்பு மஹாபலேஷ்வரிலிருந்து புறப்பட்ட நேரத்திலிருந்து, அவர்கள் ஓர் இரவில் ஒரு மணிநேரம் மட்டுமே தூங்க முடிந்தது. எனவே, பாபா மூன்று அல்லது நான்கு நாட்கள் கல்கத்தாவில் ஓய்வெடுத்தார், ஒரு சில மஸ்துகள் மற்றும் ஏழைக் குடும்பம் ஒன்றைத் தொடர்பு கொண்டு, அதற்கு ரூபாய் 500 வழங்கப்பட்டது. 1950ஆம் ஆண்டு நவம்பர் 4 சனிக்கிழமையன்று, பாபாவின் உத்தரவின்படி சகன் அஹமதுநகரிலிருந்து வந்து அவர்களுடன் இணைந்தார்.

கல்கத்தாவில், சத்குரு ராமகிருஷ்ணரின் தக்ஷிணேஷ்வர் கோவிலில், பாபா அரை மணி நேரம் கிட்டத்தட்ட நிர்வாணமாக, இடையில் லங்கோட்டி மட்டுமே அணிந்திருந்தார். தக்ஷிணேஷ்வர் கோவிலில் அவரது ஆன்மீக உள் பணி முடிந்ததும், பாபா தனது வெள்ளை மேலங்கியை அணிந்து கொண்டு, கோவிலின் முற்றத்திற்கு வெளியே, கையில் பிச்சைப் பாத்திரத்துடன் நடந்து சென்றார். பாபா தனது தோழர்களுக்கு முன்கூட்டியே தெரிவிக்காமல் வீதிகளில் வீடு வீடாக நடந்து சென்று யாசிப்பது இதுவே முதல் முறை. தோழர்கள் வழக்கமான மேல் சட்டைகள், காலுறைகள், காலணிகள் மற்றும் தொப்பிகளை அணிந்திருந்தனர். பாபாவின் அறிவுறுத்தலின்படி, அதே நேரத்தில் பெண்டு வீதிகளில் இருந்த ஏழைகளுக்குப் பணம் கொடுத்துக் கொண்டிருந்தார், பாபா தனது பிச்சைப் பாத்திரத்தை கையில் ஏந்திக்கொண்டு யாசிப்பதற்காக முன்னால் நடந்து சென்றார்!

இந்த வெளிப்படையான பொருத்தமற்ற தோற்றத்தின் காரணமாக, பாபா, யாசித்து உணவைப் பெறுவதில் சிரமத்தை சந்தித்தார். ஒவ்வொரு வீட்டிலும் யாசிக்கும் வேளையில் உணவுக்கான கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. கடைசியாக, ஓர் எளிமையான பெங்காளி குடும்பம் பாபாவிற்கு தானமாக சூடான உணவை வழங்கியது. பாபா வீட்டு வாசலைச் சென்றடைந்த போது, சாதமும் காய்கறிகளும் தயாராகிக் கொண்டிருந்தன. குடும்பத்தைச் சேர்ந்த ஓர் இளம் பெண், பாபாவிடம் சிறிது நேரம் காத்திருக்குமாறு அன்புடன் கேட்டுக் கொண்டார். பாபா அவருக்கு ஐந்து நிமிடம் அனுமதித்தார். குடும்பத்தினர் மிகவும் அவசரமாக உணவைத் தயார் செய்து ஐந்தே நிமிடத்தில் சாதமும் கீரையும் பரிமாறப்பட்டது; இதனால் அந்தக் குடும்பம் ஆசீர்வதிக்கப்பட்டது. பெண்டு அவர்களின் வீட்டின் முன்னால் ஏழைகளுக்கு பணம் வழங்கிக் கொண்டிருந்தாலும், அவர்கள்

அதனால் பாதிக்கப்படாமல் இருந்தனர். ஒரு வார்த்தைக் கூட பேசாமல், அந்நியரான பாபாவிற்கு தானம் வழங்கினர். அவர்கள் தன்னிச்சையாக அன்பை வழங்கியது மனதைத் தொடும் காட்சியாக இருந்தது.

மஹாபலேஷ்வரிலிருந்து புறப்படுவதற்கு முன்பு, பாபா தனது தோழர்களிடம், "**உண்மையில் ஏழைகளுக்கு அன்பளிப்புகளை வழங்க விரும்புகிறேன். இந்தப் பணி, மஸ்த் பணியை விட கடினமானதாக இருக்கும். நாம் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியிருக்கும், உண்மையான ஏழை மற்றும் வறியவர்களுக்கு நான் பெரிய தொகையை வழங்க வேண்டும்.**" தனது நோக்கத்தை நிறைவேற்ற, பாபா, எரச், பெண்டு, பைதூல், குஸ்தாஜி, சகன் ஆகியோருடன் ஒரிஸாவில் 'கட்டாக்' (CUTTACK IN ORISSA) நகரை நோக்கிச் சென்றார். கட்டாக்கில், ஆதரவற்ற குடும்பம் ஒன்றைக் கண்டுபிடித்து, பாபா அவர்களின் கால்களைக் கழுவி, தலை வணங்கி அவர்களுக்கு 500 ரூபாய் வழங்கினார்.

தொடர்ந்து தெற்கு நோக்கிப் பயணம் செய்து, பாபாவும், தோழர்களும் மதராஸ் (MADRAS) வந்தடைந்தனர், அங்கு, பல ஆதரவற்ற குடும்பங்களைக் கண்டறிய முழுமையான தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. மூன்று அத்தகைய குடும்பங்களைக் கண்டுபிடித்து, பாபா அவர்களின் கால்களைக் கழுவி, தலை வணங்கி ஒவ்வொரு குடும்பத்திற்கும் 500 ரூபாய் வழங்கினார்.

ஒருமுறை, பாபா மதராஸில் ஓரிடத்தில் அமர்ந்திருந்த வேளையில், திடீரென தாகம் எடுப்பதாக சைகையால் தெரிவித்து, இளநீர் வாங்கி வர எரச்சை அனுப்பினார். அப்போது, துரதிர்ஷ்டவசமான குடும்பத்தைப் பற்றி சிலர் விவாதிப்பது எரச்சின் காதுகளில் விழுந்தது. எரச் உடனே அந்தக் கடைக்காரரிடம், இப்பகுதியில் ஏதேனும் ஏழ்மையான குடும்பங்களை உங்களுக்குத் தெரியுமா என்று கேட்டார். கடைக்காரர் அவரிடம், "கூடூரில் ஒரு காலத்தில் மிகவும் வசதியாக வாழ்ந்த ஒரு குடும்பம், இப்போது உணவு மற்றும் உடைகள் கூட வாங்க முடியாத பரிதாபமான நிலையில் உள்ளனர். பணக்கார வணிகராக இருந்த அவர் அரண்மனை போன்ற பங்களா ஒன்றைக் கட்டிக் கொண்டிருந்தார். திடீரென அவரது வியாபாரம் வீழ்ச்சியடைந்த நிலையில், கட்டிட ஒப்பந்ததாரர், அவரது சூழ்நிலையைப் பயன்படுத்தி, அவரிடமிருந்து பொருட்களை அபகரிக்கத் தொடங்கினார்; இதன் விளைவாக ஒப்பந்தக்காரரே கட்டிடத்தின் உரிமையாளரானார்; இப்போது அந்தக் குடும்பம் ஒரு சிறிய குடிலில் மிகவும் சிரமமான வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றனர்" என்று விவரித்தார்.

எரச், பாபாவிடம் இந்தக் கதையைக் கூறிய அடுத்த கணமே கூடூருக்குச் (GUDUR) செல்ல ஆர்வமாக இருந்தார். இரண்டு மணி நேரத்தில் ரயிலில் அங்கு வந்ததும், அந்தக் குடும்பத்தைக் கண்டுபிடிக்க எரச் ரயில் நிலையத்திலிருந்து

முன்னால் சென்றார். ஒரு பெரிய வீட்டை வந்தடைந்து, கதவைத் தட்டியதும், நன்கு உடையணிந்த ஒருவர் வாசலில் தோன்றினார்; எரச் கடைக்காரர் கூறிய பெயரைச் சொல்லிக் கேட்டதும், "நான்தான் அந்த மனிதன்!" என வீட்டுத் தலைவர் பதிலளித்தார். இது எரச்சை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது, மேலும் அவருடைய தேடுதல் வீணாகிவிட்டதாக நினைத்தார். அப்போது, "இந்த வீட்டின் முன்னாள் உரிமையாளர் ஒரு காலத்தில் பெரும் செல்வந்தராக இருந்ததாகவும், தற்போது ஏழையாகவும் இருப்பதாக கேள்விப்பட்ட அவருக்கு உதவி செய்ய எனது மூத்த சகோதரர் வந்துள்ளார்" என்று கூறியும், உரிமையாளர் இதற்கும் பதிலளிக்கவில்லை, ஆனால் அவருக்குப் பின்னால் நின்று கொண்டிருந்த அவரது இளம் மகன், அவர் தேடும் நபர் அருகிலுள்ள சந்தில் ஒரு குடிசையில் வசிக்கிறார் என்று கூறினார். எரச்சுடன் பேசிக் கொண்டிருந்த நபர், வீட்டை அதன் அசல் உரிமையாளரிடமிருந்து கைப்பற்றியவர். ஆச்சரியம் என்னவெனில், அவர்களின் பெயர்கள் ஏறக்குறைய ஒரே மாதிரியாக இருந்தன.

சிறுவன் அந்த ஏழையின் குடிசைக்கு எரச்சை அழைத்துச் சென்றான். அன்று தீபாவளி, விளக்குகளின் வண்ணமயமான திருவிழா, ஆனால் குடிசைக்கு வெளியே ஒரு விளக்குக் கூட எரியவில்லை. எரச் குடிசையின் கதவைத் தட்டியபோது, கந்தலான புடவையில் ஓர் இளம் பெண் எச்சரிக்கையுடன் அதைத் திறந்தார். உள்ளே ஒரே இருளாக இருந்தது. கிருஷ்ணரின் உயரமான சிலையை உள்ளடக்கிய ஒரு கண்ணாடிப் பெட்டகத்தின் முன் சிறிய வெளிச்சம் மட்டுமே பிரகாசித்தது; அவரது ஏழ்மையிலும் அந்த மனிதர் இதை மட்டுமே பாதுகாக்க முடிந்தது. அந்த ஏழை மனிதர் உடல் நலமின்றி, மூலையில் ஒரு கட்டிலில் படுத்திருந்தார்; அவரது மனைவி ஒரே அறை குடிசையில் வேறொரு கட்டிலில் அமர்ந்திருந்தார். இளம் பெண் கிருஷ்ணனிடம் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தாள். எரச் அவளிடம் அந்த மனிதரைப் பற்றி விசாரிக்க, அவள் அமைதியாக பதிலளித்தாள், "அவர் எனது தந்தை, ஆனால் அவர் உடல்நிலை சரியில்லாமல் இருக்கிறார், எனது தாயாருக்கும் உடல்நிலை சரியில்லை, ஆமாம், நீங்கள் ஏன் இங்கு வந்தீர்கள்?"

"உங்கள் தந்தையின் அவலநிலையை நான் கேள்விப்பட்டேன், அவருக்கு உதவ என் மூத்த சகோதரர் வந்துள்ளார்" என்று எரச் விளக்கினார்.

"கடனைத் திருப்பிச் செலுத்த எங்களிடம் எதுவும் இல்லை."

"இது ஒரு கடன் அல்ல," எரச் விரைவாக விளக்கினார். "எனது மூத்த சகோதரர் அன்புப் பரிசைக் கொடுக்க விரும்புகிறார், உங்கள் தந்தை அதை ஏற்றுக்கொண்டால் எங்களுக்கு உதவியாக இருக்கும்."

இளம் பெண் கண்ணீர் விட்டு அழுதாள். அவள் கிருஷ்ணரின் சிலையின் பக்கம் திரும்பி, "என் அன்பான கிருஷ்ணா - நீ எவ்வளவு கருணையுள்ளவன்! நான் உன்னிடம் பிரார்த்தனை மட்டுமே செய்தேன், நீ

இவ்வளவு சீக்கிரம் பதிலளித்தாய். நீ கருணையுள்ளவன், என் தெய்வமே, மிகவும் இரக்கமுள்ளவன்!" என்று மனமுருகி விசும்பினாள்.

இதைக்கேட்டு எரச்சின் உள்ளமும் நிறைந்தது, கண்களில் கண்ணீர் வழிந்தது. எரச் இளம் பெண்ணிடம், "எனது மூத்த சகோதரர் எப்போதும், அந்தப் பரிசைப் பெற்றுக்கொள்பவரின் கால்களைக் கழுவி, அதன் பிறகு தலை வணங்குவார். சிறிது தண்ணீரைச் சூடாக வைக்கவும்; இதற்கிடையில், நான் எனது சகோதரரை ரயில் நிலையத்திலிருந்து அழைத்து வருகிறேன்" என்றார்.

எரச் மீண்டும் ரயில் நிலையத்திற்கு விரைந்து, பாபா, பெண்டு இருவரையும் குடிசைக்கு அழைத்து வந்தார். பாபா அந்த மனிதரின் கால்களைக் கழுவி, தலை வணங்கி, 500 ரூபாயை அன்புப் பரிசாக வழங்கினார். இளம் பெண் கதறி அழுதாள். "என் கருணைமிகு கிருஷ்ணா, என் கிருஷ்ணா" என்று அழுது கொண்டே இருந்தாள்.

காலமும் இதைக் கண்டு இரங்கியது. "கிருஷ்ணர் உடல் வடிவில் இங்கே இருந்தார் - ஆனால் கடவுளும் காலம் தாழ்த்தவில்லை!" தனது பணியை முடித்துவிட்டு பாபா உடனே குதிரைவண்டியில் புறப்பட்டுச் சென்றார். சிறிது தூரம் சென்றதும், பாபாவின் மேலங்கியைக் குடிசையில் விட்டுவந்ததாகத் தெரியவந்தது. ஆனால் எரச், பெண்டு இருவரிடமும் பாபா, "**அதை மறந்துவிடுங்கள்! எனது மேலங்கி அவர்களுடனே இருக்கட்டும். நடந்து முடிந்த வேலையில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்**" என்று சுட்டிக்காட்டினார்.

கூடுரிலிருந்து, பாபாவும் தோழர்களும் ஹைதராபாத்திற்குச் சென்று, அங்கு அவர்கள் ஒன்பது நாட்கள் தங்கியிருந்தனர். ஓர் இத்காவில் (IDGAH, முஸ்லீம் வழிபாட்டுத் தலம்), ஒரு நாள் பாபா அரை மணி நேரம் ஏகாந்தவாசத்தில் அமர்ந்தார். அங்கே, தோழர்கள் காவல் காக்க, பாபா மீண்டும் தனது ஆடைகளைக் களைந்து, இடையில் ஒரு லங்கோட்டி மட்டும் அணிந்துகொண்டு நிர்வாணமாக அமர்ந்தார். இப்படியே பாபாவின் லங்கோட்டி வாழ்க்கை தொடர்ந்தது.

ஹைதராபாத்தில், பதினொன்று ஆதரவற்ற குடும்பங்களுக்கு, பாபாவின் அன்புப் பரிசு தேவைப்பட்டது. பாபா மூன்று முஸ்லீம் குடும்பங்களுக்கு தலா 500 ரூபாயும், அதே தொகையை ஐந்து இந்து குடும்பங்களுக்கும் வழங்கினார். இதர மூன்று குடும்பங்கள் பாபாவிடமிருந்து குறைந்த தொகையைப் பெற்றுக்கொண்டன.

இந்தத் தொடர்புகளின் ஒரு சுவாரஸ்யமான சம்பவம், ஒரு முன்னாள் செழிப்பான நவாப் (NAWAB, முஸ்லீம் இளவரசர்) மோசமான அவல நிலைக்கு பலியாகியதைப் பற்றி கேள்விப்பட்டதாகும். முன்னர், அவர் பெரிய பணக்காரராக இருந்த வேளையில், அவர் பயணம் செய்யும் போதெல்லாம்,

அவருக்காக ஒரு சிறப்பு ஸலூன் (நிலையான மேற்கவிகையும், தனி சரக்கு வைப்பிடமும் கொண்ட சீருந்து வகை) ரயிலுடன் இணைக்கப்பட்டது, மேலும் அவரது அற்புதமான அரண்மனையின் நுழைவாயிலில் யானைகள் சங்கிலியால் கட்டப்பட்டிருந்தன. ஆயினும் கூட, அவரது திடீர் துரதிர்ஷ்டம் அவரை வீதிகளில் பீடிகள் மற்றும் தீப்பெட்டிகளை விற்கும் ஒரு பரிதாபமான நிலைக்குத் தள்ளியதோடு, அவருடைய இல்லம் என்று அழைக்க ஓரிடமும் இல்லை.

எரச் இந்த முன்னாள் இளவரசரை ஹைதராபாத் 'மட் ஃபோர்ட்' (MUD FORT) பகுதியில் தேடத் தொடங்கினார். அந்த நபர் நன்கு அறியப்பட்டவர், ஆனால் அவருக்கு உறைவிடம் இல்லாததால், அவரை எளிதில் கண்டுபிடிக்க முடியவில்லை. எரச் கடைசியாக ஒரு சிறிய கடையின் உரிமையாளரை அணுகியபோது, "அவர் இங்கே உடல்நிலை சரியில்லாமல் ஒரு வீட்டு வராந்தாவில் படுக்கையில் இருக்கிறார்" என்றார். எரச் அவரிடம் சென்ற போது, யாரோ கொடுத்த உடைந்த கட்டிலில் அவர் படுத்திருந்தார். அருகில் ஒரு சில தீப்பெட்டிகளும் பீடிகளும் ஒரு வெற்று மரப்பெட்டியின் மேல் குவிக்கப்பட்டிருந்தன - அதுவே அவரது உலக உடைமைகளின் அளவு. அவரது மனைவி ஓர் இலவச முனிசிபல் மருந்தகத்திலிருந்து மருந்து வாங்கிவரச் சென்றிருந்தார்.

எரச் உடனே புறப்பட்டுச் சென்று பாபா, பெண்டு, பைதூல் மூவரையும் அழைத்து வந்தார். எரச் மெதுவாக அந்த மனிதரிடம், "எனது மூத்த சகோதரர் உங்களுக்கு உதவ வந்துள்ளார், அவர் உங்களுக்கு அன்பாக ஒரு நல்ல தொகையை வழங்க உள்ளார், நீங்கள் அதை ஏற்றுக்கொண்டால் நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருப்போம்."

சந்தேகமடைந்த அந்த நபர், "நீங்கள் எங்கிருந்து வந்தீர்கள், ஏன் எனக்கு உதவ விரும்புகிறீர்கள்? உங்கள் உள்நோக்கம் என்ன?" என வினவினார்.

"தயவுசெய்து இதுபோன்ற விஷயங்களைக் கேட்காதீர்கள்" என்று எரச் கூறினார். "இந்த அன்புப் பரிசை கடவுளின் கருணையாக ஏற்றுக்கொள்ளுங்கள்; நாங்கள் கேட்பது அவ்வளவுதான்."

நீண்ட வற்புறுத்தலுக்குப் பின்னர், அந்த நபர் ஒப்புக்கொண்டார். பாபா எல்லாவற்றையும் முடிப்பதில் அவசரமாக இருந்தார், ஆனால் எரச், பாபாவிடம், "பாபா, அவருடைய மனைவி வரும் வரை காத்திருப்போம், அவரருகில் பல பேர் உள்ளனர், எவரேனும் பணத்தைத் திருடலாம்" என்று கூறினார்.

பாபா பதிலளித்தார், "**ஆம், பணம் போன்ற ஒன்றை அவரது நிலையில் உள்ளவர்கள் கவனமாகப் பார்த்துக்கொள்ள முடியாது**."

பாபா அந்த மனிதரின் கால்களைக் கழுவ அருகில் அணுகியதும், அவர் கட்டிலிலிருந்து இறங்கி எழுந்து நிற்க விரும்பினார். அப்படிச் செய்ய வேண்டாம் என்று சொன்னபோதிலும், அவர் அதற்குச் செவிசாய்க்கவில்லை. பாபா, அவரது

கால்களைக் கழுவி, நெற்றியால் தொட்டு வணங்கி, தனது அன்புப் பரிசாக ரூ 500 வழங்கினார்.

ரூபாய் நோட்டுகளைப் பார்த்த அந்த நபர் மயங்கி விழுந்தார். அவர் மயங்கியதைக் கண்டு, அக்கம் பக்கம் நின்ற பார்வையாளர்கள் பாபாவையும் குழுவையும் திட்டித் தீர்த்தனர்; அந்த மனிதர் மேலும் நோய்வாய்ப்பட்டு இறந்ததற்கு அவர்களே காரணம் என்று குற்றம் சாட்டினர்.

அப்போது எழுந்த சலசலப்பில் ஒரு கூட்டம் அவர்களைச் சுற்றி ஒன்றுதிரண்டது; பாபா, பெண்டு, எரச் மூவரும் அந்த மனிதனைத் தூக்கிக் கட்டிலில் படுக்க வைத்து, பாபா அவருக்கு விசிறியால் வீசத் தொடங்கினார்.

"உடனடியாகக் காவல்துறைக்குத் தகவல் தெரிவியுங்கள்! இவர்கள் கொள்ளைக்காரர்கள்! ஏழை நவாப்பிற்கு விஷம் வைத்து விட்டார்கள்! தப்பிக்க விடாதீர்கள்!" என்று குரல் எழுப்பி, கூட்டத்தினர் கோரிக்கை விடுத்தனர். எரச் அவர்களை சமாதானப்படுத்த முயன்றார், ஆனால் பலனில்லை.

இந்த நிலையில் மனைவி மருந்துடன் திரும்பி வந்தார். கணவன் சுயநினைவின்றி இருப்பதைக் கண்டு அவர் அழுது புலம்பத் தொடங்கினார். உரத்த குரலில், "இந்த உலகத்தில் அனைத்தையும் நான் இழந்துவிட்டேன்! எனது புருஷன் மட்டுமே என்னோடு இருந்தார், இப்போது நீங்கள் அவரையும் பறித்து விட்டீர்கள்!"

எரச் அந்தப் பெண்மணியை அமைதிப்படுத்த முயன்றார், "அவர் விரைவில் நினைவுக்கு வந்துவிடுவார்; அவர் சாகவில்லை. கலங்காதீர்கள். அவருக்குப் பெரிய தொகை வழங்கப்பட்டுள்ளது. அதைப் பத்திரமாக வைத்து அவருடைய சிகிச்சைக்குச் செலவழிக்கப் பாருங்கள்."

அப்போது அந்த மனிதர் மெதுவாக கண்களைத் திறந்ததும், கண்ணீர் வழிந்தது. "இந்த நல்லவர்களை ஏன் துன்புறுத்துகிறீர்கள்?" என்று மனைவியைக் கேட்டார். "இந்த மனிதர்கள் கடவுளின் தூதர்கள்! அவர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா?" என்றதும், அந்த பெண்மணி சரியான நேரத்தில் உதவியதற்காக நன்றி சொல்ல ஆரம்பித்தார்.

எரச் அவரிடம், "இது கடவுளின் அருள். அவருக்கு நன்றி சொல்லுங்கள்!" என்று கூற, பாபா திடீரென அங்கிருந்து வெளியேறி, கதவை சாத்தினார்; இப்போதும் சிலர், அவரை ஒரு குற்றவாளி என்றே நினைத்தனர்.

இதுபோன்ற குடும்பங்களைத் தேடுவதில் பெரும் முயற்சிகள் எடுத்ததோடு, அனைத்து தரப்பிலும் தகவல்கள் சேகரிக்கப்பட்டன. அத்தகைய நபர்களைத் தொடர்புகொள்வதும் அவர்களுக்கு உதவுவதும் மிகவும் கடினமாக இருந்தாலும், உண்மையில் துன்பப்படுபவர்களுக்கு இறை-மனிதனின் அன்பு மிகவும் சிறப்பு வாய்ந்தது, மேலும் அவர்களைக் கண்டுபிடித்து உதவுவதற்கு அவரே மிகவும் சிரமப்பட்டார்.

பண உதவி பெற்றவர்கள், தங்களுக்கு வழங்கியது, தானமாக வழங்கப்படவில்லை என்றும், அது அவர்களுக்கு ஒரு பரிசாக வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது; அதனால் அவர்கள் தங்கள் மறுவாழ்வை சீரமைத்து, ஒரு விதமான பொருள் ஸ்திரத்தன்மையை மீண்டும் பெற வாய்ப்பாக அமைந்தது. புது வாழ்வின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு ஏற்ப, மெஹர் பாபாவின் பெயர் எவருக்கும் தெரிவிக்கப்படாததால், பரிசு பெற்றவர்கள் அவருக்கு வணக்கம் செலுத்த முடியாது.

இந்தப் பணியைச் செய்வதில் கடுமையான சிரமங்களை அனுபவித்த பிறகு, பாபாவும் தோழர்களும் 1950 நவம்பர் 25 அன்று மும்பை வந்து சேர்ந்தனர். அவர்கள் எல்லா திசைகளிலும் பயணம் மேற்கொண்டனர் - வடக்கே பீகார், நேபாளம், கிழக்கில் கல்கத்தா, தெற்கே மதராஸ், ஹைதராபாத் மற்றும் மேற்கில் மும்பை போன்ற இடங்களுக்கு அயராது பயணம் செய்தனர். இவ்வாறு, ஒரு மாதம் இரவு பகலாக உழைத்து, 33 குடும்பங்களுக்கு உதவியும், 250 ஏழைகளுக்கு பணமும், 119 மஸ்துகள், 23 துறவிகள், 21 சாதுக்களைத் தொடர்பு கொண்டனர். ஒவ்வொரு நகரத்திலும் அல்லது கிராமத்திலும், பாபாவும் அவருடைய சக தோழர்களும், ஏழைகள், மஸ்துகள் மற்றும் புனிதர்களைத் தொடர்புகொள்ள இரயில், பேருந்து போன்ற வாகனங்களில் அயராது பயணம் மேற்கொண்டனர்.

மதுபூரில் (MADHUPUR) வாழ்ந்த ஏழைக் குடும்பங்களைச் சென்றடைய, வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியதால், வேறு வழியில்லாமல் பாபா டோங்காவில் பயணம் செய்து, மாட்டு வண்டியில் திரும்பி வந்தார்.

மஸ்துகளைத் தொடர்புகொள்வதில் எதிர்கொண்ட இடர்பாடுகளை கற்பனை செய்ய இயலாது. பயணம் செய்ய மிகவும் கடினமான இடங்களில் மஸ்துகள் ஆங்காங்கே வாழ்ந்தனர், பாபா, மஸ்துகளின் அருகில் மக்கள் கூட்டம் இல்லாதபோது அவர்களைத் தொடர்பு கொள்ள விரும்பியதால், பெரும்பாலான தொடர்புகள் இரவில் நடந்தன, மேலும் முன்பின் தெரியாத கிராமங்களுக்குள் செல்லும் பாதை மிகவும் கடினமாக இருந்தது. இரவும் பகலும் தொடர்ந்து பயணம் செய்வது, வினோதமான இடங்களில் மஸ்துகளைத் தேடுவது வலிமையும், ஆரோக்கியமுமான ஆண்களை சின்னாபின்னமாக்கிவிடும். ஆனால் பாபாவின் இனிமையும், மகிழ்ச்சியும் கலந்த புன்னகை அவரது தோழர்களுக்கு உற்சாகத்தையும் உத்வேகத்தையும் அளித்தது. பாபா அவர்கள் மனமுடைந்து போகவோ அல்லது ஏமாற்றமடையவோ அனுமதிக்க மாட்டார், மேலும் இரவும் பகலும் அவர்கள் துன்பங்களை அனுபவித்த போதிலும், தனது நகைச்சுவையால் அவர்களை மகிழ்ச்சியாக இருக்கச் செய்தார். எல்லாவற்றிற்கும் மேலாக, அவர் எங்குச் சென்றாலும் அவரது அன்பின் ஊற்றே

தோழர்களை நலிவுறாது இருக்கச் செய்து, அவருடன் வேகமாகவும், விறுவிறுப்பாகவும் பின்தொடர உதவியது.

ஆதி சீனியர், ராம்ஜூ இருவரும் மும்பைக்கு அழைக்கப்பட்டனர், மேலும், அங்கு பாபா மேற்கொண்ட மஸ்த் மற்றும் ஏழை குடும்பங்களுடனான பணிகளைக் காண அனுமதிக்கப்பட்டனர். பாபா ஆஷியானாவில், நரிமனின் படுக்கையறையில் ஓய்வெடுத்தார், ஆதி சீனியரும் எரச்சும் அவருடன் தங்கினர். பெண்டு, குஸ்தாஜி, பைதூல், சகன் ஆகியோர் ஒரு ஹோட்டலுக்குச் சென்றனர். நாஜா, நௌரோஜியின் இல்லத்தில் தாதாச்சாஞ்சி குடும்பத்தார் உதவியுடன் தயார் செய்த உணவை, மெஹர்ஜி தினமும் இரண்டு முறை ஆஷியானாவிற்கு எடுத்து வந்தார். மும்பையில் நரிமன், மெஹர்ஜி இருவரையும் தவிர வேறு எவரையும் பாபா சந்திக்கவில்லை - அவருடைய கட்டளைப்படி அங்கு வாழ்ந்த ரானோ, கிட்டி, கேட்டி, கோர்ஷெத் அல்லது ஸூனாமாசி ஆகியோரைக் கூட பாபா சந்திக்கவில்லை.

1950 நவம்பர் **26** அன்று, பாபாவின் பழைய வாழ்க்கையின் நெருங்கிய சீடர்களில் நால்வர் - பாபாவின் சகோதரர் பெஹராம், நாசிக்கைச் சேர்ந்த ராம்ஜூவின் மைத்துனர் அப்துல்லா ஜாஃபர், தத்து மெஹெந்தர்கே (அதி சீனியர் அலுவலக உதவியாளர்) மற்றும் தியோலாலியைச் சேர்ந்த ருஸ்தம் தின்யார் ஆகியோர் - மஹாபலேஷ்வரில் தாங்கள் எதிர்கொண்ட பொருளாதாரச் சிக்கல்களைக் குறித்து பாபாவிடம் தெரிவித்திருந்தனர்; இப்போது அவர்கள் மும்பைக்கு அழைக்கப்பட்டனர். ஆஷியானாவில், பாபா அவர்களுக்கு இவ்வாறு விளக்கினார்: **"நான் எனது பயணத்தின் போது, வறியவர்களுடன் பணிபுரிந்து கொண்டிருந்த வேளையில், உங்களையும் நினைவு கூர்ந்தேன். எனவே, அதே சேவையை உங்களுக்கும் வழங்குவதற்காக இன்று நான் உங்களை இங்கு அழைத்துள்ளேன்."**

பாபா நான்கு பேரிடமும், அவர்கள் எந்தத் தயக்கமுமின்றி சுதந்திரமாகவும் முழுமையாகவும் முறைப்படிச் செய்ய அனுமதிக்குமாறு வலியுறுத்தினார். **"இது நான் செய்யும் தானமோ அல்லது உபகாரமோ அல்ல"** என்று பாபா எரச் மூலம் விளக்கினார். **"பணமும் என்னுடையது அல்ல, அன்பான இதயங்கள் ஏழைகளுக்கு உதவுவதற்காக என்னிடம் கொடுத்தத் தொகையின் ஒரு பகுதி. உங்களுக்கும் உதவி தேவைப்படுகிறது என்று நான் கருதுவதால், உங்கள் மீது எந்தவிதமான கடமை உணர்வும் இல்லாமல் இதைத் தருகிறேன்."**

அதைத் தொடர்ந்து பாபா அவர்களின் கால்களைக் கழுவி, நெற்றியால் தொட்டு, தலைவணங்கினார். பின்னர், ஒவ்வொருவருக்கும் ரூ **1,000** கொடுத்து, அவர்களைத் தத்தமது இடங்களுக்கு திருப்பி அனுப்பினார்.

மெஹர்ஜி, நரிமன், ஆதி, ராம்ஜூ ஆகியோரிடம் பாபா தனது சமீபத்திய பயணங்களின் போது அனுபவித்த கஷ்டங்களை விவரித்தார். காலை **10:00** மணிக்கு, 'பிரபோர்ன்' விளையாட்டு மைதானத்தில் (BRABOURNE STADIUM) நடைபெற்ற கிரிக்கெட் தொடருக்கு, பாபா தனது தோழர்களுடன் சென்றார்.

நவம்பர் **27** திங்கட்கிழமை, மும்பை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் மேற்கொண்ட மஸ்த் பணியில் முழு தினமும் கழிந்தது. பாபா, மும்பையில் வாழ்ந்த **33** மஸ்துகளைத் தொடர்பு கொண்டார். பாபா ஒவ்வொரு மஸ்தின் காலடிகளிலும் தலை வைத்து வணங்கும்போது, தோழர்களில் ஒருவர் மஸ்த் தனது ஆசீர்வாதத்தை வழங்குமாறு குரல்கொடுத்தார். ராம்ஜூ, பாபாவுடன் முதல் மூன்று நாட்கள் மும்பையில் பல்வேறு இடங்களுக்குச் சென்றார், மேலும் அறிவுறுத்தியபடி மஸ்துகளிடமிருந்து பின்வரும் ஆசீர்வாதங்களைக் கோரினார்: "தயவுடன் அவருடைய ஆன்மீகப் பணிகள் வெற்றிகரமாக நிறைவுற பிரார்த்தனை செய்யுங்கள்."

சில மஸ்துகள், "கடவுள் சித்தம் இருந்தால், அது நிறைவேறும்" என்று பதிலளித்தனர். சிலர் ஒரு வார்த்தையும் கூறாமல் தலையை மட்டும் அசைத்தனர்.

"கடவுளின் விருப்பத்திலும் சத்குருக்களின் பணியிலும் நான் எப்படி தலையிட முடியும்?" என்று ஒரு மஸ்த் தைரியமாகக் கேட்டார். அவரைத் 'தலையிட' கூறவில்லை, ஆனால் அவரது ஆசீர்வாதத்தை மட்டுமே வழங்க வேண்டும் என்று உறுதியளித்தபோது, மஸ்த் பாபாவின் முதுகில் சில முறை உறுதியாகத் தட்டி, "அப்படித்தான் இருக்கும், அது அப்படியே நடக்கும்" என்றார்.

ஒரு மஸ்த், ஒருவழியாக ஆசீர்வாதத்தை வழங்கும் முன் சரியாக மூன்று ரூபாய் நான்கு அணா கொடுக்குமாறு கேட்டார். பாபா அந்தத் தொகையைக் கையில் கொடுத்தபோது, ஒரு அணா நாணயம் அவரது விரல்களிலிருந்து நழுவி ஒரு மரப்பெட்டியின் கீழ் உருண்டு சென்றது. மஸ்த் சீற்றமடைந்து, நாணயத்தைக் கண்டுபிடித்து அவரிடம் கொடுக்கப்படும் வரை, விரும்பிய வரத்தை வழங்க மறுத்துவிட்டார்.

'பதிவாலா பாபா' (PATIWALA BABA) ஒரு ஜலாலி மஸ்தாக இருந்தார், அவர் எவரையும் அருகில் அணுக அனுமதிக்கவில்லை. பாபா அவரிடம் இரண்டு முறை சென்றார்; இரண்டாவது முறையாக, அர்த்தராத்திரியில் அவரை சந்தித்தபோது, மஸ்த் கூறினார்: "அவர் கடவுளாக இருக்கலாம்! அவர் முஹமதாக இருக்கலாம்! ஆனால் அவர் ஏன் என்னைத் தனியாக விடக்கூடாது?"

பாபா அமைதியாக அவரது பாதங்களைத் தொட்டு வணங்கி ஆசியைக் கோராமல் வெளியேறினார். "**அவர் மிகவும் நல்ல மனிதர்**" என்று பாபா ஒரு முறைக்கு மேல் கூறினார்.

ஆஷியானாவில் சத்தத்தால் பாபா தொந்தரவாக உணர்ந்ததால், அங்கிருந்துச் சென்று, அவர் மெஹர்ஜியின் இல்லத்தில் மாடியில் அமைந்த ஓர் அறையில் ஓய்வெடுக்கத் தொடங்கினார்; அவரது எஞ்சிய நேரம் அனைத்தும் மஸ்துகளைத் தொடர்புகொள்வதில் கழிந்தது. ஆனால் மெஹர்ஜியின் வீட்டு அறையும் சத்தமாக இருந்ததால், இரண்டு இரவுகளுக்குப் பிறகு, பாபா ஆஷியானாவிற்குத் திரும்பிச் சென்று, இந்த முறை அவர், வரவேற்பு அறையில் ஓய்வெடுத்தார்.

டிசம்பர் 3ஆம் நாள் ஆதி அஹமதுநகருக்குத் திரும்பி வந்த பின்பு, பாதிரி, மேலும் அறிவுறுத்தல்களுக்காக, அடுத்த நாள் அழைக்கப்பட்டார்.

1950 நவம்பர் 30 முதல், பாபா தனது மஸ்த் பணி முடிந்த பிறகு தினமும் 'பிரபோர்ன்' விளையாட்டு மைதானத்தில் நடந்த கிரிக்கெட் தொடரைப் பார்வையிடத் தொடங்கினார். ஆனால் ஒரு வாரத்திற்குப் பின்னர், 1950 டிசம்பர் 5 அன்று காலை, பாபாவின் மனநிலை சரியில்லாமல் இருந்ததால், அன்றைய பயணத்தை ரத்து செய்தார். "**நான், நாள் முழுவதும் ஓய்வெடுப்பேன்**," என்று கூறி, மேலும், "**நாம் இனி எந்தப் போட்டிகளுக்கும் செல்ல மாட்டோம்**" என்றார். இரவு காவலராகக் கண்காணித்து வந்த சகன், இரவு முழுவதும் பாபா மோசமான மனநிலையில் இருந்ததாகத் தெரிவித்தார்.

மதிய உணவு நேரத்தில் அனைவரும் போட்டியின் ஆட்டப் புள்ளிகளைத் தெரிந்து கொள்ள ஆர்வமாக இருந்தனர், ஆனால் பாபாவின் மனநிலை வானொலியை இயக்கும் விதத்தில் இல்லை. திடீரென, போட்டி எப்படி நடக்கிறது என்று பாபாவே ஆச்சரியத்தில் வினவி, வானொலியை இயக்கும்படிக் கேட்டுக்கொண்டார். முதன் முதலில் அவர்கள் கேட்டது, ஆறாவது ஆன்மீகத் தளத்தில் இருந்த துறவி 'அரபிந்தோ கோஸ்' நேற்று இரவு 1:30 மணியளவில் காலமானார் என்ற செய்தி. அப்போதுதான் பாபாவின் மனநிலைக்கான காரணத்தை அனைவராலும் புரிந்து கொள்ள முடிந்தது. கடந்த காலத்தில், அரபிந்தோ கோஸ் ஒரு யோகி என்று பாபா குறிப்பிட்டு, அவர், தனது சுய முயற்சியால் ஆறாவது ஆன்மீகத் தளம் வரை முன்னேறிச் சென்ற புனித மனிதர் என்றார்.

பாபா இப்போது அரபிந்தோ கோஸின் புகைப்படத்தை வரவழைத்து, தன் முன் வைத்து, வானொலியில் அவரது வாழ்க்கை வரலாற்று நிகழ்வுகளைக் கேட்டுக்கொண்டிருந்தார். பின்னர் ஆதி சீனியரிடம் அவர் என்ன செய்து கொண்டிருந்தார் என்பதை விளக்கினார்: "**நான் அரபிந்தோவை ஆறாவது ஆன்மீகத் தளத்திலிருந்து ஏழாவது ஆன்மீகத் தளத்திற்கு** (இறை உணர்வு) **எடுத்துச் சென்றேன்**."

மஹாபலேஷ்வர், டிசம்பர் **1950**
(MAHABALESHWAR, DECEMBER 1950)



கவாலி நிகழ்ச்சியை ரசிக்கும் காட்சி
13 பிப்ரவரி **1951**
(ENJOYING A QAWAALI, 13 FEBRUARY 1951)

மஹாபலேஷ்வர் ஏகாந்தவாசம்

(Mahabaleshwar Seclusion)

மும்பையில் தனது பணியை நிறைவு செய்து, பாபாவும் தோழர்களும் 45 நாட்களுக்குப் பின்பு, டிசம்பர் 6 புதன்கிழமை அன்று மஹாபலேஷ்வருக்கு இரண்டு கார்களில் புறப்பட்டனர். சகன், பாதிரி, ஆதி ஜூனியர் (இவர்களும் குறுகிய காலத்திற்காக மும்பைக்கு வந்தவர்கள்) மூவரும் பூனாவில் இறங்கி அங்கிருந்து அஹமதுநகர் திரும்பிச் சென்றனர்.

மஹாபலேஷ்வரில் குடியேறிய பாபா, 100 நாட்கள் ஏகாந்தவாசம் மேற்கொள்ளும் விருப்பத்தைத் தெரிவித்தார். அப்போது, பாதிரி மஹாபலேஷ்வருக்கு அழைக்கப்பட்டார், அங்கு ஒரு சிறிய வைக்கோல் குடிசையை உருவாக்குமாறு அவருக்கு அறிவுறுத்தப்பட்டது.

டாக்டர் கனி, காடேக்கர் இருவரும் பூனாவில் பாபாவுக்கான மெச்சத்தக்க பணியை செய்து வந்தனர். அவர்கள், காக் ஸாஹேபுடன் இணைந்து, பாபாவைப் பற்றியும் அவருடன் கழித்த நாட்களைப் பற்றியும் சொற்பொழிவு வழங்குவதை வழக்கமாகக் கொண்டனர். இவ்வாறு பாபாவிடம் பல நபர்களை ஈர்ப்பதன் மூலம், அவர்களால் ஒரு குழுவை உருவாக்க முடிந்தது, இந்தக் குழுக்கள் 'டாக்டர் கனி குழு' அல்லது காடேக்கரின் இசை இயக்கத்தின் கீழ் 'புதிய பஜன் மண்டலி' என்று குறிப்பிடப்பட்டது.

தாடே குடும்பத்தினர் குறிப்பாக பாபாவிடம் வெகுவாக ஈர்க்கப்பட்டனர், மேலும் பஜனை நிகழ்ச்சி ஒவ்வொரு வாரமும் அவர்களது இல்லத்தில் நடைபெற்றது. மதுசூதன், ஒரு சிறந்த பாடகர், வழக்கமான உறுப்பினராகப் பங்கெடுத்தார், மேலும் பாபாவைப் பற்றிய பஜனைகளைத் தானாகவே இசையமைத்து, பாடவும் தொடங்கினார். சுபத்ரா பண்டெலுவும் ஒரு சிறந்த பாடகியாகத் திகழ்ந்தார், மேலும் தாடே குடும்பமும் அவர்களுடன் இசை நிகழ்ச்சியில் பங்கெடுத்தது. மூன்று சகோதரர்கள் - லக்ஷ்மிகாந்த், கிஷன், நரேந்திர தாடே - அவர்களின் பெற்றோர் மற்றும் பாபுஸாஹேப் ஷிண்டே, லக்ஷ்மண் காம்ப்ளே, ரங்கோலே, படே, நாராயண் மற்றும் கிருஷ்ணா பண்டெலு போன்ற அன்பர்களுடன் ஓர் இளைஞன், பிரதாப் அஹிர் (PRATAP AHIR) ஆகியோர் பஜனைக் குழுவில் அங்கம் வகித்தனர். இந்தக் குழுவை காடேக்கரும், அவரது மனைவி குணாதாயும் இயக்கி வந்தனர்; மேலும் அவர்களின் குழந்தைகளான திகம்பர், நளினி ஆகியோரும் பஜனையில் பங்கெடுத்தனர். மெஹராபாத், மெஹராஸாத்தில் நடந்த விசேஷ நிகழ்வுகளில் அஹமதுநகரைச் சார்ந்த ருஸ்தம் காக்காவும் அவரது மனைவி ஸில்லா காக்குவும் பஜனை நிகழ்ச்சிகளை

நடத்தியது போல, பூனா பஜன் மண்டலியும் ஒருநாள் பாபாவிற்கு முன்னால் பஜனை நிகழ்ச்சியை நடத்துவார்கள் என்று நம்பினர்.

மஹாபலேஷ்வருக்குத் திரும்பிச் சென்ற பாபா, பூனா பஜன் மண்டலியின் ஒவ்வோர் உறுப்பினரின் புகைப்படத்தையும் கேட்டார். மதுசூதன் நரேந்திர தாடே இருவரின் படங்களைச் சுட்டிக் காட்டிய பாபா, **"இந்த இரண்டையும் சில நாட்களுக்கு என்னுடன் வைத்திருப்பேன்"** என்று குறிப்பிட்டார்.

அந்த ஆண்டு மெஹராவின் பிறந்தநாளன்று இசை நிகழ்ச்சி நடத்துவதற்காக பாபா, முழு பூனா பஜன் குழுவையும் மஹாபலேஷ்வருக்கு அழைத்தார். இந்த நிகழ்ச்சிக்கு ஒரு வாரத்திற்கு முன்பு, காக் ஸாஹேப், அவர் எழுதிய ஒரு பாடலை, தாடேயிடம் கொடுத்து, "உங்களுக்கு வாய்ப்பு கிடைத்தால், குழு, பாபாவிற்கு முன்பாக இந்தப் பாடலைப் பாடலாம்" என்றார். சில நாட்களுக்குப் பின்னர், 1950 டிசம்பர் 23ஆம் நாள், காக் ஸாஹேப் தனது 64ஆவது வயதில் பூனாவில் காலமானார்.

மன்ஸில்-எ-மீமின் ஆரம்ப நாட்களிலிருந்து காக் ஸாஹேப், மெஹர் பாபாவுடன் இருந்தார், அவரும் அஸார் ஸாஹேபும், உபாஸனி மஹாராஜின் வாழ்க்கை வரலாற்றை உருது மொழியில் எழுதிக்கொண்டிருந்தனர். காக் ஸாஹேப் டோக்கா, பெங்களூர், மெஹராபாத் ஆகிய இடங்களில் பாபாவுடன் நீண்ட காலம் தங்கியிருந்தார். வயதின் காரணமாக அவரால் புது வாழ்வில் பாபாவுடன் இணைய முடியாவிடிலும், இறுதி வரை அவருடைய அரவணைப்பில் இருந்தார். மெஹராபாத்திலிருந்து குடும்பத்துடன் அவர் பூனாவிற்குச் சென்று அங்கேயே வாழ்ந்தார்.

காக் ஸாஹேப் எழுதிய பாடலை டாக்டர் கனி படித்ததும், அவரும் பாபாவிற்கு முன்பாக பாடுவதற்கென ஒரு பாடலை வழங்கினார். காக் ஸாஹேபின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட பூனா குழுவினர், மறுநாள் 24ஆம் தேதி மஹாபலேஷ்வருக்குச் சென்று, அன்று மாலை அவர்கள் பாபாவை சந்தித்த வேளையில், குழுவிலிருந்த ஒவ்வொருவரும் அவருக்காக ஒரு சிறிய அறையில் தனித்தனியாகப் பாடினர்.

1950 டிசம்பர் 25, புதன்கிழமை, கிறிஸ்துமஸ் தினத்தன்று, மஹாபலேஷ்வரில் மெஹராவின் பிறந்தநாள் கொண்டாடப்பட்டது. கிட்டி, ரானோ இருவரும் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ள அழைக்கப்பட்டனர், இதனால் அவர்களது கிறிஸ்துமஸ் விடுமுறையை பாபாவுடன் கழிக்க முடிந்தது.

மதுசூதன் மற்றும் பஜனை மண்டலி உறுப்பினர்கள் அனைவரும் அன்றைய தினம் பக்திப் பாடல்களையும், தொடர்ந்து புது வாழ்வு பாடலையும் பாடினர். இதைக் கேட்ட பாபா இவ்வாறு எடுத்துரைத்தார்: **"இந்தப் புதுவாழ்வு**

பாடலுக்கு இணங்கி வாழ்வதே, பலவீனங்களும், குறைபாடுகளும் நிறைந்த, தாழ்மையான மற்றும் கீழ் நிலை மனிதர்களின் பாத்திரத்தில் நான் தேடும் வெற்றியாகும். இப்போது நீங்கள் பாடும் அனைத்தும் பழைய வாழ்க்கை மெஹர் பாபாவுக்காக, எனக்காக அல்ல, ஏனெனில், இந்தப் புது வாழ்வில் என்னால் அவற்றை ஏற்றுக்கொள்ள முடியாது, ஆனால் நீங்கள் முழு மனதுடன், அன்புடனும் நம்பிக்கையுடனும் பஜனை பாடலாம்."

பாபா சிறிது நேரம் பஜனைகளையும் கஸல்களையும் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தார், மேலும் இசை நிகழ்ச்சியை ரசித்துக்கொண்டே இருந்த வேளையில், பாபாவின் வெளிப்பாடுகளை பாதிரி புகைப்படங்கள் எடுத்தார். பெண்மணிகள் வேறு ஓர் அறையில் திரைக்குப் பின்னால் அமர்ந்து கேட்டுக் கொண்டிருந்தனர். பாபா மிகவும் நல்ல மனநிலையில், குழுவுடன் இணைந்து டோலக் (டிரம்) மற்றும் ஜாலராக்களை விரல்களால் தாளமிட்டு இசைத்தார்.

காக் ஸாஹேபின் சமீபத்திய மரணத்தைப் பற்றி பாபாவிடம் காடேக்கர் கூற விரும்பினார், ஆனால் பழைய வாழ்க்கை நிகழ்வுகளைக் குறிப்பிடுவதற்கு புது வாழ்வில் தடைகள் இருந்ததால், அவரால் அவ்வாறு செய்ய முடியவில்லை. ஆனால் அவர் உயிரைத் துறப்பதற்கு முன் காக் எழுதிய குறிப்பிட்ட கஸலை பாபாவிற்காக, மதுசூதனிடம் தந்திரமாகப் பாடச் சொன்னார்.

மதுசூதன் மற்றும் குழுவினர் தொடர்ந்து பாடினர், ஒரு கட்டத்தில் காக் ஸாஹேபின் குறிப்பிட்ட கஸலையும் பாடினர். இரண்டு வரிகளைக் கேட்ட பாபா, மதுசூதன் பாடுவதை நிறுத்தக் கூறிவிட்டு, சில கணங்கள் அமைதியானார். அவர் வேறு எங்கோ, தொலை தூரத்தில் இருப்பது போலப் பார்த்தார். பாபா ஏதோ ஒரு சிந்தனையுடன் முற்றிலும் அமைதியாக அமர்ந்திருந்ததால், உலகமே ஒரு கணம் ஸ்தம்பித்து விட்டதாகத் தோன்றியது.

சில நிமிடங்களுக்குப் பிறகு, பாபா தனது முகத்தையும் கண்களையும் வருடி, "**அவர்** (காக் ஸாஹேப்) **என்னிடம் வந்திருக்கிறார்**" என்று சைகையால் தெரிவித்தார். பாபா, காக் ஸாஹேப் பெயரைக் குறிப்பிடவில்லை என்றாலும், பூனா குழுவிற்கு அவர் யாரைக் குறிக்கிறார் என்பது தெரியும். மதுசூதன் குழுவினர் தங்கள் பாடலை மீண்டும் தொடர்ந்து, முழு கஸலையும் பாடினர். பாபா அதைக் கேட்டுக்கொண்டிருந்தபோது தீவிரமான மனநிலையில் இருப்பதாகத் தோன்றியது.

"**இந்த கஸலை இயற்றியது யார்?**" என்று பாபா கேட்டார்.

"காக் ஸாஹேப்" காடேக்கர் பதிலளித்தார்.

"**அவர் எப்போது எழுதினார்?**"

"அவர் இறப்பதற்கு சில நாட்களுக்கு முன்பு," காடேக்கர் அமைதியாக பதிலளித்தார். அவர் பாபாவிடம் தெரிவிக்க விரும்பிய செய்தி இதுவாகும்.

மதுசூதன் குழுவினர் தொடர்ந்து டாக்டர் கனி இயற்றிய கஸலையும் பாடினர். கனியின் கஸல் புகார் கூறும் தொனியில் இருந்தாலும், நகைச்சுவை நயத்துடன் இருந்தது. இரண்டு வரிகள் பாடியதும் பாபாவின் மனநிலை மகிழ்ச்சிகரமாக மாறியது. பாபா சிரித்துக்கொண்டே, **"யானைத் தலையன்"** (கனியின் பல புனைப்பெயர்களில் ஒன்று) என்று சுட்டிக்காட்டினார்.

மதுசூதன், நரேந்திரன் இருவரும் சில நாட்கள் தன்னுடன் இருக்க வேண்டும் என்று பாபா முன்பு விருப்பம் தெரிவித்திருந்தார், ஆனால் அன்று அவர், அதற்கு பதிலாக 15 வயதான இளம் பிரதாப் அஹிரைத் தேர்ந்தெடுத்தார். பள்ளி முதல்வரிடம் அனுமதி பெற்று ஒரு வாரத்தில் மஹாபலேஷ்வருக்குத் திரும்பி வருமாறு பாபா அறிவுறுத்தினார். கிறிஸ்துமஸ் தினத்தை ஒட்டி பள்ளிக்கு விடுமுறை வழங்கப்பட்டது. பூனா குழுவினர் அன்றே தங்கள் இல்லங்களுக்கு புறப்பட்டனர். மெஹராவின் பிறந்தநாள், பாபாவிற்கு முன் பாடுவதற்கான முதல் வாய்ப்பை அவர்களுக்கு வழங்கியது.

திரும்பிச் செல்லும் வேளையில் காடேக்கர் பரவசமடைந்தார். பிரதாப் இவ்வாறு விவரித்தார்: **"காடேக்கர் ஓர் உயர் அரசாங்க அதிகாரி, ஆனால் அவரது பூனா குழுவில் ஒருவர் பாபாவுடன் தங்கப் போவதில் அவர் மிக்கக் மகிழ்ச்சியடைந்தார், அவர் உண்மையில் ஒரு குழந்தையைப் போல சாலையில் ஆனந்த நடனமாடினார்."**

காக் ஸாஹேபின் மறைவைப் பற்றிய செய்தி தோழர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. ஆனால் பாபாவின் அன்பில் வாழ்ந்த எந்த ஒரு பழைய தோழரைப் பற்றியும் சாதாரணமாகக் குறிப்பிடுவது கூட தடைசெய்யப்பட்டதால், ஒவ்வொருவரும் கடந்த கால சம்பவங்களை அமைதியாக நினைவுகூர வேண்டிய கட்டாயம்.

உதாரணமாக, ஒருமுறை பாபா, கீழ் மெஹராபாத்தில் ஏகாந்தவாசம் மேற்கொண்ட போது, பெண்டு, சிது இருவரும் இரவு கண்காணிப்பாளராக இருந்தனர். பாபாவிற்கு ஜலதோஷத்தால் சளி மற்றும் மூச்சுத்திணறலால் இருமல் இருந்தது. இந்த நிலையிலும், அவர் காலை 5:00 மணிக்கு நீராடுவது வழக்கம். பெண்டுவும் சிதுவும் தினமும் அதிகாலையில் பாபா நீராடுவதற்கான நீரை சூடாக்கி, துணிகளை துவைத்தனர். ஒரு நாள் காலையில், நீராடிய பிறகு, பாபா சிதுவிடம் சப்பாத்தி மற்றும் வெண்ணெய் கொண்டு வரக் கூறி, மேலும், **"வீர சைத்தான் - காக், வெள்ளை சைத்தான் - டான், கருப்பு சைத்தான் - நீலு"** என்று சத்தமாகக் கத்தி, அந்த சைத்தான்களை அழைக்குமாறு அறிவுறுத்தினார்.

அவ்வாறே சிது, "வீர சைத்தான் காக், வெள்ளை சைத்தான் டான், கருப்பு சைத்தான் நீலு, நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்?" என்று குரல் கொடுத்ததும் மூவரும் உடனே வந்தனர், பாபா சிரித்துக்கொண்டே சப்பாத்தி மற்றும் வெண்ணெயைப் பரிமாறினார்.

காக் கவிதை நயத்துடன் பதிலளித்தார்:
“பாபா, மிக்க நன்றி, ‘வீர் சைத்தான்’ பட்டத்தைத் தந்ததற்கு!
இன்று அதுவோ மதுபானத்தை வென்றது எனக்கு!”

மற்றுமொரு காலகட்டத்தில், காக் ஸாஹேப் பூனாவில் நடந்த குதிரைப் பந்தயத்தில் பங்கெடுப்பதிலும், குதிரைகள் மீது பந்தயம் கட்டுவதிலும் அதீத ஆர்வம் காட்டினார். அவர் பாபாவிடம், “உங்கள் அருளால் எனது வாழ்வில் ஒரு முறையேனும் என்னை வெற்றி பெறச் செய்யுங்கள்!” என்றார்.

அதன்பிறகு, பாபா தினசரி குதிரைப் பந்தயங்களில் ஆர்வம் காட்டத் தொடங்கினார், மேலும் காக் ஸாஹேபை பொருளாதார ரீதியாக ஆதரித்து, பந்தயத்தில் பங்கெடுக்கவும், மேலதிகமாக பந்தயப் பணம் கட்டவும் அவரை ஊக்குவித்தார். காக் வெற்றி பெற்றால், அவரது வெற்றித்தொகையில் பாதி பாபாவிற்குச் செல்லும் என்று இருவருக்கும் இடையே எழுத்துப்பூர்வ ஒப்பந்தமும் நிறைவேற்றப்பட்டது.

ஒவ்வொரு நாளும், பாபாவும் காக்கும் வரவிருக்கும் பந்தயங்களைப் பற்றி விவாதித்தனர். பாபா, ஆண் மண்டலியிடம், “**காக் பெரிய அளவில் வெற்றிவாகை சூடி, நமது சட்டைப் பைகளை நிரப்பினால் நன்றாக இருக்கும்! எங்கள் இருவருக்கும் பணம் தேவைப்படுகிறது!**” என்றார்.

ஆனால், நாட்கள் செல்ல செல்ல, பாபா பந்தயங்களில் அதிக ஆர்வம் செலுத்த, காக் கணிசமான அளவில் பணத்தை இழந்து, முழு விவகாரத்திலும் வெறுப்படைந்தார். காக்கின் வெறுப்பு மிகவும் அதிகமாக, அவருக்குப் பந்தயத்தில் எந்த விருப்பம் இல்லாதபோதும், “**இப்படி அரைகுறையாக விலகாதீர்கள், நீங்கள் விரைவில் வெற்றி பெறுவீர்கள். எனக்குப் பணம் தேவை; என்னைத் தோல்வியுறச் செய்யாதீர்கள்!**” என்று பாபா அவரை வற்புறுத்தினார்.

எனவே காக் தன்னிடம் எஞ்சிய அனைத்தையும் பந்தயம் வைத்தார், ஆனால் மீண்டும் இழந்தார். சூதாட்டத்தில் புதிதாக அடையப்பெற்ற வெறுப்பின் காரணமாக, அவர் பணத்தை இழந்ததைப் பற்றி அதிகம் உணராதபோதிலும், இனிமேல் ஒருபோதும் பந்தயத்தில் ஈடுபடமாட்டேன் என்று சத்தியம் செய்தார்.

பாபா, “**நீங்கள் தோல்வியுற்றாலும் பரவாயில்லை. மீண்டும் பந்தயம் கட்டுங்கள்; நான் அதற்கான பங்கைத் தருகிறேன்**” என்று சமாதானப்படுத்தினார்.

ஆனால் காக் பதிலளித்தார், “நான் எனது வாழ்க்கையில் இனி ஒருபோதும் பந்தயம் கட்ட மாட்டேன்! இந்த நஷ்டம் இறுதியில் எனது லாபம். இப்போது நான் உங்கள் காலடியில் தூசியாக இருக்க விரும்புகிறேன்.”

சேவக தோழர்களும் காக்கின் கவிதைகளை (‘ஷைரி’ என்று அழைக்கப்படும்) நினைவு கூர்ந்தனர், மேலும் அவர் கனியின் ‘சினேகிதனுக்கு

ஜெர்மியாட் வரைவது!' என்ற கஸலுக்கு எவ்வளவு திறம்பட பதிலளித்தார். காக் ஸாஹேபுடனான பல நல்ல தருணங்களை தோழர்கள் நினைவு கூர்ந்தனர், ஆனால் அவர்களால் அவற்றை எடுத்துரைக்க முடியவில்லை. புது வாழ்வு உலகத்தில் இது, பற்றின்மைக்கான ஒரு பாடமாக இருந்தது, ஏனெனில் முழுமையான பற்றற்ற நிலையில் மட்டுமே ஒருவர் உண்மையாக நேசிக்க முடியும்.

ஏற்கனவே அறிவுறுத்தியபடி, பிரதாப் அஹிர் ஒரு வாரத்திற்குப் பிறகு மஹாபலேஷ்வருக்குத் திரும்பி வந்தார்; அப்போது பாபா மாடியில் இருந்தார், சிறுவனுக்கு தனது உணவில் சிறிதளவை விஷ்ணு மூலமாக அனுப்பிவைத்தார். பிரதாப் உணவை உண்டதும் மேலே அழைக்கப்பட்டார். பாபா, சற்று முன்னதாக நீராடியதால் முடி அவிழ்க்கப்பட்ட நிலையில் தோளைத் தொட்டுக் கொண்டிருந்தது; பாபா மாடிப்படியின் மேல் தளத்தில் நின்று கொண்டிருந்ததைப் பார்த்த பிரதாப் இவ்வாறு நினைவு கூர்ந்தார்: "பாபா, தலைமுடி தோளில் புரண்ட வண்ணம் நின்று கொண்டிருந்தார், சூரிய ஒளிக்கதிர்கள் முகத்தில் விழுந்தன. நான் வராந்தாவின் அருகே வந்தபோது பாபா என்னைப் பார்த்தார். அவர் என்னை மிகவும் இரக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்ததை நான் மறக்கவில்லை. அவர் கண்களிலிருந்து வெளிச்சம் வருவது போலப் பிரகாசமாகத் தென்பட்டார். அந்த தோற்றத்தை நான் மீண்டும் ஒருபோதும் பார்த்ததில்லை."

படிக்கட்டுகளில் ஏறிய பிரதாப்பை, பாபா சைகையால் அழைத்தார், பாபா அவரை முத்தமிட்டு வரவேற்றார், அவரைத் தழுவி, "**நீங்கள் மிகவும் அதிர்ஷ்டசாலி, இந்தப் புது வாழ்வில் நான் எவரையும் சந்திக்கவில்லை. உங்களுக்கும் எனக்கும் பழைய தொடர்பு உள்ளது**" என்று சைகையால் தெரிவித்தார்.

பிரதாப்பை பாபா ஒரு மண்டபத்திற்கு அழைத்துச் சென்று, சிறுவனை ஒரு கட்டிலில் தனதருகில் அமரச் செய்தார். எழுத்துப்பலகையில், மிக மெதுவாக பாபா, பிரதாப்பின் பெற்றோர், குடும்பம் மற்றும் கல்வி பற்றிய கேள்விகளை உச்சரித்தார், பிரதாப்பின் குடும்பத்திற்கும் அவருடன் நெருங்கிய தொடர்பு இருப்பதாகத் தெரிவித்தார்.

சில நிமிடங்களுக்கு ஒருமுறை பாபா சிறுவனை முத்தமிட்டு வந்தார். பாபாவின் அருகில் அமர்ந்திருந்த சிறுவன் அவரது விரல்கள் எழுத்துப்பலகையில் நகர்வதை கவனமாகப் பார்த்து, படித்து, பாபா சொன்னதை அவனால் பின்பற்ற முடிந்தது, மிகுந்த ஆச்சரியமாக இருந்தது.

திடீரென, பாபா, பிரதாபை எழுந்து பத்து அடி தூரத்தில் நிற்குமாறு கூறி, அவனுடைய ஆடையைக் கழற்றுமாறு சைகையால் தெரிவித்தார். பிரதாப் இவ்வாறு நினைவு கூர்ந்தார், "ஒரு கணம் நான் சற்று தயங்கினேன், ஏனெனில் வேறு எவரேனும் பார்க்கக்கூடும் என்று நான் நினைத்தேன். வேறு எவரும்

பார்க்க முடியாது என்று பாபா என்னை சமாதானப்படுத்தினார்." பிரதாப், பாபாவிற்குக் கீழ்ப்படிந்து தனது ஆடைகளையெல்லாம் கழற்றிய வேளையில் பாபா அவரைத் திரும்பும்படி சைகையால் தெரிவித்தார், பின்னர் உடனடியாக அவரது ஆடைகளை மீண்டும் அணியுமாறு அறிவுறுத்தினார்.

ஆடை அணிந்தவுடன் பிரதாப் மீண்டும் அவர் அருகில் வந்து அமர்ந்தான். பாபா சிறுவனிடம் மேலும் பல கேள்விகளைக் கேட்டு, **"எனது பார்வை உன்னிடம் உள்ளது. புகைபிடித்தல், மது அருந்துதல் மற்றும் முறைகேடான பாலியல் உறவு இவற்றைத் தவிர்க்கவும். இப்படிப்பட்ட செயல்களில் ஈடுபடுவது பாபாவிற்குப் பிடிக்காது. உங்கள் மூத்த சகோதரர் என்ற முறையில் இதை நான் உங்களுக்குச் சொல்கிறேன். இந்த அறிவுரைகளுக்குக் கீழ்ப்படிவீர்களா?"** என்று கூறி முடித்தார்.

"கீழ்ப்படிவேன்," என்று பிரதாப் உண்மையாக உறுதியளித்தார்.

மேலும் சில பொது உத்தரவுகளை வழங்கி, சுமார் இரண்டு மணி நேரம் பாபாவுடன் தனியாக இருந்த பிறகு, பிரதாப் வெளியே வந்தார். சேவக தோழர்கள் வெளியில் கூடியிருந்தனர். பாபா, பிரதாபை அருகில் அமரச் செய்து, **"இந்த சிறுவனால் நான் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன். அவனை எனக்கு மிகவும் பிடிக்கும். அவன் என்னை நேசிக்கிறான்"** என்று கூறினார்.

பாபா கேலி செய்தார், **"நீங்கள் அனைவரும் என்னுடன் எத்தனை வருடங்கள் இருக்கிறீர்கள்? நீங்கள் உதவாக்கரைகள்! உங்களில் பலருக்கு இன்னும் எனது எழுத்துப்பலகையை வாசிக்கத் தெரியவில்லை, அதேசமயம் இன்று காலை வந்த இந்த சிறுவன் அதைப் படிக்கத் தொடங்கிவிட்டான்!"**

அதற்கு, நீலு, மராட்டி மொழியில் பிரதாபிடம், "இப்போது பாபா உன்னை விரும்புவதால், எங்களின் அன்றாட உணவையும் நீ பறித்துவிடுவாய்!" என்று கூறி பாபாவை சிரிக்க வைத்தார்.

பிரதாபுக்கு சிறப்பான இரவு உணவு வழங்கப்பட்டது, ஆனால் தோழர்கள் உண்ணுவதைப் பார்த்தபோது, அவருக்கும் அதே உணவை வழங்க வேண்டும் என்று அவர் உணர்ந்தார். மறுநாள், பாபா சிறுவனை, பாதிரியுடன் பூனாவிற்கு அனுப்பி வைத்தார். பிரதாப், பாபாவின் நெருங்கிய அன்பர்களில் ஒருவரானார். உண்மையில் காடேக்கரின் முயற்சியால் பிரதாப் மற்றும் பல உண்மையான ஆர்வலர்களை அவர் இறைவனின் பாதத்திற்குக் கொண்டு வந்தார்.

மிகவும் மகிழ்ச்சியான மனநிலையில், **1951** ஜனவரி **15** அன்று ஆதி சீனியர், எரச், பெண்டு, பைதூல் ஆகியோருடன் பாபா காலை **7:00** மணிக்கு மஹாபலேஷ்வரிலிருந்து புறப்பட்டு, மஸ்துகளைத் தொடர்பு கொள்ள தெற்கே ஹைதராபாத்தை நோக்கிப் பயணத்தைத் தொடங்கினார். ஆதி தனது காரில் அவர்களை அழைத்துச் சென்றார். பப்பா ஜெஸவாலா, பூனா ரயில் நிலையத்தில் மதிய உணவுடன் சிறிது நேரம் அவர்களை சந்தித்தார். அன்று பிற்பகலில்

அனைவரும் ஷோலாபூர் வந்தடைந்த வேளையில் இந்து சமய 'ஸித்தேஷ்வர் மேளா' (SIDDHESHWAR MELA) காரணமாக ஏராளமான மக்கள் திரண்டிருந்தனர்.

கூட்டத்தைக் கடந்து செல்ல சிறிது நேரம் பிடித்தாலும், பாபாவால் மூன்று மஸ்துகளை தொடர்பு கொள்ள முடிந்தது. பாபா தனது வழக்கமான நடைமுறையைத் தொடர்ந்தார், மஸ்த் இணக்கமான மனநிலையில் இருப்பதை உறுதிசெய்து, அதன் பிறகு மஸ்தின் காலடியில் தலைவணங்கி, ஆசிகளை நாடினார்; அதே நேரத்தில் பைதூல் "எனது மூத்த சகோதரரின் ஆன்மீக நோக்கத்தை நிறைவேற்ற பிரார்த்தனை செய்யுங்கள்" என்று கூறினார்.

ருஸ்தம் நகர்வாலா (RUSTOM NAGARWALA) என்ற உள்ளூர் பாபா பிரியர் அவர்களைப் பார்க்க நேர்ந்தது; மேலும் பாபாவை, அவரது இல்லத்திற்கு (1943ஆம் வருடம் பாபா தரிசனம் வழங்கினார்) வருகை தருமாறு கேட்டுக் கொண்டார். பாபாவும் காரை சிறிது நேரம் நிறுத்த ஒப்புக்கொண்டு, நகர்வாலா குடும்பத்தினர் மற்றும் பலரை அங்கு சந்தித்தார்.

இந்தத் தொடர்புகளுக்குப் பிறகு, பாபா தொடர்ந்து ஹைதராபாத்திற்குச் செல்ல விரும்புவதாகக் குறிப்பிட்டாலும், அந்த முடிவை ஆண் தோழர்களிடம் விட்டுவிட்டார்; அவர்களும் இரவில் தாமதமாக ஹைதராபாத்தைச் சென்றடைவது நல்லதல்ல என்று கருத்து தெரிவித்தனர். (பாபாவும் களைப்பாக உணர்ந்ததால்) ஷோலாபூரை விட்டு வெளியேறிய அவர்கள், ஜஹிராபாத் (ZAHIRABAD) அரசாங்க விடுதியில் இரவில் தங்க முடிவு செய்தனர். மறுநாள் காலை புறப்பட்டு, 11:00 மணிக்கு ஹைதராபாத் வந்து, உஸ்மான் ஸாகரில் (USMAN SAGAR) அமைந்த விருந்தினர் மாளிகையில் தங்கினர். மழைக்காலத்தில் மஹாபலேஷ்வரில் தங்குவது நடைமுறையில் மிகவும் சிரமம் (ஆண்டுக்கு சராசரி மழையளவு கிட்டத்தட்ட 250 அங்குலங்கள்) மற்றும் மே மாத இறுதியில் பங்களாவின் குத்தகை முடிவடையும் என்பதால், ஹைதராபாத்தில் பங்களாக்களை வாடகைக்கு எடுப்பதற்கான தேடல் அன்றே மேற்கொள்ளப்பட்டது.

அடுத்த நாள், ஜனவரி 17 அன்று காலை மஸ்துகளுக்கான தீவிர தேடல் தொடங்கியது. அன்று மாலை வரை ஹைதராபாத் மற்றும் ஸெக்கந்திராபாத் நகரங்களில் பணிபுரிந்த பாபா, 24 மஸ்துகளைத் தொடர்பு கொண்டார். இந்த மஸ்துகள் முழு விருப்பத்துடனும் மகிழ்ச்சியுடனும், பாபா, அவர்களைத் தொடர்பு கொள்ள அனுமதித்ததால், அவர் 'நல்ல சகுனங்களை உள்ளடக்கிய சாதகமான சூழ்நிலையில்' பணிபுரிந்தார். பாபா சில மணி நேரங்களில் பல மஸ்துகளைத் தொடர்பு கொண்டார், மேலும் இத்தகைய விரைவான தொடர்புகள் பாபாவின் அற்புதமான மனநிலைக்குக் காரணமாக இருந்தது. இருப்பினும், அன்று மதியம் மற்றும் மாலை வேளையில் தொடர்புகளின் மொத்த

எண்ணிக்கையில் நிலையான சரிவு ஏற்பட்டது, மேலும் பாபா தனது பணிக்கு ஒரு சில மஸ்துகள் மட்டுமே முக்கியம் என்று கருத்து தெரிவித்தார்.

ஸெக்கந்திராபாத்தில், மஸ்துகளில் கடைசி நபரின் கால்களில் தலைவணங்கிய வேளையில், பாபாவின் ஆன்மீகப் பணியின் வெற்றிக்காக தனது ஆசீர்வாதத்தை வழங்க மறுத்துவிட்டார். மஸ்த் அவரது ஆசீர்வாதத்தை வழங்காததால், பாபா, வணங்கிய தலையை உயர்த்த முடியாமல், நீண்ட நேரமாக மஸ்தின் கட்டுப்பாட்டில் சிக்கிக்கொண்டார். ஆனால் பெண்டு, எரச், பைதூல் ஆகியோரின் வேண்டுதலுக்கு இறுதியாக இணங்கி, மஸ்த் ஆசியை வழங்கிய பின்னரே பாபா அவரது தலையை உயர்த்த முடிந்தது.

இருப்பினும், மறுநாள் காலை, பாபாவின் பணிக்கு உகந்த திருப்திகரமான சூழல் நிலவவில்லை. ஹைதராபாத் முழுவதும் மஸ்துகளுக்கான அவர்களின் தேடல் தொடர்ந்தது, ஆனால் ஒரு புதிய மஸ்தைக் கூட கண்டுபிடிக்க முடியவில்லை. ஷாஸ்திரி (அல்லது ஷாஸ்திரிபுவா - SHASTRIBUA) என்று அழைக்கப்படும் ஒரு முக்கியமான மஸ்தைத் தேடி வருவதாகவும் பாபா, சுட்டிக்காட்டினார். நீண்டநேர தேடலுக்குப் பின்னர் ஒரு ஹோட்டலில் அந்த மஸ்தைக் கண்டுகொள்ள முடிந்தது. இறுதியாக ஷாஸ்திரியுடனான தொடர்பு பாபாவிற்குத் திருப்தியளிக்கும் விதத்தில் அமைந்தது.

பல மணிநேரம் தேடி, பாபா ஹைதராபாத்தில் ஆறாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்ட மஸ்த் - துறவியான 'ஸையத் முயினுதீன்' (SAYYED MU'INUDDIN) என்பவரைத் தொடர்பு கொண்டார். இருப்பினும், அவர் ஒரு சீற்றமிக்க, ஜலாலி வகையைச் சார்ந்த மஸ்த் ஆதலால், அவரை அணுகுவது கடினம். இறுதியாக, துறவி பாபாவை வரவேற்றார், மேலும் பாபா, ஸையத் முயினுதீனின் பாதங்களில் தலையை வைத்தபோது, மஸ்த் தனது ஆசீர்வாதத்தை வழங்கினார். 'கெவொஸ்' (CHAOUS) என்று அழைக்கப்படும் ஒரு வகை 'கவுஸ்' மஸ்துடன் (GHOUS-TYPE, தங்கள் கைகால் போன்ற உடல் பாகங்களைப் பிரிக்கும் தன்மை படைத்தவர்கள்) மேலும் ஒரு தொடர்பு மேற்கொள்ளப்பட்டது. இந்த நாளின் இறுதியில், பாபா மூன்று தொடர்புகளுடன் மிக்க மகிழ்ச்சியடைந்தார், "**நேற்றைய தினத்துடன் ஒப்பிடும் போது, இன்றைய தொடர்புகளின் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும், விளைவு மிகவும் சிறப்பாகவும் ஒரு வகையில் அரியதாகவும் உள்ளது,**" என்று குறிப்பிட்டார்.

மீண்டும், மாலையில், பாபா மஸ்துகளைத் தேடி வெளியே சென்று மேலும் நான்கு பேரைத் தொடர்பு கொண்டார். ஹைதராபாத் மற்றும் ஸெக்கந்திராபாத்தில் தொடர்பு கொண்ட மொத்தம் **31** மஸ்துகளில் ஆறு

ஆண்டுகளுக்கு முன்னர், 1945இல் தொடர்பு கொண்ட பல மஸ்துகளும் அடங்குவர்.

மறுநாள் 1951 ஜனவரி 19 வெள்ளி காலை ஹைதராபாத்திலிருந்து புறப்பட்டு, பாபா குல்பர்காவிற்கு (GULBARGA) வந்தார், ஆனால் அவர் குறிப்பாகப் பார்க்க வந்த மஸ்தைக் கண்டுகொள்ள முடியவில்லை. எனவே பாபா, 'க்வாஜா ஸாஹேப்' (KHWAJA SAHEB) என்று அழைக்கப்படும் முஸ்லீம் துறவியின் தர்காவிற்குச் சென்று மரியாதையைச் செலுத்தினார்; திரும்பி வரும் வேளையில் வேறொரு மஸ்தையும் தொடர்பு கொண்டார்.

குல்பர்காவிலிருந்து பாபா பன்னிரெண்டு மைல் தொலைவில் அமைந்த 'இத்கல்' (ITKAL) கிராமத்திற்குச் சென்றார். கிராமப்புற சாலையின் மோசமான நிலை காரணமாக, கார் கிராமத்திற்குள் நுழைய முடியாததால், பாபா தோழர்களுடன் ஒன்றரை மைல் நடந்து 'சுவாமி' (SWAMI) மஸ்தைத் தொடர்பு கொண்டார். அந்த மனிதர் மிகவும் முக்கியமான மஸ்த் என்று பாபா சுட்டிக்காட்டினார், மேலும் அந்த மஸ்த் அவருடன் மிகவும் இணக்கமாக இருந்து ஏற்றுக்கொண்டதால் பாபா மகிழ்ச்சியடைந்தார்; மேலும் பாபா, பிரத்யேகமாக எடுத்து வந்த இனிப்புகள் மற்றும் ஆடைகளை அவர் பரிசாக ஏற்றுக்கொண்டார். இந்தத் தொடர்பில் பாபா தனது 'மனம் நிறைந்த திருப்தி'யை வெளிப்படுத்தி அற்புதமான மனநிலையில் இருந்தார். மஸ்த், பாபாவிற்கு வழங்கிய இனிப்புகளில் சிலவற்றை அவர் உண்டு தோழர்களுக்கும் வழங்கினார்.

இரவு எட்டு மணியளவில் குல்பர்காவிற்குத் திரும்பி வந்து, 'ஆலந்த்' (ALAND) கிராமத்திற்குச் சென்றனர். பாபா, அங்கு வாழ்ந்த ஒரு மஜ்ஜூப்பைத் தொடர்பு கொண்ட பின்னர் அவர்கள் 'நல்துர்க்' (NALDURG) கிராமத்தை நோக்கிப் பயணம் செய்து, அதிகாலை 2:00 மணிக்கு வந்து சேர்ந்தனர். பாபா ஓய்வெடுக்க விரும்பியதால், அவர்கள் ஒரு சுங்க மாளிகையில் நிறுத்தி, அங்கு அவர் இரண்டரை மணி நேரம் தூங்கினார்.

பாபாவும் தோழர்களும் அதிகாலை 4:30 மணிக்கு நல்துர்க்கிலிருந்து புறப்பட்டு, பிற்பகல் பூனாவை வந்தடைந்தனர். ஷோலாபூரிலிருந்து பூனாவிற்குச் செல்லும் வழியில், பாபா மேலும் ஒரு மஸ்தைத் தொடர்பு கொண்டார்; இந்தப் பயணத்தின் போது மேற்கொண்ட மஸ்த் தொடர்புகளின் மொத்த எண்ணிக்கை 38ஆக உயர்ந்தது. பப்பா ஜெஸவாலா பூனா ரயில் நிலையத்தில் பாபா மற்றும் தோழர்களுக்கு சிற்றுண்டி வழங்கினார்; உடனடியாக, பாபா, சதாஷிவ் பாட்டீலைப் பார்க்கச் சென்று, 33 மணி நேர தொடர் பயணத்திற்குப் பின்னர், 20ஆம் நாள் மதியம் மஹாபலேஷ்வருக்குத் திரும்பி வந்தார். ஐந்து நாட்களில் மேற்கொண்ட சூறாவளி சுற்றுப்பயணத்தில் மொத்தம் 1,400 மைல்கள் கடந்ததாக மதிப்பிடப்பட்டது. ஆதி சீனியர் மறுநாள் அஹமதுநகர் திரும்பிச் சென்றார்.

மஸ்துகள் வாழும் கிராமங்கள் மற்றும் நகரங்களில், பாபா, அவ்வப்போது ஆதி சீனியரிடம் காரை சில நிமிடங்களுக்காக நிறுத்தக் கூறும் வேளையில், அவர்களை அணுகும் ஏழை ஆண், பெண், மற்றும் குழந்தைகளுக்கு ரூபாய் நாணயங்களைக் கொடுத்தார். மஹாபலேஷ்வரில் வந்து இறங்கிய அவர், காரை நிறுத்திய வேளையில், சாலையோரம் இருந்த இரண்டு ஆதரவற்ற பெண்மணிகளுக்கு ரூ 60 வழங்கினார்.

மஹாபலேஷ்வரிலிருந்து ஹைதராபாத் சென்று மீண்டும் திரும்பி வந்த கார் பயணம் **'மிகவும் திருப்திகரமாக இருந்ததாக'**, பயணத்தின் போது பாபா அடிக்கடி தெரிவித்தார். புது வாழ்வின் தொடக்கத்திலிருந்து, பாபா, இந்தப் பயணத்தைப் போல மகிழ்ச்சியாகவும் இன்புறத்தக்க விதத்திலும் இருந்ததில்லை. அவர் கூறியதற்கிணங்க, புது வாழ்வில் **'மிகவும் மகிழ்ச்சியான நேரம்'**, ஏனெனில் அவரது மஸ்த் தொடர்புகள் வெற்றிகரமாகவும் எளிதாகவும் செய்ய முடிந்தது.

திரும்பி வந்த பிறகு, பாபா மேலும் மஸ்த் பணிக்கான திட்டங்களை வகுத்து, பைதூல் புதிய மஸ்துகளைத் தேடி கண்டுகொள்ள முன்கூட்டியே மும்பைக்கு அனுப்பப்பட்டார். பைதூல் புறப்பட்டுச் சென்ற ஐந்து நாட்களுக்குப் பின்னர், 1951 ஜனவரி 29 திங்கட்கிழமை காலை எரச், பெண்டு, குஸ்தாஜி ஆகியோருடன் பாபா மஹாபலேஷ்வரிலிருந்து புறப்பட்டார். வழியில், மஹாபலேஷ்வருக்கும் பூனாவிற்கும் இடையே காரை நிறுத்தி, 'ஷிவாபூர்' (SHIVAPUR) கிராமத்தில் பாபா ஒரு மஸ்தைத் தொடர்பு கொண்டார்.

ஏற்கனவே திட்டமிட்டபடி பூனாவில், பாபா சில பழைய வாழ்க்கை சீடர்களை வரவழைத்தார். கராச்சியைச் சேர்ந்த பீலாமாயும் அவரது மகள் ஸில்லாவும் பாபா மீது ஆழ்ந்த அன்பு கொண்டிருந்தனர். 1947 வரை, தாயும் மகளும் மெஹராபாத்தில் தங்கியிருந்து, அதன் பின்னர் இருவரும் கராச்சிக்குத் திரும்பிச் சென்று, லாஹூரில் குடியேறினர். புது வாழ்வில் நுழைவதற்கு முன்பு, பீலாமாயின் பராமரிப்புக்காக பாபா, ஒதுக்கி வைத்திருந்த 2,000 ரூபாயை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. அன்பின் நிமித்தம் பீலாமாய் பணத்தை மறுத்ததால், பாபா இந்தத் தொகையை அன்பின் பெயரில் தனது பழைய வாழ்க்கையின் தகுதியுள்ள ஏழு நபர்களுக்கு **"தொண்டு சொந்த வீட்டிலிருந்து தொடங்கட்டும்"** என்று குறிப்பிட்டு அந்தப் பணத்தை விநியோகிக்க முடிவு செய்தார்.

மெஹராபாத்தைச் சேர்ந்த சிது, அஹமதுநகரிலிருந்து பகீரத் மற்றும் அரன்காவ்ம் கிராமத்தில் வாழும் பாவ் சீமா (BHAU CHEEMA), ஷங்கர் (SHANKAR), சாபு (CHHABU), தல்யா (TALYA), பீம்பாய் (BHIMBAI) ஆகியோர் பூனாவிற்கு அழைக்கப்பட்டனர். அவர்கள் துபே (THUBE) பங்களாவிற்கு அருகில் (1949இல் பாபா தங்கியிருந்த இடம்) அரயனேஷ்வர் (ARAYANESHWAR) கோவில் அருகே ஓரிடத்தில் பாபாவை சந்தித்தனர். ஆதி சீனியர் அவர்களை அழைத்து வர, பாதிரியும்

வாமனும் உடன் சென்றனர். பீம்பாய், தல்யா இருவரும் உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால், பாபா, சிதுவை ஒரு 'பதிலி'யாகப் பயன்படுத்தி, அவரது கால்களைக் கழுவி, தலை வணங்கி பாபா அவரிடம் தல்யாவிற்கு ரூ. 400, பீம்பாய்க்கு ரூ. 300, முஹமது மஸ்திற்கு 300 ரூபாயும் வழங்கினார்.

பாபா ஒவ்வொருவரின் கால்களையும் கழுவி வணங்கிவிட்டு, பகீரதிடம் (BHAGIRATH) ரூ. 500, சாபுவிடம் ரூ. 200, பாவ் சீமாவிடம் ரூ. 100 மற்றும் ஷங்கரிடம் 200 ரூபாயும் கொடுத்தார்.

இது பீலாமாய்க்காக முதலில் தனியாக வைக்கப்பட்ட ரூ 2,000லிருந்து வழங்கியது. அதற்குப் பிறகு வாமன் அவர்களை ஆதியின் காரில் அஹமதுநகருக்குத் திரும்ப அழைத்துச் சென்றார்.

பப்பா ஜெஸவாலா பிந்த்ரா ஹவுஸிலிருந்து உணவைக் கொண்டு வந்திருந்தார், பாபாவை ஏழு மைல் தொலைவில் சில மரங்களின் கீழ் நிழலான இடத்திற்கு அழைத்துச் சென்று, அங்கு அவரும் இதர அனைவரும் மதிய உணவை உண்டு மகிழ்ந்தனர்.

பெண்டு, எரச், குஸ்தாஜி, பாதிரி, ஆதி சீனியர் ஆகியோருடன் பாபா மும்பைக்குச் சென்று, அவர்கள் ஆஷியானாவிற்கு வந்ததும், ராம்ஜூ, ஸரோஷ், ஸவக் கொத்வால், மற்றும் பாபாவின் சகோதரர்கள் ஆதி ஜூனியர், ஜால்பாய் ஆகியோர் மும்பையில் பாபாவின் பணியில் கலந்துகொள்ள ஆயத்தமாயினர். பைதூல், ஏற்கனவே குறிப்பிட்டபடி முன்கூட்டியே அங்குச் சென்று ஒரு ஹோட்டலில் தங்கியிருந்தார்.

ஒரு கட்டத்தில், பாபா, ராம்ஜூவிடம் கூறினார்: "**ஹைதராபாத்தில் நான் மேற்கொண்ட பணி, மிகவும் வெற்றிகரமாகவும் முற்றிலும் திருப்திகரமாகவும் நிறைவடைந்தது. அந்தப் பணிக்கும், மும்பையில் நான் செய்ய வேண்டிய மஸ்த் பணிக்கும் 100 சதவீதம் தொடர்பு உள்ளது. விரைவில் நான் 100 நாள் ஏகாந்தவாசத்தில் நுழைய திட்டமிட்டுள்ளேன்**.

"**ஹைதராபாத்தில் செய்ததைப் போலவே மும்பை மஸ்த் பணியும் சிறப்பாக நடந்தால், 100 நாள் ஏகாந்தவாசத்தில் நான் அடைய விரும்பும் வெற்றியை, எந்த சக்தியாலும் தடுக்க முடியாது. அவை அனைத்தும் நிறைவேறினால், எல்லா பிரச்சினைகளுக்கும் ஒரு முடிவுகிடைக்கும் என்று நினைக்கிறேன்**."

ஆஷியானாவில், பாபா, இரண்டு ஏழை பார்சி குடும்பங்களின் பாதங்களைக் கழுவி தலை வணங்கி, ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ 361 வழங்கினார்.

மும்பையில் பாபா தங்கியிருந்த ஒரு வார காலத்தில், நரிமன், மெஹர்ஜி இருவரும் அவருடன் இணைந்து மஸ்த் பணியில் ஈடுபட அனுமதிக்கப்பட்டனர். பாபா, மும்பையில் 55 மஸ்துகளை தொடர்பு கொண்டார்.

மொத்தத்தில் முன்பு தொடர்பு கொண்ட பல மஸ்துகளும், பல புதிய மஸ்துகளும் அடங்குவர். பாபா சில 'முக்கியமான மஸ்துகளை', அவர்கள் வரவேற்கும், இனிமையான மனநிலையில் இருப்பதைக் கண்டால் மட்டுமே மறுபடியும் தொடர்புகொண்டார். சில சமயங்களில், பாபா, மஸ்தின் பாதங்களில் ஒரே ஒரு முறையும், பிற சமயங்களில், அவர் திரும்பத் திரும்பத் தலை வணங்கவும் செய்தபோது மஸ்துகளுக்கு சிறிது பணத்தையும் கொடுத்தார்.

பணத்தைப் பரிசாக வழங்குவது என்பது மஸ்துகளுடனான தொடர்பின் அடையாளமாக இருந்தது, மேலும் ஒரு மஸ்த் ரூபாய் நாணயங்களை ஏற்றுக்கொண்டு சில ஆசீர்வாதங்களை வழங்கும்போது, தொடர்பு நிறைவடைந்தது அல்லது முடிந்தது என்று புரிந்து கொள்ளப்பட்டது. பாபாவின் மும்பைப் பணியில் ஒரு முக்கியமான மஸ்துடன் மேற்கொண்ட தொடர்பில் அசாதாரணமான சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. பாபா இந்த மஸ்துடன் 40 முறை மஸ்தின் பாதங்களில் தலை வைத்து, ஈஸ்வர தியானத்தில் இணைந்தார்! ஒவ்வொரு முறையும் பாபா அவரது தலையை உயர்த்தும் போது ஒரு வெள்ளி ரூபாய் நாணயத்தை மஸ்திடம் கொடுத்தார்.

ஒரு கட்டத்தில், பாபா தோழர்களுக்கு இவ்வாறு தெரிவித்தார்: **"மஸ்துகள் தம்மையும் உலகையும் பொறுத்தவரை உணர்வற்ற நிலையில் இருப்பவர்களாக நான் உணர்கிறேன். அவர்கள் உலகின் சுகம், துக்கம் அனைத்திலும் முற்றிலும் பற்றற்றவர்களாக, அலட்சியமாக இருக்கிறார்கள். அவர்கள் கடவுளில், கடவுளோடு, கடவுளுக்காக வாழ்கிறார்கள். அவர்கள் தட்பவெப்ப நிலை, போதிய உணவு, தூக்கமின்மை ஆகியவற்றால் பாதிக்கப்படுவதில்லை. வாழ்க்கையின் அடிப்படை தேவைகளை அடையப்பெறாமல் இழந்தாலும் ஆரோக்கியமாக இருக்கிறார்கள்."**

பாபா தனது அறிக்கையின் தொடக்கத்தில் '**நான் உணர்கிறேன்**' என்ற வார்த்தைகளைப் பயன்படுத்தியது குறிப்பிடத்தக்கது. புது வாழ்வில், '**நான் உங்களுக்குச் சொல்கிறேன்...**" என்று உச்சரிப்பதன் மூலம் பாபா தன்னை உறுதிப்படுத்திக் கொள்ள மாட்டார் அல்லது '**இதுவும் அதுவும் அப்படித்தான்**' என்று கூறி ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையைப் பற்றிய தனது அறிவை வெளிப்படுத்த மாட்டார். அதற்கு பதிலாக, அவர் எழுத்துப்பலகையில் '**நான் உணர்கிறேன்...**' அல்லது '**இது உண்மை என்று நான் நினைக்கிறேன்**' என்று எடுத்துரைக்கிறார். பாபா சில பாத்திரங்களில் நடிப்பதற்கு தன்னால் இயன்றதைச் செய்வது மட்டுமல்லாமல், ஒரு சாதாரண மனிதனைப் போலவே உணர்ந்தார், ஏனெனில் அவர் இப்போது புது வாழ்வில் இருப்பதாக மீண்டும் மீண்டும் எடுத்துரைத்தார்.

1951 பிப்ரவரி 4 ஞாயிற்றுக்கிழமை அன்று, பாபா முரண்படும் விதத்தில் ராம்ஜுவிடம் குறிப்பிட்டார், **"எனது பழைய வாழ்க்கையில் இயல்பாக நான்**

உணரும் அனைத்தையும் எனது புது வாழ்வில் வெற்றிடமாக உணர்வது இயல்பானது."

மும்பையின் புறநகர் பகுதியான மாஹிமில் (MAHIM), ஒரு ஜலாலி மஸ்த் ராம்ஜுவை ஒரு சிறிய அரிவாள் மூலம் இரண்டு முறை தாக்கினார். இடது கண்ணுக்கு மேல் ரத்தம் கசிந்ததால், காயம் அடைந்த ராம்ஜுவிற்கு மருத்துவமனையில் சிகிச்சை அளித்து, தையல்கட்டுப் போடவேண்டியதாயிற்று.

பாபா, அவர் திட்டமிட்டதற்கு இணங்க, தனது மஸ்த் தொடர்புகள் மற்றும் '100 சதவிகிதம்' பணிகளை நிறைவு செய்து, 5ஆம் தேதி எரச், பெண்டு, பைதூல், குஸ்தாஜி ஆகியோருடன் மஹாபலேஷ்வருக்குத் திரும்பிச் சென்றார். ஹைதராபாத், மும்பை இரண்டு இடங்களிலும் அவர் தொடர்பு கொண்ட மொத்தம் 93 மஸ்துகளைப் பற்றி பாபா கூறினார்: "**மஸ்துகளில் ஐந்தில் ஒரு பாகம் மிகவும் உயர் திறன் படைத்தவர்கள்; ஐந்தில் இரண்டு பங்கு உயர் திறனுடனும், ஐந்தில் இரண்டு பங்கு இறை பைத்தியமாகவும் இருந்தனர்.**"

ராம்ஜு, பாதிரி, ஆதி மூவரும் அஹமதுநகர் திரும்பிச் சென்றனர். மெஹராஸாத் பராமரிப்பாளரான மாதோ (MADHO), சில அவசரமான தனிப்பட்ட விஷயங்களுக்காக அங்கிருந்து செல்ல வேண்டியிருந்ததால், 1951 மார்ச் மாதத்தில் பாதிரி மெஹராஸாத் சொத்தை கவனிக்க அங்கு இடம் பெயர்ந்தார்.

இந்த நேரத்தில் மினூ கராஸ் மும்பைக்கு வருகை தந்தபோது, ஜனவரி 30 மாலை 7:00 மணிக்கு ஆஷியானாவில் பாபாவை சிறிது நேரம் சந்திக்க அனுமதிக்கப்பட்டார். அவர் பிப்ரவரி 3ஆம் தேதி திரும்பி வந்து, 'மெரைன் லைன்ஸ்' (MARINE LINES) ரயில் நிலையம் அருகில் நடந்த 'கிரேட் ராயல் சர்க்கஸில்' (GREAT ROYAL CIRCUS) பாபா மற்றும் மண்டலியுடன் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டார். அனைவரும் ஆஷியானாவிலிருந்து மாலை 6:00 மணிக்கு இரண்டு கார்களில் புறப்பட்டனர், பாபா இரண்டரை மணி நேர நிகழ்ச்சியை முழுவதும் பார்த்தார். (உயரத்தில் கம்பி மீது மோட்டார் சைக்கிள் ஓட்டும் மயிர் சிலிர்ப்பூட்டும் செயல் அனைவரையும் கவர்ந்தது.)

பாபா மஹாபலேஷ்வருக்குத் திரும்பி வந்ததும், ஏகாந்தவாசத்திற்கான அவசர ஏற்பாடுகள் ஆரம்பமாயின. பாதிரி, ஆகா கான் பங்களாவின் வளாகத்தில் ஒரு வைக்கோல் குடிசையை கட்டியிருந்தார். அது பாபாவிற்கு வசதியான நுழைவாயிலுடன், மூங்கிற் பாய்களால் அனைத்து பக்கங்களிலும் மூடப்பட்டிருந்தது.

அந்த ஆண்டு பாபாவின் அமெரிக்கப் பயணத்தில் இருந்த சில சிரமங்களைப் பற்றி எலிஸபெத்திடமிருந்து பாபாவிற்கு ஒரு தொலைத்தந்தி வந்தது. எனவே, பாபா இந்த நேரத்தில் அமெரிக்கா செல்லும் எண்ணத்தைக் கைவிட்டு, அதற்கு பதிலாக ஜூன் மாதத்தில் தலைமையகத்தை ஹைதராபாத்

நகருக்கு மாற்ற முடிவு செய்தார். இந்தக் கீழ்வரும் தொலைத்தந்தி எலிஸபெத்திற்கு அனுப்பப்பட்டது: **"பாபாவின் திட்டங்கள் இப்போது மாறிவிட்டன. 1951 ஜூலை மாதம் இந்தியாவிலிருந்து மேற்கத்திய நாடுகளுக்குச் செல்வதற்கு பதிலாக, 1952 பிப்ரவரி மாதத்தில் அவர் புறப்படுவார். கவலைப்பட வேண்டாம், பாபா ஒரு வருடம் வந்து தங்க விரும்புகிறார் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்."**

இதற்கிடையில், பாபா ஏகாந்தவாசத்தில் நுழைவதற்கு முன்னர் அவரை நகைச்சுவைகள் மற்றும் கவிதைகளால் மகிழ்விக்கும் நோக்கத்திற்காக, டாக்டர் கனி ஒரு வார காலத்திற்கு மஹாபலேஷ்வருக்கு அழைக்கப்பட்டார். டாக்டர் கனிக்கு கவிதை வடிவில் இந்த அழைப்பு விடுக்கப்பட்டது:

நீங்கள் நலமாக இருந்தால்
நீங்கள் உள் எழுச்சியை உணர்ந்தால்
உங்கள் மனநிலை பாதிக்காமல் இருந்தால்
அல்லது சோகமாக இருப்பதாக மட்டும் சொல்லாதீர்கள்

சேவகர்கள் அல்லது ஆசானிடமிருந்து
எந்தவிதமான பொருள் இழப்பும் இல்லை
பழைய வாழ்க்கையைப் பற்றி பேசவில்லை
அல்லது குழந்தைகள், மனைவி குறித்த பேச்சுமில்லை
ஆனால், நகைச்சுவை மற்றும் கலைமிகு கவி நயத்துடன்
என்னை இங்கே இருக்கச் செய்யுங்கள் மகிழ்ச்சியுடன்

வந்து செல்ல இருவழிக் கட்டணமும் செலுத்தப்படும்
உங்கள் கவலையைத் தவிர அனைத்தும் கேட்கப்படும்
எனவே எட்டு நாட்களுக்காக நீங்கள் வரவேண்டும்
இவ்வாறு மெஹர் பாபா உங்களை அழைக்கிறார்.

பொருளுலக ஆதாயம் கேட்பதன் மூலம்
எனக்கு வலி, வேதனையை வழங்காதீர்கள்
ஆன்மீக நன்மை பற்றி பேசுவதானால் நீங்கள்
மாட்டுச்சாணமும் மலமும் அடையப்பெறுவீர்கள்
புது வாழ்வில் பொறுப்பு எதுவும் இல்லை
வெகுமதிக்கு எந்த வாய்ப்பும் இல்லை

1951 ஜனவரியில், டாக்டர் கனி இந்த நகைச்சுவையான பதிலை பாபாவிற்கு அனுப்பினார்:

உங்கள் காதல் கடுதாசி கிடைக்கப்பெற்றேன்.
நான் மிக மிக நன்றாக உணர்கிறேன்.
இந்திய நாடு என்ன இப்போது வறண்டு போகிறதா?
எனக்குத் தெரியாது, எப்போதாவது ஈரமாக இருந்ததா?

ஆயிரமாயிரம் எண்ணங்கள், என்னென்னமோ மனதில் எழுந்தது,
ஏறக்குறைய இது எனக்கு புறக்கணிப்பு போலத் தோன்றியது;
பன்னிரண்டு மாதங்கள் கண்ணிமைப்பும் இல்லை,
மைக்குப்பியும் இல்லை,
என்னால் சிகரங்களின் வெற்றியை அடையவும் முடியவில்லை.

மேலும் 'ஜால்' என்றாலே தேதிகளுடன் பல குறிப்பு,
'காடேக்கர்' மூழ்கியிருப்பதோ அளப்பரிய அன்பு,
'பப்பா'வுடன் வெளித்தோற்றத்தில் வயிற்றின் உப்புசம்
மற்றும் 'ராம்ஜ'வோ அர்த்தமுள்ள அன்பின் பெருமிதம்

இந்த சூழ்நிலை, நான் மிகவும் உறுதியாக இருந்தேன்
மிக நீண்ட காலம் தாங்க முடியாது என நினைத்தேன்;
குணப்படுத்துவதற்கான நடைமுறை வழிதான் தெரியவில்லை
எனது நிலைப்பாட்டை என்னால் புறக்கணிக்கவும் முடியவில்லை.

உங்கள் கட்டளைகள் அனைத்தையும் ஏற்றுக்கொள்கிறேன்
தேதிகளும் கணக்குகளும் வருமென நம்புகிறேன்;
மனதில் பைத்தியக்காரத்தனம் இல்லை - கொலைவெறிதான் உள்ளது
கரிசனத்தையும் இடிமுழக்கத்தையும் பொருட்டாக கொள்ளாதது,
என்னில் தவறுகள் எதுவும் இல்லை என்று நம்புகிறேன்
நான் என்றென்றும் உங்களுடையவனாக இருக்கிறேன்,

ஏ.ஜி.முன்ஸி:ப்

பாபாவின் பதில்:

உங்கள் கடிதத்தை உன்னிப்புடன் பார்த்த பிறகு,
படகு சவாரி போவது போல் உணர்கிறேன்.
எனது கட்டளைகளில் ஏதேனும் ஒன்றை மீறினால்,
உங்கள் உடலை கங்கையில் மிதக்க விடுவேன்.

பிப்ரவரி 8ஆம் நாள் கனி மஹாபலேஷ்வருக்கு அழைக்கப்பட்டாலும் உடல்நலக் குறைவால் வரமுடியாத நிலை. அப்போது அவர் குணமடைந்தால்,

மூன்று நாட்களுக்காக, எதிர்வரும் 12ஆம் தேதி வருமாறு அறிவுறுத்தப்பட்டது. பாபா அவருக்கு எழுதினார்:

சரி மகனே, உற்சாகத்துடன் இருங்கள்.
பணத்தைக் குறைவாக நினைப்பதோடு
(கண்)மணியை அதிகமாக நினைவுகூருங்கள்.

மஹாபலேஷ்வரில் தனது ஏகாந்தவாசத்தைத் தொடங்குவதற்கு முன்பு, பாபா கூறினார்: **"எனது புது வாழ்வு உறுதிமொழி மற்றும் நான் விரும்பும் இறுதி முடிவுடன் இணைக்கப்பட்டுள்ள இந்த ஏகாந்தவாசம் தனித்தன்மை வாய்ந்ததாக இருக்கும். இது பழைய வாழ்க்கை முழுநிறை ஏகாந்தவாசத்தைப் போலல்லாமல், இடைப்பட்டதாக இருக்கும், நான் நாள் முழுவதும் ஒரு சிறிய அறைக்குள் மட்டும் அடைபடமாட்டேன்."**

பின்னர் அவர் கூறினார்: **"நான் புது வாழ்வில் முழு வெற்றியைக் காண்பேன், அல்லது முயற்சியில் உயிரைத் துறந்துவிடுவேன்."**

1951 பிப்ரவரி 12ஆம் தேதி திங்கட்கிழமை, பாபா தனது சேவக தோழர்களுடன் ஒரு சந்திப்பை நடத்தினார். ஸொராஸ்ட்ரியன் நாட்காட்டியின்படி, அன்று பாபாவின் 57ஆவது பிறந்தநாள், ஆனால் பாபா எந்த விதமான கொண்டாட்டத்தையும் அனுமதிக்கவில்லை. அந்தக் கூட்டத்தில், பாபா தனது 100 நாள் ஏகாந்தவாசத்தில் தானும் சக தோழர்களும் இணைந்து மேற்கொள்ள வேண்டிய பின்வரும் முடிவுகளைக் குறிப்பிட்டார்:

1951 ஜூன் 10ஆம் நாள் வரை அனைத்து ஆண் தோழர்களும் பாபாவின் சேவகர்களாக அவருடன் தொடர்ந்து இருக்க வேண்டும்.

1951 பிப்ரவரி 12ஆம் நாள் முதல், சேவகர்கள் அனைவரும் புது வாழ்வின் அனைத்து நிபந்தனைகளின் பிணைப்புகளிலிருந்தும் விடுவிக்கப்படுகிறார்கள்; அவர்கள் பின்வரும் நிலையான உத்தரவுகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும்:

1) **காமச் செயல்களில் ஈடுபடக் கூடாது.**
2) **பாபாவிற்கு மரியாதை வழங்கும் வகையில் சூழ்நிலைகளை உருவாக்கக்கூடாது.**
3) **பாபாவின் பழைய வாழ்க்கை சீடர்களுடன் எந்தவிதமான தொடர்பும் அல்லது கடிதப் பரிமாற்றமும் செய்யக்கூடாது.**
4) **தங்களுக்குள் ஆடைகளை மாற்றிக் கொள்ளக் கூடாது.**
5) **எவரிடமிருந்தும் பணம் அல்லது உணவைப் பெறக்கூடாது, ஆனால் எவரிடமிருந்தும் தேநீர், சிகரெட் அல்லது பான் போன்றவற்றை ஏற்றுக்கொள்ளலாம்.**
6) **பாபா, எவருக்கேனும் ஏதேனும் வாக்குறுதி அளிக்கும்போதும், யாரைப் பற்றி தவறாகப் பேசினாலும், தவறான நடவடிக்கை**

எடுத்தாலும், தற்பெருமையுடன் எதையும் வெளிப்படுத்தும்போதும், திடீர் உற்சாகம் அடையும்போதும் அல்லது தமது சேவகர்களை சந்தேகப்படும்போதும் அவரை நினைவுபடுத்த வேண்டும்.

7) **தினசரி உத்தரவுகளை 100 சதவீதம் கடைபிடிக்க வேண்டும்.**
8) **பாபாவைத் திருப்தியடையச் செய்யும் விதத்தில் செயல்பட தங்களால் இயன்ற அளவு முயற்சி செய்ய வேண்டும்.**

காலம் எடுத்துரைத்தபடி, "புது வாழ்வில், பாபா ஒரு பக்தனாக அல்லது இறைவனைத் தேடுபவராகத் தனது பாத்திரத்தில் பங்கு வகிக்கும் அதே நேரத்தில், ஓர் ஆன்மீக குருநாதராகவும் இருந்தார். இறைவனைத் தேடும் பாத்திரத்தில், மனித பலவீனங்களும் குறைபாடுகளும் தெளிவாகத் தெரிந்தன, மேலும் ஒரு குருநாதரின் பாத்திரத்தில், தனது சேவகர்கள் முழுமையாகக் கீழ்ப்படியும்படி கட்டளைகளைப் பிறப்பிக்கும் அதிகாரத் தோரணையும் வெளிப்பட்டது."

அன்றைய தினம் பாபா சேவக தோழர்களைத் தாழ்மையுடன் வணங்கியதை, பாதிரி புகைப்படம் எடுத்தார். பாதிரி இரண்டு நாட்களுக்காக அஹமதுநகர் திரும்பிச் சென்றார்.

1951 பிப்ரவரி 13 செவ்வாய் அன்று, பாவ்லா (BAWLA) என்ற பாடகர் பாபாவிற்கு முன்பாக கவாலி பாடல்களைப் பாடினார். அன்றைய நாளின் பிற்பகுதியில், பாபா தனது சேவக தோழர்களிடம் கூறினார், "**நான் 40 நாட்களுக்கு மிகவும் கடினமான பணிகளில் ஈடுபட விரும்புகிறேன். மார்ச் 7ஆம் நாள் முதல், சூழ்நிலைகளின்படி, நான் முழு இருளில் அல்லது முழு வெளிச்சத்தில் வேலை செய்யலாம், அதற்காக இரண்டு பெட்ரோமாக்ஸ் விளக்குகள் வாங்கப்பட்டுள்ளன.**"

இவ்வாறு விளக்கிய வேளையில், பாபாவின் பெயரைத் திரும்பத் திரும்ப உச்சரித்துக் கொண்டிருந்த கைக்கோபாத்திடம் பாபா கூறினார், "**மீண்டும் மீண்டும் நாமத்தை உச்சரிக்கவா அல்லது நான் சொல்வதைக் கேட்பதற்காகவா நான் உங்களை இங்கு அழைத்தேன்? சேவகர்கள் தங்கள் விருப்பு வெறுப்புகளைக் கைவிட வேண்டும். அவர்கள் மட்டுமே உண்மையான சேவகர்களாக இருக்க முடியும்!**"

அன்று மாலை 7:30 மணிக்கு, பாபா தனது 100 நாள் ஏகாந்தவாசத்தைத் தொடங்க குடிலுக்குள் நுழைந்தபோது, பின்வரும் பிரார்த்தனை வழங்கப்பட்டது:

உயர்விலும் உயர்வான கடவுளே! பாபாவிற்கு வழிகாட்டுதலை வழங்குங்கள், உங்கள் அன்பினால் அவரது இதயத்தை உயர்த்துங்கள், என்றென்றும் உண்மைப்பொருளான ஓ கிறிஸ்து! அவர் இறுதிவரை முழு நம்பிக்கையுடன் புது வாழ்வை வாழட்டும்!

பாபாவின் இந்த 100 நாள் ஏகாந்தவாச பணி, முழு திருப்தியுடன் நிகழட்டும், மேலும் அவரது இதயத்தின் விருப்பங்களைக் கடந்து வந்து புது வாழ்வின் நோக்கம் நிறைவேறட்டும்.

இந்த ஏகாந்தவாசத்தில் அவரது உடல் ஆரோக்கியமாகவும் திடகாத்திரமாகவும் இருக்க வேண்டும், மேலும் அவருக்கு ஏற்படும் துன்பங்களைத் தாங்கும் வலிமையை அவருக்கு வழங்குங்கள்!

இரக்கமுள்ள இறைவனே! பாபாவின் இந்த ஆசைகள் உமது குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் அருளால் முழுமையாக நிறைவேற அருள்வாயாக!

அடுத்த நாள், 1951 பிப்ரவரி 14 அன்று பாபா கூறினார், **"இந்த ஏகாந்தவாசத்தின் தீவிர தன்மையால், 1945ஆம் ஆண்டில் மத்தியப்பிரதேசத்தில் அங்கிரஸ் ரிஷி மலையில் என்னை லேசாகத் தாக்கியது போல, மூளையில் இரத்தக் கசிவு வருவதற்கான வாய்ப்பு உள்ளது."**

பாபா தனது 100 நாள் ஏகாந்தவாசத்தை இரண்டு கட்டங்களாகப் பிரித்தார். முதல் 40 நாட்கள் பின்வருமாறு:

பிப்ரவரி 13 முதல் 28 வரை, பாபா, அறை, குடில் மற்றும் வளாகத்தில் நாட்களைக் கழித்தார், காலை 11:00 மணி முதல் மாலை 5:00 மணி வரை குடிலுக்குள் தங்கினார். அந்த இடம் கண்களுக்குத் தென்படாதபடி எல்லாப் பக்கங்களிலும் மூடப்பட்டிருந்தது. எரச், பெண்டு, பைதூல், நீலு, முரளி ஆகியோர் கண்காணிப்பில் ஈடுபட்டனர். பிப்ரவரி 13 முதல், ஏழு நாட்கள் பாபா, தண்ணீர் மட்டுமே அருந்தி உபவாசம் இருந்தார்; அதன் பின்னர், அவர் ஒரு நாளைக்கு ஒரு முறை மட்டும் உணவு உண்டு அரைகுறை உபவாசம் மேற்கொண்டார்.

பிப்ரவரி 15 முதல் மார்ச் 5 வரை, பாபா, மஸ்த் அலி ஷாவுடன் தினமும் அரை மணி நேரம், 11:30 முதல் மதியம் வரை பணிபுரிந்தார்.

மார்ச் 1 முதல் 5 வரை ஏகாந்தவாசத்தின் தீவிரமான கட்டமாக பாபா சுட்டிக்காட்டினார், பெரும்பாலும் குடிசையில் அதிகாலை 2:00 மணி வரை பணிபுரிந்தார். இந்த ஐந்து நாட்களில், பாபா தனது ஏகாந்தவாசத்தின் சில மணி நேரங்கள் முழு இருளிலும், இதர நேரங்கள் பெட்ரோமாக்ஸ் விளக்குகளின் பிரகாசமான ஒளியிலும் வேலை செய்தார்.

அவர் காலை 10:00 மணிக்கு எழுந்து, சுத்தம் செய்து, தேநீர் அருந்திவிட்டு, அலி ஷாவுடன் தனது பணியைத் தொடங்கினார். பாபா ஒவ்வொரு நாளும் மதியம் பெண்மணிகளை சந்தித்தார்.

மீண்டும், மார்ச் 6 முதல் 9 வரை, பாபா குடிலில் அல்லது அறைக்குள் இருக்கும் போதெல்லாம் தண்ணீர் மட்டும் அருந்தி உபவாசம் மேற்கொண்டார்.

இந்த ஏகாந்தவாச காலகட்டத்தில், டாக்டர் டானுக்கு லண்டனிலிருந்து அவரது தாயாரின் தீவிர உடல்நிலை குறித்து தொலைத்தந்தி ஒன்று வந்தது. அவர் அதைப் பற்றி யாரிடமும் எதுவும் சொல்லாமல் அவரது வழக்கமான இணக்கமான தோற்றத்தில் இருந்தார். வேறு எவருக்கும் அது தெரியாது, தெரிந்திருந்தால் கூட, எவரும் பாபாவிடம் சொல்லப்போவதில்லை. டானும் பாபாவிடம் தெரிவிக்க விரும்பவில்லை. ஒரு சந்தர்ப்பத்தில், பாபா அவரை அழைத்து, உரையாடலின் நடுவில், "**வீட்டிலிருந்து ஏதேனும் செய்தி வந்ததா?**" என்று கேட்டார்.

டான் இங்கிலாந்தில் அவரது குடும்பத்திலிருந்து அஞ்சல்கள் வந்தாலும், புது வாழ்வின் நிபந்தனைகளின்படி, அவர் அதைத் திறக்கவில்லை. ஆனால் இந்த நிகழ்வில், அவருக்குத் தொலைத்தந்தி அனுப்பியது யார் என்று தெரியாததால் அவர் அதைப் படித்தார். கவனக்குறைவாக பாபாவின் கட்டளையை மீறிவிட்டோமே என்று கவலைப்பட்டார்.

சில கணங்கள் அமைதியாக இருந்துவிட்டு, பாபாவின் கேள்விக்கு பதிலளித்த டான், "ஆமாம், வீட்டிலிருந்து செய்தி வந்துள்ளது" என்றார். பொய் சொல்ல முடியாததால், தனது தவறை ஒப்புக் கொண்டு, தனது தாயைக் குறித்து கூறினார். ஒரு பெட்டியை மட்டும் எடுத்துக்கொண்டு உடனே லண்டனுக்குப் புறப்படும்படி பாபா அறிவுறுத்தினார். 1951 மார்ச் 5 அன்று, டான் மும்பைக்குப் புறப்பட்டுச் சென்று, அங்கிருந்து இரண்டு நாட்களுக்குப் பிறகு விமானத்தில் லண்டனுக்குச் சென்றார். சில நாட்களுக்குப் பின்னர் அவர் மஹாபலேஷ்வருக்குத் திரும்பி வந்தார்.

மார்ச் 10 முதல் 12 வரை ஏகாந்தவாசத்தில் பாபாவின் பணி தீவிரமடைந்தது. அவர் திரவ உணவுகளை மட்டுமே உட்கொண்டார், மூன்று பகல் மற்றும் இரவுகளையும் குடிலிலோ அல்லது அறையிலோ தனியாகவே கழித்தார்.

பதினோரு நாட்கள், மார்ச் 13 முதல் 24 வரை, பாபா 24 மணி நேரத்திற்கு ஒருமுறை உணவு உண்டு, தனது ஏகாந்தவாசத்தைத் தொடர்ந்தார். குடிலில் அவர் இரவில் ஒரு மணி நேரம் முழுவதுமாக தனது வேலையில், அரை மணி நேரம் மொத்த இருளிலும், அரை மணி நேரம் பிரகாசமான வெளிச்சத்திலும் மூழ்கியிருந்தார். பாபாவின் ஏகாந்தவாசத்தின் போது, கொரியப் போர் தீவிரமடைந்தது மட்டுமின்றி அமெரிக்க, ஆசிய வரலாற்றில் மிகவும் கடுமையான, கொடூரமான சண்டைகளை உலகம் கண்டது.

மஹாபலேஷ்வர், **12** பிப்ரவரி **1951,**
பாபா மன்னிப்புக் கோரும் பிரார்த்தனை, எரச் வலது புற மூலையில் -
வலது புறம்: டான்கின், நீலு, முரளி, விஷ்ணு, பெண்டு ஆகியோரின்
பாதங்களில் பாபா தலைவணங்குதல்
(MAHABALESHWAR, 12 FEBRUARY 1951,
BABA PRAYING FOR FORGIVENESS, ERUCH IN THE CORNER,
RIGHT:BABA BOWING DOWN TO DONKIN, NILU, MURALI, VISHNU, PENDU)

மஹாபலேஷ்வரில் ஏகாந்தவாசத்தில் இருந்தபோது பாபா மிகவும் துன்பப்பட்டார். ஒரு நாள் அவர் திடீரென, உணர்ச்சி வேகத்துடன் குடிலிலிருந்து வெளியே வந்தார். அவர் முகத்தின் நிறம் மாறியது; அவர் மூச்சுத்திணறலால் மிகவும் பரபரப்புற்ற நிலையில் இருந்தார். **"இன்று நான் மிகவும் கடினமாக உழைத்ததால், ஒரு கணம் வெளியே வர வேண்டியிருந்தது; இல்லையென்றால், நான் எனது உடலைத் துறந்திருக்கக் கூடும்"** என்று அவர் கூறினார். தோழர்களுக்கு முந்தைய மாதம் அவர் மூளை பாதிக்கப்படலாம் என்று கூறியது நினைவுக்கு வந்தது.

மேலும், அவர் மூல நோய் மற்றும் பிளவால் ஏற்பட்ட வலி, வீக்கத்தில் மிகவும் அவதியுற்றதோடு மலத்தில் அதிக ரத்தம் வெளியேறியது. பாபா தனது வலிமிகுந்த நிலையிலும் மணிக்கணக்கில் ஏகாந்தவாசத்தில் அமர்ந்திருந்தார், அவருடைய உடல் கஷ்டங்களை அனுபவித்தாலும், பணி நின்றபாடில்லை. பிரபஞ்சத்திற்கான தனது கடமை நிறைவேறுவதைத் தடுக்க அவர் தனது உடலை ஒருபோதும் அனுமதிக்கவில்லை.

அவரது மனநிலையை இலகுவாக்கும் நோக்கத்தில், பாபா தனது பிரச்சினைகளுக்குச் சிகிச்சையைப் பரிந்துரைக்க ஒரு குழுவை நியமித்தார், அதை அவர் நகைச்சுவையாக 'மூல நோய்க்குழு' (PILES COMMITTEE) என்று அழைத்தார். அதில் உறுப்பினர்களாக சதாஷிவ் பாட்டீல், விட்டல் போக்ரே, காடேக்கர், கனி, நரிமன், மெஹர்ஜி ஆகியோர் நியமிக்கப்பட்டனர். பாபாவின் உடல்நிலை குறித்து தினமும் ஆண் தோழர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது, மேலும் மெஹர்ஜியும், டாக்டர் கனியும் இதில் அதிக ஆர்வம் காட்டினர். அவர்களிடம் கருத்து கேட்டபோது, சதாஷிவ், விட்டல் இருவரும் ஒரு குறிப்பிட்ட மரத்தின் பட்டையைப் பொடியாக்கி, ஒத்தடம் கொடுக்குமாறு பரிந்துரைத்தனர். இது முயற்சிக்கப்பட்ட பிறகும், பாபாவின் துன்பம் குறைந்தபாடில்லை.

இறுதியாக, பாபாவின் சம்மதத்துடன் **1951** மார்ச் **18** அன்று ஆதி சீனியர் மும்பையிலிருந்து டாக்டர் மெர்சன்ட் (DR. MERCHANT) என்ற மருத்துவரை அழைத்து வந்தார். டாக்டர் மெர்சன்ட், பாபாவால் மிகவும் ஈர்க்கப்பட்டார்; மலக்குடலுக்கு அருகில் ஊசிகள் மற்றும் 'திசுக்களை வெப்பத்தால் நிவர்த்தி செய்யும்' (இது ஆதியின் கார் பேட்டரியிலிருந்து மின்சாரத்தைப் பயன்படுத்தி செய்யப்பட்டது) ஒரு குறிப்பிட்ட சிகிச்சையை பரிந்துரைத்தார். அவர் எந்தக் கட்டணத்தையும் ஏற்க மறுத்துவிட்டதால், பிரசாதமாக, பாபா அவருக்கு ஒரு ரூபாய் வழங்கி, '**அவருடைய சேவை பாபாவின் அன்பளிப்பைப் போல விலைமதிக்க முடியாதது**' என்று அவருக்குத் தெரிவித்தார். இருப்பினும், சிகிச்சை பாபாவின் வலியை வெகுவாகக் குறைக்கவில்லை.

மெஹர்வான் ஜெஸவாலா மறுநாள் பூனாவிலிருந்து பாபாவிற்கு, 'காற்று தலையணை'யை (AIR-CUSHION) அனுப்பி வைத்தார்.

அவரது 40 நாள் ஏகாந்தவாசத்தின் முதல் பகுதி முடிவடைந்ததும், 1951 மார்ச் 24 சனிக்கிழமையன்று பாபா, ஏகாந்தவாச குடிலில் ஒரு மணி நேரக் கூட்டத்திற்காக அனைவரையும் அழைத்தார். ஸரோஷ், ராம்ஜூ, ஆதி ஜூனியர், ஆதி சீனியர், மெஹர்ஜி, நரிமன், மற்றும் 'உள்வாசி மண்டலி' எரச், பெண்டு, விஷ்ணு போன்ற பலர் அழைக்கப்பட்டனர். கீதையின் பகுதிகளை மொழியுமாறு எரச்சிடம் கூறி உரையைத் தொடங்கினார். அப்போது அவர் கூறியதாவது:

நான் ஏற்றுக்கொண்ட புது வாழ்வை, உண்மையாகவும் நேர்மையாகவும் சிந்தித்து, உணர்ந்து, செயல்படுத்த முயற்சிக்கிறேன். எனது புது வாழ்வைப் பொறுத்தவரை, நான் நேர்மையாக இருக்க வேண்டும் என்பதால், சேவக தோழர்கள், 'ஏற்பாடு குழு', பழைய வாழ்க்கை சீடர்கள், பக்தர்கள் மற்றும் என்னுடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்பில் இருக்கும் அனைவரிடமும் - தொடர்பில்லாதவர்களிடம் கூட நான் முற்றிலும் அலட்சியமாக இருக்கிறேன் - அதைப் பற்றி சிந்தித்து உணர்ந்து கொள்ளுங்கள். அவர்கள் அல்லது பிறர் எவரும் அதைச் சரியாகப் புரிந்து கொண்டார்களா, இல்லையா என்பது பற்றி எனக்குக் கவலையில்லை.

1951 பிப்ரவரி 13ஆம் நாள் தொடங்கிய 100 நாள் ஏகாந்தவாசத்தில் முக்கிய பணி, முதல் 40 நாட்களில் முடிக்கப்பட்டது; அது, முடிவைத் தீர்மானிக்கும் முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமின்றி மிகவும் இன்றியமையாதது. கடவுளின் உதவி இல்லாமல், எனது வழக்கமான மாறும் குணத்தையும், இந்தக் காலகட்டத்தில் நான் அனுபவித்த உடல் மற்றும் மன உளைச்சலையும் எண்ணிப் பார்க்கையில், இந்த சோதனையை என்னால் வெற்றிகரமாக கடந்து சென்றிருக்க முடியாது. துன்பத்தைத் தந்து, கடவுள் எனக்கு அளித்த உதவியின் மூலம், அதைத் தாங்கும் வலிமையைத் தந்ததை அவர் நிரூபிக்க விரும்புவது போலத் தோன்றுகிறது.

நான் எழுத்துப்பலகை மூலமாக எடுத்துரைத்ததை, என் சார்பாக எனது தோழர்கள் சமர்ப்பித்த பிரார்த்தனைகள் கடவுளால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக உணர்கிறேன்.

இப்போது எஞ்சியுள்ள 60 நாட்கள், நான் வாழ்வது மிகவும் கடினமாக இருக்காது. கடவுளின் உதவியால், என் வசதிக்கேற்ப செயல்பாடுகளையும், பணிபுரியும் இடத்தையும் மாற்றி அமைக்க முடியும். சேவக தோழர்கள், 'ஏற்பாடு' குழுவினர், பழைய வாழ்க்கை சீடர்கள், பக்தர்கள் மற்றும் என்னுடன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்பில் இருப்பவர்கள் அனைவரும் விரும்பினாலும் விரும்பாவிடிலும் எனது புது வாழ்வில் என்னுடன் இருப்பதை எனது அதிர்ஷ்டமாகக் கருதுகிறேன்.

அவர்கள் எனக்கு ஆதரவாக இருக்கிறார்கள், மேலும் எனது 100 நாள் ஏகாந்தவாசத்தில் எனது முழுத் திட்டமும் திருப்தியுடன் நிறைவேற வாய்ப்புள்ளது என்ற உண்மையின் பார்வையில் - கடவுளும் அதில் முழு திருப்தி அடைவார் என்று நான் உணர்கிறேன் - நான், 1951 ஜூன் 10 முதல் ஜூன் 30 வரையிலான காலக்கட்டத்தில், கடவுள் தனது எல்லையற்ற ஞானத்தாலும், அருளாலும், எனது வாழ்க்கையிலும், எனது சேவக தோழர்கள், 'ஏற்பாடு' குழுவினர், பழைய வாழ்க்கை சீடர்கள், பக்தர்கள் மற்றும் என்னுடன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்பில் இருப்பவர்கள் அனைவருடைய வாழ்க்கையிலும் ஓர் அசாதாரணமான, புரட்சிகரமான மாற்றத்தைக் கொண்டு வரும் ஒரு நிலைப்பாட்டை எடுக்க எனக்கு உதவுவார் என்ற நேர்மையான நம்பிக்கையை நான் கொண்டிருப்பது கடவுளுக்குத் தெரியும். இந்த மாற்றம் இறைவனின் விருப்பத்திற்கு ஏற்ப நிகழும்.

கடவுள் எனக்காக விதித்த பங்கையும், கடவுள் என்னை வாழ வைக்கும் வாழ்க்கையையும் என்னால் எந்த வகையிலும் தவிர்க்க முடியாது என்று நான் உணர்கிறேன். அதன் விளைவு என் மீதும், பிற அனைவரின் மீதும் என்னவாக, எப்படி, எந்த அளவிற்கு இருக்கும் என தெரியவில்லை என்றும் நான் உணர்கிறேன்.

100 நாள் ஏகாந்தவாசம் தொடங்குவதற்கு முன்பு, பூனாவைச் சுற்றியுள்ள ஏழு மலைகளின் உச்சியில், ஏகாந்தவாசத்தில் சிறிது நேரம் அமர்ந்து, தனது மஸ்த் பணியைத் தொடர பாபா விருப்பம் தெரிவித்தார். ஆதி சீனியர், எரச்சின் இளைய சகோதரர் மெஹர்வான், காடேக்கர் ஆகியோர் பூனாவில் பாபாவிற்கான தங்குமிடங்களைத் தேடத் தொடங்கினர். 'ஸாலிஸ்பரி பார்க்'கில் (SALISBURY PARK) ஓரிடம் வாடகைக்கு எடுக்கப்பட்டது, ஆனால் கடைசி நேரத்தில், உரிமையாளர் தனது எண்ணத்தை மாற்றிக்கொண்டார். ஸரோஷும் ஆதியும் இதர இரண்டு பங்களாக்களை - ஒன்று 'ரேஸ் கோர்ஸ்' (RACE COURSE) அருகிலும் மற்றொன்று வானோவ்ரியிலும் (WANOWRI) ஏற்பாடு செய்ய முயற்சி செய்தனர்.

பாபா மற்றும் ஐந்து பெண்மணிகளுடன் எரச் மஹாபலேஷ்வரிலிருந்து 1951 மார்ச் 27 செவ்வாய் அன்று காரில் பூனாவிற்குப் புறப்பட்டார். பைதூல் தனியாகச் சென்றார். பாபாவும் பெண்மணிகளும் முதலில் கணேஷ்கிந்த் தோட்டத்தை பார்வையிட்டனர், அங்கு, தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தில் எரச்சின் உறவினர் தாதி கேரவாலா, தாவர பரிசோதனைக்கு பொறுப்பாளராகப் பணியாற்றினார்.

பாபாவை தூரத்திலிருந்து பார்த்த தாதி, கட்டளைப்படி எவரும் பாபாவை சந்திக்கக் கூடாது என்பதால், தோட்டத்தில் அமைந்துள்ள ஒரு கண்காட்சிக் கட்டிடத்தில் நுழைந்தார். பாபாவும் அந்தக் கட்டிடத்திற்குள் நுழைந்தபோது

முகத்தைத் திருப்பிக் கொண்டு, தாதி ஒரு பக்கம் நின்றார். சிறிது நேரத்தில் பாபா, அவரிடம் எதுவும் பேசாமல் சென்று விட்டார்.

பாபா, பெண்மணிகளுடன், ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பங்களாக்களைப் பார்க்கச் சென்றார். வானோவ்ரியில் அமைந்த பங்களாவை அவர்கள் விரும்பவில்லை என்றாலும், இதர பங்களாவிற்குச் செல்வதற்கு முன்பு, பாபா இரண்டு நாட்கள் அங்கேயே இருக்க ஒப்புக்கொண்டார். அவர்களின் உணவு பிந்த்ரா ஹவுஸிலிருந்து அனுப்பப்பட இருந்தது. இதற்கிடையில் '24 பந்த் கார்டன் சாலை'யில் அமைந்த, பரோடா மஹாராணி ஷாந்தாதேவியின் (BARODA MAHARANI SHANTADEVI) 'குருபிரசாத்' (GURUPRASAD) என்றழைக்கப்பட்ட அரண்மனையை, சர்தார் எம்.ஏ. ராஸ்தேயின் (SARDAR M.A. RASTE) உதவியுடன் காடேக்கர் தன்வசமாக்கினார். காடேக்கர் மார்ச் 27 அன்று தொலைத்தந்தி மூலம் இந்தத் தகவலை அடையப்பெற்றதும், உடனடியாக பிந்த்ரா ஹவுஸுக்கு அதை அனுப்பி வைத்தார். மெஹர்வான், பாபாவை சந்திக்கத் தடை விதிக்கப்பட்டதால், அன்று மதிய உணவுடன் பாபாவிற்கு அந்தத் தொலைத்தந்தி அனுப்பப்பட்டது. இந்த நேரத்தில், பிந்த்ரா ஹவுஸில் இருந்த ஜெஸவாலா குடும்பத்தினர் அல்லது அவரது சகோதரர் பெஹராமின் குடும்பத்தினர் உட்பட எவரையும் பாபா சந்திக்கவில்லை. அனைவரும் அவரைப் பார்க்க ஆர்வமாக இருந்தாலும் ஒருவரும் அவரது விருப்பத்தை மீற மாட்டார்கள்.

குருபிரசாத் பங்களா கையகமாகும் என்ற செய்தி வந்ததும், பாபா அதைப் பார்க்கச் சென்று, மிகவும் விரும்பி, பெண்மணிகளுடன், அதே நாள் பிற்பகல் 3:00 மணிக்கு அங்குச் சென்றார். எரச், பைதூல், ஆதி சீனியர் ஆகியோர் பின்புறத்தில் தங்கியிருந்தனர், அங்கு, பெண்டுவும் அவர்களுடன் இணைந்தார்.

மெஹர்வான் அப்போது கல்லூரியில், இளங்கலை அறிவியல் பட்டப்படிப்பு படித்துக் கொண்டிருந்தார். அவரது இறுதித் தேர்வுக்கான நாள் நெருங்கிக் கொண்டிருந்தது, பங்களாக்களைத் தேடிக்கொண்டிருந்த அவருக்குப் படிப்பில் கவனம் செலுத்த நேரம் போதவில்லை. தகுந்த வசிப்பிடத்தைக் கண்டறிவதில் அவர் அடைந்த வெற்றிக்கு வெகுமதியாக, பாபா, பார்வையாளர்கள் மீதான தடைக்கு விதிவிலக்கு அளித்து, பப்பா, மெஹர்வான், காடேக்கர் ஆகியோரை வரவழைத்தார்.

மெஹர்வான் ஒரு வருடத்திற்கும் மேலாக பாபாவைப் பார்க்கவில்லை. பாபாவின் நிலையைக் கண்டு அவர் அதிர்ச்சியடைந்தார்: "பாபா இவ்வளவு உடல் நலிவடைந்த நிலையில் நான் பார்த்ததில்லை. அவர் மோசமான உடல் நிலையில் மிகவும் மெலிந்து, பலவீனமான அவரது கழுத்து கோழியின் கழுத்து போல் இருந்தது, மேலும் அவர் நடக்க உதவி தேவைப்பட்டது. மூல நோய் பிரச்சினையால் அவர் அமரக் கூட முடியவில்லை, நாங்கள் அங்கிருந்த முழு நேரமும், பாபா நின்றுகொண்டிருந்தார். அவர் முற்றிலும் மெலிந்து போயிருந்தார்.

இருந்தாலும் எங்களை வாழ்த்துவதற்காக அவர் அளித்த புன்னகை அவரது வழக்கமான ஒன்றாகும், அவர் எங்கள் அனைவரையும் தழுவினார்."

குருபிரசாத் பங்களாவை முடிவு செய்ததில் பாபா தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்; தொடர்ந்து மெஹர்வானிடம், "**உங்கள் தேர்வு எப்போது?**" என வினவினார்.

"இன்னும் சில நாட்களில்," அவர் பதிலளித்தார்.

"**நீங்கள் தேர்ச்சி பெறுவீர்களா?**" என்று பாபா கேட்டார்.

"நிச்சயமாக," மெஹர்வான் அவருக்கு உறுதியளித்தார்.

எரச் குறுக்கிட்டு, "அவன் தேர்வுக்குத் தயார் செய்யவே இல்லை பாபா! நேரம் போதவில்லை. எப்படித் தேர்ச்சி பெற முடியும்?"

எனவே, பாபா மெஹர்வானுக்கு, "**சரி, இப்போது படிக்கத் தொடங்குங்கள்**" என்று கட்டளையிட்டார். இன்னும் நான்கு அல்லது ஐந்து நாட்கள் மட்டுமே இருந்தன, ஆனால் மெஹர்வான் கவனம் செலுத்தி தனது இறுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றார்.

தாடே குடும்பம் பூனாவில் வாழ்ந்து வந்தது. மூன்று சகோதரர்கள் லக்ஷ்மிகாந்த் (LAXMIKANT), கிஸன் (KISAN), நரேந்திரா (NARENDRA) ஆகியோர் பாபாவை சந்தித்திருந்தாலும், அவர்களின் தாயாரும், சகோதரியும் இதுவரை சந்திக்கவில்லை. ஒரு நாள், அவர்கள் சாலையில் நடந்து சென்றுகொண்டிருந்த வேளையில், உள்ளே பாபா இருந்ததை அறிந்த அவர்கள், குருபிரசாத்தை நோட்டமிட்டனர். திடீரென பாபா வராந்தாவில் வெளியே வந்த வேளையில் குடும்பத்தினர் அனைவரும் அவரைத் தூரத்திலிருந்து பார்க்க முடிந்தது.

மார்ச் **30** அன்று, பூனாவில் அமைந்த இந்த ஐந்து வெவ்வேறு இடங்களில் பாபா ஏகாந்தவாசத்தில் அமர்ந்தார்: ஜங்க்ளி மஹாராஜ் கோயிலுக்கு அருகிலமைந்த பட்டலேஸ்வர் குகை (PATALESHWAR CAVE NEAR JANGLI MAHARAJ TEMPLE); சதுர்ஷ்ரிங்கி கோயிலுக்கு (CHATURSHRINGI TEMPLE) அருகில் ஓரிடம்; அந்தக் கோவிலுக்கு அருகாமையில் அமைந்த கல்லறையின் பக்கம்; பார்சி டவர் ஆஃப் ஸைலன்ஸ் (PARSI TOWER OF SILENCE); மற்றும் ஒரு கிறிஸ்தவ கல்லறைக்கு அருகாமையில்.

ஒவ்வொரு குறுகிய ஏகாந்தவாசத்தின் போதும், எரச், பெண்டு, பைதூல் மூவரும் ஒரு வெள்ளை விரிப்பை பாபா அமரும் இடத்தில் விரித்து, காவல் புரிந்தனர்.

1951 ஏப்ரல் **1** அன்று, பாபா, அவரது இல்லத்திற்குச் சென்றார், அங்கு சகோதரர் பெஹராம், அவரது குடும்பத்தினர் வாழ்ந்து வந்தனர். ஹஸ்ரத் பாபாஜான், மேர்வானுக்கு இறையுணர்வை அளித்த வேளையில், அவர் தனியாக ஓர் அறையில் தனது தலையை கல்லில் அறைவதை வழக்கமாகக் கொண்டார்.

பாபா இப்போது அந்த அறைக்குள் நுழைந்தார்; ஏற்கனவே அறிவுறுத்தியபடி, பெஹ்ராம் குடும்பத்தினருடன் வீட்டின் வேறொரு பகுதியில் இருந்தார். ஒருவரும் பாபாவைப் பார்க்கக்கூடாது என்பதற்காக, முன்னெச்சரிக்கையுடன், பாபாவின் அறைக்குச் செல்லும் பாதையில் மூன்று சேவக தோழர்கள் ஒரு வெள்ளைத் துணியை மறைவாகப் பிடித்துக் கொண்டனர். ஏகாந்தவாச பணி நிறைவடைந்ததும், பாபா குடும்பத்தினர் எவரையும் சந்திக்காமல் வெளியேறினார். இது ஏகாந்தவாசத்தின் ஆறாவது இடம்.

ஏப்ரல் 6ஆம் நாள், பெண்மணிகளுடன், பாபா, ஆதி சீனியரின் காரில் பூனாவிலிருந்து சுமார் 20 மைல் தொலைவில் அமைந்த ஆலந்தி கிராமத்தில், சத்குரு ஞானேஷ்வரின் சமாதி மற்றும் கோவிலுக்குச் (TOMB AND TEMPLE OF DNYANESHWAR) சென்றார். ஞானேஷ்வரின் சன்னதியில் சிறிது நேரம் ஏகாந்தவாசத்தில் அமர்ந்திருந்த பாபா மீண்டும் பூனாவிற்குத் திரும்பிச்சென்றார்.

இந்த ஏழு இடங்களில் ஏகாந்தவாச பணியில் ஈடுபடுவதைத் தவிர, பூனாவில் சில மஸ்துகளையும் பாபா தொடர்பு கொண்டார். 7ஆம் நாள், பாபா, முழுக் குழுவுடன் (நாஜா உட்பட) மஹாபலேஷ்வருக்குத் திரும்பிச் சென்று, அங்கும் அவரது ஏகாந்தவாசத்தைத் தொடர்ந்தார்.

மஹாபலேஷ்வர் செல்லும் வழியில், பிந்த்ரா ஹவுஸில் ஆதி, அவர்களின் மதிய உணவை எடுத்துவர, சிறிது நேரம் காரை நிறுத்தினார். புது வாழ்வு தொடங்கிய பிறகு, கெய்மாயும் மகள் மனுவும் பாபாவைப் பார்ப்பது இதுவே முதல் முறை. பப்பா ஜெஸவாலா பாபாவை முந்தைய வருடம் மஹாபலேஷ்வர் கூட்டத்திலும், சமீபத்தில் மெஹர்வானுடன் குருபிரசாத்திலும் பார்க்க நேர்ந்தது.

ஒரு வாரத்திற்குப் பின்பு, பாபா (மார்ச் 24 அன்று வெளியிட்ட) தனது முந்தைய ஏகாந்தவாச அறிக்கையைக் குறித்து, பின்வரும் விளக்கங்களை அளித்தார்:

என்னுடைய அறிக்கையில் நான் முழுத் திருப்தி அடைகிறேன், ஏனெனில் நான் நிச்சயமாக, மாற்ற முடியாத நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்று கடவுள் மிகவும் உறுதியாக இருக்கிறார் என்பதில் எனக்குத் திடமான நம்பிக்கை உள்ளது. இந்த முழுமையான நம்பிக்கையுடன், நான் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளின் கட்டாய தன்மையைப் பற்றி நான் இன்னும் முழுமையாக அறியவில்லை என்பதை நீங்கள் அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

இன்னும் தெளிவாகச் சொல்வதானால், கடவுள் எனக்கென என்ன நடவடிக்கைகளை நிர்ணயித்துள்ளார் என்று, இன்று என்னால் யூகிக்க முடியவில்லை என்பதை நீங்கள் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டுமென நான் விரும்புகிறேன். இந்த நடவடிக்கைகள், என்னை, 'பழைய

வாழ்க்கையை விட பழைய வாழ்க்கைக்கு' அல்லது 'புது வாழ்வை விட புதிய வாழ்க்கைக்கு' அல்லது 'இந்த இரண்டு வாழ்க்கைக்குக் கீழான வாழ்க்கைக்கு' அல்லது 'இந்த இரண்டு வாழ்க்கைக்கும் மேலான வாழ்க்கைக்குள்' என்னை மூழ்கடிக்கக்கூடும்.

1951 ஜூன் கடைசி வாரத் தொடக்கத்தில், நான் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளின் தன்மையை, கடவுள் எனக்குள் நிச்சயமாகத் தீர்மானிப்பார் என்று நான் உறுதியாக உணர்கிறேன். ஜூன் கடைசி வாரத்தில் இந்த நடவடிக்கை எனக்கு அறிவிக்கப்பட்டதும், அதை உங்கள் அனைவருக்கும் தெரிவிப்பேன். 1951 அக்டோபர் 16ஆம் நாள், மாற்ற முடியாத நடவடிக்கைகளை நான் நிறைவேற்றுவதற்கு முன்னர், எனது அறிக்கையில் நான் குறிப்பிட்டுள்ளபடி, எனது வாழ்க்கையிலும் என்னுடன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்பில் இருப்பவர்களின் வாழ்க்கையிலும், அசாதாரணமான புரட்சிகரமான மாற்றத்தைக் கொண்டுவரும். ஜூலை முதல் அக்டோபர் 16ஆம் தேதி வரை அதற்கான ஆயத்த நிலைகளை நான் தயார் செய்ய வேண்டும்.

1951 அக்டோபர் 16ஆம் நாள், அந்த மாற்ற முடியாத நடவடிக்கைகளை நான் எடுக்கும் வழியில் வரக்கூடிய குறைந்தபட்ச குறுக்கீடுகள் அல்லது குறுக்கீடுகளின் காரணங்களிலிருந்து முழுமையாகப் பாதுகாப்பதற்கு, எனக்காகவும் என்னுடன் தொடர்புடைய அனைவருக்காகவும் ஆயத்த நிலைகளை நான் முழுத் திருப்தியுடன் தயார் செய்ய வேண்டும். எனவே, அத்தகைய குறுக்கீடுகளில் நல்லது, தீயது என்ற பாகுபாட்டுத் தன்மையைப் பயன்படுத்தி உறுதியுடன் தீர்வு காண வேண்டும்.

நான் புது வாழ்வுக்குள் அடியெடுத்து வைத்ததிலிருந்து, நானும், என்னுடன் தொடர்பில் இருப்பவர்களும், எனது புது வாழ்வில் குறுக்கிடுவதற்கான பல காரணங்களைச் சமாளிக்க வேண்டிய பல்வேறு சந்தர்ப்பங்கள் இருந்ததாக, நான் எப்படியோ உணர்கிறேன். இந்த நேரத்தில், அக்டோபர் 16ஆம் தேதிக்கான ஆயத்தங்களை தயார் செய்வதன் மூலம், நான் தீர்வு காண்பதில் எனக்கு முழுத் திருப்தி அளிக்காத எதையும் நான் செய்ய மாட்டேன்.

கடவுளின் உதவியாலும், அவருடைய விருப்பத்தாலும், நான் 1951 ஜூன் மாதத்தில் தெரிந்துகொண்டு அறிவிக்கும், மற்றும் 1951 அக்டோபர் 16 அன்று நான் செயல்படுத்தும் மாற்ற முடியாத நடவடிக்கையின் விளைவு, 1952 பிப்ரவரி 16ஆம் நாள் பலனளிக்கும் என்று நான் நம்புகிறேன்.

நான் கூறியவற்றில் ஏதேனும் குழப்பமிருந்தால் அதை அகற்றி, உங்களுக்கு நம்பிக்கை இல்லாதிருந்தால் அனைவருக்கும் நம்பிக்கையை அளிக்கும் விதத்தில் தெளிவாகவும் வெளிப்படையாகவும் உங்கள் முன்

வைக்கப்பட்டுள்ளன. ஆயினும் கூட, இந்த மாற்ற முடியாத நடவடிக்கைகளின் விளைவை, கடவுள் தனது சொந்த வழிகளில் அருளுவார்; அது ஒருவர் குழப்பமாக அல்லது நம்பிக்கையோடு இருக்கிறாரா என்பதை எந்த வகையிலும் சார்ந்திருக்க முடியாது.

அசாதாரணமாக நடக்க வேண்டிய எதுவும் கடவுளின் விருப்பப்படி நடக்க வேண்டும்.

ஒரு நாள், பாபா தனது குடிலில் ஏகாந்தவாசம் மேற்கொண்டு, பணியில் மூழ்கியிருந்தபோது, டாக்டர் நீலு காவலராகக் கண்காணித்துக் கொண்டிருந்தார். பாபா தூரத்தில் ஒரு காகம் கரைவதைக் கேட்க முடிந்தது, ஆனால் நீலு அதை கவனிக்கவில்லை. பாபா, தனது பணியை முடித்து, குடிலை விட்டு வெளியே வந்தபோது, அவர் அதிருப்தியில் காகத்தை விரட்டாததற்காக நீலுவை கடுமையாக விமர்சித்தார். காக்கையின் குரலைக் கூட கேட்காததால், நீலு ஆச்சரியமடைந்தார். அவரது கோபத்திலும், பாபாவின் மகிமை வெளிப்பட்டது, பாதிரி அந்த அழகைப் படம்பிடிக்க அவரது கேமராவை எடுத்துவர விரைந்தார். பாபாவிடம் கேட்காமலேயே ஒரு முழுப் படத்தையும் அமைதியாகப் படமாக்கினார், ஆனால் பாபாவின் மனநிலையைப் படம்பிடித்து அவர் எடுத்த புகைப்படங்கள் எதுவும் சரியாக வெளிவரவில்லை. ரசாயன முறையில் திரைப்பட சுருளை மேம்படுத்தியபோது, அது முற்றிலும் காலியாக இருந்தது! பாதிரி மிகவும் ஆச்சரியமடைந்தார், ஏனெனில் கேமரா அல்லது திரைப்பட சுருளில் எந்தத் தவறும் இல்லை; இந்த நிகழ்வுக்கு முன்னும் பின்னும் அவர் எடுத்த படங்கள் நன்றாகவே உள்ளன. அன்பிற்குரியவரின் ஆர்வம் இல்லாமல் எதுவும் நடக்காது என்பதை நினைவுபடுத்தும் விதத்தில் பாதிரி திரைப்படச் சுருளை வைத்திருந்தாலும், பாபா அதை விரும்பவில்லை என்று அவர் உறுதியாக நம்பினார்!

பாபாவின் மூலநோய்க்கு டாக்டர் மெர்ச்சன்ட்டின் சிகிச்சை நீடித்த பலனளிக்காததால், 1951 ஏப்ரல் 15 ஞாயிற்றுக்கிழமை அன்று, மெஹர்ஜி மும்பையிலிருந்து டாக்டர் கட்டாரியா (DR. KATARIA) என்ற வேறொரு மருத்துவரை அவரது உதவியாளருடன் அழைத்து வந்தார், நரிமனும் அவர்களுடன் இணைந்தார். டாக்டர் கட்டாரியாவின் சிகிச்சை மறுநாள் தொடங்கியது. ஆறு நாட்களுக்கு, வீக்கமடைந்த திசுக்களுக்கு வெளிப்புறமாக மருந்துடன் ஒரு கட்டும் போடப்பட்டது. ஆனால் வீக்கம் அதிகரித்து, பயங்கர வலி ஏற்பட்டதால், இரண்டு இரவுகள் தொடர்ந்து ஓய்வெடுக்க முடியவில்லை.

ஒரு வாரத்திற்குப் பின்னர், ஏப்ரல் 22 ஞாயிற்றுக்கிழமை, கட்டாரியா மருந்தை நிறுத்திவிட்டு, மேலும் ஆறு நாட்களுக்கு கோதுமை மாவைப் பயன்படுத்தி ஒத்தடம் தருமாறு பரிந்துரைத்தார். 28ஆம் தேதிக்குள், இதன் விளைவாக மூலநோய் வாடி மந்தமாகி, ஒரு சிறிய காயம் மட்டுமே இருந்தது.

டாக்டர் நீலுவும், கோஹெரும் இரவும் பகலும் பாபாவின் அருகிலிருந்து கவனித்து, அந்தப் பகுதியை முற்றிலும் சுத்தமாக வைத்து, அது தொற்றுநோயாகப் பரவாமல் பார்த்துக் கொண்டனர். டாக்டர் கட்டாரியா பூனாவிற்கு வந்து, ஏப்ரல் 29 அன்று மீண்டும் பாபாவை பரிசோதித்துவிட்டு மும்பைக்குத் திரும்பிச் சென்றார்.

பாபா, மஹாபலேஷ்வரில் தனது ஏகாந்தவாசத்தைத் தொடர்ந்தார், அதே நேரத்தில் ஹைதராபாத் செல்வதற்கான முடிவெடுத்து, 'ஜூப்ளி ஹில்ஸ்' (JUBILEE HILLS) பகுதி வாடகைக்கு எடுக்கப்பட்டது. பாபா, '**கடவுளால் நிர்ணயிக்கப்பட்ட நடவடிக்கை**' குறித்து தெரிவிக்க, ஜூன் மாத இறுதியில் கூட்டங்களை நடத்த முடிவு செய்தார். மே 1ஆம் தேதி, அவரது அன்பர்களுக்கு - சிலர் பத்து நாட்களுக்கு, சிலர் ஏழு மற்றும் சிலர் மூன்று நாட்களுக்காக - அழைப்பு விடுத்து கடிதங்கள் அனுப்பப்பட்டன. கூட்டத்தின் நோக்கம்: '**அந்தக் காலத்திற்கான எனது சகவாசத்தின் எல்லைக்குள் நீங்கள் வருவதே**' என்று பாபா குறிப்பிட்டிருந்தார்: ஆதி சீனியர் 1951 மே 5 சனிக்கிழமை அன்று பெண்மணிகளுடன் (மெஹரா, மணி, மெஹரு, கோஹெர் மற்றும் நாஜா) பாபாவை மும்பைக்கு அழைத்துச் செல்ல அனைவரும் ஆஷியானாவில் தங்கினார். அவர்கள் வழியில் சிறிது நேரம் பிந்த்ரா ஹவுஸில் நின்று, அங்கு பப்பா, காக்கா சிஞ்சோர்கர், பிலூ மற்றும் தொராப் ஸட்டா ஆகியோரை தரிசனம் செய்ய பாபா அனுமதித்தார். கிர்க்கீயைக் (KIRKEE) கடந்து ஒரு வயல் வெளியில், மரத்தடியில் அமர்ந்து அவர்கள் மதிய உணவை உண்டனர். (ஆதி காரில் அமர்ந்து உண்டார்).

டாக்டர் நீலு ரயிலில் சென்று, ஆதியும் அவரும் மெஹர்ஜியின் இல்லத்தில் தங்கினர்; டாக்டர் நீலு தினமும் ஆஷியானாவிற்கு பாபாவின் காயத்தில் கட்டுப்போட வந்தார். ஒன்றரை வருடங்களுக்கு முன்பு தனது புது வாழ்வைத் தொடங்கியதிலிருந்து முதல் முறையாக, அடுத்த நாள், பாபா, ஸூனாமாசி, கோர்ஷத் இருவரையும் மும்பையில் அவர்கள் வசிக்கும் மெஹர்ஜியின் இல்லத்தில் சந்தித்தார். அவர்கள் இப்போது தங்கள் சொந்த குடியிருப்பில் சுதந்திரமாக வாழ விரும்புவதாக அவரிடம் கூறியபோது, பாபா அதற்கு ஒப்புக்கொண்டார். கிட்டி, ரானோ இருவரும் அதே இல்லத்தில் வசித்து வந்தாலும், பாபா அவர்களைப் பார்க்கவில்லை, அவர்களின் எதிர்காலம் குறித்து அப்போது எதுவும் முடிவு செய்யப்படவில்லை.

அலோபா 'ஒர்லி'யில் (WORLI) அமைந்த டயமண்ட் உணவகத்தின் (DIAMOND RESTAURANT) மேலாளராகப் பணிபுரிந்து வந்தார். ஒரு நாள் காலை 6:30 மணியளவில், அலோபாவைப் பார்க்க ஆதி, பாபாவை காரில் அழைத்துச் சென்றார். அலோபா, இரவு வெகுநேரம் வரை வேலை செய்ததால், பாபா வந்த வேளையில் அவர் தூங்கிக் கொண்டிருந்தார். ஆதி உள்ளே சென்று அவரை

எழுப்ப, அலோபா காரில் காத்திருந்த பாபாவை சந்திக்க அவசரமாக கீழே ஓடி வந்தார்.

பூனாவில், ஹபிபுல்லா பெய்க், காடேக்கர் மற்றும் கனியுடன் நெருங்கிய நண்பராகிவிட்டார். டாக்டர் கனி எப்பொழுதும் அவரிடம் பாபாவைப் பற்றிப் பேசுவது வழக்கம், "எப்போதும் நினைவில் கொள்ளுங்கள், பாபா கடவுள்!" முஸ்லீமாக இருந்ததால், ஹபிபுல்லாவிற்கு முதலில் இதை நம்புவது கடினமாக இருந்தது, ஆனால் பாபாவின் தெய்வீக அன்பின் அனுபவத்தின் காரணமாக, அவர் படிப்படியாக அதை முழு மனதுடன் ஏற்றுக்கொண்டார்.

பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில், பாபா, பூனாவிற்குச் சென்று, ஹபிபுல்லா பணிபுரிந்த காஷ்மீர் ஸ்டோரில் நுழைந்தார். ஹபிபுல்லாவை, குறிப்பாக, பார்க்க வந்த பாபா, அவரைத் தழுவி முத்தமிட்டார்; ஹபிபுல்லாவின் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது.

ஒரு நாள் பாபா ஹபிபுல்லாவை மும்பைக்கு அழைத்தார். ஹபிபுல்லா, பாபாவைப் பார்க்கும் போதெல்லாம், அவரது முதல் கேள்வி: "**நீங்கள் நமாஸ் செய்கிறீர்களா?**" என்பதுதான். அவர்கள் சந்திக்கும் ஒவ்வொரு முறையும் பாபா ஏன் இந்தக் கேள்வியைக் கேட்கிறார் என்று ஹபிபுல்லா குழப்பமடைந்தார். இந்த முறை பாபா மீண்டும் அதே கேள்வியை அவரிடம் வைத்தபோது, சிரித்துக்கொண்டே ஹபிபுல்லா, 'நான் தவறாமல் பிரார்த்தனை செய்கிறேன்' என்று பதிலளித்தார்.

"**நீங்கள் என்னை நினைப்பதுண்டா?**" என்று பாபா கேட்டார்.

"நான் உங்களை எப்படி மறப்பேன்?" என்பது ஹபிபுல்லாவின் பதில். ஆனால் அந்த நேரத்தில் 'பாபா எப்பொழுதும் தனது பிரார்த்தனையைப் பற்றி இந்தக் கேள்வியைத் திரும்பத் திரும்பக் கேட்பது ஏன்?' என்பது ஹபிபுல்லாவிற்குத் தெளிவாகப் புரிந்தது. பாபா '**நமாஸ் வழங்குதல்**' என்பதன் அர்த்தம், '**ஹபிபுல்லா அவரை நினைவு கூர்ந்தாரா இல்லையா?**' என்பதுதான். அதுவரை இயந்திரத்தனமாக நமாஸ் செய்துகொண்டிருந்த அவருக்கு இப்போது சரியான புரிதல் வந்தது.

பாபா அவருடைய வேலையைப் பற்றி கேட்டார். ஹபிபுல்லா இன்னும் காஷ்மீர் ஸ்டோரில் வேலை செய்வதாகக் கூறினார். பாபா, நரிமனிடம் திரும்பி, ஹபிபுல்லாவை வேலைக்கு அமர்த்துவீர்களா என்று கேட்டதும், நரிமன் தனது தொழிற்சாலையில் மாதம் ரூ 150க்குப் பணிபுரியலாம் என்று பதிலளித்தார். எனவே ஹபிபுல்லாவை நரிமனுடன் சிறிது காலம் பணியாற்றுமாறு பாபா அறிவுறுத்தினார். பாபா சிறிது சர்பத்தை பருகி, மீதியை ஹபிபுல்லாவிடம் அருந்தக் கொடுத்தார்.

ஹோமியோபதி மருத்துவரான டாக்டர் ஸரோஷ் வாடியா (DR. SAROSH WADIA), 8ஆம் நாள் ஆஷியானாவில் பாபாவைப் பார்த்து, கிட்டத்தட்ட ஒரு மணி

நேரம் அவரது உடல் சம்பந்தமான குறிப்புகளை எடுத்தார். ஸரோஷ் மற்றும் டாக்டர் டவ்லே (DR. DHAVLE) அன்று பிற்பகல் **4:00** மணிக்கு வந்தனர்.

பாபா மே **9** அன்று, பூனா வழியாக ஆதியின் காரில் மஹாபலேஷ்வருக்குத் திரும்பிச் சென்று, புல் குடிசையில் தனது ஏகாந்தவாசத்தைத் தொடர்ந்தார். நாஜா, ரானோ, கிட்டி, நர்கிஸ் தாதாச்சாஞ்சி மற்றும் மெஹர்ஜியின் மகள் பெர்வின் ஆகியோருடன் நரிமனின் கார் பின்தொடர்ந்தது. மஹாபலேஷ்வரில், பாபா, ரானோ, கிட்டி இருவரிடம், **"நாங்கள் ஹைதராபாத் செல்லவிருக்கிறோம், நீங்கள் எங்களுடன் வர விரும்பினால் வரலாம். ஆனால், நீங்கள் அங்கு உங்களுக்கான வேலையைத் தேட வேண்டும்"** என்றார்; அவர்கள் மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொண்டனர். பாபா அவர்களைத் தனது புது வாழ்வில் இணைய அனுமதித்தால், தோழர்கள் இடம் விட்டு இடம், நீண்ட தூரம் நடக்க வேண்டும் என்று நினைத்து, தங்களைத் தயார்படுத்திக் கொள்ளும் விதத்தில், அவர்கள் மும்பையில் நீண்ட நடைப்பயணங்களை மேற்கொண்டனர். மெஹர்ஜியின் வீட்டில் தங்க வேண்டாம் என்று பாபா அவர்களுக்கு அறிவுறுத்தியதால், மும்பைக்குத் திரும்பி வந்தபோது (ஜூன் **7** அன்று) அவர்கள் கற்பித்த பள்ளியில் அறைகளை வாடகைக்கு எடுத்தனர்.

மே **17** அன்று, எரச் ஹைதராபாத்தில் ஆண் தோழர்களுடனான கூட்டங்கள் தொடர்பாக இறுதி ஏற்பாடுகளைச் செய்ய அனுப்பப்பட்டார்.

1951 மே **22** செவ்வாய் அன்று, பைதூல், டாக்டர் நீலு, பாதிரி ஆகியோருடன் பாபாவை, ஆதி சீனியர் பூனாவிற்கு அழைத்துச் சென்ற வேளையில், அங்கு அவர் ஏழு மஸ்துகளைத் தொடர்பு கொண்டு, அதே மாலையில் மஹாபலேஷ்வருக்குத் திரும்பும் வழியில், சிறிது நேரம் பிந்த்ரா ஹவுஸில் நின்றனர், ஆனால் பாபா வெளியே வராமல் காரிலே அமர்ந்து உணவை உண்டார். அடுத்த நாள் பாபாவின் **100** நாள் ஏகாந்தவாசத்தின் கடைசி நாள், **"கடவுளின் அருளால் இந்த ஏகாந்தவாசம் திருப்திகரமாக முடிந்தது"** என்று குறிப்பிட்டார்.

பாபாவின் தரிசனத்திற்காக உள்ளூர் மக்கள் பலர் தொடர்ந்து ஆகா கானின் பங்களாவிற்கு (AGA KHAN'S BANGALOW) வந்தனர், ஆனால், ஏகாந்தவாசம் மேற்கொண்டதால் அவர் அதை வழங்கவில்லை. பாபா அங்கிருந்து விரைவில் புறப்படவிருக்கும் செய்தி அறிந்து, அவர்கள் தரிசனம் செய்வதில் அதிக ஆர்வம் காட்டினர்; இறுதியில் பாபா, அவர்களையும், தான் தரிசனம் செய்ய அனுமதிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஒப்புக்கொண்டார். இதை அவர்கள் ஏற்றுக்கொண்டு, **24**ஆம் நாள், மஹாபலேஷ்வரில் அமைந்த பங்களாவிற்கு பலர் வந்தனர். அவர்களில் புகழ்பெற்ற 'ஸாங்ளி' (SANGLI) மற்றும் 'மீரஜ்' (MIRAJ) பகுதிகளின் மஹாராஜாக்களும் கலந்துகொண்டனர். பாபா ஒவ்வொருவரின்

பாதங்களையும் தொட்டு வணங்கி, சில முதியவர்களிடமிருந்தும் ஆசிகளைப் பெற்றுக்கொண்டார். இந்த முதியவர்கள் இறை மனிதனை ஆசீர்வதிப்பது குறிப்பிடத்தக்கது.

காலம் குறிப்பிட்டதைப் போல, “மனிதகுலத்தை விழிப்புறச் செய்ய, இறைவனே இறைவனைத் தேடுபவராக நடித்தார் - அரசர்களையும் வறியவர்களையும் பணிவுடன் வணங்கி, அவர்களின் ஆசீர்வாதத்தை நாடுகிறார், அதனால் அவர் ‘கடவுளால் தீர்மானிக்கப்பட்ட’ அடுத்த கட்ட நடவடிக்கையை எடுக்க அவருக்கு வேண்டிய வலிமை கிடைக்கும்!”



மஹாபலேஷ்வர், மே **1951**
(MAHABALESHWAR, MAY 1951)



பூனா நகரில் ஒரு மஸ்துடன் தொடர்பு, **22** மே **1951**
(CONTACTING A MAST IN POONA, 22 MAY 1951)

ஹைதராபாத் ஏகாந்தவாசம்

(Hyderabad Seclusion)

1951 மே **21** அன்று, ஸரோஷ் அனுப்பிய இரண்டு சரக்கு வண்டிகளில் மஹாபலேஷ்வரிலிருந்து அனைத்து பொருட்களும் ஹைதராபாத்திற்கு அனுப்பப்பட்டன; பெண்டு, விஷ்ணு இருவரும் உடன் சென்றனர். இதர சேவக தோழர்கள் ரயிலில் பயணம் செய்ய, பாபா, பெண்மணிகளுடன் **25**ஆம் நாள் மெஹர்ஜியின் காரில் புறப்பட்டார்; ஆதி சீனியர் காரை ஓட்டிச் சென்றார். பெண்மணிகளின் செல்லப் பிராணியான குதிரை பேகம், மஹாபலேஷ்வரில் அதை நன்றாக கவனித்துக் கொள்வதாக வாக்குறுதி அளித்த ஒரு நபருக்கு வழங்கப்பட்டது.

வழியில் பூனாவில் பிந்த்ரா ஹவுஸில் நின்று, பாபா, முழு ஜெஸவாலா குடும்பத்தினரையும் சந்தித்தார். அவர்களுடன் மதிய உணவை எடுத்துக்கொண்டு, பாபா பூனாவிலிருந்து புறப்பட்டு, தெம்புர்னி அரசாங்க பங்களாவில் (TEMBHURNI DAK BANGALOW) இரவு தங்கினார். அனைவரும் இரண்டாவது இரவு நல்துர்க் (NALDURG) கிராமத்தில் தங்கி, மே **27** ஞாயிற்றுக்கிழமை ஹைதராபாத் வந்தடைந்து, 'ஜூப்ளி ஹில்ஸில் அமைந்த கோஹினூர் பங்களா'வில் (KOHINOOR BANGALOW) குடியேறினர். ஆதி மே **30**ஆம் தேதி ரயிலில் அஹமதுநகருக்குத் திரும்பிச் சென்றார். (மெஹர்ஜியின் கார் ஹைதராபாத்தில் பாபாவின் உபயோகத்திற்காக வைக்கப்பட இருந்தது.) ஹைதராபாத்தில் குடியேறியதும், பாபா, பெண்டுவிடம் கூட்டத்திற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு அறிவுறுத்தினார். மறைந்த முஸ்லீம் இளவரசர் நவாப் அலி நவாஸ் யங் (MUSLIM PRINCE NAWAB ALI NAWAZ JUNG) என்பவரின் (**6-2-591** ஜூப்ளி ஹில்ஸில்) முன்னாள் இல்லம் இதற்காக வாடகைக்கு எடுக்கப்பட்டது. பெண்டு மனமுவந்து வெளியிலிருந்து வரவழைக்கப்பட்ட உணவு வகைகளையும், அழைக்கப்பட்டவர்களுக்கு மிகவும் வசதியான அறைகளையும் ஏற்பாடு செய்தார்.

இந்த ஆயத்தங்கள் நடந்துகொண்டிருந்த போது, பாபா தனது பணியில் ஈடுபட்டிருந்தார். அவர் ஹைதராபாத் மற்றும் ஸெக்கந்திராபாத் நகரங்களில் மஸ்துகளைத் தேடித் தொடர்பு கொள்ளச் சென்றார், எனவே அவரது உள் மற்றும் வெளியளவிலான பணிகள் முழு வீச்சில் நடந்துவந்தன. "**ஹைதராபாத் எனக்கு மிகவும் பிடித்த இடம்**" என்று அவர் ஒருமுறை குறிப்பிட்டார். "**இது ஆன்மீக ரீதியாகவும், பொருள் ரீதியாகவும் மிகவும் சிறந்த இடம். அதன் ஆன்மீக முக்கியத்துவம் கடந்த காலங்களிலிருந்து வருகிறது.**" பாபா ஹைதராபாத்தை மிகவும் நேசித்ததற்கு, ஏராளமான மஸ்துகள் அங்கு வாழ்ந்ததே முக்கிய காரணம் ஆகும்.

ஏறக்குறைய இரண்டு ஆண்டுகளில் முதல் முறையாக, பாபா கடிதப் பரிமாற்றத்தில் ஈடுபடத் தொடங்கினார். 'கிளாரிஸ் ஆடம்ஸ்' (CLARICE ADAMS) என்றழைக்கப்பட்ட ஆஸ்திரேலியப் பெண்மணி ஒருவர் அங்குள்ள ஸுஃபி குழுவில் (SUFI GROUP) அங்கம் வகித்தார். முன்பு, அவர் ஓர் அரசியல் கட்சியின் பொருளாளராக இருந்து சுறுசுறுப்பான சமூக வாழ்க்கையை நடத்தினார்; ஆனால் அவர் ஸுஃபிகளுடன் இணைந்து தியானத்தில் ஆர்வம் காட்டியபோது அனைத்தும் கைவிடப்பட்டது. அவர் பாபாவைக் கடிதம் மூலமாகத் தொடர்பு கொண்டார், அவரை நேசிப்பது எப்படி என்று தெரிந்து கொள்ள விரும்புவதாகவும், ஆனால் தான் சந்திக்காத ஒருவரை நேசிப்பது சாத்தியமில்லை என்றும், அதனால் இந்தியா வந்து அவரைப் பார்க்க விரும்புவதாகவும் கூறியிருந்தார்.

1951 மே 31 அன்று, பாபா அவருக்கு பதில் கடிதம் அனுப்பினார்:

என் அன்பான திருமதி ஆடம்ஸ், உங்கள் திறந்த இதயத்துடன் வரையப்பட்ட அன்பு கடிதம் என்னை மிகவும் மகிழச் செய்தது. நீங்கள் இப்போது இந்தியாவிற்கு வருவதை நான் விரும்பவில்லை; நான் உறுதியளிக்கவில்லை என்றாலும், ஒரு நாள் ஆஸ்திரேலியாவிற்குச் சென்று, அங்கு வாழும் அன்பர்களை சந்திக்கலாம். உங்கள் முந்தைய செயல்பாடுகளுக்கு நீங்கள் திரும்பிச் செல்லவேண்டும்; ஆனால் ஒவ்வொரு செயலையும் கடவுளுக்கு அர்ப்பணித்து, 'புது வாழ்வு' நடைமுறையின் கண்ணோட்டத்தில் நீங்கள் அனைத்தையும் செய்ய வேண்டும்.

ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் அவர் ஆஸ்திரேலியாவிற்குச் செல்லலாம் என்று பாபா கூறியது இதுவே முதல் முறை.

எதிர்வரும் கூட்டங்களில் பங்கெடுக்க இந்தியாவிலிருந்து வரும் அன்பர்களுக்கு அழைப்பு விடுக்கும் விதத்தில், ஜூன் 8ஆம் நாள், பாபாவிடமிருந்து ஆதி இந்தச் செய்தியை அடையப்பெற்றார்:

100 நாள் ஏகாந்தவாசத்தின் காரணமாக ஏற்பட்ட கடுமையான உடல் மற்றும் மன உளைச்சல், ஏற்கனவே பலவீனமான அவரது உடலை மேலும் பாதித்துள்ளது என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்று பாபா விரும்புகிறார். ஏழு நாள் கூட்டம் நிகழும் வேளையில் அவர் உடல் நலமுடன் இருப்பதாக உணர்ந்தால், அவர் மகிழ்ச்சியான மனநிலையில் கடவுளால் தீர்மானிக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வார். இருப்பினும், அவரது உடல்நிலை அதற்கு ஒத்துழைக்காவிடிலும் கூட, அவர் தனது நடவடிக்கைகளை மேற்கொள்வார், ஆனால் அந்த விஷயத்தில், நீங்கள் ஒரு பாரமான, மனச்சோர்வடையச் செய்யும் சூழ்நிலையை மகிழ்ச்சியுடனும், முகமலர்ச்சியுடனும் எதிர்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும்.

1951 ஜூன் 10 அன்று, பாபா காலை 7:00 மணி முதல் மாலை 7:00 மணி வரை தண்ணீர் கூட அருந்தாமல் கடுமையான உபவாசம் மேற்கொண்டார். அடுத்த நாளிலிருந்து, கூட்டங்களுக்கான ஆயத்த பணிகளில் கவனம் செலுத்தினார்.

பழைய மற்றும் புது வாழ்வுத் தோழர்கள் அனைவரும் ஏழு நாட்கள் தங்க அழைக்கப்பட்டனர்; மேலும், 39 ஆண்கள் மூன்று நாட்கள் மட்டுமே தங்க வேண்டும். ஹமீர்பூரிலிருந்து வரவிருந்த கேஷவ் நிகம் மற்றும் புக்கார் போன்ற தலைவர்களைப் போல், ஆந்திராவிலிருந்து தனபதி ராவ் மற்றும் சென்னை வக்கீல் ஏ.சி.எஸ். சாரி இருவரும் வரவிருந்தனர். இவர்கள் ஒப்பீட்டளவில் 'புதிய' அன்பர்களாக இருந்தபோதிலும், தங்கள் பகுதிகளில் பாபாவுக்காக, கணிசமான பணிகளைச் செய்துள்ளனர் - இதன் விளைவாக மிகக் குறுகிய காலத்தில் வடக்கே உத்தரபிரதேசத்தின் ஹமீர்பூர் மாவட்டமும் தெற்கே ஆந்திரப் பிரதேச மாநிலமும் மெஹர் பாபாவின் பாதங்களில் அடிபணிந்தன.

கடவுளால் நிர்ணயிக்கப்பட்ட தீர்மானங்களை அறிவிப்பிற்கான ஹைதராபாத் கூட்டம் ஜூன் 28, 29, 30 ஆகிய மூன்று தேதிகளில் நடத்த முடிவு செய்யப்பட்டிருந்தாலும், ஆதி சீனியர், ராம்ஜூ, கனி, ஆதி ஜூனியர், சிது, தேஷ்முக் போன்ற சிலரை முன்கூட்டியே அழைத்து, முதல்நிலை விவாதங்கள் ஜூன் 20ஆம் தேதி முதல் நடத்தப்பட்டன. அன்று மதியம் மூன்று மணியளவில், மகிழ்ச்சியான மனநிலையில், பாபா கூட்டத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரண்மனை பங்களாவிற்கு வந்தார்; ஆனால் அவர் மிகவும் மெதுவாக வரவேற்பு அரங்கு படிகளில் ஏறினார். '**அவர் எப்படித் தோற்றமளிக்கிறார்?**' என்று கூடியிருந்தவர்களிடம் வினவியபோது, "மிகவும் சோர்வடைந்த நிலையில் பலவீனமாக உள்ளார்," என்று அனைவரும் பதிலளித்தனர்.

"**ஆமாம், அது உண்மை,**" என்று கூறி, பின்னர் அவர் விரிவாக விளக்கினார்:

நான் எனது உடல்நிலை சீராக இல்லாதது போல் உணர்கிறேன். மூல நோய் பிரச்சினை ஏறத்தாழ இன்னும் உள்ளது. எனது உதரவிதானத்திற்கு அருகில் தொடர்ந்து வலியைத் தூண்டும் அரிப்பு போன்ற ஏதோ ஒன்றை உணர்கிறேன். என்னால் நன்றாக தூங்க முடியவில்லை. எதையும் உண்ணத் தூண்டும் பசியும், ஆர்வமும் இல்லை. ஒவ்வோர் 24 மணி நேரத்திற்கும் ஒரு முறை, ஏதேனும் சிறிய அளவில் உண்ண என்னைக் கட்டாயப்படுத்த வேண்டியதாக உள்ளது; இன்னும், அந்த நேரத்தில், உணவைப் பார்த்தாலே அருவருப்பாக உணர்கிறேன். மருத்துவர்களின் அறிவுரைகளையும் அறிவுறுத்தல்களையும் உண்மையாக நிறைவேற்ற, கடந்த நாட்களில் என்னால் முடிந்தவரை முயற்சித்தேன். குறைந்தபட்சம் நீங்கள் அனைவரும் இங்கு இருக்கும் காலத்திலாவது இதுபோன்ற பிரச்சினைகளிலிருந்து விடுபட

வேண்டும் என்று நான் குறிப்பாக ஆர்வமாக இருந்தேன், அதனால் நான் மகிழ்ச்சியுடன் உங்கள் மத்தியில் இருப்பதோடு, ஜூலை 1 ஆம் தேதிக்குள் நான் முடிக்க வேண்டிய அனைத்து பணிகளையும் இயன்றவரையில் மகிழ்ச்சியுடன் செய்ய விரும்புகிறேன்.

100-நாள் குறுகிய அளவிலான ஏகாந்தவாசத்தில் நான் இழந்த ஆரோக்கியத்தை மீட்டெடுத்ததைத் தவிர, இதுவரை கணிசமான முன்னேற்றம் எதுவும் இல்லை. என்னுடைய உடல்நிலை மேலும் வீழ்ச்சியை சந்திக்காது என்று நம்புவோம். எப்படியாயினும், இப்போது முடிக்க வேண்டிய அனைத்தையும் முடிக்க நான் உறுதியாக இருக்கிறேன். நீங்கள் அனைவரும் ஏறத்தாழ ஏதோ ஒரு வகையில் எனக்கு உதவ வேண்டும். உங்கள் சொந்த ஆரோக்கியத்தில் நீங்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். நம்மால் இயன்றவரை நல்ல உற்சாகத்துடன் செய்ய வேண்டிய அனைத்தையும் செய்ய முயற்சிக்க வேண்டும். வேலை மற்றும் உங்கள் ஆரோக்கியத்தை பராமரிப்பதில் கவனம் செலுத்துவதைத் தவிர, நீங்கள் அனைவரும் உங்களால் இயன்றவரை கவலையின்றி மனமகிழ்ச்சியுடனும் இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

வருகை தந்தவர்களுடன் கருத்துகளைப் பரிமாறிக்கொண்ட பிறகு, பாபா தொடர்ந்தார்:

இப்போது நமது அடிப்படை பணியைப் பற்றி பேசலாம். நான் இப்போது, பல விஷயங்களைச் செய்ய வேண்டும். அந்தக் காரணத்திற்காக, உங்களில் எவரையும் தனித்தனியாகவோ அல்லது குறிப்பிட்ட குழுக்களாகவோ, எந்த நேரத்திலும், எந்தக் காலகட்டத்திலும், மற்றும் எனது பணிக்காக நான் எத்தனை முறை வேண்டுமானாலும் அழைக்கலாம். எனவே, அனைவரும் உடனடியாகப் பணிபுரியத் தயாராக இருக்க வேண்டும், மேலும் நான் இங்கு இருக்கும் நேரம் முழுவதும் எந்த நேரத்திலும் எனது அழைப்பை எதிர்நோக்கி இருக்க வேண்டும். பெரும்பாலும் காலை 8:00 முதல் 11:00 வரை மற்றும் பிற்பகல் 2:00 முதல் 6:00 மணி வரை உங்களுடன் இருப்பேன். இந்த நேரத்திலோ அல்லது உங்கள் உணவுக்கு நிர்ணயிக்கப்பட்ட நேரத்திலோ எவரும் வளாகத்தை விட்டு வெளியே செல்லக்கூடாது.

தற்போதைக்கு, சுத்தமான நெய்யில் தயார் செய்யப்பட்ட எளிய உணவுகள் மட்டுமே ஹோட்டலிலிருந்து இங்கு வரவழைக்கப்பட்டன. கூட்டத்திற்காக வெளியூர் அன்பர்கள் இங்கு வரத் துவங்கியது முதல், அடுத்த மூன்று நான்கு நாட்களுக்குள், சைவம், அசைவம் என இரண்டு வகை உணவுகளையும், அவரவர் விருப்பத்திற்கு ஏற்ப, வளாகத்திலேயே தயாரித்து வழங்க, ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நீங்கள் வழக்கமான காலை, மதிய உணவு, தேநீர் மற்றும் இரவு உணவைப் பெற முடியும்.

ஹைதராபாத், ஜூன் 1951
(HYDERABAD, JUNE1951)

ஜூன் 28, 29ஆம் தேதிகளில் நீங்கள் எவரும், எக்காரணத்தைக் கொண்டும், நான் பிரத்யேகமாக அனுமதித்தால் தவிர, வெளியே செல்லவேண்டாம். எல்லாவற்றிற்கும் மேலாக, நேர்காணலின் நிமித்தம், என்னுடனான தனிப்பட்ட நேர்காணலுக்காக எவரும் உரிமைக் கோரக்கூடாது. நான் உங்களில் எவரையும் அழைக்காமல் இருக்கலாம். ஆனால் நான் அழைக்கும் வேளையில், நானாக கேட்கும் போது, பழைய வாழ்க்கையுடன் தொடர்புடைய விஷயங்களாக இருந்தாலும் கூட, நீங்கள் என்னுடன் சுதந்திரமாக பேச வேண்டும். பிற நேரங்களில், பழைய வாழ்க்கையுடன் தொடர்புடைய எதையும் எவரும் குறிப்பிடக்கூடாது.

அடுத்த நாள், 1951 ஜூன் 21 அன்று, அனைவரின் முன்னிலையிலும், பாபாவால் முன்மொழியப்பட்ட பணி மற்றும் அவரது பழைய வாழ்க்கையின் சில நிகழ்வுகளுடன் தொடர்புடைய ஒரு குறிப்பிட்ட விஷயத்தை அவருடன் விவாதிக்க, பாபா, ராம்ஜூவை அனுமதித்தார். அறியாமலேயே, ராம்ஜூ அவருடைய தனிப்பட்ட விஷயத்தைக் குறிப்பிடும் வரை அனைத்தும் நன்றாகவே நடந்தது. ராம்ஜூவின் தவறைச் சுட்டிக்காட்டி டாக்டர் கனி, பாபாவின் கவனத்தை ஈர்த்தபோது, பாபா முகம் மலர்ந்த புன்னகையுடன், **"அவர் நல்ல நம்பிக்கையில் இந்தத் தவறை இழைத்துள்ளார்"** என்றார்.

"அந்தக் குறிப்பிட்ட நிகழ்வின் தொடர்ச்சி தவிர்க்க முடியாதது மட்டுமின்றி தவிர்க்கக் கடினமாக இருந்தது. நீங்கள் அனைவரும் இப்போது இதுபோன்ற விஷயங்களால் சோர்வடைந்துவிட்டீர்கள் என்பதில் சந்தேகமில்லை; ஆனால் எனது மௌனம், வெளிப்பாடு போன்ற பலவற்றைப் பற்றி பேசிப் பேசி, நான் இப்போது உங்கள் அனைவரையும் விட பல லட்சம் மடங்கு அதிகமாக அலுத்துப் போய்விட்டேன் என்பது உங்களுக்குத் தெரியாது!

"என்னைப் (எனது உண்மை ரூபத்தை) **'பார்க்க' நீங்கள் மிகவும் ஆர்வமாக உணர்ந்தால், என்னை நீங்கள் ஒருமுறையாவது 'பார்க்க' அனுமதிக்க நான் அனைவரையும் விட மிகவும் ஆர்வமாக உள்ளேன் என்பதை நம்புங்கள்! அப்படி, எப்போதேனும் நடக்கும் தருணத்தில், அது எதிர்பாராமல் திடீரென நடக்கும். மேலும், நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் நிகழ்வது நிச்சயம். புது வாழ்வில், நான் அதன் கொள்கைகளையும், நிபந்தனைகளையும் கடைப்பிடிக்க வேண்டியதால், நான் அவ்வாறே செய்கிறேன்."**

ஜூன் 20 முதல் ஜூன் 26 வரையிலான முதல் ஏழு நாட்களுக்கு, பாபா, 1951 அக்டோபர் 16ஆம் தேதி, கடவுளால் தீர்மானிக்கப்பட்ட 'நடவடிக்கை'களை நிறைவேற்றுவதற்கு முன்னர், அவர் நிச்சயமாக முடிக்க விரும்பும் பல மாற்றங்கள் மற்றும் ஏற்பாடுகளில் அக்கறை கொண்டிருந்தார். இது தொடர்பாக,

பாபா தெரிவித்தார்: **“எனது புது வாழ்வின் கடந்த இரண்டு ஆண்டுகளில் நான் அனுபவித்த குறுக்கீடுகளின் தடயங்களை அகற்ற, நான் சில திட்டவட்டமான மாற்றங்களைச் செய்ய வேண்டும். நான் யாரிடமும் எந்தவிதமான கடமைக்கும் உள்ளானவன் அல்ல. நான் ‘சுமை’யாக உணர்கிறேன் என்று கூறும்போது, பரஸ்பர அன்பின் மூலம் எனது வாழ்க்கையுடன் தன்னை இணைத்துக் கொண்டவருக்கு நான் போதுமான அளவு செய்யவில்லை என்று நான் உணர்கிறேன், மேலும் எனது எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப அடையும் திருப்தியை நான் உணராத வரை, ஏதோ ஒரு வழியில் அந்த ‘சுமை’யை அகற்ற என்னால் முடிந்த அனைத்தையும் செய்ய வேண்டும்.”**

பாபா செய்த மாற்றங்களில் ஒன்று, பழைய வாழ்க்கையில் திரைப்படம் பார்க்க தடை விதிக்கப்பட்டிருந்த அனைவரும், ஜூலை மாதம் முதல் மாதம் மூன்று திரைப்படங்கள் பார்க்கலாம்.

1951 ஜூன் 23 சனிக்கிழமை அன்று, அழைக்கப்பட்டவர்களில் பலர் வந்தனர். தனிப்பட்ட நேர்காணல்களைப் பற்றி பாபா கேலி செய்தார், **“நான் ‘ஏ’**(A)**யுடன் ஐந்து நிமிடங்கள், ‘பி’**(B)**யுடன் ஏழரை நிமிடங்கள், ‘சி’**(C)**யுடன் மூன்று மணி நேரம், ‘டி’**(D), **‘ஈ’**(E), **‘எஃப்’**(F) **உடன் தலா ஏழு மணி நேரமும், மற்றும் ‘ஜி’**(G)**யுடன் ஒரு நாள் முழுவதும் பேச வேண்டும்!”**

குருநாதரின் சேவையில் தியாகம் செய்வது பற்றி பாபா கூறியபோது: **“உணர்ச்சியின் திடீர் எழுச்சியில் உயிரைத் துறப்பது என்பது, எவ்வித பாதகம் அல்லது சாதகமான சூழ்நிலையிலும் குருநாதரின் அறிவுரைகளை அனுதினமும் கடைப்பிடிப்பதை விட, மதிப்பில் மிகக் குறைவானது.**

“சில நேரங்களில் சாதாரண வீரர்கள், தியாகம் போன்ற வீரச்செயல்களை, குறிப்பிட்ட சூழ்நிலை மற்றும் தருணத்தின் தூண்டுதலின் கீழ் செய்கிறார்கள்” என்றார்.

அன்றைய தினம் பொதுமக்களுக்கு தரிசனம் வழங்குவதன் தேவை குறித்த கேள்வி எழுந்தபோது, பாபா கூறினார்: **“தரிசனம் யாருக்கு வழங்கப்படவேண்டுமோ, அவர்களுக்கு வழங்குவதில் அதற்குரிய மதிப்பு உள்ளது. அப்போதுதான் தரிசனம் உண்மையான தரிசனமாக அமைகிறது. கடவுள் தீர்மானிக்கும் ‘நடவடிக்கை’ இறுதியில் அந்த இலக்கை நோக்கியே செல்கிறது. தரிசனம் வழங்குவதா வேண்டாமா என்பது கடவுளின் விருப்பத்தைப் பொறுத்தது.”**

ஒரு நாள் காலை மினூ கராஸ், டாக்டர் கனி இருவரும் தாமதமாகத் தூங்கி, நீராடாமல் அவசரமாக உடை அணிந்தனர். பாபா இருவரையும் முன்னோக்கி அழைத்து, **‘அவர்கள் ஏன் பாபாவின் கட்டளையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டதாக நினைக்கிறார்கள்’** என்று வினவினார். மினூ, கனியைப் பார்த்தபோது அவர், “பாபா, நேற்றைய தரிசனத்திற்கு பின்னர், எங்கள் உடலில்

ஒட்டிக்கொண்ட தூசிகள் எங்களுக்கு மிகவும் விலைமதிப்பற்றவை ஆகையால், நாங்கள் நீராடவில்லை, நாங்கள் உங்கள் சூழலின் தூசியால் மூடப்பட்டிருக்க விரும்புகிறோம்" என அதி விரைவில் அளித்த பதில் பாபாவை அகமகிழச் செய்தது. **ஆனால் வரும் நாட்களில் இருவரும் அதிகாலையில் வழக்கமான நீராடுதலை முடித்து சுத்தமாக இருக்கவேண்டும் என்று எச்சரித்தார்**.

ஜூன் 24 அன்று, பாபா ஹைதராபாத்தில் மஸ்த் தொடர்புக்காக வெளியே சென்ற வேளையில் பாதிரி சில புகைப்படங்களை எடுத்தார். மறுநாள், 'ஏற்பாட்டு குழு'வின் (ARRANGEMENTSWALAS' COMMITTEE) மூன்று உறுப்பினர்களும் குறிப்பிட்ட வேலைக்காக அழைக்கப்பட்டனர். அவர்களைக் குறித்து பாபா, **"இந்தக் குழு, மூன்று தலைகள் மற்றும் ஒன்றரை இதயங்களால் ஆனது!"** என்று கேலி செய்தார்.

கூட்டத்தில் வேறு ஒருவரின் சிரமங்களைக் குறிப்பிட்டு, பாபா, ராம்ஜூவிடம் இவ்வாறு கூறினார்: **"அவரது தனிப்பட்ட உதவியற்ற தன்மையால் நான் மகிழ்ச்சியடைகிறேன், இது மிகப்பெரிய சாத்தியக்கூறுகளை உள்ளடக்கியது, ஆனால் எனது தற்போதைய எல்லையில்லா உதவியற்ற தன்மையைப் பற்றி உங்களுக்குத் தெரியாது."**

அடுத்த நாள், பாபா மேலும் கூறினார், **"நான் வயதான மெஹர் பாபாவைப் பார்க்கப் போகிறேன் அல்லது குருடனாகப் போகிறேன்! இதுவே எனது அனைத்து நோய்களுக்கும் அருமருந்து, மேலும் அந்த வைத்தியத்தின் பலன் உங்கள் அனைவரின் நோய்களுக்கான தீர்வாகவும் நிரூபிக்கப்படும்!**

"இங்கே பல தரப்பட்ட விஷயங்களைப் பற்றி விவாதிக்க நீங்கள் அனைவரும் என்னுடன் ஒத்துழைத்து, எனக்கு உதவியுள்ளீர்கள்; ஆனால் இந்த நாட்களில் நான் செய்து வரும் பணியின் முக்கியத்துவம் பற்றி உங்களுக்குச் சிறிதும் தெரியாது. அது, நான் அக்டோபர் 16ஆம் நாள் எடுக்கவிருக்கும், கடவுளால் தீர்மானிக்கப்பட்ட 'நடவடிக்கை'யின் விளைவாக மட்டுமே அறியப்படும். இந்தத் தருணத்தில் நான் உணர்வதைப் பொறுத்தவரை, நீங்கள் என்னுடன் செலவிட்ட இந்த ஏழு நாட்களும், என்னுடன் உங்கள் வாழ்நாளில் 700 வருடங்களைக் கடந்து சென்றதைப் போன்றது!"

கடவுள் நிர்ணயித்த 'நடவடிக்கை'யை பாபா ஏற்கனவே எடுத்துரைத்தார், ஆனால், அதில் குறிப்பிட்டிருந்தது என்ன என்று கூட்டத்தில் இருந்தவர்களில், டாக்டர் டானைத் தவிர வேறு எவருக்கும் தெரியாது, அவர் அதை ஆங்கிலத்தில் எழுதிக்கொண்டிருந்தார்; மணி அதைத் தட்டச்சு செய்து கொண்டிருக்க, டாக்டர் தேஷ்முக், டாக்டர் கனி இருவரும் அதை முறையே மராட்டியிலும், ஹிந்தியிலும் மொழிபெயர்த்துக் கொண்டிருந்தனர்; இந்த நால்வரைத் தவிர, அது அறிவிக்கப்படும் வரை ரகசியமாகவே இருந்தது.

ஆனால் 1951 ஜூன் 27ஆம் நாள், கடவுள்-நிர்ணயித்த 'நடவடிக்கை'யின் கீழ், என்ன நிகழ உள்ளது என்பதைப் பற்றி பாபா முன்கூட்டியே கணிசமான அளவில் வெளிச்சமிட்டுக் காட்டியிருந்தார். ஹைதராபாத் அரசாங்கத்தின் உயர் அதிகாரி ஒருவரை பாபா அழைத்திருந்தார். பாபாவை சந்தித்த பின்னர், அந்த அதிகாரி புறப்பட்டுச் சென்றதும், பாபா முழுக் குழுவுக்கும் விளக்கினார்:

இதற்கு முன்னதாக, நான் சில விஷயங்களைச் செய்ய விரும்பியபோது, குறிப்பிட்ட சிலரைக் கருத்தில் கொண்டு கண்காணித்து வந்தேன். இப்போது, கடவுள் நிர்ணயித்த படி எனது பணி நடந்தால், எவராலும் எனக்கு எதுவும் செய்ய முடியாது என்ற எளிய காரணத்திற்காக, இதுபோன்ற விஷயங்களை நான் கருத்தில் கொள்ள வேண்டிய அவசியமில்லை.

அதேபோல், எந்த ஒரு தனிநபரின் கௌரவத்தையும் பதவியையும் நான் கருத்தில் கொள்ள வேண்டியதில்லை, அந்த வேலை செய்யப்படாமல் இருந்தாலும், அதன் விளைவு கடவுளின் விருப்பத்தைப் பொறுத்தது, மேலும் அது ஏதோ ஒரு வழியில் செய்யப்பட்டு வெளிப்படும்போது, நானாக அல்லது எனக்காகச் செய்யவேண்டியது எதுவும் இருக்காது.

இப்போது என்னைப் பொறுத்தவரை, 'இது வாழ்வா அல்லது சாவா?' என்ற கேள்வி மட்டும்தான். ஆனால் கடவுளால் தீர்மானிக்கப்பட்ட 'நடவடிக்கை'யின் கீழ் எனக்கு உண்மையில் என்ன ஆபத்து உள்ளது என்பதை இந்த வெளிப்பாடு சிறிதளவும் எடுத்துக்காட்டவில்லை.

தலை முதல் கால் வரை தொழுநோயால் பாதிக்கப்பட்ட ஒருவர், குணப்படுத்த முடியாத சூழ்நிலையில் இருக்கிறார் என்று வைத்துக்கொள்வோம்; இதனால் அவர் தவிர்க்க முடியாத மரணத்தை நெருங்கிக் கொண்டிருப்பதாக நம்புகிறார். முடிவு எதுவாக இருந்தாலும், அவர் வேறு எதைப்பற்றி கவலைப்படுவார்? ஆனால், மரணம் எதற்கும் முடிவே இல்லை, இருப்பினும் மக்கள் விரக்தி, வெறுப்பு இது போன்ற பலவற்றின் காரணமாக, தற்கொலை செய்துகொண்டு தங்கள் வாழ்க்கையை முடித்துக்கொள்கிறார்கள்.

ஹஃபீஸின் பின்வரும் இந்த வரிகள் நான் உங்களுக்குத் தெரிவிக்க விரும்பும் சில கருத்துக்களை வெளிச்சமிட்டு காட்டுகின்றன:

ஆன்மா எல்லாம்வல்ல இறைவனை அடையட்டும்
அல்லது இந்த உடலை விட்டு வெளியேறட்டும்!

என்றாலும், நான் சொல்ல விரும்பும் முழுவதும் இதுவல்ல. மற்றுமோர் உதாரணத்தை எடுத்துக் கொண்டால், நான் உடல் ஊனம் மற்றும் துன்பங்களால் மிகவும் கஷ்டப்படுகிறேன் என்று வைத்துக்கொள்வோம்,

அதனால் எனது நகர்வுகள் மிகவும் குறைவாகவே கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இருந்தும் நான் எவரெஸ்ட் சிகரத்தில் ஏற முடிவு செய்துள்ளேன்.

இந்த உதாரணத்தை இன்னும் வெகு தூரத்திற்கு எடுத்துச் செல்வதானால், நான் பலவீனத்தின் உச்சத்தில் இருக்கும் நேரத்தில், வலிமையின் உச்சத்திற்குச் செல்ல வேண்டும் - அதுவும், ஒரு சாத்தியமற்ற குறுகிய காலத்தில் - எந்த அர்த்தத்தில் சாத்தியமற்றது என்று நான் கூறுகிறேன் என்றால், நான்கு கோடி பிறவிகளில் சாதிக்கப்பட்டது நான்கு மாதங்களில் சாதிக்கப்பட வேண்டும்! மேலும் இவை அனைத்தும் இப்போது எனக்கு உண்மையில் ஒரு முழுமையற்ற சாத்தியகூறுகளான யோசனையை மட்டுமே தருகிறது.

ஹமீர்பூர், ஆந்திரா, மதராஸ் ஆகிய இடங்களிலிருந்து அழைக்கப்பட்ட இதர அன்பர்கள் அன்று மாலை வந்தனர். அனைவருக்கும் பாபாவின் கீழ்வரும் தகவல் தெரிவிக்கப்பட்டது.

(என்னுடன் தொடர்பில் இருப்பவர்கள்) அனைவருக்கும் சுற்றறிக்கைகள் அனுப்பப்பட்டன, ஆனால் சிலருக்கு மட்டுமே இங்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதர அன்பர்கள் வரவேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்பட்டனர். கடவுளுக்கு முன்பாக நான் நாளை செய்யவிருக்கும் பிரகடனத்திற்குச் சாட்சியாக நீங்கள் இங்கு அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். எந்தவொரு ஆவணத்திலும் நீங்கள் கையொப்பமிட வேண்டும் அல்லது முத்திரையைப் பதிக்க வேண்டும் என்று அர்த்தமல்ல. நீங்கள் அனைவரும் பிரகடனத்திற்கு சாட்சிகளாக இருந்தீர்கள் என்பதை கடவுள் தெரிந்து கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

நாளை, தனிப்பட்ட நேர்காணல் கிடையாது. நாளை காலை எட்டு மணிக்குள் அனைவரும் மண்டபத்தின் முன் அறையில் இருக்க வேண்டும். அதற்கு முன் அனைவரும் தங்கள் கைகளையும் முகங்களையும் கழுவ வேண்டும். இரவுநேர கனவில் உமிழ்வால் பாதிக்கப்படுபவர்கள் நீராடிய பின்னரே இங்கு வரவேண்டும்.

நான் பிரகடனத்தை வெளியிடுவதற்கு முன்பு, அதற்கு சாட்சியமளிக்க கடந்த, நிகழ்கால மற்றும் எதிர்கால பரிபூரண கடவுள்களை என் இதயத்தில் அழைப்பேன்.

ஜூன் 28 அன்று காலை, ராம்ஜூ குறிப்பிட்டார், "அனைவரும் நிச்சயமாக நீராட அறிவுறுத்தப்படவில்லை என்றாலும், ஒவ்வொரு தோழரும் நீராடி, புத்தாடைகளை அணிந்து, காலை சிற்றுண்டியில் பங்கெடுத்தனர். கூட்டம் நடக்கவிருந்த மண்டபத்தில் கடிகாரம் எட்டரை மணியை எட்டும் முன்னரே அனைவரும் கூடியிருந்தனர். பாபாவும் ஒரு புதிய மேலங்கி அணிந்திருந்தார், மேலும் அவரை சூழ்ந்துகொண்ட தீவிரமான சூழலையும் மீறி அமைதியாக,

மகிழ்ச்சியாகக் காணப்பட்டார்."

பாபா கூட்டத்தில் இருந்தவர்களை எச்சரிக்கை கலந்த தொனியில் உபதேசித்தார்: **"இங்கே இந்த மண்டபத்தில் முழு இதயத்துடன் இருங்கள், ஒவ்வொரு வார்த்தையையும் கவனமாகக் கேளுங்கள்."**

பாபா தனது கைகளையும் கால்களையும் கழுவிவிட்டு, கீழே அமர்ந்து, பிரகடனத்திற்கான விளக்கத்தை முதலில் ஆங்கிலத்திலும், பின்னர் இந்தியிலும் மொழியுமாறு டாக்டர் கனிக்கு சைகையால் தெரிவித்தார். டாக்டர் தேஷ்முக் மராட்டி பதிவை மொழிந்தார்:

கடவுள் தீர்மானித்தது என்ன?

அக்டோபர் 16 அன்று நான் எடுக்கப்போகும் மாற்றமுடியாத 'நடவடிக்கை'யை, கடவுள் என் மனதில் தீர்மானித்துள்ளார். தவிர்க்க முடியாத இந்த 'நடவடிக்கை'யை நிறைவேற்றுவதற்காக நிர்ணயிக்கப்பட்ட காலகட்டம் 1951 அக்டோபர் 16 முதல் 1952 பிப்ரவரி 15 வரையாக இருக்கும். கடந்த ஏழு நாட்களில், இந்த 'நடவடிக்கை'யை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் குறித்து, தேவைப்பட்ட போதெல்லாம், உங்கள் அனைவருடனும் இணைந்தும் தனித்தனியாகவும் பேசி வருகிறேன். ஜூலை 1 முதல் அக்டோபர் 16 வரை, உண்மையான ஏற்பாடுகளை விரிவாக கவனிப்பேன்.

கடவுளின் விருப்பப்படி நான் எடுக்கக்கூடிய 'நடவடிக்கை' முழுமையும், அறுதியுமான நிர்மூலமாக்கும் செயலாகும். இந்த நேரத்தில் நான் புது வாழ்வில் மட்டிலுமே இருக்கிறேன், ஒரு சாதாரண மனிதனின் இந்தப் புது வாழ்வின் நிலைப்பாட்டிலிருந்துதான் இந்த நிர்மூலமாக்கும் தன்மையைப் பற்றி நான் உங்களுக்குச் சொல்கிறேன்.

இந்த 'நடவடிக்கை' அக்டோபர் 16 முதல் பிப்ரவரி 16 வரையிலான செயல்பாட்டின் காலகட்டத்தில், முழுமையாக மனதை நிர்மூலமாக்கும் செயலை மேற்கொள்ள என்னைக் கட்டாயப்படுத்துகிறது. அதாவது, மனம் நிர்மூலமாகும் போது, இயற்கையான நிகழ்வுகளின் போக்கில், நானாக அதை நாடாமல், உண்மையில் உடல் ரீதியான அழிவையும் சந்திப்பேன். எனது கண்முன்னால் தெரிவது போல, பிப்ரவரி 12ஆம் நாளுக்குள், முடிவு இவ்வாறு இருக்கும்:

1) **நான் முழுமையான மனோநாசத்தை (மனதை நிர்மூலமாக்குதல்) சந்திப்பேன், இருந்தும் உடல் ரீதியாக உயிருடன் இருப்பேன்; இதன் பொருள் என்னவெனில் நான் பழைய வாழ்க்கையின் மெஹர் பாபா நிலையை அடைவது மட்டுமல்லாமல், உலகளாவிய அளவில் வெளிப்படுவேன். என்னுடன் தொடர்பில் இருக்கும் மற்றும் இல்லாத அனைவரின் வாழ்க்கையிலும், ஒரு மாபெரும் புரட்சியை இது விளைவிக்கும்; இந்த அடிப்படையில் நான் ஒவ்வொருவருடனும்**

இணைந்திருப்பேன், அதன் விளைவு என்னுடனான அவர்களின் தொடர்பின் வலிமைக்கு ஏற்ப மாறுபடும். அல்லது

2) மனோநாசத்துடன் எனது உடல் வீழக்கூடும், அது எல்லாவற்றின் முடிவும் தொடக்கமுமாக இருக்கும். அதன் பின்னர், என்னுடன் தொடர்பில் இருப்பவர்களுக்கு, அவர்களில் எனது தனிப்பட்ட வெளிப்பாடு இல்லாமல், அதே மாபெரும் மாற்றம் ஏற்படும்; அல்லது

3) மனோநாசத்தை அடையும் முன்னர், எனது பௌதீக உடல் வீழலாம், அதன் அர்த்தம் என்னவெனில் நாம் அனைவரும் இருந்த இடத்திலேயே இருப்போம். அப்படியானால், என்னுடனான உங்கள் தொடர்பு, நீங்கள் என்மீது கொண்ட அன்பு மற்றும் நம்பிக்கையின்படி ஒவ்வொருவரும் பயனடைவீர்கள்; அல்லது

4) பிப்ரவரி இறுதிக்குள், மனோநாசம் ஏற்படாமல் போகலாம், மேலும், உடல்ரீதியாக நான் உயிருடன் இருக்கலாம், அது அனைத்திற்கும் முடிவாக இருக்கும். அப்போது நான் அனைவரையும் என்னுடனான நேரடித் தொடர்பிலிருந்து விடுவிப்பேன், அவர்கள் தேர்ந்தெடுக்கும் எந்த விதமான வாழ்க்கையையும் வாழ அவர்களிடமே விட்டுவிடுவேன்.

இந்த நான்கு விளைவுகளில் ஒன்று இறுதியில் கடவுளின் இறுதி விருப்பத்திற்கு ஏற்ப கடவுளால் தீர்மானிக்கப்பட்ட 'நடவடிக்கை'யின் விளைவாக இருக்கலாம்.

எப்படியிருந்தாலும், என்னுடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்புள்ளவர்கள் என்னை நேசித்து, வீணாக எனக்கு சேவை செய்திருக்க மாட்டார்கள். நான் என்னவாக இருந்தேனோ, என்னவாக இருக்கிறேனோ, என்னவாக இருப்பேனோ, அதற்கேற்ப கடவுள் தன்னுடைய எல்லையற்ற நியாய நீதி முறையில் எல்லாவற்றையும் பார்ப்பார். உங்கள் ஒவ்வொருவருக்கும் எனது உறுதியான, ஒரே அறிவுரை என்னவெனில், உங்கள் நம்பிக்கையையும் அன்பையும் - குறைந்தபட்சம், அதிகமாக்காவிடிலும், இப்போது இருக்கும் அதே விகிதத்தில் வைத்துக்கொள்ளுங்கள்.

நான் இந்த 'நடவடிக்கை'யை எடுக்க வேண்டும் என்று கடவுள் விரும்புகிறார், மேலும் பிப்ரவரி 12ஆம் தேதிக்குள் இந்த மனோநாசத்தை அடைய அவர் எனக்கு உதவுவார் என்று நான் உறுதியாக நம்புகிறேன். இந்த ஆத்மார்த்த நம்பிக்கையுடன், அக்டோபர் 16ஆம் தேதி முதல் இந்த மனோநாசச் செயலில் நான் ஆழமாக மூழ்குவேன்.

பிப்ரவரி 12ஆம் தேதிக்குள் இந்த விரும்பிய முடிவை அடைய எனக்கு உதவுமாறு நான் தாழ்மையான மனதுடன் கடவுளிடம் கேட்டுக்கொள்கிறேன்.

எனது உடலைத் துறக்க வேண்டியதாக இருந்தால், நான் எடுத்துரைத்து, தட்டச்சு செய்யப்பட்ட வழிமுறைகளை 'ஏற்பாடு' குழு உறுப்பினர்கள் செயல்படுத்த வேண்டும், மேலும் விஷ்ணு அது தொடர்பான எனது வழிமுறைகளை நிறைவேற்றுவார்.

அக்டோபர் 16 முதல் பிப்ரவரி 12 வரை நான் ஹைதராபாத்திற்கு வெளியே இருப்பேன். இப்போது என்னுடன் இருக்கும் பெண்மணிகள் நான் இல்லாத நேரத்தில் ஹைதராபாத்தில் தங்குவார்கள். பெண்மணிகள் தொடர்பான பணி - ஜூலை 1 முதல் பிப்ரவரி 12 வரை - அனைத்தும் விஷ்ணுவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் காலகட்டத்தில், அக்டோபர் 16 முதல் பிப்ரவரி 12 வரை, நான் எல்லா விதமான இடையூறுகளிலிருந்தும் முற்றிலும் விடுபட்டு, எந்த விதமான சுமையும் இல்லாமல் வாழ்வதற்கும், சாவதற்குமான சுதந்திரத்துடன் இருக்க விரும்புகிறேன். சாவதற்கான இந்தச் செயல்முறையில் என்னுடன் செல்ல விரும்பும் எவரும் என்னோடு வந்து இணையலாம்; ஆனால் நீங்கள் ஒவ்வொருவரும் அத்தகைய முடிவை எடுக்கத் தேவையான உங்கள் மன ஆயத்தத்தின் அளவை முழுமையாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். 1949ஆம் வருடம், புது வாழ்வின் தொடக்கத்தில் எதிர்கொண்ட சிரமங்களை நீங்கள் மனதில் கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன் - உங்கள் வழியில் உள்ள தடைகள் மற்றும் என்னில் இருந்த தடைகள் - அதை மீண்டும் செய்ய நான் விரும்பவில்லை. உங்கள் தரப்பிலிருந்து உணர்ச்சியின் தூண்டுதலால் நீங்கள் என்னுடன் செல்ல முடிவு செய்தால், அது பேரழிவை விளைவிக்கும். நீங்கள் என்னுடன் வருவதானால், சொல்லொண்ணா சிரமங்களையும், நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்கு தாங்கொணா கஷ்டங்களையும் சந்திக்க நேரிடும். பசி, பட்டினி, தூக்கமின்மை, நோய், இயலாமை, முழுமையான நம்பிக்கையின்மை மற்றும் உதவியற்ற நிலை ஆகியவை இதில் அடங்கும். இது, நான்கு மாதங்களில் 400 இறப்புகளை சந்திக்க நேரிடுவது போலாகும்! எனக்கு எந்தப் பொறுப்பும், என்னுடன் வரும் எவரைப் பற்றியும் எந்தக் கவலையும் இருக்காது.

என்னுடன் இருக்கும் சேவக தோழர்கள் கீழ்வரும் இரண்டு விஷயங்களில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கும்படி நான் அறிவுறுத்த விரும்புகிறேன்: இந்த நம்பிக்கையற்ற பணியில் என்னோடு இணைந்து கொள்வது அல்லது ஹைதராபாத்தில் தங்கி நான் அவர்களுக்கு வழங்கும் கடமையைச் செய்வது. இரண்டாவது தேர்வில், அவர்களுக்கு நான்கு மாதங்களுக்கு உணவு, உடை, கைச்செலவுக்குப் பணம் ஆகியவை நன்கு வழங்கப்படும். 'ஏற்பாடு' குழு தோழர்கள் எவரும் என்னுடன் இணைய

முன்வரக்கூடாது, ஏனெனில் அவர்கள் தத்தமது பொறுப்புகளை இறுதி வரை செய்ய வேண்டும். என்னுடைய பழைய சீடர்கள் எவரேனும் என்னுடன் இணையலாம். கடவுளின் அருளால், பிப்ரவரி 12ஆம் தேதிக்குள் நான் எனது இலக்கை அடைந்தால், அவரவர் நிலைக்கேற்ப, ஆன்மீகம் மற்றும் பொருள் சார்ந்த - அல்லது ஆன்மீகம் மட்டும் - எனது சேவக தோழர்களுக்கும், பழைய சீடர்களுக்கும் பக்தர்களுக்கும் உரித்தாகும்.

மேலும், அக்டோபர் 16 அன்று, நான் இந்த 'நடவடிக்கை'யை எடுப்பதற்கு முன்னர், எல்லா வகையான சுமையிலிருந்தும் விடுபட, எனது பழைய வாழ்க்கை சீடர்களில் சிலருக்குப் பொருள் ரீதியாக உதவவும் அவர்களில் சிலருக்கு சில விஷயங்களை சீரமைக்கவும் முயற்சிக்க விரும்புகிறேன். ஜூலை 1 முதல் பிப்ரவரி 12 வரை, அனைவருக்கும், சிலருக்கு அல்லது எவருக்கும் என்னை எளிதில் காணவும், பேசவும், சந்திக்கவும் வாய்ப்பு கிடைக்காமல் போகலாம்.

நான் வெகுஜனங்களை சந்திக்கும் சந்தர்ப்பங்களும் எழலாம். இவற்றை எல்லாம் நான் விரும்பும் வேளையில் முடிவு செய்ய நான் சுதந்திரமாக இருப்பேன்.

உங்களில் ஒருவர் மட்டுமே என்னுடன் வந்தாலும், நான் மிகவும் மகிழ்ச்சியும், திருப்தியும் அடைவேன்; அதே நேரத்தில் பலர் என்னுடன் வர முடிவு செய்தாலும், நான் கவலைப்பட மாட்டேன். ஆனால் என்னுடன் வருபவர்கள் எல்லாவற்றிலும் எதையும் தாங்கிக் கொள்ளத் தயாராகவும், எல்லா சூழ்நிலைகளிலும், என்னுடைய ஒவ்வொரு கட்டளைக்கும் முற்றிலுமாகக் கீழ்ப்படிந்து, எந்த விதமான வெகுமதியையும், ஆன்மீகத்தையும், பொருளையும் எதிர்பாராமல் இருக்க வேண்டும். அவர்கள் என்னிடமிருந்து எந்த விதமான உதவியையும் எதிர்பார்க்கக்கூடாது, மாறாக எனக்கு உதவ வேண்டும்.

மேலும், என்னுடன் வர முன்வருபவர்களில், என்னுடன் யார் வர வேண்டும், யார் இங்குத் தங்க வேண்டும் என்பதை நான் இறுதியாக முடிவு செய்வேன்.

இந்தப் பேரழிவு காலகட்டத்தில் (அக்டோபர் 16 முதல் பிப்ரவரி 12 வரை), எனது செயல்களும் வாழ்க்கை முறைகளும் எந்தவிதமான கட்டுப்பாட்டிற்கு உள்ளடங்கிய நிலையில் இல்லாமல் இருக்கும். நான் இடம் விட்டு இடம் சென்று எங்கேனும் அலைந்து திரியலாம் அல்லது ஒரே இடத்தில் குடியேறலாம் - எப்போது, எங்கு என்பதை ஜூலை மற்றும் அக்டோபர் மாதங்களுக்குள் நான் முடிவு செய்வேன். நான் எதையும் யாசிக்கலாம், எதையும் கோரலாம், எதையும் ஏற்கலாம் அல்லது எதையும் நிராகரிக்கலாம்; அல்லது ஒருவேளை நான் இவற்றில் எதையும்

செய்யாமலும் இருக்கலாம். இந்தப் பேரழிவுக்கான கடவுளின் விருப்பத்தின் அடிப்படையில், சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு இணங்க, நான் சாதாரணமான அல்லது அசாதாரணமான, நல்லது அல்லது தீயது எதையும் செய்வேன்.

பாபா அப்போது கூட்டத்திலிருந்த அனைவருடன் அவரும் எழுந்து நின்றார். இந்தப் பிரகடனத்தை டாக்டர் டான் ஆங்கிலத்திலும், டாக்டர் கனி உருது மொழியிலும், டாக்டர் தேஷ்முக் மராட்டியிலும் மொழிந்தபோது, பாபா, பிரார்த்தனை செய்வது போல் கூப்பிய கரங்களுடன் நின்றுகொண்டிருந்தார்:

கடவுளின் முன்னிலையில், எல்லா காலங்களிலும் பரிபூரண நிலையை எய்திய குருநாதர்கள் அனைவரையும் சாட்சிகளாக என் இதயத்தில் தாங்கிக்கொண்டு, கடவுளின் உதவியாலும், விருப்பத்தாலும், இந்த ஆண்டு அக்டோபர் 16ஆம் நாள் இந்த நிர்மூலமாக்கும் 'நடவடிக்கை'யை நான் நிச்சயமாக எடுப்பேன் என்று உறுதியளிக்கிறேன்.

100 நாட்களின் ஏகாந்தவாச பணியை எனது முழு திருப்தியுடன் செய்ய கடவுள் எனக்கு உதவினார், மேலும் 1952 பிப்ரவரி 16ஆம் தேதிக்குள் பழைய வாழ்க்கை மெஹர் பாபா நிலையை அடையவும், உலகளவில் வெளிப்படவும் கடவுள் எனக்கு உதவுவார் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

பாபா, இவ்வாறு கூறி முடித்தார்: **"இந்தப் பிரகடனத்திற்குச் சாட்சியாக இங்கு இருக்கும் நீங்கள் ஒவ்வொருவரும், அக்டோபர் 16ஆம் தேதி அன்று காலை எட்டு மணி முதல் 24 மணி நேரம் தேநீர் மற்றும் தண்ணீர் அருந்தி உபவாசம் மேற்கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன்."**

அனைவரும் ஓய்வெடுக்கவும், கால்களை நீட்டி களைப்பாறவும் பதினைந்து நிமிட இடைவெளி வழங்கப்பட்டது. அனைவரும் மண்டபத்திற்குத் திரும்பி வந்ததும், பாபா 'மனோநாஷ்' (MANONASH, மனதை நிர்மூலமாக்குதல்) பற்றி ஒரு சொற்பொழிவு வழங்கினார், அது அடுத்தநாளும் தொடர்ந்தது. பல விளக்கங்களை அளித்த பின்னர், இது, மதிய உணவுக்கான நேரம் என்று சுட்டிக்காட்டி நிறுத்தினார். பாபா, இவ்வாறு குறிப்பிட்டார், **"உண்மை என்னவெனில், நல்லது அல்லது தீயது எதுவாயினும், நான் நிச்சயமாக கடவுளால் தீர்மானிக்கப்பட்ட இந்த 'நடவடிக்கை'யை எடுக்கப் போகிறேன்."**

ஒரு குறுகிய இடைவேளைக்குப் பின்னர், அவர் மேலும் கூறினார், **"இந்த 'நடவடிக்கை' மிகவும் சிறப்பாக இருக்கும், ஏனெனில் இன்று அதிகாலை 3:30 மணிக்கு, நான் பழைய வாழ்க்கையின் மெஹர் பாபாவின் நிலையை மீண்டும் அடையப் போகிறேன் என்று கடவுள் எனக்கு வெளிப்படுத்தினார். 99 சதவீதம் நான் உடலைக் கைவிடுவது சாத்தியம், ஆனால் எனது தீர்மானத்தில் வெற்றியை அடைவதற்கான ஒரு சதவீத வாய்ப்பும் உள்ளது, நிச்சயமாக 100 சதவீத முடிவை நான் நம்புகிறேன்!"**

பாபா மேலும் கூறி முடித்தார்: **"இன்று மதியம் நாம் மீண்டும் சந்திக்கும் போது, என்னுடன் வர விரும்புவோர் அனைவரும் முடிவு செய்யலாம். ஆனால் உங்கள் முடிவுகளைக் கேட்ட பின்னர், என்னுடன் யார் வருவார்கள், யார் வரக்கூடாது என்பதை நானே முடிவு செய்வேன். 'ஏற்பாடு' குழு தோழர்கள் என்னுடன் செல்ல முன்வரக்கூடாது, ஏனெனில் அவர்கள் இறுதிவரை ஏற்பாடுகளை கவனிக்க வேண்டும்."**

அதற்குப் பிறகு, தனக்கு முன்னால் நின்றுகொண்டிருந்த துயரார்ந்த முகங்களில் வேகமாகப் பார்வையைச் சுழற்றி, பாபா கேலி செய்தார், **"கடவுளின் நிமித்தம், நான் உங்கள் அனைவரையும் வேண்டாம் எனச் சொல்வேன் என்று எண்ணி நீங்கள் அனைவரும் என்னுடன் வர முடிவு செய்கிறீர்கள், அப்படித்தானே!"** அனைவரும் நன்றாக வாய்விட்டுச் சிரித்து, மதிய உணவுக்காகக் கலைந்து சென்றனர்.

மதிய உணவுக்குப் பின்னர், அனைவரும் தங்கள் தனிப்பட்ட முடிவுகளை எடுத்துரைக்க மீண்டும் கூடினர். பாபா எச்சரித்தார்: **"இந்த நான்கு மாத காலம் என்னைச் சார்ந்தது, என்னுடன் வருவதற்காகத் தங்களை முன்வைக்க விரும்புவபர்கள், என்னுடன் இத்தனை மாதங்கள் செல்வதா? அல்லது என்னுடன் சுற்றுப்பயணத்தில் செல்வதா? என்ற கேள்விகளைக் கருத்தில் கொள்ளக்கூடாது."**

கூட்டத்தில் இருந்த 70க்கும் மேற்பட்ட ஆண்களில் 21 பேர் மட்டுமே பாபாவுடன் செல்ல முன்வந்தனர். பாபா அவர்களின் குடும்ப விஷயங்கள், வீட்டு விவகாரங்கள் மற்றும் பலவற்றைப் பற்றிக் கேட்டறிந்து, கிட்டத்தட்ட இரண்டு மணிநேரம் அதைப் பற்றி விவாதித்தார். டாக்டர் நீலு உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால் பாபாவுடன் செல்ல முடியவில்லை; டாக்டர் டான் ஹைதராபாத்தில் இருக்க விரும்பினார்; காக்கா இன்னும் இதய நோயால் பாதிக்கப்பட்டு பின்வாங்கினார்; இவர்களைத் தவிர, பாபா, விஷ்ணுவிடம் பெண்மணிகளை கவனித்துக் கொள்வதற்காக ஹைதராபாத்தில் இருக்குமாறு அறிவுறுத்தினார்.

பாபா, அன்பர்களின் முடிவை இவ்வாறு பார்த்தார்:

என்னுடன் இணைய முன்வந்துள்ள நீங்கள் ஒவ்வொருவரும், அதைத் தீவிரமாகக் குறிப்பிடுவது உண்மைதான், மேலும் நீங்கள் என்னுடன் செல்ல முடிவு செய்துள்ளீர்கள் என்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். உங்கள் ஒவ்வொருவரையும் பற்றிய எனது சொந்த முடிவில், அந்த முடிவு எதுவாக இருந்தாலும், அனைவரும் ஒரே நிகரான மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

இந்த விஷயம் எனக்கு எவ்வளவு தீவிரமானது என்பதை கடவுள் அறிவார், மேலும் கடவுளால் தீர்மானிக்கப்பட்ட இந்த 'நடவடிக்கை'யை நிறைவேற்றுவதில் எனக்கு எந்தத் தடையும் இருக்கக்கூடாது.

நேற்றிரவு, நானே தனியாகப் புறப்படுவது சிறந்தது என்று கூட உணர்ந்தேன். எனது மௌனம், உடல்நலம் குன்றிய நிலை போன்ற அனைத்து வரம்புகளையும் நான் நினைவு கூர்ந்தேன்; இது, நானே என்னை முட்டாளாக்கக் கூடாது, நான் தனியாகச் செல்வது உண்மையில் சாத்தியமில்லை என்றும் ஒப்புக்கொள்ளும்படி கட்டாயப்படுத்தியது. எனவே உங்கள் விருப்பங்களை நான் மிகவும் கவனமாகப் பரிசீலிக்க வேண்டும், மேலும் எனது முடிவை, பின்னர் உங்களுக்குத் தெரிவிப்பேன்.

மறுநாள் காலை, 1951 ஜூன் 29 வெள்ளிக்கிழமை, பாபா 'மனோநாஷ்' (MANONASH, மனதை நிர்மூலமாக்குதல்) பற்றிய சொற்பொழிவை நிறைவு செய்தார், அதன் ஒரு பகுதி இங்கே மீண்டும் வழங்கப்பட்டுள்ளது:

நீங்கள் 'மனோநாஷ்' என்றால் என்ன என்பதைப் புரிந்து கொண்டால், 1952 பிப்ரவரி மாதத்தில், நான் உயிருடன் இல்லாவிடிலும், நீங்கள் அதனால் பலனடைவீர்கள்.

இடையிடையே கேள்விகள் கேட்காதீர்கள், ஏனெனில் நான் அதை ஒரு சாதாரண தத்துவஞானியாக விளக்குகிறேன். நீங்கள் கேள்விகளைக் கேட்டால், குருநாதர் ஒருவர் சீடர்களுக்கு விளக்குவது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தும் வகையில் நான் விஷயத்தை விளக்க வேண்டும். எனவே, இதன் முக்கியத்துவத்தை கவனமாகவும் அமைதியாகவும் புரிந்து கொள்ளுங்கள்.

'மனம்' ஒருபோதும் மாறுவதில்லை. "உண்மையான 'நான் கடவுள்' எனும் உறுதிப்பாடு" ஒரு முறை மட்டுமே மாற்றத்தை சந்திக்கும். இந்த மாற்றத்தின் தன்மையைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

இன்று நீங்கள் ஒரு மனிதன் என்று உணர்கிறீர்கள். நாளை நீங்கள் இறக்கும் தருவாயில், உங்கள் மனப்படிவங்கள், நீங்கள் ஒரு பெண் என்ற உணர்வைத் தருகின்றன. இது அனைத்தும் பொய். மனதின் மனோபாவம், சூழ்நிலைக்கு ஏற்ப மாறுகிறது, ஆனால் மனம் மேலே சென்றாலும் அல்லது கீழே சென்றாலும் மனம், மனமாகவே இருக்கும். மனம் மகிழ்ச்சியாக இருக்கலாம், துன்பமாகவும் இருக்கலாம். மனதின் அணுகுமுறையே இவ்வாறு மாறுவதற்கான காரணம். மனம் உலகங்களை உருவாக்குகிறது, மாயைகள், மாயத்தோற்றங்கள் போன்ற முடிவிலா அனைத்தையும் உருவாக்குகிறது - ஆனால் மனம் எப்போதும் மனமாகவே உள்ளது.

மனம் மாற்றமடையாது ஏன்? ஏனெனில் அது ஒருமைத் தன்மை உள்ளதல்ல. மனம் ஆசைகள் மற்றும் எண்ணங்களால் வாழ்கிறது, மேலும் அது மனப்படிவங்களால் ஆனது.

'உண்மையான உறுதிப்பாடு' ஒருமைத் தன்மையுள்ள இறைவனுக்கே உரித்தானது; இந்த "உண்மையான 'நான் கடவுள்' எனும் உறுதிப்பாடு" அதாவது "உண்மையான நான்" இப்போது மனதால் பிணைக்கப்பட்டுள்ளது.

தவறான எண்ணங்களால் ஆன இந்த மனம் 'உண்மையான நான்' எனும் நிஜமானதையே பொய்யாக்குகிறது. பிறப்பு, இறப்பு, இன்பம், துன்பம் போன்ற அனைத்தையும் உண்மையான விஷயங்கள் என மனம் நினைக்க வைக்கிறது, ஆனால் இதைவிடப் பொய்யாக எதுவும் இருக்க முடியாது. நீங்கள் இப்போது இங்கே இருக்கிறீர்கள், உடலில், உங்கள் புலன்களில் உணர்வுடன் உயிரோடு இருக்கிறீர்கள், ஏன்? ஏனெனில் நீங்கள் எப்போதும் இருந்தீர்கள்.

நீங்கள் எப்படிப் பிறந்தீர்கள், உங்கள் பிறப்பு எப்படி நிகழ்ந்தது என்பது பற்றி உங்களுக்கு ஏதேனும் அபிப்ராயம் இருக்கிறதா? இல்லை, ஏனெனில் நீங்கள் பிறக்கவே இல்லை! நீங்கள் இங்கே, அங்கே, மற்றும் பலவற்றில் இருக்கிறீர்கள் என்ற உணர்வை மனம் உங்களுக்குத் தருகிறது. 'அவர் என் மனைவி' அல்லது 'அவர் என் கணவர்' போன்ற பலவற்றைக் சொல்லும் உணர்வை மனமே உங்களுக்குத் தருகிறது.

மனம் எப்பொழுதும் உங்களை நடனமாடி நளினத்தில் துள்ள வைக்கிறது! உங்கள் மனைவி, குழந்தைகள் மற்றும் பலர் எல்லோரும் ஒன்று, நீங்கள் ஒருபோதும் இறப்பதில்லை, ஒருபோதும் துன்பப்படுவதில்லை என்பதை நீங்கள் அறிந்திருந்தால், நீங்கள் எல்லாவற்றிலும் எல்லாமாக இருக்கிறீர்கள். ஆனால் உங்களைத் தடுமாறச் செய்ய உங்கள் மனம் இருக்கிறது! மனம் சொல்கிறது: "ஜாக்கிரதை, அவள் உங்கள் மனைவி; அவர்கள் உங்கள் குழந்தைகள்; இவை அனைத்தும் உங்களுடையவை," என்றெல்லாம் முடிவில்லாமல் தூண்டிக் கொண்டிருக்கும். மனம் இத்தகைய மனப்படிவங்களை உருவாக்குகிறது.

எனவே, தவறான எண்ணங்களாலான மனம், 'உண்மைப்பொருளான நான்' நிஜமாக நினைப்பதையே பொய்யாக்குகிறது. நான் உடல், நான் இளைஞன், வயதானவன், நான் ஒரு ஆண், பெண், நான் இது அல்லது அது - இவை அனைத்தும் மனத்தால் உருவாக்கப்பட்ட பதிவுகள். "நான் கடவுள்" எனும் உணர்வை அது ஒருபோதும் ஏற்படுத்தாது. மனம் உங்களை "நான் கடவுள்" என்று சொல்ல வைக்கலாம், ஆனால் "நான் கடவுள்" என்று உணர வைக்க முடியாது.

மனம் இருக்கும் வரை, தனிமனிதனின் தவறான அணுகுமுறையிலிருந்து அதன் உண்மையான நிலைக்கு மாற்ற முடியாது. மனம், நீங்கள் எல்லையற்றவர், எல்லாம் வல்லவர், மற்றும் பலவற்றைச் சொல்ல வைக்கிறது, ஆனால் உங்களை அவ்வாறாக உணர வைப்பதில்லை. ஏன்? ஏனெனில், தவறான எண்ணங்களாலான மனம், 'நான்' என்பதை சிறியதாக, வரையறுக்கப்பட்ட 'நான்' என உணர வைக்கிறது.

இப்போது என்ன நடந்திருக்கிறது? தவறான, "'நான்' எனும் தனிமனித நிலைப்பாடு" (ஆணவம்) உண்மையான, அசல் நிலையை அடைய வேண்டுமானால், மனம் மறைந்தாக வேண்டும். மனம் இருக்கும் வரை, அதன் கண்ணோட்டம் மாறினாலும், உண்மையான "நான்-கடவுள்" நிலையை அனுபவிக்க முடியாது. ஆழ்ந்த தூக்கத்தில், மனம் தற்காலிகமாகத் தொலைந்து (மறைந்து) விடுகிறது. அந்த நிலைப்பாடு மனதிலே உள்ளது, மேலும் மனப்படிவங்கள் மீண்டும் மனதைத் தட்டி எழுப்புகிறது, மனம் மீண்டும் நிலைப்பாட்டைத் தவறானதாக உணர வைக்கிறது. அதனால், எண்ணற்ற உயிர்களிலும், வடிவங்களிலும், நிலைப்பாடு அப்படியே இருக்கிறது.

மனம் இருக்கும் அதே வேளையில் மனப்படிவங்கள் மாறுகின்றன, அதன்படி, உடல் மாறுகிறது - மேலும் அதற்கேற்ப, அனுபவமும் மாறுகிறது. எனவே, பொய்யான நான் 'உண்மையான நான்' ஆக, அதாவது 'நான் கடவுள்' என்ற நிலையை அடைய, மனம் மறைந்தாக வேண்டும்.

வாழ்க்கையின் உண்மையான குறிக்கோள் தனிமனித நிலைப்பாட்டின் மரணம் அல்ல, மனதின் மரணம்! எனவே முஹமது அல்லது ஸொராஸ்டர் அல்லது இயேசு ஒருமுறை மட்டுமே பிறப்பதாக அல்லது ஒருமுறை மட்டுமே இறப்பதாகக் கூறுவது, அவர்கள் மனதின் மரணத்தைக் குறிக்கின்றனர். 'கல்' நிலைக்கு முன்பே, மனம் ஆரம்பத்திலிருந்தே பிறந்து விடுகிறது. இந்தப் பிறப்பு ஒரு முறை நிகழ்வதுபோல மனதின் மரணம் ஒரு முறை மட்டுமே நிகழ்கிறது.

மனம் இறக்கும் போது (மறையும் போது) தவறான நிலைப்பாடு நிஜமாக மாறுகிறது, அதாவது, 'உண்மையான உறுதிப்பாடாக' ('நான் கடவுளாக') மாறுகிறது. 'உண்மையான உறுதிப்பாடு' பிறப்பதும் இல்லை, இறப்பதும் இல்லை. உறுதிப்பாடு எப்போதும் உண்மையானது ஆனால் மனதின் காரணமாக, அது வரையறுக்கப்பட்ட மற்றும் தவறான, தனி மனித 'நான்' என உணர்கிறது, செயல்படுகிறது.

இப்போது மனம் அதன் நல்ல மற்றும் தீய மனப்படிவங்களுக்கு ஏற்ப வேறு வேறு உடலை எடுக்கிறது. இந்த உடலை எடுத்துக்கொள்வதும் விட்டுவிடுவதும் மனம் அல்லது அதன் நிலைப்பாட்டின் மரணம் அல்ல. உடல் இறந்த பிறகும் மனம் அதன் மனப்படிவங்களுடன் இருக்கும். மனப்படிவங்கள் அகற்றப்பட வேண்டும் என்பதற்காக, மனம், உடல்களை எடுக்க வைக்கிறது. இதன் விளைவாக, மனமானது மனப்படிவங்களுக்கு ஏற்ப வேறு வேறு உடல்களை எடுக்கிறது, மேலும் தனிமனித நிலைப்பாடு இதற்கு சாட்சியாக இருக்கிறது. ஓர் உடல் மறையும் போது, மற்றும் ஓர் உடல் உருவாகிறது.

இந்த (மாயாஜால வித்தை) மனப்படிவங்கள் நம்மை மிகவும் இறுக்கமாகப் பிணைத்துள்ளன, நாம் எவ்வளவு அதிகமாக வெளியே வர முயற்சிக்கிறோமோ, அவ்வளவு அதிகமாக நாம் பிணைக்கப்படுகிறோம். ஏனெனில் மனதை அதன் வேரிலிருந்து அழிக்க வேண்டும், அதை அழிப்பது யார்? மனம் தன்னைத்தானே அழித்துக்கொள்ள வேண்டும். அது முடியாத காரியம். தன்னைத்தானே அழித்துக் கொள்ளும் செயல்முறையே அதை அழிக்க முயல்வது போன்ற தோற்றங்களை உருவாக்குகிறது, அதனால் ஒருவன் மேலும் மேலும் பிணைக்கப்படுகிறான்.

ஹ்ஃபீஸ் கூறியது போல:

நீயே உனது முகத்திரை, ஓ ஹ்ஃபீஸ்!

அதனால் உன்னை நீயே அகற்றிவிடு!

இப்போது, உங்களை நீங்களே எப்படி அகற்றுவது? இப்படி அகற்றும் செயல்முறையே புதிய மனப்படிவங்களை உருவாக்குகிறது.

ஆயிரக்கணக்கானோர் மனதை அழிக்க நினைத்துள்ளனர் - முக்கிய முறைகள் செயல், தியானம், ஞானம் மற்றும் இறை அன்பு. உணர்வைத் தக்க வைத்து, மனதை அழிக்கும் நோக்கத்திற்காக இந்த வழிகள் குருநாதர்களால் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

இப்போது, மனோநாஷின் இந்த இலக்கை குறிக்கும் செயலின் பாதையைக் (கர்ம யோகா) கருத்தில் கொள்ளுங்கள்; இது பொய்யான 'நான் எனும் நிலைப்பாட்டை' உண்மையான 'நான் கடவுள் எனும் உறுதிப்பாடாக' மாற்றுகிறது, (ஏனெனில் மனதின் முக்கிய செயல்பாடு உடலின் மூலமாக செயல்களாக வெளிப்படுகிறது). பொய்யான நிலைப்பாட்டையும் எண்ணங்கள் நிறைந்த மனதையும் பின்னணியாகக் கொண்ட செயல்கள், மனதை அழிப்பதற்கு பதிலாக, அதற்கு உணவளித்து ஊட்டமளிக்கின்றன என்பதைக் குருநாதர்கள் கண்டுகொண்டனர்.

ஒவ்வொருவரும் செயல்களைச் செய்ய வேண்டும் என்பதை அவர்கள் கண்டனர். சோம்பேறிகள் கூட உண்பது, அருந்துவது, உறங்குவது போன்ற செயல்களைச் செய்ய வேண்டும். எனவே, குருநாதர்கள் 'செயலற்ற செயல்களை' உபாயமாக நினைக்கத் தொடங்கினர். அதாவது செயல்களில் ஈடுபட வேண்டும், ஆனால் எந்தச் செயலையும் செய்யாதது போல விளைவு ஏற்படும் வகையில் செய்ய வேண்டும். இதைச் செய்தால், செயல்களின் கடந்தகால மனப்படிவங்கள் மகிழ்ச்சி அல்லது துன்பத்தின் அனுபவங்களால் மனரீதியாகச் செலவழிக்கப்படும், ஆனால் புதிய மனப்படிவங்கள் எதுவும் உருவாக்கப்படாது.

சுயநல சிந்தனை இல்லாமல் ஒருவருக்கு உதவி செய்யும் செயலில் நீங்கள் ஈடுபடுகிறீர்கள், அல்லது சுயநலம் இல்லாமல் ஒரு பெண்ணைப்

பாதுகாக்க முயற்சி செய்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம், அவ்வாறு செய்யும் போது, உங்களைத் தாக்கி, காவல்துறை உங்களைக் கைது செய்கிறது. நீங்கள் சிறையில் அடைக்கப்படுகிறீர்கள். இந்த நிகழ்வுகள் உங்கள் பழைய மனப்படிவங்களில் சிலவற்றைச் விரயமாக்குகின்றன, ஆனால், அதேவேளையில் உங்களுக்கு சுயநலம் இல்லாததால், புதிய மனப்படிவங்கள் உருவாகவில்லை. எவ்வாறாயினும், இந்தச் செயல்முறை மிகவும் நீண்டதும் நெடியதும் மட்டுமின்றி சிக்கலானது, பல யுகங்களுக்குப் பிறகுதான் மனோநாஷை ஒருவர் அடைய முடியும்.

எனவே குருநாதர்கள், செயல்களை முறியடிக்க, செயல்களையே விரும்பினர்; அதாவது, அதன் விளைவு வலிமையற்றதாக அல்லது எந்த விதமான பிணைப்புக்கும் வழிவகுக்கும் விளைவை உருவாக்காத வகையில் செய்யப்படும் செயல்கள். உதாரணமாக, இயற்கையால் ஒரு தேள் அதன் வாலை அசைத்து அருகில் வருபவர்களைக் கொட்டுகிறது. இப்போது, தேளின் ஆபத்தான கொடுக்கு உடைக்கப்படுகிறது என்று வைத்துக் கொள்வோம். தேள் தனது வாலை அசைத்துக் கொண்டே பழையபடி நடந்து செல்கிறது. ஆனால் அதன் அபாயகரமான கொடுக்கு இல்லாததால் செயலிழந்து கொட்ட முடியாமல் ஆகிறது; அதாவது, செயல்களின் மோசமான விளைவு அகற்றப்படுகிறது. செயல்கள், பிணைப்பு இல்லாமல் இருக்க வேண்டும் என்றால், பிணைப்புக்கு வழிவகுக்கும் காரணி அகற்றப்பட வேண்டும்.

உலகமும் அதன் செயல்பாடுகளும் உண்மையில் பயனற்றவை. செயல்கள் நல்லதாக இருந்தாலும் சரி, தீயதாக இருந்தாலும் சரி, அவை தொடர்ந்துகொண்டே இருக்கின்றன, எனவே குருநாதர்கள் இவ்வாறு கூறினர்: "செயல்கள் உங்களை பிணைக்காத வகையில், மனப்படிவங்கள் உருவாக்கப்படாத வகையில் செயல்படுங்கள்." இது கிட்டத்தட்ட சாத்தியமற்ற பணியாகும், இது குறித்து நான் உங்களுக்கு விளக்குவேன். மனப்படிவங்கள் மற்றும் அதன் விளைவாக பிணைப்புகளை உருவாக்காமல் செயல்களில் ஈடுபட மூன்று வழிகள் உள்ளன:

<u>முதல் வழி</u>: ஒன்றைச் செய்யும் வேளையில், நீங்கள் அதைச் செய்கிறீர்கள் என்ற எண்ணம் முற்றிலும் இருக்கக்கூடாது. இது ஒரு தொடர்ச்சியான செயலாக இருக்க வேண்டும். அதாவது ஆணவம் அதன் செல்வாக்கைச் செலுத்த மனதிற்கு ஒரு கணம் கூட கொடுப்பதில்லை. உண்மையில், நீங்கள் பிறருக்காகச் செயல்படுகிறீர்கள், உங்களுக்காக அல்ல. தன்னலமற்ற சேவை என அழைக்கப்படும் இந்தச் செயல், கிட்டத்தட்ட சாத்தியமற்றது, ஏனெனில் 'நான் பிறருக்கு சேவை செய்கிறேன், நான் உதவ வேண்டும், ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகச் செய்ய வேண்டும்" என்று நீங்கள் நினைக்கும் அந்தத் தருணத்தில் நீங்கள் மாட்டிக்கொள்கிறீர்கள்.

மேலும் தலைவர்களைப் பொறுத்தவரை, தங்களைப் பற்றிய இந்த எண்ணம் 100 சதவிகிதம் தொடர்ந்து கைவிடப்படாவிட்டால், இது மிகவும் ஆபத்தானது.

இந்தக் கருத்தை மேலும் விளக்கலாம். ஒரு தலைவர் சிறந்த நோக்கத்துடன், சுயநலமின்றி, சில காரணங்களுக்காக எல்லாவற்றையும் தியாகம் செய்யும்படி பிறரைக் கேட்டுக் கொள்ளும் வேளையில், தன்னைப் பற்றிய எந்த எண்ணமும் இல்லாமல், 100 சதவிகிதம் தொடர்ந்து அதைச் செய்யத் தவறினால், அதன் விளைவு பேரழிவைத் தரும். முழுக் குழுவின் அனைத்து மனப்படிவங்களும் அவர் மீது விழும், மேலும் அவரைப் பின்பற்றுபவர்கள் கூட, சிறந்த நோக்கத்துடன் செயல்பட்டிருந்தாலும், இந்த மனப்படிவங்களில் சிக்கிக் கொள்கிறார்கள். குரு, சீடர் இரு தரப்பிலும் தன்னைப் பற்றிய எண்ணம் இருந்தால் இதே போன்ற பேரழிவு ஏற்படும். பிறர் மீது பரிதாபப்படுவது கூட ஆகாது. சுருக்கமாகச் சொன்னால், விளைவை உண்டுபண்ணாத செயலாக இருக்க வேண்டுமாயின், அது சுயநலம் இல்லாமல் செய்யப்பட வேண்டும், இது கிட்டத்தட்ட சாத்தியமற்றது.

<u>இரண்டாவது வழி</u> என்னவெனில், நீங்கள் எதைச் செய்தாலும், நல்லது, தீயது எதுவானாலும் அதை கடவுளுக்கோ அல்லது உங்கள் குருநாதருக்கோ அர்ப்பணிக்க வேண்டும். இதுவும் கிட்டத்தட்ட சாத்தியமற்றது, ஏனெனில் அர்ப்பணிப்பு என்பது ஒரு கண நேர இடைவெளி கூட இல்லாமல் தொடர்ந்து செய்யப்படுவது. நீங்கள் அவ்வாறு செய்ய முடிந்தால், மனப்படிவங்கள் அந்தச் செயல்களால் உருவாக்கப்படுவதில்லை. ஆனால், ஒருமுறை கூட இடைவெளி ஏற்படுவதானால், அதன் எதிர்வினை பேரழிவைத் தரும், மேலும் அனைத்து மனப்படிவங்களும் உங்கள் மீது குவிந்துவிடும்.

<u>மூன்றாவது வழி</u>: மனப்படிவங்களை முற்றிலும் அகற்றி, மனதை இழந்து, இறைநிலையை அடைந்த ஒருவர் கூறுவதற்கிணங்க நீங்கள் அனைத்தையும் செவ்வனே செய்வதானால், அத்தகைய செயல்கள் உங்களை ஒருபோதும் பிணைக்காது. இதுவும் மிகவும் கடினமானது. நீங்கள் குருநாதர் மீது 100 சதவீதம் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருக்க வேண்டும்; ஒரு கண நேர சந்தேகம் கூட ஆபத்தானது. கிருஷ்ணர், அவர் ஒவ்வோர் உயிரிலும், ஒவ்வொருவரிலும் இருக்கிறார், இப்போது எவரும் இறக்கவில்லை - அனைவரும் ஏற்கனவே இறந்துவிட்டார்கள் என்று அர்ஜுனனை நம்ப வைக்க வேண்டியதாயிற்று. அதற்குப் பின்னர், அர்ஜுனன் செய்ததை 'செயலற்ற செயல்' என்று கூறலாம்.

இந்த மூன்று வழிகளையும் அடைவது ஏறக்குறைய சாத்தியமற்றது. அப்படியானால் ஒருவர் எவ்வாறு செயல்பட வேண்டும்? உங்கள் மனைவி, குழந்தைகள், தொழில் போன்ற வெறும் உலக விஷயங்களில் ஈடுபடுவதும்,

செயல்படுவதும் இரும்புச் சங்கிலிகளால் பிணைக்கப்படுவது போலாகும். ஆனால், ஏற்கனவே குறிப்பிட்டது போல, சில சமயங்களில் பிறருக்கு உதவி செய்ய வேண்டும் அல்லது பிறரைப் பார்த்துப் பரிதாபப்பட வேண்டும் என்ற எண்ணங்கள் மனதில் தோன்றினாலும், சுயநலம் இல்லாமல் செய்யும் செயல்களால், பணிவடக்கமான, பலவீனமான மற்றும் தளர்வான மனப்படிவங்கள் உருவாக்கப்படுகின்றன. உடலின் மூலம் ஆணவத்தைப் பொய்யாக உணரச் செய்வதும், மனப்படிவங்களை அனுபவிக்கத் தூண்டுவதும் மனதின் பணி. ஆனால் பொய்யான ஆணவம் அதன் சர்வாதிகாரத்தை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்பதை மனம் பார்க்கும்போது, இந்த வகையான செயல்களால் உருவாகும் மனப்படிவங்கள் பலவீனமாக இருக்கும். எனவே இத்தகைய செயல்கள் இறுதியில் மனோநாஷை அடைவதற்கு உதவியாக இருக்கும்.

சில குருநாதர்கள் மனதின் மூலமாக - தியானம், ஒருமித்த கவனம் இவற்றின் வழியாக மனதை அழிக்கும் வழிகளைக் கண்டுபிடித்தனர். மனதை ஒருமுகப்படுத்தும் போது, அதனைத் தொடரும் செயல்பாடு பலவீனமடைகிறது, இதனால் மனப்படிவங்கள் தங்களைத் தாங்களே அழித்துக் கொள்கின்றன, ஏனெனில் மனப்படிவங்கள் புழுக்களைப் போன்றது, தங்களைத் தாங்களே அழிக்கின்றன. ஆனால் தியானம், ஒருமித்த கவனம் ஆகியவற்றின் இந்த செயல்முறை மனோநாஷை கிட்டத்தட்ட சாத்தியமற்றதாக்குகிறது, ஏனெனில் மனதிற்கு அதன் பதிவுகளை செயல்படுத்தும் பழக்கம் உள்ளது. மனம், காரியம் கைகூடாமல் போனதால் பொறுமையிழந்து, விரக்தியால், நம்பிக்கையை இழக்கிறது. நீங்கள் தியானத்தில் அமரும் தருணத்தில், சில நேரங்களில் இதுவரை நினைக்காத எண்ணங்கள் உங்கள் மனதில் தோன்றி, இறுதியில் பின்வரும் மூன்று விஷயங்களில் ஒன்று நிகழ்கிறது: முதலில்: நீங்கள் கவனம் செலுத்த முடியாததால் சோர்வடைகிறீர்கள்; அல்லது இரண்டாவது: உங்களுக்கு தூக்கம் அல்லது கனவு வரும்; அல்லது மூன்றாவது: உங்கள் மனதில் அதிக அளவிலான தீய எண்ணங்கள் நுழையும், இதனால் உங்கள் முயற்சிகளை நீங்கள் கைவிட வேண்டியதாகிறது. ஆனால் நீங்கள் தைரியமான இதயத்துடன், பொறுமையாக, விடாமுயற்சியுடன் இருந்தால், ஒரு சில சந்தர்ப்பங்களில், மனம் தற்காலிகமாக அமைதியாக இருக்கும்.

இப்போது, இது, இரண்டு விஷயங்களில் ஒன்றை விளைவிக்கிறது: ஒன்று, சமாதி நிலைக்குள் உங்களைத் தள்ளும்; நினைவில் கொள்ளுங்கள் இந்த சமாதி நிலை மனோநாஷ் அல்ல. சில சமயங்களில் சமாதி ஒரு தனித்திறன் படைத்த செயலாக மாறுகிறது; மற்றும் மயக்கநிலை ஒரு ஊக்கமருந்து போல பணிபுரிகிறது; அப்போது ஒருவன் அதற்கு

அடிமையாகிறான். ஒருவர், அவ்வாறு அனுபவிக்கும் மயக்கநிலை தற்காலிகமானது. சமாதி நிலைக்குள் நுழைந்து, சாதாரண சுயநினைவுக்கு வரும்போது, சமாதி நிலைக்குச் செல்லும் வேளையில் அவர்கள் கொண்டிருந்த அதே எண்ணம்தான் அவர்களின் முதல் எண்ணமாக இருக்கும். இவ்வாறு, சமாதி நிலைக்குள் நுழைவதற்கு முன்பு, பணத்தைப் பற்றி நினைத்திருந்தால், அதிலிருந்து வெளியே வரும்போதும் பணத்தைப் பற்றிய அதே எண்ணம் அவர்களுக்கு வரும்.

சில குருநாதர்கள், ஒருவர் தன்னை மறப்பதும், மனதிற்கு புதிய மனப்படிவங்கள் ஏற்பட வாய்ப்பளிக்காமல் தடுப்பதும் தான் சிறந்த வழி என்று நினைத்தனர். தன்னை எப்படி மறப்பது என்பதுதான் கேள்வி! பதில்: பக்தி (பக்தி யோகா) மூலம். ஒருவர் 100 சதவீதம் பக்தியுடன் அர்ப்பணம் செய்தால், தன்னை மறந்து விடுகிறார். ஆனால் இது நடைமுறையில் சாத்தியமற்றது, ஏனெனில் அத்தகைய பக்தியும், மறதியும் இடைவிடாமல் தொடர்ச்சியாக இருக்க வேண்டும்.

ஹஃபீஸ் கூறியது போல்:

அன்பானவர் உங்களுடன் இருப்பதை நீங்கள் விரும்பினால்,
அன்பானவரின் நினைவிலிருந்து நீங்கள் விலகிவிடாதீர்கள்.

இந்த பக்தி இல்லாமல், இந்த சுய மறதி இல்லாமல், ஒரு கணம் கூட நீங்கள் இருக்கக்கூடாது, இது கிட்டத்தட்ட சாத்தியமற்றது. இதுவே பக்தி யோகா அல்லது பக்தி மார்க்கம் என்று கூறப்படுகிறது. எனவே, ஒரு குருநாதர் கூறினார்: "100 வருட நேர்மையான பக்தியை விட குருநாதரின் சகவாசத்தில் ஒரு கணம் இருப்பதே சிறந்தது."

மனதை அழிக்க வேண்டுமாயின் அதைத் திசைத்திருப்ப வேண்டியது அவசியம் என்று சில குருநாதர்கள் நினைத்தனர். "நான் உடல்" எனும் தனி மனித 'நிலைப்பாட்டை' மனம் சொல்ல வைக்கிறது. எனவே, "நான் உடல் அல்ல, நான் இதுவல்ல, நான் அதுவல்ல, நான் கடவுள்!" என்று மனம் நேர் மாறாகச் சொல்லுமாறு செய்ய வேண்டும். இப்போது, இதுவும் கிட்டத்தட்ட சாத்தியமற்றது, ஏனெனில் மனதில் தவறான மனப்படிவங்கள் உள்ளன, மேலும் தவறானதாக மனம் உணரும் ஒன்றை மாறாகச் சொல்ல வைப்பது பாசாங்குத்தனமான செயல் போன்றது. இவ்வாறு, உதாரணமாக, "திருவாளர் 'ஏ'" என்று மனம் அறியும். இப்போது, இந்தத் திருவாளர் 'ஏ' என்பவரின் மனம், "நான் மனிதனல்ல, நான் கடவுள்" என்று கூறுவதானால், அந்த கணமே, அது பொய் என்பதை மனம் உணர்கிறது. இதன் விளைவாக இது, இதயம், உணர்ச்சிகள், அன்பு அனைத்தையும் சோர்வடையச் செய்கிறது. "நான் கடவுள். நான் எதற்காகச் செயல்பட வேண்டும்?" என்று மனதால் செயலற்ற செயல்களைச் செய்ய முடியாது. "நானே கடவுள். யாரை

வேண்டிக்கொள்வது?" என்று சொல்வதால் மனம் பக்தியில் தன்னை மறக்க முடியாது.

எனவே, மனோநாஷ் என்பது சாத்தியமற்றது. ஆனால் தன்னலமற்ற செயலை, அது முற்றிலும் சரியானதாக இல்லாவிடிலும், விடாமுயற்சியுடன் செய்தால், மனம் நிரந்தரமாக அமைதி அடையும் நிலை ஏற்படும். அப்போது மனம் கடவுளைக் காண்கிறது, ஆனால் அது இன்னும் அழிக்கப்படவில்லை. பக்தி மார்க்கத்தின் மூலமாக நிலையான பக்தியின் ஒரு கட்டத்தை எட்டினால், இந்த மன அமைதியும் இறை தரிசனமும் கிடைக்கும். எனவே, எல்லாவற்றையும் துறந்த நிலையில், "நான் கடவுள்; நான் உடல் அல்ல" என்று ஒருவர் கூறி, 100 சதவிகிதம் நேர்மையுடன் இந்த வார்த்தையை நிலைநிறுத்தினால், இந்த மன அமைதி அடையப்படுகிறது. ஆனால் மனோநாஷைப் பொறுத்தவரை எப்போதும் ஒன்றே ஒன்றுதான். இறைநிலையை அடைந்த ஒருவர் பிறரின் மனதையும், வெகுஜனங்களின் மனங்களையும் வேரோடு அகற்ற முடியும். அவதார புருஷர்கள் கூட அவர்களின் மனங்களை வேரோடு அகற்ற அத்தகைய பரிபூரண இறைநிலையை அடைந்தவர்களைக் கொண்டிருக்க வேண்டும்.

சுருக்கமாகச் சொன்னால், 'மனோநாஷை' அடைவதற்கும், நீங்கள் கடவுள், அளவிறுதியற்றவர், ஆதி அந்தம் இல்லாதவர் என்று உணர வைப்பதற்கும் இந்த வழிகள் அனைத்தும் உள்ளன. ஆனால் உங்களால், 'உங்கள் இயல்பிலிருந்து வெளியேற முடியாத வரையில், அன்பிற்குரியவரின் நுழைவாயிலில் அடியெடுத்து வைக்க நீங்கள் எப்படி ஆசைப்படுவீர்கள்?'

வெவ்வேறு வழிகளைப் பின்பற்றி, வெவ்வேறு நபர்கள் வேறுவேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர். தியானத்தின் நுட்பம் தெரியாத சிலர் மனநிலையால் பாதிக்கப்படுகிறார்கள். ஒரு பெண்ணைக் கூட பார்க்கக் கூடாது என்கிறார்கள் சிலர். அவர்கள் அதை நினைத்து மிகவும் பதட்டமடைகிறார்கள்.

உண்மை என்னவெனில், 'நாம் கடவுள்', ஆனால் இந்த வெட்கம் கெட்ட மனத்தால் நாம் தவறாக வழிநடத்தப்படுகிறோம். நீங்கள் எவ்வளவு அதிகமாக அதிலிருந்து விடுபட விரும்புகிறீர்களோ, அவ்வளவு அதிகமாக நீங்கள் அதில் சிக்கிக் கொள்ளும் அளவிற்கு மனம் மிகவும் வெட்கமற்றது - நீங்கள் சேற்றிலிருந்து ஒரு காலை எடுக்க முயற்சிக்கும் அதே வேளையில், உங்கள் மற்றொரு கால் மிகவும் ஆழமாகச் சிக்கிக் கொள்கிறது. எதுவாயினும், நீங்கள் இந்தச் சிக்கலிலிருந்து விடுபட்டாகவேண்டும்.

'மனோநாஷ்' மனதிற்கு உண்மையான சமாதி நிலை (பரமானந்தம்) போன்றது. மனம் வேரோடு அகற்றப்படும் வேளையில், அதன் மரணம் நிகழ்கிறது, தொடர்ந்து தனிநபர் நிலைப்பாடு (ஆணவம்) உடனடியாக,

“நானே எல்லாம், எனக்கு இந்த உடலைக் குறித்து எந்த அக்கறையும் இல்லை” என்று உணர்கிறது; அந்த நேரத்தில் எதிர்கொள்ளும் வலுவான அதிர்ச்சியில் உடல் வீழ்ந்து விடுகிறது, அல்லது அதன் வேகம் உடலை சிறிது நேரம் வைத்திருந்து, பின்னர் அது மஜ்ஜுப்களைப் போல வீழ்கிறது.

உண்மையான ‘நான் கடவுள் எனும் உறுதிப்பாடு’தான் மனிதனின் குறிக்கோள். மனோநாஷ் நிலையை அடைந்து, சில கடமைகளைச் செய்ய வேண்டிய சிலர், பிறர், ஒவ்வொருவரிடமும் தங்களைப் பார்க்க அவர்களுக்கு உதவும் நோக்கத்தில், வெறுமையான மனதுடன் தங்கள் உடலில் தொடர்ந்து இருக்கிறார்கள். இதை ‘மனப்படிவங்களற்ற மனம்’ என்று அழைப்பதும், ‘உண்மையான நான்’, ‘உருமாறிய உறுதிப்பாடு’, ‘உண்மையான மனம்’, என்று அழைப்பதும் - இது ஒன்றே அளவிறுதியற்ற உண்மைப்பொருள், ஆதியும் அந்தமும் இல்லாத பரம்பொருள், எல்லாவற்றிலும் எல்லாமாக இருக்கும் இறைவன். உங்களுக்குத் தேவையான ஒன்றே ஒன்று, அதுவே உங்களுக்குப் பொய்யான உருவகம் கொடுத்த அனைத்திலிருந்தும் விடுதலை.

நான் இப்போது இவ்வாறு நினைக்கிறேன். எனது புது வாழ்வில் நான் முற்றிலும் பலவீனங்களால் நிறைந்துள்ளேன். மேலும், எனது தற்போதைய உதவியற்ற நிலையிலும், நான் மனோநாஷை அடைய வேண்டும். மனோநாஷின் இந்தக் கடினமான பணியை முடிக்க, எனக்கு நான்கு மாதங்கள் உள்ளன. இது, முடமான ஒருவன் நான்கு மாதங்களில் எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியை அடைய விரும்புவது போன்றது. ஆனால் இதை அடைய கடவுள் எனக்கு உதவுவார் என்று 100 சதவீதம் நம்பிக்கையுடன் உணர்கிறேன்.

அக்டோபர் 16ஆம் நாள், நீங்கள் உபவாசம் மேற்கொள்ளும் வேளையில், நான், மனோநாஷை அடைய விரும்புவதால், எனக்கு உதவுமாறு உங்கள் ஆழ் இதயத்திலிருந்து கடவுளிடம் வேண்டுங்கள். இதில் கடவுள் எனக்கு உதவுவார் என்று 100 சதவீதம் நம்பிக்கையுடன் உணர்கிறேன்.

இந்த சொற்பொழிவுக்குப் பிறகு பாபாதாஸ், “இங்கே இல்லாதவர்கள் அக்டோபர் 16ஆம் நாள் 24 மணிநேரம் உபவாசம் இருக்கலாமா?” என்று கேட்டார்.

“விரும்புபவர்கள் அவ்வாறு செய்யலாம்” என்று பாபா பதிலளித்தார் **“உபவாசத்தின் போது, அவர்கள் ஒரு முறையாவது கடவுளிடம் பிரார்த்தனை செய்ய வேண்டும்; என் விருப்பத்திற்கிணங்க, கடவுள் நிர்ணயித்த ‘நடவடிக்கை’யை நிறைவேற்ற அவர் எனக்கு உதவுவார்.”**

பாபா தனது எழுத்துப்பலகை வழியாக எடுத்துரைக்கத் தொடங்கும் நேரத்தில், எவரும் கேள்வி கேட்கக் கூடாது என்று தடை விதித்திருந்தார்; ஆனால் ராம்ஜுவின் ஒரு கேள்விக்கு, பாபா பதிலளித்தார், **“உங்களுக்கு அறிவு இருந்திருந்தால், நீங்கள் என்னிடம் ஒருபோதும் கேட்டிருக்க மாட்டீர்கள்!”**

ஆனாலும், ராம்ஜுவிற்கு பதிலளித்த பாபா, இவ்வாறு கூறினார்:

ஒரு சாதாரண மனிதனால் சாதிக்கப்படும் மனோநாஷை நான் ஒரு சாதாரண மனிதனாக விளக்க முயற்சித்தேன். அனைவரும் சுதந்திரமாக, என் மீதான அவர்களின் நம்பிக்கையுடன், என்னைப் பற்றிய அவர்களின் திடமான நம்பிக்கை மற்றும் நேர்மையுடன் என்னைப் பற்றிக்கொள்ள வேண்டும். எனது வார்த்தைகளை ஒருவர் விரும்பியவாறு அர்த்தப்படுத்தலாம். நிலநடுக்கம் ஏற்பட்டால், நெருப்பு, வெள்ளப்பெருக்கு, கட்டிடங்கள் இடிந்து விழுவது போன்ற பல சம்பவங்கள் நடக்க வாய்ப்புள்ளது. ஒரு விளக்கம் அல்லது வேறொரு விளக்கம் சரியானது என்பதை நிரூபிக்க சமமான வாய்ப்புகள் உள்ளன. நான் ஏன், எப்படி மனோநாஷை அடைய முடியும் என்று கனி என்னிடம் கேட்டார், ஏனெனில், அவர் நம்பியபடி, நான் ஏற்கனவே பழைய வாழ்க்கையில் அதை அடைந்துவிட்டேன். ஆனால், அவர் என்னுடைய குழந்தைப் பருவ நண்பராக இருப்பதால், இதுபோன்ற கேள்வியைக் கேட்டதற்காக நான் அவரை மன்னித்துவிட்டேன்.

கூட்டம் காலை 11:00 மணியளவில் முடிவடைந்தது. மதியம், ஆண்கள் விளையாடுவதற்கு பதிலாக நகைச்சுவையான குறு நாடகங்கள் மற்றும் அவரை சிரிக்க வைக்க ஒரு பாராயணமும் செய்ய வேண்டும் என்று பாபா கூறினார்.

பாபா செல்வதற்கு முன்பு, மீண்டும் அனைவரையும் அழைத்து, தான் ஒரு முடிவுக்கு வந்திருப்பதாக கூறினார். "**21 பேரில் பதினைந்து பேர் அவருடன் வரவேண்டாம். மீதமுள்ள ஆறு பேரில் - பைதூல், தெளலத் ஸிங், எரச், குஸ்தாஜி, பெண்டு, மினூ கராஸ் - நான்கு பேர் நிச்சயமாக அவருடன் இணைவார்கள்: குஸ்தாஜி, பைதூல், பெண்டு மற்றும் எரச்.**" மினூ கராஸ், தெளலத் ஸிங் இருவரையும் அழைத்துச் செல்வது பற்றி செப்டம்பர் 7ஆம் நாள் முடிவு செய்வதாக அவர் கூறினார்.

"**நான் புது வாழ்வை நானே நான்கு மாதங்கள் முழுவதுமாக வாழ்வேன், அதுபோலவே முழுமையாக முடிப்பேன்**" என்று பாபா கூறினார்.

அன்று மதியம் 'பல்கலை இசை நிகழ்ச்சி' அரங்கேறியது, டாக்கே, மினூ, சிது, ஜால்பாய், காடேக்கர், ஸவக் கொத்வால், ருஸ்தம் காக்கா, கேஷவ் நிகம் ஆகியோர் முக்கிய பங்கேற்பாளர்களாக இருந்தனர். கேஷவ், புடவை உடுத்திய பெண் வேடமிட்டு, ஒரு மூலையில் தனது முகத்தை மறைத்து, பாபாவின் கவனத்தை ஈர்க்க முயன்றார். பாபா மிக்க மகிழ்ச்சியடைந்து அவரது லாக்கெட் ஒன்றை அவருக்கு வழங்கினார். ஸவக் கலகலப்பான இந்திய நடன நிகழ்ச்சியையும் நடத்தினார்.

ருஸ்தம் காக்கா, ஆதி சீனியரின் தந்தை கான்ஸாஹேபின் வேடத்தில் வந்தவர், அவரது அலுவலகத்தில் தொலைபேசியை முதன்முதலில் நிறுவியபோது, அதன் தவறான பக்கத்தைத் தனது காதில் வைத்திருந்தார். தொலைபேசியில் எதுவுமே கேட்காத பட்சத்தில், எரிச்சலில் சத்தமாகத் திட்டி

கத்தினார். ஒருமுறை, மும்பையிலிருந்து நீண்ட தூர அழைப்பு வந்தது. தொலைபேசியை எடுத்து, கான்ஸாஹேப் ஒரு சிட்டிகை மூக்குப்பொடியை உறிய, சிறிது நேரம் அதை கீழே வைத்தார். அதை எடுத்து மீண்டும் பேச ஆரம்பித்தபோது தொடர்பு துண்டிக்கப்பட்டதாக பதில் வந்தது; கோபமடைந்த கான்ஸாஹேப், "என்னுடன் பேச எவருமில்லையா? இந்த மோசமான தொலைபேசிக்கு இதற்காகவா நான் பணம் கொடுத்தேன், அது உரையாடலுக்காக இல்லை என்றால் வேறு எதற்கு? நீங்கள் என்னுடன் பேசியாக வேண்டும்! பேசுங்கள்!" என்று கத்தினார்.

ருஸ்தம் காக்காவின் பாவனை பாபாவை மிகவும் மகிழ்வித்தது; அவர் பாடிய பல பஜனைகளில் ஒரு குறிப்பிட்ட பாடல் பாபாவை மிகவும் கவர்ந்ததால், அவருக்கு 'உஸ்தாத்' (USTAD) என்ற பட்டத்தை வழங்கினார், மேலும் அவருக்கும் பிற நடிகர்களுக்கும் லாக்கெட்டுகளைப் பரிசாக அளித்தார்.

டாக்கேஃபால்கரின் நடிப்பு மிகவும் வேடிக்கையாக இருந்தது. அவர் ஒரு வன்முறை, காட்டுமிராண்டியாக நடித்தார், அவர் 'மனதின் கடவுளை' சித்திரவதை செய்வதற்கான காட்சியில் நடித்து அனைவரையும் மகிழ்வித்தார்.

மிகவும் நல்ல மனநிலையில் இருந்த பாபா, ஆண்கள் மற்றும் பணியாளர்களுக்கு ரோஜா இதழ்களை விநியோகித்தார்.

அடுத்த நாள், 1951 ஜூன் 30 சனிக்கிழமை அன்று, பாபா கூறினார், **"நான் செய்த பிரகடனத்தில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன், எல்லா காலத்திலும் வாழ்ந்த பரிபூரண குருநாதர்களையும் என் இதயத்தில் தாங்கிக்கொண்டேன். எனது மகிழ்ச்சியில் நீங்களும் பங்கெடுத்தீரகள் என்று நம்புகிறேன். நானும் அதை உணர்கிறேன். (1952) பிப்ரவரி மாதத்தில் முடிவில்லா பேரின்பம் அடையப்படும்."**

அன்று காலை, பாபா இரண்டு பேருந்துகளில் அந்தக் குழுவை, இயற்கை எழில் சூழ்ந்த 'உஸ்மான் ஸாகர்' (USMAN SAGAR) ஏரிக்கு அழைத்துச் சென்றார். அவர்கள் காலை 10:30 மணிக்குத் திரும்பி வந்து, வேடிக்கையான பேச்சு, கேளிக்கைகள் மற்றும் பொழுதுபோக்குகளில் முழு நாளையும் மகிழ்ச்சியுடன் கழித்தனர். பங்களாவின் படிக்கட்டுகளில் எடுக்கப்பட்ட ஒரு குழு புகைப்படத்திற்கு பாபா ஒப்புதல் அளித்தார்.

பாபாவும் அன்று தனது அன்பர்களில் சிலரைத் தனித்தனியாக சந்தித்தார். நானா கேர் அவரிடம், "நான் உங்களுடன் இருக்க விரும்புகிறேன்" என்றார்.

"**நான் கூறியபடி நீங்கள் செய்வீர்களா?**" பாபா வினவினார்.

"உறுதியாக!" அவரது விரைவான பதில்.

"நாளையிலிருந்து இரண்டு பாட்டில் மது அருந்தத் தொடங்குங்கள், ஒரு கிலோ மாமிசம் சாப்பிடுங்கள்" என்று பாபா கட்டளையிட்டார். **"நீங்கள் அதைச் செய்வீர்களா?"**

நானா கேர், உயர் ஜாதி பிராமணராக இருந்ததால், தனது வாழ்நாளில் மதுவையோ மாமிசத்தையோ தொட்டதில்லை என்றாலும், அவர் கீழ்ப்படிவதற்கு ஒப்புக்கொண்டார். பாபா, பின்னர் அவரிடம், "நான் உங்களை நினைத்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன், ஆனால் நீங்கள் தொடர்ந்து உங்கள் இல்லத்தில் இருங்கள், மது, மாமிசம் எதையும் தொடாதீர்கள்!" என்றார்.

பங்க்ராஜும் இதேபோன்ற விருப்பத்தை வெளிப்படுத்திய போது, பாபா கூறினார், **"நீங்கள் என்னுடன் இருந்தால், உங்கள் மனைவி தாராபாய் என்னைப் பிடித்துக் காவலில் வைத்துவிடுவார்."**

"அவர் அதற்கு சம்மதம் தருவார்" என்று பங்க்ராஜ் கெஞ்சினார். "அவர் எந்தப் பிரச்சினையும் உருவாக்க மாட்டார், அவர் உங்களை நேசிக்கிறார்."

"சரி, நீங்கள் இதைச் செய்யுங்கள். நாக்பூருக்குத் திரும்பிச் சென்று இரண்டு மாதங்களுக்கு தினமும் ஒரு விபச்சாரியைப் பார்க்கவும்; மேலும், தினமும் ஒரு முழு பாட்டில் மது அருந்தவும். உங்களால் இதைச் செய்ய முடியுமா? நீங்கள் இதைச் செய்தால், நான் உங்களை என்னுடன் வைத்துக் கொள்வேன்" என்றார்.

"நான் அதைப் பற்றி யோசனை செய்து பதிலளிப்பேன்," என்று பங்க்ராஜ் கூறினார்.

"நினைப்பவன் எதையும் சாதிக்க மாட்டான்!" பாபா அவரை எச்சரித்தார். **"உங்கள் மனைவியுடன் தொடர்ந்து வாழுங்கள், விபச்சாரிகள் அல்லது மது ஆகியவற்றுடன் ஒருபோதும் தொடர்பு கொள்ள வேண்டாம்."**

இவ்வாறு ஹைதராபாத் கூட்டம் நிறைவடைந்தது, இந்தியா முழுவதிலிருந்தும் அழைக்கப்பட்டவர்கள் தத்தமது இல்லங்களுக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

இந்த நேரத்தில், கொரியாவில் போர் உச்சக்கட்டத்தில் நடந்துகொண்டிருந்தது. 1951 ஏப்ரல், மே மாதங்களில், சீன மற்றும் வட கொரிய கம்யூனிஸ்டுகள், மாபெரும் போர்களை தொடங்கி வெற்றியை நோக்கி தள்ளப்பட்டனர். ஆனால் ஜூன் மாதம், பாபா ஹைதராபாத்திற்குச் சென்ற பின்னர், ஐ. நா. கொரியப் போர் வரலாற்றில் மிகவும் இரத்தம் தோய்ந்த ஒன்றாக நிரூபிக்கப்பட்டது, மொத்தத்தில் 25 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் உயிரிழந்தனர். இவையனைத்தும், பாபா தனது தீவிரமான திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருந்த வேளையில் நிகழ்ந்தது.

முரளி காளே, பாபாவுடன் தங்கியிருந்தார், அவருடைய தந்தையார் காளேமாமா, அவரை 1927ஆம் ஆண்டில் 'மெஹர் ஆஷ்ரமத்தில்' கல்வி பயில

அனுப்பி வைத்தார், அப்போது அவருக்கு 13 வயது. ஹைதராபாத் கூட்டத்தில், முரளி, பாபாவிடம் ஹோமியோபதி பயிற்சி செய்வதில் ஆர்வமாக இருப்பதாகவும், மேலும் பயில விரும்புவதாகவும் தெரிவித்தார். எனவே, 1951 ஜூலை 1 அன்று, பாபா அவரை ஒரு சேவக தோழர் பொறுப்பிலிருந்து மனமுவந்து விடுவித்து, பழைய வாழ்க்கைக்குத் திருப்பி அனுப்பினார். புது வாழ்வில் ஒரு தோழராக, முரளி அனைத்து நிபந்தனைகளையும் உண்மையாகவும் நேர்மையாகவும் நிறைவேற்றியதைத் தொடர்ந்து பாபா முழுத் திருப்தி அடைந்தார்.

கிருஷ்ணா நாயரும் 1939ஆம் வருடம் பெங்களூரில் சிறுவனாக இருந்தபோது, பாபாவுடன் வந்திணைந்து, பின்னர் அவருடன் தங்கினார். ஆனால் 1947ஆம் வருடம், அவர் தென்னிந்தியாவில் அவரது இல்லத்திற்குத் திருப்பி அனுப்பப்பட்டார். புது வாழ்வில் நுழைவதற்கு முன்பு, பாபா, கிருஷ்ணா நாயரிடம் இந்தியா முழுவதும் புனித யாத்திரை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார். இந்த யாத்திரைக்குப் பிறகு, புது வாழ்வில் இணைய பாபா அவரை அழைக்காததால், கிருஷ்ணா காவல்துறையில் சேர்ந்தார்.

டாக்டர் கனி ஒருமுறை பாபாவிடம், அவருக்கும் கிருஷ்ணாவிற்கும் இடையே என்ன நடந்தது என வினவினார்: "முன்பு கிருஷ்ணா அடிக்கடி வந்து கொண்டிருந்தார், இப்போது நாங்கள் அவரைப் பல மாதங்களாகப் பார்க்கவில்லை" என்றார். அதற்கு பாபா, "**கிருஷ்ணா நேரான பாதையில் சென்றுகொண்டிருந்தார், ஆனால் அதிலிருந்து விலகிச் சென்றுவிட்டார், அங்கேயே சிக்கிக்கொண்டார்**" என்று பதிலளித்தார்.

"அவரது பாதையை மாற்றியது யார், பாபா?" கனி விசாரித்தார்.

"**கேட்காதீர்கள்**" என்று பாபா பதிலளித்தார்.

இதற்கிடையில், இந்தக் காலகட்டத்தில், கிருஷ்ணா, காவல் துறையில் தனது உயர் அதிகாரியின் சார்பாக, ஒரு பொட்டலத்தை வழங்க ஹைதராபாத் செல்லும் வாய்ப்பு கிடைத்தது. பாபா ஹைதராபாத்தில் இருக்கிறார் என்று ஆதியின் சுற்றறிக்கை ஒன்றின் மூலமாக அவருக்குத் தெரிய வந்தது, அதனால் அவர் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

கிருஷ்ணாவை சந்தித்தபோது, பாபா, அவர் என்ன செய்கிறார் என்று விசாரித்து, "**மீண்டும் என்னுடன் வந்து தங்க விருப்பமா?**" என்று கேட்டார்.

கிருஷ்ணா அவ்வாறே செய்வதாக கூறியதும் பாபா, "**அவர் மீண்டும் சரியான பாதையில் வந்துவிட்டார்!**" என்றார். தனது வேலையை விட்டுவிட்டு, கிருஷ்ணா மீண்டும் பாபாவுடன் வந்திணைந்தார்.

ஒரு நாள் காக்கா அவர்களின் பங்களாவிற்கு அருகில் ஒரு நாகப்பாம்பைக் கண்டதும், கிருஷ்ணாவை அழைத்து அதைக் கொன்றார். செத்த பாம்பை பின்பு, வேடிக்கையாக வேண்டுமென்றே டாக்டர் நீலு அடிக்க

ஆரம்பித்தார். ஆனால் அவர் அதைச் செய்துகொண்டிருந்த போது, அவரது பைஜாமா நாடா கழண்டு விழுந்ததைப் பார்த்து, பாபாவும் பிற அன்பர்களும் மனமார சிரித்து மகிழ்ந்தனர்.

பாபா, கேலி செய்து சிரித்தார், **"செத்த பாம்பை அடிக்கும்போதே கால்சட்டை கீழே நழுவி விழுந்தால், உயிருடன் இருக்கும் ஒன்றைக் கொன்றால் என்ன நடக்கும்?"**

கூட்டங்களுக்கு அழைக்கப்பட்டவர்கள் திரும்பிச் சென்ற சில நாட்களில், பாபா ஜுரம் மற்றும் இருமலால் அவதிப்பட்டார். 1951 ஜூலை 10 பாபாவின் மௌன தினத்தன்று, அவர், முதன்முறையாக உலகம் முழுவதும் உள்ள தனது அன்பர்கள், அவரது ஆண், பெண் தோழர்கள் அனைவரும், காலை 6:00 மணி முதல் அடுத்த நாள், 11ஆம் தேதி காலை 6:00 மணி வரை மௌனம் கடைப்பிடிக்குமாறு அறிவுறுத்தினார்.

ஜூலை 30 அன்று ரானோ, கிட்டி இருவரும் மும்பையிலிருந்து ஹைதராபாத் வந்தனர். பாபா அவர்களிடம் ஆசிரியைப் பணியை விட்டு விடுமாறு அறிவுறுத்தியிருந்தார்; முதலில் அவர்கள் ஹைதராபாத்தில் வேலை தேட வேண்டும் என்று அவர் கூறியிருந்தாலும், இப்போது அவர்கள் அதைச் செய்ய வேண்டாம் என்று முடிவு செய்தார். மெஹரா, மணி, மெஹரு, கோஹெர், நாஜா ஆகியோருடன் அவர்கள் மீண்டும் நிரந்தரமாகத் தங்கத் தொடங்கினர்.

மணி, மெஹரு இருவருக்கும் உடல் நலம் குன்றிய நிலையில், பரிசோதனைக்குப் பின்னர் அறுவை சிகிச்சை தேவைப்பட்டதால், ஹைதராபாத்தில் அது செய்து முடிக்கப்பட்டது; கோஹெர், தொடர்ந்து அவர்களை கவனித்து வந்தார். ரானோ அனைத்து பெண்மணிகளுக்கும் காலை சிற்றுண்டியைத் தயார் செய்து, பாபாவின் துணிகளை துவைத்தார். இவை அனைத்தும் மெஹரு நோய்வாய்ப்படும் வரை செய்து வந்த கடமைகள். மெஹரா, பாபாவின் தனிப்பட்ட வேலைகளில் கலந்து கொண்டார். நாஜா உணவு தயார் செய்யும் வேளையில், கிட்டி அவருக்கு உதவியாக இருந்தார். மணியின் உடல்நிலை சீராகாததால், பாபா, ரானோவிடம் அடிக்கடி மருத்துவமனைக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு விசாரிக்குமாறு அறிவுறுத்தினார்.

1951 ஜூலை 31 செவ்வாய்கிழமை அன்று, பின்வரும் ஐந்து நெருங்கிய அன்பர்களுக்கு சில அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு அறிவிக்கப்பட்டன:

1) **மெஹர்ஜி கர்காரியா (மும்பை): 1951 அக்டோபர் 16 அன்று, அப்பகுதியைச் சேர்ந்த ஏழை பார்சி ஒருவருடன் உத்வாடா நெருப்புக் கோயிலில் இருக்க வேண்டும்.**

2) **கேக்கி தேசாய் (டெல்லி): 1951 அக்டோபர் 16 அன்று, அஜ்மீரில் அமைந்த குவாஜா ஸாஹேபின் (மொய்னுதீன் கிஸ்தி) சமாதியில் அப்பகுதியைச் சேர்ந்த ஓர் ஏழை முஸ்லீமுடன் இருக்க வேண்டும்.**

3) **வாஸ் தேவ் கெய்ன் (டெல்லி): 1951 அக்டோபர் 16 அன்று மதுராவில் அமைந்த கிருஷ்ணர் கோவிலில் அந்த நகரில் வாழும் ஏழை இந்து ஒருவருடன் இருக்க வேண்டும்.**

4) **கயா பிரசாத் கரே (ரத்): 1951 அக்டோபர் 16 அன்று, சாரநாத்தில் அமைந்த புத்தர் கோவிலில், சாரநாத் அல்லது பெனாரஸிலிருந்து வரும் ஓர் ஏழை பௌத்த அல்லது ஜெயினுடன் இருக்க வேண்டும்.**

5) **விஸ்வநாத் ஹல்தங்கர் (கோலாப்பூர்): 1951 அக்டோபர் 16 அன்று, கோவாவில் அமைந்த புனித ஃபிரான்சிஸ் ஸேவியர் தேவஸ்தானத்தில், கோவாவின் ஏழை கிறிஸ்தவர் ஒருவருடன் இருக்க வேண்டும்.**

ஐந்து பேருக்கும் மேலும் அறிவுறுத்தப்பட்டது:

நீங்களும் உள்ளூர் ஏழைகளும் அக்டோபர் 16ஆம் தேதி காலை முதல் 24 மணிநேரம் உபவாசம் (தேநீர் மற்றும் தண்ணீரை எத்தனை முறை வேண்டுமானாலும் அருந்தலாம்) **மேற்கொண்டு, நியமிக்கப்பட்ட இடங்களில்** (வழங்கப்பட வேண்டிய) **பிரார்த்தனையை மொழியவும்.**

அக்டோபர் 16ஆம் நாள் பிரார்த்தனைக்கு முன்னர் இருவரும் நீராட வேண்டும். நீங்கள் விரும்பும் மொழியில் இருவரும் பிரார்த்தனையை மொழியலாம்.

உங்களுடன் இருந்த ஏழைக்கு ரூ. 101 தொகை வழங்க வேண்டும்.

நீங்களும் ஏழைகளும் இணைந்து பிரார்த்தனை செய்த பின்னர் அக்டோபர் 16ஆம் நாள் அந்த இடத்தை விட்டு வெளியேறலாம்.

பாபா அவர்களுக்கு வழங்கும் பணியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, **"எந்த சூழ்நிலையாக இருந்தாலும் கடமையைச் செய்ய வேண்டும்"** என்று வலியுறுத்தினார்.

பாபா ஏகாந்தவாசத்தை மேற்கொள்ள விரும்பி அதற்குப் பொருத்தமான இடத்தைத் தேர்ந்தெடுக்க இந்த ஐந்து குறிப்புகளை வழங்கினார்:

- **அந்த இடம் நகரத்திலிருந்து சற்று தொலைவில் இருக்க வேண்டும்.**
- **அது ஒரு மலையில் அல்லது கடலுக்கு அருகில் இருக்க வேண்டும்.**
- **அருகில் ஒரு சிறிய கிராமம் இருக்க வேண்டும்.**
- **இதற்கு ஆன்மீகப் பின்னணி** (வரலாறு) **ஏதேனும் இருக்க வேண்டும்.**
- **குறைந்த பட்சம் ஒரு பக்கத்திலாவது ஒரு விசாலமான வெளியைக் கொண்டிருக்க வேண்டும், அதனால் நான் எந்தத் தொந்தரவும் இல்லாமல் சுதந்திரமாக நடமாட முடியும்.**

1951 ஆகஸ்ட் முதல் வாரத்தில், எரச், பெண்டு, பைதூல் மூவரும் ஹைதராபாத்திலிருந்து எட்டு மைல் தொலைவில் அமைந்த 'கோஜாகுடா' (KHOJAGUDA) என்ற மலையைக் கண்டுகொண்டனர். மலை உச்சியில் 'ஹஸ்ரத் பாபா ஃபக்ருதின்' (HAZRAT BABA FAKRUDDIN) என்ற இஸ்லாமிய துறவியின் கல்லறையை ஒட்டி குகை ஒன்றும், இந்தக் குகைக்குக் கீழே இயற்கையாகச் செதுக்கப்பட்ட மற்றும் ஓர் அழகான குகையும், அதன் உள்ளே பாறைகள் அழகான விளிம்புடனும் அமைந்திருந்தன; கீழே இந்து கோவில் ஒன்றும் காணப்பட்டது.

பாபாவிற்கு அந்த இடம் மிகவும் பிடித்திருந்தது. அவர் தனது பணிக்காக இரண்டாவது குகையைத் தேர்ந்தெடுத்தார், மேல் குகை ஓய்வெடுக்கவும் தூங்கவும் ஏற்றதாக அமைந்தது. **"மலை உச்சியில் ஒரு முஹமதிய கல்லறை; அடிவாரத்தில் ஓர் இந்து கோவில்; இடையில், மிகச் சிறந்த பணிக்கான எனது குகை, அது முழுத் தோல்வியில் அல்லது பெரும் வெற்றியில் முடியும்!"**

பெண்டு குகையின் நுழைவாயிலில் மூங்கில் பாயால் ஒரு கதவை அமைத்து, மேலே உள்ள குகையைக் குளியலறையாக மாற்றினார். மூங்கில் பாய்களைத் தயார் செய்வதற்காகக் பணியமர்த்தப்பட்டவர் பாபாவின் மீது மிகுந்த அன்பு கொண்டிருந்தார். அவர்தான் முதலில் தோழர்களுக்கு அந்த இடத்தைப் பரிந்துரைத்தார்.

ஆதி சீனியர், ஆதி ஜூனியர், மெஹர்ஜி ஆகியோர் பாபாவை சந்திக்க 1951 ஆகஸ்ட் 8 அன்று ஹைதராபாத் வந்தனர். மெஹர்ஜியுடன் கேப்ரியல் பாஸ்கலின் (GABRIEL PASCAL) சக ஊழியரான 'கெசா ஹெர்செக்' (GEZA HERCZEG, 63 வயது) என்ற மற்றொரு ஹங்கேரிய திரைக்கதை எழுத்தாளரும் வந்தார். முதலில், அந்த நபர் பாபாவின் மீது அவ்வளவு ஆர்வம் இல்லாதவர் போலத் தோன்றினார். ஆனால் தெய்வீகத்தைப் பற்றிய பாபாவின் நகைச்சுவையுடன் கூடிய விளக்கத்தைத் தொடர்ந்து, ஹெர்செக் திடீரென தனது காலணிகளைக் கழற்ற நினைவு கூர்ந்தார். பின்னர் அவர் டாக்டர் டானிடம் 'அகத்தில் ஏதோ உணர்ந்ததாகவும், அது அவரது இதயத்தைத் தொட்டதாகவும்' கூறினார். ஆதி சீனியர் அவருக்கு 'தி வே ஃபேரர்ஸ்' புத்தகத்தை வழங்கினார்; ஹெர்செக், மெஹர்ஜியுடன் விமானத்தில் மும்பைக்குத் திரும்பிச் சென்றார்.

ஆகஸ்ட் 9 திங்கட்கிழமை காலை, 1951 அக்டோபர் 16 முதல் 1952 பிப்ரவரி 16 வரையிலான மனோநாஷின் நான்கு மாதங்கள் தொடர்பாக, பாபாவிடம் சில ஏற்பாடுகளைப் பற்றி விவாதிக்க ஆதி சீனியர், ஆதி ஜூனியர் மற்றும் தோழர்கள் அழைக்கப்பட்டனர்.

ஆரம்பத்தில், பாபா மீண்டும் அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்தார்: **"நான் விரும்பும் முடிவை அடைய, நான் பொருத்தமானதாகவும்**

சரியானதாகவும் கருதுவதை விரும்பியபடி செய்ய, நான் முற்றிலும் சுதந்திரமாக இருப்பேன். எந்த நேரத்திலும் எனது மன நிலையைப் பொறுத்து, எனது திட்டங்களை மாற்றுவதற்கும் நான் முழு சுதந்திரத்துடன் இருப்பேன்."

இந்த நான்கு மாதங்களும் நான்கு நிலைகளாகப் பிரிக்கப்பட்டன: முதல் 30 முதல் 40 நாட்கள் வரை, கோஜாகுடா மலையில் கழிக்க வேண்டும்; இரண்டாவது, அடுத்த 30 முதல் 40 நாட்களில், ஹைதராபாத்திலிருந்து ஔரங்காபாத் வரை நடைப்பயணம்; மூன்றாவது, குல்தாபாத்தில் மஸ்துகளைத் தொடர்பு கொள்ளுதல்.

"இந்தக் காலத்தில் நான் எப்படி வாழ்வேன், எப்படி நடந்து கொள்வேன் என்று இப்போது சொல்ல முடியாது; நான் லங்கோட்டி மட்டுமே அணிந்து நிர்வாணமாக இருக்கலாம் அல்லது எனது வழக்கமான உடையை அணியலாம்; நான் ஒரு நாளைக்கு நான்கு வேளை உண்ணலாம் அல்லது பல நாட்கள் உண்ணாவிரதம் இருக்கலாம். இவை எதையும் நான் வேண்டுமென்றே செய்ய மாட்டேன், ஆனால் கடவுளின் ஆணைப்படி நான் செய்ய வேண்டும்" என்று பாபா கூறி முடித்தார்.

பாபா தனது ஏகாந்தவாசத்தை மேற்கொள்ள ஔரங்காபாத்திலிருந்து வேறு எங்கேயேனும் செல்வதாகக் கூறி இவ்வாறு விளக்கினார்: **"மூன்றாவது கட்டத்தின் முடிவில், எனது உடல் நிலை, நான் உயிரைத் துறக்கும் அளவிற்கு என்னை அதன் எல்லைக்கு எடுத்துச் செல்லக்கூடும். அப்படியானால், ஆன்மீகப் பின்னணி உள்ள இடம் இனி தேவையில்லை என்று நான் உணர்ந்தால், எனது பழைய வாழ்க்கையுடன் தொடர்புடைய ஏதேனும் இடத்தில் இறுதிக் கட்டத்தைக் கழிக்க விரும்புவேன்."**

இந்த சூழ்நிலையில், பாபா மெஹ்ராஸாத் அருகே அமைந்த தெம்பி மலையைத் (THEMBI HILL) தேர்ந்தெடுத்து அங்கே தங்க விரும்பினார். **1947**ஆம் ஆண்டு பாபா, ஏகாந்தவாசத்தில் பணிபுரிந்த மலையை, ஸரோஷின் உதவியுடன் கையகப்படுத்த அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளுமாறு ஆதி சீனியர், ஆதி ஜூனியர் இருவருக்கும் தெரிவித்தார். தெம்பி மலை அரசாங்கத்தின் உடைமை, அவ்வளவு விரைவில் அனுமதி கிடைப்பது கடினம். ஆனால் ஸரோஷ் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி சமாளித்தார், மேலும் பாதிரி, பாபா முன்பு தங்கியிருந்த மேல் அறைகளைச் சீர்ப்படுத்தத் தொடங்கினார்.

கூட்டத்தின் முடிவில் பாபா வலியுறுத்தி கூறினார்: **"நான் பிம்பல்காவ்ம்** (தெம்பி) **மலைக்குச் சென்றால், அது மனோநாஷ் காலத்தின் இறுதிக் கட்டத்தில், 30 முதல் 40 நாட்கள் வரை மட்டுமே தங்குவேன். நான் அங்குத் தங்கயிருப்பதை, பழையபடி பிம்பல்காவ்மில் குடியேறுவேன் என்று பொருள்படுத்தக் கூடாது."**

ஆகஸ்ட் 11ஆம் தேதி ஹைதராபாத்திலிருந்து ஆதி சீனியரும், ஆதி ஜூனியரும் புறப்பட்டனர்.

மனோநாஷ் காலத்தின் நான்கு மாதங்களில், பாபா தன்னுடன் செல்ல எரச், பெண்டு, பைதூல், குஸ்தாஜி ஆகியோரைத் தேர்ந்தெடுத்தார். தௌலத் ஸிங், மினூ கராஸ் இருவரும் முதல் மூன்று மாதங்கள் தன்னுடன் இருப்பார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையில், வாஸ் தேவ் கெய்ன், டெல்லியைச் சேர்ந்த கிஷன் ஸிங் ஆகியோர், '**ஐந்து மதங்களின் மாதிரி சின்னங்களை உருவாக்குமாறு**' கேட்டுக் கொள்ளப்பட்டனர்: '**ஒரு புத்த கோவில்; ஓர் இந்து கோவில்; ஒரு கிறிஸ்தவ தேவாலயம்; ஒரு முஹமதிய மசூதி; மற்றும் (தீ-கோயிலைக் குறிக்கும்) ஸொராஸ்ட்ரியன் நெருப்புக் கலசம்**.' ஆக்ராவைச் சேர்ந்த 'மதன் மோகன் அகர்வால்' (MADAN MOHAN AGARWAL, அவரது நெருங்கிய நண்பர் கேஷவ் நிகம் மூலமாக முந்தைய ஆண்டு பாபாவைப் பற்றி அறிந்தவர்) மற்றும் கிஷனின் நண்பர் 'அவுரி ஷங்கர் வர்மா' (AURI SHANKAR VERMA) ஆகியோரின் உதவியுடன், மாதிரி சின்னங்கள் ஆக்ராவில் பளிங்குக் கல்லில் செதுக்கப்பட்டு ஹைதராபாத்திற்கு கொண்டுவரப்பட்டன.

பாபாவின் பழைய வாழ்க்கையைப் பின்பற்றுபவர்கள் மற்றும் பக்தர்களுக்கு பாபாவின் திட்டங்களைப் பற்றி தொடர்ந்து அனுப்பப்பட்ட சுற்றறிக்கைகள் மூலம் விபரங்கள் தெரிவிக்கப்பட்டன, ஆனால் பாபாவுடன் தொடர்பு கொள்ளவோ அல்லது மலைகளில் பணிபுரியும் போதும், நடைப்பயணத்தின் போதும் அவரைப் பார்க்கவோ முயற்சிக்கக் கூடாது என்று கண்டிப்பாக எச்சரிக்கப்பட்டனர்.

1951 ஆகஸ்ட் 16 செவ்வாய் அன்று, அந்த நேரத்தில் நாட்டில் ஏற்பட்ட அமைதியின்மை காரணமாக, இந்தியா முழுவதும் வாழ்ந்த பாபாவின் அன்பர்களுக்கு இந்த அறிவுரைகள் வழங்கப்பப்பட்டன:

1951 அக்டோபர் 16 அன்று பாபா நிறைவேற்ற வேண்டிய, கடவுளால் தீர்மானிக்கப்பட்ட 'நடவடிக்கை'யின் பார்வையில், நீங்கள் பின்வருவனவற்றைப் புரிந்துகொண்டு செயல்பட வேண்டும் என்று பாபா விரும்புகிறார்:

1) **பாபாவிற்கு அரசியலைக் குறித்த எந்தவிதக் கவலையும், இருந்ததோ, இருக்கப்போவதோ இல்லை. ஆகவே, உங்களில் எவரேனும் அரசியலில் பணிபுரிந்தால், பாபாவை ஒருபோதும் அதில் ஈடுபடுத்தவோ, அவருடைய பெயரை அந்தப் பணியில் பயன்படுத்தவோ கூடாது என்று அவர் விரும்புகிறார்.**

2) **பாபா, தனது பழைய வாழ்க்கையைப் பின்பற்றுபவர்கள் எவரும் சுயநல நோக்கத்தைத் தொடரும் சோதனைகளுக்கு வழி விடக்கூடாது என்று விரும்புகிறார்.**

3) **பாபா, தனது பழைய வாழ்க்கையைப் பின்பற்றுபவர்கள் மற்றும் அவரது புது வாழ்வு தோழர்கள், சகோதரர்கள், சகோதரிகள், சேவகர்கள் அனைவரும் தங்கள் இதயங்களில் கடவுள் மீதான அன்பின் கதிர்களை ஒளிரச்செய்ய விரும்புகிறார்.**

ஹைதராபாத்தில் இந்த ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்த நேரத்தில், டாக்டர் கனி மாரடைப்பால் 1951 ஆகஸ்ட் 20 மாலை 7:00 மணிக்கு, தனது 57ஆவது வயதில் பூனாவில் காலமானார். ஆதி உடனடியாக பாபாவிற்குத் தொலைத்தந்தி அனுப்பியதும், அவரும் ராம்ஜூவும் கனியின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்ள மறுநாள் காலை பூனாவிற்குச் சென்றனர். ஸரோஷ், நரிமன், மெஹர்ஜி ஆகியோரும் கலந்து கொண்டனர், மேலும் பூனாவிலிருந்து பல நெருங்கிய அன்பர்களை மெஹர் பாபாவின் அரவணைப்பில் கொண்டு வருவதில் டாக்டர் கனி முக்கிய பங்கு வகித்தார்.

ஆகஸ்ட் 20ஆம் தேதி காலை பாபா கிரிக்கெட் விளையாட்டுப் போட்டியைப் பார்க்கச் சென்றிருந்தார். ஆகஸ்ட் 22ஆம் தேதி ஆதிக்கு அனுப்பிய தொலைத்தந்தியில் அவர், **"கனி உடல்ரீதியாக இறந்துவிட்டாலும், எனது சுய ரூபத்தைப் பார்க்கும் வரை, என்னை நிம்மதியாக வாழ விடமாட்டார்."** ஆதி, ஸரோஷ், ராம்ஜூ ஆகியோருக்கு அவரது குடும்ப விவகாரங்களைத் தீர்த்து வைப்பதில் கனியின் மனைவிக்கு உதவுமாறு அறிவுறுத்தினார்.

ஆகஸ்ட் 24ஆம் நாள், பாபா தனது பால்ய நண்பருக்கு இந்த நெகிழ்ச்சியான அஞ்சலியைச் செலுத்தினார்:

இந்தப் புது வாழ்வில் நான் துறக்க வேண்டிய மற்றும் துன்பப்பட வேண்டிய பல விஷயங்களில், கனியின் மறைவு மிகப்பெரியது. பழைய வாழ்வில் எனது சீடர்களாகவும், எல்லாக் காலத்திலும் என் அன்பர்களாகவும் இருந்த இந்திய, மேற்கத்திய நாடுகளைச் சேர்ந்த ஆண்கள், பெண்கள் அனைவரையும் பௌதீக அளவில் இழந்ததை நான் உணர்ந்தேன். ஆனால் திடீரென, கனியை என்னிடமிருந்து பறித்தது எனக்கு ஒரு பேரிழப்பு மட்டுமின்றி, கொடுமையானதும் ஆகும், ஏனெனில் இது புது வாழ்வு நிறைவடைய நெருங்கி வரும் நேரத்தில் நிகழ்ந்தது.

உங்களில் எவரையும் விட எனக்கு, கனி தனித்துவமானவர்; மேலும் பிற அனைவரும் எனக்காகச் செய்ய வேண்டிய அனைத்து பணிகளிலும், கனியால் எனக்காகச் செய்ய வேண்டியவை அதிகம்.

உலகின் ஐந்து மதங்களை அடையாளப்படுத்தும் மாதிரி சின்னங்கள்
(FIVE MODELS REPRESENTING WORLD'S RELIGIONS)

அவருடைய அந்தப் 'பெரிய தலை' உண்மையிலேயே ஒரு பொக்கிஷமாகத் திகழ்ந்தது, அதில் ஞானமும் புத்திசாலித்தனமும் முழுமையாகக் கலந்திருந்தது.

எங்கள் ஆரம்ப காலத்திலிருந்தே நாங்கள் நெருங்கிய நண்பர்களாக இருந்தோம், அவருடைய இதயம் எவ்வளவு தைரியமானது, எவ்வளவு விசுவாசமானது, அன்பானது என்பதை என்னை விட வேறு எவருக்கும் தெரியாது. எனவே, என்னைப் பொறுத்தவரை, கனி ஒரு நண்பராகவும், எனது பணிக்கான கருவியாகவும் ஈடுசெய்ய முடியாதவர்.

ஜூன் 28ஆம் நாள் ஹைதராபாத்தில் நடந்த கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு, என்னுடைய பிரகடனத்திற்கான விளக்கத்தையும் பிரகடனத்தையும் கனி வாசித்தது நினைவிருக்கும். அந்த பிரகடனத்தின் சாட்சிகளில் ஒருவராக, அவர் அக்டோபர் 16 அன்று உபவாசம் கடைப்பிடித்து எனது சார்பாக ஒரு பிரார்த்தனையை மொழிய இருந்தார்.

1952 பிப்ரவரி 16 வரை, கனி இன்னும் அவரது உடலில் இருப்பதாக நான் உணர விரும்புகிறேன், எனவே ஜூன் 28 கூட்டத்தில் கலந்து கொள்ளாத கனியின் மருமகன் 'பாகு'விடம் அக்டோபர் 16 அன்று உபவாசம் இருந்து, எனக்காகப் பிரார்த்தனையை மொழிந்து, கனியின் 'பதிலி'யாகச் செயல்படும்படி கேட்டுக் கொண்டேன். ராம்ஜூ அந்த சந்திப்பின் முழுமையான மற்றும் தெளிவான சித்திரத்தை, பாகுவிற்குத் தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்பட்டார். இதன் மூலம், எனது பிரகடனத்திற்கான சாட்சிகளில் ஒருவராக கனியின் கடமை நிறைவேறும்.

அடுத்த ஆண்டு பிப்ரவரி 16ஆம் தேதிக்குள் நான் உலகளவில் வெளிப்பட வேண்டும் என்பது கடவுளின் விருப்பமாக இருந்தால், கனியும், மறைந்த ஒவ்வொரு பழைய வாழ்க்கை சீடரும், அந்த வெளிப்பாட்டை அவர்கள் இன்னும் பௌதீக உடலில் இருந்தது போலவே அனுபவிக்க வேண்டும் என்பதும் அவருடைய சித்தமாக இருக்கட்டும்.

காலம் பாபாவின் லங்கோட்டி தோழரை (குழந்தைப் பருவ நண்பர்), "ஓ அன்பே, டாக்டர், உங்களுக்கு எங்கள் ஆழ்ந்த வணக்கங்கள்!" என்று வாழ்த்தியது.

பாபாவின் ஏகாந்தவாசத்திற்குத் தேவையான ஏற்பாடுகள் செப்டம்பர் முழுவதும் தொடர்ந்தபோதும், பாபா மேற்கத்திய நாடுகளுக்குச் செல்லத் திட்டமிட்டுக் கொண்டிருந்தார். அக்டோபர் முதல் அனைவருடனும் தொடர்பு கொள்வதை நிறுத்துவேன் என்று பாபா கூறியிருந்தாலும், எதிர்வரும் அமெரிக்க விஜயத்தைப் பற்றி 'எலினோரினா'விற்குக் (எலிஸபெத், நோரினா) கடிதம் மூலம் தொடர்புகொள்ள டானை நியமித்தார். 1951 அக்டோபர் 2ஆம் நாள் செவ்வாய்கிழமை, பாபா, அவர்களுக்கு பின்வரும் தொலைத்தந்தியை அனுப்பினார்: **"கடவுளின் விருப்பப்படி மார்ச் மாத இறுதியில், பாபா**

நிச்சயமாக அமெரிக்காவிற்கு வருவதில் 'எலினோரினா' வெற்றி பெற்றதில் மிக்க மகிழ்ச்சி. ஆழ்ந்த அன்புடன்." தொலைத்தந்தி அனுப்பிய பிறகு, பாபா ஒரு கடிதத்தையும் எழுத்துப்பலகை வழியாக எடுத்துரைத்து, அதை முடித்தார்: **"ஆகவே, பாபாவின் பிரியமான அன்பர்களே, கடைசியாக நான் மேற்கத்திய நாடுகளுக்கு விஜயம் செய்வதை சாத்தியமாக்கியதில் மகிழ்ச்சியாக இருங்கள்."**

ஹைதராபாத்திலிருந்து புறப்படும் முன்னர், ஒரு வினோதமான சம்பவம் நிகழ்ந்தது. எரச் போலீஸ் கமிஷனர் அலுவலகத்திற்குச் (POLICE COMMISSIONER) சென்று, மெஹர் பாபா, ஹைதராபாத்திலிருந்து அஹமதுநகருக்குக் கால்நடையாகப் பயணிக்க விரும்புவதாகக் கடிதம் ஒன்றை சமர்ப்பித்தார், மேலும் குழு வழியில் எங்கேனும் தடுத்து நிறுத்தப்படாமலும், தேவையற்ற சிரமங்களுக்கு ஆளாகாமல் இருக்கவும், அவர்கள் இதர உள்ளூர் காவல்துறை அதிகாரிகளுக்கு அடையாளத்தை தெரிவிக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

போலீஸ் கமிஷனர், எஸ்.என்.ரெட்டி (S.N. REDDY), எரச்சைத் தனது வீட்டிற்கு தேநீருக்காக அழைத்தார், அந்த அழைப்பைக் கண்டு ஆச்சரியமடைந்த எரச், அதை ஏற்றுக்கொண்டார்.

அவரது வீட்டில், போலீஸ் கமிஷனர் ரெட்டி அறையை விட்டு வெளியேறி, பழைய சட்டம் பொருத்தப்பட்ட புகைப்படத்துடன் திரும்பி வந்தார். பாபா தனது உயர்நிலைப் பள்ளி கிரிக்கெட் அணியுடன் சிறுவனாக இருக்கும் புகைப்படம் அது. ரெட்டி, தான் அந்த அணியில் உறுப்பினராக இருந்ததாகவும், "எங்கள் பள்ளி நாட்களிலிருந்து நான் அவரை எப்பொழுதும் நினைவில் வைத்திருப்பதாகவும் பாபாவிடம் சொல்லுங்கள்" என்றார். தேவையான ஆவணங்கள் உடனடியாகத் தயார் செய்து அனுப்பப்பட்டன. அந்நேரத்திலிருந்து, பாபாவும் அவரது தோழர்களும் அப்பகுதியில் ஒவ்வொரு நகரத்திலும் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்பட்டது மட்டுமல்லாமல், ஒவ்வோர் அறியப்படாத புறக்காவல் நிலையங்களிலும் அவர்களைத் தடுக்க வேண்டாம் என்று உள்ளூர் காவல்துறைக்கு அறிவிக்கப்பட்டது.

மினூ கராஸ், தெளலத் ஸிங் இருவரும் அறிவுறுத்தியபடி ஹைதராபாத் வந்தனர், ஆனால் மினூ மிகவும் கடுமையாக நோய்வாய்ப்பட்டதால் அவர் சில நாட்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். உடல்நிலை சீராகாததால், பாபா அவரை **14**ஆம் தேதி கராச்சிக்குத் திருப்பி அனுப்பினார்.

கோஜாகுடா மலையில் (KHOJAGUDA HILL) வேண்டிய ஏற்பாடுகளை பெண்டு செய்து முடித்தார். அக்டோபர் **10** அன்று, பாபா பெண்மணிகளை, காலையில் குகையைப் பார்க்க அழைத்துச் சென்றார். **13**ஆம் தேதி பெண்டு, குஸ்தாஜி,

பைதூல், தௌலத் ஸிங் ஆகியோர் அங்குத் தங்கி பாபா வருவதற்கு முன்பு குகைகளை சுத்தம் செய்ய சென்றனர். எரச், தேவையான பொருட்கள் மற்றும் ஐந்து மத மாதிரி சின்னங்களுடன் அவர்களை அழைத்துச் சென்றார். மலை உச்சியில் கார் நிறுத்தப்பட்டிருந்தது, மேலும் காரை எரச் பூட்டிக் கொண்டிருந்தபோது தோழர்கள் இடத்தை ஆய்வு செய்யச் சென்றனர். எரச் திரும்பிச் சென்றதும், திடீரெனக் கார் மலையிலிருந்து கீழே உருளத் தொடங்கியது. எரச் தன்னால் இயன்றவரை வேகமாக அதன் பின்னால் ஓடினார், ஆனால் கார் அதிவேகத்தில் உருண்டு, அங்கும் இங்கும் திரும்பியது, எரச் விவரித்தபடி, "அதன் பாதையில் இருந்த சிறிய பாறைகள் மீது கார் குதித்து ஓடியது." எரச் அது நொறுங்கி சின்னாபின்னமாகும் என்பதில் உறுதியாக இருந்தார், மேலும் அவர் காரின் பின்னால் 'டிக்கி'யில் நொறுங்கக்கூடிய பளிங்கு மாதிரிகள் இருந்ததால் குறிப்பாகக் கவலைப்பட்டார்.

கடைசியாக சேறு நிறைந்த வயல் காட்டில் கார் நின்றது. அதன் அருகே சென்றபோது, கண்ணாடி உடைந்ததைத் தவிர, வேறு எந்த சேதமும் ஏற்படாததைக் கண்டு எரச் ஆச்சரியமடைந்தார். மாதிரி சின்னங்கள் அப்படியே இருந்தன. கார் எளிதில் பாறைகளுக்கு எதிராக இருந்த ஆழமான பள்ளத்தில் தள்ளப்பட்டிருக்கலாம். பின்னர், அந்த சம்பவத்தை பாபாவிடம் விவரித்தபோது, அவர் வெறுமனே சிரித்தார்.

1951 அக்டோபர் **15** திங்கட்கிழமை அன்று, டானின் கார் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு, பெண்மணிகளிடம் விடைபெற்று, பாபா மதியம் **2:30** மணிக்கு மலைக்குச் சென்றார். விஷ்ணு, டாக்டர் நீலு மற்றும் ஒரு முஹமதிய இமாம் பாபாவுடன் செல்ல, டான் காரை ஓட்டிச் சென்று, அரை மணி நேரத்தில் கோஜாகுடா மலை உச்சியை அடைந்தனர். ஒரு பிரார்த்தனைக்குப் பிறகு விஷ்ணு, நீலு, டான் மற்றும் இமாம் ஹைதராபாத் திரும்பி வந்தனர்; அப்போது மலையில் பாபாவுடன் எரச், பெண்டு, குஸ்தாஜி, பைதூல், தௌலத் ஸிங் ஆகியோர் இருந்தனர். மாலையில் கனத்த மழை பொழிந்தது - அன்பிற்குரியவர் தனது மனோநாஷின் போது கடக்க வேண்டிய கற்பனை செய்ய முடியாத துன்பத்தை நினைத்து வானம் கண்ணீர் சிந்தியது.

16ஆம் தேதி, பாபாவும் அவரது தோழர்களும் மறுநாள் காலை எட்டு மணி வரை மலையில் உபவாசம் கடைப்பிடித்தனர். முஸ்லீம் துறவியின் தர்காவில், அனைத்து தோழர்களும் பாபாவுடன் அமைதியாக நின்றனர், எரச் பின்வரும் பிரார்த்தனையை ஐந்து முறை மொழிந்தார், ஒவ்வொரு முறையும் கடவுளின் வெவ்வேறு பெயர் மற்றும் அவதார புருஷருடன் அதை மாற்றினார்:

ஓ அஹுரமஸ்தா (அல்லாஹ், பரமாத்மா, கடவுள்) **உங்கள் எல்லையற்ற மகத்துவத்தின் பெயரிலும், உங்கள் அன்பான சுய ஸொராஸ்டரின் பெயரிலும்** (முஹம்மது முஸ்தஃபா, அவதார புருஷர்

கிருஷ்ணா, அவதார புருஷர் புத்தர், இறைவனின் மைந்தன் இயேசு) **மற்றும் அனைத்து தீர்க்கதரிசிகளின் பெயரிலும்** (அவதார புருஷர்கள், பரிபூரண இறை ஞானிகள்) **துறவிகள் மற்றும் உங்கள் அன்பர்கள், இன்று 1951 அக்டோபர் 16 முதல் தனது நான்கு மாதப் பணியை வெற்றிகரமாகச் செய்து முடிக்க உதவும்படி மெஹர் பாபா உங்களிடம் வேண்டுகிறார், மேலும் 1952 பிப்ரவரி 16ஆம் நாளுக்குள் தனது விருப்பத்தை நிறைவேற்றி, இறுதி இலக்கை அடையச் செய்யுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறார்**.

இதே நாளில், அக்டோபர் 16 அன்று இந்தியாவில் ஐந்து புனிதஸ்தலங்களில் அதே பிரார்த்தனை மீண்டும் மொழியப்பட்டது. பாபாவின் கட்டளைக்கு இணங்க, மெஹர்ஜி உத்வாடாவில் ஒரு ஸொராஸ்ட்ரிய நெருப்புக் கோவிலிலும், கேக்கி தேசாய் அஜ்மீரில் மொய்னுதீன் கிஷ்தி கல்லறை, வாஸ் தேவ் கெய்ன் மதுராவில் அமைந்த கிருஷ்ணரின் கோவில், கயா பிரசாத் கரே சாரநாத்தில் புத்தர் கோவில் மற்றும் விஸ்வநாத் ஹல்தங்கர் கோவாவில் ஃபிரான்சிஸ் ஸேவியரின் தேவாலயத்திலும் இருந்தனர். ஒவ்வொருவரும் உபவாசம் கடைப்பிடித்து, பிரார்த்தனையை மொழியுமாறு கட்டளையிடப்பட்டிருந்தனர். அதேபோல, ஹைதராபாத்தில் நான்கு தனித்தனி இடங்களில், டாக்டர் நீலு புத்த கோவிலிலும், விஷ்ணு இந்து கோவில், கைக்கோபாத் நெருப்புக் கோவில், டான் கிறிஸ்தவ தேவாலயம், மேலும் தேர்ந்தெடுக்கப்பட்ட முஸ்லீம் இமாமை மசூதியிலும் இருக்குமாறு பாபா அறிவுறுத்தியிருந்தார். பாபா தனது ஏகாந்தவாசத்தைத் தொடங்கியபோது இவை அனைத்தும் ஒரே நேரத்தில் நிகழ்ந்தன.

அதற்குரிய நேரம் வந்ததும், ஐந்து மதங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஐந்து பளிங்குக் கல்லால் ஆன மாதிரி சின்னங்களை தர்காவிற்குள் எடுத்து வரக் கூறி, பாபா, அவற்றுடன் இரவு 8:00 மணி முதல் காலை 3:00 மணி வரை ஏகாந்தவாசத்தில் அமர்ந்தார். தோழர்கள் அனைவரும் வெளியே கண்காணித்துக் கொண்டிருந்தனர்.

இரண்டு நாட்களுக்குப் பின்னர், 18 அன்று, பாபா காலை 8:00 மணி முதல் மாலை 3:00 மணி வரை, மலையில் அமைந்த அவரது குகையில் அமர்ந்தார். 20ஆம் நாள் காலை 6:00 மணி முதல் காலை 9:00 மணி வரை, குகைக்குக் கீழே அமைந்த இந்து கோவிலில் ஏகாந்தவாசம் மேற்கொண்டார்.

அக்டோபர் 22 அன்று, பைதூல் அழைத்து வந்த 'குலாம் ஹுஸைன்' (GHULAM HUSSEIN) என்ற உயர் நிலை மஸ்துடன் பாபா தனது குகையில் இறை தியானத்தில் அமர்ந்தார். அடுத்த நாள் பாபாவின் ஏகாந்தவாசத்தின் இறுதி நாள்.

அக்டோபர் 24ஆம் தேதி கோஜாகுடா மலையிலிருந்து ஜூப்ளி ஹில்ஸ் கோஹினூர் பங்களாவிற்கு பொருட்கள் அனைத்தும் அனுப்பப்பட்டது. அத்துடன் ஆண், பெண்மணிகளுக்கு, பாபா, கீழ்வரும் நற்செய்தியை அனுப்பினார்: **"நான்**

நலமாக இருக்கிறேன், குகையில் எனது பணி 100 சதவீதம் வெற்றிகரமாக நிறைவடைந்தது. இன்று நான் ஔரங்காபாத் வழியாக மெஹராஸாத்திற்குக் கால்நடைப் பயணத்தைத் தொடங்குகிறேன்."

மெஹராஸாத் - மனோநாஷ்

(Manonash at Meherazad)

1951 அக்டோபர் **24** புதன்கிழமை அன்று, பாபா, மதியம் **3:30** மணிக்கு கோஜாகுடா மலையிலிருந்து புறப்பட்டு, தான் மேற்கொள்ளும் இந்தக் கட்டத்தின் கடைசி நடைப்பயணத்தைத் தொடங்கினார். எஞ்சியுள்ள பொருட்களை மலையிலிருந்து கீழே எடுத்துச் செல்ல ஒரு காளை வண்டி வாடகைக்கு அமர்த்தப்பட்டது, பெண்டு அதை ஓட்டினார். எரச், குஸ்தாஜி, பைதூல், தெளலத் ஸிங் ஆகியோருடன் பாபா முதலில் புறப்பட்டார்.

பாபா, வழியில் சந்திக்கும் ஏழைகளுக்கு வழங்குவதற்காக, ஒரு பை நிறைய சில்லறை நாணயங்களைத் தயாராக வைத்திருக்குமாறு பெண்டுவிற்கு அறிவுறுத்தப்பட்டது. ஆனால் அன்று, பாபா ஏற்கனவே சென்றுவிட்டதால், பெண்டு நாணயங்கள் இருந்த பையை மாட்டு வண்டியில் வைத்திருந்தார். விரைவில், அவர் தண்ணீர் கரைபுரண்டு ஓடிய நதிக்கரைக்கு வந்ததும், காளை வண்டியை அதன் குறுக்கே அனுப்பிவிட்டு, பெண்டு நனையாமல், மறுபுறம் வண்டியைப் பிடிக்கலாம் என்ற எண்ணத்தில் வேறு வழியில் சென்றார்; ஆனால் அவர் மறுகரைக்கு வந்தபோது, வண்டியைக் கண்டுகொள்ள முடியவில்லை. அதில் பணப் பை இருந்ததால் பதட்டமடைந்து ஓடத் தொடங்கினார். வழியில், ஒரு பெரிய பாம்பு புல் வழியாகச் சென்று கொண்டிருந்ததைத் திடீரெனப் பார்த்த அவர், அதைத் தாண்டி குதித்து, அதிர்ஷ்டவசமாகக் காயமின்றி தப்பினார். சுமார் ஒரு மைல் தூரம் சென்ற பின்னர், அவர் பாபாவையும் சக தோழர்களையும் சந்தித்த வேளையில், பாபா, காளை வண்டியைப் பற்றி விசாரிக்க, பெண்டு அதைத்தான் கண்டுபிடிக்க முயற்சிக்கிறேன் என்று கூறிவிட்டு வேறு திசையில் ஓடினார். பின்னர் அதைக் கண்டுபிடித்து, பணப் பை அப்படியே இருப்பதைக் கண்டு நிம்மதியில் பெருமூச்சு விட்டார்.

பாபாவும் தோழர்களும் ஏழு மைல் தூரம் நடந்து 'லிங்கம்பள்ளி' (LINGAMPALLI) அரசு விடுதியில் அன்று இரவு ஓய்வெடுத்தனர். அவர்கள் அக்டோபர் **25** அன்று அதிகாலையில் புறப்பட்டு, ஐந்து மைல் தூரம் நடந்து 'பட்டன்சேரு' (PATANCHERU) அரசு பங்களாவை **8:30** மணிக்குச் சென்றடைந்தனர். காலை சிற்றுண்டியை முடித்து, பாபா தோழர்களுடன் பெட்டி படுக்கைகளை எடுத்துக்கொண்டு பேருந்தில் 'ஜோகிப்பேட்டை'க்குச் (JOGIPET) சென்றார். வழியில் பாபா மஸ்துகளின் ஆசீர்வாதங்களைப் பெற்று, அவர்களுடன் தனது பணியில் ஈடுபட்டார். ஜோகிப்பேட் கிராமத்தில் எந்த மஸ்தையும் கண்டுகொள்ள முடியாததால் அவர்கள் 'சங்கரெட்டி'க்குச் (SANGAREDDY) சென்று அங்கு இரவைக் கழித்தனர். மறுநாள் காலை **8:30** மணிக்கு, சங்கரெட்டியிலிருந்து தனது ஐந்து சேவக தோழர்களுடன் பேருந்தில் புறப்பட்டு, ஒரு மணி நேரத்தில்

'சதாஷிவ்பேட்டை'க்கு (SADASHIVPET) வந்தார். அன்று ஒரு மிகச் சிறந்த மஸ்துடன் பணிபுரிந்து இரவு அங்கேயே ஓய்வெடுத்தார்.

பாபாவும் தோழர்களும் அடுத்த நாள் காலை, 'ஹொம்னாபாத்' (HOMNABAD) கிராமத்திற்குப் புறப்பட்டனர், அங்கு பாபா, அரசாங்க பங்களாவில் ஒரு சாதுவைத் தொடர்பு கொள்ள நேர்ந்தது.

28ஆம் தேதி காலை ஆறு மணியளவில், அவர்கள் பன்னிரண்டு மைல் தொலைவில் அமைந்த 'சித்குப்பா' (CHITGUPPA) என்ற இடத்திற்குச் சென்று, கோலிவாடா (GOLIWADA) பகுதியில், பாபா, ஒரு மேல் நிலை மஸ்துடன் பணிபுரிந்தார். மேலும் இரண்டு மஸ்துகளைத் தொடர்பு கொண்ட பிறகு, **10:30** மணிக்கு அனைவரும் ஹொம்னாபாத் திரும்பி வந்தனர்.

அன்று நண்பகலில், ஜீவன்-சமாதி அடைந்த (உயிரோடு புதைக்கப்பட்ட) 'மனோகர் பிரபு' (MANOHAR PRABHU) என்ற இந்து துறவியின் சன்னதியில் பாபா ஏகாந்தவாசத்தில் அமர்ந்தார். மனோகரின் மாமா 'மானிக் பிரபு'வும் (MANIK PRABHU) புகழ்பெற்ற உள்ளூர் துறவி ஆவார்.

1951 அக்டோபர் **29** அன்று காலை **6:15** மணிக்கு, குழு ஹொம்னாபாத்திலிருந்து குல்பர்காவிற்குச் சென்று, அங்கு பாபா ஒரு மஸ்துடன் தொடர்பு கொண்டார். பதினோரு மணியளவில் அவர் வேறொரு மஸ்தை சந்திக்க, பேருந்தில் 'இட்கல்' கிராமத்திற்குச் சென்று, அங்கிருந்து பாதி தூரத்தைப் பேருந்திலும், மறு பாதியைக் கால் நடையாகவும் கடந்து பாபா, குல்பர்காவிற்குத் திரும்பி வந்தார். பாபா, தெளலத் ஸிங்கை அங்கிருந்து அவரது இல்லத்திற்கு அனுப்பிவைத்தார்.

அடுத்த நாள் பாபா, குல்பர்காவில் ஒரு முஸ்லீம் தர்காவில் அரை மணி நேரம் ஏகாந்தவாசத்தில் அமர்ந்து, அதன் பின்னர் ஒரு துறவியையும் மஸ்தையும் தொடர்பு கொண்டார்.

'வாரங்கல்' (WARRANGAL) நகரில் வாழும் **101** ஏழைக் குடும்பங்களுக்குப் பணத்தை 'அன்புப் பரிசாக' வழங்க விரும்பி, கிராமத்தின் தலைவரைத் தொடர்பு கொள்ள பாபா, எரச்சை முன்கூட்டியே அனுப்பிவைத்தார். ஊர் தலைவர் ஒரு மளிகைக்கடை வியாபாரி, அவரது கடைக்கு எதிரே மற்றொரு கடையும் இருந்தது. இரண்டு கடைக்காரர்களுக்கும் இடையே கடும் போட்டி நிலவியதைத் தெரியாத எரச், முதலில் ஊர் தலைவரின் கடையை நெருங்கியதும், எதிர் கடைக்காரர் அவரை அழைத்து என்ன வேண்டும் என்று கேட்டார்.

எரச் தனது நோக்கத்தை விளக்கியதும், இரண்டாவது கடைக்காரர் அவரிடம், "வேறு எவரையும் சந்திக்க வேண்டிய தேவை இல்லை, நான் எல்லாவற்றையும் ஏற்பாடு செய்கிறேன்" என்று கூறி, ஒரு காலத்தில் பண்ணை உரிமையாளர்களாக இருந்த **101** குடும்பங்களின் பட்டியலை அவர் வரைந்தார்; ஆனால் அவர்களின் நிலம் அரசாங்கத்தால் அபகரிக்கப்பட்டதால், இப்போது

மாதத்திற்கு ஒரு குறைந்த தொகையான ரூ 20 முதல் 25 வரை அரசாங்க ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. கடைக்காரர் தனது பணியாளிடம் பட்டியலைக் கொடுத்து, அந்தக் குடும்பங்களுக்கு அடையாள சீட்டுகளை விநியோகிக்க எரச்சுடன் அனுப்பினார்.

இதற்கிடையில், ஊர் தலைவருக்கு விஷயம் தெரிய வந்ததும், காவல்துறையினருக்குத் தகவல் கொடுத்தார். எரச், சீட்டுகளை விநியோகம் செய்து கொண்டிருந்த இடத்திற்கு இரண்டு காவல்துறையினர் வந்து, அவர்களில் ஒருவர் எரச் இருந்த அவலநிலையில் (மோசமாக உடையணிந்து, சவரம் செய்யாமல் இருப்பதைக் கண்டு), "இங்கே வா. என்ன செய்கிறாய்?" என்று ஆணவத்துடன் வினவினார்.

"நாகரீகமாகப் பேசுங்கள்" என்று எரச் பதிலளித்து "நான் திருடன் அல்ல. நீங்கள் ஒரு பொது ஊழியர். ஏன் இப்படி அநாகரிகமாக நடந்து கொள்கிறீர்கள்?" என்று கேட்டார்.

காவல்துறையினர், "எங்களுடன் காவல் நிலையத்திற்கு வாருங்கள்; எங்கள் காவல் நிலைய அதிகாரி உங்களுடன் பேச விரும்புகிறார்" என்றனர்.

"எனக்கு இப்போது நேரமில்லை," எரச் பதிலளித்தார். "உங்கள் அதிகாரியை இங்கு அனுப்புங்கள். நான் எந்த சட்டத்தையும் மீறவில்லை. அவர் வரவில்லை என்றால், எனது வேலையை முடித்துவிட்டு அவரைப் பார்க்கிறேன்."

எனவே, காவல்துறையினர் இருவரும் காவல் நிலையம் திரும்பிச் சென்றனர்.

ஒவ்வோர் ஏழைக் குடும்பத்தின் தலைவருடன் எரச் இரண்டாவது கடைக்குச் சென்று கொண்டிருந்தபோது, அவர், இரண்டு காவல்துறையினர் மற்றும் ஒரு போலீஸ் அதிகாரியை எதிர்கொண்டார். ஊர் தலைவர், எரச்சைக் காட்டி, காவல்துறை அதிகாரியிடம், "அவன் ஒரு முரட்டுப் போக்கிரி!" என்றார்.

எரச் நிலைமையைப் புரிந்து கொள்ளத் தொடங்கினார், இரண்டாவது கடைக்காரரிடம் சென்று, "இங்கே என்ன நடக்கிறது? உங்களுக்கும் ஊர் தலைவருக்கும் இடையே ஏதாவது பகை உள்ளதா?" என்று கேட்டார்.

"உண்மை, ஆனால் அது எனது தவறு அல்ல" என்று அந்த மனிதர் பதிலளித்தார். "அவரைத் தூண்டும் வகையில் நான் எதுவும் செய்யவில்லை என்றாலும், அவர் என் மீது பொறாமைப்படுகிறார்."

அப்போது எரச் கேட்டார், "அப்படியானால், இந்த நிகழ்ச்சியை ஊர் தலைவர் இல்லத்தில் நடத்தினால் உங்களுக்கு ஏதேனும் ஆட்சேபனை இருக்குமா? எனது மூத்த சகோதரர் முதலில் உங்களிடம் வந்து, பின்னர் ஊர் தலைவர் வீட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட குடும்பங்களுக்கு தனது அன்புப் பரிசுகளை விநியோகிப்பார்."

அதற்கு அந்தக் கடைக்காரர், "நான் ஒன்றும் கவலைப்பட மாட்டேன்,

உங்கள் பணி நடக்க வேண்டும் என்று மட்டுமே விரும்புகிறேன்" என்றார். எரச் அவரது ஒத்துழைப்பிற்காக அவரைப் பாராட்டி, ஊர் தலைவரை அணுகினார்.

காவல்துறை அதிகாரி குறுக்கிட்டு எரச்சிடம், "இங்கே என்ன நடக்கிறது?" என்று கேட்டார்.

எரச் உடனே, "நீங்கள் அதைத் தெரிந்து கொள்வீர்கள்" என பதிலளித்தார்.

அதன் பின்னர், எரச், பாபாவின் பணிக்காக அறை ஒன்றை ஒதுக்கித் தருமாறு ஊர் தலைவரைக் கேட்டுக் கொண்டதும், அவர் உடனடியாக வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார். பாபா குல்பர்காவிலிருந்து, அக்டோபர் 30 அன்று, பெண்டு, குஸ்தாஜி, பைதூல் ஆகியோருடன் வந்தார். உள்ளூர் மக்களுக்கு அவரது அடையாளம் தெரியாமல், பாபா இந்த கிராமத்தின் ஏழைகளுடன் தனது பணியைத் தொடங்கினார். ஒவ்வொருவராக வரிசையில் நின்று, ஒவ்வொரு குடும்பத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் நபரின் பாதங்களைத் தொட்டு வணங்கி, பாபா ஒவ்வொருவருக்கும் ரூபாய் 50 வழங்கினார்.

நிகழ்ச்சி முழுவதும் ஓர் இணக்கமான முடிவைக் கொண்டிருந்தது. ஊர் தலைவர் எரச்சைத் தடுக்க முயன்றதை எண்ணி வெட்கப்பட்டு தனது செயலுக்காக வருந்தினார். நிகழ்ச்சி முடிந்ததும், எரச் அதிகாரியிடம், "இப்போது நீங்கள் ஏதாவது கேட்க விரும்புகிறீர்களா?" என வினவினார்.

அதற்கு அந்த அதிகாரி, "நான் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன். இரண்டு கடைக்காரர்களுக்கு இடையே ஏற்பட்ட போட்டியால் இந்தச் சிக்கல்கள் அனைத்தும் எழுந்தன" என்று கூறினார்.

அப்போது ஹைதராபாத் பகுதியில் நிலவிய அரசியல் குழப்பம் காரணமாகவும், வழியில் பிரச்சினை எதுவும் ஏற்படாமல் இருக்கவும், பாபாவின் பாத யாத்திரை குறித்து காவல்துறைக்கு முன்கூட்டியே தகவல் தெரிவிக்கப்பட்டது. எரச் காவல்துறை அதிகாரியிடம், "மெஹர் பாபாவின் நடமாட்டம் குறித்து உங்கள் கமிஷனரிடமிருந்து ஏதேனும் சிறப்பு சுற்றறிக்கை வந்துள்ளதா?" என்று கேட்டார்.

"உண்மையில், ஆம், நாங்கள் அதைப் பெற்றுள்ளோம்."

"மெஹர் பாபாதான் இந்த அன்புப் பரிசுகளை வழங்கினார்; ஆனால் தயவு செய்து எவரிடமும் சொல்லாதீர்கள்" என்று எரச் கேட்டுக்கொண்டார்.

காவல்துறை அதிகாரி பாபாவை தூரத்திலிருந்து பார்க்க முடிந்ததை தனது அதிர்ஷ்டமாகக் கருதினார்.

இந்த ஏழை கிராம மக்களுடன் தனது பணியை நிறைவு செய்து, பாபா தோழர்களுடன் குல்பர்கா திரும்பிச் சென்றார். மானே (MANE) என்ற மாவட்ட காவல் கண்காணிப்பாளர், பாபாவின் தரிசனத்திற்காக மெஹராபாத் வந்திருந்தார். பாபா குல்பர்கா நகரில் இருப்பதை அறிந்த அவர், குடும்பத்துடன் பாபாவைப்

பார்க்க வந்தார். அந்த நேரத்தில் பாபா எவரையும் பார்க்கவில்லை என்றாலும், அவர் சம்மதம் தெரிவித்து மானே மற்றும் அவரது குடும்பத்தினரை சந்தித்தார்.

1951 அக்டோபர் **31** புதன்கிழமை **10:30** மணிக்கு, பாபாவும் அவரது நான்கு தோழர்களும் குல்பர்காவிலிருந்து 'யாத்கிரி'க்கு (YADGIRI) காலை ரயிலில் புறப்பட்டனர். நகரத்தைச் சென்றடைந்த அவர், அரசு விடுதியில் அரை மணி நேரம் ஓய்வெடுத்து, ஐந்து மைல் தொலைவில் அமைந்த 'தும்கூர்' (TUMKUR) கிராமத்தில் வாழும் ஜீவன்முக்தா, தில்குர் ஸ்வாமியைத் (TILGUR SWAMI) தொடர்பு கொள்ள நடந்து சென்றார். **1945**ஆம் ஆண்டுக்குப் பிறகு தில்குர் ஸ்வாமியுடன் பாபாவின் மூன்றாவது தொடர்பு இதுவாகும்; அவர் பாபாவைப் பார்த்ததும், அருகில் வந்து பாபாவின் பாதங்களைத் தொட விரும்பினார், ஆனால் பாபா அவரைத் தடுத்தார். இந்த இறை உணர்வை அடைந்த ஆத்மாவை மீண்டும் தொடர்பு கொள்வதில் பாபா மிக்க மகிழ்ச்சியடைந்தார்.

அற்புதமான மனநிலையில் இருந்த பாபா ஐந்து மைல் தூரம் மறுபடியும் நடந்து, ஆண் தோழர்களை யாத்கிரிக்கு அழைத்துச் சென்றார். அவர்கள் இரவு **10:30** மணிக்கு இரயிலில் பயணம் செய்து நள்ளிரவுக்குப் பிறகு குல்பர்காவிற்குத் திரும்பினர்.

தொடர்ந்து, நவம்பர் **1**ஆம் நாள், பாபாவும் ஆண் தோழர்களும் ஹொம்னாபாத்திற்கு ஒரு பேருந்தில் செல்ல நேர்ந்தது. பேருந்தில் உடல்நிலை சரியில்லாத பெண்மணி ஒருவருக்கு, சிகிச்சைக்காக பாபா ரூ **60** வழங்கினார்.

நவம்பர் **2**ஆம் நாள், பாபா ஹொம்னாபாத்திலிருந்து காலை **8:30** மணிக்கு 'துல்ஜாபூர்' (TULJAPUR) நகருக்குப் பேருந்தில் புறப்பட்டு, அன்று மதியம் துல்ஜாபூர் அரசு பங்களாவில், பாபா ஒரு துறவியையும் மூன்று மஸ்துகளையும் தொடர்பு கொண்டார். அடுத்த நாள், மேலும் மூன்று மஸ்துகள் மற்றும் ஒரு சாதுவை சந்தித்து பணிபுரிந்தார்.

நவம்பர் **4** ஞாயிற்றுக்கிழமை அன்று பாபா, துல்ஜாபூரிலிருந்து 'உஸ்மானாபாத்' சென்ற போது அவர்களின் பொருட்களை எடுத்துச் செல்ல ஒரு மாட்டு வண்டி வாடகைக்கு அமர்த்தப்பட்டது. பதினான்கு மைல்கள் நடந்து, அன்று இரவு **11:00** மணிக்கு 'உஸ்மானாபாத்' (OSMANABAD) வந்து, அரசாங்க பங்களாவில் ஓய்வெடுத்தனர்.

மறுநாள் காலை ஐந்து மணிக்கு உஸ்மானாபாத்திலிருந்து புறப்பட்டு 'பிர்' (BIR) கிராமத்திற்கு நடந்து சென்று, அங்கேயும் ஒரு பயணிகள் விடுதியில் தங்கினர். அங்கும் பல மஸ்துகளைக் கண்டுபிடித்து, பாபா நவம்பர் **6**ஆம் நாள் நான்கு மிகச் சிறந்த மேல்நிலை மஸ்துகளைத் தொடர்பு கொண்டார்.

அடுத்த நாள், **7**ஆம் தேதி 'பிர்' கிராமத்திலிருந்து புறப்பட்டு, குழு பேருந்தில் ஔரங்காபாத் சென்றடைந்தது. காலை, ஏழு மணியளவில்

அனைவரும் 'குல்தாபாத்'திற்கு நடந்து சென்று அவாலியா (AWALIA) மசூதியின் விருந்தினர் விடுதியில் தங்கினர்.

1951 நவம்பர் மாதத்தில் ஆங்காங்கே அலைந்து திரிந்த, 'மனோநாஷ்' காலகட்டத்தில் 'சாலையோர பிரார்த்தனை' ஒன்றை எழுத்துப்பலகை வழியாக குஜராத்தியில் வழங்கியதன் மொழிபெயர்ப்பு பின்வருமாறு:

ஓ பர்வர்திகார்! அளவிறுதியற்ற அருட்பெருங் கடலே! பாபா, 'மனோநாஷ்' கட்டத்தில், அவர் முன்வைத்த கால்களைப் பின்வாங்காதபடி, அவருக்கு தைரியத்தை அளித்து உதவுமாறு மிகுந்த மனத்தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறார். அவருடைய மன பலவீனத்தால் அவர் செய்த தவறுகளை மன்னித்து, அவர் ஒருபோதும் பொய் சொல்லாமல், எவருடைய மனதையும் புண்படுத்தாமல், எவருக்கும் அநீதி இழைக்காமல், அவருக்கு உண்மையாகவும் முழு மனதுடன் சேவை செய்யும் தோழர்களைத் துன்புறுத்தாமல் இருக்கும் மன உறுதியும், தைரியத்தையும் அவருக்கு வழங்குங்கள்... மேலும், அனைத்து நிபந்தனைகளையும் கடைப்பிடித்து, அவற்றை நிறைவேற்றும் அதே வேளையில், மனோநாஷ் கட்டத்தின் மூலம் நான்கு மாதங்களில் முடிவில்லா புது வாழ்வின் முடிவைக் கொண்டுவரும் அத்தகைய கருணையை அவருக்கு வழங்குங்கள்.

ஔரங்காபாத்தில், நவம்பர் 9 அன்று, பாபாவும் நான்கு தோழர்களும் நீராடிவிட்டு ஒன்பது நாட்கள் விருந்தினர் மாளிகையில் தங்க முடிவு செய்தனர். பாபா அடுத்த நாள் குல்தாபாத்தில் அமைந்த பல்வேறு முஸ்லீம் ஆலயங்களில் ஏகாந்தவாசத்தில் அமர்ந்து, இரண்டு மஸ்துகளையும் தொடர்பு கொண்டார்.

1951 நவம்பர் 11 ஞாயிற்றுக்கிழமை அன்று, பாபா, 'ஸுஃபி குதுப் ஸர்ஸாரி ஸர் பக்ஷ்' (SUFI QUTUB ZARZARI ZAR BAKSH, சாய் பாபாவின் முந்தைய பிறவிகளில் ஒன்றில் அவரது குருநாதராக இருந்தவர்) என்பவரின் குகையில் ஏகாந்தவாசத்தில் அமர்ந்தார்; மேலும் சன்னதிக்கு அருகில் ஒரு மஸ்தையும் தொடர்பு கொண்டு, தொடர்ந்து 'தௌலதாபாத்'திற்குச் (DAULATABAD) சென்றார்; மாலையில் குல்தாபாத்திற்குத் திரும்புவதற்கு முன்னர், அங்கேயும் ஒரு குறிப்பிட்ட நேரம் பல ஆலயங்களில் ஏகாந்தவாசத்தில் அமர்ந்தார்.

நவம்பர் 12ஆம் நாள், 'எல்லோரா குகை'களுக்கு (ELLORA CAVES) விஜயம் செய்த பாபா, புத்தரின் காலத்தைச் சார்ந்தவரும், சமண மதத்தை நிறுவியவருமான, கி.மு. 6ஆம் நூற்றாண்டின் சத்குரு - மஹாவீரின் (MAHAVIR) சிலைக்கு அருகில் 'இந்திர சபா' (INDRA SABHA) என்று அழைக்கப்படும் குகை 32இல் ஏகாந்தவாசத்தில் அமர்ந்தார்.

எல்லோராவிலிருந்து, பாபா 'விரோட்' (VIROD) கிராமத்திற்குச் சென்று, 'பிரஹலாத்' (PRAHLAD), 'கேஷவ் மஹாராஜ்' (KESHAV MAHARAJ) என்று அழைக்கப்படும் இரண்டு மஸ்துகளை, பேருந்து நிலையத்தில் தொடர்பு கொண்டார். கேஷவ்

மஹாராஜ் 'கஷ்யப்' (KASHYAP) கிராமத்தைச் சார்ந்தவர், அன்றைய தினம் 'தற்செயலாக' விரோட் கிராமத்திற்கு வந்தார். அன்று இரவு பதினொரு மணியளவில் பாபா ஆண் தோழர்களுடன் குல்தாபாத் திரும்பிச் சென்றார்.

நவம்பர் 14 அன்று குல்தாபாத்தில், விருந்தினர் மாளிகையில், ஸர்ஸாரி ஸர் பக்ஷின் சமாதியின் பராமரிப்பாளரான ஒரு முஸ்லீம் பெரியவரின் கால்களைக் கழுவி, தலை வணங்கி, பாபா, அவருக்கு அன்புப் பரிசாக ரூபாய் 21 வழங்கினார். அந்த முஸ்லீம் பெரியவருடன் பாபா மீண்டும் ஸர்ஸாரி ஸர் பக்ஷின் சமாதிக்குச் சென்று, அங்கு அவர் 74 ஏழைகளைத் தொடர்பு கொண்டு, அவர்களின் கால்களைக் கழுவி, தலை வணங்கி, ஒவ்வொருவருக்கும் பத்து ரூபாய் வழங்கினார். பராமரிப்பாளர் ஃபாத்திஹா (FATIHA) வழிபாட்டை வழங்கிய பின்னர் எரச், பெண்டு, பைதூல், குஸ்தாஜி ஆகியோர் பாபாவின் பணி வெற்றிகரமாக நிறைவடைய பிரார்த்தனை செய்தனர்.

குரானின் முதல் அத்தியாயமான 'ஃபாத்திஹா' இஸ்லாமியர்களால் வணங்கப்படுகிறது. இது நோய்வாய்ப்பட்ட நபர்களைக் குணப்படுத்தும் வழிமுறையாகவும், உயிரைத் துறந்தவர்களின் ஆன்மாக்களுக்கான பரிந்துரையாகவும் மொழியப்படுகிறது. முஹமது அதை 'மிகவும் மகத்துவம் மிக்க அத்தியாயம்' என்று அழைத்தார். ஃபாத்திஹாவின் முதல் வரிகள் பின்வருமாறு:

பிரபஞ்சத்தின் அதிபதியான இறைவனே போற்றி! மிகுந்த கருணையும், இரக்கமும் உள்ளவரே!

இறுதித் தீர்ப்பு நாளின் அதிபதியே! நாங்கள் உங்களை மட்டுமே வணங்குகிறோம், உங்களிடம் மட்டுமே உதவிக்காக வேண்டுகிறோம் மன்னரே!

நேர் பாதையில் எங்களை வழிநடத்துவாயாக. உமது அருளை அடையப் பெற்றவர்களின் பாதை அது;

உமது கோபத்தை சம்பாதித்தவர்கள், வழிதவறிச் செல்பவர்கள் ஆகியோரின் பாதை அல்ல அது.

அதைத் தொடர்ந்து பாபா, அவருடைய வேகத்தில், இந்து நபர் ஒருவருடன், ஐந்து இந்து குடும்பங்களின் வாசல்களில் யாசிக்கச் சென்றார். அதற்குப் பிறகு பாபா, 24 இதர இந்து குடும்பங்களின் தலைவர்களின் கால்களைக் கழுவி, தலை வணங்கிய பின்னர், அவர்களும் பாபாவிடமிருந்து தானமாகப் பணத்தைப் பெற்றுக்கொண்டனர். அவர்களில் 22 பேருக்கு பாபா தலா 10 ரூபாயும், எஞ்சிய இரண்டு குடும்பங்களில், ஒரு குடும்பத்தலைவருக்கு (பார்வையற்றவர்) 15 ரூபாயும், மற்றொருவருக்கு 20 ரூபாயும் வழங்கப்பட்டது. இந்தப் பணியில் கடைசி குடும்பத்தின் தலைவர் பாபாவிற்கு உதவியாக இருந்தார்.

1951 நவம்பர் மாதத்தில் குல்தாபாத் நகரில் இருந்த வேளையில், மெஹர் பாபா '**மனம் வருந்தி இரங்கும் பிரார்த்தனை**'யை (PRAYER OF REPENTANCE) எழுத்துப்பலகை வழியாக எடுத்துரைத்தார் ("**இரக்கமுள்ள இறைவனே, எங்கள் எல்லா பாவங்களுக்காகவும் நாங்கள் வருந்துகிறோம்**...") ஆனால் ஒரு வருடம் வரை இந்தப் பிரார்த்தனை பகிரங்கமாக மொழியப்படவில்லை.

நவம்பர் 15 அன்று, பாபா ஒரு கத்தோலிக்க பாதிரியாரின் ஆசீர்வாதத்தை விரும்புவதாகக் குறிப்பிட்டார். அவரது நான்கு தோழர்களுடன், பாபா, வாடகைக்காரில் ஔரங்காபாத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார், அங்கு அவர் 'தந்தை பெர்கர்' (FATHER BERGER) என்ற வயதான ஐரோப்பிய பாதிரியாரின் கால்களைத் தொட்டபோது, பாதிரியார் ஆசீர்வாதங்களை வழங்கினார்: "நான் உங்களை பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியின் (THE FATHER, THE SON & THE HOLY GHOST) பெயரில் ஆசீர்வதிக்கிறேன்." பாபா அவர் முன் மண்டியிட்டு நின்று, எரச் மூலம், "**நன்றி, தந்தையே**" என்றார். அங்கிருந்து பாபா பார்சி கோபுரத்திற்கு விஜயம் செய்து, கஸ்தி-நூலை இடுப்பில் கட்டிக் கொண்டு, அவர் பூஜை அறையில் சிறிது நேரம் அமர்ந்தார்.

அதன் பின்னர், அவர்கள் உள்ளூர் கிறிஸ்தவ கல்லறைக்குச் சென்றனர்; பிரார்த்தனை வேளையில் பாபா ஒரு வேப்ப மரத்தின் கீழ் கல்லறை அருகில் ஏகாந்தவாசத்தில் அமர்ந்தார். ஒரு கட்டத்தில், பாபாவிற்கு இடையூறு ஏற்படுவதைத் தடுக்க, எரச் இறுதி ஊர்வலத்தை நிறுத்திவிட்டு, பாபா கைகளைத் தட்டும் வரை இறந்தவரைப் பற்றிய துக்கத்தில் இருக்கும் குடும்பத்தினருடன் உரையாட வேண்டியதாயிற்று.

பாபா தோழர்களுடன் அன்று மதியம் 3:30 மணியளவில் ஔரங்காபாத் நகரில் அரசு விடுதி ஒன்றை வந்தடைந்தபோது, பாபா மிகவும் மகிழ்ச்சியாகக் காணப்பட்டார்.

1951 நவம்பர் 16 வெள்ளிக்கிழமை அன்று, பாபா நான்கு தோழர்களுடன் நடைப்பயணமாக ஔரங்காபாத்திலிருந்து புறப்பட்டார். ஐந்து மைல்களைக் கடந்த பிறகு, பாபா ஒரு சாது-மஸ்தைத் தொடர்பு கொண்டு, பின்னர் அரசு பங்களாவிற்குத் திரும்பிச் சென்றார்.

மறுநாள் காலையில் பாபாவும் தோழர்களும் பேருந்தில் 'பைத்தான்' (PAITHAN) நகருக்குச் சென்று, சத்குரு ஏக்நாத் மஹாராஜின் (SADGURU EKNATH MAHARAJ) சமாதிக்கு அருகில் ஏகாந்தவாசத்தில் அமர்ந்தார். அங்கு பாபா, மூன்று மஸ்துகளைத் தொடர்பு கொள்ள நேர்ந்தது - முற்றிலும் நிர்வாணமாக இருந்த சிறுவன் ஒருவனுக்கு பாபா உணவளித்தார்.

பாபாவும் தோழர்களும் காலை 11:30 மணிக்கு ஔரங்காபாத் திரும்பி வந்தனர். மதிய உணவுக்குப் பிறகு, பிற்பகல் 2:00 மணிக்கு, அவர்கள் ரயிலில் 'ஜால்னா'விற்குச் (JALNA) சென்று, 'சல்லேவாலா பாபா' (CHHALLEWALA BABA) என்ற

மேல்நிலை மஸ்தைத் தொடர்பு கொண்டார். சந்திப்பின் போது, அவரை மெஹராபாத்திற்கு அழைத்துச் செல்லுமாறு அந்த மஸ்த் பாபாவை வற்புறுத்தினார், ஆனால் இந்த நேரத்தில் அது சாத்தியமில்லை என்று பாபா விளக்கினார். அஹமதுநகரில் வாழும் ஆதி சீனியரைப் பார்க்குமாறு அவருக்கு அறிவுறுத்தி, எரச் ஒரு காகிதத்தில் விலாசத்தை எழுதி, பாபா கையொப்பமிட்டதால் அது உண்மையானது என்று ஆதி அறிந்து கொள்வார் என்ற எண்ணத்தில் அது மஸ்திடம் கொடுக்கப்பட்டது. இருப்பினும், சல்லேவாலா இந்த அறிவுறுத்தலை நிறைவேற்றவில்லை; ஒருவேளை இது பாபா, மஸ்த் இருவருக்கும் இடையேயான செய்திப் பரிமாற்றமாகக் கூட இருக்கலாம். அன்று இரவு 9:30 மணிக்கு பாபா தோழர்களுடன் ஔரங்காபாத் திரும்பினார்.

1951 நவம்பர் 18 ஞாயிற்றுக்கிழமை அன்று, பாபா இரண்டு நாட்களுக்கு முன்னர் அவர் தொடர்பு கொண்ட ஔரங்காபாத்தில் வாழும் சாது-மஸ்தை மீண்டும் தொடர்பு கொண்டார். இதற்கிடையில், எதிர்வரும் 21ஆம் நாள் பெண்மணிகளை காரில் மெஹராஸாத்திற்கு அனுப்புமாறு விஷ்ணுவிற்குத் தொலைத்தந்தி அனுப்பப்பட்டது. அங்கிருந்த ஆண் தோழர்கள், விஷ்ணு, டாக்டர் நீலு, காக்கா, டாக்டர் டான், கைக்கோபாத், கிருஷ்ணா நாயர் ஆகியோர் ரயிலில் பின்தொடருமாறும் அறிவுறுத்தப்பட்டனர். நள்ளிரவில், பாபா ஔரங்காபாத்திலிருந்து புறப்பட்டு மறுநாள் காலை 'நாந்தேட்' வந்தடைந்தார். பாபாவும் தோழர்களும் பிரார்த்தனையை முடித்து, தங்கள் பெட்டி படுக்கைகளை அரசு விடுதியில் வைத்துவிட்டு, பாபா, 'குரு கோவிந்த் ஸிங்'கின் (GURU GOVIND SINGH) சன்னதியில் சிறிது நேரம் ஏகாந்தவாசத்தில் அமர்ந்தார். நாந்தேட் நகரில் பாபா எட்டு மஸ்துகளைத் தொடர்பு கொண்டு, அனைவரின் ஆசீர்வாதத்தையும் நாடினார். ரயிலில் ஔரங்காபாத் திரும்பிச் சென்ற அவர்கள், அன்று இரவு 10:15 மணிக்கு அங்கு வந்து சேர்ந்தனர்.

நாந்தேட் நகரில், தெளலத் ஸிங் மீண்டும் பாபாவுடன் வந்திணைந்தார். அவருக்கு ஜுரம் அதிகமாக இருந்தாலும், பாபாவின் கட்டளையை ஏற்று வந்திருந்தார். நவம்பர் 20ஆம் நாள் முழுவதும், பாபா ஔரங்காபாத்தில் பைதூல், குஸ்தாஜி, பெண்டு ஆகியோருடன் மஸ்துகளைத் தொடர்பு கொள்வதில் மும்முரமாக இருந்த வேளையில், தெளலத் ஸிங்கை கவனிப்பதற்காக எரச் அரசு பங்களாவில் தங்குமாறு அறிவுறுத்தப்பட்டார். உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால், தெளலத் ஸிங்கால் கால் நடையாகச் செல்ல முடியவில்லை, எனவே பாபா அவரை மறுநாள் பெங்களூருக்குத் திருப்பி அனுப்பினார்.

நவம்பர் 21ஆம் நாள் காலை, எரச், பெண்டு, பைதூல் குஸ்தாஜி ஆகியோருடன் பாபா பேருந்தில் டோக்காவிற்குப் (TOKA) புறப்பட்டுச் சென்று, பிற்பகல் இரண்டு மணியளவில் 'கோடேகாவ்ம்' (GHODEGAON) கிராமத்தை

வந்தடைந்து பி.டபிள்யூ.டி. (P.W.D. – POWER WORKS DEPARTMENT STOREHOUSE) சேமிப்புக் கிடங்கில் இரண்டு மணி நேரம் ஓய்வெடுத்தனர். ஸரோஷுக்குச் சொந்தமான சரக்கு வண்டியை தோழர்கள் கவனித்த வேளையில், ஓட்டுநர் அவர்களை உடன் அழைத்துச் செல்வதாகக் தெரிவித்தார். பொருட்களை ஏற்றிக்கொண்டு, பெண்டு, பைதூல் இருவரும் ஆறு மணிக்கு சரக்கு வண்டியில் புறப்பட்டனர். பாபா ஏற்கனவே எரச், குஸ்தாஜி இருவருடன் நடந்தே அவரது பயணத்தைத் தொடர்ந்தார். நான்கு மைல்களைத் கடந்த பிறகு, சரக்கு வண்டியும் அவர்களைச் சென்றடைந்தது. அதைத் தொடர்ந்து, பாபா தோழர்களுடன் சரக்கு வண்டியில் பயணம் செய்து அன்று இரவு ஒன்பது மணிக்கு இமாம்பூரை (IMAMPUR) வந்தடைந்தார். அங்கு அவர்கள், முன்னர் அரசு பங்களாவாகப் பயன்படுத்தி கைவிடப்பட்ட மசூதியில் தங்கினர்.

இரவில், மசூதியில் இருந்த நேரம் முழுவதும், ஒவ்வொரு தோழரும் இரண்டு மணிநேரம் பாபாவின் அருகில் கண்காணிப்பாளராகப் பணிபுரிய வேண்டியதாக இருந்தது. இந்த மசூதியில் எரச், பாபாவுடன் இருந்த வேளையில் ஒரு மறக்கமுடியாத சம்பவம் நிகழ்ந்தது. பழமையான பள்ளிவாசல் பாழடைந்த நிலையில், அனைத்து பக்கங்களிலும் வெட்டப்படாத புற்களால் சூழப்பட்டிருந்தது. எரச் கண்காணித்துக் கொண்டிருந்த நேரத்தில், திடீரென ஒரு சத்தம் கேட்கவே, பாபா, அது எங்கிருந்து வந்தது என்று விசாரித்தார். உள்ளே கும்மிருட்டாக இருந்தது, அவர்களிடம் விளக்குகளும் இல்லை. பாபாவின் கை சைகைகளைப் புரிந்துகொள்ளும் வகையில் எரச் தீக்குச்சிகளை ஒவ்வொன்றாக எரியவிட்டு, இறகுகள் படபடக்கும் சத்தத்தைக் கேட்டு எட்டிப்பார்த்தார். சுவரில் இருந்த ஒரு பள்ளத்தில் பறவை கூடு கட்டியிருப்பதைக் கண்டு, அவர் பாபாவிற்குத் தெரிவித்ததும், அவர் அதைப் பிடித்து வெளியே எறியுமாறு கூறினார். எரச்சும் அவ்வாறே செய்ய ஆயத்தமானபோது, பாபா, கைகளைத் தட்டி சைகையால் தெரிவித்தார், **“நள்ளிரவில் பறவையை வெளியே எறியும்படி உங்களுக்கு அறிவுறுத்தியது மிகவும் கொடூரமான செயல், அதற்காக நான் வருந்துகிறேன்.”**

காலையில் பெண்டு, குஸ்தாஜி, பைதூல், எரச் ஆகியோரிடம் பாபா, **“இந்த மனிதாபிமானமற்ற செயலுக்குப் பிராயச்சித்தம் செய்ய ஒரே ஒரு வழி உள்ளது; எனது சக தோழர்களாகிய நீங்கள் என் மீது உமிழ்நீரைத் துப்புவதோடு, உங்கள் காலணிகளால் என்னை அறைய வேண்டும்!”** என்றார்.

பாபா தனது மேலங்கியை அகற்றிய அவ்வேளையில், அனைவரும் பாபா மீது எச்சிலைத் துப்பியதோடு, தத்தமது காலணிகளால் அவரது முழங்காலில் பலமுறை அறைந்தனர் - இது நமது நாட்டில் மிகவும் அவமானத்திற்குரிய செயலாகக் கருதப்படுகிறது. பிராயச்சித்தமாகத் தனது

காதுகளைத் தானே கிள்ளிய பாபா, **"எனது கோரச்செயலுக்கு இது ஒரு பாடம்; இனிமேல் நான் ஒருபோதும் கொடூரமாக இருக்க மாட்டேன்"** என்று கூறினார்.

இந்த வார்த்தைகளைக் கேட்டு காலம் கண்ணீர் சிந்தியது. "இறைவனைத் தேடுபவரின் பாத்திரத்தில் இது என்ன ஒரு பாடம்! என்ன ஒரு பரிபூரணத்துவம்! இமாம்பூரில் நடந்த இந்த 'மனமிரங்கி வருந்தும்' சம்பவத்தை நினைத்துப் பார்க்கும்போது, பல தலைமுறைக்கும் பக்தர்கள் தங்கள் அன்பிற்குரியவருக்காக இரத்தக் கண்ணீர் சிந்துவார்கள்!"

நவம்பர் 22 அன்று இமாம்பூரில், பைதூல் சாதம் மற்றும் பருப்பு தயார் செய்தார்; பெண்டு அவர்களின் பொருட்களை எடுத்துச் செல்ல ஒரு வாகனத்தை ஏற்பாடு செய்தார்.

மறுநாள் காலை ஒன்பது மணியளவில், மாட்டு வண்டியில் பொருட்களை ஏற்றிக்கொண்டு, இமாம்பூரிலிருந்து மெஹராஸாத்திற்குக் கால்நடையாகப் புறப்பட்டனர். அன்று, பாபா தனது வெள்ளை மேலங்கி ஒன்றையும் பச்சை நிற தலைப்பாகையையும் அணிந்திருந்தார்.

மெஹராஸாத் அருகே அமைந்த தெம்பி மலையில், பாதிரி, மலை உச்சியில், 1947ஆம் வருடம் பாபா, ஏகாந்தவாசத்திற்காக பயன்படுத்திய இரண்டு சிறிய அறைகளை பழுதுபார்த்து சரிசெய்தார். பாபாவின் விருப்பத்திற்கிணங்க, எவரும் அவரைப் பார்க்கவில்லை. மெஹரா, மணி இருவர் மட்டுமே மலையேறும் பாதையில் பாதி தூரத்தில் அவரை சந்திக்க அனுமதி வழங்கப்பட்டது. நவம்பர் 22ஆம் தேதிக்குள், எஞ்சிய ஆண், பெண்மணிகள் அனைவரும் மெஹராஸாத் திரும்பி வந்தனர்.

இமாம்பூரிலிருந்து பத்து மைல் தூரம் நடந்து, பாபா, 1951 நவம்பர் 23 வெள்ளிக்கிழமை மதியம் எரச், பெண்டு, பைதூல், குஸ்தாஜி ஆகியோருடன் மெஹராஸாத்தை வந்தடைந்தார். மெஹராஸாத் கட்டிடங்களுக்குப் பின்புறமாகச் சென்று, மெஹராஸாத்தில் தனது பாதங்களைப் பதிக்காமல், பாபா மலையில் ஏறத் தொடங்கினார். ஏற்கனவே அறிவுறுத்தியபடி, மெஹரா, மணி இருவரும் அவரை பாதி வழியில் சந்தித்தனர். நான்கு ஆண் தோழர்களும் மெஹராவைத் தற்செயலாகப் பார்ப்பதைக் தவிர்க்க மலையின் மறுபுறத்தில் மறைந்துகொண்டனர்.

மெஹரா, மணி இருவரிடமும், **"எனது உடல்நிலை நன்றாக உள்ளது. ஹைதராபாத்திலிருந்து வரும் வழியில் சில சிரமங்களை சந்திக்க நேர்ந்தாலும், எனது உடல்நிலை எவ்வகையிலும் பாதிப்பின்றி இருந்தது. கிட்டத்தட்ட 200 மைல்கள் நடந்து, பேருந்து மற்றும் ரயில் வழியாக மீதிப் பயணத்தை மேற்கொண்டோம். டோக்காவில் அமைந்த பிரவாரா நதியின் சங்கமத்தைக் கடந்து, இமாம்பூரில் ஒரு மசூதியில் தங்கினோம். ஒருமுறை, இடைவிடாமல் 20 மைல்கள் தொடர்ந்து நடந்தோம்"** பாபா தனது பயணத்தைப்

பற்றி கூறிய பிறகு, மலையின் மீது ஏறுவதைத் தொடர்ந்தார்; மெஹராவும் மணியும் மெஹராஸாத் திரும்பிச் சென்றனர்.

ஆதி சீனியர், பாதிரி இருவரையும் அழைத்து, பாபா அவர்களின் முயற்சிகளைப் பாராட்டினாலும், அவருடைய அறிவுரைகள் சரியாக நிறைவேற்றப்படவில்லை என்பதைக் குறிப்பிட்டு, மூன்று நாட்களுக்குள் சில மாற்றங்களைச் செய்ய உத்தரவிட்டார்.

அறைகளைப் பழுதுபார்ப்பதைத் தவிர, பாதிரி, எரச், பெண்டு, பைதூல், குஸ்தாஜி ஆகியோருக்காக ஒரு சிறிய கொட்டகையும் அமைக்கப்பட்டது. ஐந்து மதங்களின் பளிங்கு கல்லாலான மாதிரி சின்னங்கள் அவர்களுடன் எடுத்துச் செல்லப்பட்டு, பாபாவின் அறையில் வைக்கப்பட்டன. மலை உச்சியில் தொடர்ந்து பலத்த காற்று வீசியதால், இரவும் பகலும் அங்குத் தங்குவது மிகவும் சிரமமாக இருந்தது. இரவில் மழை பெய்தது, தோழர்களின் கொட்டகையில் தண்ணீர் கசிந்து, அனைவரும் நனைய வேண்டியதாயிற்று; குளிர்காலம் ஆதலால் தோழர்கள் இரவு முழுவதும் நடுங்கிக் கொண்டிருந்தனர். மேலும், ஒவ்வொரு தோழரும் இரவு நேரத்தில் பாபாவைக் கண்காணித்துக்கொள்ள, ஒவ்வொருவரும் குறிப்பிட்ட நேரத்தில் எழுந்திருக்க வேண்டும்.

அஹமதுநகரிலிருந்து ஒரு நாளைக்கு ஒரு முறை அவர்களின் உணவு அனுப்பப்பட்டது. எரச்சின் சகோதரி மெஹரு தமானியா உணவைத் தயார் செய்து, ராம்சந்திரா என்ற சிறுவனுடன் அனுப்பி வைத்தார். பாபா, ஒரு நாளைக்கு இரண்டு தனிப்பட்ட உணவுப் பொருட்களை மட்டுமே அனுப்பும்படி அறிவுறுத்தியதை அவர் செய்தாலும், இந்த இரண்டும் பல உணவுப் பொருட்களின் கலவையாக இருந்தது!

நவம்பர் 24ஆம் நாள் காலையில், பாபா, மெஹரா, மணி இருவரையும் சிறிது நேரத்திற்காக மலை உச்சிக்கு வரவழைத்து, **"எனது பணியில் நான் முழு திருப்தி அடைந்தாலும், மாயா, தடைகளை உருவாக்குகிறது"** என்று அவர்களுக்குத் தெரிவித்தார். பாபாவின் அறையிலும் மழைநீர் கசியத் தொடங்கியது, எனவே அடுத்த இரண்டு நாட்களுக்கு கீழே மெஹராஸாத்தில் தங்கப்போவதாக பாபா கூறினார்.

பிற்பகல் நான்கு மணிக்கு, பாபா மலையிலிருந்து இறங்கி வந்து மெஹராஸாத்தில் ஓர் அறையில் தங்கினார். இதற்கிடையில், அவரது இரண்டு அறைகளும், தோழர்களின் தற்காலிக கொட்டகையையும் சரிசெய்யுமாறு அறிவுறுத்தப்பட்டது. தோழர்களுக்கான கொட்டகை பாபாவின் அறைக்கு மிக அருகில் கட்டப்பட்டிருந்ததால், அவரது ஏகாந்தவாசத்திற்கு இடையூறு விளைவிக்காத வகையில், கொட்டகையையும் நகர்த்த வேண்டியிருந்தது. பழுதுபார்க்கும் காலம் முழுவதும் நான்கு தோழர்களும் மலையில் இருந்தனர்.

நவம்பர் 26 அன்று பாபா, மெஹரா, மணி இருவரையும் அழைத்து, **"எனது 40 நாள் பணி முற்றிலும் வெற்றிகரமாக உள்ளது, ஆனால் எஞ்சியுள்ள 80 நாள் பணி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது"** என்று தெரிவித்தார்.

அடுத்த நாள், பாபா **'மனோநாஷ் மலை'** என்று குறிப்பிட்டு தனது அறையில் ஏகாந்தவாசத்தைத் தொடர்ந்தார், மேலும் நான்கு தோழர்களும் மாறி மாறிக் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர். பாபா பகலில் 'கீழ்' குடிலில் பணிபுரிந்து, இரவில் 'மேல்' குடிலில் தங்கி வந்தார்.

சில நேரங்களில் பணிக்காக அழைக்கப்பட்ட பாதிரி, ஏகாந்தவாசத்தில் இருந்தபோது பாபாவின் புகைப்படத்தை எடுத்தார். இவர் நவம்பர் 27ஆம் நாள் ருஸ்தம் காக்காவின் '16'எம்எம் கேமராவை இரவல் வாங்கி, பாபாவின் அனுமதியுடன், அவர் மலை உச்சியில் பாபாவின் கருப்பு-வெள்ளை படத்தை சுமார் மூன்று நிமிடங்கள் படமாக்கினார். பாதிரி பின்னர் அதைப் பார்த்தபோது, பிரமாதமாக இருந்ததாகக் கூறினார். "மலையில் காற்று வீசியபோது, பாபா தனது தலைமுடியை நெற்றியிலிருந்து ஒதுக்கித் தள்ளுவது போன்ற மிகவும் அருகாமையில் எடுக்கப்பட்ட காட்சி, உண்மையில் பிரமிக்கத்தக்க வகையில் இருந்தது" என்று பாதிரி பின்னர் கூறினார். பாபாவின் ஏகாந்தவாச பணிக்குப் பிறகு, பாதிரி அந்தப் படத்தை அவரிடம் ஒப்படைத்ததும், பாபா அதைத் தனது கோட் பாக்கெட்டில் திணித்தார், அதுதான் கடைசியாக பாதிரி பார்த்தது! அதை இன்னும் கண்டுகொள்ள முடியவில்லை.

1951 டிசம்பர் 1 சனிக்கிழமை முதல், பாபா, நான்கு நாட்கள் தண்ணீர் மட்டுமே அருந்தி உபவாசம் கடைப்பிடித்தார், மேலும் தொடர்ந்து மூன்று நாட்கள் திரவ ஆகாரம் உட்கொண்டார். ஒரு கட்டத்தில், **"நான் ஒவ்வொரு கணமும் இறந்து கொண்டிருப்பதுபோல் உணர்கிறேன், இறந்து மிகவும் மோசமாக இறக்கிறேன்!"**

பாபா ஒரு சிறந்த மஸ்தை அழைத்து வர பைதூலை அனுப்பினார். அவர் 6ஆம் தேதி 'தானே' (THANE) நகரிலிருந்து ஐந்தாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்ட மஸ்த் 'பட்டான் பாபா'வுடன் (PHATHAN BABA) திரும்பி வந்தார். பாபா, மலையில் தனது குடிலை விட்டு வெளியேறி, அன்று மெஹராஸாத்திற்கு வந்து, புது வாழ்வின் கூண்டுவண்டிக்கு எதிரே அமைந்த அறை ஒன்றில் அவர் தனியாக இருந்தார் (பின்னர் அது பாபாவின் அறையாக மாறியது), அங்கு அவர் தனது மனோநாஷ் பணியில் தீவிரமாக கவனம் செலுத்தினார்; மேலும், தினமும் பட்டான் பாபாவுடன் இரண்டு வாரங்கள் பணிபுரிந்தார்.

இந்தப் பணி டிசம்பர் 19 வரை நீடித்தது. திருப்தியடைந்த பாபா, மஸ்தை பைதூலுடன் மீண்டும் தானே நகருக்கு அனுப்பி வைத்தார்.

கடுமையான வானிலை காரணமாக, மலையில் அமைந்த இரண்டு அறைகளையும் அகற்றிவிட்டு, ஒரு வாரத்திற்குள் அவற்றை மெஹராஸாத்தில் மீண்டும் ஒரே அறையாக இணைக்குமாறு பாபா, பாதிரியைக் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, அவரும் அப்படியே செய்தார்; இரண்டு நாட்களில் அனைத்து வேலையும் முடிந்தது. அறை அனைத்து பக்கங்களிலும் மூங்கில் பாய்களால் மறைத்து கட்டப்பட்டது; மேலும் குஸ்தாஜி, பைதூல், பெண்டு, எரச் ஆகியோர் அந்த அடைப்புக்குள்ளே இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டனர். நான்கு தோழர்களும் மெஹராஸாத்தில் இதர நபர்களைப் பார்ப்பதற்கும், அதுபோல் அந்த நபர்கள் மூடப்பட்ட பகுதிக்குள் நுழையவும் தடை விதிக்கப்பட்டது.

பாபா, மலையடிவாரத்தில் செய்யவிருந்த பணியின் 'இணைப்புச் சங்கிலி'யாக சேவக தோழர்கள், அனைத்து ஏற்பாடுகளும் டிசம்பர் 14ஆம் நாள் முடிவடையும் வரை மலையிலேயே இருந்தனர், பின்னர் அவர்களும் மெஹராஸாத்திற்கு இடம்பெயர்ந்தனர். அதே நாளில், அஹமதுநகரிலிருந்து ஒரு முஸ்லீம் இமாம், காலை 8:00 மணிக்கு பாபா முன்னிலையில் குரானிலிருந்து சில பாகங்களை அரை மணி நேரம் வாசிக்க அழைக்கப்பட்டார்; வாசிக்கும் வேளையில் ராம்ஜூவை அருகிலிருக்குமாறு அறிவுறுத்தினார். ஆதி சீனியர், டாக்டர் டான் இருவரும் அன்று வருகை தந்தனர்.

வாசித்து முடித்ததும், பாபா வழக்கத்திற்கு மாறான ஒரு கருத்தை எடுத்துரைத்தார்: "**ஐந்து நிமிடங்களுக்குப் படித்ததில் மட்டுமே என்னால் கவனம் செலுத்த முடிந்தது. எஞ்சிய நேரம் எனது மனம் பொருத்தமான, பொருத்தமற்ற, உயர்ந்த, தாழ்ந்த, நல்லது, தீயது போன்ற எண்ணங்களால் நிறைந்திருந்தது.**"

1951 டிசம்பர் 15 சனிக்கிழமையன்று, பாபா மெஹராஸாத்தில் அண்மையில் இணைக்கப்பட்ட அறையில் ஓய்வெடுத்தார்; ஆனால் ஏகாந்தவாசத்தைத் தொடங்குவதற்கு முன்பு, காலை சுமார் 8:30 மணியளவில் வழக்கமான பிரார்த்தனைகள் மொழியப்பட்டன. ஸொராஸ்டர், கிருஷ்ணா, புத்தா, இயேசு, பாபாஜான் ஆகியோரின் சித்திரங்கள் மற்றும் ஐந்து மதங்களின் மாதிரி சின்னங்கள் ஒரு மேசையில் வைக்கப்பட்டன. முஹமது நபியின் (இஸ்லாமிய மதத்தில் தடைசெய்யப்பட்ட) சித்திரம் இல்லாததால், ஒரு வெற்றுக் காகித்தின் விளிம்புகளில் சட்டம் பொருத்தி, கொண்டு வரப்பட்டது, அதில் மரியாதைக்குரிய பெயர்கள் எழுதப்பட்டன: அல்லா, முஹமது, ∴பாத்திமா, ஹாஸன் மற்றும் ஹுஸைன். ஒவ்வொரு குறிப்பிட்ட மதத்தின் பிரார்த்தனையை மொழியும்போதும், அதன் அவதார புருஷரின் சித்திரம் அல்லது வணக்கத்திற்குரிய பெயர்களின் பட்டியல் முன் வைக்கப்பட்டது.

பிரார்த்தனையைத் தொடங்கும் முன், பாபா, "**நீங்கள் அனைவரும் முழு மனதுடன் பிரார்த்தனையில் பங்கேற்க வேண்டும். அவ்வாறு செய்யாமல்,**

நீங்கள் தவறாகப் புரிந்துகொள்ளும் நேரத்தில் தீய எண்ணங்கள் உருவாக வாய்ப்புள்ளது, இது எனது பணியை பெரிய அளவில் பாதிக்கும்" என்று எச்சரிக்கை செய்தார்.

இந்த விழாவில் ஆதி சீனியர், பைதூல், டாக்டர் டான், எரச், குஸ்தாஜி, கைக்கோபாத், காக்கா, கிருஷ்ணா, டாக்டர் நீலு, பெண்டு, பாதிரி, ராம்ஜூ, விஷ்ணு ஆகியோர் கலந்து கொண்டனர். அன்று காலை ஒன்பது மணிக்கு விழா ஆரம்பமானது. முதலில், கைக்கோபாத் அவெஸ்தாவிலிருந்து பிரார்த்தனையை மொழிந்தார்; அப்போது பாபா தனது இடையில் கஸ்தியை (ஸொராஸ்ட்ரிய புனித நூல்) அணிந்து கொண்டார்.

பிரார்த்தனை முடிந்ததும், பாபா ஸொராஸ்டரின் சித்திரத்திற்குத் தலை வணங்கி, பின்னர் அவரது தலையை முதலில் கைக்கோபாத்தின் பாதங்களிலும், தொடர்ந்து பளிங்கு கல்லில் உருவாக்கப்பட்ட மாதிரி சின்னத்தின் (ஒரு கலசத்தில் எரியும் புனித நெருப்பு) மீதும் வைத்தார்.

பாபா பிற மதங்களைப் பொறுத்தவரையில் இதே நடைமுறையைப் பின்பற்றினார், அதன் ஒவ்வோர் அவதார புருஷரையும் வணங்கி, பளிங்கு மாதிரி சின்னத்தில் தலையை வைத்துத் தொழுதார். மேசையின் மீது வைக்கப்பட்டிருந்த குருதுவாராவின் (சீக்கியர் கோயில்) புகைப்படத்தையும் பாபா வணங்கினார். முஸ்லீம் தொழுகையின் போது, பாபாஜானின் புகைப்படம் பல பெயர்கள் அடங்கிய பட்டியலுடன் வைக்கப்பட்டது. பாரசீக மொழியில், பாபா செய்த பணி வெற்றிகரமாக முடிய கடவுளின் ஆசீர்வாதத்தைப் பெறுமாறு பாபா பைதூலிடம் கேட்டுக்கொண்டார். காலை **10:30** மணிக்கு விழா நிறைவடைந்ததும், பாபா விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் இனிப்புகளை வழங்கினார், பின்னர் அனைவரும் அங்கிருந்து கலைந்து சென்றனர். ஆதியும் ராம்ஜூவும் அஹமதுநகருக்குப் புறப்பட்டனர்; பாபா அவரது அறைக்குச் செல்ல, இதர ஆண் தோழர்கள் தத்தமது இருப்பிடத்திற்குச் சென்றனர். ஐந்து பளிங்கு மாதிரி சின்னங்களுடன் அவதார புருஷர்கள் மற்றும் இஸ்லாமிய பெயர்களின் படங்களும் பாபாவின் அறையில் வைக்கப்பட்டன.

கைக்கோபாத், குஸ்தாஜி இருவரும் பாபாவின் பணி திருப்திகரமாக நிறைவேற தினமும் பிரார்த்தனை செய்யத் தொடங்கினர். குஸ்தாஜி மௌனம் அனுஷ்டித்ததால், எரச் அவர் சார்பாக உரத்த குரலில் பிரார்த்தனையை மொழிந்தார். இந்த நேரத்தில் பாபா தனது அறையை விட்டு வெளியே வரவில்லை. பைதூல் அழைத்து வந்த மஸ்துகள் வெளியே இருந்தனர், பாபா அவர்களுடன் ஒரு தனி அறையில் பணிபுரிந்தார். இம்முறை, பாபாவின் பணியின் நிமித்தம், அழைக்கப்படும் போது பாதிரி மட்டுமே அறைக்குள் நுழைய அனுமதிக்கப்பட்டார், மேலும் அவர் மூலம் சம்பந்தப்பட்டவர்களுக்கு தகவல்கள் தெரிவிக்கப்பட்டன.

பத்து நாட்கள் கழிந்தன. 1951 டிசம்பர் 24 திங்கட்கிழமை பாபா, தனது அறையிலிருந்து வெளியே வருவதற்கு முன்னர், உடலளவில் பிரிந்து சென்ற அனைத்து சீடர்கள் மற்றும் அன்பர்களுக்காகப் பிரார்த்தனை செய்யப்பட்டது. பாபா அந்தப் பிரார்த்தனைகளை மூன்று நாட்களுக்கு முன்பே எழுத்துப்பலகையில் எடுத்துரைத்தார். அன்று காலை ஒன்பது மணியளவில், (ஆதி சீனியர் அழைத்து வந்த) இரண்டு ஏழை முதியவர்கள் பாபாவின் அறைக்குள் அழைத்து வரப்பட்டனர். பின்வரும் பிரார்த்தனையை மொழிந்தபோது, அவர்கள் இருவரையும் தவிர எரச், பெண்டு, பைதூல், குஸ்தாஜி ஆகியோர் மட்டுமே அதில் கலந்து கொண்டனர்:

இன்று, 1951 டிசம்பர் 24ஆம் நாள், இந்தப் புது வாழ்வில், பிரிந்து சென்ற பலரின் பக்தி, அன்பு மற்றும் சேவைக்கு நான் எவ்வளவு தகுதியற்றவனாக இருந்தேன் என்பதை அறிந்து, கருணையும் இரக்கமும் மிக்க கடவுளிடம், அவர் தனது அருளை ஒவ்வொருவரின் தகுதிக்கேற்ப வழங்க வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அன்பானவர்கள் உடல் ரீதியாக இல்லாததை நான் நினைவூட்டுவதற்காக, கடவுளை விட எனக்கே இந்த வேண்டுகோளை அதிகமாக முன்வைக்கிறேன். ஏனெனில், அளவிறுதியற்றவரும், அனைத்தும் அறிந்தவருமான கடவுள், நாம் கேட்காமலேயே அனைத்தையும் செய்கிறார், மேலும் நமது பரிந்துரையின்றி அவருடைய அருளை வழங்குகிறார் என்பதை நான் அறிவேன்.

ஆவி (பௌதீக உடலின்றி, சூட்சும மற்றும் ஆழ்மன உடல்களைக் கொண்டிருக்கும் ஆத்மா) **அழியாதது என்பதால், பூமிக்குத் திரும்பிய உடல்கள் இன்னும் ஆவியாக வாழ்கின்றன. மேலும், இன்று, ஒவ்வோர் அன்பான இதயத்திலும் எரியும், கடவுளுக்கு மிகவும் பிரியமான, புனிதமான அன்பின் சுடருக்கு அஞ்சலி செலுத்த நான் நிர்பந்திக்கப்படுகிறேன்; பிரிந்த அனைவரின் இதயங்களிலும் வெவ்வேறு தீவிர தன்மையுடன் எரிந்த அதே சுடர்.**

இந்த அஞ்சலியின் வெளிப்பாடாகவும், அவர்களின் அன்பாலும், சேவையாலும் எனது வாழ்வை சிறப்பித்த இந்த அன்பர்களின் மற்றும் இப்போது மறைந்த பலரின் நினைவாக, இன்று நான் ஓர் ஏழை மனிதனுக்கு ரூ. 124 காணிக்கையாக வழங்கி, அவர் முன் தலைவணங்குகிறேன்.

124 ரூபாய் என்பது, பாபா நினைவு கூர்ந்த ஒவ்வோர் ஆன்மாவிற்கும் ஒரு ரூபாய்.

எரச் பாபாவால் வரையப்பட்ட பட்டியலிலிருந்து, மறைந்த 87 ஆண்கள் மற்றும் 37 பெண்மணிகளின் பெயர்களை வாசித்தார். ஷெரியார்ஜி மற்றும் ஷிரீன்மாய், புவாஸாஹேப், சாஞ்சி, கனி, மாஸாஜி, முன்ஷிஜி, நெர்வஸ், அர்ஜுன்,

சாது லீக், பார்ஸோப், டவ்லா மாசி, பானுபாய், காக்குபாய், காரெட் ஃபோர்ட், குவென்டின் டாட், நான்னி, நதீன், மேபெல், கிறிஸ்டின் போன்றவர்கள் அவர்களில் அடங்குவர்.

பாபாவின் சார்பாக, எரச் இந்த அழைப்போடு பிரார்த்தனையைத் தொடங்கினார்: **"கடவுளே! இந்த மனிதரை வணங்குவதன் மூலம், நான் பிரிந்தவர்களை தலை வணங்குகிறேன்."**

ஒவ்வொரு முறையும் எரச் ஒரு பெயரைப் படிக்கும்போதும், பாபா அந்த ஏழையின் காலில் தலை வைத்து ஒரு ரூபாய் வழங்கினார். இவ்வாறு, பாபா அந்த நபரை 124 முறை வணங்கி, மொத்தம் 124 ரூபாய் நாணயங்களைக் கொடுத்தார்.

பாபாவின் சார்பாக இந்தப் பிரார்த்தனையுடனான அழைப்பு, இரண்டாவது ஏழையை பாபாவின் முன்னால் நிறுத்தி எரச்சால் வாசிக்கப்பட்டது:

இன்று, 1951 டிசம்பர் 24ஆம் நாள் இந்தப் புது வாழ்வில், பாபா, ஆவி, மனம், உடல் ஆகியவற்றின் முற்றிலும் நம்பிக்கையற்ற நிலையை அனுபவிக்கிறார்.

அவர் அனைத்து பலவீனங்களும் நிறைந்தவர், மேலும் அவர் மீது தங்கள் அன்பான நம்பிக்கையை வைத்துள்ள கிழக்கு மற்றும் மேற்கத்திய நாடுகளில் வாழும் அனைவரின் அன்பு, சேவை மற்றும் பக்திக்கு அவர் முற்றிலும் தகுதியற்றவர் என்று உணர்கிறார்.

அனைத்தையும் அறிந்தவர், அனைத்தையும் புரிந்துகொள்பவர், அனைத்திலும் நீதியும், நேர்மையுமான கடவுள், அவர்கள் அனைவருக்கும் அவரவர் தகுதிக்கு ஏற்ப, இறை ஞானம் என்ற தெய்வீக பரிசை வழங்குவார் என்பதை அவர் அறிவார்; ஆயினும் கூட, பாபா அவர்களின் அன்பு, சேவை மற்றும் பக்திக்கு மரியாதை செலுத்த விரும்புகிறார்; தகுதி வாய்ந்த ஏழை ஒருவருக்கு 51 ரூபாய் காணிக்கையாகச் செலுத்தி, அவர் முன் பணிந்து வணங்குகிறார்.

அதற்குப் பிறகு முதலாவதாக தலை வணங்கிய ஏழை மனிதனை முன்னோக்கி அழைத்து, பாபா அவரை மீண்டும் வணங்கியபோது, கீழ்க்கண்ட பிரார்த்தனை மொழியப்பட்டது: **"கடவுளே! இந்த மனிதருக்குத் தலை வணங்குவதன் மூலம், இந்த உயிருள்ளவர்களை நான் தலை தாழ்த்தி வணங்குகிறேன்."** பாபா அவரிடம் அன்புப் பரிசாக 51 ரூபாய் வழங்கினார்.

இவ்வாறு இந்தப் பட்டியலில் இருந்த பெயர்களை எடுத்துக்கூறி, இரண்டு ஏழைகளுடன் அவர் செய்த பணி நிறைவடைந்ததும், பாபா தனது அன்பர்களுக்குப் பின்வரும் அறிவுறுத்தலை அனுப்புமாறு கட்டளையிட்டார்:

மனோநாஷின் பணிக்காக பாபா கடவுளின் உதவியை நாடுகிறார், மேலும் இந்த அழைப்பில் அவருடன் இணைய விரும்புவோர், 1951 டிசம்பர்

29 முதல் 1952 பிப்ரவரி 16 வரை, ஒவ்வொரு நாளும் அரை மணி நேரம் கடவுளின் பின்வரும் ஏதாவது ஒரு பெயரை முழு மனதுடனும், அன்புடனும் திரும்பத் திரும்ப உச்சரிப்பதன் மூலம் அவ்வாறு செய்யலாம்.

பார்சிகள்: அஹுரமஸ்தா; ஈரானிகள்: எஸ்தான்; முஸ்லீம்கள்: அல்லாஹ் ஹு; இந்துக்கள்: பரபிரம்ம; கிறிஸ்தவர்கள்: பிதா, புதல்வன், பரிசுத்த ஆவியான கடவுள். பிற அனைவரும் தங்கள் மதத்தில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் கடவுளின் பெயரை உச்சரிக்கலாம்.

பாபா, பின்னர் ஆண் தோழர்களை அழைத்து, பிரார்த்தனை மூலமாக அழைப்பு விடுத்தலை விளக்கினார்: **"பிரிக்க முடியாத, அளவிறுதியற்ற, ஆதியும் அந்தமும் இல்லாத ஏக இறைவன், அனைத்திலும், அனைவரிடத்திலும் இருப்பவன், ஏனெனில் அவன் எல்லா ஆத்மாக்களுக்கும் பரமாத்மாவாக வீற்றிருப்பவன்; அவ்வாறு இருந்தும் அவன் எல்லாவற்றிற்கும், எல்லோருக்கும் அப்பாற்பட்டவன், அவன் அனைத்தும் அறிந்தவன் ஏனெனில் எல்லா மனங்களிலும் உலகளாவிய மனமாக இருப்பவன்; அவன், அவனுடைய எல்லையற்ற சக்தி, அன்பு, கருணை ஆகியவற்றின் மூலம் எனக்கு உதவுவதற்காக, என்னால் பல்வேறு பெயர்களால் பிரார்த்தனை செய்து அழைக்கப்படுகிறான்."**

தனது அறையிலிருந்து வெளியே வந்த பாபா, அதற்கு நேர் எதிரே இருந்த தனி அறைக்குச் சென்றார். அன்று மதியம் பாபா, பிரிந்து சென்ற பக்தர்களின் பட்டியலில் பதினொரு பெயர்கள் விடுபட்டதாகக் கூறினார், எனவே அவர் 'புவா' என்று அழைக்கப்பட்ட மெஹராஸாத் ஊழியரை வரவழைத்து, அவரது கால்களில் தலை வணங்கி, பாபா அவரிடம் பிரிந்த பதினொரு பக்தர்களுக்காக ரூ 11 வழங்கினார்.

மீண்டும், பிற்பகல் மூன்று மணிக்கு, பாபா, கவனக்குறைவாக விடுபட்டுப்போன மேலும் மூன்று மறைந்த ஆத்மாக்களை நினைவு கூர்ந்தார். 'ஜாபு' என்ற வேலைக்கார சிறுவனை வரவழைத்து, சிறுவனின் கால்களில் தலை வணங்கி மூன்று ரூபாய் கொடுத்தார்.

டிசம்பர் 25ஆம் நாள், மனம் எதனால் நிரம்பியுள்ளது, அதை எவ்வாறு எதிர்த்துப் போராடுவது என்பதைக் குறித்து, பாபா ஆண் தோழர்களுக்கு விரிவாக விளக்கினார். எழுத்துப்பலகை மூலமாக விளக்கியதை, எரச் குறிப்பெடுத்துக் கொண்டார்.

பாபா அப்போது இவ்வாறு குறிப்பிட்டார்: **"நான் ஏகாந்தவாசத்தில் இருக்கும் நேரத்தில் சத்தம் செய்வதைத் தவிர்க்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்."**

அதன் முக்கியத்துவத்தை வலியுறுத்த அவர் இந்த எடுத்துக்காட்டுடன் விளக்கினார்: **"பாதிரி, நீங்கள் போர்க்களத்தில் எதிரியைக் கொல்ல**

முயற்சிக்கும் ஒரு சிப்பாய் என்று வைத்துக்கொள்வோம். உங்களைச் சுற்றி எல்லா வகையான ஆயுதங்களும் உள்ளன - பீரங்கிகள் மற்றும் இயந்திர துப்பாக்கிகள் சுடும் வேளையில் விமானங்கள் குண்டுகளை வீசுகின்றன. நீங்கள் கையில் துப்பாக்கியுடன் உங்கள் எதிரியை சுட்டு வீழ்த்தத் தயாராக உள்ளீர்கள்.

ஆனால் அப்போதுதான் வண்டு ஒன்று உங்கள் காதருகில் ரீங்காரம் செய்து உங்கள் கவனத்தைத் திசை திருப்புவதானால் என்ன நடக்கும்?

"உங்கள் கவனம் எதிரியிடமிருந்து விலகி, வண்டு பக்கம் திரும்பிய அந்த நொடியில், எதிரி உங்களைப் பற்றிக் கொண்டு கொன்றுவிடுவான். அதுபோல, நான் மனோநாஷிற்காகப் பணிபுரியும் போது நீங்கள் ஓசை எழுப்புவதானால், எனது கவனம் அதிலிருந்து விலகி என்னைத் தடுக்கிறது, எனவே, முடிந்தவரை அமைதியாக இருக்க முயற்சி செய்யுங்கள்."

பாபா ஒவ்வொரு தோழரும், ஒவ்வொரு நாளும் உச்சரிக்க ஒரு கடவுளின் பெயரை வழங்கினார், சிலர் ஒரு மணி நேரம், சிலர் பதினைந்து நிமிடங்கள் கடவுளின் பெயரை மனதில் உச்சரித்தனர்.

மெஹராவின் பிறந்தநாள் **1951** டிசம்பர் **26** புதன்கிழமை அன்று கொண்டாடப்பட்டது, ஆனால், டாக்டர் டான் மற்றும் ஆதி சீனியரைத் தவிர வேறு எவரும் அழைக்கப்படவில்லை.

அன்று, பாபா, கைக்கோபாத்திடம் கூறினார், **"நான் எனது கனவில் ஓர் அழகான பெண்ணைப் பார்க்கிறேன்; அதனால் நான் அவளைக் கனவில் காணாமலிருக்க கடவுளிடம் பிரார்த்தனை செய்யுங்கள்!"** கைக்கோபாத் பிரார்த்தனை செய்து கடவுளின் தலையீட்டைக் கோரினார், ஆனால் மறுநாள் பாபா மீண்டும் அதே கனவைப் பற்றி புகார் செய்தார்.

பாதிரி இதைக்கேட்டு சீற்றமடைந்து, பாபாவை எதிர்கொண்டார், "கடவுள் எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிந்தவர், எனவே அவருடைய ஆசீர்வாதத்திற்காக ஏன் பிரார்த்தனை செய்ய வேண்டும்?"

"கடவுள் எங்கும் நிறைந்திருக்கிறார்," பாபா ஒப்புக்கொண்டார், **"ஆனால் அவர் கண்களை மூடிக்கொண்டு விளையாடுகிறார்! கவனக்குறைவாக இருக்கிறார், எனவே அவர் பிரார்த்தனை மூலம் எழுப்பப்பட வேண்டும்."**

"உங்களுக்கு ஏன் ஆசீர்வாதம் தேவை, நீங்கள் ஏன் கனவு காண வேண்டும்?" பாதிரி மேலும் கேள்வி எழுப்பினார்.

"நீங்கள் ஒரு முழுநிறை மூடன்!" பாபா கூறினார். **"நான் பலவீனங்களால் நிறைந்தவன், நான் இன்னும் இறைவனைத் தேடும் நிலையில் இருக்கிறேன், அதனால் அனைத்தும் சாத்தியம்."**

டிசம்பர் 27ஆம் நாள் மதியம் 1:15 மணிக்கு, சாக்லேட் நிறத்தில் கோட் அணிந்த பாபா, மீண்டும் தனது அறையில் ஏகாந்தவாசத்தில் அமர்ந்தார். **"இப்போது எஞ்சிய 40 நாட்கள் ஏகாந்தவாசத்தில் பணிபுரிவது மிகவும் முக்கியமானதாக இருக்கும்"** என்று அவர் கூறினார். எரச், பெண்டு, குஸ்தாஜி, பைதூல் ஆகியோர் மீண்டும் பாபாவின் அருகில் இரவும் பகலும் மாறி மாறிக் கண்காணித்து, பாபாவின் தேவைகளைப் பூர்த்தி செய்தனர். அவருக்கு வேண்டிய உணவும் தேநீரும் பெண்மணிகளிடமிருந்து வந்தது. கோஹெர் அதை எடுத்து வந்து காக்காவிடம் கொடுப்பதும், அதை எரச் பாபாவிடம் எடுத்துச் செல்வதும் முறையாக நடந்து வந்தது.

டிசம்பர் 26ஆம் தேதி, 'கட்னி'யிலிருந்து (KATNI) அஹமதுநகருக்கு 'ஸோபா' (SOBHA) என்று அழைக்கப்பட்ட மேல்நிலை மஸ்தை பங்க்ராஜ் அழைத்து வந்தார். மறுநாள் மதியம், பாபாதாஸ், ஆதி சீனியர் ஆகியோருடன் அந்த மஸ்தை மெஹராஸாத்திற்கு அழைத்து வருமாறு பாபா கேட்டுக் கொண்டார். மஸ்த் ஸோபா நீராட மறுத்துவிட்டதால், அஹமதுநகருக்குத் திருப்பி அனுப்பப்பட்டார். ஆனால் அவர் மீண்டும் 28ஆம் நாள் மெஹராஸாத்திற்கு அழைத்து வரப்பட்டபோது, பாபா, அவரை நீராட்ட அனுமதித்தார். பாபா அவருக்கு புத்தாடைகளை அணிவித்து, அன்றும் மறுநாளும் அவருடன் பணிபுரிந்தார். ஸோபா, பாபாவை 'பாத்ஷா' (BADSHAH, EMPEROR, பேரரசர்) என்று குறிப்பிட்டார். டிசம்பர் 29 அன்று பாபாதாஸ் மஸ்தை மீண்டும் கட்னிக்கு அழைத்துச் சென்றார்.

அடுத்த நாள் டிசம்பர் 30 அன்று, குஸ்தாஜியின் சகோதரர் ஸ்லாம்சன், இந்தூரிலிருந்து அழைத்து வந்த மஸ்த் மெஹராஸாத்திற்கு வந்தபோது, அவர் ஆன்மீகப் பாதையில் அந்த அளவிற்கு முன்னேறவில்லை என்று சுட்டிக்காட்டி, உடனடியாக பாபா அவரைத் திருப்பி அனுப்பி வைத்தார். வேறொரு சிறந்த மஸ்தைக் கண்டுபிடித்து கொண்டு வருமாறு ஸ்லாம்சனுக்கு அவர் அறிவுறுத்தினார். பைதூல் அதே நோக்கத்திற்காக நாந்தேட் கிராமத்திற்கு அனுப்பப்பட்டார்.

1952 ஜனவரி 4 அன்று, பாபா, டாக்டர் நீலுவிற்கு இந்த நகைச்சுவையான செய்தியை பாதிரி மூலம் அனுப்பினார்: **"நீங்கள் இரவு முழுவதும் விழித்திருந்து கடவுளின் பெயரைத் திரும்பத் திரும்ப உச்சரித்தால், மஸ்துகளுக்காகக் கொண்டு வரப்பட்ட அனைத்து நல்ல, சுவையான பொருட்களையும் நான் உங்களுக்குத் தருவேன். நான் அவர்களுக்கு சேவை செய்வது போல் உங்களுக்கும் சேவை செய்வேன்."**

டாக்டர் நீலு பாபாவிற்கு இந்த பதிலை அனுப்பினார்: "கடவுள், நான் ஒரு மஸ்தாக மாறுவதைத் தடுக்கட்டும்! நான் மருத்துவராக மட்டுமே இருக்க விரும்புகிறேன்."

பைதூல் நாந்தேடிலிருந்த மஸ்தைத் தன்னுடன் வருமாறு வற்புறுத்த முடியவில்லை, எனவே பாபா அவரிடம் வேறொரு மஸ்தை அழைத்துவர மும்பைக்கு அனுப்பி வைத்தார். இறுதியில், ஜனவரி 4ஆம் நாள், மஸ்த் அலி ஷாவை மெஹராஸாத்திற்கு அழைத்து வந்து, பாபா அவருடன் ஏகாந்தவாசத்தில் பணிபுரியத் தொடங்கினார்.

பாபா தனது பணிக்காக, தினமும் இரவு 7:00 மணி முதல் இரவு 11:00 மணி வரை அவரது அறை அல்லது நீலப்பேருந்தில் தனியாக அமர்ந்திருப்பதும், எஞ்சிய நேரத்தைத் தனது அறையில் தோழர்களுடன் அல்லது தனியாக இருப்பதையும் வழக்கமாகக் கொண்டார். எரச் 7:00 மணி முதல் இரவு 11:00 மணி வரையும், குஸ்தாஜி இரவு 11:00 முதல் அதிகாலை 2:30 வரை, பெண்டு 2:30 முதல் காலை 6:30 வரையும் இரவு கண்காணிப்பாளர்களாகப் பணிபுரிந்தனர்.

ஜனவரி 4ஆம் நாள் மாலை 6:45 மணிக்கு மெஹராஸாத்தில் தனது அறைக்குப் பின்னால் அமைந்த குழியில் பாபா 'துனி'யை (DHUNI) ஏற்றினார். இந்த நெருப்பு, மறுநாள் காலை ஏழு மணி வரை எரிந்து கொண்டிருந்தது, பின்னர் அது அணைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, மனோநாஷ் பணி முடியும் வரை தினமும் மாலை சரியாக ஏழு மணிக்கு துனி ஏற்றப்பட்டது.

பகல் வேளையில், எரச் கீதை, பைபிள், பௌத்த மற்றும் ஸுஃபி இலக்கியங்களின் சில பாகங்களை பாபாவுக்காக வாசிப்பதை வழக்கமாகக் கொண்டார். அவ்வப்போது பாபாவின் அறையில் ஃபோனோகிராஃப் இசையும் ஒலிக்கப்பட்டது, அந்த நேரத்தில் பாபா நான்கு தோழர்களையும் இதர மண்டலியையும் அழைப்பதுண்டு.

மெஹராஸாத்தில் டாக்டர் நீலு சவரம் செய்யாமல் தாடியுடன் இருந்தபோது, ஒரு நாள் பாபா அவருக்கு இந்தச் செய்தியை அனுப்பினார்: **"மஸ்த் வரவில்லை என்றால், உங்கள் தாடியின் ஒவ்வொரு முடியும் பறிக்கப்படும்!"**

மஸ்த் 'பட்டான் பாபா', மெஹர்ஜியின் காரில் மெஹராஸாத் வந்ததால், டாக்டர் நீலுவின் தாடி அப்படியே பாதுகாக்கப்பட்டது. ஜனவரி 14ஆம் நாள் அவருடன் பணிபுரிந்த பின்னர், அதே மாலையில் பாபா அவரைத் திருப்பி அனுப்பி வைத்தார். அதே நாளில், ஸ்லாம்சன் இந்தூரிலிருந்து அழைத்து வந்த 'விஷன்தாஸ் மஹாராஜ்' (VISHANDAS MAHARAJ) என்று அழைக்கப்பட்ட மஸ்த்-துறவி, மெஹராஸாத் அறையில் வைக்கப்பட்டார். பாபா (ஒரு மாதத்திற்கு முன்பு முஹமதிய மஸ்த் பட்டான் பாபாவுடன் பணிபுரிந்ததைப் போல்) ஓர் இந்து துறவியுடன் சில வாரங்கள் ஏகாந்தவாசத்தில் பணிபுரிய விரும்பினார், ஆனால் விஷன்தாஸ் மஹாராஜ், பாபா யார் என்பதை அறிந்திருந்ததால், அவருடன் பணிபுரிவது மிகவும் கடினமாக இருந்தது. எனவே, ஐந்து நாட்களுக்குப் பிறகு, ஜனவரி 19ஆம் தேதி மீண்டும் இந்தூருக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

ஜனவரி 18ஆம் நாள் பூனாவிலிருந்து பைதூல் அழைத்து வந்த 'ராம்ஜி' (RAMJI) என்ற மஸ்துடன் சிறிது நேரம் அமர்ந்திருந்த பாபா, அவரையும் அடுத்த நாள் திருப்பி அனுப்பினார்.

1952 ஜனவரி 20 ஞாயிற்றுக்கிழமை அன்று, முஹமது மஸ்த் மற்றும் ஓர் ஏழை மெஹராபாத்திலிருந்து அழைத்து வரப்பட்டனர். பாபா, இருவரையும் திருப்பி அனுப்பும் முன்பு நீராட்டி, உணவூட்டினார்.

ஜனவரி 23ஆம் நாள் மாலை ஏழு மணியளவில் குஸ்தாஜி முன்னிலையில் பாபா துனியில் நெருப்பேற்றினார். அது எரியும் வேளையில், கைக்கோபாத் கடவுளின் 101 பெயர்களை மீண்டும் மீண்டும் உச்சரிக்கும் பழங்கால பாரசீக பிரார்த்தனையை மொழிந்தார்.

இந்தப் பாராயணத்திற்குப் பிறகு, காக்கா, கைக்கோபாத் இருவரும் உரத்த குரலில் 'அஹுரமஸ்தா!' (AHURAMAZDA) என்றும், பெண்டுவும் பாதிரியும் 'யா எஸ்தான்!' (YA AEZDAN), நீலு, கிருஷ்ணா, விஷ்ணு ஆகியோர் 'ஓம் பரபிரம்ம, பரமாத்மா!' (OM PARABRAHMA, PARAMATMA), எரச்: **'சர்வவல்லமையுள்ள கடவுளே, பரலோகத்தின் தந்தை**! (O GOD ALMIGHTY, FATHER IN HEAVEN), மேலும் பைதூல்: **"லா இலா இல்லல்லாஹ்** ('LA ILAH ILLALLAH' அல்லாவைத் தவிர வேறு கடவுள் இல்லை)!" என்றும் ஒவ்வொருவரும் ஏழு முறை தங்கள் பிரார்த்தனையுடன் கூடிய அழைப்பை மொழிந்தனர்.

பாபா, துனியில் தலை வணங்கி, பின்னர் அங்கிருந்த ஒவ்வொருவரின் கால்களிலும் தலைவணங்கினார். துனியின் அருகில் சிறிது நேரம் தனிமையில் அமர்ந்திருந்த வேளையில் அவர் அனைவரையும் தன்னை விட்டு வெளியேறுமாறு அறிவுறுத்தினார். சிறிது நேரத்திற்குப் பின்னர், அவர் மீண்டும் ஒவ்வொருவரையும் வரவழைத்து, அவர்களுக்கு விவரிக்கப்பட்ட வரிசையில் கடவுளின் பல்வேறு பெயர்களை மீண்டும் மொழியுமாறு கட்டளையிட்டார்.

அன்று மாலை துனி தொடங்கும் முன், டாக்டர் நீலு தனது ஸ்டெதஸ்கோப் (STETHOSCOPE) மூலம் பாபாவின் இதயத்தைப் பரிசோதித்து, அவரது நாடித் துடிப்பைக் கண்டுபிடித்து, பணி முடிந்த பின்னர் அவரது இதயம் மற்றும் நாடித் துடிப்பை வேறுபடுத்திப் பார்க்க முடிந்தது. பாபா கூறினார், **"உங்களுக்கு நன்றி சொல்லாமல் உங்கள் உணர்வுகளை நான் பாராட்டுகிறேன், ஆனால் அதுவும் தேவையில்லை. எது வந்தாலும் இந்த ஏழு நாட்களுக்குப் பிறகு நான் உயிர் வாழலாம் அல்லது உயிரைத் துறக்கலாம் - அல்லது இரத்தம் எனது தலையில் பாய்ந்து தலை வெடிக்கலாம்!"**

அன்று மதியம் பாபா சிறிது நேரம் ஏகாந்தவாசத்தில் அமர்ந்த பின்னர், எரச், அவர் பார்த்ததைப் பிற தோழர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும் என்று பாபா கூறினார். பாபா வெளியே வந்ததும், அவரது தலையைத் தொட்டு

உணரும்படி கட்டளையிட்டதாகவும், தலை சூடாக இருந்ததை உணர்ந்ததாகவும் எரச் கூறினார். **"எது நடக்க வேண்டுமோ அது நடக்கும்; எனது பணி வெற்றி பெறும் வரை அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்"** என்று பாபா தோழர்களை சமாதானப்படுத்தினார்.

1952 ஜனவரி **23**முதல் பாபாவின் ஏகாந்தவாசம் தீவிரமடைந்தது; அவர் தனது அறையிலும், நீலப்பேருந்திலும் மணிக்கணக்கில் அமர்ந்திருந்தார். எட்டு நாட்கள், ஜனவரி **30** வரை பாபா கடுமையாக உழைத்தார்; அவரது அறை மற்றும் பேருந்தில் செல்வதும் வருவதும் தவிர, அவர் எந்த எல்லைகளையும் கடந்ததில்லை. அவரது வெளித்தோற்றம் இடரார்ந்த நிலையில், சோர்வின் அறிகுறிகளுடன் தென்பட்டது.

1952 ஜனவரி **31**, வியாழன் அன்று, பாபா காலையில் நீராடி, ஏழு மணி முதல் எட்டு மணி வரை, தனது அறையில் தனியாக அமர்ந்திருந்தார். அதன் பின்னர், அவர் காக்கா, கைக்கோபாத் இருவரையும் தனக்கு இருபுறமும் அமர வைத்து, காலை **8:00** முதல் **8:30** வரை, அரை மணி நேரம் 'அஹுரமஸ்தா'வின் பெயரை உரத்த குரலில் உச்சரிக்குமாறு அறிவுறுத்தினார்.

பாபா மேலும் அரை மணி நேரம் தனியாக அமர்ந்திருந்து, பின்பு டாக்டர் நீலுவும் விஷ்ணுவும் அவருக்கு இருபுறமும் அமர்ந்து 'ஓம் பரபிரம்ம பரமாத்மா' என்று மீண்டும் மீண்டும் அரை மணி நேரம், **9:00** முதல் **9:30** வரை தொடர்ந்தனர். பாபா, மேலும் அரை மணி நேரம் தனியாக அமர்ந்து, அதற்குப் பிறகு **10:00** முதல் **10:30** வரை, அரை மணி நேரம் 'யா எஸ்தான்' என்று பெண்டுவும் பாதிரியும் உரத்த குரலில் உச்சரிக்குமாறு அறிவுறுத்தப்பட்டனர்.

மறுபடியும் அன்று காலை **10:30** முதல் **11:00** மணி வரை, பாபா தனியாக அமர்ந்து, **11:00** மணி முதல் நண்பகல் வரை, துறவி விஷன்தாஸ் மஹாராஜுடன் செய்ய நினைத்த பணியை அவர், தானே செய்து முடித்தார். பாபா மதியம் **12:00**க்கும் ஒரு மணிக்கும் இடையே மதிய உணவை உண்டு, சிறிது நேரம் ஓய்வெடுத்து, மதியம் **1:00** முதல் **2:00** வரை ஏகாந்தவாசத்தில் அமர்ந்தார். பிற்பகல் இரண்டு மணி முதல் மூன்று மணி வரை, எரச், பாபாவிற்கு ஸுபி இலக்கியங்களிலிருந்து சில பகுதிகளை வாசித்தார்; அதன் பிறகு, பாபா மீண்டும் அரை மணி நேரம் தனியாக அமர்ந்து, பின்னர், அன்று மதியம் **3:30** முதல் **4:00** மணி வரை ஆதி சீனியர் சத்தமாக 'பர்வர்திகார்! பர்வர்திகார்! பர்வர்திகார்!' என்று குரல் கொடுக்க, குஸ்தாஜி இந்த சொற்றொடரை ஆழ் இதயத்திலிருந்து கூறிக்கொண்டிருந்தார்.

4:30 மணி வரை இடைவேளை, அப்போது பாபா சிறிது பழம் சாப்பிட்டார். பிற்பகல் **4:30** முதல் **5:00** வரை, ராம்ஜுவும் பைதூலும் சத்தமாக 'லா இலா இல்லல்லாஹ்!' என்று குரல் கொடுக்க, பாபா **5:00** முதல் **5:30** வரை ஏகாந்தவாசத்தில் அமர்ந்திருந்தார்.

அடுத்த அரை மணி நேரத்திற்கு டானும், எரச்சும் பாபாவின் இருபுறமும் அமர்ந்து, "சர்வவல்லமையுள்ள கடவுளே, சொர்க்கத்தில் இருக்கிறார்!" என மொழிந்த பின்பு, மீண்டும் அரை மணி நேரம் பாபா தனியாக அமர்ந்திருந்தார்.

"மனோநாஷ் ஏகாந்தவாசத்தில் தொடர்ந்த பணி உச்சக்கட்டத்தை எட்டியது, இறை மனிதனின் உலகளாவிய மனம் திகிலடைந்தது. அனைத்து மனங்களும் உலகளாவிய மனதால் நிர்மூலமாக்கப்படுவதை எதிர்கொள்ளவிருக்கும் அச்சத்தில் அசையாமல் நின்றது!" என்று காலம் எடுத்துரைத்தது.

இரவு 7:00 மணியளவில் பாபா தனது அறையிலிருந்து வெளியே வந்து துனியில் நெருப்பேற்றினார். பாபாவின் கட்டளைப்படி எரச் பின்வருவனவற்றை மொழிந்தார்:

எல்லையில்லா ஞானத்தின் ஆதாரமான, எல்லாம் வல்ல இறைவனே! இந்த சாதாரண நிலையில், மனிதனாக, என்னால் முடிந்த அனைத்தையும் நான் செய்தேன் என்பதை நீங்கள் அறிவீர்கள்; மேலும் முடிவை முழுவதுமாக உங்கள் விருப்பத்திற்கும், அங்கீகாரத்திற்கும் விட்டு விடுகிறேன். அது நிறைவேறுவதற்கான கணம், நாழிகை, நாள், மாதம், வருடம், யுகம் நீங்கள் விதித்தபடியே இருக்கட்டும்.

இந்த கணத்திலிருந்து, 1952 பிப்ரவரி 16ஆம் தேதிக்குள், நீங்கள் என்ன முடிவு செய்தீர்களோ, அதை அனைத்து உண்மையுடன் அறிவிக்க நீங்கள் எனக்கு வழிகாட்ட வேண்டும்.

புது வாழ்வு மற்றும் மனோநாஷ் காலகட்டத்தில் நான் கடைப்பிடித்த வெளியளவிலான மதச் சடங்குகளிலிருந்து என்னை விடுவித்துக் கொள்கிறேன்.

பிரசாதம் விநியோகிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவதார புருஷர்களின் சித்திரங்கள் இரவல் வாங்கி வந்தவர்களிடம் திருப்பித் தர ஆதி சீனியரிடம் ஒப்படைக்கப்பட்டது.

"**உலகின் அனைத்து மதங்களின் வழிபாட்டுச் சடங்கு சம்பிரதாயங்கள் அனைத்தும் நெருப்பில் எரிக்கப்படுகின்றன**" என்று பாபா ஏற்கனவே எரச்சிடம் இந்த வார்த்தைகளை ஒரு காகிதத்தில் எழுதும்படி அறிவுறுத்தினார்.

பாபா அந்தக் காகிதத்தைத் தனது சட்டைப் பையில் வைத்திருந்தார், துனி எரிந்ததும் அவர் அதை வெளியே எடுத்து, துண்டு துண்டுகளாக கிழித்து, தீப்பிழம்புகளில் எறிந்து, கொழுந்துவிட்டு எரிவதைப் பார்த்தார்.

துனியின் நெருப்பு அடங்கியதும், பாபா அதன் சாம்பலை இரண்டு டின் கொள்கலன்களில் நிரப்பினார். "**இந்த சாம்பலை எவரும் எந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்தக்கூடாது**" என்று அவர் கூறினார்.

கொள்கலன்கள் இதர பெட்டிகள் மற்றும் மஸ்துகளின் அன்பளிப்புகளைக் கொண்ட பொக்கிஷங்களுடன் வைக்கப்பட்டன. பாபா பின்னர் அவரது அறைக்கு ஓய்வெடுக்கச் சென்றார்.

மறுநாள் காலை, 1952 பிப்ரவரி 1 வெள்ளிக்கிழமை காலை 7:58 மணிக்கு, பாபா தனது ஏகாந்தவாச அறையிலிருந்து வெளியே வந்ததும், அவரது கட்டளைப்படி, டாக்டர் நீலு "ஓம் பரபிரம்ம பரமாத்மா!" என்று உரத்த குரலில் மொழிந்ததை, பின்னர் அனைத்து தோழர்களும் ஒரே குரலில் அதையே திரும்பத் திரும்ப மொழிந்தனர்: "ஓம் பரபிரம்ம பரமாத்மா!"

பாபா தனது ஏகாந்தவாசத்தை முடித்துக் கொண்டதால், காலம் பரவசத்தில் அவர்களுடன் இணைந்தது. உலகளாவிய மனம் தணிந்துபோய், இறை-மனிதன், வெற்றிக் களிப்புடன் தோற்றமளிக்க, வீர நடையுடன் தன் அறையை நோக்கிச் சென்றார்!

1952 பிப்ரவரி 1ஆம் நாள் முதல், பாபா குறுகிய ஏகாந்தவாசத்தின் அட்டவணையைப் பின்பற்றத் தொடங்கினார். அவர் இப்போது மெஹராஸாத் ஆண், பெண் அன்பர்கள் அனைவரையும் முன்பு போலவே சந்திக்கத் தொடங்கினார்; மேலும் அவர் மேற்கத்திய பயணத்தின் விவரங்களை டாக்டர் டானுடன் தினமும் விவாதித்தார். மெஹர்ஜி, நரிமன் இருவரும் பாபாவை 2ஆம் தேதி சந்தித்தனர், ஸரோஷ் 4ஆம் நாள் அழைக்கப்பட்டார்.

1952 பிப்ரவரி 6 புதன்கிழமை காலை, மஸ்த் அலி ஷா மெஹராபாத்திலிருந்து மெஹராஸாத்திற்கு அழைத்து வரப்பட்டார். பாபா அவரை நீராட்டி, பின்னர் அவருடன் தனியாகப் பணிபுரிந்து, அதே நாளில் அலி ஷா மெஹராபாத்திற்கு திருப்பி அனுப்பப்பட்டார்.

அந்த நாளின் பிற்பகுதியில், மனோநாஷ் குறித்த பின்வரும் விளக்கத்தை பாபா எழுத்துப்பலகையில் எடுத்துரைத்தார்:

கடவுள் எங்கும் இருக்கிறார், எல்லாவற்றையும் செய்கிறார்.

கடவுள் நமக்குள் இருக்கிறார், அனைத்தையும் அறிந்து கொள்கிறார்.

கடவுள் நமக்கு வெளியிலும் இருக்கிறார், எல்லாவற்றையும் பார்க்கிறார்.

கடவுள் நமக்கு அப்பாற்பட்டவர், எல்லாமே அவராக இருக்கிறார்.

ஏக இறைவனாக இருக்கும் அவன், எங்கும் வியாபித்திருப்பவன், அனைத்தையும் புரிந்துகொள்பவன், சர்வ வல்லமையுள்ள இறைவன், நம்மில் (ஆத்மாக்களில்) பரமாத்மாவாக இருப்பவன், அவனைத் தவிர வேறு எதுவுமே உண்மையன்றி இருக்கும் இறைவன், இந்த மனோநாஷ் பணியின் போது எனக்கு உதவியாக இருந்து, வழிகாட்டி, இப்போது என்னை உங்களுக்கு இவ்வாறு எடுத்துரைக்கச் செய்கிறான்:

மனதால் புரிந்து கொள்ள முடியாததை, மனதால் புரிந்து கொள்ள முயற்சிப்பது வீண், பயனற்றது. ஆன்மாவின் ஆழ்நிலையை மொழியின் ஒலிகள் மற்றும் வார்த்தைகளால் வெளிப்படுத்த முயற்சிப்பது அதைவிட பயனற்றது. அந்த தெய்வீக நிலையை வாழ்ந்து அனுபவிப்பவர்களால் சொல்லப்பட்ட, சொல்லக்கூடிய, சொல்ல முடிகிற அனைத்தும் கூறுவது என்னவெனில், பொய்யும் போலியுமான தனிமனித சுயத்தை இழக்கும் போது, "உண்மையான 'நான் கடவுள்' எனும் உறுதிப்பாடு" கண்டு கொள்ளப்படுகிறது; உண்மையின் பிறப்பு பொய்யின் மரணத்தைத் தொடர்ந்து மட்டுமே உண்மையான 'நான் கடவுள்' எனும் உறுதிப்பாட்டை அடைய முடியும்; மேலும் நமக்குள் நாமே இறப்பது (தனிமனித 'நான்' எனும் நிலைப்பாட்டை நிர்மூலமாக்குவது) - அனைத்து இறப்பையும் முடிவுக்குக் கொண்டுவரும் உண்மையான மரணம் - நிரந்தர வாழ்க்கைக்கான ஒரே வழி.

இதன் பொருள் என்னவெனில், மனம் அதன் துணைக் கோள்களுடன் - ஆசைகள், ஏக்கங்கள், பேராசைகள் - அனைத்தும் தெய்வீக அன்பின் நெருப்பால் முழுவதுமாக ஆட்கொள்ளப்பட்டு அழிக்கப்படும் போது, எல்லையற்ற, அழிவில்லாத, பிரிக்க முடியாத, நித்திய 'நான் கடவுள்' எனும் உறுதிப்பாடு வெளிப்படுகிறது.

இதுவே மனோநாஷ், பொய்யான, வரையறுக்கப்பட்ட, துன்பகரமான, அறியாத, அழியக்கூடிய 'நான்' எனும் தனிமனித, சுய நிலைப்பாட்டை நிர்மூலமாக்குவதன் மூலம் ஒருவர், உண்மையான 'நான் கடவுள்' எனும் உறுதிப்பாட்டின் மாற்றமுடியாத தன்மையில் எல்லையற்ற அறிவு, அன்பு, சக்தி, அமைதி, பேரின்பம், மகிமை ஆகியவற்றின் நித்திய, நிரந்தர உடைமையாளர் ஆகிறார்.

மனோநாஷ் - இந்த மகிமையான நிலையை விளைவிக்கக் கூடியது, 'பன்மைத்தன்மை' விலகி 'ஏக இறைவனின் ஒருமைத்தன்மை' வரும்போது, அறியாமை விலகி அறிவு வரும், பிணைப்பு போய் சுதந்திரம் வரும்.

நாம் அனைவரும் இந்த அளவிறுதியற்ற அறிவுக் கடலில் நிரந்தரமாக வாழ்கிறோம், ஆனால் இந்த அறியாமைக்கு ஆதாரமான மனம் - என்றென்றும், நிரந்தரமாக மறையும் வரை எல்லையில்லா அறியாமையில் இருக்கிறோம்; ஏனெனில், மனம் இல்லாமல் போனால் அறியாமை ஒழிந்துவிடும்!

அறியாமை நீங்கி, இறை அறிவை அடையாதவரை - தெய்வீக வாழ்க்கையை அனுபவித்து வாழும் அறிவு - ஆன்மீகம் தொடர்பான அனைத்தும் முரண்பாடாகத் தோன்றும். நாம் கண்ணால் காணாத கடவுள், உண்மையானவர் என்று கூறுகிறோம்; நாம் கண்ணால் காணும் உலகம்

பொய் என்று சொல்கிறோம். நம் அனுபவத்தில் இருப்பது உண்மையில் இல்லை, அனுபவத்தில் இல்லாதது உண்மையில் உள்ளது.

நம்மைக் கண்டுகொள்ள வேண்டுமாயின் நாம் நம்மை இழக்க வேண்டும். இதனால் இழப்பே ஆதாயம்.

கடவுளில் வாழ நாம் 'சுய மனித தன்மை'யை சாகடிக்க வேண்டும். எனவே சாவு (மரணம்) என்பது வாழ்க்கை.

கடவுளால் முழுமையாக ஆட்கொள்ளப்படுவதற்கு நாம் உள்ளளவில் (நம் மனம், இதயம்) முற்றிலும் வெறுமையாக மாற வேண்டும். எனவே முழுமையான 'வெறுமை' என்பது முழுமையான 'முழுமை' என்று பொருள்.

கடவுளின் அளவிறுதியற்ற தன்மையின் ஓர் அங்கமாகத் திகழ வேண்டுமாயின், எதையும் தனக்கென சொந்தமாக்கிக் கொள்ளாமல், சுயத்தின் நிர்வாணமாக நாம் மாற வேண்டும். எனவே எதுவும் இல்லாத தன்மைதான் எல்லாமே என்று அர்த்தம்.

கடந்த நான்கு மாதங்களாக, சாதாரண மனித தராதரத்தின்படியும், எனக்கு தெரிந்த வழிகள் மற்றும் வழிமுறைகளின்படியும், மனோநாஷின் நோக்கத்தை முழுமையாக அடையும் பொருட்டு, என்னால் இயன்ற அளவு முயற்சி செய்தேன் - மேலும் நான் செய்த வேலையில் திருப்தி அடைகிறேன் என்பதை முழு உண்மையுடன் சொல்ல முடியும்.

எனது பழைய வாழ்க்கையின் மெஹர் பாபா நிலையை மீண்டும் அடையப்பெற்று, புது வாழ்வின் சாதாரண நிலையைத் தக்கவைத்துக் கொண்டதன் காரணமாக, இந்த விதமான திருப்தியை அடைய முடிந்தது. பழைய வாழ்வில் எனக்கு இருந்த அறிவு, வலிமை, மகத்துவம் அனைத்தையும் மீண்டும் பெற்றுள்ளேன்; புது வாழ்வின் அறியாமை, பலவீனங்கள், பணிவு அனைத்தையும் தக்கவைத்துக் கொண்டேன். பழைய மற்றும் புது வாழ்வு நிலைகளின் இந்த ஐக்கியம் 'நிலையான வாழ்வு' - நித்திய, நிரந்தரமான பழைய மற்றும் புது வாழ்வுக்கு வழிவகுத்தது.

இப்போது எனக்கு வாழ்க்கை என்றால்:

<u>முதலாவது</u>: சுதந்திரமான, கட்டுப்பாடற்ற வாழ்க்கை.

<u>இரண்டாவது</u>: கட்டளைகளை வழங்குவதில் ஒரு குருநாதரின் வாழ்க்கை, மற்றும் பணிவின் இலக்கணமாகத் திகழும் ஒரு சேவகனின் வாழ்க்கை.

<u>மூன்றாவது:</u> நித்தியமாக நாம் அனைவரும் ஒன்று, பிரிக்க முடியாத மற்றும் அடிப்படையில் எல்லையற்றவர்கள் என்ற அறுதியும், உறுதியுமான நம்பிக்கையின் உணர்வு; மேலும் அறியாமையின் மூலம் 'உண்மையான எங்கும் நிறை இறைநிலை'யிலிருந்து பிரிந்த உணர்வு.

நான்காவது: அடிப்படையில் கடவுளின் வாழ்க்கை மற்றும் நடைமுறையில் மனிதனின் வாழ்க்கை.

ஐந்தாவது: இறைவனோடு ஐக்கியம் குறித்த உள்ளார்ந்த அறிவால் பிறந்த ஆற்றலுடன் கூடிய வாழ்க்கை மற்றும் ஆசைகளின் பிணைப்பால் விளைந்த பலவீனம்.

மனோநாஷுக்கான எனது முயற்சிகள் ஆக்கப்பூர்வமானதால், மனோநாஷின் முடிவும் ஆக்கப்பூர்வமானதாக இருக்கும். ஆனால் இந்த முடிவின் உண்மையான மற்றும் உறுதியான வெளிப்பாட்டை நான் முழுவதுமாக தெய்வீக அங்கீகாரத்திற்கு விட்டு விடுகிறேன். முடிவு எங்கே, எப்படி, எப்போது இருக்கும் என்பதை முழுக்க முழுக்க தெய்வீக அதிகாரத்திற்கு விட்டு விடுகிறேன். இது எந்த நிமிடத்திலும், மணிநேரத்திலும், மாதத்திலும், வருடத்திலும் அல்லது காலத்திலும் இருக்கலாம். இது உலகின் எந்தப் பகுதியிலும் நிகழலாம் - கிழக்கில் அல்லது மேற்கில், வடக்கில் அல்லது தெற்கில் - இருப்பினும், உண்மையில் அது நான்கு திசையையும் தழுவும். இது எந்த, எல்லா சூழ்நிலையிலும் இருக்கலாம்.

இது எனக்கும் என்னுடன் தொடர்புடைய அனைவருக்கும் அதன் மாறுபட்ட விகிதங்களில் அனைத்து இறை அன்பு, இறை ஒருமைப்பாடு, இறையுணர்வு, இறை வெளிப்பாடு, ஒளியூட்டம் ஆகியவற்றின் அடிப்படையுடன் கூடிய திடீர் வருகையாகவும், மாற்றத்தின் நிகழ்வாகவும் நான் உணர்கிறேன்.

நான் மனோநாஷ் பணியில் ஈடுபட்டிருந்த வேளையில், என்னுடன் இருந்த நான்கு தோழர்களும், எனக்கு அருகாமையில் அல்லது தொலைவில் இருந்த இதர அன்பர்களும், தங்களால் இயன்ற அளவு எனக்கு உதவியிருக்கிறார்கள். எனது மனோநாஷ் காலத்தில், நான் முற்றிலும் உதவியற்றவனாகவும், எனது சாதாரண மனித நிலையின் பலவீனங்கள் நிறைந்ததாகவும் இருந்தேன். நான்கு தோழர்களும் அதன் வெளியளவிலான அம்சத்தை கவனித்துக்கொண்ட அதேவேளையில், கடவுள் அவருடைய வெளிப்பாட்டிலும், புனிதர்கள் மற்றும் என்னை நேசிக்கும் அனைவரின் பிரார்த்தனைகளாலும், எனது மனோநாஷின் உள்பணியை நிறைவேற்றினார் என்று உண்மையாகக் கூறலாம்.

இந்த வருடம் ஏப்ரல் தொடக்கத்தில், சில மாதங்களுக்காக மேற்கத்திய நாடுகளுக்குச் செல்ல உத்தேசித்துள்ளேன். 1952 மார்ச் 21 முதல் 'சிக்கலான சுதந்திர வாழ்வு' (COMPLICATED FREE LIFE) நடைமுறைப் படுத்துவேன் என்று எதிர்பார்க்கிறேன்; ஜூலை 10 முதல் 'முழு சுதந்திர வாழ்வு' (FULL FREE LIFE); நவம்பர் 15 முதல் 'அனல் பறக்கும் சுதந்திர வாழ்வு' (FIERY FREE LIFE).

1952 பிப்ரவரி 16 முதல், நான் அன்பளிப்புகளை ஏற்றுக்கொள்வதற்கும், அவற்றை மறுப்பதற்கும் சுதந்திரமாக இருக்கிறேன். மார்ச் 21ஆம் தேதி முதல், என்னிடம் வரவும், என்னைப் பார்க்கவும், என்னுடன் தொடர்பு கொள்ளவும் விரும்பும் எவரும் அவ்வாறு செய்யலாம், ஆனால் அவருக்குத் தேவையான தங்கும் இடம், உணவு அனைத்தையும் தானே ஏற்பாடு செய்ய வேண்டும்.

நான் தேவை என்று கருதும் போது அல்லது அவ்வாறு செய்ய விருப்பம் இருந்தால், வெகுஜன தரிசனம் வழங்கலாம். நான் இப்போது மீண்டும் அடையப்பெற்ற எனது பழைய வாழ்க்கை நிலை குறித்த எந்தக் குறிப்பும், அவ்வாறு செய்ய விரும்பும் எவராலும் என் முன்னிலையில் வாய்மொழியாக வெளிப்படுத்தப்படலாம். ஆனால், எனது புது வாழ்வின் நிலைப்பாட்டின்படி, பாதங்களைத் தொட்டு வணங்குவது போன்ற எந்தவொரு வெளிப்புற மரியாதையையும் நான் ஏற்க மாட்டேன்.

மனோநாஷ் பணி செவ்வனே முழுமையாக நிறைவடைந்தாலும், அதன் விளைவு 100 சதவிகிதம் எனக்குத் திருப்தி அளிப்பதாக இருந்தாலும், என்னுடன் இணைந்திருக்கும் ஒவ்வொருவருக்கும், அவர்கள் இனி எந்த மாதிரியான வாழ்க்கையை வாழ விரும்புகிறார்கள் என்பதைத் தேர்வு செய்ய நான் இப்போது சுதந்திரம் வழங்குகிறேன். அவர்கள் என்னுடன் வாழ்வதற்கும் எனது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதற்கும் அல்லது என்னிடமிருந்து விலகி எனது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதற்கும் சுதந்திரமானவர்கள். நான் சொல்லும் வாழ்க்கையை வாழ்வதற்கு அல்லது அவர்கள் விரும்பும் விதத்தில் தங்கள் சொந்த வாழ்க்கையை வாழ்வதற்கும் அவர்கள் சுதந்திரமாக இருக்கிறார்கள் - அதாவது என்னிடமிருந்து எந்த விதமான உத்தரவுகளிலிருந்தும் முற்றிலும் விடுபடுகிறார்கள். இதில் 'ஏற்பாடு' குழு அன்பர்களும் அடங்குவர்.

அவர்கள் எந்த வாழ்க்கையைத் தேர்வு செய்தாலும் - 'உண்மையான சுதந்திரம்' வரும் வேளையில், எந்த நேரத்திலும், கடவுளின் அருளால் அனைவரும் பகிர்ந்து கொள்வார்கள்.

எனது மனோநாஷ் பணியைக் குறித்து சுருக்கமாக:

1) நான்கு மாத மனோநாஷ் பணி, கடவுளின் உதவியால், முழுத் திருப்தி அடையும் வகையில் என்னால் செய்ய முடிந்தது என்பதை நான் முழு உண்மையுடன் உணர்கிறேன்.
2) இந்தப் பணியின் விளைவு இன்று அல்லது நாளை பலனைத் தர வேண்டும்: உடனடி நிகழ்காலத்தில், அல்லது சிறிது காலம் கழித்து, அல்லது தொலைதூர எதிர்காலத்தில்.

3) **இதன் விளைவாக நம் அனைவருக்கும் அன்பு, நம்பிக்கை, சேவை இவற்றின் தகுதிக்கு ஏற்ப சுதந்திரம் கிடைக்கும்.**

4) **இந்த சுதந்திரம் அறியாமையிலிருந்து விடுதலை அடைவதாக இருக்கும்; மேலும் நாம் எப்போதும் இருந்தோம், இருக்கிறோம், கடவுளுடன் ஒன்றாக இருப்போம் என்ற அறிவாக இருக்கும்.**

5) **இந்த இறை அறிவான அளவிறுதியற்ற அன்பையும், ஆற்றலையும், ஆனந்தத்தையும், அமைதியையும், நாம் எப்போதும் பெற்றிருந்தும் அதைப் பற்றி அறியாமல் இருந்தோம் என்பதை உணர்ந்து அனுபவிக்கச் செய்யும்.**

'வாழ்க்கை சுற்றறிக்கை - எண் 1' என்ற சுற்றறிக்கையில் பாபாவின் செய்தி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. இவ்வாறு, 1952 பிப்ரவரி 6 முதல், மெஹர் பாபாவின் 'வாழ்க்கை' (LIFE) தொடங்கியது!

களிப்பூட்டும் மனநிலையில், 1952 பிப்ரவரி 8ஆம் நாள் காலை, மெஹரா, மணி, கோஹெர், மெஹரு, ரானோ, கிட்டி ஆகியோருடன் பாபா, 'ஹேப்பி வேலி'க்கு சுற்றுலா சென்றார். அவர்கள் 'ஹேப்பி வேலி'க்கு நான்கு மைல் தூரம் நடந்து, காலை 8:00 மணிக்கு வந்து சேர்ந்தனர். அனைவரும் அன்று மதியம் இரண்டு மணி வரை தங்கியிருந்து, பின்னர் ஆதி சீனியர் எடுத்து வந்த மதிய உணவை (புலாவ், PULAO) உண்டு களித்தனர். அதன் பின்னர் ஆதி சீனியருடன் மெஹராஸாத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

1936ஆம் ஆண்டில் ஐரோப்பாவில் பாபாவை முதன்முதலில் சந்தித்த அமெரிக்க திரைப்பட இயக்குனர் அலெக்ஸாண்டர் மார்கி (ALEXANDER MARKEY), இந்தியாவில் ஒரு திரைப்படத்தை தயாரித்துக் கொண்டிருந்தார். அப்போது இந்தியாவிற்குத் திரும்பி வந்த ஐரீன் கோனிபியருடன் (IRENE CONYBEARE) ஆதி சீனியர் மற்றும் டாக்டர் டான், அலெக்ஸாண்டர் மார்கியை பிப்ரவரி 9ஆம் தேதி மெஹராஸாத்திற்கு அழைத்து வந்தனர். ஒவ்வொருவரும் பாபாவை பதினைந்து நிமிடங்கள் சந்தித்து உரையாடினர். ஐரீன், பெண் மண்டலியை சந்திக்க அனுமதிக்கப்பட்டார்.

மெஹர் பாபாவின் 58ஆவது பிறந்த நாள், 1952 பிப்ரவரி 12 செவ்வாய் கிழமை அன்று மெஹராஸாத்தில் கொண்டாடப்பட்டது. பாபா எடுத்துரைத்ததற்கு இணங்க, பாபாவின் முன்னிலையில் தோழர்கள் பின்வரும் பிரார்த்தனையுடன் கூடிய அழைப்பை விடுத்தனர்:

ஓ கடவுளே! இன்று எனது முதல் உண்மையான பிறந்தநாள் என்பதால், எனது 'வாழ்க்கை'யின் பிரகடனம் முற்றிலும் உங்களுடையது மற்றும் உங்கள் விருப்பப்படி அமைந்தது என்பதை என் இதயம்

வெளிப்படுத்துகிறது, ஏனெனில் உங்கள் விருப்பத்தைத் தவிர எதுவும் நடக்காது.

என் அறிவும் அறியாமையும், எனது பலமும், பலவீனமும், எனது சுதந்திரமும், பிணைப்பும், நீங்கள் விரும்பி ஆணையிட்டபடியே உள்ளன.

இந்த நித்திய வாழ்க்கை உமது விருப்பத்திற்கிணங்க என்னால் வாழப்படும், மேலும் வாழ்க்கையின் பிரகடனத்தின் ஒவ்வொரு வார்த்தையும் உமது அருளால் நிறைவேறும்.

பிரார்த்தனை ஒரு 'வாழ்க்கை சுற்றறிக்கை'யாக (LIFE CIRCULAR) வெளியிடப்பட்டு, சம்பந்தப்பட்ட அனைவருக்கும் அனுப்பப்பட்டது. சுற்றறிக்கையில் பாபாவிடமிருந்து இந்த செய்தியும் இடம்பெற்றது:

"என்னுடைய இந்த முதல் உண்மையான பிறந்தநாளில் உங்கள் அனைவருக்கும் கடவுளின் அன்பும் ஆசீர்வாதமும்!"

மெஹராஸாத், **12 பிப்ரவரி 1952** (MEHERAZAD, 12 FEBRUARY 1952)

குஸ்தாஜி (GUSTADJI), **பைதூல்** (BAIDUL), **பெண்டு** (PENDU), **எரச்** (ERUCH)

எனது 'பழைய வாழ்க்கை' என்னை முழுநிறை கடவுளாக, தெய்வீக பரிபூரணத்தின் பீடத்தில் வைக்கிறது.

எனது 'புது வாழ்வு', கடவுளுக்கும் அவருடைய மக்களுக்கும், பணிவான ஒரு சேவகனின் நிலைப்பாட்டை எடுக்க வைக்கிறது.

-அவதார் மெஹர் பாபா